உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.


பெரியபுராணம்

என்று வழங்குகிற

திருத்தொண்டர்புராணம்.

சேக்கிழார் நாயனார்

அருளிச்செய்தது.



இது

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஆறுமுகநாவலரவர்களால்

பரிசோதித்து,

காரைக்காலம்மையார் புராணம்வரையில் எழுதப்பட்ட சூசனத்தோடு

சிதம்பரசைவப்பிரகாசவித்தியாசாலைத் தருமபரிபாலகர்

தியாகராஜபிள்ளையால்

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

ஏழாம் பதிப்பு.

விபவஷுபகுணி மீ.

(Copyright Registered.)

சூசிபத்திரம்.

புராணம்.	பக்கம்.
திருமுறைகண்டபுராணம்.	க
திருத்தொண்டர்புராணசாரம்.	எ
திருப்பதிக்கோவை.	கஅ
திருப்பதிக்கோவை.	உ0
அறுபத்துமூன்றுநாயன்மார்திருநட்சத்திரம்.	உஉ
திருத்தொண்டத்தொகை.	உச
திருத்தொண்டர்திருவந்தாதி.	உள
திருத்தொண்டர்திருநாமக்கோவை.	ஙஙூ
சேக்கிழார்நாயனார்புராணம்.	சக

புராணம்.	பக்கம்.
பாயிரம்.	எ
க. திருமலைச்சருக்கம்.	
திருமலைச்சிறப்பு.	அ
திருநாட்டுச்சிறப்பு.	கஅ
மகேந்திரகண்டபுராணம்.	உஉ
திருக்கூட்டச்சிறப்பு.	ஙக
தடுத்தாட்கொண்டபுராணம்.	ஙஙூ
உ. திலீலைவாழ்த்தணர்சருக்கம்.	
திலீலைவாழ்த்தணர்புராணம்.	ஙிச
திருநீலகண்டநாயனார்புராணம்.	சுச
இயற்பகைநாயனார்புராணம்.	எக
இளையான்குடிமாறநாயனார்புராணம்.	எள
மெய்ப்பொருணாயனார்புராணம்.	அஉ
விறன்மிண்டநாயனார்புராணம்.	அசு
அமர்நீதிநாயனார்புராணம்.	அக
ங. இலைமலிந்தசருக்கம்.	
எறிபத்தநாயனார்புராணம்.	கூ
ஏனாதிநாதநாயனார்புராணம்.	க0உ
கண்ணப்பநாயனார்புராணம்.	க0அ
குங்குலியக்கலயநாயனார்புராணம்.	கஙஙூ
மானக்கஞ்சாறநாயனார்புராணம்.	கஙள
அரிவாட்டாயநாயனார்புராணம்.	கசஉ
ஆனாயநாயனார்புராணம்.	கசஙி
ச. முப்மையாலுலகாண்டசருக்கம்.	
மூர்த்திநாயனார்புராணம்.	கடுக
முருகநாயனார்புராணம்.	கடுஅ
உருத்திரபசுபதிநாயனார்புராணம்.	கசுக
திருநாளைப்போவார்நாயனார் புராணம்.	கசுஙூ
திருக்குறிப்புத்தொண்டநாயனார்புராணம்.	கசுஙூ
சண்டேசுரநாயனார்புராணம்.	கஅஙூ
ஞ. திருநின்றசருக்கம்.	
திருநாவுக்கரசுநாயனார்புராணம்.	கஙசு
குலச்சிறைநாயனார்புராணம்.	உசடி
பெருமிழலைக்குறும்பநாயனார் புராணம்.	உசஅ
காரைக்காலம்மையார்புராணம்.	உடி0
அப்பூதியடிகணாயனார்புராணம்.	உடிள
திருநீலநக்கநாயனார்புராணம்.	உசுக
நமிநந்தியடிகணாயனார்புராணம்.	உசுடி
ட. வம்பறாவர்வண்டுச்சருக்கம்.	
திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்புராணம்.	உசுஙூ
ஏயர்கோன்கலிக்காமநாயனார் புராணம்.	ஙூகஅ
திருமூலநாயனார்புராணம்.	சஙூக
தண்டியடிகணாயனார்புராணம்.	சசஉ
மூர்க்கநாயனார்புராணம்.	சசடு
சோமாசிமாறநாயனார்புராணம்.	சசசு
எ. வார்கொண்டவனழலோயாள்சருக்கம்.	
சாக்கியநாயனார்புராணம்.	சசள
சிறப்புலிநாயனார்புராணம்.	சசக
சிறுத்தொண்டநாயனார்புராணம்.	சடு0
சேரமான்பெருமாணாயனார் புராணம்.	சடிஅ
கணநாதநாயனார்புராணம்.	சளசு
கூற்றுவநாயனார்புராணம்.	சளள

புராணம்.	பக்கம்.
அ. பொய்யடிமையில்லாதபுலவர் சருக்கம்.	
பொய்யடிமையில்லாதபுலவர் புராணம்.	ளஅ
புகழ்ச்சோழநாயனார்புராணம்.	ளக
நரசிங்கமுனையரையநாயனார் புராணம்.	ளஉ
அதிபத்தநாயனார்புராணம்.	ளஅ
கலிக்கம்பநாயனார்புராணம்.	ளக
கலியநாயனார்புராணம்.	ளஎ
சத்திநாயனார்புராணம்.	ளக
ஐயடிகள்காடவர்கோனையனார் புராணம்.	கூ
கூ. கறைக்கண்டன்சருக்கம்.	
கணம்புல்லநாயனார்புராணம்.	கூக
காரிநாயனார்புராணம்.	கூஉ
நின்றசீர்நெடுமாறநாயனார் புராணம்.	கூஉ
வாயிலார்நாயனார்புராணம்.	கூஎ
மூனையடுவார்நாயனார்புராணம்.	கூஙி
கூ. கடல்சூழ்ந்தசருக்கம்.	
கழற்சிங்கநாயனார்புராணம்.	கூக
இடங்கழிநாயனார்புராணம்.	கூஎ
செருத்துணைநாயனார்புராணம்.	கூஅ

புராணம்.	பக்கம்.
புகழ்த்துணைநாயனார்புராணம்.	கூக
கோட்புலிநாயனார்புராணம்.	ஙூ
கூக. பத்தராய்ப்பணிவார்சருக்கம்.	
பத்தராய்ப்பணிவார்புராணம்.	ஙூ
பரமனையேபாடுவார்புராணம்.	ஙூ
சித்தத்தைச்சிவன்பாலேவைத் தார்புராணம்.	ஙூ
திருவாரூர்ப்பிறந்தார்புராணம்.	ஙூ
முப்பொழுதுந்திருமேனிதீண்டு வார்புராணம்.	ஙூ
முழுநீறுபூசியமுனிவர்புராணம்.	ஙூ
அப்பாலுமடிச்சார்ந்தார்புராணம்.	ஙூ
கூஉ. மன்னியசீர்ச்சருக்கம்.	
பூசலார்நாயனார்புராணம்.	ஙூ
மங்கையர்க்கரசியார்புராணம்.	ஙூ
நேசநாயனார்புராணம்.	ஙூ
கோச்செங்கட்சோழநாயனார் புராணம்.	ஙூ
திருநீலகண்டயாழ்ப்பாண நாயனார்புராணம்.	ஙூ
சடையநாயனார்புராணம்.	ஙூ
இசைஞானியார்புராணம்.	ஙூ
கூக. வெள்ளானைச்சருக்கம்.	ருூ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியர்

அருளிச்செய்த

திருமுறைகண்டபுராணம்.

கருமுறை விண்டடி யவருயு மாறருள் கவுணியர் குலதீபர்
தருமிறை நாவுக் கரசா ருரர் தாஞ்சே மித்திடமத்
திருமுறை கண்ட புராண முரைக்கச் சிந்துர முகனற்றுள்
ஒருமுறை யிருமுறை மும்முறை வாழ்த்தி யுவந்தன் பொடுபணிவாம்.

மே வு று.

உலகமகிழ் தருசைய மீதுதோன்றி யோவாது வருபொன்னி சூழ்சோணாட்டின்
நிலகமென விளங்குமணி மாடவாரூர்த் தியாகேசர் பதம்பணிந்து செங்கோலோச்சி
யலகில்புகழ் பெறுராச ராசமன்ன னபயகுல சேகரன்பா லெய்துமன்ப
நிலகுமொரு மூவரருள் பதிகமொன்றென் றேயினிதி னுரைசெய்ய வன்பாற்கேட்டு.

கையிரண்டு முச்சிமே லேறக்கண்ணீர் கரைந்தோட மெய்ம்முழுதும் புளகம்போர்ப்ப
வையன்மலர்ப் பதமுளத்தேகொண்டுபோற்றியியமுறைதேடவெங்குமிலாமையாலே
நையுமனத் தினனுகி யிருக்குங்காலை ராமையூ ரினிலாதி சைவமறையோன்பால்
வையமெலா மீடேறச் சைவம்வாழ மாமணியோ லொருசிறுவன் வந்துதோன்றி. (உ)

வளமொடுப நயனவிதிச் சடங்கும்பூண்டி மறைமுதலாங் கலைபயின்று வருநாளீ
ன்ற, கிளர்மறையோ னெருர்க்குச் செல்லமைந்தன் கேடில்பிதா வுரைத்தமொழிப்படி
யேயந்தி, யிளமதிச்செஞ் சடைப்பொல்லாப் பிள்ளோயாரை யேத்தியா ராதிப்பா னினி
நிலேகி, யுளாலியன் பொடிதிருமஞ் சனமுண்ணுகு முரியவெலாஞ் செய்துதிவேதன
முன்வைத்து. (ஊ)

ஈ பெருமா னமுதுசெய வேண்டுமென்ன விறைஞ்சிடவு மமுதுசெயா திருப்பக்கண்டு
வெம்பியுள மேதேனுந் தவறிங்குண்டோ வேழமுக னேயடியே னிவேதித்திட்ட
பம்பமுத முண்ணுத தென்னையென்னப் பரிந்துதலை தினைமோதப் புகுங்காலெம்மா
னம்பிபொறு வெனத்தடுத்தவ் வமுதமெல்லா னன்கருந்தவுவந்துநம்பி நவில்வதானுன்.

எந்தையே யினியடியேன் பள்ளிக்கேகி லெங்கடே சிகனடிப்பா னுதலாலே
சந்தமறை முதற்கலேக ணீயேயோதித் தரல்வேண்டு மெனவேழ முகத்தோன்றனு
மந்தமற வோதுவிக்க வோதிநம்பி மகிழ்ந்தனனன் றதுபோல மற்றைநாளும்
விந்தையொடு நிகழநம்பி யாண்டார்நம்பி மேவியிருந் திடுஞ்செய்தி வேந்தன்கேளா.

செல்வமிகு திருநாரை யூரின்மேவுஞ் சிவனளித்த மதகரிக்குச் சிந்தைகூர்ந்து
நல்லபுக முடையநம்பி யாண்டார்நம்பி நண்பினெடு நிவேதிப்பான் மதுரமிக்க

வெல்லேயில்வாழைக்கனிதே னவலோடப்பமெள்ளுண்டையிவ்வுலகோரெடுக்கவென் றே, மல்லன்மிகு சேனையுட னிராசராச மன்னவனு மங்ஙகரில் வந்துசேர்ந்தான். (சு)

ஆங்கதனுக் கங்ஙகரி லிடம்போதாம லயல்சூழப் பதின்காத வகலவெல்லே, மாங் கனிவா ழைக்கனிகள் வருக்கையாவும் வந்தனவவ் வெல்லேயெல்லா மருவவைத்துப், பாங்கினுட னம்பிதாள் பணிந்து மன்னன் பலகனிகள் கொணர்ந்தவெலாம் பகர்ந்து போற்றி, யீங்கிதனைப் பொல்லாத பிள்ளேயாருக் கிப்பொழுதே நிவேதிக்க வென்று சொன்னான். (எ)

நம்பியர சன்சொன்ன வார்த்தைகேளா நன்றுனது பணியென்ன வருளாலுன் னித், தும்பிமுக னடிபணிந்து மன்னனிங்குத் தொகுத்தனீ யமுதுசெய வேண்டுமென் னக், கம்பமதக் களிற்றுமுகத் தாறுமங்குக் கருத்தினுட னம்பியுரைக் கிசைந்துகா ட்ட, விம்பரினில் வந்தனநாற் சுத்தியெய்தே யிருந்தவெலாம் படைக்கவவ னேற்றல் செய்தான். (அ)

புகர்முகக்கை புறப்படவே படைத்தவெல்லாம் புகுந்தவிட மறியாமற் போனபின்னே யகநெகிழ மெய்யரும்பிக் கண்ணீர் வார நம்பிகழ லன்பிரு லரசன்போற்றி மிகவுமொரு விண்ணப்ப மடியேற்குண்டு வேதியனே கேளென்று விளம்புவான்மெய்ப் புகழதுசேர் மூவர்தமிழ்தொண்டர்செய்திபூதலத்தில்விளங்கவெனப்போற்றிநின்றான்.

அந்தவுரை கேட்டலுமங் கரசன்றன்னை நம்பிமகிழ்ந் தருள்புரிவா னருள்சேர்மூவர் செந்தமிழ்க ளிருந்தவிட மன்பருள்ளோர் செய்திக்கவ் விராயகன்றான் சிந்தித்தெந்தா யந்தவகை யேதென்று கேட்டாலெந்தை மகிழ்ந்தருளு மங்கெதியை வழாதுனக்குத் தந்திடுவன் மன்னபொறு வென்றுசொல்லித் தந்திமுகன்சன்னிதியிற் முழ்ந்துசென்றான்.

சென்றுபணிந் திபமுகத்தோன் பாதப்போதைச் சென்னியில்வைத் தவனருளிற் றிளேத்துச்சிந்தை, யொன்றுமற வருகியிழி தாரைகொள்ள வுண்மையிலுல் வந்தித்தங் குவாவோன்றன்னே, யின்றமிழ்சேர் மூவர்தமி ழிருந்தவெல்லே யெல்லையில்சீர்த் திருத் தொண்ட ரியல்புபூர்த்தி, நன்றுமருள் செய்தருள வேண்டுமென்ன நாகமுகனம்பிக்கு நவிலலுற்றான். (கக)

வார்ந்தருட்க ணீர்சொரிய நம்பிகேட்ப வண்டமிழ்க ளிருந்தவிட மன்றுளாடுங் கூர்ந்தவிருட் கண்டர்புறக் கடையின்பாங்கர்க் கோலமலர்க் கைகளடை யாளமாகச் சார்ந்தனவென் றருள்செய்துதொண்டர்பேறுஞ்சாற்றுதலாற்சகதலத்தோரருளேச்சார வார்ந்ததமி ழிருந்தவிட மன்பர்செய்தி யத்தனையு நம்பிமனத் தருளிற்கொண்டார். ()

கொண்டுகுல சேகரனுங் கோன்பால்வந்து குஞ்சரத்தோ னருள்செய்த கொள் கையெல்லா, மண்டுபெருங் காதலுடன் சொல்லியந்த வண்டமிழின் பெருமைதனை வருத்துச்சொல்வார், கண்டபெரு மந்திரமே மூவர்பாடல் கைகாணு மந்திரங்கண் ணுதலோன்கூற, லெண்டிசையுஞ் சிவனருளைப் பெறுதற்காக விம்மொழியின் பெரு மையையா னியம்பக்கேணீ. (கஉ)

சேடர்மலி காழிகரர் வேந்தர்தாமுந் தேவர்புகழ் திருத்தோணிச் சிவனுர்பங்கிற் பீடுடைய வுமைமுலேப்பா லருளாலுண்டு பிஞ்ஞகனேச் சினவிடைமேற் பெருக்கக்கண்டு

தோடுடைய செவியன்முதற் கல்லூரென்னுந் தொடைமுடிவாப் பரசமயத் தொகை கண்மாளப், பாடினர் பதிகங்கள் பாவிலொன்றும் பதிஞரூயிரமுளதாப் பகருமன்றே.

திருநாவுக் கரையரெனுஞ் செம்மையாளர் தீயமணர் சிறைநீங்க வதிகைமேவுங் குருநாமப் பரஞ்சுடரைப் பரவிச்சூலை கொடுங்கூற்று யினவென்ன வெடுத்துக்கோதி லொருமானேத் தரிக்குமொரு வரையுங்காறு மொருநாற்பத் தொன்பதினு யிரமதாகப் பெருநாமப் புகலூரிற் பதிகங்கூறிப் பிஞ்ஞகனு ரடியிணைகள் பெற்றுளாரே. (கஞ)

பின்புசில நாளின்க ணூரூர்நம்பி பிறங்குதிரு வெண்ணெய்நல்லூர்ப் பித்தாவென்னு, மின்பமுதற் றிருப்பதிக மூழிதோறு நீரும்முப் பத்தெண்ணு யிரமதாக, முன்பு புகன் றவர்கொடித்தான் மலையிற்சேர்ந்தார் முறைகளெல்லாந் திருத்தில்லை மூனூர்த் தன்னி, லன்றவர்கை யிலச்சினையால் வைத்தார்மன்ன வாராய்ந்து தருகவென வருளிச் செய்தார். (கசு)

அருமறையைச் சிச்சிலிபண் டருந்தத்தேடி மதுபோலன் றிதுவென்று மூளதாமு ண்மைப், பரபதமுந் தற்பரமும் பரனேயன்றிப் பலரில்லை யென்றெழுதும் பனுவல் பாரி, னெரியினிடை வேவாதாற் றெரிரேயோடு மென்புக்கு முயிர்கொடுக்கு மிடுஞ் சாற்றுங், கரியைவீ விக்குங்கன் மிதக்கப்பண்ணுங் கராமதலை கரையிலுறக் காற்றுங்காணே. (கஎ)

என்றென்று நம்பிக்குப் பரிவாலுண்மை யின்றமிழின் பெருமைதனை யியம்பக் கேட்டுக், குன்றெறிந்து பேருருவங் கொண்டாற்போலுங் குஞ்சரத்தோ னருளினையுட் கொண்டுமனன்ன், மன்றினிடஞ் சென்றுமறை யோர்கடொண்டர் வார்சடையோர் காவலுடை மரபோர்க்கெல்லா, நன்றெங்கள் கணபதிதன் சொல்லிதென்று நன்மையுடன் மன்னவனூர் நவிலுங்காலை. (கஅ)

அத்தகையோர் தமிழ்வைத்த மூவர்வந்தா லறைதிறக்கு மெனவுரைக்க வரசன்றானு மெய்த்தகுசீ ரம்பலவர்க் குற்றசெல்வ வீழாவெடுத்து விளம்புதமிழ் மூவர்தம்மை யுய்த்தணிவீ தியினிலுலா வருவித்தும்பர் நாயகன்றன் கோயில்வலஞ்செய்துள்ளே சித்தமெலா முருக்குதமி ழிருக்கைசேரச் சேர்த்தியவர் சேர்ந்ததெனச்சேப்பிற்றன்றே.

ஐயர்நட மாடுமம் பலத்தின்மேல்பா லருள்பெற்ற மூவர்தம தருள்சேய்செய்ய, கையதுவே யிலச்சினையாயிருந்தகாப்பைக் கண்டவர்க ளதிசயிப்பக்கடைவாய்நீக்கிப்,பொய்யுடையோ ரறிவுதனைப் புலன்கண்மூடும் பொற்பதுபோற் போதமிகும் பாடறன்னை, நொய்யசிறு வன்மீக மூடக்கண்டு நொடிப்பளவி னிற்சிற்தை நொந்தவேந்தன். (உ0)

பார்த்ததனைப் புறத்துய்ப்ப வுரைத்துமேலே படிந்திருந்தமண்மலையைச்சேரத்தள்ளிச் சீர்த்தநில தயிலமலி கும்பங்கொண்டு செல்லுனே யச்சொரிந்து திருவேடெல்லா மார்த்தவரு ளதனுலே யெடுத்துநோக்க வலகிலா வேடுபழு தாகக்கண்டு தீர்த்தமுடிக் கணிபரனே பரனேயென்னச் சிந்தைதளர்ந் திருகணீர் சோரகின்றான். ()

வந்துபுகழ் வளவனிவ்வா றன்பினுலே யிடர்க்கடலின் கரைகாணு தினையுங்காலைச் சார்ந்தமலை மகள்கொழுந னருளாலல்வேதச் சைவநெறித் தலைவரெனு மூவர்பாடல் வேய்ந்தனபோன் மண்மூடச்செய்தேயீண்டு வேண்டுவனவைத்தோமென்றுலகிலுள்ள மாந்தரொடு மன்னவனுங் கேட்குமாற்றுல் வானகத்தி லோரோர்சை யெழுந்ததன்றே.

அந்தமொழி கேட்டலுமே மன்னன்முனு மாடிஞன் பாடிஞ னலக்கண்யாவுஞ், சிந்திஞ னமுதமுண்டான் போலநெஞ்சந் தேறிஞ னம்பிதிரு வடியிற்றுழ்ந்தான், பந் தமறு சிவனடியார் கொன்கவென்னுப் பண்டாரக் திறந்துவிட்டான் பரிவுகூர்ந்தான், இந்தவகைப் பெருங்களிகொண் மன்னன்முனு மெழின்முறையை முன்போல வருக்க வெண்ணி. (உசு)

மன்னுதமிழ் விரகரெங்கள் காழிவேந்தர் வகுத்தருளா லமைத்ததிரு முறையோர் மூன்று, மன்னவகை வாகீசர் முறையோர்மூன்று மாநூர ருரைத்ததிரு முறையதொன் றுந், துன்னுவகை யேழாகத் தொகுத்துச்செய்தான் றாயமனு வெழுகோடி யென்ப தன்னித், தன்னிகரி நிருவருளான் மன்னன்முனுந் தாரணியோர் வீடுபெறுந் தன் மைசூழ்ந்தே. (உசு)

வே று.

பண்புற்ற திருஞான சம்பந்தர் பதிகமுந்நூற்
றெண்பத்தி ஞன்கிஞ லிலங்குதிரு முறைமூன்று
நண்புற்ற நாவரசர் முந்நூற்றேழ் மூன்றிஞல்
வண்பெற்ற முறையொன்று நூற்றிஞல் வன்றெண்டர். (உஙி)

ஆகவளர் திருமுறையே ழருட்டிருவா சகமொன்று
மோகமெறி திருவிசைப்பா மாலேமுறை யொன்றுசிவ
போகமிகு மந்திரமா முறையொன்று புகழ்பெறவே
பாகமிகுந் திருமுறைகள் பத்தாக வைத்தார்கள். (உசு)

வைத்ததற்பி னம்பிகழன் மன்னர்பிரான் மகிழ்ந்திறைஞ்சிச்
சித்திதரு மிறைமொழிந்த திருமுகப்பா சுரமுதலா
வுய்த்தபதி கங்களேயு மொருமுறையாச் செய்கவெனப்
பத்திதருந் திருமுறைகள் பதினெஞன்றுப் பண்ணினர். (உஎ)

மந்திரங்க ளெழுகோடி யாதலினுன் மன்னுமவ
ரிந்தவகை திருமுறைக ளேழாக வெடுத்தமைத்துப்
பந்தமுறு மந்திரங்கள் பதினெஞன்று மாதலினு
லந்தமுறை நான்கினெடு முறைபதினெஞன் றுக்கினர். (உஅ)

ஆக்கியபின் நிருத்தொண்டத் தொகையடைவை யருளாலே
நோக்கியபின் னுயன்மார் நடங்கடைவுந் தொழிற்பேறும்
பாக்கியத்தா லிபமுகத்தோ னருள்செய்த பகுதியினுல்
வாக்கியல்சே ரந்தாதி நம்பியடை வேவகுத்தார். (உக)

சீரருள்சே ரறுபத்து மூவர்தனி திருக்கூட்டஞ்
சாருமவ ரொன்பானுந் தண்டமிழா னுரைசெய்து
பேரிசையாம் வகையடைவு புவியினிடைப் பெருமையினுற்
சீருலவு திருவெருக்கத் தம்புலியூர் சென்றடைந்தார். (கூ0)

சென்னியரு ணம்பியிவ ரந்தகரைச் சேர்ந்துசிவன்
மன்னுதிருக் கோயிலினே வலங்கொண்டு பணிந்தரனே
யின்னிசைதந் தருளென்ன விரக்கமுடன் குறைந்திரப்பக்
கன்னியொரு பங்குடையோ னருள்செய்த கேடனுரைப்பாம். (கூக)

நல்லிசையாழ்ப் பாணனார் நன்மரபின் வழிவந்த
வல்லியொருத் திக்கிசைகள் வாய்ப்பவளித் தோமென்று
சொல்லவவ டனையழைத்துச் சுருதிவழிப் பண்டழுவி
நல்லிசையின் வழிகேட்டு நம்பியிறை யுண்மகிழ்ந்தார். (கூஉ)

ஆங்கவளை யம்பலத்து ளாடுவார் திருமுன்பே
பாங்கினுடன் கொடுவந்து பண்ணடைவி பயில்பாட
லோங்கருளான் முறைபணித்தற் கொக்குமென வோரோசை
நீங்கரிய வாணின்க ணிகழுவர சன்கேட்டான். (கூங)

மன்னனுக்கு நம்பிக்கு மறையவர்மூ வாயிரவர்
பன்னரிய திருத்தொண்டர் பலதுறையோர்க் குங்கேட்க
வின்னருண்முன் வியந்துரைத்த விவண்முதலா விசைத்தவிசை
தென்னிலமேன் மிகத்தோன்றத் திருவருளாற் முேன்றியதாம். (கூச)

சொன்னட்ட பாடைக்குத் தொகையெட்டுக் கட்டளையா
மின்னிசையாற் றருந்தக்க ராகத்தேழ் கட்டளையாம்
பன்னுபழந் தக்கரா கப்பண்ணின் மூன்றளதா
முன்னரிய தக்கேசிக் கோரிரண்டு வருவித்தார். (கூரு)

மேலுகுறிஞ் சிக்கஞ்ச லியாழக்குறிஞ் சிக்காறு
பாவுபுகழ் மேகரா கக்குறிஞ்சிப் பாலிரண்டு
தேவுவந்த லிந்தளத்தின் செய்திக்கு நான்கினிய
தாவில்புகழ்க் காமரத்தின் றன்மைதனக் கிரண்டமைத்தார். (கூசு)

காந்தா ரமாகிய பியந்தையாழ் கட்டளைக்கு
வாய்ந்தவகை மூன்றுக்கி வன்னட்ட ராகத்திற்
கேய்ந்தவகை யிரண்டாக்கிச் செவ்வழியொன் றுக்கியிசைக்
காந்தார பஞ்சமத்தின் கட்டளைமூன் றுக்கினார். (கூஎ)

கொல்லிக்கு காலாக்கிக் கவுசிகத்துக் கூறும்வகை
சொல்லிலிரண் டாக்கியிகு ஞாங்கிசைநேர் பஞ்சமத்திற்
கொல்லையினி லொன்றுக்கிச் சாதாரிக் கொன்பதாப்
புல்லுபிசைப் புறநீர்மைக் கொன்றுகப் போற்றினார். (கூஅ)

அந்தாளிக் கொன்றுக்கி வாகீச ருருத்திழின்
முந்தாய பலதழிழுக் கொன்றொன்று மொழிவித்து
நந்தாத நேரிசையாய் கொல்லிக்கு நாட்டினிரண்
டுந்தாடுங் குறுந்தொகைக்கோர் கட்டளையா வினித்துரைத்தார். (கூக)

தாண்டகமாம் பாவுக்கோர் கட்டளையாத் தாபித்தங்
காண்டகையார் தடுத்தாண்ட வையரு டெய்யமுறைக்
கீண்டிசைசே ரிந்தளத்துக் கிரண்டாக வெடுத்துரைத்து
நீண்டதக்க ராகத்துக் கிரண்டாக நிகழ்வித்தார். (சஅ)

கூறரிய நட்டராக் கத்திரண்டு கொல்லிக்கு
வேறுவகை மூன்றுக மிகுத்தபழம் பஞ்சுரத்துக்
கேறும்வகை யிரண்டாக்கி யின்னிசைதேர் தக்கேசிப்
பேறிசையா ருக்கியதிற் காந்தாரம் பிரித்திரண்டாம். (சக)

ஒன்றுகுங் காந்தார பஞ்சமத்துக் கோரிரண்டா
நன்றுன சீர்நட்ட பாடைக்கு கவின்றுரைக்கிற்
குன்றுத புறநீர்மைக் கிரண்டாகுங் கூறுமிசை
யொன்றுகக் காமரத்தக் கொன்றுகப் போற்றினர். (சஉ)

உற்றவிசைக் குறிஞ்சிக்கோ ரிரண்டாக வருத்தமைத்துப்
பற்றரிய செந்துருத்திக் கொன்றுக்கிக் கவுசிகப்பாற்
றுற்றவிசை யிரண்டாக்கித் தூயவிசைப் பஞ்சமத்துக்
கற்றவிசை யொன்றுக்கி யானருளால் வீரித்தமைத்தார். (ஙந)

இந்தவகை சிவண்செலிப்பா லெக்கண்ணுங் தழைத்தோங்க
வந்தவிலா வறபத்து மூவரு ளம்புவிமே
னந்தியிட மும்மலமு ரல்லுலகோர் நீங்கியிடத்
திங்தையருட் சிவமாகத் தெளிவித்தா னருட்சென்னி. (ஙச)

சீராருந் திருமுறைகள் கண்டதிறற் பார்த்திபனு
மேமாரு மிறைவனையு மெழிலாரு சம்பையையு
மாராத வன்பினுட னடிபணிந்து கருள்பெறவச்
சோராத காதன்மிகுந் திருத்தொண்டர் பரந்துதிப்பாம். (ஙசு)

திருமுறைகண்டபுராணை முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ஙக.

திருச்சிற்றம்பலம்.

கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியர்

அருளிச்செய்த

திருத்தொண்டர்புராணசாரம்.

மல்குபுகழ் வன்றொண்ட ரருளாலீந்த வளமருவு திருத்தொண்டத் தொகையின் வாய்மை, கல்கும்வகை புல்கும்வகை நம்பியாண்டார் நம்பிதிரு வந்தாதி கவின்ற வாற்றுரற், பல்குகெறிச் தொண்டர்சீர் பரவவல்ல பான்மையா மெமையாளரும் பரி வால்வைத்த, செல்வஞ்சிருந் திருத்தொண்டர் புராணமேந்திருந்துபய னடியேனுஞ் செப்பலுற்றேன். (க)

சுந்தரமூர்த்திநாயனுர்புராணம்.

தண்கயிலே யதுநீங்கி நாடவூர்வாழ் சைவனுர் சடையனுர் தனயனுராய், மண்புகழ் வருட்டிறையாலேனுலகாட்டி மணம்விலக்க வன்றொண்டா யதிகைசேர்ந்து, கண்பினுட னருள்புரிய வாரூர்மேவி கலந்திளரும் பரவைதோ ணயந்துவைகித், திண்குலவும் விறன்மிண்டர் திறல்கண்டேத்துந் திருத்தொண்டத் தொகையருளாற் செப்பினுரே.

செப்பலரும் குண்டையூர் கெல்லளித்துத் திருப்புகலூர்ச் செங்கல்செழும் பொன்னு ச்செய்து, தப்பின்முது குன்றரற்றும் பொருளாற்றிட்டுத் தடத்தெடுத்துச் சங்கிலி தேவிள சார்ந்தநாத, னெருப்பிறனித் தூதுவந்தா ரூடுகீறி யுறுமுதலே சிறுமதலே யுய்ழ கல்கி, மெய்ப்பெரிய கயிற்றறி யருளாற்சேர வேர்த்தருடன் வடகயிலே மேவினுரே. ()

திலலைவாழந்தணர்புராணம்.

கல்லவா ணவர்போற்றுந் திலலைமன்று ளடைகஞ்செய் பெருமானுங் கணியார் நற்பொற், றிருல்லவான் பணியெடுத்துற் குரியார்வீடுந் துறந்தகெறி யார்தொண்டத் தொகைமுன் பாடத், திலலைவா ழந்தணரென் றெடுத்தநாதன் செப்புமரு ளுடையார் முத் தியார்பதிஞ்சி, கெல்லைகாண் பரியாரொப் புல்கிற்முமே யெய்ந்துளா மெமையாள வாய்ந்துளாரே. (ச)

திருநீலகண்டநாயனுர்புராணம்.

திலலைகர் வேட்கோவர் தூர்த்தராகித் தீண்டிலெமைத் திருநீல கண்டமென்று, சொல்லுமனை யாடனையே யன்றிமற்றுந் துடியிடையா ரிடையின்பந் துறந்துமூத்தங், கெல்லையிலோ டிறைவைத்து மாற்றிகாங்க ளெடுத்திலமென் றியம்புமென விழிந்து பொய்கை, மெல்லியலா ளுடன்மூழ்கி யிளமையெய்தி விளங்குபுலீச் சுத்தரனே மேவினுரே. (ஞ)

இயற்பகைநாயனுர்புராணம்.

எழிலாருங் காவிரிப்பூம் பட்டினத்து வியல்வணிக ரியற்பகையா ரிருவர்தேட, வழலாய பிரான்றூர்த்த மறையோனுகி யாமிழையைத் தரவேண்டி யணையவையன், கழலாரப் பணிந்தமனைக் கற்பின்மேன்மைக் காதலியைக் கொடுத்தமர்செய் கருத் தால்வந்த, பிழையாருஞ் சுற்றமெலாந் துணித்துமீளப் பிஞ்ஞகனு ரழைத்தருளப் பெற்றுளாரே. (சு)

இளையான்குடிமாறநாயனுர்புராணம்.

மன்னியவே ளாண்டொன்மை யிளசைமாறர் வறுமையா லுணவுமிக மறந்துவைகி யுன்னருகள் விருண்மழையி லுண்டிவேண்டி யும்பர்பிரா னணையவய லுழுதுவித்துஞ்

செஞ்சென்முளே யழுதமனே யலக்காலாக்கிச் சிறுபயிரின் கறியமுது திருந்தச்செய்து பன்னலரு முணவருந்தற் கெழுந்தசோதிப் பரலோக முழுதாண்ட பான்மையாரே. ()

மெய்ப்பொருணயனூர்புராணம்.

சேதிபர்நற் கோவலூர் மலாடமன்னர் திருவேட மெய்ப்பொருளாத் தெளிந்த சிந்தை, நீதியிலு ருடன்பொருது தோற்றமாற்ரு னெடுஞ்சினமுங் கொடும்படையு நிகழாவண்ண, மாதவர்போ லொருமுறைகொண் டணுகிவாளால் வன்மைபுரிந் திடம ருண்டு வந்ததத்தன், காதலுற நமர்த்தா வென்றுநோக்கிக் கடிதகல்வித் திறைவனடி கைக்கொண்டாரே. (அ)

விறன்மிண்டநாயனூர்புராணம்.

வீளங்குதிருச் செங்குன்றூர் வேளாண்டொன்மை விறன்மிண்டர் திருவாரூர் மேவுநாளில், வளங்குலவு தொண்டரடி வணங்காதேகும் வன்ரொண்டன் புறகவனே வலியவாண்ட, துளங்குசடை முடியோனும் புறகென்றன்பாற் சொல்லுதலு மவர் தொண்டத் தொகைமுன்பாட, வுளங்குளிர வுளதென்ரு ரதனுலண்ண லுவகைதர வுயர்கணத்து ளோங்கினரே. (கூ)

அமர்நீதிநாயனூர்புராணம்.

பழையாறை வணிகரமர் நீதியார்பாற் பரவுசிறு முனிவடிவாய்ப் பயிலுநல்லூர்க், சூழைகாதர் வந்தொருகோ வணத்தையைத்துக் கொடுத்ததனே யெடுத்தொளித்துக் குளித்துவந்து, தொழிலாரு மதுவேண்டி வெகுண்டுநீரித் துலையிலிடுங் கோவணநேர் ஆக்குமென்ன, வெழிலாரும் பொன்மனைவி யிளஞ்சேயேற்றி யேறினர்வா னுலகு தொழ வேறினரே. (கo)

எறிபத்தநாயனூர்புராணம்.

திருமருவு கருவூரா னிலையார்சாத்துஞ் சிவகாமி யார்மலரைச் சிந்தயானே யரனெறியோ நெறிபத்தர் பாகரோடு மறவெறிய வென்னுயிரு மகற்றீரென்று புரவலனூர் கொடுத்தபடையன்பால்வாங்கிப் புரிந்தரிவான்புகவெழுந்தபுனிதவாக்காற் கரியினுடன் வீழுந்தாரு மெழுந்தார்தாமுங் கணநாத ரதுகாவல் கைக்கொண்டாரே.

ஏனாதிநாதநாயனூர்புராணம்.

ஈழக் குலச்சான்ரு ரெயினனூர்வா ழேனாதி நாதனு ரிறைவனீற்றைத் தாழத் தொழுமரபார் படைகளாற்றுந் தன்மைபெரு வதிசூரன் சமரிற்ரோற்று வாழத் திருநீறு சாத்தக்கண்டு மருண்டார் தெருண்டார்கை வாள்விடார்நேர் வீழக் களிப்பார்போ னின்றேயாக்கை விடுவித்துச் சிவனருளே மேவினரே. (கஉ)

கண்ணப்பநாயனூர்புராணம்.

வேடரதி பதியுடுப்பூர் வேந்தனுகன் வீளங்கியசேய் திண்ணனூர் கன்னிவேட் டைக், காடதில்லாய் மஞ்சனமுங் குஞ்சிதருமலருங் காய்ச்சினமென் றிடுதசையுங் காளத்தியார்க்குத், தேடருமன் பினிலாறு தினத்தளவு மளிப்பச் சீறுசிவ கோசரியுந் தெளியவிழிப் புண்ணீ, ரோடவொரு கண்ணப்பி யொருகண்ணப்ப வொழிகவெனு மருள்கொடரு குறநின்ரு ரே. (கக)

குங்குலியக்கலயநாயனூர்புராணம்.

சிலமலி திருக்கடவூர்க் கலயனூராங் கிகழ்மறையோர் பணிவுறுமை சிதையாமுன்னே தாலியையெற் கொளவென்று வாங்கிக்கொண்டு சங்கையில்லுங் குலியத்தாற் சார்ந்த

செல்வர், ஞாலநிகழ் திருப்பனந்தாணுதர்நேரே நரபதியுந்தொழக்கச்சானயந்துபோதப் பாலமுத முண்டாரு மரசுமெய்திப் பரிந்தமுது செயவருள்சேர் பான்மையாரே. (கச)

மானக்கஞ்சாறநாயனர்புராணம்.

கஞ்சநகர் மானக்கஞ் சாறனர்சீர்க் காதன்மகள் வதுவைமணங் காணநாதன் வஞ்சமலி மாவிரதத் தலேவனுகி வந்துபுகுந் தவளளக மகிழ்ந்து நோக்கிப் பஞ்சவடிக் காமென்ன வரிந்துநீட்டும் பத்தரெதிர் மறைந்திறைவன் பணித்தவாக்கா லெஞ்சலில்வண் குழல்பெற்ற பேதைமாதை யேயர்பிரான் குதவியரு ளெய்தினரே. ()

அரிவாட்டாயநாயனர்புராணம்.

தாவில்கண மங்கலத்துள் வேளாண் டொன்மைத் தாயனர்நாயனர் தமக்கேசெந்நெற் றூவரிசி யெனவிளவ தவையேயாகத் துறந்துணவு வடுவரிசி துளங்குகீரை, யாவினி னேந் துடன்கொணர வோர்கமரிற்சிந்த வழிந்தரிவாள் கொண்டீட்டி யரியாமுன்னே, மாவடிவி ஞெலியுமான் கரமுந்தோன்றி வாள்விலக்கி யமர்தொழ் வைத்ததன்றே. ()

ஆனாயநாயனர்புராணம்.

மங்கலமா மழநாட்டு மங்கலமாகருண் மருவுபுக ழானாயர் வளராமேய்ப்பார், கொங்கலர்பூந் திருக்கொன்றை மருங்குசார்ந்து குழலிசையி னேந்தெழுத்துங் குழைய வைத்தத், தங்குசரா சரங்களெல்லா முருகாநிற்பத் தம்பிரா னணைந்துசெவி தாழ்த்தி வாழ்ந்து, பொங்கியவான் கருணைபுரிந் தென்றுமூதப் போதுகவென் றருளவுடன் போயினரே. (கள)

மூர்த்திநாயனர்புராணம்.

வழங்குபுகழ் மதுரைநகர் மூர்த்தியாராம் வணிகர்திரு வாலவாய் மன்னர் சாத்தத் தழங்குதிர முழங்கைதரத் தேய்த்தவூறுந் தவிர்ந்தமணர் வஞ்சனையுந் தவிரமன்ன னிழந்தவுயி ரினைஞக ஞாலநல்க வெழில்வேணி முடியாக விலங்குவேட முழங்குபுக ழணியாக விரைநீருக மும்மையுல காண்டருளின் முன்னினரே. (கஅ)

முருகநாயனர்புராணம்.

மன்னுதிருப் புகலூர்வாழ் முருகனரா மறையவர்கோ வர்த்தமா னீச்சரத்தார் சென்னியினுக் கழகமரு மலர்கள்கொய்து திருமாலே புகழ்மாலே திகழச்சாத்திக் கன்னிமதிற் கழுமலநா டுடையநாதன் காதன்மிகு மணங்காணுங் களிப்பினூலே யின்னல்கெட வுடன்சேவித் தருளான்மீளா திலங்குபெரு மணத்தானே யெய்தினரே.

உருத்திரபசுபதிநாயனர்புராணம்.

பங்கமில்வண் புகழ்நிலவு தலேயூர்வாழும் பசுபதியாரெனுமறையோர் பணிந்துசெந்தே னங்கமல மடுவினிடை யல்லுமெல்லு மகலாதே யாகளமா யமர்ந்துநின்று திங்கள்வளர் சடைமுடியா னடிகள்போற்றித் திருவெழுத்துமுருத்திரமுந்திகழுவோதி மங்கையிட முடையபிரா னருளான்மேலே வானவர்க டொழுமுலகின் மன்னினரே. ()

திருநாளைப்போவார்நாயனர்புராணம்.

நன்மைநிகழ் மேற்காநாட் டாதனூர்வாழ் நந்தனர் புறத்தொண்டர் நாளைப்போ கப், பொன்மலிதென் புலியூர்க்கென் றுரைப்பார் புன்கூர்ப் பொய்கையமைத் தட லேறு பிரியநோக்கி, வன்மதில்சூழ் நில்லையிறை யருளால்வாய்ந்த வண்டழலி னிடை மூழ்கி மறையோர் போற்ற, மின்மலிசெஞ் சடைமுனியா யெழுந்தநாதன் விளங்கு நடஞ் தொழமன்றுண் மேவினரே. (உக)

திருக்குறிப்புத்தொண்டநாயனார்புராணம்.

கொந்தலர்பூம் பொழிற்கச்சி ஈகரேகாலிக் குலத்தலைவர் தவர்குறிப்புக் குறித்து ளார்போல், வந்திறைவர் நமக்கின்று தாரீராகின் வருந்துமுட லெனவாங்கி மாசுநீத்த, கந்தைபுல ராதொழிய மழுயுமாலைக் கடும்பொழுதும் வரக்கண்டு கலங்கிக் கன் மேற், சிந்தமுடி புடைப்பளவிற் றிருவேகம்பர் திருக்கைகொடு பிடித்துயர்வான் சேர்த்தினரே. (உட)

சண்டேசுரநாயனார்புராணம்.

வேதமலி சேய்ஞலூ ரெச்சதத்தன் வினாங்கியசேய் மறைபயிலும் விசாரசன்மர், கோதனமேய்ப் பவன்கொடிமை பொருதுதாமே கொண்டுதிரை மண்ணியின்றென் கரையினீழற்,ருதகியின் மணலிலிங்கத் தான்பாலாட்டத் தாதைபொரு தவையிடறுந் தாள்கண்மாளக், காதிமலர்த் தாமமுயர் ரமமுண்ட கலமகனும் பதமருளாற் கைக் கொண்டாரே. (உங)

திருநாவுக்கரசுநாயனார்புராணம்.

போற்றுதிரு வாமூரில் வேளாண்டொன்மைப் பொருவில்கொறுக் கையரதிபர் புகழனார்பான், மாற்றருமன் பினிற்றிலக வதியாமாது வந்துதித்த பின்புமரு ணீக்கி யாருந், தோற்றியமண் சமயமுழு துய.நீக்கத் துணைவரரு டரவத்த சூலநோயாற், பாற்றருநீ ர்டெய்திப் பாடலிபுத்திரத்திற் பாழியொழித் தமனதிகைப் பதியில் வந்தார். (உச)

வகுதுதமக கையரருளா னீறுசாத்தி வண்டமிழா லீனயதீகது வாகங்னமனனய வெங்குபொடி விடம்வேழும் வேலேந்தி வியன்குலம் கொடியிடபம் விளங்கச்சாத்தி யத்த பிலப் பூதிமக னரபமாற்றி யருட்கோக பெற்றமைமை யடைப்புரீக்கிப் புத்திமகிழ்க் தையாற்றிற் கயிலைகண்டி பூம்புகலூ ரான்பாதம் பொருந்தினரே. (உரு)

குலச்சிறைநாயனார்புராணம்.

கோதில்புகழ் தருமணமேற் குடியார்கோவண் குலச்சிறையார் தென்னர்குல வமைச்சர்குன்ரு, மாதவர்க ளடிபரவு மாபாரம்பாண்டி மாதேவி யாரருள்வான் பயிர் க்குவேலி, காதன்மிகு கவுணியர்கோன் வாதிற்றோற்ற கையரைவை கைக்கரை சேர் கழுவிலேற்று, நீதியினு நாலவாய் நிமலர்ச்சேர்ந்த நின்மலனு ரென்மலங்க ணீக்கினரே. (உசு)

பெருமிழலைக்குறும்பநாயனார்புராணம்.

கொண்டல்பனி வளர்சோலை மிழலைகாட்டுக் கோதில்புகழ்ப் பெருமிழலைக் குறு ம்பனார்சீ, ரண்டர்பிரா னடியவருக் கடியாராகு மாதாவா லணுக்கவன் றெறண்டர்க் காளாய், மண்டொழுமெண் டருசித்தி வாய்த்துளார்தாம் வன்றொண்டர் வடகயிலை மருவுநாண்மு, னெண்டிகழு மறைமூல நெறியுடேகி யிலங்கொளிசேர் வடகயிலை யெய்தினரே. (உஎ)

காரைக்காலம்மையார்புராணம்.

தங்குபுகழ்க் காரைக்கால் வணிகன் மிக்க தனதத்தன் றரும்புனித வதியார்மாவின் செங்கனிக டிருவருளா லழைப்பக்கண்டு திகழ்கணவ னதிசயித்துத் தேசநீங்க வங்கவுட லிழந்துமுடி நடையாலேறி யம்மையே யெனநாத னப்பாவென்று பொங்குவட கயிலைபணிந் தாலங்காட்டிற் புனிதனட மனவரதம்போற்றினரே. (உஅ)

அப்பூதியடிகணயனர்புராணம்.

அந்தமினற் றிங்களூர் வருமப்பூதி யருமறையோர் திருநாவுக் கரசினமம
பந்தரிடை யெழுதக்கண் டரசமெய்தப் பணிந்துபரி கலசேடிப் படப்பைசேர்ந்த
மைந்தனுயி ருயர்கதலி யிலேமேற்றுஞ்சும் வாளரம்ப கவரமுடன் மறைத்தல்கேட்டுச்
சிந்தைமகிழ்ந் துயர்பதிக மருந்தாற்றீர்த்துத் திருவமுது செயவருளைச் சேர்ந்துளாரே.

திருநீலநக்கநாயனர்புராணம்.

நீதிதரு மறையோர்வாழ் சாத்தமங்கை நீலநக்க ரயவந்தி நிமலர்மேனி
பூதிவிழுஞ் சிலம்பிகடிக் தவளைதீத்தார்க் கு யாத லிடாத னுறுநோய்காட்டக்
காதன்மிகு மனைவியையு மகிழ்ந்துமேலைக் காழியர்கோ னமுதுசெயக்கரித்துவாழ்ந்து
வேதிகையிற் பாணனார்க் கிடமூலகி விளம்புபெரு மணத்தினை மேவினாரே. (கூ0)

நமிநந்தியடிகணயனர்புராணம்.

ணண்ணுபுகழ் மறையோர்வா ழேமப்பேறார் நமிநந்தி யடிகடிரு வீளக்குகல்க
வெண்ணெயம ணர்கள்விலக்க நீரானரு நிலக்குமர னெறியாருக் கேற்றுநாளிற்
கண்ணமணர் கெடக்கண்பெற் றடிகள்வாழக் காவலனு ளிபந்தங்கள் கட்டவிழ்ந்தே
யண்ணலருள் கண்டாரூ ரமர்ந்துதொண்டர்க் காணியெனு மரசினருளடைந்துளாரே.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்புராணம்.

காழிநகர்ச் சிவபாத விதயர்தந்த கவுணியர்கோ னமுதுமையாள் கருதியூட்டு
மேழிசையி னமுதுண்டு தாளம் வாங்கி யிலங்கியசித் திலச்சிவிகை யிசையவேறி
வாழுமுய லகனகற்றிப் பந்தரேய்ந்து வளர்கிழிபெற் றரவின்விட மருகற்றீர்த்து
வீழிநகர்க் காசெய்தி மறைக்கதவம்பிணித்துமீனவன்மேனியின்வெப்புவிடுவித்தாரே.

ஆரெரியிட் டெடுத்தவே டவைமுன்னேற்றி யாற்றிலிடுமேடெதிர்போயணையவேற்றி
யோரமண ரொழியாமே கழுவிலேற்றி யோதுதிருப் பதிகத்தா லோடமேற்றிக்
காருதவு மிடிபுத்தன் றலையிலேற்றிக் காயாத பனையின்முது கனிகளேற்றி
யீரடிலா வங்கமுயி ரெய்தவேற்றி யிலங்குபெரு மணத்தினை யெய்தினாரே. (கூகூ)

ஏயர்கோன்கலிக்காமநாயனர்புராணம்.

ஏதமில்வே ளாளர்பெரு மங்கலத்து ளேயர்கோன் கலிக்காம நிறையைநேரே, தூது
கொளு மவனணுகி லென்னு மென்னுந் துணிவினர்பா லிறைவனருஞ்சூலையேவி, வே
தனவன் றெண்டன்வரி னீங்குமென்ன வெகுண்டுடல்வாள் கொடுதறந்து மேயகா
வற், போதகமுமுடலிகழவெழுந்துதாழ்ந்துபோற்றியதுவிலக்கியருள்பொருந்தினாரே.

திருமூலநாயனர்புராணம்.

கயிலாயத் தொருசித்தர் பொதியிற்சேர்வார் காவிரிசூழ் சாத்தனூர் கருதுமூலன்
பயிலாநோ யுடன்வீயத் துயரநீடும் பசுக்களைக்கண் டவனுடலிற் பாய்ந்துபோத
வயலாகப் பண்டையுட லருளான்மேவி யாவடுதண் டுறையாண்டுக் கொருபாவாகக்
குயிலாரு மரசடியி லிருந்துசூறிக் கோதிலா வடகயிலை குறுகினாரே. (கூஙி)

தண்டியடிகணயனர்புராணம்.

திருவாரூர் வருந்தண்டி யடிகள்காட்சி சேராதார் குளந்தொட்டற் கமணர்சீறிக், குரு
டாநீ முன்செவிடெங் கூடிற்றென்று குறித்தறியைப் பறித்தெறியக் கொதித்துத்தங்கு

ணருளாலே விழித்தெவரு மந்தராக வமணர்கலக்கம்பலகண் டவர்கள் பாழிப், பரு வான கற்பறித்தரு விக்கரையுங்கட்டிப் பரனருளா லமருலகம் பற்றினரே. (நசு)

மூர்க்கநாயனார்புராணம்.

தொண்டைவள நாட்டுவளர் வேற்காட்டேர்வாழ் தொல்லுழவர் நற்சூதர் சூதுவெ ன்று, கொண்டபொருள் கொண்டன்பர்க் கமுதளிக்குங் கொள்கையினர் திருக்குடந் தை குறுகியுள்ளார், விண்டிசையு குழறுமொழி வீணர்மாள வெகுண்டிடலான் மூர் க்கரென விளம்புநாம, மெண்டிசையு மிகவுடையா ரண்டர்போற்று மேழுலகு முட னுளு மியல்பினரே. (நுஎ)

சோமாசிமாறநாயனார்புராணம்.

அம்பர்நக ரந்தணர்சோ மாசிமாற ரன்பர்களாம் யாவர்க்கு மன்பினமுதளிப்பா ரும்பர்நிகழ் வகையாகம் பலவுஞ்செய்பு முண்மையினு ரைத்தெழுத்து மோவாநாவார் நம்பர்நிகழ் திருவாரூர் நயந்துபோற்று நாவலர்கோ னடிபரவு நன்மையாலே யிம்பர்தொழ வும்பர்பணிக் தேத்தமேலை யேழுலகு முடனுளு மியல்பினரே. (நுஅ)

சாக்கியநாயனார்புராணம்.

சங்கமங்கை வரும்வேளாண் டலைவர்காஞ்சிச் சாக்கியரோ டியைந்தவர்தந் தவ றுஞ்சைவத், துங்கமலி பொருளுமுணர்ந் தந்தவேடந் துறவாதே செவிலிங்கத் தொழு வோர்கண்டோ, ரங்கன்மலர் திருமேனி யழுந்தச்சாத்தி யமருநாண் மறந்தொருநா ளருந்தாதோடிச், செங்கலெறிந் திடுமளவின் மகிழ்ந்தநாதன் றிருவருளா லமருலகஞ் சேர்ந்துளாரே. (நுக)

சிறப்புலிநாயனார்புராணம்.

திருவாக்கு ரருமறையோ ருலகமேத்துஞ் சிறப்புலியார் மறப்புலியா ருரிமேற் செங்க, ணரவார்த்தார் வருமேற்றூர்க் கன்பராளர்க் கமுதளிப்பா ரொளிவெண்ணீ றணிந்தமார்பர், பெருவாக்கான் மறைபரவி யாகம்போற்றும் பெற்றியினு ரைத்தெழு த்தும் பிறழாதோதிக், கருவாக்கா விறைவன்ரு ளினைகள்சேர்ந்த கருத்தினுரெனையா வுந் திருத்தினரே. (சo)

சிறுத்தொண்டநாயனார்புராணம்.

பல்குமருத் துவரதிபர் செங்காட்டங்குடிவாழ் படைத்தலைவ ரமுதளிக்கும் பரஞ் சோதியார்மெய்ச், செல்வமிகு சிறுத்தொண்டர் காழிநாடன் றிருவருள்சேர்ந் தவர் வளருஞ் சீராளன்றன்னை, நல்குதிரு வெண்காட்டி நங்கைசமைத்திடப்பின் னன்மதிச் சந் தனத்தாதி தலைக்கறியிட்டுதவப், புல்கவரும் வயிரவர்தா மகிழ்ந்துமக வருளப் போற்றியவர் சிவனருளே பொருந்தினரே. (சக)

சேரமான்பெருமாணயனார்புராணம்.

காவலர்ம கோதையார் கொடுங்கோளூர்க்கோக் கழறியவை யறிந்தகோச்சிலம் போசைக்கருத்தார், நாவலர்கோ ணண்பரடிச் சேரனென்றே நவின்றுவரும் வண் ணனை நயந்தகோநற், பாவலர்கோப் பாணபத் திரனுல்வாய்ந்த பரமர்திரு முகம்வாங் கிப் பணிகோவெற்பின், மேவியகோ வானைக்குக் குதிரைவைத்த வீரர்கோ வெனையா னுஞ் சேரர்கோவே. (சஉ)

கணநாதநாயனார்புராணம்.

கந்தமலி வயற்காழி மறையோ ரேத்துங் கணநாதர் திருத்தோணிக் கடவுளார் க்கு, நந்தவனம் புலவுமைத்து மலருங்தொய்து நற்றூமஞ் சொற்றூடி நயந்துசாத்தி,

வர்தவரைத் தொண்டாக்கிப் பணிகள்பூட்டி வாதுசெய்த வாரணத்தை மகிழ்ந்துவாழ் த்திப், புர்திமகிழ்ந் தரனருளாற் கயிலைமேவிப் பொருவில்கணத் தவர்காவல் பொருந் தினரே. (சகூ)

கூற்றுவநாயனர்புராணம்.

குன்றுத புகழாளர் களந்தைவேந்தர் கூற்றுவனர் மாற்றலர்மண் கொண்டுகூடப் பொன்றுழு முடிவேண்டப் புலியூர்வாழும் பூசுரர்கள் கொடாதகலப் புனிதனீர்த மன்றுடுக் திருவடியே முடியாச்சூடி மாறிலங்காத் திறைவனுறை மாடக்கோயிற் சென்றுசை யுடன்வணங்கிப் பணிகள்செய்து திருவருளா லமருலகஞ் சேர்ந்துளாரே.

பொய்யடிமையில்லாதபுலவர்புராணம்.

பொய்யறியாக்கபிலரொடு பாணராதிப் புலவோர்பொற் பார்கலைகள்பொருந்தவோதிச் செய்புளிடை வளராசு மதுரநல்ல சித்திரம்வித் தாரமெனத் தெரிக்குஞ்செம்மை மெய்புடைய தொடைகளெல்லாமன்றளாடன்மேலியகோனிருதாளில்லிரவச்சாத்திக் கையுடையஞ் சலியினரா யருளான்மேலைக் கருதரிய வமருலகங் கைக்கொண்டாரே.

புகழ்ச்சோழநாயனர்புராணம்.

பொழின்மருவுங் கருவூர்வாழ் புகழார்சோழர் போதகம்போ லென்னுயிரும் போக்குமென்றே, யழலவிர்வாள் கொடித்தபிரா னதிகமான்மே லடர்ந்தபெரும் படையேவ வவர்கொண்டேய்ந்த, தழல்விழிகொ டலகாண்பார் கண்டதோர்புன் சடைத்தலையை முடித்தலையாற் ருழ்ந்துவாங்கிக், கழல்பரவி யதுசிரத்தி னேந்திவாய் ந்த கனன்மூழ்கி யிறைவனடி கைக்கொண்டாரே. (சசு)

நரசிங்கமுனையரையநாயனர்புராணம்.

நாடுபுகழ் முனைப்பாடி நாடுமேய நரசிங்க முனையர்புவி நயந்துமன்று ளாடுமவ ராதிரைநா ளடியார்க்கம்பொ னமுதளிப்பா ரொளிவெண்ணீ றணிந்துதூர்த்த வேடமுடை யவர்க்கிரட்டிச் செம்பொனீந்து விடுத்தழகா ராலயங்கள்விளங்கச்செய்து தோடலர்தா ருடையபிரா னருளாபாளத் தோன்றினு ரெனையருளி னீன்றினுரே. ()

அதிபத்தநாயனர்புராணம்.

அலையாருங் கடலுகை நகருள்வாழு மதிபத்தர் பரதவர்க ளதிபர்வேலை வலைவாரி வருமீனிற் றலைமீனீசன் வார்கழற்கே யென்றுவிடு மரபார்பன்னூட் டலையான தொருமீனே சாரநாளுந் தந்தொழிலால் விடுத்துமிடி சாரச்செம்பொ னிலையாரு மணிநயந்த மீனென்றெய்த நீத்தருளா லிறைவனடி சேர்ந்துளாரே. (சஅ)

கலிக்கம்பநாயனர்புராணம்.

கடவுளருட் கண்ணுர்கள் பயிலுந்தொல்லைக் கடந்தைநகர் வணிகர்கலிக் கம்பரன்பார்க் கடிமையுற வழுதளிப்பா ரடியானீங்கி யருளுருவா யன்பருட னனையவேத்தி யிடையிலவ ரடியிணையும் விளக்காநிற்ப விகழ்மனைவி கரகமலி யிரண்டுகையும் படியில்விழ வெறிந்தவள்செய் பணியுந்தாமே பரிந்துபுரிந் தரனருளே பற்றினுரே. ()

கலியநாயனர்புராணம்.

தடமதில்சூ ழொற்றியூர் நகருள்வாழுஞ் சக்கரப்பா டியர்குலமெய்த் தவமாயுள்ளார் படர்புகழார் கலியனுர்நலியுங்கூற்றைப்பாய்ந்தவர்க்குவிளக்கெரிக்கும்பரிவான்மற்றே ருடலிலராய்ச் செக்குழல்வார்க் கதுவுநேரா தயர்மனைவி யைக்கொள்வாருளருயின்றி டிடறுதிர மகனிறைய வரியாதன் வியன்ஞகெரொடு பிடிப்பவருண் மேவினுரே. (இ0)

சத்திநாயனார்புராணம்.

விரிதருகா விரிநாட்டு வரிஞ்சியூர்வாழ் வேளாளர் சத்தியார் விமலர்பாதத்
தரியவர்க ளடிபரவு மொருமையார்நா வோவாமே யைந்தெழுத்து முரைக்குநீரா
ரிருளின்மிட றுடையபிரா னடியார்தம்மை யிகழ்வார்நாத் தண்டாயத் திடுக்கிவாங்கி
யரியுமது திருத்தொழிலா வுடையார்மன்று ளாடியசே வடிதீழ லடைந்துளாரே. (இக)

ஐயடிகள்காடவர்கோனாயனார்புராணம்.

வையகிழ் பல்லவர்தங் குலத்துவந்த மாமணிமா ணிலமுழுது மகிழ்ந்துகாக்கு
மையடிகள் காடவர்கோ னருளாணால்க ளறிந்தரசு புரிந்திடுத லமையுமென்றே
பொய்யனைய வுடல்வாழ்வு கழியுமாறு பொருந்தியிடும் புகழ்வெண்பாப் புலியூர்மேவுஞ்
செய்யதிரு வடிமுதலாப் பதிகடோறுஞ் செப்பிஞ ரென்னினைக டப்பினாரே. (இஉ)

கணம்புல்லநாயனார்புராணம்.

இலகுவட வெள்ளாற்றுத் தென்பால்வாழு மிருக்குவே ளூராதிப ரெழிலார்சென்னிக்
கலிநிலவா ரடிபரவுங் கணம்புல்லர் தில்லைக் கருதுபுலீச் சரத்தரற்குக் காதற்றீப
நிலைதரத்தா மிடமிடியா லொருநாட்புல்லா னீடுவிளக் கிடவதுவு நேராதாகத்
தலைமயிரி னெரிகொளுவ மளவினைதன் முவாத வாழ்வருளுந் தன்மையாரே. (இங)

காரிநாயனார்புராணம்.

திருக்கடவூர் வருமூவோர் காரியாராந் திகழ்தொண்டர் வண்டமிழ்தூ றிருந்த
வோதி, விருப்பொடுதம் பெயராற்பா விளம்பிமும்மை வேந்தரையு முறைமுறையே
மேவியங்க, ணூரைத்தவுரை நயமாக்கி யவர்பாலேய்ந்த வொண்பொருளா லாலயங்க
ளோங்கச்செய்து, தரைக்குளருந் தவர்க்கேவ நகமுன்போற்றுந் தன்மையா ருளர்
சேர்ந்த நன்மையாரே. (இச)

நின்றசீர்நெடுமாறநாயனார்புராணம்

கன்னன்மலி நெல்வேலிக் கவினார்மாறர் கவுரியர்கோ னமணருறு கலக்கமெல்லாம்
பொன்னெயில்சூழ் சிறபுரக்கோ னணையமாற்றிப் புனிதமிகு நீறணிந்து போற்றிசெய்து
மன்னுபுகழ் மங்கையருக் கரசியாரா மலர்மாது மணிமார்ப மகிழ்ந்துமாற்றூர்
வெங்கிடதல் கண்டாரசு புரிந்துகாழி வேந்தருள் சேர்ந்தபெரு விறலினாரே. (இஎ)

வாயிலார்நாயனார்புராணம்.

ஞாயிலார் மதிற்முருண்டைநாட்டுமேன்மைநண்ணுமயிலாபுரியின்வேளாண்டொன்மை
வாயிலார் மலிவில்லா னடியேபோற்றி மறவாமை தலைநின்ற மனமேசெம்பொற்
கோயிலா வுயர்ஞானம் விளக்காநீராக் குலவியவா னந்தமன்பே யமுதாக்கொண்டு
தாமிலா னிருசரண நிகழவேத்துந் தன்மையா ருளர்சேர்ந்த நன்மையாரே. (இசு)

முனையடுவோர்நாயனார்புராணம்.

பொன்னிவளந் தருநாட்டுப் புகழ்நீர்ப்பொருவிரிமலிவேளாண்டொன்மைமிக்கார்
முன்னியவர் முனையடுவோ ரிகலார்போரின் முரணழிவார் தமக்காத மொழிந்தகூலி
மன்னுநிதி கொண்டெயங் கொடுத்துவந்த வளர்பொருளா லிறைவனடிவழுவாவண்பர்க்
கன்னமவர் நசையின்மிக மிசையநல்கு மன்பர்தன்ப மலையாவு மகன்றுளாரே. (இஅ)

கழற்சிங்கநாயனார்புராணம்.

கீர்டவர்தங் குலமுவந்த கழலார்சிங்கர் காதன்மிகு தேவியுடன் காவலாரூ
ராடவல பெருமானைப் பணிவாரங்கோ ரகன்றமலர் தனைமோந்த வரிவைமூக்கைச்
சேடுடைய செருத்துணையா ரரியக்கேட்டுத் திறலரசர் மலரெடுத்த செங்கையென்றே
சூடகமுன் கைதடிந்து ஞாலங்காத்த தூய்மையா ரருள்சேர்ந்த வாய்மையாரே. (இ)

இடங்கழிநாயனார்புராணம்.

கோநாட்டுக் கொடும்பாளூ ரிருக்கும்வேளிர் குலத்தலைவ ரிடங்கழியார் கொங்கிற்செம்
பொ,ஞனேற்ரூர்மன்றின்முக டம்பொன்வேய்ந்த வாதித்தன் மரபோர்நெற்கவர்ந்தோ
ரன்பர், போநாப்ப ணிரூளின்கட் காவலாளர் புரவலர்முன் கொணரவவர்புகலக்கேட்டு
மானேற்ரு ரடியாரே கொள்கவென்று வழங்கியர சாண்டரூளின் மன்னினூரே. (இ)

செருத்துணைநாயனார்புராணம்.

இரைத்தணையார் புனற்பொன்னி மருகனன்னூட் டெழிலாரூர் தஞ்சைநக ரூழவ
ரேத்துஞ், செருத்துணையார் திருவாரூர் சேர்ந்துவாழ்வார் செல்வமிகும் பல்லவர்
கோன் றேவிவீழ்ந்த, மருத்துணையார் மலரெடுத்து மோப்பக்கண்டு வளமலிபூங் கத்
தியா லவண்மூக்கீர்ந்த, கருத்துணையார் விறற்றிருத்தொண் டினையேசெய்து கருத
லரு மமருலகங் கைக்கொண்டாரே. (உ)

புகழ்த்துணைநாயனார்புராணம்.

புண்ணியர்கள புகழ்நகார் திருப்பத்தூர்வாழ் புகழ்த்துணையா ரகத்தடிமைப்
புனிதர்சின்னூண், மண்ணிகழ மழைபொழியா வற்காலத்தால் வருந்துடல நடுங்கிடவு
மணிநீரேந்தி, யண்ணன்முடி பொழிகலச முடிமேல்வீழ வயர்ந்தொருநாட் புலம்பவர
னருளாலீந்த, கண்ணலரு மொருகாசுப் படியால்வாழ்ந்து நலமலிசீ ரமருலக நண்
ணினூரே. (உ)

கோட்புலிநாயனார்புராணம்

குலவுபுகழ் நாட்டியத்தான் குடிவேளாளர் கோட்புலியார் குவித்துயர்த்த செந்
நெற்கூடு, நிலவணிவார்க் கமைத்தாணை நிறுத்தியொன்னூர் நேர்மலைவார் திருவாணை
நினையாதேநெற், சில நடியா லழித்தபடி யறிந்துவளார் சேர்ந்தபெருங் கிளைஞரு
டல் சிதறவீசி, யிலருமொரு குழவியையு மெறிந்துநாத னெண்ணரிய கருணைநிழ
லெய்தினூரே. (உ)

பத்தராய்ப்பணிவார்கள்புராணம்.

தொண்டரடித் தொழல்பூசைத் தொழின்மகிழ்ந்த லழகார் தூளங்கியவர்ச் சனை
புரித லிருகுதி நியமங்கள், கொண்டபணி திருவடிக்கே கொடுத்தலீசன் குணமருவு
மருங்கதையைக் குலவிக்கேட்டு, மண்டிவிழி துளும்பன்மயிர் சிலும்பலுன்னன் மருவு
திருப் பணிகாட்டி வருபவாங்கி, யுண்டிகொளா தொழிதலென விவையோரெட்டு
முடையரவர் பத்தரென வுரைத்துளாரே. (உ)

பரமனேயேபாடுவார்புராணம்.

அருந்தமிழால் வடகலையா லருளாலொன்ரு லறிவுநெறி மருவுமருங் கவிகள்யாவுந்
திருந்தியவா னவர்புணிய மன்னுளாடுந் தேவர்பிரான் கழலிணையே சேரவோதி
விருந்திடுநா வுடையபயன் மேவினூர்தா மேலாஞ மெனமகிழ்ந்து விழிநீர்சோரப்
பரிந்தருளாற் பரமனையே பாடவல்ல பான்மையா ரெமையாரு மேன்மையாரே.(உ)

சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார்புராணம்.

பாரணவும் புலனந்தக் கரணமொன்றும் படராமே நடுநாடி பயிலுநாதங்
காரணபங் கயன்முதலா மைவர்வாழ்வுங் கழியுநெறி வழிபடவுங் கருதிமேலைப்
பூரணமெய்ப் பரஞ்சோதிப்பொலிவுநோக்கிப் புணர்ந்தணைந்த சிவாநுபவபோகமேவுஞ்
சீரணவு மவரன்றே வெம்மையாளுஞ் சித்தத்தைச் சிவன்பாலே வைத்துளாரே. (சுஇ)

திருவாரூர்ப்பிறந்தார்புராணம்.

பொங்கியமா தவமுடையார் வருணநான்கிற் பொருந்தினர்க ளல்லாத புகழினுள்ளார்
சங்கையிலா வருந்தவமுன் புரிந்தாரிங்குச் சார்விலா நிறைவனருள் சார்தலாலே
கங்கைவாழ் சடைமுடியா னருளீங்காக் கணநாத ரெனவாழுங் கருத்தர்கன்னிச்
செங்கண்வரால் வளர்வாவி திகழுமாரூர்ச் சிறந்துளா ரெமையாளப் பிறந்துளாரே. ()

முப்பொழுதுந்திருமேனிதீண்டுவார்புராணம்.

செப்பலரும் தவமுடைய செம்மையாளர் சிறுகாலே மலர்வாவி திகழமூழ்கி
யொப்பிறிரு நீறணிந்து நியதியாற்றி யோவாமே யைந்தெழுத்து முரைத்துமேன்மைத்
தப்பில்சிவா கமவிதியா லின்பாலன்பாற் தன்மையா னன்மையாற் தகையாரென்று
முப்பொழுதுந் திருமேனி தீண்டவல்ல முறைமையார் பிறவிதொறுந் திறமையாரே. ()

முழுநீறுபூசியமுனிவர்புராணம்.

கற்பமனு கற்பமுப கற்பமென்றிக் கடனணைந்த திருநீறுங் கனற்கணீறும்
பொற்புடைய வரஞ்சா னங்கியாறு பொல்லாத பூதியெதிர் பூனைதலாகா
லுற்புதமாந் திரிபுண்ட மதியின்பாதி யகிலாங்கந் தீபமிரு மழகார்வட்ட
முற்பொலிய வுடலணியு முறையாரன்றே முழுநீறு பூசவல்ல முனிவர்தாமே. (சுஅ)

அப்பாலுமடிச்சார்ந்தார்புராணம்.

தாராரு மூவேந்தர் பயிலுந்தொல்லைத் தமிழ்நாட்டப் புறத்திறைவன் சரணஞ்சார்ந்த
சீராருந் தொண்டர்களு மண்டமேத்துந் திருத்தொண்டத்தொகையருளாற்செப்புங்கா
லத், தேராருந் தொடையிலுறு திப்பாலப்பா லெந்தைபிரானடியடைந்தவியல்பினேரு
மாராத காதலுடை யவர்களன்றே வப்பாலு மடிச்சார்ந்த வடியார்தாமே. (சுக)

பூசலார்நாயனார்புராணம்.

பொருவருந்தண் டகநாட்டு நின்றவூர்வாழ் பூசுரர்கோப் பூசலார் புந்தியாலே
யிருநிதியக் கேடியா லமுமமாக்கி யெழுந்தருளப் பண்ணுவதா வெண்ணுங்காலை
யரனதனைக் காடவர்கோற் கருளமன்ன னங்கர மீணந்தவ்வா றறிந்துதாழ
விரவுமனக் கோயிலுற விருத்தியங்கண் வேண்டுவகொண்டிறைஞ்சியருண்மேவினாரே.

மங்கையர்க்கரசியார்புராணம்.

மங்கையர்க்குத் தனியரசி வளவர்குலக் கொழுந்து மன்னவர்சூழ் தென்னவர்க்கு
மாதேவியார்மண், சங்கைகெட வமண்சமயஞ் சாடவல்ல சைவசிகா மணிஞானத் தமி
ழிற்கோத்த, பொங்குதிரு வருளுடைய போதவல்லி பொருவி னெமோதனூர் புயமேல்
வாழுஞ், செங்கலச முலையாட னருளாலின்பஞ் சேர்ந்தவரைப் புகழ்ந்தடியேன் வாழ்
ந்தவாறே. (எக)

நேசநாயனூர்புராணம்.

சாலியர்கோக் காம்பீலித் தலைவர்மேன்மை தாவாத புகழ்நேசர் தஞ்சொலென்றும், கோலியவைவர் தெழுத்தோதிச் சிந்தையுன்னிக் கொண்டபொரு ளன்பர்கொளக் கொடுத்துவாழ்வார், சீலமிருந்திருத்தொண்டர்க் குடையுங்கிஞந் திருந்தியவெண் கோவணமுஞ் சேரவீந்து, பாலனைய வொளிநீற்ருன் பாதமேத்திப் பரலோக முழுதாண்ட பான்மையாரே. (எஉ)

கோச்செங்கட்சோழநாயனூர்புராணம்.

வெண்ணுவ லிறைக்கொளிநூற் பந்தர்செய்த வியன்சிலம்பி யதுவழித்த வெள்ளானைக்கை, புண்ணுடிக் கடித்தவுட லொழியச்சோழ னுயர்குலத்துச் சுபதேவன் கமலத்தோங்கும், பெண்ணுகி யவள்வயிற்றில் வைகிச்செங்கட் பெருமானுய்த் தென்னவ ராய்ப் பெருங்கோயில் பலவுங், கண்ணுர்வித் துயர்தில்லை மறையவர்க்கு முறையுள் கனகமய மாக்கியருள் கைக்கொண்டாரே. (எந)

திருநீலகண்டயாழ்ப்பாணநாயனூர்புராணம்.

பிறங்கெருக்கத் தம்புலியூர்வாழும் பேரியாழ் பேணுதிரு நீலகண்டப் பெரும்பாணனூர்சீர், நிறந்தருசெம் பொற்பலகை யாலவாயி னிமலன்பாற் பெற்ருரூர் நேர்ந்து சிவன்வாயி, நிறந்தருளும் வடதிசையே சேர்ந்துபோற்றித் திருஞானசம்பந்தர் திருத்தாள் வாழ்த்தி, யறந்திகழுந் திருப்பதிகம் யாழிலேற்றி யாதிரிருப் பெருமணஞ்சேர்ந் தருள்பெற்ருரே. (எசு)

சடையநாயனூர்புராணம்.

சங்கையிலா வரன்மறையோர் நாவலூர்வாழ் தவரதிபர் தம்பிரான் ரோழராய வெங்கள்பிரான் றவதெறிக்கோ ரிலக்குவாய்த்த விசைஞானியார்தனயரெண்ணூர்சிங்க மங்கையர்க டொழும்பரவை மணவாளநம்பி வந்துதிக்க மாதவங்கள்வருந்திச்செய்தார் வெங்கணரா வினங்குமினம் பிறைசேர்சென்னி விடையிஞருள்சேர்ந்த சடையனூரே.

இசைஞானியார்புராணம்.

நாவற் நிருப்பதிக்கோர் செல்வச் சைவநாயகமாஞ் சடையனூர் நயந்தவின்பப் பூவைக் குலமடந்தை பொற்பார்கொம்பு புனிதர்பிரு நீறணிந்து போற்றிசெய்தே யாவிற் நிகழ்தலைவன் வலியவாண்ட வாரூரரவதரிக்க வருந்தவங் கள்புரிந்தார் யாவர்க்கு மெட்டாத விசைந்தவின்ப விசைஞானி யெனஞான மெளிதாமன்றே.(எசு)

அத்தரடி யவர்கூட்டத் தில்லைவாழு மந்தணர்பொய் யடிமையிலாப் புலவராசில், பத்தர்முத லெழுவரோ டொன்பதின்ம ரேழொன் பதின்மர்தனிப் பேரெண்ணெண் பதின்மராய, வித்தொகையிற் நிருண்டர்சீ ருரைத்தான்வைத்த வீரிரண்டா யிரத்திரு நூற் நிறம்பத்துமூன்ரு, முத்தமநல் விருத்தத்திற் பயனுஞ்செய்யு ளுலகெழுபத் தைந் தெனின் முரைக்குமன்றே.

செல்வமிகு திருத்தொண்டத் தொகையிலுள்ளார் சிறந்ததனிப் பெயராக வறுபதின்மேன்மூவர், மல்லன்மிகு கூட்டப்பே ரருள்சேர்ந்தார்கண் மாதவத்தோர் மும்மூன்று வகைபெற்ருர்க, ளில்லறத்துந் துறவறத்து மிருந்துவாழ்ந்தே யியல்பாகச் சிவபதநான் கிசைந்தார்தம்மை, யல்லலறுத் தெனையாண்ட சைவசிகாமணியா ரருட்புலியூ ருமாபதியா ரருள்செய்தாரே.

திருத்தொண்டர்புராணசாரமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - எஅ.

திருச்சிற்றம்பலம்.

உமாபதிசிவாசாரியர் அருளிச்செய்த

திருப்பதிகக்கோவை.

ஒன்றுதி யோரெழுபத் தொன்றீரும் மூவர்தமிழ்
சென்றுர் சிவதலங்கள் செப்புதற்கு—நின்று
கடக்குஞ் சரமுகனேர் காய்விழியா னீன்ற
கடக்குஞ் சரமுகனே காப்பு.

பன்னுசிவ தலமொருநூற் றைம்பதிற்று மூன்று பதிகமொன்று நாற்பத்தொன் பதுபதிக மிரண்டா, முன்னுமிரு பதிற்றெட்டு நகர்பதிகமூன்று மொருபதினேர் தல ம்பதிக மொருநான்கென் றுணர்க, மன்னுமிரு நான்குதல மோரைந்தே பதிக மற்று மைந்து தலங்களுக்கு வருபதிகமாறும், பின்னுமைந்து வளநகர்க்குப் பெறும்பதிக மேழாம் பேசுமொரு நான்குதலம் பெறும்பதிக மெட்டே. (க)

பரவுமொரு நான்குதலம் பதினென்றும் பதிகம் பன்னுமிரு தலம்பதிகம் பன்னி ரண்டாப் பகரு, முரைசெயிரு தலம்பதிகம் பதினெட்டா மிப்பா லொருமூன்று தலங் களுக்கிங் குறுபதிக முரைக்கி, னிரவிவரு மறுநான்கு மூப்பதிற்றுநான்கு மீடெழுபத் தொன்றுமென நிரணிரையா மாகக், கருதுசிவ தலமிருநூற் றெழுபதிற்று நான்கு கடைகாப்போ ரெழுநூற்று நாற்பதிற் றொன்பானே. (உ)

திருப்பழுவூர் சேய்ஞலூர் திருமுல்லை வாயி றிருவைகா கொடிமாடச் செங்குன் றூர் வியலூர், கருக்குடிதெங் கூர்பனந்தாள் கலிக்காமூர் தலைச்சங் காடுமேயேந்திரப் பள்ளி கச்சினங்கன் றுப்பூர், குரக்குக்கா பெரும்புலியூர் திருக்காட்டுப்பள்ளி குடந் தைக்கீழ்க் கோட்டமொடு குடந்தைக்கா ரோண, மெருக்கத்தம் புலியூர்வெண் ணெை கண்ணூர் கோயி லிலம்பையங்கோட் டீச்சிக்க லிராமனதீச்சரமே. (ங)

பள்ளியின்முக் கூடற்றிரு விரும்பூளை யாவூர்ப் பசுபதீச் சரம்பாலைத் துறைபரிதி நியமங், கள்ளில்குரங் கணின்முட்டங் திருமுருகன் பூண்டி கஞ்சனூர் கச்சிநெறிக் காரைக்கா டோத்தூர், புள்ளமங்கை காட்டியத்தான் குடிகலிய நல்லூர் புக்கொளியூ ரவிநாசி பூவணூர் துறையூர், கொள்ளிக்கா டிடைச்சுரமச் சிறுபாக்கம் விளமர் கொட் டையூர் கொடுங்குன்றங் கூடலையாற் றூரே. (ச)

நெல்வேலி திருவழுந்தூர் தருமபுரம் பயற்றூர் நெடுங்களம்வக் கரையிரும்பை மாகாளம் வடகூர், நெல்வெண்ணெய் வடகரைமாந் துறைதிருவிற் கோலநீடூர்ச்சக் கரப் பள்ளி யகத்தியான் பள்ளி, நெல்வாயில் பேணுபெருந் துறைநாலூர் மயான நெல்லி க்கா விற்குடிவீரட்டமதி முற்றம், வல்லமறை யணிநல்லூர் கலியாலங் காடு வாட் போக்கி திருநாவலூர் மயிலாப் பூரே. (ஞ)

திருவாரூர்ப் பரவையுண்மண் டளிசாத்த மங்கை சிற்றேமம் தெளிச்சேரி திருவு சாத் தானங், கரவீரம் திருவாலம் பொழில்வெண்ணெய் நல்லூர் கச்சியனே கதங்காவ தங்கோடிக் குழக, ரரசிலிதென் குடித்திட்டை வடமுல்லை வாயி லம்பர்ப்பெருந் திருக் கோயில் வெண்பாக்கஞ் சுழியல், பெருமணமிந் திரனீல பருப்பதம் வேற்காடு பேரெ யில்பாற் றுறைமூக்கீச் சரமுண்டீச் சரமே. (ஈ)

பறியலூர் வீரட்டங் காளுட்டி முள்ளூர் பாதாளீச் சரமெதிர்கொள் பாடிவலி தாயஞ், செருகுடிக்கச் சூரலக் கோயில்கொள்ளம் பூனூர் திருப்புறவார் பனங்காட்டூர்

விளாகர்தண் டலைநீ, ணெறியரதைப் பெரும்பாழி யூறல்கரு வூரா னிலையிடும்பா வன
ங்கடவாய்க் கரைப்புத்தூர் கடம்பந், துறைதிருவே டகந்திருவஞ் சைக்களம்மா டானே
சோபுரங்கற் குடிவடகு ரங்காடு துறையே. (எ)

திருமாணி குழிவேட்டக் குடிதிருவாப் பாடி திருந்துதே வன்குடிமா கறல் சத்தி
முற்றந், திருவாப்ப னூர்மீயச் சூரவ்வூர் தன்னிற் றிகழ்ந்ததிரு விளங்கோயில் வெஞ்
சமாக் கூடல், பெருநீலக் குடிமண்ணிப் படிக்கரைநன் னிலத்துப் பெருங்கோயி றிரு
ணஞ திருப்பட்டீச் சரமே, திருவீங்கோய் மலிவன்பார்த் தான்பனங்காட் டூரே திருப்
புகலூர் வர்த்தமா னேச்சரம்பாம் புரமே. (அ)

கடைமுடியே யோணகாந் தன்றளிகோட் டூர்வை கன்மாடக் கோயிலிடை யாறு
பழை யாறை, வடதளிநற் றினைநகரங் கோணமா மலேசீர் வன்னியூர் கருவிலிய னேக
தங்கா வதநல், லிடமேவு கடிக்குளநற் றிருக்களரென் றிவைகட் டிரும்பதிக மொவ்
வொன்றென் றிசைத்திடுக விப்பாற், குடவாயில் புனவாயி னாங்கானே மாடங் கோழ
ம்ப மவளிவணல் லூர்கோலக் காவே. (ஆ)

குருகாவூர் திருவேள்விக் குடிவிசய மங்கை குற்றாலங் குடமூக்குக் கோட்டாறு
பனையூர், கருகாவூர் குரங்காடு துறையோமாம் புலியூர் கண்டியூர் வேதிகுடி காஞ்சீர்
கோகரணந், திருவாரூ ரரனெறிபக் தணைநல்லூர் நல்லந் திருக்கண்டீச் சரந்தேவூர்
திருச்சிராப் பள்ளி, பெருவேளூர் கீழ்வேளூ ரெறும்பியூர் கானப் பேர்திருமங் கலக்கு
டியாக் கூர்கோவ லூரே. (இ)

திருப்பரங்குன் றந்திருப்பா திரிப்புலியூர் குறுக்கை திருப்புத்தூர் மணஞ்சேரி
பாசிலொச் சிராமங், கருப்பறிய லூர்கேதீச் சரந்திருக்கே தாரங் கச்சிமேற் றளிமே
லைத் திருக்காட்டுப் பள்ளி, யருத்தியுறு பட்டினத்துப் பல்லவனீச் சரம்பே ரன்பிலா
லந்துறைப ராய்த்துறைவேட் களமிங், குறைத்தசீ ரன்னியூ ரிவ்விரண்டாம் பதிகமு
ள்ளதலம் கடவூர்ம யானம்வாஞ் சியமே. (ஈ)

திருத்திகிரு ணனிபள்ளி திருமருக றிருப்பூந் துருத்திபுறம் பயங்கடவூர் புள்ளிரு
க்கு வேளூ, ரரத்துறைவாழ் கொளிபுத்தூர் வான்றியூர் பாரு ரம்பர்மா காளமயி லாடு
துறை வாய்மூர், திருக்கழுக்குன் றம்பாண்டிக் கொடுமுடியா மேச்சரஞ் செங்காட்டங்
குடிவெண்ணி திருச்செம்பொன் பள்ளி, பருப்பதம்புன் கூரரிசிற் கரைப்புத்தூர்
சேறை பைஞ்ஞீலி கற்குடிமா மலைபதிக மூன்றே. (உ)

வலம்புரமா லங்காடு சிவபுரங்கா ளத்தி வலிவலஞ்சாய்க் காடுதிருக் கோடிகா நக
ரம், நலந்திகழும் பூவணங்கோ லிலிஞ்றி யூரு றையூர்ச் சித்தீச்சரமு நான்காகும்
பதிகம், வலஞ்சுழிநல் லூர்பழன மாமாத்தூ ரண்ணு மலைகடம்பூ ரின்னம்பர் நாரையூ
ரைந்தா, நிலந்திகழ்நா கேச்சரமாற் பேறுமழ பாடி நெய்த்தானம் வெண்காடு நீள்
பதிக மாறே. (ஊ)

கயிலாய மானேக்கா ணள்ளாறு நாகைக் காரோணந் திருச்சோற்றுத் துறையேழு
புகலூர், வயலாரும் கழிப்பாலை யொற்றியூர் திருவா வடுதுறையெட் டாந்தில்லை மறை
க்காடு மதுரை, யியலாரு முதுகுன்றம் பதிஞென்று கச்சி யேகம்ப மிடைமருதீ
ராறையா றதிகை, யயலீரொன் பான்வீழி யாரூர்சே காழி யறுநான்கு முப்பானுன்
கெழுபத்தொன் றாமே. (எ)

திருப்பதிகக்கோவை முற்றிற்று.

தீருச்சிற்றம்பலம்.

உமாபதிசிவாசாரியர் அருளிச்செய்த

திருப்பதிக்கோவை.

*கோயிறிரு வேட்கள † நெல் வாயில்கழிப் பாலை குலவு ‡ பெரு மணமேயக் திரப்பள்ளி முல்லை, வாயில்கலிக் காமூர்சாய்க் காடுதிருப் பல்லவ னீச்சரம் வெண் காடுவளர் திருக்காட்டுப் பள்ளி, தாயிலான் குருகாவூர் காழிகோ லக்கா தருக்கினர் § புள் ளிருக்குவே ளூர்கண்ணூர் கோயின், ஞாயிலியற் கடைமுடியே நின்றியூர் புன் கூர் நாடியரீரேன்னி யூர்வேள்வி க் குடியே. (க)

கருதெதிர்கொள் பாடிமணஞ் சேரிதிருக் குறுக்கை கருப்பறியலூர் கதியே காட் டுகுரக் குக்கா, மருவும்வாழ் கொளிபுத்தூர் மண்ணிப்படிக் கரையே வளரு மோமாம் புலியூர் காளூட்டு முள்ளூர், திருநாரை யூர்கடம்பூர் பந்தணைநல் லூர்பொன் நிகழ்கஞ்ச னூர்கோடி காமங்கலக் குடியே, திருப்பனந்தா ளாப்பாடி சேய்ஞலூர் திருந்து தேவ ன்குடி திருவியலூர் திருக்கொட்டை யூரே. (உ)

இன்னம்பர் திருப்புறம்ப யம்விசய மங்கை யியல்வைகா வூர்நல்வட குரங்காடு துறையே, பின்னமறு பழனமை யாறுநெய்த் தானம் பெரும்புலியூர் மழபாடி திருப்ப முவூர் காணூ, ரன்னவன்பி லாலத்துறை மாந்துறைபாற் றுறையே யானைக்கா பைஞ் ஞீலி பாச்சிலாச் சிராம, மன்னுமீங் கோய்மலேயி னோடறுபான் மூன்றே வடகரையிற் பதிதென்பால் ¶ வாட்போக்கி யாமே. (ங)

கடம்பந்துறை திருப்பராய்த்துறை கற்குடி $ மூக்கீச்சரங் கருதுதிருச் சிராப் பள்ளி திருவெறும்பியூரே, நெடுங்களமே லேக்காட்டுப் பள்ளியாலம் பொழில்சீர் நிகழ் திருப்பூர் தருத்திகண்டி யூர்சோற்றுத் துறைமா, லடும்வேதி குடிதென் குடித் திட் டைபுள்ள மங்கையணியார்ச் சுரப்பள்ளி யருங்கருகா வூரே, படர்பாலைத் துறைநல் லூர் திருவாரூ ரதனிற் பசுபதீச் சரஞ்சத்தி முற்றம்பட் டீச்சரமே. (ச)

ஆறைவட தளிதிருவ லஞ்சுழியே || குடமூக் கதனிற்கீழ்க் கோட்டங்கா ரோண ராகேச்சரங், கூறுமிடை மருதுகுரங் காடுதுறைநீலக் குடிவைகன் மாடக்கோயி னல் லங்கோ ழம்பஞ், சாறமரா வடுதுறைதண் ÷ டுருத்திதிரு வழுந்தூர் சகம்புகழ்மா யூரம்வீள ளகர்பறியலூரே, வீறுசெம்பொன் பள்ளிநனி பள்ளிவலம் புரமே வியன்ற லேச்சங் காடாக்கூர் விளங்கு கடவூரே. (ரி)

திருக்கடவூர் மயானமொடு திருவேட்டக் குடியே தெளிச்சேரி தருமபுர நள்ளாறு கோட்டா, றுரைக்கும்பர்ப் பெருந்திருக் கோயின்மாகாள முயர்மீயச் சூரிளங்கோ யிறிலதைப் பதிபூ, மருக்கமழ்பாம் புரநற்சிறு குடிவீழி மிழலே வன்னியூர் கருவிலிமன் பேணுபெருந் துறையென், கருத்துடைக்கு றையூர்ச்சித் தீச்சரத்தோ டரிசிற் கரைப் புத்தூர் சிவபுரமுங் கலையநல்லூர் காணே. (சு)

கருக்குடிவாஞ் சியந்திருநன் னிலத்துப்பெருங் கோயில் கவின்கொண் டீச்சரம் பனையூர் விற்குடிதென் புகலூ, ரிருக்கும்வர்த்த மானேச்ச மிராமனதீச் சரமே யியல் பயற்றூர் செங்காட்டங் குடிமருக லிருளே, முருக்குதிருச் சாத்தமங்கை நாகைக்கா ரோண முன்றிருச்சிக்க நிருக்கீழ் வேளூர்தெ ஞரே, யிரிக்கரியான் பள்ளியின்முக் கூடறிரு வாரூ ரரனெறிமூ லட்டானம் பரவையுண் மண்டளியே. (எ)

---

* கோயில்—சிதம்பரம்.
† நெல்வாயில்—சிவபுரி.
‡ பெருமணம்—ஆச்சாபுரம்.
§ புள்ளிருக்குவேளூர்—வைத்தீசுரன்கோயில்
¶ வாட்போக்கி—இரத்தினகிரி.
$ மூக்கீச்சரம்—உறையூர்.
|| குடமூக்கு—கும்பகோணம்.
÷ திருத்தி—குற்றாலம்.

மேலாகும் வீளமர்கர வீரம்பெரு வேளூர் மிளிர்தலையா லங்காடு சூடவாயில் சேறை, நாலூர்ம யானங்கடு வாய்க்கரைப் புத்தூர் நவிலுமிரும் பூளைநிரு வரைதப் பெரும் பாழி, மாலூரு மவளிவணல் லூர்பரிதி நியமம் வாழ்வெண்ணி பூவனூர் பாதா ளீச் சரரீர்ச், சேலூருந் திருக்களர்சிற் றேமமுசாத் தானந் திருவிடும்பா வனத்தோடு சேர்ந்தகடிக் குளமே. (அ)

தண்டலைநீ ணெறிகோட்டூர் வெண்டுறையூ டழகே தருகொள்ளம் பூதூர்பே ரெயில்கொள்ளிக் காடு, கண்டருதெங் கூர்நெல்லிக்கா நாட்டியத்தான் குடியே காரு யில் கன்றுப்பூர் வலிவலங்கச் சினத்தோ, டண்டர்பிரான் கோளிலிதென் றிருவாய் மூர் * மறைக்கா டகத்தியான் பள்ளிகோடிக் குழகருந்தென் கரையி, லெண்டருதூற் றிருபத்தே புழிப்பாலீ முத்தி லிசைகோண மாமலைகே தீச்சரமென் றிரண்டே. (ஆ)

ஆலவா யாப்பனூர் பரங்குன்றே டகத்தோ டருங்கொடுங்குன் றந்திருப்புத் தூர் புனவா யிலினே, டேலுமிரா மேச்சரமா டானே † கானப்பே ரெழிற்றிருப்பூ வணஞ் சுழிய லின்புறுகூற் றுலம், பாலலோ சனன்றிருநெல் வேலியொடு பாண்டி பதினொன்கு மலைநாட்டி லஞ்சைக்கள மொன்றே, சீலமிகு மவிநாசி திருமுருகன் பூண்டி ‡ திரு ணை § கொடிமாடச் செங்குன்றூர் தானே. (இ)

வெஞ்சமாக் கூடல்கொடு முடிகருவூர் கொங்கின்மேவுமே முரத்துறைவண் ¶ சேய் காணை மாட, மெஞ்சலில் கூடலையாற்றூ ரெருக்கத்தம் புலியூ ரிணையகலூர் தினை நகர்சோ புரமதிகை புகழே, விஞ்சுதிரு நாவலூர் $ முதுகுன்றந் திருநெல் வெண் ணெய்திருக் கோவலூ ரறையணிநல் லூரே, மஞ்சுதிக ழிடையாறு வெண்ணெய்நல் லூர் துறையூர் வடகூர்வீ டேயருளுந் திருமாணி குழியே. (ஈ)

தண்ணார்தண் டலைப்பாதி ரிப்புலியூர் முண்டீச் சரம்புறவார் பனங்காட்டூர் திரு வாமாத் தூரே, யெண்ணரண் ணமலையு நடுநாட்டிலிருபத் திரண்டாகு மிப்பாலே கம் பமேற் றளிவிண், கண்ணுறுங்கு மதிலோண காந்தன்றளி யனேக தங்காவ தங்கச்சி நெறிக்காரைக் காடே, யுண்ணெடு குரங்கணின்முட் டங்திருமா கறலோத் தூர்வன் பார்த் தான்பனங்காட் டீச்வல்ல மாற்பேறே. (உ)

‖ ஊறலிலம் பையங்கோட் சீர் ‡ விற்கோல மாலங்கா யெர்பாகூர் வெண்பாக் கங் கள்ளில் காளத்தி, மாறிறிரு வொற்றியூர் ÷ வலிதாயம் பாலி வடமுல்லை வாயில் வேற் காடுதிரு மயிலை, யீறிறிரு வான்மியூர் கச்சூரா லக்கோயி லிடைச்சுரங் கழுக் குன்ற மச்சிறுபாக் கம்மே, மாறிதிரு வக்கரையே யரசிலிதொல் லிரும்பை மாகாளந் தொண்டை நன்னாட் டெண்ணின் முப்பா னிரண்டே. (ஊ)

கோகரணந் துளுவதே யத்திலொன்றே யிப்பாற் குலவு () பருப் பதநீல பருப் பதமம் பிகைதன், பாகருறை யனேகதங்கா வதந்திருக் கேதாரம் பகர் [] கொடித் தான் மலைவடக்கிற் பதியைந்தே யிவற்றே, டாகவிரு நூற்றெழுபா னுன்கென்பர் மூவ ருருட்பதிக மிருகுழூ றதிகமாம் வைப்புத், தாகமுட னினைப்போர்க்குந் துதிப் போர்க்கும் வினைகள் சாராவாம் பிறப்பகலுஞ் சத்தியமுத் தியுமே. (எ)

திருப்பதிக்கோவை முற்றிற்று.


---

* மறைக்காடு—வேதாரணியம். † கானப்பேர்—காளையார்கோயில்.
‡ திருநணை—பவானிகூடல். § கொடிமாடச் செங்குன்றூர்—திருச்செங்கோடு.
¶ தங்காணைமாடம்—திருப்பெண்ணைகடம். $ முதுகுன்றம்—விருத்தாசலம்.
‖ ஊறல்—தக்கோலம். ‡ விற்கோலம்—கூவம். ÷ வலிதாயம்—பாடி.
() பருப்பதம்—ஸ்ரீசைலம் அல்லது மல்லிகார்ச்சுனம். [] கொடித்தான்மலை—கைலை.

திருச்சிற்றம்பலம்.

அறுபத்துமூன்று நாயன்மார்

திருநட்சத்திரம்.



ஒன்றகல வெட்டெட்டா மோதுமடி யாரன்பாற்
றுன்றுமதி நாளினிது சொல்லவே—வென்றிதரும்
பொன்னிதிவி நாயகனூர் பூமுடிமே லாடுதிருச்
சன்னிதிவி நாயகனூர் தாள்.

நீலமண்டலவாசிரியப்பா.

தில்லைவா ழந்தணர் திருவரு ளாலவர்
மல்குசீர்ப் பதத்தை மகிழ்வொடு வணங்கிக்
கடிதிரு நீல கண்டர்தை விசாகம்
வடிவியற் பகையார் மார்கழி யுத்திரம்
வருமீள யான்குடி மாறரா வணிமகங்
கருதுமெய்ப் பொருளார் கார்த்திகை யுத்திரம்
விறன்மிண்ட கண்டர் மேடமா திரைஙா
ளறனமர் நீதி யானிப் பூரம்
மாணெறி பத்தர் மாசியி லத்தங்
காணுமே ஞதியார் கன்னியுத் திராட
மலர்கண் ணப்பர் மகரமான் றலையிற்
குலவுகுங் குலியர் கோளரி மூலந்
தருமா னக்கஞ் சாறர்விற் சுவாதி
யரிவாட் டாயர்தை யாதிரை நாளி
லாளுயர் கார்த்திகை யத்த நாளிற்
கான மூர்த்தியார் கடகத் தாரன்
முருக நிடப மூல மதனி
லுருத்திர பசுபதி யுயர்கன்னி முன்னுள்
பொருந்திரு நாளைப் போவார்கன் னியிற்பார்
திருக்குறிப் படியார் சித்திரைச் சுவாதி
சண்டீச ராமவர் தையுத்தி ரத்திற்
றண்டமி ழப்பர் தகரிற் சதயங்
குலச்சிறை நாயனூர் கோளரி யனுட
மலகில் குறும்ப ராடியிற் சித்திரை
யருள்கா ரைக்கா லம்மைமீன் விளக்கா
மருகிலப் பூதிதை யதிற்சத யத்திற்
கமைலே நக்கர் காள மூலத்தி
னமிநந்தி யடிக ணுள்விடைப் பூச
ஞான சம்பந்தர் நாள்விடை மூல

மான கலிக்காம ராணி ரேவதியி
லருட்டிரு மூல ரைப்பசி முன்னுள்
வருதண்டி யடிகள் வளர்மீன் சதயஞ்
சேமமா மூர்க்கர் தேண்மதி மூலஞ்
சோமாசி மாறர் தொழுவிடை யரவிற்
சாக்கிய நாயனர் தணுப்பூ ராடந்
தேக்கிய சிறப்புலி தேட்பூ ராடஞ்
சேர்சிறுத் தொண்டர் சித்திரைப் பரணி
சேரமான் கடகஞ் சேர்ந்தசோ தியினிற்
கணநாதர் மீனங் கலந்தவா திரையிற்
குணமாங் கூற்றுவர் குளிர்மதி யாதிரை
பொய்யடிமை யில்லாப் புலவர்தாள் போற்றி
மெய்ப்புகழ்ச் சோழர் மிளிர்குளி ராற
னரசிங்க முனையார் நற்கன்னி சதயந்
திரவதி பத்தர் சிங்கவா யிலியங்
கலிக்கம்பர் மகரக் கடைநா ளதனிற்
கலியரா டியினிற் கலந்தவிந் திரனு
டியசிற் சத்தியார் துலாப்பூ சத்தி
லையர்கா டவர்கோ னைப்பசி மூலங்
கணம்புல்ல நாயனர் கார்த்திகை யங்கி
கணஞ்சேர் காரியார் கடம்பூ ராடந்
தூய்நெடு மாறர் துலாமதிப் பரணியில்
வாயிலார் நாயனர் மார்கழி யிரேவதி
வெம்மூனை யடுவார் மீனப் பூசஞ்
செம்மை நாகங்கழற் சிங்கர்சேப் பரணி
மருவிடங் கழியார் மதிதுலா வாரல்
செருத்துணை நாயனர் சிங்கப் பூசஞ்
சேட்புகழ்த் தூணையார் சிங்கவா யிலியங்
கோட்புலி நாயனர் குளிர்மதி கேட்டை
பத்தராய்த் தாழ்வார் பரமனைப் பாடுவார்
சித்தத்தைச் சிவன் பாலே சேர்த்துளா
ரப்புறு செய்திரு வாரூர்ப் பிறந்தார்
மூப்பொ ழுதுந்திரு மேனி சீண்டுவார்
மூப்புவி தொழுமுழு நீறு பூசுவா
ரப்பாலு மடிச்சார்ந் தாரை வணங்கிப்
பூசலா ரைப்பசி புகுமனு டத்தின்
மாசிலா மானியார் மைம்மதி யுரோகிணி
மிருசிவ நேசர் மீனரோ கிணியிற்
றெருபுகழ்ச் செங்கட் சோழர் குடக்குன்
றடுநீலகண்ட யாழ்ப் பாணர்சே மூலஞ்
சடையனர் மார்கழி சார்ந்தவா திரையி
லிசைஞானி மேடத் திசைந்த சித்திரையில்
வசையிலா விம்மதி மருவுமிங் ஙாளிற்
பரகதி யடைந்த பத்தரைப் பாடிக்
கருதுவன் றெண்டர் கடகச் சுவாதி
குருபூசை நாளிற் குறைவிலா திவர்க்கு
வருபூசை தந்தோர் மாநிலத் தோங்கித்

தவப்பய னெய்திச் சதுமறைக் கிரியிற்
சிவகதி யடைத நிண்ண முண்மையதே.

பாடிய சம்பந்தர் வைகாசி மூலம் பயிலுமப்பர்
நீடிய சித்திரை மாதச் சதய நிறைவன் றொண்ட
ராடியிற் சோதி திருவாத வூரர்நல் லானிமகந்
தேடிய சேக்கிழார் வைகாசிப் பூசஞ் சிறந்தனரே.

சித்திரை யத்த மூமாபதி யாவணித் திங்கடனி
லுத்திரஞ் சீர்கொண் மறைஞான சம்பந்த ரோதுகன்னிச்
சுத்தமெய்ப் பூர மருணந்தி யைப்பசிச சோதிதனில்
வித்தக மெய்கண்ட தேவர் சிவகதி மேவினரே.

திருநட்சத்திரமுற்றிற்று.

சமயகுரவர் நால்வர் வயசு.

அப்பருக்கெண் பத்தொன் றருள்வாத வூரருக்குச்
செப்பியநா லெட்டினிற் றெய்வீக—திப்புவியிற்
சுந்தரர்க்கு மூவாறு தொன்ஞான சம்பந்தர்க்
கந்தம் பதினு றறி.

திருத்தொண்டத் தொகை.

பண் கொல்லிக்கௌவாணம்.

அடிமை.

திருச்சிற்றம்பலம்.

தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்
திருநீல கண்டத்துக் குயவனர்க் கடியே
னில்லையே யென்னுத வியற்பகைக்கு மடியே
னீலோயான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியே
னல்லிமென் முல்லையந்தா ரமர்நீதிக் கடியே
னூரூர னூரூரி லம்மானுக் காளே.

இலைமலிந்த வேனம்பி யெறிபத்தற் கடியே
னேனுதி காதன்ற னடியார்க்கு மடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்
கடவூரிற் கலயன்ற னடியார்க்கு மடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாற
னெஞ்சாத வாட்டாய னடியார்க்கு மடியே

னலைமலிந்த புனன்மங்கை யாளுயற் கடியே
ளுரூர ளுரூரி லம்மானுக் காளே. (உ)

மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கு மடியேன்
முருகனுக்கு முருத்திர பசுபதிக்கு மடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கு மடியேன்
நிருக்குறிப்புத் தொண்டர்தம் மடியார்க்கு மடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெருண்டெழுந்த தாதையை மழுவினு லெறிந்த
வம்மையா னடிச்சண்டிப் பெருமானுக் கடியே
ளுரூர ளுரூரி லம்மானுக் காளே. (ஊ)

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்ற னடியார்க்கு மடியேன்
பெருநம்பி குலச்சிறைத னடியார்க்கு மடியேன்
பெருமிழலைக் குறும்பற்கும் பேயார்க்கு மடியே
ளுருநம்பி யப்பூதி யடியார்க்கு மடியே
ளுலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலகக்கற் கடியே
னருநம்பி நமிநந்தி யடியார்க்கு மடியே
ளுரூர ளுரூரி லம்மானுக் காளே. (எ)

வம்பரு வரிவண்டு மணநாற மலரு
மதுமலர்நற் கொன்றையா னடியலாற் பேணு
வெம்பிரான் சம்பந்த னடியார்க்கு மடியே
னேயர்கோன் கலிக்காம னடியார்க்கு மடியே
னம்பிரான் நிருமூல னடியார்க்கு மடியே
ளுட்டமிகு தண்டிக்கு மூர்க்கற்கு மடியே
னம்பரான் சோமாசி மாறனுக்கு மடியே
ளுரூர ளுரூரி லம்மானுக் காளே. (ஏ)

வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியற்கு மடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கு மடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டற் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவாற்கு மடியேன்
கடற்காழிக் கணநாத னடியார்க்கு மடியே
னூர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோ னடியே
ளுரூர ளுரூரி லம்மானுக் காளே. (ஐ)

பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்
பொழிற்கருஞூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்
மெய்யடியா னரசிங்க மூனையரையற் கடியேன்
விரிதிரைசூழ் கடனுகை யதிபத்தற் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோ னடியார்க்கு மடியே
னேயடிகள் காடவர்கோ னடியார்க்கு மடியே
ளுரூர ளுரூரி லம்மானுக் காளே. (ஒ)

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கு மடியே

னிறைக்கொண்ட சிந்தையா னெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாற னடியார்க்கு மடியேன்
றுறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலே வாயிலா னடியார்க்கு மடியே
னறைக்கொண்ட வேனம்பி மூனையவோற் கடியே
னூரூர னூரூரி லம்மானுக் காளே. (அ)

கடல்சூழ்ந்த வுலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி யிடங்கழிக்குந் தஞ்சை
மன்னவனுஞ் செருத்துணைதன் னடியார்க்கு மடியேன்
புடைசூழ்ந்த புலியதண்மே லரவாட வாடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கு மடியே
னடல்சூழ்ந்த வேனம்பி கோட்புலிக்கு மடியே
னூரூர னூரூரி லம்மானுக் காளே. (கூ)

பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன்
பரமனையே பாடுவா ரடியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
நிருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்கு மடியேன்
மூப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியே
னப்பாலு மடிச்சார்ந்த வடியார்க்கு மடியே
னூரூர னூரூரி லம்மானுக் காளே. (கo)

மன்னியசீர் மறைநாவ னின்றவூர்ப் பூசல்
வரிவளையாண் மானிக்கு நேசனுக்கு மடியேன்
றென்னவனு யுலகாண்ட செங்கணார்க் கடியேன்
நிருநீல கண்டத்துப் பாணனார்க் கடியே
னென்னவனு மரனடியே யடைந்திட்ட சடைய
னிசைஞானி காதலன் நிருநாவ லூர்க்கோ
ன்னின்னவனு மாரூர னடிமைகேட் டுவப்பா
ராரூரி லம்மானுக் கன்பரா வாரே. (கக)

திருத்தொண்டத்தொகை முற்றிற்று.



பணித்தநற் றொண்டத் தொகைமுதற் றில்லே யிலைமலிந்த
வணித்திகழ் மும்மை திருநின்ற வம்பரு வார்கொண்டதோ
ரிணைத்திகழ் பொய்யடி மைக்கறைக் கண்டன் கடல்சூழ்ந்தபின்
மணித்திகழ் சொற்பத்தர் மன்னிய சீர்மறை நாவனுடே.

திருச்சிற்றம்பலம்.

நம்பியாண்டார்நம்பி அருளிச்செய்த

திருத்தொண்டர் திருவந்தாதி.

பொன்னி வடகரை சேர்நாரை யூரிற் புழைக்கைமுக
மன்ன னறுபத்து மூவர் பதிதே மரபுசெயல்
பன்னவத் தொண்டத் தொகைவகை பல்குமந் தாதினைச்
சொன்ன மறைக்குல நம்பிபொற் பாதத் துணைதுணையே.

தில்லைவாழந்தணர்.

செப்பத் தகுபுகழ்த் தில்லைப் பதியிற் செழுமறையோ
ரொப்பப் புவனங்கண் மூன்றினு மும்பரி னூரெரித்த
வப்பர்க் கமுதத் திருநடர்க் கந்திப் பிறையணிந்த
தப்பர்க் குரிமைத் தொழில்புரி வோர்தமைச் சொல்லுதுமே (க)

திருநீலகண்டநாயனார்.

சொல்லச் சிவன்றிரு வாணைதன் னாமொழி தோணசையை
யொல்லைத் துறந்துரு மூத்ததற் பின்னுமை கோனருளால்
வில்லைப் புரைநுத லாளொ டிளமைபெற் றின்பமெய்க்கான்
றில்லைத் திருநீல கண்டக் குயவனுஞ் செய்தவனே. (உ)

இயற்பகைநாயனார்.

செய்தவர் வேண்டிய தியாதுங் கொடுப்பச் சிவன்றவனுய்க்
கைதவம் பேசின் காதலி யைத்தரு கென்றலுமே
மைதிகழ் கண்ணியை யீந்தவன் வாய்ந்த பெரும்புகழ்வந்
தெய்திய காவிரிப் பூம்பட் டினத்து ளியற்பகையே. (ங)

இளையான்குடிமாறநாயனார்.

இயலா விடைச்சென்ற மாதவர்க் கின்னமு தாவிதைத்த
வயலார் முளைவித்து வாரி மனையலக் கால்வறுத்துச்
செயலார் பயிர்விழுத் தீங்கறி யாக்கு மவன்செழுநீர்க்
கயலா ரிளையான் குடியுடை மாறனெங் கற்பகமே. (ச)

மெய்ப்பொருணாயனார்.

கற்றான் மெய்த்தவன் போலொரு பொய்த்தவன் காய்சினத்தாற்
செற்றவன் றன்னை யவனைச் செறப்புக ழுந்திருவாய்
மற்றவன் றத்தா நமரே யெனச்சொல்லி வானுலகம்
பெற்றவன் சேதிபன் மெய்ப்பொரு ளாமென்று பேசுவரே. (ஞ)

விறன்மிண்டநாயனார்.

பேசும் பெருமையவ் வாரூ ரனையும் பிரானவனு
மீசன் றனையும் புறகுதட் டென்றவ னீசனுக்கே
நேச னெனக்கும் பிரான்மனைக் கேபுக நீடுதென்றல்
வீசும் பொழிற்றிருச் செங்குன்ற மேய விறன்மிண்டனே. (ட)

அமர்நீதிநாயனார்.

மிண்டும் பொழிற்பழை யாறை யமர்நீதி வெண்பொடியின்
மூண்டங் தரித்த பிராற்குநல் லூரின்முன் கோவணநேர்
கொண்டிங் கருளென்று தன்பெருஞ் செல்வமும் தன்னையுந்தன்
றுண்ட மதிறுத லாளெய் மீந்த தொழிலினனே. (எ)

சுந்தரமூர்த்திநாயனார்.

தொழுதும் வணங்கியு மாலயன் றேடருஞ் சோதிசென்றுங்
கெழுதுந் தமிழ்ப்பழ வாவணங் காட்டி யெனக்குன்குடி
முழுது மடிமைவந் தாட்செ யெனப்பெற்ற வன்முறே
னெழுகு மலரினற் றுரெம் பிரானம்பி யாரூரனே. (அ)

எறிபத்தநாயனார்.

ஊர்மதின் மூன்றட்ட வத்தமர்க் கென்றே ருயர்தவத்தோன்
ரூர்மலர் கொய்யா வருபவன் றண்டின் மலர்பறித்த
வூர்மலே மேற்கொளும் பாக ருடறணி யாக்குமவ
னோர்மலி மாமதில் சூழ்கரு வூரி லெறிபத்தனே. (க)

ஏனாதிநாதநாயனார்.

பத்தனே யேனதி நாதனேப்பார்நீ டெயினே தன்னு
ளத்தனேத் தன்னே டமர்மலைந்தா னெற்றி நீறுகண்டு
கைத்தனி வாள்வீ டொழிந்தவன் கண்டிப்ப நின்றருளு
நித்தனே யீழக் குலதீப னென்பரிந் நீணிலத்தே. (கo)

கண்ணப்பநாயனார்.

நிலத்திற் றிகழ்திருக் காளத்தி யார்திரு நெற்றியின்மே
னலத்திற் பொழிதரு ரண்ணிற் குருதிகண் ணிண்ணெய்நெ
வலத்திற் கடுங்கணே யாற்றன் மலர்க்கண் ணிடந்தப்பிஞன்
குலத்திற் கிராதனங் கண்ணப்ப னெமென்று கூறுவரே. (கக)

குங்குலியக்கலயநாயனார்.

வெய்ந்த கயிறுதன் கண்டத்திற் பூட்டி யெழிற்பனந்தாட்
சாய்ந்த சிவனிலைத் தானென்பர் காதலி தாலிகாடித்
தாய்ந்தநற் குங்குலி யங்கொண்ட னற்புகை காலனைமுன்
காய்ந்த வரற்கிட்ட தென்கட வூரிற் கலயனேயே. (கஉ)

மானக்கஞ்சாறநாயனார்.

கலச முலைக்கன்னி காதற் புதல்வி கமழ்குழலே
நலசெய் தவத்தவன் பஞ்ச வடிக்கிவை நல்கெனலு
மலசு மெனக்கரு தாதவள் கூந்த லரிந்தளித்தான்
மலைசெய் மதிற்கஞ்சை மானக்கஞ் சாற னெனும்வள்ளலே. (கங)

அரிவாட்டாயநாயனார்.

வள்ளற் பிராற்கமு தேந்தி வருவோ ளுகலுமிங்கே
வெள்ளச் சடையா யமுதுசெய் யாவிடி லென்றலையைத்
தள்ளத் தகுமென்று வாட்பூட் டியதடங் கையினன்கா
ணள்ளற் பழனக் கணமங் கலத்தரி வாட்டாயனே. (கச)

ஆனாயர்நாயனார்.

தாயவன் யாவுக்குந் தாழ்சடை மேற்றனித் திங்கள்வைத்த
ஞாயவன் பாதந் தொடர்ந்துதொல் சீர்துளை யாற்பரவும்
வேயவன் மேன்மழ நாட்டு வீரிபுனன் மங்கலக்கோ
னாயவ னானய னென்னையு வந்தாண் டருளினனே. (கஇ)

கந்தாமூர்த்திநாயனார்.

அருட்டுறை யத்தர்க் கடிமைப்பட் டேனினி யல்லனென்னும்
பொருட்டுறை யாவதென் னேயென்ன வல்லவன் பூங்குவளை
யிருட்டுறை நீர்வய னாவற்ப திக்கும்பி ரானடைந்தோர்
மருட்டுறை நீக்கிநல் வான்வழி காட்டிட வல்லவனே. (கக)

மூர்த்திநாயனார்.

அவந்திரி குண்டம ணைதின் மாள்வனென் றன்முலவாய்ச்
சிவன்திரு மேனிக்குச் செஞ்சந் தனமாச் செழுமுழங்கை
யுவந்தொளிர் பாறையிற் றேய்த்துல காண்டவொண் மூர்த்திதன்னூர்
நிவந்தபொன் மாட மதுரா புரியென்னு நீள்பதியே. (கஎ)

முருகநாயனார்.

பதிகந் திகழ்தரு பஞ்சாக் கரம்பயி னைவினன்சீர்
மதியஞ் சடையார்க் கலர்தொட் டணிபவன் யான்மகிழ்ந்து
துதியங் கழற்சண்பை நாதற்குத் தோழன்வன் றொண்டனம்பொன்
னதிகம் பெறும்புக லூர்முரு கன்னெனு மந்தணனே. (கஅ)

உருத்திரபசுபதிநாயனார்.

அந்தாழ் புனறன்னி லல்லும் பகலுநின் ருதரத்தா
லுந்தாத வன்பொடு ருத்திரஞ் சொல்லிக் கருத்தமைந்த
பைந்தா ருருத்ர பசுபதி தன்னற் பதிவயற்கே
நந்தார் திருத்தலை யூரென் றுரைப்பரிந் நானிலத்தே. (கக)

திருநாளைப்போவார்நாயனார்.

நாவார் புகழ்த்தில்லை யம்பலத் தானருள் பெற்றுநாளைப்
போவா னவனும் புறத்திருத் தொண்டன்றன் புன்புலைபோய்
மூவா யிரவர்கை கூப்ப முனியாய வன்பதிதான்
மாவார் பொழிறிக ழாதனூ ரென்பரிம் மண்டலத்தே. (உ0)

திருக்குறிப்புத்தொண்டநாயனார்.

மண்டும் புனற்சடை யான்றமர் தூசெற்றி வாட்டும்வகை
விண்டு மழைமுகில் வீடா தொழியின்யான் வீவனென்னு
மிண்டும் படர்பாறை முட்டு மெழிலார் திருக்குறிப்புத்
தொண்டன் குலங்கச்சி யேகா லியர்தங்க டொல்குலமே. (உக)

சண்டேசுரநாயனார்.

குலமே நியசேய்ஞ லூரிற் குரிசில் குரைகடல்சூழ்
தலமே நியவிறற் சண்டிகண் டீர்த்தை தாளிரண்டும்
வலமே நியமழு வாலெறிந் தீசன் மணிமுடிமே
னலமே நியபால் சொரிந்தலர் சூ... ... (உ ஏ)

சுந்தரமூர்த்திநாயனார்.

நிதியார் தருத்திதென் வேள்விக் குடியாய் நினைமறந்த
மதியேற் கறிகுறி வைத்த புகர்பின்னை மாற்றிடென்று
துதியா வருள்சொன்ன வாறறிவா ரிடைப் பெற்றவன்கா
ணதியார் புனல்வய ஞவலர் கோனென்னு நற்றவனே. (உக)

திருநாவுக்கரசுநாயனார்.

நற்றவ னல்லூர்ச் சிவன்றிருப் பாதந்தன் சென்னிவைக்கப்
பெற்றவன் மற்றிப் பிறப்பற வீரட்டர் பெய்கழற்கு
ஞற்றவ னுற்ற விடமடை யாரிட வொள்ளமுதாத்
தற்றவ ஞமூரி ஞவுக்கர செனுந் தாமணியே. (உச)

மணியினை மாமறைக் காட்டு மருந்தினை வண்மொழியாற்
றிணியன நீள்கத வந்திறப் பித்தன தென்கடலிற்
பிணியன கன்மிதப் பித்தன சைவப் பெருநெறிக்கே
யணியன நாவுக் கரையர்பி ரான்ற னருந்த மிழே. (உடி)

குலச்சிறைநாயனார்.

அருந்தமி ழாகரன் வாதி லமணைக் கழு நுதிமே
லிருந்தமிழ் நாட்டிடை யேற்றுவித் தோனெழிற் சங்கம்வைத்த
பெருந்தமிழ் மீனவன் றன்னதி காரி பிரசமல்கு
குருந்தவிழ் சாரன் மணமேற் குடிமன் குலச்சிறையே. (உசு)

பெருமிழலைக்குறும்பநாயனார்.

சிறைநன் புனற்றிரு நாவலூ ராளி செழுங்கயிலைக்
கிறைநன் கழலுளே யெய்து மிவனருள் போற்றவின்றே
பிறைநன் முடியன் னடியடை வேனென் றுடல்பிரிந்தா
னறைநன் மலர்த்தார் மிழலைக் குறும்ப னெனுநம்பியே. (உஎ)

காரைக்காலம்மையார்.

நம்பன் றிருமலை நான்மிதி யேனென்று தாளிரண்டு
மும்பர் மிசைத்தலை யானடந் தேற வுமைகணவுஞ்
செம்பொன் னுருவனென் னம்மை யெனப்பெற் றவள்செழுந்தேன்
கொம்பி னுருகாரைக் காலினின் மேய குலதனமே. (உஅ)

அப்பூதியடிகணியனார்.

தனமா வதுதிரு நாவுக் கரசின் சரணமென்னு
மனமார் புனற்பந்தர் வாழ்த்திவைத் தாங்கவன் வண்டமிழ்க்கே
யினமாத் தனது பெயரிடப் பெற்றவ னெங்கள்பிரா
னனமார் வயற்றிங்க ளூரினில் வேதிய னப்பூதியே. (உக)

திருநீலநக்கநாயனார்.

பூதிப் புயத்தர் புயத்திற் சிலந்தி புகலுமஞ்சி
யூதித் தமிந்த மனைவியை நீப்பவுப் பாலவெல்லாம்
பேதித் தெழுந்தன காணென்று பிஞ்ஞகன் காட்டிமவ
னீதித் திகழ்சாத்தை நீலநக் கன்னெனும் வேதியனே, (கூ0)

நமிநந்தியடிகணயனர்.

வேத மறிக்கரத் தாரூ ரரற்கு விளக்கு நெய்யைத்
தீத்தி செறியமண் கையரட் டாவிடத் தெண்புனலா
லேத முறுக வருகரென் றன்று விளக்கெரித்தா
னுத னெழிலேமப் பேறூ ரதிப னமிநந்தியே. (ங்க)

சுந்தரமூர்த்திநாயனர்.

நந்திக்கு நம்பெரு மாற்குநல் லாரூரி னுயகற்குப்
பந்திப் பரியன செந்தமிழ் பாடிப் படர்புனலிற்
சிந்திப் பரியன சேவடி பெற்றவன் சேவடியே
வந்திப் பவன்பெயர் வன்ரெண்ட ரென்பரிவ வையகத்தே. (ங்உ)

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

வைய மகிழயாம் வாழ வமணர் வலிதொலைய
வையன் பிரம புரத்தரற் கம்மென் குதலைச்செவ்வாய்
பைய மிழற்றும் பருவத்துப் பாடப் பருப்பதத்தின்
றைய லருள்பெற் றனனென்பர் ஞானசம் பந்தனேயே. (ங்ஙங)

பந்தார் விரலியர் வேள்செங்கட் சோழன் முருகனல்ல
சந்தா ரகலத்து நீலநக் கன்பெயர் தான்மொழிந்து
கொந்தார் சடையர் பதிகத்தி லிட்டடி யேன்கொடுத்த
வந்தாதி கொண்ட பிரானருட் காழியர் கொற்றவனே. (ங்ச)

ஏயர்கோன்கலிக்காமநாயனர்.

கொற்றத் திறலெந்தை தந்தைதன் றந்தையெங் கூட்டமெல்லாந்
தெற்றச சடையாய் நினதடி யேந்திகழ் வன்ரெண்டனே
மற்றிப் பிணிதவிர்ப் பானென் றுடைவா ளருவியங்நோய்
செற்றுத் தவிர்கலிக் காமன் குடியேயர் சிர்க்குடியே. (ங்ஜ)

திருமூலநாயனர்.

குடிமன்னு சாத்தனூர்க் கோக்குல மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன் றன்னே முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி யேபர விட்டெனுச்சி
யடிமன்ன வைத்த பிரான்மூல ஞகின்ற வங்கணனே. (ங்ஞ)

தண்டியடிகணயனர்.

கண்ணுர் மணியொன்று மின்றிக் கயிறு பிடித்தரற்குத்
தண்ணுர் புனற்றடந் தொட்டலுந் தன்னே நகுமமணர்
கண்ணுங் கிழப்ப வமணர் கலக்கங்கண் டம்மலர்க்கண்
விண்ணு யகணிடைப் பெற்றவ ஞரூர் விறற்றண்டியே. (ங்ட)

மூர்க்கநாயனர்.

தண்டலை சூழ்திரு வேற்காட் டேர்மன்னன் நருகவற்றூற்
கொண்டவல் லாயம்வன் சூதரை வென்றுமுன் கொண்டபொருண்
முண்டநன் னீற்ற னடியவர்க் கீபவன் மூர்க்கனென்பர்
கண்டலை நீரொண் குடந்தையின் மேவுநற் சூதனேயே. (ங்அ)

சோமாசிமாறநாயனார்.

சூதப் பொழிலம்ப ரந்தணன் சோமாசி மாறனென்பான்
வேதப் பொருளஞ் செழுத்தும் விளம்பியல் லான்மொழியா
னீதிப் பரன்மன்னு நித்த நியமன் பரவையென்னு
மாதுக்குக் காந்தன் வன்றொண்டன் றனக்கு மகிழ்துணையே. (நக)

சுந்தரமூர்த்திநாயனார்.

துணையு மளவுமில் லாதவன் றன்னரு ளேதுணையாக்
கணையுங் கதிர்நெடு வேலுங் கறுத்த கயலிணையும்
பிணையு நிகர்த்தகட் சங்கிலி பேரமைத் தோளிரண்டு
மணையு மவன்றிரு வாரூர் புகுந்த வற்புதனே. (சஅ)

சாக்கியநாயனார்.

தகடன வாடையன் சாக்கியன் மாக்கற் றடவரையின்
மகனடந் தாக்கக் குழைந்ததிண் டோளர்வண் கம்பர்செம்பொன்
நிகழ்தரு மேனியிற் செங்க லெறிந்து சிவபுரத்திப்
புகழ்தரப் புக்கவ னூர்சங்க மங்கை புவனியிலே. (சக)

சிறப்புலிநாயனார்.

புவனியிற் பூதியுஞ் சாதன மும்பொலி வார்ந்துவந்த
தவநிய மார்க்குச் சிறப்புச்செய் தத்துவ காரணனு
மவனியிற் கீர்த்தித் தென்னுக்கூ ரதிப னருமறையோன்
சிவனிய மந்தலை நின்றதொல் சீர்நஞ் சிறப்புலியே. (சஉ)

சிறுத்தொண்டநாயனார்.

புலியி னதளுடைப் புண்ணியற் கின்னமு தாத்தனதோ
ரொலியின் சதங்கைக் குதலைப் புதல்வ னுடலுணித்துக்
கலியின் வலிகெடுத் தோங்கும் புகழ்ச்சிறுத் தொண்டன்கண்டீர்
மலியும் பொழிலொண்செங் காட்டங் குடியவர் மன்னவனே. (சங)

சேரமான்பெருமாணயனார்.

மன்னர் பிரானெந்தை வண்ணு னுடலுவ ரூறுந்ரூர்
தன்னர் பிரான்றமர் போல வருதலுந் தான்வணங்க
வென்ன பிரானடி வண்ணு னெனவடிச் சேரனென்னுந்
தென்னர் பிரான்கழ றிற்றறி வானெனுஞ் சேரலனே. (சச)

சேரற்குத் தென்ன வலர்பெரு மாற்குச் சிவனளித்த
வீரக் கடகரி முன்புதன் பந்தி யிவுளிவைத்த
வீரற்கு வென்றிக் கருப்புவில் வீரனை வெற்றிகொண்ட
சூரற் கெனதுள்ள நன்றுசெய் தாயின்று தொண்டுபட்டே. (சஙி)

கணநாதநாயனார்.

தொண்டரை யாக்கி யவரவர்க் கேற்ற தொழில்கள்செய்வித்
தண்டர்தங் கோனக் கணத்துக்கு நாயகம் பெற்றவன்காண்
கொண்டல்கொண் டேறிய மின்னுக்குக் கோல மடல்கடொறுங்
கண்டல்வெண் சோறளிக் குங்கடற் காழிக் கணநாதனே. (சஙு)

கூற்றுவநாயனார்.

நாதன் றிருவடி யேமுடி யாகக் கவித்துகல்ல
போதங் கருத்திற் பொறித்தமை யாலது கைகொடுப்ப
வோதத் தழுவிய ஞாலமெல் லாமொரு கோலின்வைத்தான்
கோதை நெடுவேற் களப்பாள ரூகிய கூற்றுவனே. (சஎ)

சுந்தரமூர்த்திநாயனார்.

கூற்றுக் கெவனே புகறிரு வாரூரன் பொன்முடிமே
லேற்றுத் தொடையலு மின்னடைக் காயு மிடுதருமக்
கோற்றொத்து கூனனுங் கூன்போய்க் குருடனுங் கண்பெற்றமை
சாற்றித் திரியும் பழமொழி யாமித் தாணியிலே. (சஅ)

பொய்யடிமையில்லாதபுலவர்.

தாணியிற் பொய்ம்மை யிலாத்தயிழ்ச் சங்க மதிற்கபிலர்
பாணர் நக்கீரர் முதனூற்பத் தொன்பது பல்புலவோ
ரருணமக் கீயுந் திருவால வாயரன் சேவடிக்கே
பொருளமைத் தின்பக் கவிபல பாடும் புலவர்களே. (சக)

புகழ்ச்சோழநாயனார்.

புலமன் னியமன்னைச் சிங்கள நாடு பொடிபடுத்த
குலமன் னியபுகழ்க் கோகன நாதன் குலமுதலோ
னலமன் னியபுகழ்ச் சோழன தென்பர் நகுசுடர்வாள்
வலமன் னியவெறி பத்தனுக் கீந்ததொர் வண்புகழே. (இ0)

நரசிங்கமுனையரையநாயனார்.

புகழும் படியெம் பரமே தவர்க்குநற் பொன்னிடுவோ
னிகழும் படியோர் தவன்மட வார்புனை கோலமெங்கு
நிகழும் படிகண் டவனுக் கிரட்டிபொன் னிட்டவனீ
டிகழு முடிநர சிங்க முனையர சன்றிறமே. (இக)

அதிபத்தநாயனார்.

திறமமர் மீன்படிக் கும்பொழு தாங்கொரு மீன்கிவற்கென்
றுறவமர் மாகடற் கேவிடு வோனெரு நாட்கனக
நிறமமர் மீன்பட நின்மலற் கென்றுவிட் டோன்கமலம்
புறமமர் நாகை யதிபத்த னூகிய பொய்யிலியே. (இஉ)

கலிக்கம்பநாயனார்.

பொய்யைக் கடிந்தநம் புண்ணியர்க் காட்பட்டுத் தன்னடியான்
சைவத் திருவுரு வாய்வரத் தானவன் ரூள்கழுவ
வையத் தவர்முன்பு வெள்கிநீர் வாரா விடமனைவி
கையைத் தடிந்தவன் பெண்ணூ கடத்துக் கலிக்கம்பனே. (இங)

கலியநாயனார்.

கம்பக் கரிக்குஞ் செலந்திக்கு நல்கிய கண்ணுதலோ
னும்பர்க்கு நாதற் கொளிவிளக் கேற்றற் குடலிலஞ்சுக்
கும்பத் தயிலம்வீற் றுஞ்செக் குழன்றுங்கொள் கூலியினு
னம்பற் கெரித்த கலியொற்றி மாநகர்ச் சக்கிரியே. (இச)

சத்திநாயனார்.

கிரிவில் லவர்தம் மடியரைத் தன்முன்பு கீழ்மைசொன்ன
திருவில் லவரையங் நாவரி வோன்றிருந் தாரைவெல்லும்
வரிவில் லவன்வயற் செங்கழு நீரின் மருவுதென்ற
றெருவில் விரைகம ழுந்தென் வரிஞ்சைத் திகழ்சத்தியே. (திதி)

ஐயடிகள்காடவர்கோனயனார்.

சத்தித் தடக்கைக் குமரனற் றூதைதன் றூனமெல்லா
மூத்திப் பதமொரொர் வெண்பா மொழிந்து முடியரசா
மத்திற்கு மும்மைநன் றூலரற் காயைய மேற்றலென்னும்
பத்திக் கடலே யடிகளா கின்றநம் பல்லவனே. (திசு)

சுந்தரமூர்த்திநாயனார்.

பல்லவை செங்கதி ரோனைப் பறித்தவன் பாதம்புகழ்
சொல்லவன் றென்புக லூரரன் பாற்றுய்ய செம்பொன்கொள்ள
வல்லவ ளுட்டியத் தான்குடி மாணிக்க வண்ணனுக்கு
நல்லவன் றன்பதி நாவலூ ராகின்ற நன்னகரே. (திஎ)

கணம்புல்லநாயனார்.

நன்னக ராய விருக்குவே ளூர்தனி னல்குரவாய்ப்
பொன்னக ராயநற் றில்லே புகுந்து புலீச்சரத்து
மன்னவ ராய வரற்குநற் புல்லால் விளக்கெரித்தான்
கன்னவி ரூளெந்தை தந்தை பிரானெங்க ணம்புல்லனே. (திஅ)

காரிநாயனார்.

புல்லன வாகா வகையுல கத்துப் புணர்ந்தனவுஞ்
சொல்லின வுந்ய மாக்கிச் சுடர்பொற் குவடுதனி
வில்லனை வாழ்த்தி விளங்குங் கயிலேபுக் கானென்பராற்
கல்லன மாமதில் சூழ்கட வூரினிற் காரியையே. (திக)

நெடுமாறநாயனார்.

கார்த்தண் முகிற்கைக் கடற்கா ழியர்பெரு மாற்கெதிரா
யார்த்த வமண ரழிந்தது கண்டுமற் றுங்கவரைக்
கூர்த்த கழுவி னுதிவைத்த பஞ்சவ னென்றுரைக்கும்
வார்த்தை யதுபண்டு நெல்வேலி யில்வென்ற மாறனுக்கே. (சுo)

வாயிலார்நாயனார்.

மாரு வருளரன் றன்னே மனவா லயத்திருத்தி
யாரு வறிவா மொளிவிளக் கேற்றி யகமலர்வாம்
வீரு மலரளித் தன்பெனு மெய்யமிர் தங்கொடுத்தான்
வீரூர் மயிலேயுள் வாயிலா னென்று விளம்புவரே. (சுக)

முனையடுவோர்நாயனார்.

என்று விளம்புவர் நீடே ரதிபன் முனையடுவோ
னென்று மமரு ளழிந்தவர்க் காக்கூலி யேற்றெறிந்து
வென்று பெருஞ்செல்வ மெல்லாங் கனகசன் மேருவென்னுங்
குன்று வளைத்த சிலையான் றமர்க்குக் கொடுத்தனனே. (சுஉ)

சுந்தரமூர்த்திநாயனார்.

கொடுத்தான் முதலேகொள் பிள்ளைக் குயிரன்று புக்கொளியூர்த்
தொடுத்தான் மதுர கவியவி நாசியை வேடர்சுற்றம்
படுத்தான் றிருமுரு கன்பூண் டியினிற் பராபரத்தேன்
மடுத்தா னவனென்பர் வன்றொண்ட ஞகின்ற மாதவனே. (கூடு)

கழற்சிங்கநாயனார்.

மாதவத் தோர்தங்கள் வைப்பினுக் காரூர் மணிக்குவைத்த
போதினைத் தான்மோந்த தேவிதன் மூக்கை யரியப்பொற்கை
காதினைவத் தன்றே வரிவதென் றுங்கவள் கைதடிந்தா
ஞதமொய்த் தார்வண்டு கிண்டுபைங் கோதைக் கழற்சிங்கனே. (கூச)

இடங்கழிநாயனார்.

சிங்கத் தருவனைச் செற்றவன் சிற்றம் பலமுகடு
கொங்கிற் கனக மணிந்தவா தித்தன் குலமுதலோன்
றிங்கட் சடையர் தமரதென் செல்வ மெனப்பறைபோக்
கெங்கட் கிறைவ னிருக்கு வேளூர்மன் னிடங்கழியே. (கூடி)

செருத்துணைநாயனார்.

கழிநீள் கடனஞ்ச யின்றூர்க் கிருந்த கடிமலரை
மொழிநீள் புகழ்க்கழற் சிங்கன்றன் றேவிமுன் மோத்தலுமே
யெழினீள் குமிழ்மலர் மூக்கரிந் தானென் றியம்புவரார்
செழுநீர் மருகனன் ஞட்டமர் தஞ்சைச் செருத்துணையே. (கூசு)

புகழ்த்துணைநாயனார்.

செருவிலி புத்தூர்ப் புகழ்த்துணை வையஞ் சிறுவிலைத்தா
வுருவலி கெட்டுண வின்றி யுமைகோனை மஞ்சனஞ்செய்
தருவதொர் போதுகை சோர்ந்து கலசம் விழத்தரியா
தருவரை வில்லி யருளி னிதியது பெற்றனனே. (கூஎ)

கோட்புலிநாயனார்.

பெற்ற மூயர்த்தோன் விரையாக் கலிபிழைத் தோர்தமது
சுற்ற மறுக்குந் தொழிற்றிரு நாட்டியத் தான்குடிக்கோன்
குற்ற மறுக்குநங் கோட்புலி நாவற் குரிசிலருள்
பெற்ற வருட்கட லென்றுல கேத்தும் பெருந்தகையே. (கூஅ)

சுந்தரமூர்த்திநாயனார்.

தருமகட் பேசினேன் வீயவே தூல்போன சங்கிலிபாற்
புருமணக் காதலிஞ லொற்றி யூருறை புண்ணியன்றன்
பிருமலர்ப் பாதம் பணிந்தரு ளாலிவ் வியனுலக
நகும்வழக் கேநண்மை யாப்புணர்ந் தானுவ ஞாரசே. (கூக)

பத்தராய்ப்பணிவார்.

அரசினே யாரூ ரமரர் பிரானே யடிபணிந்திட்
டுரைசெய்த வாய்தடு மாறி யுரோம புளகம்வந்து
காசர ணுதி யவயவங் கம்பித்துக் கண்ணருவி
சொரிதரு மங்கத்தி னேர்பத்த ரென்று தொகுத்தவரே. (எ0)

பரமனையேயாவோர்.

தொகுத்த வடமொழி தென்மொழி யிரண்டென்று தோன்றியதே
மிகுத்த வியலிசை வல்ல வகையில்வீண் டோயுநெற்றி
வகுத்த மதிற்றில்லே யம்பலத் தான்மலர்ப் பாதங்கண்மே
லுகுத்த மனத்தொடும் பாடவல் லோரென்ப ருத்தமரே. (எக)

சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார்.

உத்தமத் தானத் தறம்பொரு ளின்ப மொடியெறிந்து
வித்தகத் தானத் தொருவழிக் கொண்டு விளங்கச்சென்னி
மத்தம்வைத் தான்றிருப் பாத கமல மலரிணைக்கீழ்ச்
சித்தம்வைத் தாரென்பர் வீடுபே றெய்திய செல்வர்களே. (எஉ)

திருவாரூர்ப்பிறந்தார்.

செல்வன் திகழ்திரு வாரூர் மதில்வட்டத் துட்பிறந்தார்
செல்வன் றிருக்கணத் துள்ளவ ரேயத னூற்றிகழச்
செல்வம் பெருகுதென் னூரூர்ப் பிறந்தவர் சேவடியே
செல்வ நெறியுறு வார்க்கணித் தாய செழுநெறியே. (எங)

மூப்பொழுதுந்திருமேனிதீண்டுவார்.

நெறிவார் சடையரைத் தீண்டி மூப்போதுநீ டாகமத்தி
னறிவால் வணங்கியர்ச் சிப்பவர் நம்மையு மாண்டமரர்க்
கிறையாய்முக் கண்ணுமெண் டோளுந் தரித்தீறில் செல்வத்தொடு
முறைவார் சிவபெரு மாற்குறை வாய வுலகினிலே. (எச)

முழுநீறுபூசியமுனிவர்.

உலகு கலங்கினு மூழி திரியினு முள்ளொருகால்
விலகுத லில்லா விதியது பெற்றநல் வித்தகர்கா
ணலகில் பெருங்குணத் தாரூரமர்ந்த வரனடிக்கீ
ழிலகுவெண் ணீறுதம் மேனிக் கணியு மிறைவர்களே. (எடு)

அப்பாலுமடிச்சார்ந்தார்.

வருக்க மடைத்துநன் னூவலூர் மன்னவன் வண்டமிழாற்
பெருக்கு மதுரத் தொகையிற் பிறைசூடி பெய்கழற்கே
யொருக்கு மனத்தொடப் பாலடிச் சார்ந்தவ ரென்றுலகிற்
றெரிக்கு மவர்சிவன் பல்கணத் தோர்ஞ் செழுந்தவரே. (எசு)

சுந்தரமூர்த்திநாயனார்.

செழுநீர் வயன்முது குன்றினிற் செந்தமிழ் பாடிவெய்ய
மழுநீன் தடக்கைய னீந்தபொன் னுங்குக்கொள் ளாதுவந்தப்
பொழினீ டருதிரு வாரூரில் வாசியும் பொன்னுங் கொண்டோன்
கெழுநீள் புகழ்த்திரு வாரூர னென்றுநாங் கேட்பதுவே. (எஎ)

பூசலார்நாயனார்.

பதுமநற் போதன்ன பாதத் தரற்கொரு கோயிலையான்
கதுமெனச் செய்குவ தென்று கொலாமென்று கண்டியிலா
ததுமனத்தே யெல்லி தோறு நினைந்தருள் பெற்றதென்பர்
புதுமணத் தென்ற லுலாநின்ற வூர்தனிற் பூசலையே. (எஅ)

மங்கையர்க்கரசியார்.

பூச லயிற்றென்ன ஞர்க்கன லாகப் பொருமையினுல்
வாச மலர்க்குழற் பாண்டிமா தேவியா ரானிகண்டீர்
தேசம் விளங்கத் தமிழா கரர்க்கறி வித்தவரா
ஞசம் வினைத்தா ளருகந் தருக்குத்தென் னூட்டகத்தே. (எக)

நேசநாயனூர்.

நாட்டகிட் டன்றரி வந்திப்ப வெல்படை நல்கினர்தர்
தாட்டரிக் கப்பெற் றவனென்பர் சைவத் தவரையிற்
கூட்டு மக்கப்படங் கோவண நெய்து கொடுத்துநன்மை
யீட்டுமக் காம்பீலிச் சாலிய நேசனே யிம்மையிலே. (அ0)

கோச்செங்கட்சோழநாயனூர்.

மைவைத்த கண்ட னெறியன்றி மற்றோர் நெறிகருதாத்
தெய்வக் குடிச்சோழன் மூன்பு கிலந்தியாய்ப் பந்தர்செய்து
சைவத் துருவெய்தி வந்து தரணிமீ டாலயங்கள்
செய்வித் தவன்றிருக் கோச்செங் கணனெனுஞ் செம்பியனே. (அக)

செம்பொ னணிந்துசிற் றம்பலத் தைச்சிவ லோகமெய்தி
நம்பன் கழற்கீ ழிருந்தோன் குலமுத லென்பர்நல்ல
வம்பு மலர்த்தில்லை யீசனைச் சூழ மறைவளர்த்தா
னிம்ப நறுந்தொங்கற் கோச்செங்க ணனெனு நித்தனையே. (அஉ)

திருநீலகண்டயாழ்ப்பாணநாயனூர்.

தனையொப் பருமெருக் கத்தம் புலியூர்த் தகும்புகழோ
னினையொப் பருந்திரு நீலகண் டப்பெரும் பாணனேகீள்
சினையொப் பலர்பொழிற் சண்பையர் கோன்செந் தமிழொடிசை
புனையப் பரனருள் பெற்றவ னென்பரிப் பூதலத்தே. (அங)

சடையநாயனூர்.

தலம்விளங் குந்திரு நாவலூர் தன்னிற் சடையனென்னுங்
குலம்விளங் கும்புக ழோனை யுரைப்பர் குவலயத்தி
னலம்விளங் கும்படி நாம்விளங் கும்படி நற்றவத்தின்
பலம்விளங் கும்படி யாரூ ரனைமுன் பயந்தமையே. (அச)

இசைஞானியார்.

பயந்தாள் கறுவுடைச் செங்கண் வெள்ளைப் பொள்ள னீள்பனைக்கைக்
கயந்தா னுகைத்த நற்காலையை யென்றுங் கபாலங்கைக்கொண்
டயந்தான் புகுமா னூரூர்ப் புனித வரன்றிருத்தா
ணயந்தா டனதுள்ளத் தென்று முரைப்பது ஞானியையே. (அடி)

சுந்தரமூர்த்திநாயனூர்.

ஞானவா சூரரைச் சேரரை யல்லது நாமறியோ
மானவ வாக்கை யொடும்புக் கவரை வளரொளிப்பூண்
வானவ ராலு மருவற் கரிய வடகயிலைக்
கோனவன் கோயிற் பெருந்தவத் தோர்தங்கள் கூட்டத்திலே, (அக)

திருத்தொண்டத்தொகையிலுள்ள தோகையடியார்கள், தனியடியார்கள்.

கூட்டமொன் பானெ டறுபத்து மூன்று தனிப்பெயரா
வீட்டும் பெருந்தவத் தோரெழு பத்திரண் டாம்வினையை
வாட்டுந் தவத்திருத் தொண்டத் தொகைபதி னொன்றின்வகைப்
பாட்டுந் திகழ்திரு நாவலூ ராளி பணித்தனனே. (அஎ)

திருத்தொண்டத்தொகைப் பதிகக்கவிகளின் முதற்குறிப்பு.

பணித்தநற் றொண்டத் தொகைமுதற்பில்லை யிலைமலிந்த
வணித்திகழ் மும்மை திருநின்ற வம்பரு வார்கொண்டடி
நிணைத்தநற் பொய்யடி மைகறைக் கண்டன் கடல்சூழ்ந்தபின்
மணித்திகழ் சொற்பத்தர் மன்னிய சீர்மறை நாவனெடே. (அஅ)

நூற்பயன்.

ஓடிடும் பஞ்சேந் திரியமொடுக்கி யென்னூழ் வினைகள்
வாடிடும் வண்ணநின் றெத்தவஞ் செய்தனன் வானினுள்ளோர்
சூடிடுஞ் சீர்த்திருப் பாதத்தர் தொண்டத் தொகையினுள்ள
சேடர்தஞ் செல்வப் பெரும்புக ழந்தாதி செப்பிடவே. (அசு)

திருத்தொண்டர்திருவந்தாதி முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

சிவஞானமுனிவர் அருளிச்செய்த

திருத்தொண்டர்திருநாமக்கோவை.

மெய்யன்பர் நாமமெல்லாம் வெவ்வேறு போற்றிடவைங்
கையன் றிருவடியே காப்பு.

திவ்லேவா ழந்தணர்கள் சீர்நீல கண்டனு
நிவ்லேயளித்த வியற்பகையார் — தொல்லே
யிளேயான் குடிமாறர் மெய்ப்பொருளா ரென்று
மிளேயா விறன்மிண்ட ரின்ப — மளவுமமர்
நீதி யெறிபத்தர் நீண்டபுக ழேனதி
நாதர்திருக் கண்ணப்பர் நற்கலயர் — மேதகுசீர்
மானக்கஞ் சாறரரி வாட்டாய ராணயர்
ஞானத் திருமூர்த்தி நாயனூர் — மேன்மை
மூருகர் பசுபதியார் மூன்னூப் போவார்
துரிசி றிருக்குறிப்புத் தொண்டர் — மருவுமறைச்
சண்டீசர் வாகீசர் தக்க குலச்சிறையார்
கொண்ட மிழலைக் குறும்பனூர் — தொண்டுசெயு
நீள்காரைக் காலம்மை யப்பூதி நீலநக்கர்
மூளூ நமிநந்தி முத்தமிழை — யாளுந்
திருஞான சம்பந்தர் செய்ய கலிக்காம
ரருண்மூலர் தண்டி யடிகள் — வருமூர்க்கர்
சோமாசி மாறனூர் சாக்கியனூர் சூழாக்கூர்
நாமார் சிறப்புலியார் நற்ரெண்டி — னேமச்
சிறுத்தொண்டர் சேரமான் செய்ய கணநாதர்
விறற்களந்தைக் கூற்றுவனூர் விஞ்சைத் — திறத்துமிகும்
பொய்யடிமை யில்லாப் புலவர் புகழ்ச்சோழர்
மொய்கொணர சிங்க முனேயரைய — ரையரதி
பத்தர் கலிக்கம்பர் கலியர் பகர்சத்தி
கைத்தபுல னேயடிகள் காடவர்கோன் — மொய்த்தகணம்
புல்லனூர் காரிநெடு மாறர்புகழ் வாயிலார்
நல்ல முனேயடுவார் நாயனூர் — மல்குகழற்
சிங்க ரிடங்கழியார் தஞ்சைச் செருத்துணேயார்
கொங்கார் புகழ்த்துணேயார் கோட்புலியா — ரங்கணர்க்குப்
பத்தராய்த் தாழ்வார் பரமனேயே பாடுவார்
சித்தஞ் சிவன்பாலே சேர்த்துள்ளார் — நித்தமு
மூத்திநெறி காட்டு முதல்வர் மூழுதுணர்ந்தோர்
பித்தனுறை யாரூர்ப் பிறந்தார்க — ளத்தனேயே

மூப்போதுந் தீண்டுவார் முழுநீறு பூசுவா
ரப்பாலு மீச னடிச்சார்ந்தார் மெய்ப்பூசன்
மானியார் நேசனூர் வாழ்செங்கட் சோழனூர்
பான்மையார் நீலகண்டப் பாணனூர் மேன்மைச்
சடையரிசை ஞானியிவர் தம்மையெல்லாஞ் சேர்த்துத்
தொடையாகப் பாடியவன் றொண்ட ரடியிணைகள்
சிந்தனைசெய் திந்தத் திருநாமக் கோவைதனை
மந்திரமாக் கொண்டு மயிர்சிலிர்த்து கைந்துருகி
மெய்யன்பா லென்றும் விளம்பப் பெறுவார்கள்
கைதவமும் புல்லறிவுங் கற்பனையு மையலுந்தீர்ந்
தத்துவிதா நந்த வகண்டபரி பூரணத்தி
னித்தியமா வாழ்வார் நிசம்.

திருநாமக்கோவை முற்றிற்று.

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

உமாபதிசிவாசாரியர் அருளிச்செய்த

சேக்கிழார் நாயனார் புராணம்.

பாயிரம்.

விநாயகர்.

வானுலகு மண்ணுலகும் வாழுமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ்ப் பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுமிழி நால்வா
யானைமுக னேப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம். (க)

சபாநாதர்.

சீராருஞ் சதுர்மறையுந் தில்லைவா ழந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியுந் தொழுதேத்த
வாராருங் கடல்புடைசூழ் வையமெலா மீடேற
வேராரு மணிமன்று ளெடுத்தநிரு வடிபோற்றி. (உ)

சிவகாமசுந்தரி.

பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய விருணீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றி னொளிவிளங்க
வரந்தைகெடப் புகலியர்கோ னமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி. (ங)

கற்பகவிநாயகர்.

மலரயனுந் திருமாலுங் காணுமை மதிமயங்கப்
புலிமுனியும் பதஞ்சலியுங் கண்டுதொழப் புரிசடையார்
குலவுநடந் தருந்தில்லைக் குடதிசைக் கோபுரவாயி
னிலவியகற் பகக்கன்றி னிரைமலர்த்தா ளிணைபோற்றி. (ச)

சுப்பிரமணியர்.

பாறுமுக மும்பொருந்தப் பருந்துவிருந் தணைக்கழுகு
நூறுமுக மாயணைந்து நூழில்படு களம்புகுத
மாறுமுகந் தருநிருதர் மடியவடி வேலெடுத்த
வாறுமுகன் றிருவடித்தா மரையிணைக ளவைபோற்றி. (ஞ)

நைவசமயாசாரியர்.

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
யாழிமிசைக் கன்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
யூழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி. (ஃ)

திருத்தொண்டர்கள், சேக்கிழார் நாயனார்.

தில்லைவா ழந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார் பதம்போற்றி
யெல்லையவர் புராணகதை யுலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழா ரடிபோற்றி. (எ)

நூற்பெயர்.

தாய்மலர்ந்த முகத்தினளாய்த் தழுவிமுலை தரவந்த
நோய்மலர்ந்த பிறவிதொறு முழையாம லுலகுய்யத்
தீமலர்ந்த சடைக்கூத்தர் திருவருளாற் சேக்கிழார்
வாய்மலர்ந்த புராணத்தின் வரலாறு விரித்துரைப்பாம். (அ)

அவையடக்கம்.

ஊர்க்கடலே யிவனெனவந் துதித்தநா ளேங்குதமிழ்
நூற்கடலைக் கரைகண்டு நுவலுறினைக் குமதுதிருப்
பாற்கடலைச் சிற்றெறும்பு பருகுறினைப் பதுபோலு
நீர்க்கடல்சூழ் மண்ணுலகை நிறுக்கறினைக் குமதொக்கும். (கூ)

தேவுடனே கூடியசொற் செழுந்தமிழோர் தெரிந்துரைத்த
பாவுடனே கூடியவென் பருப்பொருளும் விழுப்பொருளாங்
கோவுடனே கூடிவருங் குருட்டாவு மூர்புகுதும்
பூவுடனே கூடியநார் புனிதர்முடிக் கணியாமால். (கo)

பாயிரம் முற்றிற்று.

நூல்.

பாலாறு வளஞ்சுரந்து நல்கமல்கும் பாலைவிரி மணங்கமழ்பூஞ் சோலை தோறுங்
காலாறு கோலியிசை பாடநீடு களிமயிலின் ழுடெடியற் ழுண்டை நாட்டி
ணலாறு கோட்டத்துப் புலியூர்க்கோட்ட நன்றிபுனை குன்றைவள நாட்டுமிக்க
சேலாறு கின்றவயற் குன்றத்தூரிற் சேக்கிழார் திருமரபு சிறந்த தன்றே. (கக)

நாடெங்குஞ் சோழன்முனந் தெரிந்தே யேற்று நற்குடிநாற் பத்தெண்ணு யிரத் துவந்த, கூடல்கிழான் புரிசைகிழான் குலவுசீர்வெண் குளப்பாக்கி ழான்வரிசைக் குளத்துழான்முன், றேடுபுக ழாரிவருஞ் சிறந்துவாழச் சேக்கிழார் குடியிலிந்தத் தேச முய்யப், பாடல்புரி யருண்மொழித்தே வரும்பினந்தம் பாலரு வாயரும்வந் துதித்து வாழ்ந்தார். (கஉ)

இமயமலை யரையன்மக டழுவக்கச்சி யேகம்பர் திருமேனி குழைந்தஞான்று, சம யமவை யாறினுக்குந் தலைவிக்கீசர் தந்தபடி யெட்டிழக்கீ ராழிநெல்லு, முமைதிருச்சு டகக்கையாற் கொடுக்கவாங்கி யுழவுதொழி லாற்பெருக்கி யுலகமெல்லாந், தமது கொழுமிகுதிகொடு வளர்க்கும்வேளாண் டலைவர்பெரும் புகழுலகிற் றழைத்த தன்றே. (கங)

வினைகழனி பூலோக முழுதுமேரி விரிதிரைநீர்க் கடல்வருணன் கம்புகட்டி
கினர்கலப்பை தருசுமையாள் சுவேதராமன் கிடாமறலி வசத்தீசன் வசத்தானென்றிங்
களவழிந்தாண் டாண்டுதொறும் விதைதப்பாம லளக்குமவள் கச்சியறம்வளர்த்தமாதா
வொளிபெருகு கொழுமிகுதி யெறும்பீறுனவுயிரனைத்துந் தேவருமுண்வெப்பதன்றே.

மாறுகொடி பழையனூர் நீலிசெய்த வஞ்சனையால் வணிகனுயிரிழப்பத் தாங்கள் கூறியசொற் பிழையாது துணிந்துசெந்தீக் குழியிலெழு பதுபேரு முழுகிக்கங்கை யாறணிசெஞ் சடைத்திருவா லங்காட்டப்ப ரண்டமுற நிமிர்ந்தாடி மடியின்கீழ்மைப் பேறுபெறும் வேளாளர் பெருமையெம்மாற் பிறித்தளவிட் டிவளவெனப்பேசலாமோ.

காராள ரணிவயலி லுழுதுதங்கள் கையார நட்டமுடி திருந்திலிந்தப், பாராளுந் திறலரசர் கவித்தவெற்றிப் பசும்பொன்மணி முடிதிருந்துங் கலப்பைபூண்ட, வேரா லெண் டிசைவளர்க்கும் புகழ்வேளாள ரேறடிக்குஞ் சிறுகோலாற் றரணியாளச்,சீரா ரு முடியரச ரிருந்துசெங்கோல் செலுத்துவர்வே ளாளர்புகழ் செப்பலாமோ. (கசு)

வாயிலார் சத்தியார் விறல்சேர்மிண்டர் வாக்கரையர் சாக்கியர் கோட்புலிகஞ்சாறர் ஏயர்கோன் கலிக்காமர் மூலைவித்தாக்கு மீயோன்றன் குடிமாறர் மூர்க்கர்செங்கைத் தாயனர் செருத்துணையார் செருவில்வெம்போர் சாதித்த மூனையடுவா ராகநம்பி பாயிரஞ்சே ரறுபதுபேர் தனிப்பேர்தம்மிற் பதின்மூவர் வேளாளர் பகருங்காலே.(கள)

அத்தகைய புகழ்வேளாண் மாபிற்சேக்கிழார் குடியில்வந்தவருண்மொழித்தேவர்க்குத் தத்துபரி வளவனுந்தன் செங்கோலோச்சுந் தலைமையளித் தவர்தமக்குத் தனதுபேரு முத்தமச்சோ ழப்பல்ல வன்ருனென்று முயர்பட்டங் கொடுத்திடவாங் கவர்தீர்நாட்டு நித்தனுறை திருநாகே சுரத்திலன்பு நிறைதலினுன் மறவாத நிலைமைபிக்கார். (கஅ)

தம்பதிருன் றத்தூரின் மடவளாகந் தானுக்கித் திருக்கோயி ரூபித்தங்கட் செம்பியர்கோன் றிருநாகே சுரம்போலீதுந் திருநாகே சுரமெனவே திருப்போர்சாற்றி யம்புவியி லங்காங்க வைபவங்கட் கானபரி கலந்திருநாள் பூசைகற்பித் திம்பர்புகழ் வளவனர சுரிமைச்செங்கோ லிமசேது பரியந்த மியற்றுநாளில். (ககூ)

கலகமிடி மமண்முருட்டுக் கையர்பொய்யே கட்டிநடத் தியசிந்தா மணியைமெய் யென், றுலகிலுளோர் சிலர்கற்று நெற்குத்துண்ணு துமிக்குத்திக் கைவருந்திக் கற வைநிற்க, மலகெறற் துளக்தளர்ந்து குளிர்பூஞ்சோலை வழியிருக்கக் குழியில்வீழுந் தளறுபாய்ந்து, வீலதருமென் கரும்பிருக்க விரும்பைமென்று வீளக்கிருக்க யின் மினித்தீக் காய்ந்துநொந்தார். (உ0)

வளவனுங்குண் டமண்புரட்டுத் திருட்டுச்சிந்தா மணிக்கதையை மெய்யென்று வரிசைகூர, வுளமகிழ்ந்து பலபடப்பா ராட்டிக்கேட்க வுபயகுல மணிவிளக்காஞ் சேக் கிழார்கண், டிளவரசன் றனேநோக்கிச் சமணர்பொய்நூ லிதமறுமைக் காகாதிம் மைக்குமற்றே, வளமருவு கின்றசிவ கதையிம் மைக்கு மறுமைக்கு முறுதியென வள வன்கேட்டு. (உக)

அவகதையாய்ப் பயனற்ற கதையீதாகி லம்மையுமிம் மையுமுறுதி பயக்கத்தக்க, சிவகதையே ததுகற்ற திறமைப்பேரார் சீவகசிந்தாமணிபோ லிடையில்வந்த, நவக தையோ புராதனமோ முன்னூலுண்டோ ரானிலத்துச் சொன்னவரார் கேட்டபே ரார், தவகதையோ தவம்பண்ணிப் பேறுபெற்ற தனிக்கதையோ வடைவுபடச் சாற்று மென்ருன். (உஉ)

செம்பியர்பூ பதிமகிழ்ந்து வினவிக்கேட்கச் சேக்கிழார் குரிசிலுரை செய்வார் ஞாலத், தம்பலவர் திருத்தொண்டர் பெருமையாரு ரடிகண்முத லடியெடுத்துக் கொ டுக்கவுவ, னம்பிபதி ஞெருதிருப்பாட் டாகச்செய்த நலமலி தொண்டத் தொகைக்கு ரரைபூரிற், றும்பிமுகன் பொருளுரைக்க நம்பியாண்டார் சருதிமொழிக் கவித்து றையந் தாதிசெய்தார். (உகூ)

ஆயுமறை மொழிகம்பி யாண்டார்கம்பி யருள்செய்த கலித்துறையர் தாதிதன்னைச்
சேயதிரு மூறைகண்ட ராசராச தேவர்சிவா லயதேவர் முதலாயுள்ள
வேயகருங் கடல்புடைசூ ழுலகமெல்லா மெடுத்தினிது பாராட்டிற் றெண்ணவந்தத்
தாயகதை யடைவுபடச் சொல்லீரென்று சோழனுரைசெயக்கேட்டுக்குன்றைவேந்தர்.

தில்லைவா ழந்தணரே முதற்பண் பாடு திருநீல கண்டத்துப் பாணரீரச், சொல்
லியதொண் டத்தொகையால் வகையந்தாதித் தொடர்ச்சியினை விரித்துரைக்க வள
வன்கேட்டு, மெல்லியலாள் பங்கர்திரு வருளோகோக்கி வியந்தடிமைத் தொண்டுசெய்து
பேறுபெற்ற, செல்கதியை நினைந்துருகி வளவர்கோமான் சேவையர்கா வலரைமுக
நோக்கிச்சொல்வான். (உடு)

அவரவர்க ணடவர்க ளிருந்தவூர்வந் தவதரித்த திருமரபு திருப்பேர்செய்த, சிவ
சமயத் திருத்தொண்டு முற்பிற்பாடு சிவனடிக்கீ ழுயர்பரம முத்திபெற்றோ, ரெவரு
மறி யசிவன் முத்தாயிங் கிருபவர்க ளினிமேலும் பிறப்போர்மண்மே, லவர்
களேச்சேர்ந் தருள்பெற்றோர் பகைத்துப்பெற்றோ ரவர்கள்பகை யாய்நரகி லடைந்த
பேர்கள். (உக)

இல்லறத்தி லிருந்துஞனி முத்திபெற்றோ ரில்லறத்திற் சிற்றின்ப வியல்பைநீக்கி,
நல்லறமாந் துறவறத்தி னின்றுபெற்றோர் நற்பிரமசாரிகளா யருள்பெற்றுய்ந்தோர்,
செல்கதிசற் குருவருளாற் சென்றுசேர்ந்தோர் சிவபூசை செய்துபர முத்திபெற்றோர்,
புல்லறிவு தவிர்ந்துதிரு வேடமேமெய்ப பொருளெனக்கொண் டரனடிக்கீழ்ப் பொரு
ந்தப்புக்கோர். (உஎ)

இப்படியே யடைவுபடப் பிரித்துக்கேட்டால் யாவருக்கு மேதரிக்கச் செவிகா
ணீட்ட, வொப்பரிய பொருடெரிந்து விளங்கித்தோன்ற வுவமையுடைத் தாயகதை
கற்கநிற்கத், தப்பில்பெருங் காவியமாய் விரித்துசெய்து தருவீரென் றவர்க்குவிடை
கொடுத்துவேண்டுஞ், செப்பரிய திரவியமுங் கொடுக்கவாங்கிச் சேக்கிழார் குரிசி
றிருத் தில்லைசேர்ந்தார். (உஅ)

சே வ று.

தில்லையெல்லையில் வந்துவந்தெதிர் தெண்டனுக விழுந்தெழுந்
தல்லல்சேர்கம லத்தட.த்தினின் மூழ்கியம்பல வாணர்மு
னெல்லைசென்று பணிந்துகைத்தல முச்சிவைத்துள முருகிகைந்
தெல்லைகாணரி தாயபேரொளி யின்பவாரியின் மூழ்கியே. (உக)

அடையலார்புர நீறெழத்திரு நகைசெய்தன்ரெரு மூவரைப்
படியின்மேலடி மைக்கொளும்பத பங்கயங்கள் பணிந்துநின்
றடிகளேயுன தடியர்சீரடி யேனுரைத்திட வடியெடுத்
திடர்கெடத்தரு வாயெனத்திரு வருளேயெண்ணியி றைஞ்சினுர். (ஙo)

அலைபுனற்பகி ரதிநதிச்சடை யாடவாடர வாடநின்
றிலகுமன்றினி லாடுவார்திரு வருளினுலச ரீரிவாக்
குலகெலாமென வடியெடுத்துரை செய்தபேரொலி யோசையிக்
கிலகுசீரடி யார்செவிப்புலத் தெங்குமாகி நிறைந்ததால். (ஙக)

தில்லைமாநகர் வாழவாழ்தவ சிந்தையந்தண ராறைஞ்னூ
றல்லதும்பல மடபதித்தவ ராசசிக்கையி லுள்ளபே
சொல்லையில்லவர் யாவருங்களி கொளவிளங்கச ரீரிவாக்
கொல்லைவந்தெழ வினவருங்கர முச்சிவைத்துள முருகினுர். (ஙஉ)

உள்ளலார்புர நீறெழக்கணை யொன்றுதொட்டெய் மன்றில்வாழ்
வள்ளலார்திரு மாலேயுந்திரு நீறுமெய்ப்பரி வட்டமே
மெள்ளலாரல ரென்றுசேவையர் காவலர்க்கிவை யினிதளித்
தள்ளலார்வய னீடுதில்லையி லனேவருங்களி கொண்டபின். (கூகூ)

சேவைகாவலர் தொண்டர்சீருரை செய்வதற்குயர் செய்புண்மூன்
மூவரோதிய திருநெறித்தமி ழாதலால்வரன் முறைமையால்
யாவரும்புகழ் திருநெறித்தலே வரைவணங்கி யிணங்கிமெய்த்
தாவருஞ்சிவ சாதனங்க டரித்துநீறு பரித்தரோ. (கூசு)

வந்துசூழ நிரைத்தவையிரு நூறுகான்மணி மண்டபத்
தெந்தையார்திரு வருளேயுன்னி யிருந்துசேவையர் காவலர்
செந்தமிழ்த்தொடை யால்விளங்கிய திருவிருத்த நிருத்தனர்
தந்தசொன்முத லாவெடுத்தனர் தாணுவான புராணநூல். (கூஙி)

வே று.

திருமறையோர் புராணமவை பதின்மூன்று சிவனே தியரனே வழிபட்ட புராணமோ ரிரண்டு, குரைகழன்மா மாத்திரனொன் றறுவர்முடி மன்னர் குறுநிலமன்னவ ரைவர் வணிகர்குலத் தைவ, ரிருமைநெறி வேளாளர் பதின்மூவ ரிடைய ரிருவர்சா லியர்குயவர் தயிலவீனே யாளர், பரதவர்சான் றிர்வண்ணர் சிலேமற்வர் நீசர் பாணரிவ ரோரொருவ ராம்பகருங் காலே. (கூசு)

அறுதிபெறத் திருமரபு குறித்துரையாப் புராண மவைகளொரு பதின்மூன்று திருக்கூட்டந்தன்னின், மறுவிலவர் பதியறிந்த கதையிரண்டு வந்த மரபறிந்த கதையி ரண்டு பேரறிந்த கதையொன், றுறுமரபு தெரியாப்பு ராணமவை யோரே மூரறியாக் கதையேழு பேரறியாக் கதையெட், டிறுதியிலக் கங்கண்ட திருக்கூட்டமொன்றெண் ணித்தனேயென் றறியாத திருக்கூட்ட மெட்டே. (கூஎ)

தில்லைமறை யோர்கலயர் முருகர்பசு பதியார் சிறப்புலியார் கணாதர் பூசலே சண்டேசர், கல்லிறைசோமாசி மாறர்கழி நந்தி கவுணியனு ரப்பூதி நீலநக்க ராகச், செல்வமறை யோர்காதை பதின்மூன்று சிவனே தியர்காதை யிரண்டுபுகழ்த் தனேயார்மூப் போதும், வல்லபடி சிவனேயருச் சிப்பார்கண் மாமாத் திரர்மரபிற் சிறுத் தொண்ட ரொருவர்முடி மன்னர். (கூஅ)

அறுவரெவ ரவர்செங்கட் சோழர்புகழ்ச் சோழ ரருண்மானி யிடங்கழியார் நெடு மாறர் சேரர், குறுநிலமன் னவரைவர் நரசிங்க மூனேயர் கூற்றுவனுர் கழற்சிங்கர் மெய்ப்பொருளே யடிகண், முறைமைவணி கரிலேவர் காரைக்கா லம்மை மூர்த்திகலிக் கம்பரமர் நீதியயற் பகையார், திறமைவிரி வேளாளர் பதின்மூவர் மூர்க்கர் செருத்து னேயார் வாயிலார் கோட்புலியார் சத்தி. (கூக)

தாயனு ரிளையான்றன் குடிமாற ரரசு சாக்கியர்கஞ் சாறர்விறன் மிண்டர் மூனையடுவா ரேயர்கோன் கலிக்காமர் கோபாலர் மரபி லிருவர்திரு மூலனு ராளுயர் குயவர் சேயபுகழ்த் திருநீல கண்டனுர் பாணர் திருமரபிற் றிருநீல கண்டத்துப் பாணர் மேயதிற லதிபத்தர் பரதவர் கண்ணப்பர் வேடர்மர பினிற்சான்று ரேனதி நாதர். ()

நேசனுர் சாலியரிற் றிருநாளைப் போவார் நீசர்மர பினிலெங்க டிருக்குறிப்புத் தொண்டர், தூசொலிக்கு மேகாலி மரபுதில தயிலத் தொழின்மரபிற் கலியனுர் மரபு குறித் துரையாக், காசில்கதை பதின்மூன்று குலச்சிறையார் தண்டி கணம்புல்ல ரெறி பத்தர் காரியார் குறும்பர், தேசுடைய பத்தர்பர னேப்பாடு வார்கள் சித்தத்தைச் சிவன்பூல்வைத் தாராரூர்ப் பிறந்தார். (சக)

செப்பரிய பொய்யடிமை யில்லாதார் மெய்யிற் றிருநீறு பூசுமுனி வர்கணலகு தன்னி, லப்பாலு மடிச்சார்ந்தா ரிவர்கடமிற் சிலபே ராய்ந்ததமிழ்ப் பேர்சிலபேர் மலேயாளர் சிலபேர், தப்பாத தெலுங்கர் சிலர் மற்றுள தேசத்தோர் தவஞ்செய்து பர கதியை யடைந்தவர்கள் சிலபே, ரிப்போது மிருந்தரனே வழிபடுவோர் சிலபே ரினி மேலுந் திருமேனி கொடுவருவோர் சிலரே. (சஉ)

திருஞான சம்பந்தர் திருநாவுக் கரையர் திருமூலர் நெடுமாறர் மங்கையருக் கரசி, கரைசேருங் குலச்சிறையார் யாழ்ப்பாணர் குறும்பர் கணநாத ரப்பூதி சோமாசி மாற, ருரைசேரு மிவர்கள் பதி னெருவர்குரு வருளா லுயர்முத்தி யடைந்தவர்க ளெறிபத் தர் கலயர், முருகனர் கண்ணப்ப ராளுயர் தாயர் மூர்த்தியார் சண்டேசர் திருநாளைப் போவார். (சஙு)

சேரனர் சாக்கியனர் கூற்றுவனர் தண்டி சிறப்புலியார் பசுபதியார்கலிக்காமர் கலியர், காரியா ரதிபத்தர் நீலநக்கர் பூசல் கணம்புல்லர் கோட்புலியார் நமிநந்தி யடிகள், சீரு டைய கழற்சிங்கர் வாயிலார்நாயசெருத்துணையார்புகழ்த்துணையார்காடவரையடிகண், மூரிநெடுவேற்செங்கட் சோழனராக முப்பதுபேர்சிவலிங்கத்தான்முத்தியடைந்தோர்.

திருநீல கண்டனு நியற்பகையார் மூர்க்கர் சிறுத்தொண்டர் திருக்குறிப்புத் தொண்டர்விறன் மிண்ட, ரருள்சேரு மிடங்கழியார் மூனையடுவார் சத்தி யமர்நீதி மெய்ப்பொருளா ரேனதிநாதர், கரைசேரும் புகழ்ச்சோழர் கஞ்சாறர் மாறர் காரைக்கா லம்மைசர சிங்கர்கலிக் கம்பர், வருநேச ராகவொரு பத்தொன்ப தடியார் மணிவேடத் தாரைவழி பட்டரனே யடைந்தோர். (சடு)

கவுணியர்நா வுக்கரசர் பேயா ரிம்மூவர் கற்குமிய லிசைவல்லோ ரிசைத்தமிழ் நூல் வல்லோர், பவமணுகாத் திருநாளைப் போவாரா ஞுயர் பாணர்பர மனேப்பாடு வாராக நால்வர், புவனிபுக ழெயடிக டிருமூலர் காரி பொய்யடிமை யில்லாத தமிழ்ப் புலவர் சேரர், நவமுடைய விவரைவ ரியல்வல்லோர் நின்ற நாயன்மார் தவம்புரிந்து நற்கதியை யடைந்தோர். (சசு)

இல்லறத்தி னின்றவர்க டிருநீல கண்ட ரியற்பகையாருள்ளிட்டார் மூர்த்தியா ரப்பர், நல்லதுற வாற்பிரம சாரிகள் சண் டேசர் நானிலத்தி லரனடியார் தங்களுடன் சேர்ந்து, செல்கதிபெற் றவர்ஞான சம்பந்த ருடனே திருமணத்தி லொருமணமாய்ச் சேர்ந்தவர்க ளநேகர், பல்வளஞ்சே ராரூர ருடன்சேரர் கையிற் பரியுகைக்க வுடன் சென்ற பரிசன மெண் ணிறந்தோர். (சஎ)

சிவனடியா ருடன்பகையாய் முத்தியடைந் தவர்கள் சேய்ஞலூர்ச் சண்டேசர் பிதாவெச்ச தத்தன், கவர்புகழ்சேர் கோட்புலியா ருரைத்ததிரு விரையாக் கலிபிழை த்த னேபகைத்து நரகினேச்சென் றடைந்தோர், தவரான மூர்த்தியா ரிறைவனுக்குச் சாத்துஞ் சந்தனக்காப் பினைவிலக்கி யமண்சமயச் சார்வாய்ப், புவிபுரந்த கருநடமன் னவன்முத லனேகர் புராணகதை யினேப்பிரித்துப் புகலவெளி தலவே. (சஅ)

ஆரூரர் திருத்தொண்டத் தொகையுரைத்த நாளி லடித்தொண்டு செய்தொண்டர் சிலரவர்க்கு முன்னே, பேரூர்மெய்த் தொண்டுசெய்த பேர்சிலபே ரவர்க்குப் பிறகுதி ருத் தொண்டுசெயும் பேர்சிலபே ராகச், சீரூருந்திருத்தொண்டர் புராணத்திற் சேர்த் தூச் சேவையர்கோன் சேர்வைசெயுந் தொண்டரள விறந்தோர், காரூரு மணிகண் டர்க் கவரவர்கள் செய்த கைத்தொண்டி னிலைகரைகண் டுரைக்கவெளி தலவே.(சக)

ஓருலகோ வொருதிசையோ வொருபதியோ தம்மி லொருமரபோ வொருபெய ரோ வொருகாலந் தானே, பேருலகி லொருமைநெறி தருங்கதையோ பன்மைப் பெருங்கதையோ பேரொன்றே வல்லவே யிதனை, யேருலகெ லாமுணர்ந்தோ தற்க ரிய வன்னென் றிறைவன்முத லடியெடுத்துக் கொடுத்தருளக் கொண்டு, பாருலகி ணுமகணின் றெடுத்துக்கை நீட்டப் பாடிமுடித் தனர்தொண்டர் சீர்பரவ வல்லார். ()

கருங்கடலைக் கைசீத்துக் கொளவெளிது முந்நீர்க் கடற்கரையி னெய்மணலை யெண்ணியள விடலாம், பெருங்கடன்மேல் வருந்திரையை யொன்றிரண்டென் றெண்ணிப் பிரித்தெழுதிக் கடையிலக்கம் பிரித்துவிடலாருந், தருங்கடலின் மீனையள விடலாரும் வானத் தாரகையை யளவிடலாஞ் சங்கரன்ரு டமது, சிரங்கொடிருத் தொண்டர்புரா ணத்தையள விடநஞ் சேக்கிழார்க் கெளிதலது தேவர்க்கு மரிதே. (இக)

அறுபதுபேர் தனித்திருப்பேர் திருக்கூட்ட மொன்ப தாகவறு பத்தொன்ப தரனடியார் கதையை, மறுவிறிரு ஈாவலூர்ச் சிவமறையோர் குலத்து வருசடையனூர் மனேவி யிசைஞானி வயிற்றி, லுறுதிபெற வவதரித்த வாரூரர் முன்ரு ளுரைசெய்த திருத்தொண்டத் தொகைப்பதிகத் தடைவே, றறைமலியும் பொழில்புடைசூழ் திருநாரை யூரி னம்பியாண் டார்திருவந் தாதிகடைப் பிடித்து. (இஉ)

காண்டகிரண் டாவகுத்துக் கதைப்பரப்பைத் தொகுத்துக் கருதரியசருக்கங்கள் பதின்மூன்ரு நிலையிட், டீண்டுரைத்த புராணத்திற் றிருவிருத்த நாலா யிரத்திருநூற் றைம்பத்து மூன்ரு வமைத்துச், சேண்டகைய திருத்தொண்டர் புராணமெனப் புராணத் திருமுறைக்குத் திருநாமஞ் சீர்மைபெற வமைத்திட், டாண்டகைமை பெறவெழுதி மைக்காப்புச் சாத்தி யழகுபெறக் கவளிகையு மமைத்தபின்வைத் ததன்பின். ()

வே று.

சேவைகாவலர் புராணகாதைதொகை செயினேன்தெமை யகன்றபின்
யாவர்தாமரு கிருந்தபேர்கள்கதை சென்றதெவ்வள விருந்ததெங்
காவதென்னினைவை ளறியவேண்மெ தறிந்துவாருமென வளவர்கோ
னேவினனுரிய நூதர்நூதரறி யாமலொற்றரையு மேவினன். (இச)

வென்றிவேல்வளவ னளவறிந்துவர விட்டகாளேயர் புராணநூ
லொன்றுபாதிகதை சென்றதென்றுசில ரோடினுர்சில ருவந்துசென்
றின்றுநாளேமுடி யும்புராணமினி யென்றுரைத்திட விறைஞ்சினுன்
சென்றுநற்கதை முடிந்ததென்றுசிலர் செம்பியற்குறுதி செப்பினர். (இஎ)

வந்து சேர்ன்னவர்க ளனேவருக்குரவ மணிகளுந்துகிலு மம்பொனுஞ்
சிந்தியள்ளியு மூவந்துவீசியுர் செம்பொனம்பல மருங்கில்வா
ழந்திவண்ணர்நட மும்பணிந்துமுத லடியெடுத்தவர் கொடுத்திடப்
புந்திசெய்துமகிழ் சேவைகாவலர் புராணமுந்தொழுவ ஞனெஞ. (இசு)

வீதிவீதிக டொறுந்தொறும்பயண மென்றுவென்றிமணி முரசறைந்
தோதிவேதியர்க ளெண்ணியிட்டவுயர் நாளுமோரையு முகூர்த்தமும்
போதநாடிவரை புரைகடக்களிறு புரவிதேர்கருவி யாடரச்
சாதுரங்கமுட னேசெலப்பிளிறு தந்திமேல்கொடு நடந்தனன். (இஏ)

தேர்முழக்கொலி மழைக்கடக்கரட சிந்துரக்களிறு பிளிறுசீ
ரார்முழக்கொலி பரிச்செருக்கொலி பதாதிவந்தெதி ரடர்ந்தெழும்
போர்முழக்கொலி சழக்கிலாதுயர் படைக்கலன்புணரு மோசையேழ்
கார்முழக்கொலியி னெட்டிரட்டிகிறை கடன்முழக்கென முழக்கெழ. (இஅ)

வளவர்கோன்வர வறிந்துதில்லைமறை யோரும்வண்மைமட பதிகளுங்
பிளவுகொண்டமதி நுதன்மடந்தையரு மற்றுமுள்ளபெரி யோர்களுங்
களவிலாதமொழி கொடுபுராணகதை செய்தகவ்கைகுல திலகரும்
தளவமாலையப யனெயெதிர்ந்தினிய சாரவாசிபல சாற்றினர். (இக)

முண்டமானதிரு முடியுமிட்டதிரு முண்டமுங்கவச முந்துணைக்
குண்டலங்களு மிரண்டுகொதிலும் வடிந்தலைந்த குழைபுந்திருக்
கண்டமாலைகர மாலையுஞ்சிரச மாலையுங்கவின் விளங்கவே
தொண்டர்சீர்பரவு வானணைந்தசுப சரிதைசோழனெதிர் கண்டனன். (சுo)

கண்டபோதுள மிழ்ந்துதன்னையறி யாதுகைகடலை மீதுறக்
கொண்டவேடமர னடியர்வேடமிது குறைவிலாததவ வேடமென்
றண்டவாணர்திரு வருளையுன்னியவ ரடிமைகொண்டபெரு மையைநினைந்
தெண்டையங்கரச ரேறுசேவையர் குலாதிபாதுகை யிறைஞ்சினன். (சுக)

இறைஞ்சியம்பலவர் பாததாமரை யிறைஞ்சவெண்ணிவரன் முறைமையா
லறஞ்சிறந்தமுனி சேவைகாவலரு மாறைஞ்னூறுமறை யோர்களுந்
துறஞ்சிறந்தமட பதிகளுந்தொடர வந்துமன்னனரி பிரமர்பான்
மறைஞ்சுநின்றபொருள் வெளிப்படக்கனக மன்றினின்றபடி கண்டனன். (சுஉ)

கண்டகண்ணருவி தாரைகொள்ளவிரு கைகளஞ்சலி கொளக்கசிந்
தெண்டரும்புளக ரோமகூபமெழ வின்பவாரிகரை புரளவாய்
விண்டதுமொழிகள் குழறவன்பிலெடு விம்மிவிம்மியருண் மேலிடத்
தெண்டனுகமுன் விழுந்தெழுந்துநனி செம்பியன்பரவ வெம்பிரான். (சுங)

சேக்கிழானமது தொண்டர்சீர்பரவ நாமகிழ்ந்துலக மென்றுநம்
வாக்கினுலடி யெடுத்துரைத்திட வரைந்துநூல்செய்து முடித்தனன்
காக்கும்வேல்வளவ நீயிதைக்கடிது கேளெனக்கனக வெளியிலே
யூக்கமானதிரு வாக்கெழுந்தது திருசிலம்பொலியு முடனெழ. (சுச)

மன்னுளாடிதிரு வாய்மலர்ந்தமொழி யுஞ்சிலம்பொலியு மன்றிலே
நின்றமானிடர் செவிப்புலன்புக நிறைந்ததன்றியு நிலத்தின்மே
லொன்றிநின்றுயர் சராசரங்களடை யக்கசிந்துருகி யோலிடக்
குன்றிலங்குதிர டோணரேந்திரபதி குதுகுலித்துள மகிழ்ந்தனன். (சுசி)

தொண்டர்தொண்டுசெய் புராணகாதைமதி சூடிநாதர்திரு வருளினுல்
விண்டநீதியுனை சேக்கிழார்முனி விரித்துரைத்ததை கேட்பதற்
கண்டவாணரடி யாரெலாங்குடக வருகவென்றுதிசை திசைதொறு
மெண்டையங்கரச னேடெடுத்தெழுதி யாளுமோலைகளு மேவினன். (சுசு)

வேறு.

கவச மணிந்த சனங்களு மிங்கித முங்கம்பித்
தவச முறுஞ்சிவ சிந்தையு மன்பக லாமேன்மைத்
தவச ரிதத்தொழி லுஞ்சிவ சாதன முஞ்சாரச்
சிவச மயத்தவர் யாவரும் வந்து திரண்டார்கள். (சுஎ)

வேதியர் வேத முழக்கொலி வேதத் தைத்தமிழா
லோதிய மூவர் திருப்பதி கத்தொலி யோவாமற்
பூதி யணிந்தர கரவென வன்பர் புகழ்தோதுங்
காதியல் பேரொலி காரொலி போலொலி கைத்தேற. (சுஅ)

பூசிப்பவர் சிலர் பூசித் தன்பொடு புனிதன்ரு
ணேசிப் பவர்சிலர் பிறவா வரமரு ணிமலாவென்
றியாசிப் பவர்சிலர் திருமுறை யெழுதிக் களிகூர
வாசிப் பவர்சில ராக வீருர்து மகிழ்ந்தார்கள். (கக)

தெள்ளு திரைக்கடன் மீது மிதந்த திருத்தோணி
வள்ளலே யன்புசெ யன்பர் மடங்க டொறும்பாலர்
மெள்ள விருந்து மிழற்று புராண விருத்தத்தைக்
கிள்ளைகள் பாடி யுரைப்பன கேட்பன மெய்ப்பூவை. (எ0)

மற்றது கண்டு களித்த நலத்த மனத்தோடு
சுற்றிய மந்திரி மாரொடு தந்திரி மார்சூழத்
தெற்றென வந்து திரண்டு முரண்டரு சீர்நாடு
பெற்றது செல்வ மெனத்தனி யோகை பெருத்தார்கள். (எக)

பாடினர் தும்புரு நாரதர் நீடிசை பாடாநின்
ரூடினர் வானி லரம்பைய ரஞ்சலி யெஞ்சாமற்
சூடினர் மண்ணின் மடந்தைய ரெந்தை துணைப்பாதந்
தேடினர் மாலய னன்பர் நடந்தரி சித்தார்கள். (எஉ)

சங்கொடு பேரி கறங்கிசை வீணை தனித்தாளம்
வங்கிய காள மிடக்கை கடக்கை மணிக்காளம்
பொங்கிய பம்பை வலம்புரி கண்டை முதற்பொற்பார்
மங்கல தூரிய மெங்கு முழங்கி வனப்பெய்த. (எங)

வேதியர் வேள்வி நெடும்புகை யாலய மெங்கெங்குங்
காதிய குங்கிலி யப்புகை நீடு கருப்பாலைச்
சோதி நெடும்புகை தோரண வீதி தொறுந்தோறு
மாதர் புகைக்கு மகிற்புகை யெங்கும் வனப்பெய்த. (எச)

ஆடக நாடக சாலைகண் முத்தணி யத்தாணி
மேடை யரங்கு களிங்க மிலாத வெளிக்கூட
மாட மதிட்கன மாளிகை சூளிகை யெங்கெங்குந்
தோடவிழ் மாலைகள் பொன்னெரி மாலைகள் சூழ்வித்தார். (எடு)

பழுதக லத்திரு வலகு விருப்பொடு பணிமாறிக்
குழ்வு பெறத்திகழ் கோமய நீர்குளி ரச்செய்து
தழைபொதி தோரண முங்கொடி யுந்துகி லுஞ்சார்வித்
தழகு பெறத்திரு வீதி புதுக்கி யதன்பின்பு. (எசு)

வே று.

திருநெறித்தமிழ் வல்லபேர்கள் சிவாகமங்கள் படித்தபேர்
கருநெறிப்பகை ஞானநூல்பல கற்றபேர்மறை கற்றபேர்
குருநெறிக்குரி யோரிலக்கண லக்கியங்கள் குறித்தபேர்
பெருநெறிப்பல காவியங்கதை பேசவல்லவ ரேனைவரும். (எஎ)

வே று.

வள்ளலார் திருநடஞ்செய் மன்றின் முன்றின் மறையவர்கோ மயசலத்தான்
மெழுகித் தாபித், தெள்ளரும்வெண் சுதையொழுக்கி யறுகாற் பீட மிட்டதன்மேற்
பசும்பட்டு விரித்து மீதே, வெள்ளைமடித் திட்டமது மலருந் தூவி விரைநறுந்தூ பங்
கொடுத்தா தனங்கற்பித்துத், தெள்ளுதமிழ்ச் சேக்கிழார் புராணஞ்செய்த திருமுறை
யை யதன்மேல்வைத் திறைஞ்சிப் போற்றி. (எஅ)

வாழிதிருத் தொண்டர்புரா ணத்தை நீரே வாசித்துப் பொருளருளிச் செய்வீ
ரென்று, சோழர்பெரு மான்முதலா மடிய ரெல்லாஞ் சொலக்கேட்டுக் குன்றைமுனி
மன்னுளாடுக், தாழ்சடையா னடியெடுத்துத் தரத்தாஞ் செய்த சைவகதை யினைவிள
ங்க விரித்துச் சொல்லச், சூழலிருந் தம்பலவ ரடியா ரெல்லாஞ் சுருதிமொழி யிது
வெனக்கை தொழுது கேட்டார். (எக)

தாளுடைய திருச்சிலம்பு புலம்பாடம் புரியுந் தன்மையர னுக்கிசைந்த பேர்வ ழியி ஞரு, மாளுடைய பிள்ளேயா ரவதரித்த நாளுமவரழுது திருஞான மமுதுசெய்த நாளுஞ், சூளுடையா திரைநாளாஞ் சித்திரையா திரைநா டொடங்கி யெதிராமாண்டு சித்திரையாதிரையி, னுளுடைய கதைமுடிப்ப மெனக்குன்றை வேந்தர் நடத்தவினை வருமிருந்து கேட்டனர் நாடோறும். (அ0)

சிறப்புடைய மூவர்முத லிகடிருவாய் மலர்ந்த திருநெறிய தமிழ்மூவர் திருமந் திர மாலை, யறப்பயனுங் காரைக்காற் பேயிரட்டை மாலே யந்தாதி மூத்தபதிகங் கழ றிற் றறிவார், மறப்பரிய பொன்வண்ணத் தந்தாதி திருமும் மணிக்கோவை தெய்வ வுலா வையடிகள் வெண்பா, வுறப்பாகத் திருவிருத்த முடலாகப் பொருட்கோ ளுயி ராக நாலடியா னடந்ததுல கெல்லாம். (அக)

அன்றுமுத னூடோறு நாடோறு மண்ணு லடியாள விறந்தபெயர் வந்தவர்க ளெல்லாஞ், சென்றுறையத் திருமடங்க டிருமடங்க டோறுந் திருவிளக்கங் கவர்சா த்த வுள்ளுடைமேற் போர்வை, துன்றியசெந் நெலினடிசில் கன்னனறுங் கனிக யே வறு சுவைக்கறிநெய் தயிர்திரண்ட பாறை, னன்றுதிருப் பண்ணியந்தண் ணீரமுத மடைக்காய் நரபதியே வலினமைச்சர் நாடோறு நடத்த. (அஉ)

நலமலியுந் திருத்தில்லே மன்றினி னின்றுநி நடராசற் கன்றுமுதன் மகபூசை நட த்தி, யலகில்புகழ்த் தில்லேவா ழந்தணர்க்கும் வெவ்வே றமுதுபடி கறியமுது முத லான வெல்லா, நலமலிசெங் கோல்வளவன் றப்பாமே நாளு நடத்திவர வரனடியார் நிறைந்துபதஞ் சலியும், புலிமுனியுந் தவஞ்செய்த பெரும்பற்றப் புலியூர் பூலோக சிவ லோக மெனப்பொலிந்து தோன்ற. (அங)

மருவுதிரு முறைசேர்ப்பா ரெழுதுவா ரிருந்து வாசிப்பார் பொருளுரைப்பார் கேட்டிருப்பார் மகிழ்ந்து, சிரமசைத்துக் கொண்டாடிக் குதுகுலிப்பார் சிரிப்பார் தேனிப்பார் குன்றைமுனி சேக்கிழார்செய்த, வரியதவத் தினேனிப்பா ரம்பலவர் முன்னு ளடியெடுத்துக் கொடுக்கவிவர் பாடினரென் றுரைப்பார், பெரியபுராணங் கேட்ட வளவர்பிரான் செவிக்குப் பிடிக்குமோ வினிச்சிந்தா மணிப்புரட்டென் றுரைப்பார். (அச)

இத்தகைய சிறப்புடனே திருத்தொண்டர் புராண மிருந்தன்பர் பாராட்ட நடந் தெதிரா மாண்டு, சித்திரையா திரைநாளின் முழியவதுகண்டு திருத்தொண்ட ரரவெ னும்பே ரொலியெழுந்து பொங்கக், கத்துதிரைக் கடலொலியை விழுங்கி முழங்கோ ரேழ் கடலொலியைக் கீழ்ப்படுத்திப் பிரமாண்டவெளியைப், பொத்தியிமை யவர்செ வியை நிறைத்தியரப் பொங்கிப் பொன்னுலகுக்கப்பாலும் புகழ்பொலிந்த தன்றே. ()

திருத்தொண்டர் புராணமெழு தியமுறையை மறையோர் சிவமூல மந்திரத்தா லருச்சனைசெய் திறைஞ்சி, யிருக்குமுதன் மறைநான்கி னின்றுமுத லாக வித்துவமொரு தமிழ்வேத மைந்தாவ தென்று, கருத்திருத்தி யமுதடைக்காய் நறுந்தூப தீபங் கவரி குடைகண்ணுடி யாலத்தி நீறு, பரித்தளவு செயக்கண்டு வளவர்பிரான் முறையைப் பசும்பட்டி ஞற்சூழ்ந்து பொற்கலத்தி லிருத்தி. (அசு)

செறிமதயா னைச்சிரத்திற் பொற்கலத்தோ டெடுத்துத் திருமுறையை யிருத்திய பின் சேவையர் காவலரை, முறைமைபெற வேற்றியர சனுங்கூட வேறி முறைமை யினு லிணைக்கவரி துணைக்கரத்தால்வீச, மறைமுழங்க விண்ணவர்கள் கற்பகப்பூ மாரி மழைபொழியத்திருவீதி வலமாக வரும்போ, திறைவர்திரு வருளினினைந் தடலரசர் கோமா னிதுவன்றே நான்செய்த தவப்பயனென் றிசைத்தான். (அஎ)

வாரணத்தி லிவரைவரக் கண்டதிரு வீதி மறுதொறுந் தூய்மைசெய்து வாழை
களுநாட்டிப், பூரணமும் பழமமைத்துப் பொரியுமிகத் தூவிப் பொன்னரிமா லேயு
நறும்பூ மாலைகளுந் தூக்கித், தோரணங்க ணிரைத்துவிரை நறுந்தூப மேந்திச் சுடர்வி
ளக்கு மேற்றியணி மணிவிளக்கு மேந்தி, யாரணங்கள் விரித்தோதி மாமறையோ
ரெதிர்கொண் டறுகெடுப்ப வாழ்த்தெடுத்தா ரரம்பையர்க ளெல்லாம். (அஅ)

வே று.

காவல ஞரிவர் தவரிவர் காவலர் கவரி யிடத்தகு மோவென்பார்
சேவையர் காவல ஞர்கிவ மான சிறப்பிது நல்ல சிறப்பென்பார்
தேவரு மெழுதவொ ணுமறை யைத்தமிழ் செய்து திருப்பதி கம்பாடு
மூவரு மொருமுத லாயுல கத்து முளேத்த முதற்பொரு டானென்பார். (அக)

மின்மழை பெய்தது மேக வொழுங்குகள் விண்ணவர் கற்பக விரைசேர்பூ
கன்மழை பெய்தனர் சேவையர் காவலர் நாவல ரின்புற நாவாரச்
சொன்மழை பெய்தன ரிரவலர் மிடிகெட வள்ளி முகந்தெதிர் சோழேசன்
பொன்மழை பெய்தன னுருகிய நெஞ்சொடு கண்மழை யன்பர் பொழிந்தார்கள். ()

மதுர விராமா யணகதை யுரைசெய்த வான்மிக பகவனு மொப்பல்ல
விதிவழி பாரத முரைசெய்து கரைசெய்த வேத வியாசனு மொப்பல்ல
சிதைவற வாயிர நாவுட னறிவுள சேட விசேடனு மொப்பல்ல
பொதிய மலைக்குறு முனிவனு மொப்பல புகழ்புனை குன்றை முனிக்கென்பார். (கக)

மெய்யுள சிவசா தனமும் வெளிப்பட வெண்ணீ றெழுதிய கண்ணேறுங்
கையுந் திகழ்மணி கண்டமு மொளிதரு கவளிகை யும்புத் தகவேடு
நையுந் திருவுள மழியுந் தொறுமர கரவெனு நாமமு நாமெல்லா
மும்யும் படியருள் கருணேயு மழகி தெனத்தொழு தனருல கவரெல்லாம். (கஉ)

பூவை மறந்தனள் வெண்டா மரைமயில் புகல்தரு சங்கப் புலவோர்சொற்
பாவை மறந்தனள் தேச சுபாடித பயனே மறந்தனள் பதுமத்தோ
ஞவை மறந்தனள் பொதிய மலைத்தலை நண்ணிய புண்ணிய முனிவனெனுங்
கோவை மறந்தனள் சேவையர் காவல ஞர்திரு நாவிற் குடிகொண்டாள். (கங)

இப்படி யிப்படி தன்னில் விதிப்படி யிம்பரு மும்பரு மேஞெரு
மப்படிசூழ வரத்திரு வீதி வலஞ்செய் தணேந்தம் பலமுன்றிற்
றப்பற யானேயி னின்று மிழிந்தர சனுமுரை செறிசே வையர்கோவு
மும்புரி நூன்மறை யோரொ டணேந்தெழு தியமுறை யைத்திரு முன்வைத்தார். (கச)

வே று.

அண்டவாணரெதிர் தெண்டனுகவனே வரும்விழுந்துபி னெழுந்துசீர்
கொண்டசேவைகுல திலகருக்கனேவ ருங்குறித்தெதிர் கொடுத்தபேர்
தொண்டர்சீர்பரவு வாரெனப்பெயர் சுமத்திஞானமுடி சூட்டிமுன்
மண்டபத்தினி லிருத்தி மற்றவரை வளவர்பூபதி வணங்கினுன். (கஙி)

மூவரோதுதிரு முறைகளேழுதிரு வாதவூரர்முறை யொன்றிசைப்
பாவைசந்தமுறை யொன்றுமூலர்முறை யொன்று பாசுரம தாதியாக்
கோவைசெய்தமுறை யொன்றுசேவையர் குலாதிநீதிமுறை யொன்றுடன்
பாவைபாகர்திரு வருள்சிறந்தமுறை பன்னிரண்டென வகுத்தபின். (கசு)

தோடுசெய்ததிரு நெறியசெந்தமிழொ டொக்குமென்றுரை தொடர்ந்துசெப்
பேடுசெய்துரை ராசர்சந்நிதியி லேற்றினர்களிது பாலிரும்
நாடுசெய்ததவ நீடுகுன்றைவள நகரிசெய்ததவ நிகரிலாப்
பீடுசெய்தபகி ரதிகுலத்திலகர் சேக்கிழார்செய்த பெருந்தவம். (கஎ)

ஆயவேலையன பாயனிர்நிலைமை யாதலாலனுசர் பாலரு
ளாயரெங்குள ரெனப்பணிந்திரு மருங்குநின்றவர் விளம்புவார்
நாயகுன்றைநகர் மீதுதம்பெயர் தலங்கவோர்குள மமைத்தபி
னேயநாகையர னர்திருப்பணி யியற்றியவ்விடை யிருந்தனர். (கஅ)

என்றுசொல்லவவர் தமையழைத்தரச னிவரமைச்சரிவர் பட்டமு
மன்றன்மாலேபுனை தொண்டைமானென வகுத்தபின்றமது மண்டல
மன்றுவற்பம்வர வந்தடைந்தவரை யாற்றல்செய்து தொண்டைமண்டல
நின்றுகாத்தபெரு மானைத்தமது பெயரையெங்கணு நிறுத்தினர். (கக)

தொண்டர்சீர்பரவு சேக்கிழார்குரிசி னூயதில்லைநகர் தன்னிலே
பண்டுமூவர்பதி கத்துவந்தவறு பத்துமூவர்கதை தனையுணர்ந்
தண்டவாணரடி யார்கடம்மூட னருந்தவந்தனி லிருந்துபி
னிண்டைவைத்தசடை யம்பலத்தவ ரெடுத்தபாதநிழ லெய்தினர். (க00)

வாழிதில்லைமணி மன்றுளென்றுநட மாடுமங்கணர் மலர்ப்பதம்
வாழிகாழிநகர் வாழவந்திரு நெறியராதிபதி வள்ளலுள்
வாழியன்பர்திரு நீறுபூசிட்டதிரு முண்டமுந்துவய கவசமும்
வாழிகுன்றைமுனி சேவையாதிதிரு வாய்மலர்ந்தருள் புராணமே. (கஅ)

தேசிலங்குமுகில் குன்றையாதிபதி தொண்டர்சீர்பரவு சேக்கிழார்
வாசலன்றுமுத லின்றுகாறுமினி மேலும்வாழையடி வாழையாய்
வீசுதென்றன்மணி மண்டபத்தரசு வீற்றிருக்குமுடி மன்னருக்
கேசனன்பர்கள் புராணமுஞ்சொலி யமைச்சுமாகிநில மெய்துமால். (கஉ)

அண்டவாணர்தொழு தில்லையம்பலவ ரடியெடுத்துலகெ லாமெனத்
தொண்டர்சீர்பரவு சேக்கிழான்வரிசை துன்றுகுன்றைநக ராதிபன்
றண்டகாதிபதி திருநெறித்தலைமை தங்குசெங்கைமுகில் பைங்கழற்
புண்டரீகமலர் தெண்டனிட்டவினை போக்குவார்பிறவி நீக்குவார். (கஊ)

சிறப்புப்பாயிரம்.

திருக்கிளரும் கயிலைமலைக் காவல்பூண்ட செல்வமலி திருநந்தி மரபில்வந்து
கருக்குழியி லெமைவீழா தெடுத்தாட்கொள்ளுங் கருணைபிரு மெய்கண்ட தேவர்தூய
மருக்கிளர்தாள் பரவுமரு ணந்திதேவர் மகிழுமறை ஞானதே வருக்கன்பாகி
யிருக்குமுமா பதிதேவர் சேக்கிழார்த மிசைப்புரா ணம்முரைத்தா ரென்பமாதோ. ()

சேக்கிழார்நாயனார்புராண முற்றிற்று.

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

உபோற்காதம்.

அநாதி மல முத்த பதியாகிய பரிவன் தமக்கு ஒரு பிரயோசனமுங் குறியாது அநாதிமல பெத்தராகிய ஆன்மாக்களுக்கு மலநீக்கமும் சிவத்துவ விளக்கமும் சித்திக்கும்பொருட்டு, பெருங்கருணையினாலே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் பஞ்சகிருத்தியம் பண்ணுவர். அவற்றுள், படைத்தலாவது சென்ம முடைய பிராணிகளின் சமூகமாயும், போகோபயோகிகளாகிய பரிகரங்களோடு இயைந்ததாயும், இருக்கின்ற சகத்தை அந்த வந்த நாலுவித யோனிகளில் உற்பவிப்பித்தல். காத்தலாவது தனதிச்சையாற் றடுக்கப்பட்ட சர்வலோகத்தையும் தத்தம் வீடயத்தில் நியோகிக்க நிறுத்துதல். அழித்தலாவது சகத்தைச் சகத்தியோனியில் ஒடுக்கல். மறைத்தலாவது தத்தம் வாசனைக்குத்தக்க போகத்தின் வழுவாதிருக்கச் செய்தல். அருளலாவது தீக்ஷாகிருத்தியமாகிய அனுக்கிரகம்.

இப்பஞ்சகிருத்திய கருத்தாவாகிய பதிக்கு உரிய முக்கிய குணங்களாவன சருவஞ்ஞதை, திருத்தி, அநாதிபோதம், சுவதந்திரதை, அலுப்தசத்தி, அநந்தசத்தி என்னும் ஆறுமாம். இவை தமிழின் முறையே முற்றறிவு, வரம்பிலின்பம், இயற்கையுணர்வு, தன்வயம், குறைவிலாற்றல், வரம்பிலாற்றல் எனப்படும். எல்லாப்பொருள்களையும் புலப்படக்காணும் அறிவு உள்வழியல்லது எல்லாத்தொழிலும் இயற்றுதல் கூடாமையின் முற்றறிவும், தமதனுபவத்தின்பொருட்டுப் பிறிதொன்றினை வேண்டிற் பரிபூரணத்தன்மை யெய்தப்பெற்றுக் கடவுட்டன்மை கெட்டுப்போதலின் வரம்பிலின்பமும், முற்றறிவுடையவழியும் அஃதாதியன்றி அவாந்தரத்தில் வந்ததேற் காரணபூர்வகமாய் வந்ததெனின் வரம்பின்மைக்குற்றமும் காரணமின்றிவந்ததெனிற் காரண காரிய நியமமின்மைக் குற்றமும் அடுக்குமாதலின் இயற்கையுணர்வும், பிறர்வயமுண்டேற் பாசத்தடையுமுளதாகி வேண்டிய தெய்தாமையும் வேண்டாத தெய்தலுமாகிய குற்றம்பற்றுதலின் தன்வயமும், ஆற்றல்குன்றுமாயின் எக்காலத்தும் எத்தேசத்தும் இவைப்பின்றித் தொழிலியற்றுதல் எலாமையிற் குறைவிலாற்றலும், அவ்வாற்றல் வரம்புப்பட்ட பரிமாணமுடையதாயின் வரம்புப்படாத தொழிலியற்றல் கூடாமையின் வரம்பிலாற்றலுமாகிய இவ்வறுகுணங்களும் பதிக்கு இன்றியமையாமை காண்க. அப்பதியானவர், அநாதியே உள்ள முற்றறிவு முற்றுத் தொழிலாகிய சிவத்துவம் இயைதலாற்றான், சிவத்துவம் என்னும் அதிசுத்தம் இயைதலாற்றான் ஸ ஏன்னுந்தாது இடத்தலெனப் பொருள்படுதலின் இறுதிக்காலத்து உலகமெல்லாம் தம்மிடத்து ஒடுங்கிக்கிடத்தலாற்றான், சற்சனங்களுடைய மனங்கள் தம்மிடத்தலாற்றான், ஸி என்னுந் தாது மெலிவித்தலெனவும் கூருவித்தலெனவும் பொருள்படுமாதலான் ஆன்மாக்களின் பாசசத்தியை மெலிவித்துச் சிற்சத்தியைத்

உபோற்காதம்.

கூருவித்தலாற்ருன், காந்திப்பொருடரும் வழி என்னுஞ்சொல் வர்ண விபரியய மூறுதலாற்ருன், சிவனெனப்படுவர்.

அச்சிவனது ஆஞ்ஞையினுலே அவ்வான்மாக்கள் கர்மானுசாரமாக நால்வகைத் தோற்றமும், எழுவகைப்பிறப்பும், எண்பத்துநான்கு நூருயிர யோனிபேதமும் உடையராய்ப் பிறந்திறந்து உழலுங்காலத்திலே, முன்னர்ப் பௌத்தம் முதலிய புறச் சமயங்களிலே நின்று அவ்வச்சமய நூல்களில் விதித்தபடி ஒழுகுவர்கள். அப்புறச்ச மயிகளுக்கு, அவரவராலே சொல்லப்பட்ட கர்த்திருகாரணங்களே அதிஷ்டித்துக்கொ ண்டு அந்தக் கர்த்திருகாரண சொரூபியாய் இருந்து, எவனே அருள்செய்வர். அது "அறிவினுன் மிக்க வறுவகைச் சமயத் தவ்வவர்க் கங்கே யாரருள் புரிந்து—வெறியு மாகட லிலங்கையர் கோனைத் துலங்க மால்வரைக் கீழடர்த் திட்டுக்—குறிகொள் பாடலி னின்னிசை கேட்டுக் கோலவாளொடு நாளது கொடுத்த—செறிவு கண்டுநின் றிருவடி யடைந்தேன் செழும்பொ ழிற்றிருப் புன்கூரு ளானே." என்னுஞ் சுந்தர மூர்த்திநாயனூர் தேவாரத்தாலும், "அறுவகைச் சமையத் தோர்க்கு மவ்வவர் பொரு ளாய் வேறுங்—குறியது வுடைத்தாய் வேதா கமங்களின் குறியி றந்தங்—கறிவினி லருளான் மன்னி யம்மையோ டப்பனுகிச்—செறிவொழி யாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம்." எனவும் "யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே—மாதொரு பாக னுர்தாம் வருவர்மற் றத்தெய்வங்கள்—வேதனைப் படுமி றக்கும் பிறக்குமேல் வீனையுஞ் செய்யு—மாதலா லிவையிலாதா னறிந்தருள் செய்வ னன்றே." எனவும் வருஞ் சிவஞான சித்தித் திருவிருத்தங்களாலும் அறிக.

புறச்சமயங்களிலே நின்று செய்த புண்ணியங்களினுலே, பின் வைதிகமார்க்கத் திலே புகுந்து, வேதத்திலும் அதன் வழிநூலாகிய மிருதிமுதலியவற்றிலும் பிராம ணர்முதலிய நான்குவருணத்துக்கும் பிரமசரியமுதலிய நான்காச்சிரமத்துக்கும் விதி த்த பசு புண்ணியங்களேச்செய்து, சுவர்க்கத்திற் சென்று போகந்துய்த்து, மீண்டு பூமியிலே பிறப்பர்கள். அவர்கள் முன்செய்த வைதிக புண்ணிய மிருதியினுலே சைவாகமத்தால் உணர்த்தப்படும் சைவத்திற் பிரவேசித்து, சரியை கிரியை யோகங் களே முறையே அ.ட்டித்து, அவற்றின் பலங்களாகிய சாலோக்கிய சாமீப்பிய சாரூப் பிய பதங்களேப் பெறுவார்கள். அவர்களுள், போகத்திலே வைராக்கியம் உற்றவர் கள் திரும்பப் பூமியில் வாராது சிவனுக்கிரகத்தினுலே பரமுத்திமான்களாவார்கள். போகத்திலே வைராக்கியம் உறுதவர்கள் திரும்பப் பூமியிலே பிறந்து, சிவஞானத் தைப் பொருந்தி, பரமுத்தியாகிய சிவ சாயுச்சியத்தைப் பெறுவார்கள். இதற்குப் பிரமாணம், சிவநெறிப்பிரகாசம். "இப்படி யவத்தை யோரைந் தெய்தியே பிறப்பி றப்பாம்—வெப்புறுங் காலந் தன்னில் வேதத்தின் வழிய தன்றிப்—பொய்ப் பொருட் சமயந் தன்னிற் புரிந்திடுந் தவத்தினுலே—தப்பிலா வேதஞ் சொன்ன சமய த்தைச் சார்ந்து நின்றே. வன்னமோர் நான்கினுக்கு மாசிலாச் சிரமங்கட்குஞ்— சொன்னவா நிடறி லாதே செய்துபின் சுவர்க்கந் துய்த்துப்—பின்னர்மா நிலத்தின் வந்து சிவதன்மம் பெரிதென் றெண்ணி—முன்னேயா கமங்கள் சொன்ன படிதவ முயல்வ மென்றே. எண்ணியோர் குருவைச் சேர்ந்தே யெழில்பெறு சமய தீக்கை— நண்ணியே சரியை தன்னே நவையற வியற்றி யத்தாற்—புண்ணிய சிவலோ கத்தைப் பொருந்தியங் குள்ளபோக—மண்ணலா ருளப் பெற்ற தருந்திமே லவனிமீதே. உதித்தருள்செய் குருவாலே விசேட தீக்கை யுற்றுணர்ந்து சிவபூசை யூனமறச் செய்தே—துதித்திடுநெற் சாமீபஞ் சிவன்பாற் பெற்றுத் துய்த்திடுவர் பெரும்போகந் தொலைத்தகாலே—நதிச்சடையா னருளாலே புவியினண்ணி நாடரிய சிவயோக மிய ற்றி நன்ருய்த்—திதிக்கொழிவாய் காலமுறு மளவுமந்தச் சிவனுடைய சாரூபஞ் சேர் ந்துநின்றே. ஆகத்தி லாசையில ராகிச் சற்று மளவிறந்து மேன்மேலு மடைவ தான—போகத்திற் பற்றிலரே யாகிலுல கெல்லாம் பொன்றிடுங்கா லிவர்தாமும்

பொருந்திடுவர் முத்தி—மோகத்தைத் தவிராதோர் பிணைச்சிருட்டி கால மூலத்துல கிற் குருவாலே முத்திபெற மலத்தின்—பாகத்தை யடைந்ததனுற் சத்திபதிக் திடவே பரஞானத் தான்முத்தி பலிக்குமவர் பாலே.'' எ - ம். சிவஞானசித்தியார். ''தான மியா கங்தீர்த்த மாச்சிரமந் தவங்கள் சாந்திவிர தங்கன்ம யோகங்கள் சரித்தோ— ரீனமிலாச் சுவர்க்கம்பெற் றிமைப்பளவின் மீள்வ ரீசனியோ கக்கிரியா சரியையினி னின்றேரு—ஞானமிலா முத்திபதம் பெற்றலக மெல்லா மொடுங்கும்போ தான்மு னிலா தொழியினுற்ப வித்து—ஞானநெறி யடைந்தடைவர் சிவனேயங்கு நாதனே முன்னிற்கி னணுகுவர் நற்றாளே.'' எ-ம். கோயிற்புராணம். ''சுருதிவழி யொழுகினர் கள் சுவர்க்கத்தா ராகமநூற்—சரியை கிரியா யோகர் சாலோக சாமீப—வருவமை யினராக வுதவுதலும் முடனுகும்—பெருகியஞா னிகளெம்மைப் பெற்றூர்போக் கற்றாரே.'' எ-ம். சிவதருமோத்தரம். ''இருவினை யுணர்ந்த புத்த ரவர்மூத லிகலும் வாத—நெரிசன மனேத்துஞ் சேர்ந்தார் சிவசமயத்தைச் சேர்வார்—பொருவிலி புக ன்ற வாக்கிற் கருமநன் னெறியும் புக்கே—லிரவுவர் ஞான யோகம் விடுவர்மெய் யடைவர் மெய்யே. எடுத்ததோ ராக்கைதன்னி லிருண்மல சத்தி தன்னைத்—தடுத்த ருள் சைவ நூலின் சாதன மதனைத் தள்ளி—விடுத்துவே றற்ற நூலின் சாதனம் விரு ம்பு வார்முன்—னடுத்தவா ரமுதம் விட்டுப் புற்கையா தரிப்ப ரன்றே.'' எ-ம். வருமாறுகாண்க.

இது காறுங் கூறியவாற்ருல், சைவசித்தாந்தத்தன்றிப் பரமுத்தி சித்தியாது என்பதும், அப்பரமுத்திக்குச் சாதனம் சிவஞானமே என்பதும், அச்சிவஞானத்தைப் பயப்பன சரியை முதலிய மூன்றுமே என்பதும், வேதத்துள் விதித்த வேள்வி முதலி யன வெல்லாம் அநித்தியமாகிய காமியங்களைப் பயப்பன என்பதும் பெறப்பட்டன. வேள்வி முதலியன ஞானத்தைப் பயவாமை மாத்திரையேயன்றி, தீவினைபோல அது நிகழவொட்டாது தடைசெய்து நிற்றலும் உடையனவேயாம். ஆதலால், தீவினைகள் இருப்பு விலங்கும், வேதத்துள் விதித்த வேள்விமுதலிய நல்வினைகள் பொன்விலங் கும் போலத், தம்முட் சமப்படுத்து உணர்தற்பாண்மையவென்க. வேள்வி முதலிய தருமங்களின் பயனுகிய இன்பம் முன் பசித்து உண்டு பின்னும் பசிப்பானுக்கு அவ் வுண்டியால் வரும் இன்பத்தைப் போலும். அவ்வேள்வி முதலியன போல அனுபவ மாத்திரையாற் கெடுதலின்றி மேன்மேல் முறுகி வளர்வனவாகிய சரியை கிரியை யோகங்களால் எய்தப்படும் சிவஞானம் பசித்து உண்டு பின்னும் பசித்தலில்லாத தேவர்களுக்கு அவ்வமுதவுண்டியாலாய பயனேப்போலும். அவ்வமுத வுண்டி ரைை திரை மூப்பின்றி நிலைபெறுதலாகிய பெரும்பயனைத் தருதன்மாத்திரையே யன்றிப் பசிதீர்தலாகிய அவாந்தரப் பயனையுந் தருதல்போல, சரியை முதலியனவும் சிவஞா னத்தைப் பயத்தல் மாத்திரையேயன்றித் தத்தம் பதமுத்தியாகிய அவாந்தரப் பய னையும் பயப்பனவாம்.

மேற் கூறிப்போந்த சரியை முதலிய நான்கு பாதங்களுள்ளும், சரியை கிரியை என்னும் இரண்டும் கூடி, சிவ தருமமென ஒருபெயரான் வழங்கவும்பெறும். அந்தச் சிவதர்மம் மெல்வினை வல்வினை என இருவகைப்படும். அவற்றுள், மெல்வினையா வது சைவாகமத்திலே சரியை கிரியைகளுக்கு விதித்தவழி ஒழுகும் விதிமார்க்கம். வல்வினையாவது அவ்விதிமார்க்கத்தில் வழுவாது நின்று அந்நிலையின் முதிர்ச்சியி னுலே பின்னுண்டாகிய பிறப்பின்கண்ணே சிவனிடத்தில் எல்லையின்றி எழுந்து அதி தீவிரமாய் முறுகிவளரும் அன்பின் பெருக்கத்தினுலே உலகநெறிகடந்து ஒழுகும் பத்திமார்க்கம். இதற்குப்பிரமாணம். திருக்களிற்றுப்படியார். ''நல்லசிவ தன்மத்தா னல்லசிவ யோகத்தா—னல்லசிவ ஞானத்தா னுனழிய - வல்லதனுலாரேனு மன்பு செயி னங்கே தலைப்படுங்கா—னுரேனுங் காணு வரன்.'' எம். ''மெல்வினையே யென்ன வியனுலகி னூர்க்கரிய—வல்வினையே யென்ன வருமிரண்டுஞ் - சொல்லிற்— வெதன்ம மாமதனிற் சென்றதிலே செல்வாய்—பவகன்ம நீங்கும் படி.'' எ-ம்.

"ஆதியை யர்ச்சித்தற் கங்கமு மங்கங்கே—தீதி லறம்பலவுஞ் செய்வனவும் - வேதி யனே—நல்வினையா மென்று நமக்குமெளி தானவற்றை—மெல்வினையே யென்றது நாம் வேறு." எ-ம். "வரங்கடருஞ் செய்ய வயிரவர்க்குத் தங்கள்—கரங்களினு லன் றுகறி யாக - விரங்காதே—கொல்வினையே செய்யும் கொடுவினையே யானவற்றை—வல்வினையே யென்றதுநா மற்று." எ-ம். "பாதகமே யென்றும் பழியென்றும் பாராதே—தாதையை வேதியனைத் தாளிரண்டுஞ் - சேதிப்பக்—கண்டீசர் தாமாம் பரிசளித்தார் கண்டாயே—சண்டீசர் தஞ்செயலாற் றான்." எ-ம். "செய்யி லுருத்த திருப்படி மாற்றதனை—யைய விதுவமுது செய்யெனவே - பையவிருந்—தூட்டி யறுப்பதற்கே யூட்டி யறுத்தவரை—நாட்டியுரை செய்வதே நாம்." எ-ம். வரும்.

இங்ஙனங் கூறிய சரியை முதலிய நான்கு பாதங்களிலே நின்று முத்திபெற்ற மெய்யடியார்களுட் சிறந்த தனியடியார் அறுபத்துமூவரும் தொகையடியார் ஒன்ப தின்மருமாகிய திருத்தொண்டர் எழுபத்திருவருடைய சரித்திரத்தை, சுகசபையின் கண்ணே ஆனந்த நிருத்தஞ் செய்தருளும் கருணைநிதியாகிய சிவனது திருவருளினாலே பசுகரணமெல்லாஞ் சிவகரணமாய் நிகழப் பெற்ற சிவாநுபூதிமானாகிய சுந்தரத் தூர்ச் சேக்கிழார் நாயனார், தமிழுலகம் உய்ந்தற்பொருட்டு, திருத்தொண்டர் புராணம் எனப்பெயர் தந்து விரித்தருளிச் செய்தார். இப்புராணம் தன்னை ஓதல் கேட்டல் செய்வார்க்குச் சிவனடியார்களது அத்தியற்புத பத்தித்திறத்தையும் அவர்கட்கு எளிவந்த சிவனது அத்தியற்புதப் பிரசாதத்தையும் உணர்த்தி, அவர்நெஞ்சை அழலிடைப்பட்ட மெழுகுபோலக் கசிந்துருக செய்தலிற் றனக்கு உயர்வொப் பின்றி வினங்கும் பெருமையுடைமைபற்றி, பெரியபுராணம் எனவும் பெயர் பெற் றது. இப்பெரியபுராணம் சைவசித்தாந்த நூற்கருத்தோடு மாறுபடாத வேதமு டிவாகிய உபநிஷத்துக்களின் தாற்பரியங்களே உள்ளடக்கிய தேவாரம் திருவாசகம் திருவிசைப்பா திருப்பல்லாண்டு என்னும் நான்கனேடுகூட்டி, கல்வியறிவொழுக்கங் களான் ஆன்ற மகத்துக்களாலே தொன்று தொட்டு அருட்பா எனவழங்கப்படும்.

பிரஞ்ஞையில்லாத சிலபிராமணர் இப்பெரிய புராணத்துக்கு அப்பிராமாணியம் பேசுவர். இப்புராணத்துக்குத் தில்லைவாழந்தணர் மடபதிகள் முதலிய எண்ணிறந்த அடியார்கள் கேட்கச் சிதம்பர சபாநாதர் "**உலகெலாம்**" என அடியெடுத்துக் கொடுத்தருளினர் எனவும் இது முற்றியபின்னர் அநபாயசோழமகாராஜாவுக்கு சோழனே, சேக்கிழான் நாம் "**உலகெலாம்**" என்று அடி எடுத்துக்கொடுக்க, நம் முடைய தொண்டர்களது அடிமைத்திறத்தை விரித்துப் புராணம்பாடி முடித்தான்! நீ அதைக்கேள் என்று யாவரும் கேட்ப அருளிச்செய்தார் எனவும் தில்லைவாழந்தணர் களுள் ஒருவராகிச் சிவானுபூதிமான் எனப் பிரசித்தி பெற்ற உமாபதி சிவாசாரியர் சேக்கிழார் புராணத்துட் கூறுதலானும், பரமசிவன் உமாதேவிக்குச் சதுர்யுகதருமங் களுங் கூறிய பின்னர், இனிக் கலியுகத்திலே அறுபத்துமூன்று தொண்டர்கள் பிற ந்து தம்மேற் பத்தி செய்வர்கள் எனவும், அவர்கள் சரித்திரத்தை உபமன்னிய முனி வர் பத்தர்குழாங்கட்குக் கூறுவர் எனவும் கூறி, அச்சரித்திரத்தை முன்னுரைத்தமை யாமேதிகாசமாகிய சிவரகசியத்திலே நவமாம்சிசத்திற் பெறப்படுதலானும், சங்கரா சாரியர் இப்பெரியபுராணத்துட் கூறப்படும் அறுபத்து மூவருள் சிலரது அடிமைத்தி றத்தை "வழியிலும் இடப்பட்ட செருப்பானது பசுபதியின் அங்கத்துக்குக் கூர்ச்ச மாகின்றது: வாய்நிறைந்த நீரால் நனைத்தல் புரப்பகைவருக்குத் திவ்வியாபிஷேகமா கின்றது: சற்றே புசிக்கப்பட்ட மாகிச சேஷத்தின் கவளமானது திவ்வியோப காரமாகின்றது: வனசரன் பத்தச்சேஷ்டனுகின்றான். பத்தி எதைச் செய்கின்றி லது!" எனச் சிவானந்தலகரியினும், "கிரீசரே, மனிவிக்கும் புதல்வனுக்கும் தந்தை க்கும் துரோகஞ் செய்தவர்களுக்குப் பிரசன்னராயினீர். நானே பிறருக்குத் துரோ கஞ்சிறிதும் செய்யவல்லனல்லன். என்னிடத்து நீர் எவ்வாறு பிரீதிசெய்வீர்! அறி

யேன்." எனச் செவுசங்கத்திலும் சிறப்பித்துரைத்தலானும், அப்பிராமணர் கூற்றுத் தூரம்போய்த் துச்சமாய்விடும்.

இப்பெரியபுராணமானது, தன்னே உணர்ந்தவர்களுக்கன்றி மற்றவர்களுக்குத் தமிழ்வேதமாகிய தேவாரத்தின் வரலாறும் மகிமையும் ஒரோவிடங்களில் அதன் பொருளும் விளங்குதல் கூடாமையானும், தன்னே அத்தியந்த ஆசையுடன் ஓதுவோர்க்கும் கேட்போர்க்கும் பத்திவைராக்கிய ஞானங்களேப் பயக்குங் கருவியாய் இருத்தலானும், சிவஞானசித்தியார் திருக்களிற்றுப்படியார் முதலிய சைவசித்தாந்த நூல்களினும் உரைகளினும் சிவானுபவத்துக்குத் தான்கூறும் நாயன்மார் பலருடைய சரித்திரங்களில் உதாரணங் காட்டுதலானும், சர்வாதிகாரிகளாகிய ஆதிசைவருக்கும் பிறருக்கும் தான் அதிகரித்த தனியடியார் அறுபத்துமூவரும் தொகையடியார் ஒன்பதின்மரும் ஆகிய திருத்தொண்டர் எழுபத்திருவருடைய சரித்திரங்களேயும் உணர்ந்து அவர்கள் மகிமையைத் தெளிந்தாலன்றிச் சிவாலயங்கள் எங்கும் முறையே அவர்களுக்குப் பிரதிட்டை பூசை திருவிழாக்கள் செய்தற்கண்ணும் அவைகளேச் சேவித்தற்கண்ணும் ஊக்கமும் அன்பும் நிகழாமையானும், சைவர்கள் யாவரும் ஒருதலேயாகக் கற்றுணர வேண்டும் நூலாம்.

திருச்சிற்றம்பலம்.

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

பெரியபுராணம்

என்று வழங்குகிற

திருத்தொண்டர்புராணம்.

பாயிரம்.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். (க)

ஊன டைந்த வுடம்பின் பிறவியே
தான டைந்த வுறுதியைச் சாருமாற்
றேன டைந்த மலர்ப்பொழிற் றில்லையுண்
மாக டஞ்செய் வரதர்பொற் ருெழ. (உ)

எடுக்கு மாக்கதை யின்றமிழ்ச் செய்யுளாய்
நடக்கு மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை யைந்துடைத் தாழ்செவி நீண்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்து ளிருத்துவாம். (ங)

வே று.

மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
றுதிசெயு நாயன்மார் தூய சொன்மலர்ப்
பொதிநல நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை யுலகினில் விளங்கி வெல்கவே. (ச)

வே று.

அளவி லாத பெருமைய ராகிய
வளவி லாவடி யார்புகழ் கூறுகே
னளவு கூட வுரைப்பரி தாயினு
மளவி லாசை தூரப்ப வறைகுவேன். (ஞ)

தெரி வரும்பெரு மைத்திருத் தொண்டர்தம்
பொரு வருஞ்சீர் புகலலுற் றேன்முற்றப்
பெருகு தெண்கட லூற்றுண் பெருநசை
யொருசு ணங்கனை யொக்குந் தகைமையேன். (ஈ)

செப்ப லுற்ற பொருளின் சிறப்பினு
லப்பொ ருட்குவ மாவருங் கொள்வரா
லிப்பொ ருட்கென் னுரைசிறி தாயினு
மெய்ப்பொ ருட்குரி யார்கொள்வர் மேன்மையால். (எ)

மேய வில்வுரை கொண்டு விரும்புமாஞ்
சேய வன்றிருப் பேரம் பலஞ்செய்ய
தூய பொன்னணி சோழனீ ழிபா
ராய சீர்ந பாய னாசவை. (அ)

அருளி னீர்மைத் திருத்தொண் டறிவருந்
தெருளி னீரிது செப்புதற் காமெனின்
வெருளின் மெய்ம்மொழி வாணிழல் கூறிய
பொருளி னுகு மெனபபுகல் வாமன்றே. (க)

வேறு.

இங்கித னுமக் கூறி னிவ்வுல கத்து முன்னுட்
டங்கிரு ளிரண்டின் மாக்கள் சிந்தையுட் சார்ந்து நின்ற
பொங்கிய விருளே யேனப் புறவிருள் போக்கு கின்ற
செங்கதி ரவன்போ னீக்குந் திருத்தொண்டா புராணமென்பாம். (கo)

பாயிரமுற்றிற்று.

முதற்காண்டம்.

முதலாவது

திருமலைச்சருக்கம்.

திருமலைச்சிறப்பு.

பொன்னின் வெண்டிரு நீறு பூனைந்தெனப்
பன்னு நீள்பனி மால்வரைப் பாலது
தன்னே யார்க்கு மறிவரி யானென்று
மன்னி வாழ்கயி லத்திரு மாமலை. (க)

அண்ணல் வீற்றிருக் கப்பெற்ற தாதலி
னண்ணு மூன்றுல குந்நான் மறைகளு
மெண்ணின் மாதவஞ் செய்யவந் தெய்திய
புண்ணி யந்திரண் டெள்ளது போல்வது. (உ)

நிலவு மெண்ணி றலங்களு நீடொளி
யிலகு தண்டரி ராக வெழுந்ததொ
ருலக மென்னு மொளிமணி வல்லிமேன்
மலரும் வெண்டிலர் போல்வதம் மால்வரை. (ங)

மேன்மை நான்மறை நாதமும் விஞ்சையர்
கான வீணையி னோசையுங் காரெதிர்
தான மாக்கண் முழக்கமுந் தாழிவ்சிர்
வான துந்துபி யார்ப்பு மருங்கெலாம். (சு)

பனிவி சும்பி லமரர் பணிந்துரு
முனித கோடி யணிமுடி மாலையும்
புனித கற்பகப் பொன்னரி மாலையு
முனிவ ரஞ்சலி மாலையு முன்னெலாம். (இ)

நீடு தேவர் நிலைகளும் வேண்டிடி.
னூடு மைம்பெரும் பூதமு நாட்டிவ
கோடி கோடி குறட்சிறு பூதங்கள்
பாடி யாடும் பரப்பது பாங்கெலாம். (க)

நாய கன்கழல் சேவிக்க நான்முகன்
மேய கால மலாமையின் மீண்டவன்
றூய மால்வரைச் சோதியின் மூழ்கியொன்
ரூய வன்னமுங் காண தயர்க்குமால். (எ)

வே று.

காதில்வெண் குழையோன் கழறெழு நெடியோன் காலம்பார்த் திருந்தது மறியான்
சோதிவெண் கயிலைத் தாழ்வரை முழையிற் றுதிக்கையோ னூர்தியைக் கண்டு
மீதெழு பண்டைச் செழுஞ்சுட ரின்று வெண்சுட ரானதென் றதன்மே
லூதியே னமதா யிடக்கலுற் றனென் றதனைவந் தணைதரும் கதழன். (அ)

அரம்பைய ராடன் முழவுடன் மருங்கி னருவிக ளெதிரெதிர் முழங்க
வரம்பெறு காதன் மனத்துடன் றெய்வ மதுமல ரிருகையு மேந்தி
நிரந்தர மிடைந்த விமானசோ பான நீயெர் வழிபிழ லேறிப்
புரந்தரன் முதலாங் கடவுளர் போற்றப் பொலிவதத் திருமலைப் புறம்பு. (கு)

வேதநான் முகன்மால் புரந்தரன் முதலாம் விண்ணவ ரெண்ணிலார் மற்றுங்
காதலான் மிடைந்த முதற்பெருந் தடையாய் கதிர்மணிக் கோபுரத் துள்ளான்
பூதவே தாளப் பெருங்கண நாதர் போற்றிடப் பொதுவினின் றாடி
நாதனு நாதி தேவனுர் கோயி னுயக னன்றியெம் பெருமான். (கo)

நெற்றியிற் கண்ணர் நாற்பெருந் தோளர் நீறணி மேனிய ரநேகர்
பெற்றமேல் கொண்ட தம்பிரா னடியார் பிஞ்சகன் றன்னருள் பெறுவார்
மற்றவர்க் கெல்லாந் தலைமையாம் பணியு மலர்க்கையிற் சுரிகையும் பிரம்புங்
கற்றைவார் சடையா னருளினற் பெற்றான் காப்பதக் கயிலைமால் வரைதான். (கக)

கையின்மான் மழுவர் கங்கைசூழ் சடையிற் கதிரினம் பிறைநதுங் கண்ணி
யையர்வீற் றிருக்குந் தன்மையி னுலு மளப்பரும் பெருமையி னுலு
மெய்யொளி தழைக்குந் தூய்மையி னுலும் வென்றிவெண் குடையுய புரயன்
செய்யகோ லபயன் றிருமனத் தோங்குந் திருக்கயி லாயசீர் நிலைப்பு. (கஉ)

வே று.

அன்ன தன்றிருத் தாழ்வரை யின்னிடத்
தின்ன தன்மைய னென்றறி யாச்சிவன்
றன்னை யேயுணர்ந் தார்வந் தணைக்கின்று
னுன்ன ருஞ்சி ருபமன் னியமுனி. (கக)

யாத வன்றுவ ரைக்கிறை யாகிய
மாத வன்முடி மேலடி வைத்தவன்
பூத காதன் பொருவருந் தொண்டினுக்
காதி யந்த மிலாமை யடைந்தவன். (கச)

அத்தர் தந்த வருட்பாற் கடலுண்டு
சித்த மார்ந்து தெவிட்டி வளர்ந்தவன்
பத்த ராய முனிவர்பல் லாயிரர்
சுத்த யோகிகள் சூழ விருந்துழி. (கஞ)

அங்க ணேரொளி யாயிர ஞாயிறு
பொங்கு பேரொளி போன்றுமுன் ரேன்றிடத்
துங்க மாதவர் சூழ்ந்திருந் தாரெலா
மிங்கி தென்கொ லதிசய மென்றலும். (கசு)

அந்தி வான்மதி சூடிய வண்ணரு ள்
சிந்தி யாவுணர்ந் தம்முனி தென்றிசை
வந்த ராவலர் கோன்புகழ் வன்ரெண்ட
னெந்தை யாரரு ளாலணே வானென. (கஎ)

கைகள் கூப்பித் தொழுதெழுந் தத்திசை
மெய்யி லானந்த வாரி விரவிடச்
செய்ய நீள்சடை மாமுனி செல்வுழி
யைய நீங்க வினவுவோ ரந்தணர். (கஅ)

சம்பு வின்னடித் தாமரைப் போதலா
லெம்பி ரானிறைஞ் சாயிது வென்னெனத்
தம்பி ரானேத்தன் னுள்ளந் தழீஇயவ
னம்பி யாரூர னுந்தொழுந் தன்மையான். (கசு)

என்று கூற விறைஞ்சி யியம்புவார்
வென்ற பேரொளி யார்செய் விழுத்தவ
நன்று கேட்க விரும்பு நசையினே
மின்றெ மக்குரை செய்தரு ளென்றலும். (உ0)

உள்ள வண்ண முனிவ னுரைசெய்வான்
வெள்ள நீர்ச்சடை மெய்ப்பொரு ளாகிய
வள்ளல் சாத்து மதுமலர் மாலையு
மள்ளு நீறு மெடுத்தணே வானுளன். (உக)

அன்ன வன்பெய ராலால சுந்தரன்
முன்ன மாங்கொரு நாண்முதல் வன்றனக்
கின்ன வாமெனு நாண்மலர் கொய்திடத்
துன்னி ஞனந் தனவனச் சூழலில். (உஉ)

அங்கு முன்னெமை யாளுடை நாயகி
கொங்கு சேர்குழற் காமலர் கொய்திடத்
திங்கள் வாண்முகச் சேடிய செய்தினர்
பொங்கு கின்ற கலினுடைப் பூவைமார். (உங)

அந்த மில்சீ ரனிந்திதை யாய்குழற்
கந்த மாலைக் கமலினி யென்பவர்
கொந்து கொண்ட திருமலர் கொய்வுழி
வந்து வானவ ரீச ரருளென. (உச)

மாத வஞ்செய்த தென்றிசை வாழ்ந்திடத்
தீதி லாத்திருத் தொண்டத் தொகைதரப்
போது வாரவர் மேன்மனம் போக்கிடக்
காதன் மாதருங் காட்சியிற் கண்ணினர். (உடு)

மூன்ன மாங்கவன் மொய்ம்முகை நாண்மல
ரென்னே யாட்கொண்ட வீசனுக் கேய்வன
பன்ம லர்கொய்து செல்லப் பனிமல
ரன்ன மன்னவ ருங்கொண் டகன்றபின். (உக)

ஆதி மூர்த்தி யவன்றிற நோக்கியே
மாதர் மேன்மனம் வைத்தனே தென்புவி
மீது தோன்றியம் மெல்லிய லாருடன்
காத லின்பங் கலந்தனே வாயென. (உஎ)

கைக ளஞ்சலி கூப்பிக் கலங்கினுன்
செய்ய சேவடி நீங்குஞ் சிறுமையேன்
மையன் மானுட மாய்மயங் கும்வழி
யைய னேதடுத் தாண்டரு ளுள் செய்யென. (உஅ)

அங்க ணுதன தற்கருள் செய்தபி
னங்கை மாருட னம்பிமற் றத்திசை
தங்கு தோற்றத்தி லின்புற்றுச் சாருமென்
றங்க வன்செய லெல்லா மறைந்தனன். (உக)

அந்த ணாளரு மாங்கது கேட்டவர்
பந்த மானுடப் பாற்படு தென்றிசை
யிந்த வான்றிசை யெட்டினு மேற்பட
வந்த புண்ணியம் யாதென மாதவன். (ஙo)

பொருவ ருந்தவத் தான்புலிக் காலனு
மருமு னியெந்தை யர்ச்சித்து மூள்ளது
பெருமை சேர்பெரும் பற்றப் புலியூரென்
றெருமை யாளர்வைப் பாம்பதி யோங்குமால். (ஙக)

அத்தி ருப்பதி யின்னமை யாளுடை
மெய்த்த வக்கொடி காண விருப்புட
ளித்த னீடிய வம்பலத் தாடுமற்
றித்தி றம்பெற லாந்திசை யெத்திசை. (ஙஉ)

பூதம் யாவையு ளுள்ளலர் போதென
வேத மூலம் வெளிப்படு மேதினிக்
காதன் மங்கை யிதய கமலமா
மாதொர் பாகனு ராரூர் மலர்ந்ததால். (ஙங)

எம்பி ராட்டியிவ் வேழுல கின்றவ
டம்பி ராணைத் தனித்தவத் தாலெய்திக்
கம்பை யாற்றில் வழிபடு காஞ்சியென்
றும்பர் போற்றும் பதியு முடையது. (சுசு)

நங்க ணுதலு நக்கி தவஞ்செய்து
பொங்கு நீடரு ளெய்திய பொற்பது
கங்கை வேணி மலரக் கனன்மலர்
செங்கை யாளரை யாறுந் திகழ்வது. (சுஙி)

தேச மெல்லாம் விளக்கிய தென்றிசை
யீசர் தோணி புரத்துட னெங்களும்
பூச னைக்குப் பொருந்து மிடம்பல
பேசி லத்திசை யொவ்வா பிறதிசை. (சுசு)

என்று மாமுனி வன்றொண்டர் செய்கையை
யன்று சொன்ன படியா லடியவர்
தொன்று சீர்த்திருத் தொண்டத் தொகையினி
யின்றெ னுதர வாலிங் கியம்புகேன். (சுஎ)

மற்றி தற்குப் பதிகம்வன் றொண்டர்தாம்
புற்றி டத்தெம் புராண ரருளினூற்
சொற்ற மெய்த்திருத் தொண்டத் தொகையெனப்
பெற்ற நற்பதி கற்தொழப் பெற்றதாம். (சுஅ)

அந்த மெய்ப்பதி கத்தடி யார்களே
நந்த நாதனு நம்பியாண்டார் நம்பி
புந்தி யாரப் புகன்ற வகையினுல்
வந்த வாறு வழாம லியம்புவாம். (சுக)

உலக முய்யவுஞ் சைவநின் றோங்கவு
மலகில் சீர்நம்பி யாரூரர் பாடிய
நிலவு தொண்டர்தங் கூட்ட நிறைந்துறை
குலவு தண்புன லுட்டணி கூறுவாம். (சஂ)

திருமலைச்சிறப்பு முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ஙஂ.

சுருக்கம்.

க. சிவனது பரத்துவம்.

சிவன் பிரமாண்டத்திள்ளே கைலாச நிலயராகிய ஸ்ரீகண்ட சரீர சரீரியாய் இருந்து, பிரமவிட்டுணு முதலியோர்க்கும் சுவேதர் உபமன்னியு முதலியோர்க்கும் கிருஷ்ணர் அர்ச்சுனர் முதலியோர்க்கும் அறுபத்துமூவர் முதலியோர்க்கும் நிக்கிரகா னுக்கிரகங்களேப் பண்ணும் இயல்புடையோர் ஆதலாலும், அறுபத்துமூவர் முதலிய திருத்தொண்டரது சரித்திரத்தை வீரித்துரைக்கப்புகுந்த ஆசிரியர் முன்னர் அவ்வறு பத்துமூவர்க்கு அருள்செய்த சிவன் கைலாசத்தில் பிரம விட்டுணு முதலியோர்

சேவிப்ப வீற்றிருந்தருளும் பெருஞ்சிறப்பைக் கூறுதல் முறைமையாதலானும், அதனை ஈண்டுச் சுருக்கிக்கூறி, அங்ஙனங் கூறுமுகத்தாற் சிவனே விச்சுவாதிகரும் விச்சுவ சேவியருமாம் என்பது குறிப்பித்தார். பலபிரமாணங்களாலே சிவனே விச்சுவாதி கரும் விச்சுவசேவியருமாமென்பது ஐயமறத்துணிந்தவழியன்றி, அவர்பாற் பத்தி எய்தல் கூடாமையானும், ஒரோவழி எய்தினும், வைணவர்முதலியோர் மறுக்கும்வழி மயக்கமெய்துதல்பற்றி அது குன்றுமாதலானும், அதிப்பிரபலப் பிரமாணமாகிய அதர்வசிகைமுதலிய சுருதிகளால் சிவனே விச்சுவாதிகரும் விச்சுவசேவியருமாம் என்பது சிறிது காண்பிப்பாம்.

அதர்வசிகையிலே "அந்தத் தியானம் யாது? அன்றியும் தியானிப்போன் யாவன்? தியானிக்கற்பாலரும் யாவர்?" என்ற உபக்கிரமத்தில் இருந்த வினாக்களுக்கு இசையத் தியானத்தையும் தியானிப்போனையும் நிரூபணஞ்செய்தபின்னர், தியானிக் கற்பாலரை நிசயித்தற்குச் சொல்லுமாறு, "பிகவந் தியானிக்கற்பாலராகிய ஈசான ரைத் தியானிக்க, அந்தப் பிரம விஷ்ணு ருத்திரேந்திரர்களாகிய இவரெல்லாம் உற்ப த்தியாகின்றனர். எல்லா இந்திரியங்களும் பூதங்களுடனே கூட (உற்பத்தியாகின் றன.) காரணமும் காரணங்களைப்படைத்தோரும் சுருதிஞருமாகியவர் (உற்பவி த்தல்) இன்று. காரணமும் சருவைசுவரிய சம்பன்னரும் சருவேசுவரரும் சம்புவு மாகியவரே ஆகாசமத்தியத்திலே தியானிக்கற்பாலர்." என்பதுதொடங்கி, "மற்றதெ ல்லாம்விட்டுச் சுகத்தைச் செய்பவராகிய சிவஞருவரே தியானிக்கற்பாலர். அதர்வ சிகைமுற்றிற்று." என்பதுவரையும், இங்கே யோகரூடியிஞற் பரமசிவனிலே வர்த்திக் கும் ஈசானரென்னுஞ்சொல் யோகத்தினுற் சுவாபாவிக நிரதிசயைசுவரிய பரத்தன் மையுடையரென்று பொருள்படுதலானும், ரூடியினுலே பரமசிவனுக்குப் பெயராத லானும், அனேத்தினும் மேலாகிய பயன் வேண்டினுராகிய உயர்ந்தோரால் பரம சிவன் தியானிக்கற்பாலரென்னுங் கருத்துப்பற்றி ஈசானசத்தத்தால் விசேடிய நிர்த் தேசம் பண்ணப்பட்டது. "பிகவந் தியானிக்கற்பாலராகிய" என்று தியானிக்கப் படத் தக்கவரென வற்புறுத்தி அதிகமாகத் துதித்தது. ஈசானரன்றி மற்றையோர் இப்பெற்றிப் பட்டவர் அன்றென்னும் உறுதியைத்தொனிப்பித்தற்கு, தேவமனுஷாதி ரூபமாகிய சகலப் பிரபஞ்சத்தினும் பிரமன் முதலிய நால்வருக்கும் பிரிக்க தலைமை கூறி, அவர்களது ஐசுவரியங்களும் வரையறைப்பட்டவைகளென்று உணர்த்தற்கு "பிரம விஷ்ணு" என்பதுமுதல் "பூதங்களுடனேகூட" என்பதுவரையும் பூதம் இந் திரியம் முதலியவற்றிற்குச் சமமாக அவர்களுக்கு உற்பத்தியுடைமை காட்டப்பட் டது. இவ்வுற்பத்தியுடைமை பரமசிவனுக்கும் உண்டாயின், அவருக்கும் அதுபோலத் தியானிக்கற்பாலரா தன்மையின்ருகுமென்று ஆசங்கித்து, "காரணமும் காரணங்க ளைப் படைத்தோரும் கருதிஞருமாகியவர் உற்பவித்தலின்று." என்று சொல்லப் பட்டது. பிரமாதிகளுக்கு உற்பத்தி கூறுஞ் சொல்லாற்றலால் அவர்களுக்கு அருத்தா பத்தியாற் பெறப்பட்ட காரணம் எதுவோ அந்த ரூபமாகிக் காரணங்களாகிய பிரமா விஷ்ணு ருத்திரர்களையும் மற்றிரோபரிடதப் பிரசித்தமான காலமுதலியவற்றையும் படைத்தோராகியும் ஆதிசிருட்டியைச் சங்கற்பித்தோராகியும் இருக்கும் இப்பெற்றிப் பட்ட ஈசானர் யாண்டாயினும் உற்பவித்தல் இன்று என்பது இதன்பொருளாம். இதஞல் பிரமாதிகட்குக் காரணம் யாது அது பிறத்தலின்று என்ற இவ்வளவுபொரு ளுமே பிரசித்தம். ஈசானரென்றது இல்லையெனின்; அங்ஙனமாயினும், ஈசானருக் குத் தியேயத்துவம் விதித்துப் பிரமாதிகட்குத் தியேயத்துவம் பிரித்து நீக்கும்பொழு

ருட்டி அவர்களிடத்திற் ரோஷந்தோற்றுவித்தபின்பு, அக்கதோஷம் ஈசானருக்கும் உண்டாயின் நியேயத்துவம் இன்ரருகுமென்று அவசரத்திற்போந்த சங்கை யகற்றற்கு அவருக்கே அத்தோஷமின்மை கூறவேண்டுதல் அவியமாதலின்; ஆண்டு ஈசான ரென வருவித்துப் பொருளுரைப்பதே சால்பு. அங்கே ஆகாசமத்தியத்திலே என்றது உபாசனஸ்தானம் கூறியவாறு. அதற்குப் பரமாகாசமாகிய கைலாசமென்னும் பெயருடைய பரசிவலோகமென்பது கருத்து. அதனுல் இருதயகமலம் இரவிவிம்ப முதலிய எவ்வெவ்விடங்களிற் சிவனேத்தியானிக்கினும், அவ்வவ்விடங்கள் அனேத்தினும் சோதிமயமாகிய கைலாசத்தை விபாவித்து, அதன் மத்தியத்தில் இருப்பவராகச் சிவனேத்தியானிக்க என்று உணர்த்தப்பட்டது. சருவேசுவரரென்றது சிவனது நாமமாகக் கூறப்பட்டது; "ஓங்காரமாகிய சருவேசுவரரைத் துவாதசாந்தத்திலே (உபாசிக்க.)" என்று தாபநீயோப நிடதத்திற் பிரயோகித்தலாலும், புராணங்களில் வழங்குலாலும், அவருக்கு அப்பெயருண்மையாலென்க. அதுவன்றி, சருவேசுவரிய முடைய வரென்னும் பொருள்படக்கூறிற் புனருத்தமாதலின், அற்றன்றென்க. அன்றியும், இரவிகிரணத்தால் அனுக்கிரகிக்கப்பட்ட கமலங்களே கமலங்களாகும் என்பதனுள் இரண்டாங் கமலபதம் கமலகுண சமூகமென்னும் பொருள்படுமாறுபோல, முன்னேயது ரூடியாகவும் பின்னேயது யோகரூடியாகவும் பொருள்பட்டு, சம்புவானவர் உற்பத்தியின்றிப் பிரமாதிகட்குங் காரணமாயிருத்தன் மாத்திரத்தால் அபரிச்சின்னேசுவரியென்றதன்று பின்னும் அசாதாரணமாகிய சருவேசுவர சத்தத்தாற் கூறப்படுதலானும் சருவேசுவரரென்றதென்று கருத்தாகி உபபத்தியுடைய அனுவாதமாகக்கூறியதெனினும் அமையும். இந்த அருத்தத்தையே ஆதரவினுலே கண்டோக்தியினுலும் "சிவனெருவரே தியானிக்கற்பாலர்." என்று சுருதி விளக்குகின்றது. அங்ஙனம் அச்சுருதியின்பொருளே உபவிருங்கணங்கள் தாமே தெளிவுற விளக்குகின்றன. அவற்றுள், சைவபுராணத்திலே சிவனது சர்வோத்கருஷ நிச்சயப்பிரகரணத்திலே (க) "எவரிடத்திலிருந்து பிரம விஷ்ணு ருத்திரேந்திர பூர்வமான இஃதனேத்தும் சகலபூதேந்திரியங்களுடனேகூட ஆதியிற்பிறந்தன." (உ) "காரணங்களைப் படைத்தோரும் கருதினேரும் பரமகாரணமுமாகிய எவர் யாண்டாயினும் எப்போதாயினும் பிறிதொன்றினின்று பிறக்கின்றிலர்." (ங) "சருவேசுவரிய பரிபூரணராகியும் தாமே பெயரினுற் சருவேசுவரராகியும் சம்புவாகியுமிருக்கிற அவரே ஆகாசமத்தியத்திலிருப்பவராக முமுட்சுக்களாலே தியானிக்கற்பாலர்" எனக்கூறப்பட்டது. இங்கே "பிரம விஷ்ணு" என்பது முதல் "பூதங்களுடனேகூட" என்பதுவரையுமுள்ள சுருதியின் பொருள் முதற்சுலோகத்திற் காட்டப்பட்டது. இதில் "எவரிடத்திலிருந்து" என்னும் நிர்த்தேசவசனமும் இரண்டாஞ்சுலோகத்திலே "எவர்" என்பதும் மூன்றாஞ்சுலோகத்தில் "அவர்" என்னும் பிரதிநிர்த்தேசத்தைக்கொண்டு முடிதலால், பிரமாதிகள் சிவனிற்றேன்றியோர் என்பது தெளிவுறவுணர்த்தப்பட்டது. மூன்றாஞ்சுலோகத்திலே "பெயரினுற் சருவேசுவரர்" என்று அஃது அவர்க்குப் பெயராமாறு காட்டப்பட்டது. அரிவம்சிசம் பிரமாண்டபுராணம் முதலியவற்றினும் இவ்வாறே காட்டப்பட்டது. அங்ஙனமாகச் சுருதியிற்றானே பிரமாமுதலிய சகலதேவதைகளினும் வேறுபிரித்துச் சிவனுக்கே சருவேசுவரத்துவம் வியவஸ்தாபித்திருக்கவும், அவரிலும் அதிகமாகிய பிறதெய்வம் உண்டென்று கற்பித்தல்பேதைமையேயாம்.

அற்றேல், "இரணிய கர்ப்பன் ஆதியிலுள்ளவன்." என்றும் "இந்திரன் சகலத்திலும்மேலானதேவன்." என்றும் "அக்கினியே தேவரனேவர்க்கும் முன்னே தலேவன்."

என்னும் இத்தொடக்கத்துச் சுருதிகளிலே பிறதேவதைகட்கும் வரையறைப்படாத தலைமையுண்டென்று கூறியதேதெனின், அது கூறுதும். அநேகருக்கு விகற்பித்துக் கூறினமையால், சருவேசுவரத்துவம் சம்பவியாது; வஸ்துவில் விகற்பங் கூடாமையால். ஒருங்கு சம்பவித்தலும் இன்று; ஒருவர்க்கொருவர் தலைவராதல் உண்மை வருதலால். விகற்பபேதத்திலுலே சகலருடைய தலைமையும் காலபரிச்சின்னமாதலின் ஒருவருக்குந் தலைமையின்றெனலுங் கூடாது; தோஷம் உண்மையால். ஆதலால், அப்பெற்றிப்பட்ட வசனங்களுட் சிலவசனங்கள் பிரதிதமாகிய பொருளுடையன என்றும், சில பிறிதோராற்றுற் பெறப்படும் பொருளுடையன என்றும் எல்லாரும் உடன்பட்டுக் கொள்ளல்வேண்டும். அங்கே இவை இவை பிரதிதமாகிய பொருளுடையன வேனியவை பிறபொருளுடையன என்று நமது புத்தியாற் கற்பிக்கப்பட்ட நியாயங்களால் வியவஸ்தாபிப்பதிலும், உபவிருங்கணங்கட்கு அனுசாரமாக வியவஸ்தாபித்தலே மேன்மை; ஆன்மாக்களது புத்தியானது நிச்சயமில்லா நிலைமைத்தாதலின் அதனுல் ஊகிக்கப்பட்ட நியாயங்களினுலே நிச்சயம் சித்திபெறுமையானும், "வேதமானது அற்பக்கல்வியுடையானுக்கு "என்னையிவன் கடப்பான்" என்று அஞ்சுகின்றது. இதிகாசபுராணங்களாலே வேதப்பொருளைத் தெளிந்தறியவேண்டும். தன்னுலே அறிந்துகொள்ளப்பட்ட வேதப்பொருளிலே அறியாமை உண்டாகும்; ஆயினும் முனிவராலே நிச்சயிக்கப்பட்ட அந்தப்பொருளிலே பெரியோர்க்கு என்ன சங்கையுண்டாகும்." என்னும் வியாச வசனத்தினுலுமென்க. ஆதலால், அனேக உபவிருங்கணங்களின் வலிமையாலே அதர்வசிகையே பிரதிதார்த்தம் உள்ளதென்றும், அவ்விதமாகிய உபவிருங்கணங்கள் இல்லாதனவாகிப் பிறதேவதைகட்குத் தலைமை கூறும் பிறசுருதிகள் வேறுபிரமாணங்களால் விரோதிக்கப்பட்டுச் சுருங்கி நிற்கின்ற அவ்வவர் தலைமையைப் பொருளாகவுடையனவென்றும் உடன்படுதலே பொருத்தம். நியாயத்தாற் பலாபலம் விசாரியாது திருத்தியடையாதவரைக் குறித்து, இந்தச் சுருதி மற்றையவற்றினும் மிகுபலம் உடைத்தென்பது நிறுத்துதும். பலசுருதிகள் தம்முள் விரோதமடைந்தபோது பலமுடையது செம்பொருள்படுதலும் பலமில்லது பிறிதோராற்றுற் பெறப்படுதலுமே நியாயம். அங்ஙனமே சுருதியில் "சாதுர் மாசிய யாகஞ்செய்தவனுக்கு அழிவில்லாத புண்ணியம் உண்டாகின்றது." என்னுஞ் சுருதி "எப்படி இம்மையிற் கன்மங்களாலீட்டிய லோகம் நாசமடையும் அப்படித்தான் மறுமையிற் புண்ணியங்களாலீட்டிய லோகமும் நாசமாம்." என்று பொருட்பலம்பற்றிப் பிறிதொன்றிற் செல்லாமற்கிளர்ந்த பிரபலச்சுருதியால் வாதிதமாகிச் சுருங்கிய பொருட்பட்டு நிற்றலின், அழிவில்லாத என்பதற்கு ஒருகாலாவதியைக் குறித்து அழியாத என்பது பொருளாம். அதுபோலவே, ஈண்டும் சிவனது தலைமை கூறக் கிளர்ந்த சுருதி வேனத் தேவர்களின் தலைமைகூறக் கிளர்ந்த சுருதிகளைச் சுருங்கிய பொருட்படுத்தும்; வேனத் தேவர்கட்குக் குற்றங்கூறி அவர்களினின்றும் பிரித்துச் சிவனது தலைமை கூறலானும், வேனச் சுருதிகள் இங்ஙனங்கூறுது ஒரோவிடத்து ஒரொருவர்க்குத் தலைமைமாத்திரம் கூறலானுமென்க. இன்னும் சிவனது தலைமை மூமுட்சுக்களால் உபாசிக்கப்படும் பரதேவதையை நிச்சயிக்கத் தொடங்கிய உபநிடதத்தில் உரைக்கப்பட்டது. வேனேயோரது தலைமை கர்மதேவதா நிச்சயப்பிரகரணங்களிற் கூறப்பட்டது. அதனுலும் இதற்குப் பிரபலத்துவம். இந்தச் சுருதி சிவனது தலைமையேகூறி, "அதர்வசிகை முற்றிற்று" என்று வேனேயோரினின்றும் பிரித்துச் சிவனது நிரதிசயமாகிய ஐசுவரியம் உணர்த்தி முடிவுபெற்றது. வேனச் சுருதிகள் அங்ஙனமுரல்ல, அதனுலும் இது பிராபல்லியம்.

அற்றேல், "விசுவத்திற்குத் தலைவனும் ஆன்மாக்களுக்குத் தலைவனுமாகிய வனே" என்று நாராயணனிடத்து இருத்தலானும், "தேவர்களுள்ளே அக்கினிக டைப்பட்டவன்; விஷ்ணுசிர்த்தலைவன்; அவர்கட்கிடையே மற்றத் தேவதைகளினத் தும்" என்னும் வெகுவிருசபிரமாணத்திலே சகலதேவதைகளிலும் உயர்ந்தவன் என்கையாலும், லோகாட்சிகிருகியத்திலே "அக்நயே பிருதிவ்யதிபதயே சுவாகா" என்பது முதல் "பிரமணே லோகாதிபதயே சுவாகா" என்பது வரையுமுள்ள மந்தி ரங்களாலே அக்கினி, சோமன், வாயு, சூரியன், இந்திரன், யமன், வருணன், குபே ரன், மகாசேனன், உருத்திரன், பிரமன் என்பவர்களுக்குப் பிருதிவி, நட்சத்திர, அந்தரிக்ஷ, திரு, சுர, பிரேத, சலில, யக்ஷ, சேநா, பூத, லோகங்களுள் ஒவ்வொன்ற ற்கு அதிபதியாந்தன்மை காட்டியபின்பு "விஷ்ணுவே சர்வாதிபதயே சுவாகா" என்று சுருக்கப்படாத சர்வாதிபத்தன்மை காட்டினமையாலும், நாராயணன் தானே நிரதிசயசுவரியமுடையனெனின்; அற்றன்று. "விசுவத்திற்குத் தலைவனும் ஆன்மாக்களுக்குத் தலைவனு மாகியவனே" என்றது "இந்திரன் சகலத்திலும் மேலான தேவன்" என்றற்றொடக்கத்தனபோலச் சுருங்கியபொருட்படும். "முதல்வனுன அக் கினியே தேவர்களுக்கு முகம்." "அக்கினிமுன்னே தேவதைகளுக்குத் தலையன்." "அக்கினி தேவதைகட்குத் தலைவனுகச் செல்லுக." "அக்கினியே சகலதேவதைக ளும்" என்றற்றொடக்கத்துச் சுருதிகளாலும், பருவங்களுள் இளவேனில் போல வும் மனிதருள் அந்தணர்போலவும் தேவதைகளுள் அக்கினி." என்றற் றொடக்கத்து மிருதிகளாலும், "அக்கினிமுதலியோர்" என்றற்றொடக்கத்து விஷ்ணுபுராண வசன ங்களாலும், "அக்கினியே முக்கியதேவன்" என்னுஞ் சைமினி சூத்திரத்தாலும், அக் கினியின்மேன்மை பிரசித்தமாதலாற் சகல தேவதைகளிலும் அக்கினி கடைப்பட் டோனென்பதே பொருந்தாது. ஆதலிற் காட்டிய சுருதியிலே "அக்கினி கடைப்பட்ட வன்" என்றது சிலதேவதைகளோக் குறித்தே அக்கினிக்குக் கடைத்தன்மைகூறுதலிற் சுருக்கப்பட்ட பொருளுடையதேயாம். அதற்குச் சமானமான யோகசூத்திரத்திலே விஷ்ணு தலைவனென்ற வழியும், அப்படிச் சிலதேவதைகளைக் குறித்தே தலைவனென் று சுருங்கிய பொருட்படும். லோகாட்சி கிருகியத்திலே காட்டிய மந்திரங்கள் கிரு ச்சிராங்கங்களாகிய பன்னிரண்டோமங்களினும் தனியே தனியே விதியோகிக்கப்பட் டவைகளாம். அவை ஒவ்வொருபொருளைக் கூறுதலி னெவ்வொருவாக்கியங்களாம். ஆதலின் வேறு வேறு வாக்கியங்கள் கூடி ஒருங்கு முடிந்து பொருட்படாமையால் தனித்தனியே ஞான்காம்வேற்றுமை யுருபீற்றவாய் முடியும் அந்தவாக்கியங்கள் கூடி அக்கினி முதலியோரினின்றும் பிரித்து விஷ்ணுவினது சருவைசுவரியம் உணர்த்தற்கு வலியுடையனவல்ல. இந்த மந்திரங்களிற் கூறிய உருத்திரனே யொழிந்தோரனைவரும் லோகபாலராதலின் இந்த உருத்திரனும் லோகபாலனென்பது பெறப்படும். லோக பாலருத்திரன் சிவகலை பெற்ற கணநாதருள் ஒருவனென்று கூர்மபுராணத்துரைக்கப் பட்டது. அதனுல் இங்கே சிவனினின்றும் பிரித்து விஷ்ணுவினது தலைமை கூறப்ப ட்டதென்று சங்கித்தற்கு இடமேயில்லை. ஆதலால், அதர்வசிகைப்படியே சிவனது நிரதிசயமான ஐசுவரியஞ் சாதிக்கப்பட்டது; அதர்வசிகையே எல்லாவற்றிலும் மிகு பலமுடையதாதலால்.

அதர்வசிரசின் முதற்கண்டத்திலே "தேவர்கள் சுவர்க்கலோகத்தை அடைந்த னர். அந்தத்தேவர்கள் உருத்திரரை வினவினர்." என்று தொடங்கி "நீர் ஆர்?" என்று வினவின தேவர்களுக்கு "அவர் கூறினர்; நானொருவனே ஆதியிலேயிருந் தேன் இருக்கின்றேன் இருப்பேன்; என்னையன்றி வேறொருவனில்லை; அப்படியே என்னையறிந்தவன் எல்லாமறிவான்." என்பதுமுதலிய சிவவசனத்தாற் சிவனது சருவாத்துமத்தன்மை காட்டப்பட்டது. பின்னர் "அதன்பின் தேவர்கள் உருத்திர ரைக்கண்டிலர்; அந்தத் தேவர்கள் உருத்திரரைத் தியானித்தனர். அதன்பின் தேவர்

கள் ஊர்த்துவவாகுவை புடையவரைத் துதித்தனர்," என்று தேவர்களால் உபாசிக்கப்படுந் தன்மையும் துதிக்கப்படுந் தன்மையும் காட்டப்பட்டன. பின்பு இரண்டாங் கண்டத்திலே "எவர் உருத்திரர்; அவர்பகவான்; பூர், புவர், சுவர் (ஆகியவர்.) அவரே பிரமாவும்; அவருக்கு வணக்கம் வணக்கம். விஷ்ணுவுமவர்; மகேசருமவர்." என்பது முதலியவற்றால் பிரமா விஷ்ணு ருத்திரன் உமை இலட்சுமி சரசுவதி இந்திரன் முதலியோரும் மகாபூதம் முதலியவும் அவரது விபூதியேயென்று காட்டப்பட்டது. மூன்றும் நாலாம் கண்டங்களிலே சிவநாமத்தொகுதியை விரித்துரைத்து, அவரது மேன்மை விளக்கப்பட்டது. ஐந்தாங்கண்டத்திலே அவரை உபாசித்தலாற் ரூன் மோக்ஷமென்றுகூறி, உபாசனைப்பிரகாரமாகிய பாசுபதயோகங் காட்டப்பட்டது. இப்படியே அதர்வ சிரசிலுள்ள வசனங்களெல்லாம் பரமசிவனது சர்வோத்கருஷத்தை விளங்கக் கூறும். இதற்கு உபவிருங்கணம். இலிங்கபுராணத்தில் "அதன் பின்பு தேவர்கள் மயங்கி, நீர்யாவரென வினவினர். அவர்கூறுவார். நானெருவனே புராதனனும் பகவானுமாகிய உருத்திரன். நானே ஆதியிலே யிருந்தேன் இருக்கிறேன் இருப்பேன். தேவர்களே, இந்த உலகத்திலே எனக்கு வேறுனவனெருவனுமில்லை. நான் நித்தியானித்தியன்; குற்றமற்றவன்; பிரமாவுக்குத் தலைவனுகிய பிரமாரான்." என்று தொடங்கி "தருமாதருமங்களாலே எனது மகிமையாற் சகலத்தையும் பரிபாகம் பண்ணுவேன் என்று சொல்லி, உருத்திரபகவான் அங்கே மறைந்தார். பின்பு தேவர்களவரைக்கண்டிலர்." என்பது முதலாக இரண்டத்தியாயங்களினுலும் அதர்வசிரசு முற்றுஞ் சிவபரமென்று உணர்த்தப்பட்டது. இப்படியே சூதசங்கிதை வாயுசங்கிதை ஆதித்திய புராணம் என்பவற்றினும் உணர்த்தப்பட்டது.

இப்படியே சுருதிகளும் அவைகளின் உபவிருங்கணங்களும் சிவனே விச்சுவாதிகரும் விச்சுவசேவியருமாமென்பது தெளிவுறவிளக்குதலால், விஷ்ணுமுதலிய பிறரைச் சிவனிலும் அதிகமென்றுயினும் சிவனெடு சமமென்றுயினும் கொள்ளுதல் சிவநிந்தையாகிய அதிபாதகமேயாம். ஆதலால், சிவனே பரம்பொருள் என்று துணிந்து, அவரையே மெய்யன்போடு மனம் வாக்குக் காயங்களினுலே வழிபடுக.

திருத்தொண்டர் சரித்திர வரலாறு.

பின்னே நிகழும் அடியார்களது சரித்திரத்தை உமாதேவிக்கு முன்னே அருளிச் செய்யப் புகுந்த பரமசிவன் அச்சரித்திரம் உபமன்னியுமுனிவராலே பத்தர்குழாங்களுக்குக் கூறப்படுமெனக் கூறினுரென்று சிவரகசியத்து ரவமாம்மிசத்திற் கூறப்பட்டது. அப்படியே திருத்தொண்டர் சரித்திரம் சொன்னவர் உபமன்னியுமுனிவர் என்பது இங்கும் பெறப்பட்டது. உபமன்னியுமுனிவர் கிருஷ்ணருக்குச் சிவதீக்ஷை செய்தமையால், அவரை "யாதவன்றவரைக்கிறையாகிய—மாதவன்முடிமே லடிவைத்தவன்" என்றார். அச்சரித்திரம் வருமாறு. கிருஷ்ணர் புத்திரபாக்கியத்தின்பொருட்டு நெடுங்காலம் சிவபூசை பண்ணியும், சிவன் வெளிப்படாதொழிந்தார். அக்காலத்தில் ஒருநாள் உபமன்னியுமகாமுனிவர் சிவபூசைக்குப் பத்திரபுஷ்பங்களில்லையென்று தமக்கு விண்ணப்பஞ்செய்த தமது சீடனே நோக்கி, கிருஷ்ணர் சிவபூசைசெய்து கழித்த பத்திரபுஷ்பங்களைக் கொண்டுவரும்பொருட்டு ஆஞ்ஞாபித்து அவைகளாலே சிவபூசைசெய்து முடித்தார். அதை அறிந்த கிருஷ்ணர் வந்து, சங்கைபேசு; உபமன்னியுமுனிவர், சைவாகமத்தில் விதித்தபடி சிவதீக்ஷைபெற்று மந்திரக்கிரியாபாவனைகளாலே சிவனைப் பூசித்தாலன்றி இவை நிருமாலியமாகா; சிவனும் வெளிப்படார் என்றார். அதுகேட்ட கிருஷ்ணர் அம்முனிவருக்கு ஆளாகி, அவரிடத்தே சிவதீக்ஷைபெற்று, சிவபூசைசெய்து, தாம் விரும்பிய பயனைப்பெற்றார். கிருஷ்ணர் சிவதீக்ஷைபெற்ற சரித்திரம் வாயுசங்கிதையில் உத்தரகாண்டத்திலும் மகாபாரதத்தில் அனுசாசனபர்வத்தில் பதினுன்காம் அத்தியாயத்திலும், கூர்மபுராணத்திலும் சொல்லப்பட்டது.

இங்கே உபமன்னியுமுனிவருக்குக் கொடுக்கப்பட்ட மாதவன் முடிமேலடிவைத்தமையும், அத்தர் தந்த அருட்பாற்கடலுண்டமையும் ஆகிய விசேடணங்களால் இவரது பெருமையும், இவராலே புகழ்ந்துரைக்கப்பட்ட சுந்தரமூர்த்திநாயனாரது பெருமையும், அவராலே திருத்தொண்டத் தொகையிற்குறிக்கப்பட்ட திருத்தொண்டரது பெருமையும் தொனிக்கின்றன.

கூ. சிவபுண்ணியம் செய்யும்போது நினைவுவேறுதலாகாதெனல்.

சுந்தரமூர்த்திநாயனாரும் அநிந்திதை கமலினி என்னும் பெண்களும் முறையே சிவனுக்கும் உமாதேவிக்கும் புஷ்பங்கொய்யும்போது இச்சைகொண்டமையால், பூமியிலே பிறந்து போகம் அனுபவிக்கும்படி சபிக்கப்பட்டார்கள் என்று சொல்லுகையால்; புஷ்பம் எடுத்தல் முதலாகிய சிவபுண்ணியங்களைச் செய்யும்போது நினைவு வேறுதலாகாதென்பது துணியப்பட்டது. அது "கொந்தலர் கொய்யும்போது கூர் விழி மைய லாலே—பைந்தொடி மடவார் தம்மைப் பார்த்தலாற் கைலே வெற்பிற்—சுந்தரன் பட்ட காதை யறிதிரோ துணர்மென் போதா—லந்தணர் கீழ்க ளாவார் கீழ்களந் தணர்க ளாவார்" என்னும் புட்பவிதிச் செய்யுளாலுமறிக. கைலாசவாசிகளாய்ச் சிவனே இடைவிடாது சேவிக்கும் அன்பர்களுக்கு இக்குற்றத்தின் பொருட்டு இத்தண்டம் கிடைத்ததாயின், ஒன்றுக்கும் பற்றாத சிறியேங்கள் குற்றஞ்செய்யின் எத்தணைப்பெருந்தண்டம் கிடைக்குமோ என்று அஞ்சி நடுங்கி, சிவபுண்ணியங்களைச் செய்யும்போது சிறிதாயினும் மனசைப் பிறிதொன்றிற் செல்லவிடாமற் சிவனுடைய திருவடிகளிலே செலுத்துக.

திருநாட்டுச்சிறப்பு.

பாட்டியற் றமிழுரை பயின்ற வெல்லையுட்
கோட்டியர் பனிவரைக் குன்றி னுச்சியிற்
சூட்டிய வளர்புலிச் சோழர் காவிரி
நாட்டியல் பதனையா னவில லுற்றனன். (க)

ஆதிமா தவமுனி யகத்தி யன்றரு
பூதநீர்க் கமண்டலம் பொழிந்த காவிரி
மாதர்மண் மடந்தைபொன் மார்பிற் ருழ்ந்ததோ
ரோதநீர் நித்திலத் தாம மொக்குமால். (உ)

சையமால் வரைபயி றலைமை சான்றது
செய்யபூ மகட்குநற் செவிலி போன்றது
வையகம் பல்லுயிர் வளர்த்து நாடொறு
முய்யவே சுரந்தளித் தூட்டு நீரது. (ங)

மாலினுக் திச்சுழி மலர்தன் மேல்வருஞ்
சால்பினுற் பல்லுயிர் தருதன் மாண்பினுற்
கோலநற் குண்டிகை தாங்குங் கொள்கையாற்
போலுநான் முகனேயும் பொன்னி மாநதி. (ச)

திங்கள்சூ டியமுடிச் சிகரத் துச்சியிற்
பொங்குவெண் டலைநுரை பொருது போதலா
லெங்கணு யகன்முடி மிசைநின் றேயிழி
கங்கையாம் பொன்னியாங் கன்னி நீத்தமே. (இ)

வண்ணநீள் வரைதர வந்த மேன்மையா
லெண்ணில்பே ரறங்களும் வளர்க்கு மீகையா
லண்ணல்பா கத்தையா ளுடைய நாயகி
யுண்ணெகிழ் கருணையி னெழுக்கம் போன்றது. (ஈ)

மே வு.

வம்பு லாமலர் நீரால் வழிபட்டுச்
செம்பொன் வார்கரை யெண்ணில் சிவாலயத்
தெம்பி ரானை யிறைஞ்சலி னீர்ம்பொன்னி
யும்பர் நாயகர்க் கன்பரு மொக்குமால். (உ)

வாச நீர்குடை மங்கையர் கொங்கையிற்
பூசு குங்கும மும்புனை சாந்தமும்
வீசு தெண்டிரை மீதிழித் தோடுநீர்
தேசு டைத்தெனி னுந்தெளி வில்லதே. (ஊ)

மாவி ரைத்தெழுந் தார்ப்ப வரைதரு
பூவி ரித்த புதுமதுப் பொங்கிட
வாவி யிற்பொலி நாடு வளத்தரக்
காவி ரிப்புனல் கால்பரந் தோங்குமால். (ஏ)

ஒண்டு றைத்தலை மாமத கூடுபோய்
மண்டு நீர்வய லுட்புக வந்தெதிர்
கொண்ட மள்ளர் குரைத்தகை யோசைபோ
யண்டர் வானத்தி னப்புறஞ் சாருமால். (ஐ)

மாதர் நாறு பறிப்பவர் மாட்சியுஞ்
சீத நீண்முடி சேர்ப்பவர் செய்கையு
மோதை யார்செய் யுழுந ரொழுக்கமும்
காதல் செய்வதொர் காட்சி மலிந்ததே. (ஒ)

உழுத சான்மிக வூறித் தெளிந்தசே
றிழுது செய்யினு ளிக்கிர தெய்வதந்
தொழுது நாறு நடவொர் தொகுதியே
பழுதில் காவிரி நாட்டின் பரப்பெலாம். (ஓ)

மே வு.

மண்டுபுனல் பரந்தவயல் வளர்முதலின் சுருள்விரியக்
கண்டுழவர் பதங்காட்டக் களைகளையுங் கடைசியர்க
டண்டரளஞ் சொரிபணில மிடறியிடை தளர்ந்தசைவார்
வண்டலையுஞ் குழலேய மடநடையின் வரம்பணைவார். (கக)

செங்குவளை பறித்தணிவார் கருங்குழன்மேற் சிறைவண்டை
யங்கைமலர்க் களைகொடுகைத் தயல்வண்டும் வரவழைப்பார்
திங்கணுதல் வெயர்வரும்பச் சிறுமுறுவ ணிலவரும்பப்
பொங்குமலர்க் கமலத்தின் புதுமதுவாய் மடுத்தயர்வார். (கஉ)

கரும்பல்ல நெல்லென்னக் கமுகல்ல கரும்பென்னச்
சுரும்பல்லி குடைநீலத் தோகையல்ல பகலெல்லா
மரும்பல்ல முலையென்ன வமுதல்ல மொழியென்ன
வரும்பல்லா யிரங்கடைசி மடந்தையர்கள் வயலெல்லாம். (கஜ)

கயல்பாய்வைக் தடாஅந்தான் கழிந்தபெருங் கருங்குழிசி
வியல்வாய்வெள் வளைத்தாள மலர்வேரி யுலைப்பெய்தங்
கயலாமை யடுப்பேற்றி யரக்காம்ப னெருப்பூதும்
வயன்மாதர் சிறுமகளிர் விளையாட்டு வரம்பெல்லாம். (கசு)

காடெல்லாங் கழைக்கரும்பு காவெல்லாங் குழைக்கரும்பு
மாடெல்லாங் கருங்குவளை வயலெல்லா நெருங்குவளை
கோடெல்லா மடவன்னங் குளமெல்லாங் கடவன்ன
நாடெல்லா நீர்நாடு தனையொவ்வா நலமெல்லாம். (கஎ)

தே வு.

ஆலை பாய்பவ ராரப்புறு மோலமுஞ் .
சோலை வாய்வண் டிரைத்தெழு சும்மையு
ஞால மோங்கிய நான்மறை யோதையும்
வேலை யோசையின் மிக்கு விரவுமால். (கஅ)

அன்ன மாடு மகன்றுறைப் பொய்கையிற்
றுன்னு மேதி படியத் துதைந்தெழுங்
கன்னி வாளை கழுங்கின்மேற் பாய்வன
மன்னு வான்மிசை வானவிற் போலுமால். (கக)

காவி னிற்பயி லுங்களி வண்டினம்
வாவி யிற்படிந் துண்ணு மலர்மது
மேவி யத்தட மீதெழப் பாய்கய
றூவி யப்பொழி லிற்கனி சாடுமால். (உ0)

தே வு.

சால்லிநீள் வயலி னூங்கித் தங்கி ரின்றி மிக்கு
வாலிதாம் வெண்மை புண்மைக் கருவினும் வளத்த வாகிச்
சூன்முதிர் பசலை கொண்டு சுருள்விரித் தரணுக் கன்ப
ராலின சிந்தை போல வலர்ந்தன கதிர்க ளெல்லாம். (உக)

பத்தியின் பால ராகிப் பரமனுக் காளா மன்பர்
தத்தமிற் கூடி னுர்க டலேயினுல் வணங்கு மாபோன்
மொய்த்தநீள் பத்தி யின்பான் முதிர்தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மை போல விளைந்தன சாலி யெல்லாம். (உஉ)

அரிதரு செந்நெற் சூட்டி னடுக்கிய வடுக்கல் சேர்ப்பார்
பரிவுறத் தடிந்த பன்மீன் படர்நெடுங் குன்று செய்வார்
சுரிவளை சொரிந்த முத்தின் சுடர்ப்பெரும் பொருப்பு யர்ப்பார்
விரிமலர்க் கற்றை வேரி.பொழிந்திழி வெற்பு வைப்பார். (உங)

சாலியின் கற்றை தூற்ற தடவரை முகடு சாய்த்துச்
காலிரும் பகடு போக்குங் கரும்பெரும் பாண்டி லீட்ட
மாலிய முகிலின் கூட்ட மருவரைச் சிமையச் சாரன்
மேல்வலங் கொண்டு சூழும் காட்சியின் மிக்க தன்றே. (உச)

வைதெரிந் தகற்றி யாற்றி மழைப்பெயன் மானத் தூற்றிச்
செய்யபொற் குன்றும் வேறு நவமணிச் சிலம்பு மென்னக்
கைவினை மள்ளர் வானங் கரக்கவாக் கியநெற் குன்றூன்
மொய்வரை யுலகம் போலு முளரிநீர் மருத வைப்பு. (௨௫)

அரசுகொள் கடன்க ளாற்றி மிகுதிகொண் டறங்கள் பேணிப்
பரவருங் கடவுட் போற்றிக் குரவரும் விருந்தும் பண்பின்
விரவிய இளையுந் தாங்கி விளங்கிய குடிக ளோங்கி
வரைபுரை மாட நீடி மலர்ந்துள பதிக ளெங்கும். (௨௬)

கரும்படு களமரா லெக மழ்ஈறும் புகையோ மாதர்
சுரும்பெழ வகிலா லிட்ட தூபமோ பூப வேள்விப்
பெரும்பெயர்ச் சாலி தோறும் பிறங்கிய புகையோ வானின்
வருங்கரு முகிலோ சூழ்வ மாடமூங் காவு மெங்கும். (௨௭)

நாளிகே ரஞ்செ ருந்தி நறுமலர் தூந்த மெங்குங்
கோளிசா லந்த மாலங் குளிர்மலர்க் குரவ மெங்குந்
தாளிரும் போத்து சந்து தண்மலர் நாக மெங்கு
நீளிலை வஞ்சி காஞ்சி நிறைமலர்க் கோங்க மெங்கும். (௨௮)

ஆதபா டலங்க ளெங்குஞ் சூழ்வழை ஞாழ லெங்குஞ்
சாதிமா லதிக ளெங்குந் தண்டளிர் நறவ மெங்கு
மாதவி சரள மெங்கும் வகுளசண் பகங்க ளெங்கும்
போதவிழ் கைதை யெங்கும் பூகபுன் னாக மெங்கும். (௨௯)

மங்கல வினைக ளெங்கு மணஞ்செய்கம் பலைக ளெங்கும்
பங்கய வதன மெங்கும் பண்களின் மழலை யெங்கும்
பொங்கொளிக் கலன்க ளெங்கும் புதுமலர்ப் பத்த ரெங்குஞ்
செங்கயற் பழன மெங்குந் திருமக ளுறையு ளெங்கும். (௩0)

மேகமுங் களிறு மெங்கும் வேதமுங் கிடையு மெங்கும்
யாகமுஞ் சடங்கு மெங்கு மின்பமு மகிழ்வு மெங்கும்
யோகமுந் தவமு மெங்கு மூசலு மறுகு மெங்கும்
போகமும் பொலிவு மெங்கும் புண்ணிய முனிவ ரெங்கும். (௩௧)

பண்டரு விபஞ்சி யெங்கும் பாதசெம் பஞ்சி யெங்கும்
வண்டறை குழல்க ளெங்கும் வளரிசைக் குழல்க ளெங்குந்
தொண்டர்த மிருக்கை யெங்குஞ் சொல்லுவ திருக்கை யெங்குந்
தண்டலை பலவு மெங்குந் தாதகி பலவு மெங்கும். (௩௨)

மாடுபோ தகங்க ளெங்கும் வண்டுபோ தகங்க ளெங்கும்
பாடுமம் மனைக ளெங்கும் பயிலுமம் மனைக ளெங்கும்
வீடுகே தனங்க ளெங்கு நிதிநிகே தனங்க ளெங்குந்
தோடுசூழ் மாலை யெங்குந் தூணைவர்சூழ் மாலை யெங்கும். (௩௩)

வீதிகள் விழவி னர்ப்பும் விரும்பினர் விருந்தி னர்ப்புஞ்
சாதிக ணெறியிற் றப்பா தனையரு மினியிற் றப்பா
நீதிய புள்ளு மாவு நிலத்திருப் புள்ளு மாவு
மோதிய வெழுத்தா மஞ்சு முறுபிணி வாதத்தா மஞ்சும். (௩௪)

நற்றமிழ் வரைப்பி னீங்கு நாம்புகழ் திருநா டென்றும்
பொற்றடந் தோளால் வையம் பொதுக்கடிந் தினிது காக்குங்
கொற்றவ னகபா யன்பொற் குடைநிழற் குளிர்வ தென்ரூன்
மற்றதன் பெருமை நம்மால் வரம்புற விளம்பலாமோ. (கூ)

திருநாட்டுச்சிறப்பு முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் - அடி.

மநுநீதிகண்டபுராணம்.

சொன்ன நாட்டிடைத் தொன்மையின் மிக்கது
மன்னு மாமல ராள்வழி பட்டது
வன்னி யாறு மதிபொதி செஞ்சடைச்
சென்னி யார்திரு வாரூர்த் திருநகர். (க)

வேத வோசையும் வீணையி னோசையுஞ்
சோதி வானவர் தோத்திர வோசையு
மாத ராடன் மணிமுழ வோசையுங்
கீத வோசையு மாய்க்கிளர் வுற்றவே. (உ)

பல்லி யங்கள் பரந்த வொலியுடன்
செல்வ வீதிச் செழுமணித் தேரொலி
மல்லல் யானை யொலியுடன் மாவொலி
யெல்லை யின்றி யெழுந்துள வெங்கணும். (ங)

மாட மாளிகை சூளிகை மண்டபங்
கூட சாலைகள் கோபுரந் தெற்றிக
ணீடு சாளர நீடரங் கெங்கணு
மாடன் மாத ரணிசிலம் பார்ப்பன. (ச)

அங்குரைக் கென் னளவப் பதியிலார்
தங்கண் மாளிகை யின்னென்று சம்புவின்
பங்கி னுடிருச் சேடி பரவையா
மங்கை யாரவ தாரஞ்செய் மாளிகை. (ஞ)

படர்ந்த பேரொளிப் பன்மணி வீதிபா
ரிடந்த வேனமு மன்னமுந் தேவொர்
தொடர்ந்து கொண்டவன் ரூண்டர்க்குத் தூதுபோய்
நடந்த சொந்தா மரையடி நாறுமால். (ட)

செங்கண் மாதர் தெருவிற் றெளித்தசெங்
குங்கு மத்தின் குழம்பை யவர்குழற்
பொங்கு கோதையிற் பூந்துகள் வீழ்ந்துட
னங்கண் மேவி யளறு புலர்த்துமால். (எ)

உள்ள மாருரு காதவ ரூர்விடை
வள்ள லார்திரு வாரூர் மருங்கெலாங்
தெள்ளு மோசைத் திருப்பதி கங்கள்பைங்
கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள். (அ)

விளக்க மிக்க கலன்கள் வீரவலாற்
றுளக்கில் பேரொலி யாற்றுன்னு பண்டங்கள்
வளத்தொ டும்பல வாறு மடுத்தலா
லளக்கர் போன்றன வாவண வீதிகள். (கூ)

ஆர ணங்களே யல்ல மறுகிடை
வார ணங்களு மாறி முழங்குமாற்
சீர ணங்கிய தேவர்க ளேயலாற்,
றேர ணங்களிற் ரூமமுஞ் சூழுமால். (கo)

தாழ்ந்த வேணியர் சைவர் தபோதனர்
வாழ்ந்த சிந்தை மூனிவர் மறையவர்
வீழ்ந்த வின்பத் துறையுள் வீரவுவார்
சூழ்ந்த பல்வே றிடத்ததத் தொன்னகர். (கக)

நிலம கட்கழ கார்திரு நீணுதற்
றிலக மொப்பது செம்பியர் வாழ்பதி
மலர்ம கட்குவண் டாமரை போன்மலர்ந்
தலகில் சீர்த்திரு வாரூர் விளங்குமால். (கஉ)

அன்ன தொன்னக ருக்கர சாயினன்
தன்னும் வெங்கதி ரோன்வழித் தோன்றினன்
மன்னு சோக பாயன் வழிமுதன்
மின்னு மாமணிப் பூண்மனு வேந்தனே. (கஙு)

மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெலாங்
கண்ணு மாவியு மாம்பெருங் காவலான்
வீண்ணு ளார்மகிழ் வெய்திட வேள்விக
ளெண்ணி லாதன மாண வியற்றினன். (கச)

பொங்கு மாமறைப் புற்றிடங் கொண்டவ
ரெங்கு மாகி யிருந்தவர் பூசனைக்
கங்கண் வேண்டு நிபந்தமா ராய்ந்துளான்
றுங்க வாகமஞ் சொன்ன முறைமையால். (கஞ)

கொற்ற வாழி குவலயஞ் சூழ்ந்திடச்
சுற்று மன்னர் திறைகடை சூழ்ந்திடச்
செற்ற நீக்கிய செம்மையின் மெய்மனுப்
பெற்ற நீதியுந் தன்பெய ராக்கினன். (கசு)

வே று.

அறம்பொரு ளின்ப மான வறநெறி வழாமற் புல்லி
மறங்கடிந் தரசர் போற்ற வையகங் காக்கு நாளிற்
சிறந்தநற் றவத்தாற் றேவி திருமணி வயிற்றின் மைந்தன்
பிறந்தன னுலகம் போற்றப் பேரரிக் குருளே யன்னன். (கஎ)

தவமுயன் றரிதிற் பெற்ற தனியிளங் குமர னுஞ்ஞ்
சிவமுயன் றடையுந் தெய்வக் கலைபல திருந்த வோதிக்
கவனவெம் புரவி யானே தேர்படைத் தொழில்கள் கற்றுப்
பவமுயன் றதுவும் பேறே யெனவரும் பண்பின் மிக்கான். (கஅ)

அளவிறுல் கலைகண் முற்றி யரும்பெறற் றன்தை மிக்க
வுளமிகிழ் காதல் கூர வோங்கிய குணத்தா லீடி
யிளவர சென்னுந் தன்மை யெய்துதற் கணிய னுகி
வளரிளம் புரிதி போன்று வாழுநா ளொருநாண் மைந்தன். (கக)

திங்கள்வெண் கவிகை மன்னன் றிருவளர் கோயி னின்று
மங்குறேய் மாட வீதி மன்னிளங் குமரர் சூழக்
கொங்கலர் மாலை தாழ்ந்த குங்குமங் குலவு தோளான்
பொங்கிய தானை சூழத் தேர்மிசைப் பொலிந்து போந்தான். (உ0)

பரசுவர் திகண்முன் சூதர் மாகத ரொருபாற் பாங்கர்
விரைநறுங் குழலார் சிந்தும் வெள்வீ யொருபான் மிக்க
முரசொடு சங்க மார்ப்ப முழங்கொலி யொருபால் வென்றி
யரசிளங் குமரன் போது மணிமணி மாட வீதி. (உக)

தனிப்பெருந் தருமந் தானேர் தயாவின்றித் தானை மன்னன்
பனிப்பில்சிந் தையினி லுண்மைப் பான்மைசோ தித்தா லென்ன
மனிதர்தன் வரவு காணு வண்ணமோர் வண்ண நல்லான்
புனிற்றிளங் கன்று துள்ளிப் போந்ததம் மறுகி னூடே. (உஉ)

அம்புனிற் றுவின் கன்றே ரபாயத்தி னூடு போகிச்
செம்பொனின் றேர்க்கான் மீது விசையினுற் செல்லப் பட்டங்
கும்பரி னடையக் கண்டங குருகுதா யலமந் தோடி
வெம்பிடு மலறுஞ் சோரு மெய்ந்நடுக் குற்று வீழும். (உங)

மற்றது கண்டு மைந்தன் வந்திதிங் கபாய மென்று
சொற்றடு மாறி நெஞ்சிற் றுயருழந் தறிவ ழிந்து
பெற்றமுங் கன்று மின்றெ னுணர்வெனும் பெருமை மாளச
செற்றவென் செய்கே னென்று தேரினின் றிழிந்து வீழ்ந்தான். (உச)

அலறுபே ராவை நோக்கி யாருயிர் பதைத்துச் சோரு
நிலமிசைக் கன்றை நோக்கி நெடிதுயிர்த் திரங்கி நிற்கு
மலர்தலை யுலகங் காக்கு மனுவெனு மெங்கோ மானுக்
குலகிலிப் பழிவந் தெய்தப் பிறந்தவா ரெருவ னென்பான். (உஇ)

வந்தவிப் பழியை மாற்றும் வகையினை மறைதுல் வாய்மை
யந்தணர் விதித்த வாற்ரு லாற்றுவ தறமே யாகி
லெந்தையீ தறியா முன்ன மியற்றுவ னென்று மைந்தன்
சிந்தைவெந் துயரந் தீர்ப்பான் றிருமறை யவர்முன் சென்ரூன். (உசு)

தன்னுயிர்க் கன்று வீயத் தளர்ந்தவா தரியா தாகி
முன்னெருப் புயிர்த்து வீம்மி முகத்தினிற் கண்ணீர் வார
மன்னுயிர் காக்குஞ் செங்கோன் மனுவின்பொற் கோயில் வாயிற்
பொன்னணி மணியைச் சென்று கோட்டினுற் புடைத்த தன்றே. (உஎ)

பழிப்பறை முழக்கோ வார்க்கும் பாவத்தி னெளியோ வேந்தன்
வழித்திரு மைந்த னுவி கொளவரு மறலி யூர்ந்திக்
கழுத்தணி மணியி னுர்ப்போ வென்னத்தன் கடைமுன் கேளாத்
தெழித்தெழு மோசை மன்னன் செவிப்புலம் புக்க போது. (உஅ)

ஆக்கது கேட்ட வேந்த னரியணை யிழிந்து போந்து
பூங்கொடி வாயி னண்ணக் காவல ரெதிரே போற்றி
யீங்கிதோர் பசுவந் தெய்தி யிறைவரின் கொற்ற வாயிற்
றூங்கிய மணியைக் கோட்டாற் றுளக்கிய தென்று சொன்னர். (உக)

மன்னவ னதனைக் கேளா வருந்திய பசுவை நோக்கி
யென்னிதற் குற்ற தென்றென் றமைச்சரை யிகழ்ந்து நோக்க
முன்னுற நிகழ்ந்த வெல்லா மறிந்துளான் முதிர்ந்த கேள்வித்
தொன்னெறி யமைச்சன் மன்னன் முளரிணை தொழுது சொல்வான். (கூ0)

வளவரின் புதல்வ னுங்கோர் மணிநெடுந் தேர்மே லேறி
யளவிறேர்த் தானை சூழ வரசுலாந் தெருவிற் போங்கா
லிளையவான் கன்று தேர்க்கா லிடைப்புகுந் திறந்த தாகத்
தளர்வுறு மித்தாய் வந்து விளைத்ததித் தன்மை யென்றான். (கூக)

அவ்வுரை கேட்ட வேந்த னுவமு துயர மெய்தி
வெவ்விடந் தலைக்கொண் டாற்போல் வேதனை யகத்து மிக்கிங்
கிவ்வினை வினைந்த வாறென் றிடருறு மிரங்கு மேங்குஞ்
செவ்விதென் செங்கோ லென்னுந் தெருமரு தெளியுந் தேரான். (கூஉ)

மன்னுயிர் புரந்து வையம் பொதுக்கடிந் தறத்தி னீடு
மென்னெறி நன்ரு லென்னு மென்செய்தாற் றீரு மென்னுங்
தன்னிளங் கன்று காணுத் தாய்முகங் கண்டு சோரு
மந்நிலை யரச னுற்ற துயரமோ ரளவிற் றன்ரால். (கூக)

வே று.

மந்திரிக ளதுகண்டு மன்னவனை யடிவணங்கிச்
சிந்தைதளர்ந் தருளுவது மற்றிதற்குத் தீர்வன்ரூற்
கொந்தலர்த்தார் மைந்தனைமுன் கோவதைசெய் தார்க்குமறை
யந்தணர்கள் விதித்தமுறை வழிநிறுத்த லறமென்ரூர். (கூச)

வழக்கென்று நீர்மொழிந்தான் மற்றதுதான் வலிப்பட்டுக்
குழக்கன்றை யிழந்தலறுங் கோவுறுநோய் மருந்தாமோ
விழக்கின்றேன் மைந்தனையென் றெல்லீருஞ் சொல்லியவிச்
சழக்கின்று ணானையைந்தாற் றருமந்தான் சலியாதோ. (கூஙி)

மாநிலங்கா வலனுவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னுற்றன் பரிசனத்தா
லானபிழு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மா
லானபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனே. (கூசு)

என்மகன்செய் பாதகத்துக் கிருந்தவங்கள் செயவிசைந்தே
யன்னியனே ருயிர்கொன்ரு லவனைக்கொல் வேனுஞற்
ரென்மனுநூற் ரெடைமனுவாற் றுடைப்புண்ட தெனும்வார்த்தை
மன்னுலகிற் பெறமொழிந்தீர் மந்திரிகள் வழக்கென்ரான். (கூஎ)

என்றரச னிகழ்ந்துரைப்ப வெதிர்நின்ற மதியமைச்சர்
நின்றநெறி யுலகின்க ணிதுபோன்முன் னிகழ்ந்ததாற்
பொன்றுவித்தன் மரபன்று மறைமொழிந்த வறம்புரித
ரென்றுதொடு நெறியன்ரே தொன்னிலங்கா வுலவென்ரூர். (கூஅ)

அவ்வண்ணந் தொழுதுரைத்த வமைச்சர்களே முகநோக்கி
மெய்வண்ணந் தெரிந்துணர்ந்த மனுவென்னும் விறல்வேர்த்
னிவ்வண்ணம் பழுதுரைத்தீ ரென்றெரியி னிடைத்தோய்ந்த
செவ்வண்ணக் கமலம்போன் முகம்புலர்ந்து செயிர்த்துரைப்பான். (நக)

அவ்வுரையில் வருநெறிக ளவைநிற்க வறநெறியின்
செவ்வியவுண் மைத்திறநீர் சிந்தைசெயா துரைக்கின்றீ
ரெவ்வுலகி லெப்பெற்ற மிப்பெற்றித் தாமிடரால்
வெவ்வுயிர்த்துக் கதறுமணி யெறிந்துவிழுந் ததுவிளம்பீர். (சo)

போற்றிசைத்துப் புரந்தரன்மா லயன் முதலோர் புகழ்ந்திறைஞ்ச
வீற்றிருந்த பெருமானூர் மேவியுறை திருவாரூர்த்
தோற்றமுடை யுயிர்கொன்ற ஞதலிஞற் றுணிபொருடா
னூற்றவுமற் றவற்கொல்லு மதுவேயா மெனினீயின். (சக)

எனமொழிந்து மற்றிதனுக் கினியிதுவே செயலிவ்வான்
மனமழியுந் துயரகற்ற மாட்டாதேன் வருந்துமிது
தனதுறுபே ரிடர்யானுந் தாங்குவதே கருமமென
வனகனரும் பொருடெளிர்தா னமைச்சருமஞ் சினரகன்றூர். (சஉ)

மன்னவன்றன் மைந்தனேயங் கழைத்தொருமந் திரிதன்னே
முன்னிவனே யவ்வீதி மூரண்டேர்க்கா லூர்கவென
வன்னவனு மதுசெய்யா தகன்றுதன்ஞ ருயிர்துறப்பத்
தன்னுடைய குலமகனைத் தான்கொண்டு மறுகணைந்தான். (சங)

ஒருமைமந்தன் றன்குலத்துக் குள்ளானென் பதுமுணரான்
றருமமந்தன் வழிசெல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் றேராழி யுறவூர்ந்தான் மனுவேந்த
னருமந்த வரசாட்சி யரிதோமற் றெளிதோதான். (சச)

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழைசொரிந்தா
ரண்ணலவன் கண்ணெதிரே யணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்க டொழுதின்ருன் வீதிவிடங் கப்பெருமான். (சஙி)

சடைமருங்கி லிளம்பிறையுந் தனிவிழிக்குந் திருநுதலு
மிடமருங்கி லுமையாளு மெம்மருகரும் பூதகணம்
புடைதெருங்கும் பெருமையுமுன் கண்டரசன் போற்றிசைப்ப
விடைமருவும் பெருமானும் விறல்வேந்தற் கருள்கொடித்தான். (சசு)

அந்நிலையே யுயிர்பிரிந்த வான்கன்று மவ்வரசன்
மன்னுரிமைத் தனிக்கன்று மந்திரியு முடனெழுலு
மின்னபரி சாருனென் றறிந்திலன்வேர் தனும்யார்க்கு
முன்னவனே முன்னின்ருன் முடியாத பொருளுளதோ. (சஎ)

அடிபணிந்த திருமகனே யாகமுற வெடுத்தணைத்து
நெடிதுமகிழ்ந் தருந்துயர நீங்கினு னிலவேர்தன்
மடிசுரந்து பொழிநீம்பால் வருங்கன்று மகிழ்ந்துண்டு
படினேய வரும்பசையும் பருவரனீங் கியதன்றே. (சஅ)

பொன்றயங்கு மதிலாரூர்ப் பூங்கோயி லமர்ந்தபிரான்
வென்றிமனு வேந்தனுக்கு வீதியிலே யருள்கொடுத்துச்
சென்றருளும் பெருங்கருணைத் திறங்கண்டு தன்னடியார்க்
கென்றுமெளி வரும்பெருமை யேழுலகு மெடுத்தேத்தும். (சக)

இனையவகை யறதெறியி லெண்ணிறந்தோர்க் கருள்புரிந்து
மூனைவரவர் மகிழ்ந்தருளப் பெற்றுடைய மூதூர்மேற்
புனையுமுரை நம்மளவிற் புகலலாற் றகைமையதோ
வனையதனுக் ககமலரா மறவனூர் பூங்கோயில். (கo)

மதுரீதிகண்டபுராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கஉடு.

சூ ச னை ம்.

க. செங்கோன்மைச்சிறப்பு.

தன்கீழ் வாழ்வோர் குற்றஞ்செய்யின், அக்குற்றத்தைநாடி, யாவரிடத்தும் கண் ணோட்டம் வையாது நடுவுநிலைமையைப்பொருந்தி, அக்குற்றத்துக்குச் சொல்லப் பட்ட தண்டத்தை ஆராய்ந்து, அவ்வளவினதாகச் செய்வதே அரசனுக்கு முறையாம். அது "ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டும்—தேர்ந்துசெய் வஃதே முறை." என்னுந் திருக்குறளால் அறிக. இம்முறையானது ஒருபக்கத்திலே சாயா மற் செவ்வியகோல்போலுதலில், செங்கோலெனப்படும். இன்னும், பொதுப்பட உயிர்களைக் காத்தல் தருமமாயினும், பசுக்களையும் பெண்களையும்,பிராமணரையும் வினடியார்களையும் காத்தல் பெருந்தருமமாம். அது "ஆவையும் பாவையும் மற்றற வோரையுந்—தேவர்கள் போற்றுந் திருவேடத் தாரையுங்—காவலன் காப்பவன் காவா தொழிவனேன்—மேவு மறுமைக்கு மீளா நரகமே" என்னுந் திருமந்திரத்தாலும், "வெற்றியின் விழுமி தம்ம வெருவினோர் மேற்செலாமை—மற்றதின் விழுமிதைய வழுநரை நெறியின் மாட்டல்—சொற்றலிவ் விரண்டின் மேலும் விழுமிது துகடீர் நல்லா—னற்றவர் மறையோர்க் குற்ற நலிவினை நலித ரூனே." "வெடித் தடங்கயற் கண்ணியர் மைந்தர் வேதியர்கோ—டெடிற்கொ டுங்கொலை சூழ்ந்திட நீக்க ருஞ் தீதிற்—படிற்ற ஞண்மையிற் காப்பது காத்தது பலியா—விடிற்ற ஞவியை விடத்திடா வேந்துமோர் வேர்தோ." என்னும் இருகுலம்மிசச் செய்யுள்களாலும் அறிக.

இப்படியே செங்கோல் மூட்டாமற் செலுத்தியவிதம் இந்த மனுசக்கிரவர்த்தியிடத்திற் காணப்பட்டது; இவர், பசுக்கன்றைக்கொன்றவன் தாம் செய்காலம் பெருந்தவஞ்செய்து அரிதிற் பெற்ற ஏகபுத்திரனுயிருப்பவும், பசுக்கொலைக்கு உயிர்த் தண்டமல்லாத பிராயச்சித்தம் ஸ்மிருதியில் விதிக்கப்பட்டமையால், இக்குற்றத்தின் பொருட்டுப் பிராயச்சித்தஞ்செய்துகொள்ளுதலன்றி, இவனைக் கொலைசெய்தல்தகுதியன்றென்று மந்திரிகள் தடுப்பவும், நடுவுநிலைமை சிறிதும் தவறுது அவனைத் தேர்க் காலில்வைத்து ஊர்ந்த பெருந்தன்மையுடையராதலால் என்றறிக. பசுக்கொலைசெய் தவர்களுக்கு உயிர்த்தண்டமல்லாத பிராயச்சித்தம் ஸ்மிருதியில் விதிக்கப்பட்டதாயின், இவர் உயிர்த்தண்டஞ்செய்தமை குற்றமன்றே எனின்; இத்தப்பசுவானது, தன்னினம் மோவன்றி மனிதருக்கு உரிய அறிவை உடையதாகி, ஆராய்ச்சிமணியை அசைத்தமை

யால், எல்லையின்றி ஏழுந்த இரக்கம்பற்றி, அப்பசுவின்கன்றைக் கொன்றமையை மனிதரது குழந்தையைக் கொன்றமையாகக் கொண்டாராதலாலும்; சிவனது திரு வாரூரிற்பிறந்த உயிரைக்கொன்றமை சிவாபராதமாமெனத் துணிந்தாராதலாலும்; அது குற்றமாகாது புண்ணியமாயிற்றென்றுணர்க. அது "அவ்வுரையில் வருநெறிக ளவைதிற்க வறநெறியின்—செவ்வியவுண் மைத்திறநீர் சிந்தைசெயா துரைக்கின்றீ— ரெவ்வுலகி லெப்பெற்ற மிப்பெற்றித் தாமிடரால்—வெவ்வுயிர்த்துக் கதறிமணி யெறி ந்துவிழுந் ததுவிளம்பீர்." "போற்றிசைத்துப் புராந்தான்மா லயன்முதலோர் புகழ்ந் திறைஞ்ச—வீற்றிருந்த பெருமானூர் மேவியுறை திருவாரூர்த்—தோற்றமுடை யுயிர் கொன்ரு ஞதலினுற் றுணிபொருடா—ஞற்றவுமற் றவற்கொல்லு மதுவேயா மென நினேமின்." என இவ்வரசர் கூறியவாற்றுல் அறிக.

பிற உயிர்களுக்கு வருந் துன்பத்தைத் தமக்கு வரும் துன்பத்தைப்போலக் கொண்டு பேணும் இரக்கமுடைமையே அறிவினுலாகும் பெரும் பிரயோசனமாம். எவ்வளவு தூல்களைக் கற்ருர்களாயினும், எவ்வளவு தருமங்களைச் செய்தார்களாயி னும், இவ்விரக்கமில்லாதவர்கள் நரகத்துன்பம் அடைதல் சத்தியம். இதற்குப் பிரமா ணம். சைவசமயநெறி. "அன்பு மருளு மறிவுக் கடையாள—மென்பருணர்ந் தோர் சிவன்வாக் கீண்டு." எ-ம். திருவள்ளுவர்குறள். "அறிவினு ளுருவ துண்டோ பிறிதி னுயிர்—தன்னோய்போற் போற்றுக் கடை." எ-ம். பதிபசுபாசவிளக்கம். "கலை யெலா மூணர்ந்தா னேனுங் கரிசறத் தெளிந்தா னேனு—மலையென வுயர்ந்தா னேனு மனமய லகன்ரு னேனு—மூலகெலாம் புகழப் பல்லோர்க் குதவிய கையனேனு— மிலகிய விரக்க மின்றே லெழுநர கடைவ னன்றே." எ-ம். அருட்பிரகாசம். "உயிர் நித்த மென்றறிந் தாலுநல் லோர்பல் லுயிரதற்ற—துயருக் கிரங்கல் புதுமை கொல் லோவருட் டோன்றலந்நாட்—செயிருற்ற தேவர் முறைகேட் டிரங்கித் திருவுளத்தா— டயர்வுற் றுருத்தகண் ணீரக்க மாமணி யாயிடினே." எ-ம். வரும். இம்மனுசக்கிரவர் த்தியிடத்து இவ்விரக்கம் உண்மை "அவ்வுரைகேட்ட வேந்த னுவுறு துயர மெய்தி— வெவ்விடர் தலைக்கொண் டாற்போல் வேதனே யகத்து மிக்கிங்—கிவ்வினை விளைந்த வாறென் றிடருறு மிரங்கு மேங்குஞ்—செவ்விதென் செங்கோ லென்னுந் தெருமருந் தெளியுந் தேருன்." "மன்னுயிர் புரந்து வையம் பொதுக்கடிந் தறத்தி னீடி—மென் னெறி நன்ரு லென்னு மென்செய்தாற் றீரு மென்னுந்—தன்னிளங் கன்று காணுத் தாய்முகங் கண்டி சோரு—மந்நிலே யரச னுற்ற துயரமோ ரளவிற்றன்ருல்." என்னுந் திருவிருத்தங்களால் அறிக.

இவர் தம்முடைய மகனைத்தேர்க்காலில் வைத்து ஊர்ந்தமையால், அவனிடத்து இரக்கமில்லாதவரென்பது பெறப்படுமென்ரேனின்; அற்றன்று: பூமியிலே வெளிப் படப் பாவஞ்செய்தவர்களைத் தண்டித்தல் அரசனுக்கும், வெளிப்படாமற் பாவஞ்செய் தவர்களையும் வெளிப்படப் பாவஞ்செய்தவர்களுள் அரசனுலே தண்டிக்கப்படாத வர்களையும் மறுமையில் நரகத்திலே தண்டித்தல் இயமனுக்கும், கடனும் ஆதலாலும்; தாம்செய்த பாவத்தின்பொருட்டு இம்மையில் அரசனுலே தண்டிக்கப்பட்டவர்கள் அப்பாவத்தின்பொருட்டு மறுமையில் நரகத்திலே தண்டிக்கப்படார்கள் ஆதலாலும்; தம்முடைய மகன் பசுக்கொலைக்குற்றத்தின்பொருட்டு மறுமையில் நரகத்துன்பம் அடையாவண்ணம் தாமே இம்மையில் அவனைத் தண்டித்து, அப்பாவத்தை ஒழித்தார்: ஆதலால் அவ்வுயிர்த்தண்டத்துக்குக் காரணம் அவனிடத்தில்வைத்த இரக்கமென்றே துணியப்படும். இதற்குப் பிரமாணம். கோயிற்புராணம். "மண்ணுலகின் முறைபு ரியா மடவரைகால் வகைத்தண்டம்—பண்ணிநெறி நடத்திடவும் பலரறியா வகைபு ரிந்த—வெண்ணில்வினை விதிவழியே நுகர்விக்கு மியல்பிற்கும்—திண்ணியரா மிருத

ரும் ருளராகச் செய்துமென." "வானவர்கோ னுரைத்திரவி மைந்தர்களி லொருவ னுக்கு—ஞானவிழி நல்கிநம னற்பதியுங் கொடுத்தகற்றி—யீனமிலா வொருவனுக்கங் கிலகுமணி முடியளித்துத்—தேனகுதா ரணிவித்துத் தேவர்கடங் கைக்கொடுத் தான்." எ-ம். சிவதருமோத்தரம். "பிணக்கந் தன்னையும் பெற்றவர் தம்மிடைக்—கணக்கி லாரையுங் கள்வர்க டம்மையும்—வணக்கு வான்மன்னன் மற்றையர் தங் களை—யிணக்கு வானர கத்து ளியமனே." எ-ம். திருமந்திரம். "தத்தஞ் சமயத் தருகிநில் லாதாரை—யத்தன் சிவன்சொன்ன வாகம நூனெறி—யெத்தண்ட முஞ்செயு மறுமையி லிம்மைக்கே—மெய்த்தண்டஞ் செய்வதவ வேந்தன் கடனே." எ-ம். சிவ ஞானசித்தியார். "அரசனுஞ் செய்வ தீச னருள்வழி யரும்பாவங்க—டரையுளோர் செய்யிற் றீய தண்டலின் வைத்துத் தண்டத்—துரைசெய்து தீர்ப்பன் பின்பு சொல் வழி நடப்பர் தூயோர்—நிரயமுஞ் சோ ரந்த நிரயமுன் னீர்மை யீதாழ்." எ-ம். போற்றிப்பஃறொடை. "மண்டெரியிற் - காய்ச்சிச் சுடவறுக்கக் கண்ணுரிக்க நன்னி நிய—மீத்துத்தாய் தந்தைதம ரின்புறுதல் - வாய்த்தநெறி—யோடியதே ரின்னீ முயிர் போன கன்றுலே—நீடுபெரும் பாவமின்றே நீங்குமென - நாடித்தன்—மைந்தனையு மூர்ந்தோன் வழக்கே வழக்காக—நஞ்சனைய சிந்தை நமன்றூதர் - வெஞ்சினத்தா—லல்ல லுறுத்து மருநரகங் கண்டுகிற்க—வல்ல கருணே மறம்போற்றி." எ-ம். வரும். இன்னும், இவர் தம்மகனுக்குச் செய்த இவ்வுயிர்த்தண்டம், இவர்கீழ்வாழும் பிறரெல் லாம் உயிர்களுக்கு இடுக்கண்செய்தற்கு அஞ்சி அஃதொழிந்து உய்தற்கும், அவ்வாறு கவே, உயிர்களெல்லாம் பிறராலிடுக்கணடையாது இனிதுவாழ்தற்கும், எதுவா மன்றே! அதனாலும், இவரது ஜீவகாருண்ணியந் துணியப்படும்.

தம்முடைய மகன் இறந்துவிடில் தமக்குப்பின் உயிர்களைக்காத்தற்கு ஒருவருமில் லாதிருத்தல்கண்டும், அவனைக் கொன்றுராதலின், இவர் அவ்வுயிர்களிடத் திரக்கமில் லாதவரென்பது பெறப்படுமென்றுவெனின்; அற்றன்று: கருணைநிதியாகிய சிவனது விதிப்படி நடவுநிலைமை சிறிதும் வழுவாது முறைசெலுத்துதல் தமக்குக் கடனுத லால், தாம் அப்படியே முட்டாமல் முறைசெலுத்தில், தமக்குப் பின்னும் தமது பூமி யிலுள்ள உயிர்கள் இடுக்கணின்றி இனிதுவாழ்தல் வேண்டுமென்னுந் தங்கருத்தை வேண்டுவார் வேண்டியதே யீவாராகிய அசசிவன் மூற்றுவித்தருளுவர் என்னுந் துணி வுடனே அம்மகனைக் கொன்றுரென்பது "ஒருமைந்தன் றனகுலத்துக் குள்ளானென் பதுமுணராள்—நருமந்தன் வழிசெல்கை கடனென்று தன்மைந்தன்—மருமந்தன் றேராழி யுறவூர்ந்தான் மனுவேந்த—னருமந்த வரசாட்சி யரிதோமற் றெளிதோ தான்." என்னுந்திருவிருத்தத்தாலே தெளியப்படுதலின்; இவர் எவ்வாற்றாலும் இரக்க முடையவரென்றே துணியப்படும். இவர் நடுவுநிலைமையின் வழுவாமை "என்மகன் செய் பாதகத்துக் கிருந்தவங்கள் செயவிசைந்தே—யன்னியனே ரூயிர்கொன்ரு லவ னைக்கொல் வேனுனுற்—றொன்மனுநூற் றொடைமனுவாற் றுடைப்புண்ட தெனும் வார்த்தை—மன்னுலகிற் பெறமொழிந்தீர் மந்திரிகள் வழக்கென்றான்." என்பதனால் உணர்க. முட்டாது செங்கோல் செலுத்திய அரசனேஅச்செங்கோலே காக்குமென் பது "இறைகாக்கும் வையக மெல்லா மவனை—முறைகாக்கு முட்டாச் செயின்." என்னுந் திருக்குறளால் அறிக.

இதுகாறும் கூறியவாற்றால், இரக்கமும் நடுவுநிலைமையும் பெரும்புண்ணியமென் பதும், அவையில்லாமை பெரும்பாவமென்பதும், குற்றஞ்செய்தவர்களைத் தண்டித் தல் அக்குற்றஞ்செய்தார்க்கும் பிறவுயிர்களுக்கும் நன்மையபயத்தலால் அது இரக்கமா வதன்றி வன்கண்மை யாகாதென்பதும், அத்தண்டஞ்செய்யாதொழிதலே வன் கண்மை யெனப்பட்டுத் தமக்கும் பிறர்க்குந் தீமையபயக்குமென்பதும் பெறப்படும்.

அன்றியும், பிறர் கொலை களவு முதலிய குற்றங்களைச் செய்யும்போது கண்டவர்கள், நீதிசபையிலே சாட்சிகளாகும்போது, நாம் இங்கே உண்மைசொல்லில் இவர்களுக்கு அரசனுலே துன்பம் நிகழுமேயென்றஞ்சி, தாம் கண்ட உண்மையை மறுத்துச்சொல்லில்; அது அக்குற்றஞ்செய்தார் மறுமையிலே நரகத்தில் எண்ணிறந்தகாலம் மிகக் கொடிய துன்பம் அனுபவித்தற்கும், இவர் குற்றஞ்செய்தும் தண்டத்துக்கு விலகிக் கொண்டமைபோல நாமும் விலகிக்கொள்வோமென்னுங் கருத்துடையராகிப் பிறருங் குற்றஞ்செய்து கெடுதற்கும், இப்படிக் குற்றஞ்செய்வார் உளராகவே, பலவுயிர்கள் அவராலே துன்பம் அனுபவித்தற்கும் ஏதுவாம் ஆதலால், யாவராயினுஞ் சாட்சிகளாகும்போது தாங்கண்ட உண்மையைசொல்லுதல் புண்ணியமென்பதும், அதனை மறுத்துச்சொல்லுதல் பாவமென்பதும் பெறப்படும். மெய்ச்சான்றுரைத்தலால் பெறப்படும் இன்பமும், பொய்சசான்றுரைத்தலால் பெறப்படுந் துன்பமும், "உண்மைசொல்பவன் இம்மையிற்பொருளையும், மறுமையிற் புண்ணிய லோகத்தையும் அடைவான்; சத்தியமே மேலானதானமும், தவமும், தருமமுமாம்: தேவர்கள் சத்திய வடிவினர்; மானுடர் அசத்தியவடிவினர். எவனுடைய புத்தி சத்தியத்தில் நிற்குமோ அவன் இகத்திலே தெய்வத்தன்மையை அடைவான். சத்தியத்தின் மேலானதரும மும், அசத்தியத்தின் மேலான பாவமுமில்லை: பாவிகள் காஞ்செய்யுங் காரியத்தைப் பிறர் அறியாரென்று எண்ணுகின்றார்கள்; தேவர்களும், இந்திரன்முதலான எண்மரும், ஐம்பூதங்களும், இரவியும், மதியும், மனமும், அறக்கடவுளும், உலகத்திலுள்ளாரெல்லாரையும் பார்க்கின்றார்கள்: ஆகையால், ஒருவன்செய்த வஞ்சனைவெளிப்படும். பொய்சசான்று உரைத்தவன் தன்னுடைய ஏழுமரபினுளளாரையும் கீழானநரகத்தில் வீழ்த்துவான்; ஏழுபிறப்பி லீட்டியவெல்லாப்புண்ணியங்களையுங் கெடுத்தவனுவான்; பிரமவதையும், சிசுவதையும், தாதைவதையுஞ் செய்தவனுவான்; மிகக்கொடிய ரௌரவமுதலாகிய நரகங்களையும் அடைவான்: பின்னும் ஊர்ப்பன்றி, கழுதை, நாய், நீர்க்காக்கை, புழு என்னும் இப்பிறப்பிற் பிறந்து, பின்பு மானுடப்பிறப்பிலே பிறவிக்குருடன், செவிடன், குட்டநோயினன், ஊமை இவர்களாகியும், மிக்க பசிதாகமுடையவனுகித் தனது பகைவன்வீட்டிற் றன்மனையாளோடும் பிசசையிரப்பவனுகியும், பிறப்பான்." என்னும் மிருதிவசனத்தினுலும், "பொய்யி னேப்புகன்ற புல்லர்வாயினேப் புடைத்தநாக்—கொய்வர் தூக்க பேதமுங கொடுப்பர் தாதர் கோணலு—வெய்யர் மூன்பு சொன்ன பொய்வி னேத்தி றம்வி ளங்கவே—நைவ ரென்னே செய்வ மென்று நீருமாறு நாடியே." "சலமெனும் வாதியாவன் நகைபெறு சமயந் தன்னே—நிலைகுலே செய்தான் கள்ள நீசரை நேசஞ் செய்து—கொலைவிலக் கிடுவான் முனும் கோணிய வழக்குக் கூறும்—புலையனும் பொருந்தி மன்றிற் புந்தியிற் புன்மையாலே." என்னுஞ் சிவதருமோத்தரச செய்யுள்களாலும் அறிக.

உ. தன்னுயிர்விடுத்தல் இவ்விடத்துப் பாவமும் இவ்விடத்துப் புண்ணியமுமாமெனல்.

கோபம் நோய் முதலிய ஏதுக்களாலே தன்னுயிரை விடுத்தவன் அறுபதினுயிரம் வருஷம் நரகத்தில் வருந்துவன்; குரு லிங்க சங்கமங்களுக்கு எய்தும் இடையூறு நீங்குதற்பொருட்டே உயிர் விடுத்தவன் சிவபதம் அடைவன். இதற்குப் பிரமாணம். சிவதருமோத்தரம். "கோவத்தா லுகத்திற் கொடுநோயான் மற்றுய் குற்றத்தாற் றூன்றன்னேக் கொலைபுரிகை குணமோ—பாவத்தான் மிக்காரே தமைத் தாமே வதைத்

கும் பதர்மனிதர்த்தணர்க்கும் பாங்கல்ல கும்பி—பாகத்திற்பட்ட மூங்கிச் சிக்குழிக் கும் படிவர் பகர்வருட மறுபதிஞ மிரமுறவே பாங்கே—சாகத்தார் தணிர்த்தழிகைச் சங்கரஞ லயத்திற் றவறுறினே யவரமலன் புரியதனைச் சார்வார்.'' எ-ம். ''சங்கற்ப நிராகரணம். ''வித்திதெருளா ஞெய்க்குமழிர் தாக்கையைத் தான் வீத்தாற்—புதையி ருளி ஞழ்வன் புகுந்து.'' எ-ம். ''ஆக்கையினே நோய்க்குமழிர் தந்தணன்ரு னீக்கி ஞற்—சிக்குழிக்கு மாழ்வன் சிறந்து.'' எ-ம். ''அரும்பெரும் பன்ஞே யடர்த்தாலு மாற்றிப்—பிரிந்திடச்செய் யாதுடலைப் பேணு.'' எ-ம். சிவபுண்ணியத்தெளிவு. ''குருவி லிங்கசங் கமத்தினேக் குறித்தவற் றிடையூ—றெருவு தற்பொருட் டாற்றம துயிர்விடு மூரவோர்—மருவி டும்பல மெமக்குமே வளம்பட வருப்பா—னருமை யென்றன னனேத்தையு முணர்த்துபே றறிவோன்.'' எ-ம். வரும். இங்கே மந்திரி, தனக்குச் சோழர் ஆஞ்ஞாபித்தபடியே தான் அவருடைய மகனைக்கொல்வானுயில், அவருக்குப்பின் அரசியற்றுதற்கு ஒருவரும் இல்லாமையால், குரு லிங்க சங்கமங்களுக்கு இடையூறு நிகழுமெனவும், உயிர்களெல்லாம் இடுக்கணின்றி இன்புற்றுவாழ்தல் கூடாதெனவும், நினேந்து, சிவபத்தியானுஞ் சீவகாருண்ணியத்தானுந் தன்னுயிரை விடுத்தானுதலின்; அது பாவமாகாது புண்ணியமாயிற்று. ஒருவனிமித்தம் ஒருவன் தன்னுயிரை விடுக்கப்புகில் அவனைத் தடுக்காதவன் அவனைத் தன்கையாற் கொன்றவனு வன். அது ''என்றனே நீ புன்மை மொழி யிசைப்பாயே யென்று மெனதுதனக் தாராதே யேகுவையோ வென்று—நின்றனக்கோ வுரித்திந்த நிலமெனக்கு மென்று நின்முன்னே யென்னுயிரை நீக்குவனே யென்றும்—தன்றனேயே தான்வதைக்கிற் றடுத்துமுறை புரியாச் சலத்தெதிரி யவன்றன்னைத் தன்னதுகை யாலே—கொன்றவனே யாதலினுற் றடுத்திடுக கொலையைக் கொடுத்திடுக கணக்குளது கொலைக்கஞ்சுங் குணத்தார்.'' என்னுஞ் சிவதருமோத்தரச செய்யுளால் அறிக.

திருக்கூட்டச்சிறப்பு.

பூத நாயகர் புற்றிடங் கொண்டவ
ராதி தேவ ரமர்ந்தபூங் கோயிலிற்
சோதி மாமணி நீள்சுடர் முன்றில்சூழ்
மூதெ யிற்றிரு வாயின்முன் ஞனது. (க)

பூவார் திசைமுக னிந்திரன் பூமிசை
மாவா முகலத்து மான்முத லானவ
ரோவா தெவரு நிறைந்துறைந் துள்ளது
தேவா சிரய னெனுந்திருக் காவணம். (உ)

அரந்தை தீர்க்கு மடியவர் மேனிமே
னிரந்த நீற்றெளி யானிறை னய்மையாற்
புரந்த வஞ்செழுத் தோசை பொலிதலாற்
பரந்த வாயிரம் பாற்கட்ல் போல்வது. (ங)

அகில காரணர் தான்பணி வார்கடா
மகில லோகமு மானந் குரியரென்
றகில லோகத்து ளார்க ளடைதலி
னகில லோகமும் போல்வ ததனிடை. (ச)

அத்தர் வேண்டிமுன் ஞண்டவ ரன்பினுன்
மெய்த்த மைந்து விதிர்ப்புறு சிந்தையார்
கைத்தி ருத்தொண்டு செய்கடப் பாட்டினை
ரித்தி றத்தவ ரன்றியு மெண்ணிலார். (இ)

மாசி லாத மணிதிகழ் மேனிமேற்
பூசு நீறுபோ லுள்ளும் புனிதர்க
டேசி ஞலெத் திசையும் விளக்கினர்
பேச வொண்ணப் பெருமை பிறங்கினர். (ஈ)

பூத மைந்து நிலையிற் கலங்கினு
மாதொர் பாகர் மலர்த்தாண் மறப்பிலா
ரோது காத லுறைப்பி னெறிநின்ருர்
கோதி லாத குணப்பெருங் குன்றனர். (எ)

கேடு மாக்கமுங் கெட்ட திருவினு
ரோடுஞ் செம்பொனு மொக்கவே நோக்குவார்
கூடு மன்பினிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினர். (அ)

ஆரங் கண்டிகை யாடையுங் கந்தையே
பார மீசன் பணியல தொன்றிலா
ரீர வன்பினர் யாதுங் குறைவிலார்
வீர மென்னுல் விளம்புந் தகையதோ. (கூ)

வேண்டு மாறு விருப்புறும் வேடத்தர்
தாண்ட வப்பெரு மான்றனித் தொண்டர்க
ணீண்ட தொல்புக ழார்தந் நிலைமையை
யீண்டு வாழ்த்துகே னென்னறிந் தேத்துகேன். (கூ)

இந்த மாதவர் கூட்டத்தை யெம்பிரா
னந்த மில்புக ழாலால சுந்தரன்
சுந்த ரத்திருத் தொண்டத் தொகைத்தமிழ்
வந்து பாடிய வண்ண முரைசெய்வாம். (கக)

திருக்கூட்டச்சிறப்பு முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கசசு.

தடுத்தாட்கொண்டபுராணம்.

கங்கையு மதியும் பாம்புங் கடுக்கையு முடிமேல் வைத்த
வங்கண ரோலை காட்டி யாண்டவர் தமக்கு நாடு
மங்கையர் வதன சீத மதியிரு மருங்கு மோடிச்
செங்கயல் குழைக ணூடுந் திருமுனைப் பாடி நாடு. (க)

பெருகிய நலத்தான் மிக்க பெருந்திரு நாடு தன்னி
லருமறைச் சைவ மோங்க வருளினு லவத ரித்த
மருவிய தவத்தான் மிக்க வளம்பதி வாய்மை குன்றுத்
திருமறை யவர்க ணீடுந் திருநாவ லூரா மன்றே. (உ)

மாதொரு பாக னார்க்கு வழிவழி யடிமை செய்யும்
வேதியர் குலத்திற் ரோன்றி மேம்படு சடைய னருக்
கேதமில் கற்பின் வாழ்க்கை மனையிசை ஞானி யார்பாற்
றீதகன் றுலக முய்யத் திருவவ தாரஞ் செய்தார். (ங)

தம்பிரா னருளி னூலே தவத்தினுன் மிக்கார் போற்று
நம்பியா ரூர ரென்றே நாமமுஞ் சாத்தி மிக்க
வைம்படை சதங்கை சாத்தி யணிமணிச் சுட்டி சாத்திச்
செம்பொ னணையின் மின்னத் தெருவிற்றே ருருட்டு நாளில். (ச)

நரசிங்க முனைய ரென்னு நாடுவா ழரசர் கண்டு
பரவருங் காதல் கூரப் பயந்தவர் தம்பாற் சென்று
விரவிய நண்பி னூலே வேண்டினர் பெற்றுத் தங்க
ளரசிளங் குமரற் கேற்ப வன்பினுன் மகன்மைக் கொண்டார். (ஞ)

பெருமைசா லரசர் காதற் பிள்ளையாய்ப் பின்னுந் தங்கள்
வருமுறை மரபின் வைகி வளர்ந்துமங லஞ்செய் கோலத்
தருமறை முந்நூல் சாத்தி யளவிறுல் கலக ளாய்ந்து
திருமலி சிறப்பி னேங்கிச சீர்மணப் பருவஞ் சேர்ந்தார். (ட)

தந்தையார் சடைய னூர்தந் தனித்திரு மகற்குச் சைவ
வந்தணர் குலத்துத் தங்க ளரும்பெரு மரபுக் கேற்ப
வந்ததொல் சிறப்பிற் புத்தூர்ச் சடங்கவி மறையோன் றன்பாற்
செந்திரு வனைய கன்னி மணத்திறஞ் செப்பி விட்டார். (ண)

குலமுத லறிவு மிக்க கோத்திர முறையுந் தோர்ந்தார்
நலமிகு முதியோர் சொல்லச் சடங்கவி னன்மை யேற்று
மலர்தரு முகத்த னூடி மணம்புரி செயலின் வாய்மை
பலவுடன் பேசி யொத்த பண்பினு லன்பு நேர்ந்தான். (அ)

மற்றவ னிசைந்த வார்த்தை கேட்டவர் வள்ள றன்னைப்
பெற்றவர் தம்பாற் சென்று சொன்னபின் பெருகு சிந்தை
யுற்றதோர் மகிழ்ச்சி யெய்தி மணவினை யுவந்து சாற்றிக்
கொற்றவர் திருவுக் கேற்பக் குறித்துநா ளோலை விட்டார். (க)

மங்கலம் பொலியச் செய்த மணவினை யோலை யேற்றி
யங்கயற் கண்ணி னொரு மாடிவர் பலரு மீண்டிக்
கொங்கலர்ச் சோலை மூதூர் குறுகினு ரெதிரே வந்து
பங்கய வதனி மாரு மைந்தரும் பணிந்து கொண்டார். (கo)

மகிழ்ச்சியான் மணமீக் கூறி மங்கல வினைக ளெல்லாம்
புகழ்ச்சியாற் பொலிந்து தோன்றப் போற்றிய தொழில ராகி
யிகழ்ச்சியொன் றறு மின்றி யேந்துபூ மாலைப் பந்தர்
நிகழ்ச்சியின் மைந்த ரீண்டி நீண்முளை சாத்தி னார்கள். (கக)

மணவினைக் கமைந்த செய்கை மாதினைப் பயந்தார் செய்யத்
தூணிமலர்க் கோதைத் தாமச் சுரும்பிணை தோளி னோடப்
புணர்மணத் திருநாண் முன்னுட் பொருந்திய விதியி னுலே
பூணுமு ரியம்ப வாழ்த்திப் பைம்பொனுண் காப்புச் சேர்த்தார். (கஉ)

மாமறை வீதிவ ழாமன் மணத்துறைக் கடன்க ளாற்றித்
தூமறை மூதூர்க் கங்குன் மங்கலந் துவன்றி யார்ப்பத்
தேமரு தொடையன் மார்பன் றிருமணக் கோலங் காணக்
காமுறு மனத்தான் போலக் கதிரவ னுதயஞ் செய்தான். (கங)

காலைசெய் வினைகண் முற்றிக் கணிதனூற் புலவர் சொன்ன
வேலைவக் தணைபு முன்னர் விதிமணக் கோலங் கொள்வா
னூலசைந் திலங்கு மார்பி னுணங்கிய கேள்வி மேலோன்
மாலையுந் தாரும் பொங்க மஞ்சன சாலை புக்கான். (கச)

வாசநெய் பூட்டி மிக்க மலர்விரை யடித்த னீர்ப
பாசனத்தமைந்த பாங்கர்ப் பருமணிப் பைம்பொற் றிண்கா
லாசனத் தணிநீ ராட்டி யரிசனஞ் சாத்தி யன்பா
லீசனுக் கினியான் மேனி யெழில்பெற வினக்கி னார்கள். (கஙி)

அகில்விரைத் தூப மேய்ந்த வணிகொள்பட் டாடை சாத்தி
முகிலுழை மதியம் போலக் கைவலான் முன்கை சூழ்ந்த
துகில்கொடு குஞ்சி யீரம் புலர்த்தித்தன் றூய செங்கை
யுகிர்றுதி முறையிற் போக்கி யொளிர்நறுஞ் சிகழி யார்த்தான். (கசு)

னாநறும் பசுங்கர்ப் பூரச் சுண்ணத்தால் வண்ணப் போதி
லானதண் பனிநீர் சூட்டி யமைத்தசந் தனச்சே றூட்டி
மான்மதச் சாந்து தோய்ந்த மங்கலக் கலவை சாத்திப்
பான்மறை முன்தான் மின்னப் பவித்திரஞ் சிறந்த கையான். (கஎ)

தூமலர்ப் பிணையன் மாலை துணரினார்க் கண்ணி கோதை
தாமமென் றினைய வேறு தருதியா லமையச் சாத்தி
மாமணி யணிந்த தூய வளரொளி யிருள்கால் சீக்கு
நாமநீள் கலன்கள் சாத்தி நன்மணக் கோலங் கொண்டான். (கஅ)

மன்னவர் திருவுந் தங்கள் வைதிகத் திருவும் பொங்க
நன்னகர் வீழவு கொள்ள நம்பியா ரூரர் நாதன்
றன்னடி மனத்துட் கொண்டு தருந்திரு நீறு சாத்திப்
பொன்னணி மணியூர் யோகப் பூலிமேற் கொண்டு போந்தார். (கக)

இயம்பல துவைப்ப வெங்கு மேத்தொலி யெடுப்ப மாதர்
நயந்துபல் லாண்டு போற்ற நான்மறை யொலியி ணேங்க
வியந்துபார் விரும்ப வந்து விரவினர்க் கின்பஞ் செய்தே
யுயர்ந்தவா கனயா னங்கண் மிசைக்கொண்டா ருழைய ராஞர். (உ0)

மங்கல கீத நாத மறையவர் குழாங்கள் சூழ்ந்து
தொங்கலும் விரையுஞ் சூழ்ந்த மைந்தருந் துவன்றிச் சூதும்
பங்கய மூகையுஞ் சாய்த்துப் பணைத்தெழுந் தணியின் மிக்க
குங்கும முலையி னருகும் பரந்தெழு கொள்கைத் தாகி. (உக)

அருங்கடி யெழுந்த போழ்தி னர்த்தவெள் வளைக ளாலு
மிருங்குழை மகரத் தாலு மிலங்கொளி மணிக ளாலு
நெருங்கிய பீலிச் சோலை நீலநீர்த் தரங்கத் தாலுங்
கருங்கடல் கிளர்ந்த தென்னக் காட்சியிற் பொலிந்த தன்றே. (உஉ)

நெருங்குதூ ரியங்க ளேங்க நிரைத்தசா மரைக ளோங்கப்
பெருங்குடை மிடைந்து செல்லப் பிணங்குபூங் கொடிக ளாட
வருங்கடி மணம்வந் தெய்த வன்றுதொட் டென்று மன்பில்
வருங்குல மறையோர் புத்தூர் மணம்வந்த புத்தூ ராமால். (உங)

நிறைகுடந் தூப தீப நெருங்குபா லிகைக ளேந்தி
நறைமல ரறுகு சுண்ண நறும்பொரி பலவும் வீசி
யுறைமலி கலவைச சாந்தி னுறுபுன றெளித்து வீதி
மறையவர் மடவார் வள்ளன் மணமெதிர் கொள்ள வந்தார். (உச)

கண்களெண் ணிலாத வேண்டுங் காளையைக் காண வென்பார்
பெண்களி லுயர நோற்றுள் சடங்கவி பேதை யென்பார்
மண்களி கூர வந்த மணங்கண்டு வாழ்ந்தோ மென்பார்
பண்களி னிறைந்த கீதம் பாடுவா ராடு வார்கள். (உஙி)

ஆண்டகை யருளி னேக்கின் வெள்ளத்து ளலைந்தோ மென்பார்
தாண்டிய மாவு நம்பாற் றகுதியி னடைந்த தென்பார்
பூண்டயங் கிவனே காணும் புண்ணிய மூர்த்தி யென்பா
ரீண்டிய மடவார் கூட்ட மின்னன விசைப்பச் சென்றார். (உச)

வருமணக் கோலத் தெங்கள் வள்ளலார் தெள்ளும் வாசத்
திருமணப் பந்தர் மூன்பு சென்றுவெண் சங்க மெங்கும்
பெருமழைக் குலத்தி னர்ப்பப் பரிமிசை யிழிந்து பேணு
மொருமணத் திறத்தி னங்கு நிகழ்ந்தது மொழிவே னுய்ந்தேன். (உஎ)

வே று.

ஆலுமறை சூழ்கயிலை யின்கணருள் செய்தே
சாலுமொழி யால்வழி தடுத்தடிமை கொள்வான்
மேலுற வெழுந்தபிகு கீழுற வகழ்ந்து
மாலுமய னுக்குமரி யாரொருவர் வந்தார். (உஅ)

கண்ணிடை கரந்தகதிர் வெண்பட மெனச்சூழ்
புண்ணிய நுதற்புனித நீறுபொலி வெய்தத்
தண்மதி முதிர்ந்தகதிர் சாய்வதென மீதே
வெண்ணைநீ ரூடுத்தத்தி விழுந்திடை சழங்க, (உ

காதிலணி கண்டிகை வடிந்தருழை தாழச்
சோதிமணி மார்பினசை நூலிலொடு தோளின்
மீதுபுனை யுத்தரிய வெண்டுகி லுடங்க
வாதப மறைக்குடை யணிக்கரம் விளங்க. (நஎ)

பண்டிசரி கோவண வுடைப்பழமை கூரக்
கொண்டதொர் சழங்கலுடை யார்ந்தழகு கொள்ள
வெண்டுகி லுடன்குசை முடிந்துவிடு வேணுத்
தண்டொருகை கொண்டுகழ நள்ளுநடை கொள்ள. (நக)

மொய்த்துவளர் பேரழகு மூத்தவடி வேயோ
வத்தகைய மூப்பெனு மதன்படிவ மேயோ
மெய்த்தநெறி வைதிகம் விளைந்தமுத லேயோ
வித்தகைய வேடமென வையமுற வெய்தி. (நஉ)

வந்துதிரு மாமறை மணத்தொழி றொடங்கும்
பந்தரிடை நம்பியெதிர் பன்னுசபை முன்னின்
றிந்தமொழி கேண்மினெதிர் யாவர்களு மென்ரூன்
முந்தைமறை யாயிர மொழிந்ததிரு வாயான். (நஙஎ)

என்றுரைசெ யந்தணனே யெண்ணின்மறை யோரு
மன்றல்வினை மங்கல மடங்கலினை யானு
நன்றுமது நல்வரவு நங்கடவ மென்றே
நின்றதிவ ணீர்மொழிமி னீர்மொழிவ தென்ரூர். (நச)

பிஞ்ஞகனு நாவலர் பெருந்தகையை நோக்கி
யென்னிடையு நின்னிடையு நின்றவிசை வால்யான்
முன்னுடைய தோர்பெரு வழக்கினை முடித்தே
நின்னுடைய வேள்வியினை நீமுயறி யென்ரூன். (நஞ)

நெற்றிவிழி யான்மொழிய நின்றநிக ரில்லா
னுற்றதொர் வழக்கெனிடை நீயுடைய துண்டேன்
மற்றது முடித்தலதி யான்வதுவை செய்யேன்
முற்றவிது சொல்லுகென வெல்லைமுடி வில்லான். (நசு)

ஆவதிது கேண்மின்மறை யோரெனடி யானிந்
நாவனக ரூரனிது நான்மொழிவ தென்ரூன்
றேவரையு மாலயன் முதற்றிருவின் மிக்கோர்
யாவரையும் வேறடிமை யாவுடைய வெம்மான். (நஎ)

வே று.

என்ரு னிறையோ னிதுகேட்டவ ரெம்ம ருங்கு
நின்ரு நிருந்தா ரிவனென்னினைந் தான்கொ லென்று
சென்ரூர் வெருண்டார் சிரித்தார்திரு நாவ லூரா
னன்ரூன் மறையோன் மொழியென்றெதிர் நோக்கி நக்கான். (நஅ)

நக்கான் முகநோக்கி நடுங்கி நடங்கி யார்க்கு
மிக்கான் மிசையுத் தரியத்துகி ரூங்கி மேற்சென்
றக்கா லமுன்றந்தை தன்றந்தையா ளோலை மீதா
லிக்கா ரியத்தை நீயின்று சிரித்ததென் னேடவென்ன. (நக)

வேறு.

மாசிலா மரபில் வந்த வள்ளல்வே தியனை நோக்கி
நேசமூண் கிடந்த சிந்தை நெகிழ்ச்சியாற் சிரிப்பு நீங்கி
யாசிலந் தணர்கள் வேறே ரந்தணர்க் கடிமை யாதல்
பேசவின் றுன்னைக் கேட்டோம் பித்தனே மறையோ னென்றார். (சo)

பித்தனு மாக பின்னும் பேயனு மாக நீயின்
றெத்தனை தீங்கு சொன்னு யாதுமற் றவற்றா லுனை
னத்தனைக் கென்னை யொன்று மறிந்திலை யாகினின்று
வித்தகம் பேச வேண்டாம் பணிசெய்ய வேண்டு மென்றார். (சக)

கண்டதோர் வடிவா லுள்ளங் காதல்செய் துருகா நிற்குங்
கொண்டதோர் பித்த வார்த்தை கோபமு மூடனே யாக்கு
மூண்டொரா ளோலை யென்னு மதனுண்மை யறிவே னென்று
தொண்டனு ரோலை காட்டு கென்றனர் துணைவ னுரை. (சஉ)

ஓலைகாட் டென்று நம்பி யுரைக்கநீ யோலை காணற்
பாலையோ வவையமுன் காட்டப் பணிசெயற் பாலை யென்ற
வேலையி னவ னூரார் வெருண்டுமேல் விரைந்து சென்று
மாலயன் ரொடரா தானை வலிந்துபின் ரொடர லுற்றார். (சங)

ஆவணம் பறிக்கச் சென்ற வளவினி லந்த ணாளன்
காவணத் திடையேயோடக் கடிதுபின் ரொடர்ந்து நம்பி
பூவணத் தவரை யுற்று ரவரலாற் புரங்கள் செற்ற
வேவணச் சிலையி னுரை யார்தொடர்ந் தெட்ட வல்லார். (சச)

மறைகளா யினமுன் போற்றி மலர்ப்பதம் பற்றி நின்ற
விறைவனைத் தொடர்ந்து பற்றி யெழுதுமா ளோலை வாங்கி
யறைகழ லண்ண லாளா யந்தணர் செய்த லென்ன
முறையெனக் கீறி யிட்டார் முறையிட்டான் முடிவி லாதான். (சஙி)

அருமறை முறையிட் டின்னு மறிவதற் கரியான் பற்றி
யொருமுறை முறையோ வென்ன வுழைநின்றூர் விலக்கி யிந்தப்
பெருமுறை யுலகி லில்லா நெறிகொண்டு பிணங்கு கின்ற
திருமறை முனிவ ரேநீ ரெங்குளீர் செப்பு மென்றார். (சசு)

என்றலு நின்ற வைய நிங்குளே னிருப்புஞ் சேய
தன்றிந்த வெண்ணெய் நல்லூ ரதுநிற்க வறத்தா றின்றி
வன்றிறல் செய்தென் கையி லாவணம் வலிய வாங்கி
நின்றிவன் கிழித்துத் தானே நிரப்பிஞ னடிமை யென்றான். (சஎ)

சூழுமறை காதி னுனைக் கோதிலா ரூரர் நோக்கிப்
பழையமன் றுடி போலு மிவனென்று பண்பின் மிக்க
விழைவுறு மனமும் பொங்க வெண்ணெய்நல் லூரா யேயுன்
பிழைநெறி வழக்கை யாங்கே பேசநீ போதா யென்றார். (சஅ)

வேதிய னதனைக் கேட்டு வெண்ணெய்நல் லூரி லேநீ
போதினு நன்று மற்றப் புனிதனான் மறையோர் முன்ன
ராதியின் மூல வோலை காட்டிநீ யடிமை யாதல்
சாதிப்ப னென்று முன்னே தண்டமுன் றுங்கிச் சென்றான். (சஆ)

செல்லுநான் மறையோன் றன்பின் றிருமுகக் காந்தஞ் சேர்ந்த
வல்லிரும் பிணையு மாபோல் வள்ளலுங் கடிது சென்ரு
னெல்லையில் சுற்றத் தாரு மிதுவென்னு மென்னு செல்ல
நல்லவந் தணர்கள் வாழும் வெண்ணெய்நல் லூரை நண்ணி. (இ0)

வேதபா ரகரின் மிக்கார் விளங்குபே ரவைமுன் சென்று
நாதநான் மறையோன் சொல்லு நாவலூ ராரூ ரன்ரூன்
காதலென் னடியா னென்னைக் காட்டிய வோலை நீறி
மூதறி வீர்முன் போந்தா னிதுமற்றென் முறைப்பா டென்ரூன். (இக)

அந்தண ரவையின் மிக்கார் மறையவ ரடிமை யாத
லிந்தமா நிலத்தி லில்லை யென்சொன்னு யையா வென்ரூர்
வந்தவா றிசைவே யன்ரே வழக்கிவன் கிழித்த வோலை
தந்தைதன் றந்தை நேர்ந்த தென்றனன் றனியாய் நின்ரூன். (இஉ)

இசைவினு லெழுது மோலை காட்டினு ஞகி லின்று
விசையினுல் வலிய வாங்கிக் கிழிப்பது வெற்றி யாமோ
தசையெலா மொடுங்க மூத்தான் வழக்கினைச் சாரச் சொன்னு
னசைவிலா ரூர ரெண்ண மென்னென்ரு ரவையின் மிக்கார். (இங)

அனைத்துநூ லுணர்ந்தீ ராதி சைவனென் றறிவீ ரென்னைத்
தனக்குவே றடிமை யென்றிவ் வந்தணன் சாதித் தானேன்
மனத்தினு லுணர்தற் கெட்டா மாயையென் சொல்லு கேன்யா
னெனக்கிது தெளிய வொண்ணு தென்றன னெண்ண மிக்கான். (இச)

அவ்வுரை யவையின் முன்பு நம்பியா ரூரர் சொல்லச்
செவ்விய மறையோர் நின்ற திருமறை முனியை நோக்கி
யிவ்வுல கின்க ணீயின் றிவரையுன் னடிமை யென்ற
வெவ்வுரை யெம்முன் பேற்ற வேண்டுமென் றுரைத்து மீண்டும். (இஇ)

ஆட்சியி லாவ ணத்தி லன்றிமற் றயலார் தங்கள்
காட்சியின் மூன்றி லொன்று காட்டுவா யென்ன முன்னே
மூட்சியிற் கிழித்த வோலை படியோலை மூல வோலை
மாட்சியிற் காட்ட வைத்தே னென்றனன் மாயை வல்லான். (இசு)

வல்லையேற் காட்டிங் கென்ன மறையவன் வலிசெய் யாமற்
சொல்லநீர் வல்லீராகிற் காட்டுவே னென்று சொல்லச்
செல்வநான் மறையோர் நாங்க டெங்குற வொட்டோ மென்ரு
ரல்லறீர்த் தாள நின்ரு ராவணங் கொண்டு சென்ரூர். (இஎ)

இருண்மறை மிடற்ரூன் கையி லோலைகண் டவையோ ரேவ
வருள்பெறு கரணத் தானு மாவணங் தொழுது வாங்கிச்
சுருள்பெறு மடியை நீக்கி வீரித்தனன் ரொன்மை நோக்கித்
தெருள்பெறு சபையோர் கேட்ப வாசகஞ் செப்பு கின்ரூன். (இஅ)

அருமறை நாவ லாதி சைவனு ரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக் கியானு மென்பால்
வருமுறை மரபு ளோரும் வழித்தொண்டு செய்தற் கோலை
யிருமையா லெழுதி நேர்ந்தே னிதற்கிவை யென்னை மூத்து. (இக)

வாசகங் கேட்ட பின்னர் மற்றுமே லெழுத்திட் டார்க
ளாசிலா வெழுத்தை நோக்கி யவையொக்கு மென்ற பின்னர்
மாசிலா மறையோ ரையா மற்றுங்கள் பேர னூர்தற்
தேசுடை யெழுத்தே யாகிற் றெளியப்பார்த் தறிமி னென்றார். (௫0)

அந்தணர் கூற வின்னு மாளோலை யிவனே காண்பான்
றந்தைதன் றந்தை தான்வே றெழுதுகைச் சாத்துண் டாகி
லிந்தவா வணத்தி னேடு மெழுத்துநீ ரொப்பு நோக்கி
வந்தது மொழிமி னென்றான் வலியவாட் கொள்ளும் வள்ளல். (௫க)

திரண்டமா மறையோர் தாமுந் திருநாவ லூரர் கோமான்
மருண்டது தெளிய மற்ற மறையவ னெழுத்தா லோலை
யரண்டரு காப்பில் வேலெறான் றழைத்துட னெப்பு நோக்கி
யிரண்டுமொத் திருந்த தென்னே யினிச்செய லில்லை யென்றார். (௫உ)

நான்மறை முனிவ னுர்க்கு நம்பியா ரூரர் தோற்றீர்
பான்மையி னேவல்.செய்தல் கடனென்று பண்பின் மிக்க
மேன்மையோர் விளம்ப நம்பி விதிமுறை யிதுவே யாகில்
யானிதற் கிசையே னென்ற லிசையுமோ வென்று நின்றார். (௫ங)

திருமிகு மறையோர் நின்ற செழுமறை முனியை நோக்கி
யருமுனி நீமுன் காட்டு மாவண மதனி லெங்கள்
பெருமைசேர் பதியே யாகப் பேசிய தனக்கிவ் வூரில்
வருமுறை மனையு நீடு வாழ்க்கையுங் காட்டு கென்றார். (௫ச)

பொருவரும் வழக்கால் வென்ற புண்ணிய முனிவ ரென்னை
யொருவரு மறியீ ராகிற் போதுமென் றுரைத்துச் சூழ்ந்த
பெருமறை யவர்கு ழாமு நம்பியும் பின்பு செல்லத்
திருவருட் டிறையே புக்கார் கண்டிலர் திகைத்து நின்றார். (௫ஞ)

எம்பிரான் கோயி னண்ண வீலங்குநூன் மார்ப னெங்க
ணம்பர்தங் கோயில் புக்க தென்கொலோ வென்று நம்பி
தம்பெரு விருப்பி னேடு தனித்தொடர்ந் தழைப்ப மாதோ
டும்பரின் விடைமேற் றோன்றி யவர்தமக் குணர்த்த லுற்றார். (௫ட)

முன்புநீ நமக்குத் தொண்டன் முன்னியே வேட்கை கூரப்
பின்புநம் மேவ லாலே பிறந்தனை மண்ணின் மீது
துன்புறு வாழ்க்கை நின்னைத் தொடர்வறத் தொடர்ந்து வந்து
நன்புல மறையோர் முன்னர் நாந்தடுத் தாண்டோ மென்றார். (௫ண)

என்றெழு மோசை கேளா வீன்றவான் கனைப்புக் கேட்ட
கன்றுபோற் கதறி நம்பி கரசர ணடி யங்கள்
துன்றிய புளக மாகத் தொழுதகை தலைமே லாக
மன்றுளீர் செயலோ வந்து வலியவாட் கொண்ட தென்றார். (௫அ)

எண்ணிய வோசை யைந்தும் விசும்பிடை நிறைய வெங்கும்
விண்ணவர் பொழிபூ மாரி மேதினி நிறைந்து விம்ம
மண்ணவர் மகிழ்ச்சி பொங்க மறைகளு முழங்கி யார்ப்ப
வண்ணலே யோலை காட்டி யாண்டவ ரருளிச் செய்வார். (௫க)

மற்றுரீ வன்மை பேசி வன்றொண்ட னென்னு நாமம்
பெற்றனே நமக்கு மன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
வற்சனே பாட்டே யாகு மாதலான் மண்மே னம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார். (எ0)

தேடிய வயனு மாலுந் தெளிவுரு வைந்தெ முத்தும்
பாடிய பொருளா யுள்ளான் பாடுவாய் நம்மை யென்ன
நாடிய மனத்த ராகி நம்பியா ரூரர் மன்று
ளாடிய செய்ய தாளே யஞ்சலி கூப்பி நின்று. (எக)

வேதிய ஞகி யென்னே வழக்கினுல் வெல்ல வந்த
வூதிய மறியா தேனுக் குணர்வுதந் தாய்யக் கொண்ட
கோதிலா வமுதே யின்றுன் குணப்பெருங் கடலே நாயேன்
யாதினே யறிந்தென் சொல்லிப் பாடுகே னெனமொ ழிந்தார். (எஉ)

அன்பனே யருளி னேக்கி யங்கண ரருளிச் செய்வார்
முன்பெனைப் பித்த னென்றே மொழிந்தனே யாத லாலே
யென்பெயர் பித்த னென்றே பாடுவா யென்றார் நின்ற
வன்பெருந் தொண்ட ராண்ட வள்ளலைப் பாட லுற்றார். (எங)

வே று.

கொத்தார்மலர்க் குழலாளொரு கூறுடை யவர்பான்
மெய்த்தாயினு மினியானெயல் வியனுலகர் பெருமான்
பித்தாபிறை சூடியெனப் பெரிதாந்திருப் பதிக
மித்தாரணி முதலாமுல கெல்லாமுய வெடுத்தார். (எச)

முறையால்வரு மதுரத்துடன் மொழியிந்தள முதலிற்
குறையாநிலை மும்மைப்படி கூடுங்கிழ மையினு
னிறைபாணியி லிசைகொள்புணர் நீடும்புகழ் வகையா
லிறையான்மகி ழிசைபாடின னெல்லாநிக ரில்லான். (எடி)

சொல்லார்தமி ழிசைபாடிய தொண்டன்றனே யின்னும்
பல்லாறுல கினினம்புகழ் பாடென்றரு பரிவி
னல்லார்வெண்ணெய் நல்லூரருட் டுறைமேவிய நம்ப
னெல்லாவுல குய்யப்புர மெய்தானருள் செய்தான். (எசு)

அயலோர்தவ முயல்வார்பிற ரன்றேமண மழியுஞ்
செயலானிகழ் புத்தூர்வரு சிவவேதியன் மகளு
முயர்நாவலர் தனிநாதனே யொழியாதுணர் வழியிற்
பெயராதுயர் சிவலோகமு மெளிதாம்வகை பெற்றாள். (எஎ)

வே று.

நாவலர்கோ ஞரூரன் றனைவெண்ணெய் நல்லூரின்
மேவுமருட் டுறையமர்ந்த வேதியராட் கொண்டதற்பின்
பூவலருந் தடம்பொய்கைத் திருநாவ லூர்புகுந்து
தேவர்பிரான் றனைப்பணிந்து திருப்பதிகம் பாடினார். (எஅ)

சிவனுறையுந் திருத்துறையூர் சென்றணைந்து தீவினையா
லவநெறியிற் செல்லாமே தடுத்தாண்டா யடியேற்குத்
தவநெறிதந் தருளென்று தம்பிரான் முன்னின்று
பவநெறிக்கு விலக்காகுந் திருப்பதிகம் பாடினார். (எக)

புலனொன்றும் படிதவத்திற் புரிந்தநெறி கொடுத்தருள
வலர்கொண்ட கறைஞ்சோலைத் திருத்துறையூ ரமர்ந்தருளு
நிலவுந்தண் புனலுமொளிர் நீள்சடையோன் றிருப்பாத
மலர்கொண்டு போற்றிசைத்து வந்தித்தார் வன்றொண்டர். (அ0)

திருத்துறையூர் தனைப்பணிந்து சிவபெருமா னமர்ந்தருளும்
பொருத்தமா மிடம்பலவும் புக்கிறைஞ்சிப் பொற்புலியூர்
நிருத்தனார் திருக்கூத்துத் தொழுவதற்கு நினைவுற்று
வருத்தமிகு காதலினல் வழிக்கொள்வான் மனங்கொண்டார். (அக)

மலைவளர்சந் தகில்பீலி மலர்பரப்பி மணிகொழிக்கு
மலைதருதண் புனற்பெண்ணை யாறுகடந் தேறியபி
னிலகுபசும் புரவிநெடுந் தேரிரவி மேல்கடலிற்
செலவணையும் பொழுதணையத் திருவதிகைப் புறத்தணைந்தார். (அஉ)

உடையவர சுலகேத்து முழவாரப் படையாளி
விடையவர்க்குக் கைத்தொண்டு விரும்புபெரும் பதியையிதித்
தடையுமதற் கஞ்சுவனென் றந்நகரிற் புகுதாதே
மடைவளர்தண் புறம்பணையிற் சித்தவட மடம்புகுந்தார். (அஊ)

வரிவளர்பூஞ் சோலைசூழ் மடத்தின்கண் வன்றொண்டர்
விரிதிரைநீர்க் கெடிலவட வீரட்டா னத்திறைதாள்
புரிவுடைய மனத்தினராய்ப் புடையெங்கு மிடைகின்ற
பரிசனமுங் துயில்கொள்ளப் பள்ளியமர்ந் தருளினார். (அசு)

அதுகண்டு வீரட்டத் தமர்ந்தருளு மங்கணரு
மதுவடிவின் மறையவராய் முன்னெருவ ரறியாமே
பொதுமடத்தி னுட்புகுந்து பூந்தாரான் றிருமுடிமேற்
பதுமமலர்த் தாள்வைத்துப் பள்ளிகொள்வார் போற்பயின்றார். (அஙி)

அந்நிலையா ரூரனுணர்ந் தருமறையோ யுன்னடியென்
சென்னியில்வைத் தனையென்னத் திசையறியா வகைசெய்த
தென்னுடைய மூப்புக்கா ணென்றருள வதற்கிசைந்து
தன்முடியப் பால்வைத்தே துயிலமர்ந்தான் றமிழ்நாதன். (அக)

அங்குமவன் றிருமுடிமேன் மீண்டுமவர் தாணீட்டச்
செங்கயல்பாய் தடம்புடைசூழ் திருவாவ வூராளி
யிங்கென்னைப் பலகாலு மிகித்தநீ யாரென்னக்
கங்கைசடைக் கரந்தபிரா னறிந்திலையோ வெனக்கரந்தான். (அஎ)

செம்மாந்திங் கியானறியா தென்செய்தே னெனத்தெளிந்து
தம்மானை யறியாத சாதியா ருளரேயென்
றம்மானைத் திருவதிகை வீரட்டா னத்தமர்ந்த
கைம்மாவி னுரியானைக் கழல்பணிந்து பாடினார். (அஅ)

பொன்றிரளு மணித்திரளும் பொருகரிவெண் கோடுகளு
மின்றிரண்ட வெண்முத்தும் விரைமலரு நறுங்குறடும்
வன்றிரைகள் வாற்கொணர்ந்து திருவதிகை வழிபடலாற்
றென்றிசையிற் கங்கையெனுந் திருக்கெடில நினைத்தாடி, (அக)

கூ

அங்கணரை யடிபோற்றி யங்ஙகன்று மற்றந்தப்
பொங்குதித் தெங்கரைப்போய் போர்வலித்தோண் மாவலிதன்
மங்கலவேள் வியிற்பண்டு வாமனனுய் மண்ணிரந்த
செங்கணவன் வழிபட்ட திருமாணி குழியணைந்தார். (கூ0)

பரம்பொருளைப் பணிந்ததாள் பரவிப்போய்ப் பணிந்தவர்க்கு
வரந்தருவான் றினைநகரை வணங்கினர்வண் டமிழ்பாடி
நரம்புடையா ழொலிமுழவி ஞதவொலி வேதவொலி
யரம்பையர்தங் கீதவொலி யறுத்தில்லை மருங்கணைந்தார். (கூக)

வே று.

தேம லங்கலணி மாமணி மார்பிற் செம்ம லங்கயல்கள் செங்கம லத்தண்
பூம லங்கவெதிர் பாய்வன மாடே புள்ள லம்புதிரை வெள்வளை வாவித்
தாம லங்குக டடம்பணை சூழுந் தண்ம ருங்குதொழு வார்கட மும்மை
மாம லங்களற வீடரு டில்லை மல்ல லம்பதியி னெல்லை வணங்கி. (கூஉ)

நாக சூதவகு ளஞ்சர ளஞ்சூழ் நாளி கேரமில வங்க நரந்தம்
பூக ஞாழல் குளிர்வாழை மதூகம் பொதுளும் வஞ்சிபல வெங்கு நெருங்கி
மேக சாலமலி சோலைக ளாகி மீது கோகில மிடைந்து மிழற்றப்
போக பூமியினு மிக்கு விளங்கும் பூம்பு றம்பணை கடந்து புகுந்தார். (கூங)

வன்னி கொன்றை வழை சண்பக மார மலர்ப்ப லாசொடு செருந்திமந் தாரங்
கன்னி காரங்குர வங்கமழ் புன்னை கற்ப பாடலிகள் கூவிள மோங்கித்
துன்னு சாதிமரு மாலதி மௌவ றுதைந்த நந்திகர வீர மிடைந்த
பன்ம லர்ப்புனித நந்த வனங்கள் பணிந்து சென்றனன் மணங்கமழ் தாரான். (கூச)

இடம ருங்குதனி நாயகி காண வேழ்பெ ரும்புவன மூய்ய வெடுத்த
நடந வின்றருள் சிலம்பொலி போற்று நான்ம றைப்பதியை நாளும் வணங்கக்
கடல்வ லங்கொள்வது போற்புடை சூழுங் காட்சி மேவிமிகு சேட்செல வோங்குந்
தடம ருங்குவளர் மஞ்சிவ ரிஞ்சித் தண்கிடங்கை யெதிர் கண்டு மகிழ்ந்தார். (கூடி)

மன்று ளாடுமது வின்னசை யாலே மறைச்சு ரும்பறை புறத்தின் மருங்கே
குன்று போலுமணி மாமதில் சூழுங் குண்ட கழ்க்கமல வண்டலர் கைதைத்
துன்று நீறுபூ மேனிய வாகித் தூய நீறுபூ னொண்டொடர்க ளென்னச்
சென்று சென்றுமுரல் கின்றன கண்டு சித்தை யன்பொடு நினைத்தெதிர் சென்றார். ()

பார்வி ளங்கவளர் நான்மறை நாதம் பயின்ற பண்புமிக வெண்கொடி யாடுஞ்
சீர்வி ளங்குமணி நாவொலி யாலுந் திசைக ணுன்கெதிர் புறப்பட லாலுந்
தார்வி ளங்குவரை மார்பி னையன்பொற் சதுர்மு கங்களென வாயின தில்லை
யூர்வி ளங்குதிரு வாயில்க ணுன்கி னுத்த ரத்திசையின் வாயின்மு னெய்தி. (கூஎ)

வே று.

அன்பின் வந்தெதிர் கொண்டசீ ரடியா ரவர்க ளோநம்பி யாரூரர் தாமோ
முன்பி றைஞ்சின ரியாவரென் றறியா முறைமை யாலெதிர் வணங்கி மகிழ்ந்து
பின்பு கும்பிடும் விருப்பி னிறைந்து பெருகு நாவனக ரார்பெரு மானும்
பொன்பி றங்குமணி மாளிகை நீடும் பொருவி றந்தருவீ தி புகுந்தார். (கூஅ)

அங்கண் மாமறை முழங்கு மருங்கே யாட ரம்பைய ரரங்கு முழங்கு
மங்குல் வானின்மிசை யைந்து முழங்கும் வாச மாலைகளின் வண்டு முழங்கும்
பொங்கு மன்பருவி கண்பொழி தொண்டர் போற்றி சைக்குமொலி யெங்குமுழங்குந்
திங்க டங்குசடை கங்கை முழங்குந் தேவ தேவர்புரி யுந்திரு வீதி. (கூக)

போக நீடுநிதி மன்னவன் மன்னும் புரங்க ளொப்பன வரம்பில வோங்கி
மாக முன்பருகு கின்றன போலு மாளி கைக்குல மிடைந்த பதாகை
யோக சித்தைமறை யோர்கள் வளர்க்கு மோம தூமமுயர் வானி லடுப்ப
மேக பந்திகளின் மீதிடை யெங்கு மின்னு டங்குவன வென்ன விளங்கும். (கூ00)

ஆடு தோகைபுடை நாசிக டோறு மரணி தந்தசுட ராகுதி தோறு
மாடு தாமமணி வாயில்க டோறு மங்க லக்கலசம் வேதிகை தோறுஞ்
சேடு கொண்டவொளி தேர்நிரை தோறுஞ் செந்நெ லன்னமலை சாலைகடோறு
நீடு தண்புனல்கள் புந்தர்க டோறு நிரந்த தேவர்கண நீளிடை தோறும். (கூ0க)

எண்ணில் பேருல கனேத்தினு முள்ள வெல்லை யில்லழகு சொல்லிய வெல்லா
மண்ணி லிப்பதியில் வந்தன வென்ன மங்க லம்பொலி வளத்தன வாகிப்
புண்ணி யப்புனித வன்பர்கண் முன்பு புகழ்ந்து பாடல் புரிபொற்பின் விளங்கு
மண்ணு லாடுதிரு வம்பலஞ் சூழ்ந்த வம்பொன் வ்தியினே நம்பிவ ணங்கி. (கூ0உ)

மால யன்சத மகன்பெருந் தேவர் மற்று முள்ளவர்கண் முற்று நெருங்கிச்
சீல மாமுனிவர் சென்றுபின் முன்னித் திருப்பி ரம்பினடி கொண்டு திளைத்துக்
கால நேர்படுதல் பார்த்தய னிற்பக் காத லன்பர்கண நாதர் புரும்பொற்
கோல நீடுதிரு வாயி லிறைஞ்சிக் குவித்த செங்கைதலை மேற்கொடு புக்கார். (கூ0ங்)

மே லு.

பெருமதில் சிறந்த செம்பொன்மா ளிகையின் பிறங்குபே ரம்பல மேரு
வருமுறை வலங்கொண் டிறைஞ்சிய பின்னர் வணங்கிய மகிழ்வொடும் புகுந்தா
ரருமறை முதலி னடவினிற் சிரத்தி லன்பர்தஞ் சிந்தையி லலர்ந்த
திருவள ரொளிசூழ் திருச்சிற்றம் பலமுன் திருவணுக் கன்றிரு வாயில். (கூ0ச)

வையகம் பொலிய மறைசிலம் பார்ப்ப மன்றுளே மாலயன் றேட
வையர்தாம் வெளியே யாடுகின் றுரை யஞ்சலி மலர்த்தி முன்போற்றுங்
கைகளோ திளைத்த கண்களோ வந்தக் காணமோ கலந்தவன் புந்தச்
செய்தவம் பெரியோன் சென்றுதாழ்ந் தெழுந்தான் றிருக்களிற் றுப்படி மருங்கு. ()

ஐந்துபே றறிவுங் கண்களே கொள்ள வளபபருங் கரணங்க ணுன்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந் திருந்துசாத் துவிகமே யாக
விந்துவாழ் சடையா ணுமோ னந்த வெல்லையி றனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார். (கூ0சு)

தெண்ணிலா மலர்ந்த வேணியா யுன்றன் றிருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு வாலிதா மின்பமா மென்று
கண்ணிலா னந்த வருவிநீர் சொரியக் கைம்மல ருச்சிமேற் குவித்துப்
பண்ணினு னீடி யறிவரும் பதிகம் பாடினுர் பரவினுர் பணிந்தார். (கூ0எ)

தடுத்தமுன் னுண்ட தொண்டனுர் முன்பு தனிப்பெருந் தாண்டவம் புரிய
வெடுத்தசே வடியா ருளினுற் றரள மெறிபுனன் மறிதிரைப் பொன்னி
மடுத்தநீள் வண்ணப் பண்ணேயா ருரில் வருகரும் பாலென வானி
லடுத்தபோ தினில்வந் தெழுந்ததோர் நாதய கேட்டலு மதுவுணர்ந் தெழுந்தார். ()

ஆடுகின் றவர்பே ருளினு னிகழ்ந்த வப்பணி சென்னிமேற் கொண்டு
சூடுதங் கரங்க ளஞ்சலி கொண்டு தொழுந்தொறும் புறவிடை கொண்டு
மாடுபே ரொளியின் வளருமம் பலத்தை வலங்கொண்டு வணங்கினர் போந்து
நீவொன் பணிய வுயர்ந்த பொன் வரைபோ னிலையெழு கோபுரங் கடந்து. (கூ0சு)

நின்றுகோ புரத்தை நிலமுறப் பணிந்து நெடுந்திரு வீதியை வணங்கி
மன்றலார் செல்வ மறுகினூ டேகி மன்னிய திருப்பதி யதனிற்
தென்றிசை வாயில் கடந்துமுன் போந்து சேட்படு திருவெல்லை யிறைஞ்சிக்
கொன்றை வார்சடையா னருளேயே நினைவார் கொள்ளிடத் திருநதி கடந்தார். (ககo)

வே று.

புறந்தருவார் போற்றிசைப்பப் புரிமூந்நூ லணிமார்ப
ரறம்பயந்தா டிருமூலப்பா லமுதுண்டு வளர்ந்தவர்தாம்
பிறந்தருளும் பெரும்பேறு பெற்றதென முற்றுலகிற்
சிறந்தபுகழ்க் கழுமலமாந் திருப்பதியைச் சென்றணைந்தார். (ககக)

பிள்ளையார் திருவவதா ரஞ்செய்த பெரும்புகலி
யுள்ளுநான் மிதியேனென் றாரெல்லைப் புறம்வணங்கி
வள்ளலார் வலமாக வரும்பொழுதின் மங்கையிடங்
கொள்ளுமால் விடையானு மெதிர்காட்சி கொடுத்தருள. (ககஉ)

மண்டியபே ரன்பினுல் வன்றொண்டர் நின்றிறைஞ்சித்
தெண்டிரைவே லியின் மிதந்த திருத்தோணி புரத்தாரைக்
கண்டுகொண்டேன் கயிலையினில் வீற்றிருந்த படியென்று
பண்டருமின் னிசைபயின்ற திருப்பதிகம் பாடினுர். (ககங)

இருக்கோல மிடும்பெருமா னெதிர்நின்று மெழுந்தருள
வெருக்கோளுற் றனநீங்க வாரூர்மேற் செலவிரும்பிப்
பெருக்கோதஞ் சூழ்புறவ பெரும்பதியை வணங்கிப்போய்த்
திருக்கோலக் காவணங்கிச் செந்தமிழ்மா லைகள்பாடி. (ககச)

தேனூர்க்கு மலர்ச்சோலைத் திருப்புன்கூர் நம்பர்பா
லானுப்பே ரன்புமிக வடியடைந்து தமிழ்பாடி
மானூர்க்குங் கரதலத்தார் மகிழ்ந்தவிடம் பலவணங்கிக்
கானூர்க்கு மலர்த்தடஞ்சூழ் காவிரியின் கரையணைந்தார். (ககஙி)

வம்புலா மலரோலய மணிகொழித்து வந்திழியும்
பைம்பொன்வார் கரைபொன்னிப பயிரீர்த்தம் படிந்தாடித்
தம்பிரான் மயிலாடு துறைவணங்கித் தாவில்சீ
ரம்பர்மா களத்தி னமர்ந்தபிரா னடிபணிந்தார். (ககசு)

மின்னுர்செஞ் சடையண்ணல் விரும்புதிருப் புகலூரை
முன்னுகப் பணிந்தேத்தி முதல்வன்ற னருணினைந்து
பொன்னுரு முத்தரியம் புரிமூந்நூ லணிமார்பர்
தென்னுவ லூராளி திருவாரூர் சென்றணைந்தார். (ககள)

தேராரு நெடுவீதித் திருவாரூர் வாழ்வாருக்
காராத காதலினம் மாரூர னுமைழக்க
வாராநின் றுனவனே மகிழ்ந்தெதிர்கொள் வீரென்று
நீராருஞ் சடைமுடிமே னிலவணிந்தா ரருள்செய்தார். (ககஅ)

தம்பிரா னருள்செய்யத் திருத்தொண்ட ரதுசாற்றி
யெம்பிரா னூருடா னிருந்தபரி சிதுவாலு
னம்பிரா னூரவா ரவரன்றே யெனுலகத்தா
லும்பர்நா டிழிந்ததென வெதிர்கொள்ள வடனெழுந்தார். (ககக)

மாளிகைகண் மண்டபங்கண் மருங்குபெருங் கொடிநெருங்கத்
தாளிநெடுந் தோரணமுந் தழைக்கமுகுங் குழைத்தொடையு
நீளிலைய கதலிகளு நிறைந்தபசும் பொற்றசும்பு
மோளிநெடு மணிவிளக்கு முயர்வாயி ருறுநிரைத்தார். (கஉ0)

சோதிமணி வேதிகைக ணேறுஞ்சாந் தணிநீவிக்
கோதில்பொரி பொற்சுண்ணங் குளிர்தாள மணிபரப்பித்
தாதிவர்பூந் தொடைமாலைத் தண்பந்தர் களுஞ்சமைத்து
வீதிகணுண் கெளடங்க விரைப்பனிநீர் மிசைவிட்டார். (கஉக)

மங்கலகீ தம்பாட மழைகிகர்தூ ரியமுழங்கச்
செங்கயற்கண் முற்றிழையார் தெற்றிதொறு நடம்பயில
நங்கள் பிரான் நிருவாரூர் நகர்வாழ்வார் நம்பியைமுன்
பொங்கெயினீ டிருவாயிற் புறமுறவந் தெதிர்கொண்டார். (கஉஉ)

வே று

வந்தெதிர் கொண்டு வணங்குவார்முன் வன்றொண்ட ரஞ்சலி கூப்பிவந்து
சிந்தை களிப்புற வீதியூடு செல்வார் திருத்தொண்டர் தம்மைநோக்கி
யெந்தை யிருப்பது மாரூரவ ரெம்மையு மாள்வரோ கேளிரென்னுஞ்
சந்த விசைபபதி கங்கள்பாடித் தம்பெருமான்றிரு வாயில் சார்ந்தார். (கஉங)

வானுற நீடிரு வாயிலேக்கி மண்ணுற வைந்துறுப பால்வணங்கித்
தேனிறை கற்பக வாசமாலைத் தேவா சிரியன் றிருமுறைஞ்சி
யூனு முயிரு முருக்குமன்பா லுசிகு வித்தசெங் கைகளோடுந்
தானறுங் கொன்றையன் மூலட்டானஞ் சூழ்திரு மாளிகை வாயில்புக்கார். (கஉச)

புற்றிடங் கொண்ட புராதனனைப் பூவகோயின் மேய பிரானையார்க்கும்
பற்றிட மாய பரம்பொருளைப் பார்ப்பதி பாகனைப் பங்கயத்தா
ளற்சனை செய்ய வருள்புரிந்த வண்ணலை மண்மிசை வீழ்ந்திறைஞ்சி
நற்றமிழ் நாவலர் கோனுடம்பா னன்மையின் றன்மையை மெய்ம்மைபெற்றான். ()

அன்பு பெருக வுருகியுள்ள மலையவட் டாங்கபஞ் சாங்கமாக
முன்பு முறைமையி னுல்வணங்கி முடிவிலாக் காதன் முதிரவோங்கி
நன்புல ஞகிய வைந்துமொன்றி நாயகன் சேவடி யெய்தப்பெற்ற
வின்பவெள் ளத்திடை மூழ்கிநின்றே யின்னிசை வண்டமிழ் மாலைபாட. (கஉக)

வாழிய மாமறைப் புற்றிடங்கொண் மன்னவ ஞரரு ளாலோர்வாக்குத்
தோழமை யாக வுனக்குரும்மைத் தந்தன நாமுன்பு தொண்டுகொண்ட
வேள்விபி லன்றுநீ கொண்டகோல மென்றும் புனைந்துநின் வேட்கைதீர
வாழிமண் மேல்வினே யாடுவாயென் றருளார் கேட்க வெழுந்ததன்றே. (கஉஎ)

கேட்க விரும்பிவன் றொண்டரென்றுங் கேடிலா தானே யிறைஞ்சிநின்றே
யாட்கொள வந்த மறையவனே யாரூ ரமர்ந்த வருமணியே
வாட்கயல் கொண்டகண் மங்கைபங்கா மற்றுன் பெரிய கருணையன்றே
நாட்கம லப்பதந் தந்தநின்று நாயினே னப்பொரு ளாகவென்றார். (கஉஅ)

என்று பலமுறை யால்வணங்கி யெய்திய வுள்ளக்க ளிப்பிலேடும்
வென்றி யடல்விடை போனடந்து வீதி விடங்கப் பெருமான்முன்பு
சென்று தொழுது துதித்துவாழ்ந்து திருமாளி கைவலஞ் செய்துபோந்தா
னன்று முதலடி யார்களெல்லாந் தம்பிரான் றேழனென் றேயறைந்தார். (கஉக)

மைவளர்கண்ட ரருளினுலே வண்டமிழ் நாவலர் தம்பெருமான்
சைவ வீடங்கி னணிபுனைந்து சாந்தமு மாலையுந் தாருமாகி
மெய்வளர் கோலமெல் லாம்பொலிய மிக்க விழுத்தவ வேந்தரென்னத்
தெய்வ மணிப்புற்று ளாரைப்பாடித் தில்லைத்து மதிழ்வொடுஞ் செல்லாநின்றார். (கருஎ0)

வே று

இதற்குமு னெல்லை யில்லாத் திருநக ரிதனுள் வந்து
முதற்பெருங் கயிலை யாதி முதல்வர்தம் பங்கி னுட்குப்
பொதுக்கடிந் தூரிமை செய்யும் பூங்குழற் சேடி மாரிற்
கதிர்த்தபூ ணேந்து கொங்கைக் கமலினி யவத ரித்தாள். (கருக)

கதிர்மணி பிறந்த தென்ன வருத்திர கணிகை மாராம்
பதியிலார் குலத்திற் ரோன்றிப் பரவையா ரென்னு நாமம்
விதியுளி விளக்கத் தாலே மேதகு சான்ரோ ரான்ற
மதியணி புனித னன்ஞண் மங்கல வணியாற் சாத்தி. (கருஉ)

பரவினர் காப்புப போற்றிப் பயில்பெருஞ் சுற்றந் திங்கள்
விரவிய பருவந் தோறும் விழாவணி யெடுப்ப பிக்கோர்
வரமலர் மங்கை யிங்கு வந்தன ளென்று சிந்தை
தரவரு மகிழ்ச்சி பொங்கத் தளர்நடைப் பருவஞ் சேர்ந்தார். (கருங)

மானிளம் பிணையோ தெய்வ வளரிள முகையோ வாசத்
தேனிளம் பதமோ வேலைத் திரையிளம் பவள வல்லிக்
காளிளங் கொடியோ திங்கட் கதிரிளங் கொழுந்தோ காமன்
புனிளம் பருவங் கற்குந் தனியிளந் தனுவோ வென்ன. (கருச)

நாடுமின் பொற்பு வாய்ப்பு நாளுநாள் வளர்ந்துபொங்க
வாடுமென் கழங்கும் பந்து மம்மனை யூசலின்ன
பாடுமின் னிசையுந் தங்கள் பனிமலை வல்லி பாதங்
கூடுமென் புருகப் பாடுங் கொள்கையோர் குறிப்புத் தோன்ற. (கருரி)

பிள்ளைமைப் பருவ மீதாம் பேதைமைப் பருவ நீங்கி
யள்ளுதற் கமைந்த பொற்பா லநங்கன்மெய்த் தனங்க ளீட்டங்
கொள்ளமிக் குயர்வபோன்ற கொங்கைகோங் கரும்பை வீழ்ப்ப
வுள்ளமெய்த் தன்மை முன்னை யுண்மையுந் தோன்ற வுய்ப்பார். (கருசு)

பாங்கியர் மருங்கு சூழப் படரொளி மறுகு சூழத்
தேங்கமழ் குழலின் வாசந் திசையெலாஞ் சென்று சூழ
வோங்குபூங் கோயி லுள்ளா ரொருவரை யன்பி னேடும்
பூங்கழல் வணங்க வென்றும் போதுவா ரொருநாட் போந்தார். (கருள)

அணிநிலம் படிகள் பார்வென் றடிப்படுத் தனமென் றூர்ப்ப
மணிநிளர் காஞ்சி யல்குல் வரியர வுலகை வென்ற
துணிவுகொண் டார்ப்ப மஞ்சு சுரிகுழற் கழிய விண்ணும்
பணியுமென் றினவண் டார்ப்பப் பரவையார் போதும் போதில். (கருஅ)

புற்றிடம் விரும்பி ஞரைப் போற்றினர் தொழுது செல்வார்
சுற்றிய பரிச னங்கள் சூழவா ஞடைய நம்பி
நற்பெரும் பான்மை கூட்ட நகைபொதிந் திலங்கு செவ்வாய்
விற்புரை நுதலின் வேற்கண் விஞங்கிழை யவரைக் கண்டார். (கருக)

வேறு.

கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ
வற்புதமோ சிவனருளோ வறியேனென் றறிசயித்தார். (கசஅ)

ஓவியநான் முகனெழுத வொண்ணுமை யுள்ளத்தான்
மேவியதன் வருத்தமுற விதித்தொரு மணிவிளக்கோ
மூவுலகின் பயனுகி முன்னின்ற தெனநினைந்து
காவலர்கா வலர்நின்றூர் நடுநின்றூர் படைமதஞர். (கசக)

தண்டரள மணித்தோடுந் தகைத்தோடுங் கடைபிறழுங்
கெண்டைநெடுங் கண்வியப்பக் கிளரொளிப்பூ ணுரவோனை
யண்டர்பிரான் றிருவருளா லயலறியா மனம்விரும்பப்
பண்டைவிதி கடைகூட்டப் பரவையா ருங்கண்டார். (கசஉ)

கண்கொள்ளாக் கவின்பொழிந்த திருமேனி கதிர்விரிப்ப
விண்கொள்ளாப் பேரொளியா னெதிர்நோக்கு மெல்லியலுக்
கெண்கொள்ளாக் காதலின்முன் பெய்தாத தொருவேட்கை
மண்கொள்ளா நாண்மடமச் சம்பயிர்ப்பை வலிந்தெழலும். (கசஙு)

முன்னேவந் தெதிர்தோன்று முருகனே பெருகொளியாற்
றன்னேரின் மாரனே தார்மார்பின் விஞ்சையனே
பின்னேர்செஞ் சடையண்ணல் மெய்யருள்பெற் றுடையவனே
வென்னேயென் மனந்திரித்த விவன்யாரோ வெனநினைந்தார். (கசச)

அண்ணலவன் றன்மருங்கே யளவிறந்த காதலினு
லுண்ணிறையு குணநான்கு மொருபுடைசாய்ந் தனவெனினும்
வண்ணமலர்க் கருங்கூந்தன் மடக்கொடியை வலிதாக்கிக்
கண்ணுதலெத் தொழுமன்பே கைக்கொண்டு செலவுய்ப்ப. (கசஞ)

பாங்கோடிச் சிலவளைத்துப் படையநங்கன் விடுபாணந்
தாங்கோலி யெம்மருங்குந் தடைசெய்ய மடவரலுந்
தேங்கோதை மலர்க்குழன்மேற் சிறைவண்டு கலந்தார்ப்பப்
பூங்கோயி லமர்ந்தபிரான் பொற்கோயில் போய்ப்புகுந்தாள். (கசசு)

வன்றெண்ட ரதுகண்டென் மனங்கொண்ட மயிலியலி
னின்றெண்டைச் செங்கனிவா யிளங்கொடிதான் யாரென்ன
வன்றங்கு முன்னின்று ரவர்நங்கை பரவையார்
சென்றும்பர் தரத்தார்க்குஞ் சேர்வரியா ரெனச்செப்ப. (கசஎ)

பேர்பரவை பெண்மையினிற் பெரும்பரவை விரும்பல்கு
லார்பரவை யணிதிகழு மணிமுறுவ லரும்பரவை
சீர்பரவை யாயினு டிருவுருவின் மென்சாய
லேர்பரவை யிடைப்பட்ட வென்னுசை யெழுபரவை. (கசஅ)

என்றினைய பலவுனினைந் தெம்பெருமா னருள்வகையான்
முன்றொடர்ந்து வருங்காதன் முறைமையினும் றொடக்குண்டு
நன்றெனையாட் கொண்டவர்பா னண்ணுவனென் றுண்மகிழ்ந்து
சென்றுடைய நம்பியும்போய்த் தேவர்பிரான் கோயில்புக. (கசக)

பரவையார் வலங்கொண்டு பணிந்தேத்தி முன்னரே
புரவலனூர் கோயிலினின் றிழிந்துமருங்கு புறப்பட்டார்
விரவுபெருங் காதலினுன் மெல்லியலார் தமைவேண்டி
யரவினு ரம்புனைந்தா ரடிபணிந்தா ராரூரர். (கடுo)

அவ்வாறு பணிந்தேத்தி யணியாரூர் மணிப்புற்றின்
மைவாழுந் திருமிடற்று வானவர்பா னின்றும்போந்
தெவ்வாறு சென்றுளென் னின்னுயிரா மன்னமெனச்
செவ்வாய்வெண் ணகைக்கொடியைத் தேடுவா ராயினர். (கடுக)

தே வு.

பாச மாம்வினைப் பற்றறுப் பான்மிகு
மாசை மேலுமொ ராசை யளிப்பதோர்
தேசின் மன்னியென் சிந்தை மயக்கிய
வீச னூரரு ளெங்கெறிச சென்றதே. (கடுஉ)

உம்பர் நாயகர் தங்கழ லல்லது
நம்பு மாறறி யேனை நடுக்குற
வம்பு மால்செய்து வல்லியி னுல்கியின்
றெம்பி ரானரு ளெங்கெறிச சென்றதே. (சுடுங)

பந்தம் வீடு தரும்பர மன்கழல்
சிந்தை யார்வுற வுன்னுமென் சிந்தையை
வந்து மால்செய்து மானென வேவிழித்
தெந்தை யாரரு ளெங்கெறிச சென்றதே. (கடுச)

என்று சாலவு மாற்றல ரென்னுயிர்
நின்ற தெங்கென நித்திலப் பூண்முலை
மன்றல் வார்குழல் வஞ்சியைத் தேடுவான்
சென்று தேவா சிரியனைச் சேர்ந்தபின். (கடுஞ)

காவி நேர்வருங் கண்ணியை நண்ணுவான்
யாவ ரோடு முரையியம் பாதிருந்
தாவி நல்குவ ராரூரை யாண்டவர்
பூவின் மங்கையைத் தந்தெனும் போழ்தினில். (கடுசு)

நாட்டு நல்லிசை நாவலூ ரன்சிந்தை
வேட்ட மின்னிடை யின்னமு தத்தினைக்
காட்டு வேங்கட லுக்கடைந் தென்பபோற்
பூட்டு மேழ்பரித் தேரோன் கடல்புக. (கடுஎ)

எய்து மென்பெடை யோடிரை தேர்ந்துண்டு
பொய்கை யிற்பகல் போக்கிய புள்ளினம்
வைகு சேக்கைகண் மேற்செல வந்தது
பையுண் மாலை தமியோர் பனிப்புற. (கடுஅ)

பஞ்சின் மெல்லடிப் பாவைய ருள்ளமும்
வஞ்ச மாக்கடம் வல்வினை யும்மர
னஞ்சை முத்து முணரா வறிவிலோர்
நெஞ்சு மென்ன விருண்டதுண் டவான். (கடுக)

மறுவில் சிந்தைவன் மெரண்டார் வருந்தினை
லிறுமை நுங்ருலார்க் கியார்பிழைப் பாரென்று
கறுமை லர்க்கங்கு வங்கைமுன் கொண்டபுன்
முறுவ லென்ன முகிழ்த்தது வெண்ணிலா. (கக0)

அரந்தை செய்வார்க் கழுங்கித்தம் மாருயிர்
வரன்கை நீண்ட மலர்குல மாதர்போற்
பரந்த வெம்பகற் கொல்கிப் பனிமதிக்
கரங்க ளுண்ட வலர்ந்த கயிரவம். (கஅக)

தோற்று மன்னுயிர் கட்கெலாந் தாய்மையே
சாற்று மின்பமுந் தண்மையுந் தந்துபோ
யாற்ற வண்டமெ லாம்பரந் தண்ணல்வெண்
ணீற்றின் பேரொளி போன்றது நீலிலா. (கஅஉ)

வாவி புள்ளொலி மாறிய மாலையி
னுவ லூரரு நங்கை பரவையாம்
பாவை தந்த படர்பெருங் காதலு
மாலி சூழ்ந்த தனிமையு மாயினூர். (கஅங)

தந்தி ருக்கண் ணெரிதழ லிற்பட்டு
வெந்த காமன் வெளியே யுருச்செய்து
வந்தென் முன்னின்று வாளி தொடுப்பதே
யெந்தை யாரரு ளிவ்வண்ண மோவென்பார். (கஅச)

ஆர்த்தி கண்டுமென் மேனின் றழற்கதிர்
தூர்ப்ப தேயெனைத் தொண்டுகொண் டாண்டவர்
நீர்த்த ரங்க நெடுங்கங்கை நீண்முடிச்
சாத்தும் வெண்மதி போன்றிலை தண்மதி. (கஅஇ)

அடுத்து மேன்மே லலைத்தெழு மாழியே
தடுத்து முன்னெனை யாண்டவர் தாமுனைக்
கடுத்த நஞ்சுன் றரங்க கரங்களா
லெடுத்து நீட்டுநீ யென்னையின் றென்செயாய். (கஅஅ)

பிறந்த தெங்கள் பிரான்மல யத்திடைச்
சிறந்த வூன்றது தெய்வநீர் நாட்டினிற்
புறம்ப வூன்றதடம் பொங்கழல் வீசிட
மறம்ப யின்றதெங் கோதமிழ் மாருதம். (கஅவ)

இன்ன தன்மைய பின்னு மியம்புவான்
மன்னு காதல ஞகிய வள்ளல்பாற்
றன்ன ருள்பெற னெஞ்சு தயங்கப்போ
மன்ன மன்னவள் செய்கை யறைகுவாம். (கஅஅ)

வே று.

கனங்கொண்ட மணிகண்டர் கழல்வணங்கிக் கனவுமுன் பெறுவான் போல
வினங்கொண்ட சேடியர்கள் புடைசூழ வெய்துபெருங் காத லோடுத்
தனங்கொண்டு தளர்மருங்குற் பாவையும்வன் மெரண்டர்பாற் றனித்துச் சென்ற
மனங்கொண்டு வரும்பெரிய மயல்கொண்டு தன்மணிமா ளிகையைச் சார்ந்தாள். (0)

சிறடிமே னூபுரங்க ளறிர்தனபோற் சிறிதளவே யொலிப்ப முன்னர்
வேரெருவ ருடன்பேசாண் மெல்லவடி யொதுங்கிமா ளிகையின் மேலா
லேறிமர கதத்தணைத் திலங்குமணி வேதிகையி னலங்கொள் பொற்கான்
மாறின்மலர்ச் சேக்கைபிசை மணிநிலா முன்றின்மருங் கிருந்தாள் வந்து. (கஎ0)

அவ்வளவி லருகிருந்த சேடிதனை முகநோக்கி யாரூ ராண்ட
மைவீரவு கண்டரைாம் வணங்கப்போ மறுகெதிர்வந் தவரா ரென்ன
வீவ்வுலகி லந்தணரா யிருவர்தே டொருவர்தா மெதிர்நின் ருண்ட
சைவமுதற் றிருத்தொண்டர் தம்பிரான் றோழனர் நம்பி யென்ருள். (கஎக)

என்றவுரை கேட்டலுமே யெம்பிரான் றமரேயோ வென்னு முன்னம்
வன்றொண்டர் பால்வைத்த மனக்காத லளவின்றி வளர்ந்து பொங்க
நின்றநிறை நாண்முதலாங் குணங்களுட னீங்கவுயி ரொன்றுந் தாங்கி
மின்றயங்கு நுண்ணிடையாள் வெவ்வுயிர்த்து மெல்லணைமேல் வீழ்ந்த போது. ()

ஆராதுஞ் சேருட்டி யரும்பனிநீர் நறுந்திவலை யருகு வீசி
யீரவிளக் களிர்குளிரப் படித்துமட வார்செய்த விவையு மெல்லாம்
பேரழலி னெய்சொரிந்தா லொத்தனமற் றதன்மீது சமிதை யென்ன
மாரனுந்தன் பெருஞ்சிலையின் வலிகாட்டி மலர்வாளி சொரிந்தான் வந்து. (கஎங)

மலரமளித் துயிலாற்றுள் வருந்தென்றன் மருங்காற்றுண் மங்குல் வானி
னிலவுமிழுந் தழலாற்று ணிறையாற்றும் பொறையாற்று நீர்மை யோடுங்
கலவமயி லெனவெழுந்து கருங்குழலின் பரமாற்றுக் கைய ளாகி
யிலவவிதழ்ச் செந்துவர்வாய் நெகிழ்ந்தாற்று மையின்வறிதே யின்ன சொன்னுள். ()

தே வ று.

கந்தங் கமழ்மென் குழலீ ரிதுவென் கலைவாண் மதியங கனல்வா னெனையிச்
சந்தின் றழலேப் பனிரீ ரளவித் தடவுங கொடியீர் தவிர்ர் தவிரீர்
வந்திங் குலவு நிலவும் விரையார் மலயா னிலமு மெரியாய் வருமா
லந்தண் புனலு மரவும் விரவுஞ் சடையா னருள்பெற் றுடையா ரருளார். (கஎடி)

புலரும் படியன் றிரவென் னளவும் பொறையு நிறையு மிரையுர் தரியா
வுலருந் தனமு மனமும் வினையே னெருவே னளவோ பெருவாழ் வுரையீர்
பலரும் புரியுந் துயர்தா னிதுவோ படைமன் மதனுர் புடைநின் றகலா
ரலருந் நிலவு மலரு முடியா ரருள்பெற் றுடையா ரவரோ வறியார். (கஎசு)

தேருங் கொடியு மிடையு மறுகிற் றிருவா ரூரார் நீரே யல்லா
லாரென் றுயர மறிவா ரடிகே ளடியே னயரும் படியோ விதுதா
னீரும் பிறையும் பொறிவா ளரவின் னிரையு நிரைவெண் டலையின் புடையே
யூருஞ் சடையீர் விடைமேல் வருவீ ருமதன் பிலர்போல் யானே வுறுவேன். (கஎஎ)

என்றின் னனவே பலவும் புகலு மிருளா ரளகச் சுருளோர் தியையும்
வன்றொண் டரையும் படிமேல் வரமுன் பருள்வா னருளும் வகையார் நினைவார்
சென்றும் பார்களும் பணியுஞ் செல்வத் திருவா ரூர்வாழ் பெருமா னடிக
ளன்றங் கவர்மன் றலைநீர் செயுமென் றடியா றறியும் படியா ருளரி. (கஎஅ)

மன்னும் புகழ்நா வலர்கோன் மகிழ மங்கை பரவை தன்னைத் தந்தோ
மின்னவ் வகைநம் மடியா றறியும் படியே யுரைசெய் தனமென் றருளிப்
பொன்னின் புரிபுன் சடையன் விடையன் பொருமா கரியி னுரிவை பூனவா
னன்னர் நடையான் பரவைக் கணிய தாரூ ரன்பான் மணமென் றருள. (கஎசு)

காமத் துயரிற் கவல்வார் நெஞ்சிற் கரையில் விருளுங் கங்குற் கழிபோழ்
யாமத் திருளும் புலரக் கதிரோ னெழுகா லெயில்வந் தடியா
சேமத் துணையா மவர்பே ரருளைத் தொழுதே திருநா வலர்கோன் மகிழத்
தாமக் குழலாள் பரவை வதுவை தகுநீர் மையினு னிகழச் செய்தார். (கஅ0)

வே று.

தென்னவ லூர்மன்னன் றேவர்பிரான் றிருவருளான்
மின்னுருங் கொடிமருங்குற் பரவையெனும் மெல்லியறன்
பொன்னுரு மூலையோங்கற் புணர்முலைவே சார்வாகப்
பன்னுளும் பயில்யோகம் பரம்பரையின் விரும்பினூர். (கஅக)

தன்னேயா ளுடையபிரான் சரணார விந்தமலர்
சென்னியிலுஞ் சிந்தையிலு மலர்வித்துத் திருப்பதிகம்
பன்னுதமிழ்த் தொடைமாலை பலசாத்திப் பரவையெனு
மின்னிடையா ளுடன்கூடி விளையாடிச் செல்கின்றூர். (கஅஉ)

வே று.

மாதுடன் கூட வைகி மாலிகை மருங்கு சோலை
போதலர் வாலி மாடு செய்குன்றின் புடையோர் தெற்றிச்
சீதளத் தரளப் பந்தர்ச் செழுந்தவி சிழிந்து தங்க
ணுதார்பூங் கோயி னண்ணிக் கும்பிடும் விருப்பா னம்பி. (கஅங)

அந்தரத் தமரர் போற்று மணிகிள ராடை சாத்திச்
சந்தனத் தளறு தோய்ந்த குங்குமக் கலவை சாத்திச்
சுந்தரச் சுழியஞ் சாத்திச் சுடர்மணிக் கலன்கள் சாத்தி
யிந்திரத் திருவின் மேலா மெழின்மிக விளங்கித் தோன்ற. (கஅச)

கையினிற் புனைபொற் செண்டுங் காதினி லிலங்கு தோடு
மெய்யினிற் றுவளு நூலு நெற்றியின் விளங்கு நீறு
மையனுக் கழகுதாமென் றுயிழை மகளிர் போற்றச்
சைவமெய்த் திருவின் கோலந் தழைப்பவீ தியினேச் சார்ந்தார். (கஅஙி)

நாவலூர் வந்த சைவ நற்றவக் களிறே யென்று
மேவலர் புரங்கள் செற்ற விடையவர்க் கன்ப வென்றுங்
தாவில்சீர்ப் பெருமை யாரூர் மறையவர் தலைவ வென்று
மேவின ரிரண்டு பாலும் வேறுவே றுகப் போற்ற. (கஅசு)

கைக்கடா குரங்கு கோழி சிவல்கவு தாரி பற்றிப்
பக்கமுன் போது வார்கள் பயின்மொழி பயிற்றிச் செல்ல
மிக்கபூம் பிடகை கொள்வோர் விரையடைப் பையோர் சூழ
மைக்கருங் கண்ணி னூர்கண் மறுகணீண் மறுகில் வந்தார். (கஅஎ)

பொலங்கலப் புரவி பண்ணிப் போதுவார் பின்பு போத
விலங்கொளி வலயப் பொற்றே ரிடையிடை மிடைந்து தொங்க
னலங்கிளர் நீழற் சூழ நான்மறை முனிவ ரோடு
மலங்கலந் தோளி ஞன்வந் தணைந்தன னண்ணல் கோயில். (கஅஅ)

கண்ணுதல் கோயிற் றேவா சிரியனும் காவ ணத்து
விண்ணவ ரொழிய மண்மேன் மிக்கசீ ரடியார் கூடி
யெண்ணிலா நிருந்த போதி லிவர்க்கியா னடியே னுகப்
பண்ணுநா ளெந்நா ளென்று பரமர்தாள் பரவிச் சென்றூர். (கஅகூ)

அடியவர்க் கடிய ரூவே னென்னுமா தரவு கூரக்
கொடிநெடுங் கொற்ற வாயில் பணிந்துகை குவித்துப் புக்கார்
கடிகொள்பூய் கொன்றை வேய்ந்தா ரவர்க்கெதிர் காணக் காட்டும்
படியெதிர் தோன்றி நிற்கப் பாதங்கள் பணிந்து பூண்டு. (ககo)

வே று.

மன்பெ ருந்திரு மாமறை வண்சூழ்ந்
தன்பர் சிந்தை யலர்ந்தசெந் தாமரை
நன்பெ ரும்பர மானந்த நன்மது
வென்ற ரத்து மளித்தெதிர் நின்றன. (ககக)

ஞால மூய்ய நடமன்று ளாடின
*கால ளுருயிர் மாளக் கறுத்தன
மாலை தாழ்குழன் மாமலை யாள்செங்கை
சில மாக வருடச் சிவந்தன. (ககஉ)

நீதி மாதவர் நெஞ்சிற் பொலிந்தன
வேதி யாதவர் தம்மைவே திப்பன
சோதி யாயெழுஞ் சோதியுட் சோதிய
வாதி மாலவன் காணு வளவின. (ககங)

வேத வாரண மேல்கொண் டிருந்தன
பேதை யேன்செய் பிழைபொறுத் தாண்டன
வேத மானவை தீர்க்க விசைந்தன
பூத நாதனின் புண்டரீ கப்பதம். (ககச)

வே று.

இன்னவா றேத்து நம்பிக் கேறுசே வகனூர் தாமு
மன்னிலை யவர்தாம் வேண்டு மதனையே யருள வேண்டி
மன்னுசீ ரடியார் தங்கள் வழித்தொண்டை யுணர நல்கிப்
பின்னையு மவர்க டங்கள் பெருமையை யருளிச் செய்வார். (ககஙி)

பெருமையாற் றம்மை யொப்பார் பேணலா லெம்மைப் பெற்ற
தொருமையா லுலகை வெல்வா ருனமே லொன்று மில்லா
தருமையா நிலையி னின்ற ரன்பினு லின்ப மார்வா
நிருமையுங் கடந்து நின்ற ரிவரைநீ யடைவா யென்று. (ககசு)

நாதனு ரருளிச் செய்ய நம்பியா ரூரர் நாவிங்
கேதந்தீர் நெறியைப் பெற்றே னென்றெதிர் வணங்கிப் போற்ற
நீதியா லவர்க டம்மைப் பணிந்துநீ நிறைசொன் மாலை
கோதிலா வாய்மை யாலே பாடென வண்ணல் கூற. (ககஎ)

தன்னையா ளுடைய நாதன் முனருள் செய்யக் கேட்டுச்
சென்னியால் வணங்கி நின்ற திருமுனைப் பாடி நாட
நின்னவா றின்ன பண்பென் றேத்துகே னிதற்கு யானூர்
பன்னுபா மாலை பாடும் பரிசெனக் கருள்செய் யென்ன. (ககஅ)

வே று.

தொல்லைமால் வரைபயந்த னையாட்கன் றிருப்பாக
னல்லதீர்த் தலருய்ய மறையுளித்த திருவாக்காற்
றில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேனென்
றெல்லையில்லண் புகழனூர் பெற்றிசைப்பா மொழிவென்றூர். (ககக)

மன்னுசீர் வயலாரூர் மன்னவரை வன்றொண்டர்
சென்னியுற வடிவணங்கித் திருவருண்மேற் கொள்பொழுதின்
முன்னமா லயனறியா முதல்வர்தா மெழுந்தருள
வந்நிலைகண் டடியவர்பாற் சார்வதனுக் கணைகின்றார். (உ00)

அரத்தே திருக்கூட்டம் பலமுறையாற் றொழுதன்பு
சேரத்தாழ்ந் தெழுந்தருகு சென்றெய்தி நின்றழியா
வீரத்தா ரெல்லார்க்குந் தனித்தனியே நடியேனென்
றூர்வத்தாற் றிருத்தொண்டத் தொகைப்பதிக மருள்செய்தார். (உ0க)

தம்பெருமான் கொடுத்தமொழி முதலாகத் தமிழ்மாலைச்
செம்பொருளாற் றிருத்தொண்டத் தொகையான திருப்பதிக
மும்பர்பிரான் றனருளு முணர்வுபெற வுலகேத்த
வெம்பெருமான் வன்றொண்டர் பாடியவ ரெதிர்பணிந்தார். (உ0உ)

உம்பர்நா யகரடியார் பேருவகை தாமெய்த
நம்பியா ரூரர்திருக் கூட்டத்தி னடுவணைந்தார்
தம்பிரான் றோழரவர் தாமொழிந்த தமிழ்முறையே
யெம்பிரான் றமர்கடிருத் தொண்டேத்த லுறுகின்றேன். (உ0ங)

தடுத்தாட்கொண்டபுராண முற்றிற்று.

ஆ- திருவிருத்தம் - ங-சுகூ.

சுந்தரமூர்த்திநாயனார் சரித்திரம், இத்தடுத்தாட்கொண்டபுராணம் ஒன்றனே முற்றுறுது, மேல்வரும் எயர்கோன்கலிக்காமநாயனர்புராணம் சேரமான் பெருமாணாயனர்புராணம் திருவெள்ளானைச்சருக்கம் என்பவற்றனும் கூறப்பட்டு முற்றுப்பெறுதலால்; இந்நாயனாது சரித்திரத்துச் சூசனம் திருவெள்ளானைச்சருக்கத் திறுதியிற் செய்யப்படும்.

திருமலைச்சருக்கம் முற்றுப்பெற்றது.

ஆசிரியர் சேக்கிழார்நாயனார், தாம் எடுத்துக்கொண்ட இப்புராணத்தில் முதற்கண் வைத்த திருமலைச்சருக்கத்திலே, இப்பெரியபுராண வரலாற்றைத் திருமலைச் சிறப்பினாலும், தமிழ்நாட்டினுட் சிறந்த சோழமண்டலத்தினது சிறப்பைத் திருநாட்டுச் சிறப்பினாலும், அத்திருநாட்டினுள் விளங்கும் திருவாரூர் என்னும் திருநகரத்தினது சிறப்பை மனுநீதிகண்ட புராணத்தினாலும், அத்திருநகரத்தில் உள்ள சிவாலயத்தில் இருக்கும் தேவாசிரியன் என்னும் ஆயிரக்கான்மண்டபத்தில் எழுந்தருளியிருந்த திருத்தொண்டரது திருக்கூட்டத்தினது சிறப்பைத் திருக்கூட்டச்சிறப்பினாலும், சுந்தரமூர்த்திநாயனார் திருவவதாரஞ்செய்து சிவனாலே தடுத்தாட்கொள்ளப்பட்டுத் திருவாரூரை அடைந்து, அத்திருக்கூட்டத்தைத்தரிசனஞ்செய்து, திருத்தொண்டத்தொகை செய்த வரலாற்றைத் தடுத்தாட்கொண்டபுராணத்தினாலும், அருளிச்செய்தார். இனி, அத்திருத்தொண்டத்தொகையுள் அடங்கிய "தில்லைவாழந்தணீர்" என்பது முதலிய பதினொரு திருப்பாட்டுக்களுள்ளும் அந்தவந்தத் திருப்பாட்டிற் கூறப்படும் அடியார்களது சரித்திரங்களை, அந்தவந்தத் திருப்பாட்டின் முதற் சொற்றொடராற் பெயர் பெற்ற சருக்கத்தாற் கூறத் தொடங்குகின்றார்.

இரண்டாவது

தில்லைவாழந்தணர் சருக்கம்.

தில்லைவாழந்தணர்புராணம்.

ஆதியாய் நடுவு மாகி யளவிலா வளவு மாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா வேக மாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் பேர்த்தி போற்றி. (க)

கற்பனை கடந்த சோதி கருணையே யுருவ மாகி
யற்புதக் கோல நீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்து ணின்று
பொற்புட னடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி. (உ)

போற்றிநீ டில்லை வாழந் தணர்திறம் புகல லுற்றே
னீற்றினு னிறைந்த கோல நிருத்தனுக் குரிய தொண்டாம்
பேற்றினுர் பெருமைக் கெல்லை யாயினுர் பேணி வாழு
மாற்றினுர் பெருகு மன்பா லடித்தவம் புரிந்து வாழ்வார். (ஊ)

பொங்கிய திருவி னீடும் பொற்புடைப் பணிக ளேந்தி
மங்கலத் தொழில்கள் செய்து மறைகளாற் றுதித்து மற்றுங்
தங்களுக் கேற்ற பண்பிற் றரும்பணித் தலைகின் றுய்த்தே
யங்கணர் கோயி லுள்ளா வகம்படித் தொண்டு செய்வார். (எ)

வருமுறை யெரிமூன் றோம்பி மன்னுயி ரருளான் மல்கத்
தருமமே பொருளாக் கொண்டு தத்துவ நெறியிற் செல்லு
மருமறை நான்கி னோடா றங்கமும் பயின்று வல்லார்
திருநடம் புரிவார்க் காளாந் திருவினுற் சிறந்த சீரார். (ஏ)

மறுவிலா மரபின் வந்து மாறிலா வொழுக்கம் பூண்டா
ரறுதொழி லாட்சி யாலே யருங்கலி நீக்கி யுள்ளா
ருறுவது நீற்றின் செல்வ மெனக்கொளு முள்ள மிக்கார்
பெறுவது சிவன்பா லன்பாம் பேறெனப் பெருகி வாழ்வார். (ஐ)

ஞானமே முதலா நான்கு நவையறத் தெரிந்து மிக்கார்
தானமுந் தவமும் வல்லார் தகுதியின் பகுதி சார்ந்தா
ரூனமே லொன்று மில்லா ருலகெலாம் புகழ்ந்து போற்று
மானமும் பொறையுந் தாங்கி மனையறம் புரிந்து வாழ்வார். (ஒ)

செம்மையாற் றணிந்த சித்தைத் தெய்வமே தியர்க ளாஞர்
மும்மையா யிரவர் தாங்கள் போற்றிட முதல்வ ஞரை
யிம்மையே பெற்று வாழ்வா ரினிப்பெறும் பேரூன் றில்லார்
தம்மையே தமக்கொப் பான நிலைமையாற் றலைமை சார்ந்தார். (ஓ)

இன்றிவர் பெருமை யெம்மா லியம்பலா மெல்லைத் தாமோ
தென்றமிழ்ப் பயனு யுள்ள திருத்தொண்டத் தொகைமுன் பாட
வன்றுவன் மிறண்டார் தம்மை யருளிய வாரூ ரண்ணன்
முன்றிரு வாக்காற் கோத்த முதற்பொரு ளாலு ரென்ருல். (கூ)

அகலிடத் துயர்ந்த தில்லை யந்தண ரகில மெல்லாம்
புகழ்திரு மறையோ ரென்றும் பொதுநடம் போற்றி வாழ்க
நிகழ்திரு நீல கண்டக் குயவனர் நீடு வாய்மை
திகழுமன் புடைய தொண்டர் செய்தவங் கூறலுற்றாம். (கo)

தில்லைவாழந்தணர்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - நூறுகூ.

சூசனம்.

க. சிதம்பரத்தினது மகிமை.

சாந்தோக்கியோபநிடதத்திலே பிரமபுரத்திலுள்ள தகரமாகிய புண்டரீக வீட்டினுள்ளே இருக்கும் ஆகாசமத்தியில் விளங்கும் அதிசூக்குமசித்தை அறிதல் வேண்டுமென்று தகரவித்தை சொல்லப்பட்டது. இங்கே பிரமபுரமென்றது இச்சரீரத்தையும், புண்டரீகவீடென்றது இருதயகமலத்தையும், ஆகாசமென்றது பராசத்தியையும், அதிசூக்கும சித்தென்றது பரப்பிரமமாகிய சிவத்தையு மென்றறிக. புறத்தும், இப்படியே இப்பிரமாண்டம் பிரமபுரமெனவும், இப்பிரமாண்டத்தினுள்ளே இருக்கும் தில்லைவனம் புண்டரீகவீடெனவும், தில்லைவனத்திலிருக்கும் ஆகாசம் பராசத்தியாகிய திருச்சிற்றம்பலமெனவும், அத்திருச்சிற்றம்பலத்திலே நிருத்தஞ்செய்யும் பரப்பிரமசிவம் அதிசூக்குமசித்தெனவும் சொல்லப்படும். இவ்வாகாசம் பூதாகாசம்போற் சடமாகாது சித்தேயாம்; ஆதலால், சிதம்பரமெனப்படும். இச்சிதம்பரம் எந்நாளும் நீக்கமின்றி விளங்குந்தானமாதலால், தில்லைவனமும் சிதம்பரமெனப் பெயர்பெறும்.

இத்தகரவித்தையை உபாசிக்கும் முறைமை கைவல்லியோபநிடதத்தில் சிவனது தகரோபாசனவிதிப்பிரகரணத்திலே "ஏகாந்தஸ்தானங்களிலே சுகாசனத்தில் இருந்து, சுத்தனுகி, நேராகிய கழுத்துத் தலை உடம்புகளை உடையனுப், அத்தியாச்சிரமஸ்தனுய், இந்திரியங்கள் அனைத்தையும் அடக்கி, பத்தியால் தனது ஆசிரியரை இறைஞ்சி, இருதய புண்டரீகத்தைத் துகளற்ற சுத்தமாகக்கருதி, அதன் மத்தியத்திலே, தெளிவுடையவராய், சோகம் இல்லாதவராய், எண்ணப்படாதவராய், வெளிப்படாதவராய், அனந்தரூபராய், சிவனுய், அமிர்தராய், பிரமயோனியாய், தத்பதமாய், ஆதிமத்தியாந்தவினேராய், ஏகராய், விபுவாய், சிதானந்தரூபராய், அரூபராய், அற்புதராய், உமாசகாயராய், பரமேசுவராராய், பிரபுவாய், முக்கண்ணராய், நீலகண்டராய், பிரசாந்தராய், பூதயோனியாய், சமஸ்தசாட்சியாய் இருப்பவரைத் தியானித்து, (அதனுல்) முனியாகி, இருளின்மேற்போவான். அவர் பிரமா; அவர் சிவன்; அவர் இந்திரன்; அவர் அழிவற்றவர்; மேலானவர்; சுவப்பிரகாசர்; அவரே விஷ்ணு; அவர் பிராணன்; அவர் காலன்; அக்கினி; அவர் சந்திரன்; அவரே இருந்ததும் இருப்பதுமாகிய எல்லாமானவர்; என்றும் உள்ளவர். அவரை அறிந்து, (அதனுல்) மிருத்தியு வைக்கடப்பன். முத்திக்கு வேறுவழி இல்லை." என்று கூறப்பட்டது. இதனுல் பிரம விஷ்ணு ருத்திரர்களோடு கூடிய சகல சகத்தும் சிவனது லீபூதியே ஆதலால் சிவனே சருவோற்கிருஷ்டர் என்பது தெளிவுறுத்தப்பட்டமை காண்க. மிருத்தியு என்பது ஆணவமலம்; அது மிருகேந்திரத்திற் கண்டது.

மானவ புராணத்து ஆரும் அத்தியாயத்தில் "மூன்னே சத்திய பராயணனுகிய ஆசுவலாயன முனி பகவானும் பரமேஷ்டியுமாகிய செகந்நாதரை அடைந்து" என் றற்றொடக்கத்தால் ஆசுவலாயனர் விஞவினமைகூறி, அதற்குப் பரமேஷ்டி விடை கூறினமை சொல்லத்தொடங்கி, "எண்ணப்படாதவராய் வெளிப்படாதவராய்" என் பது முதலாகக்கொண்டு விரிவாகச் சிவத்தியானப் பிரகாரத்தைக்காட்டி; "இப்படி முனியானவன், நேரேசாகூியாய், இருளைக்கடந்தவராய், பூதயோனியாய், புரப்பகை வராய் இருப்பவரைத் தியானித்து, தனது ஆத்துமவித்தையினல் முத்தி அடைவன். தியானிக்கப்படும் பொருளாகியவர் சாம்பசிவன்; சகாதகர்: பிரமாவிஷ்ணு முதலிய ரூபங்களாகக் கூறுபட்டாற் போலிருப்பர். அவர் பிரமா, அவர் சிவன்." என்று தொடங்கி "அவரை அறிந்து பிரத்தியவைக்கடப்பான். அவரைப் பிரத்தியகான் மாவாக அறியும் அறிவேயன்றி முத்திக்கு வேறுவழி இல்லை." என்னுந் தீணையால் இந்தச் சுருதிப்பொருளே காட்டப்பட்டது. பிரமகீதையிலும் இப்பொருளே உணர்த் தப்பட்டது.

தாவரமாகிய அண்டமும் சங்கமமாகிய பிண்டமும் சமமாமாதலால், பிண்டமா கிய சரீரத்தில் இடைக்கும் பிங்கலேக்கும் நடுவிலுள்ள சுழுமுனுநாடியும், பிரமாண் டத்திலுள்ள இப்பரதகண்டத்தில் இலங்கைக்கும் இமயமலைக்கும் நடுவிலுள்ள தில் லேயும், கருணுநிதியாகிய சிவன் ஆனந்தநிருத்தஞ்செய்யும் ஸ்தானமாம். அது "வலங் கைமான் மழுவோன் போற்றும் வாளர வரசை நோக்கி—யலைத்திடும் பிண்ட மண்ட மவைசம மாத லாலே—யிலங்கைநே நிடைபோ மற்றை யிலங்குபிங் கலேயா நாடி—நலங்கிள ரிமய நேர்போ நடுவுளுஞ் சுழுனே நாடி." "நாடரு நடுவி ணடி நலங்கிளர் தில்லே நேர்போய்க்—கூடுமய் கதனின் மூலக் குறியுள ததற்குத் தென் னர்—மாடுறு மறைகள் காணு மன்னுமம் பலமொன் றுண்டங்—காடுது மென்று மென்ரு னென்னையா ளுடைய வையன்." என்னுங் கோயிற்புராணச் செய்யுள்களா லும், "இடம்படு மூடம்பின் மூலத் தெழுந்தநற் சுழுனேநாடி—யுடன்கிள ரொளியே யாகி யொளியிலஞ் செழுத்து மொன்ரும்—நெடுங்குழ லோசை யாகி நிலவுமவ் வோசை போயங்—கடங்கிய விடமே யென்று மாடமம் பலமதாகும்." "எண்டரு பூத மைந்து மெய்திய நாடி மூன்று—மண்டல மூன்றுமாகி மன்னிய புணர்ப்பி ஞலே—பிண்டமு மண்ட மாகும் பிரமனே டைவராகக்—கண்டவர் நின்றவாறு மிரண்டினுங் காணலாகும்." "ஆதலா லிந்த வண்டத் தறிவரும் பொருளா யென் றுங்—தீதிலா மூல நாடிற் றிகழ் சிவலிங்க மேனி—மீதிலா மந்த நாத வெளியின்மே லொளிமன் றங்குக்—காதலான் மடவாள் காணக் கருத்துற நிருத்தஞ் செய்வோம்." என்னுந் திருவாதவூரடிகள் புராணச் செய்யுள்களாலும், அறிக.

இத்திருநிருத்தமாவது பஞ்சகிருத்தியமேயாம். அது "இருவகை யிலைகடந்த லியல்புரும் மொளியா ஞான—வுருவமா னந்த மான வுயிரியாம் பெயரெமக்குப்—பரபதம் பரம ஞானம் பராற்பர மிலது காத்த—நிருமலி யிச்சை செய்தி திகழ்நட மாகு மன்றே." என்று கோயிற்புராணத்திலும், "அந்தகன் னடமே தென்னி லுலர் தொழி னடத்த லாகும்—புந்தம தகற்று மிந்தப் படிவமு மதுவே யாகும்—வந்துல கத்தில் யாருங் காண்பரேல் வழுவா முத்தி—தந்தரு ளளிக்குந் தெய்வத் தலமுமத் தலமே யாகும்." என்னுந் திருவாதவூரடிகள் புராணத்திலும், "ஐந்து—நலமிகு தொழில்க ளோடு நாடக நடிப்ப ஞதன்." என்று சிவஞானசித்தியாரிலும், "தோற் றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற்—சாற்றியிடு மங்கியிலே சங்கார-மூற்றமா—யூன்று மலர்ப்பதத்தே யுற்ற திரோதமுத்தி—நான்ற மலர்ப்பதத்தே நாடு." "மாயை தனேயுதறி வல்வினேயைச் சுட்டுமலஞ்—சாய வழுக்கியெரு டாளெடுத்து - நேயத்தா—லானந்த வாரியியி லான்மாவைத் தானழுத்த—ருனெந்தை யார்பரதந் தான்." என்று உண்மை விளக்கத்திலும், "மன்று ணிறைந்து பிறவி வழக்கறுக்க—நின்ற நிருத்த நிலைபோற்றி." என்று போற்றிப்பஃறொடையிலும், "நீங்கலருஞ் புலத்

தொடர்ச்சி நீங்க மன்று ணின்றிமையோர் துதிசெய்ய நிருத்தஞ்செய்யும்." என்று சிவப்பிரகாசத்திலும் கூறியவாற்றாற்காண்க. இங்ஙிருத்தத்தைத் தரிசித்தலால் விளையும் ஆனந்தம், "புளிக்கண் டவர்க்குப் புனலூறு மாபோற்—களிக்குந் திருக்கூத்துக் கண்டவர்க் கெல்லாந்—துளிக்குங்கண் ணீருடன் சோருநெஞ் சத்திரு—ளொளிக்கு மானந்த வமுதூறு முள்ளத்தே." என்னுந் திருமந்திரத்தாலும், "தினைத்தனை புள்ள தோர் பூவினிற்றே னுண்ணுதே—தினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தோறு மெப் போது—மனைத்தெதும் புண்ணெக வானந்தத் தேன்சொரிபுங்—குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்மீ." என்னுந் திருவாசகத்தாலும், உணர்க.

உ. திருவாழந்தணர்களது மகிமை.

இத்தலைப் பெருஞ்சிறப்பினதாகிய சிதம்பரஸ்தலத்தில், வியாக்கிரபாதமுனிவர் பதஞ்சலிமுனிவர் என்பவர்களோடு, இத்திருவாழந்தணர் மூவாயிரரும், பராசக்தியால் அதிட்டிக்கப்பட்ட சுத்தமாயாமயமாகிய கனகசபையின்கண்ணே பரம காருண்ணிய சமுத்திரமாகிய சிவன் செய்தருளும் ஆனந்த தாண்டவத்தைத் தரிசனஞ்செய்து பேரானந்தம் அனுபவித்துக் கொண்டு இருக்கும்போது; பிரமாவானவர் கங்காதீரத்தில் உள்ள அந்தர்வேதியிலே தாம் தொடங்கிய யாகத்தின்பொருட்டு, இச்சிதம்பரத்தில் வந்து, வியாக்கிரபாத முனிவரது அநுமதியினாலே இவர்களை அழைத்துக்கொண்டு போயினர்: பின்பு அம்முனிவரது ஏவலினாலே, இரணியவன்மச்சக்கிரவர்த்தியானவர் அந்தர்வேதியிற்சென்று, இவ்வந்தணர் மூவாயிரரையும் வணங்கி, தேர்களில் ஏற்றி அழைத்துக்கொண்டு, சிதம்பரத்தை அடைந்தார். உடனே இவர்கள் சிதம்பரத்துக்கு வடமேற்றிசையிலே தேர்களை நிறுத்தி, இப்பாலே வந்து, தங்களை எதிர்கொண்ட வியாக்கிரபாதமுனிவருக்குத் தங்களை எண்ணிக் காட்டினர்கள். அப்பொழுது, அம்மூவாயிரர்களுள், ஒருவரைக் காணமல், இரணியவன்மச்சக்கிரவர்த்தி மனந்திகைத்துநிற்ப; அடியார்க்கெளியராகிய பரமசிவன், தேவர்கள் முதலிய யாவரும் கேட்ப இவ்விருடிகளெல்லாரும் எமக்கு ஒப்பாவர்கள்; நாமும் இவ்விருடிகளுக்கு ஒப்பாவோம்; ஆதலால், நம்மை இவர்களுள் ஒருவராகக் கைக்கொள் என்று திருவாய்மலர்ந்தருளினர். இத்திருவாக்கைக்கேட்ட சக்கிரவர்த்தியானவர், சபாநாதரே இவ்விருடிகளில் நாம் ஒருவரென்று சொல்லத்தக்க பெருமையையுடையர்கள் இவர்கள் என்று மனம் நடுங்கி, இவர்களை நமஸ்கரித்தார். இவ்வந்தணர்கள் இத்திருவாக்கைக் கேட்டவுடனே, மிக அஞ்சி, பூமியிலே தண்டாகாரமாய் வீழ்ந்து, மீள எழுந்து வாழ்வு பெற்று, உன்மத்தராகி, ஸ்தோத்திரம் பண்ணி, சுவாமீ! சிறியேங்களை அகத்தடிமைகளாகக் கொண்டருளும் என்று பிரார்த்தித்து, கூத்தாடினர்கள். இச்சரித்திரம் கோயிற் புராணத்தில் விரித்துரைக்கப்பட்டது.

இவ்வந்தணர்கள் வேதாகமங்களை விதிப்படி ஓதி, அவற்றின் உண்மைப்பொருளை ஐயந்திரிபற உணர்ந்து, அவைகளில் விதித்தவழி வழுவாது ஒழுகும் மெய்யன்பர்கள் ஆதலால்; இவர்கள் தம்பால் வைத்த அன்பின் பெருமையையும், அவ்வன்புக்கு எளிவந்த தமது பெருங்கருணையையும், சருவான்மாக்களும் தெளிர்ந்து தம்மேலும் தமதன்பர்களாகிய இவர்கள்மேலும் பத்திசெய்து முத்தி பெற்றுய்தற்பொருட்டே, நடேசர் இவ்வாறு அருளிச்செய்தார்.

ஊ. வேதவுணர்ச்சி.

வேதம் இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என நான்காம். அவற்றுள், இருக்கு வேதம் இருபத்தொருசாகையும், யசுர்வேதம் நூற்றொருசாகையும், சாமவேதம் ஆயிரஞ் சாகையும், அதர்வவேதம் ஒன்பதுசாகையும் உடையனவாம். இவை அற்பச்சுருதிவாக்கியம் பிரபலச்சுருதிவாக்கியம் என இருபகுதிப்படும். அவற்றுள், அற்பச்சுருதிவாக்கியம் கர்மானுட்டானக்கிரமங்களைச் சொல்லும். பிரபலச்சுருதிவாக்கியம் அத்தியாத்ம

கடி

ஞானத்தைச்சொல்லும். இது முப்பத்திரண்டு உபநிஷத்தாய் இருக்கும். வேதம் என்னுஞ்சொல் அறிதற்கருவி எனப் பொருள்படும். இவ்வேதத்துக்கு அங்கங்கள் சிட்சை, வியாகரணம், நிருத்தம், சோதிடம், கற்பம், சந்தோவிசிதி என ஆறும். அவற்றுள், சிட்சையாவது வேதத்தின் உச்சாரணலக்ஷணத்தை உணர்த்துவதாம். வியாகரணமாவது வேதத்தின் பதலக்ஷணத்தை விவரிப்பதாம். நிருத்தமாவது வேதத்தின் பதங்களுக்கு விவரணங்கூறுவதாம். சோதிடமாவது இலக்கினம், திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் முதலியவற்றால் வைதிகருமங்களுக்குக் காலம் அறிவிப்பதாம். கற்பமாவது ஆசுவலாயநீயம், போதாயநீயம், ஆபஸ்தம்பம் முதலிய சூத்திரரூபத்திருந்து, வைதிகருமங்களைப் பிரயோகிக்கும் முறைமையைக் கற்பிப்பதாம். சந்தோவிசிதியாவது வேதத்தில் உக்ததுமுதலிய சந்தோபேதங்களுக்கு அக்ஷரசங்கியை கற்பிப்பதாம். இவ்வாறும் உணராக்கால்; வேதங்களை ஓதுதலும், அவற்றின்பொருளை உணர்தலும், அவைகளில் விதித்தவழி ஒழுகுதலும் ஏலாவாம். ஆதலால், இவை ஒருதலையாக உணர்தற்பாலனவாம்.

இத்தில்லைவாழ்தணர்கள் இவ்வேத வேதாங்கங்களை ஓதி உணர்ந்தோர்களென்பது இங்கே "அருமறை கான்கினோடா றங்கமும் பயின்று வல்லார்." என்பதனால் உணர்த்தப்பட்டது. வேதங்களை ஓதி உணர்ந்தவழியும், அவற்றுள் விதித்த ஒழுக்கம் இல்வழிப் பயனில்லை ஆதலால்; இவர்கள் அவ்வொழுக்கத்திற் சிறிதும் வழுவாமை, இங்கே "வருமுறை யெரிமூன் றோம்பி மன்னுயி ரருளான் மல்கத்—தருமமே பொருளாக் கொண்டு." "மறுவிலா மரபின் வந்து மாறிலா வொழுக்கம் பூண்டா—ரறுதொழி லாட்சி யாலே யருங்கலி நீக்கி யுள்ளார்." "தானமுந் தவமும் வல்லார் தருதியின் பருதி சார்ந்தா—ரனமே லொன்று மில்லா ருலகெலாம் புகழ்ந்து போற்று—மானமும் பொறையுந் தாங்கி மனையறம் புரிந்து வாழ்வார்." என்பனவற்றால் உணர்த்தப்பட்டது. திருஞானசம்பந்தமூர்த்திநாயனரும் "கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே—செற்றார் வாழ்தில்லைச் சிற்றம்பலம்." என்று அருளிச்செய்தார். ஒழுக்கம் இல்வழி வேதம் ஓதலாற் பயனில்லையென்பது "மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்—பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்." என்னுந் திருக்குறளால் அறிக.

வேதங்களை ஓதியும், முனிவர்களது சாபத்தினாலே அவற்றின் மெய்ப்பொருட்டெளிவு பிறவாமையால், சிவனையும் சிவசின்னங்களாகிய விபூதி ருத்திராக்ஷங்களையும் இகழ்ந்து, பிறரைப் பரம்பொருளெனக்கொண்டு, ஊர்த்துவ புண்டரமுதலியன இடுவோரும், விபூதி ருத்திராக்ஷந்தரித்தும், விஷ்ணுமுதலிய பசுக்களைப் பசுபதியாகிய சிவனோடு சமமெனக்கொள்வோரும் ஆகிய புல்லறிவாளர்போலாகாமல்; இவ்வந்தணர்கள், சிவனொருவரே பரமபதி என்பதும் விபூதி ருத்திராக்ஷம் தரித்துச் சிவனை வழிபடினன்றி முத்தி சித்தியா தென்பதுமே வேதத்துணிவாமெனத் தெளிந்து, அச்சிவனையே வழிபடும் மெய்யன்பர்களென்றறிக. அது இங்கே "நீற்றினு னிறைந்த கோல நிருத்தனுக் குரிய தொண்டாம்—பேற்றினர் பெருமைக் கெல்லை யாயினர் பேணி வாழ்—மாற்றினர் பெருகு மன்பா லடித்தவம் புரிந்து வாழ்வார்." "பொங்கிய திருவினீடும் பொற்புடைப் பணிக ளேந்தி—மங்கலத் தொழில்கள் செய்து மறைகளாற் றுதித்து மற்றுந்—தங்களுக் கேற்ற பண்பிற் றரும்பணித் தலைகின் றுய்த்தே—யங்கணர் கோயி லுள்ளா வகம்படித் தொண்டு செய்வார்." "திருநடம் புரிவார்க் காளார் திருவினுற் றெந்த சோர்" "உறுவது நீற்றின் செல்வ மெனக்கொளு முள்ள மிக்கார்.

பெறுவது சிவன்பா லன்பாம் பேறெனப் பெருகி வாழ்வார்." என்பனவற்றால் உணர்த்தப்பட்டது.

ச. சைவாகமவுணர்ச்சி.

ஆகமமானது காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுரம், கிரணம், வாதுளம் என இருபத்தெட்டாம். இவ்வாகமங்கள் மாந்திரமெனவும், தந்திரம் எனவும், சித்தாந்தம் எனவும் பெயர்பெறும். இவ்விருபத்தெட்டுச் சிவாகமங்களுக்கும் ஒவ்வொன்றுக்குக் கோடி கிரந்தமாக இருபத்தெட்டுக்கோடி கிரந்தங்களாம். இவை ஞானபாதம், யோகபாதம், கிரியாபாதம், சரியாபாதம் என்று தனித்தனி நான்குபாதங்கள் உடையனவாயிருக்கும். இவற்றுள் ஞானபாதம் பதிபசுபாசம் என்னுந் திரிபதார்த்தங்களின் ஸ்வரூபத்தையும், யோகபாதம் பிராணயாமம் முதலிய அங்கங்களோடும் கூடிய சிவயோகத்தையும், கிரியாபாதம் மந்திரங்களின் உத்தாரம் சந்தியாவந்தனம் பூசை செபம் ஓமம் என்பனவற்றையும் சமய விசேஷ நிருவாண ஆசாரியாபிஷேகங்களையும், சரியாபாதம் சமயாசாரங்களையும், உபதேசிக்கும். ஆகமம் என்பது (பரமாப்தரினின்றும்) வந்தது எனப் பொருள்படும். இன்னும், ஆ என்பது பாசம் எனவும், க என்பது பசு எனவும், ம என்பது பதி எனவும் பொருள்படுதலால், ஆகமம் என்பதற்குத் திரிபதார்த்த ஸம்பந்தத்தை உணர்த்தும் நூல் என்பதே சிறந்த பொருளென்க. ஆ என்பது சிவஞானமும், க என்பது மோக்ஷமும், ம என்பது மலநாசமுமாம் ஆதலால்; ஆன்மாக்களுக்கு மலத்தை நாசம்பண்ணி, சிவஞானத்தை உதிப்பித்து, மோக்ஷத்தைக் கொடுத்தல்பற்றி, ஆகமமெனப் பெயராயிற்றென்றுகூறுதலும் ஒன்று. இவ்வாகமங்களுக்கு வழிநூல் காரசிங்கம் முதல் வீசுவான்மகம் ஈறுகிய உபாகமங்கள் இருநூற்றேழாம்.

இவ்வந்தணர்கள் சிவதீக்ஷைபெற்று, சைவாகமங்களை ஓதி உணர்ந்து, அவைகளால் உணர்த்தப்படும் நான்கு பாதங்களையும் அனுட்டிப்பவர்களாம். அது இங்கே "ஞானமே முதலா நான்கு நவையறத் தெரிந்து மிக்கார்." என்பதனால் குறிப்பிக்கப்பட்டது. சிவதீக்ஷை பெற்றமையும் சைவாகமங்களை ஓதி உணர்ந்தமையும் இங்கே பெறப்பட்டில அன்றேயெனின்; அறியாது கூறினாய்: ஞானமுதலிய நான்குபாதப் பகுப்பிலக்கணம் சிவாகமங்களினன்றிப் பெறப்படாமையால், ஞானமுதலிய நான்கும் உணர்ந்தோர்கள் எனவே, அவைகளை உணர்த்தும் சைவாகமங்களை ஓதினோர்கள் என்பதும், சிவதீக்ஷை பெற்ற பிராமணர் முதலிய நான்குவருணத்தாருமே சைவாகமத்துக்கு அதிகாரிகள் என்று சிவாகமம் செப்புதலால், சைவாகமங்களை ஓதினோர்கள் எனவே, அவ்வோதுதைக்குமுன் பெறற்பாலதாகிய சிவதீக்ஷை பெற்றோர்கள் என்பதும், தாமே பெறப்படும். இவர்கள் சிதம்பராலயத்திற் சிவாகம விதிப்படியே நித்தியபூசை உற்சவம் முதலியன செய்தலானும், பரார்த்தலிங்கப்பிரதிஷ்டை, பரார்த்த பூசை, உற்சவம் முதலியனவற்றை விதிப்பன சிவாகமங்களேயன்றி வேதங்கள் சிருதிகளன்மையானும், இவர்கள் சிவாகமவுணர்ச்சியுடையார்களென்பதே சித்தம். சிவதீக்ஷைபெற்றே சிவாகமங்களை ஓதல்வேண்டும் என்பதற்குப் பிரமாணம். சுப்பிரபேதம். "இந்தச் சுத்தசைவாகமம் எல்லார்க்கும் கொடுக்கத்தக்கதுமன்று. விளக்கத்தக்கதுமன்று: தீக்ஷை பெற்றவனும், நிலையுடையோனும், சிவபத்திமானும் இருப்பவனுக்கே விளக்கத்தக்கது. எனையோர்க்கு விளக்கல் குற்றம் எனப்படும்." என்பதாம். அங்ஙனமாயினும், சிவாகமவிதிக்கு மாறுபட்டு, சிவதீக்ஷை பெறுமல் சிவாகமங்களை ஓதினோர்கள் எனக் கொள்ளலாகாதோ எனில்; "தெரிந்து மிக்கார்" என்பது தெரிந்தமையால் மிக்கோர் எனப் பொருள்பட்டு, உண்டபெரிதீர்ந்தான் என்றுரைபோலக் காரணகாரியப்பொருட்டாய் நிற்றலாலும், இவர்கள் சிவாகமவிதிக்கு மறுதலைப்பட்

செவதீக்ஷை யின்றிச் சிவாகமங்களே ஒதி உணர்ந்தார்கள் எனக் கொளில், அவ் வுணர்ச்சியால் இவர்கட்கு மேன்மைகூறுதல் கூடாமையாலும், அது பொருந்தாதென்க. இன்னும், இவர்கள் சமயதீக்ஷை, விசேஷதீக்ஷை, நிருவாணதீக்ஷை, ஆசாரியாபிஷேகம் என்னும் நான்கும் பெற்றோர்கள் எனவும், மூலாகமங்களேயும் உபாகமங்களேயும் ஒதி உணர்ந்தோர்கள் எனவும், சிவரகசியத்து நவமாம்சத்தில் இருபத்தைந்தாம் அத்தியாயத்திலும் சிதம்பரமான்மியத்திலும் கூறப்படுதலால்; யாம் கூறியதே பொருத்தம். சிவாகமத்தில் கூறிய தீக்ஷையின் உயர்ச்சி, வாயவ்வியசங்கிதையிலே "சைவநூலிற் கூறப்பட்டதும் பாசம் மூன்றையும் தவிர்ப்பதும் மேலானதுமாகிய தீக்ஷையைத் தவிர வேறு யாதொரு ஆச்சிரமமும் இவ்வுலகத்திலே மாந்தருக்கு மேன்மை அன்று: ஆதலால், தீக்ஷையினுற்றோன் மோக்ஷம்: ஆச்சிரமங்களினுலும் மற்றைக் கருமங்களினுலும் மோக்ஷம் இல்லே. அத்துவசுத்தியின்றி முத்தியை விரும்பும் மனிதர் கோலின்றி நடக்கத்தொடங்கிய குருடர்போல்வர்; தோணி இன்றிக் கடலைக் கடக்க விரும்பினவர்போல்வர்." என்று கூறுமாற்றுல் அறிக. இனிச் சைவாகமப் பெருமை சிறிது கூறுவாம்.

ஆகமமென்பது ஆப்தவாக்கியம். ஆகமங்கள் லௌகிகம், வைதிகம், அத்தியான்மகம், அதிமார்க்கம், மாந்திரம் என ஐவகைப்படும். தற்காலத்திற் பயன்தருவது லௌகிகம்; காலாந்தரத்திற் பயன்தருவது வைதிகம்; ஆத்துமவிசாரவியற்கையது அத்தியான்மகம்; யோகவியற்கையது அதிமார்க்கம்; சிவஞானவியற்கையது மாந்திரம் எனப்படும். அவற்றுள், மாந்திரம், பிறநூல்களேப் பூருவபக்ஷமாகக் கீழ்ப்படுத்தி, மேற்பட்டு விளங்கும் காமிகம் முதலிய சைவாகமங்கள். ஆகமாந்தம் என்னும் ஞானபாதப்பகுதி யோகரூடிநாமமாகிய சித்தாந்தம் என்னும் பெயரை உடையது. அது இரத்தினத்திரயத்திலே "சித்தாந்தமே சித்தாந்தம், அவைக்கு வேறுனவை பூருவபக்ஷங்கள்." என்றும், காந்தத்திலே "இந்த எல்லேயில் சிவன் வெள்ளிமலேயாகிய கைலாசத்திலே சனகர் முதலிய முனீந்திரர்களுக்குத் திரிபதார்த்தங்களினுலே சம்மிதமாகியும் இரகசியமாகியும் ஆகமாந்தம் என்னும் பெயர்த்தாகியும் உள்ள சித்தாந்தத்தைச் சொல்லிக்கொண்டிருந்தார்." என்றும், காமிகத்திலே "இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்பவை சிவனது மற்றை முகங்களிற் பிறந்தன; காமிகம் முதலிய சிவ. ஞானம் ஊர்த்துவச் சுரோதோற்பவங்களாகி, மேன்முகத்திற் பிறந்தன. முன்கூறிய சகலநூல்களேயும் பரமசிவன் பூர்வபட்சமாகச் சொன்னுர்; அவற்றை எல்லாம் கீழ்ப்படுத்தி, பரமார்த்தமாகத் தவிரற்பாலனவும் கொள்ளற்பாலனவும் ஆகிய பொருள்களே நிச்சயிக்கும் சிவசித்தாந்தத்தைச் சொன்னுர். சித்தாந்தமாவது காமிகம் முதலியனவாம். இதில் உயர்ந்தது பிறிதொன்றும் இல்லே. இந்தச் சைவநூலே மூலமாம். சதுர்வேதங்களும் இதினின்றும் பிறந்தனவாம். சைவமே வைதிகம் எனப்படும்; வைதிகமே சைவம் எனவும்படும். சைவமானது வைதிகத்தில் அடங்கியும் அடங்காமலும் இருக்கும். வைதிகமும் சைவத்திற்முழ்ந்தது: முனிவரரே, அற்றுயினும், சைவம் வேத்ப்பொருளோடு ஒற்றுமையாய் இருத்தலால், வைதிகம் என்றும் வேதசாரம் என்றும் கூறப்படும். சிவப்பிரகாசமாகிய சிவஞானம் பரஞானமாம்; பசுபாசபதார்த்த போதகமாகிய வேதம் முதலியன அபரஞானமாம். இராத்திரியில் மனிதரது கண்ணும் பூனேயின் கண்ணும் விலக்ஷணமாய் இருப்பதுபோல, இந்தப் பரஞானமும் அபரஞானமும் விலக்ஷணமாய் இருக்கும்." என்றும், கூறுமாற்றுல், அறிக. லௌகிகம் முதலிய ஐந்து சாஸ்திரங்களும் முறையே ஒன்றற்கொன்று ஏற்றமுடையன.

காமிகத்திலே "சித்தாந்தம் மந்திர தந்திரமாகும்; அதிமார்க்கம் அதனிற்சூழ்ந்தது; அத்தியான்மகம் அதனிலுந்தாழ்ந்தது; அதிலும் தாழ்ந்தது வைதிகம்; வைதிகத்திலும் தாழ்ந்தது லௌகிகம்." என்று சொல்லப்பட்டது.

சைவாகமங்கள் வைதிகவாகியம் ஆதலில் அப்பிரமாணங்கள் என்று சில மூடர் கூறுவர். "வேதாந்த நிஷ்டை பெற்றுக் களங்கமற்றஞானிகளும், எனது சிவாகமத்திலே தற்பரர்களாகி ஞானபாதத்திலே நிலைநின்றேரும் ஆகிய இருவகையோரும், பெறற்கரிய சாயுச்சியம் பெறுவர்கள். கருமத்தையும் பிரமத்தையும் உணர்த்தும் வேதாகமம் என்று பிரசித்தம்பெற்ற இரண்டு மார்க்கங்களிலும் நில்லாத பாவிகள் சாத்திரத்திற்கூறிய நால்வகைத்தண்டங்களாலும் தண்டிக்கற்பாலர்கள்." என்னும் காந்தசம்பவ சிதம்பரமான்மியத்தில் சிவன் கூறிய பொருளே உடைய வியாசவாக்கியத்தினுலே, அது பேதைமையாம் எனமறுக்க.

சைவாகமங்களுக்கு வேதவாகியத்தன்மை எந்த நியாயத்தினுலே கூறியது? வேதப்பொருளுக்கு விருத்தத்தன்மையே வேதவாகியத்தன்மை எனில்; அப்போது வேதத்திலும், கருமத்தையும் பிரமத்தையும் உணர்த்தும் பூருவோத்தர காண்டங்கட்கு விருத்தத்தன்மை உண்மையால், அந்தப்பிரசங்கம் உண்டாம். அங்கே இலக்கணேயால் தாம் கருதிய பொருளில் முடிவுபெறுமெனில், அது எங்கும் ஒக்கும். வேதத்துக்குவேறுய் இருக்குந்தன்மையே வாகியத்தன்மை எனில், அப்போது மிருதிகளும் அப்பிரமாணம் எனக்கொள்ளப்படும். வேதத்தை மூலமாகக் கொள்ளாததன்மை எனில், அப்போது வேதத்துக்கும் வேதத்தை மூலமாகக்கொள்ளாத தன்மை உண்மையால், வேதத்துக்கே அப்பிராமாண்ணியப் பிரசங்கம் வரும். ஆதலால், வேதப்பிராமாண்ணியத்திலே நித்தியத்துவமும் வேதத்தை மூலமாக உடைமையாதலும் முடிவல்ல; மற்றென்னெனில், அபௌருஷேயத்துவமேயாம். வேதம் சுத்த சைவ சித்தாந்தம் என்பவை ஒருவாற்றுல் ஒவ்வோரிடத்தில் விருத்தப்பொருளே உணர்த்துவனவாயினும், சாமானிய விசேஷத்தன்மையால் ஐக்கம் உள்ளனவாயேயிருக்கும். வியாகரணத்திலே, இகாரம் முதலியவற்றிற்கு ஆதேசமாக உயிர்வருவழி யகாரமுதலியன வரும் என்று பொதுச்சூத்திரத்தில் விதித்தவிதி சிலவிடத்து அகாரமுதலியவற்றிற்குச் சவர்ணம் வரிற் நீர்க்கமாம் என்று சிறப்புச் சூத்திரத்தால் விதிக்கப்பட்ட விதியினுலே வாதிக்கப்பட்டதாயினும், இருசூத்திரங்களுக்கும் அப்பிராமாண்ணியம் இல்லே. தருக்கசாஸ்திரத்திலும், பிரமைக்குக்காரணம் பிரமாணம் என்ற சாமானியவாக்கியத்தாற் பெறப்பட்ட பிரமாணத்தன்மையை உடைய அனுமானம் முதலியன சாக்ஷாற்காரியப்பிரமைக்குக் காரணம் பிரத்தியக்ஷம் என்ற விசேஷவாக்கியத்தால் வாதிக்கப்பட்டதாயினும், இருவாக்கியங்களுக்கும் அப்பிராமாண்ணியம் இல்லே. ஆதலின், வேதம் பொதுவாகவும் சிவாகமம் சிறப்பாகவும் இருத்தலால், இரண்டும் பிரமாணங்கள் என்றே துணியப்படும். ஆகமம் வேதவிசேஷமாய் இருத்தலால், அதற்கு வேதவாகியத்தன்மையும் இன்று. வேதவிசேஷம் என்று ஆலாசியமான்மியத்தும் சுப்பிரபேதத்தும் சொல்லப்பட்டது. மோகசூரோத்தரத்திலே "புராணம் வேதங்களாலும், வேதங்கள் ஆகமங்களாலும், வாதிக்கப்படும். அவை சாமானியமும் விசேஷமுமாம்: சைவமே மிகுவிசேஷமாம்." என்றும், விருத்தாசலமான்மியத்திலே "பரமசிவனுடைய இந்தத் திருவுருவங்களே விருத்தாசலத்துள்ள ஈசாலயத்தின் மண்டபத்தானங்களிலே வைத்து, சிவாகமத்திற்சொல்லிய விசேஷமார்க்கங்களாலே பூசித்தான்." என்றும், அருணுசலமான்மியத்திலே "சோணசைலத்தில் உயர்ந்த க்ஷேத்திரம்

இல்லை: பஞ்சாக்ஷரத்தில் உயர்ந்த மந்திரம் இல்லை: மாகேச்சுரதருமத்தில் உயர்ந்த தருமம் இல்லை: சிவாகமத்தில் உயர்ந்த சாஸ்திரம் இல்லை." என்றும், வாயவ்வியசங்கிதையிலே "பிறநூல்களிற் கூறப்பட்டதெல்லாம் சிவாகமத்தில் இருக்கின்றது. சிவாகமத்திற் காணப்படாதது பிறிதோர் இடத்திலும் இல்லை." என்றும் சொல்லப்பட்டது.

அற்றேல் வியாகரணம் முதலியன வேதாங்கமாதலின், வேதமே பிரமாணம் ஆகமம் பிரமாணமன்றெனின்; அற்றன்று. யோகரூடி நாமத்தால் சிவாகமமே நால் வகைப் பிரமாணங்களாலும் முடிந்த ஆகமம் எனப்படுதலாலும், "சித்தாந்தமே சித்தாந்தம்." என்று இரத்தினத்திரயத்திலே கூறப்படுதலாலும் அதுவே பிரமாணம்; வேதம் பிரமாணமன்று. அற்றேல், வேதமும் ஆகமம் சித்தாந்தம் என்னும் சத்தங்களாலே கௌணவிருத்தியாற் சொல்லப்படுமெனின், ஆகமமும் வேதசத்தத்தாலே கௌணவிருத்தியாற் சொல்லப்படுமென்று சமீதியாமே. ஆதலால் சிவாகமமே முக்கியவிருத்தியால் ஆகமமெனவும் சித்தாந்தமெனவும் படுதலில், சருவோத்கிருஷ்டப் பிரமாணமாமென்று சாதிக்கப்பட்டது. இருக்குவேதத்திலும், இருக்குவேதசிரசிலும், யசுர்வேதத்திலும், யசுர்வேதசிரசிலும், சாமவேதத்திலும், சாமவேதசிரசிலும், ஒரோவிடத்தில் அதர்வவேதத்திலும், அதர்வவேதசிரசிலும், லௌகிகநூற்பொருளும்,வைதிகநூற்பொருளும், அத்தியான்மகநூற்பொருளும், அதிமார்க்கநூற்பொருளும், யதோசிதமாக எவவாற்றானும் சொல்லப்பட்டன. அதர்வசிரசிலே மாந்திரநூற் பொருள் விசேடித்துச் சொல்லப்பட்டது. சௌரசங்கிதையிலே "ஆகமத்தைப் பற்றிக்கொண்டன்றே சிலபுராணங்கள் சிலசில இடங்களில் பிரத்தியட்சமாக வேதத்துக்கு விருத்தமாகிய பொருளைக் கூறுகின்றன." என்று சொல்லியபடியே சைவாகமம் வேதவிரோதப்பொருள் கூறுதலும், சாமானிய வேதத்தைக்குறித்து விசேஷவேதமாயிருத்தலாலேயாம். விசேஷசாமானியங்கள் சிலவிடத்து விரோதப்பொருள் கூறினாலும், விருத்த சாத்திரமென்னுந் தோஷமும் வாகியத்தன்மையுஞ் சாற்றலாகாது. காமிகத்திலே "வேதம்முதலிய நூல்களெல்லாம் இரௌத்திரங்களாம்; சித்தாந்தமே சௌமியமாம்." என்று கூறப்பட்டது. ஞானசித்தி முதலியவற்றிலே, சாமானியசைவநூல்களும், அவற்றின் உபபேதங்களும் பூருவகாண்டமென்றும் காமிகம் முதலிய சைவசித்தாந்தங்களும் அவற்றின் உபபேதங்களாகிய பௌட்கரம் சருவஞானோத்தரம் முதலியனவும் உத்தரகாண்டம் என்றும் உணர்த்தப்பட்டது. சூதசங்கிதையிலே "பதினெண்புராணங்களையும் சத்தியவதியின் புத்திரர் செய்தார்; காமிகம் முதலியவற்றைப் பரமசிவனே செய்தார்." என்று கூறுதலால் சிவாகமங்களைச் சாக்ஷாத்தாகச் சிவனே செய்தனர் என்று துணியப்பட்டது.

வேதநெறி வழுவிய மாந்தர்க்கே தந்திரங்கள் கூறப்பட்டன எனச் சில நூல்களிற் கூறியதென்னையெனின்; ஆண்டுக் கூறியது வாமசோம லாகுள பைரவமுதலிய தந்திரங்களை அன்றிச் சிவசித்தாந்தத்தை அன்றென்க. அது அப்பதீக்ஷிதர் இயற்றிய சிவதத்துவ விவேக விருத்தியில் பலபிரமாணங்கொண்டு சாதிக்கப்பட்டது. காந்தத்திலே "சிவன் அழிவற்ற தகுணமூர்த்தியாய்த் தோன்றி, ஆலமரத்தின் அடியிலே இருந்து, குற்றமில்லாத இவர்களே ஓதுவித்தார். இவர்கள் விதிப்படியே வேதங்களையும் உபநிடதங்களையும் நெடுநாள்வரையும் ஓதியும், சிவனது மாயையினாலே ஞானம் நிலைபெறாதவராயினர். அவர்கள் ஒருங்குகூடி, உமாபதியாகிய சிவனிடத்திற் கேட்க விரும்பி, வெள்ளிமயமாகிய கைலாசத்திற்போய், தவஞ்செய்தார்கள். இந்த எல்லை

யில் சிவன் வெள்ளியங்கைலாசமலையிலே சனகர் முதலிய முனீந்திரர்களுக்குத் திரி பதார்த்த சம்மிதமும் இரகசியமுமாகிய ஆகமாந்தம் என்னும் பெயரையுடைய சித்தாந் தத்தைச் சொல்லிக்கொண்டிருந்தார்." என்றும், சைவபுராணத்திலே "பசுசாத்திரங் களைப் பற்றுதுவிட்டுச் சிவசாத்திரத்தைப் பற்றிப் பயிலும் பிராமணர் முதலிய நான்கு வருணத்தாருமே ஆசாரியராவாரென்று புகழப்படுவர். சிவாகமத்திற் கூறப் பட்ட ஞானமே ஞானமென்று சொல்லப்படும். அதுவே சிவனைப் பற்றின பெரியோரு க்கு முத்திசாதனம்." என்றும், கூறுதலாலும்; சுவேதர் உபமன்னியு கிருஷ்ணர் அருச்சுனர் முதலியோர் சிவசித்தாந்தமார்க்கச் சிரவணசரணஞ் செய்தமையாலும், சிவசித்தாந்தம் வேதநெறிவழுவிய மாந்தர்க்குக் கூறியதென்பதே கூடாது. இன்னும், பிரமமீமாஞ்சைக்கு நீலகண்டசிவாசாரியர் இயற்றிய பாஷ்யத்தில் "வேதசிவாகமங்க ளுக்குப் பேதங்காண்கின்றிலம், வேதமே சிவாகமம்." என்று கூறப்பட்டது. வேத ங்கள் சிலவிடத்துச் சிவசாத்திரப்பொருளைச் சிறிலே தாங்கி இருத்தலால், "வேதமே சிவாகமம்." என்று உபசரிக்கப்பட்டது. விரோதப்பொருள் மாத்திரமே தள்ளப்படு தலால், இவ்விரண்டற்கும் பெரும்பாலும் ஒற்றுமை உண்டாம். அப்படியே வேதம் முதலிய சகலசாத்திரங்களும் சிவாகமத்துக்கு விரோதமில்லாத வழியே பிரமாணங் களாகும். சிவாகமம் தனது பொருட்டன்மையால், மகாமாயையும் அதனிற்ரோன் றிய சிவம்முதற் சுத்தவித்தை ஈறுகிய காரியங்களும், மல மாயா கர்மங்களும், கலை முதற் பிருதிவி ஈறுபுள்ள காரியங்களும் ஆகிய அமிதார்த்தங்களே விளக்கலால் வியா பகமாம். வேதமுதலியன தம்பொருண்மையால், பிரகிருதிமுதல் பிருதிவி ஈறுபுள்ள காரியங்கள் மாத்திரமாகிய மிதார்த்தங்களே விளக்கலால் வியாப்பியங்களாம். அது பௌட்கரத்திலே "புருஷவாக்கியங்களாலே இருஷிவாக்கியமும், இருஷிகளாலே தெய்வவாக்கியமும், தேவராலே பிரமவாக்கியமும், பிரமாவாலே விஷ்ணுவாக்கி யமும், விஷ்ணுவினாலே உருத்திரவாக்கியமும், உருத்திரனாலே சிவவாக்கியமும், வாதிக்கப்படுவதில்லை. எனென்றால், ஒன்றினொன்று மேன்மேலும் சிறந்தனவாம்; மேல் உள்ளனவற்றால் கீழுள்ளவைகளே வாதிக்கப்படல்வேண்டும். சிவசாஸ்திரத் துக்கு விரோதமில்லாமலே சகலசாஸ்திரங்களும் நிற்கும். ஆனால் மற்றைநூல்க ளுக்கு விரோதம் இல்லாமல் சிவசாஸ்திரம் இருக்கவேண்டுவதில்லை. எனெனில், சிவ தந்திரம் வியவஸ்தாபகம்: னேயனவியவஸ்தாப்பியம். ஆதலில், சிவதந்திரத்தால் வாதிக்கப்பட்டது பிரமாணமன்று." என்றும், மிருகேந்திரத்திலே "மிதார்த்தத்தி லும் அமிதார்த்தத்துக்கு மேன்மை (உண்டென்பர் புலவோர்கள்.)" என்றும், கூறிய வாற்றால் உணர்க. இனியமையும்.

திருஞான சம்பந்தமூர்த்திநாயனார் இத்தில்லைவாழந்தணர் மூவாயிரரும் தமக்குச் சிவகணநாதராய்த் தோன்றக்கண்டு, அத்தன்மையைத் திருநீலகண்டயாழ்ப்பாணருக் குக் காட்டினார் என்று திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் புராணத்திற் சொல்லப்பட் டது. அந்நாயனார் "ஆடி னாய்நறு கெய்யொடு பாறையிர்" என்னுந் திருப்பதிகத்திலே "நீலத் தார்கரி யமிடற் றார்நல்ல நெற்றி மேலுற்ற கண்ணி னார்பற்று—சூலத் தார் சுட லைப்பொடி நீறணி வார்சடையார்—சீலத் தார்தொழு தேத்துசிற் றம்பலஞ் சேர்த லாற்கழற் சேவடி கைதொழக்—கோலத் தாயரு ளாயுன காரணங் கூறுதமே." என் னுந் திருப்பாட்டிலே தாம் இவர்களைக் கண்டதன்மையைக் கூறி, இவர்கள் "தொழு தேத்துசிற்றம்பலம்" என்று அருளிச்செய்தார். இதனாலும், இவர்களது மகிமை தெளியப்படும். சிவாணுபூதிமானாகிய சேக்கிழார் நாயனாரே "இன்றிவர் பெருமை யெம்மா லியம் பலா மெல்லைத் தாமோ—தென்றமிழ்ப் பயனு யுள்ள திருத்தொண் டத் தொகை முன்பாட—வன்றுவன் றொண்டர் தம்மை யருளிய வாரூ ரண்ணல்—முன்றிரு வாக்காற் கோத்த முதற்பொரு ளானு ரென்றால்." என்று திருவாய்மலர்ந்த ருளினாயின்; புழுத்த நாயினும் கடையனாகிய யானு இம்மகான்களது எண்ணிறந்த பெருமையை விரித்துச்சொல்ல வல்லன்!

இதுகாறுங் கூறியவாற்றால், வேதாகமங்களேயேனும் அவற்றின் வழிநூல் சார்பு நூல்களேயேனும் சற்குருமுகமாகக் கற்றல் கேட்டல் செய்யாதொழியில், பசுபதியாகிய சிவனே உணர்ந்து மனம்வாக்குக் காயங்களினால் மெய்யன்போடும் அவரைவழிபட்டுப் பிறவிப்பிணிதீர்த்து உய்தல் கூடாது என்பதும், கற்றல் கேட்டல் செய்தவழியும், சிவனே வழிபடாதொழியிற் பயனில்லை என்பதும் பெறப்படும். இதற்குப்பிரமாணம்: திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தேவாரம். "கல்லார் நெஞ்சி—னில்லா ணீசன்—சொல்லா தாரோ—டல்லோ நாமே." எ-ம். திருநாவுக்கரசுநாயனார் தேவாரம். "பின்னுவார் சடையான் றன்னைப் பிதற்றிலாப் பேதை மார்க—டின்னுவார் நரகந் தன்னுட் டொல்வினை தீரவேண்டின்—மன்னுவான் மறைகளோதி வனத்தினுள் விளக்கொன் றேற்றி—யுன்னுவா ருள்ளத் துள்ளா னெற்றியூ ருடையகோவே." எ-ம். திருமாளிகைத்தேவர் திருவிசைப்பா. "கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக் கரையிலாக் கருணைமா கடலை—மற்றவ ரறியா மாணிக்க மலையை மதிப்பவர் மனமணி விளக்கைச்—செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத் திருவீழி மிழலைவீற் றிருந்த—கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங் குளிரவென் கண்குளிர்ந் தனவே." எ-ம். திருக்குறள். 'கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ—னற்றா டொழாஅ ரெனின்." எ-ம். வரும்.

திருநீலகண்ட நாயனார்புராணம்.

வேதியர் தில்லை மூதூர் வேட்கோவர் குலத்து வந்தார்
மாதொரு பாக நோக்கி மன்னுசிற் றம்ப லத்தே
யாதியு முடிவு மில்லா வற்புதத் தனிக்கூத் தாடு
நாதனார் கழல்கள் வாழ்த்தி வழிபடு நலத்தின் மிக்கார். (க)

பொய்கடிந் தறத்தின் வாழ்வார் புனற்சடை முடியார்க் கன்பர்
மெய்யடி யார்கட் கான பணிசெயும் விருப்பி னின்றூர்
வையகம் போற்றுஞ் செய்கை மனையறம் புரிந்து வாழ்வார்
சைவமெய்த் திருவின் சார்வே பொருளெனச் சாரு நீரார். (உ)

அளவிலா மரபின் வாழ்க்கை மட்கல மமுதுக் காக்கி
வளரிளந் திங்கட் கண்ணி மன்னுளா ரடியார்க் கென்று
முளமகிழ் சிறப்பின் மல்க வோடளித் தொழுகு நாளி
னிளமைமீ தூரவின்பத் துறையினி லெளிய ரானூர். (ங)

அவர்தங்கண் மனைவி யாரு மருந்ததிக் கற்பின் மிக்கார்
புவனங்க ளுய்ய வையர் பொங்குநஞ் சுண்ண யாஞ்செய்
தவமின்று தடுத்த தென்னத் தகைந்துதான் றரித்த தென்று
சிவனெந்தை கண்டந் தன்னைத் திருநீல கண்ட மென்பார். (ச)

ஆனதங் கேள்வ ரங்கோர் பரத்தைபா லணைந்து ணண்ண
மானமுன் பொருது வந்த வூடலான் மனையின் வாழ்க்கை
யேனைய வெல்லாஞ் செய்தே யுடனுறை விசையா ரானூர்
தேனலர் கமலப் போதிற் றிருவினு முருவின் மிக்கார். (ஞ)

மூண்டவப் புலவி தீர்க்க வன்பனூர் முன்பு சென்று
பூண்டயங் கிளமென் சாயற் பொற்கொடி யினையார் தம்மை
வேண்டுவ விரந்து கூறி மெய்யுற வணையும் போதிற்
றீண்டுவீ ராயி னெம்மைத் திருநீல கண்ட மென்றார். (எ)

ஆதியார் நீல கண்டத் தளவுதாய் கொண்ட வார்வம்
பேதியா வாணை கேட்ட பெரியவர் பெயர்ந்து நீங்கி
யேதிலார் போல நோக்கி யெம்மையென் றதனுண் மற்றை
மாதரார் தம்மை யென்றன் மனத்தினுந் தீண்டே னென்றார். (ஏ)

கற்புறு மனைவி யாருங் கணவனூர்க் கான வெல்லாம்
பொற்புறு மெய்பு ரமற் பொருந்துவ போற்றிச் செய்ய
விற்புறம் பொழியா தங்க ணிருவரும் வேறு வைகி
யற்புறு புணர்ச்சி யின்மை யயலறி யாமை வாழ்ந்தார். (அ)

இளமையின் மிக்கு ளார்க ளிருவரு மறிய நின்ற
வளவில்சீ ராணை போற்றி யாண்டுகள் பலவுஞ் செல்ல
வளமலி யிளமை நீங்கி வடிவுறு மூப்பு வந்து
தளர்வொடு சாய்ந்து மன்பு தம்பிரான் நிறத்துச் சாயார். (கூ)

இங்கெறி யொழுகு நாளி லெரிதளிர்த் தென்ன நீண்ட
பின்னெளிர் சடையோன் முனுந் தொண்டரை விளக்கங் காண
நன்னெறி யிதுவா மென்று ஞாலத்தோர் விரும்பி யுய்யு
மன்கெறி காட்டு மாற்ற லருட்சிவ யோகி யாகி. (கூ)

வே று.

கீளொடு கோவணஞ் சாத்திக் கேடிலா
வாள்விடு நீற்றெரி மலர்ந்த மேனிமேற்
றோளொடு மார்பிடைத் துவளு நூலுட
னீளொளி வளர்திரு முண்ட நெற்றியும். (கூ)

நெடுஞ்சடை கரந்திட நெறித்த பம்பையும்
விடுங்கதிர் முறுவல்வெண் ணிலவு மேம்பட
விடும்பலிப் பாத்திர மேந்து கையராய்
நடந்துவேட் கோவர்தம் மனையி னண்ணினார். (கூ)

நண்ணிய தவச்சிவ யோக நாதரைக்
கண்ணுற நோக்கிய காத லன்பர்தாம்
புண்ணியத் தொண்டரா மென்று போற்றிசெய்
தெண்ணிய வுவகையா லெதிர்கொண் டேத்தினார். (கூ)

பிறைவளர் சடைமுடிப் பிரானைத் தொண்டரென்
றுறையுளி லணைந்துபே ருவகை கூர்ந்திட
முறைமையின் வழிபட மொழிந்த பூசைக
ணிறைபெரு விருப்பொடு செய்து நின்றபின். (கூ)

எம்பிரான் யான்செயும் பணியெ தென்றனர்
வம்புலா மலர்ச்சடை வள்ள லருண்டஞ
ரும்பர்நா யகனுமிவ் வோடுன் பால்வைத்து
நம்பிநீ தருகநாம் வேண்டும் போதென்று, (கூ)

தன்னையொப் பரியது தலத்துத் தன்னுழைத்
தன்னிய யாவையுந் தாய்மை செய்வது
பொன்னினு மணியினும் போற்ற வேண்டுவ
தின்னதன் மையதிது வாங்கு நீயென. (கசு)

தொல்லைவேட் கோவர்தங் குலத்துட் டோன்றிய
மல்குசீர்த் தொண்டனர் வணங்கி வாங்கிக்கொண்
டொல்லையின் மனையிலோர் மருங்கு காப்புறு
மெல்லையில் வைத்துவந் திறையை யெய்தினர். (கள)

வைத்தபின் மறையவ ராகி வந்தரு
ணித்தனர் நீங்கிட நின்ற தொண்டரு
மூய்த்துடன் போய்விடை கொண்டு மீண்டன
ரத்தர்தா மம்பல மணைய மேவினர். (கஅ)

வே று.

சாலநாட் கழிந்த பின்பு தலைவனர் தாமுன் வைத்த
கோலமா ரோடு தன்னைக் குறியிடத் தகலப் போக்கிச்
சீலமார் கொள்கை யென்றுந் திருந்துவேட் கோவர் தம்பால்
வாலிதா நிலைமை காட்ட முன்புபோன் மனையில் வந்தார். (கக)

வந்தபின் ரெருண்ட ளரு மெதிர்வழி பாடு செய்து
சிந்தைசெய் தருளிற் றெங்கள் செய்தவ மென்று நிற்ப
முந்தைதா ளுன்பால் வைத்த மொய்யொளி விளங்கு மோடு
தந்துநில் லென்ரு னெல்லாந் தான்வைத்து வாங்க வல்லான். (உ0)

என்றவர் விரைந்து கூற விருந்தவ ரீந்த வோடு
சென்றுமுன் கொணர்வான் புக்கார் கண்டிலர் திகைத்து நோக்கி
நின்றவர் தம்மைக் கேட்டார் நேடியுங் காணர் மாயை
யொன்றுமங் கறிந்தி லாரா முரைப்பதொன் றின்றி நின்ரூர். (உக)

மறையவ ளுகி நின்ற மலைமகள் கேள்வன் ரூறு
முறையுளிற் புக்கு நின்ற வொருபெருந் தொண்டர் கேட்ப
விறையிலிங் கெய்தப் புக்காய் தாழ்த்ததென் னென்ன வந்து
கறைமறை மிடற்றி ளுனைக் கைதொழு தரைக்க லுற்ரூர். (உஉ)

இழையணி முன்னான் மார்பி னெந்தைநீர் தந்து போன
விழைதரு மோடு வைத்த வேறிடந் தேடிக் காணேன்
பழையமற் றதனி னல்ல பாத்திரந் தருவன் கொண்டிப்
பிழையினைப் பொறுக்க வேண்டுமெ பெருமவென் றிறைஞ்சி நின்ரூர். (உங)

சென்னியால் வணங்கிச் சொன்ன தொண்டரைச் செயிர்த்து நோக்கி
யென்னிது மொழிந்த வாரீ யான்வைத்த மண்ணே டன்றிப்
பொன்னினு லமைத்துத் தந்தா யாயினுங் கொள்ளேன் போற்ற
முன்னைநான் வைத்த வோடே கொண்டுவா வென்ரூன் முன்னேன். (உச)

கேடிலாப் பெரியோ யென்பால் வைத்தது கெடுத லாலே
நாடியுங் காணேன் வேறு நல்லதோ ரோடு சால
நீடுசெல் வதுதா னென்று தருகின்றே னெனவுங் கொள்ளா
னடிநின் றுரைத்த தென்ற வுணர்வெலா மொழித்த தென்ன. (உஎ)

ஆவதெ னுன்பால் வைத்த வடைக்கலப் பொருளே வெளவிப்
பாவகம் பலவுஞ் செய்து பழிக்குநீ யொன்று ஈணு
யாவருங் காண வுன்னே வஞைத்துநான் கொண்டே யன்றிப்
போவதுஞ் செய்யே னென்றுன் புண்ணியப் பொருளாய் நின்றான். (உசு)

வளத்தினுன் மிக்க வோடு வெளவினே னல்லே னெல்லே
யுளத்தினுங் களவி லாமைக் கென்செய்கே னுரையு மென்னக்
களத்துநஞ் சொளித்து நின்றான் காதலுன் மகனைப் பற்றிக்
குளத்தினின் மூழ்கிப் போவென் றருளினன் கொடுமை யில்லான். (உஎ)

ஐயாநீ ரருளிச் செய்த வண்ணம்யான் செய்வ தற்குப்
பொய்யில்சீர்ப் புதல்வ னில்லே யென்செய்கேன் புகலு மென்ன
மையறு சிறப்பின் மிக்க மனேயவ டன்னைப் பற்றி
மொய்யலர் வாவி புக்கு மூழ்குவா யெனமொ ழிந்தார். (உஅ)

வே று.

கங்கைகதி கரந்தசடை கரந்தருளி யெதிர்நின்ற
வெங்கண்விடை யவரருள வேட்கோவ ருரைசெய்வா
ரெங்களிலோர் சபதத்தா லுடன்மூழ்க விசைவில்லே
பொங்குபுனல் யான்மூழ்கித் தருகின்றேன் போதுமென. (உக)

தந்ததுமுன் ரூாதே கொள்ளாமைக் குன்மனேவி
யந்தளிர்ச்செங் கைப்பற்றி யலேப்புனலின் மூழ்காதே
சிந்தைவலித் திருக்கின்ரூய் தில்லேவா ழந்தணர்கள்
வந்திருந்த பேரவையின் மன்னுவன்யா னெனச்சென்ரூர். (கo)

நல்லொழுக்கந் தலேநின்ரூர் நான்மறையின் றுறைபோனூர்
தில்லேவா ழந்தணர்கள் வந்திருந்த திருந்தவையி
னெல்லேயிலான் முன்செல்ல விருந்தொண்ட ரவர்தாமு
மல்குபெருங் காதலினுல் வழக்கின்மே லிட்டணேந்தார். (கக)

அந்தணனு மெந்தைபிரா னருமறையோர் மூன்பகர்வா
னிந்தவேட் கோவன்பால் யான்வைத்த பாத்திரத்தைத்
தந்தொழியான் கெடுத்தானேற் றன்மனேவி கைப்பற்றி
வந்துமூழ் கியுந்தாரான் வலிசெய்கின் ரூனென்ரூர். (கஉ)

நறைகமழுஞ் சடைமுடியு நாற்ரூளு முக்கண்ணுங்
கறைமருவுந் திருமிடறுங் கரந்தருளி யெழுந்தருளு
மறையவனித் திறமொழிய மாமறையோ ருரைசெய்வார்
நிறையுடைய வேட்கோவர் நீர்மொழியும் புருந்ததென. (கக)

நீணிதியா மிதுவென்று நின்றவிவர் தருமோடு
பேணிநான் வைத்தவிடம் பெயர்ந்துகரந் ததுகாணேன்
பூணனிதூன் மணிமார்பீர் புருந்தபரி சிதுவென்று
சேணிடையுந் தீங்கடையாத் திருத்தொண்ட ருரைசெய்தார். (கூ)

வே று.

திருவுடை யந்த ணுளர் செப்புவார் திகழ்ந்த நீற்றி
னூருவுடை யிவர்தாம் வைத்த வோட்டினேக் கெடுத்தீ ராஞற்
றருமிவர் குளத்தின் மூழ்கித் தருகவென் றுரைத்தா ராகின்
மருவிய மனேவி யோடு மூழ்குதல் வழக்கே யென்ரூர். (கடு)

அருந்தவத் தொண்டர் தாமு மந்தணர் மொழியைக் கேட்டுத்
திருந்திய மனைவி யாரைத் தீண்டாமை செப்ப மாட்டார்
பொருந்திய வகையான் மூழ்கித் தருகின்றேன் போது மென்று
பெருந்தவ முனிவ ரோடும் பெயர்ந்ததம் மனையைச் சார்ந்தார். (கூசு

மனையியார் தம்மைக் கொண்டு மறைச்சிவ யோகி யார்முன்
சினவிடைப் பாகர் மேவுந் திருப்புலீச் சுரத்து முன்னர்
ஈனமலர்ச் சோலை வாவி நண்ணித்தம் முண்மை காப்பார்
புனைமணி வேணுத் தண்டி னிருதலை பிடித்துப் புக்கார். (கூஎ

தண்டிரு தலையும் பற்றிப் புகுமவர் தம்மை நோக்கி
வெண்டிரு நீற்று முண்ட வேதியர் மாதைத் தீண்டிக்
கொண்டுடன் மூழ்கி ரென்னக் கூடாமை பாரோர் கேட்கப்
பண்டதஞ் செய்கை சொல்லி மூழ்கினர் பழுதி லாதார். (கூஅ)

வாவியின் மூழ்கி யேறுங் கணவரு மனைவி யாரு
மேவிய மூப்பு நீங்கி விருப்புறு மிளமை பெற்றுத்
தேவரு முனிவர் தாமுஞ் சிறப்பொடு பொழியுந் தெய்வப்
பூவின்மா மழையின் மீள மூழ்குவார் போன்று தோன்ற. (கூகூ)

அந்நிலை யவரைக் காணு மதிசயங் கண்டா ரெல்லா
முன்னிலை நின்ற வேத மூதல்வரைக் கண்டா ரில்லை
யிந்நிலை யிருந்த வண்ண மென்னென மருண்டு நின்றார்
தன்னிய விசும்பி னூடு தூணியுடன் விடைமேற் கண்டார். (சஂ)

கண்டனர் கைகளாரத் தொழுதனர் கலந்த காத
லண்டரு மேத்தி னார்க ளன்பர்தம் பெருமை நோக்கி
விண்டரும் பொலிவு காட்டி விடையின்மேல் வருவார் தம்மைத்
தொண்டரு மனைவியாருந் தொழுதுடன் போற்றி நின்றார். (சக)

மன்றுளே திருக்கூத் தாடி யடியவர் மனைக டோறுஞ்
சென்றவர் நிலைமை காட்டுந் தேவர்க டேவர் தாமும்
வென்றவைம் புலனுன் மிக்கீர் விருப்புட னிருக்க நம்பா
லென்றுமிவ் விளமை நீங்கா தென்றெழுந் தருளி னாரே. (சஉ)

விறலுடைத் தொண்ட ரும்பெண் ணைகைச் செவ்வாய் மென்மே
ளறலியற் கூந்த லாளா மனைவியு மருளி னார்ந்த
திறலுடைச் செய்கை செய்து சிவலோக மதனை யெய்திப்
பெறலரு மிளமை பெற்றுப் பேரின்ப முற்று ரன்றே. (சகூ)

அயலறி யாத வண்ண மண்ணலா ராணை யுய்த்த
மயலில்சீர்த் தொண்ட ரரை யானறி வகையால் வாழ்த்திப்
புயல்வளர் மாடநீடும் பூம்புகார் வணிகர் பொய்யில்
செயலியற் பகையார் செய்த திருத்தொண்டு செப்ப லுற்றேன். (சச)

திருநீலகண்டநாயனார்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - சஂகூ.

சூசனம்.

பிறவிப் பிணிதீர்ந்து உய்தற்குத் தடையாய் உள்ள காமமானது, எத்துணைப் பெரியோர்களாலும் நீக்குதற்கு அரியது. அது நினைப்பினும், காணினும், கேட்பினும், தள்ளினும், விஷமானது தலைக்கொண்டாற்போல எத்துணை நுண்ணறிவாளருடைய அறிவையும் கெடுக்கும் இயல்புடையது. அது கல்வியறிவொழுக்கங்களால் ஆன்ற பெரியோர்களுடைய உள்ளத்திலே தலைப்படினும்; அவ்வுள்ளமானது தான் செல்லத் தகும் இடம் இது எனவும், செல்லத் தகாத இடம் இது எனவும், ஆராய விடாது. அதுமேலிடும்பொழுது; குணமும் குலமும் ஒழுக்கமும் குன்றுதலையும்; பழியும் பாவமும் வீளைதலையும் சிறிதும் சிந்திக்கவிடாது. அக்காமமே கொலை களவு கள்ளுண்டல் முதலிய பாவங்களுக்கெல்லாம் காரணமாய் உள்ளது. ஆதலால் அக்காமமே ஆன்மாக்களை நரகங்களிலே எண்ணிறந்தகாலம் வீழ்த்தி, வருத்தும் பெருங்கொடுமையை உடையது. இதற்குப் பிரமாணம். கந்தபுராணம். "கண்டதோர் நறவமே காம மேயென—வெண்டருந் தீம்பொரு ளிருமைத் தென்பரா—லுண்டுழி யழிக்குமொன் றுணர்வை யுள்ளமேற்—கொண்டுழி யுயிரையுங் கொல்லு மொன்றரோ." எ-ம். "உள்ளினுஞ் சுட்டிடி முணர்வு கேள்வியிற்—கொள்ளினுஞ் சுட்டிடுங் குறுகி மற்றதைத்—தள்ளினுஞ் சுட்டிடுந் தன்மை யீதினுற்—கள்ளினுங் கொடியது காமத் தீயதே." எ-ம். "ஈட்டுறும் பிறவியும் வினைகள் யாவையுங்—காட்டிய தினையதோர் காம மாதலில்—வாட்டமில் புந்தியான் மற்றந் நோயினை—வீட்டின ரல்லரோ வீடு சேர்ந்துளார்." எ-ம். "நெஞ்சினு நினைப்பரோ நினைந்து ளார்தமை—யெஞ்சிய துய நிடை மீண்டை யுய்த்துமேல்—விஞ்சிய பவக்கடல் வீழ்த்து மாதலா—னஞ்சினுங் தீயது நலமில் காமமே." எ-ம். "மண்ணுசை தன்னிற் பொருளாசையின் மாய வாழ்க்கைப்—பெண்ணுசை நீங்க லெளிதோ பெரியோர் தமக்கும்." எ-ம். திருவிளையாடற் புராணம். "அணங்குநோ யெவர்க்குஞ் செய்யு மனங்களு லலைப்புண்டாவி—யுணங்கினு ருள்ளஞ் செல்லு மிடனறிந் தோடிச் செல்லா—குணங்குல ளொழுக்கங் குன்றல் கொலைபழி பாவம் பாரா—வினங்குமின் னுயிர்க்கு மாங்கே யிறுதிவந் துறுவ தெண்ணு." எ-ம். "கள்ளுண்டல் காமமென்ப கருத்தறை போக்குச் செய்வ—வெள்ளுண்ட காமம் போல வெண்ணினிற் காணிற் கேட்கிற்—றள்ளுண்ட விடத்தினஞ்சங் தலைக்கொண்டா லென்ன வாங்கே—யுள்ளுண்ட வுணர்வு போக்கா துண்டபோ தழிக்குங் கள்ளுண்." எ-ம். "காமமே கொலைகட் கெல்லாங் காரணங் கண்ணே டாத—காமமே களவுக் கெல்லாங் காரணங் கூற்ற மஞ்சுங்—காமமே கள்ளுண் டற்குங் காரண மாத லாலே—காமமே நரக பூமி காணியாக் கொடுப்ப தென்னுன்." எ-ம். நாலடியார். "அம்பு மழலு மவிர்கதிர் ஞாயிறும்—வெம்பிச் சுடினும் புறஞ்சுடும் - வெம்பிக்—கவற்றி மனத்தைச் சுடுதலாற் காம—மவற்றினு மஞ்சப் படும்." எ-ம். "ஊரு ளெழுந்த வுருகெழு செந்தீக்கு—நீருட் குளித்து முயலாகு - நீருட்—குளிப்பினுங் காமஞ் சுடுமேகுன் றேறி—யொளிப்பினுங் காமஞ் சுடும்." எ-ம். நீதிசாரம். "ஊரு ளெனும்வனத்தி லொள்வேற்கண் மாதரெனுங்—கூரூர் விடமூட்டு ழாமுண்டு - சீரூர்—விரத்திவை ராக்கிய விவேகத் தொடுதோ—லுரத்தணியா தேக லெவனே." எ-ம். வரும். ஆதலால், காமம் மனசிலே சிறிதாயினும் எழ ஒட்டாமல் அடக்கல்வேண்டும். சிறிது எழுங்காலத்து, சிவனடியாரோடு கலத்தல் சிவசாத்திரப் பொருள்களைச் சிந்தித்தல் கேட்டல் முதலிய நற்செய்கைகளாலே, அதனிடத்தே செருத்து இறங்காவண்ணம் காலம்போக்கல்வேண்டும். மனைவியைப் புணர்தல் மாத்தி

ரமே வேதாகமாதிகளில் விதிக்கப்பட்டதாம். மனைவியையும், புத்திரனிமித்தமன்றிப் போகநிமித்தம் புணர்தல் பாவமேயாம்.

சிவபத்தி அடியார்பத்திகளிற் சிறந்தவராய் இல்லறத்தில் வாழும் இயல்புடைய இத்திருநீலகண்டநாயனார், தம்முடைய மனைவி இருப்பவும், தம்மனசிலே தலைப் பட்ட காமமிகுதியினாலே, நூல்களில் விலக்கப்பட்டதாகிய பரத்தைப் புணர்ச்சியைச் செய்தார். செய்தாராயினும், தம்முடைய மனைவியார் கொண்ட ஊடலைத் தீர்க்கும் பொருட்டு, அவரைத் தேண்டும்படி சென்றபொழுது; அவர், நீர் எம்மைத் தேண்டுவீரா யில் திருநீலகண்டம் என்று சிவனைச் சுட்டி ஆணையிட்டதைக் கேட்டவுடனே, அவ ரைத் தேண்டாமல், நீங்கினமையாலும்; அதுமாத்திரமன்றி, இவர் எம்மை என்று பன் மையாகச் சொன்னதனால் இவரைமாத்திரமன்று மற்றைப்பெண்களையும் மனசினால் நினைத்தலுஞ் செய்யேன் என்று உறுதிகொண்டமையாலும்; இவருடைய மனசிலே காமந்தலைப்பட்டபோதும் சிவபத்தி அதினும் மிகத் தலைப்பட்டிருந்தது என்பதும், அதனால் அச்சிவபத்தியானது பின் ஒருபோதும் இவர் மனசிலே காமம் சிறிதாயினும் எழுவொட்டாமல் தடுத்தது என்பதும், துணியப்படும்.

இவ்விருவரும், மிக்க இளமைப் பிராயத்தினராய் இராப்பகல் ஒரே இடத்தில் இருந்தும், தங்களுள்ளே நிகழ்ந்த சபதம் சிறிதாயினும் வழுவாவண்ணம், காமத்தை முற்றும் ஒழித்து வாழ்ந்த பெருந்தகைமையை நினைக்குந்தோறும், இவர்களிடத்துள்ள சிவபத்தியின் வலிமை விளங்குகின்றது. விட்டுணு சலந்தராசுரன் இறந்துவிட, காமமிகுதியினால் அவனது சரீரத்திலே பிரவேசித்து, அவனுடைய மனைவியைப் பல நாட் புணர்ந்து, பின்பு தம்மை விட்டுணு என்று உணர்ந்த அவளாலே சபிக்கப்பட்டு, வருத்தமுற்றார். பிரமா தம்மாலே படைக்கப்பட்ட திலோத்தமையினது அழகைக் கண்டு மயங்கி, அவளைப் புணரின் மகட்புணர்ச்சிக் குற்றமாம் என்பது பாராமல், அவ ளைத் தொடர்ந்தார். இந்திரன் கௌதமமுனிவருடைய மனைவியாகிய அகலிகையைப் புணர்ந்து, தன்னுடம்பிலே ஆயிரம் யோனி உண்டாகும்படி அம்முனிவராலே சபிக்கப் பட்டான். சந்திரன் தன்குருவாகிய வியாழனுடைய மனைவியைப் புணர்ந்து, கய ரோகம் அடைந்தான். இன்னும், முனிவர்கள் பலர் உண்டி முதலியவற்றை ஒழித்து, மலைகளினும் காடுகளினும் தவஞ்செய்யும் பொழுதும், தேவப்பெண்களையும் அசுரப் பெண்களையும் இராக்ஷசப்பெண்களையும் கண்டு மயங்கி, பாவம் என்பதும் பழியென் பதும் பாராமல், அவர்களைப் புணர்ந்து, தங்கள் தவத்தை இழந்தார்கள். தருமம் வள ர்ந்தோங்கும் முன்னேயுகங்களிலே, தேவர்கள் முனிவர்கள் தாமும், காமமிகுதியி னாலே பரஸ்திரீ கமனம் புத்திரிகமனம் குருபன்னிகமனம் முதலிய பெருங்கொடும் பாவங்களைச் செய்தார்களே! இக்கலியுகத்திலே இந்நாயனாரோ, தமது மனைவியார் சிவனைச் சுட்டி இட்ட ஆணைகடத்தல் சிவத்துரோகமாம் என்பதுபற்றி, மனைவியைத் தானும் புணராதொழிந்தார்! இதனால் இவரது பத்திமகிமை எவ்வளவு வியக்கத்தக் கது! இவ்வியப்பு நோக்கி அன்றே, பட்டணத்துப்பிள்ளையாரும் "மாது சொன்ன சூளா லிளமை துறக்கவல் லேனல்லன்." என்றார்.

கற்புடையமகளிரும், அழகிற் சிறந்த ஆடவரைக் காணில், அவர் தமக்குத் தந் தையாயினும், சகோதரராயினும், புதல்வர்களாயினும், தமது நிலைகலங்கி, அவரை யும் நிலைகுலைப்பார்களே! அது "தந்தையா யினும்விழைவிற் றன்னுடனே யொருவ யிற்றிற் சார்ந்தா ரேனு—மைந்தரா யினுமிகவும் வனப்புடைய ரெனிலவர்மேண் மட நல்லார்தஞ்—சிந்தைமடங் நிடுமதனுற் சாம்பன்மலர்க் கணவேவெளிற் செவ்வி வாய்ந் தோன்—பைந்தொடியா ரினிதமரு முவளகத்திற் றனிவருதல் பான்மை யன்றே."

என்னுங் காசிகண்டச்செய்யுளால் அறிக. இவ்வாறுகவும், இந்நாயனரும் மனைவியாரும், மிக்க இளமைப்பருவத்தராய் இராப்பகல் ஒரே இடத்தில் இருந்தும், புணர்ச்சி இன்றிச் சபதத்தைப் பேணினமையால், இவர்களது சிவபத்தியின்பெருமை இவ்வளவு என்று சொல்லத்தக்கதன்று. இந்நாயனர் பரமசிவன் சிவயோகியாராய் வந்து, தம்மிடத்துவைத்த ஓட்டைத் தாம் கவராமைக்குத் தமது மனைவியைக் கைப்பிடித்துக் குளத்திலே முழுகிச் சத்தியம் பண்ணித்தரச்சொன்ன வழியும், சபதம் வழுவாமற் காத்தார்.

இவர்கள், தங்களுள்ளே நிகழ்ந்த சபதம் தங்கள் இருவருக்கு மாத்திரமன்றி அயலவருக்கும் வெளிப்படாதிருப்பவும், அதனை வழுவாது காத்தமையாலும்; இவர் மனைவியைக் கைப்பிடித்துச் சத்தியம் பண்ணித் தரும்படி சிவயோகியார் கெருக்கியபோதும், தமது செயற்கருஞ் செயலை வெளிப்படுத்தாமையாலும்; இறுதியிலே மிகநெருக்கியபோது, தாம் அதனை வெளிப்படுத்தாதொழியில், அவரது சங்கேதம் நீராதென்பது பற்றியே வெளிப்படுத்தினமையாலும்; இவர்கள் புகழை விரும்பிச் சிவர்களைச் சாட்சியாகக் குறியாமல், உயிர்க்குயிராகிய சிவனுடைய திருவடியையே சாக்ஷியாகக் குறித்து ஒழுகினர்கள் என்பது செவ்விதிற்றுணியப்படும். இவ்வியப்பு நோக்கியன்றே, ஆசிரியர் சேக்கிழார் "இளமையின் மிக்குளார்க ளிருவரு மறியகின்ற—வளவில்சீ ராணை போற்றி." என்றும், "அயலறி யாத வண்ண மண்ணலா ராணை யுய்த்த—மயலில்சீர்த் தொண்டருரை." என்றும், திருவாய்மலர்ந்தருளினர். சிவர்களைச் சாக்ஷியாகக் குறியாமல் தமது திருவடியே சாக்ஷியாகக் குறித்துப் புண்ணியம் இயற்றும் பெருந்தன்மை உடையோருக்கு, சிவனே வெளிப்பட்டுவந்து, உலகமெங்கும் அவர் புகழை விளக்கி, யாவரும் அவரை வணங்கும்படி இடையறாத பேரின்பத்தைக் கொடுத்தருளுவர். அது, சிவன் இவர்களுக்கு வெளிப்பட்டு, இவர்களது செயற்கருஞ் செய்கையை உலகமெங்கும் அறியும்படி வெளிப்படுத்தி, "வென்றவைம் புலனும் மிக்கீர்" என்று தமது அருமைத்திருவாயினலே புகழ்ந்து; இவர்களுக்குப் பேரின்ப வாழ்வைக் கொடுத்தருளினமையால், உணர்க. இக்கருத்து நோக்கியன்றே, வைராக்கிய சதகநூலாரும் "உன்னு கின்றனை யூனமணோர் பெரியனென் றுணருமா செய வுன்பான்—மன்னு மீசனை பந்தம்வீ டளிப்பவன் மற்றைய ரறிந்தென்னு—மன்ன வன் திருப் பொன்னடி கரியதா வருந்தவஞ் செய்நெஞ்சே—பின்னை முன்னவ னுல கறிந் திறைஞ்சுமா பெருமைசெய் குவனேரே." என்றார்.

இயற்பகைநாயனார்புராணம்.

சென்னி வெண்குடை நீடுக பாயன் றிருக்குலம் புகழ்பெ ருக்கிய சிறப்பின்
மன்னு தொல்புக ழ்மருதநீர் நாட்டு வயல்வ ளந்தர வியல்பினி லளித்துப்
பொன்னி நன்னதி மிக்கநீர் பாய்ந்து புணரிதன் னையும் புனிதமாக் குவதோர்
நன்னெடும் பெருந் தீர்த்தமுன் னுடைய நலஞ்சிறந் ததுவளம் புகார் நகரம். (க)

அக்குலப் பதிக் குடிமுதல் வணிக ரளவில் செல்வத்து வளமையி னமைந்தார்
செக்கர் வெண்பிறைச் சடையவ ரடிமைத் திறத்தின் மிக்கவர் மறைச்சிலம் படியார்
மிக்கசீ ரடியார் கள்யா ரெனினும் வேண்டும் யாவையு மில்லே யென்னுதே
யிக்கடம் படி நிகழமுன் கொடுக்கு மியல்பினின் றவரும லியற் பகையார். (உ)

ஆது சூடிய வையர்மெய் யடிமை யளவி லாததோ ருனதிறை யருளா
னீறு சேர்திரு மேனியர் மனத்து நினைத்த யாவையும் வினைப்படி முடித்து
மாறி லாதநன் னெறியினில் விளங்கு மனைய தம்புரி மகிழ்ச்சியின் வந்த
பேறெ லாமவ ரேவின செய்யும் பெருமை யேயெனப் பேணிவாழ் நாளில். (கூ)

ஆயு நுண்பொரு ளாகியும் வெளியே யம்ப லத்துணின் றுவொ ரும்பர்
நாய கிக்குமஃ தறியவோ பிரியா நங்கை தானறி யாமையோ வறியோர்
தூய நீறுபொன் மேனியில் விளங்கத் தூர்த்த வேடமுந் தோன்றவே தியராய்
மாய வண்ணமே கொண்டுதந் தொண்டர் மருத வண்ணமுங் காட்டுவான் வந்தார். ()

வந்து தண்புகார் வணிகர்தம் மறுகின் மருங்கியற் பகையார் மனைபுகுத
வெந்தை யெம்பிரா னடியவ ரணைந்தா ரென்று நின்றதோ ரின்பவா தரவாற்
சிந்தை யன்பொடு சென்றெதிர் வணங்கிச் சிறப்பின் மிக்கவர்ச் சனகண்முன்செய்து
முந்தை யெம்பெருந் தவத்திரு லேகொன் முனிவ ரிங்கெழுந் தருளிய தென்றார்.(இ)

என்று கூறிய வியற்பகை யார்முன் னெய்தி நின்றவக் கைதவ மறையோர்
கொன்றை வார்சடை யாரடி யார்கள் குறித்து வேண்டின குணமெனக் கொண்டே
யொன்று நீரெதிர் மருதுவந் தளிக்கு முண்மை கேட்டுநும் பாலொன்று வேண்டி
யின்று நானிங்கு வந்தன னதனுக் கிசைய லாமெனிலி யம்பலா மென்றார். (கூ)

என்ன வவ்வுரை கேட்டியற் பகையார் யாது மொன்றுமென் பக்கலுண் டாகி
லன்ன தெம்பிரா னடியவ ருடைமை யையமில்லைநீ ரருள்செயு மென்ன
மன்னு காதலுன் மனைவியை வேண்டி வந்த திங்கென வங்கண ரெதிரே
சொன்ன போதிலு முன்னையின் மகிழ்ந்து தூயதொண்டனுர் தொழுதுரை செய்வார்.

இதுவெ னக்குமுன் புள்ளதே வேண்டி யெம்பிரான் செய்தபே றெனக் கென்னுக்
கதுமெ னச்சென்று தம்மனை வாழ்க்கைக் கற்பின் மேம்படு காதலி யாரை
விதிமணக் குலமடந் தையின் றூனை யிம்மெய்த்தவர்க்கு நான் கொடுத்தன னென்ன
மதுமலர்க் குழன் மனைவியார் கலங்கி மனந் தெளிந்தபின் மற்றிது மொழிந்தார். (அ)

இன்றுநீ ரெனக்கருள் செய்த திதுவே லென்னு யிர்க்கொரு நாதநீ ருரைத்த
தொன்றை நான்செயு மத்தனை யல்லா லுரிமைவே றுளதோ வெனக் கென்று
தன்றனிப் பெருங் கணவரை வணங்கத் தாழ்ந்து தொண்டனுர் தாமெதிர் வணங்கச்
சென்றுமா தவன் சேவடி பணிந்து திகைத்து நின்றன ரிருவினும் பெரியாள். (க)

மாதுதன் னைமுன் கொடுத்த மாதவர்தா மனமகிழ்ந்து பேருவ கையின் மலர்ந்தே
யாதுநா னினிச் செய்பணி யென்றே யிறைஞ்சி நின்றவர் தம்மெதிர் நோக்கிச்
சாதிவே தியராகி யதிலேவர் தைய றன்னை யான்றனிக் கொடு போகக்
காதன் மேலிய சுற்றமும் பதியுங் கடக்கநீ தூணைப் போதுக வென்றார். (கo)

வே று.

என்றவ ரருளிச் செய்ய யானைமுன் செய்குற் றேவ
லொன்றிது தன்னை யென்னை யுடையவ ரருளிச் செய்ய
நின்றது பிழையா மென்று நினைந்துவே றிடத்துப் புக்குப்
பொன்றிக ழுறுவை சாத்திப் பூங்கச்சுப் பொலிய வீக்கி. (கக)

வாளொடு பலகை யேந்தி வந்தெதிர் வணங்கி மிக்க
வாளரி யேறு போல்வா ரவரைமுன் போக்கிப் பின்னே
தோளிணை தூணையே யாகப் போயினர் தன்னி னுரை
நீளிடைப் படமுன் கூடி நிலத்திடை வீழ்த்த தோர்வார், (கஉ)

மனைவியார் சுற்றத் தாரும் வள்ளலார் சுற்றத் தாரு
மினையதொன் றியாரே செய்தா ரியற்பகை பித்த ரூஞற்
புனையிழை தன்னைக் கொண்டு போவதா மொருவ னென்று
தினைபெரும் பழியை மீட்பான் றொடர்வதற் கெழுந்து சூழ்வார். (கஉ)

வேலொடு வில்லும் வாளுஞ் சரிகையு மெடுத்து மிக்க
காலென விசையிற் சென்று கடிநகர்ப் புறத்துப் போகிப்
பாலிரு மருங்கு மீண்டிப் பரந்தவர்ப் பரவம் பொங்க
மால்கடல் இளர்ந்த தென்ன வந்தெதிர் வளைத்துக் கொண்டார். (கச)

வழிவிடுந் துணைபின் போத வழித்துணை யாகி யுள்ளார்
கழிபெருங் காதல் காட்டிக் காரிகை யுடன்போம் போதி
லழிதகன் போகே லீண்டவ் வருங்குலக் கொடியை விட்டுப்
பழிவிட நீபோ வென்று பகர்ந்தெதிர் நிரந்து வந்தார். (கடி)

மறைமுனி யஞ்சி ஞன்போன் மாதினைப் பார்க்க மாது
மிறைவனே யஞ்ச வேண்டா வியற்பகை வெல்லு மென்ன
வறைகழ லண்ணல் கேளா வடியனே னவரை யெல்லாந்
தறையிடைப் படுத்து கின்றேன் றளர்ந்தருள் செய்யே லென்று. (கக)

பெருவிற லாளி யென்னப் பிறங்கெரி சிதற நோக்கிப்
பரிபவப் பட்டு வந்த படர்பெருஞ் சுற்றத் தாரை
யொருவரு மெதிர்நில் லாதே யோடிப்போய்ப் பிழையு மன்றே
லெரிசுடர் வாளிற் கூரும்பத் துடிக்கின்றீ ரென்று நோக்கார். (கஎ)

ஏடநீ யென்செய் தாயா லித்திற மியம்பு கின்றாய்
நாடறு பழியு மொன்னார் நகையையு நாணையின்று
பாடவ முரைப்ப துன்றன் மனைவியைப் பனவற் கீந்தோ
கூடவே மடிவ தன்றிக் கொடுக்கயா மொட்டோ மென்றார். (கஅ)

மற்றவர் சொன்ன மாற்றங் கேட்டலு மனத்தின் வந்த
செற்றமுன் பொங்க வுங்க ளுடற்றுணி யெங்குஞ் சிந்தி
மூற்றுநும் முயிரை யெல்லா முதல்விசும் பேற்றிக் கொண்டு
நற்றவர் தம்மைப் போக விடுவனென் றெழுந்தார் நல்லோர். (கக)

நேர்ந்தவ ரெதிர்ந்த போது நிறைந்தவச் சுற்றத் தாருஞ்
சார்ந்தவர் தம்முன் செல்லார் தையலைக் கொண்டு பெற்ற
மூர்ந்தவர் படிமேற் செல்ல வுற்றெதி ருடன்று பொங்கி
யார்ந்தவெஞ் சினத்தான் மேற்சென் றடர்ந்தெதிர் தடுத்தா னன்றே. (உ0)

சென்றவர் தடுத்த போதி லியற்பகை யார்முன் னீறி
வன்றுணை வாளே யாகச் சாரிகை மாறி வந்து
துன்றினர் தோளுந் தாளுந் தலைகளுந் துணித்து வீழ்த்து
வென்றடு புலியே றென்ன வமர்வினை யாட்டின் மிக்கார். (உக)

மூண்டுமுன் பலராய் வந்தார் தனிவந்து முட்டி ஞர்கள்
வேண்டிய திசைக டோறும் வேறுவே றமர்செய் போழ்தி
லாண்டகை வீரர் தாமே யனைவர்க்கு மனைவ ராகிக்
காண்டகு விசையிற் பாய்ந்து கலந்தமுன் றுணித்து வீழ்த்தார். (உஉ)

சொரிந்தன குடல்க ளெங்குந் துணிந்தன வுடல்க ளெங்கும்
விரிந்தன தலைக ளெங்கு மிடைந்தன கழுகு மெங்கு
மெரிந்தன விழிக ளெங்கு மெதிர்ப்பவ ரொருவ ரின்றித்
திரிந்தனர் களனி லெங்குஞ் சிவன்கழல் புனைந்த வீரர். (உங)

மாடலைகுருதி பொங்க மடிந்தசெங் களத்தி னின்று
மாடுறு செயலின் வந்த கிளைஞரோ டணைந்தார் தம்மி
லோடினு ருள்ளா ருயிர்த்தா ரொழிந்தவ ரொழிந்தே மாண்டார்
நீடிய வாளுந் தாமு நின்றவர் தாமே நின்றார். (உச)

திருவுடை மனைவி யாரைக் கொடுத்திடச் செறுத்து முன்பு
வருபெருஞ் சுற்ற மெல்லாம் வாளினுற் றுணித்து மாட்டி
யருமறை முனியை நோக்கி யடிகணீ ரஞ்சா வண்ணம்
பொருவருங் கான நீங்க விடுவனென் றுடனே போந்தார். (உஞ)

இருவரா லறிய வொண்ணு வொருவர்பின் செல்லு மேழை
பொருதிறல் வீரர் பின்பு போகமுன் போகும் போதி
லருமறை முனிவன் சாய்க்கா டதன்மருங் கணைய மேவித்
திருமலி தேரி னினை மீளெனச் செப்பி னனே. (உசு)

தவமுனி தன்னை மீளச் சொன்னபின் றலையா லார
வவன்மலர்ப் பதங்கள் சூடி யஞ்சலி கூப்பி நின்று
புவனமூன் றுய்ய வந்த பூசுரன் றன்னை யேத்தி
யிவனருள் பெறப்பெற் றேனென் றியற்பகை யாரு மீண்டார். (உஎ)

செய்வதற் கரிய செய்கை செய்தநற் றொண்டர் போக
மைதிகழ் கண்ட னெண்டோண் மறையவன் மகிழ்ந்து நோக்கிப்
பொய்தரு மூள்ள மில்லான் பார்க்கிலன் போலு னென்று
மெய்தரு சிந்தை யாரை மீளவு மழைக்க லுற்றார். (உஅ)

இயற்பகை முனிவா வோல மீண்டிநீ வருவா யோல
மயர்ப்பிலா தானே யோல மன்பனே யோல மோலஞ்
செயற்கருஞ் செய்கை செய்த தீரனே யோல மென்றான்
மயக்கறு மறையோ லிட்டு மாலயன் றேட நின்றான். (உக)

அழைத்தபே ரோசை கேளா வடியனேன் வந்தேன் வந்தேன்
பிழைத்தவ ருளரே லின்னும் பெருவலித் தட்க்கை வாளி
லிழைத்தவ ராகின் றுரென் றியற்பகை யார்வந் தெய்தக்
குழைப்பொலி காதி னனு மறைந்தனன் கோலங் கொள்வான். (கூ0)

சென்றவர் முனியைக் காணுர் சேயிழை தன்னைக் கண்டார்
பொன்றிகழ் குன்று வெள்ளிப் பொருப்பின்மேற் பொலிந்த தென்னத்
தன்றுணை யுடனே வானிற் றலைவனை விடைமேற் கண்டார்
நின்றிலர் தொழுது வீழ்ந்தார் நிலத்தினின் றெழுந்தார் நேர்ந்தார். (கூக)

சொல்லுவ தறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி
வல்லவர் தருளி யென்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி
யெல்லையி லின்ப வெள்ள மெனக்கருள் செய்தாய் போற்றி
நில்லையம் பலத்து ளாடுஞ் சேவடி போற்றி யென்ன. (கூஉ)

விண்ணிடை நின்ற வெள்ளே விடையவ ரடியார் தம்மை
யெண்ணிய வுலகு தன்னி லிப்படி நம்பா லன்பு
பண்ணிய பரிவு கண்டு மகிழ்ந்தனம் பழுதி லாதாய்
நண்ணிய மனேவி யோடு நம்முடன் போது கென்று. (கூகூ)

திருவளர் சிறப்பின் மிக்க திருத்தொண்டர் தமக்குந் தோற்ற
மருவிய தெய்வக் கற்பின் மனேவியார் தமக்குந் தக்க
பெருகிய வருளி னீடும் பேறளித் திமையோ ரேத்தப்
பொருவிடைப் பாகர் மன்னும் பொற்பொது வதனுட் புக்கார். (கூச)

வானவர் பூவின் மாரி பொழியமா மறைக ளார்ப்ப
ஞானமா முனிவர் போற்ற நலமிகு சிவலோ கத்தி
லூனமி லுருண்டர் கும்பிட் டடனுறை பெருமை பெற்றூ
ரேனைய சுற்றத் தாரும் வானிடை யின்பம் பெற்றூர். (கூடி)

இன்புறு தாரந் தன்னே யீசனுக் கன்ப ரென்றே
தன்புறு துதவுந் தொண்டர் பெருமையைத் தொழுது வாழ்த்தி
யன்புறு மனத்தா ளுத னடியவர்க் கன்பு நீடி
மன்புக ழிளேசை மாறன் வளத்தினே வழுத்த லுற்றேன். (கூசு)

இயற்பகைநாயனூர்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - சங்க.

சூ ச னை ம்.

அடியார்வேண்டியது மறாது கொடுத்தல்.

கருணைநிதியாகிய சிவன், தம்மை உணர்ந்து தம்மிடத்து இடையறாத அன்பு செய்யும் மெய்யடியார்களுக்கு, உலகத்துள்ள இனிமையாகிய எப்பொருள்களினும் மிக இனியராய், ஒருகாலும் இடையறாத பேரின்பத்தை ஜனிப்பிப்பார். அது "கனியி னுங் கட்டி பட்ட கரும்பினும்—பனிமலர்க் குழற் பாவைதல் லாரினுந்—தனிமு டிகவி த்தாளு மரசினு—மினியன் றன்னடைந் தார்க்கிடை மருதனே." என அதனே உணர்ந்த திருநாவுக்கரசுநாயனூர் கூறுமாற்றூல், அறிக. ஆதலால், மெய்யுணர்வுடையோர் கள், தமக்கு உரிய மனேவி மைந்தர் முதலிய உயிர்ச்சார்புகளினும், வீடு பொன் முத லிய பொருட்சார்புகளினும், இகபரமும் உயிர்க்குயிராகிய சிவனே தமக்கு மிக இனி யர் என்று தெளிந்து, அச்சார்புகளோடு கலந்திருப்பினும் தாமரையிலேயிற் றண்ணீர் போல அவைகளிடத்தே பற்றுச் சிறிதுமின்றி, அச்சிவனிடத்தே இடையறாத மெய் யன்புடையர்களாகி, சிவனடியார்களேயும் சிவலிங்கத்தையும் சிவன் எனவேகண்டு, வழிபட்டு வாழ்வார்கள். சிவன் பருப்பின்றி எங்கும் வியாபித்திருப்பினும், சிவலிங்கத் தினிடத்தும், சிவனடியாரிடத்தும் தயிரின் நெய்போல விளங்கியும், மற்றையிடங் களிற் பாலின் நெய்போல விளங்காமலும், இருப்பார்.

இவ்வியற்பகைநாயனூர், முன்சென்றபிறப்புக்களிலே பயன்குறியாதுசெய்த அளவிறந்த சிவபுண்ணியங்களினுலே, இப்பிறப்பின் கண்ணே யான் எனது அற்றவர் உறவாகிய சிவனே தமக்கு இனியவர் எனத்தெளிந்து, சிவலிங்கத்தையும் சிவனடி யார்களேயும் சிவன் எனவே கண்டு வழிபடுவாராயினூர். ஒரு காமக்கிழத்திமேல்

அதிதீவிரமாய் முறுகிவளரும் காமத்தினுலே வீழுங்கப்பட்ட மனசை உடைய ஒருவன், தனக்கு உரிய எப்பொருள்களையும் தான் அனுபவித்தலினும், அவள் அனுபவிக்கக்காண்டலே தனக்கு இன்பமாகக்கொள்ளுதல்போல; தமக்குச்சிவன் எனவே தோன்றும் சிவனடியார்கள்மேலே அதிதீவிரமாய் முறுகிவளரும் அன்பினுலே வீழுங்கப்பட்ட மனசை உடைய இந்நாயனார், தமக்கு உரிய எப்பொருள்களையும் தாம் அனுபவித்தனினும், அவ்வடியார்கள் அனுபவித்தலேக் காண்டலே தமக்கு இன்ப மாகக்கொள்ளும் இயல்புடையார். ஆதலாலன்றே, தம்மிடத்துள்ள பொருள்களுள் அவ்வடியார்கள் கேட்பனயாவையோ அவை எல்லாம் சிறிதாயினும் மறுது, உண் மகிழ்ச்சியோடு கொடுக்கும் பெருந்தகைமையிற்சிறந்து விளங்கினர். இவரிடத் துள்ள இம்மெய்யன்பை, சர்வான்மாக்களும் உணர்ந்து உய்யும்படி, உணர்த்துதற்குத் திருவுளங்கொண்ட திருபா சமுத்திரமாகிய சிவன், ஆன்மாக்களுக்கு உலகத்துப் பொருள்களுள் மனைவியினும் இனியபொருள் பிறிது இல்லாமையால், சிவனடியார் வேடங்கொண்டுவந்து, இவரிடத்தே இவர்மனைவியையேகேட்க; இவர் கற்பினிற் சிறந்து விளங்கும் அம்மனைவியையும் மறுது பெருமகிழ்ச்சியோடு கொடுத்தார். இத னுல், இவர் "பனிமலர்க்குழற்பாவை நல்லாரினும்" சிவனே தமக்கு இனியர் என்று கொண்டார் என்பது, துணியப்படும். அன்றியும், இவர் உயர்குடிப்பிறப்பினுலும் பெருஞ்செல்வத்தினுலும் உலகத்தாராலே நன்குமதிக்கப்படுவோராய் இருந்தும், தாம் பிறருக்கு மனைவியைக் கொடுப்பின் உலகத்தாராலே பழிப்புரை உண்டாகு மென்பது நோக்கிற்றிலர். இதனுல் இவர்மனசைச் சிவபத்தியே வீழுங்கிற்றென்று துணிக. இவர் "நாடவர் பழித்துரை பூணது வாகக்" கொண்டமையும் தேர்க.

இந்நாயனர், பிரம்மனே நயத்தல் சிவாகமங்களில் விலக்கப்பட்ட பாவம் என் பது நோக்காது தமது மனைவியைத் தரும்படி கேட்டவரை, சிவனடியார் என்று கொண்டமை குற்றமாகாதோ எனின்; ஆகாது: காமக்கிழத்தியர் வடிவிற் காணப் படும் ஆடை சாந்து ஆபரணம் முதலாயின, காமுகரை வசீகரித்து, தினைக்குந் தோறும் காணுந்தோறும் இன்பம் ஜனிப்பிக்குமாறுபோல; வியூதி ருத்திராக்ஷமுதலிய சிவவேடமானது, மெய்யன்புடையாரை வசீகரித்து, தினைக்குந்தோறும் காணுந் தோறும் இன்பம் ஜனிப்பிக்கும். "இது, சேலுங் கயலுந் திலைக்குங் கண்ணரிளங் கொங்கையிற் செங்குங்குமம்—போலும் பொடியணி மார்பிலங்கும்" என்னுந் திருப் பல்லாண்டாலும், அறிக. அவ்வாறே இந்நாயனரும், வியூதி ருத்திராக்ஷம் முதலிய சிவவேடத்தைக் கண்டவுடனே அதனுல் வசீகரிக்கப்பட்டு, இன்பமேலிடப் பெறுத லால் தம்வயத்தரல்லராவர்: ஆகவே, அச்சிவவேடத்தை உடையாரிடத்துக் குணங்குற் றம் ஆராயும் ஆராய்ச்சி இவருக்கு எப்படிக் கூடும் என்க. அதிதீவிரபத்தி உடையா ருக்கு அடியார்களிடத்தில் குணங்குற்றம் ஆராய்தல் கூடாமை "உருப்பொ லாதவ நிழிகுலத் தவர்கல் லொழுக்க மில்லவரென்று நம்மளலில்—விருப்பி லாதவ ரெனினு மெய்ந்நீறு மிக்க சாதன வேடமுங் கண்டார்—நரிப்பி லாது சென்றெதிருற வணங் கித் தக்க போனக மளித்தவர்க் கெளிதா—லிருப்பர் தாமவ ராடியவர்க் கடியா ரென் பர் யானென தெனுஞ்செருக் கறுப்பார்." என்னும் திருவாதவூரடிகள் புராணத்தில் வென் கூறிய பொருளே உடைய திருவாக்காற் காண்க. சர்வலோகைக நாயகராகிய பரமசிவனுலே "செயற்கருஞ் செய்கை செய்தனீரனே" என்று வியக்கப்பட்ட இந்நாய னுடைய அத்தியற்புத பத்தியின் பெருமையைப் பத்தி என்பது சிறிதும் அறிவிலாச் சிறியேனு விரித்துரைக்க வல்லன்.

இளையான்குடிமாற நாயனார்புராணம்.

அம்பொ னீடிய வம்ப லத்தினி லாடு வாரடி சூடுவார்
தம்பி ரானடி மைத்தி றத்தியர் சால்பின் மேன்மை தரித்துளார்
நம்பு வாய்மையி னீடு சூத்திர நற்கு லஞ்செய் தவத்தினு
லிம்பர் ஞாலம் விளக்கி ஞரிளை யான்கு டிப்பதி மாறனார். (க)

எரின் மல்கு வளத்தி னுல்வரு மெல்லை யில்லதெர்ர் செல்வமு
நீரின் மல்கிய வேணி யாரடி யார்தி றத்து நிறைந்ததோர்
சீரின் மல்கிய வன்பின் மேன்மை திருந்த மன்னிய சிந்தையும்
பாரின் மல்க விரும்பி மற்றவை பெற்ற நீடு பயன் கொள்வார். (உ)

ஆர மென்பு புனைந்த வையர்த மன்ப ரென்பதொர் தன்மையா
னேர வந்தவர் யாவ ராயினு நித்த மாகிய பத்திமுன்
கூர வந்தெதிர் கொண்டு கைகள் குவித்து நின்று செவிப்புலத்
தீர மென்பது ரப்ப தம்பரி வெய்த முன்னுரை செய்தபின். (ங)

கொண்டு வந்து மனைப்பு குந்து குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலி னுத னத்திடை வைத்த ருச்சனை செய்தபி
னுண்டி நாலு விதத்தி லாறு சுவைத்தி றத்தன வொப்பிலா
வண்டர் நாயகர் தொண்ட ரிச்சையி னமுது செய்ய வளித்துளார். (ச)

ஆரு நாயக ரன்ப ரானவ ரளவி லாருள மகிழுவே
நாளு நாளு நிறைந்து வந்து நுகர்ந்த தன்மையி னன்மையா
னீளு மாநிதி யின்ப ரப்பு நெருங்கு செல்வ நிலாவியெண்
டோளி ஞரள கைக்கி ருத்திய தோழ ஞரென வாழுநாள். (ஞ)

செல்வ மேவிய நாளி லிச்செயல் செய்வ தன்றியு மெய்யினு
லல்ல னல்குர வான போதினும் வல்ல ரென்றறி விக்கவே
மல்ல னீடிய செல்வ மெல்ல மறைந்து நாடொறு மாறிவந்
தொல்லை யில்வறு மைப்ப தம்புக வுன்னி ஞர்தில்லை மன்னினார். (ட)

இன்ன வாறு வளஞ்சு ருங்கவு மெம்பி ரானிளை யான்குடி
மன்னன் மாறன் மனஞ்சு ருங்குத லின்றி யுள்ளன மாறியுந்
தன்னை மாறி யிறுக்க வுள்ள கடன்க டக்கன கொண்டபின்
முன்னை மாறி திருப்ப ணிக்கண் முதிர்ந்த கொள்கைய ராயினார். (எ)

மற்ற வன்செய லின்ன தன்மைய தாக மாலய னனவக்
கொற்ற வேனமு மன்ன மூர்தெரி யாத கொள்கைய ராயினார்
பெற்ற மூர்வது மின்றி நீடிய பேதை யாளுட னின்றியோர்
நற்ற வத்தவர் வேட மேகொடு ஞால முய்ந்திட நண்ணினார். (அ)

வே று.

மாரிக் காலத் திரவினில் வைகியோர்
தாரிப் பின்றிப் பசிதலைக் கொள்வது
பாரித் தில்ல மடைத்தபின் பண்புற
வேரித் தாரன் விருந்தெதிர் கொண்டனன். (கூ)

ஈர மேனியை நீக்கி யிடங்கொடுத்
தார வின்னமு ஊட்டுதற் காசையாற்
ரூர மாதரை நோக்கித் தபோதனர்
நீர வேபசித் தார்செய்வ தென்னென்று. (கூ)

நமக்கு முன்பிற் குணவிலே யாயினு
மிமக்கு லக்கொடி பாகர்க் கினியவர்
தமக்கு நாமின் னடிசி றகவுற
வமைக்கு மாறெங்ங னேயணங் கேயென. (கக)

மாது கூறுவாண் மற்றொன்றுங் காண்கிலே
னேதி லாரு மினித்தரு வாரில்லே
போதும் வைகிற்றுப் போமிடம் வேறிலே
தீது செய்வினே யேற்கென் செயலென்று. (கஉ)

செல்ல னீங்கப் பகல்வித் தியசெந்நென்
மல்ல னீர்முளே வாரிக் கொடுவந்தால்
வல்ல வாறமு தாக்கலு மாகுமற்
றல்ல தொன்றறி யேனென் றயர்வுற. (கங)

மற்ற மாற்ற மனேவியார் கூறமுன்
பெற்ற செல்வ மெனப்பெரி தண்மகிழ்ந்
துற்ற காதலி னுலொருப் பட்டனர்
சுற்று நீர்வயல் செல்லத் தொடங்குவார். (கச)

பெருகு வானம் பிறங்க மழைபொழிந்
தருகு நாப்ப ணறிவருங் கங்குருன்
கருகு மையிரு ளின்கணங் கட்டுவிட்
டிருகு கின்றது போன்ற துலகெலாம். (கஙி)

எண்ணு மிவ்வுல கத்தவர் யாவருந்
துண்ணெ னும்படி தோன்றிமுன் ரேய்ந்திடில்
வண்ண நீடிய மைக்குழம் பாமென்று
நண்ணல் செய்யா நடுவிருள் யாமத்து. (கசு)

உள்ள மன்புகொண் டீக்கவோர் பேரிடாக்
கொள்ள முன்கவித் துக்குறி யின்வழிப்
புள்ளு றங்கும் வயல்புகப் போயினர்
வள்ள லாரினே யான்குடி மாறனர். (கஎ)

காலி னுற்றட விச்சென்று கைகளாற்
சாலி வெண்முளே நீர்வழிச் சார்ந்தன
கோலி வாரி யிடாநிறை யக்கொண்டு
மேலெ டுத்துச் சுமந்தொல்லே மீண்டனர். (கஅ)

ரே வ று.

வந்தபின் மனேவி யாரும் வாய்தலி னின்று வாங்கிச்
சிந்தையில் விரும்பி நீரிற் சேற்றினே யலம்பி யூற்றி
வெந்தழ லடுப்பின் மூட்ட விறகில்லே யென்ன மேலோ
ரந்தமின் மனேயி னீடு மலக்கினே யறுத்து வீழ்த்தார். (கக)

முறித்தவை யடுப்பின் மாட்டி முளேவித்துப் பதமுன் கொள்ள
வறுத்தபின் னரிசி யாக்கி வாக்கிய வுலேயிற் பெய்து
வெறுப்பிலின் னடிசி லாக்கி மேம்படு கற்பின் மிக்கார்
கறிக்கினி யென்செய் கோமென் றிறைஞ்சினர் கணவ னுரை. (உ0)

வழிவரு மிளைப்பி னேடும் வருத்திய பசியி னுலே
யழிவுறு மைய னென்னு மன்பினிற் பொலிந்து சென்று
குழிநிரம் பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப் பறித்தவை கறிக்கு நல்க. (உ௭)

மனைவியார் கொழுகர் தந்த மனமகிழ் கறிக ளாய்ந்து
புனலிடைக் கழுவித் தக்க புனிதபாத் திரத்துக் கைமை
வினையினில் வேறு வேறு கறியமு தாக்கிப் பண்டை
நினைவினுற் குறையை நேர்ந்து திருவமு தமைத்து நின்று. (உ௨)

கணவனார் தம்மை நோக்கிக் கறியமு தான காட்டி
யிணையிலா தவரை யீண்ட வமுதுசெய் வீப்போ மென்ன
வுணர்வினு லுணர வொண்ணு வொருவரை யுணர்த்த வேண்டி
யினையமுன் சென்று நின்றங் கவர்துயி லகற்ற லுற்றார். (உ௩)

அழுந்திய விடரு ணீங்கி யடியனே னுய்ய வென்பா
லெழுந்தரு ளெரியோ யீண்ட வமுதுசெய் தருள்க வென்று
தொழும்பனு ருரைத்த போதிற் சோதியா யெழுந்து தோன்றச்
செழுந்திரு மனைவி யாருந் தொண்டருந் திகைத்து நின்றார். (உ௪)

மாலயற் கரிய நாதன் வடிவொரு சோதி யாகச்
சாலவே மயங்கு வார்க்குச் சங்கரன் முன்ம கிழ்ந்தே
யேலவார் குழலா டன்னே டிடபவா கனனுய்த் தோன்றிச்
சீலமார் பூசை செய்த திருத்தொண்டர் தம்மை நோக்கி. (உ௫)

அன்பனே யன்பர் பூசை யளித்தநீ யணங்கி னேடு
மென்பெரு முலக மெய்தி யிருநிதிக் கிழவன் முனே
முன்பெரு நிதிய மேந்தி மொழிவழி யேவல் கேட்ப
வின்பமார்ந் திருப்பீ ராமென் றருள்செய்தா னெவர்க்கு மிக்கான். (உ௬)

இப்பரி சிவர்க்குத் தக்க வகையினு லின்ப நல்கி
முப்புரஞ் செற்ற ரன்பர் முன்பெழுந் தருளிப் போனு
ரப்பெரி யவர்தந் தூய வடியிணை தலேமேற் கொண்டு
மெய்ப்பொருட் சேதி வேந்தன் செயலினை விளம்ப லுற்றேன். (உ௭)

இளையான்குடிமாறநாயனார்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௪௬.

சூ ச னை ம்.

மா கே சு ர பூ சை.

புண்ணியங்களுள்ளே சிவபுண்ணியம் சிறந்தது. சிவபுண்ணியங்களுள்ளே சிவபூசை சிறந்தது. சிவபூசையினும் சிறந்தது மாகேசுரபூசை. மகேசுரராகிய சிவனை வழிபடும் அடியார்கள் மாகேசுரர் எனப்படுவர்கள். மாகேசுரபூசையாவது

மாகேசுரர்களே விதிப்படி பூசித்து, அவர்களுக்கு அன்னம் ஊட்டுதலாம். மாகேசுர பூசைசெய்யுமுறைமை கூறுதும். வெண்டியார்களைத் தூரத்தே கண்டவுடனே, அவர்களுடைய சாதியையும் குணத்தையும் ஆராயாமல் விபூதி ருத்திராக்ஷம் முதலிய சிவவேடமே பொருள் எனக்கொண்டு, அவர்களே மனிதர் எனக்கருதாது சிவன் எனவே புத்திபண்ணி, இருக்கைவிட்டு எழுந்து, அகமகிழ்ச்சியோடும் முகமலர்ச்சியோடும் குவித்தகைகளே உடையராய் விரைந்து எதிர்கொண்டு, அவர்களுடைய திருவடிகளிலே விழுந்து நமஸ்கரித்து, இன்சொற்களைச் சொல்லி, வீட்டுக்கு அழைத்துக் கொண்டுவந்து, கரகநீர்கொண்டு அவர்கள் திருவடிகளே விளக்கி, அத்தீர்த்தத்தைச் சிரமேற்றெளித்து உள்ளும்பருகி, அத்திருவடிகளே மெல்லிய வஸ்திரத்தினுல் ஒற்றி, அவர்களே ஆசனத்திலே இருத்தி, பத்திரபுஷ்பங்களாலே பூசித்து, தூபதீபங்காட்டி, பூமியில் விழுந்து நமஸ்கரித்து, கைப்பு புளிப்பு இத்திப்பு துவர்ப்பு கார்ப்பு உவர்ப்பு என்னும் அறுவகைச்சுவையை உடையனவாய் உண்ணப்படுவது தின்னப்படுவது நக்கப்படுவது பருகபடுவது என நால்வகைப்படும் உணவுகளே, அவரவர் பிரீதிப்படி அமுதுசெய்வித்து, சரீரம் எடுத்ததலுலே பெறும்பயனை இன்றன்றே பெற்றேன் என்று சற்காரவசனம் சொல்லி, அவர்கள் போம்பொழுது அவர்களுக்குப் பின் பதினெஞ்சு அடி போய் வழிவிடுக. சிவனடியார்களேச சாதிகுணம் குறியாது சிவன் எனவே புத்திபண்ணல்வேண்டும் என்பதற்குப் பிரமாணம். சிவதருமோத்தரம். "புலையரே யெனினு மீசன் பொலன்கழ லடியிற் புந்தி—நிலையரே லவர்க்குப் பூசை நிகழ்த்துத னெறியே யென்றுந்—தலையரே யெனினு மீசன் முமரைத் தாளி னேச—மில ரெனி லியற்றும் பூசைப பலந்தரு வாரே யாரே." எ-ம். பிரமோத்தரகாண்டம். "எள்ளற் படுகீழ் மக்களெனு மிழிந்த குலத்தோ ராஞலும்—வள்ளற் பரமன் றிருநீறு மணியு மணிந்த மாண்பினரை—யுள்ளத் துள்ளே யிருபோது மூணர்ந்து தெருண்டு சிவனெனவே—கொள்ளத் தகைய வறிவினரே பிறவிக் கடலிற் குளியாதார்." எ-ம். சைவசமயநெறி. "தேசிகர் தம்மைச் சிவநேசர் தம்மையு—மீசனென வேயுளத்து ளெண்." எ-ம். வரும்.

இம் மாகேசுரபூசையிற் சிறந்த புண்ணியம் பிறிது இல்லே. அது, "அதிகால் லற நிற்பதென் றறிந்தனே யறத்து—ளதிக மாஞ்சிவ புண்ணியஞ் சிவார்ச்சனேய வற்று—ளதிக மாஞ்சிவ பூசையு ளடியவர்பூசை—யதிக மென்றறிந் தன்பரை யருச்சனே செய்வாய்." என்னுந் திருவிளையாடற்புராணத்தினுலும், "படமாடக் கோயிற் பரமற்கொன் றீயி—னடமாடுங் கோயி னம்பற்கங் காக—நடமாடுங் கோயி னம் பற்கொன் றீயிற்—படமாடுங் கோயிற் பரமற்கங் காமே." எ-ம். "தண்டரு சிந்தைத் தபோதனர் தாமகிழ்ந்—துண்டது மூன்று புவனமு முண்டது—கொண்டது மூன்று புவனமுங் கொண்டதென்—றெண்டிசைகூர்ந்தி யெடுத்திசைத்தானே." எ-ம். "அகர மாயிர மந்தணர்க் கீயிலென்—சிகர மாயிரஞ் செய்து முடிக்கிலென்—பரம யோகி பகலூண் பலத்துக்கு—நிகரில்லே யென்பது நிச்சயந் தானே." எ-ம். "ஆறிடு வேள்வி யருமறை நூலவர்—கூறிடு மந்தணர் கோடிபே ருண்பதி—னீறிடுந் தொண்டர் தினேவின் பயனிலே—பேறெனி லோர்பிடி பேறது வாகுமே." என்னுந் திருமந்திரத்தினுலும், "மட்டிட்ட புன்னேயங் கானன் மடமயிலேக்—கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தா—ளெட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்—கட்டிட்டல் காணுதே போதியோ பூம்பாவாய்." என்னுந் திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் தேவாரத்தாலும், "சோணுசலத்தில் உயர்ந்த க்ஷேத்திரம் இல்லே; பஞ்சாக்ஷரத்தில் உயர்ந்த மந்திரம் இல்லே: மாகேசுரதருமத்தில் உயர்ந்த தருமம் இல்லே: சிவாகமத்தில் உயர்ந்த சாஸ்திரம் இல்லே." என்னும் அருணசல மான்மியத்தினுலும், அறிக. இல்வாழ்க்கையின் பயன் இம்மாகேசுரபூசையேயாம். அது, "மற்மலியுலக வாழ்க்கையே வேண்டும் வந்தினின் னன்பர்தம் பணியா—லறமது கிடைக்கின்," என்னும் தாயுமானசுவாமி வாக்கால் அறிக.

இத்தணைப் பெருஞ்சிறப்பினதாகிய மாகேசுரபூசையை, எந்நாளும் சிறிதாயினும் தவறுது சைவாகமவிதிப்படி மெய்யன்போடு செய்தமையால், பெருஞ்சிறப்புற்றவர் இவ்வீளையான்குடிமாறநாயனர். இவர் விதிவழுவாதே மாகேசுரபூசை செய்தனர் என்பது, இங்கே "ஆர மென்பு பூணந்த வையர்த மன்பர்" என்னுங் திருவிருத்தத்தினாலும், "கொண்டு வந்து மனைப்பு குந்து" என்னுந் திருவிருத்தத்தினாலும், உணர்த்தப்பட்டது. இம்மாகேசுரபூசையை இவர் செல்வம் உள்ளபொழுது செய்தமையினும், மிக்க வறுமை வந்தபொழுதும் மனம் சிறிதும் சுருங்குதலின்றி முன்போலவே சிறிதும் தவறுது செய்தமை இவ்வளவு என்று சொல்லக்கூடாத பெரும் வியப்பைத் தருகின்றது! இவருக்கு வந்த வறுமையின் கொடுமையோ மிகப் பெரியது. அது, இங்கே "இன்ன வாறு வளஞ்சு ருங்கவு மெம்பி ரானீனை யான் குடி—மன்னன் மாறன் மனஞ்சு ருங்குத லின்றி யுள்ளன மாறிபுங்—தன்னை மாறி யிறுக்க வுள்ள கடன்க டக்கன கொண்டுபின்—முன்னை மாறி நிருப்ப ணிக்கண் முதிர்ந்த கொள்கைய ராயினர்." என்று உணர்த்தப்பட்டது. மாகேசுரபூசை செய்தலினாலே தமது எல்லையில்லாத பெருஞ்செல்வம் குறைந்து இவ்வளவு மிகக் கொடிய வறுமை வந்து எய்தியபொழுதும், இவர் புண்ணியம் செய்த நமக்குக் கடவுள் இவ்வளவு இடர் செய்தாரே என்று சிவனைச் சிறிதும் நோவாமை எவ்வளவு ஆச்சரியம்! நோவாமை மாத்திரத்தில் நில்லாது நாம் சிவபுண்ணியத்தைச் செல்வம் உள்ளவழிச் செய்யாமையே குற்றம்: வறுமை யெய்தியவழி நாம் யாதுசெய்வோம்! இப்போது செய்யாமை குற்றம் அன்றே என்று, ஒழியாதுசெய்தமை அதினும் ஆச்சரிய மன்றே! இன்னும், இவரும், இவர்கருத்தோடு சிறிதும் மாறுபாடின்றி ஒழுகும் இவர் மனைவியாரும், தாங்கள் பகல்முழுதும் போசனஞ்செய்யாமையாற் பசி மிகுந்து வருத்தமுறும் நேரத்தினும், பேரிருளென்பதும் பெருமழை யென்பதும் பாராமல் செய்த செயற்கருஞ் செய்கை, அதினும் ஆச்சரியமன்றே! தாம் நல்லோர்களுக்கு வறுமையைக் கொடுத்தல் அவர்கள் நயத்தின்பொருட்டே என்பதையும், அச்சயம் இறுதியிலேயே பலிக்கும் என்பதையும், அக்கருத்தறியாது அதற்குள் புண்ணியஞ்செய்த நமக்குக் கடவுள் இடர்செய்தாரே என்று தம்மை நோதல் பழுதாம் என்பதையும், சர்வான்மாக்களும் உணர்ந்து உய்யும்பொருட்டு, பரமசிவன் இவர்களுக்கு வறுமையைக்கொடுத்து, இவர்கள் செயற்கருஞ் செய்கையை வெளிப்படுத்தி, இவர்கட்குப் பேரின்ப வாழ்வைக் கொடுத்தருளிய பெருங்கருணையை யாவர் அளக்கவல்லர்! மெய்யுணர்வுடையோர் தமக்கு எத்தணை இடர்வரினும், சிவனிடத்து அன்பு குன்றார் என்பது இதனால் அறிக. காரைக்காலம்மையாரும் "இடர்களையா ரேனு மெனக்கிரங்கா ரேனும்—படரு நெறிபணியா ரேனுஞ் - சுடருருவி—லென்பரைக் கோலத் தெரியாடு மெம்மானார்க்—கன்பரு தென்னெஞ் சவர்க்கு." என்று திருவாய்மலர்ந்தருளினர்.

மெய்ப்பொருணாயனார்புராணம்.

சேதிநன் னாட்டு நீடு திருக்கோவ லூரின் மன்னி
மாதொரு பாக ரன்பின் வழிவரு மலாடர் கோமான்
வேதநன் னெறியின் வாய்மை விளங்கிட மேன்மை பூண்டு
காதலா லீசர்க் கன்பர் கருத்தறிந் தேவல் செய்வார். (க)

அரசிய னெறியின் வந்த வறநெறி வழாமற் காத்து
வரைதெடுந் தோளால் வென்று மாற்றலர் மூனகண் மாற்றி
புரைதிறம் பாத நீதி யோங்குநீர் மையினின் மிக்கார்
திரைசெய்நீர்ச் சடையா னன்பர் வேடமே சிந்தைசெய்வார். (உ)

மங்கையைப் பாக மாக வைத்தவர் மன்னுங் கோயி
லெங்கணும் பூசை நீடி யேழிசைப் பாட லாடல்
பொங்கிய சிறப்பின் மல்கப் போற்றுதல் புரிந்து வாழ்வார்
தங்கணு யகருக் கன்பர் தாளலாற் சார்பொன் றில்லார். (ங)

தேடிய மாடு நீடு செல்வமுந் தில்லை மன்று
ளாடிய பெருமா னன்பர்க் காவன வாகு மென்று
நாடிய மனத்தி னோடு நாயன்மா ரிணைந்த போது
கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவறக் கொடுத்து வந்தார். (ச)

இன்னவா ரெழுகு நாளி லிகற்றிறம் புரிந்தோர் மன்ன
னன்னவர் தம்மை வெல்லு மாசையா லமர்மேற் கொண்டு
பொன்னணி யோடை யானை பொருபரி காலாண் மற்றும்
பன்முறை யிழந்து தோற்றுப் பரிபவப் பட்டுப் போனன். (ஞ)

இப்படி யிழந்த மாற்ரு னிகலினுல் வெல்ல மாட்டான்
மெய்ப்பொருள் வேந்தன் சில மறிந்துவெண் ணீறு சாத்து
மப்பெரு வேடங்கொண்டே யற்றத்தில் வெல்வா னுகச்
செப்பரு நீலமை யெண்ணித் திருக்கோவ லூரிற் சேர்வான். (ரு)

மெய்யெலா நீறு பூசி வேணிகண் முடித்துக் கட்டிக்
கையினிற் படைக ரந்த புத்தகக் கவளி யேந்தி
மைபொதி விளக்கே யென்ன மனத்தினுட் கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடங் கொண்டு புகுந்தனன் முத்தி நாதன். (எ)

மாதவ வேடங் கொண்ட வன்கணன் மாடந் தோறுங்
கோதைசூ ழளக பாரக் குழைக்கொடி யாட மீது
சோதிவெண் கொடிக ளாடுஞ் சுடர்நெடு மறுகிற் போகிச்
சேதியர் பெருமான் கோயிற் றிருமணி வாயில் சேர்ந்தான். (அ)

கடைபுடைக் காவ லாளர் கைதொழு தேற நின்றே
புடையவர் தாமே வந்தா ருள்ளெழுந் தருளு மென்னத்
தடைபல புக்க பின்பு தனித்தடை நின்ற தத்த
னிடைதெரிந் தருள வேண்டுந் துயில்கொளு மிறைவ னென்றான். (கூ)

என்றவன் கூறக் கேட்டே யானவற் குறுதி கூற
நின்றிடு நீயு மென்றே யவனையு நீக்கிப் புக்குப்
பொன்றிகழ் பள்ளிக் கட்டிற் புரவலன் றுயில மாடே
மன்றலங் குழன்மென் சாயன் மாதேவி யிருப்பக் கண்டான். (கo)

கண்டுசென் றணையும் போது கதுமென விழித்து தேவி
வண்டலர் மாலை யானை யெழுப்பிட வுணர்ந்து மன்ன
னண்டர்நா யகனார் தொண்ட ராமெனக் குவித்த செங்கை
கொண்டிழிந் தெதிரே சென்று கொள்கையின் வணங்கி நின்று. (கக)

மங்கலம் பெருக மற்றென் வாழ்வுவந் தணைந்த தென்ன
விங்கெழுந் தருளப் பெற்ற தென்கொலோ வென்று கூற
வுங்கணு யகனார் முன்ன முரைத்தவா கமநூன் மண்மே
லெங்குமில் லாத தொன்று கொடுவந்தே னியம்ப வென்றான். (கஉ)

பேறெனக் கிதன்மே லுண்டோ பிரானருள் செய்த விந்த
மாறிலா கமத்தை வாசித் தருள்செய வேண்டு மென்ன
நாறுபூங் கோதை மாதுந் தவிரவே நானு நீயும்
வேறிடத் திருக்க வேண்டு மென்றவன் விளம்ப வேந்தன். (கங)

திருமக ளென்ன நின்ற தேவியார் தம்மை நோக்கிப்
புரிவுடன் விரைய வந்தப் புரத்திடைப் போக வேவித்
தருதவ வேடத் தானைத் தவிர்ன்மே லிருத்தித் தாமு
மிருநிலத் திருந்து போற்றி யினியருள் செய்யு மென்றார். (கச)

கைத்தலத் திருந்த வஞ்சக் கவளிகை மடிமேல் வைத்துப்
புத்தக மவிழ்ப்பான் போன்று புரிந்தவர் வணங்கும் போதிற்
பத்திரம் வாங்கித் தான்முன் னினைந்தவப் பரிசே செய்ய
மெய்த்தவ வேட மேமெய்ப் பொருளெனத் தொழுது வென்றார். (கடி)

மறைத்தவன் புகுந்த போதே மனமங்கு வைத்த தத்த
னிறைப்பொழு தின்கட் கூடி வாளினு லெறிய லுற்ற
னிறைத்தசெங் குருதி சோர வீழ்கின்றார் நீண்ட கையாற்
றறைப்படு மளவிற் றத்தா நமரெனத் தடுத்து வீழ்ந்தார். (கசு)

வேதனை யெய்தி வீழ்ந்த வேந்தரால் விலக்கப் பட்ட
தாதனுந் தத்தன் முனுந் தலையினுல் வணங்கித் தாங்கி
யாதுநான் செய்கே னென்ன வெம்பிரா னடியார் போக
மீதிடை விலக்கா வண்ணங் கொண்டுபோய் விடுமீ யென்றார். (கஎ)

அத்திற மறிந்தா ரெல்லா மரசனைத் தீங்கு செய்த
பொய்த்தவன் றன்னைக் கொல்வோ மெனப்புடை சூழ்ந்தபோது
தத்தனு மவரை யெல்லாந் தடுத்துடன் கொண்டு போவா
னித்தவன் போகப் பெற்ற திறைவன தாணை யென்றான். (கஅ)

அவ்வழி யவர்க ளெல்லா மஞ்சியே யகன்று நீங்கச்
செவ்விய நெறியிற் றத்தன் றிருநகர் கடந்து போந்து
கைவடி நெடுவா ளேந்தி யாளுருக் கானஞ் சேர
வெவ்வினைக் கொடியோன் றன்னை விட்டபின் மீண்டு போந்தான். (கஙு)

மற்றவன் கொண்டு போன வஞ்னே வேடத் தான்மேற்
செற்றவர் தம்மை நீக்கித் தீதிலா நெறியில் விட்ட
சொற்றிறங் கேட்க வேண்டிச் சோர்கின்ற வாவி தாங்குங்
கொற்றவன் முன்பு சென்ரூன் கோமகன் குறிப்பி னின்ரூன். (உ0)

சென்றடி வணங்கி நின்று செய்தவ வேடங் கொண்டு
வென்றவற் கிடையூ றின்றி விட்டன னென்று கூற
வின்றெனக் கையன் செய்த தியார்செய்ய வல்லா ரென்று
நின்றவன் றன்னே நோக்கி நிறைபெருங் கருணே கூர்ந்தார். (உக)

அரசிய லாயத் தார்க்கு மழிவுறுங் காத லார்க்கும்
விரவிய செய்கை யெல்லாம் விளம்புவார் விதியி னுலே
பரவிய திருநீற் றன்பு பாதுகாத் துய்ப்பீ ரென்று
புரவலர் மன்று ளாடும் பூங்கழல் சிந்தை செய்தார். (உஉ)

தொண்டனர்க் கிமையப் பாவை துணேவனு ரவர்முன் றம்மைக்
கண்டவா றெதிரே நின்று காட்சிதந் தருளி மிக்க
வண்டவா னவர்கட் கெட்டா வருட்கழ னீழல் சேரக்
கொண்டவா விடைய ருமற் கும்பிடுங் கொள்கை யீந்தார். (உங)

இன்னுயிர் செகுக்கக் கண்டு மெம்பிரா னன்ப ரென்றே
நன்னெறி காத்த சேதி நாதனர் பெருமை தன்னி
லென்னுரை செய்தே னுக விகல்விறன் மிண்டர் பொற்றுள்
சென்னிவைத் தவர்முன் செய்த திருத்தொண்டு செப்ப லுற்றேன். (உச)

மெய்ப்பொருணயனார்புராண முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் - சகo.

சூ ச னி ம்.

க. சிவாலயங்களே விதிவழுவாது நடாத்தல்.

சிவாலயங்களிலே நித்தியமாகிய பூசையும் நைமித்திகமாகிய திருவிழாவும் தவருது நடத்தற்கு வேண்டும் நிபந்தங்கள் அமைத்து, அவைகளேச் சைவாகமவிதிப் படி சிறிதாயினும் வழுவாது நடத்துவித்தல் அரசனுக்குக் கடனும். அவ்வாறு செய் யாது ஒழிவனுயின்; அவனுக்கும் அவனுல் ஆளப்படும் உலகத்துக்கும் பெருங்கேடு வினேயும். இதற்குப்பிரமாணம். திருமந்திரம். "ஆற்றரு நோய்மிகு மவனி மழைகுன் றும்—போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்—கூற்றுதைத் தான்றிருக் கோயி ல்க ளானவை—சாற்றிய பூசைக டப்பிடிற் ருனே." எ-ம். "மூன்னவ னூர்கோயிற் பூசைகண் முட்டிடின்—மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்—கன்னங் களவு மிகுத்திடுங் காசினிக்—கென்னரு ணந்தி யெடுத்துரைத் தானே," எ-ம். வரும். இச் சிவபுண்ணியத்தைச் சிறிதாயினும் தவருது நடாத்தினவர் இம்மெய்ப்பொருணயனர் என்பது, இங்கே "மங்கையைப் பாக மாக வைத்தவர் மன்னுங் கோயி—லெங்கணும் பூசை நீடி யேழிசைப் பாட லாடல்—பொங்கிய சிறப்பின் மல்கப் போற்றுதல் புரிந்து வாழ்வார்." என்பதனுல், உணர்த்தப்பட்டது.

உ. சிவவேடமே மெய்ப்பொருள் எனக் கோள்ளல்.

ஓர் அரசன் சீர்வாழும் குடிகள், அவ்வரசனுடைய புத்திரனைக்காணும்பொழுது, அவனிடத்தே குணம் குற்றம் பாராமல், மிக்க அச்சத்தோடும் அவனை வணங்குவர் கள் அன்றே? அதுபோலவே, சருவலோகைக நாயகராகிய சிவனுக்கு அடிமைக ளாய் உள்ளார், அவருடைய விபூதி ருத்திராக்ஷம் முதலிய சிவவேடம் தரித்தவர்க ளைக் காணும்பொழுது, அவர்களிடத்தே குணம் குற்றம் பாராமல், அவர்களை வணங் குவர்கள். அது "மண்ணுரு மன்னவன்றன் மகன் குணந்தீங் கிரண்டும் வையகத்தார் பாராதே வணங்கிடுவ ரஞ்சி—யெண்ணுரு மிறையமலன் றிருவேடந் திருவீ றிட்டார் கள் குணங்குணக்கே டெனுமிரண்டு மெண்ணார்—விண்ணுளத் தேவினைய வீட்டியிட விழைந்தார் விரும்பியவ ரடிபணிவர் விமலனுரை விலங்க—லொண்ணுதே யெனக் கருதி யொருப்பட்டே யமல னுரைத்தரிய புரிவாழ்வு மற்றையருக் குண்டோ." என் னும் சிவதருமோத்தரத்தால் உணர்க.

இம்மெய்ப்பொருணாயனார் இச்சிவவேடமே மெய்ப்பொருள் எனக்கொண்டார் என்பதும், தாம் தேடிய செல்வம் எல்லாம் பொய்ப்பொருள் எனத் தெளிந்து அத னிற் சிறிதும் பற்று வையாது மெய்ப்பொருளாகிய சிவவேடம் இட்டவர்களுக்கே கொடுத்து வந்தார் என்பதும், இங்கே "திரைசெய் நீர்ச் சடையா னன்பர் வேடமே சிந்தை செய்வார்" என்பதனாலும், "தேடிய மாடுநீடு செல்வமுந் தில்லை மன்று—ளாடிய பெருமா னன்பர்க் காவன வாகு மென்று—நாடிய மனத்தி னோடு நாயன்மா ரிணைந்த போது—கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவறக் கொடுத்து வந்தார்." என்ப தனாலும், உணர்த்தப்பட்டன. நெஞ்சுவிடுதூதில் "வெண்ணீறும் - வேடமும் பூசையு மெய்யென்ருன் பொய்யென்ருன்—மாடையும் வாழ்க்கை மனையுமே." என்ருர் உமா பதிசிவாசாரியர்.

சிவன் தாம் படைத்த இச்சரீரத்தைக் காக்கும்பொழுது அழிப்பவர் ஒருவரும் இல்லை; படைத்துக்காக்கும் அவரே பின்னும் அழிக்கும் பொழுது அதனை இப்பூமி யிலே வைத்துக் காப்பவர் ஒருவரும் இல்லை. ஆதலால், ஆன்மாக்கள் தமக்கு உறவா கிய சிவனை மறந்து அசுத்தமும் அநித்தியமும் துக்கமுமாகிய தமது சரீரத்திலே பற்று வைத்து, அதனைத் தாமே பாதுகாக்க வல்லரென முயலுதல் அறியாமையேயாம். இவ்வறிமாமையை உடையோர், தமது சரீரத்தை எவ்வாற்ருலும் தாம் காத்தல்கூடா மையால், அச்சரீரமும் நீங்கி, மறுமைக்கண்ணே இழிவுபொருந்திய பிறப்பையும் அடைந்து, வருந்துவர். ஆதலால், சிவனே பஞ்சகிருத்தியத்துக்கும் அதிகாரி என் றும், அவராலே எய்தப்படும் முத்தியே சுத்தமும் நித்தியமும் சுகமுமாய் உள்ளது என்றும், தெளிந்த மெய்யுணர்வுடையோர், இச்சரீரத்திலே சிறிதும் பற்றின்றி, முத்தி யின்கண்ணே பேராசை உடையராய், இச்சரீரத்தை அச்சிவன் வசமாக ஒப்பித்து, அவரையே பற்றிநிற்பர். அது "தேனைக் காவல் கொண்டு விண்டகொன்றைச் செழுந் தாராய்—வானைக் காவல் கொண்டு நின்ரு ரறியா நெறியானே—யானைக் காலி ரா னே பரனே யண்ண மலையானே—பூனைக் காவல் கைவிட் டென்னை யுகப்பா ருணர் வாரே." என்னும் சுந்தரமூர்த்திநாயனார் தேவாரத்தால் அறிக.

இம்மெய்ப்பொருணாயனார் இம்மெய்யுணர்வு உடையராகி, தமது சரீரத்திலும் சிறிதும் பற்று இன்றி, உயிர்க்கு உறவாகிய சிவனது திருவடிகளிலேயே இடையருத பெரும்பற்று உடையராய், தம்வசம் இறந்து பரவசராய் நின்றவர். அது, இவர் தம் முடைய பகைவன் சிவவேடங்கொண்டு வந்து தமக்குச் சிவாகமம் போதிப்பான் போலக் காட்டி, தம்மை உடைவாளினுலே குத்தும்போதும், சிவவேடமே மெய்ப் பொருள் என்று அவனை வணங்கினமையாலும்; அவனைக் கொல்லப் புகுந்த தத்த

னைத் தடுத்து, அவனுக்கு இடையூறு நிகழாவண்ணம் அவனை அழைத்துக்கொண்டு போய்விடும்படி செய்தமையாலும்; தணியப்படும்.

ங. சரீரம் நீங்கும்போது சிவத்தியானம் வழுவாமை.

அவாவே பிறவிக்கு வித்து. ஆதலால், சரீரம் நீங்கும்பொழுது யாதொருபொருளையும் அவாவாமல், சிவனுடைய திருவடிகளையே, அழலிடைப்பட்ட மெழுகுபோல மனம் கசிந்து உருக. உரோமம் சிலிர்ப்ப, ஆனந்த அருவிசொரிய, இடையறாது தியானித்தல்வேண்டும். இதற்குப்பிரமாணம். சோமவாரவிரதகற்பம். "மரிக்கும்போதன்னும் வடிவினை யாவி—பரிக்கு நினைவு பரித்து." "ஆதலினற் சுற்றத் தவரைநினையாதமலன்—பாத நினைக பரிந்து." எனவரும்.

இவ்வாறே இம்மெய்ப்பொருணாயனார், சரீரம் நீங்கும்பொழுது, தம்மூடைய புத்திரர் முதலியோர்மேல் சிறிதும் மனம் அழுந்தாதவராகி, விபூதிமேல் அன்பு செய்தற் பொருட்டு அவர்களுக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்தி, தாம் சிதம்பர சபாநாதருடைய திருவடிகளைத் தியானித்தார். மெய்யறிவுடையார்க்கு, தமது சரீரநீக்கத்திலே, சிவன் தமக்கு முன்னின்று அருள்வேண்டும் என்பதே, உள்ளக்கிடக்கை. அது "அங்கத்தை மண்ணுக் காக்கி யார்வத்தை யுனக்கே தந்து—பங்கத்தைப் போக மாற்றிப் பாவித்தேன் பரமாவுன்னைச்—சங்கொத்த மேனிச் செல்வா சாதஞ ணையே னுன்னை—யெங்குற்ரு யென்ற போதா லிங்குற்றே னென்கண் டாயே." என்னும் திருநாவுக்கரசுநாயனர் தேவாரத்தால் அறிக. வேண்டுவார் வேண்டியதே ஈவாராகிய சிவன் அவ்வுள்ளக்கருத்தை முற்றுவித்து அருளுவர் என்பது, இம்மெய்ப்பொருணாயனர் தியானித்தபடியே அவருக்கு எதிர்நின்று காட்சி கொடுத்த அருள் செய்தமையால், தணியப்படும். தம் வாணாள்முழுதும் உயிர்ச்சார்பினும் பொருட்சார்பினும் சிறிதும் உள்ளே பற்றுவையாமல், நிற்கும் போதும், இருக்கும் போதும், கிடக்கும் போதும், நடக்கும்போதும், இடையறாத மெய்யன்போடு சிவத்தியானம் செய்தவர்க்கே, இறக்கும்போதும் அச்சிவத்தியானம் கைகூடும். ஆதலால், சிவனே எந்நாளும் இடையறாது தியானம்பண்ணுக. "நின்று மிருந்துங் கிடந்து நடந்துநினை—யென்றுஞ் சிவன்ரு ளினை." என்று வருத்தமறவுய்யும்வழியிலே கூறப்படுதல் காண்க.

விறன்மிண்டநாயனார்புராணம்.

விரைசெய் நறும்பூந் தொடையிதழி வேணி யார்தங் கழல்பரவிப்
பரசு பெறுமா தவமுனிவன் பரசு ராமன் பெறுநாடு
திரைசெய் கடலின் பெருவளனுந் திருந்து நிலனின் செழுவளனும்
வரையின் வளனு முடன்பெருகி மல்கு நாடு மலைநாடு. (க)

வாரி சொரியுங் கதிர்முத்தும் வயன்மென் கரும்பிற் படுமுத்தும்
வேரல் வீனையுங் குளிர்முத்தும் வேழ மருப்பி னெளிர்முத்து
மூரன் முறுவல் வெண்முத்த நகையார் தெரிந்து முறைகோக்குஞ்
சேரர் திருநாட் சேகளின்முன் சிறந்த மூனூர் செங்குன்றூர். (உ)

என்னும் பெயரின் விளங்கியுல கேறும் பெருமை யுடையதா
னன்னம் பயிலும் வயலுழவி னமைந்த வளத்தா லாய்ந்தமறை
சொன்ன நெறியின் வழியொழுகுந் தூய குடிமைத் தலைநின்ரூர்
மன்னுங் குலத்தின் மாமறைதான் மரபிற் பெரியோர் வாழ்பதியாம். (ங)

அப்பொற் பதியி னிடைவேளாண் குலத்தை விளக்க வவதரித்தார்
செப்பற் கரிய பெருஞ் சீர்த்திச் சிவனார் செய்ய கழல்பற்றி
யெப்பற் றினையு மறவெறிவா ரெல்லை தெரிய வொண்ணுதார்
மெய்ப்பத் தர்கள்பாற் பரிவுடையா ரெம்பி ரானார் விறன்மிண்டர். (ச)

நதியு மதியும் புனைந்தசடை நம்பர் விரும்பி நலஞ்சிறந்த
பதிக ளெங்கு மும்பிட்டுப் படரும் காதல் வழிச்செல்வார்
முதிரு மன்பிற் பெருந் தொண்டர் முறைமை நீடு திருக்கூட்டத்
தெதிர்முன் பரவு மருள்பெற்றே யிறைவர் பாதந் தொழப்பெற்றார். (இ)

பொன்ற ழருவி மலைநாடு கடந்து கடல்சூழ் புவியெங்குஞ்
சென்ற ஞடையா ரடியவர்தந் திண்மை யெழுக்க நடைசெலுத்தி
வன்ற ணீண் மேருச் சிலைவளைத்துப் புரங்கள் செற்று வைதிகத்தேர்
நின்ற நிருந்த திருவாரூர் பணிந்தார் நிகரொன் றில்லாதார். (ஈ)

திருவார் பெருமை திகழ்கின்ற தேவா சிரிய னிடைப்பொலிந்து
மருவா நின்ற சிவனடியார் தம்மைத் தொழுது வந்தணையா
தொருவா றெதுங்கும் வன்றொண்டன் புறமென் றுரைப்பச் சிவனருளாற்
பெருகா நின்ற பெரும்பேறு பெற்றார் மற்றும் பெறநின்றார். (எ)

சேணார் மேருச் சிலைவளைத்த சிவனு ரடியார் திருக்கூட்டம்
பேணு தேகு மூரானுக்கும் பிரானுந் தன்மைப் பிறைசூடிப்
பூண ராவம் புனைந்தார்க்கும் புறமென் றுரைக்க மற்றவர்பாற்
கோண வருளைப் பெற்றார்மற் றினியார் பெருமை கூறுவார். (அ)

ஞால மூய்ய நாமுய்ய நம்பி சைவ நன்னெறியின்
சீல மூய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பாடச் செழுமறைக
ளோல மிடவு மூணர்வரியா ரடியா ருடனு முளதென்று
லால மமுது செய்தபிரா னடியார் பெருமை யறிந்தாரார். (க)

ஒக்க நெடுநா ளிவ்வுலகி லுயர்ந்த சைவப் பெருந்தன்மை
தொக்க நிலைமை நெறிபோற்றித் தொழுண்டு பெற்ற விறன்மிண்டர்
தக்க வகையாற் றம்பெருமா னருளி னுலே தாணிழற்கீழ்
மிக்க கணநா யகராகுந் தன்மை பெற்று விளங்கினார். (கo)

வேறு பிறிதென் றிருத்தொண்டத் தொகையா லுலகு விளங்கவரும்
பேறு தனக்குக் காரணராம் பிரானார் விறன்மிண் டரின்பெருமை
கூறு மளவென் னளவிற்றே யவர்தாள் சென்னி மேற்கொண்டே
யாறை வணிக ரமர்நீதி யன்பர் திருத்தொண் டறைகுவாம். (கக)

விறன்மிண்டநாயனார்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - இoக.

சூ ச ன ம்.

சங்கமபத்திமுதிர்ச்சி.

சிவனிடத்தே இடையறாத அன்பு செய்து, அவருடைய திருவடிகளே அணைய வொட்டாது அயர்த்தலேச் செய்விக்கும் இயல்பினே உடைய மலசம்பந்தங்களேக் களைந்த மெய்யுணர்வு உடையோர், தம்முடன் இணங்குவோர்களே உயிர்க்கு உயிராகிய சிவனே மறப்பித்துத் தீநெறிக்கட் செலுத்திப் பிறவிக்குழியில் வீழ்த்தித் துயருறுத்தும் அஞ்ஞானிகளுடனே சிறிதும் இணங்காதொழிந்து, தம்முடன் இணங்குவோர்களேச் சிவனிடத்தே அன்பை விளைவித்து நன்னெறிக்கட் செலுத்திப் பிறவிக்குழியில் நின்றும் எடுத்து வாழ்விக்கும் மெய்ஞ்ஞானிகளாகிய சிவனடியார்களோடுங்கூடி, அவர்கள் திருவேடத்தையும் சிவலிங்கத்தையும் சிவன் என்றே பாவித்து, வணங்குவர்கள். இதற்குப்பிரமாணம். சிவஞானபோதம். "செம்மலர் நோன்ருள் சேர லொட்டா—வம்மலங் கழீஇ யன்பரொடு மீஇ—மாலறநேய மலிந்தவர் வேடமு—மாலயந் தானு மரனெனத் தொழுமே." எ-ம். "மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ்—சிறப்பில்லார் தந்திறத்துச் சேர்வை - யறப்பித்துப்—பத்த ரினத்தாய்ப் பரனுணர்வி னுலு ணரு—மெய்த்தவரை மேவாவினே." எ-ம். வரும்.

இவ்விறன்மிண்ட நாயனர் இவ்வாறே, சிவனுடைய திருவடிகளேயே பற்றி நின்று, மலசம்பந்தங்களே ஒழித்து, சிவன்டியார்களுடன் இணங்கி, அவர்களேயும் சிவலிங்கத்தையும் சிவன் எனவே வழிபட்டனர் என்பது, இங்கே "செப்பற்கரிய பெருஞ் சீர்த்திச் சிவனர் செய்ய கழல்பற்றி—யெப்பற் றினேயு மறவெறிவா ரெல்லே தெரிய வொண்ணுதார்—மெய்ப்பத் தர்கள்பாற் பரிவுடையா ரெம்பி ரானர் விறன்மிண்டர்." என்பதனலும், "நதியு மதியும் புனைந்தசடை நம்பர் விரும்பி நலஞ்சிறந்த—பதிக ளெங்கு மும்பிட்டுப் படருங் காதல் வழிச்செல்வார்—முதிரு மன்பிற் பெருந்தொண் டர் முறைமை நீடி திருக்கூட்டத்—தெதிர்முன் பரவு மருள்பெற்றே யிறைவர் பாதந் தொழப்பெற்ருர்." என்பதனலும், உணர்த்தப்பட்டது.

சிவனடியாரிடத்துப் பத்தி இல்லாதவர் சிவனிடத்தும் பத்தி இல்லாதவரே. சிவனடியாரிடத்து அவமானம் பண்ணிச் சிவலிங்கத்திலே பூசைசெய்தலாற் பயன் இல்லே என்பது சிவாகமத்துணிவாதலானும்; சிவபத்தரிடத்து அன்புடையராய் அவர் வழி நிற்பினன்றி, உலகியல்பு மாறிச் சிவானுபூதியுணர்வு மேலிடுதல் கூடாமையானும்; இந்நாயனரது உள்ளமானது சங்கமபத்தியிலே மிக முதிர்ச்சி உற்றது. அதனலன்ரே, இவர், தேவாசிரியமண்டபத்தில் எழுந்தருளியிருந்த சிவனடியாரை வணங்காது செல்லும் சுந்தரமூர்த்தி நாயனரையும், அவரை வலிய ஆண்ட பரசிவனேயும், அடியார் திருக்கூட்டத்துக்குப் புறகு என்றும், அச்சுந்தரமூர்த்திநாயனர் திருத்தொண்டத்தொகை பாடியபின், அடியார் திருக்கூட்டத்துக்கு உள்ளென்றும், அருளிச்செய்தார். இவர், அடியார் கூட்டத்தைச் சுந்தரமூர்த்திநாயனர் வணங்காது செல்லக்கண்டமையால், அவரை அத்திருக்கூட்டத்துக்குப் புறகு என்று கூறியது ஒக்கும்; சருவஞ்ஞராகிய சிவனே அவ்வாறு கூறியது குற்றமாகாதோ எனின்; ஆகாது: இவர், தற்போதம் சிவித்து நின்றவழி, இவ்வாறு சொன்னராயில், குற்றம் எறும்; இவர், சிவன் பணித்தபடி செய்து, பரம் அற்று, சிவானுபவம் மேலிட்டு, சிவாதீனமாய் நிற்கையால்; இவர் கூறியது சிவன் கூறியதேயாம், அக்கருத்து, இங்கே "வன்றொண்டன்

புறகென் றுரைப்பச் சிவனருளாற்—பெருகா நின்ற பெரும்பேறு பெற்றார்.'' என்பதி னும், ''பிறைசூடிப்—பூணாரவம் புனைந்தார்க்கும் புறகென் றுரைக்க மற்றவர்பாற்— கோணுவரைப் பெற்றார்மற் றினியார் பெருமை கூறுவார்.'' என்பதினும், அமைந்து கிடக்தமை நுண்ணுணர்வால் உணர்க. காருண்ணிய சமுத்திரமாகிய சிவனே, தமது அடியாரிணக்கம் இல்வழிப் பிறவிப் பிணிதீர்ந்து உய்தல் கூடாமையைச் சருவான் மாக்களும் உணர்ந்து உய்யும்பொருட்டும்; சுந்தரமூர்த்திகாயனாரைக்கொண்டு திருத் தொண்டத்தொகை செய்வித்து, சிவனடியார்கள் தம்மிடத்துச்செய்த அன்பின்றிறத் தையும், அவ்வன்புக்கு எளிவந்த தமது திருவருட்டிறத்தையும் யாவரும் உணர்ந்து தம்மிடத்து அன்பு செய்து உய்தற்பொருட்டும்; தமது திருவுள்ளத்து முகிழ்த்த பெருங்கருணையினாலே, இந்நாயனாரிடத்து ஆவேசித்து நின்று கூறிய கூற்றும் இது என்பது தெளிக. சிவனடியாரிடத்துப் பத்தி இல்லாதவர் சிவனிடத்தும் பத்தி இல் லாதவரே என்பது, ''ஈசனுக்கன் பில்லா ரடியவர்க்கன் பில்லார்'' என்னும் சிவஞான சித்தியாரால், உணர்க. மெய்யுணர்வுடையார் சிவனடியார் இணக்கத்தையே பொரு ளென வேண்டுவர் என்பது ''தேவர்கோ வறியாத தேவதேவன் செழும் பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை—மூவர்கோ னுய்ந்தின்ற முதல்வன் மூர்த்தி மூதாதை மாதானும் பாகத் தெந்தை—யாவர்கோ னென்னே யும்வந் தாண்டு கொண்டான் யாமார்க்குங் குடியல்லோம் யாது மஞ்சோ—மேவினே மவனடியா ரடியா ரோடு மேன்மேலுங் குடைந்தாடி யாடுவோமே.'' ''உடையா ளுன்ற னடிவீருக்கு முடையா ணடிவு ணீயிருத்தி—யடியே னடிவு ளிருவீரு மிருப்ப தாளு லடியேனுன்—னடியா ரடி வுளிருக்கு மருளோப புரியாய் பொன்னம் பலத்தெம்—மூடியா முதலே யென்கரு த்து முடியும் வண்ண முன்னின்றே.'' என்னுந் திருவாசகத்தினாலும், ''நல்லா ரிணக் கமு நின்பூசை நேசமு ஞானமுமே—யல்லாது வேறு நிலையுள தோவக மும்பொ ருளு மில்லாளுஞ் சுற்றமு மைந்தரும் வாழ்வு மெழிலுடம்பு—மெல்லாம் வெளி மயக் கேயிறை வாகசசி யேகம்பனே,'' என்னும் பட்டணத்துப்பிள்ளையார் பாட லாலும், காண்க.

அமர்நீதிநாயனார்புராணம்.

சீரி னீடிய செம்பியர் பொன்னிநன் னாட்டுக்
காரின் மேவிய களியளி மலர்ப்பொழில் சூழ்ந்து
தேரின் மேவிய செழுமணி வீதிகள் சிறந்து
பாரி னீடிய பெருமை சேர் பதிபழை யாறை. (க)

மன்னு மப்பதி வணிகர்தம் குலத்தினில் வந்தார்
பொன்னு முத்துநன் மணிகளும் பூந்துகின் முதலா
வெந்நி லத்தினு முள்ளன வருவளத் தியல்பா
மந்நி லைக்கண்மிக் கவரமர் நீதியா ரென்பார். (உ)

சிந்தை செய்வது சிவன்கழ லல்லதொன் றில்லா
ரந்தி வண்ணர்தம் மடியவர்க் கமுதுசெய் வித்துக்
கந்தை சீருடை கோவணங் கருத்தறிந் தீதலி
வந்த செல்வத்தின் வளத்தினுல் வரும்பயன் கொள்வார். (ங)

முக்க ணக்கரா முதல்வனு ரவர்திரு நல்லூர்
மிக்க சீர்வளர் திருவிழா வீருப்புடன் வணங்கித்
தக்க வன்பர்க ளமுதுசெய் திருமடஞ் சமைத்தார்
தொக்க சுற்றமுந் தாமும்வந் தணைந்தனர் அயோர். (ச)

மருவு மன்பொடு வணங்கினர் மணிகண்டர் நல்லூர்த்
திருவி ழாவணி சேவித்துத் திருமடத் தடியார்
பெருகு மின்பமோ டமுதுசெய் திடவருள் பேணி
யுருகு சிந்தையின் மகிழ்ந்துறை நாளிடை யொருநாள். (ஞ)

பிறைத்த ளிர்ச்சடைப் பெருந்தகை பெருந்திரு நல்லூர்க்
கறைக்க ளத்திறை கோவணப் பெருமைமுன் காட்டி
நிறைத்த வன்புடைத் தொண்டர்க்கு நீடருள் கொடுப்பான்
மறைக்கு லத்தொரு பிரமசா ரியின்வடி வாகி. (ரு)

செய்ய புன்சடை கரந்ததோர் திருமுடிச் சிகையுஞ்
சைவ வெண்டிரு நீற்றுமுண் டகத்தொளித் தழைப்பு
மெய்யின் வெண்புரி நூலுடன் விளங்குமான் றோலுங்
கையின் மன்னிய பவித்திர மரகதக் கதிரும். (எ)

முஞ்சி நாணுற மூடிந்தது சாத்திய வரையிற்
றஞ்ச மாமறைக் கோவண வாடையின் றசையும்
வஞ்ச வல்வினைக் கறுப்பறு மனத்தடி யார்க
ணெஞ்சி னீங்கிடா வடிமலர் நீணிலம் பொலிய. (அ)

கண்ட வர்க்குறு காதலின் மனங்கரைந் துருகத்
தொண்ட ரன்பெனுந் தூதெறி வெளிப்படப் பாராய்த்
தண்டின் மீதிரு கோவண நீற்றுப்பை தருப்பை
கொண்டு வந்தமர் நீதியார் திருமடங் குறுக. (கூ)

வடிவு காண்டலு மனத்தினு முகமிக மலர்ந்து
கடிது வந்தெதிர் வணங்கியிம் மடத்தினிற் காணும்
படியி லாதநீ ரணையமுன் பயிறவ மென்னே
வடிய னேன்செய்த தென்றன ரமர்நீ தியன்பர். (கo)

பேணு மன்பரை நோக்கினீர் பெருகிய வடியார்க்
கூணு மேன்மையி லூட்டிநற் கந்தைக ளுடைகீள்
யாணர் வெண்கிழிக் கோவண மீதல்கேட் டும்மைக்
காண வந்தன மென்றனன் கண்ணுதற் கரந்தோன். (கக)

என்று தம்பிரா னருள்செய வித்திரு மடத்தே
நன்று நான்மறை நற்றவ ரமுதுசெய் தருளத்
தன்று வேதியர் தாய்மையி னமைப்பது முளதா
லின்று நீருமிங் கமுதுசெய் தருளுமென் றிறைஞ்ச. (கஉ)

வணங்கு மன்பரை நோக்கியம் மறையவ நிசைந்தே
யணங்கு நீர்ப்பொன்னி யாடிநான் வரமழை வரினு
முணங்கு கோவணம் வைத்துநீர் தாருமென் றெருவெண்
குணங்கொள் கோவணந் தண்டினி லவிழ்த்தது கொடுப்பார். (கங)

ஓங்கு கோவணப் பெருமையை யுள்ளவா றுமக்கே
யீங்கு நான்சொல்ல வேண்டுவ தில்லைநீ நிதனே
வாங்கி நான்வரு மளவுமும் மிடத்திக ழாதே
யாங்கு வைத்துநீர் தாருமென் றவர்கையிற் கொடுத்தார். (கச)

கொடுத்த கோவணங் கைக்கொண்டு கோதிலா வன்பர்
கடுப்பி லிங்கெழுந் தருளுநீர் குளித்தெனக் கங்கை
மடுத்த தும்பிய வளர்சடை மறைத்தவம் மறையோ
டடுத்த தெண்டிரைப் பொன்னிநீ ராடவென் றகன்றார். (கஞ)

தந்த கோவணம் வாங்கிய தனிப்பெருந் தொண்டர்
முந்தை யந்தணர் மொழிகொண்டு முன்புதாங் கொடுக்குங்
கந்தை கீளுடை கோவண மன்றியோர் காப்புச்
சிந்தை செய்துவே றிடத்தொரு சேமத்தின் வைத்தார். (கசு)

போன வேதியர் வைத்தகோ வணத்தினைப் போக்கிப்
பான லந்துறைப் பொன்னிநீர் படிந்துவந் தாரோ
ஞான மூர்ந்சடைக் கங்கைநீர் தோய்ந்துவந் தாரோ
வான நீர்மழை பொழிந்திட நனைந்துவந் தணைந்தார். (கள)

கதிரி ளம்பிறைக் கண்ணியர் நண்ணிய பொழுதின்
முதிரு மன்புடைத் தொண்டர்தா முறைமையின் முன்னே
யதிக நன்மையி னறுசுவைத் திருவமு தாக்கி
யெதிரெ ழுந்துசென் றிறைஞ்சிட நிறைந்தநூன் மார்பர். (கஅ)

தொண்ட ரன்பெனுந் தாயநீ ராடுதல் வேண்டி
மண்டு தண்புனன் மூழ்கிய வீரத்தை மாற்றத்
தண்டின் மேலது மீரநான் றந்தகோ வணத்தைக்
கொண்டு வாருமென் றுரைத்தனர் கோவணக் கள்வர். (கக)

ஐயர் கைதவ மறிவுறு தவர்கடி தணுகி
யெய்த முன்சென்று கோவண மிருந்தவே றிடத்தின்
மையில் சிந்தையர் கண்டிலர் வைத்தகோ வணமுன்
செய்த தென்னென்று திகைத்தனர் தேடுவா ரானூர். (உ0)

பொங்கு வெண்கிழிக் கோவணம் போயின நெறிமேற்
சங்கை யின்றியே தப்பின தென்றுதஞ் சரக்கி
லெங்கு நாடியுங் கண்டில ரென்செய்வார் நின்ற
ரங்கண் வேதியர் பெருந்துடக் கினிலகப் பட்டார். (உக)

மனைவி யாரொடு மன்னிய கிளைஞருந் தாமு
மினைய தொன்றுவந் தெய்திய தெனவிடர் கூர்ந்து
நினைவ தொன்றிலர் வருந்தினர் நிற்கவு மாட்டார்
புனைய வேறொரு கோவணங் கொடுபுறப் பட்டார். (உஉ)

அத்தர் முன்புசென் றடிகணீர் தந்தகோ வணத்தை
வைத்தி டத்துநான் கண்டிலேன் மற்றுமோ ரிடத்தி
லுய்த்தொ ளித்தன ரில்லைநா ளெளித்தவா றறியே
னித்த கைத்தவே றதிசயங் கண்டிலே னென்று, (உங)

வேறு நல்லதோர் கோவணம் விரும்பிமுன் கொணர்ந்தேன்
றேறு கோவண மன்றுநெய் தமைத்தது கிளர்கொ
ணீறு சாத்திய நெற்றியீர் மற்றது களைந்து
மாறு சாத்தியென் பிழைபொறுப் பீரென வணங்க. (உச)

நின்ற வேதியர் வெகுண்டமர் நீதியார் நிலைமை
நன்று சாலவு நாளிடை கழிந்தது மன்று
லின்று நான்வைத்த கோவணங் கொண்டதற் கெதிர்வே
ருன்று கொள்கென வுரைப்பதே நீரென வுரையா. (உடு)

நல்ல கோவணங் கொடுப்பரென் றுலகின்மே ஞலுஞ்
சொல்லு வித்ததென் கோவணங் கொள்வது துணிந்தோ
வொல்லை யீங்குறு வாணிக மழகிய தமக்கென்
றெல்லை யில்லவ னெரிதுள்ளி ஞலென வெகுண்டான். (உசு)

மறிக ரந்ததண் டேந்திய மறையவர் வெகுளப்
பொறிக லங்கிய வுணர்வின ராய்முகம் புலர்ந்து
நெறிய வென்பெரும் பிழைபொறுத் தருள்செய்வீ ரடியே
னறிய வந்ததொன் றன்றென வடிப்பணிந் தயர்வார். (உஎ)

செயத்த கும்பணி செய்வனிக் கோவண மன்றி
நயத்த குந்தன நல்லபட் டாடைகண் மணிக
ளுயர்த்த கோடிகொண் டருளுமென் றுடம்பினி லடங்காப்
பயத்தொ டுங்குலந் தடிமிசைப் பலமுறை பணிந்தார். (உஅ)

பணியு மன்பரை நோக்கியப் பரம்பொரு ளாளூர்
தணியு மூள்ளத்த ராயினர் போன்றுநீர் தந்த
மணியும் பொன்னுநல் லாடையு மற்றுமென் செய்ய
வணியுங் கோவண கோந்தர வமையுமென் றருள. (உசு)

மலர்ந்த சிந்தைய ராகிய வணிகரே றனையா
ரலர்ந்த வெண்ணிறக் கோவண மதற்குநே ராக
விலங்கு பூந்துகில் கொள்வதற் கிசைந்தருள் செய்தீர்
நலங்கொள் கோவணந் தரும்பரி சியாதென நம்பர். (ஈ0)

உடுத்த கோவண மொழியநா மும்கையிற் றரநீர்
கெடுத்த தாகமுன் சொல்லுமக் கிழித்தகோ வணநே
ரடுத்த கோவண மிதுவென்று தண்டினி லவிழா
வெடுத்து மற்றித னெடையிடுங் கோவண மென்றார். (ஈக)

நன்று சாலவென் றன்பரு மொருதுலை நாட்டக்
குன்ற வில்லியார் கோவண மொருதட்டி லிட்டார்
நின்ற தொண்டரும் கையினி னெய்தகோ வணந்தட்
டொன்றி லேயிட நிறைநிலா தொழிந்தமை கண்டார். (ஈஉ)

நாடு மன்பொடு நாயன்மார்க் களிக்கமுன் வைத்த
நீடு கோவண மடையநே ராகவொண் ருன்றுக்
கோடு தட்டின்மீ திடவிடக் கொண்டெழுந் ததுகண்
டாடு சேவடிக் கடியரு மற்புத மெய்தி. (ஈங)

உலகி லில்லதோர் மாயையிக் கோவண மொன்றுக்
கலகில் கோவண மொக்கில வென்றதி சயித்துப்
பலவு மென்றுகில் பட்டெ னிடவிட வுயர
விலகு பூத்துகிற் பொதிகளை யெடுத்துமே லிட்டார். (கூ)

முட்டி லன்பர்த மன்பிடுக் தட்டுக்கு முதல்வர்
மட்டி நின்றதட் டருளொடுக் தாழ்வுறும் வழக்காற்
பட்டெ டுத்துகி லநேககோ டிகளிடும் பத்தர்
தட்டு மேற்படத் தாழ்ந்தது கோவணத் தட்டு. (கூ)

ஆன தன்மைகண் டடியவ ரஞ்சியந் தணர்முன்
ஊன நுந்துகில் வர்க்கதூல் வர்க்கமே முதலா
மான மில்லன குவிக்கவுந் தட்டின்மட் டிதுவா
லேனை யென்றன மிடப்பெற வேண்டுமென் றிறைஞ்ச. (கூ)

மங்கை பாகரா மறையவர் மற்றதற் கிசைந்தே
யிவரு நாமினி வேறுரை ன்று சொல்லுவ தென்கொ
லங்கு மற்றுங்க டனங்களி ஞகிலு மிடுவீ
ரெங்கள் கோவண நேர்நிற்க வேண்டுவ தென்றார். (கூ)

நல்ல பொன்னெடும் வெள்ளியு நவமணித் திரளும்
பல்வ கைத்திறத் துலோகமும் புணர்சசிகள் பலவு
மெல்லை தீர்தனஞ் சுமந்தவ ரிடவிடக் கொண்டே
மல்கு தட்டுமீ தெழுந்தது வியந்தனர் மண்ணோர். (கூ)

தவநி றைந்தநான் மறைப்பொரு ணூல்களாற் சமைந்த
சிவன்வி ரும்பிய கோவண மிடுஞ்செழுந் தட்டுக்
கவனி மேலமர் நீதியார் தனமெலா மன்றிப்
புவனம் யாவையு நேர்நிலா வென்பது புகழோ. (கூ)

நிலைமை மற்றது நோக்கிய நிகரிலார் நேர்நின்
றுலைவில் பஃறன மொன்றெழி யாமையுய்த் தொழிந்தேன்
றலைவ யானுமென் மனைவியுஞ் சிறுவனுந் தருமேற்
றுலையி லேறிடப் பெறுவதுன் னருளெனத் தொழுதார். (சா)

பொச்ச மில்லடி மைத்திறம் புரிந்தவ ரெதிர்நின்
றச்ச முன்புற வுரைத்தலு மங்கண ரருளா
னிசச யித்தவர் நிலையினைத் துலையெனுஞ் சலத்தா
லிச்ச ழக்கினின் றேற்றுவா ரேறுதற் கிசைந்தார். (சக)

மனம கிழ்ந்தவர் மலர்க்கழல் சென்னியால் வணங்கிப்
புனைம லர்க்குழன் மனைவியார் தம்மொடு புதல்வன்
றனையு டன்கொடு தனித்துலை வலங்கொண்டு தகவா
லினைய செய்கையி லேறுவார் கூறுவா ரெடுத்து. (சஉ)

இழைத்த வன்பினி லிறைதிரு நீற்றுமெய் யடிமை
பிழைத்தி லோமெனிற் பெருந்துலை நேர்நிற்க வென்று
மழைத்த டம்பொழிற் றிருநல்லூ ரிறைவரை வணங்கித்
தழைத்த வஞ்செழுத் தோதினு நேறினார் தட்டில். (சஉ)

மண்டு காதலின் மற்றவர் மகிழ்ந்துட னேற
வண்டர் தம்பிரான் றிருவரைக் கோவண மதுவுங்
கொண்ட வன்பினிற் குறைபடா வடியவ ரடிமைத்
தொண்டு மொத்தலா லொத்துநேர் நின்றதத் துலேதான். (சசு)

மதிவி ளங்கிய தொண்டர்தம் பெருமையை மண்ணோர்
துதிசெய் தெங்கணு மதிசய முறவெதிர் தொழுதார்
கதிர்வி சும்பிடை கரந்திட நிரந்தகற் பகத்தின்
புதிய பூமழை யிமையவர் மகிழ்வுடன் பொழிந்தார். (சஙி)

அண்டர் பூமழை பொழியமற் றதனிடை யொளித்த
மூண்ட வேதிய ரொருவழி யான்முத னல்லூர்ப்
பண்டு தாம்பயில் கோலமே விசும்பினிற் பாகங்
கொண்ட பேதையுந் தாமுமாங் காட்சிமுன் கொடுத்தார். (சசூ)

தொழுது போற்றியத் துலேமிசை நின்றுநேர் துதிக்கும்
வழுவி லன்பரு மைந்தரு மனேவியார் தாமு
முழுது மின்னருள் பெற்றுத்தம் முன்றொழு திருக்கு
மழிவில் வான்பதங் கொடுத்தெழுந் தருளினு ரையர். (சஎ)

நாதர் தந்திரு வருளினு னற்பெருந் துலேயே
றீது கொண்டெழு விமானம தாகிமேற் செல்லக்
கோதி லன்பருங் குடும்பமுங் குறைவறக் கொடுத்த
வாதி மூர்த்தியா ருடன்சிவ புரியினே யணேந்தார். (சஅ)

தே வு.

மலர்மிசை யயனு மாலுங் காணுதற் கரிய வள்ளல்
பலர்புகழ் வெண்ணெய் நல்லூ ராவணப் பழைமை காட்டி
யுலகுய்ய வாண்டு கொள்ளப் பெற்றவர் பாத முன்னித்
தலேமிசை வைத்து வாழுந் தலேமைநந் தலேமை யாரும். (சகூ)

அமர்நீதிநாயனார்புராண முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் - டுடுo.

சூ ச ன ம்.

சிவனடியாருக்கு அன்னம் வஸ்திரம் கௌபீனம் கொடுத்தல்.

சிவஸ்தலத்திலே மடங்கட்டுவித்து, புண்ணிய காலங்களிலே சிரத்தையோடும் சற்பாத்திரமாகிய சிவனடியார்களே அமுதுசெய்வித்தலும், அவர்களுக்கு வஸ்திரம் கௌபீனம் முதலியன கொடுத்தலும், பெரும்புண்ணியமாம். அன்னம் வஸ்திரம் கௌபீனம் முதலியன தானஞ்செய்தல் புண்ணியம் என்பதற்குப் பிரமாணம். சிவதருமோத்தரம். "திருப்பதி வணங்க வென்று சென்றுறுஞ் சிவநேசர்க்கு—மருத்தியாற் கங்கையாதி யாடிட நாடி னர்க்கு—மருத்துக வன்ன பான மவரவர்க்குபயோ கங்கள்—பொருத்துக வூனைப் போக்கிச் சிவபுரம் புகுவர் தாமே" எ-ம். "பிரம சாரியைப் பேரற மோங்கிடுங்—கிரக சாரியை யூட்டிய கேண்மையர்—விரவியேகிவ லோகம் விரும்பிய—பரம போக மனேத்தும் பயில்வரே." எ-ம். "ஊட்டி

ஞர்க ளுதவிய தேதெனுங்—காட்டி ளாடி கழறங் கருத்தினு—ணுட்டி ளுரைத் தமைகலி யும்வினை—யோட்டி யேசிவ லோக முறைவரே.'' எ-ம். ''மாதவர்க்குற வற்கலை மீந்தவர்—சீத வாரித வாடையுஞ் சேர்த்தினர்—கோதி லாவச ளுதியுங் கோல்வளை—மாதொர் பாகன் புரத்தினுள் வாழ்ந்தபின்.'' எ-ம். சிவபுண்ணியத் தெளிவு. ''நாற்ற மாமல ரோனெழி ளுரணன்—போற்று சங்கர னன்பர்க்குப் பொங் கிழை—யாற்று கோவண மீந்தவ ராயிரங்—தேற்று கோடி யுகஞ்சிவ லோகரே.'' எ-ம். வரும். இப்புண்ணியத்தைப் புண்ணியஸ்தானத்திலே புண்ணிய காலத்திலே சிரத்தையோடும் செய்தல் உத்தமோத்தமம் என்பதற்குப் பிரமாணம். சிவதரு மோத்தரம். ''சிறந்தநற் றேசஞ் தன்னிற் றேடருங் காலங் கூட—மறந்திடா விதியி னுலே வாய்த்தவா தரவுங் கூர—வறந்தனை யறிந்த வாய்மைப் பாத்திர மாவானங் கைச்—செறிந்திடச் செய்த வற்ப முலகினும் பெருகுந் திண்ணம்.'' எ-ம். ''ஒங்கிய வதனைச் செய்த வுத்தமர் சிவலோ கத்துட்—டாங்கியே போக பேதம் பிரளய சம யந் தன்னி—னீங்கரும் பொருளைக் கண்டு நிறையுற வொருமைநீட—தூங்குவ ரின் பந் தோன்றத் துகண்மலஞ் சோரு மன்றே.'' எ-ம். வரும்.

இவ்வமர்நீதிநாயனார் இந்தச்சிவபுண்ணியத்தின் மிகச் சிறந்தவராகி, சிவனிட த்தே இடையறுத மெய்யன்புடையராயினர். சிவனிடத்து அன்பில்லாமற் செய்யப் படும் புண்ணியம் உயிர் இல்லாத உடல் போலப் பயன் படாதாம். இவ்வன்பு பல பிறப்புக்களிலே பயன் குறியாது செய்யப்பட்ட தபோபலத்தினுலே சிவன் அருள் செய்யக் கிடைக்கும். இவ்வன்பு உள்ளவழியே சிவனது திருவருள் உண்டாம். அது உண்டாய வழி, முத்தி உண்டாம். இதற்குப் பிரமாணம். வாயுசங்கிதை. ''ஆங் கவ னருளாற் பத்திகன் குண்டாம் பத்தியா லவனரு ளுண்டாம்—வீங்கிய பத்தி பற் பல பிறப்பில் வேதங்க ளுரைத்திடும் படியே—தீங்கறு கரும மியற்றிய பலத்தாற் சிவனருள் செய்திட வருமா—லோங்கிய பத்தி யாற்சிவ தரும மொழிவறப் புரிந்தி டப் படுமால்.'' எ-ம். ''புரிதலா லிறைவ னல்லருள் புரிவான் புரிந்திடப் போக் கற நின்ற—விருவினை கழியுங் கழிந்திட முத்தி யெய்தலா மிறைவன்வார் கழலி— லொருவழி சிறிது பத்திசெய் வோரு மொருமூன்று பிறப்பின்மேற் பிறப்பின்—மரு வீடா ரங்கத் தொடுமெனுச் செபித்தன் மாசறு பத்தியா மென்பர்.'' எ-ம். வரும். இவ்வமர்நீதி நாயனர் மெய்யன்பிற் குறைபடாதவர் என்பது, பிரமசாரி வடிவங் கொண்டு வந்த பரமசிவனது கௌபீனம் இட்டதட்டுக்கு இவர் தம்மிடத்து உள்ள கௌபீனங்கள் வஸ்திரங்கள் பட்டுக்கள் பொன் வெள்ளி முதலிய உலோகங்கள் ரவ ரத்தினங்கள் முதலிய அனைத்தையும் இட்டதட்டு ஒவ்வாது மேலெழுந்து, பின்பு தாமும் தம்முடைய மனைவியும் புத்திரனும், நாம் அன்பினுடு சிவனது திருநீற்று மெய்யடிமைபிழைத்திலோமாயின் இத்தட்டு மற்றதனுடு சேர்நிற்க என்று சொல்லி ஏறியவுடனே, அதனுடு ஒத்து நின்றமையாலே, தெளியப்படும். அன்பின்திறம் கண்ணப்ப நாயனர் புராணத்துச் சூசனத்தில் விரித்து உரைக்கப்படும் ஆதலால், இங்கே விரித்திலம்.

திருவாழந்தணர்சருக்க முற்றுப்பெற்றது.

மூன்றாவது

இலைமலிந்தசருக்கம்.

எறிபத்தநாயனார்புராணம்.

மல்லனீர் ஞாலந் தன்னுண் மழவிடை யுடையா னன்பர்க்
கொல்லைவந் துற்ற செய்கை யுற்றிடத் துதவு நிரா
ரெல்லையில் புகழின் மிக்க வெறிபத்தர் பெருமை யெம்மாற்
சொல்லலாம் படித்தன் றேனு மாசையாற் சொல்ல லுற்றேன். (க)

பொன்மலைப் புலிவெண் ணீருங்கப் புதுமலை யிடித்துப் போற்று
மன்கெறி வழியேயாக வயல்வழி யடைத்த சோழன்
மன்னிய வகபா யன்சீர் மரபின்மா நகர மாருந்
தொன்னெடுங் கருவூ ரென்னுஞ் சுடர்மணி வீதி மூதூர். (உ)

மாமதின் மஞ்சு சூழு மாளிகை நிரைவிண் சூழுந்
தூமணி வாயில் சூழுஞ் சோலையில் வாசஞ் சூழுந்
தேமல ரளகஞ் சூழுஞ் சிலமதி தெருவிற் சூழுந்
தாமநிழந் தமரர் சூழுஞ் சதமக னகரந் தாழ. (ங)

கடகரி தறையி லாடுங் களிமயில் புறவிலாடு
மடர்மணி யரங்கி லாடு மரிவையர் குழல்வண் டாடும்
படரொளி மறுகி லாடும் பயில்கொடி கதிர்மீ தாடுந்
தடநெடும் புலிகொண் டாடுந் தனிநகர் வளமை யீதால். (ச)

மன்னிய சிறப்பின் மிக்க வளநக ரதனின் மல்கும்
பொன்னியல் புரிசை சூழ்ந்து சுரர்களும் போற்றும் பொற்பாற்
றுன்னிய வன்பின் மிக்க தொண்டர்தஞ் சிந்தை நீங்கா
வந்நிலை யரனூர் வாழ்வ தாநிலை யென்னுங் கோயில். (ஞ)

பொருட்டிரு மறைக டந்த புனிதரை யினிதக் கோயின்
மருட்டுறை மாற்று மாற்றுரல் வழிபடுந் தொழில ராகி
யிருட்கடு வொடுவெகு கண்டத் திறையவர்க் குரிமை பூண்டார்க்
கருட்பெருந் தொண்டு செய்வா ரவரெறி பத்த ராவார். (ட)

மழைவள ருலகி லெங்கு மன்னிய சைவ மோங்க
வழலவிர் சடையா னன்பர்க் கடாதன வடித்த போது
முழையரி யீன்னத் தோன்றி முரண்கெட வெறிந்து தீர்க்கும்
பழமறை பரசுங் தய பரசுமுன் னெடுக்கப் பெற்றார். (எ)

அண்ணலார் நிகழு நாளி லாநிலை யடிக ளார்க்குத்
திண்ணிய வன்பு கூர்ந்த சிவகாமி யாண்டா ரென்னும்
புண்ணிய முனிவ ஞர்தாம் பூப்பறித் தலங்கல் சாத்தி
புண்ணிறை காதலோடு மொழுகுவா ரொருநாண் முன்போல். (அ)

வைகறை புணர்ந்து போர்த்து புனல்மூழ்கி வாயுள் கட்டி
மொய்மலர் பெருங்கு வாச ந்தன வனத்து முன்னிக்
கையினிற் றெரிந்து கல்ல கமழ்முகை யலரும் வேலைத்
தெய்வகா யகர்க்குச் சாத்துந் திருப்பள்ளித் தாமம் கொய்து. (கூ)

கோலப்பூங் கூடை தன்னே நிறைத்தனர் கொண்டு நெஞ்சில்
வாலிய நேசங் கொண்டு மலர்க்கையிற் றண்டுங் கொண்டங்
காலய மதனே நோக்கி யங்கணர்க் கமைத்துச் சாத்துங்
காலவந் துதவ வேண்டிக் கடிதினில் வாரா நின்றார். (கூ0)

மற்றவ ரணைய வீப்பால் வளாக ரதனின் மன்னுங்
கொற்றவர் வளவர் தங்கள் குலப்புகழ்ச் சோழ னூர்தம்
பற்றலர் மூனைகள் சாய்க்கும் பட்டவர்த் தனமாம் பண்பு
பெற்றவெங் களிறு கோலம் பெருகுமா ஈவமி முன்னள். (கூக)

மங்கல வீழவு கொண்டு வருநதித் துறைநீ ராடிப்
பொங்கிய களிப்பி னேடும் பொழிமதஞ் சொரிய நின்ரு
ரெங்கணு மிரியல் போக வெதிர்பரிக் கார ரோடத்
துங்கமால் வரைபோற் ரேன்றித் துண்ணென வணைந்த தன்றே. (கூஉ)

வெண்றிமால் யானே தன்னே மேல்கொண்ட பாக ரோடுஞ்
சென்ருரு தெருவின் முட்டச் சிவகாமி யார்முன் செல்ல
வன்றனித் தண்டிற் ரூங்கு மலர்கொள்பூங் கூடை தன்னேப்
பின்ரொடர்ந் தோடிச் சென்று பிடித்துடன் பறித்துச் சிந்த. (கூக)

மேல்கொண்ட பாகர் கண்டு வீசைகொண்ட களிறு சண்டக்
கால்கொண்டு போவார் போலக் கடிதுகொண் டகலப் போக
நூல்கொண்ட மார்பிற் ரேண்டர் நோக்கினர் பதைத்துப் பொங்கி
மால்கொண்ட களிற்றின் பின்பு தண்டுகொண் டடிக்க வந்தார். (கூச)

அப்பொழு தணைய வொட்டா தடற்களி றகன்று போக
மெய்ப்பெருந் தொண்டர் மூப்பால் விரைந்துபின் செல்ல மாட்டார்
தப்பினர் விழுந்து கையாற் றரையடித் தெழுந்து நின்று
செப்பருந் துயர நீடிச் செயிர்த்துமுன் சிவதா வென்பார். (கூஇ)

வே று.

களியா னேயினீ ருரியாய் சிவதா, வெளியார் வலியா மிறைவா சிவதா
வளியா ரடியா ரறிவே சிவதா, தெளிவா ரமுதே சிவதா சிவதா. (கூக)

ஆறும் மதியும் மணியுஞ் சடைமே, லேறும் மலரைக் கரிசிக் துவதே
வேறண் ணினேவார் புரம்வெந் தலியச், சீறுஞ் சிலேயாய் சிவதா சிவதா. (கூஎ)

தஞ்சே சரணம் புகுதுந் தமியோர், நெஞ்சேய் துயரங் கெடநோர் தொடரு
மஞ்சே யெனவீழ் மறலிக் கிறைவீன், செஞ்சே வடியாய் சிவதா சிவதா. (கூஅ)

நெடியோ னறியா நெறியா ரதியும், படியு டடிமைப் பணிசெய்து தொழுரு
டியார் களில்யா னரா வீணேவாய், மூடியா மூதலா யெனவே மொழிய. (கூக)

வே று.

என்றவ ருரைத்த மாற்ற மெறிபத்த ரெதிரே வாரா
நின்றவர் கேளா மூளு நெருப்புயிர்த் தழன்று பொங்கி
மன்றவ ரடியார்க் கென்றும் வழிப்பகை களிறே யன்றே
கொன்றது வீழ்ப்ப னென்று கொலேமழு வெடுத்து வந்தார். (கூ-

வந்தவ ரழைத்த தொண்டர் தமைக்கண்டு வணங்கி யும்மை
யிந்தவல் லிடும்பை செய்த யானேயெங் குற்ற தென்ன
வெந்தையார் சாத்தும் பூவை யென்கையிற் பறித்து மண்மேற்
சிந்திமுன் பிழைத்துப் போகா நின்றதித் தெருவே யென்றார். (உக)

இங்கது பிழைப்ப தெங்கே யினியென வெரிவாய் சிந்து
மங்கையின் மழுவுந் தாமு மனலும்வெங் காலு மென்னப்
பொங்கிய வீசையிற் சென்று பொருகரி தொடர்ந்து செல்லுஞ்
செங்கண்வா ளரியிற கூடிக் கிடைத்தனர் சீற்ற மிக்கார். (உஉ)

கண்டவ ரிதுமுன் பண்ண லுரித்தவக் களிறே போலு
மண்டரு மண்ணு ளோருந் தடுக்கினு மடர்த்துச் சிந்தத்
துண்டித்துக் கொல்வே னென்று சுடர்மழு வலத்தில் வீசிக்
கொண்டெழுந் தார்த்துச் சென்று காலினுற் குலுங்கப் பாய்ந்தார். (உங)

பாய்தலும் வீசைகொண் டெய்க்கும் பாகரைக் கொண்டு சீறிக்
காய்தழ லுமிழ்கண் வேழந் திரிந்துமேற் கதவ வச்சந்
தாய்தலை யன்பின் முன்பு நிற்குமே தகைந்து பாய்ந்து
தோய்தனித் தடக்கை வீழ மழுவினுற் றுணித்தார் தொண்டர். (உச)

கையினைத் துணித்த போது கடலெனக் கதறி வீழ்ந்து
மையவரை யனைய வேழம் புரண்டிட மருங்கு வந்த
வெய்யகோற் பாகர் மூவர் மிசை கொண்டா ரிருவராக
வையவரைக் கொன்று நின்ற ரருவரை யனைய தோளார். (உஙி)

வெட்டுண்டு பட்டு வீழ்ந்தா ரொழியவே றுள்ளா ரோடி
மட்டவிழ் தொங்கன் மன்னன் வாயில்கா வலரை நோக்கிப்
பட்டவர்த் தனமும் பட்டுப் பாகரும் பட்டா ரென்று
மூட்டீர் கடிது புக்கு முதல்வனுக் குரையு மென்றார். (உசு)

மற்றவர் மொழிந்த மாற்ற மணிக்கடை காப்போர் கேளாக்
கொற்றவன் றன்பா லெய்திக் குரைகழல் பணிந்து போற்றிப்
பற்றல நிலாதாய் நின்பொற் பட்டமால் யானை வீழச்
செற்றனர் சிலரா மென்று செப்பினர் பாக ரென்றார். (உஎ)

வளவனுங் கேட்ட போதின் மாறின்றி மண்காக் கின்ற
கிளர்மணித் தோள லங்கற் சுரும்பினங் கிளர்ந்து பொங்க
வளவில்சீற் றத்தி னுலே யார்செய்தா ரென்றுங் கேளா
னிளவரி யேறு போல வெழின்மணி வாயி னீங்க. (உஅ)

தந்திரத் தலைவர் தாமுந் தலைவன்ற னிலைமை கண்டு
வந்துறச் சேனை தன்னை வல்விரைந் தெழுமுன் சாற்ற
வந்தாத் தகல மெல்லா மணிதுகிற் பதாகை தூர்ப்ப
வெந்திரத் தேரு மாவு மிடையிடை களிறு மாகி. (உக)

வில்லொடு வேல்வா டண்டு பிண்டிபா லங்கண் மிக்க
வல்லெழு முசல சேபி மழுக்கழுக் கடைமுன் ஞன
பல்படைக் கலன்கள் பற்றிப் பைங்கழல் வரிந்த வன்க
ணெல்லையில் புஞ்டனர் கொட்புற் றெழுந்தன ரெங்கு மெங்கும். (கo)

சங்கொடு தாரை காளந் தழங்கொலி முழங்கு பேரி
வெங்குரற் பம்பை கண்டை வியன்றுடி திமிலை தட்டி
பொங்கொலிச் சின்ன மெல்லாம் பொருபடை பிடைந்த பொற்பின்
மங்குல்வான் கிளர்ச்சி நாண மருங்கெழுந் தியம்பி மல்க. (நக)

தூரியத் துவைப்பு மூட்டுஞ் சுடர்ப்படை யொலியு மாவின்
ரூர்மணி யிசைப்பும் வேழ முழக்கமுந் தடந்தேர்ச் சீரும்
வீரர்தஞ் செருக்கி னூர்ப்பு மிக்கெழுந் தொன்ரு மெல்லைக்
காருடன் கடைநாட் பொங்குங் கடலெனக் கலித்த வன்றே. (நஉ)

பண்ணுறு முறுப்பு நான்கிற் பரந்தெழு சேனை யெல்லா
மண்ணிடை யிறுகான் மேன்மேல் வந்தெழுந் ததுபோற் ரூன்றத்
தண்ணளிக் கவிகை மன்னன் ரூனைபின் ரெருடத் தாளை
ரண்ணலம் புரவி மேல்கொண் டரசமா வீதி சென்ரூன். (நங)

கடிவிசை முடுகிப் போகிக் களிற்ரெடும் பாகர் வீழ்ந்த
படுகளங் குறுகச சென்ரூன் பகைப்புலத் தவரைக் காணுன்
விடுசுடர் மழுவொன் றேந்தி வேறிரு தடக்கைத் தாய
வடுகளி றென்ன நின்ற வன்பரை மூன்பு கண்டான். (நச)

பொன்றவ ழருவிக் குன்ற மெனப்புரள் களிற்றின் மூன்பு
நின்றவர் மன்று ளென்று நிருத்தமே பயிலும் வெள்ளிக்
குன்றவ ரடியா ராஞர் கொன்றவ ரிவரென் ரேரான்
வென்றவர் யாவ ரென்ரூன் வெடிபட முழங்குஞ் சொல்லான். (நஞ)

அரசனுங் கருளிச் செய்ய வருகுசென் றணைந்து பாகர்
விரைசெய்தார் மாலே யோய்நின் விறற்களிற் றெதிரே நிற்குங்
திரைசெய்நீ ருலகின் மன்னர் யாருளார் தீங்கு செய்தார்
பரசமுன் கொண்டு நின்ற விவரெனப் பணிந்து சொன்ஞர். (நக)

சூழையணி காதி ஞனுக் கன்பராங் குணத்தின் மிக்கார்
பிழைபடி னன்றிக் கொல்லார் பிழைத்ததுண் டென்றுட் கொண்டு
மழைமத யானை சேனை வரவினை மாற்றி மற்ற
வுழைவயப் புரவி மேனின் றிழிந்தன னுலக மன்னன். (நஎ)

மைத்தடங் குன்று போலு மதக்களிற் ரெதிரே யிந்த
மெய்த்தவர் சென்ற போது வேரொன்றும் புகுதா விட்ட
வத்தவ முடையே ஞனே னம்பல வாண ரன்ப
ரித்தனை முனியக் கேட்டே னென்கொலோ பிழையென் றஞ்சி. (நஅ)

செறிந்தவர் தம்மை நீக்கி யன்பர்முன் ரெழுது சென்றீ
தறிந்திலே னடியே னங்குக் கேட்டதொன் றதுதா னிற்க
மறிந்தவிக் களிற்றின் குற்றம் பாகரோ டிதனை மாள
வெறிந்ததே போது மோதா னருள்செயு மென்று நின்ரூர். (நக)

மன்னவன் றன்னை நோக்கி வானவ ரீசர் நேசர்
சென்னியித் துங்க வேழஞ் சிவகாமி யாண்டார் கொய்து
பன்னகா பரணர்ச் சாத்தக் கொடுவரும் பள்ளித் தாமர்
தன்னைமுன் பறித்துச் சித்தத் தரைப்படத் தணித்து வீழ்த்தேன். (சo)

மாதங்கர் தீங்கு செய்ய வருவாரிக் காரர் தாமும்
மீதங்குக் கடாவு வாரும் விலக்கிடா தொழித்து பட்டார்
தீதிங்கு நிகழ்ந்த தென்ரு றெறிபத்த ரென்ன வஞ்சிப்
பாதங்கண் முறையாற் ரூழ்ந்து பருவரைத் தடந்தோண் மன்னன். (சக)

அங்கண ரடியார் தம்மைச் செய்தவிவ் வபரா தத்துக்
கிங்கித தன்னும் போதா தென்னையுங் கொல்ல வேண்டு
மங்கல மழுவாற் கொல்கை வழக்குமன் றிதுவா மென்று
செங்கையா லுடைவாள் வாங்கிக் கொடுத்தனர் தீர்வு சேர்வார். (சஉ)

வெந்தழற் சுடர்வா ணீட்டும் வேந்தனே நோக்கிக் கெட்டே
னந்தமில் புகழா ளன்புக் களவின்மை கண்டே னென்று
தந்தவாள் வாங்க மாட்டார் தன்னைத்தான் றுறக்கு மென்று
சிந்தையா லுணர்வும் றஞ்சி வாங்கினர் தீங்கு தீர்ப்பார். (சங)

வாங்கிய தொண்டர் முன்பு மன்னனர் தொழுது நின்றே
மீங்கெனை வாளி னூற்கொன் றென்பிழை தீர்க்க வேண்டி
யோங்கிய வுதவி செய்யப் பெற்றன னிவர்பா லென்றே
யாங்கவ ருவப்பக் கண்ட வெறிபத்த ரதனுக் கஞ்சி. (சச)

வன்பெரும் களிறு பாகர் மடியவு முடைவா ளேத்தந்
தென்பெரும் பிழையி னூலே யென்னையுங் கொல்லு மென்னு
மன்பனர் தமக்குத் தீங்கு நினைத்தன னென்று கொண்டு
முன்பென தூயிர்செ குத்து முடிப்பதே முடிவென் றெண்ணி. (சடு)

புரிந்தவர் கொடுத்த வாளே யன்பர்தங் கழுத்திற் பூட்டி
யரிந்திட லுற்ற போதி லரசனும் பெரியோர் செய்கை
யிருந்தவா றிதுவென் கெட்டே னென்றெதிர் கடிதிற் சென்று
பெருந்தடந் தோளாற் கூடிப் பிடித்தனன் வாளுங் கையும். (சசு)

வளவனூர் விடாது பற்ற மாதவர் வருந்து கின்ற
வளவிலர்ப் பரிவில் வந்த விடுக்கணை யகற்ற வேண்டிக்
களமணி களத்துச் செய்ய கண்ணுத லருளால் வாக்குக்
கிளரொளி விசும்பின் மேல்வந் தெழுந்தது பலரும் கேட்ப. (சஎ)

தொழுந்தகை யன்பின் மிக்கார் தொண்டினை மண்மேற் காட்டச்
செழுந்திரு மலரை யின்று சினக்கரி சிந்தத் திங்கட்
கொழுந்தணி வேணிக் கூத்த ரருளினூற் கூடிற் றென்றுஞ்
செழுந்தது பாக ரோடு மியானையு மெழுந்த தன்றே. (சஅ)

ஈரவே லூட்டும் வான்விட் டெறிபத்தர் தாமும் மந்த
நேரியர் பெருமான் முண்மேல் விழுந்தனர் நிருவர் கோலும்
போர்வடி வாளைப் போக வெறிந்தவர் கழல்கள் பற்றிப்
பார்மிசைப் பணிந்தார் விண்ணோர் பனிமலர் மாரி தூர்த்தார். (சக)

இருவரு மெழுந்து வானி லெழுந்தபே ரொலியைப் யோற்ற
வருமறைப் பொருளா யுள்ளா ரணிகொள்பூங் கூடை தன்னின்
மருவிய பன்னித் தாம மினைந்திட வருள் மற்றந்
திருவருள் சண்டி வாழ்ந்து கைலாயி யாரு கின்றார். (ஙo)

மட்டலி முலங்கல் வென்றி மன்னவர் பெருமான் முன்ன
ருட்டரு களிப்பி னோடு முறங்கிமீ தெழுந்த தொத்து
மூட்டவெங் கடங்கள் பாய்ந்து முகிலென முழங்கிப் பொங்கும்
பட்டவர்த் தனத்தைக் கொண்டு பாகரு மிணைய வந்தார். (கூக)

ஆனசீர்த் தொண்டர் கும்பிட் டடியனேன் களிப்ப விந்த
மானவெங் களிற்றை யேறி மகிழ்ந்தெழுந் தருளு மென்ன
மேன்மையப் பணிமேற் கொண்டு வணங்கிவெண் குடையி னீழல்
யானைமேல் கொண்டு சென்ரு ரிவுளிமேல் கொண்டு வந்தார். (கூஉ)

அங்கிலே யெழுந்த சேனை யார்கலி யேழு மொன்ரூய்
மன்னிய வொலியி னூர்ப்ப மண்ணெலா மகிழ்ந்து வாழ்த்தப்
பொன்னெடும் பொதுவி லாட னீடிய புனிதர் பொற்ரூள்
சென்னியிற் கொண்டு சென்னி திருவளர் கோயில் புக்கான். (கூக)

தம்பிரான் பணிமேற் கொண்டு சிவகாமி யாருஞ் சார
வெம்பிரா னன்பரான வெறிபத்தர் தாமு மென்னே
யம்பல நிறைந்தார் தொண்ட ரறிவதற் கரியா ரென்று
செம்பியன் பெருமை யுன்னித் திருப்பணி நோக்கிச் சென்ரூர். (கூச)

மற்றவ ரினைய வான வன்பெருந் தொண்டு மண்மே
லுற்றிடத் தடியார் முன்சென் றுதவியே நாளு நாளு
கற்றவக் கொள்கை தாங்கி நலமிகு கயிலை வெற்பிற்
கொற்றவர் கணத்தின் முன்னுங் கோமுதற் நிலைமை பெற்ரூர். (கூஅ)

ஆளுடைத் தொண்டர் செய்த வாண்மையுந் தம்மைக் கொல்ல
வாளினைக் கொடுத்து நின்ற வளவனூர் பெருமை தானு
நாளுமற் றவர்க்கு நல்கு நம்பர்தா மளக்கி லன்றி
நீளுமித் தொண்டி னீர்மை நினைக்கிலா ரளக்க வல்லார். (கூக)

தேனுருந் தண்பூங் கொன்றைச் செஞ்சடை யவர்பொற் ரூளி
லானுத காத லன்ப ரெறிபத்த ரடிகள் சூடி
வானுளுந் தேவர் போற்று மன்னுளார் நீறு போற்று
மேனுதி நாதர் செய்த திருத்தொழி லியம்ப லுற்றேன். (கூஎ)

எறிபத்தநாயனூர்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - சுoஎ.

சூ ச னை ம்.

சிவனடியாருக்கு இடர்செய்தாரைக் கொல்லல்.

சைவாசாரியருக்கும் சிவனடியாருக்கும் இடர் செய்தவரைக் கொல்லுதல் சிவபுண்ணியமாம். இடர் செய்தவர் பிராமணராயேனும் தபோதனராயேனும் இருப்பின்; அவரைக் கொல்லாமல், பிறவழியால் வெல்லல் வேண்டும். இதற்குப் பிரமாணம், சங்கற்பநிராகரணம். "தேசிகர்க்குந் தீங்குசெயுந் தீம்பரைவெல் லல்லதீ— காசமுறு சேர்வாய் நலம்." எ-ம். "அத்தணரை மாதவரைக் கொல்லாதே வெல்லல்

லார்—சிந்தவுஞ்செய் நீசெறியாய் நீங்கு." எ-ம். வரும். களவு கொலை முதலியன சமயத்தாராலும் உலகத்தாராலும் குற்றம் என்று விலக்கப்பட்டன அன்றே; அவற்றுள் ஒன்றாகிய கொலையை இங்கே புண்ணியம் என்றது என்னை எனின்; அறியாது கூறினாய்: களவு என்னுஞ் சொற்கேட்டுக் களவு தீது என்றலும், கொலை என்னுஞ் சொற்கேட்டுக் கொலைதீது என்றலும், கூடாவாம்: அவை நல்லனவாதலும் உண்டு. ஒருத்தி தன் சுற்றத்தாரோடு கோபங்கொண்டு, நஞ்சுண்டு சாவேன் என்று துணிந்து, நஞ்சு கூட்டி வைத்து, விலக்குவார் இல்லாதபோது உண்ணநினைந்து நின்றவழி; இரக்கமுடையவன் ஒருவன் அதனைக் கண்டு இவள் இதை உண்டு சாவாவண்ணம் கொண்டுபோய் உகுப்பேன் என்று, அவள் காணுமே கொண்டுபோய் உகுத்தான்: அவள் சனகீக்கத்தின் கண்ணே நஞ்சுண்டு சாம்படி சென்று, அதனைக் காணுமையால், மரணம் நீங்கினாள். அவன் அக்களவினுலே அவளை உய்வித்தமையால், அது குற்றமாகாமல் அவனுக்கு நன்மை பயக்கும் அன்றே: அதுபோலவே, இக்கொலையும் நன்மை பயக்கும். சிவனடியார்களுக்கு இடர் செய்வோர் மறுமைக்கண் நரகத்தில் வீழ்ந்து வருந்துவர்; இவ்வாறு இடர் செய்வாரைக் கண்டு பிறரும் சிவனடியாருக்கு இடர்செய்து கெடுவர்; சிவனுக்குத் திருத்தொண்டு செய்ய விரும்புவோர்களுள் ஈவிர பத்தியுடையோரை யொழிந்த பிறர், தாம் செய்யும் திருத்தொண்டுகளுக்கு இப்படி இடையூறுகள் நிகழுமாயின், திருத்தொண்டுகள் செய்யாது தம் வாளுளை வீணுளாகக் கழிப்பர். சிவனடியாருக்கு இடர் செய்தாரைக் கொல்லுதல் இத்தீங்குகள் எல்லாவற்றையும் ஒழிக்கும். ஆதலால், இக்கொலை பாவமாகாமல் அது செய்தாருக்குச் சிவபதம் பயக்கும் என்று துணிக.

இச்சிவபுண்ணியத்திலே மிகச் சிறப்புற்றவர் இவ்வெறிபத்தநாயனார். இவர் சிவனடியார்களுக்கு இடையூறு வந்த காலத்தில் வெளிப்பட்டு, அவ்விடையூறு செய்தவர்களை மழுவினுல் வெட்டுதலே தொழிலாகக் கொண்டமையாலும், சிவகாமியாண்டார் சிவனுக்குச் சாத்தும்படி கொண்டுவந்த பூவைப் பறித்துச் சிந்திய யானை அரசனதுபட்ட யானை யென்பது பாராமல், அதனையும் அது தீங்கு செய்தபொழுது விலக்காத பாகர்களையும் கொன்றமையாலும், என்க. இன்னும், இவர் சிவனடியாரிடத்து மிக்க பத்தி உடையோர் என்பது, புகழ்ச்சோழ நாயனாரது பத்தி மிகுதியைக் கண்டவுடனே, மிக அஞ்சி, தமது யானையும் பாகரும் இறந்துபோகவும் அதைக் குறித்துச் சிறிதும் துக்கம் உறுமல் உடைவாளைத் தந்து தம்மையும் கொல்லும்படி வேண்டுகின்ற இவ்வன்பருக்குத் தீங்கு நினைத்தேனே என்று, அவ்வாளைத் தமது கழுத்திலே பூட்டி அறுக்கத் தொடங்கினமையாலும், தெளியப்படும்.

ஏனாதிநாதநாயனார்புராணம்.

புண்டரிகம் பொன்வரைமே லேற்றிப் புவியளிக்குந்
தண்டரள வெண்கவிகைத் தார்வளவர் சோணாட்டில்
வண்டறை பூஞ்சோலை வயன்மருதத் தண்பணைசூழ்ந்
தெண்டிசையு மேறியசீ ரெயின்மூதூ ரெயினனூர். (க)

வேழக் கரும்பினெடு மென்கரும்பு தண்வயலிற்
சூழக் கதிர்ச்சாலி தாளெங்குந் தண்மையதாய்
வாழக் குடிதழைத்து மன்னியவப் பொற்பதியி
லீழக் குலச்சான்று ரேனாதி நாதனார். (உ)

தொன்மைத் திருநீற்றுத் தொண்டின் வழிபாட்டி
னன்மைக்க ணின்ற நலமென்றுங் குன்றுதார்
மன்னர்க்கு வென்றி வடிவாட் படைபயிற்றுந்
தன்மைத் தொழில்விஞ்சை யிற்றலைமை சார்ந்துள்ளார். (நூ)

வாளின் படைபயிற்றி வந்த வளமெல்லா
நாளும் பெருவிருப்பா ணண்ணுங் கடப்பாட்டிற்
றூளுந் தடமுடியுங் காணுதார் தம்மையுந்தொண்
டாளும் பெருமா னடித்தொண்டர்க் காக்குவார். (ஈ)

நள்ளார் களும்போற்று நன்மைத் துறையின்க
ணெள்ளாத செய்கை யியல்பி னெழுகுநாட்
டுள்ளாத தங்க டொழிலுரிமைத் தாயத்தி
னுள்ளா னதிசூர னென்பா னுளனுளன். (இ)

மற்றவனுங் கொற்ற வடிவாட் படைத் தொழில்கள்
கற்றவர்க டன்னிற் கடந்துள்ளா ரில்லையெனும்
பெற்றிமையான் மாநிலத்து மிக்க பெருமிதம்வந்
துற்றுலகிற் றன்னையே சால மதித்துள்ளான். (உ)

தாளுள் விருத்திகெடத் தங்கள்குலத் தாயத்தி
னுரிமை செய்தொழிலா மாசிரியத் தன்மைவள
மேலுளுந் தான்குறைந்து மற்றவர்க்கே மேம்படலா
லேலுநி நாதர்திறத் தேலா விகல்புரிந்தான். (ஏ)

கதிரோ னெழமழுங்கிக் கால்சாயுங் காலை
மதிபோ லழிந்துபொரு மற்றவனுஞ் சுற்றப்
பதியோ ருடன்கூடப் பண்ணியவர் மேற்சென்
றெதிர்போர் விளைப்பதற்கே யெண்ணித் துணிந்தெழுந்தான். (அ)

தோள்கொண்ட வல்லாண்மைச் சுற்றத் தொடுந்துணையாய்
கோள்கொண்ட போர்மள்ளர் கூட்டத் தொடுஞ்சென்று
வாள்கொண்ட தாயம் வலியாரே கொள்வதென
மூள்கின்ற செற்றத்தான் முன்கடையி னின்றழைத்தான். (க)

வெங்கட் புலிகிடந்த வெம்முழையிற் சென்றழைக்கும்
பைங்கட் குறுநரியே போல்வான் படைகொண்டு
பொங்கிப் புறஞ்சூழ்ந்து போர்குறித்து நேரின்றே
யங்கட் கடைநின் றழைத்தா னெலிகேளா. (கo)

ஆர்கொல் பொரவழைத்தா ரென்றரியேற் றிற்கிளர்ந்து
சேர்வு பெறக்கச்சிற் செறிந்தவுடை மேல்வீக்கி
வார்கழலுங் கட்டி வடிவாட் பலகைகொடு
போர்முனையி லேஞநி நாதர் புறப்பட்டார். (கக)

புறப்பட்ட போதின்கட் போர்த்தொழில்கள் கற்கும்
விறற்பெருஞ்சீர்க் காளையர்கள் வேறிடத்தி னின்றூர்
மறப்படைவாட் சுற்றத்தார் கேட்டோடி வந்து
செறற்கரும்போர்! வீரர்க்கு! மருமருங்குஞ் சேர்ந்தார். (கஉ)

ವರ್ತಮಿತ್ತ மாற்றான் வயப்புலிப்போத் தன்னூர்முன்
னர்தமது வாட்பயிற்று நற்றூயம் கொள்ளுங்கா
லிந்தவெளி மேற்கை யருத்திருவேம் பொருபடையுஞ்
சந்தித் தமர்வினைத்தாற் சாயாதார் கொள்வதென. (கந)

என்றபகைத் தோனுரைப்ப வேலுதி நாதரது
நன்றனக்கு வேண்டுமே னண்ணுவனென் றுண்மகிழ்ந்து
சென்றவன்முன் சொன்ன செருக்களத்துப் போர்குறிப்பக்
கன்றி யிருபடையுங் கைவகுத்து நேர்மலைவார். (கச)

வே று.

மேக மொழுங்குகண் முன்கொடு மின்னிரை தம்மிடை யேகொடு
மாக மருங்கினு மண்ணினும் வல்லுரு மேறெதிர் செல்வன
வாக நெடும்பல கைக்குல மாள்வினை வாளுடை யாடவர்
காக மிடைந்த களத்திரு கைகளின் வந்து கலந்தனர். (கஙி)

கால்கழல் கட்டிய மள்ளர்கள் கைகளின் மெய்க ளடக்கிய
வாளொளி வட்ட மூனைத்திட வந்திரு கைகளின் மூன்றினர்
வேலொடு வேலெதிர் நீள்உன மேவிய பாதலம் விட்டியர்
ஞால முறும்பணி வீரர்க ணூசிமிர் கின்றன வொத்தன. (கஙு)

வெங்கண் விறற்சிலை வீரர்கள் வேறிரு கையினு நேர்பவர்
தங்கள் சிலைக்குல முந்தின தாலில் சரங்க ணெருங்குவ
பொங்கு சினத்தெரி யிற்புகை போகு கொடிக்கள் வளைத்தெதிர்
செங்கண் விழிக்கனல் சிந்திய சீறு பொறிச்செல வொத்தன. (கஎ)

வாளொடு நீள்கை துடித்தன மார்பொடு வேல்கள் குளித்தன
தோளொடு வாளி நிலத்தன தோலொடு தோல்க ளடைகந்தன
தாளொடு வார்கழ லிற்றன தாரொடு சூழ்சிர மற்றன
நாளொடு சீறி மலைப்பவர் நாடிய போர்செய் கள்த்தினில். (கஅ)

குருதியி னதிகள் பரந்தன குறையுட லொழுகி யலைந்தன
பொருபடை யறுதுணி சிந்தின புடைசொரி குடரூடல் பம்பின
வெருவர வெருவை நெருங்கின விசியறு துடிகள் புரண்டன
விருபடை தனினு மெதிர்ந்தவ ரெதிரெதி ரமர்செய் பறந்தலை. (கக)

நீளிடை முடுகி நடந்தெதிர் நேரிரு வரிலொரு வன்றெடர்
தாளிரு தொடையற முன்பெயர் சாரிகை முறைமை தடிந்தனன்
வாளொடு விழுமுடல் வென்றவன் மார்பிடை யறமு னெதிர்ந்திட
வாளியி னவனு மறிந்தன ஞயினர் பலருள ரெங்கணும். (உ0)

கூர்முனை யயில் கொடு மூட்டினர் கூடிமு னுரூவிய தட்டிட
னேருர முருவ வுரப்புட னேர்பட வெதிரெதிர் குத்தின
ராருயிர் கழியவு நிற்பவ ராண்மையி லிருவரு மொத்தமை
போரடு படைகொ டளப்பவர் போல்பவ ரனவீலர் பட்டனர். (உக)

பொற்சிலை வனைய வெதிர்ந்தவர் புத்தர வனைய சரம்பட
விற்படை தணியவு நின்றிலர் வெற்றிகொள் சுரிகை வழங்கினர்
முற்றிய பெருவள னின்றியு மூற்படு கொடைசில நின்றிட
வுற்றன வுதவிய பண்பின ரொத்தன ருழுச்சில கண்டார்கள். (உஉ)

அடன்மூனை மறவர் மடிந்தவ ரலர்முக முயிருள வென்றுறு
படர்சிறை சுலவு கருங்கொடி படர்வன சுழல்வன தன்றலில்
விடுசுடர் வீழிக ளிரும்புசெய் வினைஞர்த மூலையின் மூகம்பொதி
புடைமிடை கரியிடை தங்கிய புகைவிடு தழலே நிகர்த்தன. (உந)

திண்படை வயவர் பிணம்படு செங்கள மதனிடை முன்னிலர்
புண்படு வழிசொரி யுங்குடர் பொங்கிய கழுகு பருந்தொடு
கொண்டெழு பொழுதினு முன்செயல் குன்றுத லிலர்தலை நின்றனர்
வீண்படர் கொடிவிடு பண்பயில் விஞ்சையர் சுமரரை வென்றனர். (உச)

வே று.

இம்மூனைய வெம்போரி லிருபடையின் வான்வீரர்
வெம்மூனையின் வீடியபின் வீடாது மிக்கொழிந்த
தம்முடைய பலபடைஞர் பின்ஞகத் தாமுன்பு
தெம்மூனையி லேஞதி நாதர் செயிர்த்தெழுந்தார். (உரி)

வெஞ்சினவாட் டீயுமிழ வீரக் கழல்கலிப்ப
நஞ்சணிகண் டர்க்கன்பர் தாமெதிர்ந்த ஞாட்பின்க
ணெஞ்சியெதிர் நின்ற விகன்மூனையில் வேலுழவர்
தஞ்சிரமுந் தோளுரமுந் தாளும் விழத்துணித்தார். (உசு)

தலைப்பட்டா ரெல்லாருந் தனிவீரர் வாளிற்
கொலைப்பட்டார் மூட்டாதார் கொல்களத்தை விட்டு
நிலைப்பட்ட மெய்யுணர்வு நேர்பட்ட போதி
லலைப்பட்ட வார்வமுதற் குற்றம்போ லாயினூர். (உஎ)

இந்நிலைய வெங்களத்தி லேற்றழிந்த மானத்தாற்
றன்னுடைய பலபடைஞர் மீண்டார் தமைக்கொண்டு
மின்னெளிவாள் வீசி விறல்வீரர் வெம்புலியே
றன்னவர்தம் முன்சென் றதிசூர னேரடர்ந்தான். (உஅ)

மற்றவர்தஞ் செய்கை வடிவா ளொளிகாணச்
சுற்றிவரும் வட்டணையிற் றேரன்ரு வகைகலந்து
பற்றியடர்க் கும்பொழுதிற் ரூணும் படைபிழைத்துப்
பொற்றடந்தோள் வீரர்க் குடைந்து புறஞ்சென்றான். (உக)

போன வதிசூரன் போரி லவர்க்கழிந்த
மானமிக மீதூர மண்படுவான் கண்படா
ஞனசெய லோரிரவுஞ் சிந்தித் தலமருவா
வீனமிகு வஞ்சனையால் வெல்வனென வெண்ணினூன். (கூ0)

சேட்டாருங் கங்குல் புலர்காலத் தியோனு
நாட்டாரைக் கொல்லாதே நாமிருவேம் வேறிடத்து
வாட்டாயங் கொள்போர் மலைக்க வருகவெனத்
தோட்டார்பூந் தாராரர்க்குச் சொல்லிச் செலவிட்டான். (கூக)

இவ்வாறு கேட்டலுமே யேஞதி நாதனு
ரவ்வாறு செய்த லழகி தெனவமைந்து
கைவா ளமர்வினைக்கத் தான்கருது மக்களத்தில்
வெவ்வா ளரவோன் வருகவென மேற்கொள்வார். (கூஉ)

சுற்றத்தார் யாரும்மறியா வகைசுடர்வாள்
பொற்பலகை யுத்தாமே கொண்டு புறம்போந்து
மற்றவன்முன் சொல்லி வரக்குறித்த வக்களத்தே
பற்றலனே முன்வரவு பார்த்துத் தனிநின்றார். (நஉ)

தீங்கு குறித்தழைத்த தீயோன் றிருநீறு
தாங்கிய நெற்றியினர் தங்களையே யெவ்விடத்து
மாங்கவரும் தீங்கிழையா ரென்ப தறிந்தாளப்
பாங்கிற் றிருநீறு பண்டு பயிலாதான். (நக)

வெண்ணீறு நெற்றி விரவப் புறம்பூசி
யுண்ணெஞ்சில் வஞ்சக் கறுப்பு முடன்கொண்டு
வண்ணச் சுடர்வாண் மணிப்பலகை கைக்கொண்டு
புண்ணியப்போர் வீரர்க்குச் சொன்னவி டம்புகுந்தான். (நஇ)

வென்றி மடங்கல் விடக்குவர முன்பார்த்து
நின்றுற்போ னின்றார் நிலைகண்டு தன்னெற்றி
சென்று கிடைப்பளவுந் திண்பலகை யான்மறைத்து
முன்றனிவீ ரர்க்கெதிரே மூண்டான் மறம்பூண்டான். (நஈ)

அடல்விடையே றென்ன வடர்த்தவனைக் கொல்லு
மிடைதெரிந்து தாள்பெயர்க்கு மேனாதி நாதர்
புடைபெயர்ந்த மாற்றான் பலகை புறம்போக்கக்
கடையவன்ற னெற்றியின்மேல் வெண்ணீறு தாங்கண்டார். (நஎ)

கண்டபொழு தேகெட்டேன் முன்பிவர்மேற் காணுத
வெண்டிருநீற் றின்பொலிவு மேற்கண்டேன் வேறினியெ
னண்டர்பிரான் சீரடியா ராயினு ரென்றுமனங
கொண்டிவர்தங் கொள்கைக் குறிவழிநிற் பேனென்று. (நஅ)

கைவா ளுடன்பலகை கீக்கக் கருதியது
செய்யார் நிராயுதரைக் கொன்ற ரெனுந்தீமை
யெய்தாமை வேண்டி மிவர்க்கென் றிரும்பலகை
கெய்வா ளுடனடர்த்து நேர்வார்போ னேர்நின்றார். (நக)

அந்நின்ற தொண்டர் திருவுளள மாறறிவார்
முன்னின்ற பாதகனுந் தன்கருததே முற்றுவித்தா
னிந்நின்ற தன்மை யறிவா ரிவர்க்கருள
மின்னின்ற செஞ்சடையார் தாமே வெளிநின்றார். (சஅ)

மற்றினிநாம் போற்றுவதென் வானோர் பிரானருளைப்
பற்றலர்தங் கைவாளாற் பாச மறுத்தருளி
யுற்றவரை யென்று முடன்பிரியா வன்பருளிப்
பொற்றொடியாள் பாகனுர் பொன்னம் பலமணைந்தார். (சக)

தம்பெருமான் சாத்துந் திருநீற்றுச சார்புடைய
வெம்பெருமா னேனாதி நாதர் கழலிறைஞ்சி
யும்பர்பிரான் கானத்தி யுத்தமர்க்குக் கண்ணப்பு
நம்பெருமான் செய்தபணி நாந்தெரிந்த வாறுரைப்பாம். (சஉ)

வேளாளநாதநாயனார்புராண முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ட சசக.

சூசனம்.

விபூதிமேற் பத்தி மிகுதி.

சிவசின்னமாகிய விபூதியை மெய்யன்போடு தரிப்பவர் சிவபதம் அடைவர். அது "கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை—மங்காமற் பூசி மகிழ்வீரே யாமாகிற்—றங்கா வினைகளுஞ் சாருஞ் சிவநெறி—சிங்கார மான சிவனடி சேர்வீரே." என்னும் திருமந்திரத்தால் உணர்க. இவ்விபூதியிலே மிகுத்த பத்தியுடையோர் இவ் விபூதியைத் தரித்த அடியார்களைக் காணின், அவர்களுக்கும் சிவனுக்கும் பேதம் நோக்காமல் அவர்களே வழிபடுவர். அது "எவரேனுந் தாமாக விலாடத்திட்ட திரு நீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி—யுவராதே யவரவரைக் கண்டபோது முகந்தடி மைத் திற நினைந்திங் குவந்து நோக்கி—யிவர்தேவ ரிவர்தேவ ரென்று சொல்லி யிரண் டாட்டா தொழிந்தீசன் றிறமே பேணிக்—கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே கன்றுப்பூர் நடுதறியைக் காணலாமே." என்னும் திருநாவுக்கரசுநாயனார் தேவாரத்தால் அறிக.

இவ்விபூதியில் எல்லை யின்றி மிகுத்த பத்தியாற் சிறந்தவர் இவ்வேனாதிநாதநாய னார் என்பது, இவர் வாள்வித்தை பயிற்றலினுலே தமக்கு வரும் வளங்கள் எல்லாம் விபூதி இட்ட அடியார்களுக்கே ஆக்கினமையாலும், தமது பகைவன் மீதி இன்றி ஆயுதம் பிடித்துத் தம்மைக் கொல்லப் புகுந்தபோது, தாம் அதனைத் தடுத்து அவ னைக் கொல்லுதற்கு வல்லராய் இருந்தும், அவனது நெற்றியில் விபூதியை நோக்கி, அவன் கருத்தே முற்றும்படி நின்ற பெருந்தகைமையாலும், தெளியப்படும்.

சிவதருமோத்தரத்திலே "படைபிடித்துத் தங்கையிற் பற்றுரைச் சமரிற் பாழ் படுக்கப் போர்புரியும் பார்பபாரைப் பற்று—ருடலிறுத்தா ரேலவர்க்குப் பிரமகத்தி பாவ மொன்றுவதன் றெனவுணர்க." எனக் கூறுதலாலும், அதிசூரன் விபூதி யிட் டவனுயினும் ஆயுதம் பிடித்துத் தம்மைக் கொல்ல வந்தமையானும், அவனைக் கொல் லுதல் பாவமாகாதே எனின்; சத்தியம் நீ சொல்லியது: ஆயின், இவர் தமக்கு அவன் மீது செய்யினும் தாம் அவனைக்கொல்லில் தமக்கு மறுமைக்கண் நரகத்துன்பம் வரு மென்னும் அச்சத்தால் ஒழித்தவரல்லர்: சிவனடியார் யாது செய்யினும் அதுவே தமக்கு இனிமையாம் என்னும் ஆர்வமிகுதியால் ஒழித்தவர் என்க. தன் உயிரை விடுத்தல் பாவம் என்றும், தன்னுயிரைக் காத்தலினும் வேறுகிய புண்ணியம் ஒன்றும் இல்லை என்றும், சிவசாத்திரங்கள் கூறவும்; இவர் தமது பகைவன் தம்மைக் கொல் லப் புகுந்தபோது அக்கொலையைத் தடுத்துத் தம்முயிரைக் காக்க வல்லராய் இருந் தும், அது செய்யாமை பாவமன்றே எனின்; கருணைநிதியாகிய சிவன் பெறுதற்கரிய இம்மானுட சரீரத்தை எமக்குத் தந்தது தம்மேலே பத்திசெய்து முத்திபெறுதற் பொருட்டாதலானும், இச்சரீரம் இல்வழி அது கூடாமையானும், அவருக்குத் திருத் தொண்டு செய்தற்பொருட்டு இச்சரீரத்தைக் காத்தல் புண்ணியமும், அதனைச் சிறி தும் நோக்காது கோபம் நோய்முதலிய ஏதுக்களாலே இதனைப் போக்குதல் பாவ மும் ஆயின. இந்நாயனார் தமது சரீரத்தை இக்கே பேணுது நின்றமைக்கு ஏது, சிவன்பாலுள்ள பத்தியேயாதலால், அது இத்துணைத்தென்று கூறலாகாத பெரும் புண்ணியமாதல் காண்க. இக்கருத்துநோக்கி அன்றே, குருலிங்க சங்கமமேனுக்கு இடையூறு வரும்வழிப் பத்தி மிகுதியாலே தன்னுயிர் விடுத்தல் புண்ணியமாம் என்று சிவாகமங்கள் கூறியதுஉமென்க.

முத்திநாதனும் அதிசூரனும் யாண்டுப் புக்கார்கள் எனின்; மெய்யடியார்களை வஞ்சித்துக்கொன்ற பெரும்பாதகத்தால் நரகத்தில் வீழ்ந்தார்கள் என்றே கொள்ளப்

படும். அவர்கள் வெவேடம் தரித்தமையால் பயன் இல்லையோ எனின்; அரசனிடத்துச் சிறிதும் பத்தியின்றி அவனுக்கு உரிய அடையாளங்களைத் தரித்துப் பிறரை வஞ்சித்து அவருக்குத் தீங்கு செய்தோர், அவ்வடையாளம் தரியாது தீங்குசெய்தோரினும் மிகப்பெருந்தண்டத்தை அவ்வரசனாலே பெற்று வருந்துவர் அன்றே: அதுபோலவே, சிவனிடத்துச் சிறிதும் பத்தியின்றி அவருக்கு உரிய சின்னங்களைத் தரித்துப் பிறரை வஞ்சித்து அவருக்குத் தீங்குசெய்தோர், அச்சின்னங்கள் தரியாது தீங்கு செய்தோரினும் மிகப் பெருந்தண்டத்தை அச்சிவனாலே பெற்று வருந்துவர் என்பது தெள்ளிதிற் துணியப்படும். ஆதலால், பெரும்பாதகர்களாகிய அவ்விருவரும் வெவேடத்தாற் சிறிதும் பயன் பெறாது மிகக்கொடிய நரகத்தில் வீழ்ந்தார்கள் என்பது, சத்தியம். சிவன் விதித்தவழி ஒழுகாதவர்க்கு வேடத்தாற் பயன் இல்லை என்பது, "வேட நெறிநில்லார் வேடம்பூண் டென்பயன்—வேட நெறிநிற்போர் வேடமெய் வேடமே—வேட நெறிநில்லார் தம்மை விறல்வேந்தன்—வேட நெறிசெய்தால் வீடது வாகுமே." எ-ம். "தவமிக் கவரே தலையான வேட—ரவமிக் கவரே யதிகொலை வேட—ரவமிக் கவர்வேடத் தகாதவர்வேடங்—தவமிக் கவர்க்கன்றித் தாங்க வொண்ணுதே." எ-ம். திருமந்திரத்திற் கூறுமாற்றாற் காண்க. எங்ஙனமாயினும், அவர்கள் சிவவேடம் தரித்தவர்கள் அன்றே: அது நோக்காது நீர் அவர்களைப பாதகர்கள் என்று இகழ்ந்தது என்னை எனின்; "மாதவ வேடங் கொண்ட வன்கணன்" என்றும், "முன்னின்ற பாதகனுந் தன்கருத்தே முற்றுவித்தான்" என்றும் ஆசிரியர் சேக்கிழார் நாயனார் இகழ்ந்தமையின், யாமும் இகழ்ந்தோம் என்க. அவர் இகழ்ந்தமை குற்றமாகாதோ எனின்;ஆகாது; மெய்ப்பொருணாயனாரும் ஏனாதிநாதநாயனாரும் பிறிதொன்றும் நோக்காது இவர் சிவனடியார் என்பது நோக்கி அவர்கள் கருத்தின்வழி நின்றமைக்குச் சிவபத்தியே எதுவாயினமை போல, சேக்கிழார்நாயனார் அப்பாதகர்கள் இம்மெய்யடியார்களே வஞ்சித்துக் கொன்றார்களே என்பது நோக்கி இகழ்ந்தமைக்கும் சிவபத்தியே எதுவாயினமையால் என்க.

கண்ணப்பநாயனார்புராணம்.

மேவலர் புரங்கள் செற்ற விடையவர் வேத வாய்மைக்
காவலர் திருக்கா ளத்திக் கண்ணப்பர் திருநா டென்பர்
நாவலர் புகழ்ந்து போற்று நல்வளம் பெருகி நின்ற
பூவலர் வாவி சோலை சூழ்ந்தபொத் தப்பி நாடு. (க)

இத்திரு நாடு தன்னி லிவர்திருப் பதியா தென்னி
னித்திலை வருவிச் சார னீள்வரை சூழ்ந்த பாங்கர்
மத்தவெங் களிற்றுக் கோட்டு வன்றெடர் வேலி கோலி
யொத்தபே ரரணஞ் சூழ்ந்த முதுபதி யுடுப்பூ ராகும். (உ)

குன்றவ ரதனில் வாழ்வார் கொடுஞ்செவி ஞமலி யார்த்த
வன்றிரள் விளவின் கோட்டு வார்வலை மருங்கு தூங்கப்
பன்றியும் புலியு மெண்ணுங் கடமையு மானின் பார்வை
யன்றியும் பாறை முன்றி லெவன முணங்கு மெல்லும். (ஙு)

வன்புலிக் குருளை யோடும் வயக்கரிக் கன்றி னோடும்
புன்றலைச் சிறுமை கார்கள் புரிந்துட னுடலன் றி
யன்புறு காதல் கூர வணையுமான் பிணைக ளோடு
மின்புற மருவி யாடு மெயிற்றியர் மகளி ரெங்கும். (சு)

வெல்படைத் தறுகண் வெஞ்சொல் வேட்டுவர் கூட்டங் தோறுங்
கொல்லெறி குத்தென் றூர்த்துக் குழுமிய வோசை யன்றிச்
சில்லரித் துடியுங் கொம்புஞ் சிறுகளு ருமியுங் கூடிக்
கல்லெனு மொலியின் மேலுங் கறங்கிசை யருவி யெங்கும். (இ)

ஆறலைத் தண்ணும் வேட ரயற்புலங் கவர்ந்து கொண்ட
வேறுபல் லுருவின் மிக்கு விரவுமா னிரைக ளன்றி
யேறுடை வானந் தன்னி லிடிக்குர லெழிலி யோடு
மாறுகொண் முழக்கங் காட்டு மதக்கைமா நிரைக ளெங்கும். (உ)

மைச்செறிந் தனைய மேனி வன்மெழுின் மறவர் தம்பா
லச்சமு மருளு மென்று மடைவிலா ருடைவன் மேலார்
பொச்சையி னறவு மூனின் புழுக்கலு முணவு கொள்ளு
நச்சழற் பகழி வேடர்க் கதிபதி நாக னென்பான். (எ)

பெற்றியாற் றவமுன் செய்தா னெனினும் பிறப்பின் சார்பாற்
குற்றமே குணமா வாழ்வான் கொடுமையே தலைநின் றுள்ளான்
விற்மெழில் விறலின் மிக்கான் வெஞ்சின மடங்கல் போல்வான்
மற்றவன் குறிச்சி வாழ்க்கை மனைவியுந் தத்தை யென்பாள். (அ)

அரும்பெறன் மறவர் தாயத் தான்றதொல் குடியில் வந்தா
ளிரும்புலி யெயிற்றுத் தாலி யிடையிடை மனைவு கோத்துப்
பெரும்புற மலையப் பூண்டாள் பீலியுங் குழையுந் தட்டச்
சுரும்புற படலை முச்சிச் சூரரிப் பிணைவு போல்வாள். (க)

பொருவருஞ் சிறப்பின் மிக்கா ரிவர்க்கினிப் புதல்வர்ப் பேறே
யரியதென் றெவரும் கூற வதற்படு காத லாலே
முருகல ரலங்கற் செவ்வேன் முருகவேண் முன்றிற் சென்று
பரவுதல் செய்து நாளும் பராய்க்கட னெறியி னிற்பார். (கo)

வாரணச் சேவ லோடும் வரிமயிற் குலங்கள் விட்டுத்
தோரண மணிக டேக்கிச் சுரும்பணி கதம்ப நாற்றிப்
போரணி நெடுவே லோற்குப் புகழ்புரி குரவை தூங்கப்
பேரணங் காடல் செய்து பெருவிழா வெடுத்த பின்றை. (கக)

பயில்வடிப் பொலிந்த யாக்கை வேடர்தம் பதியா நாகற்
கெயிலுடைப் புரங்கள் செற்ற வெந்தையார் மைந்த ராண
மயிலுடைக் கொற்ற வூர்தி வரையுரங் கிழித்த திண்மை
யயிலுடைத் தடக்கை வென்றி யண்ணலா ருளரி னுலே. (கஉ)

கானவர் குலம்வி ளங்கத் தத்தையாற் கருப்ப மீடே
ஆனமில் பலிகள் போக்கி யுறுகடன் வெறியாட் டோடு
மானவத் திங்கள் செல்ல வளவில்செய் தவத்தி னுலே
பான்மதி யுவரி யீன்று னெனமகப் பயந்த போது. (கூ)

கரிப்பரு மருப்பின் முத்துங் கழையினே செழுநீர் முத்தும்
பொருப்பினின் மணியும் வேடர் பொழிதரு மழையே யன்றி
வரிச்சுரும் பலைய வானின் மலர்மழை பொழிந்த தெங்கு
மரிக்குரும் தடியே யன்றி யமர்துந் துபியு மார்த்த. (கச)

அருவரைக் குறவர் தங்க ளகன்குடிச் சோ ராயம்
பெருவிழா வெடுத்து மிக்க பெருங்களி கூருங் காலைக்
கருவரை காள மேக மேந்திய தென்னத் தாதை
பொருவரைத் தோள்க ளாரப் புதல்வனை யெடுத்துக் கொண்டான். (கரி)

கருங்கதிர் விரிக்கு மேனிக் காமரு குழவி தானு
மிரும்புலிப் பறழி னேங்கி யிறவுள ளளவே யன்றி
யரும்பெற லுலக மெல்லா மளப்பரும் பெருமை காட்டித்
தருங்குறி பலவுஞ் சாற்றுந் தன்மையிற் பொலிந்து தோன்ற. (கசு)

அண்ணலைக் கையி லேந்தற் கருமையா லுரிமைப் பேருந்
திண்ணனென் றியம்பு மென்னத் திண்சிலை வேட ரார்த்தார்
புண்ணியப் பொருளா யுள்ள பொருவில்சீ ருருவினுனைக்
கண்ணினுக் கணியாத் தங்கள் கலன்பல வணிந்தா ரன்றே. (கள)

வரையுறை கடவுட் காப்பு மறக்குடி மரபிற் றங்கள்
புரையிரென் முறைமைக் கேற்பப் பொருந்துவ போற்றிச் செய்து
விரையிளந் தளிருஞ் சூட்டி வேம்பிழைத் திடையே கோத்த
வரைமணிக் கவடி கட்டி யழகுற வளர்க்கு நாளில். (கஅ)

வருமுறைப் பருவந் தோறும் வளமிகு சிறப்பிற் றெய்வப்
பெருமடை கொடுத்துத் தொக்க பெருவிறல் வேடர்க் கெல்லாந்
திருமலி தழனி பொங்கச் செழுங்களி மகிழ்ச்சி செய்தே
யருமையிற் புதல்வர்ப் பெற்ற வார்வமுந் தோன்ற வுய்த்தார். (கக)

ஆண்டெதி ரேணந்து செல்ல விடுமடித் தளர்வு நீங்கிப்
பூண்டிகழ் சிறுபுன் குஞ்சிப் புலியுகிர்ச் சுட்டி சாத்தி
மூண்டெழு தினத்துச் செங்கண் முளவுமுள் ளரிந்து கோத்த
நாண்டரு மெயிற்றுத் தாலி நலங்கிளர் மார்பிற் றூங்க. (உ0)

பாசொளி மணியோ டார்த்த பன்மணிச் சதங்கை யேங்கக்
காசொடு தொடுத்த காப்புக் கலன்புனை யரைஞாண் சேர்த்திக்
தேசுடை மருப்பிற் றண்டை செறிமணிக் குதம்பை மின்ன
மாசறு கோலங் காட்டி மறுகிடை யாடு நாளில். (உக)

தண்மல ரலங்கற் றுதை தாய்மனங் களிப்ப வந்து
புண்ணிய கங்கை நீரிற் புனிதமாந் திருவாய் நீரி
லுண்ணினேர் தமுத மூறி யொழுகிய மழலைத் தீஞ்சொல்
வண்ணமென் பவளச் செவ்வாய் குதட்டியே வளரா நின்றார். (உஉ)

பொருபுலிப் பார்வைப் பேழ்வாய் முழையெனப் பொற்கை நீட்டப்
பரிவுடைத் தந்தை கண்டு பைந்தழை கைக்கொண் டோச்ச
விருசுடர்க் குறுகண் டீர்க்கு மெழில்வளர் கண்ணீர் மல்கி
வருதுளி முத்த மத்தாய் வாய்முத்தங் கொள்ள மாற்றி. (உங)

துடிக்குற ருெட்டி யோடித் தொடக்குகாய்ப் பாசஞ் சுற்றிப்
பிடித்தறுத் தெயினப் பிள்ளைப் பேதைய ரிழைத்த வண்ட
லடிச்சிறு தளிராற் சிந்தி யருகுறு சிறுவ ரோடுங்
குடிச்சிறு குரம்பை யெங்குங் குறுநடைக் குறும்பு செய்து. (உச)

அனேயன பலவுஞ் செய்தே யைந்தின்மே லான வாண்டின்
வனேதரு வடிவார் கண்ணி மறச்சிறு மைந்த ரோடுஞ்
சினேமலர்க் காவு ளாடிச் செறிகுடிக் குறிச்சி சூழ்ந்த
புனேமருப் புழலே வேலிப் புறச்சிறு காளிற் போகி. (உஙி)

கடுமுயற் பறழி ஞெடுங் கானவே னத்தின் குட்டி
கொடுவரிக் குருளே செந்நாய் கொடுஞ்செவிச் சாப மான
மூடுகிய வீசையி லோடித் தொடர்ந்துமுன் பற்றி முற்றத்
திடுமாத் திரளிற் கட்டி வளர்ப்பன வெண்ணி லாத. (உக)

அலர்பகல் கழிந்த வந்தி யையவிப் புகையு மாட்டிக்
குலமுது குறத்தி பூட்டிக் கொண்டகண் டியிற்றிக் கங்குல்
புலரவு ணுணவு நல்கிப் புரிவிளே யாட்டின் விட்டுச்
சிலமுறை யாண்டு செல்லச் சிலேபயில் பருவஞ் சேர்ந்தார். (உஎ)

தந்தையு மைந்த ஞரை நோக்கித்தன் றடித்த தோளாற்
சிந்தையுண் மகிழப் புல்லிச் சிலேத்தொழில் பயிற்ற வேண்டி
மூந்தையத் துறையின் மிக்க முதியரை யழைத்துக் கூட்டி
வந்தாட் குறித்த தெல்லா மறவர்க்குச் சொல்லி விட்டான். (உஅ)

வேடர்தங் கோமா ஞகன் வென்றிவே ளருளாற் பெற்ற
சேடரின் மிக்க செய்கைத் திண்ணன்விற் பிடிக்கின் ருனென்
ருடியற் றுடியுஞ் சாற்றி யறைந்தபே ரோசை கேட்டு
மாயெர் மலேக ளாளு மறக்குலத் தலேவ ரெல்லாம். (உக)

மலேபடு மணியும் பொன்னுந் தாளமும் வரியின் ரேலுங்
கொலேபுரி களிற்றின் கோடும் பீலியின் குவையுந் தேனுந்
தொலேவில்பன் னறவு மூனும் பலங்களுங் கிழங்குந் தூன்றச்
சிலேயுடை வேடர் கொண்டு திசைதொறு நெருங்க வந்தார். (கo)

மல்கிய வளங்க ளெல்லா நிறைந்திட மாறில் சீறூ
ரெல்லேயி லடங்கா வண்ண மீண்டினர் கொணர்ந்தா ரெங்கும்
பல்பெருங் கிளேஞர் போற்றப் பராய்க்கடன் பலவு நேர்ந்து
வில்லிழா வெடுக்க வென்று விளம்பினன் வேடர் கோமான். (கக)

பான்மையிற் சமைத்துக் கொண்டு படைக்கலம் வினேஞ ரேந்தத்
தேனலர் கொன்றை யார்தந் திருச்சிலேச் செம்பொன் மேரு
வானது கடலி னஞ்ச மாக்கிட வவர்க்கே பின்னுங்
கானவு னமுத மாக்குஞ் சிலேயினைக் காப்புச் சேர்த்தார். (கஉ)

சிலேயினைக் காப்புக் கட்டுந் திண்புலி ரரம்பிற் செய்த
கலமிரு காப்பு நன்ஞ ஞகளுர் பயந்த நாகர்
குலம்விளங் கரிய கன்றின் கோலமுன் கையிற் சேர்த்தி
மலேபுறை மாக்க ளெல்லாம் வாழ்த்தெடுத் தியம்பி ஞர்கள். (கஙி)

ஐவன வடிநில் வெல்லே றமைத்தன புற்பாற் சோறு
மொய்வரைத் தினைமென் சொன்றி மூங்கில்வன் பதங்கண் மற்றும்
கைவினை யெயின ராக்கிக் கலந்தலூன் இழங்கு துன்றச்
செய்வரை யுயர்ப்ப வெங்கும் கலந்தனர் சினவில் வேடர். (கூச)

செந்தினை யிடியுந் தேனு மருந்துவார் தேனிற் றோய்த்து
வெந்தவு னயில்வார் வேரி விளங்கனிக் கவளங் கொள்வார்
நந்திய வீய லுண்டி நசையொடு மிசைவார் வெவ்வே
றந்தமி லுணவின் மேலோ ராயினு ளளவி லார்கள். (கூடி)

அயல்வரைப் புறத்தின் வந்தா ரருங்குடி யிருப்பி னுள்ளா
ரியல்வகை யுணவி லார்ந்த வெயிற்றிய ரெயின ரெல்லா
முயர்கதி ருச்சி நீங்க வொழிவில்பன் னறவு மாந்தி
மயலுறு களிப்பி னீடி வரிசிலே விழவு கொள்வார். (கூசு)

பாசிலைப் படலை சுற்றிப் பன்மலர்த் தொடையல் சூடிக்
காசுடை வடத்தோல் கட்டிக் கவடிமெய்க் கலன்கள் பூண்டார்
மாசில்சீர் வெட்சி முன்னு வருநறைக் கண்ணி சூடி
யாசிலா சிரிய னேத்து மடற்சிலே மருங்கு சூழ்ந்தார். (கூள)

தொண்டக முரசுங் கொம்புந் துடிகளுந் தூனெகொள் வேயு
மெண்டிசை நிறைந்து விம்ம வெழுந்தபே ரொலியி னோடு
திண்டிறன் மறவ ராரப்புச் சேண்விசும் பிடித்துச் செல்லக்
கொண்டீர் விழவு பொங்கக் குறிச்சியை வலங்கொண் டார்கள் (கூஅ)

குன்றவர் களிகொண் டாடக் கொடிச்சியர் துணங்கை யாடத்
தன்றிய மகிழ்ச்சி யோடுஞ் சூரர மகளீ ராட
வென்றிவீல் விழவி னோடி விருப்புடை யேழா நாளா
மன்றிரு மடங்கு செய்கை யழகுற வமைத்த பின்னர். (கூக)

வெங்கதிர் விசும்பி னுச்சி மேலிய பொழுதி லெங்கு
மங்கல வாழ்த்து மல்க மருங்குபல் லியங்க ளார்ப்பத்
தங்கடொன் மரபின் விஞ்சைத் தனுத்தொழில் வலவர் தம்பாற்
பொங்கொளிக் கரும்போ ரேற்றைப் பொருசிலே பிடிப்பித் தார்கள். (சஅ)

பொற்றட வரையின் பாங்கர்ப் புரிவுறு கடன்முன் செய்த
விற்றொழிற் களத்தி னண்ணி லிதிமுறை வணங்கி மேவு
மற்றைநாட் டொடங்கி நாளு மடற்சிலே யாண்மை முற்றக்
கற்றன ரென்னே யாளுங் கானவர்க் கரிய சிங்கம். (சக)

வண்ணவெஞ் சிலையு மற்றப் படைகளு மலரக் கற்றுக்
கண்ணகன் சாயல் பொங்கக் கலிவளர் திங்க ளேபோ
லெண்ணிரண் டாண்டின் செவ்வி யெய்திரு ரெல்லே யில்லாப்
புண்ணியத் தோன்றி மேன்மேல் வளர்வதன் பொலிவு போல்வார். (சஉ)

தே வ ரு.

இவ்வண்ணம் திண்ணனார் நிரம்பு நாளி லிருங்குறவர் பெருங்குறிச்சிக் கிறைவ னாய
மைவண்ண வரைநெடுந்தோ ளுகன் முனு மலையெங்கும் வனமெங்கும் வரம்பில்காலன்
கைவண்ணச் சிலைவேட்டை யாடித் தெவ்வர் கணநிரைகள் பலகவர்த்து கானஞ் காத்து
மெய்வண்ணந் தளர்தூப்பின் பருவமெய்தி வில்லுழவின் பெருமுயற்சிவெலியானுண்

அங்கண்மலைத் தடஞ்சாரற் புனங்க ளெங்கு மடலேனம் புலிகரடி கடமை யாமா
வெங்கண்மறை கலேயோடுமான் முதலா யுள்ள மிருகங்கண் மிகெருங்கி மீதூர்காலைத்
திங்கண்முறைவேட்டைவினை தாழ்த்தகென்றுசிலவேடர்தாமெல்லார்நிரண்டுசென்று
தங்கள்குல முதற்றலைவ ஞகி யுள்ள தண்டெரிய ஞகன்பாற் சார்ந்து சொன்னர்.(சச)

சொன்னவுரை கேட்டலுமே நாகன் முனுஞ் சூழ்ந்துவரும் தன்மூப்பின் முெட
ர்வு நோக்கி, முன்னவர்கட் குரைசெய்வான் மூப்பி னுலே முன்புபோல் வேட்டையி
னின் மூயல கில்லே, னென்மகனே புங்களுக்கு நாத னுக வெல்லீரும் கைக்கொண்மி
னென்ற போதி, னன்னவரு மிரங்கிப்பின் மகிழ்ந்து தங்கோ னடிவணங்கி யிம்மாற்ற
மறைகின் முர்கள். (சஅ)

இத்தனேகா லமுனினது சிலேக்கீழ்த் தங்கி யினிதுண்டு நீங்கின்றி யிருந்தோ
பின்னு; மத்தவுண தருள்வழியே நிற்ப தல்லா லடித்தநெறி வேறுளதோ வதுவே
யன்றி, மெய்த்தவிறற் றிண்ணனேயுன் மரபிற் சால மேம்படவே பெற்றளித்தாய் வீள
ங்கு மேன்மை, வைத்தசிலை மைந்தனே பீண் டமைத்து நுங்கள் வரையாட்சி யருளெ
ன்றார் மகிழ்ந்து வேடர். (சக)

சிலைமறவ ருரைசெய்ய நாகன் முனும் திண்ணனேமுன் கொண்டுவரச் செப்பிவிட்டு
மலைமருவு நெடுங்கானிற் கன்னி வேட்டை மகன்போகக் காடுபலி மகிழ வூட்டத்
தலைமரபின் வழிவந்த தேவராட்டி தனேயழைமி னெனவங்குச் சார்ந்தோர் சென்று
நிலைமையவ டனக்குரைப்ப நரைமூதாட்டிநெடிதுவந்துவிருப்பினெடுங்கடிதுவந்தாள்.

கானில்வரித் தளிர்துதைந்த கண்ணி சூடிக் கலைமருப்பி னரிந்தகுழை காதிற் பெய்து
மானின்வயிற் றரிதாரத் திலக மிட்டு மயிற்கழுத்து மனவுமணி வடமும் பூண்டு
தானிழிந்து திரங்கிமுலே சரிந்து தாழத் தழைப்பீலி மரவுரிமேற் சார வெய்திப்
பூநெருங்கு தோரைமலி சேடை நல்கிப் போர்வேடர் கோமானைப் போற்றி நின்றாள்.

நின்றமுது குறக்கோலப் படிமத் தாளே நேர்நோக்கி யன்னேநீ நிரப்பு நீங்கி
நன்றினிதி னிருந்தனேயோ வென்று கூற நாகனெதிர் நலம்பெருக வாழ்த்தி நல்ல
மென்றசையு மீயலொடு நறவும் வெற்பில் வினேவளனும்பிறவனனும்வேண்டிற்றெல்லா
மன்றுநீ வைத்தபடி பெற்றுவாழ்வே னனைத்தபணியென்னென்றுளணங்குசார்ந்தாள்.

கோட்டமிலென் குலமைந்தன் றிண்ண னெங்கள் குலத்தலைமை யான்கொடுப்
பக் கொண்டு பூண்டு, பூட்டுறுவெஞ் சிலேவேடர் தம்மைக் காக்கும் பொருப்புரிமை
புகுகின்று னவனுக் கென்றும், வேட்டைவினை யெனக்குமே லாகவாய்த்து வேறுபு
லங் கவர்வென்றி மேவு மாறு, காட்டிலுறை தெய்வங்கள் விரும்பி புண்ணக் காடுபலி
பூட்டென்றான் கவலை யில்லான். (இ0)

மற்றவன்றன் மொழிகேட்ட வரைச்சூ ராட்டி மனமகிழ்ந்திங் கன்போடு வரு
கின்றனுக், கெற்றையினுங் குறிகண்மிக நல்ல வானவிதனுலே புண்மைத்தன் றிண்ண
னை, வெற்றிவரிச் சிலேயோனின் னளவி லன்றி மேம்படுகின் முனென்று விரும்பி
வாழ்த்திக், கொற்றவனத் தெய்வங்கண் மகிழ வூட்ட வேண்டுவன குறைவின்றிக்
கொண்டு போனுள். (இக)

தெய்வங்கிழ் குறமுதியாள் சென்ற பின்பு திண்ணனார் சிலத்தாதை யழைப்பச் சீர்கொண், மைவிரவு நறுங்குஞ்சி வாசக் கண்ணி மணிமீல மலையொன்று வந்த தென்னக், கைவிரவு சிலவேடர் போற்ற வந்து காதல்புரி தாதைகழல் வணங்கும் போதிற், செய்வரைபோற் புயமிரண்டுஞ் செறியப் புல்லிச் செழும்புவித்தோ லிருக்கையின் முன் சேர வைத்தான். (இஉ)

முன்னிருந்த மைந்தன்முக நோக்கி நாகன் மூப்பெனவர் தடைதலினுன் முன்பு போல, வென்னுடைய முயற்சியினுல் வேட்டை யாட வினியெனக்குக் கருத்தில்லை யெனக்கு மேலாய், மன்னுசில மலையர்குலக் காவல் பூண்டு மாறெறிந்து மாவேட்டை யாடி யென்று, முன்னுடைய மரபுரிமை தாங்குவாயென் றுடைதோலுஞ் சுரிகையுங் கைக் கொடுத்தா னன்றே. (இங)

தந்தைநில யுட்கொண்டு தளர்வு கொண்டு தங்கள்குலத் தலைமைக்குச் சாய்வு தோன்ற, வந்தகுறை பாடதனை நிரப்பு மாறு மனங்கொண்ட குறிப்பினுன் மருமை கொண்டு, முந்தையவன் கழல்வணங்கி முறைமைதந்த முதற்சுரிகை யுடைதோலும் வாங்கிக் கொண்டு, சிந்தைபரங் கொளநின்ற திண்ணனார்க்குத் திருத்தாதை முகமலர்ந்து செப்பு கின்றான். (இச)

நம்முடைய குலமறவர் சுற்றத் தாரை கான்கொண்டு பரித்ததன்மே னலமேசெய்து, தெம்முனையி லயற்புலங்கள் கவர்ந்து கொண்ட திண்சிலையின் வளமொழியாச் சிறப்பின் வாழ்வாய், வெம்முனையின் வேட்டைகளு முனக்கு வாய்க்கும் வினைந்துநீ தாழாதே வேட்டையாட, விம்முரண்வெஞ் சிலவேடர் தங்களோடு மெழுகவென விடைகொடுத்தா னியல்பினின்றான். (இடி)

செங்கண்வயக் கோளரியே றன்ன திண்மைத் திண்ணனார் செய்தவத்தின் பெருமைபெற்ற, வெங்கண்விறற் றாதைகழல் வணங்கி நின்று விடைகொண்டு புறம்போந்து வேட ரோடு, மங்கலநீர்ச் சுனைபடிந்து மனையின் வைகி வைகிருளின் புலர்காலை வரிவிற் சாலைப், பொங்குசில பூடல் வேட்டைக் கோலங் கொள்ளப் புனைதொழிற்கை வினைஞருடன் பொலிந்து புக்கார். (இசு)

வேறு.

நெறிகொண்ட குஞ்சிச் சுருடுஞ்சி நிமிர்ந்து பொங்க
முறிகொண்ட கண்ணிக் கிடைமொய்யொளிப் பீலி சேர்த்தி
வெறிகொண்ட முல்லைப் பிணைமீது குறிஞ்சி வெட்சி
செறிகொண்ட வண்டின் குலஞ்சீர்கொளப் பின்பு செய்து. (இஎ)

முன்னெற்றியின் மீது முருக்கிடை வைத்த குன்றி
தன்னிற்புரி கொண்ட மயிர்க்கயி றுரச் சாத்தி
மின்னிற்றிகழ் சங்கு வினங்குவெண் டோடு காதின்
மன்னிப்புடை நின்றன மாமதி போல வைக. (இஅ)

கண்டத்திடை வெண்கவ டிக்கதிர் மாலை சேரக்
கொண்டக்கொடு பன்மணி கோத்திடை யேனக் கோடு
தண்டப்பிறை போல்வன தூங்கிட வேங்கை வன்றோற்
றண்டைச்செயல் பொங்கிய சன்னவீ ரந்த யங்க. (இக)

மார்பிற்சிறு தந்த மணித்திரண் மாலை தாழத்
தாரிற்பொலி தோன்வல யுங்க டழைத்து மின்னச்
சேர்வித்பொலி கண்கண மீது திகழ்ந்த முன்கைக்
கார்வித்சிறு நாணெறி கைச்செறி கட்டி கட்டி. (கo)

அரையிற்சர ணத்துரி யாடையின் மீது பௌவத்
திரையிற்படு வெள்ளல காரத்து விளிம்பு சேர்த்தி
நிரையிற்பொலி நீளுடை தோல்சுரி கைப்பு றஞ்சூழ்
விரையுற்றுவர் வார்விசி போக்கி யமைத்து வீக்கி. (சுக)

வீரக்கழல் காலின் வினங்க வணிந்து பாதஞ்
சேரத்தொடு நீடு செருப்பு விருப்பு வாய்ப்பப்
பாரப்பெரு வில்வலங் கொண்டு பணிந்து திண்ணன்
சாரத்திருத் தாண்மடித் தேற்றி வியர்து தாங்கி. (சுஉ)

அங்கப்பொழு திற்புவ னத்திடர் வாங்க வோங்கித்
துங்கப்பெரு மாமழை போன்று துண்ணென் ருெலிப்ப
வெங்கட்சின நீடு விலங்கு விலங்கி நீங்கச்
செங்கைத் தலத் தாற்றட விச்சிறு காணெறிந்தார். (சுட)

பல்வேறு வாளி புதைபார்த் துடன்போத வேவி
வில்வேட ராயத் துடிமேவி யொலிக்கு முன்றிற்
சொல்வேறு வாழ்த்துத் திசைதோறுந் துதைந்து விம்ம
வல்லேறு போல்வா ரடல்வாளி தெரிந்து நின்ரூர். (சுசி)

மானச்சிலை வேடர் மருங்கு நெருங்கு போதிற்
பானற்குல மாமல ரிற்படர் சோதி யார்முன்
றேனற்றசை தேறல் சருப்பொரி மற்றுமுள்ள
கானப்பலி நேர்கட வுட்பொறை யாட்டி வந்தாள். (சுடி)

நின்றெங்கு மொய்க்குஞ் சினவேடரை நீக்கிப் புக்குச்
சென்றங்கு வள்ள நிருகெற் றியிற்சேடை சாத்தி
யுன்றந்தை தந்தைக்கு மிந்நன்மைக ளுள்ள வல்ல
நன்றும்பெரி துன்விற னம்மள வன்றி தென்ரூள். (சுசு)

அப்பெற்றியில் வாழ்த்து மணங்குடை யாட்டி தன்னைச்
செப்பற்கரி தாய சிறப்பெதிர் செய்து போக்கிக்
கைப்பற்றிய திண்சிலைக் கார்மழை மேக மென்ன
மெய்ப்பொற் புடைவேட் டையின்மேற்கொண் டெழுந்து போந்தார். (சுள)

வே று.

தாளில்வாழ் செருப்பர்தோ றழைத்தநீடு தாணையார்
வாளியோடு சாபமேவு கையர்வெய்ய வன்கணர்
ராளியேறு போலவேகு மண்ணலார்மு ணெண்ணிலார்
மீளிவேடர் நீடுகூட்ட மிக்குமேலெ முந்ததே. (சுஅ)

வன்ரொடர்ப்பி ணித்தபாசம் வன்கைமள்ளர் கொள்ளவே
வென்றிமங்கை வேடர்வில்லின் மீதுமேவு பாதமுன்
சென்றுமீளு மாறுபோல்வ செய்யநாவின் வாயவா
யொன்ரொடொன்று நேர்படாம லோதொநாய்கண் மாடெலாம். (சுக)

போர்வலைச் சிலைத்தொழிற் புறத்திலே விளைப்பவச்
சார்வலைத் தொடக்கறுக்க வேருமையர் தம்முளே
கார்வலைப் படுத்தகுன்று கானமா வலைக்கணீன்
வார்வலைத் திறஞ்சுமந்து வந்தவெற்பர் முந்தினார். (எஏ)

ணண்ணிமா மறைக்குலங்க ணுடனென்று நீமெத்
தண்ணிலா வரும்புகொன்றை தங்குவேணி யார்தமைக்
கண்ணினீடு பார்வையொன்று கொண்டுகாணு மன்பர்முன்
னெண்ணில்பார்வை கொண்டுவேட னெம்மருங்கு மேகினர். (எக)

கோடுமுன் பொலிக்கவுங் குறுங்கணு குளிக்குல
மாடுசென் றிசைப்பவும் மருங்குபம்பை கொட்டவுஞ்
சேடுகொண்ட கைவிளிச் சிறந்தவோசை செல்லவுங்
காடுகொண் டெழுந்தவேடு கைவளைந்து சென்றதே. (எஉ)

நெருங்குபைந் தருக்குலங்க ணீடுகாடு கூடநேர்
வருங்கருஞ் சிலைத்தடக்கை மானவேடர் சேனைதான்
பொருந்தடந் திரைக்கடற் பரப்பிடைப் புகும்பெருங்
கருந்தரங்க நீள்புனற் களிற்றினன்னி யொத்ததே. (எங)

தென்றிசைப் பொருப்புடன் செறிந்தகானின் மானினம்
பன்றிவெம் மரைக்கணங்க ளாதியான பல்குலந்
துன்றிநின்ற வென்றடிச் சுவட்டினெற்றர் சொல்லவே
வன்றடக்கை வார்கொடெம் மருங்கும்வேட ரோடினர். (எச)

ஓடியெறிந்து வாரொழுக்கி யோசனைப் பரப்பெலா
நெடியதிண் வலைத்தொடக்கு நீளிடைப் பிணித்துநேர்
கடிகொளாளப் பரந்தகாடு காவல்செய் தமைத்தபின்
செடிதலைச் சிலைக்கை வேடர் திண்ணனார்மு னண்ணினார். (எஙி)

வெஞ்சிலைக்கை வீரனரும் வேடரோடு கூடிமுன்
மஞ்சலைக்கு மமலைச் சரிப்புறத்து வந்தமா
வஞ்சுவித் தடர்க்குநாய்க ளட்டமாக விட்டுநீள்
செஞ்சரத்தி னேகுழல் செய்தகானு ளெய்தினர். (எசு)

வெய்யமா வெழுப்பவேவி வெற்பராய மோடிநே
ரெய்யுமாளி முன்றெரிந்து கொண்டுசெல்ல வெங்கணு
மொய்குரற் றுடிக்குலங்கள் பம்பைமுன் சிலைத்தெழுக்
கைவிளித் ததிர்த்துமா வெழுப்பினார்கள் காணெலாம். (எள)

எனமோடு மானினங்க ளெண்குதிண் கலைக்குலங்
கானமேதி யானைவெம் புலிக்கணங்கள் கான்மரை
யானமா வனேகமா மருண்டெழுந்து பாயமுன்
சேனைவேடர் மேலடர்ந்து சீறியம்பி னூறினார். (எஅ)

வே று.

தாளறுவன விடைதுணிவன தலைதுமிவன கலைமா
வாளிகளொடு குடல்சொரிதர மறிவனசில மரைமா
நீளுடல்விடு சரமுருவிட நிமிர்வனமிடை கடமா
மீளிகொள்கணை படுமுடலெழ வீழுவனபல வுழையே. (எக)

வெங்கணைபடு பிடர்சிதீபட விசையழுவிய கயவாய்
செங்கனல்விட வதடினுதிணை செறியமுனிரு கருமா
வங்கெழுசிர முருவியபொழு தடலெயிறுற வதணைப்
பொங்கியசின மொகைவர்வன் புலைவஞ்சில புலிகள். (அ0)

பின்மறவர்கள் விடுபகழிகள் பிறகுறவயி றிடைபோய்
முன்னமுமுகம் விசையுருவிட முடுகியவிசை யுடனக்
கொன்முனையடி சரமினமெதிர் குறுகியமுக முருவத்
தன்னெதிரெதிர் பொருவனநிகர் தலையனபல கலேகன். (அக)

கருவரையொரு தனுவொடுவிசை கடுகியதென முனேநோர்
குரிசின்முன்விடு மதிசரமெதிர் கொலேபயில்பொழு தவையே
பொருகரியொடு சினவரியிடை புரையறவுடல் புகலால்
வருமிரவொடு பகலனேவன வெனமிடையுமவ் வனமே. (அஉ)

நீளிடைவிசை பிசைசுநிகொள நெடுமுகிரெட வெழுமான்
ரூளுறுகழன் மறவர்கள்விடு சரநிறைதொடர் வனதாம்
வாள்விடுகதிர் மதிபிரிவுற வருமெனவிழு முழையைக்
கோளொடுபயில் பணிதொடர்நிலே கொளவுளவெதிர் பலவே. (அக)

கடல்விரிபுனல் கொளவிழுவன கருமுகிலென நிரையே
படர்வொடுசெறி தழைபொதுளிய பயில்புதல்வன மதண்மே
லடலுறுசர முடலுறவரை யடியிடமல மரலான்
மிடைகருமரை கரடிகளொடு விழுவனவன மேதி. (அச)

பலதுறைகளின் வெருவரலொடு பயில்வலேயற நுழைமா
வுலமொடுபடர் வனதகையுற வுறுசினமொடு கவர்நாய்
நிலவியவிரு வினைவலேயிடை நிலேசுழல்பவர் நெறிசேர்
புலனுறுமன னிடைதடைசெய்த பொறிகளினன வுளவே. (அடி)

துடியடியன மடிசெவியன துறுகயமுனி தொடரார்
வெடிபடவிரி சிறுருரூளகண் மிகைபடுகொலே விரவா
ரடிதளர்வுறு கருவுடையன வணைவுறுபிணே யலையார்
கொடியனவெதிர் மூடுகியுமுறு கொலேபுரிநிலே மறவோர். (அசு)

இவ்வகைவரு கொலேமறவினே யெதிர்நிகழ்வுழி யதிரக்
கைவரைகளும் வெருவுறமிடை காணெழுவதொ ரேனம்
பெய்கருமுகி லெனவிடியொடு பிதிர்கனல்விழி சிதறி
மொய்வலேகலே யுறவிபிர்வுற முடுகியகடு விசையில். (அஎ)

போமதுதனே யதிதிறலொடு பொருமறவர்க ளரியே
ரூமவர்தொடர் வுறும்விசையுட னடிவழிசெலு மளவிற்
ரூமொருவரு மறிவிலரவர் தனிதொடர்வுழி யதன்மே
லேமுனேயடி நிலவிடலேக ளிருவர்களடி பிரியார். (அஅ)

நாடியகழல் வயவர்களவர் நாணனுகெடு வரிலிற்
காடனுமெனு மிருவருமலே காவலரொடு கடிதிற்
கூடினர்விடு பகழிகளொடு கொலேஞமலிகள் வழுவி
நீடியசரி படர்வுதருநீழலின்விரை கேழல். (அக)

குன்றியைநிகர் முன்செறவெரி கொடுவிழியிடி ரூரலின்
பன்றியுமடல் வன்றிறலொடு புடர்நெறிசெடி தோடித்
தன்றியதொரு குன்றடிவரை சுலவியநெறி சூழற்
சென்றதனிண்ட நின்றதுவலி தெருமரமத நிரையில். (கூ0)

அத்தருவனர் சுழலிடையடை யதனிலேயறி பலர்முன்
கைத்தெரிகணை யினிலடுவது கருதலர்விசை கடுகி
மொய்த்தெழுசுடர் விடுசரிகையை முனைபெறவெறி ருருவிக்
குத்தினருடன் முறிபடவெறி குலமறவர்க டலைவர். (கக)

வே வு.

வேடர்தங் கரிய செங்கண் வில்லியார் விசையிற் குத்த
மாடிரு துணியாய் வீழ்ந்த வராகத்தைக் கண்டு ஈாணன்
காடனே யிதன்பி னின்று காதங்கள் பலவந் தெய்த்தோ
மாடவன் கொன்ரு னச்சோ வென்றவ ரடியிற் ரூழ்ந்தார். (கஉ)

மற்றவர் திண்ண னூர்க்கு மொழிகின்ரூர் வழிவந் தாற்ற
வுற்றது பசிவந்தெம்மை யுதவிய விதனைக் காய்ச்சிச்
சற்றுநீ யருந்தி யாமுந் தின்றுதண் ணீர்கு டித்து
வெற்றிகொள் வேட்டைக் காடு குறுகுவோ மெல்ல வென்ரூர். (கஉ)

என்றவர் கூறநோக்கித் திண்ணனூர் தண்ணீ ரெங்கே
நன்றுமிவ வனத்தி லுள்ள தென்றுரை செய்ய ஈாண
னின்றவிப் பெரிய தேக்கி னப்புறஞ் சென்ரு னீண்ட
குன்றினுக்கயலே யோடுங் குளிர்ந்தபொன் முகலி யென்ரூன். (கச)

பொங்கிய சினவில் வேடன் சொன்னபின் போவோ மங்கே
யிங்கித தன்னைக் கொண்டு போதுமி னென்று தாமு
மங்கது நோக்கிச சென்ரூர் காவத மரையிற் கண்டார்
செங்கணே முடையார் வைகுந் திருமலைச் சாரற் சோலை. (கஎ)

ஈாணனே தோன்றுங் குன்றி னண்ணுவே மென்ன ஈாணன்
காணரீ போதி நல்ல காட்சியே காணு மிந்தச்
சேணுயர் திருக்கா ளத்தி மலைமிசை யெழுந்து செவ்வே
கோணமில் குடுமித் தேவ ரிருப்பாரும் பிடலா மென்ரூன். (கஅ)

ஆவதெ னிதனைக் கண்டிங் கணைதொறு மென்மேற் பாரம்
போவதொன் றுளது போலு மாசையும் பொங்கி மேன்மேன்
மேவிய நெஞ்சும் வேரூர் விருபபுற விரையா நிற்குந்
தேவரங் கிருப்ப தெங்கே போகென்ரூர் திண்ண னூர்தாம். (கஅ)

உரைசெய்து வீரைந்து செல்ல வவர்களு முடனே போந்து
கரைவளர் கழையின் முத்துங் காரகிற் குறடுஞ் சந்தும்
வரைதரு மணியும் பொன்னும் வயிரமும் புளினந் தோறுங்
கிரைகண்முன் றிரட்டி வைத்த திருமுக லியினைச் சார்ந்தார். (கஅ)

ஆங்கதன் கரையின் பாங்கோ ரணிகிழற் கேழ லிட்டு
வாங்குவிற் காடன் றன்னை மரக்கடை நீக்கோல் பண்ணி
யீங்குநீ கெருப்புக் காண்பா யிம்மலை யேறிக் கண்டு
காங்கள்வந் தணைவோ மென்று ஈாணனுந் தாமும் போந்தார். (கக)

அளிமிடை கரைரும் சேரலி யவர்கள்கொண் டவனைத்த வாற்றின்
தெளிபுன லிழிந்து சென்றை தெளிவுறுந் திண்ண னூர்தாங்
களிவரு மிழ்ச்சி பொங்கக் காளத்தி கண்டு கொண்டு
குளிர்வரு நதியு டேகிக் குலவரைச் சாரல் சேர்ந்தார். (கஅ)

கதிரவ னுச்சி நண்ணக் கடவுண்மால் வரையி னுச்சி
யதிர்தரு மேரைசை யைந்து மார்கலி முழக்கங் காட்ட
விதுவென்கொ லுணை வென்றார்க் கிம்மலைப் பெருக்தேன் சுழ்ந்து
மதுமல ரீக்கண் மொய்த்து மருவகெழு மொலிகொ லென்றான். (கஐக)

மூன்புசெய் தவத்தி னீட்ட முடிவிலா வின்ப மான
வன்பினை யெடுத்துக் காட்ட வளவிலா வார்வம் பொங்கி
மன்பெருங் காதல் கூர வள்ளலார் மலையை நோக்கி
யென்புகெக் குருகி யுள்ளத் தெழுபெரு வேட்கை யோடும். (கஐஉ)

காணனு மன்பு முன்பு நளிர்வரை யேறத் தாமும்
பேணுதத் துவங்க ளென்னும் பெருகுசோ பான மேறி
யாணையாஞ் சிவத்தைச் சார வணைபவர் போல வையர்
நீணிலை மலையை யேறி நேர்படச செல்லும் போதில். (கஐஊ)

திங்கள் சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணு முன்னே
யங்கணர் கருணை கூர்ந்த வருட்டிரு நோக்க மெய்தித்
தங்கிய பவத்தின் முன்னைச சார்புவிட் டகல நீங்கிப்
பொங்கிய வொளியி னீழற் பொருவிலன் புருவ மானார். (கஐஎ)

மாகமார் திருக்கா ளத்தி மலையெழு கொழுந்தா யுள்ள
வேகநா யகரைக் கண்டா ரெழுந்தபே ருவகை யன்பின்
வேகமா னதுமேற் செல்ல மிக்கதோர் விரைவி னோடு
மோகமா யோடிச சென்றார் தழுவினர் மோந்து நின்றார். (கஐஇ)

நெடிதுபோ துயிர்த்து நின்று நிறைந்தெழு மயிர்க்கா ரூறும்
வடிவெலாம் புளகம் பொங்க மலர்க்கணீ ரருவி பாய
வடியனேற் கிவர்தா மிகுகே யகப்பட்டா ரச்சோ வென்று
படியிலாப் பரிவு தானேர் படிவமாம் பரிசு தோன்ற. (கஐஈ)

வெம்மறக் குலத்து வந்த வேட்டுவச் சாதியார் போற்
கைம்மலை கரடி வேங்கை யரிதிரி கானந் தன்னி
லும்முடன் றுணைய ராள்ளா ரொருவரு மின்றிக் கெட்டே
னிம்மலைத் தனியே நீரிங் கிருப்பதே யென்று நைந்தார். (கஐஎ)

கைச்சிலை விழுந்த தோரார் காளையார் மீள விந்தப்
பச்சிலை யோடு பூவும் பறித்திட்டு நீரும் வார்த்து
மச்சிது செய்தார் யாரோ வென்றலு மருங்கு நின்ற
வச்சிலை நாணன் ரூணு காணிது வறிந்தே னென்பான். (கஐஅ)

வன்றிற லுந்தை யோடு மாவேட்டை யாடிப் பண்டிக்
குன்றிடை வந்தோ மாகக் குளிர்ந்தநீ ரிவரை யாட்டி
யொன்றிய வினிலப்பூச் சூட்டி யூட்டிமுன் பறைந்தோர் பார்ப்பா
னன்றிது செய்தா னின்று மவன்செய்த தாகு மென்றான். (கஐக)

உண்ணிறைந் தெழுந்த தேனு மொழிவின்றி யாரா வன்பிற்
றிண்ணனார் திருக்கா ளத்தி நாயனார்க் கினிய செய்கை
யெண்ணிய வினைகொ லாமென் றிதுகடைப் பிடித்துக் கொண்டவ்
வண்ணலைப் பிரிய மாட்டா தனவிலா தரவு நீங்கா. (ஐஅஇ)

இவர்தமைக் கண்டே னுக்குத் தனியரா யிருந்தா ரென்னே
யிவர்தமக் கமுது செய்ய விறைச்சியு மிடுவா ரில்லே
யிவர்தமைப் பிரிய வொண்ணு தென்செய்கே னினியான் சால
விவர்தமக் கிறைச்சி கொண்டிங் கெய்தவும் வேண்டு மென்று. (ககக)

போதுவர் மீண்டு செல்வர் புல்லுவர் மீளப் போவர்
காதலி னேக்கி நிற்பர் கன்றகல் புனிற்றுப் போல்வர்
நாதனே யமுது செய்ய நல்லமெல் லிறைச்சி நானே
கோதறத் தெரிந்து வேறு கொண்டிங்கு வருவே னென்பார். (ககஉ)

ஆர்தம ராக நீரிங் கிருபபதென் றகல மாட்டே
னீர்பசித் திருக்க விங்கு நிற்கவுங் கில்லே னென்று
சோர்தரு கண்ணீர் வாரப் போய்வரத் துணிந்தா ராகி
வார்சிலை யெடுத்துக் கொண்டு மலர்க்கையாற் றொழுது போந்தார். (ககங)

முன்புநின் றரிதி னீங்கி மொய்வரை யிழிந்து ஞாணன்
பின்புவந் தணைய முன்னைப பிறதுறை வேட்கை நீங்கி
யன்புகொண் டெய்ப்பச செல்லு மவர்திரு முகலி யாற்றின்
பொன்புனை கரையி லேறிப் புதுமலர்க் காவிற் புக்கார். (ககச)

காடனு மெதிரே சென்று தொழுததிக் கடைந்து வைத்தேன்
கோடைடை யேன மூங்கள குறிப்படி யுறுப்பை யெல்லா
மாறற நோக்கிக் கொள்ளு மறித்துநாம் போகைக் கின்று
நீடநீர் தாழ்த்த தென்னே வென்றலு நின்ற ஞாணன். (ககஞ)

அங்கிவன் மலையிற் றேவர் தம்மைக்கண் டணைத்துக் கொண்டு
வங்கினைப் பற்றிப போகா வல்லுடும் பென்ன நீங்கா
னிங்குமத் தேவர் தின்ன விறைச்சிகொண் டேகப் போந்தா
னங்குலத் தலைமை விட்டா னலப்பட்டான் றேவர்க் கென்றான். (ககசு)

என்செய்தாய் திண்ணு நீதா னென்னமால் கொண்டா யெங்கண்
முன்பெரு முதலி யல்லே யோவென முகத்தை நோக்கார்
வன்பெரும் பன்றி தன்னே யெரியினில் வதக்கி மிக்க
வின்புறு தசைகள் வெவ்வே றம்பிலு லீர்ந்து கொண்டு. (ககஎ)

கோலினிற் கோத்துக் காய்ச்சிக் கொழுந்தசை பதத்தில் வேவ
வாலிய சுவைமுன் காண்பான் வாயினி லதுக்கிப் பார்த்துச்
சாலவு மினிய வெல்லாஞ் சருகிலை யிணைத்த கல்லே
யேலவே கோலிக் கூடா வதன்பிசை யிடுவா ரானார். (ககஅ)

மருங்குநின் றவர்கள் பின்னு மயன்மிக முதிர்ந்தா னென்னே
யரும்பெற லிறைச்சி காய்ச்சி யதுக்கிவே றுமிழா நின்றான்
பெரும்பசி யுடைய னேனும் பேச்சில னெமக்குப் பேது
தரும்பரி சுணரான் மற்றைத் தசைபுறத் தெறியா னின்றான். (ககக)

தேவுமால் கொண்டா னிந்தத் திண்ணன்மற் றிதனைத் தீர்க்க
லாவதொன் றறியேங் தேவ ராட்டியை நாக ளேடு
மேவினான் கொளார்ந்து தீர்க்க வேண்மெல் வேட்டைக் கானி
லேவலாட் கனேயுங் கொண்டு போதுமென் றெண்ணிப் போனான். (கஉ0)

கானவர் போன தோரார் கடிதினிற் கல்லி யின்க
ணானமு தமைத்துக் கொண்டு மஞ்சன மாட்ட வுன்னி
மாகதி னன்னீர் தூய வாயினிற் கொண்டு கொய்த
தூநறும் புள்ளித் தாமங் குஞ்சிமேற் றுதையக் கொண்டார். (கஉக)

தனுவொரு கையில் வெய்ய சரத்துடன் ருங்கிக் கல்லைப்
புனிதமெல் லிறைச்சி நல்ல போனக மொருகை யேந்தி
யினியவெம் பிராஞர் சாலப் பசிப்பரென் றிரங்கி யேங்கி
ஞனிவிரைந் திறைவர் வெற்பை ஞண்ணினர் திண்ண ஞர்தாம். (கஉஉ)

இளைத்தனர் நாய ஞரென் றீண்டச்சென் றெய்தி வெற்பின்
முளைத்தெழு முதலைக் கண்டு முடிமிசை மலரைக் காலில்
வளைத்தபொற் செருப்பான் மாற்றி வாயின்மஞ் சனநீர் தன்னை
யிளைத்தவன் புயிழ்வார் போல விமலனூர் முடிமேல் விட்டார். (கஉங)

தலைமிசைச் சுமந்த பள்ளித் தாமத்தைத் தடங்கா ளத்தி
மலைமிசைத் தம்பி ரானூர் முடிமிசை வணங்கிச சாத்திச்
சிலைமிசைப் பொலிந்த செங்கைத் திண்ணனூர் சேர்த்த கல்லை
யிலைமிசைப் படைத்த வூனின் றிருவமு தெதிரே வைத்தார். (கஉச)

கொழுவிய தசைக ளெல்லாங் கோலினிற் றெரிந்து கோத்தங்
கழலுறு பதத்திற் காய்சிப் பல்லினு லதுக்கி நாவிற்
பழுகிய வினிமை பார்த்துப் படைத்தவிவ விறைசசி சால
வழகிது நாய னீரே யமுதுசெய் தருளு மென்றார். (கஉஞ)

அன்னவிம் மொழிகள் சொல்லி யமுதுசெய் வித்த வேடர்
மன்னனூர் திருக்கா ளத்தி மலையினூர்க் கினிய நல்லூ
னின்னமும் வேண்டு மென்னு மெழுபெருங் காதல் கண்டு
பன்னெடுங் காலங்கள் கூடபிப் பகலவன் மலயிற் ருழ்ந்தான். (கஉசு)

அவ்வழி யந்தி மாலை யணைதலு மிரவு சேரும்
வெவலிலங் குளவென் றஞ்சி மெய்மையின் வேறு கொள்ளாச்
செவவிய வன்பு தாங்கித் திருக்கையிற் சிலையுந் தாங்கி
மைவுரை யென்ன வையர் மருங்குகின் றகலா நின்றார். (கஉள)

சார்வருந் தவங்கள் செய்து முனிவரு மமரர் தாமுங்
கார்வரை யடவி சேர்ந்துங் காணுதற் கரியார் தம்மை
யார்வமுன் பெருக வாரா வன்பினிற் கண்டு கொண்டே
நேர்பெற நோக்கி நின்றூர் நீளிரு ணீங்க நின்றூர். (கஉஅ)

கழைசொரி தரளக் குன்றிற் கதிர்நில வொருபாற் பொங்க
முழையர வுமிழ்ந்த செய்ய மணிவெயி லொருபான் மொய்ப்பத்
தழைகதிர்ப் பரிதியோடுஞ் சந்திரன் றலையு வாவித்
குழையணி காதர் வெற்புக் கும்பிடச் சென்று லொக்கும். (கஉக)

விரவுபன் மணிகள் கான்ற விரிசுடர்ப் படலை பொங்க
மரகத மொளிகொ ணீல மணிகளு மிமைக்குஞ் சோதி
பொரவிரு சுடருக் கஞ்சிப் போயின புடைக டோறு
மிரவிரு னொதுங்கி ஞலே போன்றுள தெங்கு மெங்கும். (கஉ0)

செந்தழ லொளியிற் பொங்குந் தீபமா மரங்க ளாலு
மந்திகண் முழையில் வைத்த மணிவிளக் கொளிக ளாலு
மைந்துமா றடக்கி யுள்ளா ரரும்பெருஞ் சோதி யாலு
மெந்தையார் திருக்கா ளத்தி மலையினி லிரவொன் றில்லை. (கஉக)

வருங்கறைப் பொழுது நீங்கி மல்கிய யாமஞ் சென்று
சருங்கிட வறிந்த புள்ளின் சூழ்சிலம் போசை கேட்டுக்
கருங்கட லென்ன நின்று கண்டுயி லாத வீர
ரரும்பெறற் றம்பி ரானார்க் கமுதுகொண் டணைய வேண்டி. (கஉஉ)

ஏறுகாற் பன்றி யோடு மிருங்கலை புனமான் மற்றும்
வேறுவே றினங்கள் வேட்டை வினைத்தொழில் விரகி னுலே
யூறுசெய் காலஞ் சிந்தித் தருபிகத் தெரியாப் போதின்
மாறடு சிலையுங் கொண்டு வள்ளலைத் தொழுது போந்தார். (கஉங)

வே று.

மொய்காட்டு மிருள்வாங்கி முகங்காட்டுந் தேரிரவி
மெய்காட்டு மன்புடைய வில்லியார் தனிவேட்டை
யெய்காட்டின் மாவிளக்க விட்டகருந் திரையெடுத்துக்
கைகாட்டு வான்போலக் கதிர்காட்டி யெழும்பொழுதில். (கஉச)

எய்தியசீ ராகமத்தி லியம்பியபூ சனைக்கேற்பக்
கொய்தமல ரும்புனலு முதலான கொண்டணைந்தார்
மைதழையுங் கண்டத்து மலைமருந்தை வழிபாடு
செய்துவருந் தவமுடைய முனிவர்சிவ கோசரியார். (கஉஙி)

வந்துதிரு மலையின்கண் வானவர்நா யகர்மருங்கு
சிந்தைநிய மத்தோடுஞ் செல்கின்றார் திருமுன்பு
வெந்தவிறைச் சியுமெலும்புங் கண்டகல பிதித்தோடி
யிந்தவனு சிதங்கெட்டே னியார்செய்தா ரென்றழிவார். (கஉசு)

மேவனோ வாவஞ்சா வேடுவரே யிதுசெய்தார்
தேவதே வேசனே திருமுன்பே யிதுசெய்து
போவதே யிவ்வண்ணம் புகுதநீர் திருவுள்ள
மாவதே யெனப்பதறி யழுதுவிழுந் தலமந்தார். (கஉஎ)

பொருப்பிலெழுஞ் சுடர்க்கொழுந்தின் பூசனையுந் தாழ்க்கநா
னிருப்பதினி யென்னென்றவ் விறைச்சியெலும் புடனிலையுஞ்
செருப்படியு நாயடியுந் திருவலகான் மாற்றியபின்
வீருப்பினெடுந் திருமுகலிப் புனன்மூழ்கி விரைந்தணைந்தார். (கஉஅ)

பழுதுபுகுந் ததுதீரப் பவித்திரமாஞ் செயல்புரிந்து
தொழுதுபெறு வனகொண்டு தூயபூ சனைதொடங்கி
வழுவிறிரு மஞ்சனமே முதலாக வரும்பூசை
முழுதுமுறை மையின்முடித்து முதல்வனார் கழல்பணிந்தார். (கஉக)

பணிந்தெழுந்து தனிமுதலாம் பரனென்று பன்முறையாற்
றுணிந்தமறை மொழியாலே துதிசெய்து சுடர்த்திங்க
ளணிந்தசடை முடிக்கற்றை யங்கணரை விடைகொண்டு
தணிந்தமனத் திருமுனிவர் தபோவனத்தி னிடைச்சார்ந்தார். (கசஂ)

இவ்வண்ணம் பெருமுனிவ ரேகினு ரினியிப்பான்
மைவண்ணக் கருங்குஞ்சி வனவேடர் பெருமானார்
கைவண்ணச் சிலைவளைத்துக் கான்வேட்டை தனியாடிச்
செய்வண்ணத் திறமொழிவேன் நீவினையின் றிறமொழிவேன். (கசக)

திருமலையின் புறம்போன திண்ணனார் செறிதுறுகற்
பெருமலைக ளிடைச்சரியிற் பெரும்பன்றி புனமேய்ந்து
வருவனவுந் துணிபடித்து மானினங்கள் கானிடைநின்
றெருவழிச்சென் றேறுதுறை யொளிநின்று கொன்றருளி. (கசஉ)

பயில்விளியாற் கலையழைத்துப் பாடுபெற வூருவு
மயின்முகவெங் கணைபோக்கி யடியொற்றி மரையினங்க
ளெயிலிடையிற் கிடையெய்து தொடர்ந்துகட மைகளெய்து
வெயில்படுவெங் கதிர்முதிரத் தனிவேட்டை வினைமுடித்தார். (கசஊ)

பட்டவன விலங்கெல்லாம் படர்வனத்தி லொருசூழ
லிட்டருகு தீக்கடைகோ லிருஞ்சுரிகை தனையுருவி
வெட்டிநறுங் கோற்றேனு மிகமுறித்துத் தேக்கிலையால்
வட்டமுறு பெருங்கல்லே மருங்குபுடை படவமைத்தார். (கசச)

இந்தனமு முறித்தடுக்கி யெரிகடையு மரணியினில்
வெந்தழலைப் பிறப்பித்து மிகவளர்த்து மிருகங்கள்
கொந்தியயி லலகம்பாற் குட்டமிட்டுக் கொழுப்பரிந்து
வந்தனகொண் டெழுந்தழலில் வக்குவன வக்குவித்து. (கசஎ)

வாயம்பா லழிப்பதுவும் வகுப்பதுவுஞ் செய்தவற்றி
லாயவுறுப் பிறைச்சியெலா மரிந்தொருகல் லேயிலிட்டுக்
காயநெடுங் கோல்கோத்துக் கனலின்க ணுறக்காய்ச்சித்
தூயதிரு வமுதமைக்கச சுவைகாண லுறுகின்றார். (கசசு)

எண்ணிறந்த கடவுளருக் கிடுமுணவு கொண்டீட்டும்
வண்ணவெரி வாயின்கண் வைத்ததெனக் காளத்தி
யண்ணலார்க் காம்பரிசு தர்ஞ்சோதித் தமைப்பார்போற்
றிண்ணனார் திருவாயி லமைத்தாரூன் றிருவமுது. (கசஏ)

நல்லபத முறவெந்து நாவின்க ணிடுமிறைச்சி
கல்லையினிற் படைத்துத்தேன் பிழிந்துகலந் ததுகொண்டு
வல்விரைந்து திருப்பள்ளித் தாமமுந்தாய் மஞ்சனமு
மொல்லையினின் முன்புபோ யுடன்கொண்டு வந்தணைந்தார். (கசஅ)

வந்துதிருக் காளத்தி மலையேறி வனசரர்க
டந்தலைவ ஞரிமையோ தலைவனார் தமையெய்தி
யந்தணனார் பூசையினே முன்புபோ லகற்றியபின்
முந்தைமுறை தம்முடைய பூசனையின் செயன்முடிப்பார். (கஸக)

ஊனமுது கல்லையுடன் வைத்திதுமுன் னேயினன்ரு
லேனமொடு மான்கலேகண் மறைகடமை யினையயிற்றி
லானவுறுப் பிறைச்சியமு தடியேனுஞ் சுவைகண்டேன்
றேறனுமுடன் கலந்தனிது நித்திக்கு மெனமொழிந்தார்.

இப்பரிசு திருவமுது செய்வித்துத் தம்முடைய
வொப்பரிய பூசனைசெய் தந்நெறியி லொழுகுவா
ரெப்பொழுது மேன்மேல்வந் தெழுமன்பாற் காளத்தி
யப்பரெதி ரல்லுறங்கார் பகல்வேட்டை யாடுவார். (கஞக)

மாமுனிவர் நாடோறும் வந்தணைந்து வனவேந்தர்
தாமுயலும் பூசனைக்குச் சாலமிகத் தளர்வெய்தித்
தீமையென வதுநீக்கிச் செப்பியவா கமவிதியா
லாமுறையி லருச்சனைசெய் தந்நெறியி லொழுகுவரால். (கஞஉ)

ஈணனெரு காடனும்போய் நாகனுக்குச் சொல்லியபி
ஹாணமுறக் கமுமின்றி யணங்குறைவா ளுயுங்கொண்டு
பேணுமக னுர்தம்பால் வந்தெல்லாம் பேதித்துக்
காணுநெறி தங்கள்குறி வாராமற் கைவிட்டார். (கஞங)

முன்புதிருக் காளத்தி முதல்வனு ருணேக்கி
னின்புறுவே தகத்திருப்பு பொன்னுனுற் போல்யாக்கைத்
தன்பரிசும் வினையிரண்டுஞ் சாருமல மூன்றுமற
வன்புபிழம் பாய்த்திரிவா ரவர்கருத்தி னளவினரோ. (கஞச)

அந்திலேயி லன்பனு ரறிந்தநெறி பூசிப்ப
மன்னியவா கமப்படியான் மாமுனிவ ருருச்சித்திங்
கென்னுடைய நாயகனே யிதுசெய்தார் தமைக்காணே
னுன்னுடைய திருவருளா லொழித்தருள வேண்டுமென. (கஞஞ)

அன்றிரவு கனவின்க ணருமுனிவர் தம்பாலே
மின்றிகழுஞ் சடைமவுலி வேதியர்தா மெழுந்தருளி
வன்றிறல்வே டுவனென்று மற்றவனே நீநினையே
னன்றவன்றன் செயறன்னை நாமுரைப்பக் கேளென்று. (கஞசு)

அவனுடைய வடிவெல்லா நம்பக்க லன்பென்று
மவனுடைய வறிவெல்லா நமையறியு மறிவென்று
மவனுடைய செயலெல்லா நமக்கினிய வாமென்று
மவனுடைய நிலையிவ்வா றறிநீயென் றருள்செய்வார். (கஞஎ)

பொருப்பினில்வந் தவன்செய்யும் பூசனைக்கு முன்பென்மே
லருப்புறுமென் மலர்முன்னே யவைநீக்கு மாதரவால்
விருப்புறுமன் பெனும்வெள்ளக் கால்பெருகிற் றெனவீழ்ந்த
செருப்படியவ் விளம்பருவச் சேயடியிற் சிறப்புடைத்தால். (கஞஅ)

உருகியவன் பொழிவின்றி நிறைந்தவ னுருவென்னும்
பெருகியகொள் கலமுகத்திற் பிறங்கியினி தொழுகுதலா
லொருமுனிவன் செவியுமிழு முயர்கங்கை முதற்றீர்த்தப்
பொருபுனலி னெனக்கவன்றன் வாயுமிழும் புனல்புனிதம். (கஞக)

இம்மலைவந் தெனையடைந்த கானவன்ற னியல்பாலே
மெய்ம்மலரு மன்புமேல் விரிந்தனபோல் விழுதலாற்
செம்மலர்மே லயனுமோன் முதற்றேவர் வந்துபுனை
யெம்மலரு மவன்றலையா லிடுமெலர்போ லெனைச்சொன்னார். (கஞ0)

வெய்யகனற் பதங்கொள்ள வெந்துளதோ வெனுமன்பா
னேயுமனத் தினிமையினி னேயமிக மென்றிடலாற்
செய்யுமறை வேள்வியோர் முன்புதருந் திருந்தவியி
லெய்யும்வரிச் சிலேயவன்ரு னிட்டஆ னெனக்கினிய. (கசுக)

மன்பெருமா மறைமொழிகண் மாமுனிவர் மகிழ்ந்துரைக்கு
மின்பமொழித் தோத்திரங்கண் மந்திரங்க ளியாவையினு
முன்பிருந்து மற்றவன்றன் முகமலர வகநெகிழ்ந்த
வன்பினினைந் தெனையல்லா லறிவுரு மொழிநல்ல. (கசுஉ)

உனக்கவன்றன் செயல்காட்ட நானீ யொளித்திருந்தா
லெனக்கவன்றன் பரிவிருக்கும் பரிசெல்லாங் காண்கின்ரு்
மனக்கவலை யொழிகென்று மறைமுனிவர்க் கருள்செய்து
புனற்சடிலத் திருமுடியா ரெழுந்தருளிப் போயினர். (கசுங)

கனவுநிலை நீங்கியபின் விழித்துணர்ந்து கங்குலிடைப்
பூனதவத்து மாமுனிவர் புலர்வளவுங் கண்டியிலார்
மனமுறுமற் புதமாகி வரும்பயமு முடனுகித்
தூனைபுரவித் தனித்தேர்மேற் ரூன்றுவான் கதிர்தோன்ற. (கசுச)

முன்னைநாள் போல்வந்து திருமுகலிப் புனன்முழ்கிப்
பன்முறையுந் தம்பிரா னருள்செய்த படிநினைந்து
மன்னுதிருக் காளத்தி மலையேறி முன்புபோற்
பிஞ்ஞகனைப் பூசித்துப் பின்பாக வொளித்திருந்தார். (கசுஞ)

தே வு.

கருமுகி லென்ன நின்ற கண்படா வில்லி யார்தாம்
வருமுறை யாரு நாளில் வருமிர வொழிந்த காலை
யருமறை முனிவ னுர்வந் தனைவதன் முன்பு போகித்
தருமுறை முன்பு போலத் தனிப்பெரு வேட்டை யாடி. (கசுசு)

மாறிலா னமுது நல்ல மஞ்சனப் புனலுஞ் சென்னி
யேறுநாண் மலரும் வெவ்வே றியல்பினி லமைத்துக் கொண்டு
தேறுவார்க் கமுத மான செல்வனூர் திருக்கா ளத்தி
யாறுசேர் சடையார் தம்மை யணுகவந் தனையா நின்ரூர். (கசுஎ)

இத்தனை பொழுதுந் தாழ்த்தே னெனவிரைந் தேகு வார்முன்
மொய்த்தபல் சகுன மெல்லா முறைமுறை தீங்கு செய்ய
வித்தகு தீய புட்க ளீண்டமுன் னுதிரங் காட்டு
மத்தனுக் கென்கொல் கெட்டே னடுத்ததென் றணையும் போதில். (கசுஅ)

அண்ணலார் திருக்கா ளத்தி யடிகளார் முனிவ னுர்க்குத்
திண்ணனூர் பரிவு காட்டத் திருநய னத்தி லொன்று
துண்ணென வுதிரம் பாய விருந்தனர் தூரத் தேயவ்
வண்ணவெஞ் சிலேயார் கண்டு வல்விரைந் தோடி வந்தார். (கசுக)

வந்தவர் குருதி கண்டார் மயங்கினூர் வாயி னன்னீர்
சிந்திடக் கையி னுனுஞ் சிலேயுடன் சிதறி வீழக்
கொந்தலர் பள்ளி [illegible]ங் குஞ்சிமின் றலேந்து சோரப்
பைந்தழை யலங்கு னார்பர் நின்ரத்திடைப் பதைத்து வீழ்ந்தார். (கஎ0)

விழுந்தவ ரெழுந்து சென்று தடைத்தனர் குருதி வீழ்வ
தொழிந்திடக் காணர் செய்வ தறிந்தில ருயிர்த்து மீள
வழிந்துபோய் வீழ்ந்தார் தேறி யாரிது செய்தா ரென்ன
வெழுந்தனர் திசைக ளெங்கும் பார்த்தன ரெடுத்தார் வில்லும். (கஎக)

வாளியுந் தெரிந்து கொண்டிம் மலையிடை யெனக்கு மாறு
மீளிவெம் மறவர் செய்தா ருளர்கொலோ விலங்கின் சாதி
யாளிமுன் ஞெகி யுள்ள வினைத்தவோ வறியே னென்று
நீளிருங் குன்றச் சார னெடிதிடை நேடிச் சென்றார். (கஎஉ)

வேடரைக் காணர் தீய விலங்குகண் மருங்கு மெங்கு
நாடியுங் காணர் மீள நாயனார் தம்பால் வந்து
நீடிய சோகத் தோடு நிறைமலர்ப் பாதம் பற்றி
மாடுறக் கட்டிக் கொண்டு கதறினர் கண்ணீர் வார. (கஎங)

பாவியேன் கண்ட வண்ணம் பரமனார்க் கடுத்த தென்னே
வாவியி லினிய வெங்க ளத்தனார்க் கடுத்த தென்னே
மேவினர் பிரிய மாட்டார் விமலனார்க் கடுத்த தென்னே
வாவதொன் றறிகி லேன்யா னென்செய்கே னென்று பின்னும். (கஎச)

என்செய்தாற் றீரு மோதா னெம்பிரான் றிறத்துத் தீங்கு
முன்செய்தார் தம்மைக் காணேன் மொய்கழல் வேட ரென்று
பின்செய்வார் பகழிப் புண்க டீர்க்குமெய் மருந்து தேடிப்
பொன்செய்தாழ் வரையிற் கொண்டு வருவன னென்று போனார். (கஎஙி)

நினைத்தனர் வேறு வேறு நெருங்கிய வனங்க ளெங்கு
மினத்திடைப் பிரிந்த செங்க ணேறென வெருக்கொண் டெய்திப்
புனத்திடைப் பறித்துக் கொண்டு பூதநா யகன்பால் வைத்த
மனத்தினுங் கடிது வந்து மருந்துகள் பிழிந்து வார்த்தார். (கஎசு)

மற்றவர் பிழிந்து வார்த்த மருந்தினுற் றிருக்கா ளத்திக்
கொற்றவர் கண்ணிற் புண்ணீர் குறைபடா திழியக் கண்டு
பிற்றையி னிலைமைக் கென்னே வினிச்செய லென்று பார்ப்பா
ருற்றநோய் தீர்ப்ப னூனுக் கூனெனு முரைமுன் கண்டார். (கஎஎ)

இதற்கினி யென்க ணம்பா லிடந்தப்பி னெந்தை யார்க
ணதற்கிது மருந்தாய்ப் புண்ணீர் நிற்கவு மடிக்கு மென்று
மதர்த்தெழு முள்ளத் தோடு மகிழ்ந்துமுன் னிருந்து தங்கண்
முதற்சர மடுத்து வாங்கி முதல்வர்தங் கண்ணி லப்ப. (கஎஅ)

நின்றசெங் குருதி கண்டார் நிலத்தினின் றேறப் பாய்ந்தார்
குன்றென வளர்ந்த தோள்கள் கொட்டினர் கூத்து மாடி
நன்றுநான் செய்த வின்த மகியென நகையுந் தோன்ற
வொன்றிய களிப்பி னுலே யுன்மத்தர் போல மிக்கார். (கஎக)

வலத்திருக் கண்ணிற் றங்க ணப்பிய வள்ள லார்த
நலத்தினைப் பின்னுங் காட்ட நாயனார் மற்றைக் கண்ணி
லுலப்பில்செங் குருதி பாயக் கண்டன ருவகை வேடர்
குலப்பெருந் தவத்தால் வந்து கொள்கையி னுயர்ந்தார் மேலார். (கஅ0)

கண்டபின் கெட்டே னெங்கள் காளத்தி யார்கண் ணென்று
புண்டரு குருதி நிற்க மற்றைக்கண் குருதி பொங்கி
மண்டுமெற் றிதனுக் கஞ்சேன் மருந்துகை கண்டே னின்னு
முண்டொரு கண்ணிக் கண்ணே யிடந்தப்பி யொழிப்பே னென்று. (கஅக)

கண்ணுதல் கண்ணிற் றங்க ணிடந்தப்பிற் காணு நேர்பா
லெண்ணுவார் தம்பி ரான்றன் றிருக்கண்ணி லிடக்கா லூன்றி
யுண்ணிறை விருப்பி னோடு மொருதனிப் பகழி கொண்டு
திண்ணனார் கண்ணி லூன்றத் தரித்திலர் தேவ தேவர். (கஅஉ)

செங்கண்வெள் விடையின் பாகர் திண்ணனார் தம்மை யாண்ட
வங்கணர் திருக்கா ளத்தி யற்புதர் திருக்கை யன்பர்
தங்கண்முன் னிடக்குங் கையைத் தடுக்கமூன் றடுக்கு நாக
கங்கண ரமுத வாக்குக் கண்ணப்ப ரிற்க வென்ற. (கஅங)

கானவர் பெருமா னுர்தங் கண்ணிடந் தப்பும் போது
மூனமு துகந்த வைய ருற்றுமுன் பிடிக்கும் போது
ஞானமா முனிவர் கண்டார் நான்முகன் முதலா யுள்ள
வானவர் வளர்பூ மாரி பொழிந்தனர் மறைக ளார்ப்ப. (கஅச)

பேறினி யிதன்மே லுண்டோ பிரான்றிருக் கண்ணில் வந்த
வூறுகண் டஞ்சித் தங்க ணிடந்தப்ப வுதவும் கையை
யேறுயர்த் தவர்தங் கையாற் பிடித்துக்கொண் டென்ன லத்தின்
மாறிலாய் நிற்க வென்று மன்னுபே ரருள்பு ரிந்தார். (கஅடி)

மங்குல்வாழ் திருக்கா ளத்தி மன்னனார் கண்ணிற் புண்ணீர்
தங்கணன் மாற்றப் பெற்ற தலேவர்தா டலேமேற் கொண்டே
கங்கைவாழ் சடையார் வாழுங் கடவூரிற் கலேய ஞரான்
பொங்கிய புகழின் மிக்கார் திருத்தொண்டு புகல லுற்றேன். (கஅசு)

கண்ணப்பநாயனார்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - அஉடி.

சூசனம்.

அன்புடைமை.

எமக்கு இனியரென்று எம்மாலே தெளியப்பட்டவர் யாவரோ அவரிடத்தே எமக்கு விருப்பம் நிகழும். எமக்கு யாவரிடத்து விருப்பம் நிகழுமோ அவரிடத்தே எமக்கு அன்பு நிகழும். அன்பாவது தன்னுல் விரும்பப்பட்டவரிடத்தே தோன்றும் உள்ள நிகழ்ச்சி. ஆதலால், நாம் நமக்கு இனியவர் யாவரென்று ஆராய்ந்து, நிச்சயிப் பேம். தந்தை தாய் மனைவி மைந்தர் முதலிய உறவினரே எமக்கு இனியரெனக் கொள்வமெனின்; இவருக்கும் எமக்கும் உளதாகிய தொடர்ச்சி நீர்க்குமிழிபோல நிலையில்லாததாகிய இவ்வுடம்பிலுல் ஆயதாதலானும்; இவ்வுடம்பு ஒழியவே இதனு லாகிய தொடர்ச்சியும் ஒழிதலானும்; உடம்பிலுலே தொடர்ச்சி உள்ளபோதும், நாம் நீவினேப்பயனே அனுபவிக்கும்வழி இவ்வுறவினரே பகைவராகவும், நல்வினேப்ப யனே அனுபவிக்கும்வழி இவ்வினேலாத பகைவரும் உறவராகவும், காண்டலானும்; இவர் உறவராய் நின்றவழியும், எமக்கு இதம் செய்தல் தம்பயன் கருதியன்றி எம்

பயன் கருதியன்மையானும்;இவர்எமக்கு இனியரென்று கொள்ளுதல் ஒருவாற்றானும் கூடாது. நாமோ நம்மை ஒருகாலும் பகைத்தலின்மையானும், எந்நாளும் துன்பத்தினின்றும் நீங்கி இன்பத்தை அனுபவித்தல் வேண்டுமென்னும் கருத்தே நமக்கு உண்மையானும், நமக்கு நாமே இனியமெனக் கொள்வமெனின்; கேவலாவத்தையிலே ஆணவமல மறைப்பினாலே அறிவும் தொழிலும் சிறிதும் விளங்காமையானும், சகலாவத்தையிலே அறிவும் தொழிலும் உள்வழியும், அவை சிற்றறிவும் சிறு தொழிலுமன்றி முற்றறிவும் முற்றுத்தொழிலும் அன்மையானும், அதனால் எமக்கு இன்பம் இது துன்பம் இது துன்பத்தினின்றும் நீங்கி இன்பம் பெறும் நெறி இது என உள்ளபடி அறிந்து துன்பத்தினின்றும் நீங்கி இன்பத்தைப் பெறுதல் கூடாமையானும், எமக்கு நாமே இனியமெனக் கொள்ளுதலும்கூடாது. முற்றறிவு முற்றுத் தொழில் உடையராகி, தம்பயன் குறியாது மலபெத்தராகிய ஆன்மாக்கள்மேல் வைத்த பெருங்கருணையினாலே, அவர்களுக்குத் தனுகரணங்களைக்கொடுத்து, ஆணவ மல சத்தியைச் சிறிது நீக்கி, அறிவை விளக்கிப் போகங்களைப் புசிப்பித்து, மலபரிபாகமும் இருவினையொப்பும் சத்திநிபாதமும் வருவித்து, பாசநீக்கமும் சிவத்துவவிளக்கமும் செய்யும் பரமபதி ஒருவர் உண்மையானும், அவர் சிவனே ஆதலானும், அவரே எமக்கு இனியரெனக் கொள்ளல்வேண்டும். இக்கருத்தினைத்தான் நோக்கி அன்றே, "என்னில் யாரு மெனக்கினி யாரிலை—யென்னி னும்மினி யாரெனை வன்னுள—னென்னுளே யுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்—கென்னு ளேநிற்கு மின்னம்ப ரீசனே." என்று திருவாய்மலர்ந்தருளினர் திருநாவுக்கரசுநாயனர் என்க. ஆதலால், அச்சிவனையே நாமெல்லாம் வீரும்பி, அவரிடத்து இடையறாத மெய்யன்பு செய்தல் வேண்டும். அன்பு பத்தி என்பன ஒருபொருட்சொற்கள்.

அன்பானது, குடத்துள் விளக்கும் உறையுள் வாளும் போல, ஒருவர் காட்டக் காணற்பாலதன்று; அவ்வன்புடைமையால் வெளிப்படும் செயல்களைக் கண்டவழி, இவை உண்மையால், இங்கே அன்பு உண்டென்று அநுமானித்துக்கொள்ளற்பாலதாம். அது "அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்—புன்கணீர் பூச லரும்." என்னும் திருக்குறளானும், "சுரந்த திருமூலர்க்கே தூயநிரு ஞானஞ்—சுரந்துண்டார் பின்னையெனச் சொல்லச் - சுரந்த—தனமுடையா டென்பாண்டி மாதேவி தாழ்ந்த—மனமுடையா ளன்பிருந்த வாறு." என்னும் திருக்களிற்றுப்படியாராலும், உணர்க. சிவனிடத்து அன்புடைமைக்கு அடையாளம் அச்சிவனுடைய உண்மையை நினைத்தல் கேட்டல் காண்டல் செய்தபொழுதே தன்வசம் அழிதலும், மயிர்க்கால்தோறும் நிலவல உண்டாகப் புளகம் கொள்ளலும், ஆனந்த அருவி பொழிதலும், விம்முலும், நாத்தழுதழுத்தலும், உரை தடுமாறலும், ஆடலும், பாடலும், அவர் உவப்பன செய்தலும், வெறுப்பன ஒழிதலும், பிறவுமாம்.

இவ்வன்பு இல்வழிச் சிவனை அடைதல் ஒருவாற்றானும் கூடாது. அது "உள்ள முள்கலந் தேத்தவல் லார்க்கலாற்—கள்ள முள்ளவ ருக்கருள் வானலன்—வெள்ள மும்மர வும்விர வுஞ்சடை—வள்ள லாகிய வான்மியூ ரீசனே." "நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே—புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்—பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு—நக்கு நிற்ப னவர்தம்மை நாணியே." எனவரும் திருநாவுக்கரசுநாயனர் தேவாரத்தானும், "தேவ தேவன்மெய்ச் சேவகன் றென்பெ ருந்துறை நாயகன்—மூவ ராலு மறியொ ணாமுத லாய வானந்த மூர்த்தியான்—யாவ ராயினு மன்ப ரன்றி யறியொ ணாமலர்ச் சோதியான்—றூய மாமலர்ச் சேவ டிக்கணஞ்

சென்னி மன்னிச் சுடருமே.'' என்னும் திருவாசகத்தானும், ''என்பே விறவு விறை ச்சி யறுத்திட்டுப்—பொன்போ லெரியிற் பொரிய வறப்பிளு—மன்போ ருகி யகங் குழைந் தார்க்கன்றி—யென்போன் மணியினை யெய்தவொண் ணுதே.'' என்னும் திரு மந்திரத்தானும், ''அன்பேயென் னன்பேயென் றன்பாலழைத் தழைத்திட்—டன்பே யன் பாக வறிவழியு - மன்பன்றித்—தீர்த்தந் தியானஞ் வொர்ச்சனைகள் செய்யுமது—சாத்தும் பிழமன்றே தான்.'' என்னும் திருக்களிற்றுப்படியாரானும், ''கருமமா தவ ஞ்செ பஞ்சொல் காசறு சமாதி ஞானம்—புரிபவர் வசம தாகிப் பொருந்திடேம் புரையொன் றின்றித்—திரிவறு மன்பு செய்வோர் வசமதாய்ச் சேர்ந்து நிற்போ—முரைசெய்வோ மவர்மு னெய்தி யவருளத் துறைவோ மென்றும்.'' என்னும் வாயுசங் கிதையானும், அறிக. இவ்வன்பு பல பிறப்புக்களிலே பயன் குறியாது செய்த புண் ணிய மிருதியிலுலே சிவன் அருளிச்செய்ய, வரும். சிவன் அருளின்றி இவ்வன்பு ஒரு வாற்றானும் நிகழாது. அது ''ஆங்கவ னருளாற் பத்திரன் குண்டாம் பத்தியா லவ னரு ளுண்டாம்—வீங்கிய பத்தி பற்பல பிறப்பில் வேதங்க ளுரைத்திடும் படியே—தீங்கறு கரும மியற்றிய பலத்தாற் சிவனருள் செய்திட வருமா—லோங்கிய பத்தி யாற்சிவ தரும மொழிவறப் புரிந்திடப் படுமால்.'' எ-ம். ''அற்றமன் றறியச் சுரு ங்கயா னுரைப்ப ளுயிழை பாகன்வார் கழலிற்—றெற்றன வறிவாற் பத்திமை யெய் தல் வேண்டுமாற் சிறந்தபத் திமையான்—மற்றிணை யில்லா முத்தியெய் திடுமோன் மாசிலா தாயபத் திமைபு—முற்றிழை பாக னருளினு லெய்தல் வேண்டுமோன் மொழி ந்திடுங் காலே.'' எ-ம். வாயுசங்கிதையிற் கூறுமாற்றுல் உணர்க.

இடையறாது முறுகி வளரும் அன்பின் முதிர்ச்சியிலே சிவம் விளங்கும்: ஆத லால் அன்பும் சிவமும் இரண்டற அபேதமாய் நிற்கும். அன்பு முதிர்ச்சியிலே சிவம் விளங்கும் என்பதற்குப் பிரமாணம். திருவாசகம். ''பத்தி வலையிற் படுவோன் காண்க.'' எ-ம். ''அம்மையே யப்பா வொப்பிலா மணியே யன்பினில் வினேந்தவா ரமுதே—பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புழுத்தலைப் புலைய னேன் றனக்குச்—செம்மையே யாய சிவபத மளித்த செல்வமே சிவபெரு மானே—யிம்மையே புன்னைச் சிக்கெனப் பிடித்தே னெங்கெழுந் தருளுவ தினியே.'' எ-ம். திருக்களிற்றுப்படியார். ''ஆரேனு மன்புசெயி னங்கே தலைப்படுங்கா—ணூரேனும் காணு வரன்.'' எ-ம். வரும். அன்பும் சிவமும் அபேதமாம் என்பதற்குப் பிரமாணம். திருமந்திரம். ''அன்பு சிவமிரண் டென்ப ரறிவிலா—ரன்பே சிவமாவ தாரு மறி கில—ரன்பே சிவமாவ தாரு மறிந்தபி—னன்பே சிவமா யமர்ந்திருப் பாரே.'' எ-ம். திருவாசகம். ''மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின் வழியடைத் தமு தே—யூறினின் றென்னு ளெழுபரஞ் சோதி யுள்ளவா காணவந் தருளாய்—தேறலின் றெளிவே சிவபெரு மானே திருப்பெருந் துறையுறை சிவனே—யீறிலாப் பதங்க ளியாவையுங் கடந்த வின்பமே யென்னுடை யன்பே.'' எ-ம். வரும்.

இத்துணைப் பெருஞ்சிறப்பினதாகிய இவ்வன்புடைமையிலே தமக்கு உயர்வொப் பின்றி விளங்கிய பெருந்தகைமையினர் இக்கண்ணப்பநாயனுர். இவர் வேதாகமங்க ளைக் கற்றல் கேட்டல் சிறிதும் இல்லர். வேட்டுவக்சாதியிற் பிறந்தும், வெளிடத்து மெய்யன்புடையராயினதற்குக் காரணம் என்னை எனின், முற்பிறப்பிலே வேதாகமங் களே ஓதி உணர்ந்து, சிவனைத் தமது மனம் வாக்குக் காயங்களினுலே சிரத்தையுடன் உபாசித்தமையேயாம். இவர் முற்பிறப்பிற் செய்த தவமே இப்பிறப்பில் ஏஸ்லியின்றி

முறுகி வளர்ந்த இவ்வன்புக்குக் காரணமாயிற்றென்பது இங்கே "முன்புசெய் தவத்தி னீட்ட முடிவிலா வின்ப மான—வன்பினை யெடுத்துக்காட்ட" என்பதனால் உணர்த் தப்பட்டது. இவர் மூற்பிறப்பிலே பஞ்சபாண்டவருள் ஒருவராகிய அருச்சுனர் என் றுணர்க. பாசுபதாஸ்திரம் பெறவேண்டிப் பெருந்தவஞ்செய்த அருச்சுனரோடு கரு ணாநிதியாகிய பரமசிவன் வேட்டுவ வடிவங்கொண்டுவந்து, விற்போர்செய்து, அவரது வில்லினால் அடிபட்டு, பின்பு அவரைத் தீண்டி மற்போர் செய்து, பின்னர்த் தமது வடிவத்தைக்காட்ட; அதுகண்ட அருச்சுனர் சிவனை வணங்கி, தமக்கு முத்தி தந்தரு ளும்பொருட்டு விண்ணப்பம் பண்ணினர். அதுகேட்ட பரமசிவன், நீ பகைவரைக் கொல்லுதற்பொருட்டுப் பாசுபதாஸ்திரம் பெற நினைந்து, தவம் செய்தாய்; ஆதலால், இப்பொழுது பாசுபதாஸ்திரமே தருவோம் என்று கொடுத்தருளி, நீ என்னை வேடன் என்று இகழ்ந்தமையால் வேட்டுவராசனுப்ப் பிறந்து, தக்ஷிணகைலாசமாகிய காளத் திமலையை அடைந்து, அன்புருக்கொண்டு, நம்மைப் பூசித்து, பன்றி முதலிய விலங்கு களைக் கொன்று, அவற்றின்மாமிசத்தை எமக்கு நிவேதிப்பாய்; அந்நாளிலே உனக்கு மோக்ஷம் தந்தருளுவோம் என்று திருவாய்மலர்ந்தருளினர். இச்சரித்திரம் திருக்கா ளத்திப் புராணத்திற் கூறப்பட்டது.

நாயகி நாயகனது பெயர்கேட்டவுடன் வசமழிதல் தலையன்பும், அவனைக் கண் டவுடன் வசமழிதல் இடையன்பும், அவனைக் கூடினவுடன் வசமழிதல் கடையன்பு மாம். அவ்வாறே பக்குவான்மா சிவனது பெயர் கேட்டவுடன் வசமழிதல் தலையன் பும், அவரைக் கண்டவுடன் வசமழிதல் இடையன்பும், அவரைக் கூடினவுடன் வசம ழிதல் கடையன்புமாம். நாயகனது பெயர் கேட்டவுடன் வசமழியும் தலையன்பையு டைய நாயகிக்கு, அக்கேட்டலோடு காண்டல் கூடல்களும் நிகழ்ந்தவழி, முறுகி வள ரும் அன்பின் பெருக்கம் இத்தனைத்தென்று கூறுதல் கூடாதன்றே! அதுபோலவே, "இந்தச்—சேணுயர் திருக்காளத்தி மலைதனை யெழுந்து செவ்வே—கோணமில் குடு மித் தேவ ரிருப்பர்கும் பிடலாம்." என்று ஞானன் கூறினமை கேட்டவுடன் வசமழி ந்த தலையன்பையுடைய இந்நாயனருக்கு, அக்கேட்டலோடு சிவலிங்கப்பெருமானைக் காண்டல் கூடல்களும் நிகழ்ந்தவழி, முறுகிவளர்ந்த அதிதீவிரமாகிய அன்பின் பெருக் கத்தை இத்தனைத்தென்று கூறுதல் கூடாது.

இவர் சிவனது சட்சுதீக்ஷையினாலே பசுத்துவம் நீங்கி, சிவத்துவம் பெற்றார். அது இங்கே "திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காண முன்னே—யங்க ணர் கருணை கூர்ந்த வருட்டிரு நோக்க மெய்தித்—தங்கிய பவத்தின் முன்னைச் சார்பு விட் டகல நீங்கிப்—பொங்கிய வொளியி னீழற் பொருவிலன் புருவமானார்." என்ப தனாலும் "முன்புதிருக் காளத்தி முதல்வனை ருணேக்கி—னின்புறுவே தகத்திரு ம்பு பொன்னனைப் போல் யாக்கைத்—தன்பரிசும் வினையிரண்டுஞ் சாருமல மூன் றுமற—வன்புபிழம் பாய்த்திரிவா ரவர்களுத்தி னளவினரோ." என்பதனாலும், உணர்த்தப்பட்டது.

பத்தியானது மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என நால்வகைப்படும். அரக்கானது வெய்யிலின்முன் இருந்து வெதும்புதல்போல்வது மந்ததரபத்தி. மெழு காணது வெய்யிலுக்கு எதிர்ப்படின் உருகுதல் போல்வது மந்தபத்தி. நெய்யானது சூட்டுக்கு இளகுதல்போல்வது தீவிரபத்தி. தைலதாரையானது சிறிதும் இடைய றாது ஒழுகுதல் போல்வது தீவிரதரபத்தி. இந்நாயனாரது பத்தி தீவிரதரமேயாம் என்

பது சிவலிங்கப்பெருமானைக் கண்டவுடனே நிகழ்ந்த இவர் செயல்களாலேதெளியப் படும். அச்செயல்கள் "மாகமார் திருக்கா ளத்தி மலையெழு கொழுந்தா யுள்ள—வே கநா யகரைக் கண்டா ரெழுந்தபே ருவகை யன்பின்—வேகமா னதுமேற் செல்ல மிக் கதோர் விரைவி னோடு—மோகமா யோடிச் சென்றார் தழுவினர் மோந்து நின்றார்." "நெடிதுபோ துயிர்த்து நின்று நிறைந்தெழு மயிர்க்கா ரூறும்—வடிவெலாம் புள கம் பொங்க மலர்க்கணீ ரருவி பாய—வடியனேற் கிவர்தா மிங்கே யகப்பட்டா ரச்சோ வென்று—படியிலாப் பரிவு தானோர் படிவமாம் பரிசு தோன்ற." என்னும் திருவிருத்தங்களால் உணர்க.

இந்நாயனார் சுவாமியைக் கண்டவழி வணங்குதல் பயின்றறியாதவராதலானும், தாய் தந்தையர் தங்களுக்கு இனிய பிள்ளையைக் கண்டவுடன் பேராசையினால் மிக விரைந்து ஓடிப் போய், தழுவி மோத்தல் உலகியற்கை ஆதலானும், தமக்கு இனிய ராகிய சுவாமியைக் கண்டவுடனே அதிமோகமாய் விரைந்து ஓடிச் சென்று தழுவி மோந்தார் என்க. இவர் தம்மினும் சிவனே தமக்கு இனியராக அது பற்றியெழுந்து முறுகி வளர்ந்த அன்பே வடிவமாயினர். அது, இவர் திருக்காளத்திமலையை அணுகு முன் பெரும்பசியால் வருத்தமுற்றும், சிவலிங்கப்பெருமானைக் கண்டபின் இவரு க்கு அவ்வருத்தமென்பது சிறிதாயினும் தோன்றுமையானும், சிவபெருமான் துட்ட மிருகங்கள் திரியும் காட்டிலே தனித்திருத்தலால் அவரைத் தாம் பிரியமாட்டாமை யையும், அவருக்கு அமுது செய்ய இறைச்சி இன்மையால் அதன்பொருட்டுத் தாம் பிரிதல்வேண்டினமையையும், குறித்து இவருக்கு எழுந்த பதைப்புமிகுதியினாலும், தெளிக. அப்பதைப்பும் அதனால் நிகழ்ந்த செயல்களும் இங்கே "வெம்மறக் குலத்து வந்த" என்பதுமுதல் "முன்புநின் றரிதினீங்கி" என்பது இறுதியாய் உள்ள எட்டுத் திருவிருத்தங்களாலும் உணர்த்தப்பட்டன. இன்னும், இவர் சிவபெருமானைக் கண்ட நாள் முதல் ஆறுநாளும் பசி நித்திரையென்பன இவருக்குச் சிறிதும் தோன்றுமை யானும், காடன் தம்மோடு பேசினமையும், அவனும் நாணனும் தம்மை விட்டுப் போயினமையும், தந்தையாகிய நாகன் முதலியோர் வந்து தம்மோடு பேசினமை யும், தம்மைப் பிரிந்தமையும் பிறவும் இவருக்குச் சிறிதும் விளங்காமையானும், இவர் இடையறாது ஒழுகும் தைலதாரைபோல ஆவியோடாக்கை ஆனந்தமாய்க் கசிந் துருகும் அன்புருவமே ஆயினர் என்பது ஐயம் திரிபு அற உணரப்படும்.

சிவன் உவப்பன செய்தலும் வெறுப்பன ஒழிதலும் அவரிடத்து அன்புடை மைக்கு அடையாளம் என்றீர். சுவாமிக்கு யாகத்திலன்றிப் பிறவழியில் மாமிசம் நிவேதித்தலும், வாயிற்கொண்டுவரும் நீரால் அபிஷேகம் செய்தலும், காற்செருப்பி னாலே திருமுடியில் நிருமாலியம் கழித்தலும், தலைபிற்சூட்டிய பூக்களைச் சாத்தலும், ஆகிய இவைகள் நினைப்பினும் எண்ணிறந்தகாலம் மிகக்கொடிய நரகத்துன்பம் பயக் குமன்றே: அங்ஙனமாக, இவர் இவற்றைச் செய்தமை என்னெனின்; இவர் இப் பிறப்பில் ஓர் ஆசாரியரை அடைந்து, இது புண்ணியம் இது பாவம் இது செயற்பா லது இது ஒழிதற்பாலது என்று ஒருகாலும் கேட்டும் அறிந்தவர் அல்லர். மூற்பிறப் பிற் செய்த சிவபுண்ணிய மிகுதியினாலே தாம் சிவலிங்கப்பெருமானைத் தரிசித்த பொழுது திருமுடியிலே நீர் வார்த்து மலர் இட்டு இருத்தல் கண்டமையானும், ஒரு பார்ப்பான் யாதையோ கொண்டுவந்து ஊட்டினான் என்று கேட்டமையானும், அவர் மாட்டு முறுகி வளர்ந்த அன்பினாலே இவையே சுவாமிக்கு உவப்பாவன என்று துணிந்து, அவ்வாறு செய்ய நினைந்து, தமக்கு முன் இனியதாய் உள்ளது மாமிசமே

ஆதலால் அதுவே சுவாமிக்கும் இனியதாம் என்று மாமிசத்தை வாயில் அதுக்கிச் சுவை பார்த்து இனியனவற்றைப் படைத்தலும், பாத்திரம் இன்மையால் அபிஷேகத்திற்கு ஜலம் வாயில் எடுத்துக்கொள்ளுதலும், ஒருகையில் தேனெடுகலர்த்த மாமிசம் பொருந்திய கல்லேயும் மற்றக்கையில் அம்புவில்லும் இருத்தலால் புஷ்பங்களேத் தலேயில் வைத்தலும், திருமுடியில் நிருமாலியத்தைக் காற்செருப்பினுல் கழித்தலும் செய்தனர். இன்னும், தாம் மாமிசம் உண்டல்போலச் சுவாமியும் உண்பரென்று நினேந்து "கொழுவிய தசைகளெல்லாங் கோலினிற் றெரிந்து கோத்தங்—கழலுறு பதத்திற் காய்ச்சிப பல்லினு லதுக்கி ஈவிற்—பழகிய வினேமை பார்த்துப் படைத்தவிவ் விறைச்சி சால—வழகிது நாய னீரே யமுதுசெய் தருளும்" என்று வேண்டிக்கோடலும், சிவன் முடிவில்லாத ஆற்றலுடையவரென்பது நோக்காமல், நீர் தினேயின்றித் தனித்து இருக்கின்றீரே என்று நித்திரை இன்றி இராமுழுதும் எதிர்நின்று காத்தலும் செய்தனர். இவையெல்லாம் முற்பிறபபிற் செய்த சிவபுண்ணியமிருதியால் சிவன் மாட்டு எழுந்து இடையருது மேன்மேலும் முறுகி வளர்ந்த அன்பின்பெருக்கத்தினுலே செய்யப்பட்டமையால், அவருக்கு மிக வப்பாயின. இது சிவகோசரியாருக்குச் சிவன் திருவாய்மலர்ந்தருளிய பொருளேயுடைய "அவனுடைய வடிவெல்லாம்" என்பதுமுதல் "உனக்கவன்றன் செயல்காட்ட" என்பது இறுதியாய் உள்ள எழு திருவிருத்தங்களாலும் உணர்க. "பொருட்பற்றிச செய்கின்ற பூசனேகள் போல்வி ளங்கச—செருப்புற்ற சீரடி வாய்க்கலச மூனமுதம்—விருபபுற்று வேடனுர் சேடனிய மெய்குளிர்ந்தங்—கருட்பெற்று நின்றவா தோணேக்க மாடாமோ." என்னும் திருவாசகத்தானும் காண்க. பேய்பிடியுண்டாரது செயலெல்லாம் பேயின்செயலாதல் போல, பசுபோதம் அற்றுச் சிவபோதம் உற்ற இந்நாயனரது செயலெல்லாம் சிவன் செயலேயாம் என்பது தெளிக.

சிவலிங்கபபெருமானது திருக்கண்ணில் உதிரநீர் பாயக் கண்டபொழுது இந்நாயனருக்கு உண்டாகிய பதைபபு மிகுதியும், தமது கண்ணேத் தாமே இடக்கும்போதும் இவருக்குச் சிறிதாயினும் வருத்தம் தோன்றுமையும், அக்கண்ணேச சிவனுடைய கண்ணில் அபபினவுடனே உதிரநீர் நிற்கக் கண்டமையால் எழுந்த ஆனந்த மிகுதியும், சிவனது மற்றக் கண்ணிலும் உதிரநீர் பாயக் கண்டு தமது மறறக் கண்ணே இடக்கும் போதும் சுவாமி கண்ணில் உதிரநீர் நிற்கும் என்னும் துணிவினும் பிறந்த விருப்பமும், இவருக்குச் சிவன்மாட்டுள்ள அன்பே இன்பமாம் என்பதைத் தெளிவுற விளக்குகின்றன. அன்பே இன்பம் என்பது "அன்பினு லடியே னுவியோ டாக்கை யானந்த மாய்க்கசிந் தருக" என்று திருவாசகத்தினும், "முடிவிலா வின்பமான வன்பினே யெடுத்துக் காட்ட" என்று இப்புராணத்தினும், "இறவாத வின்ப வன்பு வேண்டி" என்று காரைக்காலம்மையார் புராணத்தினும், கூறுமாற்றுனும், அனுபவத்தானும் உணர்க.

இந்நாயனரது உயர்வொப்பில்லாத பேரன்பை, எம்போலிகளும் உணர்ந்து தம் மாட்டன்பு செய்து உய்தற் பொருட்டு, சிவகோசரியாருக்கு வெளிப்படுத்தப்புகுந்த பரம கருணுநிதியாகிய சிவன், இவர் தமது மற்றக் கண்ணேயும் இடக்கும் பொருட்டு அம்பை ஊன்றும்போது, தரிக்கலாற்றுதவராகிய, தமது வியத்திஸ்தானமாகிய இலிங்கத்திற்றேன்றிய திருக்கையினுலே இவர்கையை அம்போடும் பிடித்துக்கொண்டு, "நில்லு கண்ணப்ப நில்லு கண்ணப்பவென் னன்புடைத்தோன்ற னில்லு கண்ணப்ப" என்று திருவாய்மலர்ந்தருளினர். இதனுல் இந்நாயனரது அன்பிற்கும், சிவனது திருவருட்கும் உயர்வொப்பின்மை தெளிக. இவ்வாறு மும்முறை அருளிச்செய்தார் என்பது நக்கீரதேவர் அருளிச்செய்த கண்ணப்பதேவர் திருமறத்தில் "மற்றைக் கண்ணிலும் வடிக்கணே மடித்தனன் மடித்தலு—நில்லுகண்ணப்ப நில்லுகண் ணப்ப வென்—னன்புடைத்தோன்ற னில்லுகண் ணப்பவென்—றின்னுரையதனெடு மெழிற்

சிவலிங்கந் தன்னிடைப் பிறந்த தடமலர்க் கையா—லன்னவன் றன்கை யும்பொடு மகப்படப் பிடித்—தருளினன்." என்பதனாலும், இங்கே "மூன்றடுக்கு - நாக கங்கண ரமுதவாக்குக் கண்ணப்ப நிற்க வென்ற." எனக் கூறியவாற்றாலும், உணர்க.

இதுகாறுங் கூறியவாற்றால், சிவன்மாட்டுள்ள அன்பே பேரின்பம் என்பதும், அவ்வன்புடைமையிலே தமக்கு உயர்வொப்பில்லாதவர் இக்கண்ணப்பநாயனாரேயென்பதும், செவ்விதிற்றுணியப்படும். அது "கண்ணப்ப னெப்பதோ ரன்பின்மை கண்டபி—னென்னப்ப னென்னெப்பி லென்னையுமாட் கொண்டருளி—வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்—சுண்ணப்பொன் னீற்றற்கே சென்றாதாய் கோத்தும்பீ." என்று திருவாசகத்தும், "கண்ணப்ப னெப்பதோ ரன்பின்மை யென்றமையாற்—கண்ணப்ப னெப்பதோ ரன்பதனைக் - கண்ணப்பர்—தாமறிதல் காளத்தியாதரித லல்லதுமற்—றாரறியு மன்பன் றது." என்று திருக்களிற்றுப்படியாரினும், கூறுமாற்றாலும், தெளிக.

குங்குலியக்கலய நாயனார்புராணம்.

வாய்ந்தநீர் வளத்தா லோங்கி மன்னிய பொன்னி நாட்டி
னேய்ந்தசீர் மறையோர் வாழு மெயிற்பதி யெறிநீர்க் கங்கை
தோய்ந்தநீள் சடையார் பண்டு தொண்டர்மேல் வந்த கூற்றைக்
காய்ந்தசே வடியார் நீடி யிருப்பது கடவூ ராகும். (க)

வயலெலாம் வீளைசெஞ் சாலி வரம்பெலாம் வளையின் முத்த
மயலெலாம் வேள்விச் சாலை யணையெலாங் கழுநீர்க் கற்றை
புயலெலாங் கழுகின் காடப் புறமெலா மதன்சீர் போற்றல்
செயலெலாந் தொழில்க ளாறே செழுந்திருக் கடவூ ரென்றும். (உ)

குடங்கையி னகன்ற வுண்கட் கடைசியர் குழுமி யாடு
மிடம்படு பண்ணை தோறு மெழுவன மருதம் பாடல்
வடம்புரி மூன்றான் மார்பின் வைதிக மறையோர் செய்கைச்
சடங்குடை யிடங்க டோறு மெழுவன சாமம் பாடல். (கூ)

தூங்கநீண் மருப்பின் மேதி படிந்துபால் சொரிந்த வாவிச்
செங்கயல் பாய்ந்து வாசக் கமலமுஞ் சீம்பா லுறை
மங்குறூய் மாடச் சாலை மருங்கிறை யொதுங்கு மஞ்சு
மங்கவை பொழிந்த நீரு மாகுதிப் புகைப்பா லுறும். (ச)

மருவிய திருவின் மிக்க வளம்பதி யதனில் வாழ்வா
ரருமறை முன்றான் மார்பி னந்தணர் கலய ரென்பார்
பெருநதி யணியும் வேணிப் பிரான்கழல் பேணி காஞ
முருகிய வன்பு கூர்ந்த சிந்தையா ரொழுக்க மிக்கார். (ஙி)

பாலனு மறையோன் பற்றப் பயங்கெடுத் தருளு மாற்றான்
மாலுநான் முகனுங் காணு வடிவுகொண் டெதிரே வந்து
காலனு ருயிர்செற் றார்க்குக் கமழ்ந்தருங் குலியத் தானஞ்
சாலவே நிறைந்து விம்ம லிடும்பணி தலைநின் றுள்ளார். (ச)

தூங்கைநீர் கலிக்குஞ் சென்னிக் கண்ணுத லெம்பி ராற்குப்
பொங்குகுங் குலியத் தூபம் பொலிவுறப் போற்றிச் செல்ல
வங்கவ ரருளி னாலே வறுமைவந் தடைந்த பின்னுந்
தங்கணு யகர்க்குத் தாமுன் செய்பணி தவாமை யுய்த்தார். (எ)

இங்கெறி யொழுகு காளி லிலம்பாடு நீடு செல்ல
நன்னில முற்றும் விற்று நாடிய வடிமை விற்றும்
பன்னெடுந் தனங்கண் மாளப் பயின்மனை வாழ்க்கை தன்னின்
மன்னிய சுற்றத் தோடு மக்களும் வருந்தி னார்கள். (அ)

யாதொன்று மில்லை யாகி யிருபக லுணவு மாறிப்
பேதுறு மைந்த ரோடும் பெருகுசுற் றத்தை நோக்கிக்
காதல்செய் மனைவி யார்தங் கணவனார் கலய னார்கைக்
கோதின்மங் கலநூற் றாலி கொடுத்துநெற் கொள்ளு மென்றார். (கூ)

அப்பொழு ததனைக் கொண்டு நெற்கொள்வா னவரும் போக
வொப்பில்குங் குலியங் கொண்டோர் வணிகனு மெதிர்வந் தும்மு
னிப்பொதி யென்கொ லென்று ருள்ளவா றியம்பக் கேட்டு
மூப்புரி மூன்றான் மார்பர் முகமலர்ந் திதனைச் சொன்னார். (கூ)

ஆறுசெஞ் சடைமேல் வைத்த வங்கணர் பூசைக் கான
நாறுகுங் குலிய மீதே னினின்று பெற்றே னல்ல
பேறுமற் றிதன்மே லுண்டோ பெரும்பேறு பெற்று வைத்து
வேறினிக் கொள்வ தென்னென் றுரைத்தெழும் விருப்பின் மிக்கார். (கூ)

பொன்றரத் தாரு மென்று புகன்றிட வணிகன் ரூனு
மென்ற விசைந்த தென்னத் தாலியைக் கலய ரீந்தா
னன்றவ னதனை வாங்கி யப்பொதி கொடுப்பக் கொண்டு
நின்றிலர் விரைந்து சென்றூர் நிறைந்தெழு களிப்பி னோடும். (கூ)

விடையவர் வீரட் டானம் விரைந்துசென் றெய்தி யன்னை
யுடையவ ரெம்மை யாளு மொருவர்தம் பண்டா ரத்தி
லடையுற வொடுக்கி யெல்லா மயர்த்தெழு மன்பு பொங்கச்
சடையவர் மலர்த்தாள் போற்றி யிருந்தனர் தமக்கொப் பில்லார். (கூ)

அன்பரங் கிருப்ப நம்ப ரருளினா லளகை வேந்தன்
றன்பெரு நிதியந் தூர்த்துத் தாணிமே னெருங்க வெங்கும்
பொன்பயில் குவையு நெல்லும் பொருவில்பல் வளனும் பொங்க
மன்பெருஞ் செல்வ மாக்கி வைத்தனன் மனையி னீட. (கூ)

மற்றவர் மனைவி யாரு மக்களும் பசியால் வாடி
யற்றைநா ளிரவு தன்னி லயர்வுறத் துயிலும் போதி
னற்றவக் கொடிய னூர்க்குக் கனவிடை நாத னல்கத்
தெற்றென வுணர்ந்து செல்வங் கண்டபின் சிந்தை செய்வார். (கூ)

கொம்பனை நில்ல மெங்குங் குறைவிலா நிறைவிற் காணு
மம்பொனின் குவையு நெல்லு மரிசியு முதலா யுள்ள
வெம்பிரா னருளா மென்றே யிருகரங் குவித்துப் போற்றித்
தம்பெரும் கணவ னூர்க்குத் திருவமு தமைக்கச் சார்ந்தார். (கூ)

காலனைக் காய்ந்த செய்ய காலனார் கலய னாரா
மாலுமன் புடைய சிந்தை யடியவ ரறியு மாற்றாற்
சாலநீ பசித்தா யுன்றன் படகெடு மனையி னண்ணிப்
பாலினின் னடிசி லுண்டு பருவர லொழிக வென்றார். (கஎ)

கலையனா ரதனைக் கேளாக் கைதொழு திறைஞ்சிக் கங்கை
யலைபுனற் சென்னி யார்த மருண்மறுத் திருக்க வஞ்சித்
தலைமிசைப் பணிமேற் கொண்டு சங்கரன் கோயி னின்று
மலைமகர் மாட வீதி மருங்குதம் மனையைச் சார்ந்தார். (கஅ)

இல்லத்திற் சென்று புக்கா ரிருநிதிக் குவைக ளார்ந்த
செல்வத்தைக் கண்டு நின்று திருமனை யாரை நோக்கி
வில்லொத்த நுதலா யிந்த வினைவெலா மென்கொ லென்ன
வல்லொத்த கண்ட னெம்மா னருடர வந்த தென்றார். (கக)

மின்னிடை மடவார் கூற மிக்கசீர்க் கலய னார்தா
மன்னிய பெருஞ்செல் வத்து வளமலி சிறப்பை நோக்கி
யென்னையு மாளுந் தன்மைத் தெந்தையெம் பெருமா னீசன்
றன்னரு ளிருந்த வண்ண மென்றுகை தலைமேற் கொண்டார். (உ0)

பதுமநற் றிருவின் மிக்கார் பரிகலந் திருத்திக் கொண்டு
கதுமெனக் கணவ னுரைக் கண்ணுதற் கன்ப ரோடும்
விதிமுறை தீப மேந்தி மேவுமின் னடிசி லூட்ட
வதுங்கர்ந் தின்ப மார்ந்தா ரருமறைக் கலய னார்தாம். (உக)

ஊர்தொறும் பலிகொண் டுய்க்கு மொருவன தருளி னூலே
பாரினி லார்ந்த செல்வ மூடையராம் பண்பி னீடிச்
சீருடை யடிசி னல்ல செழுங்கறி தயிர்நெய் பாலா
லார்தரு காதல் கூர வடியவர்க் குதவு நாளில். (உஉ)

செங்கண்வெள் ளேற்றின் பாகன் றிருப்பனந் தாளின் மேவு
மங்கணன் செம்மை கண்டு கும்பிட வரச னர்வம்
பொங்கித்தன் வேழ மெல்லாம் பூட்டவு நேர்நில் லாமைக்
கங்குலும் பகலுந் தீராக் கவலையுற் றழுங்கிச் செல்ல. (உங)

மன்னவன் வருத்தங் கேட்டு மாசறு புகழின் மிக்க
நன்னெறிக் கலய னார்தா நாதனே நேரே காணு
மந்நெறி தலைநின் றுனென் றரசனே விரும்பித் தாமு
மின்னெறித் தனைய வேணி விகிர்தனே வணங்க வந்தார். (உச)

மழுவுடைச் செய்ய கையர் கோயில்கண் மருங்கு சென்று
தொழுதுபோந் தன்பி னேடுந் தொன்மறை நெறிவ ழாமை
முழுதுல கினையும் போற்ற மூன்றெரி புரப்போர் வாழுஞ்
செழுமலர்ச் சோலை வேலித் திருப்பனந் தாளிற் சேர்ந்தார். (உஙி)

காதலா லரச னுற்ற வருத்தமுங் களிற்றி னேடு
தீதில்வன் சேனை செய்யுந் திருப்பணி நேர்ப டாமை
மேதினி மிசையே யெய்த்து வீழ்ந்திளைப் பதுவு நோக்கி
மாதவக் கலயர் தாமு மனத்தினில் வருத்த மெய்தி. (உஎ)

சேனையு மாயி னுண்ட நிரஞ்மெய்த் தெழாமை நோக்கி
யானுமில் லினிப்புற் றெய்க்கு மிதுபெற வேண்டு மென்று
தேனலர் கொன்றை யார்தந் திருமேனிப் பூங்கச் சேய்ந்த
மானவன் கயிறு பூண்டு கமுத்திஞல் வருந்த லுற்றார். (உஎ)

கண்ணிய வொருமை யன்பி னுருறு பாசத் தாலே
திண்ணிய தொண்டர் பூட்டி யிளைத்தபின் றிறம்பி நிற்க
வொண்ணுமோ கலய னுர்த மொருப்பாடு கண்ட போதே
யண்ணலார் நேரே நின்று ரமரரும் விசும்பி லார்த்தார். (உஅ)

பார்மிசை நெருங்க வெங்கும் பரப்பினர் பயில்பூ மாரி
தேர்மலி தானை மன்னன் சேனையுங் களிறு மெல்லாங்
கார்பெறு கானம் போலக் களித்தன கைகள் கூப்பி
வார்கழல் வேந்தன் முண்டர் மலரடி தலைமேல் வைத்து. (உக)

விண்பயில் புரங்கள் வேவ வைதிகத் தேரின் மேருத்
திண்சிலை குனிய நின்ரூர் செங்கிலை காணச் செய்தீர்
மண்பகிர்ந் தவனுங் காணு மலரடி யிரண்டும் யாரே
பண்புடை யடியா ரல்லாற் பரிந்துநேர் காண வல்லார். (கo)

என்றுமெய்த் தொண்டர் தம்மை யேத்தியங் கெம்பி ரானுக்
கொன்றிய பணிகண் மற்று முள்ளன பலவுஞ் செய்து
நின்றவெண் கவிகை மன்ன னீங்கவு நிகரி லன்பர்
மன்றிடை யாடல் செய்யு மலர்க்கழல் வாழ்த்தி வைகி. (கக)

சிலபகல் கழிந்த பின்பு திருக்கட ஞரி ணண்ணி
நிலவுதம் பணியிற் றங்கி நிகழுநா ணிகரில் காழித்
தலைவராம் பிள்ளை யாருந் தாண்டகச் சதுர ராகு
மலர்புக ழுரசங் கூட வங்கெழுந் தருளக் கண்டு. (கஉ)

மாறிலா மகிழ்ச்சி பொங்க வெதிர்கொண்டு மனையி லெய்தி
யீறிலா வன்பின் மிக்கார்க் கின்னமு தேற்கு மாற்ரு
லாறுநற் சுவைக ளோங்க வமைத்தவ ரருளே யன்றி
நாறுபூங் கொன்றை வேணி நம்பர்தம் மருளும் பெற்ரூர். (கக)

கருப்புவில் லோனைக் கூற்றைக் காய்ந்தவர் கடவூர் மன்னி
வீருப்புறு மன்பு மேன்மேன் மிக்கெழும் வேட்கை கூர
வொருப்படு முள்ளத் தன்மை யுண்மையாற் றமக்கு நேர்ந்த
திருப்பணி பலவுஞ் செய்து சிவபத நிழலிற் சேர்ந்தார். (கச)

தேனக்க கோதை மாதர் திருநெடுந் தாலி மாறிக்
கூனற்றண் பிறையி னூர்க்குக் குங்குலி யங்கொண் டெய்த்த
பான்மைத்திண் கலய னுரைப் பணிந்தவ ரருளி னுலே
மானக்கஞ் சாறர் மிக்க வண்புகழ் வழுத்த லுற்றேன். (கஎ)

குங்குலியக்கலயநாயனார்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - அஎo.

சூசனம்.

சிவசந்நிதானத்திலே தூபம் இடுதல்.

திருக்கோயில்களிலே சிவசந்நிதானத்தில் மெய்யன்போடு சுகந்ததூபம் இடுதல் சிவபுண்ணியமாம். அது "பெரும்புலர் காலே மூழ்கிப் பித்தர்க்குப் பத்த ராகி—யரும்பொடி மலர்கள் கொண்டாங் கார்வத்தை யுள்ளே வைத்து—வீரும்பிரல் விளக்குத் தூபம் விதியினு லிடவல் லார்க்குக்—கரும்பினிற் காட்டி போல்வார் கடவூர்வீ ரட்ட னரே." என்னும் திருநாவுக்கரசுநாயனர் தேவாரத்தான் அறிக. தூபம் ஐவகைப்படும்; அவற்றை "ஐவகைய தூபங்க ளாவனதாய் குந்துருகக்—துய்யபெருங் கருப்பூரந் துன்னியகா ரகிற்வெண்மை—யெய்தியசந் தன மினிய குக்குலுவு மெனவறிக—செய்யதனற் றிருவிளக்கைக் காபிலத்தா னிகழ்த்துகவே." என்னும் சிவதருமோத்தரச் செய்யுளிற் காண்க.

இச்சிவபுண்ணியத்திலுல் மிகச் சிறப்புற்றவர் இக்குங்குலியக்கலயநாயனர் என்பது இவர் தமக்குச் செல்வம் உள்ள பொழுதன்றி மிகுத்த வறுமை எய்தியபொழுதும் இத்திருத்தொண்டைத் தவறுது செய்தமையாலே தெளியப்படும். இவர் தமது மனைவியார் இரண்டுகாள் போசனம் இன்றி வருந்தும் புதல்வரையும் சுற்றத்தாரையும் பார்த்து இரங்கி, கெல்லுக்கொள்ளும் பொருட்டுத் தம்மிடத்திலே தந்த தாலியைக் கொண்டு போம்பொழுது; குங்குலியப் பொதியைக்கண்டி, தம்மையும் தமது மனைவி முதலியோரையும் வருத்தும் பெரும்பசியைச் சிறிதும் நோக்காமல், அத்தாலியைக் கொடுத்துக் குங்குலியப் பொதியை வாங்கி, பெருமகிழ்ச்சி உற்றமையே இவர் இப்புண்ணியத்தை இடையறுதமெய்யன்போடு செய்தனர் என்பதற்குச் சான்றும். அக்குங்குலியப் பொதி சிவபெருமானது பண்டாரத்திற் சேர்ந்தவுடன், அதனுல் இவருக்கு உளதாகிய ஆனந்தம் முன்னே நிகழ்ச்சிகளே மறப்பித்து மேன்மேலும் வளர்ந்த பெரும் வியப்பை "ஒருவர்தம் பண்டாரத்தி—லடையுற வொடுக்கி யெல்லா மயர்த்தெழு மன்பு பொங்கச்—சடையவர் மலர்த்தாள் போற்றி யிருந்தனர் தமக் கொப் பில்லார்." என்பதனுற் காண்க. இன்னும், இவரது மெய்யன்பின் முதிர்ச்சி, திருப்பனந்தாளிலே இராஜா யானைகள் எல்லாவற்றையும் பூட்டி இழுப்பித்தும் நிமிராத சிவலிங்கம் இவரால் நிமிர்த்தமையானும், தெளியப்படும். இத்தூணைச் சிறப்பினதாகிய மெய்யன்பினுலன்றே, சமயகுரவர்களாகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் திருநாவுக்கரசுநாயனர் என்பவர்கட்குத் திருவமுதுசெய்வித்த பெரும்பேறும் பெற்றனர்.

மானக்கஞ்சாறநாயனார்புராணம்.

மேலாறு செஞ்சடைமேல் வைத்தவர்தாம் விரும்பியது
நூலாறு நன்குணர்வார் தாம்பாடி நோன்மையது
கோலாறு தேன்பொழியக் கொழுங்கனியின் சாரெழுகுங்
காலாறு வயற்கரும்பின் கமழ்சாறூர் கஞ்சாறூர். (க)

கண்ணீலக் கடைசியர்கள் கடுங்களியிற் பிழைத்தொதுங்கி
புண்ணீர்மைப் புனர்ச்சிக்கண் ணுறைத்துமலர்க் கண்சிவக்குந்
தண்ணீர்மென் கழுநீர்க்குத் தடஞ்சாலி தலைவணங்கு
மண்ணீர்மை நலஞ்சிறந்த வளவயல்க ளுளவயல்கள். (உ)

புயல்காட்டுங் கூந்தல்சிறு புறங்காட்டப் புனமயிலி
னியல்காட்டி யிடையொதுங்க வினங்காட்டு முழத்தியர்கண்
முயல்காட்டு மதிதோற்கு முகங்காட்டக் கண்மூரிக்
கயல்காட்டுந் தடங்கள்பல கதிர்காட்டுந் தடம்பணைகள். (கூ)

சேறணிதண் பழனவயற் செழுநெல்லின் கொழுங்கதிர்போய்
வேறருகு மிடைவேலிப் பைங்கமுகின் மிடறுரிஞ்சி
மாறெழுதிண் குலவாளைப்ப வண்டலைதண் டலையுழவர்
தாறரியு நெடுங்கொடிவா ளனையவுள தனியிடங்கள். (சு)

பாங்குமணிப் பலவெயிலுஞ் சுலவெயிலு மூளமாட
ஞாங்கரணி துகிற்கொடியு நகிற்கொடியு மூளவரங்க
மோங்குநிலைத் தோரணமும் பூரணமும் பழமுளவாற்
பூங்கணிவீ தியிலணிவோர் புலமறுகுஞ் சிலமறுகு. (எ)

மனைசாலு நிலையறத்தின் வழிவந்த வளம்பெருகும்
வினைசாலு மூழவுதொழின் மிக்கபெருங் குடிதுவன்றிப்
புனைசாயன் மயிலனையார் நடம்புரியப் புனைமுழவங்
கனைசாறு மிடைவீதிக் கஞ்சாறு விளங்கியதால். (சு)

அப்பதியிற் குலப்பதியா யரசர்சே ஞபதியாஞ்
செப்பவருங் குடிவிளங்கத் திருவவதா ரஞ்செய்தார்
மெய்ப்பொருளே யறிந்துணர்ந்தார் வீழ்நியவே ளாண்குடிமை
வைப்பனைய மேன்மையினார் மானக்கஞ் சாறனார். (எ)

பணிவுடைய வடிவுடையார் பணியினெடும் பணிமதியி
னணிவுடைய சடைமுடியார்க் காளாரும் பதம்பெற்ற
தணிவில்பெரும் பேறுடையார் தம்பெருமான் கழல்சார்ந்த
துணிவுடைய தொண்டர்க்கே யேவல்செயுந் தொழில்பூண்டார். (அ)

மாறில்பெருஞ் செல்வத்தின் வளம்பெருக மற்றதெலா
மாறுலவுஞ் சடைக்கற்றை யங்கணர்தம் மடியாரா
மீறில்பெருந் திருவுடையா ருடையாரென் றியாவையுநேர்
கூறுவதன் முன்னவர்தங் குறிப்பறிந்து கொடுத்துள்ளார். (கூ)

வீரிகடல்சூழ் மண்ணுலகை விளக்கியவித் தன்மையராம்
பெரியவர்க்கு முன்னிலராட் பிள்ளைப்பே றின்மையினு
லரியறியா மலர்க்கழல்க ளறியாமை யறியாதார்
வருமகவு பெறற்பொருட்டு மனத்தருளால் வழுத்தினார். (கo)

குழைக்கலையும் வடிகாதிற் கூத்தனா ருளாலே
மழைக்குதவும் பெருங்கற்பின் மனைக்கிழத்தி யார்தம்பா
லிழைக்கும்வினைப் பயன்சூழ்ந்த வீப்பிறவிக் கொடுஞ்சூழற்
பிழைக்குநெறி தமக்குதவப் பெண்கொடியைப் பெற்றெடுத்தார். (கக)

பிறந்தபெரு மகிழ்ச்சியினற் பெருமூதூர் களிசிறப்பச்
சிறந்தநிறை மங்கலநா ரியமுழங்கத் தேவர்பிரா
னறந்தலைநின் றவர்க்கெல்லா மளவில்வளத் தருள்பெருக்கிப்
புறந்தருவார் போற்றிசைப்பப் பொற்கொடியை வளர்க்கின்றூர். (கஉ)

காப்பணியு மிளங்குழலிப் பதநீங்கிக் கமழ்சுரும்பின்
பூப்பயிலுஞ் சுருட்குழலும் பொலங்குழையு முடன்றூழ
யாப்புறுமென் சிறுமணிமே கலையணிசிற் றுடையுடன்
கோப்பமைகிங் கிணியசையக் குறுந்தளிர்மெல் லடியொதுங்கி. (கக)

பூமலர்மென் கரங்களினுற் போற்றியதா தியர்நடவெண்
மனையகத்து மணிமுன்றின் மனற்சிற்றி லிழைத்தமணிக்
கனைகுரலூ புரமலையக் கழன்முதலாப பயின்றுமூலை
நனைமுகஞ்செய் முதற்பருவ நண்ணினளப் பெண்ணமுதம். (கச)

உறுகவின்மெய்ப் புறம்பொலிய வொளிதிகழ்சுப்பை முலைவருத்த
முறுவல்புற மலராத முகிண்முத்த நகையென்னு
நறுமுகைமென் கொடிமருங்கு னளிர்ச்சுருளுந் தளிர்ச்செங்கை
மறுவில்குலக் கொழுந்தினுக்கு மணப்பருவம் வந்தணைய. (கடு)

திருமகட்கு மேல்விளங்குஞ் செம்மணியின் றீபமெனு
மொருமகளே மண்ணுலகி லோங்குகுல மாபினராய்க்
கருமிடற்று மறையவனூர் தமராய கழலேயர்
பெருமகற்கு மகட்பேசி வந்தணைந்தார் பெருமுதியோர். (கசு)

வந்தமூ தறிவோரை மானக்கஞ் சாறனூர்
முந்தைமுறை மையின்விரும்பி மொழிந்தமணத் திறங்கேட்டே
யெந்தமது மாபினுக்குத் தகும்பரிசா லேயுமெனச
சிந்தைமகிழ் வுறவுரைத்து மணநேர்ந்து செலவிட்டார். (கள)

சென்றவருங் கஞ்சாறர் மணமிசைந்த படிசெப்பக்
குன்றனைய புயத்தேயர் கோனுரு மிகவிரும்பி
நின்றநிலை மையினிரண்டு திறத்தார்க்கு நேர்வாய
மன்றல்வினை மங்கலநாண் மதிநூல்வல் லவர்வகுத்தார். (கஅ)

மங்கலமாஞ் செயல்விரும்பி மகட்பயந்த வள்ளலார்
தங்குலநீள் சுற்றமெலாந் தயங்குபெருங் களிசிறப்பப்
பொங்கியவெண் முளைப்பெய்து பொலங்கலங்க ளிடைதெருங்கக்
கொங்கலர்தண் பொழின்மூதூர் வதுவைமுகங் கோடித்தார். (கக)

கஞ்சாறர் மகட்கொடுப்பக் கைப்பிடிக்க வருகின்ற
வெஞ்சாத புகழ்ப்பெருமை யேயர்குலப் பெருமானுக்
தஞ்சால்பு நிறைசுற்றந் தலைநிறைய முரசியம்ப
மஞ்சாலு மலர்ச்சோலைக் கஞ்சாற்றின் மருங்கணைய. (உ0)

வள்ளலார் மணமவ்வூர் மருங்கணையா முன்மலர்க்க
ணெள்ளிழையைய பயந்தார்தந் திருமனையி லொருவழியே
தெள்ளுதிரை நீருலக முய்வதற்கு மற்றவர்த
முள்ளநிலைப் பொருளாய வும்பர்பிரான் றனணைவான். (உக)

முண்டநிறை நெற்றியின்மேன் முண்டித்த திருமுடியிற்
கொண்டசிகை முச்சியின்கட் கோத்தணிந்த வெற்பூமணி
பண்டொருவ னுடலங்கம் பரித்தநா ளதுகடைந்த
வெண்டரள மெனக்காதின் மிசையசையுங் குண்டலமும். (உஉ)

அவ்வென்பி ஞெளிமணிகோத் தணிந்தகிருத் தாழ்வடமும்
பைவன்பே ராவொழியத் தோளிலிடும் பட்டிகையு
மைவந்த நிறக்கேச வடப்பூணு நூலுமனச
செவ்வன்பர் பலமாற்றுந் திருநீற்றுப் பொக்கணமும். (உக)

ஒருமுன்கைத் தனிமணிகோத் தணிந்தவொளிர் சூத்திரமு
மருமறைநூற் கோவணத்தின் மிசையசையுங் திருவுடையு
மிருநிலத்தின் மிசைதோய்ந்த வெழுதரிய திருவடியுங்
திருவடியிற் நீருப்பஞ்ச முத்திரையுந் திகழ்ந்திலங்க. (உச)

பொடிமூடு தழலென்னத் திருமேனி தனிற்பொலிந்த
படிநீடு திருநீற்றின் பரப்பணிந்த பான்மையராய்க்
கொடிநீடு மறுகணேந்து தம்முடைய குளிர்கமலத்
தடிநீடு மனத்தன்பர் தம்மனையி னகம்புருந்தார். (உஇ)

வந்தணேந்த மாவிரத முளிவரைக்கண் டெதிரெழுந்து
சென்றகளி கூர்ந்துமகிழ் நிறைந்தபெருந் தொண்டரு
ரென்றைபிரான் புரிதவத்தோ ரிடத்தே யெழுந்தரு ள
யுய்ந்தொழிந்தே னடியேனென் றுருகியவன் பொடுபணிந்தார். (உசு)

நற்றவராம் பெருமானுர் நலமிகுமன் பரைநோக்கி
யுற்றசெயன் மங்கலமிங் கொழுகுவதென் னெனவடியேன்
பெற்றதொரு பெண்கொடிதன் வதுவையெனப் பெருந்தவரு
மற்றுமக்குச சோபனமா குவதென்று வாய்மொழிந்தார். (உஎ)

ஞானசெய் தவரடிமேற் பணிந்துமனே யகநண்ணி
மானக்கஞ் சாறனுர் மணக்கோலம் புனைந்திருந்த
தேனக்க மலர்க்கூந்தற் நிருமகளைக் கொண்டணைந்து
பானற்கந் தரமறைத்து வருமவரைப் பணிவித்தார். (உஅ)

தஞ்சரணத் திடைப்பணிந்து தாழ்ந்தெழுந்த மடக்கொடிதன்
மஞ்சுதழைத் தெனவளர்ந்த மலர்க்கூந்தற் புறநோக்கி
யஞ்சலிமெய்த் தொண்டரைப்பார்த் தணங்கிவடன் மயிர்நமக்குப்
பஞ்சவடிக் காமென்றுர் பரவவடித் தலங்கொடுப்பார். (உக)

அருள்செய்த மொழிகேளா வடற்சுரிகை தனேயுருவிப்
பொருள்செய்தா மெனப்பெற்றே னெனக்கொண்டு பூங்கொடித
னிருள்செய்த கருங்கூந்த லடியிலரிந் தெதிர்நின்ற
மருள்செய்த பிறப்பறுப்பார் மலர்க்கரத்தி னிடைநீட்ட. (ஙo)

வாங்குவார் போனின்ற மறைப்பொருளா மவர்மறைந்து
பாங்கின்மலே வல்லியுடன் பழையமழ விடையேறி
யோங்கியவிண் மிசைவந்தா ரொளிவெம்பி னிலனெருங்கத்
தூங்கியபொன் மலர்மாரி தொழும்பர்தொழு தெதிர்விழுந்தார். (ஙக)

விழுந்தெழுந்து மெய்ம்மறந்த மெய்யன்பர் தமக்குமதிக்
கொழுந்தலைய விழுங்கங்கை குதித்தசடைக் கூத்தனு
ரெழும்பரிவு நம்பக்க லுனக்கிருந்த பரிசிந்தச்
செழும்புவனங் களிலேறச் செய்தோமென் றருள்செய்தார். (ஙஉ)

மருங்குபெருங் கணாதர் போற்றிசைப்ப வானவர்க
ணெருங்கவிடை மேல்கொண்டு நின்றவர்முன் னின்றவர்தா
மொருங்கியகெஞ் சொடுகரங்க ளுச்சியின்மேற் குவித்தையர்
பெருங்கருணைத் திறம்போற்றும் பெரும்பேறு சேர்பெற்றார். (நந)

தொண்டனார் தமக்கருளிச சூழ்ந்திமையோர் துதிசெய்ய
விண்டடவார் சடைமுடியா ரெழுந்தருளிப் போயினார்
வண்டுவார் குழற்கொடியைக் கைப்பிடிக்க மணக்கோலங்
கண்டவர்கள் கண்களிப்பக் கலிக்காம னூர்புகுந்தார். (நசி)

வந்தணைந்த வேயர்குல மன்னவனார் மற்றந்தச்
சிந்தனையி னெரியசெயல் செறிந்தவர்பாற் கேட்டருளிப்
புந்தியினுண் மிகவுவந்து புனிதனு ரருள்போற்றிச
சிந்தைதளர்ந் தருள்செய்த திருவாக்கின் றிறங்கேட்டு. (நஙி)

மனந்தளரு மிடர்நீங்கி வானவர்கா யகரருளாற்
பூணந்தமலர்க் குழல்பெற்ற பூங்கொடியை மணம்புணர்ந்து
தலம்பொழிந்து பெருவதுவை யுலகெலாக் தலைசிறப்ப
வினம்பெருகத் தம்முடைய வெயின்மூதூர் சென்றணைந்தா. (நசு)

வே று.

ஒருமகள் கூந்த றன்னை வதுவைநா ளொருவர்க் கீந்த
பெருமையார் தன்மை போற்றும் பெருமையென் னளவிற் ரூமே
மருவிய கமிற்புக்க மாவடி விடேலென் னேசை
யுரிமையாற் கேட்க வல்லார் திறமினி யுரைக்க லுற்றேன். (நஎ)

மானக்கஞ்சாறநாயனார்புராண மூற்றிற்று.
ஆ திருவிருத்தம் - கூ0எ.

சூ ச னை ம்.

சிவனடியார்கள் விரும்பியதைக் குறிப்பறிந்து கொடுத்தல்.

சிவனடியார்கள் விரும்பியது யாதாயினும், அதனை அவர் கேட்குமுன் அவர் குறிப்பறிந்து கொடுத்தல் மிகச் சிறந்த சிவபுண்ணியமாம். இச்சிவபுண்ணியத்தால் மிகச் சிறப்புற்றவர் இம்மானக்கஞ்சாறநாயனார். இவர் மாவிரதி வடிவங்கொண்டு வந்த பரமசிவன் தம்முடைய புதல்வியினது கூந்தலை நோக்கி, இவளது தலைமயிர் நமக்குப் பஞ்சவடிக்காம் என்று அருளிச்செய்தவடனே; அப்பெண்ணே தாம் அருந் தவஞ் செய்துபெற்ற ஏகபுத்திரி என்பதும், அத்தினமோ அவளுக்கு விவாகம் நிகழும் தினம் என்பதும், நோக்காமல் பெருமகிழ்ச்சியோடும் அவளது கூந்தலை அடியில் அரிந்து நீட்டிய பெருந்தகைமையே இவரது சங்கமபத்திக்குச சான்றும். குடும்பத்தோடு கூடியிருந்தும் வாசனைமாண்டு நின்ற இந்நாயனாரது மெய்யன்பை எம்போலிகளும் உணர்ந்து தம்மிடத்து அன்புசெய்து உய்தற்பொருட்டு அன்றே, கருணைநிதியாகிய சிவன் இவரது செயற்கருஞ்செயலை யாவர்க்கும் வெளிப்படுத்தியருளினர். மாவிரதம் உட்சமயம் ஆறனுள் ஒன்று. இசசமயிகள் சிவனை என்புமாலைதரித்த மூர்த்தியாகத் தியானிப்பர்; தமது சாஸ்திரத்திற் கூறிய முறையே தீக்ஷைபெற்று, எலும்பணிதல் முதலிய சரியைகளை அனுட்டிப்பர். பஞ்சவடியாவது மயிரினாலே அகலமாகச் செய்யப்பட்டு மார்பிலே பூணூலாகத் தரிக்கப்படும் வடமாம். வடம் எனினும் வடி எனினும் ஒக்கும். பஞ்சம் என்பது விரிவு.

அரிவாட்டாய நாயனார்புராணம்.

வரும்புனற் பொன்னி நாட்டொரு வாழ்பதி
சுரும்பு வண்டொடு சூழ்ந்து முரன்றிட
விரும்பு மென்க ணுடையவாய் வீட்டுளீர்
கரும்பு தேன்சொரி யுங்கண மங்கலம். (க)

செஞ்செ லார்வயற் கட்டசெந் தாமரை
முன்னர் நந்துமிழ் முத்தஞ் சொரிந்திடத்
துன்னு மள்ளர்கைம் மேற்கொண்டு தோன்றுவார்
மன்னு பங்கய மாநிதி போன்றுளார். (உ)

வளத்தி னீடும் பதியதன் கண்வரி
யுளர்த்து மைம்பா லுடையோர் முகத்தினுங்
களத்தின் மீதுங் கயல்பாய் வயலயற்
குளத்து நீடுங் குழையுடை நீலங்கள். (ங)

அக்கு லப்பதி தன்னி லறநெறித்
தக்க மாமனை வாழ்க்கையிற் றங்கினர்
தொக்க மாநிதித் தொன்மையி லோங்கிய
மிக்க செல்வத்து வேளாண் டலைமையார். (ச)

தாய ஞரெனு நாமந் தரித்துளார்
சேய காலந் தொடர்ந்துந் தெளிவிலா
மாய ஞர்மண் கிளைத்தறி யாதவத்
தூய நாண்மலர்ப் பாதந் தொடர்ந்துளார். (ஞ)

மின்னு செஞ்சடை வேதியர்க் காமென்று
செஞ்செ லின்னமு தோடுசெங் கீரையு
மன்னு பைந்துணர் மாவடுவுங் கொணர்ந்
தன்ன வென்று மமுதுசெய் வித்பரால். (ட)

இந்த நன்னிலை யின்னல்வந் தெய்தினுஞ்
சிந்தை நீங்காச் செயலி னுவந்திட
முந்தை வேத முதல்வ ரவர்வழி
வந்த செல்வ மறியாமை மாற்றினர். (எ)

மேவு செல்வங் களிறுண் விளங்கனி
யாவ தாகி யழியவு மன்பினற்
பாவை பங்கர்க்கு முன்பு பயின்றவித்
தாவில் செய்கை தவிர்ந்திலர் தாயனர். (அ)

அல்ல னல்குர வாயிடக் கூலிக்கு
நெல்ல றுத்துமெய்ந் நீடிய வன்பினு
னல்ல செந்நெலிற் பெற்றன நாயனர்க்
கொல்லை யின்னமு தாக்கொண் டொழுகுவார். (கூ)

சாலி தேடி யறுத்தவை தாம்பெறுங்
கூலி யெல்லாந் திருவமு தாக்கொண்டு
மீல நெல்லரி கூலிகொண் டெண்ணுநாண்
மால யற்கரி யாரது மாற்றுவார். (கூ0)

வேறு.

நண்ணிய வயல்க ளெல்லா நாடொறு முன்னங் காண
வண்ணவார் கதிர்ச்செஞ் சாலி யாக்கிட மகிழ்ந்து சிந்தை
யண்ணலா ரமுத்த கூலி கொண்டிஃ தடியேன் செய்த
புண்ணிய மென்று போத வமுதுசெய் விப்பா ரானார். (க)

வைகலு முணவி லாமை மனைப்படப் பையிளிற் புக்கு
கைகர மில்லா வன்பி னங்கையா ர்டரு கொய்து
பெய்கலத் தமைத்து வைக்கப் பெருந்தகை யருந்தித் தங்கள்
செய்கடன் முட்டா வண்ணந் திருப்பணி செலுத்து நாளில். (கஉ)

மனைமருங் கடரு மாள வடநெடு வான மீனே
யனையவர் தண்ணீர் வார்க்க வமுதுசெய் தன்பனுரும்
வினைசெயன் முடித்துச் செல்ல மேவுநா ளொருநாண் மிக்க
முனைவனுர் தொண்டர்க் கங்கு நிகழ்ந்தது மொழியப் பெற்றேன். (கங)

முன்புபோன் முதல்வ னுரை யமுதுசெய் விக்க மூளு
மன்புபோற் றூய செஞ்செ லரிசிமா வடுமென் கீரை
துன்புபோ மனத்துத் தொண்டர் கூடையிற் சுமந்து போகப்
பின்புபோ மனைவி யாரான் பெற்றவஞ் சேந்திச சென்றூர். (கச)

போதரா நின்ற போது புலர்ந்துகா ளளர்ந்து தப்பி
மாதரார் வருந்தி வீழ்வார் மட்கல மூடி கையாற்
காதலா லணைத்து மெல்லாய் கமரிடைச் சிந்தக் கண்டு
பூதநா யகர்தந் தொண்டர் போவதங் கினியென் னென்று. (கடு)

நல்லசெங் கீரை தூய மாவடு வரிசி சிந்த
வல்லறீர்த் தாள வல்லா ரமுதுசெய் தருளு மப்பே
றெல்லையி றீமை யேனிங் கெய்திடப் பெற்றி லேனென்
றெல்லையி லரிவாட் பூட்டி பூட்டியை யரிய லுற்றூர். (கக)

ஆட்கொள்ளு மையர் தாமிங் கமுதுசெய் திலர்கொ லென்னுப்
பூட்டிய வரிவாட் பற்றிப் புரையற வீரவு மன்பு
காட்டிய நெறியி னுள்ளத் தண்டூறக் கழுத்தி னூடே
யூட்டியு மரியா நின்ரு ருறுபிறப் பரிவா ரொத்தார். (கஎ)

மாசறு சிந்தை யன்பர் கழுத்தரி யரிவாட் பற்று
மாசில்வண் கையை மாற்ற வம்பலத் தாடு மையர்
வீசிய செய்ய கையு மாவடு விடேல்வி டேலென்
னேசையுங் கமரி னின்று மொக்கவே யெழுந்த வன்றே. (கஅ)

திருக்கைசென் றரிவாட் பற்றுந் திண்கையைப் பிடித்த போது
வெருக்கொடங் கூறு நீங்க வெவ்வினை விட்டு நீங்கிப்
பெருக்கவே மகிழ்ச்சி நீடத் தம்பிரான் பேணித் தந்த
வருட்பெருங் கருணை நோக்கி யஞ்சலி கூப்பி நின்று. (கஙு)

அடியனே னறிவி லாமை கண்டுமென் னடிமை வேண்டிப்
படியிசைக் கமரில் வந்திங் கமுதுசெய் பரனே போற்றி
துடியிடை பாக மான தூயநற் சோதி போற்றி
பொடியணி புவள மேனிப் புரிசடைப் புராண போற்றி. (உ0)

என்றவர் போற்றி செய்ய விடபவா கனராய்த் தோன்றி
நன்றுநீ புரிந்த செய்கை நன்னுத லுடனே கூட
வொன்றிநம் முலகில் வாழ்வா யென்றவ ருடனே நண்ண
மன்றுளே யாடு மீசர் மழவிடை யுகைத்துச் சென்றார். (உச)

பரிவுறு சிந்தை யன்பர் பரம்பொரு ளாகி யுள்ள
பெரியவ ரமுது செய்யப் பெற்றிலே னென்று மாவின்
வரிவடி வீடேலெ ஞமுன் வன்கழுத் தரிவாள் பூட்டி
யரிதலா லரிவாட் டாய ராயினர் தூய நாமம். (உஉ)

முன்னிலை கமரே யாக முதல்வனு ரமுது செய்யச்
செங்கெலி னரிசி சிந்தச் செவியுற வடவி னேசை
யங்கிலே கேட்ட தொண்ட ரடியினே தொழுது வாழ்த்தி
மன்னுமா னுயர் செய்கை யறிந்தவா வழுத்த லுற்றேன். (உங)

அரிவாட்டாயநாயனார்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கூஉ.

சூ ச னை ம்.

சிவனுக்கு அன்னம் கறி முதலியன அமுது செய்வித்தல்.

சிவனுக்கு அன்னம் கறி முதலியன அமுதுசெய்வித்தல் மிக்க மேலாகிய சிவ புண்ணியமாம். அது, "அருத்திய வலிழி னேக மமலனே முதலோர்க் கன்பா—லிரு த்திடுஞ் செலோ கத்தில் வருடமா யிரமு மேயப்—பொருத்திய வன்பர் தம்மைப் பொருந்திடிற் பருப்பு நெய்பு—முரைத்தவ வருடந் தன்னிற் றசகுண மோங்கு மாங்கே." "பொறித்தநற் கறியும் புல்கிற் றசதச குணிதம் போனந்—தரித்தசாட் டியமே யென்னிற் சததச குணமுஞ் சாரும்—பரித்தநற் கந்த பந்தஞ் சதசத குண மும் பற்று—மிரத்தநற் சாலி யன்ன மயுதமே யெண்ணி லென்றும்." "சாலியின் விசிட்ட ராச சாலியாற் சமைத்த வன்ன—மேலைய பலத்தின் மிக்க தசகுணம் விளை க்கு மீண்டெங்—கோலிய பலங்க ளேறுங் கொழுவிய நெய்யுங் கூடி—லேலவே கறி யுங் கூடி லேற்றமுன் னிசைத்த வாரும்." என்று சீவதருமோத்தரத்திற் கூறுமாற் றல், அறிக.

இச்சிவபுண்ணியத்தால் மிகச் சிறப்புற்றவர் இவ்வரிவாட்டாயநாயனர். இவர் தமது பெருஞ்செல்வ மெல்லாம் இழந்து, மிகக் கொடிய வறுமை எய்தியும்; கூலிக்கு நெல் அறப்பவர் ஆகி, தாம் கூலியாகப்பெற்ற செங்நெலெல்லாம் சிவனுக்கு அமுது செய்வித்து, கார்நெல்லைக்கொண்டு தாம் சீவனம் செய்து வரும் காலிலே; அச்சிவ னது திருவருளினாலே கார்நெற்கிடையாது செங்நெல்லே கிடைப்ப, இது அடியேன் செய்த புண்ணியம் என்று, அவை எல்லாம் சிவனுக்கே அமுது செய்விப்பாராகி, தாம் இலைக்கறி உண்டுகொண்டு இருந்த பெருந்தகைமை, தினைபுற்றோறும் எவ்வளவு ஆச்சரியத்தைத் தருகின்றது! இவ்விலைக்கறியும் அற்றுப்போக; ஜலபானமாத்திரம் செய்துகொண்டு இச்சிவபுண்ணியத்தை விடாது செய்தமை அதினும் மிக ஆச்சரியம் அன்றே! இவர் தாம் சிவனுக்கு அமுதுசெய்விக்கும் பொருட்டுச் சுமத்து செல்லும் செங்நெலரிசி முதலியன தாம் பசியினாலே கால் தள்ளாடித் தவறி விழுந்தபொழுது கமரிலே சிந்தக் கண்டு, இவற்றை எம்பெருமான் அமுதுசெய்தருளும் பேற்றைப் பெற்றிலேனே என்று அரிவாளினாலே தமது ஊட்டியை அரிதலுற்ற ஆச்சரியம் யாவ

ராலே சொல்லற்பாலது! இவர் தாம் இன்பதுன்பம் அடைதல், தமக்கு இச்சிவபுண் ணியம் செய்யக் கிடைத்தல் கிடையாமைகளாலன்றி, செல்வ வறுமைகளால் அன்று என்பது ஈண்டுக் கூறியவாற்றாற் காண்க.

*இங்ஙனஞர் குடும்பத்தோடு கூடி இருந்தும், தமக்கு உறவு வெனே என்னும் மெய்யுணர்வு உடையராகி அவரது திருவடிக்கணன்றித் தமது சரீரத்தினும் உயிர்ச் சார்பு பொருட்சார்புகளினும் சிறிதும் பற்றின்றி வாசனை மாண்டுநின்ற பெருந்தன் மையினர் என்பது ஈண்டுக் கூறிய இவரது செயற்கருஞ் செய்கையினாலே பொள் ளெனப் புலப்படுகின்றது. இப்பெருந்தன்மை, "செய்யி லுகுத்த திருப்படி மாற்ற தனே—யைய விதுவமுது செய்யெனவே - பையவிருந்—தூட்டி யறுப்பதற்கே பூட்டி யறுத்தவரை—ராட்டியுரை செய்வதே நாம்." எ-ம். "கல்லிற் கமரிற் கதிர்வாளிற் சாணையினில்—வல்லுப் பலகையினில் வாதனையைச்-சொல்லி—லகமார்க்கத் தாலவர் கண் மாற்றினர்கா ணையா—சகமார்க்கத் தாலன்றே தான்." எ-ம். திருக்களிற்றுப்படி யாரிற் கூறுமாற்றாலும் உணர்க. இவரது இடையறுத இம்மெய்யன்பினால் அன்றே, பிரம விட்டுணுக்களும் காண்டற்கரிய பரமசிவன் கமரினின்றும் இவரது அரிவாள் பிடித்த கையைத் தடுத்தற்பொருட்டு உயர வீசிய தமது திருக்காத்தையும் இவரது வியாகுலத்தை ஒழித்தற்பொருட்டுத் தாம் அமுதுசெய்தலால் ஆகும் ஓசையையும் தோற்றுவித்து, பின்னர் இடபாரூடராய் வெளிப்பட்டு,இவருக்கும், எத்துணை வறுமை எய்திய வழியும் சிறிதும் மாறுபடாது இவர் கருத்தின்வழி நின்ற மனைவியாருக்கும், முத்தி கொடுத்தருளினர். ஆதலால், சிவனது வியத்தற்ஸ்தானங்களாகிய குரு லிங்க சங்கமங்களுக்கு வறுமையினும் தம்மால் இயன்றது சிறிதேனும் அன்போடு கொடுத் தல் புண்ணியமும், கொடாமை பாவமுமாம் என்பது துணிக. ஒன்றும் கிடையாதா யினும்; பச்சிலையாயினும் கிடையாததா! அதுவும் கிடையாதாயின், அவர் சன்னிதியிற் கிடக்கும் செத்தையை ஒருமையுடனே திருவலகினால் போக்குதலும், அரிதோ! அரிது அன்றே! இது, "பரமன் றிருமுன் னழன்முன்னும் பரம குரவன்றிரு முன்னு—மொருமை யுறவே வறுமையினு முதவா தவருஞ் சிறிதேது—மரிது பொருடான் பச்சிலையு மரிதோ வஃது மரிதாயிற்—றிருண மதனைத் திருமுன்னே மாற்ற லரிதோ செயலாலே." எனச் சிவதருமோத்தரத்தில் கூறுமாற்றால், உணர்க.

ஆனாயநாயனார்புராணம்.

மாடு விரைப்பொலி சோலையின் வான்மதி வந்தேறச்
கூடு பரப்பிய பண்ணை வரம்பு சுரும்பேற
வீடு பெருக்கிய போர்களின் மேக மிளைத்தேற
நீடு வளத்தது மேன்மழ நாடெனு நீர்நாடு. (க)

நீவி நிதம்ப வுழத்தியர் நெய்க்குழன் மைச்சுழன்
மேவி யுறங்குவ மென்சிறை வண்டு விரைக்கஞ்சப்
பூவி லுறங்குவ நீள்கயல் பூமலி தேமாவின்
காவி னறுங்குளிர் நீழ லுறங்குவ கார்மேதி. (உ)

வன்னிலை மள்ள ருகைப்ப வெழுந்த மரக்கோவைப்
பன்முறை வந்தெழு மோசை பயின்ற முழக்கத்தா
லன்ன மருங்குறை தண்ணிறை வாவி யதன்பாலைக்
கன்ன லடும்புசை யான்முகில் செய்வ கருப்பாலே. (ங)

பொங்கிய மாகதி நீடலை யுந்து புனற்சங்கர்
துங்க வீலக்கத லிப்புதன் மீது தொடங்கிப்போய்த்
தங்கிய பாசடை சூழ்கொடி யூடு தவழ்ந்தேறிப்
பைங்கமு கின்றலை முத்த முதிர்க்குவ பாளையென. (ச)

அல்லி மலர்ப்பழ னத்தய னுகிள வானீனு
மொல்லை முழுப்பை யுகைப்பி னுழக்கு குழக்கன்று
கொல்லை மடக்குல மான்மறி யோடு குதித்தோடி
மல்கு வளத்தது முல்லை யுடுத்த மருங்கோர்பால். (டு)

கண்மலர் காவிகள் பாய விருப்பன கார்முல்லைத்
தண்ணகை வெண்முகை மேவு சுரும்பு தடஞ்சாலிப்
பண்ணை யெழுங்கயல் பாய விருப்பன காயாவின்
வண்ண நறுஞ்சினை மேவிய வஞ்சிறை வண்டானம். (சு)

பொங்கரில் வண்டு புறம்பலை சோலைகண் மேலோடும்
வெங்கதிர் தங்க விளங்கிய மேன்மழ நன்னுடா
மங்கத மண்ணி னருங்கல மாக வதற்கேயோர்
மங்கல மானது மங்கல மாகிய வாழ்மூதூர். (எ)

ஒப்பில் பெருங்குடி நீடிய தன்மையி லோவாமே
தப்பில் வளங்கள் பெருக்கி யறம்புரி சால்போடுஞ்
செப்ப வுயர்ந்த சிறப்பின் மலிந்தது சீர்மேவு
மப்பதி மன்னிய வாயர் குலத்தவ ராளுயர். (அ)

ஆயர் குலத்தை விளக்கிட வந்துத யஞ்செய்தார்
தூய சடர்த்திரு நீறு விரும்பு தொழும்புள்ளார்
வாயினின் மெய்யின் வழுத்து மனத்தின் வினைப்பாலிற்
பேயுட னூடு பிராணடி யல்லது பேணுதார். (க)

ஆனிரை கூட வகன்புற விற்கொடு சென்றேறிக்
கானுறை தீய விலங்குறு நோய்கள் கடிந்தெங்குந்
தூநறு மென்பு லருந்தி விரும்பிய நீருண்
னேமி லாய முலப்பில பல்க வளித்துள்ளார். (கo)

கன்றொடு பான்மறை நாகு கறப்பன பாலாவும்
புன்றலை மென்சினை யாவெடு நீடு புனிற்றுவும்
வென்றி விடைக்குல மோடு மினன்தொறும் வெவ்வேறே
தன்றி நிறைந்துள சூழ லுடன்பல தோழங்கள். (கக)

ஆவி னிரைக்குல மப்படி பல்க வளித்தென்றுங்
கோவல ரேவல் புரிந்திட வாயர் குலம்பேணுங்
காவலர் தம்பெரு மானடி யன்புறு கானத்தின்
மேவு தலைக்கரு விக்குழல் வாசனை மேல்கொண்டார். (கஉ)

வே று.

முந்தைமறை நூன்மரபின் மொழிந்தமுறை யெழுத்தவே
யந்தமுத னுலிரண்டி லரிக்குரகம் புறுதானம்
வந்ததுனை நிரையாக்கி வாயுமுதல் வழங்குதனை
யுந்தமில்சி ரிஞடையீட்டி னங்குலியெண் கணினமைத்து. (கந)

எடுத்த குழற் கருவியினி லெம்பிரா னெழுத்தஞ்சுஞ்
தொடுத்தமுறை யேழிசையின் சுருதிபெற வாசித்துத்
தடுத்தசரா சரங்களெலாந் தங்கவருந் தங்கரணே
யடுத்தவிசை யமுதளித்துச் செல்கின்ற ரங்கொருநாள். (கச)

வாசமலர்ப் பிணைபொங்க மயிர் நுழுதி மருங்குயர்ந்த
தேசுடைய சிகழிகையிற் செறிகண்ணித் தொடைசெருகிப்
பாசிலைமென் கொடியின்வடம் பயிலநறு விலிபுனைந்து
காசுடைநா ணதற்கயலே கருஞ்சுருளின் புறங்கட்டி. (கடி)

வெண்கோட லிலைச்சுருளிற் பைந்தோட்டி விரைத்தோன்றித்
தண்கோல மலர்புனைந்த வடிகாதி ஞெளிதயங்கத்
திண்கோல நெற்றியின்மேற் றிருநீற்றி ஞெளிகண்டோர்
கண்கோட னிறைந்தாராக் கவின்விளங்க மிசையணிந்து. (கசு)

நிறைந்தநீ றணிமார்பி னிரைமுல்லை முகைசுருக்கிச்
செறிந்தபுனை வடந்தாழத் திரடோளின் புடையலங்க
லறைந்தசுரும் பிசையரும்ப வரையுடுத்த மரவுரியின்
புறந்தழையின் மலிதானைப் பூம்பட்டுப் பொலிந்தசைய. (கள)

சேவடியிற் றொடுதோலுஞ் செங்கையினில் வெண்கோலு
மேவுமிசை வேய்ங்குழலு மிகவிளங்க வினைசெய்யுங்
காவல்புரி வல்லாயர் கன்றுடையா னிரைசூழப்
பூவலர்தார்க் கோவலனூர் நிரைகாக்கப் புறம்போந்தார். (கஅ)

வே று.

நீலமா மஞ்ஞை யேங்க நிரைக்கொடிப் புறவம் பாடக்
கோலவெண் முகைகையோ முல்லை கோபம்வாய் முறுவல் காட்ட
வாலுயின் னிடைசூழ் மாலைப் பயோதர மசைய வந்தாண்
ஞாலநீ டரங்கி லாடக் காரெனும் பருவ நல்லாள். (கக)

வே று.

எம்மருங்கு நிரைபரப்ப வெடுத்தகோ லுடைப்பொதுவர்
தம்மருங்கு தொழுதணையத் தண்புறவில் வருந்தலெவ
ரம்மருங்கு தாழ்ந்தசினை யலர்முருங்கு மதுவுண்டு
செம்மருந்தண் சுரும்புசுழல் செழுங்கொன்றை மருங்கணைந்தார். (உ0)

சென்றணைந்த வானுயர் செய்தவிரைத் தாமமென
மன்றன் மலர்த் துணர்சூக்கி மருங்குதாழ் சடையார்போ
னின்றநறுங் கொன்றையினை நேர்நோக்கி நின்றுருகி
யொன்றியசிந் தையிலன்பை யுடையவர்பான் மடைதிறந்தார். (உக)

அன்பூறி மிசைபொங்கு மமுதவிசைக் குழலொலியால்
வன்பூதப் படையாளி யெழுத்தைந்தும் வழுத்தித்தா
முன்பூதி வருமளவின் முறைமையே யெவ்வுயிரு
மென்பூடு கரைந்துருக்கு மின்னிசைவேய்ங் கருவிகளில். (உஉ)

ஏழுவீர லிடையிட்ட வின்னிசைவங் கியமெடுத்துத்
தாழுமலர் வரிவண்டு தாதுபிடிப் பனபோலச்
சூழுமுரன் றெழுநின்று ணயபெருந் தனித்திலேயில்
வாழியநந் தோன்றலார் மணியதரம் வைத்ததை. (உங)

முத்திரையே முதலினைத்து முறைத்தானஞ் சோதித்து
வைத்ததுளே யாராய்ச்சி வக்கரணை வழிபோக்கி
யொத்தநிலை புணர்த்ததற்பி னொன்றுமுதல் படிமுறையா
மத்தகைமை யாரோசை யமரோசை களினமைத்தார். (உச)

மாறுமுதற் பண்ணினபின் வளர்முல்லைப் பண்ணுக்கி
யேறியதா ரமுமுழையுங் கிழமைகொள விடுத்தான
மாறுலவுஞ் சடைமுடியா ரஞ்செழுத்தி னிசைபெருகக்
கூறியபட் டடைக்குரலாங் கொடிப்பாலை யினினிறுத்தி. (உடி)

அயவிசைப் புகலுன்கி னமைமந்தபுகல் வகையெடுத்து
மேயதுளே பற்றுவன விடுப்பனவாம் விரனிரையிற்
சேயவொளி யிடையிலையத் திருவாள னெழுத்தஞ்சுந்
தூயவிசைக் கிளைகொள்ளுந் துறையஞ்சின் முறைவிளைத்தார். (உக)

மந்தரத்து மத்திமத்துத் தாரத்தும் வரன்முறையாற்
றந்திரிகண் மெலிவித்துஞ் சமங்கொண்டும் வலிவித்து
மந்தரத்து விரற்றொழில்க ளளவுபெற வசைத்தியக்கிச்
சுந்தரச்செங் கனிவாயுந் தூவாயுந் தொடக்குண்ண. (உஎ)

எண்ணியதூற் பெருவண்ண மிடைவண்ணம் வனப்பென்னும்
வண்ணவிசை வகையெல்லா மாதுரிய நாதத்தி
னண்ணியபா ணியுமியலுந் தக்குநடை முதற்கதியிற்
பண்ணமைய வெழுமோசை யெம்மருங்கும் பரப்பினூர். (உஅ)

வள்ளலார் வாசிக்கு மணித்தூவாய் வேய்க்குழலி
னுள்ளுறையுஞ் செழுத்தாக வொழுகியெழு மதுரவொலி
வெள்ளநிறைந் தெவ்வுயிர்க்கு மேலமரர் தருவீதேன்
றெள்ளமுதி னுடன்கலந்து செவிவார்ப்ப தெனத்தேக்க. (உக)

ஆனிரைக ளறுகருந்தி யசைவிடா தணைந்தயரப்
பானுரைவாய்த் தாய்முலையிற் பற்றுமிளங் கன்றினமுந்
தானுணவு மறந்தொழியத் தடமருப்பின் விடைக்குலமு
மான்முதலாங் கான்விலங்கு மயிர்முகிழ்த்து வந்தணைய. (ஙo)

ஆடுமயி லினங்களுமங் கசைவயர்ந்து மருங்கணுக
வூடுசெவி யிசைநிறைந்த வுள்ளமொடு புள்ளினமு
மாடுபடிந் துணர்வொழிய மருங்குதொழில் புரிந்தொழுகுங்
கூடியவண் கோவலருங் குறைவினையின் றுறைநின்றூர். (ஙக)

பணிபுவனங் களிலுள்ளார் பயில்பிலங்கள் வழியணைந்தார்
மணிவரைவா ழரமகளிர் மருங்குமயங் கினர்மலிந்தார்
தணிவிலொளி விஞ்சையர்கள் சாரணர்கின் னரரமர
ரணிவிசும்பி னயர்வெய்தி விமானங்கண் மிசையணைந்தார். (ஙஉ)

சுரமகளிர் கற்பகப்பூஞ் சோலைகளின் மருங்கிருந்து
சுரமலரி னமுதூட்டுங் கனிவாய்மென் கிள்ளையுடன்
விரவுதுயஞ் குழலியைய ரிமானங்கள் விரைந்தேறிப்
பரவியவே ழிசையமுதஞ் செலிமடுத்துப் பருகினூர். (ஙங)

நலிவாரு மெலிவாரு முணர்வொன்று நயத்தலினுன்
மலிவாய்வெள் ளெயிற்றரவ மயின்மீது மருண்டெழுஞ்
சலியாத நிலையரியுந் தடங்கரியு முடன்சாரும்
புலிவாயின் மருங்கணையும் புல்வாய புல்வாயும். (கச)

மருவியகால் விசைத்தசையா மரங்கண்மலர்ச் சினைசலியா
கருவரைவீ ழருவிகளுங் கான்யாறுங் கலித்தோடா
பெருமுகிலின் குலங்கள்புடை பெயர்ந்தொழியப் புனல்சோரா
விருவிசும்பி னிடைமுழங்கா வெழுகடலு மிடைதுளும்பா. (கடு)

இவ்வாறு நிற்பனவுஞ் சரிப்பனவு மிசைமயமாய்
மெய்வாழும் புலன்கரண மேவியவொன் றுயினவான்
மொய்வாச நறுங்கொன்றை முடிசசடையா ரடித்தொண்டர்
செவ்வாயின் மிசைவைத்த திருக்குழல்வா சனையுருக்க. (கசு)

மெய்யன்பர் மனத்தன்பின் வினைத்தவிசைக் குழலோசை
வையந்தன் னையுநிறைத்து வானந்தன் வயமாக்கிப்
பொய்யன்புக் கெட்டாத பொற்பொதுவி னடம்புரியு
மையன்றன் றிருசசெவியி னருகணையப் பெருகியதால். (கஎ)

ஆனையர் குழலோசை கேட்டருளி யருட்கருணை
தானைய திருவுள்ள முடையதவ வல்லியுடன்
காளைநி காரணராங் கண்ணுதலார் விடையுகைத்து
வாளைறு வந்தணைந்தார் மதிநாறுஞ் சடைதாழ. (கஅ)

திசைமுழுதுங் கணநாதர் தேவர்கட்கு முன்னெருங்கி
மிசைமிடைந்து வரும்பொழுது வேற்றெருவிகள் விரவாமே
யசையவெழுங் குழலுதத் தஞ்செழுத்தாற் றமைப்பரவு
மிசைவிரும்புங் கூத்தனு மெழுந்தருளி யெதிர்நின்றூர். (கக)

முன்னின்ற மழவிடைமேன் முதல்வனு மெப்பொழுதுஞ்
சென்னின்ற மனப்பெரியோர் திருக்குழல்வா சனைகேட்க
வின்னின்ற நிலையேநம் பாலணைவா யெனவவரு
மன்னின்ற நிலைபெயர்ப்பா ரையர்திரு மருங்கணைந்தார். (சஅ)

விண்ணவர்கண் மலர்மாரி மிடைந்துலக மிசைவிளங்க
வெண்ணிலரு முனிவர்குழா மிருக்குமொழி யெடுத்தேத்த
வண்ணலார் குழற்கருவி யருகிசைத்தங் குடன்செல்லப்
புண்ணியனு மெழுந்தருளிப் பொற்பொதுவி னிடைப்புக்கார். (சக)

வே று.

தீதுகொள் வினைக்கு வாரோஞ் செஞ்சடைக் கூத்தர் தம்மைக்
காதுகொள் குழைகள் வீசுங் கதிர்நில விருள்கால் சிப்ப
மாதுகொள் புலவி நீக்க மனையிடை யிருகாற் செல்லத்
தூதுகொள் பவரா நம்மைத் தொழும்புகொண் டெனைக் கொள்வாரே. (சஉ)

ஆனையநாயனூர்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கஎஉ.

சூசனம்.

ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை வேய்ங்குழலினால் வாசித்தல்.

அநாதி தொடங்கித் தம்மை வருத்தும் பிறவிநோயினின்றும் நீங்கி உய்ய விரும்புவோர்க்கு, அந்நோயை நீக்க வல்ல பரம வைத்தியராகிய சிவனே, உணர்த்தும் மந்திரம் ஸ்ரீபஞ்சாக்ஷரமேயாம். ஆதலால், இப்பஞ்சாக்ஷரத்தை, சிவன்மாட்டு இடையறாது வளரும் மெய்யன்பினால் மனம் கசிந்து ஓதுவோர் முத்திபெறுவர். "காதலாகிக் கசிந்துகண் ணீர்மல்கி—யோது வார்தமை நன்னெறிக் குய்ப்பது—வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது—நாத னாம நமச்சி வாயவே." என்னூர் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

சிவநாமத்தை வாளா ஓதலினும், இசை நூற்பயிற்சியின் மிக வல்லராகி, எழிசைகளின் முறை வழுவாது முப்பத்திரண்டு இராகங்களுள் அவ்வக்காலத்துக்கு ஏற்ற இராகத்தினோடும் வேய்ங்குழலால் வாசித்தல், தமக்கும் அதனைக் கேட்கும் பிறர்க்கும் சிவன்மாட்டு அன்பை வளரச் செய்யும். இதனாலன்றே, சிவநாமம் கீதத்தோடு கூடுமாயின், சிவன் மிகப் பிரீதியுற்று எல்லையில்லாத திருவருளைச் சுரப்பர் என்க. அது "விளக்கினுற் பெற்ற வின்ப மெழுகினுற் பதிற்றி யாகுங்—துளக்கினன் மலர்தொடுத்தாற் றூயவிண் ணேற லாகும்—விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞான மாகு—மளப்பிலை கீதஞ் சொன்னூர்க் கடிகடா மருளு மாறே." "இறவாமே வரம்பெற்றே னென்ற மிக்க விராவணனை யிருபதுதோ ணெரிய வூன்றி—யுறவாகி யின்னிசைகேட் டிரங்கி மீண்டே யுற்றபிணி தவிர்த்தருள வல்லான் றன்னை—மறவாதார் மனத்தென்று மன்னினானை மாமதிய மலர்க்கொன்றை வன்னி மத்த—நறவார்செஞ் சடையானை நள்ளாற் றானை நானடியே னினைக்கப் பெற்றுய்ந்த வாறே." என்னும் திருநாவுக்கரசுநாயனார் தேவாரங்களானும் உணர்க.

சிவநாமங்கள் எல்லாவற்றினும் சிறந்த ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை வேய்ங்குழலினால் வாசித்துப் பெரும்பயன் பெற்றமையாற் சிறப்புற்றவர் இவ்வானாயநாயனார். சிவனது திருவடிகளையே யன்றிப் பிறிதொன்றையும் சிறிதும் பற்றாத இந்நாயனார், அத்திருவடிகளில் எல்லை இல்லாத அன்பை வளர்த்தற்குக் கருவி கீதத்தின் மிக்கது பிறிது இன்று என்னுங் கருத்தால் அன்றே, ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை வேய்ங்குழலால் வாசித்தலே தொழிலாகக் கொண்டனர். அது இங்கே "தம்பெரு மானடி யன்புறு கானத்தின்—மேவு துளைக்கரு விக்குழல் வாசனை மேல்கொண்டார்:" என்பதனால் உணர்த்தப்பட்டது. இவர் "உருகி - யொன்றியசிந் தையிலன்பை யுடையவர்" ஆகி, வாசித்த இவ்வேய்ங்குழல் வாசனையானது எவ்வுயிர்களையும் இசைமயமாக்கி, கசிந்து உருகச் செய்த பெருவியப்பை இங்கே ஆசிரியர் சேக்கிழார்நாயனார் விரித்துரைத்த அருமைத் திருவாக்குக்களே எம்போலிகளுடைய கன்னெஞ்சையும் கசியச் செய்யுமரியின்; அவ் வாசனையின் பெருமையை யாமா கூறவல்லம்! இந்நாயனார் தமக்குமாத்திரமன்றி எவ்வுயிர்க்கும் பயன்படுவதாய், நினைப்பினும் கேட்பினும் இனிமை பயக்கும் இத்திருத்தொண்டைச் சிவன்மாட்டு இடையறாது முறுகி வளரும் மெய்யன்போடு செய்தமையால் அன்றே, "பொய்யன்புக் கெட்டாத பொற்பொதுவி னடம்புரியும்" சிவன் இவருக்கு வெளிப்பட்டு, "எப்பொழுதுஞ்—செந்நின்ற மனப்பெரியோர் திருக்குழல்வா சனைகேட்க—விந்நின்ற நிலையேநம் பாலணைவாய்" என்று திருவாய்மலர்ந்தருளினர்.

இலைமலிந்தசருக்க முற்றுப்பெற்றது.

நான்காவது

மும்மையாலுலகாண்ட சருக்கம்.

மூர்த்திநாயனூர்புராணம்.

சீர்மன்னு செல்வக் குடிமல்கு சிறப்பி னேங்குங்
கார்மன்னு சென்னிக் கதிர்மாமணி மாட வைப்பு
நார்மன்னு சிந்தைப் பலநற்றுறை மாந்தர் போற்றும்
பார்மன்னு தொன்மைப் புகழ்பூண்டது பாண்டி நாடு. (க)

சாயுந் தளிர்வல்லி மருங்கு னெடுந்த டங்கண்
வேயும் படுதோளியர் பண்படு மின்சொற் செய்ய
வாயும் படுநீள்கரை மண்பொருந் தண்பொ ருந்தம்
பாயுங் கடலும் படுநீர்மை பனித்த முத்தம். (உ)

மொய்வைத்த வண்டின் செறிசூழன் முரன்ற சுற்றின்
மைவைத்த சோலை மலையந்தர வந்த மந்த
மெய்வைத்த காலுந் தருஞால மளந்த மேன்மைத்
தெய்வத் தமிழுந் தருஞ்செவ்வி மணஞ்செ யீரம். (ங)

சூழு மிதழ்ப்பங்கய மாகவத் தோட்டின் மேலா
டாழ்வின்றி யென்றுந் தனிவாழ்வதத் தைய லொப்பார்
யாழின் மொழியிற் குழலின்னிசை யுஞ்சு ரும்பும்
வாழுந் நகர மதுராபுரி யென்ப தாகும். (ச)

சால்பாய மும்மைத் தமிழ்தங்கிய வங்கண் மூதூர்
நூல்பா யிடத்தும் முளநோன்றலை மேதி பாயப்
பால்பாய் முலைதோய் மதுப்பங்கயம் பாய வெங்குஞ்
சேல்பாய் தடத்தும் முளசெய்புண்மிக் கேறு சங்கம். (ஞ)

மந்தா நிலம்வந் தசைபந்தரின் மாட முன்றிற்
பந்தா டியமங் கையர்பங்கயச் செங்கை தாங்குஞ்
சந்தார் முலைமே லனதாழ்குழை வாண்மு கப்பொற்
செந்தா மரைமே லனசித்திலஞ் சேர்ந்த கோவை. (சு)

மும்மைப் புவனங்களின் மிக்கதன் றேயம் மூதூர்
மெய்மைப் பொருளாந் தமிழ்தாலின் விளங்கு வாய்மைச்
செம்மைப் பொருளுந் தருவார்திரு வால வாயி
லெம்மைப் பவந்தீர்ப் பவர்சங்க மிருந்த தென்னூல். (எ)

அப்பொற் பதிவாழ் வணிகக்குலத் தான்ற தொன்மைச்
செப்பத் தருசீர்க் குடிசெய்தவஞ் செய்ய வந்தா
ரெப்பற் றினையு மறுத்தேறுகைத் தேறு வார்தாண்
டெய்ப்பற் றெனப்பற்றி விடாத விருப்பின் மிக்கார். (அ)

நாளும் பெருங்காத னயப்புறும் வேட்கை யாலே
கேளுந் துணையும் முதற்கேடில் பதங்க ளெல்லா
மாளும் பெருமா னடித்தாமரை யல்ல தில்லார்
மூளும் பெருகன் பெனுமூர்த்தியார் மூர்த்தி யார்தாம். (கூ)

அந்திப் பிறைசெஞ் சடைமேலணி யால வாயி
லெந்தைக் கணிசந் தனக்காப்பிடை யென்று முட்டா
வந்தச் செயலி னிலேகின்றடி யாரு வப்பச்
சிந்தைக் கினிதாய திருப்பணி செய்யு நாளில். (கூ0)

காணக் கடிசூழ் வடுகக்கரு நாடர் காவன்
மானப் படைமன்னன் வலிந்து நிலங்கொள் வாளு
யானைக் குதிரைக் கருவிப்படை வீரர் திண்டேர்
சேனைக் கடலுங் கொடுதென்றிசை நோக்கி வந்தான். (கூக)

வந்துற்ற பெரும்படை மண்புதை யப்ப ரப்பிச
சந்தப் பொதியிற் றமிழ்நாடுடை மன்னன் வீரஞ்
சிந்தச் செருவென்று தன்னுணை செலுத்து மாற்ருற்
கந்தப் பொழில்சூழ் மதுராபுரி காவல் கொண்டான். (கூஉ)

வல்லாண் மையின் வண்டமிழ் நாடு வளம்படுத்தி
நில்லா நிலையொன் றியவின்மையி னீண்ட மேரு
வில்லா ண்டிமைத் திறமேவிய நீற்றின் சார்பு
செல்லா தருகந்தர் திறத்தினிற் சிந்தை தாழ்ந்தான். (கூடு)

தாழுஞ் சமண்கையர் தவத்தைமெய் யென்று சார்ந்து
வீழுங் கொடியோ னதுவன்றியும் வெய்ய முன்னேச
சூழும் வினையா லரவஞ் சுடர்த் திங்களோடும்
வாழுஞ் சடையா னடியாரையும் உன்மை செய்வான். (கூச)

அந்தம் மிலவா மிறைசெய்யவு மன்ப ஞர்தாம்
மூந்தைம் முறைமைப் பணிமுட்டலர் செய்து வந்தார்
தந்தம் பெருமைக் களவாகிய சார்பி னிற்கு
மெந்தம் பெருமக் களையாவர் தடுக்க வல்லார். (கூடு)

செக்கர்ச் சடையார் விடையார்திரு வால வாயுண்
மூக்கட் பரனூர் திருத்தொண்டரை மூர்த்தி யாரை
மைக்கற் புரைநெஞ் சுடைவஞ்சகன் வெஞ்ச மண்பே
ரெக்கர்க் குடனுக விகழ்ந்தன செய்ய வெண்ணி. (கசு)

எள்ளுஞ் செயல்வன்மைக ளெல்லையில் லாத செய்யத்
தள்ளுஞ் செயலில் லவர்சந்தனக் காப்புத் தேடிக்
கொள்ளுந் துறையு மடைத்தான்கொடுங் கோன்மை செய்வான்
றென்னும் புனல்வே ணியர்க்கன்பருஞ் சிந்தை கொந்து. (கஎ)

புன்மைச் செயல் வல்லமண்குண்டரிற் போது போக்கும்
வன்மைக் கொடும்பா தகன்மாய்ந்திட வாய்மை வேத
நன்மைத் திருநீற் றுயர்நன்னெறி தாங்கு மேன்மைத்
தன்மைப் புலிமன் னரைச்சார்வதென் றென்று சார்வார். (கஅ)

காய்வுற்ற செற்றங்கொடு கண்டகன் காப்ப வுஞ்சென்
ரூய்வுற்ற கொட்பிற் பகலெல்லே யடங்க நாடி
யேய்வுற்ற நற்சந் தனமெங்கும் பெரூது சிந்தை
சாய்வுற்றிட வந்தனர் தம்பிரான் கோயி றன்னில். (கக)

நட்டம் புரிவா ரணிநற்றிரு மெய்ப்பூச் சின்று
மூட்டும் பரிசா யினுந்தேய்க்குங்கை மூட்டா தென்று
வட்டந்திகழ்பா றையின்வைத்து முழங்கை தேய்த்தார்
கட்டும் புறந்தோ னரம்பென்பு கரைந்து தேய. (உ0)

கல்லின் புறந்தேய்த்த முழங்கை கலுழ்ந்து சோரி
செல்லும் பரப்பெங் கணுமென்பு திறந்து மூளே
புல்லும் படிகண்டு பொறுத்திலர் தம்பி ராஞ
ரல்லின்க ணெழுந்தது வந்தருள் செய்த வாக்கு. (உக)

அன்பின் றுணிவா லிதுசெய்திட லேய வுன்பால்
வன்புன்கண் வினைத்தவன் கொண்டமண் ணெல்லாங் கொண்டு
மூன்பின்னல் புகுந்தன மூற்றவு நீத்துக் காத்துப்
பின்புன் பணிசெய்து நம்பேரூல கெய்து கென்ன. (உஉ)

இவ்வண்ண மெழுந்தது கேட்டெழுந் தஞ்சி மூன்பு
செய்வண்ண மொழிந்திடத் தேய்ந்தபுண் ணூறு தீர்ந்து
கைவண்ண நிரம்பின வாசமெல் லாங்க லந்து
மொய்வண்ண விளங்கொளி யெய்தினர் மூர்த்தி யார்தாம். (உங)

அந்நா ளிரவின்க ணமண்புகல் சார்ந்து வாழு
மன்ஞ கியபோர் வடுகக்கரு ணாடர் மன்னன்
றன்ஞரூ முடிந்தது சங்கரன் சார்பி லோர்க்கு
மின்ஞ மெனநீ டியமெய்ந்நிலே யாமை வெல்ல. (உச)

இவ்வா றுலகத்தி னிறப்ப வுயர்ந்த நல்லோர்
மெய்வா ழுலகத்து விரைந்தணை வார்க ளேபோ
லவ்வா றரஞ ரடியாரை யேலத்த தியோன்
வெவ்வாய் நிரயத் திடைவீழ விரைந்து வீந்தான். (உஙி)

முழுதும் பழுதே புரிமூர்க்க னுலந்த போதி
னெழுதுங் கொடிபோல் பவருட்பட வேங்கு சுற்ற
முழுதும் புலர்வுற் றதுமற்றவ னன்ன மாலைப்
பொழுதும் புலர்வுற் றதுசெங்கதிர் மீது போத. (உசு)

அவ்வேலையி லங்க ணமைச்சர்கள் கூடித் தங்கள்
கைவேறுகொ ளீம வருங்கடன் காலே முற்றி
வைவே லவன்றன் குலமைந்தரு மின்மை யாலே
செய்வேறு வினைத்திறஞ் சிந்தனை செய்து தேர்வார். (உஎ)

தாழுஞ் செயலின் ரூருமன்னவன் ருங்க வேண்டுங்
கூழுங் குடியு முதலாயின கொள்கைத் தேனுஞ்
சூழும் படைமன் னவன்றே னினைக் காவ லின்றி
வாழுந் தகைத் தன்றிந்த வையக மென்று சொன்னார். (உஅ)

வேறு.

பன்முறை புயிர்க ளெல்லாம் பாலித்து ஞாலங் காப்பான்
றன்னெடுங் குடைக்கீழ்த் தத்த நெறிகளிற் சரித்து வாழு
மன்னரை யின்றி வைகு மண்ணுல கெண்ணுங் காலை
யின்னுயி ரின்றி வாழும் யாக்கையை யொக்கு மென்பார். (உக)

இவ்வகை பலவு மெண்ணி யிங்கினி யரச ரில்லை
செய்வகை யிதுவே யென்று தெளிபவர் சிறப்பின் மிக்க
மைவரை யனைய வேழங் கண்கட்டி விட்டான் மற்றக்
கைவரை கைக்கொண் டார்மண் காவல்கைக் கொள்வா ரென்று. (கo)

வேறு.

செம்மாண்வினை யர்ச்சனை நான்முறை செய்து தோளா
லிம்மாநில மேந்தவொ ரேந்தலை யேந்து கென்று
பெய்மாமுகில் போன்மதம் பாய்பெரு கோடை நெற்றிக்
கைம்மாவை நறுந்துகில் கொண்டுகண் கட்டி விட்டார். (கக)

கண்கட்டி விடுங்களி யானையக் காவன் மூதூர்
மண்கொட்புற வீதி மருங்கு திரிந்து போகித்
திண்பொற்றட மாமதில் சூழ்திரு வால வாயின்
விண்பிற்பட வோங்கிய கோபுர முன்பு மேவ. (கஉ)

நீங்கும் பிரவின்க ணிகழ்ந்தது கண்ட தொண்ட
நீங்கெம் பெருமா னருளாமெனி லிந்த வையந்
தாங்குஞ் செயல்பூண்பனென் றுள்ளந் தளர்வு நீங்கிப்
பூங்கொன்றை மிலைந்தவர் கோயிற் புறத்தி னிற்ப. (கங)

வேழத் தரசங்கண் விரைந்து நடந்து சென்று
வாழ்வுற் றுலகஞ்செய் தவத்தினின் வள்ள லாரைச்
சூழ்பொற் சுடர்மா மணிமாலைத் தோய முன்பு
தாழ்வுற் றெடுத்துப் பிடர்மீது தரித்த தன்றே. (கச)

மாதங்க மெருத்தினில் வைத்தவர் தம்மைக் காணு
வேதங்கெட வெண்ணிய திண்மை யமைச்ச ரெல்லாம்
பாதங்களின் மீது பணிந்தெழுந் தார்க ளப்போ
தோதங்களர் வேலையை யொத்தொலி மிக்க தவ்வூர். (கஞ)

சங்கங்கண் முரன்றன தாரைகள் பேரியோடு
மெங்கெங்கு மியம்பின பல்லிய மெல்லை யில்ல
வங்கங்கு மலிந்தன வாழ்த்தொலி யம்பொற் கொம்பின்
பங்கன் னருளா லுலகாள்பவர் பாங்க ரெங்கும். (கட)

வெங்கட் களிற்றின் மிசைநின்று மிழிச்சி வேரித்
தொங்கற் சுடர்மா லைகள்சூழ்முடி சூடி சாலை
யங்கட் கொடுபுக் கரியாசனத் தேற்றி யொற்றைத்
திங்கட் குடைக்கீ ழரிமைச்செயல் சூழ்ந்து செய்வார். (கஎ)

மன்னுந் திசைவேதியின் மங்கல வாகு திக்கட்
டென்னுஞ் சுடர்வண்ணி வளர்த்துத் துதைந்த நூல்சூழ்
பொன்னின் கலசங்கள் குடங்கள் பூரித்த னீ
ருன்னுஞ் செயன்மந் திரயோகர் நிறுத்தி னர்கள். (கஅ)

வர்துற்றெழு மங்கல மாந்தர்க டம்மை நோக்கிச்
சிந்தைச் சிவமே தெளியுந்திரு மூர்த்தி யார்தா
முந்தைச் செயலா மமண்போய்முதற் சைவ மோங்கி
லிந்தப்புவி தாங்கியிவ் வின்னர சாள்வ னென்றூர். (கூக)

அவ்வாறு மொழிந்தது கேட்ட வமைச்ச ரோடு
மெய்வாழ்தரு நூலறி வின்மிகு மாந்தர் தாமு
மெவ்வாறருள் செய்தனை மற்றவை யன்றி யாவர்
செய்வார் பெரியோ யெனச்சேவடி தாழ்ந்து செப்ப. (சஅ)

வையம் முறைசெய் குவளுகில் வயங்கு நீறே
செய்யும் மபிடே கமுமாக செழுங்க லன்க
ளோயன் னடையா ளமுமாக வணிந்து தாங்கு
மொய்புன் சடைமா முடியேமுடி யாவ தென்றூர். (சக)

என்றிவ்வுரை கேட்டலு மெல்லையில் கல்வி யோரும்
வன்றிண்மதி நூல்வளர் வாய்மை யமைச்சர் தாமு
நன்றிங்கரு டானென நற்றவ வேந்தர் சிந்தை
யொன்றும் மரசா ளரிமைச்செய லான வுய்த்தார். (சஉ)

மாடெங்கு நெருங்கிய மங்கல வோசை மல்கச்
சூடுஞ்சடை மௌலி யணிந்தவர் தொல்லை யேனந்
தேடுங்கழ லார்திரு வாலவாய் சென்று தாழ்ந்து
நீடுங்களிற் றின்மிசை நீண்மறு கூடு போந்தார். (சங)

மின்னும்மணி மாளிகை வாயிலின் வேழ மீது
தன்னின்று மிழிந்து தயங்கொளி மண்ட பத்திற்
பொன்னின்னரி மெல்லணைச் சாமரைக் காமர் பூங்கான்
மன்னுங்குடை நீழ லிருந்தனர் வையந் தாங்கி. (சச)

குலவுந்துறை நீதி யமைச்சர் குறிப்பின் வைகக்
கலகஞ்செ யமண்செய லாயின கட்டு நீக்கி
நிலவுந்திரு நீற்று நெறித்துறை நீடு வாழ
வுலகெங்கு நிரம்பிய சைவ முயர்ந்து மன்ன. (சஙி)

நுதலின்கண் வீழித்தவர் வாய்மை நுணங்கு நூலின்
பதமெங்கு நிறைந்து விளங்கப் பவங்கண் மாற
வுதவுந்திரு நீறுயர் கண்டிகை கொண்ட வேணி
முதன்மும்மையி னுலக காண்டனர் மூர்த்தி யார்தாம். (சசு)

ஏலங் கமழ்கோதையர் தந்திற மென்று நீங்குஞ்
சீலங் கொடுவெம்புலன் றெவ்வுடன் வென்று நீக்கி
ஞாலந் தனிநேமி நடாத்தி நலங்கொ ளூழி
காலம் முயிர்கட் கிடரான கடிந்து காத்து. (சஎி

பாதம் பரமன்னவர் சூழ்ந்து பணிந்து போற்ற
வேதம் பிணியா வகையிவ்வுல காண்டு தொண்டின்
பேதம் புரியா வருட்பேரர சாளப் பெற்று
நாதன் கழற்சே வடிநண்ணின ரண்ண லாரே. (சஅ

அகல்பா றையின்வைத்து முழங்கையை யன்று தேய்த்த
விகலார் களிற்றன் பரையேத்தி முருக னூரா
முகில்சூழ் நறுஞ்சோலையின் மொய்யொளி மாட வீதிப்
புகலூர்வரு மத்தணர் தந்திறம் போற்ற லுற்றாம். (சக)

மூர்த்திநாயனூர்புராண முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் - க,0உக.

சூ ச ன ம்.

க. சிவனுக்குச் சந்தனக்காப்புக் கொடுத்தல்.

சிவபெருமானுக்குச் சாத்தும்பொருட்டுச் சந்தனக்காப்புக் கொடுத்தல் உத்தம சிவபுண்ணியமாம். சந்தனக்குழம்போடு பனிநீர் குங்குமப்பூ கோரோசனை கஸ்தூரி பச்சைக்கர்ப்பூரம் என்பன கலந்து சாத்தல் உத்தமோத்தமம். சிவனுக்குச் செயற்பா லனவாகிய உபசாரங்கள் எல்லாவற்றுள்ளும் கந்தம் சாத்தலே சிறந்தது என்று சிவா கமம் செப்பும். "சாத்துக சாந்துபனி நீர்பளிதங் குங்குமமுஞ்—சேர்த்தியுளத் தாத ரவு செய்து." எ-ம். "கூட்டுவித்தா ரும்பளிதங் குங்குமஞ்சாந் தம்பனிநீர்—தீட்டும் விதிதன்னைத் தேர்ந்து." எ-ம். சோமவார விரதகற்பத்தினும், "சுகந்த கந்தஞ் சுல லிய லேபன—முகந்த லிங்கத் தொருதினஞ் சாத்திஞே—ரிகந்து பாவ மிமையவர் கோடியாண்—டகந்தெ ளிந்தய் கரன்பதீ ரண்ணுவார்." எனச் சிவபுண்ணியத்தெளி வினும், கூறுதல் காண்க.

இச்சிவபுண்ணியத்தால் நிகச் சிறப்புற்றவர் இம்மூர்த்திநாயனூர் என்பது, இவர் தாம் நாடோறும் தவறுது செப்பச் சங்கற்பித்த இத்திருத்தொண்டை அது பற்றி அரசன் தமக்குச் செய்த இடுக்கண் மிகுதி கண்டும் தவறுது செய்தமையானும், சந்த னக்கட்டைக்கு முட்டுவந்தபொழுது தமது முழங்கையைச் சந்தனக்கல்லிலே தேய்த் தது பெருந்தன்மையானும், தாம் உலகாளும் அரசராய வழியும் செருக்கு உறுது இப் பணியைத் தாமே செய்தமையானும், தெளியப்படும். இவர் தமது சரீரத்திற் சிறிதும் பற்றின்றி, சிவனே தமக்கு இனியர் என்று துணிந்து, அவரையே இடைவிடாது பற்றி நின்ற மெய்யன்பர் என்பது இச்செயற்கருஞ் செயலால் உணர்க.

உ. சிவனடியாருக்குத் தீங்கு செய்தலால் பெறப்படும் பயன்.

சிவனடியார்களுக்குத் தீங்கு செய்தோர் நரகத்து வீழ்ந்து வருந்துவர். அது "காட்டுமுன் னொளியைக் கண்ட கண்ணனைக் கயந்து சொல்லக்—கேட்டவர் கேட் பித் தார்கள் கெழுமின ருடன்பட் டார்முன்—மூட்டின ரென்ற வைந்து மூடரும் கூடிமூழ்கி—மீட்டிடு வாரு மின்றி யெரிநிர யத்துள் வேவார்." "மனத்தினுல் வடிவு தன்னுல் வழுக்கிய சழக்கர் தாமு—மினத்தொடு மிணங்கி வேவ ரெரிநிர யத்தை யெய்தி—யெனைத்துள காலந் தானு மென்றுளத் தேங்கி யெய்ப்பர்—தனக்கய லுறவி லானைத் தவறுவ ரென்னே தாமே." "மற்றைய நரக பேத மனைத்தினு மயங்கி மூவேழ்—சுற்றமுஞ் சுமலத் தாமும் கூடியே துயங்கி வீழ்வ—ரெற்றுவ ரியம னுத ரெமக்குற வார்கு மில்லை—புற்றவித் துயரந் தன்னை யொழிக்கவென் றழிவருன்னம்." எனச் சிவதருமோத்தரத்திற் கூறுமாற்றால், உணர்க. சிவனடியாருக்கு இடுக்கண் செய்த இக்கருணுடராசனும் இவ்வாறே நரகத்து வீழ்ந்தமைதெளிக. ஆதலால், சிவன டியார்களுக்கு மதந்தும் தீங்கு நினையற்க.

ஈ. சைவம் தழைக்க அரசியற்றல்.

அரசன் வேதாகமங்களால் உணர்த்தப்படும் சற்சமயமாகிய சைவத்தின் வழி வழுவாது ஒழுகுவானுயின்; அவன் கீழ்வாழும் குடிகளும் இவ்வரசன் தான் ஒழுகிய வாறே ஒழுகாதாரைத் தண்டிப்பன் என்னும் அச்சத்தாலும், பத்தியாலும், இயல்பாலும் சைவசமயத்தின் வழி தவறாது ஒழுகி, போகம் மோக்ஷம் என்னும் இருபயனையும் பெறுவர்கள். இதுபற்றியன்றே; அரசனைச் சைவமார்க்கத்தில் நிறுத்திய ஆசாரியர் உலகத்துக்கெல்லாம் ஆசாரியர் என்று சிவாகமம் கூறியதூஉம் என்க. "ஐயமற விபரீத மதுவு மீச னருண்மொழியை யாராய்ந்த வரக ஞசான்—வையகமு முய்யவுளிச் சைவ தன்ம மன்னவனுக் களிக்கவவன் மருவுநீதி—யெய்தியிடு மூலகச்ச மெய்தலானு மெல்லோரு மிருபயனு மெய்த லாலே—சைவநெறி தானெயரசற் களித்த வாசான் சகத்தினுக்குந் தேசிகனே சாற்றுங் காலே." என்று சிவதருமோத்தரத்தில் கூறுமாறுணும், உணர்க. அரசன் ஆருகத சமயி ஆகி, சிவனடியார்களுக்கு இடுக்கண் செய்தலால்; அவன்கீழ் வாழும் குடிகள் அப்பரமதப் படுகுழியில் வீழ்ந்து எரிவாய் நரகத்துக்கு இரையாதலேயும், சைவத்து நிற்பாரும் அரசனுல்வரும் இடுக்கண் பிருதி பற்றி அச்சத்தினுலே சிவபுண்ணியங்கள் செய்யாது வாளா கெடுதலேயும், கண்டு இரங்கியன்றே; அதிபாதகனுகிய இவ்வரசன் இறப்ப, இப்பாண்டிநாடு சைவமன்னரைச் சார்வது எக்காலம் என்று இம்மூர்த்திநாயனர் வருந்துவாரானர். இதனுல், இவரது இரக்கமுடைமை தெளிக. மெய்யுணர்வு உடையார்க்குத் தாம் பெற்ற பேறு உலகம் பெறுதல்வேண்டும் என்பதே உள்ளக்கிடக்கை என்க. "நான்பெற்ற வின்பம் பெறுக விவ் வையகம்." என்றார் திருமூலநாயனரும்.

இம்மூர்த்திநாயனர் தாம் அரசர்வாழ்வைச் சிறிதாயினும் நன்கு மதித்து வீரும்பினவர் அல்லர். பிறர் பயன் நோக்கினராயினும், தாமே அரசாள நினைந்தவரும் அல்லர். உயிர்கள் மாட்டு எழுந்த பெருங்கருணையினுலே பாண்டிநாடு சைவமன்னரைச் சார்தல் வேண்டும் என்னும் கருத்தொன்றே உடையராயினர். "அடியவர் குறைவு தீர்த்தாண்டருள்வதே விரதம்பூண்ட" கருணநிதியாகிய சிவன் தம்மாட்டு உள்ள வாறு எழுந்த பேரன்பினுலாகிய இக்கருத்தை முடித்தருளத் திருவுளங்கொண்டு, பரசமயங்கள் பாறச் சைவசமயம் தழைக்க அரசியற்றவல்லார் இவர் அன்றிப் பிறரிலர் ஆதலால், இவரையே அந்காட்டிற்கு அரசராக்கினர். இதனுல், சிவன் தமது அடியார் கருத்தை முற்றுவித்தருளும் பெருங்கருணையினர் என்றுதுணிந்து, யாவருக்கும் அஞ்சாது அவரையே நம்பி வழிபடுக. "தூண்டு சுடரனைய சோதி கண்டாய் தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்—காண்டற் கரிய கடவுள் கண்டாய் கருதுவார்க் காற்ற வெளியான் கண்டாய்—வேண்டுவார் வேண்டியதே யீவான் கண்டாய் மெய்ந்நெறி கண்டாய் விரதமெல்லா—மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய் மறைக்காட் டுறையு மணாளன்றனே." என்றார் திருநாவுக்கரசுநாயனர். "இறைவனே யெவ்வுயிருந் தோற்றுவிப்பான் றோற்றி—யிறையனே யீண்டிறக்கஞ் செய்வா-னிறைவனே—யெந்தா யெனவிரங்கு மெங்கண்மேல் வெந்துயரம்—வந்தா லதுமாற்று வான்." என்றார் காரைக்காலம்மையார்.

இம்மூர்த்திநாயனர் அரசர்வாழ்விற் சிறிதும் பற்றிலர் ஆயினும்; சிவனது ஆஞ்ஞை உண்மையானும், அவரது திருவருள் வழிப்பட்டு நிற்கும் தமது ஆளுகையால் உலகம் உய்யும் என்னும் கருத்தானுமே, அதற்கு இசைந்தருளினர். அது, இவர் மன்னரிகளே நோக்கி, சமண சமயம் நீங்கச் சைவசமயம் ஓங்குமாயின் அரசாள்வேன் என்றமையானும், விபூதியே அபிஷேகத் திரவியமும் உருத்திராக்ஷமே ஆபரணமும் சடாமுடியே கிரீடமும் ஆகக்கொண்டே அரசாண்டமையானும், பெண்ணைச் சிறிதும் இன்றி ஐம்புலன்களை அடக்கி நின்ற பெருந்தவவடைமையானும், துணியப்படும். இது

ஞல், மெய்புணர்வு உடையோர் அண்டமனைத்தும் ஒருங்கு ஆளப்பெறினும், அதனை ஒருபொருளெனக் கருதாது, சிவனது திருவருள்வழி நின்றே அவருக்குத் திருத்தொண்டு செய்தலில் தவறார் என்பது துணிக. "கண்டென்தை யென்றிறைஞ்சிக் கைப்பணியான் செய்யேனே—லண்டம் பெறினு மதுவேண்டேன் - றுண்டஞ்சேர்—வின்ணுளுந் திங்களாய் மீக்குலக மேழினுக்குங்—கண்ணுளா வீதென் கருத்து." என்றார் காரைக்காலம்மையார். "அருடரு சீர்த்தில்லே யம்பலத் தான்ற னருளினன்றிப்—பொருடருவானத் தரசாதலிற் புழு வாதனன்றுஞ்—சுருடரு செஞ்சடை யோனரு னேற்றுற விக்குநன்று—மிருடரு கீழேழ் நரகத்து வீழு மிருஞ்சிறையே." என்றார் நம்பியாண்டார்நம்பி. மெய்புணர்வு உடையார்க்கு வீபூதியே சாந்தமும், உருத்திராகூமே ஆபரணமுமாம் என்பது "ஊரெலா மட்ட சோறு நம்மதே யுவரி சூழ்ந்த—பாரெலாம் பாய றுனைற் கோவணம் பரிக்கு மாடை—சீரெலாஞ் சிறந்த சாந்தந் தெய்வநீ றணிபூண் கண்டி—நீரெலாஞ் சுமந்த வேணி நிருத்தனுட் கொண்ட வன்றே." என்னும் திருவிளையாடற்புராணச் செய்யுளால் உணர்க. சடைமுடி தரித்தல் புண்ணியம் என்பது, "பத்தர் நூன்முறை வேணி பரித்திடி—லொத்த வற்றுறு வேணியொவ் வொன்றிற்கு—மெத்து மச்சுவ மேத பலத்தினேச்—சத்தி யம்மவர் நாடொறுஞ் சார்தலே." என்னும் சிவபுண்ணியத் தெளிவினுல், காண்க. கூடாவொழுக்கம் உள்வழி இவ்வேடம் தமக்கும் பிறர்க்கும் நீமையே பயக்கும் என்பது ஏனுதி நாதநாயனுர் புராணத்துச் சூசனத்திற் கூறினம்.

*

முருக நாயனுர் புராணம்.

தாது சூழுங் குழன்மலேயா டளிர்க்கை சூழுந் திருமேனி
மீது சூழும் புனற்கற்றை வேணி நம்பர் விரும்புபதி
சோதி சூழு மணிமௌலிச் சோழர் பொன்னித் திருநாட்டுப்
போது சூழுந் தடஞ்சோலைப் பொய்கை சூழும் பூம்புகலூர். (க)

நாம மூதூர் மற்றதனு ணல்லோர் மனம்போ லவரணிந்த
சேம நிலவு திருநீற்றின் சிறந்த வெண்மைத் திருந்தொ ளியால்
யாம விருளும் வெளியாக்கு மிரவே யல்ல விரைமலர்மேற்
காமர் மதுவுண் சிறைவண்டுங் களங்க மின்றி விளங்குமா ல். (உ)

நண்ணு மிசைதேர் மதுகரங்க ணனைமென் சினையின் மருங்கலைய
வண்ண மதுரத் தேன்பொழிவ வாச மலர்வா யேயல்ல
தண்ணென் சோலை யெம்மருங்குஞ் சாரு மடமென் சாரிகையின்
பண்ணின் கிளவி மணிவாயும் பதிகச செழுந்தேன் பொழியுமால். (ஊ)

வண்டு பாடப் புனற்றடத்து மலர்ந்து கண்ணீ ரரும்புவன
கொண்ட வாச முகையவிழ்ந்த குளிர்பங் கயங்க ளேயல்ல
வண்டர் பெருமான் றிருப்பாட்டி னமுதம் பெருகச் செவிமடுக்குந்
தொண்டர் வதன பங்கயமுங் துளித்த கண்ணீ ரரும்புமால். (எ)

ஆனை பெருமை வளஞ்சிறந்த வந்தண் புகலூ ரதுதன்னின்
மான மறையோர் குலமரபின் வந்தார் மூன்தை மறைமுதல்வர்
ஞான வரம்பின் றலேன்றூர் நாகம் பூனைவார் சேவடிக்கீ
ழூன மின்றி நிறையன்பா லுருகு மனத்தார் முருகனுர். (ஏ)

அடைமே லலவன் றுயிலுணர வலர்செங் கமல வயற்கயல்கண்
மடைமே லுகளுந் திருப்புகலூர் மன்னி வாழுந் தன்மையராய்
வீடைமேல் வருவார்க் காளான மெய்மைத் தவத்தா லவர்கற்றைச்
சடைமே லணியத் திருப்பள்ளித் தாமம் பறித்துச் சாத்துவார். (சு)

புலரும் பொழுதின் முன்னெழுந்து புனித நீரின் மூழ்கிப்போய்
மலருஞ் செவ்வித் தம்பெருமான் முடிமேல் வானீ ராறுமதி
யுவவு மருங்கு முருகுயிர்க்க நகைக்கும் பதத்தி னுடன்பயிற்ற
வலகின் மலர்கள் வெவ்வேறு திருப்பூங் கூடை களிலமைப்பார். (எ)

கோட்டு மலரு நிலமலருங் குளிர்நீர் மலருங் கொழுங்கொடியின்
றோட்டு மலரு மாமலருஞ் சுருதி மலருந் திருவாயிற்
காட்டு முறுவ னிலவலரக் கனகவரையிற் பன்னகாண்
பூட்டு மொருவர் திருமுடிமேற் புனைய லாகு மலர்தெரிந்து. (அ)

கொண்டு வந்து தனியிடத்தி னிருந்து கோக்குங் கோவைகளு
மிண்டைச் சுருக்குந் தாமமுட னிணைக்கும் வாச மாலைகளுந்
தண்டிற் கட்டுங் கண்ணிகளுந் தாளிற் பிணைக்கும் பிணையல்களு
நுண்டா திறைக்குந் தொங்கல்களுஞ் சமைத்து நடங்கு நான்மார்பர். (கூ)

ஆங்கப் பணிக ளானவற்றுக் கமைத்த காலங் களினமைத்துத்
தாங்கிக் கொடுசென் றன்பினெடுஞ் சாத்தி வாய்ந்த வர்ச்சனைகள்
பாங்கிற் புரிந்து பரிந்துள்ளார் பரமர் பதிகப் பற்ருன
வோங்கிச் சிறந்த வஞ்செழுத்து மோவா நாவி னுணர்வினர். (கo)

அன்ன வடிவு மேனமுமா யறிவா ரிருவ ரறியாமன்
மன்னும் புகலூ ருறைவாரை வர்த்த மான வீச்சுரத்து
நன்னர் மகிழ்ச்சி மனங்கொள்ள நாளும் பூசை வழுவாமே
பன்னும் பெருமை யஞ்செழுத்தும் பயின்றே பணிந்து பரவினர். (கக)

தள்ளு முறைமை யொழிந்திடவித் தகுதி யொழுகு மறையவர்தாந்
தெள்ளு மறைகண் முதலான ஞானஞ் செம்பொன் வள்ளத்தி
லள்ளி யகில மீன்றளித்த வம்மை முலைப்பா லுடனுண்ட
பிள்ளை யார்க்கு நண்பருமாம் பெருமை யுடையா ராயினர். (கஉ)

அங்க ணமருந் திருமுருக ரழகார் புகலிப் பிள்ளையார்
பொங்கு மணத்தின் முன்செய்த பூசை யதனுற் புக்கருளிச்
செங்க ணடலே றுடையவர்தாஞ் சிறந்த வருளின் பொருளளிக்கத்
தங்கள் பெருமா னடிநீழற் றலேயா நிலைமை சார்வுற்றார். (கங)

அரவ மணிந்த வரையாரை யருச்சித் தவர்தங் கழனிழற்கீழ்
விரவு புகலூர் முருகனர் மெய்மைத் தொண்டின் றிறம்போற்றிக்
கரவி லவர்பால் வருவாரைக் கருத்தி லுருத்தி ரங்கொண்டு
பரவு மன்பர் பசுபதியார் பணிந்த பெருமை பரவுற்றேன். (கச)

முருகநாயனார்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - க,oகஇ.

சூசனம்.

பூக் கோய்து மாலைதொடுத்துச் சிவனுக்குச் சாத்தல்.

சிவனுக்கு உரியனவெனச சிவாகமங்களில் விதிக்கப்பட்ட பூக்களே, மெய்யன் போடி விதிப்படி கொய்து, பலவகைப்பட்ட மாலைகள் செய்து, சிவனுக்குச் சாத்தி அருச்சனை செய்தலும், ஸ்ரீபஞ்சா.க்ஷரம் செபித்தலும், மிகச் சிறந்த புண்ணியமாம். "நிலைபெறுமா றெண்ணுதியே னெஞ்சே நீவா நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்—புலர்வதன்மு னலகிட்டு மெழுக்கு மிட்டுப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்—தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச் சங்கரா சயபோற்றி போற்றி யென்று—மலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதீ யென்று மாரூரா வென்றென்றே யலறு நில்லே." "பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்—நாக்கைக் கொண்டர னாம நவில்கிலா—ராக்கைக் கேயிரை தேடி யலமந்து—காக்கைக் கேயிரை யாகிக் கழிவரே." என்னுந் திருநாவுக்கரசுநாயனார் தேவாரங்களானும், "முத்தனே முதல்வா முக்கண் முனிவா மொட்டரு மலர்பறித் திறைஞ்சிப்—பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப் பரகதி கொடுத்தருள் செய்யுஞ்—சித்தனே செல்வத் திருப்பெருந் துறையிற் செழுமலர்க் குருந்தமே வியசீ—ரத்தனே யடியே னுதரித் தழைத்தா லதெந்துவே யென்றரு ளாயே." என்னுந் திருவாசகத்தானும், "நிலத்திற் றிகழ்ந்த நறுமலரு நீருற் பவித்த போதெதையும்—புலத்தி னமுந்தாவன் பிறைடும் போதா னந்தன் கழற்க ணிர்தோர்—மலத்தி னகாதி முத்தன்மல வயிரி யுறையுஞ் சிவலோ கத்—தலத்திற் புகுந்து நலதகைய தலைவராகி நிலவுவரால்." என்னும் சிவபுண்ணி யத்தெளிவானும், உணர்க.

இத்திருப்பணி செய்ய விரும்புவோர், நாடோறும் சூரியன் உதிக்குமுன் எழுந்து, ஸ்நானம் செய்து, தோய்த்து உலர்ந்த வஸ்திரம் தரித்து, சந்தியா வந்தனம் முடித்துக்கொண்டு, சுத்திசெய்யப்பட்டு நாபியின்கீழ செல்லாது மேலே உயர்த்த கைகளே உடையராய், திருப்பூங்கூடையை எடுத்துக்கொண்டு, சிவனது திருவடிக்கணன்றிப் பிறிதொன்றினும் சிறிதும் இறங்காத சிந்தையோடு மௌனம் பொருந்தி, சென்று, பத்திர புஷ்பங்கள் கொய்து, திருப்பூங்கூடையில் இட்டுக்கொண்டு வந்து, சுத்திசெய்யப்பட்ட காலினையுடையராய், புஷ்பமண்டபத்திற் புகுந்து, வீதிப்படி சுத்திசெய்யப்பட்ட பூக்குறட்டில் வைத்து, இண்டை முதலிய திருமாலைகளைச்செய்க. சிவலிங்கத்தைத் தீண்டற்கு உரியார் தாமே சாத்துக. அல்லாதார் அதற்கு உரியாரைக் கொண்டு சாத்துவிக்க. திருப்பூங்கூடையை நாபிக்குக் கீழே பிடியாது ஒரு தண்டின் நுனியிலே கட்டி உயரப் பிடித்துக்கொண்டு வருக. அன்றேல், நாபிக்கு மேலே உயர்த்த கையினற் பிடித்துக்கொண்டு வருக. பத்திரபுஷ்பம் கொய்யும்போது மௌனம் வேண்டும் என்பது, "வைகறை யெழுந்து போந்து புனன்மூழ்கி வாயுங்கட்டி—மொய்ம்மலர் நெருங்கு வாச நந்தன வனத்து முன்னி" என எறிபத்தநாயனார் புராணத்தில் கூறியவாற்றால், உணர்க. மனம் வேறுபடலாகாது என்பது திருமலைச்சிறப்புச் சூசனத்திற் காண்க. தீக்ஷையில்லாதான், இழிகுலத்தான், மிகுநோயாளன், அர்த்தன், ஆசாரமில்லாதான், ஆசௌசமுடையான் என்னும் இவர்கள் கொண்டுவரும்பூ, எடுத்து வைத்த அலர்ந்தபூ, பழம்பூ, உதிர்ந்தபூ, காற்றில் அடிபட்டபூ, கையிலேனும் உடுத்த புடவையிலேனும் எருக்கிலை ஆமணக்கிலைகளிலேனும் வைத்தபூ, அரையின் மேழ இருந்தபூ, புழுக்கடி எச்சம் இலந்நிதால் மயிர் என்னும் இவற்றோடு கூடியபூ, ஸ்நானம் பண்ணமல் எடுத்தபூ, பொல்லா நிலம் மயானசமீபம் சண்டாளர் வசிக்

கும் இடம் முதலிய அசுத்த ஸ்தானங்களில் உண்டாகியபூ, இரவில் எடுத்தபூ, இவை முதலாயின சிவனுக்குச் சாத்தலாகாது. "எடுத்துவைத்தே யலர்ந்தமலர் பழம்பூக் கண் மற்ற வெருக்கிலையா மணக்கிலையி னிற்பொதிந்த பூக்க—ளுடுத்தபுடை வையிற் காத்தி னமைத்தறும் பூக்க ளுதிர்ந்திடிபூ வரையின்மே ழுற்றவிரைப் பூக்க—ளடுத்த புழுக் கடியெச்சஞ் சிலர்நிமய மிறுத லங்கை யில்வைத் தங்கைகுவித் திடுதல்கங்கு றனிலே—யெடுத்தமலர் நீரமிழ்த்தல் புறங்காட்டி லெய்த லெச்சில்குளி யாதெடுத்த லிழிபெனுமா கமமே." என ஞானப்பிரகாசதேசிகர் புஷ்பவிதியினும், "மடியினிற் பறித்தி டும்பூ மலர்ந்துதீழ் விழும்பூ முன்னு—ளெடுபடு மலரி ளம்பூ வீரவினி லெடுத்தி டும்பூ—தொடர்நோயன் றீக்கை யில்லான் றூர்த்தனு சார மற்றேன்—கொடு வரும் பூவ னேத்துங் குழகனுக் காகா வன்றே." எனப்பிறிது புஷ்பவிதியினும் கூறு மாற்றால், உணர்க.

*

இச்சிவபுண்ணியத்தால் மிகச் சிறப்புற்றவர் இம்முருகநாயனர். இவர் விதிவழு வாது சிவனிடத்து இடையறாத மெய்யன்போடும் இபபுண்ணியத்தைச் செய்தமை யால் அன்றோ, பரசமய கோளரியாகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனருக்குத் தோழராகிய பெரும்பேற்றைப் பெற்றும், அவராலே "தொண்டர் தண்கய மூழ்கித் தூணெயலுஞ் சாந்தமும் புகையுங்—கொண்டு கொண்டடி பரவிக் குறிப்பறி முருகன் செய் கோலங்—கண்டு கண்டுகண் குளிரக் களிபரந் தொளிமல்கு கள்ளார்—வண்டு பண்செயும் புகலூர் வர்த்தமா னீச்சரத் தாரே." எ-ம். "ஈசனேறமர் கடவு ளின்னமிர் தெந்தையெம் பெருமான்—பூசு மாசில்வெண் ணீற்றர் பொலிவுடைப் பூம்புக லூரின்—மூசு வண்டறை கொன்றை முருகன்மூப் போதுஞ்செய் முடிமேல்—வாச மாமல ருடையார் வர்த்தமா னீச்சரத் தாரே." எ-ம். புகழப்பட்டும், அவருடைய திருமணத்திலே சிவனது திருவடிநிழலை அடைந்தார். "வந்துமுலகுறு வீசெழி னீல நக் கற்கு மின்பப்—பூந்தண் புகலூர் முருகற்குந் தோழனேப் போகமார்ப்பைக்—காந் தங் கனலிற் குளிர்ப்படித் தக்கடற் கூடலின் வாய்—வேந்தின் றுயர்தவிர்த் தானே யெப் போதும் விரும்பு மினே." என்று திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் திருவந் தாதியிற் கூறினர் நம்பியாண்டார்நம்பி என்க.

உருத்திரபசுபதிநாயனர்புராணம்.

நிலத்தி னேங்கிய நிவந்தெழும் பெரும்புன னீத்த
மலர்த்த டம்பணை வயல்புகு பொன்னிநன் னாட்டுக்
குலத்தி னேங்கிய குறைவிலா நிறைகுடி குழுமித்
தலத்தின் மேம்படு நலத்தது பெருங்திருத் தலையூர். (க)

வான ளிப்பன மறையவர் வேள்வியின் வளர்தீ
தேன ளிப்பன நறுமலர் செறிசெழுஞ் சோலை
யான ளிப்பன வஞ்சுகந் தாடுவார்க் கவ்வூர்
தான ளிப்பன தருமமு நீதியுஞ் சால்பும். (உ)

அங்கண் மாநக ரதனிடை யருமறை வாய்மைத்
துங்க வேதியர் குலத்தினிற் றோன்றிய தூயோர்
செங்கண் மால்விடை யார்செழும் பொன்மலை வல்லி
பங்க ஞாடி மைத்திறம் புரிபசு பதியார், (கூ)

ஆய வத்தண ரருமறை புருத்திரங் கொண்டு
மாய ஞரறி யாமலர்ச் சேவடி வழுத்துந்
தூய வன்பொடு தொடர்பினி லிடையருச் சுருதி
நேய நெஞ்சின ராகியத் தொழிறலை நின்றூர். (ச)

கரையில் கம்பலை புள்ளொலி கறங்கிட மருங்கு
பிரச மென்சுரும் பறைந்திடக் கருவரால் பிறழு
நிரைநெ டுங்கய நீரிடை நெருப்பெழுந் தனைய
விரைநெ கிழ்ந்தசெங் கமலமென் பொய்கையின் மேவி. (ஞ)

தெள்ளு தண்புனல் கழுத்தள வாயிடைச செறிய
வுள்ளு றபுக்கு நின்றுகை யுச்சிமேற் குவித்துத்
தள்ளு வெண்டிரைக் கங்கைநீர் ததும்பிய சடையார்
கொள்ளு மன்பினி லுருத்திரங் குறிப்பொடு பயின்றூர். (ஈ)

அரும றைபபய னுகிய வுருத்திர மதனை
வருமு றைப்பெரும் பகலுமெல் லியும்வழு வாமே
திரும லர்பபொகுட் டிருந்தவ னனையவர் சிலரா
லொருமை யுய்த்திட வுமையிட மகிழ்ந்தவ ருவந்தார். (எ)

காத லன்பர்த மருந்தவப பெருமையுங் கலந்த
வேத மந்திர நியதியின் மிருதியும் விரும்பி
யாதி நாயக ரமர்ந்தருள் செய்யமற் றவர்தாந்
ஜீதி லாலிலை சிவபுரி யெல்லையிற் சென்றூர். (அ)

நீடு மன்பினி லுருத்திர மோதிய நிலையா
லாடு சேவடி யருகுற வணைந்தன ரவர்க்குப்
பாடு பெற்றநீ ருருத்திர பசுபதி யாராங்
கூடு நாமமு நிகழ்ந்தது குவலயம் போற்ற. (கூ)

அயில்கொண் முக்குடு மிப்படை யார்மருங் கருளாற்
பயிலு ருத்திர பசுபதி யார்திறம் பரசி
யெயிலு டைத்தில்லை யெல்லையி ணிலைப்போ வாராஞ்
செயலு டைபபுறத் திருத்தொண்டர் திறத்தினை மொழிவாம். (கo)

உருத்திரபசுபதிநாயனூர்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம். - க,ஏசடி.

சூசனம்.

ஸ்ரீ உருத்திரம் ஓதல்.

வேதம் நான்கும் வேதாங்கம் ஆறும் நியாயம் மீமாஞ்சை மிருதி புராணம் என்னும் உபாங்கம் நான்கும் ஆகிய பதினான்கு வித்தைகளுள்ளும் வேதமே மேலானது; வேதத்துள்ளும் உருத்திரைகாதசினி மேலானது; அதினுள்ளும் ஐந்தெழுத்து மேலானது; அதினுள்ளும் சிவ என்னும் இரண்டெழுத்தே மேலானது. இவ்வாறு சிவதத்துவ விவேக விருத்தியிற் கூறப்பட்டது. வேதபுருஷனுக்கு இந்த உருத்திரம் கண்ணும், இதனுள் இருக்கும் பஞ்சாக்ஷரம் கண்மணியுமாம். இது சதுர்வேத தாற் பரிய சங்கிரகத்திற் காண்க. இவ்வுருத்திரத்தில் பகுப்பின்றி உயிர்ப் பொருள் உயி

நில் பொருள் எல்லாவற்றையும் தனித்தனி எடுத்தோதி யழிபாடு கூறுதல் எற்றுக் கெனின்; ஸ்ப்பொருள்களினும் சிவன் கலந்திருப்பர் என்பது தெளிந்துகொள்ளுதற் பொருட்டென்க. தமிழ்வேதமாகிய தேவாரத்துள் நின்ற திருத்தாண்டகம் முதலிய வற்றினும் "இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி யியமான னெறியுங் காற்று மாகி— யருநிலைய திங்களாய் ஞாயி ருமி யாகாச மாயட்ட மூர்த்தி யாகிப்—பெருநலமுஞ் குற்றமும் பெண்ணு மாணும் பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி—நெருநலையா யின் ருமி னாளை யாகி நிமிர்புன் சடையடிக ணின்ற வாறே." என்பது முதலாக இவ்வாறு பகுப்பின்றிக் கூறுதல் காண்க. சிவனிடத்து இடையறாத மெய்யன்போடு இத்த ஸ்ரீருத்திரத்தை நியமமாக ஓதுவோர் முத்தி பெறுவர். இவ்வுருத்திரத்தை, தடாகத் திலே இரவு பகல் கழுத்தளவினதாகிய ஜலத்திலே நின்றுகொண்டு, ஐம்புலன்களை அடக்கி, சிவனை மறவாத சிந்தையோடும் ஒதினமையால், முத்திபெற்றவர் இவ்வுருத் திரபசுபதிநாயனர். ஆதலால், இவ்வுருத்திரத்துக்கு உரியவர், தமது வாணாள் வீணு ளாகப் போக்காது, சிவனை மறவாத சிந்தையோடும், இதனை நியமமாக ஓதுக.

திருநாளைப்போவார்நாயனார்புராணம்.

பகர்ந்துலகு சீர்போற்றும் பழையவளம் பதியாகுந்
திகழ்ந்தபுனற் கொள்ளிடம்பொன் செழுமணிக டிரைக்கரத்தான்
முகந்துதர விருமருங்கு முளரிமலர்க் கையேற்கு
மகன்பணிநீர் நன்னாட்டு மேற்காநாட் டாதனூர். (க)

நீற்றலர்பே ரொளிநெருங்கு மப்பதியி னிறைகரும்பின்
சாற்றலைவன் குலைவயலிற் றகட்டுவரா லெழப்பகட்டே
ராற்றலவன் கொழுக்கிழித்த சால்வழிபோ யசைந்தேறிச
சேற்றலவன் கருவுயிர்க்க முருகுயிர்க்குஞ் செழுங்கமலம். (உ)

னைமருவுஞ் சினைபொதுளி நறுவிரைசூழ் செறிதளிரிற்
றினகரமண் டலம்வருடுஞ் செழுந்தருவின் குலம்பெருகிக்
கனமருவி யசைந்தலையக் களிவண்டு புடைசூழப்
புனன்மழையோ மதுமழையோ பொழிவொழியா பூஞ்சோலை. (ங)

பாளைவிரி மணங்கமழும் பைங்காய்வன் குலைத்தெங்கின்
ரூளதிர மிசைமுட்டித் தடங்கிடங்கி னெழப்பாய்ந்த
வாளைபுதை யச்சொரிந்த பழமிதப்ப வண்பலவி
னீளமுதிர் கனிகிழிதே னீத்தத்தி லெழுந்துகளும். (ச)

வயல்வளமுஞ் செயல்பதிபைந் தடவையிடை வருவளமும்
வியலிடமெங் கணுநிறைய மிக்கபெருந் திருவினவாம்
புயலடையு மாடங்கள் பொலிவெய்த மலிவுடைத்தா
யயலிடைவே றடிநெருங்கக் குடிநெருங்கி யுளதவ்வூர். (ஞ)

மற்றவ்வூர்ப் புறம்பணையின் வயன்மருங்கு பெருங்குலையிற்
சுற்றம்விரும் பியகீழ்மைத் தொழிலுழவர் கிளைதவன்றிப்
பற்றியபைங் கொடிச்சுரைமேற் படர்ந்தபழங் கூரையுடைப்
புற்குரம்பைச் சிற்றில்பல நிறைந்துளதோர் புலைப்பாடி. (ட)

கூருகிர்மெல் லடிப்புளகின் குறும்பார்ப்புக் குழுச்சுழலும்
வார்பயின்முன் றினினின்ற வள்ளுகிர்ஞாய்த் துள்ளுபறழ்
காரிரும்பின் சரிசெறிகைக் கருஞ்சிறார் கவர்ந்தோட
வார்சிறுமென் குரைப்படக்கு மரைக்கசைத்த விருப்புமணி. (எ)

வன்சிறுதோன் மிசையுழத்தி மகவுறக்கு நிழன்மருதுந்
தன்சினைமென் பெடையொடுங்குந் தடங்குழிசிப் புதைநீழன்
மென்சினைய வஞ்சிகளும் விசிப்பறைதூங் கினமாவும்
புன்றலைகாய்ப புனிற்றுமுழைப புடைத்தெங்கு முடைத்தெங்கும். (அ)

செறிவலித்திண் கடைஞர்வினைச் செயல்புரிவை கறையாமக்
குறியளக்க வளைக்குஞ்செங் குடுமிவா ணசசேக்கை
வெறிமலர்த் தண் சினைக்காஞ்சி விரிநீழன் மருங்கெல்லா
நெறிகுழற்புன் புலைமகளிர் நெற்குறுபாட் டொலிபரக்கும். (கூ)

புள்ளுந்தண் புனற்கலிக்கும் பொய்கையுடைப் புடையெங்குந்
தள்ளுந்தா ணடையசையத் தளையவிழ்பூங் குவளைமது
வுள்ளும்பைங் குழற்கதிர்நென் மிலைசியபுன் புலைசியர்கள்
கள்ளுண்டு களிதூங்க கறங்குபறை யுங்கலிக்கும். (கஎ)

இப்படித்தா னியகடைஞ ரிருப்பின்வரைப் பினின்வாழ்வார்
மெய்பபரிவு செவன்கழற்கே விளைத்தவுணர் வொடும்வந்தா
ரப்பதியி லுள்ளார்புலமை யான்றதொழிற் றுயத்தா
ரொபபிலவர் நந்தனு ரெனவொருவ ருளராஞர். (கக)

பிறந்துணர்வு தொடங்கியபின் பிறைக்கண்ணிப பெருந்தகைபாற்
சிறந்தபெருங் காதலினுற் செம்மைபுரி சிந்தையராய்
மறந்துமய னினைவின்றி வருபிறபபின் வழிவந்த
வறம்புரிகொள் கையராயே யடிததொண்டி னெறிநின்றார். (கஉ)

ஊரில்விடும் பறைத்துடைவ யுணவுரிமை யாக்கொண்டு
சார்பில்வருந் தொழில்செய்வார் தலைநின்றார் தொண்டினுற்
கூரிலைய மூக்குடபிப் படையண்ணல் கோயிறொறும்
பேரிகையே முதலாய முகக்கருவி பிறவினுக்கும். (கங)

போர்வைத்தோல் விசிவாரென் றிணையனவும் புகலுமிசை
நேர்வைத்த வீணைக்கும் யாழுக்கு நிலைவகையிற்
சேர்வுற்ற தந்திரியுந் தேவர்பிரா னர்சசனைகட்
கார்வத்தி னுடன்கோரோ சனையுமிவை யளித்துள்ளார். (கச)

இவ்வகையாற் றந்தொழிலி னியன்றவெலா மெவ்விடத்துஞ்
செய்வனவுங் கோயில்களிற் றிருவாயிற் புறநின்று
மெய்விரவு பேரன்பு மிகுதியினு லாதலவு
மவ்வியல்பிற் பாதெலு மாய்நிகழ்வா ரந்நாளில். (கரி)

திருப்புன்கூர்ச் சிவலோகன் சேவடிகண் மிகநினைந்து
விருப்பினுமெய் தம்பணிகள் வேண்டுவன செய்வதற்கே
யருத்தியினு லொருப்பட்டன் காதலனார் தனினின்றும்
வருத்தமுறுங் காதலினுல் வர்தவழுர் மருங்கணைந்தார். (கசு)

சேரேறு மிசைபாடித் திருத்தொண்டர் திருவாயி
னேரேரும் பிடவேண்டும் மெனவினைந்தார்க் கதுகேர்வார்
காரேறு மெயிற்புன்கூர்க் கண்ணுதலார் திருமுன்பு
போரேற்றை விலக்கவருன் புரிந்தருளிப் புலபபடித்தார். (௫௯)

சிவலோக முடையவர்தந் திருவாயின் மூன்னின்று
பவலோகங் கடப்பவர்தம் பணிவிட்டுப் பணிந்தெழுந்து
சுவலோடு வாரலையப் போவார்பின் பொருசூழ
லவலோடு மடித்ததுகண் டாதரித்துக் குளந்தொட்டார். (௬௰)

வடங்கொண்ட பொன்னிதழி மணிமுடியார் திருவருளாற்
றடங்கொண்ட குளத்தளவு சமைத்ததற்பின் றம்பெருமா
னிடங்கொண்ட கோயில்புறம் வலங்கொண்டு பணிந்தெழுந்து
நடங்கொண்டு விடைகொண்டு தம்பதியி னண்ணினார். (௬௧)

இத்தன்மை யீசர்மகிழ் பதிபலவுஞ் சென்றிறைஞ்சி
மெய்த்ததிருத் தொண்டுசெய்து வீரவுவார் மிக்கெழுந்த
சித்தமொடுந் திருத்தில்லைத் திருமன்று சென்றிறைஞ்ச
வுய்த்தபெருங் காதலுணர் வொழியாது வந்துதிப்ப. (௬௨)

அன்றிரவு கண்டுயிலார் புலர்ந்ததற்பி னங்கெய்த
வொன்றியவே தருதன்மை யுறுகுலத்தோ டிசைவில்லை
யென்றிதுவு மெம்பெருமா னேவலெனப் போக்கொழிவார்
நன்றுமெழுங் காதன்மிக நாளைப்போ வேனென்பார். (௬௩)

நாளைப்போ வேனென்று நாள்களைசெலத் தரியாது
பூளைபபூ வாம்பிறவிப பிணிபபொழியப போவாராய்ப்
பாளைபபூங் கமுகுடுத்த பழம்பதியி னின்றும்போய்
வாளைப்போத் தெழும்பழனஞ் சூழ்தில்லை மருங்கணைவார். (௬௪)

செல்கின்ற போழ்தந்தத் திருவெல்லை பணிந்தெழுந்து
பல்குஞ்செங் கிவளர்த்த பயில்வேள்வி யெழும்புகையு
மல்குபெருங் கிடையோது மடங்கணெருங் கினவுகண்
டல்குந்தங் குலனினைந்தே யஞ்சியணைந் திலர்நின்றார். (௬௫)

நின்றவரைக் கெய்தரிய பெருமையினை நினைப்பார்முன்
சென்றிறையுங் கடந்தார்ரு ழெயிற்றிருவா யிலைப்புக்கார்
குன்றனைய மாளிகைக டொறுங்குலவும் வேதிகைக
ளொன்றியமூ வாயிரமங் குனவென்பா ராருதிகள். (௬௬)

இப்பரிசா யிருக்கவெனக் கெய்தலரி தென்றஞ்சி
யப்பதியின் மதிற்புறத்தி லூராத பெருங்காத
லொப்பரிதாய் வளர்ந்தோங்க வுள்ளருகிக் கைதொழுதே
செப்பரிய திருவெல்லை வலங்கொணடு செல்கின்றார். (௬௭)

இவ்வண்ண மிரவுபகல் வலஞ்செய்தங் கெய்தரிய
வவ்வண்ண நினைத்தழித்த வடித்தொண்ட ரயர்வெய்தி
மைவண்ணத் திருமிடற்றூர் மன்றினடங் கும்பிடுவே
தெவ்வண்ண மெனநினைந்தே யேசறவி னெடுந்துயில்வார். (௬௮)

இன்னறரு மிழிபிறவி யிதுதடையென் றேதுயில்வா
ரந்நிலைமை யம்பலத்து ளாடுவா ரறிந்தருளி
மன்னுதிருத் தொண்டரவர் வருத்தமெலாந் தீர்ப்பதற்கு
முன்னணைந்து கனவின்கண் முறுவலொடு மருள்செய்வார். (உஎ)

இப்பிறவி போய்நீங்க வெரியினிடை நீமூழ்கி
மூப்புரிதான் மார்பருடன் முன்னணைவா யென்னமொழிந்
தப்பரிசே தில்லைவா ழந்தணர்க்கு மெரியமைக்க
மெய்ப்பொருளா ளரருளி யம்பலத்தே மேவினார். (உஅ)

தம்பெருமான் பணிகேட்ட தவமறையோ ரெல்லாரு
மம்பலவர் திருவாயின் மூன்பச்ச மூடனீண்டி
யெம்பெருமா னருள்செய்த பணிசெய்வோ மென்றேகித்
தம்பரிவு பெருகவருந் திருத்தொண்டர் பாற்சார்ந்தார். (உக)

ஐயரே யம்பலவ ரருளாலிப் பொழுதணைந்தோம்
வெய்யவழ லமைத்துமக்குத் தரவேண்டி யெனவிளம்ப
நையுமனத் திருத்தொண்டர் நானுய்ந்தே னெனத்தொழுதார்
தெய்வமறை முனிவர்களுந் தீயமைத்த படிமொழிந்தார். (உO)

மறையவர்கண் மொழிந்ததற்பின் றென்றிசையின் மதிற்புறத்துப்
பிறையுரிஞ்சுந் திருவாயின் முன்னுகப பிஞ்ஞகர்த
நிறையருளான் மறையவர்க ணெருப்பமைத்த குழியெய்தி
யிறையவர்தாண் மனங்கொண்டே யெரிசூழ வலங்கொண்டார். (உக)

கைதொழுது நடமாடுங் கழலுன்னி யழல்புக்கா
ரெய்தியவப் பொழுதின்கண் ணெரியின்க ணிம்மாயப்
பொய்தகையு முருவொழித்துப் புண்ணியமா முனிவடிவாய
மெய்திகழ்வெண் ணூல்விளங்க வேணிமுடி கொண்டெழுந்தார். (உஉ)

செந்தீமே லெழும்பொழுது செம்மலர்மேல் வந்தெழுந்த
வந்தணன்போற் ரோன்றினா ரந்தரதுந் துபிநாதம்
வந்தெழுந்த திருவிசும்பில் வானவர்கண் மகிழ்ந்தார்த்துப
பைந்தணர்மந் தாரத்தின் பனிமலர்மா ரிகள்பொழிந்தார். (உங)

திருவுடைய தில்லைவா ழந்தணர்கள் கைதொழுதார்
பரவரிய தொண்டர்களும் பணிந்துமனங் களிபயின்று
ரருமறைசூழ் திருமன்றி லாடுகின்ற கழல்வணங்க
வருகின்றார் திருநாளைப் போவாரா மறைமுனிவர். (உச)

தில்லைவா ழந்தணரு மூடன்செல்லச் சென்றெய்திக்
கொல்லைமான் மறிக்கரத்தார் கோபுரத்தைத் தொழுதிறைஞ்சி
யொல்லைபோ யுள்புகுந்தா ருலகுய்ய நடமாடு
மெல்லையினைத் தலைப்பட்டார் யாவர்களுங் கண்டிலரால். (உஇ)

அந்தணர்க ளதிசயித்தா ரருமுனிவர் துதிசெய்தார்
வந்தணைந்த திருத்தொண்டர் தம்மைவலீ மாசறுத்துச்
சிந்தரத்தா மரைபுரையுந் தூணெயடிக டொழுதிருக்க
வந்தமிலா வானந்தப் பெருங்கூத்த ரருள்புரிந்தார். (உசு)

மாசுடம்பு விடத்தியின் மஞ்சனஞ்செய் தருளியெழுக்
தீசின்மறை முனியாகி யம்பலவர் தாளடைந்தார்
தேசுடைய கழல்வாழ்த்திக் திருக்குறிப்புத் தொண்டர்வினைப்
பாசமற முயன்றவர்செய் திருத்தொண்டின் பரிசுரைப்பாம். (கூ௧)

திருநாளைப்போவார்நாயனார்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - க,0ஆ௨.

சூ ச னை ம்.

தத்தம் சாதிநெறி கடவாது சிவனை வழிபடுதல்.

யாவராயினும், தங்கள் தங்கள் சாதிக்கு விதித்த விதி கடவாது நின்று சிவனை வழிபடின், முத்தி பெறுவர். அவ்விதி கடந்தோர் பயன் பெறார். இத்திருநாளைப்போவார்நாயனார் தாம் முற்பிறப்பில் செய்த புண்ணிய மிகுதியினாலே சிவனிடத்து மெய்யன்பு உடையராகி, தாம் இழிவாகிய புலையர்குலத்திற் பிறந்தமையால் அதற்கு ஏற்பச் சிவனுக்குத் தொண்டு செய்தலே முறைமையாம் என்று சிவாலயங்கள்தோறும் பேரிகை முதலிய ஒருமுகக் கருவிகளுக்கும் மிருதங்கம் முதலிய இருமுகக் கருவிகளுக்கும் தோலும், வாரும், வீணைக்கும் யாழுக்கும் நரம்பும், அருசனைக்குக் கோரோசனையும் கொடுத்தலும், ஆலயங்களின் திருவாயிற்புறத்தில் நின்றுகொண்டு ஆனந்த மிகுதியினாலே கூத்தாடிப் பாடுதலும் செய்தனர். வாத்தியங்கள் கொடுத்தல் புண்ணியம் என்பது "பொங்கு பேரி பொருமுர சம்பிரு—தங்கமோடு திமிலிபட காதியுஞ்—சங்கு தாளந் தகுமிசைக் காகளம்—மிங்கு சீரொலி வேணுவும் வீணையும்." "சொன்ன வின்னவை சோதிலிலா வணி—மன்ன வற்கு வழங்கிய மாதவ—ரன்ன வன்றனை யொத்தபு தந்தருந்—துன்னுகற்ப மவன்பதி தோய்வரால்." எனச சிவபுண்ணியத் தெளிவிலே கூறுமாற்றால் உணர்க. ஆனந்தத்தினால் ஆடல் பாடல்கள் புண்ணியம் என்பது "நிருத்த மெத்தைமுன் யாவர் நிகழ்த்தினும்—விரித்த பாணு வயுதம் விரிகதிர்—பொருத்து தேரிற் புலவ ரரம்பையர்—கருத்தி னுடகங் காண்பர் சிவபுரி." "துதியுஞ் சீதமுஞ் சோதிமுன் பத்தியாற்—கெதிபி னேதிடக் கேட்டவர் தாவர—மதியில் தீடங் கிருமி வரன்பதி—வதியு மோதினர்க் கென்கொல் வருப்பதே." எனச் சிவபுண்ணியத் தெளிவிலே கூறுமாற்றால் உணர்க. இவை எல்லாம் தம்மிடத்து இடையறாத மெய்யன்போடு செய்தமையால் அன்றே; சிவன் திருப்புன்கூரிலே இவர் விரும்பியபடியே தமக்குமுன் உள்ள இடபதேவரை விலகச்செய்து, இவருக்குக் காட்சி கொடுத்தருளினார்.

உ. சிதம்பர தரிசனம்.

சிவஸ்தலங்கள் எல்லாவற்றுள்ளும் சிதம்பரமே மேலானது. அது தில்லைவாழந்தணர்புராணத்துச் சூசனத்தில் விரித்துரைக்கப்பட்டது. இந்தஸ்தலத்திற் கனகசபையின் கண்ணே கருணாநிதியாகிய சபாநாயகர் செய்தருளும் ஆனந்த நிருத்தத்தை மெய்யன்போடு தரிசித்தவர் முத்தி பெறுவர். அது, "மெய்மைநற் சரியை பத்தி வினக்கிய ஞான மேவா—வெம்மையொப் பவர்க்கு முத்தி யிறையிலி யாகவிட்ட—மும்மைநற் பதிகடம்மின் முனைத்தவர் முடிந்தோர் மூவாச்—செம்மலர்க் கழல் கண் டோர்கள் சிவத்தினைச் சேர்வ ரன்றே. பிறந்தில மாரூர் தன்னிற் பேசிய காசி மேவி—யிறந்தில மிரண்டு முத்தி யின்பமும் பின்ப தாக—முறைந்திடுக் தில்லை

ஞான யோகமார் தான மாமாற்—செறிந்தடி காணச்செவன் முத்தராய்த் திரிய லாமே. தேசமார் மன்ற னன்று வெகதி தேடியுற்றார்—காயி லில்லை நில்லை கதிதரு மென்ற வோர்தாற்— பாச மதல முத்தி பணித்திடு மென்ற ரென்ற—ஸீசன தருளி ரக்கத் தெல்லையார் சொல்லு வாரே. சன்மை ரன்பா லான்பால் கவர்தரும் கால மேனும்—வென்றிகொ ளம்பு வீழும் வேலையா யினுமி மைப்பிற்—சென்றுறு மலைய மேனும் திருவடி தெளிய நோக்கி—நின்றவர் காண நின்றார் நீள்பவ நீங்கி ஞரே. ஆரண வுருவார் நில்லை யம்பல மெய்தப் பெற்றே—ரோருணர் வாவ ரென்று மொன் றல ரொன்று ரல்லர்—காரண ராகா ரொத்த கருத்திலர் நிருத்த வின்பப்—பூரண ரவர்கள் வாழும் புவனமும் பொதுவா மன்றே.'' என்னும் கோயிற்புராணத்து வியாக்கிரபாதமகாமுனிவர் இரணியவன்மசக்கிரவர்த்திக்கு உபதேசித்த பொருளே புடைய திருவிருத்தங்களானும், ''பரையிடமா நின்றுமிகு பஞ்சாக் கரத்தா—லுரை யுணர்வுக் கெட்டா வொருவன் - வரைமகடான்—காணும் படியே கருணையுருக் கொண்டாடல்—பேணுபவர்க் குண்டோ பிறப்பு.'' என்னும் உண்மைவிளக்கத் திருவெண்பாவானும், உணர்க.

பல சிவஸ்தலங்களுக்கும் போய் வணங்கித் திருப்பணி செய்தலே தொழிலாகக் கொண்ட இந்நாயனருக்குச சிதம்பர தரிசனத்திலே வேட்கை மிக்குற்றது. இவ் வேட்கையின் மிகுதி, அது விளைந்த அன்றிரவு இவருக்கு நித்திரை இன்மையானும்; மற்றநாள் இவர் தாம் தில்லைக்குச செல்லில் கோயிலினுள்ளே புகுதல் தமது சாதிக்கு இயையாது என்பதை நினைந்து, போகாதொழிந்தாராயினும், அவ்வாசை குன்றுது மேன்மேலும் வளர்தல் பற்றி நாளைப்போவேன் நாளைப்போவேன் என்று பல நாள் கழித்து, ஆசையை அடக்கல் கூடாமையால் பின் தில்லைபின் எல்லையை அடைந் தமையானும்; தெளியப்படும். இவ்வாறு மிக்க ஆசையுடன் சென்றும்; தில்லையினு ள்ளே வேதவிதிப்படி ஓமம் செய்யபபடுதலைக் கண்டு, உட்புகாதொழிந்து, இரவு பகல் திருவெல்லையை வலஞ்செய்து வணங்கினமையால், வேதாகம விதிக்கு அஞ்சி, சாதிநெறி கடவாது நின்ற இவரது பெருந்தன்மை தெளியப்படும். பின்னும் இவ ருக்குச் சிதம்பர தரிசனத்தில் ஆசை குன்றுது மேன்மேலும் வளர்ந்தமை பெருவி யப்பாமே! இவ்வாறே சிவனிடத்து இடையறுது மேன்மேலும் பெருகும் மெய்யன் பினல் வளர்ந்தோங்கிய ஆசையினலன்றே; கருணைநிதியாகிய நடேசர் இவர் கருத்தை முற்றுவித்தருளத் திருவுளங்கொண்டு, தில்லைமூவாயிரரைக்கொண்டு திருமஞ்சற் புறத் திலே திருவாயிலுக்கு முன் அக்கினி வளர்ப்பித்து, இந்நாயனரை அதிலே புகுவி த்து, இவர் புலே உடம்பை ஒழித்துப் பிராமண முனிவடிவங்கொண்டு எழுந்து, கனக சபையிற் புகுந்து தமது திருவடிகளே வணங்கிக்கொண்டிருக்கும் பொருட்டு, அருள் செய்தார். இதனல், சிவன் தம்மை வழிபடும் அடியார்கள் கருத்தை முடித்தருளுவர் என்பது, துணியப்படும், ''வாயானே மனத்தானே மனத்து ணின்ற கருத்தானைக் கரு த்தறிந்து முடிப்பான் றன்னைத்—தாயானைத் தூவெள்ளே யேற்றான் றன்னைச் சுடர்த் திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்ற—தாயானைத் தவமாய தன்மையானைத் தலேயாய தேவாதி தேவர்க் கென்றுஞ்—சேயானைத் தென்கூடற் றிருவாலவாய்ச் சிவ னடியே சிந்திக்கப் பெற்றே னானே.'' என்றார் திருநாவுக்கரசநாயனர். ஆதலால், சிவபுண்ணியங்களே நாம் செய்வது அருமை என்று விரும்பாதொழிதல் குற்றம் என் பதும், இடைவிடாது விரும்பின், சிவனது திருவருளினல் அது முற்றும் என்பதும், இப்பிறப்பின் முற்றுதாயினும் மறுபிறப்பின் முற்றுதல் ஒருதலே என்பதும், தெளிக. ''கொந்தபங் கயனே. நோக்கி நுடங்குட னளவே யன்றே—வந்தமில் காலஞ் சேய்த் தன் றதுவுமென் றயரக் கண்டு—மிந்தரீ யிறந்தாற் பேறில் கென்னென வனந்த னின்றென்—சிந்தையில் தெய்வச் செந்தண் திருநடம் காண்பே னென்றான்.'' என்றே கோயிற்புராணத்திற் கூறியவாற்றானும், உணர்க.

திருக்குறிப்புத்தொண்டநாயனார்புராணம்.

ஏபு மாறுபல் லுயிர்களுக் கெல்லையில் கருணைத்
தாய னுடனி யாயின தலைவரைத் தழுவ
வாயு நான்மறை போற்றநின் றருந்தவம் புரியத்
தூய மாதவஞ் செய்தது தொண்டைநன் னாடு. (க)

நன்மை நீடிய நடுநிலை யொழுக்கத்து நயந்த
தன்மை மேவிய தலைமைசால் பெருங்குடி தழைப்ப
வன்மை யோங்கெயில் வளம்பதி பயின்றது வரம்பின்
ரென்மை மேன்மையி னிகழ்பெருந் தொண்டைநன் னாடு. (உ)

நற்றி றம்புரி பழையனூர்ச சிறுத்தொண்டர் நவைவந்
தற்ற போதுதம் முயிரையும் வணிகனுக் கொருகாற்
சொற்ற மெய்மையுந் தூக்கியச சொல்லையே காக்கப்
பெற்ற மேன்மையி னிகழ்ந்தது பெருந்தொண்டை நாடு. (ங)

ஆணை யாமென நீறுகண் டடிசசேர னென்னுஞ்
சேணு லாவுசீர்ச சேரனூர் திருமலை நாட்டு
வாணி லாவுபூண் வயவர்கண் மைத்துனக் கேண்மை
பேண நீடிய முறையது பெருந்தொண்டை நாடு. (ச)

கறைவி ளங்கிய கண்டர்பாற் காதல்செய் முறைமை
நிறைபு ரிந்திட நேரிழை யறம்புரிந் ததனுற்
பிறையு ரிஞ்செயிற் பதிபயில் பெருந்தொண்டை நாட்டு
முறைமை யாமென வுலகினின் மிகுமொழி யுடைத்தால். (ஞ)

தாவில் செம்மணி யருவியா றிழிவன சாரல்
பூவில் வண்டினம் புதுநற வருந்துவ புறவம்
வாவி நீள்கயல் வரம்பிற வுகைபவ மருத
நீவி நித்திலம் பரத்திய ருணக்குவ நெய்தல். (ட)

குறவர் பன்மணி யரித்திதை விதைப்பன குறிஞ்சி
கறவை யானிரை மாலுடன் பயில்வன கானம்
பறவை தாமரை யிருந்திற வருந்துவ பழனஞ்
சுறவ முண்மருப் பணங்கயர் வனகழிச் சூழல். (ண)

கொண்டல் வானத்தின் மணிசொரி வனகுல வரைப்பாற்
றண்டு ணர்க்கொன்றை பொன்சொரி வனதள வயற்பால்
வண்டன் முத்தநீர் மண்கொல் சொரிவன வயற்பாற்
கண்டன் முன்றுறைக் கரிசொரி வனகலங் கடற்பால். (த)

தேனி றைந்தசெந் தினையிடி தருமலைச் சிறார்
பானி றைந்தபுற் பதத்தன மூல்லைநீள் பாடி
தானெ லன்னசெய் கன்னலின் கனியதண் ணிறைபூர்
மீனி றைந்தபே ருணவின வேலைவைப் பிடங்கள். (ந)

குழல்செய் வண்டினங் குறிஞ்சியாழ் மூலல்வன குறிஞ்சி
முழவு கார்கொள் முல்லைகண் முகைப்பண முல்லை
மழலை மென்கிளி மருதமர் சேக்கைய மருத
நிழல்செய் கைதைசூழ் நெய்தலங் கழியன செய்தல். (கம)

மல்கு மப்பெரு நிலங்களில் வரைபுணர் குறிஞ்சி
யெல்லை யெங்கணு மிறவுள ரேனன்முன் னீளக்கும்
பல்பெ ரும்புனம் பயில்வன படர்சிறைத் தோகை
சொல்லு மப்புனங் காப்பவுஞ் சுரிகுழற் றோகை. (கக)

அங்கண் வான்மிசை யரம்பையர் கருங்குழற் சுரும்பு
பொங்கு பூண்முலைக் கொடிச்சியர் குழன்மூழ்கிப போகாச
செங்கண் மால்விடை யார்திருக் காளத்தி யென்னு
மங்குல் சூழ்வரை நிலவிய வாழ்வினன் மல்கும். (கஉ)

பேறு வேறுசூ ழிமையவ ரரம்பையர் பிறந்து
மாறில் வேடரு மாதரு மாகவே வணங்கு
மாறு சூழ்சடை யண்ணலார் திருவிடைச சுரமுங
கூறு மேன்மையின் நிக்கதந் நாட்டுவண் குறிஞ்சி. (கங)

அம்பொன் வார்குழற் கொடிச்சிய ருடனர மகளிர்
வம்பு லாமலர்ச சுனைபடிந் தாடுளை வரைப்பி
னும்பர் நாயகர் திருக்கழுக் குன்றமு முடைத்தாற்
கொம்பர் வண்டுசூழ குறிஞ்சிசெய் தவங்குறை யுளதோ. (கச)

கோல முல்லையுங குறிஞ்சியு மடித்தசில் லிடங்க
ணீல வாட்படை நீலிகோட் டங்களு நிரந்து
கால வேனிலிற் கடும்பகற் பொழுதினை பற்றிப்
பாலை யுஞ்சொல லாவன வுளபரன முரம்பு. (கஙி)

சொல்லு மெல்லையின் புறத்தன துணர்ச்சுரும் பலைக்கும்
பல்பெ ரும்புனற் கானியா றிடையிடை பரந்து
கொல்லை மெல்லிணர்க் குருந்தின்மேற் படர்ந்தபூம் பந்தர்
முல்லை மென்புதன் முயலுகைத் தடங்குரீண் முல்லை. (கக)

பினவு கொண்டதண் மதிறுதற் பேதைய ரெயிற்றைக்
களவு கொண்டது தளவெனக் களவலர் தூற்று
மனவு கண்டவர் குழனிறங் கனியுமக் களவைத்
தளவு கண்டெதிர் சிரிப்பன தமக்குமுண் டென்று. (கஎ)

மங்கை யர்க்குவாள் விழியிணை தோற்றமான் குலங்க
ளெங்கு மற்றவ ரிடைக்கிடை மலர்க்கொடி யெங்கு
மங்கண் முல்லையின் றெய்வமென் றருந்தமி முரைக்குஞ்
செங்கண் மாரெழுஞ் செவ்வழிப் திருமுல்லை வாயில். (கஅ)

பேறு சேர்திரு மேனியர் நிலாத்திகழ் முடிமேன்
மன்றில் கங்கைதான் வாக்குமஞ் சன்ன வணிகே
பூறு சீர்தரு மொளிமலர்ச் சுவிகமா ரகரை
சேறு தன்பெரு வைப்பென வினங்குமா முல்லை. (கக)

வாச மென்மலர் மல்கிய மூல்லைசூழ மருதம்
வீசு தெண்டிரை நதிபல மிக்குயர்ச் தோடிப்
பாச டைத்தடந் தாமரைப் பழனமகண் மருவும்
பூசல் வன்கரைக் குளமகளு மேரியும் புகுவ. (௨0)

துங்க மாதவன் சுரபியின் றிருமூலை சொரிபால்
பொங்கு தீர்த்தமாய் நந்திமால் வரைமிசைப் போந்தே
யங்க ணித்திலஞ் சந்தன மணிலொடு மணிகள்
பங்க யத்தட நிறைப்பவந் திழிவது பாலி (௨௮)

பிள்ளை தைவரப பெருகுபால் சொரிமூலத தாய்போன்
மள்ளர் வேளிலின் மணற்றிடா பிசைந்துகை வருட
வெள்ள நீரிரு மருங்குகால் வழிபிதந தேறிப்
பள்ள நீள்வயற் பருமடை யுடைப்பது பாலி. (௨௨)

அனைய வாகிய நதிபரந தகன்பணை மருங்கிற்
கனைகெ டும்புன னிறைந்துதிண் கரைப்பெருங குளங்கள
புனையி ருங்கடி மதகுவாய் திறந்திடப புறம்போய
வினைஞ ரார்ப்பொலி யெடுப்பநீர வழங்குவ வியன்கால். (௨௫)

மாறில் வன்பகட் டேர்பல நெருங்கிட வயலகள
சேறு செய்பவா செந்நெலின் வெண்முளை சிதறி
நாறு வார்ப்பவா பறிபபவா நடுபவ ரான
வேறு பல்வினை யுடைப்பெருங கமபலை மிகுமால. (௨௮)

வரும்பு னற்பெருங கால்களை மறிதிடை வாளை
பெருகுகு லைபட விலங்குவ பிறங்குநீரப பழன
நெருங்கு சேற்குல முயாத்துவ நீள்கரைப படிதருச
சுருங்கை நீலழக கறுபபன பருவராற் நெருதி (௨௯)

தளைத்த டமபணை யெழுநதசெந தாமரைத தவிசி
னிளைத்த சூல்வளை கண்படுப் பனவிடை யெயகும்
வினைத்த பாசொளி வீளங்குநீள விசுமபிடை யூகோள
வளைத்த மாமதி போன்றுள மருதநீள வைப்பு (௩0)

ஓங்கு செந்நெலின் புடையன வுயாகழைக கருமபு
பூங்க ரும்பயன் மிடைவன பூகமப் பூக ப
பாங்கு நீள்குலைத் தெங்குபைய கதலிவண் பலவு
தூங்கு நீயகனிச சுதநீள வேலிய சோலை. (௩௧)

நீடு தண்பணை யுடுத்தநீண் மருங்கின நெல்லின்
கூடு துன்றிய விருக்கைய விருந்தெதிர் கொள்ளும்
பீடு தங்கிய பெருங்குடி மனையறம் பிறங்கு
மாடு மோங்கிய மறுகின மல்லன்மூ தூர்கள். (௩௨)

தொல்லை நான்மறை முதற்பெருங் கலியொலி தூவன்றி
யில்ல மபுரிக் தாகுதி வேள்வியி லெழுந்த
மல்கு தண்புகை மழைதரு முகிற்குலம் பரப்புஞ்
செல்வ மோங்கிய திருமறை யவர்செழும் பதிகள் (௩௩)

நீது நீங்கிடத் நீக்கொலி யாமவு ணற்கு
ராதீ தாமருள் புரிந்தது கல்லினைப் பயன்செய்
மாதர் தோன்றிய மரபுடை மறையவர் வல்லம்
பூதி சாதனம் போற்றிய பொற்பினுல் விளங்கும். (கூ0)

அருவி தந்தசெம் மணிகளும் புறவிலாய் மலரும்
பருவி யோடைக ணிறைந்திழி பாலியின் கரையின்
மருவு கங்கைவாழ் சடையவர் மகிழ்ந்தமாற் பேரும்
பொருவில் கோயிலுஞ் சூழ்ந்ததப் பூம்பணை மருதம். (கூக)

விரும்பு மேன்மையென் பகர்வது விரிதிரை நதிக
ளருங்க ரைப்பயில் கிவாலய மனேகமு மணைந்து
பருங்கை யானையை யுரித்தவ ரிருந்தவப் பாசூர்
மருங்கு சூழ்தவம் புரிந்ததன் றேமற்ற மருதம். (கூஉ)

பூம ரும்புனல் வயற்களம் பாடிய பொருநா
தாம ருங்கிளை யுடன்றட மென்மலர் மலிந்து
மாம ருங்குதண் ணீழலின் மருதயாழ் முரலுங
காமர் தண்பணைப் புறத்தது கருங்கழி நெய்தல். (கூகூ)

ஆய வெண்டுறைப் பரதவர் தொடுபபன வலைகள்
சேய நீள்விழிப் பரத்தியர் தொடுப்பன செருந்தி
யாய பேரளத் தளவர்க ளளபபன வுப்பு
சாயன் மெல்லிடை யளத்திய ரளப்பன தரளம். (கூச)

கொடிவி னைத்தொழி லுளேயர்கள் கொடுப்பன கொழுமீன்
படிம ணற்கரை நுளேசரியர் கொடுப்பன பவளந்
தொடுக டற்சங்கு துறையவர் குளிப்பன வவர்தம்
வடிவ கிர்க்கண்மங கையர்குளிப் பனமணற் கேணி. (கூஞ)

சுழிப்பு னற்கட லோதமுன் சூழ்ந்துகொண் டணிய
வழிக்க ரைப்பொதி பொன்னவிழ்ப் பனமலர்ப் புன்னை
விழிக்கு நெய்தலின் விரைமலர்க் கட்சுரும் புண்ணக்
கழிக்க ரைப்பொதி சோறவிழ்ப் பனமடற் கைதை. (கூக)

காயல் வன்கரைப் புரைதெறி யடைப்பன கனிமுட்
சேய தண்ணறுஞ் செழுமுகை செறியுமுண் டகங்க
ளாய நுண்மணல் வெண்மையை மறைப்பன வன்னந்
தாய முன்றுறைச் சூழல்சூழ் ஞாழலின் ரூது. (கூஎ)

வாம்பெ ருந்திரை வளாகமுன் குடிபயில் வரைப்பிற்
ரும்ப ரப்பிய கயல்களின் விழிக்கய றவிரக்
காம்பி னேர்வருந் தோளியர் கழிக்கயல் வீலைசெய்
தேம்பொ திர்தலின் மழலைமென் மொழியசெவ் வழியாழ். (கூஅ)

மருட்கொ டுத்தொழின் மன்னவ னிறக்கிய வரியை
கெருக்கி முன்றிரு வொற்றியூர் நீங்கலென் றெழுது
மொருத்தர் தம்பெருங் கோயிலி னெருபுறஞ் சூழ்ந்த்
திருப்ப ரப்பையு முடையதத் திரைக்கடல் வரைப்பு. (கூக)

மெய்த ரும்புகழ்த் திருமயி லாபுரி விரைசூழ்
மொய்த யங்குதண் பொழிற்றிரு வான்மியூர் முதல்வர்
பைத ரும்பணி யணிந்தவர் பதியெனைப் பலவா
னெய்த லெய்தமுன் செய்தவந் நிறைதவஞ் சிறிதோ. (சஅ)

கோடு கொண்டெழுந் திரைக்கடற் பவளமென் கொழுந்து
மாடு மொய்வரைச் சந்தனச் சினைமிசை வளரு
நீடு நெய்தலுங் குறிஞ்சியும் புணர்நிலம் பலவா
லாடு நீள்கொடி மாடமா மல்லையே யனைய. (சக)

மலைவி ழிப்பன வெனவயற் சேல்வரைப் பாறைத்
தலைபு கைப்பவுந் தளைச்செறி விடைநெடுங் கருமான்
கலைகு திப்பன கரும்பகட் டோர்கர்ப வுமா
யலைபு னற்பணை குறிஞ்சியோ டணைவன வனேகம். (சஉ)

புணர்ந்த வானிரை புறவுடைக் குறுமுயல் பொருப்பி
னணைந்த வான்மதி முயலினை யினமென வணைந்து
மணங்கொள் கொல்லையில் வரகுபோர் மஞ்சென வரைக்க ர
ணிணைந்து முல்லையுங் குறிஞ்சியுங் கலப்பன வெங்கும். (சஙு)

கவரு மீன்குவை கழியவர் கானவர்க் களித்துச
சிவலுஞ் சேவலு மாறியுஞ் சிறுகழிச சியர்க
ளவரை யேனலுக் கெயிற்றியர் பவளமுத் தளந்து
முவரி நெய்தலுங் கானமுங் கலந்துள வொழுக்கம். (சச)

அயன றும்புற வினிலிடைச சியரணி நடையும்
வியனெ டும்பணை யுழத்தியர் சாயலும் விரும்பி
யியலு மன்னமுந் தோகையு மெதிரெதி பயில
வயலு முல்லையு மியைவன பலவுள மருங்கு. (சஙி)

மீளு மோதமுன் கொழித்தவெண் டரளமுங் கமுகின்
பாளை யுக்கவும் விரவலிற் பரத்தியர் பணைமென்
சூளு முத்தியர் மகளிர்மா ருடிமுன் சொருகுக்கு
நீளு நெய்தலு மருதமுங் கலந்துள நிலங்கள். (சகு)

ஆய நானிலத் தமைதியிற் றத்தமக் கடுத்த
மேய செய்தொழில் வேறுபல் குலங்களின் விளங்கித்
தூய வென்பன கனவிலு நினைவிலாச் சித்தைத்
தாய மாந்தர்வாழ் தொண்டைநாட் டியல்புசொல் வரைத்தோ. (சள)

இவ்வ ளந்தரு பெருந்திரு நாட்டிடை யென்று
மெய்வ ளந்தரு சிறப்பினு லுலகெலாம் வியப்ப
வெவ்வு கங்களு மூள்ளதென் றியாவரு மேத்துங்
கைவி ளங்கிய நிலையது காஞ்சிமா நகரம். (சஅ)

ஆன தொன்னக ரம்பிகை தம்பெரு மானை
மான வர்ச்சனை யாலொரு காலத்து வழிபட்
டீன மில்லற மனேகமு முலகுய்ய வைத்த
மேன்மை பூண்டவப் பெருமையை யறிந்தவா றினம்பில். (அ)

வெள்ளி மால்வரை கடலிலேயிட் டீற்றிருந் தருளித்
தென்னு வரற்புனல் வேணியா ரருள்செய்த் தொழுது
தென்னு வாய்மையி னுகமத் திறனெலாந் தெரிய
வுள்ள வாறுகேட் டூருளு ஞலகையா ஞடையாள். (இ0)

எண்ணி லாகம மியம்பிய விறைவர்தாம் விரும்பு
முண்மை யாவது பூசனை யெனவுரைத் தருள
வண்ண லார்தமை யர்ச்சனை புரியவா தரித்தாள்
பெண்ணி னல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து. (இக)

மே வு று.

நங்கை யுண்ணிறை காதலே நோக்கி நாய கன்றிரு வுள்ளத்து மகிழ்தே
யங்க ணெய்திய மூறுவலுந் தோன்ற வடுத்த தென்கொனின் பாலென வினவ
விங்கு நாதநீ மொழிந்தவா கமத்தி னியல்பி னுலுனை யர்சனை புரியப்
பொங்கு கின்றதென் ஞசையென் றிறைஞ்சிப் போகமார்த்தபூண்முலையினுள்போற்ற.

தேவ தேவனு மதுதிரு வுள்ளஞ் செய்து தென்றிசை மிக்கசெய் தவத்தால்
யாவ ருந்தனை யடைவது மண்மே லென்று முள்ளது காஞ்சிமற் றதனுண்
மாவ மர்ந்தரம் மிருக்கையி லணைநது மன்னுபூசனை மகிழ்நதுசெய் வாயென்
றேவ வெம்பெரு மாட்டியும் பிரியா விசைவுகொண் டெழுந் தருளுதற் கிசைநதாள்.()

ஏத மில்பல யோனியெண் பத்து நான்கு நூரு யிரநதனுள் வைத்த
பேத மும்புரந் தருளுமக் கருணைப் பிரான்மொ ழிந்தவா கமவழி பேணிப்
போது நீர்மையிற் றெழுதனள் போதப் பொருபபில் வேந்தனும் விருப்பில் வந்தெய்தி
மாத வம்புரிந் தருளுதற் கமைந்த வளத்தொ டெம்பரி சனகளை விடித்தான். (இச)

தன்னு பல்லுயிர் வானவர் முதலாச சூழ்ந்துடன் செலக் காஞ்சியி லணையத்
தன்னை நோ்வரும் பதமமா நாகந் தம்பிராட்டிதா டலை பிசை வைத்தே
யன்னை யாயுல கனைத்தையு மீன்ரு யடிய னேனுறை பிலமத னிடையே
மன்னு கோயில்கொண் டருளுவா யென்ன மலைம டந்தைமற் றதற்கருள புரிந்து. ()

அங்கு மண்ணுல கத்துயிர் தழைப்ப வளலி லின்பத்தி னருட்கரு விருத்தித்
திங்க டங்கிய புரிசடை யார்களுத் திருந்து பூசனை விரும்பினன் செய்ய
வெங்கு நாடவுந் திருவினை யாட்டர லேக மாமுத லெதிர்பபடா தொழியப்
பொங்கு மாதவஞ் செய்துகாண் பதற்கே புரிவு செய்தனள் பொன்மலை வல்லி. (இக)

கெஞ்ச மீசனைக் காண்பதே விரும்பி நிரந்த ரந்திரு வாக்கினி னிகழ்வ
தஞ்செ ழுத்துமே யாகவா ஞடைய வம்மை செம்மலர்க் கைகுவித் தருளித்
தஞ்ச மாகிய வருந்தவம் புரியத் தரிப்ப ரேயவ டனிப்பெருங் கணவர்
வஞ்ச நீக்கிய மாவின்மூ லத்தில் வந்து தோன்றினர் மலைமகள் காண. (இஎ)

கண்ட போதிலப் பெருந்தவப் பயனுக கம்ப மேவிய தம்பெரு மானை
வண்டு லாங்குழற் கற்றைமுன் ரூழ வணங்கி வந்தெழு மாசைமுன் பொங்கக்
கொண்ட காதலின் விருப்பள வின்றிக் குறித்த பூசனைக் கொள்கைமேற் கொண்டு
தொண்டை யங்கனி வாயுமை நங்கை தூய வர்சசனை தொடங்குதல் புரிவான். (இத)

உம்பர் நாயகர் பூசனைக் கவர்தா முரைத்த வாகமத் தண்மையே தலைமின்
றெம்பி ராட்டியர்ச் சனைபுரி வதனுக் கியல்பில் வாழ்நிருச் சேடிய ராண
கொம்பு னாரெனும் பிடைகொண் டூணையக் குலவு மென்றளி ரடியினை யொதுங்கி
யம்பொ னாலின மாசிரு வனத்தி லான லாதரும் புதுமலர் தொய்தான். (இ.)

கொய்த பன்மலர் கம்பையா றதியிற் குலவு மஞ்சன நிலன்மெய்ப் பூச்சு
நெய்த ருங்கொழுந் தீபதூபங்க ணிறைந்த சிந்தையி னீடிய வன்பின்
மெய்த ரும்படி வேண்டின வெல்லாம் வேண்டும் போதினி னுதல் மெய்ப் பூசை
யெய்த வாகம விதியெலாஞ் செய்தா ளுயிர்கள் யாவையு மீன்றவெம் பிராட்டி. (கo)

காந்த ரும்பய னிதுவென வுணர்ந்து கம்ப மேவிய வும்பர்நா யகர்பா
னிரந்த காதல்செ யுள்ளத்த னாகி நீடு நன்மைக ளியாவையும் பெருக
வரந்த ரும்பொரு ளாமலை வல்லி மாறி லாவகை மலர்த்தபே ரன்பாற்
சிரம்ப னிந்தெழு பூசைநா டோறுந் திருவு ளங்கொளப் பெருகிய தன்றே. (கக)

நாத ரும்பெரு விருப்பொடு நயந்து நகுகை யர்சசனை செய்யுமப் பொழுதிற்
காதன் மிக்கதோர் திருவிளை யாட்டிற் கனங்கு ழைக்கருள் புரிந்திட வேண்டி
யோத மார்கட லேழுமொன் றுகி யோங்கி வானமு முட்படப் பரந்து
மீது செல்வது போல்வரக் கம்பை வெள்ள மாந்திரு வுளளமுஞ் செய்தார். (கஉ)

அண்ண லாரருள் வெள்ளத்தை நோக்கி யநுகயற் கண்ணிதம் பெருமான் மேல்
விண்ணெ லாங்கொள வரும்பெரு வெளள மீதுவந் துறுமென வெருக் கொண்டே
யுண்ணி லாவிய பதைப் புறுகாத லுடன்றிருக் கையாற் றடுக்க நில்லாமை
தண்ணி லாமலர் வேணியி ஞரைத் தழுவிகொண்டன டன்னையேயொப்பாள்.(கக)

மலைக் குலக்கொடி பரிவுறு பயத்தான் மாவின் மேலிய தேவநா யகரை
முலைக் குவட்டொடு வீலைக்கையா னெருக்கி முறுகு காதலா லிறுகிடத் தழுவச
சிலைத் தனித்திரு ஙுதற்றிரு முலைக்குரு செந்தளிர்க் கரங்க ளுக்குமெத் தெனசே
கொலைக் களிற்றுரி புனைந்ததம் மேனிகுழைந்து காட்டினுர்விழைந்தகொள்கையிருந்.

கம்பர் காதலி தழுவமெய் குழையக கண்டு நிற்பவுஞ் சரிப்பவு மான
வும்ப ரேமுதல் யோனிக ளெல்லா முயிரும் யாக்கையு முருகியொன் ருகி
யெம்பி ராட்டிக்கு மெல்லிய ரானு ரென்று மேகம்ப ரென்றெடுத் தேத்த
வம்பு லாமலர் நிறையவிண் பொழியக கம்பை யாறுமுன் வணங்கிய தன்றே. (கஇ)

பூதி யாகிய புனிதரீ ருடிப் பொகுகு கஙகைதோய முடிசசடை புனைந்து
காதில் வெண்குழை கண்டிகை தாழக கலந்த யோகத்தின் மருவிய கருத்தா
லாதி தேவனு ராயுமா தவஞ்செ யவவ ரஙகொலோ வகிலமீன் றளித்த
மாது மெய்ப்பயன் கொடுப்ப வேகொண்டு வளைத் தழும்புடன் முசைசுவ டணிந்தார்.

கோதி லாவமு தனையவண் முலைக்குக் குழைந்த தம்மண வாளநற் கோல
மாது வாழவே காட்டிமு னின்று வரங்கள் வேண்டுவ கொள்கவென் றருள
வேத காரண ராயவே கம்பர் விரைம லர்சசெய்ய தாமரைக் கழற்கீ
ழேத நீங்கிய பூசனை முடிந்த தின்மை தானறி விப்பதற் கிறைஞ்சி. (கஎ)

அண்டர் நாயக ரெதிர்நின்று கூறு மளவி னுலஞ்சி யஞ்சலி கூப்பிக்
கொண்ட விற்றையென் பூசனை யின்னுய குறைநி ரம்பிடக் கொள்கவென் றருள
வண்டு வார்குழன் மலைமகள் கமல வதன நோக்கியம் மலர்க்கணைற் றியின்மேன்
முண்ட நீற்றினின் பூசனை யென்ற முடிவ தில்லோரம் பாலென மொழிய. (கஅ)

மாறிலாத லிப்பூசனை யென்ற மன்ன வெம்பிரான் மகிழ்ந்தி கொண் டருளி
யீறிலாத லிப்ப தியினு ளெல்லா வறமும் யான்செய வருன்செய வேண்டும்
வேறுசெய் வினை நிருவடிப் பிழைத்த வொழிய வியருளார் வேண்டின செயினும்
பேறுமாதவப் பயன் பொதித் தருளப் பெறவம்வேண்டுமென்றனன்பிறப்பொழிப்பார்.

விடையின் மேலவர் மலைமகள் வேண்ட விரும்பு பூசனை மேவிவீற் றிருந்தே
யிடைய ருவறம் வளர்க்கும் வித்தக விகபரத் திரு நாழிநெல் லளித்துக்
கடைய ராகிய மூயர்ந்தவ ராயுங் காஞ்சி வாழ்பவர் தாஞ்செய் தீவினையுந்
தடைபடாது மெய்ந்நெறி யடைவ தற்காந் தவங்க ளாகவு முவந்தருள் செய்தார். ()

எண்ணரும் பெருவரங் கண்முன் பெற்றங் கெம்பி ராட்டி தம்பிரான் மகிழ்ந்தருள
மண்ணின் மேல்வழி பாடுசெய் தருளி மீனையறம் பெருக்குங் கருணையினு
னண்ணு மன்னுயிர் யாவையும் பல்க நாடு காதலி னீடிய வாழ்க்கைப்
புண்ணியத் திருக் காமக்கோட் டத்துப் பொலிய மூப்பதோ டிரண்டறம் புரக்கும். ()

அலகி னீடவத் தறப்பெருஞ் செல்வி யண்டமாக் திருமனைக் கிடந்தீப
முலகில் வந்துறு பயனறி விக்க வோங்கு நாண்மலர் மூன்றுட னொன்று
நிலவ வாண்டினுக் கொருமுறை செய்யு நீடு தொன்மையா னிறைந்த பேருலக
மலர் பெருந்திருக் காமக் கோட்டத்து வைத்த நல்லற மன்னவே மன்னும். (எஉ)

நீங்கு நீர்க்குநற் றீர்த்தங்கள் போற்றுஞ் சிறப்பி னுடிருக் காமக்கோட் டத்தின்
பாங்கு மூன்றுல கத்தினுள் ளோரும் பரவு நீர்த்தமாம் பைம்புனற் கேணி
வாங்கு தெண்டிரை வேலுமே கலேரும் வையகந் தனக் கெய்திய படியா
யோங்கு தன்வடி வாய்நிகழ்ந் தென்று முள்ள தொன்றுல காணியென்றுளதால். (எஊ)

அந்தமின் றிநல் லறம்புரிந் தளிக்கு மம்மை தன்றிருக் காமக்கோட் டத்தில்
வந்து சந்திர சூரியர் மீது வழிகொ ளாததன் மருங்குபோ தலிஞற்
சந்த மாதிர மயங்கியெம் மருங்குஞ் சாயை மாறிய தன்றிசை மயக்க
மிந்த மாநிலத் தவரெலாங் காண வென்று முள்ளதொன் றின்றுமங் குளதால். (எசு)

கன்னி நன்னெடுங் காப்புடை வரைப்பிற் காஞ்சி யாந்திரு நதிக்கரை மருங்கு
சென்னி யிற்பிறை யணிந்தவர் விரும்புந் திருப்பெரும் பெயரிருக் கையிற் றிகழ்ந்து
மன்னு வெங்கதிர் மீதெழும் போது மறித்து மேல்கடற் றலைவீழும் போதுந்
தன்னி ழற்பிரி யாதவண் காஞ்சித் தான மேவிய மேன்மையு முடைத்தால். (எடு)

மறைக ளாற்றுதித் தருந்தவம் புரிந்து மாறி லாகிய மந்தலை நின்று
முறைமை யால்வரும் பூசனை செய்ய முனிவர் வானவர் முதலுயி ரெல்லா
நிறையு மன்பினு லர்ச்சனை செய்ய நீடு காமங்க ளவரவர்க் கருளி
யிறைவர் தாமகிழ்ந் தருளிய தளிக ளெண்ணி றந்தவத் திருநக ரெல்லை. (எக)

மன்னு கின்றவத் திருநகர் வரைப்பின் மண்ணின் மிக்கதோர் நன்மையி னுலே
தன்னும் யானையைத் தூற்றில் வாழமுயன்முன் றுரக்கவெய்கியதொலைவிலூக்கத்தாற்
றன்னி லத்துதின் றகற்றுதல் செய்யுந் தான மன்றியுந் தனுவெழுந் தரணி
யென்னி லத்தினுங் காண்பரு மிறவாத் தானமென் றிவை யியல்பினி லுடைத்தால். ()

ஈண்டு நீலினை யாவையு நீக்கி யின்பமே தரும் புண்ணிய தீர்த்தம்
வேண்டி னுர்தமக் கிட்ட சித்தியதாய் விளங்கு தீர்த்தநன் மங்கல தீர்த்த
நீண்ட காப்புடைத் தீர்த்த மூன்றுலகி னிகழ்ந்த சாருவ தீர்த்தமு முதலா
வாண்டு நீடிய தீர்த்த மெண்ணிலவு மமரர் காட்டவ ராதித வொழியார். (எச)

தான தொன்றினின் மூன்றுபூ மலருந் தமனி யச்செழுந் தாமரைத் தடமு
னீன வார்புனல் குடதிசை யோடி நீர்க ரக்குமா நதியுட னீடு
ஞான லர்ந்துசெவ் வுவலைபைங் கமல கண்ப கற்றரும் பாடல மன்றிக்
கான மேக மொப் பாளுறை வரைப்பிற் கண்ப டாதரா யாப்புளி யுளதால். (எக)

சாயை மூன்பிணிக் குஞ்சென நெருன்று தஞ்ச முண்னினஞ் சார்தட மொன்று
மாயை யின்றிவர் துள்ளடைந் தார்கள் வான ரத்துரு வம்பில மொன்றி
மேய வவ்வுரு நீங்கிடக் குளிக்கும் வினங்கு பொய்கையு மொன்று விண்ணவரோ
டாய வின்ப முய்க்கும்பில மொன்றே டனேய வாகிய வதிசயம் பலவால். (அ0)

அஞ்சு வான்கரத் தாறிழி மதத்தோ ரானை நிற்கவு மரையிருட் டிரியு
மஞ்சு நீள்வது போலுமா மேனி மலர்ப்ப தங்களில் வண்டிலம் பொலிப்ப
நஞ்சு பில்கெயிற் றரவவெற் றரையி ளுமமூன்றிலைப் படையுடைப் பின்னை
யெஞ்ச லின்றிமுன் றிரியவுங் குன்ற மெறிந்த வேலவன் காக்கவு மிசையும். (அக)

சத்தி தற்பர சித்தயோ கிகளுஞ் சாத கத்தனித் தலைவரு முதலா
நித்த மெய்திய வாயுண்மெய்த் தவர்க ணீடி வாழ்திரு பாடிபு மநேகஞ்
சித்தர் விஞ்சைய ரியக்கர்கந் தருவர் திகழ்ந்து மன்னுவார் செண்டகை யேந்தி
வித்த கக்கரி மேல்கொளுங் காரி மேவு செண்டாணை வெளியுமொன் றுளதால். (அஉ)

வந்த டைந்தவர் தம்முரு மாய மற்றுளா ரைத்தாங் காண்பிட முளது
சிந்தை யோகத்து முனிவர்யோ கினிகள் சேரும் போக பூமுளதென் றும
மந்த மில்லறம் புரப்பவள் கோயி லான போகபூமுள தாகு
மெந்தை யார்மகிழ் காஞ்சிநீ டெல்லே யெல்லை யில்லன வுள்ளவா றறிவார். (அங)

ஞண்டு சோதியொன் றெழுந்திரு ரெக்குஞ் சுரர்கள் வந்துரு முருத்திர சோலை
வேண்டி ஞர்கடம் பிறப்பினை யொழிக்கு மெய்ந் நெறிக்கணின் றூர்கடாம் விரும்பித்
தீண்டில் யாவையுஞ் செம்பொ ளுக்குவதோர் சிலையு முண்டுரை செய்வதற் கரிதா
லீண்ட நாயகி சமயங்க ளாறு மகில யோனியு மளிக்கு மந்நகரம். (அச)

என்று முள்ளவிந் நகர்கலி யுகத்தி லிலங்கு வேற்கரி காற்பெரு வளத்தோன்
வன்றி றற்புலி யிமையமால் வரைமேல் வைக்க வேகுவோன் றனக்கிதன் வளமை
சென்று வேடன்முன் கண்டுரை செய்யத் திருந்து காதலான் குட்பட வருத்துக்
குன்று போலுமா மதில்புடை போக்கிக் குடியி ருத்தின கொள்கையின் விளங்கும், ()

தே வு.

தண்காஞ்சி மென்சினைப்பூங் கொம்ப ராடல் சார்ந்தசைய வதன்மருங்கு சரும்பு தாழ்ந்து, பண்காஞ்சி யிசைபாடும் பழன வேலிப் பணைமருதம் புடைபுடைத்தாய்ப் பாரி னீடுந், திண்காஞ்சி நகர்கொச்சி யிஞ்சி சூழ்ந்த செழுங்கிடங்கு நிருமலரை னொலிக்குந் தெய்வ, வண்காஞ்சி யல்குன்மலி வல்லி காக்க வளர்கருணைக் கடலுல கஞ் சூழ்ந்தான் மானும். (அசு)

கொந்தலர்பூங் குழலிமையக் கொம்பு கம்பர் கொள்ளும்பூ சினைகுறித்த தானங் காக்க, மந்திரமா மதிலகழி யவர்தாந் தந்த வாய்மையா கமவிதியின் வகுப்புப் போலு, மந்தமில்சீர்க் காஞ்சியைவந் தடைந்தார்க் கன்றி யடைகனங்க மறப்பரி தென் றறிந்து சூழ, வந்தணேந்து தன்கறப்பு முவர்ப்பு நீக்கு மாகடலும் போலுமல ரிக் கிடங்கு மாதோ. (அஎ)

ஆல்குவள ரெயிலினுடன் வினங்கும் வாயி லப்பதியில் வாழ்பெரியோ ருள்ளம் போல, வேல்குலிலத் தன்மையவா யகில முய்ய வுலையாக ரருள்செய்த வொழுக்க மல்லாற், நீல்குறெறி யடையாத தடைபு மாகிச் செல்லெதிக்க வினிதம்வாயிலை மாற்கக், தாற்குலவ நிலவியவர் சொளியா லென்றுந் தடைசெயவா னனடை தனைப் வாகும்.

மாதவெற வருள் வளர மாடமீடு மணிமறுகு செல்தெருவும் வளத்தில் வந்த
வாதபயி லாவண வீதிகளு மற்று மமைத்தார ணிவரைசை ணவு போக்கிக்
கூதபடி நவகண்ட மன்றி மல்கக் கொண்ட வுனைகள் கண்ட மாயென்ன
வேதெருவு மண்ணுலகு தனிளுளதா லென்ன விளங்கியமா லோகமேலே மேவிற் றன்றே.

பாகமருவ் இருபுடையு முயர்ந்து ணீண்ட படரொளி மாளிகை நிரைகள் பயின்
மென் கூந்தற், ரேகையர்தய் குழாமலையத் தக்கு முத்தின் சுடர்க்கோவைக் குளிர்
நீர்மை தனைத்த வீதி, மாகமிடை யொளிதழைப்ப மன்னி நீடி மருங்குதா ரகையலைய
வரம்பில் வண்ண, மேகமிடை நிழித்தொழுகுர் தெய்வக் கங்கை மேனதிகள்பலமண்
மேல் வினங்கி யொக்கும். (கo)

ளொளிச் செங்கனக மயந்தாலுய் மாடுகீழ் நிலேயோர் நீலச் சோபானம் பூணக்
கொள வமைத்து மீதொருபாற் கன்னசாலே குலவுயிரத் தாலமைத்த கொள்கையாலே
யனவில் சுடர்ப் பிழம்பானர் தம்மைத் தேடி யகழ்ந்தேன மாளுனு மன்னமாகி
வளர்விசும் பிலெழுர் தானும் போலநீடு மாளிகையு முளமற்று மறுகு தோறும். (கக)

மின்பொலிபன் மணிமிடைந்த தவள மாட மிசைபபயில்சர் திரகாந்தம் விசும்
பின் மீது, பொன்புரையுஞ் செக்கர்நிறப் பொழுது தோன்றும் புனிற்றுமதி கண்டுரு
பிப பொழிந்த நீரால், வன்புலியி னுரியாடைத் திருவே கம்பர் வளர்சடையு மிளம்பி
றையுங் கண்டு கும்பிட், டன்புருகி மெய்பொழியக் கண்ணீர்வாரு மடியவரு மனைய
வள வலகி லாத. (கஉ)

முகிலுரிஞ்சுய கொடிதொடுத்த முடிய வாகு முழுபபளிங்கின் மாளிகைகண்
முற்றுஞ் சுற்று, நிகரில்சரா சரஙகளெல்லா நிழலி னுலே நிறைதலினு னிறைதவஞ்செ
யிமையப பாவை, நகிலுழுத சுவடும்வளைத் தழும்பும் பூண்ட நாயகனுர் நான்முகநீ
குப் படைக்க நல்கு, மகிலியோ னிகளெல்லா மமைத்து வைத்த வரும்பெரும்பண்
டாரநிலே யனைய வாகும். (கங)

பொற்களப மாளிகைமேண் முன்றினின்று பூங்கழங்கு மணிப பந்தும் போற்றி யாடும்
விற்புருவக் கொடிமடவார் கலன்கள் சிந்தி வீழுவனவய் கெழுவுதனே மேவு மாத
ரற்புமுதிர் கலவியினிற் பரிந்துசிந்த மணிமணிசசே டியர்தொகுக்கு மவையு மாகி
நற்கனக மழையன்றிக் காஞ்சியெல்லே நவமணிமா ரியும் பொழியு நாளு நாளும். (கச)

பூமகளுக் குறையுளெனத் தகைய வான பொன்மாடத் தரமியகள் பொலிய
நின்று, மாமகரக் குழைமகளிர் மைந்த ரயகண் வந்தேறு முன்னறீர் வண்ட லாடத்,
தூமணிப்பொன் புனைநாளத் துருத்தி வீசுஞ் சுடர்விடுசெங குங்குமநீர்த் துவலை
தோய்ந்த, காமர்மணி நாசிகையின் மருங்கு தகுய கருமுகில்கள் செம்முகில்க
ளாகிக் காட்டும். (கடி)

இமமலிய வெடுத்தநெடு வரைகள் போல விலங்குசுதைத் தவளமா ளிகைநீள்
கோட்டச், மெயடையுஞ் சோபான நிரையும் விண்ணுந் தெரிவரிய தூய்மையினு
லவற்றுட் சேர்ந்து, தமர்களுட னிழிந்தேறு மைந்தர் மாதர் தங்களோயும் விசும்பிடை
யின் றிழியா நிற்கு, மமரரையு மரமகளிர் தமையும் வெவவே றறிவரிதாக் தகைமை
யன வநேக மங்கண். (கக)

அரவமெடுக் தேர்வீதி யருகு மாடத் தணிமணிக்கோ புரத்தயலே லியல்வாய்
நீண்ட, வீரவுமா கதச்சோதி வேதித் தின்னே விளிம்பிஞெளிதருமப முறைப்படிமீ
தேறுன், சுரவிலருங் குழன்மடவா ரடியி னூட்டுங் குழம்பமித்த் செம்பஞ்சின் சுவட்
டுக் கோலும், பரவையெடுக் தரற்குமிசை வினங்கித் தோன்றும் பலவகையுக் தனிரினேய
புலவும் பான்கர். (கஎ)

வெம்புனைக் களிற்றநிர்வு மாலி னுர்ப்பும் வியனெடுந்தேர்க் காலிசைப்பும் விழாவ ருத, வம்பொன்மணி வீதிகளி லரங்கி லாடு மரிவையர்ன புரவொலியே டமையு மிம்ப, ரும்பரினிர் நிரன்களிற்றின் முழக்குர் தெய்வ வுயரிரலி மாக்கலிப்பு மயனூர் நித்தேர், பம்பிசையும் விமானத்து ளாடுந் தெய்வப் பாலையர்ன புரவரவத் தடனே பல்கும். (கூ)

அருமறையர் தணர்மன்னு மிருக்கை யான வாருதியின் புகையெடுத்த வம்பொன் மாடப், பெருமறுகு தொறும்வேள்விச சாலே யெங்கும் பெறுமவிப்பா கங்கொடுக் கும் பெற்றி மேலோர், வருமுறைமை யழைத்துவிடு மந்திரமெம் மருங்கும் வான வர்கா யகர்திருவே கம்பர் முன்றிற், றிருமலிபொற் கோபுரத்து நெருங்கு மெல்லாத் தேவரையு மணித்தாகக் கொண்டு செல்லும். (கூ)

அரசர்குலப் பெருந்தெருவுந் தெற்றி முற்றத் தாயுதங்கள் பயிலும்விய லிடமு மங்கண், புரசைமதக் கரிகளொடு புரவி யேறும் பொற்புடைய வீதிகளும் பொலிய வெங்கும், விரைசெய்நறுந் தொடையலங்கற் குமரர் செய்யும் வியப்புமுசெய் தொழில் கண்டு விஞ்சை விண்ணோர், நிரைசெறியும் விமானவூர் திகளின்மேலு நிலமிசையும் பலமுறையு நிரந்து நீங்கார். (கூ)

வெயிலுமிழும் பன்மணிப்பூண் வணிக மாக்கள் வீரவுரிதி வளம்பெருக்கும் வெறுக்கை மிக்க, வயினிலவு மணிக்கடைமா நகர்க ளெல்லாம் வனப்புடைய பொரு ட்குலங்கண் மலித லாலே, கயிலைமலை யார்கசரி யாலயங்கள பலவுங் கம்பமூமே வியதன்மை கண்டு போற்றப், பயிலுமுருப் பலகொண்டு நிதிக்கோன் றங்கப் பயில களகா புரிவகுத்த பரிசு காட்டும். (கூ)

விழவுமலி திருக்காஞ்சி வரைப்பின் வேளாண் விழுக்குடிமைப் பெருஞ்செல்வர் விளங்கும் வேணி, மழவிளவெண் டிங்கள்புனை கம்பர் செம்பொன் மலைவல்லிக் களி த்தவள ருணவின் மூலந், தொழவுலகு பெறுமவடா னருளப் பெற்றுத் தொன்னில த்து மன்னுபயிர் வேத வாய்மை, யுழவுதொழி லாற்பெருக்கி யுயிர்க ளெல்லா மோங்க வருந் தருமவினைக் குளரா லென்றும். (கூ)

ஓங்கியநூற் குலத்தொவவாப் புணர்விற் றம்மி லுயர்ந்தனவு மிழிந்தனவு மான சாதி, தாங்குழுமிப் பிறந்தகுலபேத மெல்லாந் தந்தகைமைக் கேற்றதனி யிடங்கண் மேவி, யாங்குநிறை கிளைபயின்று மரபி னுற்ற வடித்தலினைத் தொழின்முறைமை வழாமை நீடி, பாங்குவள நிருக்கைநிலை பலவு மெல்லாம் பண்புரீ டியவுரிமைப் பால வன்றே. (கூ)

மே வு று.

ஆதி மூதெ யிலந்நகர் மன்னிய, சோதி நீண்மணித் தூபமுந் தீபமுங்
கோதில் பல்லிய முங்கொடி யும்பயில், வீதி நாளு மொழியா விழாவணி. (கூ)

வாயி லெங்கணுந் தோரண மாமதின், ஞாயி லெங்கணுஞ் சூழ்முகி ஞண்மதி
தோயி லெங்கணு மங்கலந் தொண்டர்சூழ், கோயி லெங்கணு மும்பர் குலக்குழாம். ()

வேத வேதியர் வேள்வியே நியன, மாத ரோதி மலரே பிணியன
காதல் வீதிவி லக்கே கவலைய, சூத மாதவி யேபுறஞ் சூழ்வன. (கூ)

ராய லார்க ணுசுப்பே தளர்வன, வாய மாடக் கொடியே யசைவன
சேய வோடைக் களிறே நிகைப்பன, பாய சோலைத் தருவே பயத்தன. (கூ)

அண்ண லன்பரன் பேமுன ரார்த்தன, தண்ண முஞ்செழுந் தாதே துகள்வன்
னுண்ண நீண்மணி மாலையே தாழ்வன, வெண்ணில் குங்குமச் சேறெயி முக்கின.

வென்றி வானவர் தாம்மலை யாட்டு, மென்று மூன்னவர் யாழு மியத்தையு
கன்று மூன்ற்த்த கண்ணினர் வேட்கை, யொன்று மங்கொழி யாவண்ண முய்ப்பது.()

புரங்க டந்தவர் காஞ்சி புரம்புகழ், பரம்பு நீள்புவ னம்பதி ஞன்னினும்
வரம்பில் போக வனப்பின் வனமெலா, நிரம்பு கொள்கல மென்ன நிறைந்ததால். ()

வே று.

அவ்வகைய திருநகர மதன்கணொரு மருங்குறைவா
ரிவ்வுலகிற் பிறப்பினு லேகாலிக் குலத்துளளார்
செவவியவன் புடைமனத்தார் சீலத்தி னெறிநின்றூர்
மைவிரவு கண்டரடி வழித்தொண்ட ருளராஞர். (ககக)

மண்ணின்பிசை வந்ததற்பின் மனமுதலா யினமூன்று
மண்ணலார் சேவடியின் சார்வாக வணைவிபபார்
புண்ணியமெய்த் தொண்டர்திரு குறிபபறித்து போற்றுநிலேத
திண்மையினற் றிருக்குறிப்புத் தொண்டரெனுஞ் சிறப்பினூர். (ககஉ)

தேரொலிக்க மாவொலிகசத் திசையொலிக்கும் புகழ்க்காஞ்சி
பூரொலிக்கும் பெருவண்ணு ரெனவொண்ணு வண்மையினூர்
நீரொலிக்க வராவிரைக்க நிலாமுகிழ்க்குந் திருமுடியார்
பேரொலிக்க வருகுமவர்க் கொலிபபர்பெரு விருபபிலெடிம். (ககங)

தேசுடைய மலர்க்கமலச சேவடியா ரடியார்தந்
தூசுடைய துகண்மாசு கழிபபார்போற் ரெல்லேலவினே
யாசுடைய மலமூன்று மணையவரும் பெரும்பிறவி
மாசுதனே விடகழித்து வருநாளி லங்கொருநாள. (ககச)

பொன்னிமையப் பொருப்பரையன் பயந்தருளும் பூங்கொடித
னன்னிலேமை யன்றளகக வெழுந்தருளு நம்பெருமான்
றன்னுடைய வடியவர்தந் தனித்தொண்டர் தம்முடைய
வந்நிலேமை கண்டன்பர்க ருள்புரிவான் வந்தணைவார். (ககஙி)

சீதமலி காலத்துத் திருக்குறிப்புத் தொண்டர்பா
லாதலராய் மெலிகது மிக வழுகசகடைந்த கன்தையுடன்
மாதவமே டன்தாகி மாலறியா மலரடிகள
கோதடையா மனத்தவர்முன் குறுநடைகள் கொளக்குறுகி. (ககசு)

திருமேனி வெண்ணீறு திகழுதொளிருங் கோலத்துக்
கருமேக மெனவழுக்குக் கன்தையுட னெழுந்தருளி
வருமேனி யருந்தவரைக் கண்மென மகிழ்ந்தெதிர்கொண்
டிருமேவு மயிர்ப்புளக முளவாகப் பணிந்தெழுந்தார். (ககஎ)

எய்துமவர் குறிப்பறிந்தே யின்மொழிகள பலமொழிந்து
செய்தவத்தீர் திருமேனி யினைத்திருந்த தென்னென்று
கைதொழுது கன்தையினைத் தந்தருளுங் கழுவவென
மைதிகழ்கண் டங்கரந்த மாதவத்தோ ரருள்செய்வார். (ககஅ)

இக்கன்தை யழுக்கேறி யெடுக்கவொணு தெனினும்யான்
மெய்க்கொண்ட குளிர்க்குடைந்து விடமாட்டேன் மேல்கடபர
யக்குன்றம் வெங்கதிரோ னணைவதன்முன் றருவீரேற்
றைக்கொண்டு போயொலித்துக் கொலொருங் கடிதென்னூர். (ககக)

தந்தருளு மிக்கன்தை தாழாதே யொலித்துமக்கின்
றந்திபடு வதன்முன்னர்த் தருகின்றே னெனவவருங்
கன்தையிது வொலித்துணக்கிக் கடிதின்றே தாரீரே
லிந்தவுடற் கிடர்செய்தீ ரென்றுகொடுத் தேகினார். (௧௨0)

குறித்தபொழு தேயொலித்துக் கொடுப்பதற்குக் கொடுபோந்து
வெறித்தடநீர்த் துறையின்கண் மாசெறிந்து மிகப்புழுக்கிப்
பிறித்தொலிக்கப் புகுமளவிற் பெரும்பகல்போய்ப் பின்பகலாய்
மறிக்கரத்தார் திருவருளான் மழையெழுந்து பொழிந்திமைல். (௧௨௧)

திசைமயங்க வெளியடைத்த செறிமுகிலின் குழாமிடைந்து
மிசைசொரியும் புனற்ருரை விழிநுழையா வகைமிடைய
வசைவுடைய மனத்தன்ப ரறிவுமறந் தருந்தவர்பா
லிசைவுகினைந் தழிர்கினியா னென்செய்கே னெனகின்ருர். (௧௨௨)

ஓவாதே பொழியுமழை யொருகால்விட் டொழியுமெனக்
காவாலி திருத்தொண்டர் தனிகின்ருர் விடக்காணுர்
மேவார்போற் கங்குல்வர மெய்குளிரும் விழுத்தவர்பா
லாவாவென் குற்றேவ லழிந்தவா வெனவிழுந்தார். (௧௨௩)

விழுந்தமழை யொழியாது மெய்த்தவர்சொல் லியவெல்லை
கழிந்ததுமுன் பொலித்துமனைக் காற்றேற்க வறிந்திலேன்
செழுந்தவர்தந் திருமேனி குளிர்காணுந் தீங்கிழைத்த
தொழும்பனேற் கினியிதுவே செயலென்று துணிந்தெழுவார். (௧௨௪)

கன்தைபுடைத் திடவெற்றுங் கற்பாறை மிசைத்தலையை
சிந்தவெடுத் தெற்றுவனென் றணைந்துசெழும் பாறைமிசைத்
தந்தலையைப் புடைத்தெற்ற வப்பாறை தன்மருங்கு
வந்தெழுந்து பிடித்ததனி வளைத்தழும்பர் மலர்சசெங்கை. (௧௨௫)

வானிறைந்த புனன்மழைபோய் மலர்மழையா யிடமருங்கு
தேனிறைந்த மலரிதழித் திருமுடியார் பொருவிடையின்
மேனிறைந்த துணைவியொடும் வெளிகின்ருர் மெய்த்தொண்டர்
தானிறைந்த வன்புருகக் கைதொழுது தனிகின்ருர். (௧௨௬)

முன்னவரை நோக்நோக்கி முக்கண்ணர் மூவுலகு
கின்னிலைமை யறிவித்தோ நீயுமினி நீடியகம்
மன்னுலகு பிரியாது வைகுவா யெனவருளி
யங்கிலையே யெழுந்தருளி யணியேகாம் பரமணைந்தார். (௧௨௭)

சீர்நிலவு திருக்குறிப்புத் தொண்டர்திருத் தொழில்போற்றிப்
பார்குலவுத் தன்தைதா ளறவெறிந்தார் பரிசுரைக்கேன்
பேரருளின் மெய்த்தொண்டர் பித்தனெனப் பிதற்றுதலா
லாருலகி லிதனுண்மை யறிந்துரைக்க விசைந்தெழுவார். (௧௨௮)

திருக்குறிப்புத்தொண்டநாயனர்புராண முற்றிற்று.

திருவிருத்தம் - ௧,௨௪0.

சூசனம்.

சிவனடியார்களுக்குக் குறிப்பறிந்து தொண்டு செய்தல்.

பசுபதியாகிய சிவனே தமக்கு உறவு எனத் துணிந்த மெய்புணர்வுடையோர் குடும்பத்தோடு கூடி இருப்பினும், உயிர்ச்சார்பு பொருட்சார்புகளினும் சரீரத்தினும் சிறிதும் பற்று வையாது, சிவனிடத்தே இடையறாத மெய்யன்புடையராகி, தமது மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றும் அவருக்குத் திருத்தொண்டு செய்தற்பொருட்டே இடைத்தமையால், அம்மூன்றையும் அவரது தொண்டிற்கே ஆக்கி ஒழுகுவர். ஆசை அற்றாரே முத்தி பெறுவர் என்பது "மண்ணினுந் தனத்தினு மனைக்கு வாய்த்த நற்—பெண்ணினு மகவினும் பெரிய பேரினுந்—தண்ணென விழைவினைத் துறந்த ஞயரே—விண்ணினு மின்புடன் விளங்கி மேவுவார்." "ஆக்கையிற் றுயர்பெரி தற்ப மின்பமென்—றூக்கையை யறவெறுத் தார்வங் கூர்வரே—லாக்கையினாதியே முத்த னுக்கவ—ஞக்கையுந் துயரமு மறுப்ப ஞணையால்." என்னும் சிவதருமோத்தரச் செய்யுள்களால் உணர்க. மனம் முதலிய மூன்றும் சிவனுக்குத் தொண்டு செய்தற் பொருட்டே இடைத்தன என்பது "வாழ்த்த வாயு நினைக்க மடநெஞ்சு—தாழ்க்கச் சென்னியுந் தந்த தலைவனைச்—சூழ்த்த மாமலர் தூவித் தொழுதுநின்—வீழ்த்த வாவினையே னெடுங் காலமே." என்னும் திருநாவுக்கரசுநாயனார் தேவாரத்தான் அறிக. இவ்வாறு ஒழுகும் பெருந்தன்மையினர் சிவனடியாரைச சிவன் எனவே கண்டு, வணங்கி, அவர் குறிப்பறிந்து, அவருக்குத் தம்மால் இயலும் தொண்டை வழுவாது செய்தலே தமக்குச செல்வம் எனக்கொள்வர். "சிவநேசர் பாதம் வணங்கிச் சிறக்க—வவரேவல் செய்க வறிந்து." என்னும் சைவசமயநெறித் திருக்குறளானும் உணர்க.

இவ்வாறு பிரபஞ்ச வைராக்கியமும் சிவபத்தியும் உடையராய், சிவனடியார்களுக்குக் குறிப்பறிந்து தொண்டு செய்தமையான் மிகச சிறப்புற்றவர் இத்திருக்குறிப்புத்தொண்டநாயனார். இவர் மனம் முதலிய மூன்றும் சிவன் பணிக்கே ஆக்கினர் என்பது "மண்ணின்மிசை வந்ததற்பின் மனமுதலா யினமூன்று—மண்ணலார் சேவடியின் சார்வாக வணைவிப்பார்." என்பதனாலும், சிவனடியார்களுக்குக் குறிப்பறிந்து தொண்டுசெய்தார் என்பது "புண்ணியமெய்த் தொண்டர்திருக் குறிப்பறிந்து போற்றுநிலைத்—திண்மையினுந் திருக்குறிப்புத் தொண்டரெனுஞ் சிறப்பினார்." என்பதனாலும், இங்கே உணர்த்தப்பட்டன. இந்நாயனார், தாம் ஏகாலியராதலின், சிவனடியார்களுக்குச் சித்தையோடு வஸ்திரம் ஒலித்துக் கொடுத்தலே முக்கியத் தொண்டாகக் கொண்டனர். இவர் இத்தொண்டைச் சித்தையோடு செய்தார் என்பதும், குடும்பத்தோடு கூடி யிருந்தும் வாசனை மாண்டு நின்றார் என்பதும், இவர் அடியார் வேடங் கொண்டு வந்த பரமசிவனுக்குத் தாம் குறித்த காலத்தில் கந்தை ஒலித்து உலர்த்திக் கொடுக்க இயலாமையாற் பதைப்புற்று, வஸ்திரங்களைப் புடைக்கும் கற்பாறையிலே தமது தலையை எற்றினமையாலே, செவலிறற்றுணியப்படும். இவரது மெய்யன்பினுலாகிய இச்செயற்கருஞ்செயலைத் தரிக்கலாற்றுமையானன்றே, திருபாசமுத்திரமாகிய சிவன் அக்கற்பாறையின் பக்கத்திலே தமது திருக்கரத்தைத் தோற்றுவித்து, இவரைப்பிடித்தருளி, பின் இவருக்கு இடபாரூடராய் வெளிப்பட்டு, முத்திகொடுத்தருளினர். சர்வான்மாக்களும் தம்மாட்டு மெய்யன்பு செய்து உய்தல் வேண்டும் என்னும் பெருங்கருணையினுலன்றே, சிவன் இவரது அன்பின் செயலை மூவுலகத்திற்கும் அறிவித்தார். ஐயையோ! இது கண்டும், சிவனிடத்தே சிறிதும் அன்புசெய்யாது வாளுலே வீணாளாகப் போக்கும் எம்போலிகளது அறியாமை இருந்தபடி என்னே!

சண்டேசுர நாயனார்புராணம்.



பூத்தண் பொன்னி யெக்காளும் பொய்யா தனிக்கும் புனலுட்டி
வாய்த்த மண்ணித் தென்கரையின் மன்ன முன்னுள் வரைகிழிய
வேர்த்து மயில்வே னிலைகாட்டி யிமையோ ரிகல்வெம் பகைகடக்குஞ்
சேர்த்த னளித்த திருமறையோர் மூதூர் செல்வச் சேய்ஞலூர். (க)

செம்மை வெண்ணீற் றொருருமையினு ரிரண்டு பிறப்பின் சிறப்பினுர்
மும்மைத் தழலோம் பியதெறியார் நான்கு வேத முறைபயின்றூர்
தம்மை யைந்து புலனும்பின் செல்லுந் தகையா ரறுதொழிலின்
மெய்மை யொழுக்க மேழுலகும் போற்று மறையோர் விளங்குவது. (உ)

கோதின் மான்றேர்ப் புரிமுந்நூல் குலவு மார்பிற் குழைக்குடுமி
யோது புடைசூழ் சிறுவர்களு முதவும் பெருமை யாசானும்
போதின் விளங்குந் தாரகையு மதியும் போலப் புணர்மடங்கண்
மீது முழங்கு முகிலொதுங்க வேத வொலிகண் முழங்குவன. (ஊ)

யாக நிலவுஞ் சாலிதொறு மறையோ ரீந்த வவியுணவின்
பாக நுகர வருமாலு மயனு மூரும் படர்சிறைப்புண்
மாக மிகந்து வந்திருக்குஞ் சேக்கை யெனவும்வா னவர்கோ
ஞக மணையுங் கந்தெனவு நாட்டும் பூப வீட்டமுள. (எ)

நீம்பா லொழுகப் பொழுதுதொறு மோம தேனுச் செல்வனவுங்
தாம்பா டியசா மங்கணிப்போர் சமிதை யிடக்கொண் டணைவனவும்
பூம்பா சடைநீர்த் தடமூழ்கி மறையோர் மகளிர் புகுவனவு
மாம்பான் மையினில் விளங்குவன வணிநீண் மறுகு பலவுமுள. (இ)

வாழ்பொற் பதிமற் றதன்மருங்கு மண்ணித் திரைகள் வயல்வரம்பின்
ரூள்விற் றரளஞ் சொரிகுலைப்பாற் சமைத்த யாகத் தடஞ்சாலை
சூழ்வைப் பிடங்க ணெருங்கியுள தொடங்கு சடங்கு முடித்தேறும்
வேள்வித் தலைவர் பெருந்தேர்கள் விண்ணே றேறும் விமானங்களை. (ஈ)

மடையிற் கழுநீர் செழுநீர் சூழ்வயலிற் சாலிக் கதிர்க்கற்றை
புடையிற் சுரும்பு மிடைகழுகு புனலிற் பரம்பு பூம்பாளை
யிடையிற் பயிலுந் தாமரைநீ ளலரிற் றுயிலும் கயல்கள் வழி
நடையிற் படர்மென் கொடிமெலவ னனையிற் றிகழுஞ் சினைக்காஞ்சி. (எ)

சென்னி யபயன் குலோத்துங்க சோழன் றில்லைத் திருவெல்லை
பொன்னின் மயமாக் கியவளவர் போரே றென்றும் புவிகாக்கு
மன்னர் பெருமா னகபாயன் வருந்தான் மரபின் முடிசூட்டுந்
தன்மை நிலவு பதினெயந்தி னெண்ணூய் நீடுந் தகைத்தவ்வூர். (அ)

பண்ணின் பயனு நல்லிசையும் பாலின் பயனு மின்சுவையுங்
கண்ணின் பயனும் பெருகொளியுங் கருத்தின் பயனு மெழுத்தஞ்சும்
விண்ணின் பயனும் பொழிமழையும் வேதப் பயனுஞ் சைவமும்போன்
மண்ணின் பயனு மப்பதியின் வளத்தின் பெருமை வரம்புடைத்தோ. (ஆ)

பெருமை பிறங்கு மப்பதியின் மறையோர் தம்மூட் பெருமனைவாழ்
தரும நிலவு காபிபகோத் திரத்துத் தலைமை சான்மரபி
லருமை மனிபு மளித்ததுவே கஞ்சு மனிக்கு மரவுபோ
லிருமை யீனைக்கு மொருவடிவா மெச்ச தத்த னுளனுலன். (௫0)

மற்ற மறையோன் றிருமனைவி வாய்ந்த மரபின் வந்துதித்தாள்
சுற்றம் விரும்பு மில்வாழ்க்கைத் தொழிலா லுலகிற் றுணைப்புதல்வற்
பெற்று விளங்குந் தவஞ்செய்தாள் பெறும்பே றெல்லைப் பயன்பெறுவாள்
பற்றை யெறியும் பற்றுவரச் சார்பா புள்ள பவித்திரையாம். (௫௫)

நன்றி புரியு மவர்தம்பா னன்மை மறையின் றுறைவிளங்க
வென்று மறையோர் குலம்பெருக வேழு புவனங் களுமுய்ய
மன்றி னடஞ்செய் பவர்சைவ வாய்மை வளர மாதவத்தோர்
வென்றி விளங்க வந்துதயஞ் செய்தார் விசார சருமனார். (௫௨)

ஐந்து வருட மவர்க் கணைய வங்கமாறு மூடனிறைந்த
சந்த மறைக ளுட்படமுன் றீலவர் மொழிந்த வாகமங்கண்
மூன்தை யறிவின் றெடர்ச்சியினன் முகைக்கு மலரின் வாசம்போற்
சென்தை மலர வுடன்மலருஞ் செவ்வி யுணர்வு சிறந்ததால். (௫௩)

நிகழு முறைமை யாண்டேழு நிரம்பும் பருவம் வந்தெய்தப்
புகழும் பெருமை யுபாயனப் பொருவில் சடங்கு முடித்தறிவி
னிகழு நெறிய வல்லாத வெல்லா மியைந்த வெனினுந்தங்
நிகழு மாபி னேதுவிக்குஞ் செய்கை பயந்தார் செய்வித்தார். (௫௪)

குலவு மறையும் பலகலையும் கொளுத்து வதன்முன் கொண்டமைந்த
நிலவு முணர்வின் றிறங்கண்டு நிறுவு மறையோ ரதிசயித்தா
ரலகில் கலையின் பொருட்கெல்லை யாடுங் கழலே யெனக்கொண்ட
செலவு மிகுந்த சிந்தையினிற் றெளிந்தார் சிறிய பெருந்தகையார். (௫௫)

நடமே புரியுஞ் சேவடியார் நம்மை யுடையா ரெனுமெய்மை
யுட்டனே தோன்று முணர்வின்க ணெழியா தூறும் வழியன்பின்
சடனே யியல்பாய் முயற்றிவருங் காதன் மேன்மே லெழுங்கருத்தின்
றிடநேர் நிற்குஞ் செம்மலார் நிகழு நாளி லாங்கொருநாள். (௫௬)

ஒது கிடையி னுடன்போவா ரூரா னிரையி னுடன்புக்க
போது மற்றங் கொருபுனிற்ரு போற்று மவன்மேன் மருப்போச்ச
யாது மொன்றுங் கூசாதே யெடுத்த கோல்கொண் டவன்புடைப்ப
மீது சென்று மிகும் பரிவால் வெகுண்டு விலக்கி மெய்யுணர்ந்து. (௫௭)

பாவுங் கலைக ளாகமநூற் பரப்பின் றெருநி பான்மையினன்
மேவும் பெருமை யருமறைகண் மூல மாக விளங்குலகில்
யாவுந் தெளிந்த பொருணிலையே யெய்த வுணர்ந்த வுள்ளத்தா
லாவின் பெருமை புள்ளபடி யறிந்தா ராயற் கருள்செய்வார். (௫௮)

தங்கு மகில யோனிகட்கு மேலாம் பெருமைத் தகைமையன
பொங்கு புனித நீர்த்தங்க ளெல்லா மென்றும் பொருந்துவன
துங்க வமரர் திருமுனிவர் தூண்கள் சூழ்ந்து பிரியாத
வுங்க மினைத்துத் தாமுடைய வல்ல வேள்வி ளானின்கள், (௫௯)

ஆய நெறிப்பி னுற்பெற்ற வன்றே மன்று ணடம்புரியு
காய னுர்க்கு வளர்மதியு நதியு நகுவெண் டலைத்தொடையு
மேய வேணித் திருமுடிமேல் விரும்பி யாடி யருளுதற்குத்
தூய திருமஞ் சனமைந்து மலிக்கு முரிமை சுரபிகடாம். (20)

சில முடைய கோக்குலங்கள் சிறக்குந் தகைமைத் தேவருடன்
கால மூழுது முலகனேத்துங் காக்கு முதற்கா ரணராகு
நீல கண்டர் செய்யசடை நிருத்தர் சாத்து நீறுதரு
மூல மவதா ரஞ்செய்பு மூர்த்த மென்னு முடிவென்னே. (21)

உள்ளுந் தகைமை யினிப்பிறவே நுளவே யுழைமான் மறிக்கன்று
துள்ளுங் கரத்தா ரணிபணியின் சுடர்சூழ் மணிகள் சாரதிநீர்
தெள்ளுஞ் சடையார் தேவர்கடம் பிராட்டி யுடனே சேரமிசைக்
கொள்ளுஞ் சினமால் விடைத்தேவர் குலமன் றேவிச சுரபிகுலம். (22)

என்றின் னனவே பலவுநினைந் திதத்தின் வழியே மேய்த்திந்தக்
கன்று பயிலா னிரைகாக்கு மிதன்மே லில்லை கடனிதுவே
மன்று ளாடுஞ் சேவடிகள் வழுத்து நெறியா வதுமென்று
நின்ற வாயன் றனைநோக்கி நிரைமேய்ப் பொழிக நீயென்பார். (23)

யானே யினியிங் நிரைமேய்ப்ப னென்று ரஞ்சி யிடைமகனுங்
தானே நிறைஞ்சி விட்டகன்றுன் றூமு மறையோ நிசைவினு
லானேர் நெருங்கும் பேராய மளிப்பா ராகிப் பைங்கூழ்க்கு
வானே யென்ன நிரைகாக்க வந்தார் தெய்வ மறைச்சிறுவர். (24)

கோலுங் கயிறுங் கொண்டுகுழைக் குடுமி யிலையக் குலபுமான்
றோலு நூலுஞ் றெமார்பிற் றுவள வரைக்கோ வணஞ்சுடரப்
பாலும் பயனும் பெருகவரும் பசுக்கண் மேய்க்கும் பான்மையினுற்
சாலும் புல்லி னனைவேண்டுந் தனேயு மிசையுந் தலைச்சென்று. (25)

பதவு காலங் களின்மேய்த்தும் பறித்து மளித்தும் பரிவகற்றி
யிதமுண் றைறபு நற்றண்ணீ ரூட்டி யச்ச மெதிர்நீக்கி
யதர்ந்ல் லனமுன் செலநீழ லமர்வித் தமுத மதுரப்பா
லுதவும் பொழுது பிழையாம லுடையோ ரில்லந் தொறுமுய்த்தார். (26)

மண்ணிக் கரையின் வளர்புறவின் மாடும் படுகர் மருங்கினிலுந்
தண்ணித் திலநீர் மருதத்தண் டலைசூழ் குலையின் சார்பினிலு
மெண்ணிற் பெருகு நிரைமேய்த்துச் சமிதை யுடன்மே லெரிகொண்டு
ணண்ணிக் கங்குன் முன்புகுந்து நன்னுள் பலவா மக்காளில். (27)

ஆய நிரையின் குலமெல்லா மழகின் விளங்கி மிகப்பல்கி
மேய வினிய புல்லுணவும் விரும்பு புனலு மார்தலினு
லேய மனங்கொள் பெருமகிழ்ச்சி யெய்தவிரவு நண்பகலுங்
காய நீம்பான் மடிபெருகிச் சொரிய முலைகள் சுரந்தனவால். (28)

பூணுந் தொழில்வேள் லிச்சடங்கு புரிய வோம தேனுக்கள்
காணும் பொலிவின் முன்னையினு மகிழ்ச மடங்கு கறப்பனவாப்
பேணுந் தருதி யன்பாலிப் பிரம சாரி மேய்த்ததற்பின்
பூணுந் நிறத்த வானவென மறையோ ரெல்லா மனமகிழ்ந்தார். (29)

அனைத்துத் திறத்து மானினங்க ளணைந்த மகிழ்ச்சி யளவின்றி
மனைக்கட் கன்று பிரிந்தாலு மருவுஞ் சிறிய மறைக்கன்று
தனைக்கண் டருகு சார்ந்துருகித் தாயாந் தன்மை நிலைமையவாய்க்
கனைத்துச் சுரந்து முலைக்கண்கள் கறவா மேபால் பொழிந்தனவால். (கூ0)

தம்மை யணைந்த வான்முலைப்பா ருமே பொழியக் கண்டுவந்து
செம்மை நெறியே யுறுமனத்திற் றிருமஞ் சனமாங் குறிப்புணர்ந்தே
யெம்மை புடைய வள்ளலா ரெய்த நினைந்து தெளிந்ததனின்
மெய்மைச் சிவனுர் பூசனையை விரும்பும் வேட்கை மீளுந்தெழலும். (கூக)

அங்கண் முன்னே யர்ச்சனையி னளவின் ரெடர்ச்சி விளையாட்டாப்
பொங்கு மன்பான் மண்ணிமணற் புளினக் குறைபி லாத்தியின்கீழ்ச்
செங்கண் விடையார் திருமேனி மணலா லாக்கிச் சிவாலயமுந்
துங்க நீடு கோபுரமுஞ் சுற்ரு லயமும் வகுத்த மைத்தார். (கூஉ)

ஆத்தி மலருஞ் செழுந்தளிரு முதலா வருகு வளர்புறவிற்
பூத்த மலர்க டாந்தெரிந்து புனிதர் சடிலத் திருமுடிமேற்
சாத்த லாகுந் திருப்பள்ளித் தாமம் பலவுந் தாங்கொய்து
கோத்த விலைப்பூங் கூடையினிற் கொணர்ந்து மணந்தங் கிடவைத்தார். (கூக)

நல்ல நவகும் பங்கள்பெற நாடிக் கொண்டி ராணற்பூங்
கொல்லை யிடத்துங் குறைமறைவு மேவுங் கோக்க ளுடன்கூட
வொல்லை யணைந்து பாலாக்க ளொன்றுக் கொருகா லாகவெதிர்
செல்ல வவையுங் கனைத்துமுலை நீண்டச் செழும்பால் பொழிந்தனவால். (கூச)

கொண்டி மடித்த குடங்கையைக் கொணர்ந்து விரும்புங் கொள்கையினு
லண்டர் பெருமான் வெண்மணலா லயத்து ளவையுமுன் ரூபித்து
வண்டு மருவுந் திருப்பள்ளித் தாமங் கொண்டு வரன்முறையே
பண்டைப் பயில்வா லருச்சித்துப் பாலின் றிருமஞ் சனமாட்டி. (கூஙி)

மீள மீள விவ்வண்ணம் வெண்பால் சொரிமஞ் சனமாட்ட
வாள புடையார் தம்முடைய வன்ப ரன்பின் பாலுளதாய்
மூள வமர்ந்த நயப்பாடு முதிர்ந்த பற்று முற்றச்சூழ்
கோள மதனி லுண்ணிறைந்து குறித்த பூசை கொள்கின்ரூர். (கூசு)

பெருமை பிறங்குஞ் சேய்ஞ்ஞலூர்ப் பிள்ளை யார்தம் முள்ளத்தி
லொருமை நினைவா லும்பர்பிரா னுவக்கும் பூசை யுறுப்பான
திருமஞ் சனமே முதலவற்றிற் றேடா தனவன் பினிணரப்பி
வருமக் நெறியே யர்ச்சனைசெய் தருளி வணங்கி மகிழ்கின்ரூர். (கூள)

இறையோ னடிக்கீழ் மறையவனு நெடுத்துத் திருமஞ் சனமாட்டு
நிறைபூ சனைக்குக் குடங்கள்பா னிரம்பச் சொரிந்து நிரைக்குலங்கள்
குறைபா டின்றி மடிபெருகக் குவிந்த முலைப்பால் குறைவின்றி
மறையோர் மனையின் முன்புதரும் வளங்கள் பொலிய வைகுமால். (கூஅ)

செயலிப் படியே பலகாளுஞ் சிறந்த பூசை செய்வதற்கு
முயல்வுற் றதுவே திருவினையாட் டாக முந்நூ லணிமார்ப
ரியல்பிற் புரியு மற்றினைக் கண்டித் திறத்தை யறியாத
வயன்மற் ரெருவ னப்பதியி லந்த ணாளர்க் கறிவித்தான். (கூக)

அச்சொற் கேட்ட வருமறையோ ராய னறியா னென்றவற்றி
னிச்சை வழியே யான்மேய்ப்பே னென்றெம் பசுக்க டமைக்கறந்து
பொச்ச மொழுகு மாணவகன் பொல்லாங் குரைக்க வவன்றுதை
யெச்ச தத்தன் றனையழைமி னென்ற ரவையி லிருத்தார்கள். (சஎ)

ஆங்கு மருங்கு நின்றூர்க ளவ்வந் தணன்றன் றிருமனையின்
பாங்கு சென்று மற்றவனை யழைத்துக் கொண்டு வரப்பகர்ந்த
வோங்கு சபையோ ரவனைபபார்த் தரா னிரைமேய்த் துன்மகன்செய்
தீங்கு தன்னைக் கேளென்று புகுந்த பரிசு செப்புவார். (சக)

அந்தண் மறையோ ராகுதிக்குக் கறக்கும் பசுக்க ளானவெலாஞ்
சிந்தை மகிழ்ந்து பரிவினற் றிரளக் கொடுபோய் மேய்ப்பான்போற்
கந்த மலியும் புனன்மண்ணி மணலிற் கறந்து பாலுருத்து
வந்த பரிசே செய்கின்றே னென்று மறையோர் வாய்மொழிந்தார். (சஉ)

மறையோர் மொழியக் கேட்டஞ்சிச் சிறுமா ணவகன் செப்தவிது
விறையு நான்மூன் பறிந்திலே னிதற்கு முன்பு புகுந்ததனை
நிறையும் பெருமை யத்தணர்காள் பொறுக்க வேண்டு நீங்களெனக்
குறைகொண் டிறைஞ்சி யினிப்புகுதிற் குற்ற மெனதே யாமென்றான். (சங)

அந்தணளர் தமைவிடைகொண் டகந்தி தொழுது மனைபுகுந்து
வந்த பழியொன் றெனதினைந்தே மகனுர் தமக்கு வாய்கோரா
னிந்த நிலைமை யறிவேனென் றிரவு கழிந்து நிரைமேய்க்க
மைந்த னுர்தாம் போயினபின் மறைந்து சென்றான் மறைமுதியோன். (சச)

சென்ற மறையோன் றிருமகனுர் சிறந்த வூரா னிரைகொடுபோய்
மன்றன் மருவும் புறவின்கண் மேய்ப்பார் மண்ணி மணற்குறையி
லன்று திரளக் கொடுசென்ற வதனை யறிந்து மறைந்தப்பா
னின்ற குரவின் மிசையேறி நிகழ்வ தறிய வொளித்திருந்தான். (சடு)

அன்பு புரியும் பிரமசா ரிகளு மூழ்கி யரனுர்க்கு
முன்பு போல மணற்கோயி லாக்கி முகைமென் மலர்கொய்து
பின்பு வருமான் முலைபொழிபால் பெருகுங் குடங்கள் பேணுமிடந்
தன்பாற் கொணர்ந்து தாபித்துப் பிறவும் வேண்டி வனசமைத்தார். (சசு)

நின்ற விதியின் வினையாட்டா நிறைந்த வரும்பூ சனைதொடங்கி
யொன்று முள்ளத் துண்மையினு லுடைய நாதன் றிருமுடிமேன்
மன்றல் விரவுந் திருப்பள்ளித் தாமஞ் சாத்தி மஞ்சனமா
நன்று நிறைநீர் பாற்குடங்க ளெடுத்து நயப்புற் றூட்டுதலும். (சஎ)

பரவ மேன்மே லெழும்பரிவும் பழைய பான்மை பிரும்பண்பும்
விரவு மேதக் கவர்தம்பான் மேவும் பெருமை வெளிப்படுப்பா
னரவ மேவுஞ் சடைமுடியா ரருளா மென்ன வறிவழிந்து
குரவ மேவு முதுமறையோன் கோப மேவும் படிகண்டான். (சஅ)

கண்ட போதே விரைந்திழிந்து கடிது சென்று கைத்தண்டு
கொண்டு மகனுர் திருமுதுகிற் புடைத்துக் கொடிதா மொழிகூறத்
தொண்டு புரியுஞ் சிறியபெருந் தோன்ற லார்தம் பெருமான்மேன்
மண்டு காத லருச்சனையின் வைத்தார் மற்றொன் றறிந்திலரால். (அ)

மேலாம் பெரியோர் பலகாலும் வெகுண்டோ னடிக்க வேறுணரார்
பாலார் திருமஞ் சனமாட்டும் பணியிற் சலியா ததுகண்டு
மாலா மறையோன் மிகச்செயிர்த்து வைத்த திருமஞ் சனக்குடப்பால்
காலா லிடறிச் சிந்திஞன் கையாற் கடமைத் தலேகின்ருன். (கூ0)

சிந்தும் பொழுதி லதுநோக்குஞ் சிறுவ ரிறையிற் றீயோனைத்
தந்தை யெனவே யறிந்தவன்றன் ருள்கள் சிந்துந் தகுதியிஞன்
முந்தை மருங்கு கிடந்தகோ லெடுத்தார்க் கதுவே முறைமையிஞல்
வந்து மழுவாயி டவெறிந்தார் மண்மேல் வீழ்ந்தான் மறையோனும். (கூக)

எறிந்த வதுவே யர்ச்சனேயி லிடையூ றகற்றும் படையாக
மறிந்த தாதை யிருதாளுந் துணித்த மைந்தர் பூசனேயி
லறிந்த விடையூ றகற்றினராய் முன்போ லருச்சித் திடப்புகலுஞ்
செறிந்த சடைநீண் முடியாருந் தேவி யோடும் விடையேறி. (கூஉ)

பூத கணங்கள் புடைசூழப் புராண முனிவர் புத்தேளிர்
வேத மொழிக ளெடுத்தேத்த வீமல மூர்த்தி திருவுள்ளங்
காதல் கூர வெளிப்படலுங் கண்டு தொழுது மனங்களித்துப்
பாத மலர்கண் மேல்வீழ்ந்தார் பத்தி முதிர்ந்த பாலகனர். (கூங)

தொடுத்த வீதழி சூழ்சடையார் துணேத்தா ணிமுற்கீழ் வீழ்ந்தவரை
யெடுத்து நோக்கி நம்பொருட்டா லீன்ற தாதை வீழவெறிந்தா
யடுத்த தாதை யினியுனக்கு நாமென் றருள்செய் தணேத்தருளி
மடுத்த கருணே யாற்றடவி யுச்சி மோந்து மகிழ்ந்தருள. (கூச)

செங்கண் விடையார் திருமலர்க்கை தீண்டப் பெற்ற சிறுவஞ
ரங்கண் மாயை யாக்கையின்மே லளவின் றுயர்ந்த சிவமயமாய்ப்
பொங்கி யெழுந்த திருவருளின் மூழ்கிப் பூமே லயன்முதலாந்
துங்க வமரர் துதிசெய்யச் சூழ்ந்த வொளியிற் ருேன்றினர். (கூடி)

அண்டர் பிரானுந் தொண்டர்தமக் கதிப ஞக்கி யனேத்துரா
முண்ட கலமு முடிப்பனவுஞ் சூடி வனவு முனக்காகச்
சண்டி சலுமாம் பதந்தந்தோ மென்றங் கவர்பொற் றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை மாலே வாங்கிச் சூட்டினர். (கூசு)

எல்லா வுலகு மார்ப்பெடுப்ப வெங்கு மலர்மா ரிகள்பொழியப்
பல்லா யிரவர் கணநாதர் பாடி யாடிக் களிபயிலச்
சொல்லார் மறைக டுதிசெய்யச் சூழ்பல் லியங்க ளெழச்சைவ
நல்லா ருேங்க நாயகமா நங்கள் பெருமான் றெழுதணேந்தார். (கூள)

ஞால மறியப் பிழைபுரிந்து நம்ப ரருளா ஞன்மறையின்
சீலந் திகழுஞ் சேய்ஞலூர்ப் பிள்ளே யார்தந் திருக்கையிற்
கோல மழுவா லேறுண்டு குற்ற நீங்கிச் சுற்றமுடன்
மூல முதல்வர் சிவலோக மெய்தப் பெற்ருன் முதுமறையோன். (கூஅ)

வந்து மிகைசெய் தாதைதாண் மழுவாற் றுணித்த மறைச்சிறுவ
ரந்த வுடம்பு தன்னுடனே யரனுர் மகளு ராயினு
ரிந்த நிலேமை யறிந்தாரா ரீறி லாதார் தமக்கன்பு
தந்த வடியார் செய்தனவே தவமா மன்ரே சாற்றுங்கால். (கூக)

*சேவிறைந்த வுள்ளத்தா னீல நிறைந்த மணிகண்டத்
தேவனடியார் பெருமையினை யெல்லா வுயிருந் தொழவெடுத்துத்
தேவ முய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல்வணங்க வந்த பிறப்பை வணங்குவாம். (கூ0)

சண்டேசுரநாயனார்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம். - க,உஎ0.

சூ ச ன ம்.

க. பசு ஓம்பல்.

சிவலோகத்திலே சிவனது சந்நிதியில் இடபம் இருக்கும். அதன்பக்கத்திலே நந்தை பத்திரை சுரபி சுசீலை சுமனை என்னும் ஐவகைப்பசுக்கள் இருக்கும். இவை முறையே, கபிலநிறமும் கருநிறமும் வெண்ணிறமும் புகைநிறமும் செந்நிறமும், உடையனவாம். இவ்வைந்தும், சிவனது திருவருளினாலே திருப்பாற்கடலில் இருந்து, சிவபூசையின் பொருட்டும், யாகாதிகருமங்களின் பொருட்டும், பூமியில் உற்பவித்தன.

இப்பசுவின் உறுப்புக்களிலே தேவர்களும் முனிவர்களும் தீர்த்தங்களும் இருக்குமாறு கூறுதும். பிரமாவும் விட்டுணுவும் கொம்பினடியில் இருப்பர்; கோதாவரி முதலிய தீர்த்தங்களும் சராசரங்களும் கொம்பின் நுனியில் இருக்கும்; சிவன் சித்தியும், உமாதேவி நடுநெற்றியிலும், முருகக் கடவுள் மேல் நாசியிலும், நாகேசர் உள் நாசியிலும், அச்சுவினிதேவர் இரண்டுகாதுகளிலும், சூரியனும் சந்திரனும் இரண்டு கண்களிலும், வாயு பல்லிலும், வருணன் நாவிலும், சரஸ்வதி ஓங்காரத்திலும், இயமன் இருதயத்திலும், இயக்கர்கள் கெண்டைத்தலத்திலும், உதயாஸ்தமயன சந்திகள் உதட்டிலும், இந்திரன் கழுத்திலும், அருக்கர்கள் திமிலிலும், சாத்தியர் மார்பிலும், அனிலவாயு நான்குகால்களிலும், மருத்துவர் முழந்தாள்களிலும், நாகலோகத்தார் குரத்தின் நுனியிலும், கந்தருவர் குரத்தின் நடுவிலும், தேவமாதர்கள் மேற்குரத்திலும், உருத்திரர் முதுகிலும், வசுக்கள் சந்திகளிலும், பிதிர்கள் அரைப்பலகையிலும், சத்தமாதர்கள் பகத்திலும், இலக்குமி அபானத்திலும், நாகேசர் அடிவாலிலும், இருப்பர்; சூரியனெளி வால் மயிரிலும், கங்கை மூத்திரத்திலும், யமுனை சாணத்திலும் இருக்கும்; முனிவர்கள் உரோமத்திலும், பூமிதேவி உதரத்திலும் இருப்பர்; சமுத்திரம் மூலியிலும், காருகபத்தியம் முதலிய அக்கினி மூன்றும் முறையே வயிறு இருதயம் முகம் என்னும் உறுப்புக்களிலும், யாகங்களெல்லாம் எலும்பிலும் சுக்கிலத்திலும், இருக்கும்; கற்புடைமகளிர் எல்லா அவயவங்களிலும் இருப்பர்.

இத்துணைச்சிறப்பினவாகிய பசுக்களை இயக்குங்கால், சிறிதும் வருத்தம் செய்யாமல், இரக்கத்தோடும் பலாசங்கோலினாலே மெல்ல ஓங்கி, போ போ என்று இயக்குக. இரக்கமின்றிக் கோபித்து அதட்டி அடிப்போர் நரகத்திலீழ்வர். பசுக்களின் பெருமையை உணர்ந்து, அவைகளை வலஞ்செய்து, துதித்து வணங்கி, புல்லுக்கொடுத்தோர் சிவலோகத்தை அடைந்து, இன்புறுவர். பசுக்களைத்தீண்டினும், தீவினைகள் நீங்கி, நல்வினைகள் பெருகும். அவைகள் இம்மை மறுமை இரண்டினும் பயனைத் தரும். பசுக்களுக்குச் சாலையை விதிப்படி செய்வித்து, ஆற்றுமண் ஓடைமண் புற்றுமண் வில்வத்தடிமண் அரசடிமண் என்பவைகளால் நிலம்பண்படுத்து, முதிர்கன்று இளங்கன்று சோயுற்றகன்று என்னும் இவைகளுக்கு இடங்கள் வெவ்வேறாக அமைக்க.

நாடோறும் கோசல கோமயங்களைப் புறத்தே நீக்கி, சுத்திசெய்க. மசகம் வராமல் தூபம் இடுக. தீபங்கள் ஏற்றுக. சாலை எங்கும் பூமாலை நாற்றுக. பசுக்களே, சாலையினுள்ளே சுவத்தி என்னும் சொல்லைச் சொல்லி, மெல்லமெல்லப் புகுவித்து, சிரத்தையோடும் புல்லைக் கொடுக்க. நோயுற்ற பசுக்களுக்கு வேறிடம் அமைத்து, மருந்து கொடுத்துப் பேணுக. அட்டமிதோறும் பசுக்களை நீராட்டி, பூச்சூட்டி, அன்னமும் ஜலமும் ஊட்டி, தூபதீபம் காட்டி வணங்குக. பசுக்களை வேனிற்காலத்திலே சோலைகளிலும், மழைக்காலத்திலே மலைச்சாரல் வனங்களிலும், பனிக்காலத்திலே வெய்யில் மிகுந்த வெளிகளிலும், இடர் உருவண்ணம் மேய்க்க. பசுக்களை இடர்நீங்கக் காக்காதவர்களும், பூசைசெய்யாதவர்களும், காக்காதபாவிகளைத் தண்டியாத அரசனும், நரகத்தில் வீழ்வர்கள். ஆவுரிஞ்சுகல் நாட்டுதலும், சிவனுக்கும் ஆசாரியருக்கும் பசுவைத் தானம் செய்தலும், குற்றமற்ற இலக்கணங்களையுடைய இடபத்தைச் சிவசன்னிதிக்குத் தானம் செய்தலும், சிவனது திருப்பணியின் பொருட்டுச் சகடத்திற்கு எருது கொடுத்தலும், இளைத்த பசுவைக் கண்டு இரங்கித் தாம் வாங்கி வளர்த்தலும், பெரும் புண்ணியங்களாம். பசுக்கள் தரும் பால் தயிர் நெய் கோசலம் கோமயம் என்னும் பஞ்சகவ்வியங்களையும் சிவனுக்கு அபிஷேகம் பண்ணுவிக்க. பாலை இரண்டு மாசம் செல்லும் வரையும் கன்று பருகும்படி விட்டு, பின் கறந்து சிவனுக்கு அபிஷேகம் பண்ணுவிக்க. கன்று பால் உண்டு முலையை விடுத்தபோது, ஜலத்தினுலே முலையைக் கழுவிக் கறக்க. ஆசை மிகுதியினுலே கன்றுக்குப் பால்விடாமற் கறந்தவன் நரகத்தில் வீழ்ந்து நெடுங்காலம் வருந்தி, பின்பு பூமியிலே பிறந்து, கடும்பசியினுலே வீடுகள் தோறும் இரப்பன். கபிலையின் பாலைச் சிவனுக்கே கொடுக்க. அதனைத் தாம் பருகில் நரகத்து வீழ்வர். புலையர்கள் பசுக்களின் சாலைபிலே புகுந்தார்களாயின், எண்ணில்லாத காலம் எரிவாய் நரகத்தில் வீழ்ந்து வருந்துவர்கள்; அவர்களுக்குப் பரிகாரம் இல்லை. மலட்டுப்பசுவின் மேலேனும் இடபத்தின்' மேலேனும், பாரம் ஏற்றினேனும், இடபத்தில் எறினேனும், நரகத்தில் வீழ்வர். பசுக்களைப் பகைவர் கவரின், எதிர்த்து காக்க; காத்தல் அரிதாயவழித் தம்முயிர் விடுத்தோர் சிவபதம் அடைவர். இதுகாறும் கூறியவற்றிற்கெல்லாம் பிரமாணம் சிவதருமோத்தரத்துக் கோபுரவியலின் இறுதியிற் காண்க.

இப்பசுமேய்த்தலாகிய உத்தம புண்ணியத்தால் மிகச் சிறப்புற்றவர் இச்சண்டேசுரநாயனர். அது, இவர் தாம் ஒருநாள் இடையன் பசுநிரையினுள்ளே ஒரு பசுவைக் கோலினுல் அடிக்கக் கண்டபோது, இரக்கமிகுதியினுலே கோபித்து விலக்கி, பசுக்களின் பெருமையை உள்ளபடி சிந்தித்து உணர்ந்து, அவைகளை அவைகளின் கருத்துக்கு இசைய மேய்த்தலிற் சிறந்த புண்ணியம் இல்லை எனவும் சிவனை வழிபடும் நெறியும் அதுவே எனவும் துணிந்து, அவ்விடையனை அகற்றி, அன்று தொடங்கித் தாமே அந்நிரையை மெய்யன்போடு விதிப்படி மேய்த்தமையாலே, தெளியப்படும்.

உ. சிவபூசை.

ஆன்மாக்களுக்கு ஆணவமாகிய மூலமல காரணத்தினுலே கன்மானுசாரமாக உண்டாகும் பிறப்பு, அண்டசம் சுவேதசம் உற்பிச்சம் சராயுசம் என நால்வகைப்படும். அவற்றுள், அண்டசம் முட்டையிற் றோன்றுவன. சுவேதசம் வேர்வையிற் றோன்றுவன. உற்பிச்சம் வித்துக்களை மேற்பிளந்து தோன்றுவன. சராயுசம் கருப்பையிற் றோன்றுவன. இவைகளின்விரி எண்பத்துநான்குநூறுயிரம் யோனிபேதமாம். இவ்வாறுள்ள யோனிகளுள், மற்றையோனிகள் எல்லாவற்றையும் போகத்தினுலும் பிராயச்சித்தம் முதலியவற்றினுலும் நீக்கி, மனிதப்பிறப்பிலே வருதல், மிகுந்த அருமையாம். அவ்வருமை, ஆராயுங்காலத்து, கடலிலக் கையினுலே நீக்கிக் கரை எறுதல் போலாம். இத்தன்மைத்தாகிய மனிதப்பிறப்பை எடுப்பினும், சாத்திரமணமும் வீசாத மலைகளிலும் வனங்களிலும் குறவர் மறவர்களாய்ப் பிறவாமல், சாத்திரம்

வழங்கும் தேசங்களிலே பிறப்பது மிகுந்த புண்ணியம். அதினும், வேதாகமங்கள் வழங்காத் மிலேச்ச தேசத்தை விட்டு அவை வழங்கும் ஆரியதேசத்திலே பிறப்பது மிகுந்த புண்ணியம். அதினும், ஈனசாதிகளாய்ப் பிறவாமல் பிராமணர் முதலிய நான்கு வருணத்தாராய்ப் பிறப்பது மிகுந்த புண்ணியம். அதினும், பாசமயங்களில் செல்லாமல் சிவனே பரமபதி என்று தெளிந்து வழிபடும் சைவசமயத்தைச் சார்தல் இத்துணைத்தென்று கூறலாற்றாத பெரும்புண்ணியமாம். இதற்குப் பிரமாணம். சிவ ஞானசித்தியார். "அண்டசஞ் சுவேத சங்க ளுற்பிச்சஞ் சராயு சத்தோ—டெண்டரு நாலெண் பத்து நான்குரு ரூயிரத்தா—லுண்டெபல் யோனி யெல்லா மொழித்துமா னுடத்து நித்தல்—கண்டிடிற் கடலேக் கையா னீந்தினன் காரி யங்காண். நரர்பயி றேயர் தன்னி னுன்மறை பயிலா நாட்டில்—வீரசை லொழிந்து தோன்றன் மிக்க புண் ணியந்தா னுகுந்—தரையினிற் கீழை விட்டெத் தவஞ்செய்சா தியினில் வந்து—பாசம யங்கட் செல்லாப் பாக்கியம் பண்ணெ ணுதே. வாழ்வெனு மையல் விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பித்—தாழ்வெனுந் தன்மை யோடுஞ் சைவமாஞ் சமயஞ் சாரு—மூழ்பெற லரிது சால வுயர் சிவ ஞானத் தாலே—போழிள மதியி ணுனைப் போற்றுவா ரருள்பெற் றுரே." எனவரும்.

இவ்வருமையாகிய மனிதப்பிறப்பை உண்டாக்கியது, பசுபதியாகிய சிவனே, மனசிலே நினைத்தற்கும், வாக்கினுலே துதித்தற்கும், கைகளினுலே பூசித்தற்கும், கால்களினுலே வலம் வருதற்கும், தலையினுலே வணங்குதற்கும், செவிகளினுலே அவ ரது புகழைக் கேட்டற்கும், கண்களினுலே அவரது திருமேனியைத் தரிசித்தற்குமாம். மேலுலகத்துள்ள பிரமா விட்டெணு இந்திரன் முதலியோரும் இப்பூமியின் கண்ணே வந்து சிவனைப் பூசிப்பர்கள். ஆதலால், இம்மனித சரீரம் கிடைத்தற்கு அரியது. இச் சரீரம் உள்ளபொழுதே சிவபூசையைப் பண்ணி, மோக்ஷத்தைப் பெறுதொழியில், பின்பு மோக்ஷம் கிடைத்தல் அரிது அரிது! ஆன்மாக்கள் தாம் நல்ல சரீரம் எடுத்தும், இவையெல்லாம் சிறிதும் ஆராயாமல், ஐயையோ! வீணுகத் திரிந்து காலங்கழிக்கும் அறியாமை இருந்தபடி என்னே! "மானுடப் பிறவி தானும் வருத்தத மனவாக் காய—மானிடத் தைந்து மாடி மரன்பணிக் காக வன்றே—வானிடத் தவரு மண்மேல் வந்த ரன் றனேயர்ச் சிப்ப—ரூனெடுத் துழலு மூம ரொன்றையு முணரா ரன்தோ." எனச் சிவஞான சித்தியாரினும், "கண்ணுதலா லயநோக்குங் கண்களே கண்கள் கறைக்கண் டன் கோயில்புகுங் கால்களே கால்கள்—பெண்ணெருபா கனேப்பணியுந் தலைகளே தலைகள் பிஞ்ஞகனேப் பூசிக்குங் கைகளே கைகள்—பண்ணவன்றன் சீர்பாடு நண் ணுவே நண்ணப் பரன்சரிதை யேகேட்கப் படுஞ்செவியே செவிக—ளண்ணல் பொலங் கழனினேக்கு நெஞ்சமே நெஞ்ச மவனடிக்கீ முடிமைபுகு மடிமையேயடிமை." எனப் பிரமோத்தரகாண்டத்தினும், கூறுமாற்றுனும் உணர்க.

சிவபூசையாவது, புட்பம் திருமஞ்சனம் முதலிய உபகரணங்கள் கொண்டு, ஆத் தமசுத்தி தானசுத்தி திரவியசுத்தி மந்திரசுத்தி லிங்கசுத்தி என்னும் பஞ்ச சுத்தி களும் செய்து, சிவலிங்கத்தின் பீடத்திலே சத்தியாகி சத்தி பரியந்த பதுமமாகிய சிவாசனம் பூசித்து, அதன்மேல் இலிங்கத்திலே வித்தியாதேகமாகிய மூர்த்தியை நியாசஞ்செய்து, அவ்வித்தியாதேகத்துக்குச் சீவனுய் உள்ள நிஷ்களரூபமும் ஞானு னந்தமயரும் சருவகர்த்தாவும் சர்வவியாபகருமாகும் பரமசிவனுகிய மூர்த்திமானைத் துவாதசாந்தத்தின் மேலே நியாளித்து, முன்னே நியாசஞ்செய்த வித்தியாதேகத் தில் ஆவாகித்து, "சுவாமீ, சருவ சகத்துக்கும் நாதரே, பூசையின் முடிவு எதுவரை யுமோ அதுவரையும் நீர் பிரீதியுடன் இவ்விலிங்கத்திலே சாந்நித்தியராய் இரும்." என்று விண்ணப்பம் செய்து, பூசித்து ஸ்தோத்திரம் பிரதக்ஷிணம் நமஸ்காரம் பண்ணி முடித்தலாம். லிங்க என்னும் சூத சித்திரித்தல் என்னும் பொருட்டாத லால், படைத்தல் காத்தல் முதலியவற்றுல் உலகத்தைச் சித்திரிப்பதாகிய பரமேசு

வரப் பிரபாவமே லிங்கம் எனப்படும். அவ்விலிங்கத்தின் வியத்திஸ்தானமாகிய சைலம் ஸ்பாடிகம் ரூடிணிகம் லோஹஜம் என்பனவும் உபசாரத்தாலே இலிங்கம் எனப்படும். வித்தியாதேகமாவது பஞ்சகிருத்தியங்களே அநிட்டிக்கும் சத்தியேயாம். மூலமலம் முதலியன இன்மையால், சிவனுக்கு வைத்தவம் முதலிய சரீரம் இன்றிச் சத்திசரீரம் உண்டாம். அச்சரீரம் பஞ்சகிருத்திய உபயோகிகளாகிய ஈசானம் முதலிய பஞ்சமந்திரங்களாலே சிரம் முதலாகக் கற்பிக்கப்படும். சிவன் நிராகாரவஸ்துவாகிய தம்மை ஆன்மாக்கள் தியானித்தல் பூசித்தல் கூடாமையால், பத்தர் அனுக்கிரகத்தின்பொருட்டே இச்சத்திகார்யமாகிய கற்பனைசரீரம் கொண்டார் என்க.

இவ்வாறு அன்போடு பூசை செய்யப்படில், கருணைநிதியாகிய சிவன் இலிங்கத்தில் நின்று அப்பூசையை ஏற்று, அதுசெய்தார்க்கு அருள் செய்வர். அது "தாபர சங்க மங்க ளென்றிரண் டருவி னின்று—மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க் கருளே வைப்ப—னீபரன் றன்னே ரெஞ்சி னினைவை யேனைநைந்த பூசை—யாய் பரம்பொருளே நாளு மார்ச்சிநீ யன்பு செய்தே." என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தால் உணர்க. அன்பின்றிச் செய்யப்படும் பூசை பயன்படாமை "நெக்கு நெக்கு நினைப் பவர் நெஞ்சுளே—புக்கு நிற்கும்பொன் னுர்சடைப் புண்ணியன்—பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு—நக்கு நிற்ப னவர்தம்மை நாணியே." என்னும் திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்தானும், "கையொன்று செய்ய விழியொன்று நாடக் கருத்தொன் றெண்ணப்—பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால்கமழு—மெய்யொன்று சாரச் செலியொன்று கேட்க விரும்புமியான்—செய்கின்ற பூசையெவ் வாறு கொள் வாய்வினை தீர்த்தவனே." என்னும் பட்டணத்துப்பிள்ளையார் வாக்கானும் உணர்க.

இச்சண்டேசுரநாயனார் முற்பிறப்பில் வேதாகமங்களே ஓதி உணர்ந்து, சிவபூசையை விதிவழுவாது செய்தமையாலன்றோ, இப்பிறப்பில் மிகுத்த இளமைப் பிராயத்திற்றானே சகல சாத்திரப்பொருள்களேயும் எளிதின் உணர்ந்து, சிவனே எம்மை உடையவர் என்னும் மெய்யுணர்வினாலே, சிவன்மாட்டு இடையறாது மேன்மேலும் பெருகி வளரும் அத்தியற்புதமாகிய மெய்யன்பே வடிவமாயினர். இவருக்கு வேதாகமங்கள் எல்லாம் முற்பிறப்பின் அறிவுத்தொடர்ச்சியினால் எளிதின் விளங்கின என்பது இங்கே "ஐந்து வருட மவர்க்கணைய வங்க மாறு முடனிறைந்த—சந்த மறைக ளுட்படமுன் றலைவர் மொழிந்த வாக மங்கண்—முந்தை யறிவின் றொடர்ச்சியினுன் முகைக்கு மலரின் வாசம்போற்—சிந்தை மலர வுடன்மலருஞ் செவ்வி யுணர்வு சிறந்ததால்." என்பதனாலும், "குலவு மறையும் பலகலையுங் கொளுத்து வதன்முன் கொண்டமைந்த—நிலவு முணர்வின் றிறங்கண்டு நிறுவு மறையோ ரதிசயித்தார்." என்பதனாலும், உணர்த்தப்பட்டது. ஒருபிறப்பிற் கற்றகல்வி மறுபிறப்புக்களினும் பயன்படும் என்பது "ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்—கெழுமையு மேமாப் புடைத்து." என்னும் திருக்குறளானும், உணர்க. இவர் முற்பிறப்பிலே சிவபூசை செய்தவர் என்பது, இங்கே "அங்கண் முன்னே யர்ச்சனையி னளவின் றொடர்ச்சி விளையாட்டாப்—பொங்கு மன்பால்" என்பதனால் குறிப்பிக்கப்பட்டது. இவரது அன்பின் முதிர்ச்சி "நடமே புரியுஞ் சேவடியார் நன்மை யுடையா ரெனுமெய்ம்மை—யுடனே தோன்று முணர்வின்க ணெழிலா னறும வழியன்பின்—கடனே யியல்பாய் முயற்றிவருங் காதன் மேன்மே லெழுங்கருத்தின்—றிடநேர் நிற்குஞ் செம்மலார் திகழுநாளி லாங்கொரு நாள்." என்பதனால் உணர்த்தப்பட்டது. ஆன்மா சிவன் உடைமை என்பது "அநாதி சிவனுடைமை யாலெலையு மாங்கே—யநாதியெனப் பெற்ற வணுவை - யநாதியே—யார்த்ததுயரல வம்பிகையோ டெவ்விடத்தும்—காத்த லவன்க டனே காண்." என்னும் திருத்தொண்டர்புராண வசனத்தானும், உணர்க. இவர் முற்பிறப்பில் விதிவழுவாது செய்த பூசையின் தொடர்ச்சியினாற்றானே, இப்பிறப்பில்

மிருந்த இளமைப் பிராயத்திலே, பசுப்பால் சிவனுக்குத் திருமஞ்சனமாந்தகுதி உடைமையை நினைந்தவுடனே சிவபூசையில் மிக்க ஆசையுடையராய், அதனைச் செய்வாராயினர். அப்பூசை பிறருக்கு வினையாட்டாகத் தோன்றியதாயினும், இடையறுதல் மெய்ப்பிழையிலே செய்யப்பட்டமையானன்றே, உயிர்க்குயிராகிய சிவனுக்கு மிக உவப்பாயிற்று.

இந்நாயனார் சிவனது உண்மையை நினைத்தல் கேட்டல் காண்டல் செய்தபொழுதே கரையழிந்து அன்பிழலே ஒரு பயனும் கருதாது அவ்வன்புதானே தமக்கு இன்பமாகத் தம்மை மறந்து நின்றார் என்பது, இவர் சிவபூசை செய்யும்பொழுது தர்ஷித்தபாகிய எச்சதத்தன் முதலிலே பலமுறை அடித்துக் கொடுமொழிகளைக் கூறவும், தாம் அவற்றைச் சிறிதும் அறிந்திலாமையானும், அவன் பாற்குடத்தைக் காலால் இடறிச் சிந்தக் கண்டபோது அவன் தமது தந்தை என்று கண்டும், தமது பரமபிதாவாகிய சிவனுக்கு அபராதம் செய்தமைபற்றி அவன் கால்களைத் துணித்து,முன்போலவே பூசிக்கப்புகுந்தமையானும், செவ்விதிற் றுணியப்படும். இப்பத்தியோகத்தால் அன்றே, உடனே கருணைநிதியாகிய சிவன் இடபாரூடராய் வெளிப்பட்டு, தமது அருமைத் திருக்கரங்களால் இவரை எடுத்து, நீ நம்பொருட்டு உன்னைப் பெற்ற பிதாவை வெட்டினாய்; இனி உனக்கு நாமே பிதா என்று அருளிச்செய்து இவரை அணைத்து, இவருடைய சரீரத்தைத் தடவி உச்சிமோந்து, இவருக்கு அந்தச் சரீரத்திலேதானே தமது சாரூப்பியத்தைக் கொடுத்து, தொண்டர்களுக்கெல்லாம் தலைமையாகிய சண்டேசுர பதத்தில் இருத்தியருளினர். இவர் அச்சரீரத்திற்றானே சிவசாரூபமியம் பெற்றமை இங்கே "செங்கண் விடையார் திருமலர்க்கை தீண்டப்பெற்ற சிறுவனு—ரங்கண் மாலை யாக்கையின்மே லளவின் றுயர்ந்த சிவமயமாய்ப்—பொங்கி யெழுந்த திருவருளின் மூழ்கிப் பூமே லயன் முதலாந்—துங்க வமரர் துதிசெய்ய சூழ்ந்த வொளியிற் றோன்றினார்." என்பதனாலும், "வந்து மிகைசெய் தாதைதாண் மழுவாற் றுணித்த மறைச்சிறுவ—ரந்த வுடம்பு தன்னுடனே யரனார் மகனு ராயினர்." என்பதனாலும் உணர்த்தப்பட்டது. வெருணசித்தியாருரையிலே "அந்தத் தேகத்திலே தானே சிவசாரூப்பியத்தைப் பெற்றார்." என்றார் சிவாக்கிரயோகிகளும்.

இந்நாயனார், பிராமணனும் தமக்குப் பிதாவும் குருவுமாகிய எச்சதத்தனை மழுவினால் வெட்டியும், பிரமகத்தி பிதிர்கத்தி குருஹத்தி என்னும் தோஷங்கள் பொருந்தாது, சிவசாரூப்பியம் பெற்றமை யாது காரணத்தாலெனின்: சிவபூசையின் மிக்க புண்ணியமும் சிவாபராதத்தின் மிக்க பாவமும் இன்மையானும், இவர் செய்யும் சிவபூசைக்கு எச்சதத்தன் இடையூறு செய்தமை சிவாபராதமாதலானும், இவர் பரமபிதாவும் பரமகுருவுமாகிய சிவனிடத்து உள்ள அன்பு பிருதியினால் அவர்நிமித்தமே அவ்வெச்சதத்தனை வெட்டினமையானும், தஞ்செயலற்றுச் சிவாதீனமாய் நிற்போர் செய்தது பாதகமாயினும் அதனைச் சிவன் தமது பணியாதலே பண்ணிவிடுவராதலானும், என்க. "அரனடிக் கன்பர் செய்யும் பாவமு மறமதாகும்—பரனடிக் கன்பி லாதார் புண்ணியம் பாவமாகும்—வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமையாகி—ரூரனிற் பாலன் செய்த பாதக னன்மையாய்த்தே." எ-ம். "இவனுலகி லிதமகிதஞ் செய்தவெல்லா மிதமகித மிவனுக்குச் செய்தார்பா லிசையு—மவனிவனுய் நின்றமுறை யேகனெ யரன்பணியி னின்றிடவு மகலுங் குற்றஞ்—சிவனுமிவன் செய்தியெல்லா மென் செய்தி யென்றுஞ் செய்ததெனக் கிவனுக்குச் செய்த தென்றும் -பவமகல வுடனெ நின்றுகொன்வன் பரிவாற் பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமே." எ-ம். வெருணசித்தியாரில் கூறுமாற்றனும், உணர்க. இன்னும், இந்நாயனாரால் இம்மையிலே தண்டிக்கப்பட்டமையால் அன்றே, எச்சதத்தன் சிவத்துரோகத்தால் மறுமைக் கண் நரகத்தில் வீழ்ந்து வருந்தாது, தன் சுற்றத்துடன் சிவலோகத்தை அடைந்தான். அகத்தியமுனிவருக்கும் இராமருக்கும், தமக்கும் பிறர்க்கும் பெருந்தீங்கு செய்த வில்

வலன் வாதாவியையும் இராவணனையும் கொன்றமையாலாகிய பிரமகத்தியைச் சிவபூசையே ஒழித்தமையானும், இச்சண்டேசுரநாயனர் தமது சிவபூசைக்கு இடையூறு செய்தலாகிய சிவாபராதம் கண்ட வழிச் செய்த பிரமகத்தி முதலியன வெகாரூப்பியம் பயந்தமையானும், சிவபூசையின் மிக்க புண்ணியமும் சிவாபராதத்தின் மிக்க பாவமும் இல்லை என்பது தெளிக.

இச்சண்டேசுரநாயனரது பெருந்தன்மை "பீரடைந்த பாலதாட்டப் பேணுதவன் ரூதை—வேரடைந்து பாய்ந்த தாளை வேர்த்தடிந்தான் றனக்குத்—தாரடைந்த மாலை சூட்டித் தலைமை வகுத்த தென்னே—சீரடைந்த கோயின்மல்கு சேய்ஞலூர் மேயவனே." எ-ம். "கடிசேர்ந்த போது மலரான கைக்கொண்டு நல்ல—படிசேர்ந்த பால்கொண்டங் காட்டிடத் தாதை பண்டு—முடிசேர்ந்த காலை யறவெட்டிட முக்கண் மூர்த்தி—யடிசேர்ந்த வண்ண மறிவார் சொலக் கேட்டு மன்றே." எ-ம். திருஞான சம்பந்தமூர்த்திநாயனராலும், "தழைத்ததோ ராத்தி யின்கீழ்த் தாவர மணலாற் கூப்பி—யழைத்தங்கே யாவின் பாலைக் கறந்துகொண் டாட்டக் கண்டு—பிழைத்ததன் ரூதை தாளைப் பெருங்கொடி மழுவால் வீசச்—குழைத்ததோ ரமுத மீந்தார் குறுக் கைவீ ரட்டனரே." எனத் திருநாவுக்கரசுநாயனராலும், "ஏத நன்னில மீரறு வேலியேயர் கோனுற்ற விரும்பிணி தவிர்த்துக் கோதனங்களின் பால்கறந் தாட்டக் கோல வெண்மணற் சிவன்றன்மேற் சென்ற—தாதை தாளற வெறிந்தசண் டிக்குன் சடைமி சைமல ரருள்செயக் கண்டு—பூதவாளியின் பொன்னடி யடைந்தேன் பூம்பொ ழிற்றிரு ப் புன்கூரு ளானே." எனச் சுந்தரமூர்த்திநாயனராலும், "தீதில்லை மாணி சிவகரு மஞ் சிதைத்தானைச்—சாதியும் வேதியன் ரூதைதனைத் தாளிரண்டுஞ்—சேதிப்ப வீசன் றிருவருளாற் றேவர்தொழப்—பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்." என மாணிக்கவாசகசுவாமிகளாலும், "தாதையைத் தாளற வீசிய சண்டிக்கு மண்டத் தொடுமுடனே—பூதலத் தோர்கள் வணங்கப் பொற்கோயிலும் போனக மும்மரு ளிச்—சோதி மணிமுடித் தாமமு நாமமுந் தொண்டர்க்கு நாயகமும்—பாதகத் துக்ருப் பரிசுவைத் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே." எனச் சேக்கிழாரனராலும், "பாதகமே யென்றும் பழியென்றும் பாராதே—தாதையை வேதியனைத் தாளிரண்டுஞ் - சேதிப்பக்—கண்டிசர் தாமாம் பரிசளித்தார் கண்டாயே—சண்டிசர் தஞ்செயலாற் ரூன்." என உய்யவந்த தேவநாயனராலும், புகழப்பட்டமை காண்க. திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் புராணத்திலே திருமுகப்பாசுரத்தின்ரூற்பரியம்கூறுமிடத்து "கரு துங் கடிசேர்ந்த வெனுந்திருப் பாட்டி லீசர்—மருவும் பெரும்பூசை மறுத்தவர்க் கோறன் முத்தி—தருதன் மையதாதல் சண்டிசர்தஞ் செய்கை தக்கோர்—பெரிதுஞ் சொலக்கேட்டன மென்றனர் பின்னை யார்தாம்" என்றார் சேக்கிழார்நாயனர்.

சண்டேசுரர் சிவபூசையின் இறுதியிலே பூசிக்கப்பட்டு, சிவனுல் ஏற்றுக் கொள்ளப்பட்ட அன்னம் பானீயம் முதலியனவும் தாம்பூலம் மாலை சந்தனமும் ஆகிய நிருமாலியங்களே ஏற்று, சிவபூசாபலத்தைக் கொடுக்கும் அதிகாரம் உடையவர். இச்சண்டேசுரபூசை செய்யாவழிச் சிவபூசையாற் பயன் இல்லை. அது "சண்டனையர்ச் சித்தவரே சம்புவையர்ச் சித்தபலம்—கொண்டிவர் மற்றையர் கொள்ளார்." என்னும் சைவசமயநெறித் திருக்குறளான் உணர்க. சிலர் ஆன்மார்த்த பூசையிலே சண்டேசுரபூசையை வேண்டாது விலக்குகின்றனர். சைவசித்தாந்தத்திலே சண்டேசுரரை எவ்விடத்தும் எப்போதும் பூசிக்க என்னும் நியமம் உளது; சண்டேசுரபூசை விலக்கு வாமதந்திரத்தும் தக்ஷிணதந்திரத்துமாம். இது காலோத்தராகமத்திற் கூறப்பட்டது. சிருட்டிகாலத்திற் ரோன்றிய சிவாகமங்களிலே சண்டேசுரபூசை விதிக்கப்பட்டதாயின், இந்நாயனருக்கு முன்னும் சண்டேசுரர் உளர் என்பது பெறப்படு மன்ரோவெனின்; சத்தியம் நீ சொல்லியது. அட்டவித்தியேசுரர் முதலியோருள் ஒருவர் பரமுத்தியையேனும் தமது பதத்தின்மேலதிய பதத்தையேனும் அடைய மற்

ஒருவர் அப்பதத்தை அடைதல்போலவே, இவ்விசாரசருமர் முன்னுள்ள சண்டேசுரத பதத்தை அடைந்தார் எனக் கொள்க.

இதுகாறும் கூறியவாற்றால், சிவபூசையின் மிக்க புண்ணியமும் சிவத்துரோகத்தின் மிக்க பாவமும் இல்லை என்பது தெள்ளிதிற் பெறப்பட்டது. ஆதலால், இச்சரீரம் உள்ளபொழுதே சிவலிங்கார்ச்சனைக்கு உரியோர்கள் சைவாசாரியரை அடைந்து, சிவதீக்ஷை பெற்று, விதி வழுவாது மெய்யன்போடு சிவபூசை பண்ணுக. சிவலிங்கார்ச்சனைக்கு உரியரல்லாதவர் ஆசாரியரையடைந்து, தங்கள் தங்கள் அதிகாரானுகுணமாகிய தீக்ஷையைப் பெற்றுக்கொண்டு, தூல லிங்கமாகிய கோபுரத்தைபூஜாபியையும் பத்திர புஷ்பங்களாலே பூசித்து, துதித்து, வலஞ்செய்து வணங்குக. அது "உயர்ந்தகுலத் தோருட் பழுதுறுப்பி னேரு—முயர்ந்தாரை யல்லாதாரும். குறித்து மறுமை குரவன் பதத்தைக்—குறித்த வன்செய் தீக்கைதகக் கொண்டு. குறித்துச் சிவனெனைக் கோபுரத்தைப் பூஜும்—பறித்தருச்சித் தேத்துகபாங் கால்." எனச் சைவசமயநெறியினும், "தூபியினைக் கோபுரத்தை யீசனெனைக் கண்டுதொழு—பாபமறும் வாய்த்துறுமின் பம்." என வருத்தமறவுய்யும் வழியினும், கூறுமாற்றினும் உணர்க. தங்கள் தங்கள் வருணத்திற்கு அருகமாகிய ஒருருவினிடத்தே உயிர்க்குறுவாகிய சிவனைப் பூசை செய்யாதவர்களுக்கு ஒரு துணையும் இல்லை. அது "தமக்கருகமோருருவிற் பூசை சமையார்—தமக்குத் துணையாதோ தான்." என்னும் சைவசமயநெறித் திருக்குறளால் அறிக. சிவபூசை பண்ணுதார் இழிவு "திருக்கோயி லில்லாத திருவி னூருந் திருவெண்ணீ றணியாத திருவி னூரும்—பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும் பாங்கினெடு பலதளிக ளில்லா வூரும்—விருப்போடு வெண்சங்க மூதா வூரும் விதானமும் வெண்கொடியு மில்லா வூரு—மருப்போடு மலர்பறித்திட் டுண்ணு வூரு மலையெல்லா மூரல்ல வடவி காடே." "திருநாம மஞ்செழுத்துஞ் செப்பாராகிற் றீவண்ணர் நிறமொருகாற் பேசா ராகி—லொருகாலுந் திருக்கோயில் சூழா ராகி லுண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணு ராகி—லருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகி லளியற்றூர் பிறந்தவா றேதோவென்னிற் —பெருநோய்கண் மிகவுலியப் பேர்த்துஞ் செத்தும் பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின்றாரே" என்னும் திருநாவுக்கரசு நாயனார் தேவாரங்களால் உணர்க.

மும்மையாலுலகாண்டரசுங்க முற்றுப்பெற்றது.

ஐந்தாவது

திருநின்றசருக்கம்.

திருநாவுக்கரசுநாயனார்புராணம்.

திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டி னெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன் பேருலகி
லொருநாவுக் குரைசெய்ய வொண்ணுமை யுணராதேன். (க)

தொன்மைமுறை வருமண்ணின் றுகளன்றித் துகளில்லா
நன்மைநிலை யொழுக்கத்தி னலஞ்சிறந்த குடிமல்கிச்
சென்னிமதி புனையவளர் மணிமாடச் செழும்பதிகண்
மன்னிநிறைந் துளதுதிரு முனைப்பாடி வளநாடு. (உ)

புனப்பண்ணை மணியினெடும் புறவினறும் புதுமலருங்
கனைப்பெண்ணி றிரைசுமந்து கரைமருங்கு பெரும்பகட்டே
றினப்பண்ணை யுழும்பண்ணை யெறிந்துலவி யெவ்வுலகும்
வனப்பெண்ண வரும்பெண்ணை மாநதிபாய் வளம்பெருகும். (ங)

காலெல்லாந் தகட்டிவரால் கரும்பெல்லாங் கண்பொழிதேன்
பாலெல்லாங் கதிர்ச்சாலி பரப்பெல்லாங் குலக்கமுகு
சாலெல்லாந் தழைநிரை தடமெல்லாஞ் செங்கழுநீர்
மேலெல்லா மகிற்றூபம் விரும்தெல்லாந் திருந்துமனே. (ச)

கடைஞர்மிடை வயற்குறைத்த கரும்புகுறை பொழிகொழுஞ்சா
றிடைதொடுத்த தேன்கிழிய விழிந்தொழுகு நீத்தமுடன்
புடைபரந்து ஞிமிறெலிப்பப் புதுப்புனல்போன் மடையுடைப்ப
வுடைமடையக் கரும்படுகட் டியினடைப்ப வூர்கடொறும். (ஞ)

கருங்கதலிப் பெருங்குலைகள் கனிற்றுக்கைம் முகங்காட்ட
மருங்குவளை கதிர்ச்செந்நெல் வயப்புரவி முகங்காட்டப்
பெருஞ்சகடு தேர்காட்ட வினைஞரார்ப் பொலிபிறங்க
நெருங்கியசா துரங்கபல நிகர்ப்பனவா நிறைமருதம். (சு)

நறையாற்றுங் கமுகுசுவ மணிக்கழுத்தி னுடன்கூந்தற்
பொறையாற்ற மகளிரெனப் புறம்பலைதண் டலைவேலித்
துறையாற்ற மணிசொரியச் சுரும்பிரைக்கும் பெரும்பண்ணை
நிறையாற்று நீர்க்கொழுந்து படர்ந்தேறு நிலைமையதால். (எ)

மருமேவு மலர்மேய்வான் மாகடலி னுட்படியு
முருமேக மெனமண்டி யுகைத்தகருங் கன்றுபோற்
பருமேனிச் செங்கண்வரான் மடிமுட்டப் பால்சொரியுங்
கருமேதி தினைக்கொண்டு கரைபுரள்வ திலைவாவி. (அ)

மொய்யளிசூழ் நிரைநீல முழுவலயங் களினிலையச்
செய்யதளிர் கறுவிரலிற் செழுமுகையி னகஞ்சிறப்ப
மெய்யொளியி னிழற்காணு மாடியென வெண்மதியை
வையமகள் கையணைத்தாற் போலுயர்வ மலர்ச்சோலை. (௪)

எயிற்குலவும் வளம்பதிக ளெங்குமணர் தங்கும்வயற்
பயிர்க்கண்விய லகலிடங்கள் பரந்துயர்நெற் கூடுகளும்
வெயிற்கதிர்மென் குழைமகளிர் விரவியமா டமுமேவி
மயிற்குலமு முகிற்குலமு மாரூட மருங்காடும். (௫)

மறந்தருதீ நெறிமாற மணிகண்டர் வாய்மைநெறி
யறந்தருநா வுக்கரசு மாலால சுந்தரரும்
பிறந்தருள வுளதானு னம்மளவோ பேருலகிற்
சிறந்ததிரு மூனைப்பாடித் திறம்பாடுஞ் சீர்ப்பாடு. (௬)

இவ்வகைய திருநாட்டி லெனைப்பலவூர் களுமென்று
மெய்வளங்க ளோங்கவரு மேன்மையன வாங்கவற்றுட்
சைவநெறி தலமேழும் பாலிக்குந் தகைமையினும்
றெய்வநெறிச் சிவம்பெருக்குந் திருவாமூர் திருவாமூர். (௭)

ஆங்குவன மூலைகள்சுமந் தணங்குவன மகளிரிடை
யேங்குவன நூபுரங்க ளிரங்குவன மணிக்காஞ்சி
யோங்குவன மாடநிரை யொழுகுவன வழுவிலற
நீங்குவன தீங்குநெறி நெருங்குவன பெருங்குடிகள். (௮)

மலர்நீலம் வயல்காட்டு மைஞ்ஞீல மதிகாட்டு
மலர்நீடு மறுகாட்டு மணியூசல் பலகாட்டும்
புலர்நீல விருள்காட்டும் பொழுதுழவ ரொலிகாட்டுங்
கலநீடு மனைகாட்டுங் கரைகாட்டாப் பெருவளங்கள். (௯)

தலத்தின்கண் விளங்கியவத் தனிப்பதியி லனைத்துவித
நலத்தின்கண் வழுவாத நன்மரபிற் குடிநாப்பண்
விலக்கின்மனை யொழுக்கத்தின் மேதக்க நிலைவேளாண்
குலத்தின்கண் வரும்பெருமைக் குறுக்கையர்தங் குடிவிளங்கும். (௧௦)

அக்குடியின் மேற்றோன்ற லாயபெருந் தன்மையினூர்
மிக்கமனை யறம்புரிந்து விருந்தளிக்கு மேன்மையினு
சொக்கல்வளர் பெருஞ்சிறப்பி னுளராகு ருளரானூர்
திக்குநில வும்பெருமை திகழவரும் புகழனூர். (௧௧)

புகழனூர் தமக்குரிமைப் பொருவில்குலக் குடியின்கண்
மிகுழவரு மணம்புணர்ந்த மாதினியார் மணிவயிற்றி
னிகழுமலர்ச் செங்கமல நிரையிதழி னகவயினிற்
றிகழவரும் திருவனைய திலகவதி யார்பிறந்தார். (௧௨)

திலகவதி யார்பிறந்து லெழுமுறையாண் டகன்றதற்பி
ன்னலில்கலைத் துறைதழைப்ப வருந்தவத்தோர் நெறிவாழ
வுலகில்வரு பிருணீக்கி யொளிவினங்கு கதிர்போற்பின்
மலருமரு ணீக்கியார் வந்தவதா ரஞ்செய்தார். (௧௩)

மாதினியார் திருவயிற்றின் மன்னியசீர்ப் புகழனார்
காதலனு ருதித்ததற்பின் கடன்முறைமை மங்கலங்கண்
மேதகுநல் வினைநிறப்ப விரும்பியபா ராட்டினுட
னேதமில்பல் னிளைபோற்ற விளங்குழவிப் பதங்கடந்தார். (கக)

மருணீக்கி யார்சென்னி மயிர்நீக்கு மணவினையுங்
தெருணீர்ப்பன் மாந்தரெலா மகிழ்நிறப்பச் செய்ததற்பின்
பொருணீத்தங் கொளவீசிப் புலன்கொளுவ மனமுகிழ்த்த
சுருணீக்கி மலர்விக்குங் கலைபயிலத் தொடங்குவித்தார். (உ0)

தந்தையார் களிமகிழ்ச்சி தலைநிறக்க முறைமையினுற்
சிந்தைமலர்ந் தெழுமுணர்விற் செழுங்கலையின் றிறங்களெல்லா
முன்தைமுறை மையிற்பயின்று முதிரவறி வெதிரும்வகை
மைந்தனுர் மறுவொழித்த விளம்பிறைபோல் வளர்கின்றூர். (உக)

அக்ஙாளிற் றிலகவதி யாருக்காண் டாறிரண்டின்
முன்ஞுக வொத்தகுல முதல்வேளாண் குடித்தலைவர்
மின்னுர்செஞ் சடையண்ணல் மெய்யடிமை விருப்புடையார்
பொன்னுரு மணிமவுலிப் புரவலன்பா லருளுடையார். (உஉ)

ஆண்டகைமைத் தொழிலின்க ணடலரியே றெனவுள்ளார்
காண்டகைய பெருவனப்பிற் கலிப்பகையா ரெனும்பெயரார்
பூண்டகொடைப் புகழனுர் பாற்பொருவின் மகட்கொள்ள
வேண்டியெழுங் காதலினுன் மேலோரைச செலவிட்டார். (உங)

அணங்கனைய திலகவதி யார்தம்மை யாங்கவர்க்கு
மணம்பேசி வந்தவரும் வந்தபடி யறிவிப்பக்
குணம்பேசிக் குலம்பேசிக் கோதில்சீர்ப் புகழனுர்
பணங்கொளர வகலல்குற் பைந்தொடியை மணநோக்கார். (உச)

கன்னிதிருத் தாதையார் மணமிசைவு கலிப்பதையார்
முன்னினைந்தா றறிவிப்ப வதுவைவினை முடிப்பதன்முன்
மன்னவற்கு வடபுலத்தோர் மாறேற்க மற்றவர்மே
லன்னவர்க்கு விடைகொடுத்தா னவ்வினைமே லவரகன்றூர். (உஞ)

வேந்தற்குற் முழிவினைமேல் வெஞ்சமத்தில் விடைகொண்டு
போந்தவரும் பொருபடையு முடன்கொண்டு சிலநாளிற்
காய்ந்தசினப் பகைப்புலத்தைக் கலந்துகடுஞ் சமர்க்கடலை
நீந்துவார் நெடுநாள்க ணிறைவெம்போர்த் துறைவிளைத்தார். (உசு)

ஆயநா ளிடையிப்பா லணங்கனையா டனைப்பயந்த
னயகுலப் புகழனுர் தொன்றுதொடு நிலையாமை
மேயவினைப் பயத்தாலே யிவ்வுலகை விட்டகலத்
தீயவரும் பிணியுழந்து விண்ணுலகிற் சென்றடைந்தார். (உஎ)

மற்றவர்தா முயிர்நீப்ப மனையியார் மாதினியார்
சுற்றமுடன் மக்களையுந் துகளாக வேநீத்துப்
பெற்றிமையா லுடனென்றும் பிரியாத வுலகெய்துங்
கற்புநெறி வழுவாமற் கணவனு ருடன்சென்றூர். (உஅ)

தாதையா ரும்பயந்த தாயாரு மிறந்ததற்பின்
மாதரார் திலகவதி யாருமவர் பின்வந்த
காதலனர் மருணீக்கி யாருமனக் கவலையினற்
பேதுறுநற் சுற்றமொடும் பெருந்துயரி லழுந்தினர். (உக)

ஒருவாறு பெருங்கிளைஞர் மனந்தேற்றத் துயரொழிந்து
பெருவான மடைந்தவர்க்குச் செய்கடன்கள் பெருக்கினர்
மருவார்மேண் மன்னவற்கா டலையப்போங் கலிப்பகையார்
பொருவாரும் போர்க்களத்தி னுயிர்கொடுத்துப் புகழ்கொண்டார். (கூ)

வெம்மூனைமேற் கலிப்பகையார் வேல்வேந்த னேவப்போ
யம்மூனையிற் பகைமுருக்கி யமருலக மாள்வதற்குத்
தம்முடைய கடன்கழித்த பெருவார்த்தை தலஞ்சாற்றச்
செம்மலர்மேற் றிருவனைய திலகவதி யார்கேட்டார். (கூக)

எந்தையுமெம் மனையுமவர்க் கெனைக்கொடுக்க விசைந்தார்க
ளந்தமுறை யாலவர்க்கே யுரியதுநா னுதலினு
லிந்தவுயி ரவருயிரோ டிசைவிப்ப னெனத்துணிய
வந்தவர்தம் மடியினைமேன் மருணீக்கி யார்வீழ்ந்தார். (கூஉ)

அந்நிலையின் றிகப்புலம்பி யன்னையுமத் தனுமகன்ற
பின்னையுநா னுமைவணங்கப் பெறுதலினு லுயிர்தரித்தே
னென்னையினித் தனிக்கைவிட் டேகுவீ ரெனில்யானு
முன்னமுயிர் நீப்பனென மொழிந்திடரி னழுந்தினர். (கூஊ)

தம்பியா ருளராக வேண்டுமென வைத்ததயா
வும்பருல கணையவுறு நிலைவிலக்க வுயிர்தாங்கி
யம்பொன்மணி மாருங்கா தனைத்துயிர்க்கு மருடாங்கி
யிம்பர்மனைத் தவம்புரிந்து திலகவதி யாரிருந்தார். (கூசு)

மாசின்மனத் துயரொழிய மருணீக்கி யார்தீரம்பித்
தேசநெறி நிலையாமை கண்டடங்கள் செய்வாராய்க்
காசினிமேற் புகழ்விளங்க நிதியளித்துக் கருணையினு
லாசிலறச் சாலைகளுந் தண்ணீர்ப்பந் தருமமைப்பார். (கூஇ)

காவளர்த்துங் குளந்தொட்டுங் கடப்பாடு வழுவாமன்
மேவினார்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும் விருந்தளித்து
நாவலர்க்கு வளம்பெருக நல்கியுநா னிலத்துள்ளோர்
யாவருக்குந் தவிராத வீகைவினைத் துறைநின்றார். (கூசு)

நில்லாத வுலகியல்பு கண்டுநிலை யாவாழ்க்கை
யல்லலெனின் றறத்துறந்து சமயங்க ளானவற்றி
னல்லாறு தெரிந்துணர்ந்து நம்பரரு ளாமையினுற்
கொல்லாமை மறைந்துறையு மமண்சமயங் குறுகுவார். (கூஎ)

பாடலிபுத் திரமென்னும் பதியணைந்து சமண்பள்ளி
மாடணைந்தார் வல்லமணர் மருங்கணைந்து மற்றவர்க்கு
வீடறியு நெறியிதுவே யெனமெய்போற் றங்களுடன்
கூடவரு முணர்வுகொளக் குறிபலவுங் கொளுவினர். (கூஅ)

அங்கவரு மமண்சமயத் தருங்கலன லானவெலாம்
பொங்குமுணர் வுறப்பயின்றே யங்கொழியிற் புலன்சிறப்பத்
துங்கமுழு வுடற்சமணர் சூழ்ந்துமிழ் வாரவர்க்குத்
தங்களின்மே லாந்தரும சேனரெனும் பெயர்கொடித்தார். (கூக)

அத்துறையின் மீக்கூரு மமைதியினு லகவிடத்திற்
சித்தநெறி யறியாத தேரரையும் வாதின்க
ணுய்த்தவுணர் வினில்வென்றே யுலகின்க ணெளியுடைய
வித்தகரா யமண்சமயத் தலைமையினின் மேம்பட்டார். (சo)

வே று.

அந்நெறியின் மிக்கா ரவரொழுக வான்றதவச
செந்நெறியின் வைகு திலகவதி யார்தாமுந்
தொன்னெறியின் சுற்றத் தொடர்பொழியத் தூயசிவ
நன்னெறியே சேர்வதற்கு நாதன்ரு ணண்ணுவார். (சக)

பேராத பாசப் பிணிபபொழிய ர பிஞ்ஞகன்பா
லாராத வன்புபெற வாதரித்த வம்மடவார்
நீரார் கெடிலவட நீள்கரையி னீடுபெருஞ்
சீரார் திருவதிகை வீரட்டா னஞ்சேர்ந்தார். (சஉ)

சென்றுதிரு வீரட்டா னத்திருந்த செம்பவளக்
குன்றை யடிபணிந்து கோதில் சிவசின்ன
மன்றுமுதற் ரூங்கி யார்வமுறத் தங்கையாற்
றுன்று திருப்பணிகள் செய்யத் தொடங்கினுர். (சங)

வே று.

புலர்வதன்முன் றிருவலகு பணிமாறிப புனிறகன்ற
நலமலியான் சாணத்தா னண்ருதிரு மெழுக்கிட்டு
மலர்கொய்து கொடுவந்து மாலைகளுக் தொடுத்தமைத்துப்
பலர்புகழும் பண்பினுற் றிருப்பணிகள் பலசெய்தார். (சச)

காளுபிரும் பணிசெய்து குறைந்தடையு நன்ஞளிற்
கேளுறுமன் புறவொழுகுங் கேண்மையினுர் பின்பிறந்தார்
கோளுறுதீ வினைமூந்தப் பரசமயங் குறித்ததற்கு
மூளுமனக் கவலையினுன் முற்றவருந் துயருழந்தார். (சடு)

ஞண்டிதவ விளக்கனையார் சுடரொளியைத் தொழுதென்னை
யாண்டருளி னீராகி லடியேன்பின் வந்தவினை
யீண்டுவினைப் பரசமயக் குழிசின்று மெடுத்தாள
வேண்டுமெனைப் பலமுறையும் விண்ணப்பஞ் செய்தனரால். (சசு)

தவமென்று பாயிடுக்கித் தலைபறித்து நின்றுண்ணு
மவமொன்று நெறிவீழ்வான் வீழாமே யருளுமெனச்
சிவமொன்று நெறிநின்ற திலகவதி யார்பரவப்
பவமொன்றும் வினைதீர்ப்பார் திருவுள்ளம் பற்றினுர். (சஎ)

மன்னுதபோ தனியார்க்குக் கனவின்கண் மழவிடையா
ருன்னுடைய மனக்கவலை யொழிதியுன் னுடன்பிறந்தான்
முன்னமே முனியாகி யெனையடையத் தவமுயன்ரு
னன்னவனை யினிச்சூலை மடித்தாள்வ னெனவருளி, (சஅ)

பண்டுபுரி நற்றவத்துப் பழுதினள விறைவழுவுங்
தொண்டரையா ளத்தொடங்குஞ் சூலமே தினைதன்னைக்
கண்டருநெற் றியரருளக் கடுங்கனல்போ லடுங்கொடிய
மண்டுபெருஞ் சூலையவர் வயிற்றினிடைப் புக்கதால். (சக)

அடைவிலமண் புரிதரும சேனர்வயிற் றடையுமது
வடவனலுங் கொடுவிடமும் வசிரமும் பிறவுமாங
கொடியவெலா மொன்றாகு மெனகருடரி னகருடையய்
படருந்து கடுங்கியமண் பாழியறை யிடைவீழ்ந்தா (கo)

அசமயத் திடைத்தாமுன் னதிகரித்து வாய்த்துவரும்
விசைசகளாற் றடுத்திடவு மேன்மேலு மிகமுடுகி
யுசமுற வேதனைகோ யோகியெழ வாகவர்தா
நச்சரவின் விடந்தலைக்கொண் டெனமயங்கி கவையுற்றார். (கக)

அவர்நிலைமை கண்டதற்பி னமண்கையர் பலரீண்டிக
கவர்கின்ற விடம்போன்முன் கண்டறியாக் கொடுஞ்சூலை
யிவர்தமக்கு வந்தினி யாதுசெய லென்றழிந்தார்
தவமென்று வினைபெருக்கிச சார்பல்லா கெறிசார்வார். (கஉ)

புண்டலைவன் முருட்டமணர் புலர்ந்துசெய லறியாது
குண்டிகைநீர் மந்திரித்துக் குடிப்பித்துத் தணியாமை
கண்டுமிகப் பீலிகொடு காலளவுந் தடவிடவும்
பண்டையினு நோவுமிகப் பரிபவத்தா லிடருழந்தார். (கங)

தாவாத புகழ்த்தரும சேனர்க்கு வந்தபிணி
யோவாது நின்றிடலு மொழியாமை யுணர்ந்தாரா
யாவாரா மென்செய்கோ மென்றழிந்த மனத்தினராய்ப்
போவார்க ளிதுசும்மாற் போக்கரிதா மெனபபுகன்று. (கச)

குண்டர்களுங் கைவிட்டார் கொடுஞ்சூலை பிசைக்கொண்டு
மண்டியிக மேன்மேலும் பெருகுதலான் மதிமயங்கிப்
பண்டையுற வுணர்ந்தார்களுத் திலகவதி யாருளராக
கொண்டவர்பா லூட்டுவான் றனைவிட்டார் குறிப்புணர்த்த. (கஙி)

ஆங்கவன்போய்த் திருவதிகை தனையடைய வருந்தவத்தார்
பூங்கமழ்ந்த தனவனத்தின் புறத்தணையக் கண்டிறைஞ்சி
யீங்கியா னுமக்கிளையா ரேவலினல் வந்ததெனத்
தீங்குளவோ வெனவினவ மற்றவனுஞ் செப்புவான். (கசு)

கொல்லாது சூலைநோய் குடர்மூடக்கித் தீராமை
யெல்லாருங் கைவிட்டா ரிதுசெயலென் முன்பிறந்த
கல்லான்பாற் சென்றியம்பி னானுய்யும் படிகேட்டிங்
கல்லாகும் பொழுதணைவா யென்றுரென் றறிவித்தான். (கஎ)

என்றவன்முன் கூறுதலும் யானங்குன் னுடன்போந்து
நன்றறியா ரமண்பாழி நண்ணுகிலே னெனுமாற்றஞ்
சென்றவனுக் குரையென்று திலகவதி யார்மொழிய
வன்றவனு மீண்டுபோய்ப் புகுந்தபடி யவர்க்குரைத்தான். (கஅ)

அவ்வார்த்தை கேட்டலுமே யயர்வெய்தி யிதற்கினியா
னெவ்வாறு செய்வனென வீசரருள் கூடுதலா
லொவ்வாவிப் புன்சமயத் தொழியாவித் தயசொழியச்
செவ்வாறு சேர்திலக வதியார்தாள் சேர்வனென. (இசு)

எடுத்தமனக் கருத்துய்ய வெழுதலா லெழுமுயற்சி
யடுத்தலுமே யயர்வொதுங்கத் திருவதிகை யணைவதனுக்
குடுத்துழலும் பாயொழிய வறியுறுகுண் டிகையொழியத்
தொடுத்தரி லியுமொழியப் போவதற்குத் துணிந்தெழுந்தார். (ஈ0)

பொய்தருமா லுள்ளத்துப் புன்சமண ரிடங்கழிந்து
மெய்தருவா னெறியடைவார் வெண்புடைவை மெய்சூழ்ந்து
கைதருவார் தமையூன்றிக் காணுமே யிரவின்கட்
செய்தவமா தவர்வாழுந் திருவதிகை சென்றடைந்தார். (ஈக)

சுலவிவயிற் றகங்கனலுஞ் சூலநோ யுடன்றொடரக்
குலவியெழும் பெருவிருப்புக் கொண்டணையக் குலவரைபோன்
றிலகுமணி மதிற்சோதி யெதிர்கொடிரு வதிகையினிற்
றிலகவதி யாரிருந்த திருமடத்தைச சென்றணைந்தார். (ஈஉ)

வந்தணைந்து திலகவதி யாரடிமே லுறவணங்கி
யந்தமது குலஞ்செய்த நற்றவத்தின் பயனேபோ
லிந்தவுடற் கொடுஞ்சூலக் கிடைந்தடைந்தே னினிமயங்கா
துய்ந்துகரை யேறுநெறி யுரைத்தருளு மெனவுரைத்து. (ஈங)

தாளிணைமேல் விழுந்தயருந் தம்பியார் தமைநோக்கி
யாளுடைய தம்பெருமா னருணினைந்து கைதொழுது
கோளில்பர சமயநெறிக் குழியில்விழுந் தறியாது
மூளுமருந் துயருழந்தீ ரெழுந்திரீ ரெனமொழிந்தார். (ஈச)

மற்றவரை கேட்டலுமே மருணீக்கி யார்தாமு
முற்றபிணி யுடனடுங்கி யெழுந்துதொழ வுயர்தவத்தோர்
கற்றைவே ணியரருளே காணுதி கழலடைந்தோர்
பற்றறுப்பார் தமைப்பணிந்து பணிசெய்வீ ரெனப்பணித்தார். (ஈடி)

என்றபொழு தவரருளே யெதிரேற்றுக் கொண்டிறைஞ்ச
நின்றதபோ தனியாரு நின்மலன்பே ரருணினைந்து
சென்றுதிரு வீரட்டம் புகுவதற்குத் திருக்கயிலைக்
குன்றுடையார் திருநீற்றை யஞ்செழுத்தோ திக்கொடுத்தார். (ஈசு)

திருவாளன் றிருநீறு திலகவதி யாரளிப்பப்
பெருவாழ்வு வந்தெனைப் பெருந்தகையார் பணிந்தேற்றங்
குருவாரு வணிந்துதமக் குற்றவிடத் தெய்துநெறி
தருவாராய்த் தம்முன்பு வந்தார்பின் ரும்வந்தார். (ஈள)

நீறணிந்தா ரகத்திருளு நிறைகங்குற் புறத்திருளு
மாறவருந் திருப்பள்ளி யெழுச்சியினின் மாதவஞ்செய்
சீறடியார் திருவலகுந் திருமெழுக்குந் தோண்டியுங்கொண்
டாறணிந்தார் கோயிலினுள் ளடைந்தவரைக் கொடுபுக்கார். (ஈஅ)

திரைக்கெடில வீரட்டா னத்திருந்த செங்கனக
வரைச்சிலையார் பெருங்கோயி றிருமுதுவலங் கொண்டிறைஞ்சித்
தரைத்தலத்தின் மிசைவீழ்ந்து தம்பிரான் றிருவருளா
லுரைத்தமிழ்மா லைகள் சாத்து மூணர்வுபெற வுணர்ந்துரைப்பார். (૬૬)

வே று.

நீற்றுநிறை வாகிய மேனியுட னிறையன்புறு சிந்தையி னேசமிக
மாற்றுர்புர மாற்றிய வேதியரை மருளும்பிணி மாயை யறுத்திடுவான்
கூற்றுயின வாறு விலக்கலிலீ ரெனவீடிய கோதி றிருப்பதிகம்
போற்றுலுல கேழின் வருந்துயரும் போமாறெதிர் நின்று புகன்றனரால். (૬૦)

மன்னும்பதி கம்மது பாடியபின் வயிறுற்றடு சூலை மறப்பிணிதா
னங்நின்ற நிலக்க ணகன்றிடலு மடியேனுயி ரோடரு டந்தெனுச்
செங்நின்ற பரம்பொரு ளானவர்தந் திருவாரருள் பெற்ற சிறப்புடையோர்
முன்னின்ற தெருட்சி மருட்சியினுன் முதல்வன்கரு ணைக்கடன் மூழ்கினரே. (૬૬)

அங்கங்க ளடங்க வுரோமமெலா மடையப்புள கங்கண் முகிழ்த்தலரப்
பொங்கும்புனல் கண்கள் பொழிந்திழியப் புவிமீது விழுந்து புரண்டயர்வா
ரிங்கென்செய லுற்ற பிழைபதனு லேருரு பெருந்திட நேறிடநின்
றங்குங் கருணைப்பெரு வெளள மிடத் தகுமோவென வின்னன தாமொழிவார். (૬૭)

பொய்வாய்மை பெருக்கிய புன்சமயப் பொறியில்சம ணீசர்புறத் துறையா
மவ்வாழ்குழி யின்கண் விழுந்தெழுமா றறியாது மயங்கி யவம்புரிவேன்
மைவாச நறுங்குழன் மாமலையாண் மணவாளன் மலர்க்கழல் வந்தடையு
மிவ்வாழ்வு பெறத்தரு சூலபிணுக் கெதிர்செய்குறை யென்கொ லெனத்தொழுவார். ()

மேவுற்றலில் வேலெயி னீடியசீர் வீரட்ட மமர்ந்த பிரானருளாற்
பாவுற்றலர் செந்த மிழின்சொல்வளப் பதிகத்தொடை பாடிய பான்மையினு
ஞவுக்கர சென்றுல கேழினுின் னன்னும நயப்புற மன்னுகவென்
றியாவர்க்கும் வியப்புற மஞ்சுறை வானிடை யேயொரு வாய்மை யெழுந்ததுவே. ()

இத்தன்மை நிகழ்ந்துழி நாவின்மொழிக் கிறையாகிய வன்பரு மிந்நெடுநாட்
சித்தந்திகழ் தீவினை யேனடையுந் திருவோவிது வென்று தெருண்டறியா
வத்தன்மைய ஞய வீரவணனுக் கருளுங்கரு ணைத்திற மானவதன்
மெய்த்தன்மை யறிந்து துதிப்பதுவே மேல்கொண்டு வணங்கினர மெய்யுறவே. (૬૬)

பரசுங்கரு ணைப்பெரி யோனருளப் பறிபுன்றலை யோர்நெறி பாழ்படவந்
தரசிங்கருள் பெற்றுல குய்ந்ததெனு வடியார்புடை சூழதி கைப்பதிதான்
முரசம்பட கந்துடி தண்ணுமையாழ் முழவங்கிளே துந்துபி கண்டையுட
னிரைசங்கொலி யெங்கு முழங்குதலா னெநிமாகட லென்ன நிறைந்துளதே. (૬૮)

மையற்றுறை யேறி மகிழ்ந்தலர்சீர் வாகீசர் மனத்தொடு வாய்மையுடன்
மெய்யுற்ற திருப்பணி செய்பவராய் வீரவுஞ்சிவ சின்னம் விளங்கிடவே
யெய்துற்ற தியான மருவுணர்வு மீறின்றி யெழுந்திரு வாசகமுங்
கையிற்றிக ழும்முழ வாரமுடன் கைக்கொண்டு கசிந்து கலந்தனரே. (૬૯)

மெய்ம்மைப்பணி செய்த வீருப்பதனுல் விண்ணோர்தனி நாயக னூர்கழலிற்
றம்மிச்சை நிரம்ப வரம்பெறுமத் தன்மைப்பதி மேவிய தாபதியார்
பொய்மைச்சம யப்பிணி விட்டவர்முன் போதும்பிணி விட்டரு ளிப்பொருளா
லெம்மைப்பணி கொள்கரு ணைத்திற மங் கியார்பெற்றன ரென்ன விறைஞ்சினரே. ()

வேறு.

இன்ன தன்மையி லிவர்சிவ நெறியினை யெய்தி
மன்னு பேரருள் பெற்றிடர் கீங்கிய வண்ணம்
பன்னு தொன்மையிற் பாடலி புத்திர நகரிற்
புன்மை யேபுரி யமணர்தாங் கேட்டது பொருராய். (எக)

தரும சேனர்க்கு வந்தவத் தடுப்பருஞ் சூலை
யொருவ ராலுமிங் கொழிந்திடா மையினவ ருயப்போய்ப்
பெருகு சைவராய்ப் பெயர்ந்ததம் பிணியொழித் தும்ந்தார்
மருவு நம்பெருஞ் சமயம்வீழ்ந் ததுவென மருள்வார். (அ0)

மலேயும் பல்சம யங்களும் வென்றுமற் றவரா
னிலேயும் பெற்றவிக் கொறியினி யழிந்ததென் றழுங்கிக்
கொலேயும் பொய்மையு மிலமென்று கொடுந்தொழில் புரிவோர்
தலேயும் பீலியுந் தாழவந் தொருசிறை சார்ந்தார். (அக)

இவ்வ கைப்பல வமணர்க டெருட னீண்டி
மெய்வ கைத்திற மறிந்திடில் வேந்தனும் வெகுண்டு
சைவ ருகிநம் விருத்தியுந் தவிர்க்குமற் றினிநாஞ்
செய்வ தென்னென வஞ்சனே தெரிந்துசித் திரிப்பார். (அஉ)

தவ்வை சைவத்து நிற்றலிற் றருமசே னருந்தாம்
பொய்வ குத்ததோர் சூலநீர்த் திலதெனப் போயிங
கெவ்வ மாகவங் கெய்திநஞ் சமயலங் கனமுந்
தெய்வ நிந்தையுஞ் செய்தன ரெனச்சொலத் தெளிந்தார். (அங)

சொன்ன வண்ணமே செய்வது துணிந்ததுன் மதியோர்
முன்ன நாஞ்சென்று முறைப்படி வோமென முயன்றே
யின்ன தன்மையி லிருட்குழாஞ் செல்வது போல
மன்ன ருகிய பல்லவ னகரில்வந் தணேந்தார். (அச)

உடையொ ழிந்தொரு பேச்சிடை யின்றிநின் றுண்போர்
கடைய ணேந்தவன் வாயில்கா வலருக்கு நாங்க
ளடைய வந்தமை யரசனுக் கறிவியு மென்ன
விடைய றிந்துபுக் கவருந்த றிறைவனுக் கிசைத்தார். (அடி)

வேறு.

அடிகண்மா ரெல்லாரு மாகுலமாய் மிகவழிந்து
கொடிமுடங்கு திருவாயிற் புறத்தணேந்தா ரெனக்கூற
வடிகெடவேன் மன்னவனு மற்றவர்சார் பாதலினுற்
கடிதணேவா னவர்க்குற்ற தென்கொலெனக் கவன்றுரைத்தான். (அசு)

கடைகாவ லுடையார்கள் புகுதவிடக் காவலன்பா
னடையாடுந் தொழிலுடையார் நண்ணித்தா மெண்ணியவா
றுடையாரா கியதரும சேனர்பிணி யுற்றராய்ச்
சடையானுக் காளாய்நின் சமயமழித் தாரென்றார். (அவ)

விரையலங்கற் பல்லவனு மதுகேட்டு வெகுண்டெழுந்து
புரையுடைய மனத்தினராய்ப் போவதற்குப் பொய்ப்பிணிகொண்
டிரைசிறந்த சமயத்தை யழித்தொழியப் பெறுவதே
கரையிறவத் தீரிதனுக் கென்செய்வ தெனக்கனன்றான். (அஅ)

தலைநெறியா னியசமயந் தன்னையழித் துன்னுடைய
நிலைநின்ற தொல்வரம்பி னெறியழித்த பொறியிலியை
யலைபுரிவா யெனப்பரலி வாயாலஞ் சாதுரைத்தார்
கொலைபுரியா நிலைகொண்டு பொய்யொழுகு மமண்குண்டர். (அக)

அருள்கொண்ட வுணர்வின்றி நெறிகோடி யறிவென்று
மருள்கொண்ட மன்னவனு மந்நிரிக டமைநோக்கித்
தெருள்கொண்டோ ரிவர்சொன்ன தீயோனைச் செறுவதற்குப்
பொருள்கொண்டு விடாதென்பாற் கொடுவாரு மெனப்புகன்றான். (கo)

அரசனது பணிதலைநின் றமைச்சர்களு மந்நிலையே
முரசதிருந் தானையொடு முன்சென்று முகில்சூழ்ந்து
விரைசெறியுஞ் சோலைசூழ் திருவதிகை தனைமேவிப்
பரசமயப் பற்றறுத்த பான்மையினர் பாற்சென்றார். (கக)

சென்றணைந்த வமைச்சருடன் சேனைவீ ரருஞ்சூழ்ந்து
பின்றயங்கு புரிவேணி வேதியனு ரடியவரை
யின்றுநுமை யரசனைழக் கெமைவிடுத்தான் போதுமென
நின்றவரை நோர்நோக்கி நிறைதவத்தோ ருரைசெய்வார். (கஉ)

நாமார்க்குங் குடியல்லோ மென்றெடுத்து நான்மறையின்
கோமானே நதியினுடன் குளிர்மதிவாழ் சடையானைத்
தேமாலைச் செந்தமிழின் செழுந்திருத்தாண் டகம்பாடி
யாமாறு நீரழைக்கு மடைவிலமென் றருள்செய்தார். (கங)

ஆண்டவர சருள்செய்யக் கேட்டவரு மடிவணங்கி
வேண்டியவர்க் கொண்டேக விடையுகைத்தார் திருத்தொண்ட
ரீண்டிவரும் வினைகளுக்கெம் பிரானுளனென் றிசைந்திருந்தார்
மூண்டசினப் போர்மன்னன் முன்னணைந்து கறிவித்தார். (கச)

பல்லவனு மதுகேட்டுப் பாங்கிருந்த பாயுடுக்கை
வல்லமனர் தமைநோக்கி மற்றவனைச் செய்வதினிச்
சொல்லுமென வறந்துறந்து தமக்குறுதி யறியாத
புல்லறிவோ ரஞ்சாது நீற்றறையில் விடப்புகன்றார். (கஇ)

அருகணைந்தார் தமைநோக்கி யவ்வண்ணஞ் செய்கவெனப்
பெருகுசினக் கொடுங்கோலான் மொழிந்திடலும் பெருந்தகையை
யுருகுபெருந் தழல்வெம்மை நீற்றறையி னுள்ளிருத்தித்
திருகுகரும் தாட்கொளுவிச் சேமங்கள் செய்தமைத்தார். (கஈ)

ஆண்டவர சதனகத்து ளணைந்தபொழு தம்பலத்துத்
தாண்டவமுன் புரிந்தருளுந் தாணிழலைத் தலைக்கொண்டே
யீண்டிவரும் துயருளதோ வீசனடி யார்க்கென்று
மூண்டமன நோர்நோக்கி முதல்வனையே தொழுதிருந்தார். (கஉ)

வெய்யநீற் றறையதுதான் மீங்கிளவே னிற்பருவர்
தைவருதண் டென்றலணை தண்கழுநீர்த் தடம்போன்று
மொய்யொளிவெண் ணிலவலர்ந்து முரன்றயா மொலியினதா
யையர்திரு வடிநீழ லருளாகிக் குளிர்ந்ததே. (கஅ)

வேறு.

மாசின்மதி நீடுபுனன் மன்னிவளர் சென்னியினைப்
பேசவினி யானேயுல காளுடைய பிஞ்ஞகனே
யீசனேயெம் பெருமானே யெவ்வுயிருந் தருவானே
யாசையிலா ராவமுதை யடிவணங்கி வினிதிருந்தார். (கக)

ஒருமுறாள் கழிந்ததற்பி னுணர்விலம ணரையழைத்துப்
பாருமினி நீற்றறையை யெனவுரைத்தான் பல்லவனுங்
காரிருண்ட குழாம்போலு முருவுடைய காரமணர்
தேருநிலை யில்லாதார் நீற்றறையைத் திறந்தார்கள். (க00)

ஆனந்த வெள்ளத்தி னிடைமூழ்கி யம்பலவர்
தேனுந்து மலர்ப்பாதத் தமுதுண்டு தெளிவெய்தி
யூனந்தா னிலராகி யுவந்திருந்தார் தம்மைக்கண்
டீனந்தங் கியதிலதா மென்னவதி சயமென்றார். (க0க)

அதிசயமன் றிதுமுன்னே யமண்சமயச் சாதகத்தா
லிதுசெய்து பிழைத்திருந்தா னெனவேந்தற் குரைசெய்து
மதிசெய்வ தினிக்கொடிய வல்விடமூட் டுவதென்று
மூதிரவரும் பாதகத்தோர் மூடைவாயான் மொழிந்தார்கள். (க0உ)

ஆங்கதுகேட் டவனுங்கொடிய வமண்சார்பாற் கெடுமன்ன
னேங்குபெரு மையலினு னஞ்சுட்டு மெனவுரைப்பத்
தேங்காதார் திருநாவுக் கரசரையத் தீயவிடப்
பாங்குடைய பாலடிசி லமுதுசெயப் பண்ணினார். (க0ங)

நஞ்சமமு தாமெங்க ணுதனடி யார்க்கென்று
வஞ்சமிகு நெஞ்சுடையார் வஞ்சனையாம் படியறிந்தே
செஞ்சடையார் சீர்வினைக்குந் திறலுடையார் தீவிடத்தால்
வெஞ்சமண ரிடுவித்த பாலடிசின் மிசைந்திருந்தார். (க0ச)

பொடியார்க்குந் திருமேனிப் புனிதர்க்குப் புவனங்கண்
முடிவாக்குந் துயர்நீங்க முன்னேவிட மமுதாஞற்
படியார்க்கு மறிவரிய பசுபதியார் தம்முடைய
வடியார்க்கு நஞ்சமுத மாவதுதா னற்புதமோ. (க0ஞ)

அவ்விடத்தை யாண்டவர சமுதுசெய்து முன்னிருப்ப
வெவ்விடமு மமுதாயிற் றெனவமணர் வெருக்கொண்டே
யிவ்விடத்தி லிவன்பிழைக்கி லெமக்கெல்லா மிறுதியெனத்
தெவ்விடத்துச் செயல்புரியுங் காவலற்குச் செப்புவார். (க0ட)

நஞ்சுகலந் தூட்டிடவு நஞ்சமயத் தினில்விடந்தீர்
தஞ்சமுடை மந்திரத்தாற் சாதியா வகைதடுத்தா
னெஞ்சும்வகை யவற்கிலதே லெம்முயிரு நின்முறையுங்
கஞ்சமது திடமென்றார் சூழ்வினையின் றுறைநின்றார். (க0எ)

மற்றவர்த மொழிகேட்டு மதிகெட்ட மன்னவனுஞ்
செற்றவனே யினிக்கடியுந் திறமெவ்வா றெனச்செப்ப
வுற்றவரு மந்திரசா தகநாங்க ளொழித்திடினின்
கொற்றவயக் களிறெ திரே விடுவெனெக் கூறினார். (க0அ

மாபாவிக் கடையமணர் வாசேத் திருவடியாங்
காபாலி யடியவர்பாற் கடக்களிற்றை விடுகென்னப்
பூபாலர் செயன்மேற்கொள் புலேத்தொழிலோ னவர்தம்மேற்
கோபாதி சயமான கொலேக்களிற்றை விடச்சொன்னன். (৫০৯)

கூடத்தைக் குத்தியொரு குன்றமெனப் புறப்பட்டு
மாடத்தை மறித்திட்டு மண்டபங்க ளெடுத்தெற்றித்
தாடத்திற் பரிக்காரர் தலேயிடறிக் கடக்களிற்றின்
வேடத்தால் வருங்கூற்றின் மிக்கதொரு விறல்வேழம். (৫৫০)

வே று.

பாசத்தொடை நிகளத்தொடர் பறியத்தறி முறியா
மீசுற்றிய பறவைக்குலம் வெருவத்துணி விலகா
ஆசற்கர மெதிர்சுற்றிட வுரறிப்பரி புழுரூ
வாசக்கட மழைமுற்பட மதவெற்பெதிர் வருமால். (৫৫৫)

இடியுற்றெழு மொலியிற்றிசை யிபமூட்கிட வடியிற்
படிபுக்குற வெளியப்படர் பவனக்கதி விசையிற்
கடிதுற்றடு செயலிற்கிளர் கடலிற்படு கடையின்
முடிவீற்கன லெனமுற்சின முடுகிக்கடு கியதே. (৫৫২)

மாடுற்றணே யிவுளிக்குல மறியச்செறி வயிரக்
கோடுற்றிரு பிளவிட்டது குறைகைக்கொடு முறியச்
சாடுற்றிடு மதிறெற்றிகள் சரியப்புடை யணிசெற்
றடுற்றகல் வெளியுற்றதவ் வடர்கைக்குல வரையே. (৫৫৩)

பாவக்கொடு வீனேமுற்றிய படிறுற்றடு கொடியோர்
நாவுக்கர செதிர் முற்கொடு நணுகிக்கரு வரைபோ
லேவிச்செறு பொருகைக்கரி யினேயுய்த்திட வெருளார்
சேவிற்றிகழ் பவர்பொற்கழ றெளிவுற்றனர் பெரியோர். (৫৫৪)

வே று.

அண்ண லருந்தவ வேந்த ராணேதம் மேல்வரக் கண்டு
விண்ணவர் தம்பெரு மானே விடையுகந் தேறும் பிரானேச்
சுண்ணவெண் சந்தனச் சாந்து தொடுத்த திருப்பதி கத்தை
மண்ணுல குய்ய வெடுத்து மகிழ்வுட னேபாடு கின்றூர். (৫৫৫)

வஞ்சகர் விட்ட சினப்போர் மதவெங் களிற்றினே நோக்கிச்
செஞ்சடை நீண்முடிக் கூத்தர் தேவர்க்குந் தேவர் பிரானூர்
வெஞ்சுடர் மூவிலேச் சூல வீரட்டர் தம்மடி யோகா
மஞ்சுவ தில்லேயென் றென்றே யருந்தமிழ் பாடி யறைந்தார். (৫৫৬)

தண்டமிழ் மாலேகள் பாடித் தம்பெரு மான்சர ணைகக்
கொண்ட கருத்தி லிருந்து குலாவிய வன்புறு கொள்கைத்
தொண்டரை முன்வல மாகச் சூழ்ந்தெதிர் தாழ்ந்து நிலத்தி
லெண்டிசை யோர்களுங் காண விறைஞ்சி யெழுந்தது வேழம். (৫৫৭)

ஆண்ட வரசை வணங்கி யஞ்சியவ் வேழம் பெயரத்
தூண்டிய மேன்மறப் பாகர் தொடக்கி யடர்த்துத் திரித்து
மீண்டு மதனே யவர்மேன் மிறைசெய்து காட்டிட வீசி
மீண்டவர் தங்களே யேகொன் றமணர்மே லோடிற் றெதிர்ந்தே. (৫৫৪)

ஓடி யருகர்க டம்மை புழறி மிதித்துப் பினக்த
நாடிப் பலரையுங் கொன்று நகரங் கலங்கி மறுக
நீடிய வேலை கலக்கு நெடுமேர் தாகிரி போல
வாடியல் யானேயம் மன்னற் காகுல மாக்கிய தன்றே. (கசசு)

யானேயின் கையிற் பிழைத்த வவ்வமண் கையர்க ளெல்லா
மான மழிந்து மயங்கி வருந்திய சிந்தைய ராகித்
தானே நிலமன்னன் ரூளிற் றனித்தனி வீழ்ந்து புலம்ப
மேன்மை நெறிவிட்ட வேந்தன் வெகுண்டினிச் செய்வதெ னென்ரூன். (கஉ0)

நங்கள் சமயத்தி னின்றே நாடிய மூட்டி நிலேயா
லெங்க ளெதிரே றழிய யானேயா லிவ்வண்ண நின்சிர்
பங்கப் படுத்தவன் போகப் பரிபவந் தீரு மூனக்குப்
பொங்கழல் போக வதன்பின் புகையகன் ரூலென வென்ரூர். (கஉக)

அல்லிரு ளன்னவர் கூற வரும்பெரும் பாவத் தவன்ரூன்
ரூல்லேச் சமய மழித்துத் துயரம் விளேத்தவன் றன்னேச்
சொல்லு மினிச்செய்வ தென்னச் சூழ்ச்சி முடிக்குந் தொழிலோர்
கல்லுடன் பாசம் பிணித்துக் கடலிடைப் பாய்ச்சுவ தென்ரூர். (கஉஉ)

ஆங்கது கேட்ட வரச னவ்வினே மாக்களே நோக்கித்
தீங்கு புரிந்தவன் றன்னேச் சேம முறக்கொண்டு போகிப்
பாங்கொரு கல்லி லிணைத்துப் பாசம் பிணித்தோர் படவில்
வீங்கொலி வேலேயி லேற்றி வீழ்த்துமி னென்று விடித்தான். (கஉங)

அவ்வினே செய்திடப் போக்கு மவருடன் போயரு கந்த
வெவ்வினே யாளருஞ் சென்று மேவிட நாவுக் கரசர்
செவ்விய தன்திரு வுள்ளஞ் சிறப்ப வவருடன் சென்ரூர்
பவ்வத்தின் மன்னவன் சொன்ன படிமுடித் தாரப் பதகர். (கஉச)

அப்பரி சவ்வினே முற்றி யவரகன் றேகிய பின்ன
ரொப்பரு மாகடல் புக்க வுறைப்புடை மெய்த்தொண்டர் தாமு
மெப்பரி சாயினு மாக வேத்துவ னெந்தையை யென்று
செப்பிய வண்டமிழ் தன்னுற் சிவனஞ் செழுத்துந் துதிப்பார். (கஉஙி)

தே வு.

சொற்றுணே வேதிய னென்னுந் தூய்மொழி
நற்றமிழ் மாலேயா நமச்சி வாயவென்
றற்றமூன் காக்குமஞ் செழுத்தை யன்பொடு
பற்றிய வுணர்வினுற் பதிகம் பாடினுர். (கஉசு)

பெருகிய வன்பினர் பிடித்த பெற்றியால்
வருமல ரோன்முத லமரர் வாழ்த்துதற்
கரியவஞ் செழுத்தையு மரசு போற்றிடக்
கருதெடு கடலினுட் கன்மி தர்ததே. (கஉஎ)

அப்பெருங் கல்லுமங் கரசு மேல்கொளத்
தெப்பமாய் மிதத்தலிற் செறித்த பாசமுந்
தப்பிய ததன்மிசை யிருந்த தாவில்சீர்
மெய்ப்பெருந் தொண்டனுர் விளங்கித் தோன்றினுர். (கஉஅ)

இருவினைப் பாசமு மலக்க லார்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்க ளேறிட
வருளுமெய் யஞ்செழுத் தரசை யிக்கட
லொருகன்மே லேற்றிட வுரைக்க வேண்டுமோ. (கூ௨கூ)

அருணயந் தஞ்செழுத் தேத்தப் பெற்றவக்
கருணைகா வரசினைத் திரைக்க ரங்களாற்
றெருணெறி நீர்மையிற் சிரத்திற் ரூங்கிட
வருணனுஞ் செய்தனன் முன்பு மாதவம். (கூ௨0)

வாய்ந்தசீர் வருணனே வாக்கின் மன்னரைச்
சேர்ந்தடை கருங்கலே சிவிகை யாயிட
வேந்தியே கொண்டெழுந் தருளு வித்தனன்
பூந்திருப் பாதிரிப் புலியூர்ப் பாங்கரில். (கூ௨க)

அத்திருப் பதியினி லணைந்த வன்பரை
மெய்த்தவக் குராமெலா மேவி யார்த்தெழ
வெத்திசை யினுமர வென்னு மோசைபோற்
றத்துநீர்ப் பெருங்கட ரூலு மார்த்ததே. (கூ௨உ)

தொழுந்தகை நாவினுக் கரசுந் தொண்டர்முன்
செழுந்திருப் பாதிரிப் புலியூர்த் திங்கள்வெண்
கொழுந்தணி சடையரைக் கும்பிட் டன்புற
விழுந்தெழுந் தருணெறி விளங்கப் பாடுவார். (கூ௨ரு)

தே வா ரு.

ஈன்ரூளு மாயெனக் கெந்தையு மாகி யெனவெடுத்துத்
தோன்றுத் துணையா யிருந்தனன் றன்னடி யோங்கட்கென்று
வான்றுழ் புனற்கங்கை வார்சடை யானமற் றெம்மையிர்க்குஞ்
சான்று மொருவனைத் தண்டமிழ் மாலைகள் சாத்தினரே. (கூ௨ச)

மற்று மினையன வண்டமிழ் மாலைகள் பாடிவைகி
வெற்றி மழவிடை வீரட்டர் பாத மிகுனினைவா
லுற்றதொர் காதலி னங்குகின் றேகியொன் னூர்புரங்கள்
செற்றவர் வாழுந் திருவதி கைப்பதி சென்றடைவார். (கூ௨டி)

தேவர் பிரான்றிரு மாணி குழியுந் தினைகருமே
மேவினர் சென்று விரும்பிய சொன்மலர் கொண்டிறைஞ்சிப்
பூவலர் சோலை மணமடி புல்லப் பொருண்மொழியின்
காவலர் செல்வத் திருக்கெடி லத்தைக் கடந்தணைந்தார். (கூ௨சு)

வெஞ்சமண் குண்டர்கள் செய்வித்த தீய நிறைகளெல்லா
மெஞ்சவென் றேறிய வின்றமி ழீச ரெழுந்தருள
மஞ்சிவர் மாடத் திருவதி கைப்பதி வாணரெல்லாந்
தஞ்செயல் பொங்கத் தழங்கொலி மங்கலஞ் சாற்றலுற்றார். (கூ௨எ)

மணிநெடுந் தோரணம் வண்குலப் பூக மடற்கதலி
யிணையுற நாட்டி யெழுநிலைக் கோபுரந் தெற்றியெங்குந்
தணிவில் பெருகொளித் தாமங்க ணுற்றிச்செஞ் சாந்துசீவி
யணிநகர் முன்னே யணிமே லணிசெய் தலங்கரித்தார். (கூ௨அ)

மன்னிய வன்பின் வளநகர் மாந்தர் வயங்கிழையா
ரின்னிய ஞதமு மேழிசை யோசையு மெங்கும்விம்மப்
பொன்னியல் சுண்ணமும் பூவும் பொரிகளுந் தூவியெங்குந்
தொன்னக ரின்புறஞ் சூழ்ந்தெதிர் கொண்டனர் தொண்டரையே. (கஉக)

தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமு
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையு நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச்செஞ்சொன்
மேயசெவ் வாயு முடையார் புகுந்தனர் வீதியுள்ளே. (கஉ0)

கண்டார்கள் கைதலை மேற்குவித் திந்தக் கருணைகண்டான்
மிண்டாய செய்கை யமண்கையர் தீங்கு விளைக்கச்செற்ற
முண்டா யினவண்ண மெவ்வண்ண மென்றுரைப் பார்கள்பின்னுந்
தொண்டாண்டு கொண்ட பிரானைத் தொழுது துதித்தனரே. (கஉக)

இவ்வண்ணம் போல வெனைப்பல மாக்க ளியம்பியேத்த
மெய்வண்ண நீற்றெளி மேவுங் குழாங்கள் விரவிச்செல்ல
வவ்வண்ண ணண்ணிய வன்பரும் வந்தெய்தி யம்பவளச்
செவ்வண்ணர் கோயிற் றிருவீரட் டானத்தைச் சேர்ந்தனரே. (கஉஉ)

உம்பர்தங் கோனை யுடைய பிரானையுள் புக்கிறைஞ்சி
நம்புறு மன்பி னையப்புறு காதலி னூற்றினேத்தே
யெம்பெரு மான்றானை யேழ்மெய ஞன்பண் டிகழ்ந்ததென்று
தம்பரி வாற்றிருத் தாண்டகச் செந்தமிழ் சாற்றிவாழ்ந்தார். (கஉங)

மே வு று.

அரியயனுக் கரியானை யடியவருக் கெளியானை
விரிபுனல்சூழ் திருவதிகை வீரட்டா னத்தமுதைத்
தெரிவரிய பெருந்தன்மைத் திருநாவுக் கரசுமனம்
பரிவுறுசெந் தமிழ்ப்பாட்டுப் பலபாடிப் பணிசெயுநாள். (கஉச)

புல்லறிவிற் சமணர்க்காப் பொல்லாங்கு புரிந்தொழுகும்
பல்லவனுந் தன்னுடைய பழவினைப்பா சம்பறிய
வல்லலொழிந் தங்கெய்தி யாண்டவர சினைப்பணிந்து
வல்லமணர் தமைநீத்து மழவிடையோன் றாளடைந்தான். (கஉஙி)

வீடறியாச் சமணர்மொழி பொய்யென்று மெய்யுணர்ந்த
காடவனுந் திருவதிகை நகரின்கட் கண்ணுதற்குப்
பாடலிபுத் திரத்திலமண் பள்ளியொடு பாழிகளுங்
கூடவிடித் துக்கொணர்ந்து குணதரவீச் சரமெடுத்தான். (கஉசு)

இக்காலித் திருப்பணிகள் செய்கின்ற வின்றமிழ்க்கு
மன்னுன வாகீசத் திருமுனியு மதிச்சடைமேற்
பன்னுக மணிந்தவர்தம் பதிபலவுஞ் சென்றிறைஞ்சிச்
சொன்னமத் தமிழ்புனைந்து தொண்டுசெய்வான் றொடர்ந்தெழுவார். (கஉள)

திருவதிகைப் பதிமருங்கு திருவெண்ணெய் நல்லூரு
மருளுதிரு வாமாத்தூர் திருக்கோவ லூர்முதலா
மருவுதிருப் பதிபிறவும் வணங்கிவளத் தமிழ்பாடிப்
பெருதவிருப் புடன்விடையார் மழிப்பெண்ணை கடமணைந்தார். (கஉஅ)

கார்வளரு மாடங்கள் கலந்தமறை யொலிவளர்க்குஞ்
சீருடையத் தணர்வாழுஞ் செழும்பதியி னகத்தெய்தி
வார்சடையார் மன்னுதிருத் தூங்கானை மாடத்தைப்
பார்பரவுந் திருமுனிவர் பணிந்தேத்திப் பரவினார். (கசக)

புன்னெறியா மமண்சமயத் தொடக்குண்டு போந்தவுட
றன்னுடனே யுயிர்வாழத் தரியேனுன் றரிப்பதனுக்
கென்னுடைய நாயகனின் னிலச்சினையிட் டருளென்று
பன்னுசெழுந் தமிழ்மாலை முன்வின்று பாடுவார். (கடுஎ)

பொன்னுர்ந்த திருவடிக்கென் விண்ணப்ப மென்றெடுத்து
முன்னுகி யெப்பொருட்கு முடிவாகி நின்றனைத்
தன்னுகத் தமைபாகங் கொண்டானைச் சங்கரனை
நன்னுமத் திருவிருத்த நலஞ்சிறக்கப் பாடுதலும். (கடுக)

நீடுதிருத் தூங்கானை மாடத்து நிலவுகின்ற
வாடகமே ருச்சிலேயா னருளாலோர் சிவபூத
மாடொருவ ரறியாமே வாகீசர் திருத்தோளிற்
சேடுயர்மூ விலச்சுலஞ் சினவிடையி னுடன்சாத்த. (கடுஉ)

ஆங்கவர்தந் திருத்தோளி லார்ந்தசிரு விலச்சினையைத்
தாங்கண்டு மனங்களித்துத் தம்பெருமா னருணினைந்து
தூங்கருவி கண்பொழியத் தொழுதுவிழுந் தார்வத்தா
லோங்கியசிந் தையராகி யுய்ந்தெதொழிந்தே னெனவெழுந்தார். (கடுகூ)

ஆங்கானை மாடத்துச் சுடர்க்கொழுந்தி னடிபரவிப்
பாங்காகத் திருத்தொண்டு செய்துபயின் றமருநாட்
பூங்கான மணங்கமழும் பொருவிறிரு வரத்துறையுட்
தேங்காவின் முகிலுறங்குந் திருமுதுகுன் றமும்பணிந்து. (கடுச)

வண்டமிழ்மென் மலர்மாலை புனைந்தருளி மருங்குள்ள
தண்டுறைநீர்ப் பதிகளிலுந் தனிவிடையார் மேவியிடங்
கொண்டருளுந் தானங்கள் கும்பிட்டுக் குணதிசைமேற்
புண்டரிகத் தடஞ்சூழ்ந்த நிவாக்கரையே போதுவார். (கடுடு)

ஆனுத சீர்த்தில்லை யம்பலத்தே யாடுகின்ற
வானுறு புடைபரக்கு மலர்ச்சடையா ரடிவணங்கி
யூனுயு முயிராயு முள்ளபயன் கொளவினைந்து
தேனுரு மலர்ச்சோலைத் திருத்தில்லை மருங்கணைந்தார். (ஏடுக)

வே று.

நாவுக் கரசரு நிருவர்க் கரியவர் நடமா டியதிரு வெல்லைப்பான்
மேவித் தலமுற மெய்யிற் றொழுதபின் மேன்மே லெழுதரு விரைவோடுங்
காவிற் களிமயின் மகிழ்வுற் றெதிரெதி ராடக் கடிகமழ் கமலஞ்சூழ்
வாவித் தடமலர் வதனம் பொலிவுறு மருதத் தண்பணை வழிவந்தார். (கடுஎ)

முருகிற் செறியிதழ் முளரிப் பகைரின் முதுமே நிகள்புது மலர்மேயு
மருகிற் செறிவன மெனமிக் குயர்கழை யளவிற் பெருகிட வளரிக்குப்
பெருகிப் புடைமுதிர் தரளஞ் சொரிவன பெரியோ ரவர்திரு வடிவைக்கண்
டிருகிப் பரிவுறு புனல்கண் பொழிவன வெனமுன் புனவள வயலெங்கும். (கடுஅ)

அறிவிற் பெரியவ ரயனெற் பணைவய லவையிற் படும்வகை யணைகின்றூர்
பிறலிப் பவரெறி விடவீ ரிருவினை பெருகித் தொடர்பிணி யுறுபாசம்
பறிவுற் றிடவணை யுமினென் றிருபுடை பயில்சூழ் சினைமிசை குயில்கூவுஞ்
செறிவிற் பலதரு நிலைபிற் பொலிவுறு திருநற் தனவன மெதிர்கண்டார். (கடுக)

அவர்முன் பணிவொடு தொழுதவ் கணைவுற வணிகொம் பரின்மிசை யருகெங்குந்
தவமுன் புரிதலில் வருதொண் டெனுநில்ல தலைவின் றுயர்தமி ழிறையோரா
மிவர்தக் திருவடி வதுகண் டதிசய மெனவந் தெதிரர கரவென்றே
சிவமுன் பயின்மொழி பகர்கின் றனவளர் சிறைமென் கிளியொடு சிறுபூவை. (கசுo)

அஞ்சொற் றிருமறை யவர்முன் பகர்தலு மவருந் தொழுதுமு னளிகூரு
நெஞ்சிற் பெருகிய மகிழ் ங்க காதலு நிறையன் பொடுமுறை தடுமாறச
செஞ்சொற் றிருமறை மொழியச் தணர்பயி றில்லைத் திருநக ரெல்லைப்பான்
மஞ்சிற் பொலிகெடு மதில்சூ ற் குடதிசை மணிவா யிற்புறம் வந்துற்றூர். (கசுக)

அல்லற் பவமற வருளுந் தவமுத லடியா ரெதிர்கொள வவரோடு
மல்லற் புனல்கமழ் மாடே வாயிலின் வழிபுக் கெதிர்தொழு தணைவுற்றூர்
கல்வித் துறைபல வருமா மறைமுதல் கரைகண் டிடையவர் கழல்பேணுஞ்
செல்வக் குடிநிறை கல்லைப பிடைவளர் சிவமே நிலவிய திருவீதி. (கசுஉ)

நவமின் சுடர்மணி நெடுமா லெயுநறு மலர்மா லெயுநிறை திருவீதிப்
புவனங களின்முத லிமையோர் தடமுடி பொருதுந் தியமணி போகட்டிப்
பவனன் பணிசெய வருணன் புனல்கொடி பணிமா றவுமவை பழுதாமென்
றெவருந் தொழுதெழு மடியார் திருவல கிடுவார் குளிர்புனல் வீடுவார்கள். (கசுங)

மேலம் பரதல நிறையுங் கொடிகளில் விரிவெங் கதிர்நுழை வரிதாகுங்
கோலம் பெருகிய திருவீ தியைமுறை குலவும் பெருமையர் பணிவுற்றே
ஞாலந் திகழ்திரு மறைபின் பெருகொலி ஈலமார் முனிவர்க டிதியோடு
மோலம் பெருகிய நிலையேற் கோபுர முறமெய் கொடுதொழு துள்புக்கார். (கசுச)

வளர்பொற் கனமணி திருமா ளிகைபினை வலம்வந் தலமரு வரைநில்லா
வளவிற் பெருகிய வார்வத் திடையெழு மன்பின் கடனிறை யுடலெங்கும்
புளகச் செறிமை விரவத் திருமலி பொற்கோ புரமது புகுவார்முன்
களனிற் பொலிவிட முடையார் நடநவில் கனகப் பொதுவெதிர் கண்ணுற்றூர். (கசுடி)

நீடுந் திருவுட னிகழும் பெருகொளி நிறையம பலனினை யுறநேரே
கூடும் படிவரு மன்பா லின்புறு குணமுன் பெறவரு நிலைகூடத்
தேடும் பிரமனு மாலுந் தேவரு முதலாம் யோனிக டெளிவொன்று
வாடுங் கழல்புரி யமுதத் திருநட மாரா வகைதொழு தார்கின்றூர். (கசுசு)

கையுந் தலைமிசை புனையுஞ் சலியன கண்ணும் பொழிமழை யொழியாதே
பெய்யுந் தகையன கரணங் களுமுட னுருகும் பரிவின பேறெய்து
மெய்யுந் தரைமிசை விழுமுன் பெழுதரு மின்றூழ் சடையொடு நின்றூடு
மையன் றிருநட மெதிர்கும் பிமைவ ராவ்வம் பெருகுத லளவின்றுல். (கசுஎ)

இத்தன் மையர்பல முறையுந் தொழுதெழ வென்றெய் தினையென மன்றுடு
மத்தன் றிருவருள் பொழியுங் கருணையி னருள்பெற் றிடவரு மானந்த
மெய்த்தன் மையினில்வி ருத்தத் திருமொழி பாடிப் பின்னையு மேன்மேலுஞ்
சித்தம் பெருகிய பரிவா லின்புறு திருநே ரிசைமொழி பகர்கின்றூர். (கசுஅ)

வே று.

பத்தனுப்பா பாட மாட்டே னென்றுமுன் னெடுத்துப் பண்ணு
லத்தாவுன் னுடல் காண்பா னடியனேன் வர்தவாறென்
றித்திறம் போற்றி நின்றே யின்றமிழ் மாலை பாடிக்
கைத்திருத் தொண்டு செய்யுங் காதலிற் பணிந்து போந்தார். (கக்கூ)

நீடிய மணியின் சோதி நிறைதிரு முன்றின் மாடு
மாடியர் கொடிசூழ் பொற்றேர் மாமணி வீதி யுள்ளுங்
கூடிய பணிகள் செய்து கும்பிடுந் தொழிலா ராகிப
பாடிய புனித வாக்கின் பணிகளும் பயிலச் செய்வார். (கஏ0)

அருட்பெரு மகிழ்ச்சி பொங்க வன்னம்பா லிக்கு மென்னுங்
திருக்குறுந் தொகைகள் பாடித் திருவழு வாரங் கொண்டு
பெருத்தெழு காத லோடும் பெருந்திருத் தொண்டு செய்து
விருப்புறு மேனி கண்ணீர் வெண்ணீற்று வண்ட லாட. (கஎக)

மேவிய பணிகள் செய்து விளங்குநாள் வேட்க ளத்துச்
சேவுயர் கொடியார் தம்மைச் சென்றுமுன் வணங்கிப் பாடிக்
காவியங் கண்டர் மன்னுந் திருக்கழிப் பாலைதன்னி
னுவினுக் கரசர் சென்று நண்ணினர் மண்ணோர் வாழ. (கஎஉ)

வே று.

சினவிடையே றுகைத்தேறு மணவாள ரம்பிகழல் சென்று தாழ்ந்து
வனபவள வாய்திறந்து வானவர்க்குந் தானவனே யென்கின் றுளென்
றனையதிருப் பதிகமுட னன்புறுவண் டமிழ்பாடி யங்கு வைகி
னினைவரியார் தமைப்போற்றி நீடுதிருப் புலியூரை நினைந்து மீள்வார். (கஎஊ)

மனைப்படப்பிற் கடற்கொழுந்து வளைசொரியுங் கழிப்பாலை மருங்கு நீங்கி
நனைச்சினைமென் குளிர்ஞாழற் பொழிலூடு வழிக்கொண்டு நண்ணும் பேதி
னினைப்பவர்தம் மனங்கோயில் கொண்டருளு மம்பலத்து நிருத்த ரைதைத்
தினைத்தனையாம் பொழுதுமறந் துய்வரெனை வெனப்பாடித் தில்லை சார்ந்தார். (கஎசு)

அரியானை யென்றெடுத்தே யடியவருக் கெளியானை யவர்தஞ்சிந்தை
பிரியாத பெரியதிருத் தாண்டகச்செந் தமிழ்பாடிப் பிறங்கு சோதி
விரியாநின் றெவ்வுலகும் விளங்கியபொன் னம்பலத்து மேவி யாடல்
புரியாநின் றவர்தம்மைப் பணிந்ததமி ழாற்பின்னும் போற்றல் செய்வார். (கஎஙி)

செஞ்சடைக்கற் றைமுற்றத் திளநிலா வெறிக்குமெனுஞ் சிறந்த வாய்மை
யஞ்சொல்வளத் தமிழ்மாலை யதிசயமாம் படிபாடி யன்பு சூழ்ந்த
நெஞ்சருகப் பொழிபுனல்வார் கண்ணிணையும் பரவியசொன் னிறைந்த வாயுந்
தஞ்செயலி னெழியாத திருப்பணியு மாறாது சாரு நாளில். (கஎக)

கடையுகத்தி லாழியின்மேன் மிதந்ததிருக் கழுமலத்தி னிருந்த செங்கண்
விடையுகைத்தார் திருவருளால் வெற்பரையன் பாவைதிரு மூலைப்பா லோடு
மடையகிறை சிவம்பெருக வளர்ஞானங் குழைத்தூட்ட வமுது செய்த
வுடையமறைப் பிள்ளையார் திருவார்த்தை யடியார்க ளுரைப்பக் கேட்டார். (கஎஎ)

ஆழிவிட முண்டவரை யம்மைதிரு முலையமுத முண்ட போதே
யேழிசைவண் டமிழ்மாலை யிவனெம்மா னெனக்காட்டி யியம்ப வல்ல
காழிவரும் பெருந்தகைசீர் கேட்டலுமே யதிசயமாங் காதல் கூர
வாழியவர் மலர்க்கழல்கள் வணங்குதற்கு மனத்தெழுந்த விருப்பு வாய்ப்ப. (கஎஅ)

அப்பொழுதே யம்பலத்து ளாடுகின்ற கழல்வணங்கி யருண்முன் பெற்றுப்
பொய்ப்பிறவிப் பிணியோட்டுந் திருவீதி புரண்டுவலம் கொண்டு போற்றே
யெப்புவனங் களுமறைந்த திருப்பதியி னெல்லையினை யிறைஞ்சி யேத்திச்
செப்பரிய பெருமையினர் திருநாரை யூர்பணிந்து பாடிச் செல்வார். (கஎக)

தொண்டர்குழாம் புடைசூழத் தொழுதகரத் தொடுநீறு துதைந்த கோலங்
கண்டவர்தம் மனங்கரைந்து கரைந்துருகுங் கருணைபுறம் பொழிந்து காட்டத்
தெண்டிரைவாய்க் கன்மிதப்பி லுகைத்தேறு திருநாவுக் கரசர் தாமும்
வண்டமிழா லெழுதுமறை மொழிந்தபிரான் றிருப்புகலி மருங்கு சார்ந்தார். (கஅ0)

நீண்டவரை வில்லியார் வெஞ்சூலை மடித்தருளி னேரே முன்னு
ளாண்டவர செழுந்தருளக் கேட்டருளி யாளுடைய பிள்ளை யாருங்
காண்டகைய பெருவிருப்புக் கைம்மிக்க திருவுள்ளக் கருத்தி னூடு
மூண்டவருண் மனத்தன்பர் புடைசூழ வெழுந்தருளி முன்னே வந்தார். (கஅக)

தொழுதணைவுற் றுண்டவர சன்புருகத் தொண்டர்குழாத் திடையே சென்று
பழுதில்பெருங் காதலுட னடிபணியப் பணிந்தவர்தங் கரங்கள் பற்றி
யெழுதரிய மலர்க்கையா லெடுத்திறைஞ்சி விடையின்மேல் வருவார் தம்மை
யழுதழைத்துக் கொண்டவர்தா மப்பரே யெனவவரு மடியே னென்றார். (கஅஉ)

அம்பிகைசெம் பொற்கிண்ணத் தமுதளநா னங்கொடுப்ப வழுகை தீர்ந்த
செம்பவள வாய்ப்பிள்ளை திருநாவுக் கரசரெனச் சிறந்த சீர்த்தி
யெம்பெருமக் களுமியைந்த கூட்டத்தி லரனடியா ரின்பமெய்தி
யும்பர்களும் போற்றிசைப்பச் சிவம்பெருகு மொலிநிறைத்தா ருலகமெல்லாம். (கஅங)

பிள்ளையார் கழல்வணங்கப் பெற்றேனென் றரசுவப்பப் பெருகு ஞான
வள்ளலார் ஓங்கீசர் தமைக்காணப் பெற்றதற்கு மகிழ்ச்சி பொங்க
வுள்ளநிறை காதலினு லொருவரொரு வரிற்கலந்த வுண்மை யோடும்
வெள்ளநீர்த் திருத்தோணி வீற்றிருந்தார் கழல்வணங்கும் விருப்பின் மிக்கார். (கஅச)

வே று.

அருட்பெருகு தனிக்கடலு முலகுக் கெல்லா மன்புசெறி கடலுமா மெனவு
மோங்கும், பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற புண்ணியக்கண் ணிரண்டெ
னவும் புவன முய்ய, விருட்கடிவுண் டவரருளு முலக மெல்லா மீன்றுடன் றிருவ
ருளு மெனவுங் கூடித், தெருட்கலைஞா னக்கன்று மரசுஞ் சென்று செஞ்சடைவா
னவர்கோயில் சேர்ந்தா ரன்றே. (கஅரி)

பண்பயில்வண் டறைசோலை சூழுங் காழிப் பரமர்திருக் கோபுரத்தைப் பணிந்
துள் புக்கு, விண்பணிய வோங்குபெரு விமானந் தன்னே வலங்கொண்டு தொழுதுவீ
ழுந் தெழுந்த வெல்லைச், சண்பைவரு பிள்ளையா ரப்ப ருங்க டம்பிரா ஞரைநீர் பாடி
ரென்னக், கண்பயிலும் புனல்பொழிந்த வரசும் வாய்மைக் கலேபயிலு மொழிபொழி
யக் கசிந்து பாடி. (கஅசு)

பெரியபெரு மாட்டியுடன் றேணி மீது பேணிவீற் றிருந்தருளும் பிரான்முன்
னின்று, பரிவுறுசெந் தமிழ்மாலே பத்தி யோடும் பார்கொண்டு மூடியெனும் பதிகம்
போற்றி, யரியவகை புறம்போந்து பிள்ளை யார்தந் திருமடத்தி லெழுந்தருளி யமுது
செய்து, மருவியசண் புறுகேண்மை யற்றை நாள்போல் வளர்ந்தோங்க வுடன்பல
நாள் வைகு நாளில், (கஅஎ)

அத்தன்மை யினிலரசும் பிள்ளே யாரு மளவளா வியமகிழ்ச்சி யளவி லாத, சித்த நெகிழ்ச் சியிலேடு செல்லு நாளிற் றிருநாவுக் கரசர்திரு வுள்ளந் தன்னின், மைத் தழையு மணிமிடற்றர் பொன்னி நாட்டு மன்னியதா னங்களெல்லாம் வணங்கிப் போற்ற, மெய்த்தெழுந்த பெருங்காதல் பிள்ளேயார்க்கு விளம்புதலு மவருமது மேவி நேர்வார். (கஅஅ)

ஆண்டவர செழுந்தருளக் கோலக் காவை யவரோடுஞ் சென்றிறைஞ்சி யன்பு கொண்டு, மீண்டருளி ஞரவரும் விடைகொண் டிப்பால் வேதநா யகர் விரும்பும் பதிகளான, நீண்டகருப் பறியலூர் புன்கூர் நீடூர் நீடிதிருக் குறுக்கைதிரு நின்றி யூருங், காண்டகைய ணிபள்ளி முதலா ரண்ணிக் கண்ணுதலார் கழலிருழுது கல ந்து செல்வார். (கஅக)

மேவுபுனற் பொன்னியிரு கரையுஞ் சார்ந்து விடையுயர்த்தார் திருச்செம்பொன் பள்ளி பாடிக், காவுயரு மயிலாடு துறைமீள் பொன்னிக் கரைத்துருத்தி திருவேள்விக் குடியெதிர்கொள் பாடி, பாவுறுசெந் தமிழ்மாலே பாடிப் போற்றிப் பரமர்திருப் பதி பிறவும் பணிந்து போந்தே, யாவுமஞ் சாவெரார் கோடிகாவி லணைந்துபணிந் தாவடு தண் டுறையைச் சார்ந்தார். (கஙo)

ஆவடுதண் டுறையாரை யடைந்துய்ந் தேனென் றளவிறிருத் தாண்டகமுன் னருளிச் செய்து, மேவுதிருக் குறுந்தொகைகே ரிசையுஞ் சந்த விருத்தங்க ளானவையும் வேறு வேறு, பாவலர்செந் தமிழ்த்தொடையார் பள்ளித் தாமம் பலசாத்தி மிக்கெழுந்த பரிவினேடும், பூவலயத் தவர்பரவப் பலநாட் டங்கிப் புரிவுறுகைத் திருத்தொண்டு போற்றிச் செய்வார். (கஙக)

எறிபுனல்பொன் மணிசிதறுந் திரைநீர்ப் பொன்னி யிடைமருதைச் சென்றெய்தி யன்பி னேடு, மறிவரவு கரத்தாரை வணங்கி வைகி வண்டமிழ்ப்பா மாலேபல மகிழச் சாத்திப், பொறியரவம் புனைந்தாரைத் திருநாவுக் கரத்துப் போற்றியருந் தமிழ் மாலே புனைந்து போந்து, செறிவிரைசேர் மலர்ச்சோலைப் பழையா றெய்தித் திருச்சத்தி முற்றத்திற் சென்று சேர்ந்தார். (கஙஉ)

வேறு.

சென்று சேர்ந்து திருச்சத்தி முற்றத் திருந்த சிவக்கொழுந்தைக்
குன்ற மகடன் மனக்காதல் குலவும் பூசை கொண்டருளு
மென்று மினிய பெருமானே யிறைஞ்சி யியல்பிற் றிருப்பணிகண்
முன்றி லணைந்து செய்துதமிழ் மொழிமா லைகளுஞ் சாத்துவார். (கஙஙக)

கோவாய் முடுகி யென்றெடுத்துக் கூற்றம் வந்து குமைப்பதன்முன்
பூவா ரடிக ளென்றலேமேற் பொறித்து வைப்பா யெனப்புகன்று
நாவார் பதிகம் பாடுதலு நாதன் முனு கல்லாரில்
வாவா வென்றே யருள்செய்ய வணங்கி மகிழ்ந்து வாகீசர். (கஙச)

வேறு.

நன்மைபெரு கருணைநியே வந்தணைந்து கல்லாரின்
மன்னுதிருத் தொண்டரெர் வணங்கி மகிழ்ந் தெழும்பொழுதி
லுன்னுடைய நினேப்பதனே முடிக்கின்றே மென்றவர்தஞ்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினுன் சிவபெருமான். (கஙஞ)

நினைத்தனைய திருவடியென் றலேமேல்வைத் தாரென்று
புனைந்த திருத் தாண்டகத்தாற் போற்றிசைத்துப் புனிதரரு
ணினைந்துருகி வீழ்ந்தெழுந்து நிறைந்து மலர்ந் தொழியாத
தனம்பெரிதும் பெற்றுவந்த வறியோன்போன் மனந்தழைத்தார். (கஙட)

நாவுக்கு மண்ணர்திரு நல்லூரி னம்பர்பான்
மேவுற்ற திருப்பணிகண் மேவுறாஞ் ஞஞ்செய்து
பாவுற்ற தமிழ்மாலை பலபாடிப் பணிந்தேத்தித்
தேவுற்ற திருத்தொண்டு செய்தொழுகிச் செல்லுநாள். (ககஎ)

கருகாவூர் முதலாகக் கண்ணுதலோ னமர்ந்தருளுந்
திருவாவூர் திருப்பாலைத் துறைபிறவுஞ் சென்றிறைஞ்சிப்
பெருகார்வத் திருத்தொண்டு செய்துபெருந் திருநல்லூ
ரொருகாலும் பிரியாதே யுள்ளுருகிப் பணிகின்றூர். (ககஅ)

ஆளுடைய நாயகன்ற னருள்பெற்றங் ககன்றுபோய்
வாளேபாய் புனற்பழனத் திருப்பழன மருங்கணைந்து
காளவிட முண்டிருண்ட கண்டர்பணிக் கலன்பூண்டு
நீளிலவி லாடுவார் கழல்வணங்க நேர்பெற்றூர். (ககக)

அப்பதியைச் சூழ்ந்ததிருப் பதியிலர ஞர்மகிழு
மொப்பரிய தானங்க ளுள்ளுருகிப பணிந்தணைவார்
மெய்ப்பொருடோ ராவினுக்கு வேந்தர்தா மேவினூர்
செப்பருஞ்சி ரப்பூதி யடிகளூ திங்களூர். (உ00)

அந்தணரின் மேம்பட்ட வப்பூதி யடிகளார்
தந்தனய ருடன்சாலே கூவல்குளந் தருதண்ணீர்ப்
பந்தர்பல வாண்டவர செனும்பெயராற் பண்ணினமை
வந்தணைந்த வாகீசர் கேட்டவர்தம் மனஞண்ண. (உ0க)

மற்றவரு மனமகிழ்ந்து மனைவியார் மைந்தர்பெருஞ்
சுற்றமுடன் களிகூரத் தொழுதெழுந்து சூழ்ந்துமொழிக்
கொற்றவரை யமுதுசெயக் குறைகொள்வா ரிறைகொள்ளப்
பெற்றபெருந் தவத்தொண்டர் திருவுள்ளம் பெறப்பெற்றூர். (உ0உ)

காண்டகைமை யின்றியுமுன் கலந்தபெருங் கேண்மையினூர்
பூண்டபெருங் காதலுடன் போனகமும் கறியமுதும்
வேண்டுவன வெவ்வேறு விதங்கள் பெறவிருபபினு
லாண்டவர சமுதுசெயத் திருவமுதாம் படியமைத்து. (உ0ஊ)

திருநாவுக் கரசமுது செய்தருள மற்றவர்தம்
பெருநாமஞ் சாத்தியவப் பிள்ளைதனை யழைத்தன்பு
தருஞானத் திருமறையோர் தண்டலையின் வண்கதலிக்
குருநாளக் குருத்தரிந்து கொண்டுவரத் தனிவிட்டார். (உ0ச)

ஆங்கவனும் விரைந்தெய்தி யம்மருங்கு தாழாதே
பூங்கதலிக் குருத்தரியப் புகுமளவி லொருநாகந்
தீங்கிழைக்க வதுபேணன் றிருவமுது செய்தருள
வோங்குகத லிக்குருத்துக் கொண்டொலலை வந்தணைந்தான். (உ0ஙி)

யேவிடந் தலைக்கொள்ளத் தெருமந்து செழுங்குருத்தைத்
தாயர்கரத் தினினீட்டித் தளர்ந்துதனைத் தழலுக
மேயபடி புரைசெய்யான் விழக்கண்டு கெட்டொழிந்தேன்
னையவரிங் கமுதுசெயத் தொடங்காரென் றதுவொவித்தார். (உ0க)

தம்புதல்வன் சவமறைத்துத் தமோற்ற மிலராகி
யெம்பெருமா னமுதுசெய வேண்டுமென வந்திறைஞ்ச
வும்பர்பிரான் றிருத்தொண்ட ருள்ளத்திற் றமோற்ற
நமபா வ யநவைதீாபபா. (உ0எ)

அன்றவர்கண் மறைத்ததனுக் களவிறந்த கருணையராய்க்
கொன்றைநறுஞ் சடையார்தங் கோயிலின்முன் கொணர்வித்தே
யொன்றுகொலா மெனப்பதிக மெடுத்துடையான் சீர்பாடப்
பின்றைவிடம் போய்நீங்கிப் பிள்ளையுணர்ச் தெழுந்திருந்தான். (உ0அ)

அருந்தனய னுயிர்பெற்ற வதுகண்டு மமுதுசெயா
திருந்ததற்குத் தளர்வெய்தி யிடருழந்தார் தயர்நீங்க
வருந்துமவர் மனைப்புகுந்து வாக்சத் திருமுனிவர்
விருந்தமுது செய்தருளி விருப்பினுடன் மேவுநாள். (உ0க)

திங்களூர் தினினின்றுந் திருமறையோர் பின்செல்லப்
பைங்கண்விடைத் தனிப்பாகர் திருப்பழனப் பதிபுகுந்து
தங்குபெருங் காதலொடு தம்பெருமான் கழல்சார்ந்து
பொங்கியவன் புறவணங்கி முன்னின்று போற்றிசைப்பார். (உகo)

புடைமாலை மதிக்கண்ணிப் புரிசடையார் பொற்கழற்கீ
ழுடைமாலைச் சீலமுடை யப்பூதி யடிகடமை
நடைமாணச் சிறப்பித்து நன்மைபுரி தீந்தமிழின்
றொடைமாலைத் திருப்பதிகச் சொன்மாலை பாடினார். (உகச)

எழும்பணியு மிளம்பிறையு மணிந்தவரை யெம்மருங்குந்
தொழும்பணிமேற் கொண்டருளித் திருச்சோற்றுத் துறைமுதலாத்
தழும்புறுகேண் மையினண்ணித் தானங்கள் பலபாடிச்
செழும்பழனத் திறைகோயிற் றிருத்தொண்டு செய்திருந்தார். (உகஉ)

சாலநா ளங்கமர்ந்து தந்தலைமேற் சூல்வைத்த
வாலமார் மணிமிடற்ற ரடிமலர்ச்சே வடிவினைந்து
சேலுலாம் புனற்பொன்னித் தென்கரையே றிச்சென்று
கோலநீண் மணிமாடத் திருநல்லூர் குறுகினார். (உகங)

அங்கணைந்து தம்பெருமா னடிவணங்கி யாராத
பொங்கியவன் பொடிதிலைத்துப் போற்றிசைத்துப் பணிசெயுநாட்
டங்குபெருங் காதலினற் ருமமைமேல் விரிஞ்சனெடு
செங்கண்மா லறிவரியார் திருவாரூர் தொழுனினைந்தார். (உகச)

நல்லூரி னம்பரருள் பெற்றுப்போய்ப் பழையாறை
பல்லூர்வெண் டலைக்கரத்தார் பயிலுமிடம் பலபணிந்து
சொல்லூர்வண் டமிழ்பாடி வலஞ்சுழியைத் தொழுதேத்தி
யல்லூர்வெண் பிறையணிந்தார் திருக்குடமூக் கணைந்திறைஞ்சி. (உகஞ)

நாலூர்தென் றிருச்சேறை குடவாயி னறையூர்சேர்
பாலூரு மின்மொழியாள் பாகனார் கழல்பரவி
மேலூர்தி விடைக்கொடியார் மேவுமிடம் பலபாடிச்
சேலூர்தண் பணைசூழ்ந்த தென்றிருவாஞ் சியமணைந்தார். (உகசு)

நடி

பெருவாச மலர்ச்சோலைப் பெருவேளூர் பணிந்தேத்தி
முருகாரு மலர்க்கொன்றை முதல்வனார் பதிபிறவும்
திருவாரும் விமமருடன் சென்றிறைஞ்சி வாசீசர்
மருவாரூ ரெரித்தவர்தந் திருவாரூர் வந்தடைந்தார். (உகஎ)

ஆண்டவரை செழுந்தருள வாரூரி லன்பர்கடா
நீண்டசடை முடியார்பா னிறைந்தவருள் பெற்றுடையார்
காண்டகுமா ளிகைமாடங் கலின்சிறந்தோங் கிடவெங்குஞ்
சேண்டிகழ்வீ திகள்பொலியத் திருமலிமங் கலஞ்செய்தார். (உகஅ)

வே று.

வல்லமண் குண்டர்தம் மாயை கடந்து மறிகடலிற்
கல்லே மிதப்பாகப் போந்தவர் வந்தா ரெனுங்களிப்பா
லெல்லேயி றொண்ட ரெயிற்புறஞ் சென்றெதிர் கொண்டபோது
சொல்லி னரசர் வணங்கித் தொழுதுரை செய்தணைவார். (உகக)

பற்றொன் றிலாவரும் பாதக ராகு மமணர்தம்பா
லுற்ற பிணியொழிந் துய்யப்போந் தேன்பெற லாவதுண்டே
புற்றிடங் கொண்டான்றன் றொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமென்
றுற்ற வுணர்வொடு மாரூர்த் திருவீ தி யுள்ளணைந்தார். (உஉ0)

சூழும் திருத்தொண்டர் தம்முடன் றேரண வாயினண்ணி
வாழி திருநெடுந் தேவா சிரியன்முன் வந்திறைஞ்சி
யாழி வரைத்திரு மாளிகை வாயி லவைபுகுந்து
நீள்சுடர் மாமணிப் புற்றுகந் தாரைநேர் கண்டுகொண்டார். (உஉக)

கண்டு தொழுது விழுந்து கரசர ணுதியங்கங்
கொண்ட புளகங்க ளாக வெழுந்தன்பு கூரக்கண்க
டண்டெளி மாரி பொழியத் திருமூலட் டானர்தம்மைப்
புண்டரி கக்க ழல் போற்றித் திருத்தாண் டகம்புனைந்து. (உஉஉ)

காண்ட லேகருத் தாய்நினைந் தென்னுங் கலேப்பதிகந்
தூண்டா விளக்கன்ன சோதிமுன் னின்று துதித்துருகி
மீண்டு மணிக்கோயில் சூழ வலஞ்செய் திறைஞ்சியன்பு
பூண்ட மனத்தொடு நீடிரு வாயிற் புறத்தணைந்தார். (உஉங)

வே று.

செய்யமா மணியொளிசூழ் திருமுன்றின் முன்றேவா சிரியன் சார்ந்து
கொய்யுமா மலர்ச்சோலைக் குயில்கூவ மயிலாலு மாரூ ராரைக்
கையினுற் றொழாதொழிந்து கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வ னேனென்
றெய்தரிய கையறவாற் திருப்பதிக மருள்செய்தங் கிருந்தா ரன்றே. (உஉச)

மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந் திருவடிவு மதுர வாக்கிற்
சேர்வாகுந் திருவாயிற் றீர்த்தமிழின் மாலைகளுஞ் செம்பொற் ரூளே
சார்வான திருமனமு முழுவாரத் தனிப்படையுந் தாமு மாகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து பணிந்தேத்திப் பரவிச் செல்வார். (உஉஇ)

நீபுகழ்த் திருவாரூர் நிலவுமணிப் புற்றிடங்கொ ணித்தர் தம்மைக்
கூடியவன் பொடுகொலவ் களிலணைந்து கும்பிட்டுக் கோதில் வாய்மைப்
பாடினம்பு தத்திரு னெனும்பதிக முதலான பலவும் பாடி
நாடியவர் வம்பெருக நைந்துமனங் கரைந்துருகி யயர்ந்து செல்வார். (உஉக)

நான்மறைதாற் பெருவாய்மை நமிநந்தி யடிகடிருத் தொண்டி னன்மைப்
பான்மைவிலே யாலவரைப் பரமர்திரு விருத்தத்துள் வைத்துப் பாடித்
தேன்மருவுக் கொன்றையார் திருவாரூ ரரனெறியிற் றிகழுந் தன்மை
யானதிற மும்போற்றி யணிவீதிப் பணிசெய்தங் கமரு நாளில். (உஉள)

நீரார்சுஞ் சடைமுடியார் நிலவுதிரு வலிவலமு நீனைந்து சென்று
வாராரு முலைமங்கை யுமைமபங்கர் கழல்பணிந்து மகிழ்ந்து பாடிக்
காராருங் கறைக்கண்டர் கீழ்வேளூர் கன்முப்பூர் கலந்து பாடி
யாராத காதலினற் றிருவாரூர் தனின்மீண்டு மீணைந்தா ரன்றே. (உஉஅ)

மேவுதிரு வாதிரைநாள் வீதிவிடங் கப்பெருமாள் பவனி தன்னிற்
றேவருடன் முனிவர்கண்முன் சேவிக்கு மடியார்க ளுடன்சே வித்து
மூவுலகுங் களிகூர வரும்பெருமை முறைமையெலாங் கண்டு போற்றி
நாவினுக்குத் தனியரசர் நயக்குநா ணம்பர்திரு வருளி னூலே. (உஉக)

திருப்புகலூ ரமர்ந்தருளுஞ் சிவபெருமான் சேவடிகள் கும்பிட் டேத்தும்
விருப்புடைய வுள்ளத்து மேவியெழுங் காதல்புரி வேட்கை கூர
வொருப்படுவார் திருவாரூ ரொருவாறு தொழுதகன்றங் குள்ளம் வைத்துப்
பொருப்பரையன் மடப்பாவை யிடப்பாகர் பதிபிறவும் பணிந்து போந்தார். (உஉ0)

அந்நாளி லாளுடைய பிள்ளையார் திருப்புகலி யதன்க ணின்றும்
பன்னகப் பூணணிவார் பயின்றதிருப் பதிபலவும் பணிந்து செல்வார்
புன்னுக மணங்கமழும் பூம்புகலூர் வந்திறைஞ்சிப் பொருவில் கீர்த்தி
மின்னுரும் புரிமுந்நூன் முருகனார் திருமடத்தின் மேவுங் காலை. (உஉக)

ஆண்டவர செழுந்தருளி யணியாரூர் மணிப்புற்றி லமர்ந்து வாழு
நீண்டசுடர் மாமணியைக் கும்பிட்டு நீடுதிருப் புகலூர் நோக்கி
மீண்டருளி னரென்று கேட்டருளி யெதிர்கொள்ளும் விருப்பி னோடு
மீண்டுபெருந் தொண்டர்குழாம் புடைசூழ வெழுந்தருளி யெதிரே சென்றார். (உஉஉ)

கரண்டமலி தடம்பொய்கைக் காழியர்கோ னெதிரீணையுங் காதல் கேட்டு
வரண்டுமணிப் புனற்புகலூர் நோக்கிவரும் வாசீசர் மகிழ்ந்து வந்தார்
திரண்டுவருந் திருநீற்றுத் தொண்டர்குழா மிருநிறமுஞ் சேர்ந்தபோதி
லிரண்டுதில வின்கடல்க ளொன்றுகி யீணைந்தனபோ லிசைந்த வன்றே. (உஉஉ)

திருநாவுக் கரசரெதிர் சென்றிறைஞ்சச் சிரபுரத்துத் தெய்வ வாய்மைப்
பெருஞான சம்பந்தப் பிள்ளையா ரெதிர்வணங்கி யப்ப ரேநீர்
வருநாளிற் றிருவாரூர் நிகழ்பெருமை வகுத்துரைப்பீ ரென்று கூற
வருநாமத் தஞ்செழுத்தும் பயில்வாய்மை யவருமெதி ரருளிச் செய்வார். (உஉச)

தே வா.

சித்த நிலாவுஞ் தென்றிரு வாரூர் நகராளு
மைத்தீழை கண்ட ராதிரை நாளின் மகிழ்செல்வ
மித்தகை மைத்தென் றெனமொழி கேனென் றுரைசெய்தார்
முத்து விதான மணிப்பொற் கவரி மொழிமாலை. (உஉஇ)

அம்மொழி மாலைச் செந்தமிழ் கேளா வணிசண்பை
மைம்மலர் கண்டத் தண்டர் பிரானுர் மகனருங்
கொய்ம்மலர் வாவித் தென்றிரு வாரூர் கும்பிட்டே
யும்மூடன் வந்திங் குடனமர் வேனென் றுரைசெய்தார். (உஉசு)

மாமதி லாரூர் மன்னரை யங்கு வணங்கச்செஞ்
தாமரை யோடைச் சண்பையர் நாதன் முனேக
நாமரு சொல்லி னுதரு மார்வத் தொடுபுக்கார்
பூமலர் வாசத் தண்பணை சூழும் புகலூரில். (உகஎ)

அத்திரு மூதூர் மேவிய நாவுக் கரசுந்தஞ்
சித்த நிறைந்தே யன்பு தெவிட்டுந் தெளிவெள்ள
மொய்த்திழி தாரைக் கண்பொழி நீர்மெய்ம் முழுதாரப்
பைத்தலை நாகப் பூணணி வாரைப் பணிவுற்றார். (உகஅ)

தேவர் பிரானைத் தென்புக லூர்மன் னியதேனைப்
பாவியன் மாலைச் செந்தமிழ் பாடிப் பரிவோடு
மேவிய காலந் தோறும் விருப்பிற் கும்பிட்டே
யோவுத லோவு திருப்பணி செப்தங் குறைகின்றார். (உகக)

சீர்தரு செங்காட் டங்குடி நீடுந் திருநள்ளா
ரூர்தரு சோலை சூழ்தரு சாந்தை யயவந்தி
வார்திகழ் மென்முலை யாளொரு பாகன் றிருமருக
லேர்தரு மன்பாற் சென்று வணங்கி யின்புற்றார். (உசo)

அப்படி யின்னுள் சென்றபி னூரர் நகராளுந்
துப்புறழ் வேணிக் கண்ணுத லாரைத் தொழுதிப்பான்
மெய்ப்பொருண் ஞானம் பெற்றவர் வேணு புரத்துதங்கள்
பொற்புரி முந்நூன் மார்பரும் வந்தார் புகலூரில். (உசக)

வே று.

பிள்ளேயா ரெழுந்தருளப் பெருவிருப்பால் வாங்கிச
ருள்ளமகிழ்ந் தெதிர்கொண்டங் குடனுறையு ளாளின்கண்
வள்ளலார் சிறுத்தொண்டர் மற்றவர்பா லெழுந்தருள
வெள்ளருஞ்சீர் நீலநக்கர் தாமுமெழுந் தருளினார். (உசஉ)

ஆங்கணைய மவர்களுட னப்பதியி லந்தணரா
மோங்குபுகழ் முருகனார் திருமடத்தி லுடனுகைப்
பாங்கில்வருஞ் சீரடியார் பலருமுடன் பயில்கேண்மை
நீங்கரிய திருத்தொண்டி னிலேபுணர்ந்து நிகழ்கின்றார். (உசஎ)

திருப்பதிகச் செந்தமிழின் நிறம்போற்றி மகிழ்வுற்றுப்
பொருப்பரையன் மடப்பாவை யிடப்பாகர் பொற்சுளில்
விருப்புடைய திருத்தொண்டர் பெருமையினை விரித்துரைத்தங்
கொருப்படுசிந் தையினுக்க ளுடனுறைவின் பயன்பெற்றார். (உசச)

அந்நாளிற் றமக்கேற்ற திருத்தொண்டி னெறியாற்றி
மின்னுர்செஞ் சடையண்ணல் மேவுபதி யெனேப்பலவு
முன்னுகச் சென்றேத்தி முதல்வன்றா டொழுவதற்குப்
பொன்னுரு மணிமாடப் பூம்புகலூர் தொழுதகன்றார். (உசடி)

திருநீல நக்கடிகள் சிறுத்தொண்டர் முருகனார்
பெருநீர்மை யடியார்கள் பிறரும்விடை கொண்டேக
வொருநீர்மை மனத்துடைய பிள்ளேயா ருடனரசும்
வருநீர்செஞ் சடைக்கரந்தார் திருவம்பர் வணங்கினார். (உசஉ)

செங்குமுத மலர்வாவித் திருக்கடவூ ரணைந்தருளிப்
பொங்கியவெங் கூற்றடர்த்த பொன்னடிக டொழுதேத்திக்
குங்குலியக் கலயனார் திருமடத்திற் குறைவறுப்ப
வங்கவர்பாற் சிவனடியா ருடனமுது செய்தார்கள். (௨௯௯)

சீர்மன்னுந் திருக்கடவூர்த் திருமயா னமும்வணங்கி
யேர்மன்னு மின்னிசைப்பாப் பலபாடி யினிதமர்ந்து
கார்மன்னுங் கறைக்கண்டர் கழலிணைக டொழுதகன்று
தேர்மன்னு மணிவீதித் திருவாக்கூர் சென்றணைந்தார். (௨௯௮)

சார்ந்தார்தம் புகலிடத்தைத் தான்முன்றி மாடத்துக்
கூர்ந்தார்வ முறப்பணிந்து கோதிறமிழ்த் தொடைபுனைந்து
வார்ந்தாடுஞ் சடையார்தம் பதிபலவும் வணங்கியுடன்
சேர்ந்தார்க டம்பெருமான் றிருவீழி மிழலையினை. (௨௯௯)

தே வா.

வீழி மிழலை வர்த்தனைய மேவு நாவுக் கரசினையுங்
காழி ஞானப் பிள்ளையையுங் கலந்த வுள்ளக் காதலினு
லாழி வலவ னறியாத வடியா ரடியா ரவர்களுடன்
வாழி மறையோ ரெதிர்கொண்டு வணங்க வணங்கி யுள்புக்கார். (௩00)

மாட வீதி யலங்கரித்து மறையோர் வாயின் மணிவிளக்கு
நீடுகதலி தழைப்பூக நிரைத்து நிறைபொற் குடமெடுத்துப்
பீடு பெருகும் வாகீசர் பிள்ளையாருந் தொண்டர்களுங்
கூட மகிழ்ந்து விண்ணிழிந்த கோயில் வாயில் சென்றணைந்தார். (௩0௧)

சென்று புகுந்து திருவீழி மிழலை யமர்ந்த செங்கனகக்
குன்ற மில்லி யார்மகிழ்ந்த கோயில் வலமா வந்துதிரு
முன்றில் வணங்கி முன்னெய்தி முக்கட் செக்கர்ச் சடைமவுலி
வென்றி விடையார் சேவடிக்கீழ் விழுந்தா ரெழுந்தார் விம்மினுர். (௩0௨)

கைகள் குவித்துக் கழல்போற்றிக் கலந்த வன்பு கரைந்துருக
மெய்யில் வழியுங் கண்ணருவி விரவப் பரவுஞ் சொன்மாலை
செய்ய சடையார் தமைச்சேரார் தீங்கு நெறிசேர் கின்றுரென்
றுய்யு நெறித்தாண் டகமொழிந்தங் கொழியாக் காதல் சிறந்தோங்க. (௩0௩)

முன்னு ளயனுந் திருமாலு முடியு முதலுங் காணுத
பொன்னுர் மேனி மணிவெற்பைப் பூநீர் மிழலை யினிற்போற்றிப்
பன்னுள் பிரியா நிலைமையினுற் பயிலக் கும்பிட் டிருப்பாரா
யந்நாண் மறையோர் திருப்பதியி லிருந்தார் மெய்மை யருந்தவர்கள். (௩0௪)

சீரின் விளங்குந் திருத்தொண்ட ரிருந்து சிலநாள் சென்றதற்பின்
மாரி சுருங்கி வளம்பொன்னி நதியும் பருவ மாறுதலு
நீரி னியன்ற வுணவருகி நிலவும் பலமன் னுயிர்க ளெல்லாம்
பாரின் மலிந்த விலம்பாட்டிற் படர்கூர் வறுமை பரந்ததால்.

வைய மெங்கும் வற்கடமாய்ச் செல்ல வுலகோர் வருத்தமுற
நையு நாளிற் பிள்ளையார் தமக்கு நாவுக் கரசினுக்குங்
கையின் மானு மழுவுமுடன் காணக் கனவி லெழுந்தருளிச்
செய்ய சடையார் திருவீழி மிழலை யுடையா ரருள்செய்வார். (௩0௫)

கால நிலைமை யாலுங்கள் கருத்தில் வாட்ட முறீரெனினு
மேல வும்மை வழிபடுவார்க் களிக்க வளிக்கின் றேமென்று
கோலங் காண வெழுந்தருளிக் குலவும் பெருமை யிருகருக்கு
ஞால மறியப் படிக்காசு வைத்தார் மிழலை நாயகனார். (உதிஎ)

விண்ணின் நிழிந்த விமானத்தின் கிழக்கு மேற்கும் பீடத்தி
லண்ணல் புகலி யாண்டகையார் தமக்கு மாண்ட வரசினுக்கு
நண்ணு நாள்க டொறுங்காசு படிவைத் தருள நானிலத்தி
லெண்ணி லடியா ருடனமுது செய்தங் கிருந்தா ரிருவர்களும். (உதிஅ)

அல்லார் கண்டத் தண்டர்பிரா னருளாற் பெற்ற படிக்காசு
பல்லா றியன்ற வளம்பெருகப் பரம னடியா ராளுர்க
ளெல்லா மெய்தி யுண்கவென விரண்டு பொழுதும் பறைங்கழ்த்திச்
சொல்லாற் சாற்றிச் சோறிட்டார் துயர்கூர் வறுமை தொலைத்திட்டார். (உதிகூ)

ஈசர் மிழலை யிறையவர்பா லிமையப் பாவை திருமுலைப்பா
றேச முய்ய வுண்டவர்தாந் திருமா மகளு ராதலினற்
காசு வாசி யுடன்பெற்றுர் கைத்தொண் டாரு மடிமையினுல்
வாசி யில்லாக் காசுபடி பெற்று வந்தார் வாசர். (உகூ0)

ஆறு சடைமே லணிந்தருளு மண்ணல் வைத்த படிக்காசா
லீறி லாத பொருளுடைய விருவ ருடைய திருமடங்கள்
சோறு நாளுந் தொண்டர்மகிழ்ந் துண்ண வுண்ணத் தொலையாதே
யேறு பெருமை புவிபோற்ற வின்புற் றிருக்கு மந்நாளில். (உகூக)

காலந் தவறு தீர்ந்தெங்கும் கலிவான் பொழிந்த புனல்கலந்து
ஞால மெல்லாங் குளிர்தூங்கி யுணவு பெருகி நலஞ்சிறப்ப
மூல வன்ப நிருவர்களு மொழிமா லகளும் பலசாத்தி
நீல கண்ட நுறைபதிகள் பிற· ம் வணங்க நினைவுற்றார். (உகூஉ)

வாய்ந்த மிழலை மாமணியை வணங்கிப் பிரியா விடைகொண்டு
பூந்தண் புனல்சூழ் வாஞ்சியத்தைப் போற்றிப் புனிதர் வாழ்பதிக
ளேய்ந்த வன்பி ஞலிறைஞ்சி யிசைவண் டமிழ்கள் புனைந்துபோய்ச
சேர்ந்தார் செல்வத் திருமறைக்கா டெல்லை யில்லாச் சீர்த்தியினுர். (உகூங)

மன்றல் விரவு மலர்ப்புன்னை மணஞ்சூழ் சோலை யுப்பளத்தின்
முன்றி றேறுஞ் சிறுமடவார் முத்தங் கொழிக்கு மறைக்காட்டுக்
குன்ற வில்லி யார்மகிழ்ந்த கோயில் புகுந்து வலங்கொண்டு
சென்று சேர்ந்தார் தென்புகலிக் கோவு மரசுந் திருமுன்பு. (உகூச)

பரவை யோதக் கழிக்கானற் பாங்கு நெருங்கு மப்பதியி
லரவச் சடையர் தணஞரை யகில மறைக ளர்ச்சனைசெய்
தூரவக் கதவந் திருக்காப்புச் செய்த வந்நாண் முதலிந்நாள்
வரையு மடைத்தே நிற்கின்ற மணிநீள் வாயில் வணங்குவார். (உகஇ)

தொல்லை வேதந் திருக்காப்புச் செய்த வாயிற் றொடர்வகற்ற
வல்ல வன்ப ரணையாமை மருங்கோர் வாயில் வழியெய்தி
யல்ல நீர்ப்பார் தமையருச்சிப் பார்க டொழுவா ராம்படிகண்
டெல்லை யில்லாப் பெரும்புகழா ரிதனை யங்குக் கேட்டறிந்தார். (உகஈ)

ஆங்கப் பரிசை யறிந்தருளி யாழித் தோணி புரத்தரச
ரோங்கு வேத மருச்சனைசெ யும்பர் பிரானை யுள்புக்குத்
தேங்கா திருவோ நேரிறைஞ்சத் திருமுன் கதவந் திருக்காப்பு
நீங்கப் பாடி மப்பரென நீடுந் திருநா வுக்கரசர். (உசுஎ)

உண்ணீர் மையிலுறற் பிள்ளேயா ருரைசெய் தருள வதலுலே
பண்ணினேரு மொழியாளென் றெடுத்துப் பாடப் பயன்றுய்ப்பான்
றெண்ணீ ரணிந்தார் திருக்காப்பு நீக்கத் தாழ்க்கத் திருக்கடைக்காப்
பெண்ணீ ரிரக்க மொன்றில்லீ ரென்று பாடி யிறைஞ்சுதலும். (உசுஅ)

வேத வனத்தின் மெய்ப்பொருளி னருளால் விளங்கு மணிக்கதவங்
காத லன்பர் முன்புதிருக் காப்பு நீங்கக் கலிமொழிக்கு
நாதர் ஞான முனிவருடன் றெழுது வீழ்ந்தார் ஞாலத்து
ளோத வொலியின் பிக்கெழுந்த தும்ப ராரப்பு மறையொலியும். (உசுக)

அன்ப ரீட்டங் களிசிறப்ப வாண்ட வரசுஞ் சிவக்கன்று
மின்ப வெள்ளத் திடைமூழ்கி யெழுந்துள் புகுந்து தம்பெருமான்
முன்பு பணிந்து போற்றிசைத்துப் பரவி மொழிமா லேகள்பாடி
யென்பு கரைய வுள்ளுருகி யிறைஞ்சி யரிதிற் புறத்தணைந்தார். (உஎ0)

புறம்பு நின்று வாசீசர் புனித ருருளா லிக்கதவந்
திறந்து மடைத்துஞ் செல்லுநெறி திருந்த மலேயா டிருமுலேயிற்
கறந்த ஞானங் குழைத்தமுது செய்த புகலிக் கவுணியரை
நிறைந்த கதவ மடைக்கும்வகை நீரும் பாடி யருளுமென. (உஎக)

சண்பை யாளுந் தமிழ்விரகர் தாமுந் திருநா வுக்கரசர்
பண்பின் மொழிந்த வுரைகொண்டு பதிகம் பாடி மவ்வளலிற்
கண்பொற் பமைந்த நுதற்காள கண்ட ருளாற் கடிதுடனே
நிண்பொற் கதவந் திருக்காப்புச் செய்த தெடுத்த திருப்பாட்டின். (உஎஉ)

அதுகண் டுடைய பிள்ளேயார் தாமு மாண்ட வரசுமகிழ்ந்
திதுசம் பெருமா னருள்செய்யப் பெற்றே மென்றங் கிறைஞ்சியபின்
பதிக நிரம்பப் பிள்ளேயார் பாடித் தொழுது பணிவுற்று
ரெதிர்பொற் றிருவா யிலின்வழக்க மென்று நிகழ்ச்சி யெய்தியதால். (உஎசு)

அங்கு நிகழ்ந்த வச்செயல்கண் டடியா ரெல்லா மதிசயித்துப்
பொங்கு புளக மெய்திடமெய் பொழியுங் கண்ணீர் பரந்திழிய
வெங்கு நிகரொன் றில்லாத வீருவர் பாத மிறைஞ்சினர்
நங்கள் புகலிப் பெருந்தகையு மரசு மடத்தி னண்ணியபின். (உஎச)

அரிதிற் றிறக்கத் தாம்பாட வடைக்க வவர்பா டியவெளிமை
கருதி நம்பர் திருவுள்ள மறியா தயர்ந்தே னெனக்கவன்று
பெரிது மஞ்சித் திருமடத்தி லொருபா லணைந்து பேழ்கணித்து
மருவு முணர்விற் றுயில்கொண்டார் வாய்மை திறம்பா வாசீசர். (உஎஇ)

மன்னுஞ் செல்வ மறைக்காட்டு மணியின் பாத மனத்தின்க
ணுன்னித் துயிலும் பொழுதின்க ணுமையோர் பாக முடையவர்தாம்
பொன்னின் மேனி வெண்ணீறு பூணுந் கோலப் பொலிவினுநிர்
துன்னி யவர்க்கு வாய்மூரி லிருப்போந் தொடர வாவென்றூர். (உ'ஈ)

போத நிகழ வாவென்று போலு ரென்கொ லெனப்பாடி
மீதெம் பெருமா னருளாகில் யானும் போவே னெனறெழுந்து
வேத வனத்தைப் புறமிட்டு வீரைந்து போக வவர்முன்னே
யாதி மூர்த்தி முன்காட்டு மவ்வே டத்தா லெழுந்தருள. (உஎஅ)

சோர் பதியி னின்றெழுந்து செல்லுந் திருநா வுக்கரச
ராரா வன்பி லாரமுத முண்ண வெய்தா வாறேபோ
னீரார் சடையா ரெழுந்தருள நெடிது பின்பு செல்லுமவர்
பேரா ளரைமுன் னெடர்ந்தணையப் பெறுவா செய்தப் பெற்றிலால். (உஎஆ)

அன்ன வண்ண மெழுந்தருளி யணித்தே காட்சி கொடுப்பார்போற்
பொன்னின் கோயி லொன்றெதிரே காட்டி யதனுட் புக்கருளத்
தன்னுந் தொண்ட ரம்மருங்கு விரைந்து தொடரப் போந்தபடி
மன்னும் புகலி வள்ளலார் தாமுங் கேட்டு வந்தணைந்தார். (உஎக)

அழைத்துக் கொடுபோந் தணியார்போற் காட்டி மறைந்தா ரெனவயர்ந்து
பிழைத்துச் செவ்வி யறியாதே திறப்பித் தேனுக் கேயல்லா
லுழைத்தா மொளித்தாற் கதவந்தொண் டுறைக்கப் பாடி யடைப்பித்த
தழைத்த மொழியா ருப்பாலார் தாமிங் கெப்பான் மறைவதென. (உஅ0)

மாட நீடு திருப்புகலி மன்ன ரவர்க்கு மாலயனு
நேடி யின்னங் காணுதார் நேரே காட்சி கொடுத்தருள
வாடல் கண்டு பணிந்தேத்தி யரசுங் காணக் காட்டுதலும்
பாட வடியா ரென்றெடுத்துப் பரமர் தம்மைப் பாடினார். (உ அக)

பாடுந் தமிழ்மா லைகள் கொண்டு பரமர் தாமு மெழுந்தருள
நீடுந் திருவாய் மூரடைந்து நிலவுங் கோயில் வலஞ்செய்து
சூடும் பிறையார் பெருந்தொண்டர் தொழுது போற்றித் துதிசெய்து
நாடுங் காதல் வளர்ந்தோங்க நயந்த நகரி னுடனுறைந்தார். (உஅஉ)

ஆண்ட வரசும் பிள்ளேயா ருடனே யங்க ணினிதமர்ந்து
பூண்ட காதல் பொங்கியெழ வாய்மூ ரடிக ளடிபோற்றி
மூண்ட வன்பின் மொழிமாலே சாத்தி ஞான முனிவரொடு
மீண்டு வந்து திருமறைக்காட் டெய்தி விமலர் தாள்பணிந்தார். (உஅக)

ஆதி முதல்வர் தமைப்பணிந்தங் கான பணிசெய் தமருகாட்
சீத மதிவெண் குடைவளவர் மகளார் தென்னன் றேவியாங்
கோதில் குணத்துப் பாண்டிமா தேவி யார்முன் குலச்சிறையார்
போத விட்டார் சிலர்வந்தார் புகலி வேந்தர் தமைக்காண. (உஅச)

வந்து சிவனர் திருமறைக்கா டெய்தி மன்னு வேணுபுரி
யந்த ணாளர் தமக்கறிவித் தவர்பா லெய்தி யடிவணங்கச்
சிந்தை மகிழ்ந்து நீதிதின்மை வினவத் தீங்கு முளவாமோ
விந்த வுலக முயவந்தீ ரிருதா ணினேவார்க் கென்றுரைப்பார். (உஅடி)

சைவ நெறிவை திகநிற்கச் சமழக்கு நெறியைத் தவமென்னும்
பொய்வல் லமணர் செயறன்னேப் பொறுக்க கில்லோ மெனக்கேட்டே
யவ்வன் நெறிலோர் செயன்மாற்றி யாதி சைவ நெறிவிளங்கத்
தெய்வ நீறு தினைந்தெழுந்தார் சீர்கொள் சண்பைத் திருமறையோர். (உஅக)

ஆய பொழுது திருநாவுக் கரசு புகலி யாண்டகைக்குக்
காய மாசு பெருக்கியுழல் கலகி யமணர் கடவீனைசெய்
மாயை சால மிகவல்லா ரவர்மற் றென்னை முன்செய்த
தீய தொழிலும் பலகெட்டேன் செல்ல விசையேன் யானென்றார். (உஅஎ)

என்று கூற வெல்லையிலா நீறு போற்று மிருவரையுஞ்
சென்று காணுங் கருத்துடையே னங்குத் தீங்கு புரியமணர்
நின்ற நிலைமை யழிவித்துச் சைவ நெறிபா ரித்தன்றி
யொன்றுஞ் செய்யே னுனையும தென்ரு ருடைய பிள்ளையார். (உஅஅ)

போமா துணிந்து நீரங்குப் போகப் போதா வவ்வமணர்
தீமா யையினை யானேபோய்ச் சிதைத்து வருகின் றேனென்ன
வாமா றெல்லா முரைத்தவரை மறுக்க மாட்டா தரசிருப்பத்
தாமா தாவாற் றமிழ்நாட்டிற் போனுஞ் ஞானத் தலைவனுர். (உஅக)

வேணு புரக்கோ னெழுந்தருள விடைகொண் டிருந்த வாசிசர்
பூணு மன்பான் மறைக்காட்டிற் புனிதர் தம்மைப் போற்றிசைத்துப்
பேணி யிருந்தங் குறையுநாட் பெயர்வார் வீழி மிழலையமர்
தாணு வின்றன் செய்யகழன் மீண்டுஞ் சார நினைக்கின்ரூர். (உஉ0)

சோலை மறைக்காட் டமர்ந்தருளுஞ் சோதி யருள்பெற் றகன்றுபோய்
வேலை விடமுண் டவர்வீழி மிழலை மீண்டுஞ் செல்வனென
ஞால நிகழ்ந்த நாகைக்கா ரோணம் பிறவுந் தாம்பணிந்து
சாலு மொழிவண் டமிழ்பாடித் தலைவர் மிழலை வந்தடைந்தார். (உகக)

வீழி மிழலை தனைப்பணிந்து வேத முதல்வர் தாமிருப்ப
வாழி வலமேந் தியவரியா லாகா சத்தி னின்றிழிந்த
வாழி மலர்ந்த கோயிறனின் மன்னும் பொருளைப் போற்றிசைத்துத்
தாழு நாளிற் பிறபதியும் பணியுங் காத லிலெயிற்பார். (உகஉ)

பூவிற் பொலியும் புனற்பொன்னிக் கரைபோய்ப் பணிவார் பொற்பமைந்
நாவுக் கருளு மாவதெண் ணெறையார் பாத மணைந்திறைஞ்சி
நாவுக் கரசர் ஞானபோ னகர்க்குச் செம்பொ னுயிரமும்
பாவுக் களித்த திறம்போற்றிப் போந்து பிறவும் பணிகின்ரூர். (உகங)

செய்ய சடையார் பழையாறை யெய்த வதனிற் செல்பொழுதின்
மைய லமணர் மறைக்கவட தளியின் மன்னுஞ் சிவனுரைக்
கைகள் கூப்பித் தொழுதருளக் கண்ட வாற்ரு லமணர்கடம்
பொய்கொள் விமான மெனக்கேட்டுப் பொரூத வுள்ள மிகப்புழுங்கி. (உகச)

அந்த விமானந் தனக்கருகா வாங்கோ ரிடத்தின் பாங்கெய்திக்
கந்தமலருங் கடிக்கொன்றை முடியார் செய்ய கழலுன்னி
மந்த வமணர் வஞ்சனையான் மறைத்த வஞ்ச மொழித்தருளிப்
பந்தங் கொண்ட குண்டர்திறம் பாற்று மென்று பணிந்திருந்தார். (உகஙி)

வண்ணங் கண்டு நானும்மை வணங்கி யன்றிப் போகேனென்
றெண்ண முடிக்கும் வாசீச ரிருந்தா ரமுது செய்யாதே
யண்ணல் ரு மதுவுணர்ந்தங் கரசு தம்மைப் பணிவதற்குத்
தின்ன மாக மன்னனுக்குக் கனவி லருளிச் செய்கின்ரூர். (உகசு)

அறிவி லமணர் நமைமறைப்ப விருந்தோ மென்றங் கடையாளக்
குறிக ளறியச் செய்தருளி நம்மை யரசு கும்பிடுவா
னெறியி லமணர் தமையழித்து நீக்கிப் போக்கென் றருள்புரியச்
செறிவி லறிவுற் றெழுந்தவனுஞ் செங்கை தலைமேற் குவித்திறைஞ்சி. (உகள)

கண்ட வியப்பு மந்திரிகட் கியம்பிக் கூடக் கடிதெய்தி
யண்டர் பெருமா னருள்செய்த வடையா ளத்தின் வழிகண்டு
குண்டர் செய்த வஞ்சனையைக் குறித்து வேந்தன் குலவுபெருந்
தொண்டர் தம்மை யடிவணங்கித் தொக்க வமணர் தூரறுத்தான். (உகஅ)

ஆனை யினத்திற் றுகைப்புண்ட வமண யிரமு மாய்ந்ததற்பின்
மேன்மை யரச னீசர்க்கு விமான மாக்கி விளக்கியபி
னனை வழிபாட் டார்ச்சனைக்கு நியம்த மெல்லா மமைத்திறைஞ்ச
ஞான வரசும் புக்கிறைஞ்சி நாதர் முன்பு போற்றுகார். (உகக)

தலையின் மயிரைப் பறித்துண்ணுஞ் சாதி யமணர் மறைத்தாலு
நிலையி லாதார் நிலைமையினுன் மறைக்க வொண்ணு மோவென்னும்
வினையில் வாய்மைக் குறுந்தொகைகள் விளம்பிப் புறம்போக் தங்கமர்ந்தே
யிலைகொள் சூலப படையார்சே ரிடங்கள் பிறவுந் தொழுதணைவார். (உ00)

பொங்கு புனலார் பொன்னியினி விரண்டு கரையும் பொருவிடையார்
தங்கு மிடங்கள் புக்கிறைஞ்சித் தாழ்மா லகளுஞ் சாத்திப்போ
யெங்கு நிறைந்த புகழாள ரீறிலெறுண்ட ரெதிர்கொள்ளச்
செங்கண் விடையார் திருவானைக் காவின் மருங்கு சென்றணைந்தார். (உ0க)

சிலந்திக் கருளுங் கழல்வணங்கிச் செஞ்சொன் மாலை பலபாடி
யிலங்கு சடையா ரெறும்பியூர் மலையு மிறைஞ்சிப் பாடியபின்
மலர்ந்த சோதி திருச்சிராப ளளியு மலையுங் கற்குடியு
நலங்கொள் செல்வத் திருப்பராய்த் துறையுந் தொழுவா னண்ணினார். (உ0உ)

மற்றப் பதிகண் முதலான மருங்குள் ளனவுங் கைதொழுது
பொற்புற் றமைந்த திருப்பணிகள் செய்து பகிகங் கொடுபோற்றி
யுற்ற வருளாற் காவிரியை யேறி யொன்னூர் புரமெரியச
செற்ற சிலையார் திருப்பைஞ்ஞீ லியினைச் சென்று சேர்கின்றார். (உ0ங)

வழிபோம் பொழுது மிகவினைத்து வருத்த முறநீர் வேட்கையொடு
மழிவாம் பசிவந் தணைந்திடவு மதற்குச் சித்த மலையாதே
மொழிவேந் தருமுன் னெழுந்தருள முருகார் சோலைப் பைஞ்ஞீலி
விழியேந் தியநெற் றியினூர்தந் தொண்டர் வருத்த மீட்பாராய். (உ0ச)

காவுங் குளமு முன்சமைத்துக் காட்டி வழிபோங் கருத்தினுன்
மேவுந் திருநீற் றந்தணராய் விரும்பும் பொதிசோ றுங்கொண்டு
நாவின் றனிமன் னவர்க்கெதிரே நண்ணி யிருந்தார் விண்ணின்மேற்
ரூவும் புள்ளு மண்கிழிக்குந் தனியே னமுங்காண் பரியவர்தாம். (உ0ஙி)

அங்க ணிருந்த மறையவர்பா லாண்ட வரசு மெழுந்தருள
வெங்கண் விடைவே தியர்நோக்கி மிகவும் வழிவந் தினைத்திருந்தீ
ரிங்கென் பாலே பொதிசோறுண் டிதனே புண்டு தண்ணீரிப்
பொங்கு குளத்திற் குடித்தினைப்புப் போக்கிப் போலீ ரெனப்புகன்றார். (உ0ஙு)

நண்ணுந் திருநா வுக்கரசர் நம்ப ரருளென் றறிந்தார்போ
லுண்ணு மென்று திருமறையோ ருரைத்துப் பொதிசோ றவித்தலுமே
யெண்ண றினையா தெதிர்வாங்கி யினிதா வமுது செய்தினிய
தண்ணீ ரமுது செய்தருளித் தாய்மை செய்து தளர்வொழிந்தார். (கூ0ஏ)

எய்ப்பு நீங்கி நின்றவரை நோக்கி யிருந்த மறையவனு
ரப்பா லெங்கு நீர்போவ தென்று ரரசு மவர்க்கெதிரே
செப்பு வார்யான் றிருப்பைஞ்ஞீ லிக்குப் போவ தென்றுரைத்தா
ரொப்பி லாரும் யானங்குப் போகின் றேனென் றுடன்போந்தார். (கூ0அ)

கூட வந்து மறையவனுர் திருப்பைஞ் ஞீலி குறுகியிட
வேட மவர்முன் மறைத்தலுமே மெய்மைத் தவத்து மேலவர்தா
மாட லுகந்தா ரடியேனைப் பொருளா வகித்த கருணையெனப்
பாடல் புரிந்து விழுந்தெழுந்து கண்ணீர் மாரி பயில்வித்தார். (கூ0க)

பைஞ்ஞீ லியினி லமர்ந்தருளும் பரமா கோயில் சென்றெய்தி
மைஞ்ஞீ லத்து மணிகண்டர் தம்மை வணங்கி மகிழ்கிறந்து
மெய்ஞ்ஞீர் மையினி லன்புருக விரும்புந் தமிழ்மா லேகள்பாடிக்
கைஞ்ஞீ டியதந் திருத்தொண்டு செய்து காத லுடனிருந்தார். (கூகo)

நாதர் மருவுந் திருமலைக ணுமிம் பதிகள் பலவுகவு
காதல் கூரச் சென்றிறைஞ்சிக் கலந்த விசைவண் டமிழ்பாடி
மாதொர் பாக ரருளாலே வடபா னேக்கி வாகீச
ராதி தேவ ரமர்ந்திரு வண்ணு மலையை நண்ணினுர். (கூகக)

செங்கண் விடையார் திருவண்ணு மலையைத் தொழுது வலங்கொண்டு
துங்க வரையின் மிசையேறித் தொண்டர் தொழும்புக் கெதிர்நிற்கு
மங்க ணரசைப் பணிந்தெழுந்து நினைத்துத் திருநா வுக்கரசர்
தங்கு பிறப்பே வீட்டினுக்கு மேலாம் பெருமை சாதித்தார். (கூகஉ)

அண்ணு மலைமே லணிமலையை யாரா வன்பி னடியவர்தங்
கண்ணு ரமுதை விண்ணோரைக காகக கடலில் வந்தெழுந்த
வுண்ணு நஞ்ச முண்டானைக் கும்பிட் டிருகுஞ் சிந்தையுடன
பண்ணுர் பதிகத் தமிழ்பாடிப் பணிந்து பரவிப் பணிசெய்தார். (கூகங)

பணியார் வேணிச் சிவபெருமான் பாதம் போற்றிப பணிசெயுநாண்
மணியார் கண்டத் தெம்பெருமான் மண்மேன் மகிழு மிடமெங்குந்
தணியாக் காத லுடன்சென்று வணங்கித் தக்க பணிசெய்வா
ரணியார் தொண்டைத் திருநாட்டி லருளா லணைவா ராயினுர். (கூகச)

காதல் செய்யுங் கருத்தினுடன் காடு மலையுங் கான்யாறுஞ்
சூத மலிதண் பணைப்பதிகள் பலவுங் கடந்து சொல்லினுக்கு
நாதர் போன்து பெருந்தொண்டை நன்னாட் டெய்தி முன்னுகச்
சீத மலர்மென் சோலைசூழ் திருவோத் தூரிற் சென்றடைந்தார். (கூகஙி)

கெக்கர்ச் சடையார் திருவோத்தூர்த் தேவர் பிரானுர் தங்கோயில்
புக்கு வலங்கொண் டெதிரிறைஞ்சிப் போற்றிக் கண்கள் புனல்பொழிய
மூக்கட் பிரானை விரும்புமொழித் திருத்தாண் டகங்கண் முதலாகத்
தக்க மொழிமா லேகள்சாத்திச் சார்ந்து பணிசெய் தொழுகுவார் (கூகஞ)

செய்ய வையர் திருவோத்தூ ரேத்திப் போந்து செழும்புவன
முய்ய நஞ்சுண் டருளுமவ ருறையும் பதிகள் பலவணங்கித்
தைய றழுவக் குழந்தைபிரான் றங்குந் தெய்வப் பதியென்று
வைய முழுதுந் தொழுதேத்து மதில்சூழ் காஞ்சி மருங்கணைந்தார். (நகஎ)

ஞால முய்யத் திருவதிகை நம்பர் தம்பே ரருளினூற்
சூல மடித்து முன்னுண்ட தொண்டர் வரப்பெற் றேமென்று
காலை மலருங் கமலம்போற் காஞ்சி வாணர் முகமெல்லாஞ்
சால மலர்ந்து களிசிறப்பத் தழைத்த மனங்க டாங்குவார். (நகஅ)

மாட வீதி மருங்கெல்லா மணிவா யில்களிற் றேரணங்க
ணீடு கதலி யுடன்கமுகு நிறைத்து நிறைபொற் குடந்தீபந்
தோடு குலவு மலர்மாலை சூழ்ந்த வாசப் பந்தர்களு
மாடு கொடியு முடனெடுத்துங் கணிசீர் காஞ்சி யலங்கரித்தார். (நகக)

தொண்ட ரீண்டி யெதிர்கொள்ள வெழுந்து சொல்லுக் கரசர்பாற்
கொண்ட வேட்கைப் பொலிவினெடுங் குலவும் வீதி பணிசெய்யு
மண்ட றறிதற் கரியதிரு வலகு முதலா மவையேற்றி
யிண்டை புனைந்த சடைமுடியார்க் கன்பர் தம்மை யெதிர்கொண்டார். (நஉ0)

ஏதிர்கொண் டிறைஞ்சுஞ் சீரடியார் தம்மை யிறைஞ்சி யெழுந்தருளி
மதில்கொண் டணிந்த காஞ்சிநகர் மறுகுட் போந்து வானநதி
சூதிகொண் டெழுந்த சடைக்கம்பர் செம்பொற் கோயில் குறுகினை
ரதிர்கொண் டலேநேர் மணி விடற்றூ ராண்ட திருநா வுக்கரசர். (நஉக)

திருவா யிலினைப் பணிந்தெழுந்து செல்வத் திருமுன் றிலையணைந்து
கருவார் கச்சி யேகம்பர் கனக மணிமா விகைசூழ்ந்து
வருவார் செம்பொன் மலைவல்லி தழுவக் குழைந்த மணிமேனிப
பெருவாழ் வினைமுன் கண்டிறைஞ்சிப பேரா வன்பு பெருக்கினார். (நஉஉ)

வார்ந்து சொரிந்த கண்ணருவி மயிர்க்கா றோறும் வரும்புளக
மார்ந்த மேனிப் புறம்பலைப வன்பு கரைந்தெதன் புள்ளலைப்பச்
சேர்ந்த நயனப் பயன்பெற்றுத் திளைப்பத் திருவே கம்பர்தமை
நேர்ந்த மனத்தி லுறவைத்து மீமேம் பதிகம் பாடுவார். (நஉந)

ஏ வது.

கரவாடும் வன்னெஞ்சர்க் கரியாரே யென்றெடுத்துப்
பரவாய சொன்மாலைத் திருப்பதிகம் பாடியபின்
வீரவார்தம் புரமெரித்த விடையவனூர் வெள்ளெயிற்றி
னரவாரம் புனைந்தவர்தந் திருமுன்றிற் புறத்தணைந்தார். (நஉச)

கையார்ந்த திருத்தொண்டு கழியாமிருங் காதலொடுஞ்
செய்யாரின் றேறெல்லாச் செந்தமிழ்மா லையும்பாடி
மையார்ந்த மிடற்றர்திரு மயானத்தை வலங்கொண்டு
மெய்யார்வ முறத்தொழுது விருபபினெடு மேவுவார். (நஉஇ)

சீர்வளரு மதிற்கச்சி நகர்த்திருமேற் றளிமுதலா
நீர்வளருஞ் சடையவர்தா நிலவியுறை யாலயங்க
ளார்வமுறப் பணிந்தேத்தி யாய்ந்ததமிழ்ச் சொன்மலராற்
சார்வுறுமா லகைள்சாத்தித் தகுந்தொண்டு செய்திருந்தார். (நஉக)

அங்ஙகரி லவ்வண்ண மமர்ந்துறைபு நாளின்கண்
மன்னுதிரு மாற்பேறு வந்தணைந்து தமிழ்பாடிச்
சென்னிமிசை மதிபுனைவார் பதிபலவுஞ் சென்றிறைஞ்சித்
தின்னனூர் காஞ்சியினைத் தொடர்ந்தபெருங் காதலினால். (கூஉஎ)

ஏகம்பன் காணவெனென் னெண்ணைத்தா னெனப்போற்றிப்
பாகம்பெண் ணுருவானைப் பைங்கண்விடை யுயர்த்தானை
நாகம்பூ ணுகந்தானை நலம்பெருகுந் திருநீற்றி
னுகந்தோ யணியானை யணைந்துபணிந் தின்புற்றார். (கூஉஅ)

திருக்கச்சி யேகம்பம் பணிந்தேத்தித் திங்களார்
நெருக்கச்செஞ் சடைக்கணிந்தார் நீபெதி தொழுதினைவார்
வருக்கைச்செஞ் சுளைபொழிதேன் வயல்விளக்கு நாட்டிடைப்போய்
பருக்கைத்திண் களிற்றுரியார் கழுக்குன்றின் பாங்கணைந்தார். (கூஉக)

நீடுதிருக் கழுக்குன்றி னிருத்தனார் கழல்வணங்கிப்
பாடுதமிழ்த் தொடைபுனைந்து பாங்குபல பதிகளிலுஞ்
சூடுமிளம் பிறைமுடியார் தமைத்தொழுது போற்றிப்போய்
மாடுபெருங் கடலுடுத்த வான்மியூர் மருங்கணைந்தார். (கூஉ0)

திருவான்மி யூர்மருந்தைச் சேர்ந்துபணிந் தன்பினெடும்
பெருவாய்மைத் தமிழ்பாடி யம்மருங்கு பிறப்பறுத்துத்
தருவார்தங் கோயில்பல சார்ந்திறைஞ்சித் தமிழ்வேந்தர்
மருவாரு மலர்ச்சோலை மயிலாப்பூர் வந்தடைந்தார். (கூஉக)

வரைவளர்மா மயிலென்ன மாடமிசை மஞ்சாடுந்
தரைவளர்சீர்த் திருமயிலைச் சங்கரனார் தாள்வணங்கி
யுரைவளர்மா லகளணிவித் தழவாரப் படையாளி
திரைவளர்வே லக்கரைபோய்த் திருவொற்றி யூர்சேர்ந்தார். (கூஉஉ)

ஒற்றியூர் வளாகரத் தொளிமணிவீ திகள் விளக்கி
நற்கொடிமா லகள்பூக நறுங்கதலி நிரைநாட்டிப்
பொற்குடங்க டேங்க டீபங்கள் பொலிவித்து
மற்றவரை யெதிர்கொண்டு கொடுபுக்கார் வழித்தொண்டர். (கூஉக)

திருநாவுக் கரசருமத் திருவொற்றி யூரமர்ந்த
பொருநாகத் திண்சிலையார் கோபுரத்தை யிறைஞ்சிப்புக்
கொருஞானத் தொண்டருட னுருகிவலங் கொண்டடியார்
கருநாமந் தவிர்ப்பாரைக் கைதொழுது முன்வீழ்ந்தார். (கூஉச)

எழுதாத மறையளித்த வெழுத்தறியும் பெருமானைத்
தொழுதார்வ முறநிலத்திற் றேய்ந்தெழுந்தே யங்கமெலா
முழுதாய பரவசத்தின் முகிழ்த்தமயிர்க் கான்முழுக்க
விழுதாரை கண்பொழிய விதிர்ப்புற்று விம்மினார். (கூஉஇ)

வண்டோங்கு செங்கமல மெனவெடுத்து மனமுருகப்
பண்டோய்ந்த சொற்றிருத்தாண் டகம்பாடிப் பரவுவார்
விண்டோய்ந்த புனற்கங்கை வேணியார் திருவுருவங்
கண்டோங்கு களிசிறப்பக் கைதொழுது புறத்தணைந்தார். (கூஉஈ)

விளங்குபெருந் திருமுன்றின் மேவுதிருப் பணிசெய்தே
யுளங்கொடிரு விருத்தங்க ளோங்குதிருக் குறுந்தொகைகள்
களங்கொடிரு நேரிசைகள் பலபாடிக் கைதொழுது
வளங்கொடிருப் பதியதனிற் பலநாள்கள் வைகினர். (கூகூஎ)

அங்குறையு நாளின்க ணருகுளவாஞ் சிவாலயங்க
ளெங்குஞ்சென் றினிதிறைஞ்சி யேத்துமவ ரிறையருளாற்
பொங்குபுனற் றிருவொற்றி யூர்தொழுது போந்துமையாள்
பங்குடையா ரமர்ந்ததிருப் பாசூராம் பதியணைந்தார். (கூகூஅ)

திருப்பாசூர் நகரெய்திச் சிந்தையினில் வந்தூறும்
விருப்பார்வ மேற்கொள்ள வேயிடங்கொண் டிலகுய்ய
விருப்பாரைப் புரமூன்று மெரித்தருள வெடுத்ததனிப்
பொருப்பார்வெஞ் சிலையாரைத் தொழுதெழுந்து போற்றுவார். (கூகூக)

முந்திமூ வெயிலெய்த முதல்வனு ரெனவெடுத்துச்
சிந்தைகரைந் துருகுதிருக் குறுந்தொகையுந் தாண்டகமுஞ்
சந்தநிறை நேரிசையு முதலான தமிழ்பாடி
யெந்தையார் திருவருள்பெற் றேகுவார் வாகீசர். (கூசo)

அம்மலர்சீர்ப் பதியையகன் றயலுளவாம் பதியனைத்தின்
மைம்மருவுங் களத்தாரை வணங்கிமகிழ் வொடும்போற்றி
மெய்ம்மைநிலை வழுவாத வேளாள விழுக்குடிமைச்
செம்மையினர் பழையனூர்த் திருவால வணம்பணிந்தார். (கூசக)

திருவாலங் காடுறையுஞ் செல்வர்தா மெனச்சிறப்பி
னெருவாத பெருந்திருத்தாண் டகமுதலா வோங்குதமிழ்ப்
பெருவாய்மைத் தொடைமாலை பலபாடிப் பிறபதியு
மருவார்வம் பெறவணங்கி வடதிசைமேல் வழிக்கொள்வார். (கூசஉ)

பல்பதியு நெடுங்கிரியும் படர்வனமுஞ் சென்றடைவார்
செல்கதிமுன் னளிப்பார்தந் திருக்காரி கரைபணிந்து
தொல்கலியின் பெருவேந்தர் தொண்டர்கள்பின் னும்பர்குழா
மல்குதிருக் காளத்தி மாமலைவந் தெய்தினர். (கூசஙு)

பொன்முகலித் திருநதியின் புனிதநெடுங் கீர்த்தத்தின்
முன்முழுகிக் காளத்தி மொய்வரையின் முழ்வரையிற்
சென்னியுறப் பணிந்தெழுந்து செங்கண்விடைத் தனிப்பாகர்
மன்னுமலை மிசையேறி வலங்கொண்டு வணங்குவார். (கூசச)

காதணிவெண் குழையானைக் காளத்தி மலைக்கொழுந்தை
வேதமொழி மூலத்தை விழுந்திறைஞ்சி யெழுந்துபெருங்
காதல்புரி மனங்களிப்பக் கண்களிப்பப் பரவசமாய்
நாதனையென் கண்ணுளா னெனுந்திருத்தாண் டகமின்னூர். (கூசஙி)

மலைச்சிகரச் சிகாமணியின் மருங்குறமுன் னேகிற்குஞ்
சிலைத்தடக்கைக் கண்ணப்பர் திருப்படிதஞ் சேர்ந்திறைஞ்சி
யலைத்துவிழுங் கண்ணருவி யாகத்துப் பாய்ந்திழியத்
தலைக்குவித்த கையினராய்த் தாழ்ந்துபுறம் போந்தணைந்தார். (கூசஞ)

சேணுலவு திருமலியிற் றிருப்பணியா யினசெய்து
தர்ணுவினே யம்மலேமேற் ரூள்பணிந்த குறிப்பினுற்
பேணுதிருக் கயிலேமலே வீற்றிருந்த பெருங்கோலங்
காணுமது காதலித்தார் கலேவாய்மைக் காவலனுர். (உசஎ)

வே று.

அங்கண் மாமலே மேன்ம ருந்தை வணங்கி யாரரு ளான்மிகப்
பொங்கு காதலி னுத்த ரத்திசை மேல்வி ருப்பொடு போதுவார்
துங்க மால்வரை காணி யாறு தொடர்ந்த நாடு கடந்தபின்
செங்கண் மால்விடை யண்ணன்மேவு திருப்ப ருப்பத மெய்தினுர். (உசஅ)

மான விஞ்சையர் வான நாடர்கள் ஈனி யக்கர்கள் சித்தர்கள்
கான'கின்னரர் பன்ன காதிபர் காம சாரிக ளேமுதன்
ஞான மோனிக ணுஞ நம்பரை வந்தி றைஞ்சி நலம்பெறுங்
தான மான திருச்சி லம்பை வணங்கி வண்டமிழ் சாற்றினுர். (உசஉ)

அம்ம ருங்கு கடந்து போமவ ராள்கொள் சூல வயிற்படைச
செம்மல் வெண்கயி லேப்பொ ருப்பை நினேந்தெ ழுந்ததொர் சிற்சையா
லெம்ம ருங்குமொர் காதலின்றி யிரண்டு பாலும் வியந்துளோர்
கைம்ம ருங்கணே யுந்தெ லுங்கு கடந்து கன்னட மெய்தினுர். (உஙo)

கருந டங்கழி வாக வேகிய பின்க லந்த வனங்களுந்
திருந டித்துறை யாவை யும்பயில் சேணெ ருங்கிரி வட்டையும்
பெருக லங்கிளர் நாடு மெண்ணில பிற்ப டசெறி பொற்பிஞல்
வருகெ டுங்கதிர் கோலு சோலேய மாள வத்தினே நண்ணினுர். (உஙக)

அங்கு முற்றி யகன்று போகி யருஞ்சு ரங்க ளிகந்துசென்
றெங்கு மிக்க வறங்க ணீடு பிலாட பூமி யிகந்துபோய்
மங்குல் சுற்றிய வெற்பி னேடு வனங்கள் யாறு கடந்தயற்
பங்க யப்பழ னத்து மத்திய பைதி ரத்தினே யெய்தினுர். (உஙஉ)

அன்ன நாடு கடந்து கங்கை யணேந்து சென்று வலங்கொளு
மின்னு வேணியர் வாரணசி விருப்பி னேடு பணிந்துடன்
பின்ன ணேந்தவர் தம்மை யங்க ணெழிந்து கங்கை கடந்துபோய்
மன்னு காதல்செய் நாவின் மன்னவர் வந்து கற்சர முந்தினுர். (உஙங)

மாக மீது வளர்ந்த கானக மாகி யெங்கு மனித்தராற்
போக லாநெறி யன்றி யும்புரி கின்ற காதல் பொலிந்தெ ழச
சாக மூல பலங்க டுய்ப்பது வுந்த விர்ந்து தனித்துநே
ரேகி னுரீர வும்பெ ருங்கயி லேக்கு லக்கிரி யெய்துவார். (உஙச)

ஆய வாரிரு ளின்க ணேகுமவ் வன்பர் தம்மை யணேந்துமுன்
நீய வாய விலங்கு வன்றெழில் செய்ய வஞ்சின னஞ்சுகால்
வாய நாக மணிப்ப ணங்கொள் விளக்கெ டுத்தன வர்துகா
ரேய வானவ ராயி னுந்தனி தன்ன ருஞ்சுர மன்னினுர். (உஙஙி)

வெங்க திர்ப்பக லக்க டத்திடை வெய்ய வன்கதிர் கைபரந்
தெங்கு மிக்க பினப்பி னுகர்த மெல்லே புக்கெரி கின்றன
பொங்க ழற்றெறு பாலே வெங்கிழல் புக்கி ருழல் புகும்பகற்
செங்க திர்க்கனல் போலு மத்திசை தின்மை மெய்த்தவர் நண்ணினுர். (உஙஙக)

இங்க ணம்மிர வும்ப கற்பொழு தும்ம ருஞ்சுர மெய்துவார்
பங்க யம்புரை தான்ப ரட்டள வும்ப சைத்தசை தேயவு
மங்கை பங்கர்தம் வெள்ளி மால்வரை வைத்த சிந்தை மறப்பரோ
தங்க ரங்க ளிரண்டு மேகொடு தாவி யேகுதன் மேவினர். (நடுசெ)

கைக ளும்மணி பந்த சைந்துற வேக ரைந்து சிதைந்தபின்
மெய்க லந்தெழு சிந்தை யன்பின் விருப்பு மீமிசை பொங்கிட
மொய்க ருங்கனல் வெம்ப ரற்புகை மூள மத்த முயங்கியே
மைகொள் கண்டர்த மன்பர் செல்ல வருந்தி யுந்தினர் மார்பினுல். (நடுசஅ)

மார்ப முந்திசை கைந்து சிந்தி வருந்த வென்பு முரிந்திட
நேர்வ ருங்குறி னின்ற சிந்தையி னேச மீசனை நேடிநீ
டார்வ மங்குயிர் கொண்டு கைக்கு முடம்ப டங்கவு மூன்கெடச்
சேர்வ ரும்பழு வம்பு ரண்டு புரண்டு சென்றனர் செம்மையோர். (நடுசக)

அப்பு றம்புரள் கின்ற நீளிடை யங்க மெங்கு மசைந்திடச்
செப்ப ருங்கயி லேச்சி லம்படி சிந்தை சென்றுறு மாதலால்
மெய்ப்பு றத்தி லுறுப்ப ழிந்தபின் மெல்ல வுந்து முயற்சியுந்
தப்பு றச்செய லின்றி யங்கெறி தங்கி னுர்தமி ழாளியார். (நடுசஅ)

மே வு று.

அன்ன தன்மையர் கயிலையை யணைவதற் கருளார்
மன்னு நீள்தமிழ் புவியின்மேற் பின்னையும் வழுத்த
நன்னெடும் புனற் றடமுமொன் றுடன்கொடு நடந்தார்
பன்ன கம்புனை பரமரோர் முனிவராம் படியால். (நடுசக)

வந்து மற்றவர் மருங்குற வணைந்துநேர் நின்று
நொந்து நோக்கிமற் றவரெதிர் நோக்கிட நுவல்வார்
சிந்தை யிவ்வுறுப் பழிந்திட வருந்திய திறத்தா
லிந்த வெங்கடத் தெய்திய தென்னென விசைத்தார். (நடுசஉ)

மாசில் வற்கலை யாடையு மார்பின்மூ நூலுங்
தேசு டைச்சடை மவுலியு நீறுமெய் திகழ
வாசின் மெய்த்தவ ராகினின் றவர்தமை நோக்கிப்
பேச வற்றதொ ருணர்வுற விளம்புவார் பெரியோர். (நடுசங)

வண்டு லாங்குழன் மலைமக ளுடன்வட கயிலை
யண்டர் நாயக ரிருக்குமப் பரிசவ ரடியேன்
கண்டு கும்பிட விருப்பொடுங் காதலி னடைந்தேன்
கொண்ட வெங்குறிப் பிதுமுனி யேயெனக் கூற. (நடுசச)

கயிலை மால்வரை யாவது காசினி மருங்கு
பயிலு மானுடப் பான்மையோ ரடைவதற் கெளிதோ
வயில்கொள் வேற்படை யமரரு மணுகுதற் கரிதால்
வெயில்கொள் வெஞ்சுரத் தென்செய்தீர் வந்தென விளம்பி. (நடுசஙி)

மீளு மத்தனை யுமக்கினிக் கடனென விளங்குந்
தோளு மாகமும் துவளுமூன் நூன்முனி சொல்ல
வாளு நாயகன் கயிலையி லிருக்கைகண் டல்லான்
மாளு மிவ்வுடல் கொண்டுமீ ளேனென மறுத்தார். (நடுசக)

ஆங்கு மற்றவர் தணிவறித் தவர்தமை யறிய
நீங்கு மாதவர் விசும்பிடைக் கரந்தீண் மொழியா
லோங்கு காவினுக் கரசனே யெழுந்திரென் றுரைப்பத்
தீங்கு நீங்கிய யாக்கைகொண் டெழுந்தொளி திகழ்வார். (ஙுஙஎ)

அண்ண லேயெனை யாண்டுகொண் டருளிய வழுதே
விண்ணி லேமறைந் தருள்புரி வேதநா யகனே
கண்ணி ஞற்றிருக் கயிலையி லிருந்தகின் கோல
நண்ணி நான்றொழ நயந்தருள் புரியெனப் பணிந்தார். (ஙுஙஅ)

தொழுதெ ழுந்தகற் றொண்டரை நோக்கிவிண் டலத்தி
லெழுபெ ருந்திரு வாக்கினு லிறைவரிப் பொய்கை
முழுகி நம்மைநீ கயிலையி லிருந்தவம் முறைமை
பழுதில் சீர்த்திரு வையாற்றிற் காணெனப் பணித்தார். (ஙுஙக)

ஏற்றி னூரரு டலமிசைக் கொண்டெழுந் திறைஞ்சி
வேற்று மாகிவிண் ணுகிற்கின் றூர்மொழி விரும்பி
யாற்றல் பெற்றவவ் வண்ணலா ரஞ்செழுத் தோதிப்
பாற்ற டம்புனற் பொய்கையின் மூழ்கினர் பணியால். (ஙுஎ0)

ஆதி தேவர்தந் திருவருட் பெருமையா றறிந்தார்
போத மாதவர் பனிமலர்ப் பொய்கையின் மூழ்கி
மாதொர் பாகனூர் மகிழுமை யாற்றிலோர் வாவி
மீது தோன்றிவந் தெழுந்தன ருலகெலாம் வியப்ப. (ஙுஎக)

வம்பு லாமலர் வாவியின் கரையில்வந் தேறி
யும்பர் நாயகர் திருவருட் பெருமையை யுணர்வா
ரெம்பி ரான்றரு கருணைகொ லிதுவென விருகண்
பம்பு தாரைநீர் வாவியிற் படிந்தெழும் படியார். (ஙுஎஉ)

மிடையு நீள்கொடி வீதிகள் விளங்கிய வையா
றுடைய நாயகர் சேவடி பணியவந் தடைவா
ரடைய வப்பதி நிற்பவுஞ் சரிப்பவு மான
புடைய மர்ந்ததந் தூணெயொடும் பொலிவன கண்டார். (ஙுஎங)

பொன்ம லக்கொடி யுடனமர் வெள்ளியம் பொருப்பிற்
றன்மை யாம்படி சத்தியுஞ் சிவமுமாஞ் சரிதைப்
பன்மை யோனிகள் யாவையும் பயில்வன பணிந்தே
மன்னு மாதவர் தம்பிரான் கோயின்முன் வந்தார். (ஙுஎச)

காணு மப்பெருங் கோயிலுங் கயிலைமால் வரையாய்ப்
பேணு மாலய னிந்திரன் முதற்பெருந் தேவர்
பூணு மன்பொடு போற்றிசைத் தெழுமொலி பொங்கத்
தாணு மாமறை யாவையுந் தனித்தனி முழங்க. (ஙுஎஇ)

தேவர் தானவர் சித்தர்விச் சாதர ரியக்கர்
மேவு மாதவர் முனிவர்கள் புடையெலா மிடையக்
காவி வான்விழி யரம்பையர் கானமு முழவும்
தாவி லேழ்கடன் முழக்கினும் பெருகொலி தழைப்ப, (ஙுஎசு)

கங்கை யேமுதற் றீர்த்தமாங் கடவுண்மா நதிகண்
மங்க லம்பொலி புனற்பெருந் தடங்கொடு வணங்க
வெங்கு நீடிய பெருங்கண நாதர்க ளிறைஞ்சப்
பொங்கி யங்களாற் பூதமே தாளங்கள் போற்ற. (ருஎஎ)

அந்தண் வெள்ளிமால் வரையிரண் டாமென வணைந்தோர்
சிந்தை செய்திடச் செங்கண்மால் விடையெதிர் நிற்ப
மூன்றை மாதவப் பயன்பெறு முதன்மையான் மகிழ்ந்தே
நன்றி யெம்பிரா னடிவிடை யாடிமுன் னணுக. (ருஎஅ)

வெள்ளி வெற்பின்மேன் மரகதக் கொடியுடன் விளங்குந்
தெள்ளு பேரொளிப் பவளவெற் பெனவிடப் பாகங்
கொள்ளு மாமலே யாளுடன் கூடவீற் றிருந்த
வள்ள லாரைமுன் கண்டனர் வாக்கின்மன் னவனுர். (ருஎக)

கண்ட வானந்தக் கடலினைக் கண்களான் முகந்து
கொண்டு கைகுவித் தெதிர்விழுந் தெழுந்துமெய் சூலைய
வண்டர் முன்புகின் றடிஞர் பாடிஞ ரழுதார்
தொண்ட ஞர்க்கங்கு நிகழ்ந்தன யார்சொல வல்லார். (ருஅ0)

முன்பு கண்டுகொண் டருளிஞ ரமுதுண்ண மூவா
வன்பு பெற்றவ ரளவிலா வார்வமுன் பொங்கப்
பொன்பி றங்கிய சடையரைப் போற்றுதாண் டகங்க
ளின்ப மோங்கிட வேத்திஞ ரெல்லையி றவத்தோர். (ருஅக)

ஆய வாறுமற் றவர்மனங் களிப்புறக் கயிலே
மேய நாதர்தந் துணையொடும் வீற்றிருந் தருளித்
தூய தொண்டருந் தொழுதெதிர் நிற்கவக் கோலஞ்
சேய தாக்கினூர் திருவையா றமர்ந்தமை திகழ. (ருஅஉ)

ஐயர் கோலமங் களித்தகன் றிடவடித் தொண்டர்
மையல் கொண்டள மகிழ்ந்திட வருள்கிமற் றங்குச்
செய்ய வேணிய ரருளிது வோவெனத் தெளிந்து
வைய முய்ந்திடக் கண்டமை பாடுவார் மகிழ்ந்து. (ருஅங)

சே வ று.

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடு மென்னுங்
கோதறு தண்டமிழ்ச் சொல்லாற் குலவு திருப்பதி கங்கள்
வேத முதல்வரை யாற்றில் விரவுஞ் சராசர மெல்லாங்
காதற் றுணையொடுங் கூடக் கண்டே னெனப்பாடி நின்றூர். (ருஅச)

கண்டு தொழுது வணங்கிக் கண்ணுத லார்தமைப் போற்றிக்
கொண்ட திருத்தாண் டகங்கள் குறுந்தொகை நேரிசை யன்பின்
மண்டு விருத்தங்கள் பாடி வணங்கித் திருத்தொண்டு செய்தே
யண்டர் பிரான்றிரு வையா றமர்ந்தனர் நாவுக் கரசர். (ருஅஙி)

நீடிய வப்பதி நின்று நெய்த்தான மேமுத லாக
மாடியர் தானம் பணிந்து மழபாடி யாரை வணங்கிப்
பாடிய செந்தமிழ் மாலை பகர்ந்து பணிசெய்து போற்றித்
தேடிய மாலுக் கரியார் திருப்பூந் துருத்தியைச் சேர்ந்தார். (ருஅசு)

சேர்ந்து விருப்பொடும் புக்குத் திருநட மாளிகை முன்னர்ச்
சார்ந்து வலங்கொண் டிறைஞ்சித் தம்பெரு மான்றிரு முன்பு
நேர்ந்த பரிவொடுந் தாழ்ந்து நிறைந்தொழி யாவன்பு பொங்க
வார்ந்தகண் ணீர்மழை தூங்க வயர்வுறுந் தன்மைய ரானார். (௫அ௯)

திருப்பூந் துருத்தி யமர்ந்த செஞ்சடை யானையா னேற்றுப்
பொருப்பூர்ந் தருளும் பிரானைப் பொய்யிலி யைக்கண்டே னென்று
விருப்புறு தாண்டகத் தோடு மேவிய காதல் விளைப்ப
விருப்போர் திருவடிக் கீழ்நா மென்னுங் குறுந்தொகை பாடி. (௫அ௰)

அங்குறை யுந்தன்மை வேண்டி நாமடி போற்றுவ தென்று
பொங்கு தமிழ்ச்சொல் லிருத்தம் போற்றிய பாடல் புரிந்து
தங்கித் திருத்தொண்டு செய்வார் தம்பிரா னருளுள் பெற்றுத்
திங்களு ஞாயிறுந் தோயுந் திருமட மாங்கொன்று செய்தார். (௫அ௧)

பல்வகைத் தாண்டகத் தோடும் பரவுந் தனித்தாண் டகமு
மல்ல லறுப்பவர் தானத் தடைவு திருத்தாண் டகமுஞ்
செல்கதி காட்டிடப் போற்றுந் திருவங்க மாலையு முளவிட்
டெல்லையில் பன்மைத் தொகையு மியம்பின ரேத்தி யிருந்தார். (௫௦)

வே று.

பொன்னிவலய கொண்டதிருப் பூந்துருத்தி யிவரிருப்பக்
கன்மனத்து வல்லமணர் தமைவாதிற் கட்டழித்துத்
தென்னவன்கூ னிமிர்த்தருளித் திருநீற்றி னொளிகண்டு
மன்னியசீர்ச் சண்பைநகர் மறையவனார் வருகின்றார். (௫௧)

தீந்தமிழ்நாட் டிடைநின்று மெழுந்தருளிச் செம்பொன்னி
வாய்ந்தவளந் தருநாட்டு வந்தணைந்தார் வாக்கினுக்கு
வேந்தரிருந் தமைகேட்டு விரைந்தவர்பாற் செல்வனெனப
பூந்துருத்தி வளம்பதியின் புறம்பணையில் வந்தணைந்தார். (௫௨)

சண்பைவருந் தமிழ்விரக ரெழுந்தருளத் தாங்கேட்டு
மண்பரவும் பெருங்கீர்த்தி வாகீசர் மனமகிழ்ந்து
கண்பெருகுங் களிகொள்ளக் கண்டிறைஞ்சுங் காதலினு
லெண்பெருகும் விருபபெய்த வெழுந்தருளி யெதிர்சென்றார். (௫௩)

காழியர்கோன் வருமெல்லை கலந்தெய்திக் காதலித்தார்
சூழுமிடைந் திடுநெருக்கிற் காணுமே தொழுதருளி
வாழியவர் தமைத்தாங்கு மணிமுத்தின் சிவிகையினைத்
தாழுமுட லிதுகொண்டு தாங்குவன்யா னெனத்தரித்தார். (௫௪)

வந்தொருவ ரறியாமே மறைந்தவடி வொடும்புகலி
யந்தணனு ரேறியெழுந் தருளிவரு மணிமுத்தின்
சந்தமணிச் சிவிகையினைத் தாங்குவா ருடன்ருங்கிச்
சிந்தைகளிப் புறவருவார் தமையாருந் தெளிந்திலரால். (௫௫)

திருஞான முனிவரர சிருந்ததிருப் பூந்துருத்திக்
கருகாக வெழுந்தருளி யெங்குற்ற ரபபரென
வருகாதின் றும்மடியே னும்மடிக டாங்கிவரும்
பெருவாழ்வு வந்தெய்தப் பெற்றிங்கும் றேனென்றார். (௫௬)

பிள்ளேயா ரதுகேளாப் பெருகுவிரை வுடனிழிந்தே
யுள்ளமிகு பதைப்பெய்தி யுடையவர சினைவணங்க
வள்ளலார் வாகீச ரவர்வணங்கா முன்வணங்கத்
துள்ளுமான் மறிக்கரத்தார் தொண்டரெலாந் தொழுதார்த்தார். (உகஎ)

கழுமலக்கோன் றிருநாவுக் கரசருடன் கலந்தருளிச்
செழுமதியந் தவழ்சோலைப் பூந்துருத்திக் திருப்பதியின்
மழுவினெடு மானேந்து திருக்கரத்தார் மலர்த்தாள்க
டொழுதுருகி யின்புற்றுத் துதிசெய்தங் குடனிருந்தார். (உகஅ)

வல்லமணர் தமைவாதில் வென்றதுவும் வழுதிபாற்
புல்லியகூ னிமிர்த்ததுவுந் தண்பொருந்தப் புனலூட்டி
லெல்லையிலாத் திருநீறு வளர்த்ததுவு மிருந்தவத்தோர்
சொல்லவது கேட்டுவந்தார் தூயபுகழ் வாகீசர். (உகஉ)

பண்புடைய பாண்டிமா தேவியார் தம்பரிவு
ணண்புடைய குலச்சிறையார் பெருமையுளா னத்தலேவ
ரெண்பெருக வுரைத்தருள வெல்லேயில்லிச் வாகீசர்
மண்குலவு தமிழ்நாடு காண்பதற்கு மனங்கொண்டார். (உ00)

பிரமபுரத் திருமுனிவர் பெருந்தொண்டை நன்னாட்டி
லரனுறையுந் தானங்க ளனேந்திறைஞ்சிப் பாடுவதற்
குரனுடைய திருநாவுக் கரசருரை செய்தருளப்
புரமெரித்தார் திருமகனர் பூந்துருத்தி தொழுதகன்றார். (உ0க)

ஆண்டவர சங்கணர்சி ரருள்பெற்றப் பதிகின்றும்
பாண்டிநாட் டெழுந்தருளும் பான்மையராய்த் தென்றிசைபோய்க்
காண்டகைய திருப்புத்தூர் பணிந்தேத்திக் கதிர்மதியஞ்
தீண்டுகொடி மதின்மதுரைத் திருவால வாய்சேர்ந்தார். (உ0உ)

சென்றணைந்து மதுரையினிற் றிருந்தியநூற் சங்கத்து
ளன்றிருந்து தமிழாராய்ந் தருளியவங் கணர்கோயின்
முன்றிலினே வலங்கொண்டு முன்னிறைஞ்சி யுள்புக்கு
வன்றனிமால் விடையாரை வணங்கிமகிழ் வொடுந்தினேத்தார். (உ0ஙூ)

எய்தியபே ரானந்த வின்பத்தி னிடைமூழ்கி
மொய்திகழுஞ் சடையானே மூனேத்தானே யென்றெடுத்துச்
செய்தவத்தோர் தாண்டகச்செந் தமிழ்பாடிப் புறத்தணேவார்
கைதொழுது பணிந்தேத்தித் திருவுள்ளங் களிசிறந்தார். (உ0ச)

சீர்திகழும் பாண்டிமா தேவியார் திருமேனி
சேரவரு ளுடையதனும் கூனிமிர்ந்த தென்னவனுர்
பார்பரவுங் குலச்சிறையார் வாகீசர் தமைப்பணிவுற்
றூரகிலாக் காதன்மிக வடிபோற்ற வங்கிருந்தார். (உ0ஞ)

திருவால வாயமர்ந்த செஞ்சுடரைச் செழும்பொருணூ
றருவானே நேரிசையுந் தாண்டகமு முதலான
பெருவாய்மைத் தமிழ்பாடிப் பேணுதிருப் பணிசெய்து
மருவார்மூப் புரமெரித்தார் பூவணத்தை வந்தடைந்தார். (உ0ட)

கொடிமாட நிலவுதிருப் பூவணத்துக் கோயிலினு
ணெடியானுக் கறிவரியார் நேர்தோன்றக் கண்டிறைஞ்சி
வடிவேறு திரிசூலத் தாண்டகத்தால் வழுத்திப்போய்ப்
பொடிநீடு திருமேனிப் புனிதர்பதி பிறபணிவார். (சஅஎ)

தென்னிலங்கை யிராவணன்றன் சிரமீரைந் துந்துணித்த
மன்னவனு மிராமனுக்கு வரும்பெரும்பா தகந்தீர்க்கும்
பிஞ்ஞகரைத் தொழுவதற்கு நினைந்துபோய்ப் பெருமகிழ்சிறி
துன்னிமனங் கரைந்திருகத் தொழுதெழுந்தார் சொல்லரசர். (சஅஅ)

தேவர்தொழுந் தனிமுதலைத் திருவிரா மீச்சுரத்து
மேவியசங் கரனெயிர் றின்றுவிருப் புறுமொழியாற்
பாவுதிரு நேரிசைகண் முதலான தமிழ்பாடி
நாவரசர் திருத்தொண்டு நலம்பெருகச் செய்தமர்ந்தார். (சஅக)

அங்குறைந்து கண்ணுதலா ரருள்சூடி யகன்றுபோய்ப்
பொங்குதமிழ்த் திருநாட்டுப் புறம்பணைசூழ் செல்வேலி
செங்கண்விடை யார்மன்னுந் திருக்கானப் பேர்முதலா
வெங்குநிகழ் தானங்க ளெல்லாம்புக் கிறைஞ்சுவார். (சகஎ)

தொழுதுபல வகையாலுஞ் சொற்றொடைவண் டமிழ்பாடி
வழுவிறிருப் பணிசெய்து மனங்கசிவுற் றெப்பொழுது
மொழுகியகண் பொழிபுனலு மோவாது சிவன்றுள்க
டழுவியசிந் தையிலுணர்வுந் தங்கியநீர் மையிற்சரித்தார். (சகக)

தேம்பொழில்சூழ் செந்தமிழ்நாட் டினிலெங்குஞ் சென்றிறைஞ்சிப்
பாம்பணிவார் தமைப்பணிவார் பொன்னிநா டதுவணைந்து
வாம்புனல்சூழ் வளநகர்கள் பின்னும்போய் வணங்கியே
பூம்புகலூர் வந்தடைந்தார் பொய்ப்பாசம் போக்குவார். (சகஉ)

பொய்கைசூழ் பூம்புகலூர்ப் புனிதர்மலர்த் தாள்வணங்கி
கையுமனப் பரிவோடு நாடோறுந் திருமுன்றிற்
கைகலந்த திருத்தொண்டு செய்துபெருங் காதலுடன்
வைகுநா ளெண்ணிறைந்த வண்டமிழ்மா லைகண்மொழிவார். (சகங)

நின்றதிருத் தாண்டகமு நீடுதனித் தாண்டகமு
மன்றுறைவார் வாழ்பதிகள் வழுத்துதிருத் தாண்டகமுங்
கொன்றைமலர்ச் சடையார்பாற் குறைந்தநிரு நேரிசையுந்
துன்றுதனி நேரிசையு முதலான தொடுத்துரைத்தார். (சகச)

ஆருயிரின் றிருவிருத்தந் தசபுரா ணத்தடைவு
பாரபரவும் பாவநா சப்பதிகம் பன்முறையு
நேர்படநின் றறைகூவுந் திருப்பதிக முதற்பிறவும்
பேரருளின் கடலளிக்கும் பெருமானைப் பாடினார். (ஞகஙி)

அந்நிலைமை தனிலாண்ட வரசுபணி செய்யவவர்
நன்னிலைமை காட்டுவார் நம்பர்திரு மணிமுன்றி
றன்னில்வரு முழவார முழைந்தலிடந் தரனெய்தும்
பொன்னிஞெடி நவமணிகள் பொலிந்திலங்க வருள்செய்தார். (சகசு)

செம்பொன்னு நவமணியுஞ் சேண்விளங்க வாங்கவையு
மும்பர்பிரான் றிருமுன்றி லுருள்பருக்கை யுடனெக்க
வெம்பெருமான் வாசே ருழவாரத் தினிலேந்தி
வம்பலர்மென் பூங்கமல வாவியினிற் புகவெறிந்தார். (சகள)

புல்லோடுங் கல்லோடும் பொன்னோடு மணியோடுஞ்
சொல்லோடும் வேறுபா டிலாநிலைமை துணிந்திருந்த
நல்லோர்முன் றிருப்புகலூர் நாயகனூர் திருவருளால்
வில்லோடு நுதன்மடவார் விசும்பூடு வந்திழிந்தார். (சகஅ)

வானகமின் னுக்கொடிகள் வந்திழிந்தா லெனவந்து
தானநிறை சுருதிகளிற் றகுமலங்கா ரத்தன்மை
கானவரு தம்பரப்புங் கனிவாயி லொளிபரப்பப்
பானனெடுங் கண்கள்வெளி பரப்பியிசை பாடினார். (சகக)

கற்பகப்பூந் தளிரடிபோங் காமருசா ரிகைசெய்ய
வுற்பலமென் முகிழ்விரல்வட் டணையோடுங் கைபெயரப்
பொற்புறுமக் கையின்வழி பொருகயற்கண் புடைபெயர
வற்புதப்பொற் கொடிநுடங்கி யாடுவபோ லாடினார். (சஉ0)

ஆடுவார் பாடுவா ரலர்மாரி மேற்பொழிவார்
கூடுவார் போன்றணைவார் குழலவிழ விடைநுடங்க
வோடுவார் மாரவே ளுடன்மீள்வா ரொளிபெருக
நீடுவார் துகிலசைய நிற்பாரு மாயினார். (சஉக)

இத்தன்மை யரம்பையர்க ளெவ்விதமுஞ் செயல்புரிய
வத்தனூர் திருவடிக்கீழ் நினைவகலா வன்புருகு
மெய்த்தன்மை யுணர்வுடைய விழுத்தவத்து மேலோர்தஞ்
சித்தநிலை திரியாது செய்பணியின் றலைநின்றார். (சஉஉ)

இம்மாயப் பவத்தொடக்கா மிருவினைக டமைநோக்கி
யும்மாலிங் கென்னகுறை யுடையேன்யான் றிருவாரூ
ரம்மானுக் காளானே னலையேன்மி னீரென்று
பொய்ம்மாயப் பெருங்கடலு ளெனுந்திருத்தாண் டகம்புகன்றார். (சஉங)

மாதரவர் மருங்கணைய வந்தெய்தி மதனவசக்
காதலவர் புரிந்தொழுகுங் கைதவங்கள் செய்திடவும்
பேதமிலா வோருணர்விற் பெரியவரைப் பெயர்விக்க
யாதுமொரு செயலில்லா மையிலிறைஞ்சி யெதிரகன்றார். (சஉச)

இந்நிலைமை யுலகேழு மெய்தவறிந் தியல்பேத்த
மன்னியவன் புறுபத்தி வடிவான வாகீசர்
மின்னிலவுஞ் சடையார்தம் மெய்யருடா னெய்தவரு
மந்நிலைமை யணித்தாகச் சிலநாளங் கமர்ந்திருந்தார். (சஉஇ)

மன்னியவந் தக்கரண மருவுதலைப் பாட்டினுற்
றன்னுடைய சரணை தமியேனைப் புகலூர
னென்னையினிச் சேவடிக்கீ ழிருத்திடுமென் றெழுகின்ற
மன்னுணர்வின் முயற்சியினுற் றிருவிருத்தம் பலமொழிந்தார். (சஉசு)

மண்முதலா முலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்
புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றே னெனப்புகன்று
நண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி
யண்ணலார் சேவடிக்கீ ழாண்டவர செய்திஞர். (சஉஎ)

வானவர்கண் மலர்மாரி மண்ணிறைய விண்ணுலகின்
மேனிறைந்த வைந்துபே ரியவொலியும் விரிஞ்சன்முதல்
யோனிகளா யினவெல்லா முண்ணிறைந்த பெருமகிழ்ச்சி
தானிறைந்த சித்திரையிற் சதயமார் திருநாளில். (சஉஅ)

அடியேனை ஞதரவா லாண்டவர சின்சரிதப்
படியையா னறிந்தபடி பகர்ந்தேனப் பரமுனிவன்
கடிமலர்மென் சேவடிகள் கைதொழுது குலசசிறையா
முடிவில்புகழ்த் திருத்தொண்டின் முயற்சியினே மொழிகின்றேன். (சஉக)

திருநாவுக்காசுநாயனர்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - க,சுகஉ.

சூசனம்.

க. கற்புநிலை வழுவாது சிவனே வழிபடல்.

கற்பாவது நாயகனிற் சிறந்ததெய்வம் இல்லை எனவும் அவனே வழிபடும் முறைமை இது எனவும் தந்தை தாயரும், பிராமணரிடத்தும் சான்றோரிடத்தும் ஆசாரியரிடத்தும் கடவுளேச்சுட்டியும் ஒழுகும் ஒழுக்கம் இப்படி என நாயகனும் கற்பித்தவழி நிற்றலாம். ஆதலால், சுமங்கலிக்கு, தன்கணவனே வணங்கி அவனுக்கு ஏவல்செய்தலே மேலாகிய தருமமாம். ஏவல் செய்துவரும்பொழுது, பரமபதியாகிய சிவனே வழிபடல்வேண்டும் என்னும் விருபபம் உண்டாகில்; தனக்கெனச் சுதந்தரம் இல்லாமையால்,கணவனது அனுமதியைப்பெற்று, ஆசாரியரை அடைந்து சிவதீக்ஷைபெற்று, கணவனுக்குச் செயற்பாலதாகிய ஏவலின் வழுவாது நின்றே சிவனே விதிப்படி வழிபடுக. கணவன் இறந்துவிடில்; ஆபரணங்கள் அணியாதொழிதலும், வெற்றிலை பாக்கை ஒழித்தலும், ஒருபொழுது பகலிலே உண்டலும், பாயல்வேண்டாது தரையிலே நித்திரைசெய்தலும், ஐம்புலன்களே அடக்கலும், சிவபுண்ணியங்களே விதிவழுவாது செய்தலும் வேண்டும். இதற்குப்பிரமாணம். சிவதருமோத்தரம். "ஏந்திழைக்குப் பதியேவ லியற்றுதலே நியதி யீசனிணைத் தாளணைய வேசறவு பெருகிற்—காந்தனு மதிபெற்றுக் கைக்கொள்க பூசை கலித்திடினே யிருதுகலுழ்ந்தொரு மூன்று நாளும்—வாய்ந்திடச்செய் துடற்சுத்தி மற்றையர்தீர் தரவே மானதபூ சனைபுரிக மற்றையநாட் புனலுட்—டோய்ந்தருந்திக் கவ்வியத்தைச் சூட்டுகபோ தரற்குச் சூதக முன் பெருகோய்முன் சூட்டுவிக்க பிறரால்." எ-ம். வாயுசங்கிதை. கருநெறிக் கூந்தலார்க்குக் கணவரை வணங்க ருலோ—யுரியநற் றரும மாகு மொண்டிறற் கணவர் சொல்லாற்—பருவரை பயந்த நங்காய் பணிந்துநம் பாதம் போற்றிப்—புரியவிழ் மலர்க டேவிப் பூசனை புரிதலாமால். கணவர்த மேவல் பூண்டு கற்பினி லொழுகிடாதார்—நணுகருங் கொடிய வெய்ய நரகினு ளழுந்து வாரால்—பணிவுறு கணவர் தம்மை யிகழ்ந்தாற் பான்மை யின்றி—யணிகலன் முறந்த மாதர் தன்மையை யறைகு வாமே. தரையினிற் கிடத்த றுண நல்கிட றயங்கு நீரி—லரியவெண் ணீற்றின் மூழ்க

லன்பொடு கமைப்பு சித்த—லொருபக லுண்டு வைக லட்டமி பதினுன் கோடு—மரு வுபு ரணியி லுண்டி யொழிந்திடல் வழக்க தாமே." எ-ம். காசிகண்டம். "மருவு காதலன் மாய்ந்திடின் மங்கைய—ரொருப கற்பொழு தண்டரும் பாலே—வீரியும் பாயல் வெறுத்துமண் மேற்றுஞ்சி—யரிய நோன்புக ளாற்றிட வேண்டுமால். சுடர் செய் பொற்கல னீத்திடுக் தோகையர்—கடவுள் பூசனை காதலி னூற்றிய—முடல மாசுண வுள்ளுயிர் நீத்திடா—தடகு மூல மருந்திட வேண்டுமால்." எ-ம். வரும்.

இப்புராணத்திலே சுட்டப்பட்ட திலகவதியார், தம்மைக் கலிப்பகையார் விவா கம் செய்திலர் ஆயினும்,அவர் இறந்தமை கேட்டவுடனே, என்னுடைய தந்தை தாயர் கள் என்னை அவருக்கு மணம்செய்து கொடுக்க உடன்பட்டிருந்தமையால், இவ்வுயிர் அவருக்கே உரியது; ஆதலால், இவ்வுயிரை அவருயிரோ டிசைவிப்பேன் என்று சாவ த்துணிந்தமையாலும், தம்பியாராகிய மருணீக்கியார் பொருட்டு அக்கருத்தை ஒழித்து உயிர்தாங்கிய பின்னும், இளமைப்பருவத்தராய் இருந்தும் விவாகம் செய்துகொள் ளாமல், தமது வீட்டிற்றானே தவஞ்செய்துகொண்டிருந்து, பின்னர்த் திருவதிகைவீர ட்டானத்திற் சென்று, சிவ சின்னங்களைத் தரித்துக்கொண்டு, திருக்கோயிலிலே திரு வலகிடுதல் திருமெழுக்கிடுதல் பூக்கள் கொய்து திருமாலைகள் தொடுத்தல் முதலிய திருப்பணிகள் பலவற்றை நாடோறும் வீதிவழுவாது சிவன்மாட்டுள்ள மெய்யன் போடு செய்தமையாலும், இவரது கற்பின்பெருமையும் ஐம்புலன்களை அடக்கிநின்ற அருமையும் சிவபத்திமுதிர்ச்சியும் செவ்விதிற் றெளியப்படும். இவர் இத்திருப்பணி களை மெய்யன்போடு செய்தனர் என்பது, இவர் புறச்சமயப் படுகுழியில் வீழ்ந்த தமது தம்பியாராகிய மருணீக்கியாரை அதில் நின்றும் தூக்கி ஆளும்பொருட்டுச் செய்த வேண்டுகோளுக்கு இசைந்து, கருணைநிதியாகிய சிவன் அவரைச் சூலநோயி னல் வருத்தி ஆட்கொண்டருளினமையாலே, துணியப்படும்.

உ. சிவனது திருவருள் இல்வழி உண்மைநெறி கூடாதெனல்.

உலகத்திலே, சமயங்களும், அந்த அந்தச் சமயசாத்திரங்களும் அந்தச்சாத்திரங் களிலே சொல்லப்படும் பொருள்களும், ஒன்றேடொன்று ஒவ்வாது பலதிறத்தன வாய் இருக்கும். இவைகள் எல்லாவற்றுள்ளும், மேலாகிய சமயம் யாது? சாத்திரம் யாது? பொருள் யாது? எனில்; இச்சமயப் பொருள்கள் எல்லாம், இது ஆகும் அது அன்று என்னும் பிணக்கு இன்றி, தன்னிடத்தே காணநிற்பது எந்தச் சமயமோ அந்த ச்சமயமே சமயம்; அந்தச்சமய சாத்திரமே சாத்திரம்; அந்தச்சாத்திரத்திற் சொல் லப்படும் பொருளே பொருள். இப்படி எல்லாச் சமயப்பொருள்களையும் தன்னிட த்து அடக்கி நிற்கும் சற்சமயம் சைவசித்தாந்தமேயாம். ஆதலால், அந்தச் சம யமே சமயம்; அந்தச்சமய சாத்திரங்களாகிய வேதசிவாகமங்களே சாத்திரம்; அந்தச் சாத்திரங்களிற் சொல்லப்படும் பதி பசு பாசம் என்னும் மூப்பொருள்களுமே மெய்ப்பொருள்கள். அது "ஓதுசம யங்கள்பொரு ளுணரு நூல்க ளொன்றேடொன் றெவ்வாம வுளபலவு மிவற்றுள்—யாதுசம யம்பொருணூல் யாதிங் கென்னி லிது வாகு மதுவல்ல வெனும்பிணக்க தின்றி—நீதியினு லிவையெல்லா மோரிடத்தே காண நிற்பதியா தொருசமய மதுசமயம் பொருணூ—லாதலினு லிவையெல்லா மரும றையா கமத்தே யடங்கியிடு மவையிரண்டு மரனடிக்கீ ழடங்கும்." என்னும் சிவ ஞான சித்தித் திருவிருத்தத்தால் உணர்க.

சமயசாத்திரங்கள் எல்லாம் வேதாகமங்களிலே சுருக்கிக் கூறப்பட்டிருக்கும். அவைகளைச் சமுத்திரகலச நியாயமாக உருத்திரர்களும் தேவர்களும் இருடிகளும்

தத்தம் அறிவளவாகத் தனித்தனி விரித்து உட்சமய புறச்சமய சாத்திரங்களாகப் பண்ணினார்கள். ஒன்றோடொன்றொவ்வாத சாருவாகம் முதலிய பலசமயப்பொருள்களே வேதாகமங்களில் சிவன் கூறுதல் என்னே எனின்; ஆன்மாக்களது அதிகாரபேதம் பற்றி என்க. முன்னர் அதிதாமதர்களாய், மந்த மதிகளாய், லௌகிக சுகத்தையே பரமபுருஷார்த்தம் எனவும், புறமாகிய புத்திராதிகளையே ஆன்மா எனவும் அபிமானிக்கும் அதிகாரிகளைக் குறித்து, துக்கம் முதலியவற்றோடு உடன் விரவி இருத்தலால் லௌகிக சுகம் பரமபுருஷார்த்தம் அன்று எனவும், புத்திராதிகள் ஆன்மா அல்ல எனவும் உணர்த்தி, அவர்களுக்குப் புத்தி ஸ்திரமாதற் பொருட்டு நுண்பொருள் உணரும் வன்மை இன்மையால், தூலதேகத்தையே ஆன்மா என்றும் அதனழிவையே பரம புருஷார்த்தம் என்றும் உபதேசிக்கின்றனர். பின்னர், அதிற்கூறிய தருமாதூலானத்திலுலே சிறிது பிரசாதம் பெற்றச் சற்றே சித்த சுத்தி அடைந்து தேகான்மா முதலியவற்றில் பசசாத்தாபம் உதிக்கப்பெற்ற அதிகாரிகளைக்குறித்து, தேகாதிகளில் எற்றிய ஆன்மத்தன்மையை மறுத்தற்குப் புத்தசாத்திரம் உபதேசிக்கின்றனர். இவ் வாறே மேலும் சோபானக்கிரமமாக உபதேசித்தலால், விரோதம் இன்மை தெளிக. முன்முன் உள்ள சமயங்கள பின்பின் உள்ள சமயங்களால் வாதிக்கப்படும். வாதிக்கப்படுவது பூருவபக்ஷமும், வாதிப்பது சித்தாந்தமுமாம். சைவசித்தாந்தம் மற்ற எச்சமயங்களையும் பூருவபக்ஷம் பண்ணி நிற்றலானும், அதனைப் பூருவபக்ஷம் பண்ணுதற்கு ஒருசமயமும் இன்மையானும், அதுவே சித்தாந்தம் எனப்படும். "சித்தாந்தமே சித்தாந்தம்; அவைக்கு வேறுளனை பூருவபக்ஷங்கள்." என்று ஆத்தினத்திரயத்திற் கூறப்பட்டது.

இச்சைவசித்தாந்தநூல்களே, பசுக்களாகிய நாம் பரதந்திரர்களாதலால் ஒன்றனை உள்ளவாறு உணர்தலும், அதன்வழிநிற்றலும் இயலாவாம் எனத்தெளிந்து, சுவதந்திரராகிய சிவனை மறவாது அவரது திருவருளையே முன்னிட்டு நின்று, விதிப்படி கற்றுணர்தல்வேண்டும். இவ்வாறே திருவருளை முன்னிடாது எத்தனை நூல்களைக் கற்பினும், எத்தனைத் தருமங்களைச் செய்யினும், சைவசித்தாந்தமே உண்மைநெறி என்று ஐயந்திரிபறத் துணிதலும், அந்நெறியின் வழுவாது நிற்றலும் கூடாவாம். திருவருளே கண்ணைக் காண்டல் வேண்டும் என்பதும், அஃது இல்வழி உண்மைநெறியை உணர்ந்து சிவனை அடைதல் கூடாது என்பதும், "உயிரா வணம்பிருந் துற்று நோக்கியுள்ளக்கிழியி னுருவெழுதி—யுபிரா வணஞ்செய்திட் டின்னைத் தந்தா லுணரப் படுவாரோ டொட்டி வாழ்தி—யபிரா வணமேறு தானே றேறி யமர்ந்தா டாளாதேயாரு ராண்ட—வயிரா வணமேயென் னம்மா னேனின் னருட்கண்ணு லுக்காதாரல்லா தாரே." "ஆட்டுவித்தா லாரொருவ ராடா தாரே யடங்குவித்தா லாரொருவ ரடங்கா தாரே—யோட்டுவித்தா லாரொருவ ரோடா தாரே யுருகுவித்தா லாரொருவ ருருகா தாரே—பாட்டுவித்தா லாரொருவர் பாடா தாரே பணிவித்தா லாரொருவர் பணியா தாரே—காட்டுவித்தா லாரொருவர் காணு தாரே காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே." என்னும் தேவாரங்களானும், "அவனருளாலே யவன்முள் வணங்கி." என்னும் திருவாசகத்தானும், உணர்க.

இம்மருணீக்கியார், யாக்கைநிலையாமையையும் செல்வநிலையாமையையும் நினைந்து பல தருமங்களைச் செய்தும், பிரபஞ்சவாழ்வினது அநித்தியத்தை அறிந்து இல்வாழ்க்கையிலே புகாமல் எல்லாவற்றையும் துறந்தும், சைவநூல்களே ஓதி உணர்ந்தும், எவ்வுயிர்க்கும் முதல்வராகிய சிவனது திருவருள் இன்மையாலன்றே, சமணர்களது தர்ப்போதனையிலுலே மயங்கி, அவர்களது ஆருகதசமயமே உண்மைநெறி என்று துணிந்து, அதிலேபிரவேசித்தார். சிவனன்றி முதல் இல்லை என்பது "சிவ

முதலே யன்றி முதலில்லே யென்னுஞ்—சிவனுடைய தென்னறிவ தென்னுஞ் - சிவன வனு—தென்செயல தாகின்ற தென்று மிவையிற்றைத்—தன்செயலாத் கொள்ளாமை தான்." எனத் திருக்களிற்றுப்படியாரிற் கூறுமாற்ருனும் காண்க. இவர் சைவனுல் களே நிதி உணர்ந்தும் சிவனது திருவருள் இன்மையால் சைவமே உண்மைநெறி என்னும் உணர்ச்சி இவருக்குப் பிறந்திலது என்பது, இங்கே "நில்லாத வுலகியல்பு கண்டு நிலே யாவாழ்க்கை—யல்லேனென் றறத்துறந்து சமயங்க ளானவற்றி—னல்லாறு தெரிந்துணர்ந்து நம்பரரு ளாமையினுற்—கொல்லாமை மறைந்துறைபு மண்சமயங் குறுகுவார்." என்னும் திருவிருத்தத்தால் உணர்த்தப்பட்டது. இத் திருவருள் தன்னேப் பெறல் வேண்டும் என்னும் ஆசையோடு பெருத்தவம் செய்த வழியன்றிக் கிடையாது. இந்நாயனர் சிவனே அடைதற்பொருட்டு முற்பிறப்பிலே பெருந்தவம் செய்தாராயினும், அத்தவத்திலே சிறிது வழுவுற்றமையாலன்ருே, இப்பிறப்பிலே நெடுங்காள் பொய்ந்நெறியாகிய பரமதத்தை அனுட்டித்தனர். கருணேநிதியாகிய சிவன் அச்சிறு குற்றத்தின் பொருட்டு இவரை இப்பிறப்பிலே தண்டித்தும்; பின்னர் இவர் முன் செய்த தவத்தினுலன்ருே, இவரைக் கைவிடாது, வலிந்தாட்கொள்ளத் திருவுளங் கொண்டு, சூலேநோயினுல் வருத்தி, உண்மை நெறியாகிய தமது சைவசமயத்திலே புகும்படி, திருவருள் சுரந்தனர். சிவபுண்ணியம் செய்த ஆன்மாக்கள் ஒரோவழித் தீது செய்யினும், அவர்களேக் கைவிடாது காக்கும் பெருங்கருணேயினர் சிவனே என்பது, இதனுலே துணியப்படும். "இன்றிங் கதேதனமா மிவ்வினேக ளோரிரண்டுஞ்—சென்று தொடருமவன் சென்றிடத்தே - யென்றுந்தான்—றீதொருவ ஞனுற் சிவபதி தான் கைவிடுமோ—மாதொருகூ றல்லனே மற்று." எனத் திருக்களிற்றுப்படியாரிற் கூறுமாற்ருனும், காண்க. புறச்சமயங்கள் பொய்ந்நெறிகள் என்பது "இருமுச் சமயத் தொருபேய்த் தேரினே—நீர்நசை தரவரு நெடுங்கண் மான்கணங்—தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடு—மவப்பெருந் தாப நீங்கா தசைந்தன." எனத் திருவாசகத்தினும், "சாவிபோ மற்றைச் சமயங்கள் புக்குநின்—ருவி யருதேயென் றுந்தீ பற—வவ்வுரை கேளாதே யுந்தீ பற." எனத்திருவுந்தியாரினும், கூறுமாற்ருல் அறிக. சிவன் இவரைச் சூலேநோயினுல் வருத்தி ஆட்கொண்டமையால், அவர் ஆன்மாக்களேத் தண்டிப்பதெல்லாம் அவர்கள் குற்றத்தினின்றும் நீங்கித் தம்மை அடைந்து பேரின்பம் பெற்று உய்தல்வேண்டும் என்னும் பெருங்கருணேயினுலேயாம் என்பது தெளியப்படும். அது "தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்க டஞ்சொ லாற்றின்—வந்திடா விடினுறுக்கி வளாரினு லடித்துத் தீய - பந்தமு மிடுவ ரெல்லாம் பார்த்திடிற் பரிவே யாகு—மிந்தநீர் முறைமை யன்ருே வீசனுர் முனிவு மென்றும்." என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தானும் உணர்க.

ங. சீவன் முத்தி நிலே.

ஆன்மாவுக்கு ஆணவ மல பரிபாகத்தினுலே தீவிரதர சத்திநிபாதம் உண்டான போது, கருணேநிதியாகிய சிவன், தமது திருவருளினுலே சிவஞானத்தை உதிப்பித்து, சிவானந்தம் அனுபவிப்பித்து, மேல்வரும் பிறப்புக்கு ஏதுவாகிய சஞ்சித ஆகாமியங்களேக் கெடுத்து எடுத்த சரீரத்திலே பிராரத்துவம் புசிக்கும்படி சீவன் முத்தனுகவைத்து, தேகாந்தத்திலே பரமுத்தியைக் கொடுத்தருளுவர். "அது சித்தாந்தத் தேசிவன் றன் றிருக்கடைக்கண் சேர்த்திச் சனனமொன்றிலே சீவன் முத்த ராக—வைத்தாண்டு மலங்கழுவி ஞானவாரி மடித்தானந் தம்பொழிந்து வரும்பிறப்பை யறுத்து—முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்ப னென்று மொழிந்திடவு முலகெல்லா மூர்க்க ராகிப்—பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப் பெருங்குழியில் வீழ்ந்திடுவ ரிதுவென்ன பிரான்றி." என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தால் உணர்க. சத்தி நிபாதமாவது திரோதான சத்தி நீங்க அனுக்கிரக சத்தி பதிதலாம். இத்திருகாவுக்

க்ரசுநாயனுர் நீலிரதர சத்தி நிபாதமுடையராய், சிவனது திருவருளினுலே மலவீருள் நீங்கிச் சிவத்துவம் விளங்கப் பெற்று, சிவானந்தம் மேலிட்டு, சீவன் முத்தராய் இருந் தார். சிவானந்த விளக்கத்துக்கு அடையாளம் ஆனந்த அருவியும், புளகமும், விம் மலும், தழுதழுத்தலும், பரவசமும் இடையருது எழும் அத்தியற்புத சின்மயமாகிய பாடலுமாம். இந்நாயனுர் தமது தமக்கையாராலே விபூதி அணியப் பெற்று சிவசந் நிதியை அடைந்தவுடனே, சிவனது திருவருளினுலே மலநீக்கமும் சிவத்துவ விளக்க மும் இவருக்கு உண்டாயின என்பதும், சிவானந்தம் வெளிப்பட விளங்கியது என்ப தும், இங்கே "நீறணிந்தா ரகத்திருளும்" என்பதுமுதல் "அங்கங்க ளடங்க" என் பது இறுதியாய் உள்ள ஐந்து திருவிருத்தங்களால் உணர்த்தப்பட்டன. சிவானந் தம் வெளிப்பட விளங்கினமை, இன்னும் இப்புராணத்திற் பலவிடங்களில் விரித்துக் கூறியவாற்ருல், உணர்க. இவரது சிவானந்த விளக்கம், இவர் திருவாய்மலர்ந்தருளிய திருப்பதிகங்களினுலே மெய்யுணர்வு உடையோர்க்கு, தெள்ளிதின் விளங்கும்.

சிவன் முத்தராவார் அளத்திற்பட்ட புற்போலச சிவப்பிரகாசத்தினுலே போக சாதனமாயுள்ள உட்கரணங்களும் புறக்கரணங்களும் ஆகிய பசு கரணங்கள் எல்லாம் சிவகரணமாய் நிகழப் பெற்று, சகல கருவிகளோடும் கூடியிருக்கும் சாக்கிராவத்தை யிலே நிருமல துரியாதீதத்தைப் பொருந்தினேர்களாய், பூரியின்களுள்ள ஆன்மாக் களே ஈடேற்றும்பொருட்டச சஞ்சரிக்கும் இயல்புடையோராம். அது "இங்கிலேதா னில்லையே லெல்லா மீச னிடத்தினு மீசனெல்லா னிடத்தினுங் கின்ற--வங்கிலையை யறிந்தக்க கரணங்க ளடங்கி யறிவதொரு குறிகுருவி னருளினு லறிந்து—மன்னு சிவன் றனையடைந்து நின்றவன்ற னுலே மருபுபசு கரணங்கள் சிவகரண மாகத்— துன்னியசாக் கிரமதனிற் றுரியா தீதந் தோன்றமுயல் சிவானுபவஞ் சுவானுபூ திக மாம்." "சாக்கிரத்தே யதீதத்தைப் புரிந்தவர்க ளுலகிற் சருவசங்க நிவிர்த்தி வந்த தபோதனர்க ளிவர்கள்—பாக்கியத்தைப் பகர்வதுவெ னிம்மையிலே யுயிரின் பற்றறுத் துப் பரத்தையடை பராவுசிவ ரன்றே—வாக்குமுடி கவித்தரசாண் டவர்களரி வையரோ டனுபவித்தங் கிருந்திடினு மகப்பற்றற் றிருப்பர்—நோக்கியிது புரியா தோர் புறப்பற்றற் ருலு மறைவர் பிறப் பிலில்வினைக ணுங்கிடாவே." என்னுஞ் சிவ ஞானசித்தி திருவிருத்தங்களாலும், "காணுங் கரணங்க ளெல்லாம்பே ரின்பமெ னப்—பேணு மடியார் பிறப்பகலக் - காணும்—பெரியானே கெஞ்சே பெருந்துறையி லென்றும்—பிரியானே வாயாரப் பேச." என்னும் திருவாசகத்தாலும் உணர்க. இத் திருநாவுக்கரசுநாயனுரும் அவயியல்பினேபுடையரே ஆதலால், இவர் அருளிச்செய்த தமிழ்வேதமாகிய தேவாரம் சிவவாக்கியம் என்றே ஐயந்திரிபறத் துணியப்படும். இவ வாறன்றி, பசுவாக்கியம் என்று நினைபபினும், அந்நினைவு அதிபாதகமாகிய சிவத்து ரோகமாகி, எரிவாய், நரகம் பயக்குமேயிடும். இவ வாகியம் சிவவாக்கியம் என்றே துணிந்து, சருவான்மாக்களும் அதனே ஓதி உணர்ந்து முத்தி பெற்றுய்தற்பொருட் டன்றே, திருபாசமுத்திரமாகிய சிவன், யாவரும் கேட்ப, இவருக்கு நாவுக்கரசு எனப் பெயர்கொடுத்தருளினர்.

*சிவஞானிகள சரியை முதலியன செய்யவேண்டுவதின்றன்றே; அங்ஙனமாக, இத்திருநாவுக்கரசுநாயனுர் சிவஸ்தலங்கடோறுஞ் சென்று, சிவனேத் தரிசித்து வலம் வந்து வணங்கித் துதித்தல்களும், திருக்கோயிற் பிராகாரங்களினும் திருவீதிகளினும் * புற்செதுக்குதலும், பிறவும் செய்தமை என்னையெனின்; இவர் பசுத்துவம் நீங்கித்*

---

* *திருக்கோயிற் பிராகாரங்களினும் திருவீதிகளிலும் உள்ள புல்லைச் செதுக்கு தல் சிவபுண்ணியம் என்பது "சினக ராலயந் தார்ப்பது திருமெழுக் கிடுதல்—புனற்மு கந்தெமை யாட்டுவித்தெமக்கெனப் புரித—தினனு மாலய்த் தகவையி னெழுந்தபுற் சித்த—னனைந முந்துணர் நாண்மல ரெடுத்துட னல்கல்." என்னும் உபதேசகாண்டச் செய்யுளாலும், அறிக.*

தஞ்செயலற்றுச் சிவனேயாய் நின்றமையால், இவை எல்லாம் இவர் செயலாகாது சிவன் செயலேயாய் நிகழ்ந்தன என்க. அது "நஞ்செய லற்றிந்த காமற்ற பின்னு தன்—றன்செய ருனேயென் றுந்தீ பற—தன்னேயே தந்தானென் றுந்தீ பற." என்னும் திருவுந்தியாராலும் உணர்க. இங்ஙனம் இவையெல்லாம் சிவன்செயலாய் நிகழ்தல் எற்றுக்கெனின், ஆன்மாக்களுக்கு அறிவுறுத்தி அவர்களை உய்வித்தற்பொருட்டென்க. அது சிவன் தக்ஷிணமூர்த்தியாய், திருக்கையிற் செபமாலைகொண்டு செபம் பண்ணுதல் உயிர்களுக்கு உய்யுநெறி காட்டுதற்பொருட்டாதல் போலும் என்க. இந்நாயனர் செயலெல்லாம் உயிர்கள் பொருட்டே நிகழ்ந்தன என்பது, "அன்ன தன்மையர் கயிலையை யணைவதற் கருளார்—மன்னு தீந்தமிழ் புவியின்மேற் பின்னையும் வழுத்த—நன்னெ டும்புனற் றடமு மொன் றுடன்கொடு நடந்தார்—பன்ன கம்புனை பரம ரோர் முனிவராம் படியால்." என இங்கும் குறிப்பிக்கப்பட்டமை காண்க. சிவஞானிகள் சரியை கிரியை முதலியவற்றைத் தாங்களாக வேண்டா என்று விடுவதும் இல்லை; செய்துவரல்வேண்டும் என்று சங்கற்பித்துச் செய்வதும் இல்லை; நித்திரை செய்வோர் கையிற் பொருள் அவரறியாது தானே போதல்போல, சிவஞானிகளுக்குச் சரியை கிரியை முதலியன வெல்லாம் தாமே நிகழும். இவ்வாறன்றி, தாங்களே இவற்றைச் செய்யாதொழிந்தோர் நரகத்து வீழ்வர். அது "குறிப்பிடங் காலந்திக்கா சனங்கொள்கை குலங் குணஞ்சீர்—சிறப்புறு வீரதஞ் சீலந் தவஞ்செபந் தியான மெல்லா—மறுத்தற வொழிதல் செய்தன் மருவிடா மன்னு செய்தி—யுறக்குறு பவர் போல் வாய்மை யொழிந்தவை யொழிந்து போமே." எனச் சிவப்பிரகாசத்தினும் "ஞாலநீதியு நான்மறை நீதியும்—பாலருன் மத்தர் பிசாசரி லெனவு—மூறங்கி னேன் கை வெறும்பாக் கெனவுந்—தானே தவிரா தானுற் புரியா—தொழிந்திடி னரியத் தழுந்துத நிடமே." எனச் சங்கற்ப நிராகரணத்தினும் கூறுமாற்றூற் றெளிக.

இந்நாயனர் இவ்வுண்மை நிலையைப் பொருந்திய பெருந்தகைமையினர் என்பது, சமணர்கள் இவரை மிக்க சூட்டினை உடைய நீற்றறையில் ஏழுநாள் இருத்தியும், நஞ்சு கலந்த பாலும் அன்னமும் உண்பித்தும், இவரைக் கொல்லும்பொருட்டு யானையை ஏவியும், இவரைக் கல்லோடு சேர்த்துக்கட்டிக் கடலிலே தள்ளியும், அவைகள் சிறிதாயினும் இவரை வாதிக்காமையானும்; தமது வேண்டுகோளின்படி சிவனது திருவருளினுலே தமது தோளிலே சுலக்குறியும் இடபக்குறியும் பொறிக்கப்பட்டமையாயானும், அப்பூதியடிகளையனுது புத்திரர் விஷத்தினுல் இறந்தபோது அவரை உயிர்ப்பித்தமையானும், திருவீழிமிழலையிலே சிவனடியார்களை அமுதுசெய்வித்தற் பொருட்டுச் சிவனிடத்தே படிக்காசு பெற்றமையானும், வேதாரணியத்திலே வேதங்களாலே திருக்காப்புச் செய்யப்பட்ட திருக்கதவு திறக்கப் பாடினமையானும், திருப்பைஞ்ஞீலிக்குச் செல்லும் வழியிலே சிவனிடத்தே பொதிசோறு பெற்றமையானும், திருவையாற்றிலே கைலாசக் தரிசித்தமையானும், செவ்விதிற் றுணியப்படும். இவை எல்லாம் இவ்வுண்மை நிலையில்லாதாரால் இயலா என்பது "துரியங் கடந்தசுடர்த் தோகையுட னென்றும்—பிரியாதே நிற்கின்ற பெம்மான் - துரியத்தைச்—சாக்கிரத்தே செய்திருளித் தான்செய்யுந் தன்மைகளு—மாக்கிடும் வீண் தன்பாக் கவன்." "கொல்களிரி னீற் றறையி னஞ்சிற் கொலைதவிர்த்தல்—கல்லே மிதப்பாக் கடனீந்த - னல்ல—மருவார் மறைக்காட்டில் வாயிறிறப் பித்த—நிருவாழ் ராளி செயல்." எனத் திருக்களிற்றுப் படியாரிற் கூறுமாற்றூலும், உணர்க. இன்னும் இவர் சிவனது ஆஞ்ஞையினுலே தமது உழவாரம் நழைந்த இடங்களெல்லாம் பொன்னும் ரவரத்தினங்களும் இடக்கக் கண்

டும், அவைகளைப் பருக்கைக்கற்களோடு சமமாக எண்ணி, உழவாரத்தில் ஏற்றிக் குளத்திலே வீழ எறிந்து விட்டமையானும், அரம்பையர்கள் தம்முன் நின்று தம்மை மோகிப்பிக்கும் பொருட்டுப் பலமுயற்சிகள் செய்தும், தமது சித்தநிலை சிறிதும் வேறுபடாது தாம் செய்யும் திருப்பணியிலேயே உறுதிகொண்டு நின்றமையானும், இவரது பெருமை தெளியப்படும். இவ்வருமை "ஓடுஞ் செம்பொனு மொக்கவே நோக்குவார்." "ஏந்திழையார் தஞ்சயனத் தெய்தித்தம் மெய்தொடினுங்—காய்ந்துவர்த்த லேதுறவு காண்." என்னும் திருவாக்குகளால் அறிக. இவர் பரமுத்தி பெற்றமை இங்கே "புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றே னெனப்புகன்று—ரண்ணரிய சிவானந்த ஞான வடிவேயாகி—யண்ணலார் சேவடிக்கீ ழாண்டவர செய்தினர். என்பதனால் உணர்த்தப்பட்டது.

இதுகாறும் கூறியவாற்றால், இந்நாயனர், ஆன்மாக்கள் புறச்சமயப்படுகுழியில் வீழாது சைவமே சற்சமயம் என்று தெளிந்து, அதன்வழி நின்று சிவனே வழிபட்டு உய்யும் பொருட்டு, தமது செயல்களானும், திருவாக்குகளானும், மெய்யறிவுச் சுடர் கொளுத்திய சமயகுரவராயினர் என்பது, தெள்ளிதிற் பெறப்படும். ஆதலால் பரசமயங்களிற் புகாது சிவனே பரமபதி எனத் துணிந்து, இந்நாயனர் காட்டியவாறே விபூதி உருத்திராக்ஷம் என்னும் சிவசின்னங்கள் தரித்து, சிவனே இடையறாது மேன்மேலும் பெருகிவளரும் மெய்யன்பினோடு மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றினாலும் வழிபட்டு உய்தலே நாம் அருமையாகப் பெற்ற இசசரீரத்தினால் பெறப்படும் பயன் என்பது தெளிக. ஓதுவார்க்கும் கேட்பார்க்கும் அன்பை வளர்த்து, கருங்கன் மனமும் கரைந்துருகச் செய்யும் பெருஞ்சிறப்பினதாகியும், காமுகருக்கு இளம்பெண்களுடைய வசனம்போலச சிவனுக்குப் பிரீதியைச செய்யும் இயல்பினதாகியும் விளங்கும் இந்நாயனரது தேவாரத்தைச் சித்தசமாதானத்தோடும் மெய்யன்போடும் விதிப்படி ஓதி உணர்க.

குலச்சிறைநாயனார்புராணம்.

பன்னு தொல்புகழ்ப் பாண்டிநன் னாட்டிடைச
செந்நெ லார்வயற் றீஞகரும் பின்னயற்
றுன்னு பூகப் புறம்பணை சூழ்ந்தது
மன்னு வண்மையி னர்மண மேற்குடி. (க)

அப்ப திக்கு முதல்வாவன் றெரண்டர்தா
மொப்ப ரும்பெரு நம்பியென் றோதிய
செப்ப ருஞ்சீர்க் குலச்சிறை யார்திண்மை
வைப்பி னுற்றிருத் தொண்டின் வழாதவர். (உ)

காரணங்கண் ணுதற்கன்ப ரென்னவே
வாரமாகி மகிழ்ந்தவர் தாண்மிசை
யாரு மன்பொடு வீழ்ந்தஞ் சலிமுகிழ்த்
தீர நன்மொழி யெய்த விசைத்தனார். (கூ)

குறியி னுன்கு குலத்தின ராயினு
நெறியி னக்குல நீங்கின ராயினு
மறிவு சங்கரற் கன்ப ரெனப்பெறிற்
செறிவு றப்பணிந் தேத்திய செய்கையார். (சு)

உலகர் கொள்ளு நலத்தின ராயினு
மலகி றீமைய ராயினு மம்புலி
யிலகு செஞ்சடை யாரடி யாரெனிற்
றலமு றப்பணிந் தேத்துந் தகைமையார். (டு)

பண்பின் மிக்கார் பலரா யினையினு
மூண்ப வேண்டி யொருவ ரினையினு
மெண்பெ ருக்கிய வன்பா லெதிர்கொண்டு
நண்பு கூர்ந்தமு தூட்டு நலத்தினர். (சூ)

பூதி கோவணஞ் சாதனத் தாற்பொலிந்
தாதி தேவர்த மஞ்செழுத் தாமவை
யோது நாவணக் கத்தா லுரைப்பவர்
பாத நாளும் பரவிய பண்பினர். (எ)

இன்ன நல்லொழுக் கத்தினு றீறில்சீர்த்
தென்ன வன்னெடு மாறற்குச் சீர்திகழ்
மன்னு மந்திரி கட்குமே லாகியா
ரொன்ன லார்ச்செற் றுறுதிக்க ணின்றுளார். (அ)

ஆய செய்கைய ராயவ ராறணி
நாய னர்திருப் பாத நவின்றுளார்
பாய சீர்புனை பாண்டிமா தேவியார்
மேய தொண்டுக்கு மெய்த்தொண்டராயினர். (கூ)

புன்ன யத்தரு கந்தர்பொய் நீக்கவுக்
தென்ன னுடு திருநீறு போற்றவு
மன்னு காழியர் வள்ளலார் பொன்னடி
சென்னி சேர்த்தி மகிழ்ந்த சிறப்பினர். (கo)

வாதிற் றோற்ற வமணரை வன்கழுத்
தீது நீங்கிட வேற்றுவித் தார்திறம்
யாது போற்றினேன் மேலினி யேத்துகேன்
வேத நீதி மிழலைக் குறும்பர் தாள். (கக)

குலச்சிறைநாயனார்புராண முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - க,எகo.

சூசனம்.

க. சிவனடியார் பத்தி.

சிவன் சுவதந்திரர் நாம் பரதந்திரர் சிவனுக்கும் சிவபத்தர்களுக்கும் நாம் அடிமை என்று தெளிந்த மெய்யுணர்வு உடையோர், தாம் எத்தனைச் செல்வத்தோடும் எத்தனை அதிகாரத்தோடும் கூடி யிருப்பினும், சிறிதாயினும் அவைகளாலே அகங் காரம் கொள்ளாமல், சிவனடியார்களைக் கண்டால், அவர்கள் எக்குலத்தர்களாயினும், அவர்களைச் சிவன் எனவே பாவித்து, எதிர்கொண்டு வணங்கித் துதித்து, விதிப்படி அமுதுசெய்விப்பர். இப்படிச் சிவனடியாரிடத்து அன்புடையவரே சிவனிடத்து அன்புடையர் என்று தெளியப்படுவர். அகங்காரம் முதலியன உடையோர் சிவனது திருவருளை அடையார்கள். அது "ஒருமையுட னீசனரு ளோங்கி யென்றுந் தங்க— லருமை யருமை யருமை - பெருமையிடம்—பாங்காரங் கோப மபிமான மாசையி வை—நீங்காத போது தானே." என்னும் சிவபோகசார வெண்பாவால் அறிக. இக் குலச்சிறைநாயனர், தாம் பெருஞ்செல்வரும் பாண்டியனுக்கு முதன்மந்திரியாருமாய் இருந்தும், சிறிதும் செருக்கு உறுது, இச்சிவபுண்ணியத்தைச செய்தமையால், சிவனி டத்தே மெய்யன்புடையர் என்பது தெள்ளிதிற்றுணியப்படும். இவரது பத்திச்சிறப் "வெற்றவே யடியா ரடிமிசை வீழும் விருப்பினன் வெள்ளோ ரணியுங்—கொற்றவன் றனக்கு மந்திரியாய குலச்சிறை குலாவிமின் றேத்து—மொற்றைவெள் விடைய னும்பரார் தலைவ னுலகினி லியற்கையை யொழிந்திட்—டற்றவர்க் கற்ற சிவனுறை கின்ற வாலவா யாவது மிதுவே. கணங்களாய் வரிணுந் தமியராய் வரினு மடியவர் தங்களைக் கண்டாற்—குணங்கொடு பணியுங் குலச்சிறை பரவுங் கோபுரஞ் சூழ்ம ணிக் கோயின்—மணங்கமழ் கொன்றை வாளராமதியம் வன்னிவண் கூவிள மாலை— யணங்குவீற் றிருந்த சடைமுடி யண்ண லாலவா யாவது மிதுவே. நலமில ராக நல மதுண் டாக நாடவர் நாடறி கின்ற—குலமில ராகக் குலமதுண் டாகத் தவம்பணி குலச்சிறை பரவுங்.—கலைமலி காரத்தன் மூவிலை வேலன் கரியுரி மூடிய கண்ட— னலைமலி புனல்சேர் சடைமுடி யண்ண லாலவா யாவது மிதுவே. நாவணங் கியல்பா மஞ்செழுத் தோதி நல்லராய் நல்லியல் பாருங்—கோவணம் பூதிசாதனங் கண்டாற் றொழுதெழு குலச்சிறை போற்ற—வேவணங கியல்பா மிராவணன் றிண்டோ ளிரு பது நெரிதர வூன்றி—யாவணங் கொண்ட சடைமுடி யண்ண லாலவா யாவது மிதுவே. தொண்டரா யுள்ளார் திசைதிசை தோறுந் தொழுதுதன் குணத்தினைக் குலாவக்—கண்டுநா டோறு மின்புறுகின்ற குலச்சிறை கருதினின் றேத்தக்—குண் டரா யுள்ளார் சாக்கியர் தங்கள் குறியின்க ணெறி யிடைவாரா—வண்டர் ரா யகன்ரு னமர்த்துவீற் றிருந்த வாலவா யாவது மிதுவே." எனத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாற் புகழப்பட்டமை காண்க.

உ. சைவசமயத்தை வளர்க்க விரும்பல்.

புறச்சமயிகளுடைய துர்ப்போதனையினாலே ஆன்மாக்கள் சற்சமயமாகிய சைவத் தை விட்டு அவர்களது சமயப் படுகுழியிலே விழுந்து கெடுதலைக்காணின், மிக இரங் கிக் கவலைகொண்டு, அப்புறச்சமயங்களை ஒழித்து, சைவத்தை வளர்த்தற்கு வேண் டும் முயற்சியைச் சிரத்தையோடு செய்தல் மிக மேலாகிய சிவபுண்ணியமாம்: அது செய்யாமை மிகக் கொடிய பாதகமாம். அம்முயற்சி சிரத்தையோடு செய்யப்படுமா யின், வேண்டுவார் வேண்டியதே ஈவாராகிய சிவன் அதனை முற்றுவித்தருளுவர். இக் குலச்சிறைநாயனர் இச்சிவபுண்ணியத்தான் மிகச் சிறப்புற்றவர் என்பது, சமணர் களுடைய பொய்ச் சமயத்தைக் கெடுத்துப் பாண்டிநாடெங்கும் திருநீற்றை வளர்க்கும்

பொருட்டுத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருடைய திருவடிகளே வணங்கினமையாலும், வாதிலே அந்நாயனாருக்குத் தோற்ற சமணர்களைக் கழுவிலே ஏற்றுவித்தமையாலும், செவ்விதிற் றெளியப்படும். இவர் இவ்வாறு செய்தபின்பு, பாண்டி நாடெங்கும் புறச்சமயமாகிய இருள்கெடச் சைவசமயமாகிய பேரொளி தழைத்து ஓங்கியதன்றோ? ஆதலால், இதனின் மிக்க புண்ணியம் வேறு இல்லை எனத் தெளிந்து, சைவத்தை வளர்த்தற்குச் சிவனது திருவருளையே முன்னிட்டுக்கொண்டு இடைவிடாது பெருமுயற்சி செய்க.

பெருமிழலைக்குறும்பநாயனார்புராணம்.

சூத நெருங்கு சூலத்தெங்கு பலவு பூகஞ் சூழ்புடைத்தாய்
வீதி தோறு நீற்றினொளி விரிய மேவி விளங்குபதி
நீதி வழுவா நெறியினராய் நிலவுங் குடியா னெடுநிலத்து
மீது விளங்குந் தொன்மையது மிழலை நாட்டுப் பெருமிழலை. (க)

அன்ன தொன்மைத் திருப்பதிக்க ணதிபர் மிழலைக் குறும்பனார்
சென்னி மதியம் வைத்தவர்த மடியார்க் கான செய்பணிக
ளின்ன வண்ண மென்றவர்தா முரையா முன்ன மெதிரேற்று
முன்ன முவந்து செய்வாராய் முதிரு மறிவின் பயன்கொள்வார். (உ)

தொண்டர் பலரும் வந்தீண்டி யுண்ணத் தொலையா வமுதூட்டிக்
கொண்டு செல்ல விருந்திய முகந்து கொடுத்துக் குறைந்தடைவா
வண்டு மருவுங் குழலுமையாள் கேள்வன் செய்ய தாளென்னும்
புண்டரீக மகமலரில் வைத்துப் போற்றும் பொற்பினர். (ங)

இத்தன் மையராய் நிகழுநா ளெல்லை யில்லாத் திருத்தொண்டின்
மெய்த்தன் மையினை யுலகறிய விதியால் வணங்கி மெய்யடியார்
சித்த நிலவுந் திருத்தொண்டத் தொகைபா டியதும் பிடைப்பணிர்த்து
நித்த னருள்பெற் றவர்பாத நினைக்கு நியமத் தலைநின்றார். (ச)

மையார் தடங்கட் பரலையார் மணவா ளன்றன் மலர்க்கழல்கள்
கையாற் றொழுது வாய்வாழ்த்தி மனத்தா னினைக்குங் கடப்பாட்டிற்
செய்யாள் கோனு நான்முகனு மறியாச் செம்பொற் றுளினைக்கீ
ழுய்வான் சேர வுற்றநெறி யிதுவே யென்றன் பினிலுய்த்தார். (ஞ)

நாளு நம்பி யாரூரர் நாம நவின்ற நலத்தாலே
யாளும் படியா ணிமாதி சித்தி யான வணைந்ததற்பின்
மூளுங் காத லுடன்பெருக முதல்வர் நாமத் தஞ்செழுத்துங்
கேளும் பொருளு முணர்வுமாம் பரிசு வாய்ப்பக் கெழுமினார். (ட)

இன்ன வாறே யிவரொழுக வேறு கொடிமே லுயர்த்தவர்தாம்
பொன்னின் கழல்கண் மண்ணின்மேற் பொருந்தவத்து வழக்குரைத்து
மன்னு மோலை யவைமுன்பு காட்டி யாண்ட வன்றொண்டர்
சென்னி மதிதோய் மாடமலி கொடிக்கோ ளூரைச் சேர்வுற்றார். (ண)

அஞ்சைக் களத்து நஞ்சுண்ட வமுதைப் பரவி யணைவுறுவார்
செஞ்சொற் றமிழ்மா லைகண்மொழியத் தேவர் பெருமா னருளாலே
மஞ்சிற் றிகழும் மிடகயிலைப் பொருப்பி லெய்த வரும்வாழ்வு
நெஞ்சிற் றெளிய விங்குணர்ந்தார் நீடு மிழலைக் குறும்பனார். (அ)

மண்ணிற் றிகழுந் திருநாவ லூரில் வந்த வன்ரெண்டர்
நண்ணற் கரிய திருக்கயிலை நாளை யெய்த நான்பிரிந்து
கண்ணிற் கரிய மணிகழிய வாழ்வார் போல வாழேனென்
றெண்ணிச் சிவன்சே வின்றேசென் றடைவன் யோகத் தாலென்பார். (ஆ)

நாலு கரணங் களுமொன்றாய் நல்ல வறிவு மேற்கொண்டு
காலும் பிரம நாடிவழிக் கருத்துச் செலுத்தக் கபாலநடு
வேல வேமுன் பயின்றதெறி யெடுத்த மறைமூ லந்திறப்ப
மூல முதல்வர் திருப்பாத மடைவார் கயிலை முன்னடைந்தார். (கo)

பயிலச் செறிந்த யோகத்தாற் பரவை கேள்வன் பாதமுறக்
கயிலைப் பொருப்ப ரடியடைந்த மிழலைக் குறும்பர் கழல்வணங்கி
மயிலைப் புறங்கொண் மென்சாயன் மகளிர் கிளவி யாழிஞெடுங்
குயிலைப் பொருவுங் காரைக்கா லம்மை பெருமை கூறுவாம். (கக)

பெருமிழலைக்குறும்பநாயனார்புராணம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - க,எஉக.

சூ ச னை ம்.

குருபத்தி முதிர்ச்சி.

கண்மணியானது இது நன்று இது தீது என்று காட்டுதல்போலச் சற்குருவானவர் இது நன்னெறி இது தீநெறி என்று உணர்த்துவோராதலால், அவரைச் சிவபெருமான் எனவே பாவித்து, நியமமாக மனம் வாக்குக் காயங்களிஞலே சிரத்தையுடன் வழிபடுவோர் சித்தி முத்திகளைப் பெறுவர். அது "சிவனே சிவஞானி யாதலாற் சுத்த—சிவனே யெனவடி சேரவல் லார்க்கு—நவமான தத்துவ நன்முத்தி நண்ணும்—பவமான தின்றிப் பரலோக மாமே. தெளிவு குருவின் றிருமேனி காண்ட—தெளிவு குருவின் றிருவார்த்தை கேட்ட—தெளிவு குருவின் றிருநாமஞ் செப்ப—தெளிவு குருரூபஞ் சிந்தித்த ருனே." எனத் திருமந்திரத்திற் கூறுமாற்ருல் அறிக. இப்பெருமிழலைக்குறும்பநாயனர் உலகம் உய்யும்பொருட்டுத் திருத்தொண்டத் தொகை அருளிச்செய்த சமயகுரவராகிய சுந்தரமூர்த்திநாயனரை நியமமாகச் சிரத்தையோடு சிந்தித்துத் துதித்து வணங்கினமையாலன்ரே, அணிமா முதலிய அட்ட சித்திகளேயும் பெற்று, ஸ்ரீபஞ்சாக்ஷரமே தமக்குச் சுற்றமும் பொருளும் உணர்வும் எனக்கொண்டார். இவரது குருபத்தி முதிர்ச்சி, சுந்தரமூர்த்திநாயனர் உத்தராகைலாசத்தை அடைவதை முன்னுணர்ந்து, தாம் அவரைப் பிரிதலாற்ருமையால் முதலுள் யோகமுயற்சியினுலே பிரமரந்திரவழியால் உடலினின்றும் பிரிந்து, திருக்கைலாசத்தை அடைந்தமையாலே, செவ்விதிற்றெளியப்படும்.

காரைக்காலம்மையார்புராணம்.

மானமிகு தருமத்தின் வழிநின்று வாய்மையினி
லீனமில்சீர்ப் பெருவணிகர் குடிதுவன்றி யோங்குபதி
கூனல்வளை திரைசுமந்து கொண்டேறி மண்டுகழிக்
கானன்மிசை யுலவுவளம் பெருகுதிருக் காரைக்கால். (க)

வங்கமலி கடற்காரைக் காலின்கண் வாழ்வணிகர்
தங்களுலத் தலைவனுர் தனதத்த னர்தவத்தா
லங்கவர்பாற் றிருமடந்தை யவதரித்தா ளெனவந்து
பொங்கியபே ரழகுமிகப் புனிதவதி யார்பிறந்தா. (உ)

வணிகர்பெருங் குலம்விளங்க வந்துபிறந் தருளியபி
ணணிகிளர்மெல் லடிதளர்வுற் றசையுநடைப் பருவத்தே
பணியணிவார் கழற்கடிமை பழகிவரும் பாங்குபெறத்
தணிவில்பெரு மனக்காத றதும்பவரு மொழிபயின்றூர். (ங)

பல்பெருநற் கிளையுவப்பப் பயில்பருவச் சிறப்பெல்லாஞ்
செல்வமிகு தந்தையார் திருப்பெருகுஞ் செயல்புரிய
மல்குபெரும் பாராட்டின் வளர்கின்றூர் விடையவர்பா
லல்கியவன் புடனழகின் கொழுந்தெழுவ தெனவளர்வார். (ச)

வண்டல்பயில் வனவெல்லாம் வளர்மதியம் புனைந்தசடை
யண்டர்பிரான் றிருவார்த்தை யணையவரு வனபயின்று
தொண்டர்வரிற் றொழுதுதா னியர்போற்றத் தூணைமூலைகள்
கொண்டுநுசுப் பொதுங்குபதங் கொள்கையினிற் குறுகினூர். (ஞ)

நல்லவென வுறுப்புனூ லவருரைக்கு நலநிரம்பி
மல்குபெரு வனப்புமீக் கூரவரு மாட்சியினு
லில்லிகவாப் பருவத்தி லிவர்கண்மர பினுக்கேற்குந்
தொல்குலத்து வணிகர்மகட் பேசுதற்குத் தொடங்குவார். (ட)

நீடியசீர்க் கடனுகை நிதிபதியென் றுலகின்கட்
பாடுபெறு புகழ்வணிகன் பயந்தகுல மைந்தனுக்குத்
தேடவருந் திருமரபிற் சேயிழையை மகட்பேசி
மாடமலி காரைக்கால் வளருகரின் வரவிட்டான். (ண)

வந்தமூ தறிவோர்கண் மணங்குறித்தம் மனைபுகுந்து
தந்தையார் தனதத்தன் றனைநேர்ந்து நீபயந்த
பைந்தொடியை நிதிபதிமைந் தன்பரம தத்தனுக்கு
மூர்த்தைமர பினுக்கேற்கு *மூறைமைமணம் புரிகென்றூர். (அ)

மற்றவனு முறைமையினுன் மணமிசைந்து செலவிடச்சென்
றுற்றவர்க ளுரைகேட்ட நிதிபதியு முயர்சிறப்புப்
பெற்றனன்போ லுவர்த்தனிப் பெருமகற்குத் திருமலியுஞ்
சுற்றமுடன் களிகூர்ந்து வதுவைவினைத் தொழில்பூண்டான். (க)

மணமிசைந்த நாளோலை செலவிட்டு மங்கலநா
ளணையவது வைத்தெழில்க ளானவெலா மமைவித்தே
யிணரலங்கன் மைந்தனையு மணவணியி னெழில்விளக்கிப்
பணைமுரச மெழுந்தார்ப்பக் காரைக்காற் பதிபுகுந்தார். (60)

அளிமிடைதார்த் தனதத்த ணிணிமாடத துள்புகுந்து
தெளிதருநூல் வீதிவழியே செயன்முறைமை செய்தமைத்துத்
தளிரடிமென் னகைமயிலைத் தாதவிழதார்க் காளைக்குக்
களிமகிழ்சுற் றம்போற்றக் கலியாணஞ் செய்தார்கள். (61)

மங்கலமா மணவினைகண் முடித்தியல்பின் வைகுநாட்
டங்கள்குடிக் கரும்புதல்வி யாதலினற் றனதத்தன்
பொங்கொலிநீர் நாகையினிற் போகாமே கணவனுட
னங்கணமர்ந் தினிதிருக்க வணிமாட மருங்கமைத்தான். (62)

மகட்கொடையின் மகிழ்விறகுகும் வரம்பிறனை கொடுத்ததற்பி
னிகர்ப்பரிய பெருஞ்சிறப்பி னிதிபதிதன் குலமகனுக்
தகைப்பில்பெருங் காதலினுற் றங்குமனே வளம்பெருக்கி
மிகப்புரியுங் கொள்கையினின் மேம்படுதன் மேவினனன். (63)

ஆங்கவன்ற னில்வாழ்க்கை யருந்துணையா யமர்கின்ற
பூங்குழலா ரவர்தாமும் பொருவிடையா நிருவடிகட
ழோங்கியவன் புறுகாத லொழிவின்றி ாகபெருகப
பாங்கில்வரு மினையறத்தின் பண்புவ ரா மையிற்பயில்வார். (64)

நம்பரடி யாரணைந்தா னல்லதிரு வமுதளித்துஞ்
செம்பொன்னு நவமணியுஞ் செழுந்துகிலு முதலான
தம்பரிவி னுலவர்க்குத் தகுதிபின்வேண் டுவகொடுத்தது
மும்பர்பிரான் றிருவடிக்கு முணர்வுக வொழுகுகாள். (65)

பாங்குடைய நெறியின்கட் பயில்பரம தத்தஉறுக்கு
மாங்கனிக ளோரிரண்டு வகுத்தணைந்தார் சிலாகொடுப்ப
வாங்கவைதான் முன்வாங்கி யவாவேண்டுங குறையளிதே
யீங்கிவற்றை யில்லத்துக கொடுக்கவென வியம்பினனன். (66)

கணவன்ருன் வரவிடுத்த களியிரண்டுங கைகொண்டு
மணமலியு மலர்க்கூந்தன் மாதரார் வைத்ததற்பின்
பணவரவம் புனைந்தருளும் பரமனா நிருத்தொண்ட
ருணவின்றி வேட்கையினு லொருவாமனை யுட்புகுந்தார். (67)

வேதங்கண் மொழிந்தபிரான் மெய்த்தொண்டர் சிலகண்டு
நாதன்ற னடியாரைப பகிதீர்பபே னெனநண்ணிப்
பாதங்கள் விளக்கநீர் முன்னளித்துப பரிகலம்வைத்
தேதங்தீர் நல்விருந்தா வின்னடிசி னூட்டுவார். (68)

கறியமுதங் குதவாதே நிருவமுது கைகூட
வெறிமலர்மேற் நிருவனையார் விடையவன்ற னடியாரே
பெறலரிய விருந்தாலும் பேறிதன்மே லில்லையெனு
மறிவினரா யவரமுது செய்வதனுக் காதரிப்பார். (69)

இல்லாளன் வைக்கவெனத் தம்பக்கன் முன்னிருந்த
நல்லநறு மாங்கனிக ளிரண்டினிலொன் றைக்கொண்டு
வல்விரைந்து வந்தணைந்து படைத்தமன மகிழ்ச்சியினு
லல்லறீர்ப் பவரடியார் தமையமுது செய்வித்தார். (உ0)

மூப்புறுமத் தளர்வாலு முதிர்ந்துமுடு கியவேட்கைத்
தீப்பசியி னிலேயாலு மயர்ந்தணைந்த திருத்தொண்டர்
வாய்ப்புறுமென் சுவையடிசின் மாங்கனியோ டிணிதருந்திப்
பூப்பயின்மென் குழல்மடவார் செயலுவந்து போயினர். (உக)

மற்றவர்தாம் போயினபின் மனைப்பதியா கியவணிக
னுற்றபெரும் பகலின்க ணேங்கியபே ரில்லெய்திப்
பொற்புறமுன் னீராடிப் புகுந்தடிசில் புரிந்தயிலக்
கற்புடைய மடவாருங் கடப்பாட்டி லூட்டுவார். (உஉ)

இன்னடிசில் கறிகளுட னெய்துமுறை யிட்டதற்பின்
மன்னியசீர்க் கணவன்முன் மனையிடைமுன் வைப்பித்த
நன்மதுர மாங்கனியி லிருந்ததனை நறுங்கூந்த
லன்னமனை யார்தாமுங் கொடுவந்து கலத்தளித்தா. (உங)

மனைவியார் தாம்படைத்த மதுரமிக வாய்த்தகனி
தனைநுகர்ந்த வினியசுவை யாராமைத் தார்வணிக
னினையதொரு பழமின்னு முளததனை யிடுகவென
வனையதுதாங் கொண்டுவர வணைவார்போ லங்ககன்றார். (உச)

அம்மருங்கு நின்றயர்வா ருருங்கனிக்கங் கென்செய்வார்
டெய்ம்மறந்து நினைந்துற்ற விடத்துதவும் விடையவர்தா
டம்பூ ர்கொண் டுணர்தலுமே யவரருளாற் முழ்குழலார்
கை யருங்கு வந்திருந்த தநிமதுரக் கனியொன்று. (உஞ)

மற்றதனைக் கொடுவந்து மகிழ்ந்திடலு மயின்றதனி
லுற்றசுவை யமுதினுமேற் படவுளதா யிடவிதுதான்
முற்றருமாங் கனியன்று மூவுலகிற் பெறற்கரிதாற்
பெற்றதுவே றெங்கென்று பெய்வளையார் தமைக்கேட்டான். (உசு)

அவ்வுரைகேட் டலுமடவா ருருளுடையா ரளித்தருளுஞ்
செவ்வியபே ரருள்விளம்புந் திறமன்றென் றுரைசெய்யார்
கைவருகற் புடைநெறியாற் கணவனுரை காவாமை
மெய்வழியன் றெனவிளம்பல் விடமாட்டார் விதிர்ப்புறுவார். (உஎ)

செய்தபடி சொல்லுவதே கடனென்னுஞ் சீலத்தான்
மைதழையுங் கண்டர்சே வடிகண்மனத் துறவணங்கி
யெய்தவருங் கனியளித்தா ரியாரென்னுங் கணவனுக்கு
மொய்தருபூங் குழன்மடவார் புகுந்தபடி தனைமொழிந்தார். (உஅ)

ஈசனரு ளெனக்கேட்ட வில்விறைவ னதுதெளியான்
வாசமலர்த் திருவனையார் தமைநோக்கி மற்றிதுதான்
றேசுடைய சடைப்பெருமான் றிருவருளே லின்னமுமோ
ராசில்கனி யவனருளா லழைத்தளிப்பா யெனமொழிந்தான். (உக)

பாங்ககன்று மனேவியார் பணியணிவார் தமைப்பரலி
மீங்கிதளித் தருளீரே லென்னுரைபொய் யாமென்ன
மாங்கனியொன் றருளால்வந் தெய்துதலு மற்றதனே
யாங்கவன்கைக் கொடுத்தலுமே யதிசயித்து வாங்கினுன். (கூ0)

வே று.

வணிகனுந் தன்கைப் புக்க மாங்கனி பின்னேக் காணுன்
றணிவரும் பயமேற் கொள்ள வுள்ளமுந் தடுமா றெய்தி
யணிகுழ லவரை வேறே ரணங்கெனக் கருதி நீங்குந்
துணிவுகொண் டெவர்க்குஞ் சொல்லான் மிருடர்வின்றி யொழுகு காளில். (கூக)

வீடுவதே யெண்ண மாக மேவிய முயற்சி செய்வான்
படுதிரைப் பரவை மீது படர்கலங் கொண்டு போகி
நெடுநிதி கொணர்வே னென்ன நிரந்தபல் கிளேஞ ராகும்
வடுவில்சீர் வணிக மாக்கண் மரக்கலஞ் சமைப்பித். தார்கள். (கூஉ)

கலஞ்சமைத் ததற்கு வேண்டுங் கம்மிய ருடனே செல்லும்
புலங்களில் விரும்பு பண்டம் பொருந்துவ நிரம்ப வேற்றிச்
சலந்தரு கடவுட் போற்றித் தலேமையா நாய்கன் முனு
நலந்தரு நாளி லேறி நளிர்திரைக் கடன்மேற் போனுன். (கூங)

கடன்மிசை வங்க மோட்டிக் கருதிய தேயந் தன்னி
லடைவுறச சென்று சேர்ந்தங் களவில்பல் வளங்கண் முற்றி
யிடைதில நாட்க ணீங்க மீண்டுமக் கலத்தி லேறிப்
படர்புனற் கன்னி நாட்டோர் பட்டின மருங்கு சேர்ந்தான். (கூச)

அப்பதி தன்னி லேறி யலகில்பல் பொருள்க ளாக்கு
மொப்பின்மா நிதிய மெல்லா மொருவழி பெருக வுய்த்து
மெய்ப்புகழ் விளங்கு மவவூர் விரும்பவோர் வணிகன் பெற்ற
செப்பருங் கன்னி தன்னேத் திருமலி வதுவை செய்தான். (கூஞ)

பெறலருந் திருவி ஞேடப் பெருமணம் புணர்ந்து முன்னே
யறலிய னறுமென் கூந்த லணங்கனு டிறத்தி லற்றம்
புறமொரு வெளியு ருமற் பொதிந்தசிந் தனேயி னேடு
முறைமையின் வழாமை வைகி முகமலர்ந் தொழுகு காளில். (கூசு)

முருகலர் சோலே மூதூ ரதன்முதல் வணிக ரோடு
மிருநிதிக் கிழவ னென்ன வெய்திய திருவின் மிக்குப்
பொருகடற் கலங்கள் போக்கும் புகழினன் மனேவி தன்பாற்
பெருகொளி விளக்குப் போலோர் பெண்கொடி யரிதிற் பெற்றான். (கூஎ)

மடமக டன்னேப் பெற்று மங்கலம் பேணித் தான்முன்
புடனுறை வஞ்சி நீத்த வொருபெரு மனேவி யாரைத்
தொடர்வற நினேந்து தெய்வத் தொழுகுல மென்றே கொண்டு
கடனமைத் தவர்த நாமங் காதல்செய் மகவை யிட்டான். (கூஅ)

இன்னிலே யிவனிங் கெய்தி யிருந்தன னிப்பா வீடுங்
கன்னிமா மதில்சூழ் மாடக் காரைக்கால் வணிக னுன்
தன்னிகர் கடந்த செல்வத் தனதத்தன் மகளார் தாமு
மன்னிய கற்பி னேடு மனேயறம் புரிந்து வைக. (கூக)

விளைவளம் பெருக்க வங்க மீதுபோம் பரம தத்தன்
வளர்புகழ்ப் பாண்டி நாட்டோர் மாநகர் தன்னின் மன்னி
யளவின்மா கிதிய மாக்கி யமர்ந்தினி திருந்தா னென்று
கிளரொளி மணிக்கொம் பன்னார் கிளைஞர்தாங் கேட்டா ரன்றே. (சஅ)

அம்மொழி கேட்ட போதே யணங்களூர் சுற்றத் தாருந்
தம்முறு கிளைஞர்ப் போக்கி யவனிலே தாமுங் கேட்டு
மம்மர்கொண் மனத்த ராகி மற்றவ னிருந்த பாங்கர்க்
கொம்மைவெம் முலையி னாளைக் கொண்டுபோய் விடுவ தென்றார். (சக)

மாமணிச் சிவிகை தன்னின் மடநடை மயிலன் னாரைத்
தாமரைத் தவிசில் வைகுந் தனித்திரு வென்ன வேற்றிக்
காமரு கழனி வீழ்த்துக் காதல்செய் சுற்றத் தாருந்
தேமொழி யவருஞ் சூழச் சேணிடைக் கழிந்து சென்றார். (சஉ)

சிலபகல் கடந்து சென்று செந்தமிழ்த் திருநா டெய்தி
மலர்புகழ்ப் பரம தத்தன் மாநகர் மருங்கு வந்து
குலமுதன் மனைவி யாரைக் கொண்டவந் தணைந்த தன்மை
தொலைவில்சீர்க் கணவ னுக்குச் சொல்லிமுன் செல்ல விட்டார். (சங)

வந்தவ ரணைந்த மாற்றங் கேட்டலும் வணிகன் றானுஞ்
சிந்தையி லச்ச மெயதிச செழுமணம் பின்பு செய்த
பைந்தொடி தனையுங் கொண்டு பயந்தபெண் மகவி னோடு
முந்துறச் செல்வே னென்று மொய்குழ லவர்பால் வந்தான். (சச)

தானுமம் மனைவி யோடுந் தளர்நடை மகவி னோடு
மானிளம் பிணைபோ னின்ற மனையியா ரடியிற் றாழ்ந்தே
யானும தருளால் வாழ்வே னிவ்வினங் குழவி தானும்
பான்மையா னுமது நாம மென்றுமுன் பணிந்து வீழ்ந்தான்.

கணவன்றன் வணங்கக் கண்ட காமர்பூங் கொடிய னாரு
மிணைவுறுஞ் சுற்றத் தார்பா லச்சமோ டொதுங்கி நிற்ப
வுணர்வுறு கிளைஞர் வெள்கி யுன்றிரு மனைவி தன்னை
மணமலி தாரி னாய்நீ வணங்குவ தென்கொ லென்றார். (சஙு)

மற்றவர் தம்மை நோக்கி மானுட மிவர்தா மல்லர்
நற்பெருந் தெய்வ மாத னானறிந் தகன்ற பின்பு
பெற்றவிம் மகவு தன்னைப் பேரிட்டே னுத லாலே
பொற்பதம் பணிந்தே னீரும் போற்றுதல் செய்மி னென்றான். (சஎ)

என்றபின் சுற்றத் தாரு மிதுவென்கொ லென்று நின்றார்
மன்றலங் குழலி னாரும் வணிகன்வாய் மாற்றங் கேளாக்
கொன்றைவார் சடையி னார்தங் குரைகழல் போற்றிச் சிந்தை
யொன்றிய நோக்கின் மிக்க வுணர்வுகொண் டுரைசெய் கின்றார். (சஅ)

ஈங்கிவன் குறித்த கொள்கை யிதுவினி யிவனுக் காகத்
தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழித்திங் குன்பா
லாங்குநின் றுள்கள் போற்றும் பேய்வடி வடியே னுக்குப்
பாங்குற வேண்டு மென்று பரமனைப் பரவி நின்றார். (சஙு)

ஆனவப் பொழுது மன்று ளாடுவோ ரருளி னுலே
மேனெறி புணர்வு கூர வேண்டிற்றே பெறுவார் மெய்யி
னானவூ வனப்பை யெல்லா முதறியெற் புடம்பே யாகி
வானமு மண்ணு மெல்லாம் வணங்குபேய் வடிவ மானார். (ரூ0)

மலர்மழை பொழிந்த தெங்கும் வானதுந் துபியி னுத
மூலகெலா நிறைந்து விம்ம வும்பரு முனிவர் தாமும்
குலவினர் கணங்க ளெல்லாங் குணலிபிட் டனமுன் னின்ற
தொலிவில்பல் சுற்றத் தாருந் தொழுதஞ்சி யகன்று போனார். (ரூக)

உற்பவித் தெழுந்த ஞானத் தொருமையி னுமைகோன் றன்னை
யற்புதத் திருவந் தாதி யப்பொழு தருளிச செய்வார்
பொற்புடைச் செய்ய பாத புண்டரீ கங்கள் போற்று
நற்கணத் தினிலொன் றாகி னுனென்று நயந்து பாடி. (ரூஉ)

ஆய்ந்தசீ ரிரட்டை மாலை யந்தாதி யெடுத்துப பாடி
யேய்ந்தபே ருணர்வு பொங்க வெயிலொரு மூன்ற முன்னுட்
காய்ந்தவ ரிருந்த வெள்ளிக் கைலைமால் வரையை நண்ண
வாய்ந்தபே ரருண்முன் கூர வழிப்படும் வழியால் வந்தார். (ரூசு)

கண்டவர் வியப்புற் றஞ்சிக் கையகன் றேடு வார்கள
கொண்டதோர் வேடத் தன்மை யுள்ளவா கூறக் கேட்டே
யண்டர்நா யகனு ரென்னை யறிவரே லறியா வாய்மை
யெண்டிசை மாக்க ளுக்கியா னெவ்வரு வாயென் னென்பார். (ரூச)

வடதிசைத் தேச மெல்லா மனத்தினுங் கடிதிற் சென்று
தொடையலி ழிதழி மாலைச் சூலபா ணியனூர் மேவும்
படரொளிக் கைலை வெற்பிற் பாங்கணேற் தாங்குக் காலி
னடையினைத் தவிர்ந்து பார்மேற் றலையினு னடந்து சென்றார். (ரூடு)

தலையினு னடந்து சென்று சுகுகர னிருந்த வெள்ளி
மலையின்மே லேறும் போது மகிழ்ச்சியா லன்பு பொங்கக்
கலையிளந் திங்கட் கண்ணிக் கண்ணுத லொருபா கத்துச
சிலைநுத விமைய வல்லி திருக்கணேக் குற்ற தன்றே. (ரூஈ)

அம்பிகை திருவுள் ளத்தி னதிசயித் தருளித் தாழ்ந்து
தம்பெரு மானை நோக்கித் தலையினு னடந்திங் கேறு
மெம்பெரு மானே றெற்பின் யாக்கையன் பென்னே யென்ன
நம்பெரு மாட்டிக் கங்கு நாயக னருளிச் செய்வான். (ரூஎ)

வருமிவ ணம்மைப் பேணு மம்மைகா ணுமையே மற்றிப்
பெருமைசேர் வடிவும் வேண்டிப் பெற்றன ளென்று பின்றை
யருகுவந் தணைய நோக்கி யம்மையே யென்னுஞ் செம்மை
யொருமொழி யுலக மெல்லா முய்யவே யருளிச் செய்தார். (ரூஅ)

அங்கண னம்மை யேயென் றருள்செய வப்பா வென்று
பங்கயச் செம்பொற் பாதம் பணிந்துவீழ்ந் தெழுந்தார் தம்மைச்
சங்கவெண் குழையி னருந் தாமெதிர் நோக்கி நம்பா
லிங்குவேண் டுவதெ னென்ன விறைஞ்சின்ன் றியம்பு கின்றார். (ரூக)

இறவாத வின்ப வன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றூர்
பிறவாமை வேண்டு மீண்டும் பிறப்புண்டே லுன்னே யென்று
மறவாமை வேண்டு மின்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
யறவாரீ யாடும் போதுன் னடியின்கீ ழிருக்க வென்றூர். (கூ0)

கூடுமோ தருள்கொ டுத்துக் குலவுதென் றிசையி லென்று
நீடுவாழ் பழன மூதூர் நிலவிய வாலங் காட்டி
லாடுமா நடமு நீகண் டானந்தஞ் சேர்ந்தெ போதும்
பாடுவாய் நம்மை யென்றூன் பரவுவார் பற்றூய் நின்றூன். (கூக)

அப்பரி சருளப் பெற்ற வம்மையுஞ் செம்மை வேத
மெய்ப்பொரு ளானூர் தம்மை விடைகொண்டு வணங்கிப் போந்து
செப்பரும் பெருமை யன்பாற் றிகழ்திரு வாலங் காடா
நற்பதி தலேயி னுலே நடந்துபுக் கடைந்தா ரன்றே. (கூஉ)

ஆலங்கா டதனி லண்ட முறநிமிர்ந் தாடு கின்ற
கோலங்காண் பொழுது கொங்கை திரங்கியென் றெடுத்துத் தங்கு
மூலங்கா ணுதார் தம்மை மூத்தநற் பதிகம் பாடி
ஞாலங்கா தலித்துப் போற்று நடம்போற்றி நண்ணு நாளில். (கூங)

தே வு.

மட்டவிழ்கொன் றையினூர்தந் திருக்கூத்து முன்வணங்கு
மிட்டமிகு பெருங்காத லெழுந்தோங்க வியப்பெய்தி
யெட்டியில வம்மீகை யெனவெடுத்துத் திருப்பதிக
கொட்டமுழ வங்குழக ஞடுமெனப் பாடினூர். (கூச)

மடுத்தபுனல் வேணியினு ரம்மையென மதுரமொழி
கொடுத்தருளப் பெற்றூரைக் குலவியதாண் டவத்திலவ
ரெடுத்தருளுஞ் சேவடிக்கீ ழென்றுமிருக் கின்றூரை
யடுத்தபெருஞ் சீர்பரவ லாரளவா யினதம்மா. (கூஙி)

தே வு.

ஆதியோ டந்த மில்லா னருணட மாடும் போது
சீதமுன் பாடு மம்மை யிளரொளி மலர்த்தாள் போற்றிச
சீதநீர் வயல்சூழ் திங்க ளூரினப் பூதி யாராம்
போதமா முனிவர் செய்த திருத்தொண்டு புகல லுற்றேன். (கூக)

காரைக்காலம்மையார்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - க,எஅள.

சூ ச னி ம்.

இக்காரைக்காலம்மையார் புராணத்தால். அறிதற்பாலனவாகிய விஷயங்கள் மாகேசுரபூசையும் அன்புமாம். மாகேசுரபூசை இளையான்குடிமாறநாயனூர் புராணத்துச் சூசனத்திலும், அன்பு கண்ணப்பநாயனூர் புராணத்துச் சூசனத்திலும், உணர்த்தப்பட்டன. இவ்வம்மையார்பெருமை இவரைப் பரமபதியாகிய சிவபெருமான் "அம்மையே" என்று அழைத்தருளினமையானும், இவர் திருத்தலேயாலே நடந்தருளிய திருவாலங்காட்டை யிதித்தற்குத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனூர் அஞ்சியருளினமையானும் அறிக.

அப்பூதியடிகணயனார்புராணம்.

தாண்டவம் புரிய வல்ல தம்பிரா னருக் கன்ப
ரீண்டிய புகழின் பாலா ரெல்லையி றவத்தின் மிக்கா
ராண்டசீ ரரசின் பாத மடைந்தவ ரறியா முன்னே
காண்டகு காதல் கூரக் கலந்தவன் பினரா யுள்ளார். (க)

களவுபொய் காமங் கோப முதலிய குற்றங் காய்ந்தார்
வளமிகு மனையின் வாழ்க்கை நிலையினர் மனைப்பா லுள்ள
வளவைக ணிறைகோன் மக்க ளாவொடு மேதி மற்று
முளவெலா மரசி னமஞ் சாற்றுமவ் வொழுக லாற்றூர். (உ)

வடிவுதாங் காணு ராயு மன்னுசீர் வாக்கின் வேந்த
ரடிமையுந் தம்பி ரானு ரருளுங்கேட் டவர்கா மத்தாற்
படிதிகழ் மடங்க ணண்ணீர்ப் பந்தர்கண் முதலா யுள்ள
முடிவிலா வறங்கள் செய்து முறைமையால் வாழு நாளில். (ங)

தே வு.

பொருப்பரையன் மடப்பிடியி னுடன்புணருஞ் சிவக்களிற்றின்
றிருப்பழனம் பணிந்துபணி செய்திருநா வுக்கரச
ரொருப்படிகொ தலிற்பிறவு முடையவர்தம் பதிவணங்கும்
விருப்பினெடுத் திங்கணூர் மருங்குவழி மேவுவார். (ச)

அளவில்சனஞ் செலவொழியா வழிக்கரையி லருளுடையா
ருளமனைய தண்ணளித்தா யுறுவேணிற் பரிவகற்றிக்
குளநிறைந்த நீர்த்தடம்போற் குளிர்தூங்கும் பரப்பினதாய்
வளமருவு நிழறருதண் ணீர்ப்பந்தர் வந்தணைந்தார். (ஞ)

வந்தணைந்த வாகீசர் மந்தமா ருதசீதப்
பந்தருட னமுதமாந் தண்ணீரும் பார்த்தருளிச்
சிந்தைவியப் புறவருவார் திருநாவுக் கரசெனும்போ
சந்தமுற வரைந்ததனை யெம்மருங்குந் தாங்கண்டார். (ட)

இப்பந்த ரிப்பெயரிட் டிங்கமைத்தா ரியாரென்னுர்க்
கப்பந்த றிந்தார்க ளாண்டவர செனும்பெயரா
செப்பருஞ்சீ ரப்பூதி யடிகளார் செய்தமைத்தார்
தப்பின்றி யெங்குமுள சாலேகுளங் காவென்னூர். (எ)

என்றுரைக்க வரசுகேட் டிதற்கென்னே கருத்தென்று
நின்றவரை நோக்கியவ ரெவ்விடத்தா ரெனநிறைந்து
துன்றியதூண் மார்பருமித் தொல்பதியார் மனையின்கட்
சென்றனரிப் பொழுததுவுஞ் சேய்த்தன்று ணணித்தென்னூர். (அ)

அங்கண்ணு முனிவரும்போ யப்பூதி யடிகளார்
தங்குமனைக் கடைத்தலைமுன் சார்வாக வுள்ளிருந்த
திங்களூர் மறைத்தலைவர் செழுங்கடையில் வந்தடைந்தார்
நங்கள்பிரான் றமரொருவ ரெனக்கேட்டு ணணினூர். (கூ)

கடிதணைந்து வாகீசர் கழல்பணிய மற்றவர்தம்
மடிபணியா முன்பணியு மரசினெதி ரந்தணனூர்
முடிவிறவுஞ் செய்தேன்கொன் முன்பொழியுங் கருணைபுரி
வடிவுடையீ ரென்மனையில் வந்தருளிற் றென்னென்னூர். (கo)

ஒருகுன்ற வில்லாரைத் திருப்பழனத் துள்ளிறைஞ்சி
வருகின்றேம் வழிக்கரையி னீர்வைத்த வாய்த்தவளந்
தருகின்ற நிழற்றண்ணீர்ப் பந்தருங்கண் டத்தகைமை
புரிகின்ற வறம்பிறவுங் கேட்டணைந்தோ மெனப்புகல்வார். (கக)

ஆறணியுஞ் சடைமுடியா ரடியார்க்கு நீர்வைத்த
வீறில்பெருந் தண்ணீர்ப்பந் தரினும்பே ரெழுதாதே
வேறெருபேர் முன்னெழுத வேண்டியகா ரணமென்கொல்
கூறுமென வெதிர்மொழிந்தார் கோதின்மொழிக் கொற்றவனுர். (கஉ)

நின்றமறை யவர்கேளா நிலையழிந்த சிந்தையராய்
கன்றருளிச் செய்திலீர் காணிலமண் பதகருட
னுன்றியமன் னவன்சூட்சி திருத்தொண்டி னுறைபபாலே
வென்றவர்தந் திருப்பேரோ வேறெருபே ரெனவெருள்வார். (கங)

கம்மையுடை யவர்கழற்கீழ் கயந்தகிருத் தொண்டாலே
யிம்மையிலும் பிழைப்பதென வென்போல்வா ருந்தெளியச
செம்மைபுரி திருநாவுக் கரசர்திருப் பெயரெழுத
வெம்மைமொழி யான்கோட்க விளம்பினீ ரெனவிளம்பி. (கச)

பொங்குகடற் கன்மிதப்பிற் போந்தேறு மவர்பெருமை
யங்கணரும் புவனத்தி னறியாதா ரியாருளரே
மங்கலமார் திருவேடத் துடனின்றிவ் வகைமொழிந்தீ
செங்குறைவீர் நீர்தாம்யா ரியம்புமென வியம்பினுர். (கஞ)

திருமறையோ ரதுமொழியத் திருநாவுக் கரசரவர்
பெருமையறிந் துரைசெய்வார் பிறதுறையி னின்றேற
வருளுபெருஞ் சூலையினு லாட்கொள்ள வடைந்துய்ந்த
தெருளுமுணர் வில்லாத சிறுமையேன் யானென்றூர். (கஎ)

அரசறிய வுரைசெய்ய வப்பூதி யடிகடாங்
கரகமல மிசைசுவியக் கண்ணருவி பொழிந்திழிய
வுரைகுழறி யுடம்பெல்லா முரோமபுள கம்பொலியத்
தரையின்மிசை வீழ்ந்தவர்தஞ் சரணகம லம்பூண்டார். (கஅ)

மற்றவரை யெதிராவணஞ்செ வாக்கச ரெடுத்தருள
வற்றவர்க ளருநிதியம் பெற்றுற்போ லருமறையோர்
முற்றவுளங் களிகூர முன்னின்று கூத்தாடி
யுற்றவிருப் புடன்சூழ வோடினுர் பாடினுர். (கக)

மூண்டபெரு மகிழ்ச்சியினுண் முன்செய்வ தறியாதே
யீண்டமனை யகத்தெய்தி யில்லவர்க்கு மக்களுக்கு
மாண்டவர செழுந்தருளு மோகையுரைத் தார்வமுறப்
பூண்டபெருஞ் சுற்றமெலாங் கொடுமீளப் புறப்பட்டார். (உ0)

மனைவியா ருடன்மக்கண் மற்றுமுள்ள சுற்றத்தோ
ரினைவரையுங் கொண்டிறைஞ்சி யாராத காதலுடன்
முனைவரையுள் ளெழுந்தருளு வித்தவர்தாண் முன்விளக்கும்
புனைமலர்நீர் தங்கண்மேற் றெளித்துள்ளும் பூரித்தார். (உ0)

ஆசனத்திற் பூசனைக ளமர்வித்து விருப்பினுடன்
வாசநிறை திருநீற்றுக் காப்பேந்தி மனந்தழைப்பத்
தேசமுய்ய வந்தவரைத் திருவமுது செய்விக்கு
நேசமுற விண்ணப்பஞ் செயவவரு மதுநோர்ந்தார். (உச)

வே று.

செய்தவ ரிசைந்த போது திருமனை யாரை நோக்கி
யெய்திய பேறு நம்பா லிருந்தவா றென்னே யென்று
மைதிகழ் மிடற்றி னுன்ற னருளினுல் வந்த தென்றே
யுய்துமென் றுவந்து கொண்டு திருவமு தாக்க லுற்றார். (உட)

தூயநற் கறிக ளான வறுவகைச் சுவையு லாக்கி
யாயவின் னமுது மாக்கி யமுதுசெய் தருளத் தங்கள்
சேயவர் தம்மின் மூத்த திருநாவுக் கரசை வாழை
மேயபொற் குருத்துக் கொண்டு வாவென விரைந்து விட்டார். (உக)

நல்லதாய் தந்தை யேவ நானிது செயப்பெற் றேனென்
றெல்லையில் விரைந்து தோட்டத் துள்புக்குப் பெரியவாழை
மல்லலங் குருத்தை யீரும் பொழுதினில் வாள ராவொன்
றல்லலுற் றமுங்கிச் சோர வங்கையிற் றீண்டிற் றன்றே. (உச)

கையினிற் கவர்ந்து சுற்றிக் கண்ணெரி காந்து கின்ற
பையர வுதறி வீழ்த்துப் பதைப்புடன் பாந்தள் பற்றும்
வெய்யவே கத்தால் வீழா முன்னமே கத்தா லெய்திக்
கொய்தலிக் குருத்தைச் சென்று கொடுப்பனென் றோடி வந்தான். (உஇ)

பொருந்திய விடமே கத்திற் போதுவான் வேக மூந்த
வருந்தியே யணையும் போழ்து மாசுணங் கவர்ந்த தியார்க்கு
மருந்தவ ரமுது செய்யத் தாழ்க்கயா னறையே னென்று
திருந்திய கருத்தி னெடுஞ் செழுமனை சென்று புக்கான். (உசு)

எரிவிட முறையே யேறித் தலைகொண்ட வேழாம் வேகக்
தெரிவுற வெயிறுங் கண்ணு மேனியுங் கருங்கற் திந்து
விரியுரை குழறி யாவி விடக்கொண்டு மயங்கி வீழுவான்
பரிகலக் குருத்தைத் தாயார் பால்வைத்துப் படிமேல் வீழ்ந்தான். (உஎ)

தளர்ந்துவீழ் மகனைக் கண்டு தாயருந் தந்தை யாரு
முளம்பதைத் துற்று நோக்கி யுதிரஞ்சோர் வடிவு மேனி
விளங்கிய குறியுங் கண்டு விடத்தினுல் வீந்தா னென்று
தளங்குத லின்றித் தொண்ட ரமுதுசெய் வதற்குச சூழ்வார். (உஅ)

பெறலரும் புதல்வன் றன்னைப் பாயினுட் பெய்து மூடிப்
புறமனை முன்றிற் பாங்கோர் புடையினின் மறைத்து வைத்தே
யறவிது தெரியா வண்ண மமுதுசெய் விப்போ மென்று
விறலுடைத் தொண்ட ஞர்பால் விருப்பொடு விரைந்து வந்தார். (உக)

கடிதுவந் தமுது செய்யக் காலந்தாழ்க் கின்ற தென்றே
யடிகளுங் கறியு மெல்லா மழகுற வமைய வைத்துப்
படியில்சீர்த் தொண்ட ஞர்முன் பணிந்தெழுந் தமுது செய்கென்
றடிமுழு துய்யக் கொள்வீ ரென்றவர் கூறக் கேட்டே. (கூ)

அருந்தவ ரெழுந்து செல்ல வடியிணை வீளக்கி வேறூர்
திருந்துமா சனத்தி லேற்றிப் பரிகலக் திருத்து முன்ன
ரிருந்துவெண் ணீறு சாத்தி யியல்புடை யிருவ ருக்கும்
பொருந்திய நீறு நல்கிப் புதல்வர்க்கு மளிக்கும் போழ்தில். (உக)

ஆதிநான் மறைநூல் வாய்மை யப்பூதி யாரை நோக்கிக்
காதல ரிவர்க்கு மூத்த சேயையுங் காட்டு முன்னே
மேதகு பூதி சாத்த வென்றலும் விளைந்த தன்மை
யாதுமொன் றுரையா ரிப்போ திங்கவ னுதவா னென்றார். (உஉ)

அவ்வுரை கேட்ட போதே யங்கண ரருளா லண்பர்
செவ்விய திருவுள் ளத்தோர் தடுமாற்றஞ் சேர நோக்கி
யிவ்வுரை பொருதென் னுள்ள மென்செய்தா னிதற்கொன் றுண்டான்
மெய்வீரித் துரையு மென்ன விளம்புவார் விதிர்ப்புற் றஞ்சி. (உங)

பெரியவ ரமுது செய்யும் பேறிது பிழைக்க வென்னே
வருவதென் றுரையா ரேனு மாதவர் வினவ வாய்மை
தெரிவுற வுரைக்க வேண்டுஞ் சீலத்தாற் சிந்தை நொந்து
பரிவொடு வணங்கி மைந்தர்க் குற்றது பகர்ந்தா ரன்றே. (உச)

நாவினுக் கரசர் கேளா ரன்றுநீர் புரிந்த வண்ணம்
யாவரித் தன்மை செய்தா ரென்றுமுன் னெழுந்து சென்றே
யாவிதீர் சவத்தை நோக்கி யண்ணலா ரருளும் வண்ணம்
பாவிசைப் பதிகம் பாடிப் பணிவிடம் பாற்று வித்தார். (உஇ)

தீவிட நீங்க வுய்ந்த திருமறை யவர்தஞ் சேயு
மேவிய வுறக்க நீங்கி விரைந்தெழு வானைப் போன்று
சேவுகைத் தவராட் கொண்ட திருநாவுக் கரசர் செய்ய
பூவடி வணங்கக் கண்டு புனிதநீ றளித்தா ரன்றே. (உசு)

பிறிவுறு மாவி பெற்ற பிள்ளையைக் காண்பார் தொண்டி
னெறியினைப் போற்றி வாழ்நாதர் நின்றவப் பயத்தார் தாங்க
ளறிவரும் பெருமை யன்ப ரமுதுசெய் தருளு தற்குச்
சிறிதிடை.யூறு செய்தா னிவனென்று சிந்தை நொந்தார். (உஎ)

ஆங்கவர் வாட்டந் தன்னே யறிந்துசொல் லரசர் கூட
வோங்கிய மனேயி லெய்தி யமுதுசெய் தருள வுற்ற
பாங்கினி லிருப்ப முந்நூல் பயின்மணி மார்பர் தாமுந்
தாங்கிய மகிழ்ச்சி யோடுந் தகுவன சமைத்துச் சார்வார். (உஅ)

புகழ்ந்தகோ மயத்தி னீராற் பூமியைப் பொலிய நீவித்
திகழ்ந்தவான் சுதையும் போக்கிச் சிறப்புடைத் தீப மேற்றி
நிகழ்ந்தவக் கதலி நீண்ட குருத்தினை விரித்து நீரான்
மகிழ்ந்துடன் விளக்கி மீர்வாய் வலம்பெற மன்னு வித்தார். (உக)

திருந்திய வாச நன்னீ ரளித்திடத் திருக்கை நீவும்
பெருந்தவர் மறையோர் தம்மைப் பிள்ளைக ளுடனே நோக்கி
யரும்புதல் வர்களு நீரு மமுதுசெய் வீரிங் கென்ன
விரும்பிய வுள்ளத் தோடு மேலவ ரேவல் செய்வார். (சஎ)

மைந்தரு மறையோர் தாமு மருங்கிருந் தமுது செய்யச்
சிந்தையிக் கில்ல மாதர் திருவமு தெடுத்து நல்கக்
கொந்தழிழ் கொன்றை வேணிக் கூத்தனு ரடியா ரோடு
மந்தமி ழாளி யாரங் கமுதுசெய் தருளி ஞரே. (சக)

மாதவ மறையோர் செல்வ மனையிடை யமுது செய்து
காதனண் பளித்துப் பன்னுள் கலந்துட னிருந்த பின்றை
மேதகு நாவின் மன்னர் விளங்கிய பழன மூதூர்
நாதர்தம் பாதஞ் சேர்ந்து நற்ற மிழ்ப் பதிகஞ் செய்தா. (சஉ)

அப்பூதி யடிக ளார்த மடிமையைச் சிறப்பித் தான்ற
மெய்ப்பூதி யணிந்தார் தம்மை விரும்புசொன் மாலை வேய்ந்த
விப்பூதி பெற்ற நல்லோ ரெல்லையி லன்பா லென்னுஞ்
செப்பூதி யங்கைக் கொண்டார் திருநாவுக் கரசர் பாதம். (சங)

இவ்வகை யரசின் பாத மேத்தியெப் பொருளு நாளு
மவவருந் தவர்பொற் ருளே யெனவுணர்ந் தடைவார் செல்லுஞ்
செவ்விய நெறிய தாகத் திருத்தில்லை மன்று ளாடு
நவ்வியங் கண்ணுள் பங்கர் நற்கழ னண்ணி ஞரே. (சச)

மான்மறிக் கையர் பொற்ரூள வாதீச ரடைவாற் பெற்ற
மேன்மையப் பூதி யாராம் வேதியர் பாதம் போற்றிக்
கான்மலர்க் கமல வாவிக் கழனிசூழ் சாத்த மங்கை
நான்மறை நீல நக்கர் திருத்தொழி னவில லுற்றேன். (சஇ)

அப்பூதியடிகணயனர்புரா ணமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - க, அஉ.

திருநீலநக்கநாயனர்புராணம்.

பூத்த பங்கயப் பொருட்டின்மேற் பொருகய லுகளுங
காய்த்த செந்நெலின் காடுசூழ் காவிரி ரா'டிச
சாத்த மங்கையென் றுலகெலாம் புகழ்புறுந் தகைத்தால்
வாய்த்த மங்கல மறையவர் முதற்பதி வனப்பு. (க)

நன்மை சாலுமப் பதியிடை நறு நுதன் மடவார்
மென்ம லர்த்தடம் படியமற் றவருடன் வீரவி
யன்ன மொண்டுறை யாடிவ பாடிவ சாமம்
பன்ம றைக்கிடை யுடன்பயிற் றுவபல பூவை. (உ)

ஆய்ந்த மெய்ப்பொரு ணிறைன வளர்க்குமக் காப்பி
லேய்ந்த மூன்றுநீ வளர்த்துளா நிருபிறப பாளர்
நீந்து நல்லற நீர்மையின் வளர்க்குமத் தீயை
வாய்ந்த கற்புட ஞன்கென வளர்ப்பர்கண் மடவார். (ஙு)

சில மூய்த்தவத் திருமறை யோர்செழு மூதூர்
ஞால மிக்கநான் மறைப்பொருள் விளக்கிய நலத்தா
ராலம் வைத்தகண் டத்தவர் தொண்டரா மன்பர்
நீல நக்கனு ரென்பவர் நிகழ்த்துளா ரானூர். (ச)

வேத வுள்ளுறை யாவன விரிபுனல் வேணி
நாதர் தம்மையு மவரடி யாரையு நயந்து .
பாத வர்ச்சனை புரிவதும் பணிவது மென்றே
காத லாலவை யிரண்டுமே செய்கருத் துடையார். (இ)

மெய்த்த வாகம விதிவழி வேதகா ரணரை
நித்தல் பூசனை புரிந்தெழு நியமமுஞ் செய்தே
யத்த ரன்பருக் கமுதுசெய் விப்பது முதலா
வெத்தி றத்தன பணிகளு மேற்றெதிர் செய்வார். (உ)

ஆய செய்கையி னமருநா ளாதிரை நாளின்
மேய பூசனை நியதியை விதியினுண் முடித்துத
னாய தொண்டனுர் தொல்லைநீ டயவந்தி யமர்ந்த
நாய னுரையு மருச்சனை புரிந்திட நயந்தார். (எ)

உறையு ளாகிய மனைநின்று மொருமையன் புற்ற
முறைமை யால்வரு பூசைக்கு முற்றவேண் டுவன
குறைவ றக்கொண்டு மனைவியார் தம்மொடுங் கூட
விறைவர் கோயில்வந் தெய்தின ரெல்லையி றவத்தோர். (அ)

அணைய வந்துபுக் கயவந்தி மேவிய வமுதின்
றுணைம லர்க்கழ லிறைழுதுபூ சனைசெயத் தொடங்கி
யிணைய நின்றங்கு வேண்டுவ மனைவியா ரேந்த
வுணர்வின் மிக்கவ ருயர்ந்தவர்ச் சனைமுறை யுய்த்தார். (ஈ)

நீடு பூசனை நிரம்பிய மன்பிலு னிரம்பார்
மாடு சூழ்புடை வலங்கொண்டு வணங்கிமுன் வழுத்தித்
தேடு மாமறைப் பொருளினைத் தெளிவுற நோக்கி
நாடு மஞ்செழுத் துணர்வுற விருந்துமுன் னவின்றார். (உ0)

தொலைவில் செய்தவத் தொண்டனுர் சுருதியே முதலாங்
கலையி னுண்மையா மெழுத்தஞ்சுங் கணிக்கின்ற காலை
நிலையி னின்றுமுன் வழுவிட நீண்டபொன் மேருச்
சிலையி னுர்திரு மேனிமேல் விழுந்ததோர் சிலம்பி. (ஊ)

வீழுந்த போதிலங் கயனின்ற மனைவியார் விரைவுற்
றெழுந்த வச்சமோ டிளங்குழ லியில்வீழுஞ் சிலம்பி
யொழிந்து நீங்கிட வாதிமுன் றுமிப்பவர் போலப்
பொழிந்த வன்பிலு லாதிமேற் றுமிந்தனர் போக. (ஊ)

பதைத்த செய்கையான் மனைவியார் மூற்செயப் பந்தஞ்
சிதைக்கு மாதவத் திருமறை யவர்கண்டு தங்கண்
புதைத்து மற்றிது செய்ததென் பொறியிலா யென்னச்
சுதைச்சி லம்பிமேல் விழவுதித் துமிந்தன னென்றார். (ஊஉ)

மனைவி யார்செய்த வன்பினை மனத்தினிற் கொள்ளார்
புனைய நான்மணி மார்பர்தம் பூசனைத் திறத்தி
னினைய செய்கையிக் கதுதித மாமென வெண்ணு
நினைவி லுலவர் தம்மைவிட் டகன்றிட நீப்பார். (ஊஊ)

மின்னெ டுஞ்சடை வீமலர்மேல் வீழ்ந்தநற் சிலம்பி
தன்னை வேரொரு பரிசினற் றவிர்ப்பது தவிர
முன்ன ணைந்துவந் தூதிவாய் நீர்ப்பட மூயன்ரு
யுன்னை யானினித் துறந்தன னீங்கென வுரைத்தார். (கஇ)

மற்ற வேலையிற் கதிரவன் மலைபிசை மறைந்தா
னுற்ற வேவலின் மனைவியா ரொருவழி நீங்க
முற்ற வேண்டுவ பழுதுதீர் பூசனை முடித்துக்
கற்றை வேணியார் தொண்டருங் கடிமனை புகுந்தார். (கசு)

அஞ்சு முள்ளமோ டவர்மருங் கணைவுற மாட்டார்
நஞ்ச முண்டவர் கோயிலி னங்கையா ரிருந்தார்
செஞ்சொ ஞன்மறைத் திருநீல நக்கர்தா மிரவு
பஞ்சின் மெல்லணைப் பள்ளியிற் பள்ளிகொள் கின்ரூர். (கள)

பள்ளி கொள்பொழு தயவந்திப பரமர்தாங் கனவில்
வெள்ள நீர்ச்சடை யொடுநின்று மேனியைக் காட்டி
யுள்ளம் வைத்தமை யுதிமுன் ரு மிந்தபா லொழியக்
கொள்ளு மிப்புறஞ் சிலம்பியின் கொப்புளென் றருள. (கஅ)

கண்ட வப்பெருங் கனவினை நனவெனக் கருதிக்
கொண்ட வச்சமோ டஞ்சலி குவித்துடன் விழித்துத்
தொண்ட ஞர்தொழு தாடினர் பாடினர் துதித்தா
ரண்ட நாயகர் கருணையைப் போற்றிநின் றழுதார் (கக)

போது போயிருள் புலர்ந்திடக் கோயிலுட் புகுந்தே
யாதி நாயக ரயவந்தி யமர்ந்தவக் கணர்தம்
பாத மூலங்கள் பணிந்துவீழ்ந் தெழுந்துமுன் பரவி
மாத ராரையுங் கொண்டுதம் மனையின்மீண் டணைந்தார். (உ0)

பின்பு முன்னையிற் பெருகிய மகிழ்ச்சிவந் தெய்த
வின்பு றுந்திறத் தெல்லையில் பூசனை யியற்றி
யன்பு மேம்படு மடியவர் மிகவணை வார்க்கு
முன்பு போலவர் வேண்டுவ வீருப்புடன் முடிபபார். (உக)

அன்ன தன்மையி னமர்ந்தினி தொழுகுமந் நாளின்
மன்னு பூந்தராய் வருமறைப் பிள்ளையார் பெருமை
பன்னி வையகம் போற்றிட மற்றவர் பாதஞ்
சென்னி வைத்துடன் சேர்வுறும் வீருப்பினிற் சிறந்தார். (உஉ)

பண்பு மேம்படு நிலைமையார் பயிலுமப பருவ
மண்பெ ருந்தவப் பயன்பெற மருவுநற் பதிகள்
விண்பி றங்குநீர் வேணியார் தமைத்தொழ வணைவார்
சண்பை மன்னருஞ் சாத்தமங் கையில்வந்து சார்ந்தார். (உங)

நீடு சீர்த்திரு நீலகண் டப்பெரும் பாணர்
தோடு லாங்குழல் வீறலியா ருடன்வரத் தொண்டர்
கூடு மப்பெருங் குழாத்தொடும் புகலியர் பெருமான்
மாடு வந்தமை கேட்டனர் மகிழ்நில நக்கர். (உச)

கேட்ட வப்பொழு தேபெரு மகிழ்ச்சியிற் களிர்ந்து
தோட்ட லங்கலுங் கொடிகளும் புனைந்துதோ ரணங்க
ணூட்டி நீணடைக் காவண மிட்டுநற் சுற்றத்
தீட்ட முங்கொடு தாமுமுன் னெதிர்கொள வெழுந்தார். (உடு)

சென்று பிள்ளையா ரெழுந்தரு ளுந்திருக் கூட்ட
மொன்றி யங்கெதிர் கொண்டுதங் களிப்பிலு லொருவா
றன்றி யாடியும் பாடியுந் தொழுதெழுந் தயர்வார்
பொன்ற யங்குணீண் மனையிடை புடன்கொடு புகுந்தார். (உக)

பிள்ளை யாரெழுந் தருளிய பெருமைக்குத் தக்க
வெள்ள மாகிய வடியவர் கூட்டமும் விரும்ப
வுள்ள மாதர வோங்கிட வோங்குசீர்க் காழி
வள்ள லாரைத்தம் மனையிடை யமுதுசெய் வித்தார். (உஎ)

அமுது செய்தபின் பகலவன் மேல்கட லணையக்
குமுத வாவியிற் குளிர்மதிக் கதிரணை போதி
லிமய மங்கைதன் றிருமுலை யமுதுண்டா ரிரவுந்
தமது சீர்மனைத் தங்கிட வேண்டுவ சமைத்தார். (உஅ)

சில மெய்த்திருத் தொண்டரோ டமுதுசெய் தருளி
ஞால முய்ந்திட நாயகி யுடனம்பர் ணுளுங்
கால முற்பெற வழுதவ ரழைத்திடக் கடிது
நீல நக்கனர் வந்தடி பணிந்துமுன் னின்றார். (உக)

நின்ற வன்பரை நீலகண் டப்பெரும் பாணர்க்
கின்று தங்கவோ ரிடங்கொடுத் தருளுவீ ரென்ன
நன்று மின்புற்று நடுமனை வேதியின் பாங்கர்ச
சென்று மற்றவர்க் கிடங்கொடுத் தனர்திரு மறையோர். (கூ0)

ஆங்கு வேதியி லுறுதசெந் தீவலஞ் சுழிவற்
றோங்கி மூன்னையி லொருபடித் தன்றியே யொளிரத்
தாங்கு நூலவர் மகிழ்வுறச் சகோடயாழ்த் தலேவர்
பாங்கு பாணியா ருடனரு ளாற்பள்ளி கொண்டார். (கூக)

கங்கு லிற்பள்ளி கொண்டபின் கவுணியர் தலேவ
ரங்கு நின்றெழுந் தருளுவா ரயவந்தி யமர்ந்த
திங்கள் சூடியை நீலநக் கரைச்சிறப் பித்தே
பொங்கு செந்தமிழ்த் திருப்பதிகத் தொடை புனைந்தார். (கூஉ)

பதிக நாண்மலர் கொண்டுதம் பிரான்கழல் பரவி
யதிக ணண்பினை நீலநக் கருக்களித் தருளி
யெதிர்கொ ளும்பதி களிலெழுந் தருளினு ரென்றும்
புதிய செந்தமிழ்ப் பழமறை மொழிந்தபூ சுரனார். (கூங)

பிள்ளை யாரெழுந் தருளவத் தொண்டர்தாம் பின்பு
தள்ளு மன்புடன் கேண்மையுந் தவிர்ப்பில வெனினும்
வள்ள லார்திரு வருளினை வலியமாட் டாமை
யுள்ள மங்குடன் போக்கிமீண் டொருவகை யிருந்தார். (கூச)

மேவு காளிலவ் வேதியர் முன்புபோல் விரும்புந்
தாவில் பூசணை முதற்செய்கை தலைத்தலை சிறப்பச்
சேவின் மேலவர் மைந்தராந் திருமறைச் சிறுவர்
பூவடித் தலம் பொருந்திய வறிவொடும் பயின்றார். (கூடு)

சண்பை யாளியார் தாமெழுந் தருளுமெப் பதியு
ணண்பு மேம்பட நாளிடைச் செலவிட்டு நண்ணி
வண்பெ ரும்புக ழுவருடன் பயின்றுவந் துறைந்தார்
திண்பெ ருந்தொண்ட ராகிய திருநீல நக்கர். (கூக)

பெருகு காதலிற் பின்னெடு நாண்முறை பிறழுக
வருபெ ருந்தவ மறையவர் வாழிசீ காழி
யொருவர் தந்திருக் கல்லியா ணத்தினி லுடனே
திரும ணத்திறஞ் சேவித்து நம்பர்தாள் சேர்ந்தார். (கூஎ)

தருதொ ழிற்றிரு மறையவர் சாத்தமங் கையினில்
வருமு தற்பெருந் திருநீல நக்கர்தாள் வணங்கி
யிருபி றப்புடை யந்தண ரேறுயர்த் தவர்பா
லொருமை புய்த்துணர் நமிநந்தி யார்தொழி லுரைப்பாம். (கூஅ)

திருநீலநக்கநாயனார்புராண முற்றிற்று

ஆ திருவிருத்தம் - க, உஎ0.

நமிநந்தியடிகணயனார்புராணம்.

வையம் புரக்குந் தனிச்செங்கோல் வளவர் பொன்னித் திருநாட்டுச்
செய்ய கமலத் தடம்பணையுஞ் செழுநீர்த் தடமும் புடையுடைத்தாய்ப
பொய்தீர் வாய்மை யருமறைநூல் புரிந்த நீலப் புகழதனு
லெய்தும் பெருமை யெண்டிசையு மேறா ரேமப் பேறாரால். (க)

மாலே பயிலுந் தோரணங்கண் மருங்கு பயிலு மணிமறுகு
வேலே பயிலும் புனல்பருகு மேகம் பயிலு மாடங்கள்
சோலே பயிலுங் குளிர்ந்தவிருள் சுரும்பு பயிலு மரும்பூகங
காலே பயிலும் வேதவொலி கழுநீர் பயிலுஞ் செழுநீர்ச்செப். (உ)

பணையில் விளைந்த வெண்ணெல்லின் பரப்பின் மீது படசெய்ய
துணர்மென் கமல மிடையிடையே சுடர்விட் டெழுந்து தோன்றுவன
புணர்வெண் புரிநூ லவர்வேள்விக் களத்திற் புனைந்த வேதிகைமேன்
மணல்வெண் பரப்பி னிடையிடையே வளர்த்த செந்தீ மானுமால். (ஙு)

பெருமை விளங்கு மப்பதியிற் பேணு நீற்றுச சைவநெறி
யொருமை வழிவா ழுந்தணர்த மோங்கு குலத்தி னுள்வந்தா
நிருமை புலகு மீசர்கழ லிறைஞ்சி யேத்தப் பெற்றதவத்
தருமை புரிவார் நமிநந்தி யடிக ளென்பா ராயினர். (ச)

வாய்மை மறைநூற் சிலத்தால் வளர்க்குஞ் செந்தீ யெனத்தகுவார்
தூய்மைத் திருநீற் றடைவேமெய்ப் பொருளென் றறியுந் துணிவினர்
சாம கண்டர் செய்யகழற் றலைப்பட் டொழுகுந் தன்மையிலை
யாம வீரவும் பகலுமுணர் வொழியா வின்ப மெய்தினர். (ஞ)

அவ்வூர் நின்றும் திருவாரூ ரதனை யடைவா ரடியார்மேல்
வெவ்வூ நகற்றும் பெருமான்றன் வீரைசூழ் மலர்த்தாள் பணிவுறுத
லெவ்வூ தியமு மெனக்கொள்ளு மெண்ண முடையார் பலநாளுந்
தெவ்வூ ரெரித்த வரைச்சிலையார் திருப்பா தங்கள் வணங்கினூர். (சு)

செம்பொற் புற்றின் மாணிக்கச் செழுஞ்சோ தியைநேர் தொழுஞ்சிலம்
தம்பற் ருகநினைந் தணைந்து தாழ்ந்து பணிந்து வாழ்ந்துபோந்
தம்பொற் புரிசைத் திருமுன்றி லணைவார் பாங்கோ ரரனெறியி
னம்பர்க் கிடமாங் கோயிலினுட் புக்கு வணங்க நண்ணினூர். (எ)

நண்ணி யிறைஞ்சி யன்பினு னயப்புற் றெழுந்த காதலுட
னண்ண லாரைப் பணிந்தெழுவா ரடுத்த நிலைமைக் குறிப்பினுற்
பண்ணுந் தொண்டின் பாங்குபல பயின்று பரவி வீரவுவா
ரெண்ணி நீப மேற்றுவதற் கெடுத்த கருத்தி னிசைந்தெழுந்தார். (அ)

எழுந்த பொழுது பகற்பொழுதங் கிறங்கு மாலை யெய்துதலுஞ்
செழுந்தண் பதியி னிடையப்பாற் செல்லிற் செல்லும் பொழுதென்ன
வொழிந்தங் கணைந்தோர் மனையில்விளக் குறுகெய் வேண்டி யுள்புகலு
மழிந்த நிலைமை யமணர்மனை யாயிற் றங்க ணவருரைப்பார். (கூ)

கையில் விளங்கு கனலுடையார் தமக்கு விளக்கு மிகைகாணு
நெய்யிங் கில்லை விளக்கெரிப்பீ ராகி னீரை முகந்தெரித்தல்
செய்யு மென்று திருத்தொண்டர்க் குரைத்தார் தெளியா தொருபொருளைப்
பொய்யு மெய்யு மாமென்னும் பொருண்மேற் கொள்ளும் புரைதெறியார். (கo)

அருகர் மதியா துரைத்தவுரை யாற்ரு ராகி யப்பொழுதே
பெருக மனத்தில் வருத்தமுடன் பெயர்ந்து போந்து பிறையணிந்த
முருகு விரியு மலர்க்கொன்றை முடியார் கோயின் முன்னெய்கி
யுருகு மன்பர் பணிந்துவிழ வொருவாக் கெழுந்த துயர்விசும்பில். (கக)

வந்த கவலை மாற்றுமினி மாரு விளக்குப் பணிமாற
விந்த மருங்கிற் குளத்துநீர் முகந்து கொடுவந் தேற்றுமென
வந்தி மதிய மணிந்தபிரா னருளா லெழுந்த மொழிகேளாச்
சிந்தை மகிழ்ந்து நமிநந்தி யடிகள் செய்வ தறிந்திலரால். (கஉ)

சென்னி மிசைநீர் தரித்தபிரா னருளே சிந்தை செய்தெழுவார்
நன்னீர்ப் பொய்கை நடுப்புக்கு நாதர் நாம நவின்றேத்தி
யந்நீர் முகந்து கொண்டேறி யப்பர் கோயி லடைந்தகலுண்
முந்நீ ருலக மதிசயிப்ப முறுக்குந் திரிமே னீர்வார்த்தார். (கங)

சோதி விளக்கொன் றேற்றுதலுஞ் சுடர்விட் டெழுந்த ததுநோக்கி
யாதி முதல்வ ரரனெறியார் கோயில டையவிளக் கேற்றி
யேத நினைந்த வருகந்த ரெதிரே முதிருங் களிப்பினுட
னூத ருளாற் றிருவிளக்கு நீரா லெரித்தார் நாடறிய. (கச)

நிறையும் பரிசு திருவிளக்கு விடியு மளவு நின்றெரியக்
குறையுந் தகளி களுக்கெல்லாங் கொள்ள வேண்டு நீர்வார்த்து
மறையின் பொருளே யருச்சிக்கு மனையி னியதி வழுவாம
லுறையும் பதியி னவ்வீரவே யணைவார் பணிவுற் றெருப்பட்டார். (கஙி)

இரவு சென்று தம்பதியி லெய்தி மனைபுக் கென்றும்போல்
வீரவி னியமத் தொழின்முறையே விமலர் தம்மை யருச்சித்துப்
பரவி யமுது செய்தருளிப் பள்ளி கொண்டு புலர்காலை
யரவ மணிவார் பூசையமைத் தாரூர் நகரின் மீண்டனைந்தார். (கூ)

வந்து வணங்கி யரனெறியார் மகிழ்வுய் கோயில் வலங்கொண்டு
சிந்தை மகிழப் பணிந்தெழுந்து புறம்பு முள்ளுந் திருப்பணிகண்
முந்த முயன்று பகலெல்லா முறையே செய்து மறையவனு
ரந்தி யமைத்த வரியவிளக் கெங்கு மேற்றி யடிபணிவார். (கஎ)

பண்டு போலப் பலநாளும் பயிலும் பணிசெய் தவரொழுகத்
தண்டி யடிக ளாலமணர் கலக்கம் விளைந்து சார்வில்மண்
குண்ட ழிய வேழுலகுங் குலவும் பெருமை நிலவியதா
லண்டர் பெருமான் றிருண்டர்கழ லமரர் பணியு மணியாரூர். (கஅ)

நாத மறைதேர் நமிநந்தி யடிக ளார்நற் றிருண்டாகப்
பூத நாதர் புற்றிடங்கொள் புனிதர்க் கமுது படிமுதலா
நீதி வளவன் றன்வேண்டு நிபந்தம் பலவு மரியணையின்
மீது திகழ விருந்தமைத்தான் வேதா கமநூல் விதிவிளங்க. (கக)

வென்றி விடையார் மதிச்சடையார் வீதி விடங்கப் பெருமாடா
மென்றுங் திருவா ரூராளு மியல்பின் முறைமைத் திருவிளையாட்
டொன்றுஞ் செயலும் பங்குனியுத் தரமாந் திருநா ளுயர்சிறப்பு
நின்று வீண்ணப் பஞ்செய்த படிசெய் தருளு நிலைபெற்றார். (உ0)

இன்ன பரிசு திருப்பணிகள் பலவுஞ் செய்தே யேழுலகு
மன்னும் பெருமைத் திருவாரூர் மன்ன ரடியார் வழிநிற்பா
ரன்ன வண்ணந் திருவிளையாட் டாடி யருள வெந்நாளு
நன்மை பெருக நமிநந்தி யடிக டொழுதார் நாமுய்ய. (உக)

தேவர் பெருமா னெழுச்சிதிரு மணலிக் கொருநா ளெழுந்தருள
யாவ ரென்னு துடன்சேவித் தெல்லாக் குலத்தி லுள்ளோரு
மேவ வன்பர் தாமுமுடன் சேவித் தணைந்து விண்ணவர்தங்
காவ லாள ரோலக்க மங்கே கண்டு களிப்புற்றார். (உஉ)

பொழுது வைகச் சேவித்துப் புனிதர் மீண்டுங் கோயில்புகத்
தொழுது தம்மூர் மருங்கணைந்து ஆய மனையுட் புகுதாதே
யிழுது மிருள்சே ரிரவுபுறங் கடையிற் றூயில வில்லத்து
முழுதுந் தருமம் புரிமனையார் வந்துட் புகுத மொழிகின்றார். (உங)

திங்கண் முடியார் பூசனைகண் முடித்துச் செய்யுங் கடன்முறையா
லங்கி னனைவேட் டமுதுசெய்து பள்ளி கொள்வீ ரெனவவர்க்குத்
தங்கள் பெருமான் றிருமணலிக் கெழுச்சி சேவித் துடனண்ண
வெங்கு மெல்லா ரும்போத விழிவு தொடக்கிற் றெனையென்று. (உச)

ஆத லாலே குளித்தடித்த ஆய்மை செய்தே யகம்புகுந்து
வேத நாதர் பூசையினைத் தொடங்க வேண்டி மதற்குநீ
சீத நன்னீர் முதலான கொண்டிங் கணைவா யெனச்செப்பக்
கார்தன் மனையார் தாமுமவை கொணரு மதற்குக் கடிதனைந்தார். (உஇ)

ஆய பொழுது தம்பெருமா னருளா லேயோ மேனியினி
லேயு மசைவி னயர்வாலோ வதியோ மிறையுங் தாழாதே
மேய வுறக்கம் வந்தணைய விண்ணோர் பெருமான் கழனினைந்து
தூய வன்பர் துயில்கொண்டார் துயிலும் பொழுது கனவின்கண். (உக)

மேன்மை விளக்குங் திருவாரூர் வீதி விடங்கப் பெருமாடா
மான வன்பர் பூசனைக்கு வருவார் போல வந்தருளி
ஞான மறையோ யாரூரிற் பிறந்தா ரெல்லா நங்கணங்க
ளான பரிசு காண்பாயென் றருளிச் செய்தங் கெதிரகன்றார். (உஎ)

ஆதி தேவ ரெழுந்தருள வுணர்ந்தா ரிரவர்ச் சனைசெய்யா
தேத நினைந்தே னெனவஞ்சி யெழுந்த படியே வழிபட்டு
மாத ரார்க்கும் புகுந்தபடி மொழிந்து விடியல் விரைவோடு
நாத னூர்தங் திருவாரூர் புகுத வெதிரந் நகர்காண்பார். (உஅ)

தெய்வப் பெருமா டிருவாரூர்ப் பிறந்து வாழ்வா ரெல்லாரு
மைவைத் தனைய மணிகண்டர் வடிவே யாகிப் பெருகொளியா
மொய்வைத் தமர்ந்த மேனியராம் பரிசு கண்டு முடிகுவித்த
கைவைத் தஞ்சி யவனிபிசை விழுந்து பணிந்து களிசிறந்தார். (உக)

படிவ மாற்றிப் பழம்படியே நிகழ்வுங் கண்டு பரமர்பா
லடியேன் பிழையைப் பொறுத்தருள வேண்டு மென்று பணிந்தருளாற்
குடியுங் திருவா ரூரகத்துப் புகுந்து வாழ்வார் குவலயத்து
செடிது பெருகுந் திருத்தொண்டு நிகழச் செய்து நிலவுவார். (உ0)

நீறு புனைவா ரடியார்க்கு நெடுநா ணியதி யாகவே
வேறு வேறு வேண்டுவன வெல்லாஞ் செய்து மேபுதலா
லேறு சிறப்பின் மணிப்புற்றி லிருந்தார் தொண்டர்க் காணியெனும்
பேறு திருநா வுக்கரசர் விளம்பப் பெற்ற பெருமையினர். (உக)

இன்ன வகையாற் றிருப்பணிக ளெல்லா வுலகுந் தொழச்செய்து
நன்மை பெருகு நமிநந்தி யடிக ணயமார் திருவீதிச்
சென்னி மதியுந் திருநதியு மலைய வருவார் திருவாரூர்
மன்னர் பாத மேன்மிகும் வளர்பொற் சோதி மன்னினர். (உஉ)

நாட்டா ரறிய முன்னுளி னன்னு ளுலக்த வைம்படையின்
பூட்டார் மார்பிற் சிறியமறைப் புதல்வன் றன்னைப் புக்கொளியூர்த்
தாட்டா மரையின் மடுவின்கட் டனிமா முதலை வாய்நின்று
மீட்டார் கழல்க ணினைவாரை மீளா வழியின் மீட்பனவே. (உக)

நமிநந்தியடிகணயனூர்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - க,ஙo௫.

முதற்காண்ட முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

இரண்டாங்காண்டம்.

ஆரூவது

வம்பறுவரிவண்டுச் சருக்கம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்புராணம்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம். (க)

சென்னிவளர் மதியணிந்த சிலம்பணிசே வடியார்த
மன்னியசை வத்துறையின் வழிவந்த குடிவளவர்
பொன்னிவளந் தருநாடு பொலிவெய்த நிலவியதாற்
கன்னிமதின் மருங்குமுகி னெருங்குகழு மலமூனார். (உ)

அப்பதிதா னந்தணர்தங் கிடைகளரு மறைமுறையே
செப்புமொலி வளர்பூகச் செழுஞ்சோலை புறஞ்சூழ
வொப்பினக ரோங்குதலா லுகக்கடைநா ளன்றியே
யெப்பொழுதுங் கடன்மேலே மிதப்பதென விசைந்துளதால். (ங)

அரியயனே முதலமர ரடங்கவெழும் வெள்ளங்கள்
விரிசுடர்மா மணிப்பதண மீதெறிந்த திரைவரைகள்
புரிசைமுதல் புறஞ்சூழ்வ பொங்கோதங் கடைநாளில்
வரியரவ மந்தரஞ்சூழ் வடம்போல வயங்குமால். (ச)

வளம்பயிலும் புறம்பணைப்பால் வாசப்பா சடைமிடைந்த
தளம்பொலியும் புனற்செந்தா மரைச்செவ்வித் தடமலராற்
களம்பயினீர்க் கடன்மலர்வ தொருபரிதி யெனக்கருதி
யினம்பரிதி பலமலர்ந்தாற் போல்பவுள விலஞ்சிபல. (ஞ)

உளங்கொண்மறை வேதியாத மோமது மத்திரவுங்
கிளர்ந்ததிரு நீற்றொளியிற் கெழுமியநண் பகலீமலர்ந்
தளந்தறியாப் பல்லூழி யாற்றுதலா லகலிடத்து
விளங்கியவம் மூதூர்க்கு வேறிரவும் பகலுமிகை. (சு)

பரந்தவிளை வயற்செய்ய பங்கயமாம் பொங்கெரியில்
வரம்பில்வளர் தேமாவின் கனிகிழிந்த மதுநறுநெய்
நிரந்தரநீ ளிலக்கடையா லொழுகுதலா னெடிதவ்வூர்
மரங்களுமா குதிவேட்குந் தகையவென மணர்துளதால். (எ)

வேலையழற் கதிர்படிந்த வியன்கங்குல் வெண்மதியஞ்
சோலைதொறு நுழைந்துபுறப் படும்பொழுது துதைந்தமலர்ப்
பாலணைந்து மதுத்தோய்ந்து தாதளைந்து பயின்றந்தி
மாலையெழுஞ் செவ்வொளிய மதியம்போல் வதியுமால். (அ)

காமர்திருப் பதியதன்கண் வேதியர்போற் கடிகமழுந்
தாமரையும் புல்லிதழுந் தயங்கியநூ லுந்தாங்கித்
தூமருநுண் கௌணிந்த துளிவருகண் ணீர்ததும்பித்
தேமருமென் சுரும்பிசையாற் செழுஞ்சாமம் பாடுமால். (க)

பூனேவார்பொற் குழையசையப் பூந்தானே பின்போக்கி
வீனேவாய்ந்த தழல்வேதி மெழுக்குறவெண் சுதையொழுக்குங்
கனேவான முகிற்கூந்தற் கதிர்செய்வட மீன்கற்பின்
மனேவாழ்க்கைக் குலமகளிர் வளம்பொலிவ மாடங்கள். (கo)

வேள்விபுரி சடங்கதனே வீளையாட்டுப் பண்ணேதொறும்
பூழியுற வருத்தமைத்துப் பொன்புனேகிங் கிணியொலிப்ப
வாழிமணிச் சிறுதேரூர்ந் தவ்விரதப் பொடியாடும்
வாழிவளர் மறைச்சிறுர் நெருங்கியுள மணிமறுகு. (கக)

விடுசுடர்நீண் மணிமறுகின் வெண்சுதைமா ளிகைமேகந்
தொடுகுடுமி நாசிதொறுந் தொடுத்தகொடி சூழ்கங்கு
லுடுவெனுநாண் மலரலர வுறுபகலிற் பலநிறத்தா
னெடுவிசும்பு தளிர்ப்பதென நெருங்கியுள மருங்கெல்லாம். (கஉ)

மடையெங்கு மணிக்குப்பை வயலெங்குங் கயல்வெள்ளம்
புடையெங்கு மலர்ப்பிறங்கல் புறமெங்கு மகப்பொலிவு
கிடையெங்குங் கலேச்சூழல் கிளர்வெங்கு மூரலளிக
ளிடையெங்கு மூனிவர்குழா மெயிலெங்கும் பயிலெழிலி. (கங)

பிரமபுரம் வேணுபுரம் பெரும்புகலி வெங்குருநீர்ப்
பொருவிறிருத் தோணிபுரம் பூந்தராய் சிரபுரமூன்
வருபுறவஞ் சண்பைநகர் வளர்காழி கொச்சைவயம்
பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால். (கச)

அப்பதியி னந்தணர்தங் குடிமூதல்வ ராசின்மறை
கைப்படுத்த சிலத்துக் கவுணியர்கோத் திரம்விளங்கச்
செப்புநெறி வழிவந்தார் சிவபாத விருதயரென்
றிப்புவிவா ழத்தவஞ்செ யியல்பிஞ் ருளசாஞர். (கஞ)

மற்றவர்தந் திருமனையார் வாய்ந்தமறை மரபின்வரு
பெற்றியினு லெவ்வுலகும் பெறற்கரிய பெருமையினர்
பொற்புடைய பகவதியா ரெனப்போற்றும் பெயருடையார்
கற்புமேம் படுசிறப்பாற் கணவனார் கருத்தமைந்தார். (கக)

மரபிரண்டுஞ் சைவநெறி வழிவந்த கேண்மையரா
யரவணிந்த சடைமுடியா ரடியலா லறியாது
பரவுதிரு நீற்றன்பு பாலிக்குந் தன்மையராய்
விரவுமறை மனைவாழ்க்கை வியப்பெய்த மேவுநாள். (கஎ)

மேதினிமேற் சமண்கையர் சாக்கியர்தம் பொயம்மிகுத்தே
யாதியரு மறைவழக்க மருகியர னடியார்பாற்
பூதிசா தனவிளக்கம் போற்றல்பெரு தொழியக்கண்
டேதமில்சீர்ச் சிவபாத விருதயர்தா மிடருழந்தார். (கஅ)

மனையறத்தி லின்பமுறு மகப்பெறுவான் விரும்புவா
ரனையதிலை தலைநின்றே யாடியசே வடிக்கமல
நினைவுறமுன் பரசமய நிராகரித்து நீருக்கும்
புனைமணிப்பூண் காதலனைப் பெறப்போற்றுந் தவம்புரிந்தார். (கக)

பெருத்தெழுமன் பாற்பெரிய நாச்சியா ருடன்புகலித்
திருத்தோணி வீற்றிருந்தார் சேவடிக்கீழ் வழிபட்டுக்
கருத்துமுடிந் திடப்பரவுங் காதலியார் மணிவயிற்றி
லுருத்தெரிய வரும்பெரும்பே றுலகுய்ய வுளதாக. (உ0)

ஆளுடையா ளுடன்றோணி யமர்ந்தபிரா னருள்போற்றி
மூளுமகிழ்ச் சியிற்றங்கண் முதன்மறைநூன் முறைச்சடங்கு
நாளுடைய வீரைந்து திங்களினு நலஞ்சிறப்பக்
கேளிருடன் செயல்புரிந்து பெரிதின்பங் கிளர்வுறுநாள். (உக)

அருக்கன்முதற் கோளனைத்து மழகியவுச சங்களிலே
பெருக்கவலி யுடனிற்கப் பேணியநல் லோரையெழுத்
திருக்கிளரு மாதிரைநாட் டிசைவிளங்கப் பரசமயத்
தருக்கொழியச் சைவமுதல் வைதிகமுக் தழைத்தோங்க. (உஉ)

தொண்டர்மனங் களிசிறப்பத் தூயதிரு நீற்றினெறி
யெண்டிசையுந் தனிநடப்ப வேழுலகுங் களிதூங்க
வண்டர்குல மதிசயிப்ப வந்தணரா குதிபெருக
வண்டமிழ்செய் தவநிரம்ப மாதவத்தோர் செயல்வாய்ப்ப. (உங)

திசையனைத்தின் பெருமையெலாந் தென்றிசையே வென்றேற
மிசையுலகும் பிறவுலகு மேதினியே தனிவெல்ல
வசைவில்செழுந் தமிழ்வழக்கே யயல்வழக்கின் முறைவெல்ல
விசைமுழுது மெய்யறிவு மிடங்கொள்ளு நிலைபெருக. (உச)

தாளுடைய படைப்பென்னுந் தொழிற்றன்மை தலைமைபெற
நாளுடைய நிகழ்கால மெதிர்கால நவைநீங்க
வாளுடைய மணிவீதி வளர்காழிப் பதிவாழ
வாளுடைய திருத்தோணி யமர்ந்தபிரா னருள்பெருக. (உஇ)

அவம்பெருக்கும் புல்லறிவி னமண்முதலாம் பரசமயப்
பவம்பெருக்கும் புரைநெறிகள் பாழ்படவல் லாழிதொறுந்
தவம்பெருக்குஞ் சண்பையிலே தாவில்சரா சரங்களெலாஞ்
சிவம்பெருக்கும் பின்னோயார் திருவவதா ரஞ்செய்தார். (உக)

வே று.

அப்பொழுது பொற்புறு திருக்கழு மலத்தோ
ரெப்பெயரி னேருமய லெய்துமிடை யின்றி
மெய்ப்படு மயிர்ப்புளக மேவியறி யாமே
யொப்பில்களி கூர்வதொ ருவப்புற வுரைப்பார். (உஎ)

சிவனரு ளெனப்பெருகு சித்தமகிழ் தன்மை
யிவணிது நமக்குவர வெய்தியதெ னென்பார்
கவுணியர் குலத்திலொரு காதல னுதித்தா
னவன்வரு நிமித்தமிது வென்றறி சயித்தார். (உஅ)

பூமுகை யவிழ்ந்துமண மேவுபொழி லெங்குந்
தேமருவு தாதொடு துதைந்த திசையெல்லாந்
தூமருவு சோதிவிரி யத்துக ளடக்கி
மாமலய மாருதமும் வந்தசையு மன்றே. (உக)

மேலையிமை யோர்களும் விருப்பொடு கரப்பிற்
சோலைமலர் போலமலர் மாமழை சொரிந்தே
ஞாலமிசை வந்துவள ராழிநகர் மேவுஞ்
சீலமறை யோர்களுட னேமவினை செய்தார். (கo)

பூதகண நாதர்புவி வாழவருள் செய்த
நாதனரு ளின்பெருமை கண்டுநில முய்ப்பா
ரோதுமறை யோர்பிறி துரைத்திடினு மோவா
வேதமொழி யாலொலி விளங்கியெழு மெங்கும். (கக)

பயன்றருவ பஃறருவும் வல்லிகளு மல்கித்
தயங்குபுன லுந்தெளிவு தண்மையுட னண்ணும்
வயங்கொளி விசும்புமலி னங்கழியு மாரு
நயம்புரிவ புள்ளொலிக ணல்லதிசை யெல்லாம். (கஉ)

அங்கண்விழ விற்பெருகு சண்பையகன் மூதூர்ச்
சங்கபட கங்கருவி தாரைமுத லான
வெங்கணு மியற்றுபவ ரின்றியு மியம்பு
மங்கல முழக்கொலி மலிந்தமறு கெல்லாம். (கக)

இரும்புவன மித்தகைமை யெய்தவவர் தம்மைத்
தருங்குல மறைத்தலெவர் தம்பவன முன்றிற்
பெருங்களி யியப்பொடு பிரானருளி னுலே
யருந்திரு மகப்பெற வணைந்தவணி செய்வார். (கச)

காதல்புரி சித்தைமகி ழுக்களி சிறப்பார்
மீதணியு நெய்யணி விழாவொடு நினைப்பார்
சூதகிழ் மங்கல வினைத்துழனி பொங்கச்
சாதக முறைப்பல சடங்குவினை செய்வார். (கஎ)

மாமறை விழுக்குல மடந்தையர்க டம்மிற்
ருமுறு மகிழ்ச்சியொடு சாயன்மயி லென்னத்
தூமணி விளக்கொடு சுடர்க்குழைகண் மின்னக்
காமர்திரு மாளிகை கவின்பொலிவு செய்வார். (௫௫)

சுண்ணமொடு தண்மலர் தூதைந்ததுகள் வீசி
புண்ணிறை விருப்பினுட னேகைபுரை செய்வார்
வெண்முளை பாலிகைகள் வேதிதொறும் வைப்பார்
புண்ணிய நறும்புனல்கொள் பொற்குட நிரைப்பார். (௫௬)

செம்பொன்முத லானபல தானவினை செய்வார்
நம்பரடி யாரமுது செய்யநல முய்ப்பார்
வம்பலர் நறுந்தொடையல் வண்டெடுது தொடுப்பார்
நிம்பமுத லானகடி நீவினை செய்வார். (௫௭)

ஐயவி யுடன்பல வமைத்தபுகை யாலு
நெய்யகி னறுங்குறை நிறைத்தபுகை யாலும்
வெய்யதழ லாகுதி விழுப்புகையி னலுந்
தெய்வமண நாறவரு செய்தொழில் விளைப்பார். (௫௮)

ஆயபல செய்தொழில்க ளன்றுமுதல் விண்ணோர்
நாயக னருட்பெருமை கூறுநல மெய்தத்
தூயதிரு மாமறை தொடர்ந்தநடை நூலின்
மேயவிதி யையிரு தினத்தினும் விளைத்தார். (௫௯)

நாமகர ணத்தழகு நாள்பெற நிறுத்திச்
சேமவுத யப்பரிதி யிற்றிகழ் பிரானைத்
தாமரை மிசைத்தனி முதற்குழவி யென்னத்
தூமணி நிரைத்தணிசெய் தொட்டிலமர் வித்தார். (௬௦)

பெருமலை பயந்தகொடி பேணுமுலை யின்பா
லருமறை குழைத்தமுது செய்தருளு வாரைத்
தருமிறைவி யார்பரமர் தாள்பரவு மன்பே
திருமுலை சுரந்தமுது செய்தருளு வித்தார். (௬௧)

ஆறுலவு செய்யசடை யையரரு ளாலே
பேறுலகி னுக்கென வரும்பெரி யவர்க்கு
வேறுபல காப்புமிகை யென்றவை விரும்பார்
நீறுதிரு நெற்றியி னிறுத்திநிறை வித்தார். (௬௨)

வே று.

தாயர்திரு மடித்தலத்துந் தயங்குமணித் தவிசினிலுந்
தூயசுடர்த் தொட்டிலினுந் தூங்குமலர்ச் சயனத்திலுஞ்
சேயபொருட் டிருமறையுந் தீந்தமிழுஞ் சிறக்கவரு
நாயகனைத் தாலாட்டு நலம்பலபா ராட்டினார். (௬௩)

வருமுறைமைப் பருவத்தின் வளர்புகலிப் பிள்ளையார்
ருமறைக டலேயெடுப்ப வாண்டதிரு முடியெடுத்தப்
பெருமழுவர் தொண்டல்லாற் பிறிதிசையோ மென்பார்போற்
நிருமுகமண் டலமசையச் செங்கீரை யாடினார். (௬௪)

நாமறியோம் பரசமய முலகிலெதிர் நாடாது
போமகல வெனவங்கை தட்டுவதும் புனிதன்பாற்
காமருதா ளம்பெறுதற் கொற்றுவதுங் காட்டுவபோற்
றூமரைச்செங் கைகளினுற் சப்பாணி கொட்டினர். (சசு)

விதிதவறு படும்வேற்றுச் சமயங்க ளிடைவிழுந்து
கதிதவழ விருவிசும்பு நிறைந்தகடி வார்கங்கை
நதிதவழுஞ் சடைமுடியார் ஞானமளித் திடவுரியார்
மதிதவழ்மா ளிகைமுன்றின் மருங்குதவழ்ந் தருளினர். (சளு)

சூழவரும் பெருஞ்சுற்றத் தோகையருந் தாதியரும்
காழியர்தஞ் சீராட்டே கவுணியர்கற் பகமேயென்
றேழிசையும் பலகலையு மெவ்வுலகுந் தனித்தனியே
வாழவரு மவர்தம்மை வருகவரு கெனவழைப்ப. (சஅ)

திருநகையா லழைத்தவர்தஞ் செழுமுகங்கண் மலர்வித்தும்
வருமகிழ்வு தலைசிறப்ப மற்றவர்மேற் செலவுகைத்து
முருகிமனங் கரைந்தலைய வுடனணைந்து தழுவியுமுன்
பெருகியவின் புறவளித்தார் பெரும்புகலிப் பிளையார். (சகூ)

வளர்பருவ முறையாண்டு வருவதன்முன் மலர்வரிவண்
டுளர்கருமென் சுருட்குஞ்சி யுடனலையச் செற்றின்று
கிளரொலிகிங் கிணியெடுப்பக் கீழ்மைநெறிச சமயங்க
டளர்நடையிட் டறத்தாமுந் தளர்நடையிட் டருளினர். (கூ0)

தாதியர்தங் கைப்பற்றித் தளர்நடையி னசைவொழிந்து
சோதியணி மணிசசதங்கை தொடுத்தவடம் புடைசூழ்ந்த
பாதமலர் நிலம்பொருந்தப் பருவமுறை யாண்டொன்றின்
மீதணைய நடந்தருளி விளையாடத் தொடங்கினர். (கூக)

சிறுமணித்தேர் தொடர்ந்துருட்டிச் செழுமணற்சிற் றில்களிழைக்கு
நறுநுதற்பே தையர்மருவுகு நடந்தோடி யடர்ந்தழித்துங்
குறுவியர்ப்புத் துளியரும்பக் கொழும்பொடியா டியகோல
மறுகிடைப் பேரொளிபரப்ப வந்துவளர்ந் தருளினர். (கூஉ)

மங்கையோ டெனநெகி வளர்தோணி வீற்றிருந்த
திங்கள்சேர் சடையார்தந் திருவருட்குச செய்தவத்தி
னங்குரம்போல் வளர்ந்தருளி யருமறையோ லெகுய்ய
வெங்கள்பிரா னீராண்டின் மேலோராண் டெய்துதலும். (கூங)

நாவாண்ட பலகலையு நாமகளு நலஞ்சிறப்பப்
பூவாண்ட திருமகளும் புண்ணியமும் பொலிவெய்தச்
சேவாண்ட கொடியவர்தஞ் சிரபுரத்துச் சிறுவருக்கு
மூவாண்டி னுலகுய்ய நிகழ்ந்ததனை மொழிகின்றேன். (கூச)

பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர் தமைப்பரமர்
மண்டுதவ மறைக்குலத்தோர் வழிபாட்டி னளித்தருளத்
தொண்டினிலே தரவருவார் தொடர்ந்தபிரி வுணர்வொருகாற்
கொண்டெழலும் வெருக்கொண்டாற் போலழுவர் குறிப்பயலாய். (கூஎ)

மேதகைய விந்நாளின் வேறொருநாள் வேதவிதி
நீதிமுறைச் சடங்குநெறி முடிப்பதற்கு நீராடத்
தாதையார் போம்பொழுது தம்பெருமா னருள்கூடச்
சோதிமணி மனைமுன்றிற் றொடர்ந்தழுது பின்சென்றார். (இசு)

பின்சென்ற பிள்ளையார் தமைநோக்கிப் பெருந்தவத்தோர்
முன்செல்கை தனையொழிந்து முனிவார்போல் விலக்குதலு
மின்செய்பொலங் கிங்கிணிக்கால் கொட்டியவர் மீளாமை
யுன்செய்கை யிதுவாகிற் போதென்றங் குடன்சென்றார். (இஎ)

கடையுகத்திற் றனிவெள்ளம் பலவிரிக்குங் கருப்பம்போன்
றிடையறாப் பெருந்தீர்த்த மெவற்றினுக்கும் பிறப்பிடமாய்
விடையுயர்த்தார் திருத்தோணிப் பற்றுவிடா மேன்மையதாந்
தடமதனிற் றுறையணைந்தார் தருமத்தின் றலைநின்றார். (இஅ)

பிள்ளையார் தமைக்கரையில் வைத்துத்தாம் பிரிவஞ்சித்
தெள்ளுநீர் புகமாட்டார் தேவியொடுந் திருத்தோணி
வள்ளலா ரிருந்தாரை யெதிர்வணங்கி மணிவாவி
யுள்ளிழிந்து புனல்புக்கா ருலகுய்ய மகப்பெற்றார். (இக)

நீராடித் தருப்பித்து நியமங்கள் பலசெய்வார்
சீராடுந் திருமகனார் காண்பதன்முன் செய்ததற்பி
னாராத விருப்பினை யகமருடம் படியநீர்
பேராது மூழ்கினார் பெருங்காவல் பெற்றாராய். (கo)

மறைமுனிவர் மூழ்குதலு மற்றவர்தம் மைக்காணை
நிறைதரியா தெனுநிலைமை தலைக்கூடா வீசர்கழன்
முறைபுரிந்த முன்னுணர்வு மூளவழுத் தொடங்கினார்
நிறைபுனல்வா விக்கரையி னின்றருளும் பிள்ளையார். (கக)

கண்மலர்க ணீர்ததும்பக் கைமலர்க ளாற்பிசைந்து
வண்ணமலர்ச் செங்கனிவாய் மணியதரம் புடைதுடிப்ப
வெண்ணின்மறை யொலிபெருக வெவ்வுயிருங் குளிர்கலிப்பப்
புண்ணியக்கன் றனையவர்தாம் பொருபியழு தருளினார். (கஉ)

மெய்ம்மேற்கண் டெளிபனிப்ப வேறெங்கும் பார்த்தழுவார்
தம்மேலைச் சார்புணர்ந்தோ சாரும்பிள் ளைமைதானே
செம்மேனி வெண்ணீற்றார் திருத்தோணிச் சிகரம்பார்த்
தம்மேயப் பாவென்றென் றழைத்தருளி யழுதருள. (கங)

அந்நிலைபிற் றிருத்தோணி வீற்றிருந்தா ரருணைக்கான்
முன்னிலைமைத் திருத்தொண்டு முன்னியவர்க் கருள்புரிவான்
பொன்மலைவல் லியுந்தாமும் பொருவிடைமே லெழுந்தருளிச்
சென்னியிளம் பிறைதிகழச் செழும்பொய்கை மருங்கணைந்தார். (கச)

திருமறைநூல் வேதியர்க்குந் தேவியர்க்குந் தாங்கொடுத்த
பெருகுவர நினைந்தோதான் றம்பெருமைக் கழல்பேணு
மொருநெறியில் வருஞானங் கொடுப்பதனுக் குடனிருந்த
வருமறையா ளுடையவளை யளித்தருள வருள்செய்வார். (கஙி)

அழுகின்ற பிள்ளையார் தமைநோக்கி யருட்கருணை
யெழுகின்ற திருவுள்ளத் திறையவர்தா மெவ்வுலகுந்
தொழுகின்ற மலைக்கொடியைப் பார்த்தருளித் துணைமுலைகள்
பொழிகின்ற பாலடிசில் பொன்வள்ளத் தூட்டென்ன. (சுசு)

ஆரணமு முலகேழு மீன்றருளி யனைத்தினுக்குங்
காரணமாய் வளம்பெருகு கருணைதிரு வடிவான
சேரணங்கு சிவபெருமா னருளுதலுஞ் சென்றிணைந்து
வாரிணங்கு திருமுலைப்பால் வள்ளத்துக் கறந்தருளி. (சுவ)

எண்ணரிய சிவஞானத் தின்னமுதங் குழைத்தருளி
புண்ணடிசி லெனவூட்ட வுமையம்மை யெதிர்நோக்குங்
கண்மலர்நீர் துடைத்தருளிக் கையிற்பொற் கிண்ணமளித்
தண்ணலெயங் கழுகைதீர்த் தங்கணரு ளருள்புரிந்தார். (சுஅ)

யாவருக்குந் தந்தைதா யெனுமிவரிப் படியளித்தா
ராவதனு லாளுடைய பிள்ளையா ராயகில
தேவருக்கு முனிவருக்குந் தெரிவரிய பொருளாகுந
தாவிறனிச் சிவஞான சம்பந்த ராயினார். (சுக)

சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனே யறமாற்றும் பாங்கினிலோங் கியஞான
முவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானந்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில். (எ0)

எப்பொருளு மாக்குவா னீசனே யெனுமுணர்வு
மப்பொருடா னுளுடையா னடியார்க ளெனுமறிவு
மிப்படியா லிதுவன்றித் தம்மிசைவு கொண்டியலுந்
துப்புரவில் லார்துணிவு துகளாகச் சூழ்ந்தெழுந்தார். (எக)

சீர்மறையோர் சிவபாத விருதயருஞ் சிறுபொழுதி
னீர்மருவித் தாஞ்செய்யு நியமங்கண் முடித்தேறிப்
பேருணர்விற் பொலிகின்ற பிள்ளையார் தமைநோக்கி
யாரளித்த பாலடிசி லுண்டதுவீ யெனவெகுளா. (எஉ)

எச்சின்மயங் கிடவுனக்கீ திட்டாரைக் காட்டென்று
கைச்சிறிய தொருமாறு கொண்டோச்சக் காலெடுத்தே
யச்சிறிய பெருந்தகையா ரானந்தக் கண்டுளிபெய்
தச்சியின்மே லெடுத்தருளு மொருதிருக்கை விரற்சுட்டி. (எங)

விண்ணிறைந்த பெருகொளியால் விளங்குமழ விடைமேலே
பண்ணிறைந்த வருமறைகள் பணிந்தேத்தப் பாவையுட
னெண்ணிறைந்த கருணையினு னின்ருரை யெதிர்காட்டி
புண்ணிறைந்து பொழிந்தெழுந்த வுயர்ஞானத் திருமொழியால். (எச)

எல்லையிலா மறைமுதன்மெய் புடனெடுத்த வெழுதுமறை
மல்லனெடுந் தமிழாலிம் மாநிலத்தோர்க் குரைசிறப்பப்
பல்லுயிரு மகிழ்கூர்தம் பாடல் பரமர்பாற்
செல்லுமுறை பெறுவதற்குத் திருச்செவியைச் சிறப்பித்து. (எஅ)

செம்மைபெற வெடுத்தருத் தோடைய செவியனெனு
மெய்ம்மைமொழித் திருப்பதிகம் பிரமபுர மேவினார்
தம்மையடை யாளங்க ளுடன்சாற்றித் தாதையார்க்
கெம்மையிது செய்தபிரா னிவனன்றே யெனவிசைத்தார். (எசு)

மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையிற்
கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளு மெனக்காட்ட
வெண்ணமிலா வல்லரக்க னெடுத்துமுறிந் திசைபாட
வண்ணலவற் கருள்புரிந்த வாக்கப்பா டருள்செய்தார். (எஎ)

தொழுவார்க்கே யருளுவது சிவபெருமா னெனத்தொழார்
வழுவான மனத்தாலே மாலாய மாலயனு
மிழிவாகுங் கருவிலங்கும் பறவையுமா யெய்தாமை
விழுவார்க ளஞ்செழுத்துந் துதித்துய்ந்த படிவிரித்தார். (எஅ)

வேதகா ரணராய வெண்பிறைசேர் செய்யசடை
நாதனெறி யறிந்துய்யார் தம்பிலே நலங்கொள் ளும்
போதமிலாச் சமண்கையர் புத்தர்வழி பழியாக்கு
மேதமே யெனமொழிந்தா ரெங்கள்பிரான் சம்பந்தர். (எக)

திருப்பதிக நிறைவித்துத் திருக்கடைக்காப் புச்சாத்தி
யிருக்குமொழிப் பிள்ளேயா ரெதிர்தொழுது நின்றருள
வருட்கருணைத் திருவாள ஞரருள்கண் டமரெலாம்
பெருக்கவிசும் பினிலார்த்துப் பிரசமலர் மழைபொழிந்தார். (அ0)

வந்தெழுமங் கலமான வானகதுந் துபிமுழக்குங்
கந்தருவர் கின்னரர்கள் கானவொலிக் கடன்முழக்கு
மிந்திரனே முதற்றேவ ரெடுத்தேத்து மிசைமுழக்கு
மந்தமில்பல் கணநாத ரரவெனுமோ சையினடங்க. (அக)

வே று.

மறைகள் கிளர்ந்தொலி வளர முழங்கிட வானேர்தந்
நிறைமுடி யுந்திய நிறைமணி சிந்திட நீள்வானத்
துறையென வந்துல கடைய நிறைந்திட வோவாமெய்ப்
பொறைபெரு குந்தவ முனிவ ரெனுங்கடல் புடைசூழ. (அஉ)

அணைவுற வந்தெழு மறிவு தொடங்கின வடியார்பா
லிணையில் பவங்கினர் கடல்க ளிகந்திட விருதாளின்
புணையரு ளங்கணர் பொருவிடை தங்கிய புணர்பாகத்
துணையொ டணைந்தனர் சுருதி தொடர்ந்த பெருந்தோணி. (அங)

அண்ண லணைந்தமை கண்டு தொடர்ந்தெழு மன்பாலே
மண்மிசை நின்ற மறைச்சிறு போதக மன்னுருங்
கண்வழி சென்ற கருத்து விடாது கலந்தேகப்
புண்ணியர் நண்ணிய பூமலி கோயிலி னுட்புக்கார். (அச)

ஈறில் பெருந்தவ முன்செய்து தாதை யெனப்பெற்றூர்
மாறு விழுந்த மலர்க்கை குவித்து மகிழ்ந்தாடி
வேறு விளைந்த வெருட்சி வியப்பு விருப்போடுங்
கூறுமருந்தமி ழின்பொரு ளான சூறிப்போர் வார். (அஇ)

தாணு வினைத்தனி கண்டு தொடர்ந்தவர் தம்மைப்போற்
காணுதல் பெற்றில ரேனு நிகழ்ந்தன கண்டுள்ளார்
தோணி புரத்திறை தன்னரு ளாத றுணிந்தார்வம்
பேணு மனத்தொடு முன்புகு காதலர் பின்சென்றார். (அசு)

அப்பொழு தங்க ணிணைந்தது கண்டவ ரல்லாதார்
மூப்புரி தூன்மறை யோர்க ளுரோம முகிழ்ப்பெய்தி
யிப்படி யொப்பதொ ரற்புத மெங்குள தென்றென்றே
துப்புறழ் வேணியர் கோயிலின் வாயில் புறஞ்சூழ. (அஎ)

பொங்கொளி மால்விடை மீது புகுந்தணி பொற்றோணி
தங்கி யிருந்த பெருந்திரு வாழ்வு தலைப்பட்டே
யிங்கெனை யாளுடை யானுமை யோடு மிருந்தானென்
றங்கெதிர் நின்று புகன்றனர் ஞானத் தமுதுண்டார். (அஅ)

இன்னிசை யேழு மிசைந்த செழுந்தமி ழீசற்கே
சொன்முறை பாடு தொழும்பருள் பெற்ற தொடக்கோடும்
பன்மறை வேதியர் காண விருப்பொடு பாலுறும்
பொன்மணி வாயினர் கோயிலி னின்று புறப்பட்டார். (அசு)

பேணிய வற்புத நீடருள் பெற்ற பிரான்முன்னே
நீணிலை யிற்றிகழ் கோபுர வாயிலி னேரெய்தி
வாணில விற்றிகழ் வேணியர் தொண்டர்கள் வாழ்வெய்துந்
தோணி புரத்தவர் தாமெதிர் கொண்டு தொழுகின்றார். (கூ0)

வே று.

காழியர் தவமே கவுணியர் தனமே கலைஞானத்
தாழிய கடலே யதனிடை யமுதே யடியார்முன்
வாழிய வந்திம் மண்டிசை வாழ்ஞர் தனிநாத
னேழிசை மொழியா டனதிரு வருள்பெற் றனனென்பார். (கூக)

மறைவளர் திருவே வைதிக நிலையே வளர்ஞானப்
பொறையணி முகிலே புகலியர் புகலே பொருபொன்னித
துறைபெறு மணியே சுருதியி னுடியே வெறியேவந்
திறையவ னுமையா ளுடனரு டரவெய் தினனென்பார். (கூஉ)

புண்ணிய முதலே புனிதமணி யரைஞா ணெடுபோதுக
கண்ணிறை கதிரே கலைவளர் மதியே கவின்மேரு
பண்ணியல் கதியே பருவம தொருமூ வருடத்தே
யெண்ணிய பொருளாய் நின்றவ ரருள்பெற் றனனென்பார். (கூட)

வே று.

என்றினைய பலகூறி யிருக்குமொழி யந்தணரு மேனை யோரு
நின்றுதுதி செய்தவர்தா ணீண்முடிக்கண் மேலேந்தி நிரந்த போது
சென்றணைந்த தாதையார் சிவபாத விருதயர்தாந் தெய்வ ஞானக்
கன்றினைமுன் புக்கெடுத்துப் பியலின்மேற் கொண்டுகளி கூர்ந்து செல்ல. (கூச)

மாமறையோர் குழாத்தினுடன் மல்குதிருத் தொண்டர்குழா மருங்கு சூழ்ந்து
தாமறுவை யுத்தரியந் தனிவிசும்பி லெறிந்தார்க்குந் தன்மை யாலே
பூமழுகு சிவானந்தப் பெருக்காறு போதவதன் மீது பொங்குங்
காமர்நுரைக் குமிழியெழுந் திழிவனபோல் விளங்குபெருங் காட்சித் தாக. (கூரி)

நீடுதிருக் கழுமலத்து நிலத்தேவர் மாளிகைமே னெருங்கி யங்கண்
மாடுநிறை மடவார்கண் மங்கலமா மொழிகளால் வாழ்த்தி வாசத்
தோடுமலி நறுமலருஞ் சுண்ணமும்வெண் பொரியினெடுங் கூலி நிற்பார்
கோபுயில் குலவரைமேன் மின்குலங்கள் புடைபெயருங் கொள்கைத் தாக. (கூக)

மங்கலநூ ரியர்துவைப்பார் மறைச்சாமம் பாடுவார் மருங்கு வேதிப்
பொங்குமணி விளக்கெடுத்துப் பூரணகும் பமுமிரைப்பார் போற்றிசெய்வா
ரங்கவர்கண் மனத்தெழுந்த வதிசயமும் பெருவிருப்பு மன்பும் பொங்கத்
தங்குதிரு மலிவீதிச் சண்பைநகர் வலஞ்செய்து சாருங் காலை. (கூஎ)

தந்திருமா ளிகையின்க ணெழுந்தருளிப் புரும்பொழுது சங்க நாத
மந்தரதுந் துபிமுதலா வளவில்பெரு கொலிதழைப்ப வணைந்து புக்கார்
சுந்தரப்பொற் றோணிமிசை யிருந்தபிரா னுடனமர்ந்த தோணி யாகும்
பைந்தொடியா டிருமுலையின் பாலமு மதுரமொழிப் பவள வாயார். (கூஅ)

தூமணிமா ளிகையின்க ணமர்ந்தருளி யன்றிரவு தொல்லை நாத
மாமறைக டிரண்டபெருந் திருத்தோணி மன்னினீற் றிருந்தார் செய்ய
காமருசே வடிக்கமலங் கருத்திலுற விடையறுக் காதல் கொண்டு
நாமகெடுங் கதிருதிப்ப நண்ணினார் திருத்தோணி நம்பர் கோயில். (கூக)

காதலுட னணைந்துதிருக் கழுமலத்துக் கலந்துவீற் றிருந்த தங்க
டாதையா ரையும்வெளியே தாங்கரிய மெய்ஞ்ஞானத் தம்பால் வர்த்து
போதமுலே சுரர்தளித்த புண்ணியத்தா யாரையுமுன் வணங்கிப் போற்றி
மேதகைய வருளபெற்றுத் திருக்கோலக் காவிறைஞ்ச விருப்பிற் சென்றார். (கஅ)

பெருக்கோலிட் டலைபிறங்குங் காவிரிநீர் பிரசமலர் தரளஞ் சித்த
வரிக்கோல வண்டாட மாதரார் குடைந்தாடு மணிநீர் வாவித்
திருக்கோலக் காவெய்தித் தேவர்பிரான் கோயில்வலஞ் செய்து முன்னின்
றிருக்கோலிட் டறிவரிய திருப்பாத மேத்துவதற் கெடுத்துக் கொளவார். (கக)

மெய்ந்நிறைந்த செம்பொருளாம் வேதத்தின் விழுப்பொருளே வேணி நீது
பைந்நிறைந்த வரவுடனே பசுங்குழவித் திங்கள்பரித் தருளு வானே
மைந்நிறைந்த மிடற்றானே மடையில்வா ளைகள்பாய வெள்ளும் வாங்காற்
கைந்நிறைந்த வொற்றறுத்துக் கலேப்பதிகங் கழனியர்கோன் பாடிக் காலே. (கஉ)

கையதனு லொற்றறுத்துப் பாடுதலுங் கண்டருளிக் கருணை கூர்ந்த
செய்யசடை வானவர்த மஞ்செழுத்து மெழுதியகற் செம்பொற் றூள
மையரவர் திருவருளா லெடுத்தபா டலுக்கிசைந்த வடிவா லொற்ற
வையமெலா முய்யவரு மறைச்சிறுவர் கைத்தலத்து வந்த தன்றே. (கஎ)

காழிவரும் பெருந்தகையார் கையில்வருந் திருத்தாளக் கருவி கண்டு
வாழியதந் திருமுடிமேற் கொண்டருளி மனங்களிப்ப மதுர வாயி
லேழிசையுந் தழைத்தோங்க வின்னிசைவண் டிழற்ப்பதிக மெய்யப் பாடித்
தாழுமணிக் குழையார்முன் றக்கதிருக் கடைக்காப்புச் சாத்தி நின்றார். (கஏ)

உம்பருல கதிசயிப்ப வோங்கியநா தத்தளவி லுண்மை நோக்கித்
தம்புருநா ரதர்முதலாஞ் சுருதியிசைத் தலைபுளோர் துதித்து மண்மேல்
வம்பலர்மா மழைபொழிந்தார் மறைவாழ வந்தருளு மதலை யாருந்
தம்பெருமா னருள்போற்றி மீண்டருளிச் சண்பைநகர் சாரச் செல்வார். (கஐ)

செங்கமல மலர்க்கரத்துத் திருத்தானத் தடனடக்து செல்லும் போது
தங்கள்குலத் தாதையார் தரியாது தோளின்மேற் றரித்துக் கொள்ள
வங்கவர்தந் தோளின்பிசை யெழுந்தருளி யீண்டார்சூழ்ந் தமரேத்துந்
திங்களணி மணிமாடத் திருத்தோணி புரத்தோணிச் செரக் கோயில். (கoக)

திருப்பெருகு பெருங்கோயில் சூழவலங் கொண்டருளித் திருமுன் னின்றே
யருட்பெருகு திருப்பதிக மெட்டொருகட் டலையாக்கி யவற்று ளொன்று
விருப்புறுபொற் றிருத்தோணி வீற்றிருந்தார் தமைப்பாட மேவுகாதற்
பொருத்தமுற வருள்பெற்றுப் போற்றியெடுத் தருளினர் பூவார் கொன்றை. (கoஎ)

எடுத்ததிருப் பதிகத்தி னிசைதிருத்தா ளத்தினு லிசைய வொற்றி
யடுத்தநடை பெறப்பாடி யார்வமுற வணங்கிப்போற் றலேரிப் பொன்னி
மடுத்தவயற் பூந்தரா யவர்வாழ மழவிளங்கோ லத்துக் காட்சி
கொடுத்தருளி வைகினர் குறைவிலா நிறைஞானக் கொண்ட லார்தாம். (கoஅ)

அந்திலேபி லாளுடைய பிள்ளேயார் தமைமுன்ன மளித்த தாயார்
முன்னுதிக்க முயன்றதவத் திருஞான்னி பள்ளிமுதன் மறையோ ரெல்லா
மன்னுபெரு மகிழ்ச்சியுடன் மங்கலதூ ரியத்துவைப்ப மறைகளோதிக்
கன்னிமதிற் சண்பைகர் வந்தணைந்து கவுணியர்கோன் கழலிற் ரூழ்ந்தார். (கoக)

மங்கலமா மெய்ஞ்ஞான மண்களிப்பப் பெற்றபெரு வார்த்தை யாலே
யெங்களுளீள் பதிமருங்கி லிருபிறப்பா ளருமல்லா வேனே யோரும்
பொங்குதிருத் தொண்டர்களு மதிசயித்துக் குழாங்கொண்டு புகலி யார்தஞ்
சிங்கவிள வேற்றின்பால் வந்தணைந்து கழல்பணியுஞ் சிறப்பின் மிக்கார். (கக0)

வந்ததிருத் தொண்டர்கட்கு மல்குசெழு மறையவர்க்கு மற்று ளோர்க்குஞ்
சிந்தைமகிழ் வுறமலர்ந்து திருவமுது முதலான சிறப்பின் செய்கை
தந்தமள வினில்விரும்புந் தகைமையினுற் கடனுற்றுஞ் சண்பை மூதூ
ரெந்தைபிரான் சிவலோக மெனவிளங்கி யெவ்வுலகு மேத்துகாலில். (ககக)

செழுந்தரளப் பொன்னிசூழ் திருஞான்னி பள்ளியுள்ளோர் தொழுது நிங்கட்
கொழுந்தணியுஞ் சடையாரை யெங்கள்பதி யினிற்கும்பிட் டருள வங்கே
யெழுந்தருள வேண்டுமென விசைந்தருளித் தோணிவீற் றிருந்தார் பாதந்
தொழுந்தகைமை யாலிறைஞ்சி யருள்பெற்றுப் பிறபதியுந் தொழமுன் சென்றார். ()

தாதவிழ்செந் தாமரையி னகவிதழ்போற் சீறடிக டன்ரையின் மீது
போதுவதும் பிறரொருவர் பொறுப்பதுவும் பொறுவன்பு புரிந்த சிந்தை
மாதவஞ்செய் தாதையார் வந்தெடுத்துத் தோளின்மேல் வைத்துக் கொள்ள
நாதர்கழ றம்முடிமேற் கொண்டகருத் துடன்போந்தார் ஞானமுண்டார். (ககங)

தேனலருங் கொன்றையினர் திருஞான்னி பள்ளியினைச் சாரச் செல்வார்
வானணியு மலர்ச்சோலை தோன்றுவதெப் பதியென்ன மகிழ்ச்சியெய்திப்
பானல்வயற் றிருஞான்னி பள்ளியெனத் தாதையார் பணிப்பக் கேட்டு
ஞானபோ னகர்தொழுது நற்றமிழ்ச்சொற் றொடைமாலை நவில லுற்றார். (ககச)

வே று.

காரைகள் கூகை முல்லே யெனுங்கழ லேசேர் வாய்மைச்
சீரியற் பதிகம் பாடித் திருக்கடைக் காப்புத் தன்னி
ஞரியோர் பாகர் வைகு ணனிபள்ளி புள்கு வார்தம்
பேரிடர் கெடுதற் காணை கமதெனும் பெருமை வைத்தார். (கஎஇ)

ஆதியார் கோயில் வாயி லணைந்துபுக் கன்பு கூரு
நீதியாற் பணிந்து போற்றி நீடிய வருண்முன் பெற்றுப்
போதுவார் தம்மைச் சூழ்ந்து பூசுரர் குழாங்கள் போற்றுங்
காதல்கண் டங்க மார்ந்தார் கவுணியர் தலைவ ரானார். (ககசு)

அம்பிகை யளித்த ஞான மகிலமு மும்ய வுண்ட
சம்பெருந் தகையார் தம்மை யெதிர்கொண்டு கண்ண வேண்டி
யும்பரும் வணங்கு மெய்ம்மை யுயர்தவத் தொண்ட ரோடு
தம்பெரு விருப்பால் வந்தார் தலைசையந் தணர்க ளெல்லாம். (ககஎ)

காவண மெங்கு மிட்டுக் கமுகொடு கதலி நாட்டிப்
பூவணத் தாமந் தூக்கிப் பூரண கும்ப மேந்தி
யாவண வீதி யெல்லா மலங்கரித் தண்ண லாரை
மாவண மலர்மென் சோலை வளம்பதி கொண்டு புக்கார். (ககஅ)

திருமறை யோர்கள் சூழ்ந்து சிந்தையின் மகிழ்ச்சி பொங்கப்
பெருமறை யோசை மல்கப் பெருந்திருக் கோயி லெய்தி
யருமறைப் பொருளா ஞரைப் பணிந்தணி கலிச்சந் தத்தின்
றருமுறை தெரியக் கோயில் சார்ந்தமை யருளிச் செய்தார். (ககக)

கறையணி கண்டர் கோயில் காதலாற் பணிந்து பாடி
மறையவர் போற்ற வந்து திருவலம் புரத்து மன்னு
நிறைவரைத் தொழுது பாடி நெடியுடை யேத்திப் போந்து
நிறைபுனற் றிருச்சாய்க் காடு தொழுதற்கு நினைந்து செல்வார். (கஉ0)

பன்னகப் பூணி னரைப் பல்லவ னீச்ச ரத்துச
சென்னியால் வணங்கி யேத்திக் திருந்திசைப் பதிகம் பாடிப்
பொன்னிசூழ் புகாரி னீடு புனிதர்தந் திருச்சாய்க் காட்டு
மன்னுசீர்த் தொண்ட ரெல்லா மகிழ்ந்தெதிர் கொள்ளப் புக்கார். (கஉக)

வானள வுயர்ந்த வாயி லுள்வலங் கொண்டு புக்குத்
தேனலர் கொன்றை யார்தந் திருமுன்பு சென்று தாழ்ந்து
மானிடந் தரித்தார் தம்மைப் போற்றுவார் மண்பு காவெ
னானெலா முருக வேத்தி யுச்சிமேற் குவித்தார் செங்கை. (கஉஉ)

சீரினிற் றிகழ்ந்த பாடற் றிருக்கடைக் காப்புப் போற்றிப்
பாரினிற் பொலிந்த தொண்டர் போற்றிடப் பயில்வார் பின்னு
மேரிசைப் பதிகம் பாடி யேத்திப்போந் திறைவர் வெண்கா
டாருமெய்க் காத லோடும் பணிவதற் கணைந்தா ரன்றே. (கஉங)

பொன்னிதழ்க் கொன்றை வன்னி புனலிள மதிய நீடு
சென்னியார் திருவெண் காட்டுத் திருத்தொண்ட ரெதிரே சென்றங்
கின்னதன் மையர்க ளாரு ரெனவொரு மகிழ்ச்சி பொங்க
மன்னுசீர்ச் சண்பை யாரு மன்னரைக் கொண்டு புக்கார். (கஉச)

முத்தமிழ் விரகர் தாமு முதல்வர்கோ புரத்து முன்னர்ச்
சித்தநீ வெகை யோடுஞ் சென்றுதாழ்ந் தெழுந்து புக்குப்
பத்தரா மடியார் சூழப் பரமர்கோ யிலெச்சூழ் வந்து
சித்தனர் தம்முன் பெய்தி நிலமுறத் தொழுது வீழ்ந்தார். (கஉஇ)

மெய்ப்பொரு ளாயி னுரை வெண்காடு மேலி னுரைச்
செப்பரும் பதிக மாலை கண்காட்டு நுதன்முன் சேர்த்தி
மூப்புரஞ் செற்றார் பாதஞ் சேருமுக் குளமும் பாடி
யொப்பரு ஞான முண்டா ருளமகிழ்ந் தேத்தி வாழ்ந்தார். (கஉக)

அருமையாற் புறம்பு போந்து வணங்கியங் கமரு ளாளிற்
றிருமுல்லை வாயி லெய்திச் செழுந்தமிழ் மாலை சேர்த்தி
மருவிய பதிகண் மற்றும் வணங்குவார் மறையோ ரேத்தத்
தருமலி புகலி வந்து ஞானசம் பந்தர் சார்ந்தார். (கஉஎ)

தோணிவீற் றிருந்தார் தம்மைத் தொழுதுமுன் னின்று துய
வாணியாம் பதிகம் பாடி யருட்பெரு வாழ்வு கூரச்
சேணுயர் மாட மோங்குந் திருப்பதி யதனிற் செய்ய
வேணியார் தம்மை நாளும் போற்றிய விருப்பின் மிக்கார். (கஉஅ)

வைகுமந் நாளிற் சீர்பான் மயேந்திரப் பள்ளி வாசஞ்
செய்பொழிற் குருகா வூருந் திருமுல்லை வாயி லுள்ளிட்
டெய்திய பதிக ளெல்லா மின்புற விறைஞ்சி யேத்தித்
தையலாள் பாகர் தம்மைப் பாடினர் தமிழ்ச்சொன் மாலை. (கஉக)

அவ்வகை மருங்கு சூழ்ந்த பதிகளி லரனூர் பொற்ருண்
மெய்வகை ஞான முண்ட வேதியர் வீரவிப் போற்றி
யுய்வகை மண்ணு ளோருக் குதவிய பதிகம் பாடி
யெவ்வகை யோரு மேத்த விறைவரை யேத்து நாளில். (கஉ0)

வே று.

திருநீல கண்டத்துப் பெரும்பாணர் தெள்ளமுதின்
வருநீர்மை யிசைப்பாட்டு மதங்கரு ளாமணியா
ரொருநீர்மை யுடனுடைய பிள்ளையார் கழல்வணங்கத்
தருநீர்மை யாழ்கொண்டு சண்பையிலே வந்தணைந்தார். (கஉக)

பெரும்பாணர் வரவறிந்து பிள்ளையா ரெதிர்கொள்ளச
சுரும்பார்செங் கமலமலர்த் துணைப்பாதந் தொழுதெழுந்து
விரும்பார்வத் தொடுமேத்தி மெய்ம்மொழிக ளாற்றுதித்து
வரும்பான்மை தருவாழ்வு வந்தெய்த மகிழ்ந்திறைஞ்சி. (கஉஉ)

அளவிலா மகிழ்ச்சியினர் தமைநோக்கி யையர்நீ
ருளமகிழ வீங்கணைந்த வுறுதியுடை யோமன்றே
யிளநிலா நகைமுகிழ்ப்ப விசைத்தவரை யுடன்கொண்டு
களிநிலவு நஞ்சணிந்தார் பாலணையுங் கவுணியனார். (கஉஊ)

கோயிலினிற் புறமுன்றிற் கொடுபுக்குக் கும்பிடுவித்
தேயுமிசை யாழுங்க ளிறைவருக்கிங் கியற்றுமென
வாயுகழ்ப் பிள்ளையா ரருள்பெற்ற வதற்கிறைஞ்சி
மேயதொடைத் தந்திரியாழ் வீக்கியிசை விரிக்கின்றார். (கஉச)

தானவிலக் கோல்வடித்துப் படிமுறைமைத் தருதியினு
வானவிசை யாராய்வுற் றங்கணர்தம் பாணியினே
மானமுறைப் பாடினியா ருடன்பாடி வாசிக்க
ஞானபோ னகர்மகிழ்ந்தார் ஞான்மறையோ ரதிசயித்தார். (கஉடி)

யாழிலெழு மோசையுட னிருவர்மிடற் றிசையொன்றி
வாழிதிருத் தோணியுளார் மருக்கேயு மாட்சியினைத்
தாழுமிரு சிறைப்பறவை படிக்கதனி விசும்பிடைநின்
றேழிசைதூற் கந்தருவர் விஞ்சையரு மெடுத்திசைத்தார். (கருக)

எண்ணருஞ்சீர்த் திருத்தோணி யெம்பெருமான் கழல்பரவிப்
பண்ணமையா ழிசைகூடப் பெரும்பாணர் பாடியபின்
கண்ணுதலா ரருளினுற் காழியர்கோன் கொடுபோந்து
ணண்ணியுறை விடஞ்சமைத்து நல்விருந்து சிறந்தளிப்ப. (கருஎ)

பிள்ளேயா ரருள்பெற்ற பெரும்பாணர் பிறையணிந்த
வெள்ளநீர்ச் சடையாரை யவர்மொழிந்த மெய்ப்பதிக
மூள்ளபடி கேட்டலுமே யுருகுபெரு மகிழ்ச்சியராய்த்
தெள்ளமிர்த மருந்தினர்போற் சிந்தைகளிப் புறத்தொழுதார். (கருஅ)

காழியார் தவப்பயனுங் கவுணியர்தந் தோன்றலா
ராழிவிட முண்டவர்த மடிபோற்றும் பதிகவிசை
யாழின்முறை மையினிட்டே யெவ்வுயிரு மகிழ்வித்தா
ரேழிசையும் பணிகொண்ட நீலகண்ட யாழ்ப்பாணர். (கருக)

சிறியமறைக் களிறளித்த திருப்பதிக விசையாழி
னெறியிலிடும் பெரும்பாணர் பின்னுநீ ரருள்செய்யு
மறிவரிய திருப்பதிக விசையாழி லிட்டடியேன்
பிறிவின்றிச் சேவிக்கப் பெறவேண்டு மெனத்தொழுதார். (கரஂ)

மற்றதற்குப் பிள்ளேயார் மனமகிழ்வுற் றிசைந்தருளப்
பெற்றவர்தாந் தம்பிரா னருளினுவே யெனப்பேணிச்
சொற்றமிழ்மா லேயினிசைகள் சுருதியாழ் முறைதொடுத்தே
யற்றைநாட் போலென்று மகலாநண் புடனமர்ந்தார். (கரக)

சிரபுரத்தி லமர்ந்தருளுந் திருஞான சம்பந்தர்
பரவுதிருத் தில்லேநடம் பயில்வாரைப் பணிந்தேத்த
விரவியெழும் பெருங்காதல் வெள்ளத்தை யுள்ளத்திற்
றரவிசையுங் குறிப்பதியத் தவமுனிவர்க் கருள்செய்தார். (கரஉ)

பிள்ளேயா ரருள்செய்யப் பெருந்தவத்தாற் பெற்றெடுத்த
வள்ளலார் தாமுமுடன் செல்வதற்கு மனங்களிப்ப
வெள்ளிமால் வரையென்னத் திருத்தோணி வீற்றிருந்த
புள்ளிமா னுரியாரைத் தொழுதருளாற் புறப்பட்டார். (கரங)

தாவில்யாழ்ப் பாணரொடுந் தாதையார் தம்மோடு
மேவியசீ ரடியார்கள் புடைவரவெங் குருவேந்தர்
பூவின்மே லயன்போற்றும் புகலியினைக் கடந்துபோய்த்
தேவர்கடம் பெருந்தேவர் திருத்தில்லே வழிச்செல்வார். (கரச)

வே று.

நள்ளி ருட்கணின் றுவோ ருறைபதி நவிலுகண் டனபோற்றி
முள்ளு டைப்புற வெள்ளிதழ்க் கேதகை முகிழ்விரி மணஞ்சூழப்
புள்ளு டைத்தடம் பழனமும் படுகரும் புடைகழிந் திடப்போந்து
தொள்ளி டத்திரு நதிக்கரை யடைந்தனர் கவுணியர் குலதீபர். (கரஇ)

உழவு திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்புராணம்.

வண்டி ரைத்தெழு செழுமலர்ப் பிறங்கலு மணியுமா ரமுமுந்தித்
தண்ட லேப்பல வளத்தொடும் வருபுன ருழ்ந்துசே வடிதாழத்
தெண் டிரைக்கடற் பவளமும் பணிலமுஞ் செழுமணித் திரண்முத்துங்
கொண்டி ராட்டிவந் தோதமங் கெதிர்கொளக் கொள்ளிடங் கடந்தேறி. (கசஉ)

பல்கு தொண்டர்தங் குழாத்தொடு முடன்வரும் பயின்மறை யவர்சூழச்
செல்க திப்பயன் காண்பவர் போற்களி சிறந்தகூர் தரக்கண்டு
மல்கு தேவரே முதலினேத் துயிர்களும் வணங்கிவேண் டினவெல்லா
நல்கு தில்லைசூழ் திருவெல்லே பணிந்தனர் ஞானவா ரமுதுண்டார். (கசஎ)

செங்க ணேற்றவர் தில்லையே நோக்கியித் திருந்துல கினிற்கெல்லா
மங்க லந்தரு மழவிளம் போதகம் வருபிரு மருங்கெங்குந்
தங்கு புன்சொலி வாழ்த்துரை யெடுத்துமுன் ருமரை மதுவாசப
பொங்கு செம்முகைக் கரங்குவித் தலர்முகங் காட்டின புனற்பொய்கை. (கசஅ)

கலவ மென்மயி லினங்களித் தழைத்திடக் கடிமணக் குளிர்கால்வந்
தலவி முன்பணிந் தெதிர்கொளக் கிளர்ந்தெழுந் தடன்வருஞ் சுரும்பார்ப்ப
விலகு செந்தளிர் மெய்யொளி சிறந்திட விருகுழை புடையாட
மலர்மு கம்பொலிந் தசையமென் கொம்பர்போன் றுடுவ மலர்ச்சோலை. (கசக)

இழைத்த டங்கொங்கை யிமயமா மலைக்கொடி யின்னமு தெனஞானங்
குழைத்த ளித்திட வமுதுசெப் தருளிய குருளாயார் வரக்கண்டு
மழைத்த மந்தமா ருதத்திஞ னறுமலர் வண்ண முண் கெகிலித்
தழைத்த பொங்கெழின் முகஞ்செய்து வணங்கின தடம்பணை வயற்சாலி. (கஙப)

ஞால மும்ய்ந்திட ஞானமுண் டவரெழுந் தருளுமந் நலங்கண்டு
சேல லம்புதண் புனற்றடம் படிந்தணை ஈதமா ருதம்வீசச்
சால வும்பல கண்பெறும் பயன்பெறுந் தன்மையிற் களிகூர்வ
போல சைந்திரு புடை டைந் தாடின புறம்பணை றும்பூகம். (கஙக)

பவந்த விர்ப்பவர் தில்லைசூ ழெல்லையின் மறையவர் பயில்வேளவிச
சிவந்த ரும்பய னுடையவா சூதிகளின் செழும்புகைப் பரப்பாலே
தவந்த ழைப்பவர் தருளிய பிள்ளையார் தாமணை புறமுன்னே
நிவந்த நீல நண் டெகில்விதா னித்தது போன்றது நெடுவானம். (கஙஉ)

கரும்பு செந்நெல்பைங் கமுகொடு கலந்துயர் கனியம் பணைநீங்கி
யரும்பு மென்மலர் தளிர்பல மூலமென் றனைத்திஞ கரமான
மருங்கி னன்தன வனம்பணிந் தணைந்தனர் மாடமா ளிகையோங்கி
நெருங்கு தில்லைசூழ் நெடுமதிற் றென்திரு வாயினே ரணித்தாக. (கஙங)

பொங்கு கொங்கையிற் கறைத்தமெய்ஞ் ஞானமாம் போனகம் பொற்குன்ற
மங்கை செங்கையா லூட்டவுண் டருளிய மதலையார் வந்தாரென்
றங்கண் வாழ்பெருந் தில்லைவா ழந்தண ரன்பர்க ளுடனீண்டி
யெங்கு மங்கல வணிகை வலங்கரித் தெதிர்கொள வணைவார்கள். (கஙச)

வேத நாதமு மங்கல முழக்கமும் விசும்பிடை நிறைந்தோங்கச்
சீத வாசநீர் நிறைகுட நீபங்க டிசையெலா நிறைந்தாரச்
சோதிமாமணி வாயிலின் புறஞ்சென்று சோபன வாக்கமுஞ் சொல்லிக்
கோதி லாதவர் ஞானசம் பந்தரை யெதிர்கொண்டு கொடுபுக்கார். (கஙஞ)

செல்வ மல்கிய தில்லேமு தூரினிற் றென்றிசைத் திருவாயி
லெல்லே நீங்கிபுள் புகுந்திரு மருங்குகின் றெடுக்குமேத் தொலிசூழ
மல்ல லாவண மறுகிடை கழித்துபோய் மறையவர் நிறைவாழ்க்கைத்
தொல்லே மாளிகை நிரைத்திரு வீதியைத் தொழுதணைந் தனர்தூயோர். (கடுக)

மலர்ந்த பேரொளி குளிர்தரச் சிவமணங் கமழ்ந்துவான் முகண்மாறிச்
சிலம்ப லம்புசே வடியவர் பயில்வுறுஞ் செம்மையாற் றிருத்தொண்டு
கலந்த வன்பர்தஞ் சிந்தையிற் றிகழ்திரு வீதிகண் களிசெய்யப்
புலங்கொண் மைந்தனு செழுநிலக் கோபுரம் பணிந்தெழுந்தனர் போற்றி. (கடுஎ)

நீடு நீணிலக் கோபுரத் துள்புக்கு நிலவிய திருமுன்றின்
மாடு செம்பொனின் மாளிகை வலங்கொண்டு வாணுற வளர்ந்திங்கள்
சூடு கின்றபே ரம்பலந் தொழுதுபோந் தருமறை தொடர்ந்தேத்த
வாடு கின்றவர் முன்புற வணைந்தன ரணிகிளர் மணிவாயில். (கடுஅ)

சந்தி யெம்பிரான் முதற்கண நாதர்க ணலங்கொள்பன் மறைகூட
வந்த மில்லவ ரணுகிமுன் றொழுதிரு வணுக்கரைத் திருவாயில்
சிந்தை யார்வமும் பெருகிடச் சென்னியிற் சிறுச்செப்ய கையேற
வுய்ந்து வாழ்திரு நயனங்கள் களிகொள்ள வருகுமன் பொடுபுக்கார். (கடுக)

அண்ண லார்தமக் களித்தமெய்ஞ் ஞானமே யானவம் பலமுந்த
முண்ணி றைந்தஞா னத்தெழு மானந்த வொருபெருந் தளிக்கூத்தங
கண்ணின் முன்புறக் கண்டுகும் பிட்டெழுங் களிபபொடுங் கடற்காழிப்
புண்ணி யக்கொழுந் தனையவர் போற்றுவார் புனிதரா டியபொற்பு. (கடுo)

உணர்வி னோர்பெற வருஞ்சிவ போகத்தை யொழிவின்றி யுருவின்க
ணணையு மைம்பொறி யளவினு மெளிவர வருளினே யெனபபோற்றி
யிணையில் வண்பெருங கருணையே யேத்திமுன் னெடுத்தசொற் பதிகத்திற்
புணரு மின்னிசை பாடின ராடினர் பொழிந்தனர் விழிமாரி. (கடுக)

வே று.

ஊழி முதல்வர்க் குரிமைத் தொழிற்சிறப்பால்
வாழிதிருத் தில்லேவா ழந்தணரை முன்வைத்தே
யேழிசையு மோங்க வெடுத்தா ரெமையாளுங
காழியர்தங் காவலனுர் கற்றுங் கெரியோம்பி. (கடுஉ)

பண்ணூர் பதிகத் திருக்கடைக்காப் புப்பரவி
யுண்ணெடு மென்பு முயிருங் கரைந்துருக்கும்
விண்ணு யகன்கூத்து வெட்டவெளி யேஇலோத்துக்
கண்ணு ரமுதுண்டார் காலம் பெறவழுதார். (கடுங)

முன்மா லயனறியா மூர்த்தியார் முன்னின்று
சொன்மாலே யாற்கால மெல்லாந் துதித்திறைஞ்சிப்
பன்மா மறைவெள்ளஞ் சூழ்ந்து பரவுகின்ற
பொன்மா ளிகையையலங் கொண்டு புறம்போந்தார். (கடுச)

செல்வத் திருமுன்றிற் சூழ்ந்தெழுந்து தேவர்குழா
மல்குந் திருவாயில் வந்திறைஞ்சி மாதவங்க
ணல்குந் திருவீதி நான்குந் தொழுதங்க
ணல்குந் நிறமஞ்சு வார்சண்பை யாண்டகையார். (கடுரி)

செய்ய சடையார் திருவேட் களஞ்சென்று
கைதொழுது சொற்பதிகம் பாடிக் கழுமலக்கோன்
வைகி யருளுமிட மங்காக மன்றுடி
மையன் றிருக்கூத்துக் கும்பிட் டணைவுறுநாள். (கசக)

கைம்மான் மறியார் கழிப்பாலை யுள்ளணைந்து
மெய்ம்மாலைச் சொற்பதிகம் பாடி விரைக்கொன்றை
செம்மாலை வேணித் திருவுச்சி மேவியுறை
யம்மானைக் கும்பிட் டருந்தமிழும் பாடினார். (கசள)

பாடும் பதிகவிசை யாழ்ப்பாண ரும்பயிற்றி
நாடுஞ் சிறப்பெய்த நாளுநடம் போற்றுவார்
நீடுந் திருத்தில்லை யந்தணர்க ணீண்மன்று
ளாடுங் கழற்கணுக்க ராம்பே றதிசயிப்பார். (கசஅ)

ஆங்கவர்தஞ் சீலத் தளவின் மையுணினைந்தே
யோங்கியெழுங் காத லொழியாத வுள்ளத்தார்
தேங்கமழுஞ் சோலைத் திருவேட் களங்கடந்து
பூங்கிடங்கு சூழ்புலியூர் புக்கணையும் போழ்தின்கண். (கசக)

அண்டத் திறைவ ரருளா லணிதில்லை
முண்டத் திருநீற்று மூவா யிரவர்களுந்
தொண்டத் தகைமைக் கணநாத ராய்த்தோன்றக
கண்டப் பரிசுபெரும் பாணர்க்குங் காட்டினார். (கஎ0)

செல்வம் பிறிவறியாத் தில்லைவா ழந்தணரு
மெல்லையில்சீர்ச் சண்பை யிளவே றெழுந்தருளி
யொல்லை யிறைஞ்சாமுன் ரூமு முடனிறைஞ்சி
மல்ல லணிவீதி மருங்கணைய வந்தார்கள். (கஎக)

பொங்கி யெழுங்காதல் புலனுகப் பூசுரர்தஞ்
சிங்க மனையார் திருமுடியின் மேற்குவித்த
பங்கயத்தின் செவ்வி பழித்து வனப்போங்குஞ்
செங்கையொடுஞ் சென்று திருவாயி லுட்புக்கார். (கஎஉ)

ஒன்றிய சிந்தை யுருக வுயர்மேருக்
குன்றனைய பேரம் பலமருங்கு கும்பிட்டு
மன்று ணிறைந்தாடு மாணிக்கக் கூத்தரெதிர்
சென்றணைந்து தாழ்ந்தார் திருக்களிற் றுபடிக்கீழ். (கஎங)

மே வு று.

ஆடி னுய்ந்று நெய்யொடு பாறயி ரென்றெடுத் தார்வத்தாற்
பாடி னுர்பின்னு மப்பதிகத்தினிற் பரவிய பாட்டொன்றி
னீடு வாழ்தில்லை ஞான்மறை யோர்தமைக் கண்டவர் நிலையெல்லாங்
கூடி மாறுகோத் தவர்தொழு தேத்துசிற் றம்பல மெனக்கூறி. (கஎச)

இன்ன தன்மையி லின்னிசைப் பதிகமுந் திருக்கடைக் காப்பேற்றி
மன்னு மானந்த வெள்ளத்திற் றிளைத்தெதிர் வந்தமுன் னின்றுமெம்
பின்னு வார்சடைக் கூத்தர்பே ரருள்பெறப் பிரியாத விடைபெற்றுப்
பொன்னி னம்பலஞ் சூழ்ந்தசாழ்ச் தெழுத்துபோச் தணைந்தனர் புறமுன்றில். (கஎஇ)

அப்பு றத்திடை வணங்கியங் கருளுட னணிமணித் திருவாயில்
பொற்பு றத்தொழு தெழுந்துடன் போதரப் போற்றிய புகழ்ப்பாணர்
நற்ப தந்தொழு தடியனேன் பதிமுத னதிவிவாக் கரைமேய
வொப்பி றைனங்கள் பணிந்திட வேண்டுமென் றுரைசெய வதுகோர்வார். (கஎக)

பொங்கு தெண்டிரைப் புனிதநீர் நிவாக்கரைக் குடதிசை யிசைப்போந்து
தங்கு தந்தையா ருடன்பரி சனங்களுந் தவமுனி வருஞ்செல்லச்
செங்கை யாழ்த்திரு நீலகண் டப்பெரும் பாணனு ருடன்சேர
மங்கை யார்புகழ் மதங்கசூ ளாமணி யாருடன் வரவந்தார். (கஎஎ)

இருந்த டங்களும் பழனமுங் கடந்துபோ யெருக்கத்தம் புலியூரின்
மருங்கு சென்றுற நீலக்கண் டப்பெரும் பாணனர் வணங்கிக்கார்
பொருங்கு சோலைசூ ழிப்பதி யடியனேன் பதியென நெடிதின்புற்
றருங்க லேச்சிறு மழவிளங் களிறனு ரங்கணேர் தருள்செய்வார். (கஎஅ)

ஐயர் நீரவ தரித்திட விப்பதி யளவின்மா தவமுன்பு
செய்த வாறெனச் சிறப்புரைத் தருளியச் செழும்பதி யிடங்கொண்ட
ஏமகொள் கண்டர்தங் கோயிலி னுட்புக்கு வலங்கொண்டு வணங்கிப்பா
ருய்ய வந்தவர் செழுந்தமிழ்ப் பதிகமங் கிசையுட னுரைசெய்தார். (கஎக)

அங்கு நின்றெழுந் தருளிமற் றவருட னம்பொன்மா மலிவல்லி
பங்கர் தாபினி துறையுகற் பதிபல பரிவொடும் பணிந்தேத்தித்
துங்க வண்டமிழ்த் தொடைமலர் பாடிப்போய்த் தொல்லிலெங் குருவேந்தர்
செங்க ணேற்றவர் திருமுது குன்றினைத் தொழுதுசென் றணைகின்றார். (கஎஉ)

மொய்கொண் மாமணி கொழித்துமுத் தாறுசூழ் முதுகுன்ற யடைவோமென்
றெய்த சொன்மலர் மாலைவண் பதிகத்தை யிசையொடும் புனைந்தேத்திச்
செய்த வத்திரு முனிவருந் தேவருந் திசையெலா நெருங்கப்புக்
கையர் சேவடி பணியுமப் பொருப்பினி லாதர ரடன்சென்றார். (கஎங)

வான நாயகர் திருமுது குன்றினை வழிபட வலங்கொள்வார்
ஞான றுந்தமிழ்ச் சொல்லிருக் குக்குறட் டினைமலர் மொழிந்தேத்தி
ஞான போனகர் நம்பர்தங் கோயிலை நண்ணியங் குள்புக்குத்
தேன லம்புதண் கொன்றையார் சேவடி நிலைத்தவின் பொடுதாழ்ந்தார். (கஎஉ)

தாழ்ந்தெ ழுந்துமுன் முரசதிர்ந் தெழுமெனுந் தண்டமிழ்த் தொடைசாத்தி
வாழ்ந்து போந்தங்கண் வளம்பதி யதனிடை வைகுவார் மணிவெற்புச்
சூழ்ந்த தண்புனல் சுலவுமுத் தாற்றெடு தொடுத்தசொற் றொடைமாலை
வீழ்ந்த காதலாற் பலமுறை வினம்பியே மேலினர் சிலநாள்கள். (கஎஊ)

ஆங்கு நாதரைப் பணிந்துபெண் ணைகட மணிநந்தரு மறையோசை
யோங்கு ஆங்காணை மாடத்து ளமர்கின்ற வொருதனிப் பரஞ்சோதி
பாங்க ணேர்ந்துமுன் வலங்கொண்டு பணிவுற்றுப் பரவுசொற் றமிழ்மாலை
நீங்கு நீங்குவீர் தொழுமின்க ளெனுமிசை செய்யவாய் மலர்வித்தார். (கஎசு)

வே று.

கருவ ரைப்பிற் புகாதவர் கைதொழு
மொரு வரைத்தொழு தள்ள முவந்துபோய்ப்
பெருவ ரத்தினிற் பெற்றவர் தம்முடன்
றிருவ ரத்துறை சேருமென் றேகுவார். (கஎஙி)

மூன்றை நான்க னொரோவொரு கான்முது
தந்தை யார்பியண் மேலிருப் பார்தலிர்ச்
தந்த ஞான ரவரரு கேசெலச்
சிந்தை செய்விருப் போடுமுன் சென்றனர். (கஅக)

ஆதி யார்த மரத்துறை நோக்கியே
காத லாலணை வார்கடி தேகிடத்
தாதை யாரும் பரிவுறச் சம்பந்தர்
பாத தாமரை நொந்தது பைப்பய. (கஅஎ)

மறைய னேத்து மொருவடி வாமென
நிறைம திப்பிள்ளை நீணிலஞ் சேர்ந்தெனத்
துறைய லக்கங்கை சூடி மரத்துறை
யிறைவ ரைத்தொழு வான்விரைந் தேகினர். (கஅஅ)

பாச மற்றில ராயினும் பார்நிசை
யாசை சங்கரற் காயின தன்மையாற்
றேசு பிக்க திருவரு வானவ
ரீச னேத்தொழு தேதொழு தேகினர். (கஅக)

இந்த மாநிலத் தின்னிரு ணீங்கிட
வந்த வைதிக மாமணி யானவர்
சிந்தை யாரமு தாகிய செஞ்சடைத்
தந்தை யார்கழ லுற்றெழுந் தேகினர். (கக0)

மாறன் பாடி யெனும்பதி வந்தற
வாறு செல்வருத் தத்தி னசைவிஞல்
வேறு செல்பவர் வெய்துறப் பிள்ளையா
ரேறு மஞ்செழுத் தோதியங் கெய்திட. (ககஎ)

உய்ய வந்தசம் பந்த ருடன்வந்தார்க்
கெய்து வெம்மை யிளைப்பஞ்சி ஞன்போலக்
கைக ளாயிரம் வாங்கிக் கரந்துபோய்
வெய்ய வன்சென்று மேல்கடல் வீழ்ந்தனன். (கக2)

அற்றை நாளிர வப்பதி யின்னிடைச்
சுற்று நீடிய தொண்டர்கள் போற்றிடப்
பெற்ற மூர்த்த பிரான்கழல் பேணுவார்
வெற்றி மாதவத் தோருடன் மேவினர். (கக3)

இந்தி லுக்க ணெழில்வளர் பூந்தராய்
மன்ன னுர்தம் வழிவருத் தத்தினை
யன்ன மாடுத் துறைநீ ரரத்துறைச்
சென்னி யாற்றர் திருவளஞ் செய்தனர். (கக4)

எறு தற்குச் செவிகை யிடக்குடை
கூறி யூதக் குலவுபொற் சின்னங்கண்
மாறின் முத்தின் படியிஞண் மன்னிய
நீறு வந்த நிமல ருலவுவார். (கக5)

நீடு வாழுபது மாருெல் வாயிலின்
மாட் மாமனை தோறு மறையோர்க்குக்
கூடு கங்குற் கனலிற் குலமறை
தேடு சேவடி தோன்றமுன் சென்றுபின். (கஙக)

ஞான சம்பந்த னம்பா லணைகின்றான்
மான முத்தின் சிவிகை மணிக்குடை
யான சின்னம் பாற்கொண் டருங்கலைக்
கோன வன்பா லணைந்து கொடுமென. (கஙஎ)

அந்த ணாள ருரைத்தவப் போழ்தினில்
வந்து கூடி மகிழ்ந்தற் புதமுறுஞ்
சிந்தை யோடுஞ் செழுநீ ராத்துறை
யிந்து சேகரர் கோயில்வந் தெய்தினர் (கஙஅ)

ஆயகு மற்ற வருளடி யாருட
னேங்கு கோயிலுள் ளார்கருமுண் டாயிட
வீங்கி தென்ன வதிசய மென்பவர்
தாங்க ளம்மறை யோர்கண்முன் சாற்றினார் (கஙக)

சால மிகக வியப்புற தன்மையின்
பால ராதலும் பளளி யெழுசசியின்
கால மெய்திடக் காதல் வழிப்படுஞ
சீல மிக்கார் திருக்காபபு நீகினார. (உ00)

திங்க ணீர்மைச செழுந்திரண் முத்தினுற்
றுங்க வெண்குடை தூய சிவிகையும்
பொகுக வூதும் பொருவருஞ் சின்னமு
மகுக ணைத ரருளினுற் கண்டனர். (உ0க)

கண்ட பின்னவர் கைதலை மேற்குவித்
தெண்டி ரைககும் விளக்கிவை யாமெனத்
தொண்ட ரோடு மறையவா சூழ்ந்தெழுந
தண்டர் நாடு மறிவுற வாாத்தனர். (உ0உ)

சங்கு துந்துபி தாரைபே ரிம்முதற்
பொகுகு பல்லிய நாதம பொலிகதெழ
வங்க ணன்னரு ளாலவை கொண்டுடன்
பொங்கு காத லெதிர்கொளப் போதுவார். (உ0ங)

மாசில் வாய்மைநெல் வாயின் மறையவ
ராசில் சீர்ச்சண்பை யாண்டகை யார்க்கெதிர்
தேசு டைச்சிவி கைமுத லாயின
வீச நின்னரு ளாற்றுங்கி யேகினர். (உ0ச)

இத்த லேயிவ நின்னண மேகினு
ரத்த லேச்சண்பை நாதர்க்கு மல்லிரா
முத்த சிவிகை முதலாயின்
வுய்த்த வீசும் படிமுன் னுணர்த்துவார். (உ0ஞ)

அன்ன சீர்வயல் சூழ மாத்தலை
வன்ன லார்நா மகிழ்ந்தளிக் கும்மலை
கொன்ன லாருங்கொண் டெய்த்தல்செய் வாயென
வுன்ன வாறருள் செய்ய வுணர்ந்தபின். (உ0க)

சண்பை யாளியார் தாங்கண்ட பேரருட்
பண்பு தந்தையார் தம்முடன் பாங்கமர்
தொண்ட ருக்கருள் செய்து தொழாமுனம்
விண்பு லப்பட வீங்கிரு ணீங்கலும். (உ0எ)

மாலை யாமம் புலர்வுறும் வைகறை
வேலை செய்வினை மூற்றிவெண் ணீறணி
கோல மேனிய ராய்க்கைம் மலர்குவித்
தேல வஞ்செழுத் தோதி யெழுந்தனர். (உ0அ)

போத ஞானப் புகலிப் புனிதரைச்
சீத முத்தின் சிவிகைமே லேற்றிடக்
காதல் செய்பவன் போலக் கருங்கடன்
மீது தேரின்வந் தெய்தினன் வெய்யவன். (உ0க)

ஆய போழ்தி னரவெனு மார்ப்புடன்
றூய முத்தின் சிவிகை சுடர்க்குடை
மேய சின்னங்கள் கொண்டுமெய் யன்பரோ
டேய வந்தணர் தாமெதிர் தோன்றினர். (உக0)

வந்து தோன்றிய வந்தணர் மாதவர்
கந்த வார்பொழிற் காழிகன் ஞடர்மு
னந்த மில்சீ ராத்துறை யாதியார்
தந்த பேரரு டாங்குவீ ரென்றனர். (உகக)

என்று தங்களுக் கீச ரருள்செய்த
தொன்று மங்கொழி யாமை யுரைத்துமு
னின்று போற்றித் தொழுதிட நேர்ந்தது
மன்று ளாரரு ளென்று வணங்கினர். (உகஉ)

எந்தை யீச னெனவெடுத் திவ்வருள்
வந்த வாறுமற் றெவ்வண மோவென்று
சிந்தை செய்யுந் திருப்பதி கத்திசை
புந்தி யாரப் புகன்றெதிர் போற்றுவார். (உகங)

மெய்ம்மை போற்றி விடாத விருப்பினுற்
றம்மை புன்னும் பரிசுதந் தாள்பவர்
செம்மை நித்தில யானச் சிறப்பரு
ளெம்மை யாளுவப் பானின் றளித்ததே. (உகச)

பொடிய ணிந்த புராண னரத்துறை
யடிக டம்மரு னேயிது வாமெனப்
படியி லாதசொன் மாலைகள் பாடியே
செடிது போற்றிப் பதிக திசைப்பினர். (உகஇ)

சோதி முத்தின் விலைகெழும் வத்துபார்
மீது தாழ்த்துவெண் ணீற்றெரி போற்றின்
ரூதி யாரரு ளாதலி னஞ்செழுத்
தோதி யேறிரு ரய்ய வுலகெலாம். (௨௬௯)

வே று.

தொண்ட ரார்த்தனர் சுருதிக ளார்த்தன தொல்லே
யண்ட ரார்த்தன ரகிலமு மார்ப்புட னெய்தக்
கொண்ட லார்த்தன முழவமு மார்த்தன குழுமி
வண்ட ரூப்பொலி மலர்மழை யார்த்தது வானம். (௨௭௦)

வளைபு மார்த்தன வயிர்களு மார்த்தன மறையின்
கிளைபு மார்த்தன கிளைஞரு மார்த்தனர் கெழுவுங்
களைக ணார்த்ததொர் கருணையி னார்கவின் முத்தின்
விளைபு மாக்கதிர் வெண்குடை யார்த்தது மிசையே. (௨௭௧)

பல்கு வெண்கதிர்ப் பத்திசேர் நித்திலச் சிவிகைப்
புல்கு நீற்றெரி யுடன்பொலி புகலிகா வலனு
ரல்கு வெள்வளை யலத்தெழு மணிநிரைத் தாங்க
மல்கு பாற்கடல் வளர்மதி யுதித்தென வந்தார். (௨௭௨)

நீடு தொண்டர்கண் மறையவ ரேனையோர் நெருங்கி
மாடு கொண்டெழு மகிழ்ச்சியின் மலர்க்கைமேற் குவித்தே
யாடு கின்றன ரயர்ந்தன ரளவிலா னந்தக்
கூடு கின்றகண் பொழி புனல் வெள்ளத்திற் குளித்தார். (௨௭௩)

செய்ய பொன்புனை வெண்டர ளத்தணி சிறக்கச்
சைவ மாமறைத் தலைவர்பாற் பெறுந்தனிக் காளம்
வைய மேழுடன் மறைகளு நிறைதவத் தோரு
முய்ய ஞானசம் பந்தன்வந் தானென வூத. (௨௭௪)

சுற்று மாமறைச் சுருதியின் பெருகொலி நடுவே
தெற்றி னுர்புர மெரித்தவர் தருதிருச் சின்ன
மூற்று மானவண் ணானமே மூலசுரந் தூட்டப்
பெற்ற பாலரு வாயன்வந் தானெனப் பிடிக்க. (௨௭௫)

புணர்ந்த மெய்த்தவக் குழாத்தொடும் போதுவார் முன்னே
யிணைந்த நித்திலத் திலங்கொளி நலங்கிளர் தாரை
யிணைந்த மாமறை முதற்கலை யகிலமு மோதா
தணர்ந்த முத்தமிழ் வீரகன்வந் தானென வூத. (௨௭௬)

தெருளு மெய்க்கலை விளங்கவும் பாருளோர் சிந்தை
யிருளு நீங்கவு மெழுதுசொன் மறையளிப் பவர்தாம்
பொருளு ஞானமும் போகமும் போற்றி யென்பாருக்
கருளு மங்கணர் திருவரத் துறையுவந் தணைந்தார். (௨௭௭)

வந்து கோபுர மணிநெடு வாயில்சேய்த் தாகச்
சந்த நித்திலச் சிவிகைவின் றிழிந்துதாழ்ந் தெழுந்து
சிந்தை யார்வமு மகிழ்ச்சியும் பொங்கிமுன் செல்ல
வந்தி காண்மதி யணிந்தவர் கோயிலுள் ளடைந்தார். (௨௭௮)

மன்று சோலை வலங்கொண்டு நிருவுன்பு வத்த
சென்னி யிற்கரங் குவித்துவீழ்ந் தன்பொடு நினைப்பா
சென்னை யும்பொரு ளாகவின் னருள்புரிந் தருளும்
பொன்ன டித்தலத் தாமரை போற்றியென் றெழுந்தார். (உஉக)

வே று.

சூடி னார்கர மலங்கள் சொரிந்திழி கண்ணீ
ராடி னார்திரு மேனியி லரத்துறை விரும்பி
நீடி னார்திரு வருட்பெருங் கருணையே நிகழப்
பாடி னார்திருப் பதிகமே ழிசையொடும் பயில. (உஉஎ)

இசைவி ளங்கிட வியல்பினிற் பாடினின் றேத்தி
மிசைவி ளங்குநீர் வேணியா ரருளினுன் மீண்டு
திசைவி ளங்கிடத் திருவருள் பெற்றவர் சிலரா
னசைவில் சீர்த்தொண்டர் தம்முட னப்பதி யமர்ந்தார். (உஉஅ)

தேவர் தம்பிரான் றிருவரத் துறையினி லிறைஞ்சி
மேவு ளாளகளில் விமலனூர் நெல்வெண்ணெய் முதலாத்
தாவி லன்பர்க டம்முடன் றொழுதுபின் சண்பைக்
காவ லாரருள் பெற்றுடன் கலந்துமீண் டணைந்தா. (உஉக)

விளக்கு வேணுபு ரத்திருத் தோணிவீற் றிருந்த
களக்கொள் கண்டர்தங் காதலி யாருடன் கூட
வுளகொ ளப்புகுந் தணர்வினில் வெளிப்பட வுருகி
வளக்கொள் பூம்புனற புகலிமேற் செலமனம் வைத்தார். (உகo)

அண்ண லார்திரு வரத்துறை யடிகளை வணஙஇ
நண்ணு பேரரு ளால்விடை கொண்டுபோய் நடக்கொண்
டெண்ணி றைந்தபூ கழலினை யுசிமேற் கொண்டே
வெண்ணி லாமலர் நிதிலிச சிவிகைமேற் கொண்டார். (உகக)

சிவிகை முத்தினிற் பெருகொளி திசையெலாம் விளக்கக
கவிகை வெண்மதிக் குவிரொளி கதிர்செய்வான் கலப்பக்
குவிகை மேற்கொண்டு மறையவர் குணலையிட் டாடப்
புவிகைம் மாறின்றிப் போற்றவந் தருளினூ போதார். (உகஉ)

மறைமு ழஙகின தழஙகின வண்டமிழ வயிரின்
குறைர ன்றன முரன்றன வளைக்குலஙு கரள
முறையி யம்பின வியம்பல வொலித்தன முரசப்
பொறை கறங்கின பிறஙகின போற்றிசை யரவம். (உகக)

உடைய பிள்ளையார் வருமெல்லை யுளனவப் பதியோர்
புடையி ரண்டினுங் கொடியொடு பூந்துகில் விதான
கடைசெய் காவணந் தோரணம் பூகநற் கதலி
யிடையு மாலைகள் நிறைகுடம் விளக்கொடு நிரைத்தார். (உகச)

அனைய செய்கையா லெதிர்கொளும் பதிகளா னவற்றின்
வினைத ரும்பவர் நீர்ப்பவர் கோயில்கண் டிறைஞ்சி
புனையும் வண்டமிழ் மொழிந்தடி பணிந்துபோய் தினைர்தார்
பினைெ லெல்கைமா வரித்தவர் மிழ்பெரும் பழனூர். (உகஇ)

வேறு.

அங்கணர் நினம்பிறை யணிந்த சென்னியார்
பொங்கெழிற் கோபுரம் தொழுது புக்கபின்
றுங்கநீள் விமானத்தைச் சூழ்ந்து வந்துமுன்
பங்கயச சேவடி பணிந்து பாடுவார். (உகக)

மண்ணினிற் பொலிகுல மலையர் தாந்தொழு
தெண்ணில்சிர்ப பணிகள்செய் தேத்துந் தன்மையி
னண்ணிய வகைநிறப் பிதது நாதரைப்
பண்ணினிற் றிகழ்திரு பதிகம் பாடினார். (உகஎ)

பாவின மிசைவழி பாடி யங்ககன்
றியாவருந் தொழுதுட னேத்த வெய்தினார
மூவுல குய்யாஞ் சுண்ட மூர்த்தியார்
மேவிய பெருநதிரு விசய மகலையில். (உகஅ)

அந்தணர் விசயமகு கையினி லகுகணர்
தந்தனி யாலயஞ சூழாது தாழாதுமுன்
வந்தனை செயதுகோ தனததை மன்னிய
செந்தமிழ மாலையிற் சிறபபித தேததினார (உகக)

விசயமகு கையினிட மகன்று மெய்யர்தா
ளசைவில்வை காவினி லணைந்து பாடிப்போக்
திசைவளா ஞானசம் பநத ரெயதினார
திசையுடை யாடையா திருபபு நம்பயம். (உசஅ)

புறம்பயத் திறைவரை வணகஙிப் போற்றிசெய
திறமபுரி நீமையிற பதிகச செநதமிழ
நிறம்பயி லிசையுடன் பாடி நீடிய
வறநதரு கொள்கையா ரமாநது மேவினார (உசக)

அததிருப் பதிபணிந் தகன்று போயனற
கைததலத தவர்பதி பிறவுகு கைதொழு
மூததமிழ விரகரா முதல்வா நண்ணினர்
செய்த்தலைப் பணிலமுத நீனுஞ் சேயஞலா (உசஉ)

திருமலி புகலிமன் சேரச சேய்ஞலா
ரருமறை யவர்பதி யலகை ரிததமுன்
பெருமறை யொடுமுழ வொலிபி றகுவே
வருமுறை யெதிர்கொள வந்து முறதினார (உசஎ)

ஞானசம் பந்தரு நாய னர்சடைத
னாறுந் தொடையன்முன் சூட்டும் பிளனையார்
பான்மையில் வரும்பதி யென்று கித்தில
யானமுன் னிழிந்தெதி ரிறைஞ்சி யெய்தினர். (உசச)

மரமறை யானர்வண் புகலிப் பின்னையார்
தாமெழுந் தருளிடத் தங்கள பின்னையார்
காமரும் பதியின்வந் தருளக் கண்டன
சாமமெழ் வுடன்பணிந் தாடி யார்த்தனர். (உச[illegible]

கனித்தனர் புண்ணியக் கரக வாசரீர்
தெளித்தனர் பொரிகளு மலருஞ் சிந்தினர்
நனித்தனர் கண்மழை சொரிகி யாயிர
மலித்தவர் கோயிலு ளவர்முன் பெய்தினர். (உசக)

வெங்குரு வேந்தரும் விளங்கு கோயிலைப்
பொங்கிய விருப்பினுற் புடைவ ணங்கொடு
செங்கைகள் சென்னிமேற் குவித்துச சென்றுபுக
கங்கணர் முன்புற வணைந்து தாழ்ந்தனர். (உசஎ)

வேதியர் சேய்ஞலூர் வீமலர் தயகழல்
காதலிற் பணிந்தவர் கருணை போற்றுவா
தாதைதா டடிந்தசண் டீசப பிள்ளோயார்
பாதகப பயன்பெறும் பரிசு பாடினர். (உசஅ)

இன்னிசை வண்டமிழ் பாடி யேத்தியர்
நன்னெடும் பதியுளோர் நயக்க வைகிய
பின்னர்வெண் பிறையணி வேணிப பிஞ்சகர்
மன்னிய திருபபனந் தாளை வணங்கினர். (உசக)

ஆகணி சொன்மலர் மாலை சாத்தியப
பாங்குபந் தணநலூர் பணிந்து பாடிப்போய்த
தீகுகூ மாமறைச செம்மை யநதண
ரோகுமோ மாம்புலி யூர்வந் தற்றனர். (உகி0)

மற்றநற் பதிவட தளியின் மேவிய
வற்புத ரடிபணிந் தலர்ந்த செந்த ழச
சொற்றெடை பாடியங் ககன்று சூழமநிற்
பொற்பதி வாழகொளி புத்தூ புகனா. (உகிக)

சீர்வளர் கோயிலை யணைந்து தேமலர்க்
கார்வளர் கண்டர்தாள் பணிந்து காண்பவர்
பார்புகழ பதிகங்கள் பாடி நீடுவார்
வார்பொழிற் கடம்பையும் வணஙகி வாழந்தனா. (உகிஉ)

நம்பரை நலந்திகழ நாரை யூரினிற்
கும்பிடும் விருபபொடு குறுகிக கூடிய
வம்பலர் செந்தமிழ் மாலை பாடிஙின்
றெம்பிரான் கவுணியர் தலைவ ரேதகினர். (உகிக)

அப்பதி பணிந்தருந் தமிழ்பு னைந்துத
மெய்ப்படு விருப்பொடு மேவு ஞானமர்
பொற்பதி பலவுமுன் பணிந்து போந்தனர்
பைப்பணி யவர்கருப் பறிய வூரினில். (உகிச)

பரமர்தந் திருக்கருப் பறிய வூரினைச
செபுரச் செறுவர்கை தொழுது செந்தமி
ழுரையிசை பாடியம் மருங்கி னுள்ளவாஞ்
சார்தொழும் பதிகஞ்ச் தொழுது பாடினர். (உகிஇ)

வேறு.

மண்ணுலகு செய்ததவப் பயனு புள்ள வள்ளலா ரப்பதிகள் வணங்கி யேகி
யெண்ணின்முரு செங்கியெழப் பணில மார்ப்ப விலங்கியகா ளஞ்சின்ன மெல்முழுதக்
கண்வளர்மென் கரும்புமிடை கதிர்ச்செஞ் சாலிகதலிகமுகுடனேங்குகழனிகாட்டித்
தெண்ணிலவு சூடியதம் பெருமான் வைகுந் திருப்பிரம புரஞ்சாரச் செல்லும்போது. ()

பிள்ளோயா ரெழுந்தருளக் கேட்ட செல்வப் பிரமபுரத் தருமறையோர் பெருகு
காத, வுள்ளமகிழ் சிறந்தோங்கத் தோணி மேவு முமைபாகர் கழல்வணங்கி யோசை
கூர, வெள்ளமறை யொலிபெருக மறுகு தோறு மிடைமகர தோரணங்கள் கதலி
பூகந், தெள்ளுபுன னிறைகுடங்க ளுப தானஞ் செழுங்கொடிக ணிரைத்தெதிர்கொள்
சிறப்பிற் செல்வார். (உகள)

ஆரணங்கண் மதுரவொலி யெழுந்து பொங்க வரசிலையுந் தருப்பையும்பெய் தணிந்த வாசப், பூரணகும் பங்கணிறை கரக மேந்திப் புதுமலரு நறுந்துகளும் பொரியுஞ் சூவி, வாரணங்கு முலையுமையாள் குழைத்த செம்பொன் வள்ளத்தி லமுதுண்ட வள்ள லாரைச், சீரணங்கு மணிமுத்தின் சிவிகை மீது செழுந்தரளக் குடைநிழற்கீழ்ச் சென்று கண்டார். (உகஅ)

கண்டபொழு தேகைக டலேமேற் கொண்டு கண்களிப்ப மனங்களிப்பக் காதல் பொங்கித், தொண்டர்களு மறையவருஞ் சென்று சூழ்ந்து சொல்லிறந்த மகிழ்ச்சியி னூற் றுதித்த வோசை, யெண்டிசையு நிறைவித்தா ராடை வீசி யிருவிசும்பின் வெளி தூர்த்தா ரேறு சீர்த்தி,வண்டாழ்ந்தா யகருமிழிந் தெதிரே சென்று வணங்கியவ ருடன் கூடி மகிழ்ந்து புக்கார். (உகக)

திங்களணி மணிமாட மிடைந்த வீதி சென்றணைந்து தெய்வமறைக் கற்பின் மாதர் மங்கலவாழ்த் திசையிரண்டு மருங்கு மல்க வானவர்தா யகர்கோயின் மருங்கு சார்ந்து தூங்கலிலைக் கோபுரத்தை யிறைஞ்சிப் புக்குச் சூழ்ந்திருப் தோணியிசை மேவினார்க டங்கடிரு முன்புதாழ்ந் தெழுந்து நின்று தமிழ்வேதம் பாடினார் தாளம் பெற்றார். ()

பரவுதிருப் பதிகவிசை பாடி நீடு பரங்கருணைத் திருவருளின் பரிசு போற்றி, விர வுமலர்க் கண்பனிப்பக் கைகள் கூப்பி விழுந்தெழுந்து புறம்போந்து வேத வாய்மைச், சிரபுரத்துப் பிள்ளோயார் செல்லும்போது திருநீல கண்டயாழ்ப் பாணர்பின்னே, வர வவரை வளம்பெருகு மெனவிற் போக வருள்செய்து தந்திருமா ளிகையின் வந்தார். ()

மறையவர்க ளடிபோற்றத் தந்தை யாரு மருங்கணைய மாளிகையி லணையும் போதி, னிறைகுடமு மணிவிளக்கு முதலா யுள்ள நீடுமறைக் குலமகளிர் தெருங்கி யேந்த, விறைவர்திரு நீற்றுக்காப் பேற்றி முன்சென் றீன்றதா யார்சாத்தி யிறைஞ்சி யேத்த, முறைமையவர்க் கருள்செய்து மடத்துப் புக்கார் முதல்வர்பான் மணிமுத் தின் சிவிகை பெற்றார். (உகஉ)

செல்வநெடு மாளிகையி லமர்ந்து நாளுந் திருத்தோணி பிசையாரைச் சென்று தாழ்ந்து, மல்குதிருப் பதிகங்கள் பலவும் பாடி மனமகிழ்ந்து போற்றிசைத்து வைகு நாளி, லொல்லைமுறை புபாயனப் பருவ மெய்த வுலகிறந்த வெளான முணரப் பெற் றார், தொல்லைமறை விதிச்சடங்கு மறையோர் செய்யத் தோலொடுதூ ரங்களைந் தரன்கண் போற்ற. (உகக)

ஒருபிறப்பு மெய்தாலும் புடையார் தம்மை புலகியல்பி னுபாயன முறைமை
யாருமிருபிறப்பி னிலைமையினேச் சடக்கு காட்டி யெய்துவிக்கு மறைமுனிவ ரெதிரே
நின்று, வருதிறத்தின் மறைநான்குக் தந்தோ மென்று மந்திரங்கண் மொழிந்தவர்க்கு
மதுரி வாக்காற், பொருவிறப்ப வோதினுர் புகலி வந்த புண்ணியனு ரெண்ணிறத்த
புனித வேதம். (உகூ)

சுருதியா யிரமோதி யங்க மான தொல்கலேக ளெடுத்தியம்புந் தோன்ற லாரைப்,
பரிதியா யிரகோடி விரிந்தா லென்னப பரஞ்சோதி யருள்பெற்ற பான்மை மேன்மை,
கருதியா தரவோடும் வியப்புற் றேததுங் கலேமறையோர் கவுணியனுர் தம்மைக் கண்
முன், வருதியா னப்பொருளென் றிறைஞ்சித் தாமுன் வல்லமறை கேட்டையங் தீர்
ந்து வாழ்ந்தார். (உகூ)

மந்திரங ளானவெலா மருளிச செய்து மற்றவற்றின் வைதிகநூற் சடங்கின்
வந்த, சித்தைமயக் குறுமையங் தெளிய வெல்லாஞ் செழுமறையோர்க் கருளியவர்
தெருளு மாற்றுரன், மூந்தைமுதன் மந்திரங ளெல்லாந் தோன்று முதலாகு முதல்
வனு ரெழுத்தஞ் சென்பா, ரந்தியினுண் மந்திரமஞ் செழுதது மேயென் றஞ்செழுத்
தின் நிருப்பதிக மருளிச செய்தார். (உகூ)

அத்தகைமை பின்னேயா ருருளிச செய்ய வந்தணர்க ளருடலேமேற் கொண்டு தாழ்
ந்து, சித்தமகிழ வொடுநிறபபத் தாமுந் தெய்வத திருத்தோணி யமர்ந்தாரைச சென்று
தாழந்து, மெய்த்தவிசைப் பதிகங்கள் கொண்டு போற்றி விரைமலர்த்தாண் மனங்
கொண்டு மீண்டு போந்து, பத்தருட னினிதமரும் பண்பு கூடப் பரமர்தாள் பணிந்
தேத்திப் பயிலு நாளில். (உகூ)

வே று.

பந்தணேமெல் விரலாளுமபூமரும்பாய் விடைமீது
வந்துபொன்வள் ளத்தளித்த வரம்பின்ஞான தமுதுண்ட
செந்தமிழ்ஞா னசம்பந்தர் நிறங்கேட்டிறைஞ் சுதற்காக
வந்தணர்பூந் தராய்தன்னி லிணைந்தனர்நா வுக்கரையர். (உகூ)

வாக்கின்பெரு விறன்மன்னர் வந்தணைந்தா ரெனக்கேட்டுப
பூக்கமழ்வா சத்தடஞ்சூழ புகலிபபெருந் தகையாரு
மாக்கியால் வினேபபேறென் றன்பாகுழாத் தொடுமெய்தி
யேற்கும்பெரு விருப்போடு மெதிர்கொளவெய் தும்பொழுதில். (உகூ)

செந்தையிடை யருவன்புந் திருமேனி தனிலசைவுங
கந்தையிகை யாங்கருத்துய் கையுழவா ரப்படையும்
வந்திழிகண் ணீர்மழையும் வடிவிற்பொலி திருநீறு
மந்தமிலாத் திருவேடத் தரசுமெதிர் வந்தணைய. (உஎ0)

கண்டகவு ணியக்கன்றுங் கருத்திற்பரவு மெய்ககாதற்
றெண்டோர்திரு வேடமேரே தோன்றியதென் றுதொழுதே
யண்டரும்போற் றவணேந்தங் கரசுமெதிர் வாதிறைஞ்ச
மண்டியவார் வம்பெருக மதுரமொழி யருள்செய்தார். (உஎக)

பேரிசைசா வுக்கரசைப் பின்னேயார்கொண் டுடன்போந்து
போர்விடையார் திருத்தோணிப் பொற்கோயிலுட் புகும்போதி
லார்வம்பெரு கவணியு மவருடன்கும் பிட்டருளாற்
சிர்வனர்தொண் டரைச்கொண்டு திருமாளிகை யினிற்சேர்ந்தார். (உஎஉ)

அணைபுக்கிருத் தொண்டர்தம்மோ டாண்டவர சக்குமன்பா
லினையிறிரு வழுதாக்கி யியல்பா லமுதுசெய்வித்துப்
புணரும்பெரு கன்புரண்பும் பொங்கியகா தலிற்கும்பிட்
டிணருஞ்சொன்மா லகள்சாத்தி புடன்மகிழ்வெய் தியுரைதார். (ஏஎக)

அந்நாள்சில நாள்கள்செல்ல வருட்டிருநா வுக்கரசர்
மின்னுர்சடை யண்ணலெங்கு மேவிடங்கும் பிடவேண்டிப்
பொன்மார்பின்மூந் நூல்புனைந்த புகலிபபிரா னிசைவோடும்
பின்னுகவெய் தவிறைஞ்சிப் பிரியாதாண் பொடும்போந்தார். (ஏஎச)

வாக்கின்றனி மன்னரேக மாருத்திரு வுளத்தோடும்
பூக்கமழும் பணிசூழ்ந்த புகலியின்நீண் டும்புருத்து
தேக்கியமா மறைவெள்ளத் திருத்தோணிவீற் றிருந்தாரைத்
தாக்கின்றமிழ் மாலைபாடித் தொழுதங்குறை கின்றநாளில். (ஏஎஏ)

செந்தமிழ்மா லலிகற்பச் செய்புட்களான் மொழிமாற்று
வந்தசொற்சீர் மாலைமாற்று வழிமொழியெல் லாமடக்குச்
சந்தவியமக மேகபாதந் தமிழிருக்குக் குறள்சாத்தி
யெந்தைக்கெழு கூற்றிருக்கை யீரடியீ ரடிவைபபு. (ஏஎசு)

நாலடிமேல் வைபபுமேன்மை நடையின்மூடு குபிராகஞ்
சால்பினிற்சக் கரமாதி லிகற்பங்களசாற் றும்பதிக
மூலவிலக் கியமாக வெல்லாப்பொருள் களுமுற்ற
ஞாலத்துயர் காழியாரைப பாடினுர் ஞான சம்பந்தர். (ஏஎஎ)

இன்னிசைபா டினவெல்லாம் யாழ்பபெரும்பா ணனுர்தாமு
மன்னுபிசை வடிவான மதங்கசூளா மணியாரும்
பன்னியவே ழிசைபற்றிப் பாடப்பதி கங்கள பாடிப
பொன்னின்றிருத் தாளம்பெற்றுர் புகலியிற்போற் றியிருந்தார். (ஏஎஅ)

அங்கணமர் கின்றநாளி லருந்தமிழ்நா டெத்திணுள்ளுக்
கிங்கட்சடை யண்ணலார்தந் திருப்பதியா வையுங்கும்பிட்
டெங்குந்தமிழ் மாலைபாடி யேத்தியிங்கெய் தவனென்று
தங்குலத்தா தையரோடுந் தவமுனிவர்க் காருள்செய்தார். (ஏஎக)

பெருகுவிருப் புடனேக்கிப் பெற்றகுலத் தாதையாரு
மருமையாலும் மைப்பயந்த வதனற்பிரிர் துறைவாற்றே
னிருமைக்குமின்ப மளிக்கும் யாகமும்யான் செயவேண்டு
மொருமையாலின் னஞ்சிலநா ளுடனெய்துவ னென்றுரைத்தார். (ஏஅ0)

ஆண்டகையா ருமிசைந்தங் கம்பொற்றிருத் தோணிமேவு
நீண்டசடை யாரடிக்கீழ்ப் பணிவுற்றுநீ டருள்பெற்றே
யீண்டுபுகழ்த் தாதையார்பின் னெய்திடயாழப் பாணரோடுங்
காண்டருகா ழிதொழுது காதலினுற் புறம்போந்தார். (ஏஅஅ)

அத்திருமூ தானுள்ளா ரமர்ந்துடன்போ துவார்போத
மெய்த்தவரந் தணர்மீக்கா ணிடைகொண்டுமீள் வார்கண்மீள
முத்தின்சிவிகை மேல்கொண்டு மொய்யொளித்தா மரைத்த
னித்திலவெண் குடைமீது நிழைமதிபோல் நிழற்ற. (ஏஅக)

சென்னித்தனிக் காளந்தாரை செபுரத்தாண் டகைவேற்தா
னென்னுந்தகை மைவிளங்க வேற்றதிருப் பெயர்சாற்ற
முன்னெம்மருங் குகிரந்த மூசுசுடைப்பல் லியமார்ப்ப
மன்னுஞ்திருத் தொண்டாளர் வந்தெதிர்கொண் டிவணங்க. (உஅகூ)

சங்காதங்க ளொலிப்பத் தழங்குபொற்கோ டுமுழங்க
மங்கலவாழ்த் துரையெங்கு மல்கமறை முன்னியம்பத்
திங்களும்பாம் புமணிந்தார் திருப்பதியெங்கு முன்சென்று
பொங்கியகா தலிற்போற்றப் புகலிக்கவு ணியர்போந்தார். (உஅச)

திருமறைச்சண் பையாளி சிவஞர்திருக் கண்ணர்கோயில்
பெருவிருப்பா லணைந்தேத்திப பிஞ்சகர்கோ யில்பிறவு
முருகியலன் பாலிறைஞ்சி யுயர்தமிழ்மா லைகொண்டேத்தி
வருபுனற்பொன் னிவடபாற் குடதிசைநோக் கிவருவார். (உஅடு)

போற்றியகா தல்பெருகப் புள்ளிருக்குந் திருவேளூர்
நாற்றடந்தோ ளுடைமூன்று நயனப்பிரான் கோயினண்ணி
யேற்றவன்பெய் தவணங்கி யிருவர்புள்வேக் தரிறைஞ்சி
யாற்றியபூ சனைசாத்தி யஞ்சொற்பதி கமணிந்தார். (உஅசு)

நீதிதிரு நின்றியூரி னிமலர்தாள் கழலேத்திக்
கூடியகா தலிற்போற்றிக் கும்பிட்டுவண் டமிழ்கூறி
நாடுசீர்நீ டூர்வணங்கி நம்பர்திருப்புன் கூர்ணணி
யாடியபா தமிறைஞ்சி யருந்தமிழ்பா டியமர்ந்தார். (உஅஎ)

அங்குநின்றே கியப்பாங்கி லரனூர்மகிழ் கோயிலான
வெங்கணுஞ்சென் றுபணிந்தே யேத்தியிம வான்மடந்தை
பங்கருறை பழமண்ணிப் படிக்கரைக்கோ யில்வணகுகித்
தங்குதமிழ் மாலைசாத்தித் திருக்குறுக்கை பதிசார்ந்தார். (உஅஅ)

திருக்குறுக்கைப் பதிமன்னித் திருவீரட்டா னத்தமர்ந்த
பொருப்புலில்லா ளரையேத்திப் போந்தன்னியூர் சென்றுபோற்றிப்
பருக்கைவரை யுரித்தார்தம் பந்தணநல லூர்பணிந்து
வீருப்புடன்பா டலிசைத்தார் வேதந்தமி ழால்விரித்தார். (உஅக)

அப்பதிபோற் றியகல்வா ரரனூர்திரு மணஞ்சேரி
செப்பருஞ்சீர்த் தொண்டரோடுஞ் சென்றுதொழு திசைபாடி
யெப்பொருளுந் தருமீச ரெதிர்கொள் பாடிப்பதியெய்தி
யொப்பில்பதி கங்கள்பாடி யோங்குவேள்விக் குடியுற்றார். (உகo)

செழுந்திருவேள் விக்குடியிற் றிகழ்மணவா ளநற்கோலம்
பொழிந்தபுனற் பொன்னிமேவும் புனிதத்துருத் தியிரவிற்
றழும்பியதன் மையுங்கூடத் தண்டமிழ்மா லையிற்பாடிக்
கொழுந்துவெண்டிங் களணிந்தார் கோடிகாவிற் சென்றடைந்தார். (உகக)

திருக்கோடிகா விலமர்ந்த தேவர்கொ மணிதன்னே
யெருக்கோடித ழிபும்பாம்பு மிசைத்தணிந்தா னேவெள்ளேனப்
பருக்கோடணிந் தபிராணப் பணிந்துசொன்மா லைகள்பாடிக்
கருக்கோடிரீப் பார்கள்சேரும் கஞ்சனூர்கை தொழச்சென்றார். (உகஉ)

கஞ்சனூரான் டதங்கோவைக் கண்ணுற்றிறைஞ்சி முன்போந்து
மஞ்சணிமா மதில்சூழ மார்துறைவர் தீவணங்கி
யஞ்சொற்றமிழ் மாலைசாத்தி யங்ககன்றன் பர்முன்னுகச்
செஞ்சடைவே தியர்மன்னுந் திருமங்கலக் குடிசேர்ந்தார். (உகக)

வெங்கண்விடை மேல்வருவார் வியலூரடி களேப்போற்றித்
தங்கியவின் னிசைகூடுந் தமிழ்ப்பதிகத் தொடைசாத்தி
யங்கணமர்வார் தம்முன்னே யருள்வேடங்காட் டத்தொழுது
செங்கண்மாலுக் கரியார்தந் திருந்துதேவன் குடிசேர்ந்தார். (உகச)

திருந்துதேவன் குடிமன்னுஞ் சிவபெருமான் கோயிலெய்திப்
பொருந்தியகா தலிற்புக்குப் போற்றிவணங் கிப்புரிவார்
மருந்தொடுமந் திரமாகி மற்றுமிவர் வேடமாமென்
றருந்தமிழ்மா லைபுனைந்தா ளரவின்ஞானத் தமுதுண்டார். (உகடி)

மொய்திகழ்சோ லையம்மூனூர் முன்னகன்றர் நெறிசெல்வார்
செய்தருசா லிகரும்பு தெங்குபைம்பூ கத்திடைபோய்
மைதிகழகண் டர்தங்கோயின் மருங்குள்ளவெல் லாம்வணங்கி
யெய்தினர்ஞா னசம்பந்த ரின்னம்பர்நம் பர்தங்கோயில். (உகக)

இன்னம்பர் மன்னும்பிரானே யிறைஞ்சியிடை மடக்கான
பன்னுந்தமிழ்த் தொடைமாலைப் பாடல்புனைந் துபரவிப்
பொன்னகழ லிணைபோற்றிப் புறம்போந்தணைந் துபுகுந்தா
மன்னுந்தடங் கரைப்பொன்னி வடகுரங்கா துறையில். (உகள)

வடகுரங்கா துறையில் வாலியார்தாம் வழிபட்ட
வடைவுற்றிருப் பதிகத்தி லறியசிறப பித்தருளிப
புடைகொண்டிறைஞ் சினர்போந்து புறத்துள்ளதா னங்கள்போற்றிப்
படைகொண்டமூ விலைவேலார் பழனத்திருப் பதிசார்ந்தார். (உகஅ)

பழனதமே வியமுக்கட் பரமேட்டியா பயில்கோயி
லுழைபுக்கிறைஞ்சி நின்றேத்தி யுருகியசிந் தையராகி
விழைசொற்பதி கம்விளம்பி விருப்புடன்மே வியகல்வா
ரழனகபங் கயவாவி யையாறுசென் றடைகின்றார். (உகக)

வே று.

மாடநிறை மணிவீதித் திருவையாற் றிணில்வாழு மல்கு தொண்டர்
நாடுய்யப் புகலிவரு ஞானபோ னகர்வந்து ணண்ணி ஞரென்
றூடலொடு பாடலரு வணிமூதூ ரடையவலங் காரஞ் செய்து
நீடுமனக் களிப்பிஞெடு மெதிர்கொள்ள நித்திலயா னத்து நீங்கி. (உ00)

வந்தணைந்து திருத்தொண்டர் மருங்குவர மானேந்து கையர்தம்பா
னந்திதிரு வருள்பெற்ற நன்னகரை முன்னிறைஞ்சி நண்ணும் போதி
லந்துபுல னிலைகலங்கு மிடத்தஞ்ச லென்பார்த மையா தென்று
புந்திநிறை செந்தமிழின் சந்தவிசை போற்றிசைத்தார் புகலிவேந்தர். (உ0அ)

மணிவீதி யிடங்கடந்து மாலயனுக் கரியபிரான் மன்னுங் கோயி
லணிநீடு கோபுரத்தை யணைந்திறைஞ்சி புன்னெய்தி யுளவில் காத
றணியாத கருத்தினெடுந் தம்பெருமான் கோயில்வலங் கொண்டு தாழ்ந்து
பணிசூடு மவர்முன்பு பணிந்துவிழுந் தெழுந்தன்பாற் பரவுகின்றார். (உ0க)

கோடல்கோங் கல்குளிர்கூ விளமென்னுக் திருப்பதிகக் குலவு மாலை
நீடுபெருக் திருக்கூத்து நிறைந்திரு வுள்ளத்து நிலைமை தோன்ற
வாடுமோ ருதவல்லா னேயாற்றெம் மையனே யென்று நின்று
பாடினு ராடினுர் பண்பிளெடுங் கண்பொழிநீர் பரந்து பாய. (கூ0க)

பலமுறையும் பணிந்தெழுந்து புறம்போந்து பரவுதிருத் தொண்ட ரோடு
நிலவுதிருப் பதியதன்க ணிகழுநா ணிகரிலா நெடுநீர்க் கங்கை
யிலேயுமதி மூடியார்தம் பெரும்புலியூர் முதலான வணைந்து போற்றிக்
குலவுதமிழ்த் தொடைபுனைந்து மீண்டணைந்து பெருகார்வங் கூரு நாளில். (கூ0ச)

குடதிசைமேற் போவதற்குக் கும்பிட்டங் கருள்பெற்றுக் குறிப்பி னெடும்
படருநெறி மேலணைவார் பரமர்திரு நெய்த்தானப் பதியி னண்ணி
யடையுமன முறவணங்கி யருந்தமிழ்மா லைகள்பாடி யங்கு நின்றும்
புடைவளர்மென் கரும்பினெடு பூக நிடை மழபாடி போற்றச் சென்றார். (கூ0ஞ)

செங்கைமான் மறியார்தந் திருமழபா டிப்புறத்துச் சேரச் செல்வா
ரங்கையா ரழலென்னுந் திருப்பதிக மெடுத்தருளி யணைந்த போழ்தின்
மங்கைவாழ் பாகத்தார் மழபாடி தலையிஞல் வணங்கு வார்கள்
பொங்குமா தவமுடையா ரெனத்தொழுது போற்றிசைத்தே கோயில் புக்கார்.(கூ0க)

மழபாடி வயிரமணித் தூணமர்ந்து மகிழ்கோயில் வலங்கொண் டெய்திச்
செழுவாச மலர்க்கமலச் சேவடிக்கீழ்ச் சென்றுதாழ்ந் தெழுந்து நின்று
தொழுதாடிப் பாடிநமஞ் சொன்மாலைத் தொடையணிந்து துதித்துப போந்தே
யொழியாத சேசமுட னுடையவரைக் கும்பிட்டங் குறைந்தார் சின்னுள். (கூ0எ)

அதன்மருங்கு கடந்தருளாற் நிருக்காளூர் பணிந்தேத்தி யான்ற சைவ
முதன்மறையோ ரன்பிலா லந்துறையின் முன்னவனேத் தொழுது போற்றிப்
பதினிறைசெந் தமிழ்பாடிச் சடைமுடியார் பயில்பதியும் பணிந்து பாடி
மதகரட வரையுரித்தார் வடகரைமாக் துறையணைந்தார் மணிநூன் மார்பர். (கூ0அ)

சென்றுதிரு மாந்துறையிற் நிகழ்ந்துறையுந் திருநதிவாழ் சென்னி யார்த
முன்றில்பணிந் தணிகெடுமோ ளிகைவலஞ்செய் துள்புக்கு முன்பு தாழ்ந்து
தின்றுகதிர்ப் பரிதிமதி மருத்துக்க டொழுதுவழி பாடு செய்ய
நின்றநிலே நிறப்பித்து நிறைதமிழின் சொன்மாலை நிகழப் பாடி. (கூ0க)

அங்கணகன் றம்மருங்கி லங்கணர்தம் பதிபிறவு மணைந்து போற்றிச்
செங்கமலப் பொதியவிழச் சேல்பாயும் வயன்மதுவாற் சேறு மாறுப்
பொங்கொலிநீர் மழநாடப் பொன்னிவட கரையிசைப்போய்ப் புகலி வேந்தர்
தங்கள்பிரான் நிருபபாச்சி லாச்சிரா மம்பணிய ரண்ணும் போதில். (கூ0ச)

அந்தகரிற் கொல்லிமழ வன்பயந்த வரும்பெறலா ரமுத மென்சொற்
கன்னியிள மடப்பிணையாய் காமருகோ மனக்கொழுந்தின் கதிர்செய் மேனி
மன்னுபெரும் பிணியாரு முயலகன்வந் தணைவுறமெய் வருத்த மெய்தித்
தன்னுடைய பெருஞ்சுற்றம் புலம்பெய்ததத் தானுமனந் தளர்வு கொள்வான். (கூஞ)

மற்றுவே றொருபரிசாற் றவிராமை மறிவளரும் கையார் பாதம்
பற்றியே வருங்குலத்துப் பான்மையினு ஞதலினுற் பரிவு நீரப்
பொற்றொடியைக் கொவேன்று போர்க்கோலச் சேவகராய்ப் புரங்கள் மூன்றுஞ்
செற்றவர்கள் கோயிலினட் கொபோனக்கு விடைகொடுவென் றருளிச் செய்தான். (கூஞ உ)

அவ்வளவி லாளுடைய பிள்ளையா ரெழுந்தருளி யணுக வெய்தச்
செவ்வியமெய்ஞ் ஞானமுணர் திருஞான சம்பந்தன் வந்தா னென்றே
யெவ்வுலகுந் துயர்நீங்கப் பணிமாறுந் தனிக்காளத் தெழுந்த வோசை
வெவ்வுயிர்க்கு மவன்கேளா மெல்லியலே விட்டெதிரே யிரைத்து செல்வான். (கூகக)

மாகதர மலங்கரியின் மகரதோ ரணநாட்டு மணிநீர் வாசத்
தூநறும்பூ ரணகும்பஞ் சோதிமணி விளக்கினெடு தூப மேந்து
மேனையணி பிறவுமெலா மெழில்பெருக வியற்றுமென வேவித் தானும்
வானவர்கா யகர்மகளுர் வருமுன்பு தொழுதணைந்தான் மழவர் கோமான். (கூகச)

பிள்ளையா ரெழுந்தருளப் பெற்றேனென் றுளனந்தம் பெருகு காதல்
வெள்ளநீர் கண்பொழியத் திருமுத்தின் சிவிகை யின்முன் வீழ்ந்தபோது
வள்ளலா ரெழுகவென மலர்வித்த திருவாககான் மலர்க்கை சென்னி
கொள்ளமகிழ்ந் தடன்சென்று குலப்பதியின் மணிவீதி கொண்டு புக்கான். (கூகடி)

மங்கலதூ ரியமுழங்கு மணிவீதி கடந்துமதிச சடையார் கோயிற்
பொங்குசுடர்க் கோபுரத்துக் கணித்தாகப புனைமுத்தின் சிவிகை நின்று
மங்கணிழிந் தருளுமுறை யிழிந்தருளி யணிவாயில் பணிந்து புக்குத்
தங்களபிரான் கோயில்வலங் கொண்டிறை முன்வணங்கச் சாருங் காலை. (கூகசு)

கன்னியிளங கொடியுணர் பு கழிந்துதிலன் சோந்ததனைக் கண்டு நோக்கி
யென்னிதுவென் றருளசெய்ய மழவன்ரு னெதிரிறைஞ்சி யடியேன் பெற்ற
பொன்னிவளே முயலகனும் பொருவிலரும் பிணிபொருந்தப் புனிதர் கோயின்
முன்னணையக் கொணர்விததே னிதுபுருத படியென்று மொழிந்து நின்றான். (கூகள)

வே று.

அணிகிளர் தாரவன் சொன்ன மாற்ற மருளொடுங் கேட்டங் நிலையி னின்றே
பணிவளர் செஞ்சடைப பாசசின்மேய பரம்பொரு ளாயினரைப் பணிந்து
மனிவளர் கண்டரோ மங்கையை வாட மயல்செய்வ தோவிவர் மாண்ப தென்று
தணிவில் பிணிதவிர்க் கும்பதிகத் தண்ட ழ பாடினர் சண்பை நாதர். (கூகஅ)

பன்னு தமிழ்மறை யாம்பதிகம் பாடித் திருக்கடைக் காப்புச் சாத்தி
மன்னுங் கவுணியர் போற்றி நிற்க மழவன் பயந்த மழலை மென்சொற்
கன்னி புறபிணி விட்டு நீயக க துமெனப் பார்பிசை நின்றெ ழுந்து
பொன்னின் கொடியென வொல்கி வந்து பொருவலித் தாதை புடையணைந்தான். ()

வன்பிணி நீங்கு மகனைக் கண்ட மழவன் பெருகு மகிழ்சசி பொங்கத்
தன்றனிப் பர்வையுந் தானுங் கூடச சண்பையர் காவலர் தாளில் வீழ
நின்ற வருமறைப் பிள்ளை யாரு நீரணி வேணி நிமலர் பாத
மொன்றிய சிந்தை யுடன்ப ணிந்தா ரும்பர் பிரான்றிருத் தொண்ட ரார்த்தார். ()

நீடு திருவாச் சிராம மன்னு நேரிழை பாகத்தர் தாள்வ ணங்கிக்
கூடி மருளுட னங்க ணர்ந்து கும்பிடுங் கொள்கைமேற் கொண்டு போந்தே
யாடல் பயின்றூர் பதிபிறவு மணைந்து பணிந்தடி போற்றி யேகிச்
சேடர்கள் வாழுந் திருப்பைஞ் ஞீலிச் சிவபெருமானே யிறைஞ்சச் சென்றார். (கூஉ0)

பண்பயில் வண்டினம் பாடுஞ் சோலைப் பைஞ்ஞீலி வாணர் கழல்ப ணிந்து
மண்பர வுந்தமிழ் மாலை பாடி வலவ வணங்கி மகிழ்ந்து போந்து
தண்பெருந் தெய்வக் கயிலை யில்வாழ் சிவனர் பதிபல சென்றி றைஞ்சிச்
சண்பை வளர்தரு ராடர் வந்து தடந்திரு வீங்கோய் மலையைச் சார்ந்தார். (கூஉக)

செங்கட் குறவரைத் தேவர் போற்றுந் திகழ்திரு வீங்கோய் மலையின் மேலுங்
கங்கைச் சடையார் கழல்ப ணிந்து கலந்த விசைப்பதி கம்பு னேந்து
பொங்கர்ப் பொழில்சூழ் மலையு மற்றும் புறத்துள்ள தானங்க ளெல்லாம் போற்றிக்
கொங்கிற் குடபுலஞ் சென்ற ணைந்தார் கோதின்மெய்ஞ் ஞானக் கொழுந்தனையார். ()

வே று.

அண்டர்பிரா ஞலயங்க ளம்மருங்குள் ளனபணிந்து
தெண்டிரைநீர்த் தடம்பொன்னித் தென்கரையாங் கொங்கினிடை
வண்டலையும் புனற்சடையார் மகிழ்விடங்க டொழுதணைந்தார்
கொண்டல்பணி நெடும்புரிசைக் கொடிமாடச் செங்குன்றூர். (௧೭೨)

அந்தகரில் வாழ்வாரு மடியவரு மனமகிழ்ந்து
பன்னெடுந்தோ ரணமுதலாப் பயிலணிகள் பலவமைத்து
முன்னுறவந் தெதிர்கொண்டு பணிந்தேத்தி மொய்கரங்கள்
சென்னியுறக் கொண்டணைந்தார் சினவிடையார் செழுங்கோயில். (௧೭೩)

தம்பெருமான் கோயிலினு ளெழுந்தருளித் த பிழவிரகா
ரம்பரவர் திருமூன்பு தாழ்ந்தெழுந்து நலஞ்சிறக்க
விம்பருமும் பருமேத்த வின்னிசைவண் டமிழ்பாடிக்
கும்பிடுமா தரவுடனக் கோதகரி னிதமர்ந்தார். (௧೭೪)

அப்பாலைக் குடபுலத்தி லாறணிந்தா ரமர்கோயி
லெப்பாலுஞ் சென்றேத்தித் திருநண் வினைபிறைஞ்சிப்
பைப்பாந்தள் பூணந்தவரைப் பரவிப்பண் டமர்கின்ற
வைப்பான செங்குன்றூர் வந்தணைந்து வைகினார். (௧೭೫)

ஆங்குடைய பிள்ளேயா ரமர்ந்துறையு நாளின்கண்
டேங்குதளி முகிற்குலங்கள் சுரந்துபெய லொழிகாலே
லீங்கொலிநீர் வைபபெல்லாம் வெயில்பெரு லிருப்புவரப
பாங்கர்வரை யுங்குளிரும் பணிப்பருவ மெய்தியதால். (௧೭೬)

அளிக்குலங்கள் சுளிந்தகல வரவிந்த முகம்புலரப்
பளிக்குமணி மரகதவல் லியிற்கோத்த பான்மையெனத்
துளித்தலேமெல் லறுகுபனி தொடுத்தசையச் சூழ்பனியாற்
குளிர்க்குடைந்து வெண்படாம் போர்த்தனைய குன்றுகளும். (௧೭೭)

மொய்பனிகூர் குளிர்வாடை முழுதுலவும் பொழுதேயாய்க்
கொய்தளிர்மென் சோலைகளுங் குலைந்தசையக் குளிர்க்கொதுங்கி
வெய்யவனுங் கரந்திருக்க மாட்டான்போல் விசும்பினிடை
யையவெயில் விரிப்பதுவு மடங்குவது மாகுமால். (௧೭೮)

சீடியலப் பதிகளெலா நிரைமாடத் துறைபுடொறும்
பேடையுடன் பவளக்காற் புறவொடுங்கப் பித்திகையின்
ரோடலர்மென் குழன்மடவார் தூணேக்கலச வெம்முலேயு
ளாடவர்தம் பணைத்தோளு மணிமார்பு மடங்குவன. (௧೭೯)

அரிசனமுங் குங்குமமு மரைத்தமைப்பா ரயலெல்லாம்
பரியவகிற் குறைபிளந்து புகைப்பார்கள் பாங்கெல்லா
மெரியுமிழ்பேழ் வாய்த்தோணி யிரும்பீர்ப்பா ரிடையெல்லாம்
விரிமலர்மென் புறவணிந்த மீப்புலத்து வைப்பெல்லாம். (௧೮೦)

அங்காளிற் கொடிமாடச் செங்குன்றூ ரமர்ந்திருந்த
மெய்ஞ்ஞானப் பிள்ளையா ருடன்மேவும் பரிசனங்கள்
பன்னூரு மங்காட்டிற் பயின்றதனற் பனித்தகுளிர்
முன்னூன பிணிவந்து மூள்வதுபோன் முடுகுதலும். (ஈஈஈ)

அந்நிலைமை யாளுடைய பிள்ளையார்க் கவர்களெலா
முன்னறிவித் திறைஞ்சுதலு முதல்வனு ருடொழுதே
யிந்நிலத்தி னியல்பெனினு நமக்கெய்தப பெருவென்று
சென்னிமதி யணிந்தாரைத் திருப்பதிகம் பாடுவார். (ஈஈச)

வே று.

அவ்வினைக் கிவ்வினை யென்றெடுத் தைய ரமுதுசெய்த
வெவ்விட முன்றடுத் தெம் பிடர் நீக்கிய வெற்றியினு
லெவ்விடத் தும்மடி யாரிடர் காப்பது கண்டமென்றே
செய்வினை தீண்டா திருலே கண்ட மெனசசெப்பினுர். (ஈஈ@)

ஆய குறிப்பினி லாணை நிகழ வருளிச்செய்து
தூய பதிகத் திருக்கடைக் காப்புத் தொடுத்தணிய
மேயவப் பொற்பதி வாழ்பவர்க் கேயன்றி மேலுமன்னாட்
டுய பனிப்பிணி யங்ரு டடங்க புந் தீர்த்ததன்றே. (ஈஈசு)

அப்பதி யின்க ணமர்ந்து சிலரானி லயகன்று
துப்புறழ் வேணியர் தானம் பலவுந் தொழுதருளா
மூப்புரி நூலுடன் மேலணி மார்பர் முரிவொடுஞ்
செப்பருஞ் சீர்த்திருப் பாண்டிக் கொடுமுடி சென்றணைந்தார். (ஈஈஎ)

பருவ மறுப்பொன்னிப் பாண்டிக் கொடுமுடி யாதம்பாத
மருவி வணங்கி வளத்த ழ மாலை மகிழ்ந்துசாத்தி
விரிசுடர் மாளிகை வெஞ்சமாக் கூடல் விடையவர்தம்
பொருலிரு னம்பல போற்றிக் குணகிசைப் போதுகின்றார். (ஈஈஅ)

செல்வக் கருவூர்த் திருவா னிலைக்கோயில் சென்றிறைஞ்சி
நல்லிசை வண்டமிழ்ச சொற்றொடை பாடியங் ஙாடகன்று
மல்லிய மாணிக்க வெற்பு முதலா வணங்கிவந்து
பல்கு திரைப்பொன்னித் தென்கரைத் தான ம் பலபணிவார். (ஈஈக)

பன்னெடுங் குன்றம் படர்நெடுங் கானும் பலபதியு
மன்னிலைத் தானங்க ளாயின வெல்லா மமர்ந்திறைஞ்சி
மன்னு புகலியில் வைதிக வாய்மை மறையவனூர்
பொன்னியல் வேணிப் புனிதர் பராய்த்துறை யுட்புகுந்தார். (ஈசப)

நீடும் பராய்த்துறை நெற்றித் தனிக்கண்ணர் கோயினண்ணிக்
கூடுங் கருத்தொடு கும்பிட்டுக் கோதி ற மிழ்சசொன்மாலை
பாடுங் கவுணியர் கண்பனி மாரி பரந்திழியச்
சூடுங் கரதலத் தஞ்சலி கோலித் தொழுதுகின்றார். (ஈசஈ)

தொழுது புறம்பணைத் தங்குகின் றேகிச் சுரர்பணிவுற்
றெழுதிரு வாலவ் துறைதிருச் செந்துறை யேமுதலா
வழுவில்பல் கோயில்கள் சென்று வணங்கி மகிழ்ந்தணைவார்
செழுமலர்ச் சோலைத் திருக்கற் குடிமலை சேரவந்தார். (ஈசஉ)

வே று.

கற்குடி மாமலே மேலெழுர்ந்த கனகக் கொழுந்தினைக் கால்வனேயப்
பொற்றிரண் மேருச் சிலைவளைத்த போர்விடை யாளியைப் போற்றிசைத்து
நற்றமிழ் மாலே புனைந்தருளி ஞானசம் பந்தர் புலங்களேந்துஞ்
செற்றவர் மூக்கிச் சரம்பணிந்து திருச்சிராப் பள்ளிச சிலம்பணைந்தார். (கூசகூ)

செம்மணி வாரி யருவி தங்குஞ் சிராப்பள்ளி மேய செழுஞ்சுடரைக்
கைம்மலே மீருரி போர்வை சாத்துய் கண்ணுத லாரைக் கழல்பணிந்து
மெய்ம்மகிழ் வெய்தி யுளங்குளிர விளங்கிய சொற்றமிழ் மாலேவேய்ந்து
மைம்மலர் கண்டர்தம் மானைக்காவை வணங்கும் விருப்பொடு வந்தணைந்தார். (கூசச)

விண்ணவர் போற்றிசெய் யானைக்காவில் வெண்ணுவன் மேவிய மெய்ப்பொருளே
நண்ணி யிறைஞ்சிமுன் வீழ்ந்தெழுந்து நாற்கோட்டு நாகம் பணிந்ததுவு
மண்ணல்கோச் செங்கணர சன்செய்த வடிமையு மஞ்சொற் றொடையில்வைத்துப்
பண்ணுறு செந்தமிழ் மாலேபாடிப் பரவிஞ் றேத்தினர் பான்மையினுல். (கூசஙி)

காரண னுமுகன் காணுவுண்மை வெண்ணுவ னன்மை மயேந்திரமுஞ்
சேணி நீடு திருக்கயிலே செல்வத் திருவாரூர் மேய பண்பு
மாரணத் துட்பொரு ளாயினுரை யானைக்கா வின்கட் புகழ்ந்துபாடி
யேரணி யும்பொழில் சூழ்ந்தசண்பை யேந்தலா ரெல்லேயி லின்பமுற்றூர். (கூசஈ)

கைதொழு தேத்திப் புறத்தணைந்து காமர் பதியதன் கட்சிலநாள்
வைகி வணங்கி மகிழ்ந்தணைவார் மன்னுந் தவத்துறை வானவர்தா
ளெய்தி யிறைஞ்சி யெழுந்துநின்றே யின்றமிழ மாலேகொண் டேத்திப் போந்து
வைதிக மாமணி யம்மருங்கு மற்றுள்ள தானம் வழுத்திசெல்வார். (கூசஎ)

எறுயர்த் தார்திருப் பாற்றுறையு மெறும்பியூர் மாமலே யேமுதலா
வேறு பதிகள் பலவும் போற்றி விரவுந் திருதொண்டர் வந்துசூழ
வீறில் புகழ்சண்பை யாளியாதா மெண்டிசை யோருந் தொழுதிறைஞ்ச
நீறணி செம்பவ ளப்பொருப்பி னெடுங்கள மாகர் சென்று சேர்ந்தார். (கூசஅ)

நெடுங்களத் தாதியை யன்பானின்பா னெஞ்சஞ் செலாவகை நேர்விலக்கு
மிடும்பைக ளர்த்தருள் செய்வா யென்னு மின்னிசை மாலேகொண் டேத்தியேகி
யடும்பணிச் செஞ்சடை யார்பதிக ளணைந்து பணிந்து நியமம்போற்றிக்
கடுங்கை வரையுரித் தார்மகிழ்ந்த காட்டுப்பள் ளிப்பதி கைதொழுவார். (கூசக)

சென்று நிகழ்திருக் காட்டுப்பள்ளிச செஞ்சடை நம்பர்தங் கோயிலெய்தி
முன்றில் வலங்கொண் டிறைஞ்சி வீழ்ந்து மொய்கழற் சேவடி கைதொழுவார்
கன்றணை யாவின் கருத்துவாய்ப்பக கண்ணுத லாரைமுன் போற்றிசெய்து
மன்றுளின் ரூடன் மனத்துள்வைபபா வாருமன் னும்முலே பாடிவாழ்ந்தார். (கூஙo)

அங்கப் பதியின் றெழுந்தருளி யணிதிரு வாலம் பொழில்வணங்கிப்
பொங்கு புனற்பொன்னிப பூர்தருத்திப பொய்யிலி யாரைப் பணிந்துபோற்றி
யெங்கு நிகழ்திருத் தொண்டர்குழா மெதிர்கொள்ள வெபபதி புர்தொழுது
செங்கயல் பாய்வய லோடைசூழ்ந்த திருக்கண்டி யூர்தொழ சென்றணைந்தார். ()

கண்டியூர் வீரட்டர் கோயிலெய்திக் கலந்தடி யாருடன் காதல்பொங்கக்
கொண்ட விருப்புடன் சூழ்ந்திறைஞ்சிக் குலவு மகிழ்ச்சியின் கொள்கையினுற்
றெண்டோள் குழாத்தினே நோக்கிநின்று தொழுத்த விசைத்தமிழ் மாலேதன்னி
லண்டர் பிரான்ற னருளின்வண்ண மடியார் பெருமையிற் கேட்டருளி. (கூஙஉ)

வினவி யெடுத்த திருப்பதிக மேவு திருக்கடைக் காப்புத்தன்னி
லினைய கிளவரி யோன்செயலே யடியாரைக் கேட்டு மகிழ்ந்ததன்மை
புனைவுறு பாடலிற் போற்றிசெய்து போந்து புகலிக் கமணியனார்
தினைபுனற் பொன்னித் திரைவலங்கொள் சோற்றுத்துறைதொழச்சென்றடைவார்.()

வே று.

அப்பர்சோற் றுத்துறை சென்றடை வோமென்
றெப்பில் வண்டமிழ் மாலை யொருமையாற்
செபபி யேசென்று சேர்ந்தனர் சேர்விலார்
முட்புரஞ் செற்ற முன்னவர் கோயின்முன். (ஈஙச)

தொல்லை நீடிருச் சோற்றுத் துறையுறை
செல்வர் கோயில் வலங்கொண்டு தேவர்க
ளல்ல நீர்க்கருஞ் சுண்ட பிரானடி
யெல்லை யில்லன்பு கூர விறைஞ்சினர். (ஈஙஙி)

இறைஞ்சி யேத்தி யெழுந்துபின் நின்னிசை
நிறைந்த செந்தமிழ் பாடி நிலாவிய
குறைந்து வந்தடி யாருட னெய்தினர்
சிறந்த சீர்த்திரு வேதி குடியினில். (ஈஙஈ)

வேத வேதியர் வேதி குடியினி
னுதர் கோயி லணைந்து நலந்திக ழ
பாத பங்கயம் போற்றிப் பணிந்தெழுந்
தோதி னார்தமிழ் வேதத்தி னோங்கினர். (ஈஙஎ)

எழுது மாமறை யாம்பதி கத்தினை
முழுதும் பாடி முதல்வரைப போற்றிமுன்
ரெழுது போந்துவந் தெய்தினர் சோலைசூ ழ
பழுதில் சீர்த்திரு வெண்ணிப் பதியினில். (ஈஙஅ)

வெண்ணி மேய விடையவர் கோயிலே
நண்ணி நாடிய காதலி னுண்மகிழ்
கண்ணி யார்தங் கழலிணை போற்றியே
பண்ணி னீடும் பதிகமும் பாடினார். (ஈஙஇ)

பாடி னன்று பரவிப் பணிந்துபோ
யாடு மங்கணர் கோயிலங் குள்ளன
மாடு சென்று வணங்கி மகிழ்ந்தனர
நீடு சண்பை நிறைபுகழ் வேதியர். (ஈஙஏ0)

வே று.

மொய்தருஞ் சோலைசூழ முளரிமுள ளடலிபோய்
மெய்தரும் பரிவிலான் வேள்வியைப் பாழ்படச்
செய்தசங் கரர்திருச் சக்கரப் பள்ளிமுன்
பெய்தவந் தருளினர் நியலிசைத் தலைவனார். (ஈஙஈ)

சக்கரப் பள்ளியார் தந்தனிக் கோயிலுட்
புக்கருத் தியினுடன் புனைமலர்த் தான்பணிந்
தக்கரைப் பரமர்பா லன்புறும் பரிவுகூர்
மிக்கசொற் றமிழினுல் வேதமும் பாடினார். (ஈஙஉ)

சச

தலேவர்தஞ் சக்கரப் புன்னிதன் னிடையகன்
றலேபுனற் பணேகளி னருகுபோ யருமறைப்
புலனுறுஞ் சிந்தையார் புள்ளமங் கைப்பதி
குலவுமா லந்துறைக் கோயிலைக் குறுகினர். (உஉஉ)

மன்னுமக் கோயில்சேர் மான்மறிக் கையர்தம்
பொன்னடித் தலமுறப் புரிவொடுந் தொழுதெழுந்
தின்னிசைத் தமிழ்புனேர் திறைவர்சே ரூருடன்
பன்னுபா லத்துறைப் பதிபணிந் தேகினர். (உஉச)

காவின்மேன் முகிலெழுங் கமழ்நறும் புறவுபோய்
வாவிநீ டலவன்வாழ் பெடையுடன் மலர்நறும்
பூவின்மேல் விழைவுறும் புகலியார் தலேவனர்
சேவின்மே லண்ணலார் திருநலூர் நண்ணினர். (உஉஇ)

மன்றலங் கழனிசூழ் திருநலூர் மறைவலோர்
தன்றுமங் கலவினேத் தழனியா லெதிர்கொளப்
பொன்றயங் கொளிமணிச் சிவிகையிற் பொலிவுறச
சென்றனேர் தருளினர் சிரபுரச் செம்மலார். (உஉஈ)

நித்திலச் சிவிகைமே னின்றிழிந் தருளியே
மொய்த்தவர் தணர்குழா முன்செலப் பின்செலும்
பத்தரும் பரிசனங் களுமுடன் பரவவே
யத்தர்தங் கோபுரந் தொழுதனேர் தருளினர். (உஉஎ)

வெள்ளிமால் வரையையேர் விரிசுடர்க் கோயிலைப்
பிள்ளேயார் வலம்வரும் பொழுதினிற் பெருகுசீர்
வெள்ளவா னந்தமெய் பொழியமே லேறிநீர்
தள்ளுவார் சடையரைத் தொழுதுமுன் பரவுவார். (உஉஅ)

பரவுசொற் பதிகமுன் பாடினர் பரிவுதான்
வரவயர்த் தருகுநேர் மனனுடன் புறமணைந்
தரவுடைச் சடையர்பே ரருள்பெறும் பெருமையால்
விரவுமப் பதியமர்ந் தருளியே மேவினர். (உஉக)

மே வு று.

அன்ன தன்மையி லப்பதி தனிலமர்ந் தருளி
மின்னெ டுஞ்சடை லிமலர்தாள் விருப்பொடு வணங்கிப்
பன்னு மின்னிசைப் பதிகமும் பலமுறை பாடி
நன்னெ டுங்குல நான்மறை யவர்தொழ நயந்தார். (உஎ0)

நீடு மப்பதி நீங்குவார் நிகழ்திரு நல்லூ
ராடு வார்திரு வருள்பெற வகன்றபோர் தங்கண்
மாடு முள்ளன வணங்கியே பரவிவர் தணேந்தார்
தேடு மாலயற் கரியவர் திருக்கரு காவூர். (உஎக)

வந்து பந்தர்மா தவிமணங் கமழ்கரு காவூர்ச்
சந்த மாமறை தந்தவர் கழலிணே தாழ்ந்தே
யந்த மில்லவர் வண்ணமா மழல்வண்ண மென்று
சிந்தை யின்புறப் பாடினர் செழுந்தமிழ்ப் பதிகம். (உஎஉ)

பதிக வின்னிசை பாடிப்போய்ப் பிறபதி பலவு
நதிய ணிந்தவர் கோயில்க ணண்ணியே வணங்கி
மதுர முத்தமிழ் வாசக ரணைந்தனர் மன்று
ளதிர்சி லம்படி யார்மகி ழுவளிவ னல்லூர். (உஎக)

மன்னு மப்பதி வானவர் போற்றவு மகிழ்ந்த
தன்மை யார்பயில் கோயிலுட் டம்பரி சுடையா
ரென்னு நாமமு நிகழ்ந்திட வேத்திமுன் னிறைஞ்சிப்
பன்னு சீர்ப்பதி பலவுமப் பாற்சென்று பணிவார். (உஎச)

பழுதில் சீர்த்திருப் பரிதிநன் னியமமும் பணிந்தங்
கெழுது மாமறை யாம்பதி கத்திசை போற்றி
முழுது மானவர் கோயில்கள் வணங்கியே முறைமை
வழுவி லார்திருப் பூவணூர் வணங்கிவந் தணைந்து. (உஎஇ)

பொங்கு காதலிற் போற்றியங் கருளுடன் போந்து
பங்க யத்தடம் பணைப்பதி பலவுமுன் பணிந்தே
யெங்கு மன்பர்க ளேத்தொலி யெடுக்கவந் தணைந்தா
ரங்க ணர்க்கிட மாகிய பழம்பதி யாவூர். (உஎக)

பணியு மப்பதிப் பசுபதீச் சரத்தினி திருந்த
மணியை யுள்புக்கு வழிபடும் விருப்பினுல் வணங்கித்
தணிவில் காதலிற் றண்டமிழ் மாலைகள சாத்தி
யணிவி ளங்கிய திருவூர் மீண்டும்வந் தணைந்தார். (உஎஎ)

மறைவி ளங்குமப் பதியினின் மணிகண்டர் பொற்ரு
ணிறையு மன்பொடு வணங்கியே நிகழ்பவர் நிலவும்
பிறைய ணிந்தவ ரருள்பெறப் பிரசமென் மலர்வண்
டறைத ரும்பொழிற் றிருவலஞ் சுழியில்வந் தணைந்தார். (உஎஅ)

மதிபு னைந்தவர் வலஞ்சுழி மருவுமா தவத்து
முதிரு மன்பர்கண் முத்தமிழ் விரகர்த முன்வந்
தெதிர்கொள் போழ்தினி லிழிந்தவ ரெதிர்செல மதியைக்
கதிர்செய் வெண்முகிற் குழாம்புடை சூழ்தெனக் கலந்தார். (உஎக)

கலந்த வன்பர்க டொழுதெழக் கவுணியர் தலைவ
ரலர்ந்த செங்கம லக்கரங் குவித்துட னணைவார்
வலஞ்சு ழிப்பெரு மான்மகிழ் கோயில்வந் தெய்திப்
பொலங்கொள் நீள்சுடர்க் கோபுர மிறைஞ்சி யுட்புகுந்தார். (உஅ0)

மருவ லார்புர முனிந்தவர் திருமுன்றில் வலங்கொண்
டிருகு மன்புட னுச்சிமே லஞ்சலி யினராய்த்
திருவ லஞ்சுழி யுடையவர் சேவடித் தலத்திற்
பெருகு மாதர வுடன்பணிந் தெழுந்தனர் பெரியோர். (உஅஅ)

ஞான போனகர் நம்பர்முன் றொழுதெழு விருப்பி
லான காதலி லங்கண ரவர்தமை வினவு
மூன மில்லிசை யுடன்மினன் றியதிருப் பதிகம்
பான லார்மணி கண்டத்துப் பாடினர் பரவி. (உஅஇ)

கூற்றுவ நாயனார் புராணம்.

புலங்கொ ளின்றமிழ் போற்றினர் புறத்தினி லணைந்தே
யிலங்கு நீர்ப்பொன்னி சூழ்திருப் பதியினி லிருத்து
நலங்கொள் காதலி னுதர்தா னுடொறும் பரவி
வலஞ்சு ழிப்பெரு மான்றொண்டர் தம்முடன் மகிழ்ந்தார். (கூஅஉ)

மகிழ்ந்த தன்றலே வாழுமந் நாளிடை வானிற்
றிகழ்ந்த ஞாயிறு தூணேபுண ரோரைபுட் சேர்ந்து
நிகழ்ந்த தன்மையி னிலவுமேழ் கடனீர்மை குன்ற
வெகுண்டு வெங்கதிர் பரப்பலின் முதிர்ந்தது வேனில். (கூஅச)

தண்பு னற்குளிர் கானறுஞ் சந்தனத் தேய்வை
பண்பு நீடிய வாசமென் மலர்பொதி பனிநீர்
நண்பு டைத்தூண நகைமதி முத்தணி நாளு
முண்ப மாதரி யச்சுவை யுலகுளோர் விரும்ப. (கூஅடு)

வே று.

அறன்மலியுங் கான்யாற்றி னீர்நசையா லணையுமான்
பெறலரிய புனலென்று பேய்த்தேரின் பின்படரு
முறையுணவு கொள்ளும்புட் டேம்பியய விரைதேரும்
பறவைநிறை விரித்தொடுங்கப் பணிப்புறதது வதிபுமால். (கூஅசு)

நீணிலமா ளிகைமேலு நிலாமுன்றின் மருங்கினிலும்
வாணிழனற் சோலையிலு மலர்வாவிக் கரைமாடும்
பூணிலவு முத்தணிந்த பூங்குழலார் முலைத்தடத்துங்
காணுமகிழ்ச் சியின்மலர்ந்து மாந்தர்கலந் துறைவரால். (கூஅஎ)

மயிலொடுங்க வண்டாட மலர்க்கமல முகைவிரியக்
குயிலொடுங்குஞ் சோலையின்மென் றளிர்கோதிக் கூவியெழத்
துயிலொடுங்கா வுயிரனைத்துந் துயில்பயிலச் சுடர்வானில்
வெயிலொடுங்கா வெம்மைதரும் வேனில்விரி தருநாளில். (கூஅஅ)

சண்பைவரும் பிள்ளையார் சடாமகுடர் வலஞ்சுழியை
யெண்பெருகத் தொழுதேத்திப் பழையாறை யெய்துதற்கு
நண்புடைய வடியார்க ளுடன்போத வுடன்தருளி
விண்பொருநீண் மதிளாறை மேற்றளிசென் றெய்தினார். (கூஅக)

திருவாறை மேற்றளியிற் றிகழ்ந்திருந்த செந்தீயி
னுருவாள னடிவணங்கி யுருகியவன் பொடுபோற்றி
மருவாருங் குழன்மலையாள் வழிபாடு செய்யவரு
டருவார்தந் திருசத்தி முற்றத்தின் புறஞ்சார்ந்தார். (கூகo)

திருச்சத்தி முற்றத்திற் சென்றெய்தித் திருமலையா
ளருச்சித்த சேவடிக ளார்வமுறப் பணிந்தேத்திக்
கருச்சுற்றி லடையாமற் கைதருவார் கழல்பாடி
விருப்புற்றுத் திருப்பட்டீச் சரம்பணிய மேவுங்கால். (கூகக)

வெம்மைதரு வேனிலிடை வெயில்வெப்பத் தணிப்பதற்கு
மும்மைசிலைத் தமிழ்விரகர் முடிமீதே சிவபூதர்
தம்மையறி யாதபடி தண்டாளப் பத்தெடுத்
தெம்மைவிடுத் தருள்புரிந்தார் பட்டீச சென்றியம்பும். (கூகஉ)

அவ்வுரைபு மணிமுத்தின் பந்தருமா காயமெழச்
செவ்விய மெய்ஞ் ஞானமுணர் சிரபுரத்துப் பிள்ளையார்
நிவ்வினேதா னீசர்திரு வருளாகி லிசைவதென
மெய்விரவு புளகமுடன் மேதினியின் மிசைத்தாழ்ந்தார். (கூகூட)

அதுபொழுதே யணிமுத்தின் பந்தரினே யருள்சிறக்கக்
கதிரொளிய மணிக்காம்பு பரிசனங்கள் கைக்கொண்டார்
மதுரமொழி மறைத்தலைவர் மருங்கிமையோர் பொழிவாசப்
புதுமலரா லப்பந்தர் பூம்பந்த ரும்போலும். (கூகச)

தொண்டர்குழா மார்ப்பெடுப்பச் சுருதிகளின் பெருந்துழனி
யெண்டிசையு நிறைந்தோங்க வெழுந்தருளும் பிள்ளையார்
வெண்டரளப் பந்தர்நிழன் மீதணையத் திருமன்றி
லண்டர்பிரா னெடுத்ததிரு வடிநீழ லெனவமர்ந்தார். (கூகடு)

பாரின்மிசை யன்பருடன் வருகின்ற பன்னகத்தி
னுரமணிந் தவர்தந்த வருட்கருணைத் திறம்போற்றி
யீரமனங் களிதழைப்ப வெதிர்கொள்ள முகமலர்ந்து
சேரவருந் தொண்டருடன் நிருப்பட்டீச் சரமணைந்தார். (கூகக)

சென்றணைந்து திருவாயிற் புறத்திறைஞ்சி யுள்புக்கு
வென்றிவிடை யவர்கோயில் வலங்கொண்டு வெண்கோட்டுப்
பன்றிகளுத் தறியாத பாததா மரைகண்டு
மூன்றெழுது வீழ்தெழுந்து மொழிமாலை போற்றிசைத்தார். (கூகஎ)

அருள்வெள்ளத் திறம்பரவி யளப்பரிய வானந்தப்
பெருவெள்ளத் திடைமூழ்கிப் பேராத பெருங்காதற்
றிருவுள்ளப் பரிவுடனே செம்பொன்மலை வல்லியார்
தருவள்ளத் தமுதுண்ட சம்பந்தர் புறத்தணைந்தார். (கூகஅ)

அப்பதியி லமர்கின்ற வாளுடைய பிள்ளையார்
செப்பருஞ்சீர்த் திருவாறை வடதளியிற் சென்றிறைஞ்சி
யொப்பரிய தமிழ்பாடி யுடனமருந் தொண்டருட
னெப்பொருளு மாய்நின்ற நிரும்பூவை யெய்தினார். (கூகக)

தேவர்பிரா னமர்ந்தருளு வீரம்பூவை சென்றெய்தக்
காவணநீ டோரணங்க ணுட்டியுடன் களிசிறப்பப்
பூவணமா லகலுறைற்றிப் பூரணபொற் குடநிரைத்தங்
கியாவர்களும் போற்றிசைப்பத் திருத்தொண்ட ரெதிர்கொண்டார். (சஂ00)

வண்டமிழின் மொழிவிரகர் மணிமுத்தின் சிவிகையினேத்
தொண்டர்குழாத் தெதிரிழிந்தங் கவர்தொழத்தா மும்தொழுதே
யண்டர்பிரான் கோயிலினே யணைந்திறைஞ்சி முன்னின்று
பண்டருமின் னிசைப்பதிகம் பரம்பொருளைப் பாடுவார். (சஂ0க)

நிகரிலா மேருவரை யணுவாக நீண்டானே
நுகர்கின்ற தொண்டர்தமக் கமுதாகி நொய்யானேத்
தகவொன்ற வடியார்க டமைவினவித் தமிழ்விரகர்
பகர்கின்ற வருமறையின் பொருள்விரியப் பாடினார். (சஂ0ங)

பாமேர் தைப்பெரும் பாழியே முதலாகச்
சேடர்பயி றிருச்சேறை திருநாஞர் குடவாயி
னூடியசீர் நறையூர்தென் றிருப்புத்தூர் நயந்திறைஞ்சி
நீதமிழ்த் தொடைபுனைந்தக் கெடிலகரி லினிதமர்ந்தார். (சஅக)

அங்கணினி தமருநா ளடல்வெள்ளேனத் தருவாய்ச்
செங்கணெடு மால்பணியுஞ் சிவபுரத்துச் சென்றடைந்து
கங்கைசடைக் கரந்தவர்தங் கழல்வணங்கிக் காதலினற்
பொங்குமிசைத் திருப்பதிக முன்னின்று போற்றிசைத்தார். (சஅச)

போற்றிசைத்துப் புனிதரருள் பெற்றுப்போந் தெவ்வுயிருந்
தோற்றுவித்த வயன்போற்றுந் தோணிபுரத் தந்தணனு
நேற்றுமிசை யேற்றுகந்த விறைவர்தமை யேத்துதற்கு
நாற்றிசையோர் பரவுதிருக் குடமூக்கு நண்ணினார். (சஅஞ)

தேமருவு மலர்ச்சோலைத் திருக்குடமூக் கினிற்செல்வ
மாமறையோர் பூந்தராய் வள்ளலா வந்தருளத்
தூமறையி னெலிலிபெருகத் தூரியமங் கலமுழங்கக்
கோமுறைமை யெதிர்கொண்டு தம்பதியுட் கொடுபுக்கார். (சஅசு)

திருஞான சம்பந்தர் திருக்குடமூக் கினைச்சேர
வருவார்தம் பெருமானே வண்டமிழின் றிருப்பதிக
முருகாநின் றுளமகிழக் குடமூக்கை யுகந்திருந்த
பெருமானெம் மிறையென்று பெருகிசையாற் பரவினார். (சஅஎ)

வந்தணைந்து திருக்கிழக்கோட் டத்திருந்த வான்பொருளை
சிந்தைமகிழ் வுறவணங்கித் திருத்தொண்ட ருடன்செல்வா
ரந்தணர்கள் புடைசூழ்ந்து போற்றிசைப்ப வவரோடுங்
கந்தமலர்ப் பொழில்சூழ்ந்த காரோணஞ் சென்றடைந்தார். (சஅஅ)

பூமருவுங் கங்கைமுதற் புனிதமாம் பெருந்தீர்த்த
மாமகந்தா னுடுதற்கு வந்தவழி படுங்கோயி
றாமருவு மலர்க்கையாற் றொழுதுவலங் கொண்டணைந்து
காமர்கெட நுதல்விழித்தார் கழல்பணிந்து கண்களித்தார். (சஅக)

கண்ணுரு மருமணியைக் காரோணத் தாரமுதை
நண்ணுதார் புரமெரித்த நான்மறையின் பொருளானைப்
பண்ணுர்ந்த திருப்பதிகம் பணிந்தேத்திப் பிறபதியு
மெண்ணுர்ந்த சேடியா ருடன்பணிவுற் றெழுந்தருளி. (சகஐ)

திருநாகேச் சரத்தமர்ந்த செங்கனகத் தனிக்குன்றைக்
கருநாகத் தரிபுனைந்த கண்ணுதலைச் சென்றிறைஞ்சி
யருஞானச் செந்தமிழின் றிருப்பதிக மருள்செய்து
பெருஞான சம்பந்தர் பெருகார்வத் தின்புற்றார். (சகக)

மாநாக மருச்சித்த மலர்க்கமலத் தாள்வணங்கி
நானுரும் பரவுவார் பிணிநீர்க்கு நலம்போற்றிப்
பானுறு மணிமாயர் பரமர்திரு வீடைமருதிற்
பூநாறும் புனற்பொன்னித் தடங்கரைபோய்ப் புகுகின்றார். (சகஉ)

ஒல்குநிருப் பதிகமோ டேகலனென் றெடுத்தருளித்
தாங்கரிய பெருமகிழ்ச்சி தலைசிறக்குந் தன்மையிலு
லீங்கெணியாளு டையபிரா னிடைமருதி தோவென்று
பாங்குடைய வின்னிசையர்ற் பாடியெழுந் தருளினார். (சகக)

அடியவர்க ளெதிர்கொள்ள வெழுந்தருளி யகமணைந்து
முடிவில்பரம் பொருளாளர் முதற்கோயின் முன்னிறைஞ்சிப்
படியில்வலம் கொண்டுதிரு முன்பெய்திப் பார்மீது
தெடிதுபணிந் தெழுந்தன்பு நிறைகண்ணீர் நிரந்திழிய. (சகச)

பரவுறுசெந் தமிழப்பதிகம் பாடியமாந் தப்பதியில்
வீரவுகார் திருப்பதிகம் பலபாடி வெண்மதியோ
டரவுசடைக் கணிந்தவர்தந் தாள்போற்றி யார்வத்தா
லரவுதிருத் தொண்டருடன் பணிசதேத்தி யுறையுநாள். (சகஎ)

மருங்குளநற் பதிகள்பல பணிந்துமா நதிக்கரைபோய்க்
குருகுகாடு துறையணைந்து குழகனூ குரைகழல்கள
பெருங்காத லிற்பணிந்து பேணியவின் னிசைபெருக
வருகலூநற் றிருப்பதிக மருள்செய்து பரவினார். (சகக)

தே வா று.

அம்ம லர்த்தடம் பதிபணிந் தகன்றுபோந் தருகு
மைம்ம லர்க்களத் திறைவர்தங் கோயில்கள் வணங்கி
நம்ம லத்துயர் தீர்க்கவந தருளிய ஞானச
செம்ம லார்திரு வாவடு துறையினைச சேர்ந்தார். (சகஎ)

மூவ ருக்கறி வரும்பொரு ளாகிய மூலத்
தேவர் தந்திரு வாவடு துறைத்திருத் தொண்டர்
பூவ லம்புதண் பொருபுனற் றடம்பணை புகலிக்
காவ லர்க்கெதிர் கொள்ளுமா தரவுடன் கலந்தார். (சகஅ)

வந்த ணைந்தவர் தொழாமுன மலர்புகழ்ச் சண்பை
யந்த ணர்க்கெலா மருமறைப் பொருளென வந்தார்
சந்த ணத்திலச லிலைகளின் றிழிந்தெதிர் தாழ்ந்தே
சிந்தை யின்புற விறைவர்தங கோயின்முன் சென்றார. (சகக)

நீடு கோபுர மிறைஞ்சியுட் புகுந்துநீ ணிலையான்
மாடு சூழ்திரு மாளிகை வலங்கொண்டு வணங்கி
யாடு மாதியை யாவடு துறையுளா ரமுதை
நாடு காதலிற் பணிந்தெழுந் தருந்தமிழ் நவின்றார். (சஉ0)

அன்பு நீடிய வருவிகண் பொழியுமார் வத்தான்
முன்பு போற்றியே புறம்பணை முத்தமிழ விரகர்
தன்பு போமனத் திருத்தொண்டர் தம்மூடன் றெழுதே
யின்ப மேலியப் பதியினி லினிதமர்ந் திருந்தார். (சஉக)

மேலி யற்குறை நாளினில் வேள்விசெய் வதனுக்
காவ தாகிய காலம்வர் தணைவுற வணைந்து
தாவில் சண்பையர் தலைவர்க்குத் தாதையார் தாமும்
போவ தற்கரும் பொருள்பெற வெதிர்நின்று புகன்றார். (சஉஎ)

தந்தை யார்மொழி கேட்டலும் புகலியார் தலைவர்
மூர்த்தை நாளிலே மொழிந்தமை நினைந்தருண் முன்னி
யத்த மில்பொரு ளாவன வாவடு துறையு
ளெந்தை யாரடித் தலங்களன் றேவென வெழுந்தார். (சஉக)

சென்று தேவர்தம் பிரான்மகிழ் கோயின்முன் பெய்தி
நின்று போற்றுவார் நீணிதி வேண்டினர்க் கீவ
தொன்று மற்றிலே னுன்னடி யல்லதொன் றறியே
னென்று பேரருள் வினவிய செந்தமி ழெடுத்தார். (சஉச)

எடுத்த வண்டமி ழ்ப் பதிகநா லடியின்மே லிருசீர்
தொடுத்த வைப்பொடு தொடர்ந்தவின் னிசையினற் றுதிப்பார்
மடுத்த காதலில் வள்ளலா ரடியிணை வழுத்தி
யடுத்த சிந்தையா லாதரித் தஞ்சலி யளித்தார். (சஉஞ)

நச்சி யின்றமிழ் பாடிய ஞானசம் பந்த
ரிச்சை யேபுரிந் தருளிய விறைவரின் னருளா
லச்சி றப்பருள் பூதமுன் விரைந்தகன் பீடத்
தஞ்சி வைத்தது பசும்பொ னுயிரக்கிழி யொன்று. (சஉக)

வைத்த பூதமங் கணைந்துமுன் னின்றுகல் வாக்கா
லுய்த்த விக்கிழி பொன்னுல வாக்கிழி யுமக்கு
நித்த னுரைசெய் தருளென் றுரைக்கநேர் தொழுதே
யத்த னுந்திரு வருணினைந் தவனிமேற் பணிந்தார். (சஉஎ)

பணிந்தெ ழுந்துகை தொழுதுமுன் பனிமலர்ப் பீடத்
தணைந்த வாடகக் கிழிதலைக் கொண்டரு மறைக
ணிணைந்த வான்பொரு ளரும்பொரு டியவாய் மையினற்
றணைந்த சிந்தையத் தந்தையார்க் களித்துரை செய்வார். (சஉஅ)

ஆதி மாமறை விதியினு லாறுசூழ் வேணி
நாத னுரைமுன் னுகவே புரியுகல் வேள்வி
தீது நீங்கநீர் செய்யவுந் திருக்கழு மலத்து
வேத வேதிய ரனைவருஞ் செய்யவு மிருமால். (சஉக)

என்று கூறியங் கவர்தமை விடுத்தபி னவரு
நன்று மின்புறு மனத்தொடும் புகலிமே ணண்ண
வென்றி ஞானசம் பந்தரும் விருப்பொடு வணங்கி
மன்ற லாவடு துறையினின் மகிழ்ந்தினி திருந்தார். (சஈ0)

அண்ண லார்திரு வாவடு துறையமர்ந் தாரை
புண்ணி லாவிய காதலி னுற்பணிந் துறைந்து
மண்ணெ லாமுய வந்தவர் போந்துவார் சடைமேற்
றெண்ணி லாவணி வார்திருக் கோழம்பஞ் சேர்ந்தார். (சஉச)

கொன்றை வார்சடை முடியரைக் கோழம்பத் திறைஞ்சி
யென்று நீடிய வின்னிசைப் பதிகமுன் னியம்பி
மன்று ளார்மகிழ் வைகன்மா டக்கோயின் மருங்கு
சென்று சார்ந்தனர் திருவளர் சிரபுரச் செல்வர். (சஈஉ)

வைக ளீடுமா டக்கோயின் மன்னிய மருந்தைக்
கைக ளஞ்சலி கொண்டுதாழ்ந் தெழுந்துகண் ணருவி
செய்ய வின்னிசைச் செந்தமிழ் மாலைகண் மொழிந்து
நைபு முள்ளத்த ராய்த்திரு நல்லத்தி னண்ணி. (சஈக)

நிலவு மாளிகைத் திருநல்ல நீடுமா மணியை
யிலகு சேவடி யிறைஞ்சியின் தமிழ்கொடு துதித்துப்
பலவு மீசர்தந் திருப்பதி பணிந்துசெல பவர்தா
மலைபு னற்றிரு வழுந்தூர்மா டக்கோயி லடைந்தார். (சஈச)

மன்னு மாமட மகிழ்ந்தவான் பொருளினை வணங்கிப்
பன்னு பாடலிற் பதிகவின் னிசைகொடு பரவிப்
பொன்னி மாநதிக் கரையினின் மீண்டுபோந் தணைந்து
சொன்ன வாறறி வார்தமைத் தொழுதியிற் றொழுதார். (சஈஇ)

திரைத்த டம்புனற் பொன்னிசூழ் திருத்துருத் தியினில்
வரைத்த லைப்பசும் பொன்னெனும் வண்டமிழ்ப் பதிக
முரைத்து மெய்யுறப் பணிந்துபோந் துலவுமக் கதியின்
கரைக்கண் மூவலூர்க் கண்ணுதல் லார்கழல் பணிந்தார். (சஈசு)

மூவ லூருறை முதல்வரைப் பரவிய மொழியான்
மேவு காதலி லேத்தியே விருப்பொடும் போந்து
பூவ லம்புதண் புனற்பணைப் புகலியர் தலைவர்
வாவி சூழ்திரு மயிலாடு துறையினில் வந்தார். (சஈள)

மல்கு தண்டலை மயிலாடு துறையினின் மருவுஞ்
செல்வ வேதியர் தொண்டரோ டெதிர்கொளச் சென்று
கொல்லை மான்மறிக் கையரைக் கோயில்புக் கிறைஞ்சி
யெல்லை யில்லதோ ரின்பமுன் பெருகிட வெழுந்தார். (சஈஅ)

உள்ள மின்புற வுணர்வுறும் பரிவுகொண் டிருகி
வெள்ளந் தாங்கிய சடையரை வீணைகுசொற் பதிகத்
தெள்ளு மின்னிசைத் திறோப்பொடும் புறத்தணைந் தருளி
வள்ள லார்மற்ற வளம்பதி மருவுதன் மகிழ்ந்தார். (சஈக)

அத்தி ருப்பதி யகன்றுபோ யணிகிளர் சூலக்
கைத்த லப்படை வீரர்செம் பொன்பள்ளி கருதி
மெய்த்த காதலில் வீளநகர் வீடையவர் பாதம்
பத்தர் தம்முடன் பணிந்திசைப் பதிகமுன் பகர்ந்தார். (சஈ0)

பாடு மப்பதி பணிந்துபோய்ப் பறியலூர் மேவுந்
தோடு லாமல ரிதழியுந் தும்பையு மடம்புங்
காடு கொண்டசெஞ் சடைமுடிக் கடவுளார் கருது
நீடு வீரட்டம் பணிந்தனர் நிறைமறை வேந்தர். (சஈக)

பரமர் தந்திருப் பறியலூர் வீரட்டம் பரவி
விரவு காதலின் வேலையின் கரையினே மேவி
யரவ ணிந்தவர் பதிபல வணிந்துமுன் வணங்கிச்
செபு ரத்தவர் திருத்தொண்ட ரெதிர்கொளச் செல்வார். (சஈஉ)

வேறு.

அடியவர்கள் களிசிறப்பத் திருவேட்டக் குடிபணிந்தங் கேலவாய்ப் போகிக்
கடிகமழு மலர்ப்பழனக் கழனிகாட் டகன்பதிகள் கலந்து நீங்கிக்
கொடிமதில்சூழ் தருமபுரங் குறுகினர் குண்டர்சாக் கியர்தங் கொள்கை
படியறியப் பழுதென்றே மொழிந்துய்பு நெறிகாட்டும் பவள வாயர். (சசஈ)

தருமபுரம் பெரும்பாணர் திருத்தாயர் பிறப்பிடமா மதனுந் சார
வருமவர்தஞ் சுற்றத்தார் வந்தெதிர்கொண் டடிவணங்கி வாழ்த்தக் கண்டு
பெருமையுடைப் பெரும்பாண ரவர்க்குரைப்பார் பிளவேயா ரருளிச்செய்த
வருமையுடைப் பதிகந்தாம் யாழினுற் பயிற்றும்பே ரருளிச் செய்தார். (சசச)

இளைஞருமற் றதுகேட்டுக் கெழுவுதிருப் பதிகத்திற் கிளர்ந்த வோசை
யளவுபெறக் கருவியினீ ரமைத்தியற்று மதனுலே யகில மெல்லாம்
வளரவிசை நிகழ்வதென விளம்புதலும் வளம்புகலி மன்னர் பாத
முள நடுங்கிப் பணிந்துதிரு நீலகண்டப் பெரும்பாண ருணர்த்துகின்றார். (சசஙி)

அலகிறிருப் பதிகவிசை யளவுபடா வகையிவர்க ளன்றி யேயு
மூலகிலுளோ ருந்தெரிந்தங் குண்மையினே யறிந்துய்ய வுணர்த்தும் பண்பாற்
பலர்புகழுந் திருப்பதிகம் பாடியரு ளப்பெற்றுப் பண்பு நீடி
யிலகுமிசை யாழின்க ணடங்காமை யான்காட்டப் பெறுவ னென்றார். (சசஉ)

வேதநெறி வளர்ப்பவரும் விடையவர்மூன் றெழுதுதிருப் பதிகத் துண்மை
பூதலத்தோர் கண்டத்துங் கலத்தினிலு நிலத்துநூல் புகன்ற பேத
நாதவிசை முயற்கிளா லடங்காத வகைகாட்ட நாட்டு கின்றார்
மாதர்மடப் பிடிபாடி வணங்கினர் வானவரும் வணங்கி யேத்த. (சசள)

வன்புகலி வேதியனர் மாதர்மடப் பிடியெடுத்து வனப்பிற் பாடிப்
பண்பயிலுந் திருக்கடைக்காப் புச்சாத்த வீணர்துபெரும் பாண னர்தா
ணண்புடையாழ்க் கருவியினின் முன்புபோற் கைகொண்டு நடத்தப் புக்கார்க்
கெண்பெருகு மப்பதிகத் திசைநரம்பி லிடவடங்கிற் றில்லை யன்றே. (சசஅ)

அப்பொழுது திருநீல கண்டவிசைப் பெரும்பாண ரதனை விட்டு
மெய்ப்பயமும் பரிவுமுறப் பிள்ளையார் கழலிணைவீழ்ந் தெழுந்து நோக்கி
யிப்பெரியோ ரருள்செய்த திருப்பதிகத் திசையாழி லேற்ப னென்னச்
செப்பியதிக் கருவியைநான் றெழுதலினன் றேவென்று தெளிந்து செய்வார். (சசஈ)

வீக்குநரம் புடையாழி னல்விளைந்த திதுவென்றங் கதனைப் போக்க
வோக்குதலுந் தடுத்தருளி யையரே யுற்றவிசை யளவி னுளீ
ராக்கியவிக் கருவியினைத் தாருமென வாங்கிக்கொண் டவனி செய்த
பாக்கியத்தின் மெய்வடிவாம் பாலரு வாயர்பணித் தருளு கின்றார். (சஙி0)

ஐயாறீர் யாழினை முரிக்குமதெ னுளுடையா ருடனே கூடச்
செய்யசடை யாரளித்த திருவருளின் பெருமையெலாந் தெரிய நம்பா
லெய்தியவிக் கருவியினி லளவுபடு மோகந்த மியல்புக் கேற்ப
வையகத்தோ ரறிவுறவிக் கருவியள வையினியற்றல் வழக்கே யென்றார். (சஙிக)

செந்தையா ளளவுபடா விசைப்பெருமை செயலளவி லெய்து மோரீ
ரிந்தயா ழினைக்கொண்டே யிறைவர்திருப் பதிகவிசை யிதனி லெய்த
வந்தவா றேபாடி வாசிப்பீ ரெனக்கொடுப்பப் புகலி மன்னர்
தந்தயா ழினைத்தொழுது கைக்கொண்டு பெரும்பாணர் தலைமேற் கொண்டார்.(சஙிஉ)

அணைவுறுமக் கினாளருடன் பெரும்பாண ராளுடைய பின்னை யார்தம்
துணைமலர்ச்சே வடிபணிந்து துதித்தருளத் தோணிபுரத் தோன்ற லாரு
மிணையில்பெருஞ் சிறப்பருளித் தொண்டருட னப்பதியி லினிது மேவிப்
பணைநெய்கை மதயானை யுரித்தவர்தம் பதிபிறவும் பணியச் செல்வார். (சஇஉ)

பங்கயப்பா சடைத்தடஞ்சூழ் பழனநாட் டகன்பதிகள் பலவு நண்ணி
மங்கையொரு பாகத்தார் மகிழ்கோயி லெனைப்பலவும் வணங்கிப் போற்றித்
தங்கிசையா ழப் பெரும்பாண ருடன்மறையோர் தலைவனார் சென்று சார்ந்தார்
செங்கைமான் மழுவேந்துஞ் சினவிடையா ரமர்ந்தருளுந் திருநள் ளாறு. (சஇச)

நள்ளாற்றி லெழுந்தருள நம்பர்திருத் தொண்டர்குழா நயந்து சென்று
கொள்ளாற்றி லெதிர்கொண்டு குலவியுடன் சூழ்ந்தணையக் குறுகிக் கங்கைத்
தெள்ளாற்று வேணியார்தந் திருவாசோ புரவிறைஞ்சிச செல்வக் கோயி
லுள்ளாற்ற வலங்கொண்டு திருமுன பு தாழ்தெழுந்தா ருணர்வின் மிக்கார். (சஇஇ)

உருகியவன் புறுகாத வுள்ளுருகி னேபிரம் பெற்றூற் போல
மருவுதிரு மேனியெலா முகிழ்புதெழுந்த மயிர்பபுளகம் வளர்க்கு நீரா
யருவிசொரி திருநயனத் தானந்த வெள்ளம் பிழிந்த தலைய நின்று
பொருவில்பதி கம்போக மாறுதபூண் முலையாளொன் றெடுத்துப் போற்றி. (சஇக)

யாணரம்பி லாரவிய லிசைகூடப் பாடியே யெண்ணில் கற்பச
சேணளவு படவோங்குந் திருநகடைகாப் புசசாத்திச செங்க ணுகப்
பூணகலத் தவர்பாதம் போறறிசைதபப புறத்தணைந்து புவன மேத்தும்
பாணனார் யாழிலிடப் பாலறு வாயாரருள் பணித்த போது. (சஇஎ)

பின்னையார் திருத்தாளங் கொடபாடப் பின்புபெரும் பாண னார்தாங்
தென்னமுத வின்னிசையின் றேமபொழிதந் திரியாழைச செறக்க வீக்கிக்
கொன்னவிலும் பொழுதின்கட் குவலயத்தோர் கணிகூரக் குலவு சண்பை
வன்னலார் திருவுள்ள மகிழ்ந்துதிருத் தொண்டருடன் மருவு காலை. (சஇஅ)

மன்னுதிரு நள்ளாற்று மருந்தைவணங கிபபோந்து வாச நன்னீர்ப்
பொன்னிவளந் தருநாட்டுப புறம்பணைசூழ் திருப்பதிகள் பலவும் போற்றிச்
செந்நெல்வயற் செங்கமல முகமலரு நிருசசாத்த மங்கை மூதூர்
தன்னிலெழுந் தருளினார் சைவசிகா மணியார்மெய்த் தவத்தோர் சூழ. (சஇக)

நிறைசெல்வத் திருசசாத்த மங்கையினி னீலநக்கர் தாமுஞ் சைவ
மறையவனு மெழுந்தருளும் படிகேட்டு வாழ்ந்துவழி விளக்கி யெங்குங்
துறைமலிதோ ரணங்கதலி கமுகுநிறை குடந்தாப நீப மாக்கி
முறைமையில்வந் தெதிர்கொளள வுடனணைந்து முதல்வனார் கோயில் சார்ந்தார். ()

அயவந்தி யமர்ந்தருளு மங்கணர்தங் கோயின்மருங் கணைந்து வானே
ருயவந்தித் தெழுமுன்றில் புடைவலங்கொண் டுளபுக்கா ரெழுகுஞ் செக்கர்
மயவந்தி மதிச்சடையார் முன்னிழந்து மாதவமிவ் வைய மெல்லாஞ்
செயவந்த வந்தணனர் செங்கைமேற் குவித்தெழுந்து திருமுன் னின்றார். (சகக)

போற்றிசைக்கும் பாடலினற் பொங்கியெழு மாதரவு பொழிந்து விம்ம
வேற்றின்மிசை யிருப்பவர்த மெதிர்நின்று துதித்துப்போந் தெல்லை யில்லா
நீற்றுநெறி மறையவனர் நீலகக்கர் மனையிலெழுந் தருளி யன்பா
லாற்றும்விருந் தமுதமைப்பு வன்பருட னின்புற்றங் கமுது செய்தார். (சகஉ)

நீடுதிரு நீலநக்கர் நெடுமனையில் விருந்தமுது செய்து நீர்மை
பாடுமியாழ்ப் பெரும்பாண ருக்தங்க வங்கிரவு பள்ளி மேவி
யாடுமவ ரயலந்தி பணிவதனுக் கன்பருட னணைந்து சென்று
நாடியநண் புடைநீல நக்கடிக ளுடனுதர் கழலிற் ரூழ்ந்து. (சகசுட)

கோதிலா வாரமுதைக் கோமளக்கொம் புடன்கூடக் கும்பிட் டேத்தி
யாதியா மறைப்பொருளா லருந்தமிழின் றிருப்பதிக மருளிச் செய்வார்
நீதியா னிகழ்கின்ற நீலநக்கர் தம்பெருஞ்சீர் நிகழ வைத்துப்
பூதிசா தனர்பரவும் புனிதவிய விசைப்பதிகம் போற்றி செய்தார். (சகூச)

பரவியகா தலிற்பணிந்து பாலரு வாயர்புறத் தணைந்து பண்பு
விரவியநண் புடையடிகள் விருப்புறுகா தலிற்றழுவி மேவு நாளி
லரவணிந்தார் பதிபிறவும் பணியவெழு மாதரவா லணைந்து செல்வா
ருரவுமனக் கருத்தொன்ரு முள்ளமுடை யவர்க்குவிடை யுவந்து ரல்லி. (சகருரு)

ரே வ ரு.

மற்றவர்தம் பெருங்கேண்மை மகிழ்ந்து கொண்டு மாலயனுக் கரியபிரான் மருவு தானம், பற்பலவுஞ் சென்றுபணிந் தேத்திப் பாடிப் பரமர்திருத் தொண்டர்குழாம் பாங்கி னெய்தக், கற்றவர்வாழ கடனுகைக் காரோ ணத்துக் கண்ணுதலைக் கைதொழுது கலந்த வோசைச், சொற்றமிழ்மா லைகள்பாடிச நிலகாள் வைகித் தொழுதகன்ரூர் தோணிபுரத் தோன்ற லார்தாம். (சகசுசு)

ரே வ ரு.

கழிக்கானன் மருங்கணேயுங் கடனுகை யதுரீங்கிக் கங்கை யாற்றுச்
சுழிக்கானல் வேணியர்தம் பதிபலவும் பரவிபபோய்த் தோகை மார்தம்
விழிக்காலி மலர்பழனக் கீழ்வேளூர் விமலர்கழல் வணங்கி யேத்தி
மொழிக்காதற் றமிழ்மாலே புனேந்தருளி யங்ககன்ரூர் மூதூர் நின்றும். (சகசுஎ)

அருகணேயுந் திருப்பதிக ளானவெலா மங்கணரைப பணிந்து போற்றிப்
பெருகியஞா னம்பெற்ற பிள்ளேயா ரெழுந்தருளும் பெருமை கேட்டுத்
திருமருவு செங்காட்டங குடிதின்றுஞ் சிறுத்தொண்ட ரோடிச சென்றஙு
ருருமனங் களிசிறப்ப வெதிர்கொண்டு தம்பதியுட் கொண்டு புக்கார். (சகசுஅ)

சிறுத்தொண்ட ருடன்கூடச செங்காட்டங் குடியிலெழுந் தருளிச் சீர்த்தி
நிறுத்தெண்டிக் கிலுநிலவுந் தொண்டரவர் நண்பமர்ந்து நீலகண்டம்
பொறுத்தண்ட ருயக்கொண்டார் கணபதீச சரத்தின்கட் போக மெல்லாம்
வெறுத்துண்டிப பிசசை ஙகர் மெய்த்தொண்ட ருடனணைந்தார் வேத கீதர். (சகசுக)

அங்கணேந்து கோயில்வலங் கொண்டருளி யரவணிந்தா ரடிக்கீழ் வீழ்ந்து
செங்கணரு விகள்பொழியத் திருமுன்பு பணிந்தெழுந்து செங்கை கூப்பித்
தங்கள்பெருந் தகையாரைச சிறுத்தொண்டர் தொழவிருந்த தன்மை போற்றிப்
பொங்கியெழு மிசைபாடிப் போற்றிசைத்தங் கொருபரிசு புறம்பு போந்தார். (சஎ0)

போந்துமா மாத்தியர்தம் போரேற்றின் றிருமனையிற் புகுந்து சிந்தை
வாய்ந்தமா தவரவர்தா மகிழ்ந்தருள வமர்ந்தருளி மதில்கண் மூன்றுங்
காய்ந்தமால் விடையார்தங் கணபதீச் சரம்பரவு காதல் கூர
வேந்துனு லணிமார்ப ரின்புற்றங் கன்பருட னிருந்த நாளில். (சஎக)

திருமருக னகரின்க ணெழுந்தருளித் திங்களுடன் செக்கட் பாம்பு
மருவுநெஞ் சடைமவுலி மாணிக்க வண்ணர்கழல் வணங்கிப் போற்றி
புருவியவன் புறகாத வுள்ளலேப்பத் தெளிவு பிசை யுடனே கூடப
பெருகுதமிழ்த் தொடைசாத்தி யங்கிருந்தார் பெரும்புகலிப பிள்ளை யார்தாம்.(சளஉ)

மே வு.

அந்நாளி லொருவணிகன் பதிக ஞகி யணைவாஞேர் கன்னியையு மூடனே கொ
ண்டு, பொன்னூர்மே ருச்சிலேயார் கோயின் மாடு புறத்திலொரு மடத்திரவு துயிலும்
போது, மின்னூர்வெள் ளெயிற்றரவு கவ்வுதலும் ஏர்ந்த விடவேகங் கடிதலேமீக்
கொண்டேறத், தன்னுவி ரீங்குமவன் றன்மை கண்டு சாயலினுங் கன்னிநிலே தளர்ந்து
சோர்வாள். (சளஊ)

வாளரவு தீண்டவுந்தான் றீண்ட நில்லாண் மறுமாற்ற மற்றெருவர் கொடுப்பா
ரின்றி, யாளரியே றனையானை யணுக வீழ்ந்தே யடைந்தமல்க கொடிபோல்வா ளாதற்
றும்போது, கோளருமும் புள்ளரச மனேயா ரெல்லாங் கொள்ளையினு லுந்தீர்க்கக்
குறையா தாக, நீளிரவு புலர்காலே மாலே வா யெனிருழலா ணெடிதயர்ந்து புலம்பு
கின்ருள். (சளக)

அன்னேயையு மத்தனேயும் பிரிந்து நின்னே யலா துடன்போந்தே னரவால்
வீடி, யென்னேயு நீங்கு கிட்டகன்ரு யாளென் செய்கே னிருகண் ணர்க்கின்ரூர்
யாரு மில்லே, மன்னியசீர் வணிகர்குல மணியீ யாரு மாழிழலன்றென்றயர்வாண்
மதியி னுலே, சென்னியிளம் பிறையணிவார் சேரல் வாயிற் சிலைகோக்கிக் கைதொ
ழுவாள் செயலொன் றில்லாள். (சளஎ)

அடியாரா மிமையவர்தங் கூட்ட முய்ய வலேகடல்வா யுந்தண்ட மூதே செங்க
ணெடியானு நான்முகனுங் காணுக் கோல நீண்ட வரையணிந்த நிமலா வென்று
பொடியான காமனுயி ரிரதி வேண்டப் புரிந்த புகழ் புண்ணியனே பொங்கர் வாசக்
கடியாரு மலர்ச்சோலே மருங்கு குழுங் கவினாரு நற் பெருமானே காவா யென்றும். ()

வந்தடைந்த சிறுமறையோ னுயிர்மேற் ரூபி வருநங்காலன் பெருங்கால வலயம்
போலுஞ், செந்தறுகண் வெள்ளெயிற்றுப் கரிய கோலஞ் சிதைந்துருள வுதைத்தரு
ளுஞ் செய்ய தாளா, விந்தலிடக் கொடிவேக நீங்கு மாறும் யாஞிடுக்கட் குழிரின்று
மேறு மாறு, மந்திமதிக் குழவிவளர் செப்ப வேணி யண்ணிமருகற் பெருமானே யருளா
யென்றும். (சளஎ)

இத்தன்மை சிவனருளே சிந்தித்தேகுங் கிளங்கொடிபோ னுடங்குமிடை யேழை
யேத்து, மத்தன்மை யோசையெழுந் தெதிரு சண்பை யாண்டகையார் கும்பிடவர்
தணேயின் ரூர்தம், மெய்த்தன்மை விளங்குதிருச் செவியிற் சார மேவுதலுந் திருவுள்
ளக் கருணே மேன்மேல், வைத்தன்ன மெனவையர்வாண் மாடு நீங்கி மாதவத்தோர் சூழ
வெழுந் தருளி வந்தார். (சளசு)

சிரபுரத்து மறையவனூர் சென்று நின்று சிவபெருமா னருள்போற்றிச் சிந்தை
நைந்து, பரவுறுவா டனேகோக்கிப் பயப்ப டோனீ பருவரலு நம்பரிசும் பகர்வாயென்
னக், கரமலர்க ளுச்சியின்மேற் குவித்துக் கொண்டு கண்ணருவி சொரிந்திழியக் காழி
வேதப், புரவலனூர் சேவடிக்கீழ் வீழ்ந்து தாங்கள் போற்றதுவும் புகுந்ததுவும் புகல
லுற்ரூள். (சளக)

வளம்பொழில்சூழ் வைப்பூர்க்கோன் ரூம னெந்தை மருமகன்மற் றிவனவற்கு
மகளிர் நல்ல, வினம்பிடியா ரோரெழுவ ரிவரின் மூத்தா ளிவளுக்கென் றுரைசெய்தே

யேதி லானுக் , குளம்பெருகத் தனம்பெற்றுக் கொடுத்த பின்னு மோரொருவ ராக வெனே யொழிய வீந்தான், நளிர்ந்தழியு மிவனுக்காத் தகவு செய்தங் கவரைமறைத் திவன்றனையே சார்ந்து போந்தேன். (சஅ0)

மற்றிவனும் வாளரவு தீண்ட மாண்டான் மறிகடலிற் கலங்கவிழ்த்தார் போல கின்றேன், சுற்றத்தா ரெனவுன்று தோன்றி யென்பாற் றுயரமெலா நீக்கவருள் செய்தீ ரென்னக், கற்றவர்க டொழுதேத்துங் காழி வேந்தர் கருணையினுற் காரிகையா டன க்கு நல்கப், பற்றியவா ளரவின்விடக் தீருமாறு பணைமருகற் பெருமானைப் பாட லுற்றார். (சஅக)

சடையானை யெவ்வுயிர்க்குந் தாயா னுனைச் சங்கரனைச் சசிகண்ட மவுலியானை, விடையானை வேதியனை வெண்ணீற் றானை விடவாதார் புரமூன்று மெரியச் செற்ற, படையானைப் பங்கயத்து மேலி னுலும் பாம்பணையிற் றுயின்றானும் பரவுங் கோல, முடையானை யுடையானை தருமோ விந்த வொள்ளிழையா ளுண்மெலிவென் றுரைத் துப் பாட. (சஅஉ)

பொங்குவிடக் தீர்ந்தெழுந்து நின்றான் சூழ்ந்த பொருவிறிருத் தொண்டர்குழாம் பொலிய வார்ப்ப, வங்கையினை யுச்சிமின்மேற் குவித்துக் கொண்டங் கருட்காழிப் பிள்ளேயா ரடியில் வீழ்ந்த, ங்கையவ டனேயெய்த நம்பி யோடு நானிலத்தி லின்புற்று வாழும் வண்ண, மங்குறவ ரு சோலைமலே புகலி வேந்தர் மணம் புணரும் பெருவாழ்வு வருத்து விட்டார். (சஅங)

மற்றவர்க்கு விடைகொடுத்தங் கமரு நாளின் மருகனக நிணில்வந்து வலிய பாசஞ், செற்றபுகழ்ச் சிறுத்தொண்டர் வேண்ட மீண்டுஞ் செங்காட் டங்குடியிலெ ழுந் தருள வேண்டிப், பற்றியெழுங் காதன்மே மேன்மேற் சென்று பரமனார் திறத் தன்னிப் பாங்க ரெங்குஞ், சுற்றுமருந் தவரோடுங் கோயி லெய்திச் சுடர்மழுவாண் டவர்பாதந் தொழுவான் புக்கார். (சஅச)

புக்கிறைஞ்சி யெதிர்நின்று போற்று நின்றார் பொங்குதிரை நதிப்புனலும் பிறை யுஞ் சேர்ந்த, செக்கர்முடிச சடைமௌலி வெண்ணீற் றார்தங் திருமேனி யொருபாகம் பரமை யாக, மைக்குலவு கண்டத்தார் மருகற் கோயின் மன்னுநிலே மனங்கொண்டு வணங்குவார்முன், கைக்கனலார் கணபதீச சரத்தின் மேவுங் காட்சிகொடுத் தருளு வான் காட்டக் கண்டார். (சஅசி)

வேறு.

மருக லமர்ந்து நிறைந்த கோல மல்குசெங் காட்டங் குடியின் மன்னிப்
பெருகு கணபதி யீச ரத்தார் பீடுடைக் கோலமே யாகித் தோன்ற
வருகிய காதலு மீது பொங்க வுலகர்முன் கொள்ளு முணர்வு நீட
வருவிகண் வார்புறப் பாடலுற்ரு ரங்கமும் வேதமு மென்றெ டுத்து. (சஅசு)

கண்டெதிர் போற்றி வினவிப் பாடிக் கணபதி யீச்சரங் காத லித்த
வண்டார் பிரானை வணங்கி வைகு மப்பதி யிற்சில நாள்கள் போற்றித்
தொண்ட ருடனருள் பெற்று மற்றத் தொல்லேத் திருப்பதி யெல்லை நீங்கிப்
புண்டரி கத்தடஞ் சூழ்பழனப் பூம்புக லூர்தொழப் போது கின்ரூர். (சஅஎ)

சீரின் மலிந்த சிறப்பின் மேவுஞ் சிறுத்தொண்டர் றண்புடன் செல்ல நல்ல
வேரி நறுர்தொங்கன் மற்றவரும் விடையரு ளப்பெற்று மீண்ட பின்பு
நீரின் மலிந்த சடையர் மேலி நிதழும் பதிகள் பலபணிந்து
பாரின் மலிந்து நிறைந்த செல்வம் பயில்புக லூர்கோப் பாங்க ணேர்ந்தார். (சஅஅ)

திருப்புக ழூர்த்திருத் தொண்ட ரோடுஞ் செம்மை முருகனுர்மெய்ம்ம கிழ்ந்த
வீருப்பொடு சென்றெதிர் கொள்ள வந்து வேத முதல்வர்தங் கோயி லெய்திப்
பொருப்புறழ் கோபுரத் தட்பு குந்து பூமலி முன்றில் புடைவ லங்கொண்
டொருப்படு சிந்தையொ டுள்ள ணேந்தா ரோதாது ஞானமெ லாமு ணர்ந்தார். (சஅக)

புக்கெதிர் தாழ்ந்து விழுந்தெ ழுந்து பூம்புக ழூர்மன்னு புண்ணியரை
நெக்குரு குஞ்சிந்தை யன்பு பொங்க நிறைமலர்க் கண்ணீ ரருவி செய்ய
மிக்க தமிழ்த்தொடை மாலே சாத்தி மேவிய வேழிசை பாடிப் போற்றி
திக்கு நிறைசீர் முருகர் முன்பு செல்ல வவர் மடஞ் சென்று புக்கார். (சகo)

ஆங்கவர் போற்றுஞ் சிறபபின் மேவி யப்பதி தன்னி லமரு ளாளில்
வாங்கு மலேசலிலே யார்ம கிழ்ந்த வாத்தமா னீசரந் தான் வணங்கி
யோங்கிய வன்பின் முருக னுர்த்தம் முயாதிருந்த தொண்ட நிறப்பித் தோங்கும்
பாங்குடை வண்டமிழ பாடி நாளும் பரமர்த்ம பாதம் பணிந் திருந்தார். (சகக)

மற்றத் திருப்பதி வைகு நாளில் வாகீசன் பெருவிறன் மன்ன னுர்தாம்
புற்றிடங கொண்டாரை வந்தி றைஞ்சிப் பொன்மதி லாரூர புகழுது போற்றிச்
சிற்றிடைப் பொற்றொடிப் பங்க தவருக திருப்ப ழூரதொ சிங்தை செய்து
கொற்றவ னுருள் பெற்ற தொண்டர் குழாதது டனவ ணூர் குறுக வந்தார். (சகஉ)

நாவுக் கரச ரெழுந்தருளு நல்ல திருவார்த்தை கேட்ட போதே
சேவிற் றிகழ்ந்தவர் மைந்த ரான திருஞான சமபந்தர் பிதைய ன்பு
மேவுற்ற காதன் மிகப்பெருக வீரைதெதிர் கொள்ளுமெய னப்ப ரோடும்
பூவிற் பொலிபொய்கை சூழ்புகலூர்ப் புறம்பணை யெல்' டைகடந்து போந்தார். (சகஙூ)

அங்கண ராரூர் வ்ணங்கிப போந்த வரசு மெதிர்வந் தணையஞசப்
பொங்கு புனற்றண் புகலி வந்த பூசுரா ரிகழமும் பொற்பி னெய்தித்
தங்களி னன்பின் முறைமை யாலே தா ரகது வணங்கித் தனித்தனியே
மகல மாகிய நல் பரவின் வாய்மை விளமபி மகிழும் போது. (சகச)

மெய்த்திரு ஞானசம் பந்தர் வாக்கின் வேந்தரை நோக்கி விருப்பி னுலே
யப்பரை யிங்கணே யப்பெ றும்பே ரருளுடை யோரியா மந்த ணூரு
ரெப்பரி சாற்றுழு தய்த்த தென்று வினவிட வீரில் பெருந்த வத்தோர்
செப்பிய வண்டமிழ் மாலே யாலே திருவா திரைநிக ழ செல்வஞ் சொனனுர். (சகஙி)

அரசரு ளிசசெய்த வாய்மை கேட்ட வப்பொழு தேயருண் ஞான மூண்ட
சிரபுர வேந்தருஞ் சித்தையின்கட் டென்றிரு வாரூர் வணங்கு தற்கு
விரவிய காதலிற் சென்று போற்றி மீண்டிம்வர் தும்முடன் மேவுவனென்
றுரவு கடற்கன் மிதப்பின் வந்தார்க் குரைத்துடன் பாடிகொண் டொல்லைபோந்தார்.

சொற்பெரு வேந்தருந் தோணி மூதூர்த் தோன்றல்பின் காத லொடரத் தாமும்
பொற்புக ழூர்தொழச் சென்ற வேந்தார் புகலிப் பிரானும் புரிந்த சிந்தை
விற்குடி வீரட்டஞ் சென்று மேவி விடையவர் பாதம் பணிந்து போற்றிப்
பற்பல வாயிரத் தொண்ட ரோடும் பாடல ஞன்மறை பாடிப் போந்தார். (சகஎ)

தணரிணர்ச் சோலையுஞ் சாலி வேலித் தறைநீர்ப் பழனமுஞ் சூழ்க ரும்பின்
மணமலி கானமு ஞான முண்டார் மருங்குற நோக்கி மகிழ்ந்தருளி
யணைபவ ரன்னற் கழனி யாரூ ரடைவோ மெனமொழிந் தன்பு பொங்கப்
புணரிசைச் செந்தமிழ் கொண்டு போற்றிப் பொன்மதி லாரூர்ப் புறத்தணைந்தார்.

வானுயர் செங்கதிர் மண்ட லத்து மருங்கணே யுங்கொடி மன்னு மாளூர்
தானெரு பொன்னுல கென்னத் தோன்றுந் தயங்கொளி முன்கண்டு சண்பை வந்த
பானிற மீற்றர் பருக்கை யானைப் பதிகத் தமிழிசை பாடிப் பாடித்
தேனெழு வண்டு முரலுஞ் சோலைத் திருப்பதி மற்றத னெல்லை சேர்ந்தார். (சகக)

பொங்கிய சிந்தை விருப்பின் வெள்ளம் பொழிந்து புலிமேற் பொலிவ தென்ன
வெங்குங் குளிரொளி வீசு முத்தி னிலங்கு சிவிகை யிழிந்தருளிச்
செங்கை நிறைமலர் கொண்டு தூவித் திருவிருக் குக்குறள் பாடி யேத்தித்
தங்கள் பிரானர சாளு மாளூர் தனைப்பணி வுற்றூர் தமிழ்விரகர். (கூoo)

வே று.

படியின் ஞானமுண் டருளிய பிள்ளையைப் பணிதற்
கடியர் சென்றெதிர் கொளவெழுந் தருளுமஞ் ஞான்று
வடிகொள் சூலத்தர் மன்னிய பொன்மதி லாளூர்க்
கடிகொள் பேரணிப் பொலிவையார் முடிவுறக் காண்பார். (கூoக)

கான மான்மத களிர்பெருஞ் சேற்றிடை நறும்பொற்
றூந றுந்துகள் சொரிதலிற் சுடரொளிப் படலை
யான வீதிக ளடிவகுத் தலைகளைந் தலைய
வான மாரியிற் பொழிந்தது மலர்மது மாரி. (கூoஉ)

ஆட லீடுவ துகிற்கொடி யணிகுழற் கொடிக
டோடு சூழ்வன கரும்பொடு தபனியத் தசும்பு
காடு கொண்டன கதலிதோ ரணநிரைக் கமுகு
மாட மாளிகை மண்டபங் களின்மருங் கெல்லாம். (கூoங)

மாலை சூழ்புரங் கடைகளின் மணிநிறை விளக்கின்
கோல நீள்சுட ரொளியுடன் கோத்தினை தூக்கு
மேல மாமணி நிலல்பொர நிறம்புகர் படுக்கும்
பால வாயின பகலவே திகைமலர்ப் பத்தர். (கூoச)

தழைம லர்த்தடஞ் சாலிக டெற்றிகள் சதுக்கங்
குழைமு கத்தவ ராடரங் கிமையவர் குழாமூம்
விழைசி றப்பின வியலிட னியாவையு மிடைந்து
மழைமு ழக்கென வியம்பின மங்கல வியங்கள். (கூoஞ)

விரவு பேரணி வேறுவே றின்னன வீளங்கும்
பிரச மென்மலர்ச் சோலைசூழ் பெருந்திரு வாளூ
ரரச ளிப்பவ ரருளிஞ லடியவர் குழுவும்
புரிசனங்களும் புறத்தணைந் தெதிர்தொழும் பொழுது. (கூoஎ)

வந்தி றைஞ்சுமெய்த் தொண்டர்தங் குழாத்தெதிர் வணங்கிச்
சந்த முத்தமிழ் விரகராஞ் சண்பையர் தலைவ
ரந்த மாயுல காதியாம் பதிகமங் கெடுத்தே
யெந்தை தானெனை யேன்றுகொ ளுங்கொலென் றிசைத்தார். (கூoஏ)

ஆன வத்திருப் பதிகமுன் பாடிவந் தணைபு
ஞான வித்தகர் மெய்த்தவர் சூழவந் தகரார்
ஆந றுஞ்சுண்ண மலர்பொரி அலகயத்தொழு தேத்த
வான நாயகர் கோயில்வா யிலின்மருங் கணைந்தார். (கூoஅ)

மன்னு தோரண வாயின்முன் வணங்கியுள் புகுவார்
தன்னு ளெவ்வகைப் பெருமையுந் தாங்கிய தகைத்தாம்
பன்னெ டுஞ்சுடர்ப் படலையின் பரப்பினைப் பார்த்துச்
சென்னி தாழ்ந்துதே வாசிரி யன்றெழு தெழுந்தார். (திஐக)

மாடு சூழ்திரு மாளிகை வலங்கொண்டு வணங்கிக்
கூடு காதலிற் கோபுரம் பணிந்துகை குவித்துத்
தேடு மாலயற் கரியராய்ச செழுமணிப புற்றி
னீடு வார்முன்பு நிலமுறப் பலமுறை பணிந்தார். (திகஐ)

பணிந்து வீழ்ந்தனர் பதைத்தனர் பரப்பிய புளக
மணிந்த மேனியோ டாடினர் பாடின ரறிவிற்
றுணிந்த மெய்பபொரு ளானவர் தமைக்கண்டு துதிப்பார்
தணிந்த சிந்தையின் விரைதெழு வேட்கையிற் ரூ ழ்ந்தார். (திகக)

செஞ்சொல் வண்டமிழ்த் திருப்பதி கத்திசை யெடுத்து
நஞ்சு போனக மாக்கிய நம்பாமுன் பாடி
மஞ்சு சூழ்திரு மாளிகை வாயிலின் புறம்போன்
தஞ்சு ழுத்துமெய் யுணர்ந்தவர் சிருமடத் தணைந்தார். (திகஉ)

அங்க ணேந்தமர்ந் தருளுவா ரரனெறி யமர்ந்த
செங்க ணேற்றவர் சேவடி வணங்கிமுன் றிலைத்துப்
பொங்கு பேரொளிப் புற்றிடங் கொண்டவர் புனிதப்
பங்க யப்பதந் தொழுதுகா லந்தொறும் பணிந்தார். (திகக)

புற்றி டங்கொளும் புனிதரைப போற்றியை பெருகப்
பற்று மன்பொடு பணிந்திசைப் பதிகங்கள் பாடி
நற்ற வத்திருத் தொண்டர்க ளொடுகலஞ் சிறபப
மற்ற வண்பதி தன்னிடை வைகுமக் காளில். (திகச)

மல்ல னீடிய வலிவலங் கோளிலி முதலாத்
தொல்லை நான்மறை முதல்வர்தம் பதிபல தொழுதே
யெல்லை யிறிருப் பதிகங்க ளாற்பணிந் தேத்தி
யல்ல தீர்ப்பவர் மீண்டுமா ரூர்தொழ வணைந்தார். (திகஇ)

ஊறு காதலி லொளிவளர் புற்றிடங் கொண்ட
வாறு லாவிய சடைமுடி யையரைப் பணிந்து
நீறு வாழ்வென நிகழ்திருத் தொண்டர்க ளோடு
மீறில் சீர்த்திரு ஞானசம் பந்தராய் கிருந்தார். (திகக)

அங்கு நன்மையில் வைகுமக் காள்சில வகல
நங்க டந்திரு நாவினுக் கரசரை நயந்து
பொங்கு சீர்ப்புக ழூர்தொழ வருளினூற் போவார்
தங்கு மப்பதிப் புறம்பணை சார்ந்தருள் செய்வார். (திகள)

வே று.

புவனவா ரூரினிற் புறம்புபோந் ததனையே நோக்கி நின்றே
யவமிலா நெஞ்சமே யஞ்சனீ புய்யுமா றறிதி யன்றே
யெனதா ரூர்தொழாய் நீமற வாதென்று செங்கை கூப்பிப்
பவனமாய்ச் சோடையா யெனுந்திருப் பதிகமுன் பாடி னாரே. (திகஅ)

காழியார் வாழவந் தருள்செயும் கவுணியப் பின்னவர்தா
மாழியா னறியொணாவண்ணலா ரூர்பணிந் தரிது செல்வா
பாழிமால் யானையின் னுரிபுனைந் தார்பனே யூர்ப னிந்து
வாழிமா மறையிசைப் பதிகமும் பாடியப் பதியில் வைகி. (இகக)

அங்குநின் றரிதெழுந் தருளுவா ரகிலகா ரணமு மானூர்
தங்குநற் பதிகளும் பிறபணிந் தருளிவண் டமிழ்பு னைந்தே
யெங்குமெய்த் தவர்குழா மெதிர்கொளத் தொழுதெழுந் தருவி வந்தார்
பொங்குதண் பாசடைப் பங்கயப் புனல்வயற் புகலூர் சார. (இஉ0)

நாவினுக் கரசரு நம்பிசீர் முருகரு மற்று நாமச்
சேவுகைத் தவர்திருத் தொண்டரா னவர்கண்முன் சென்று சேதப்
பூவினிற் பொலிபுனற் புகலியார் போதகத் தெதிர்ப னிந்தே
மேவுமற் றவருடன் கூடவே விமலர்கோ யிலைய டைந்தார். (இஉக)

வே று.

தேவர்தந் தலைவனூர் கோயில்புக் கனைவருஞ் சிரிலத் துறவ ணங்கிப்
பாவருந் தமிழிசைப் பதிகமும் பாடிமுன் பரவுவார் புறம்பணைந்தே
தாவில்சீர் முருகனூர் திருமனைக் கெய்தியத் தனிமுதற் ரெண்டர் தாமே
யாவையும் குறைவறுத் திடவமர்ந் தருளுவா ரினிதினைக குறையு நாளில். (இஉஉ)

நீலநக் கடிகளு நிகழ்சிறுத் தொண்டரு முடனணைந் தெய்து நீர்மைச
சீலமெய்த் தவர்களுங் கூடவே கும்பிடுஞ் செய்கைநேர் நின்று வாய்மைச்
சால்பின்மிக் குயர்திருத் தொண்டினுண் மைததிறந் தன்னையே தெளிய நாடிக்
காலமுய்த் தவர்களோ டளவளா விக்கலந் தருளினூர் காழி நாடர். (இஉங)

கும்பிடுங் கொள்கையிற் குறிகலந் திசையெனும் பதிகமுன் ஞன பாட
றம்பெருந் தலைமையால் நீலமைசால் பதியதன் பெருமைசால் புறவி ளம்பி
யும்பரும் பரவுதற் குரியசொற் பிள்ளேயா ருள்ளமெய்க் காதல் கூர
ரம்பர்தம் பதிகளா யினவெனைப் பலவுமு ணண்ணியே தொழுக யந்தார். (இஉச)

வே று.

புள்ள லம்புதண் புனற்புக ழூருறை புனிதனு ரருள்பெற்றுப்
பிள்ளே யாருட ஞலினுக் கரசரும் பிறபதி தொழசெல்வார்
வள்ள லார்சிறுத் தொண்டரு நீலநக் கரும்வளம் பதிக்கேக
வுள்ள மன்புறு முருகரங் கொழியவு முடன்பட விசைவித்தார். (இஉருி)

கண்ண கன்புக ழூரினைத் தொழுதுபோம் பொழுதினிற் கடற்காழி
யண்ண லார்திரு நாவினுக் கரசர்த மருகுவிட் டகலாதே
வண்ண ரித்திலச் சிவிகையும் பின்வர வழிக்கொள வுறுக்காலே
யெண்ணில் சீர்த்திரு நாவினுக் கரசரு மற்றவர்க் கிசைக்கின்றூர். (இஉக)

நாய னூருமக் களித்தருள் செய்தவிந் நலங்கொ ரொளிமுத்தின்
நூய யானத்தின் மிசையெழுந் தருளுவீ ரென்றலுஞ் சுடர்த்திங்கண்
மேய வேணியா ரருளுமிவ் வாறெனில் விரும்புதொண் டர்களோடும்
போய தெங்குசீ ரங்குயான் பின்வரப் போவதென் றருள்செய்தார். (இஉஎ)

என்று பிள்ளேயார் மொழித்தருள் செய்திட விருத்தலத் திறையோரு
நன்று நீரருள் செய்ததே செய்வனென் றருள்செய்து நயப்புற்ற
வன்றை ரான்முத லுடன்செலு நாளெலா மல்லியல் பினிற்செல்வார்
சென்று முன்னுறத் திருவம்பர்ணிந்தனர் செய்தவச் சுழாத்தோடும். (இஉஅ)

சண்பை மன்னருக் தம்பிரா னருள்வழி நிற்பது தலைச்செல்வார்
பண்பு மேம்படு பனிக்கதிர் நித்திலச் சிவிகையிற் பணிக்தேறி
வண்பெ ரும்புக ழாரினைக் கடந்துபோய் வரும்பரி சனத்தோடுக்
கிண்பெ ருந்தவ ரணைந்ததெங் கென்றுபோய்த் திருவம்பர் நகர்புக்கார். (நிகக)

அம்பர் மாநக ரணைந்துமா காளத்தி லண்ணலா ரமர்கின்ற
செம்பொன் மாமதிற் கோயிலை வலங்கொண்டு திருமுன்பு பணிக்தேத்தி
வம்பு லாமலர் துவிமுன் பரவிய வண்டமி ழிசைமாலை
யும்பர் வாழ்நஞ் சுண்டவர் தமைப்பணிக திருகுமன் பொடுதாழ்க்தார். (நிகo)

தாழ்ந்து காலினுக் கரசுடன் றம்பிரான் கோபின்முன் புறமெய்திச
சூழ்ந்த தொண்டரோ டப்பதி யமர்பவர் சுரந்தி முடிநீது
வீழ்ந்த வேணியா தமைபபெறுங காலங்க ளிருப்பிலும் கும்பிட்டு
வாழ்ந்தி ருந்தனர் காழியார் வாழ்வந் தருளிய மறைவேந்தர். (நிகக)

பொருவி லாதசொற் புல்குபொன் னிறமுதற் பதிகங்க ளாற்போற்றித்
திருவி ஞர்ந்தகோச செங்கண ணன்நகாச செய்தகோ யிலைசேர்ந்து
மருவு வாய்மைவண் டமிழ்மலர் மாலையவ் வளவனைச் சிறப்பித்துப்
பெருகு காதலிற் பணிந்துமுன் பரவினா பேணிய வுணாவோடும். (நிகக)

இன்ன வாறுசொன் மாலைக ளாற்றுதித திறைஞ்சியங கமர்காளிற்
கன்னி மாமதிற் றிருக்கட வூர்தொழக் காதல் செய் தருளிப்போய்
மன்னு கோயில்கள் பிறபதி வணங்கியே வாகின்மன் னவரோடு
மன்னெ டும்பதி யணைவுறக் கலயரோ டடியவ ரெதிர்கொண்டார். (நிகக)

மற்ற வண்பதி யணைந்துவீ ரட்டத்து மழவிடை யார்கோயிற்
சுற்று மாளிகை வலங்கொண்டு காலனை யுதைத்துருட் டியசெய்ய
பொற் சிலம்பணி தாமரை வணங்கிமுன் போற்றியுய்ந் தெதிர்நின்று
பற்ற றுப்பவா சடையுடை யானெனும பதிகவின் னிசைபாடி. (நிகச)

பரவி யேத்தியங் கரிதினிற் போந்துபார் பரவுசீ ரரசோடு
விரவு நண்புடைக குகுகுலி யபபெருகு கலயாதம் மனேமேவிக
கரையில் காதனமற் றவரமைத தருளிய விருதினி தமாந்தக்குச்
சிரபு ரத்தவர் திருமயா னமும்பணிக் திருநதனா சிறபபெய்தி. (நிகஙி)

சிறப்பு டைத்திருப் பதியத னிடைசில காளமர்க தருளோடும்
விறற்பெ ருகுகரி யுரித்தவர் கோயில்கள் விருப்பொடுக் தொழுசெல்வார்
மறைப்பெ ருந்திருக் கலயரு முடன்பட வணங்கிய மகிழ்வோடு
மறப்பெ ரும்பய னனையவத் தொண்டரோ டணைந்தனர் திருவாக்கூர். (நிகக)

தக்க வந்தணர் மேவுமப் பதியினிற் ருன்றோன்றி மாடத்துச்
செக்கர் வார்சடை யண்ணலைப் பணிந்திசைச் செந்தமிழ்த் தொடைபாடி
மிக்க கோயில்கள பிறவுடன் றொழுதுபோய் மீயச்சூர் பணிந்தேத்திப்
பக்கம் பாரிடம் பாட்டின் றூவார் பாம்புர நகர்சேர்ந்தார், (நிகஎ)

பாம்பு ரத்துறை பரமரைப பணிந்தாந் பதிகவின் னிசைபாடி
வாம்பு னற்சடை முடியினர் மகிழ்வீட மற்றுமுள் ளனபோற்றிக்
கும்பி னித்திகழ் கரும்பொடி செல்லினி கழனியம் பணைசூழ்ந்த
கும்பொ ழிற்றிரு வீழிசன் மிழலையின் மருங்குறச் செல்கின்றார். (நிகஅ)

மே வு று.

அப்பொழுதி ஞண்ட வரசை யெதிர்கொண்ட
மெய்ப்பெருமை யர்தணர்கள் வெங்குருவாழ் வேந்தனார்
பிற்படவர் தெய்தும் பெரும்பேறு கேட்டுவப்பா
செப்பரிசி னல்வர் தணைந்தங் கெதிர்கொண்டார். (நிகக)

நிறைகுடந்து பந்தீப நீடுநிரைத் தேந்தி
நறைமலர்ப்பொற் சுண்ண நறும்பொரியுந் தூவி
மறையொலிபோய் வானளப்ப மாமுரச மார்ப்ப
விறைவர்திரு மைந்தர் தமையெதிர்கோ ளேற்றார். (நிசo)

வந்துதிரு வீழி மிழலே மறைவல்ல
வந்தணர்கள் போற்றிசைப்பத் தாமு மணிமுத்தின்
சந்த மணிச்சிவிகை நின்றிழிந்து தாழ்ந்தருளி
யுய்ந்த மறையோ ருடனணைந்தங் குள்புகுவார். (நிசக)

அப்போ துதையார் விரிகோ வணவாடை
யொப்போ தரும்பதிகத் தோங்கு மிசைபாடி
மெய்ப்போதப் போதமர்ந்தார் தங்கோயின் மேவினார்
கைப்போது சென்னியின்மேற் கொண்டு கவுணியனார். (நிசஉ)

நாவின் றனிமன்னர் தாமு முடனண்ண
மேவிய விண்ணிழிந்த கோயில் வலங்கொள்வார்
பூவியலு முந்தியான் போற்றப் புவிக்கிழிந்த
தேவியலு மெய்கண்டு சிந்தைவியப் பெய்தினார். (நிசஙு)

வலங்கொண்டு புக்கெதிரே வந்துவர நதியின்
சலங்கொண்ட வேணித் தனிமுதலைத் தாழ்ந்து
நிலங்கொண்ட மேனியராய் நீடுபெருங் காதல்
புலங்கொண்ட சிந்தையினுற் பொங்கியிசை பொழிந்தார். (நிசச)


போற்றிச் சடையார் புனலுடையா னென்றெடுத்துச்
சாற்றிப் பதிகத் தமிழ்மாலைச் சந்தவிசை
யாற்ற மிகப்பாடி யானந்த வெள்ளத்தி
னீற்றழகர் சேவடிக்கீழ் நின்றலேந்து நீடினார். (நிசஙி)

நீடியபே ரன்புருகி யுள்ளலேப்ப நேர்நின்று
பாடியெதி ராடிப் பரவிப் பணிந்தெழுந்தே
யாடிய சேவடிக ளார்வமுற வுட்கொண்டு
மாடியர் கோயிற் புறத்தணிது வந்தணைந்தார். (நிசஈ)

வந்தணைந்து வாழ்ந்து மதிற்புறத்தோர் மாமடத்துச்
செந்தமிழ்ச்சொல் வேந்தருஞ் செய்தவருஞ் சேர்ந்தருளச்
சந்தமணிக் கோபுரத்துச் சார்ந்தவட பாற்சண்பை
யந்தணர்கு லாமணியா ரங்கோர் மடத்தமர்ந்தார். (நிசஎ)

அங்க ணமர்வா ரரனு ரடியிணைக்கீழ்த்
தங்கிய காதலினுற் காலங்க டப்பாமே
பொங்குபுகழ் வாசே ருங்கூடப் போற்றிசைத்தே
யெங்கு மிடர்தீர்ப்பா ரின்புற் றுறைகின்றார். (நிச

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்



ஓங்குபுனற் பேணு பெருந்துறையு முள்ளிட
பாங்கார் நிலதைப் பதிமுற்ற மும்பணிந்து
வீங்கொலிநீர் வீழி மிழலையினின் மீண்டுமணை
தாங்கினிது கும்பிட் டமர்ந்தொழுகு மந்நாளில். (இசை)

வே று.

சேணுயர் மாடப் புகலியுள்ளார் திருஞான சம்பந்தப் பிள்ளையாரைக்
காணும் விருப்பிற் பெருகுமாசை கைம்மிகு காதல் கரையிகப்பப்
பூணு மனத்தொடு தோணிமேலும் பொருவிடை யார்மலர்ப் பாதம் போற்றி
வேணு புரத்தை யகன்றுபோந்து வீழி மிழலையில் வக்கணைந்தார். (இந்0)

ஊழி முடிவி லுயர்ந்த வெள்ளத் தோங்கிய காழி புயர்பதியில்
வாழி மறையவர் தாகளெல்லாம் வந்து மருகணைந் தார்களென்ன
வீழி மிழலையின் வேதியாகள் கேட்டுமெழு ஞானமுன டாரைமுன்னு
வேழிசை சூழ்மறை யெய்தவோதி யெதிர்கொண் முறைமையிற் கொண்டுபுக்கார். ()

சண்பைத் திருமறை யோர்களெல்லாந் தம்பிரா ணுரைப் பணிந்துபோற்று
நண்பிற் பெருகிய காதல்கூர்ந்து ஞானர் பந்தா மடத்தினுள்ளிப்
பண்பிற் பெருகுக கழுமலத்தா பிள்ளையார் பாதம் பணிந்துபூண்டே
யெணபெற்ற தோணி புரதிலெம்மோ டெழுந்தரு ளாப்பெற மீண்டுமென்னூர். ()

என்றவர் விண்ணபஞ் செய்தபோதி லீறில் பிரானைப் பி ளோயாரு
நன்றிது சாலவுந் தோணிமேலு நாதா கழலினை நா றைஞ்
வின்று கழிதது மிழலைமேலு மிறைவ ருருள்பெற்றப் போவனென்றே
யன்று புகலி யருமறையோர்க் கருள்செய் தவர்க்கு மூகமளித்தார். (குடுகூ)

மேற்பட்ட வந்தணர் சண்பைமேம் வேதியர் காய வீருந்தாப்பப்
பாற்பட்ட சிந்தைய ராய்மகிழ்ந்து பரம்பொரு ளாளுர் தமைப்பரவுஞ்
சீர்ப்பட்ட வெல்லை யினிதுசெல்லத் திருத்தோணி மேவிய செல்வர்தாமே
கார்ப்பட்ட வண்கைக கவுணியர்க்குக் கனவிடை முன் ரின் றருள்செய்கின்ரூர். ()

தோணியி னுமங் கிருந்தவண்ணந் தூமறை வீழி மிழலைதன் றுட்
சேணுயர் விண்ணின் றிழிந்த விந்தச ஞர்கொள வீமானதுக காட்டுகின்றூம்
பேணும் படியா லறிதியென்று பெயர்த்தரு செயயா பெருந்தவகள்
வேணு புரத்தவர் செய்யவந்தார் விரவும் புளகத தொழுணாந்தார். (இஇஇ)

அறிவுற்ற சிந்தைய ராயெழுந்தே யதிசயித் துசிமே லவகைகூப்பி
வெறியுற்ற கொன்றையி னுர்மகிழ்ந்த விண்ணிழி கோயிலிற் சென்றுபுக்கு
மறியுற்ற கையரைத் தோணிமேன்முன் வணங்கும் படியகுக கண்டுவாழ்ந்து
குறியிற் பெருகுந் திருப்பதிகவ குலவிய கொள்கையிற் பாடுகின்ரூர். (இகிசு)

மைம்மரு பூங்குழ லென்றெடுத்து மாறில் பெருந்திருத் தோணிதன்மேற்
கொம்மை முலையினுள் கூடநீடு கோலங் குலவு மிழலைதன்னிற்
செம்மை தருவிண் ணிழிந்தகோயிற் றிகழ்ந்த படியிது வென்கொலென்று
மெய்ம்மை விளங்குந் திருப்பதிகம் பாடிமகிழ்ந்தனர் வேதவாயர். (குகிஎ)

செஞ்சொன் மலர்ந்த திருப்பதிகம் பாடித் திருக்கடைக் காப்புச்சாத்தி
யஞ்சலி கூப்பி விழுந்தெழுவா ரானந்த வெள்ள மலைப்பப்போந்து
மஞ்சிவர் சோலைப் புகலிமேவு மாமறை யோர்தமை நோக்கிவாய்மை
செஞ்சொ னிறைந்த குறிப்பின்வந்த நீர்மைத் திறத்தை யருள்செய்கின்ரூர். (குடுகஅ)

பிரம புரத்தி லமர்ந்த முக்கட் பெரிய பிரான்பெரு மாட்டியொடும்
விரவிய தானங்க ளெங்குஞ் சென்று விரும்பிய கோலம் பணிந்துபோற்றி
வருவது மேற்கொண்ட காதல்கண்டங் கமர்ந்த வகையிங் களித்ததென்று
தெரிய வுரைத்தருள் செய்துநீங்கள் செபுர மாநகர் செல்லுமென்றார். (குடுக)

என்று கவுணியப் பிள்ளையார்தா மியம்பப் பணிந்தரு ளேற்றுக்கொண்டே
யொன்றிய காதலி னுள்ளமங்க ணெழிலிய வொருவா றகன்றுபோந்து
மன்று ணடம்புரிந் தார்மகிழ்ந்த தானம் பலவும் வணங்கிசென்று
நின்ற புகழ்த்தோணி நீடுவாரைப் பணியு நியதிய ராயுறைந்தார். (நுகஅ)

செபுரத் தந்தணர் சென்றபின்னேத் திருவீழி மேவிய செல்வர்பாதம்
பரவுதல் செய்து பணிந்து ளாளும் பண்பின் வழாத்திருத் தொண்டர்சூழ
வுரவுத் தமிழுத்தொடை மாலையாத்தி யோங்கிய ஞாலக் கரசரோடும்
விரவிப் பெருகிய ணன்புகூர மேவி யினிதங் குறையுறாளில். (குகக)

வே று.

மண்ணின் நிலை வான்பொய்த்து நதிக டப்பி மன்னுயிர்கள கண்சாம்பி யுணவு மாறி, விண்ணவர்க்குஞ் சிறப்பில்வரும் பூசை யாற்ற மிக்கபெரும் பசியுலகில் விரவக் கண்டு, பண்ணமரு மொழியுமையாண் முலையின் ஞானப் பாலரு வாயருட னரசும் பார்மேற், கண்ணுதலான் றிருநீற்றுச் சார்வி னோர்க்குங் கவலைவரு மோவென்று கருத்திற் கொண்டார். (குசஉ)

வாளுகி நிலனுகி யனலு மாகி மாருதமா யிருசுடராய் நீரு மாகி
யூனுகி யுயிராகி யுணர்வு மாகி யுலகங்க ளனைத்துமா யுலகுக் கபபா
லானுத வடிவாகி நின்ரூர் செய்ய வடிபரவி யன்றிரவு துயிலும் போது
காளுடு கங்காளர் பிழலை மூனூர் காதலித்தார் கனவிலணைந் தருளிச் செய்வார். ()

உலகியல்பு நிகழ்சியினி லணைந்த தீய வறுபசிநோ யுமையடையா தெனினு மும்பா னிலவுவி னெறிசார்ந்தோர் தம்மை வாட்ட நீக்குதற்கு நித்தமொரோர் காசு நீடு பிலகுமணிப் பீடத்துக் குணக்கு மேற்கும் யாமளித்தோ மும்மக்கிக்கக் காலங் தீர்ந்தா லலகில்புக பூர்தவிர்வ தாகுமென்றே யருளபுரிந்தார் திருவீழி மிழலையையர். (குசச)

தம்பிரானருள் புரிந்து கனவி னீங்கச் சண்பையா ளிளவேறு தாமுணர்ந்து
கம்பிரா னருளிருந்த வண்ண மென்றே காவினிலை யரசரொடுங் கூட ணண்ணி
வம்புலா மலரிதழி வீழி நாதர் மணிக்கோயில் வலஞ்செய்ய புகுந்த வேலை
யம்பிகா பதியருளாற் பிள்ளை யார்தா மபிமுகத்துப் பீடிகைமேற் காசு கண்டார். ()

காதலொடுங் தொழுதெதித்துக் கொண்டி நின்று கைகுவித்துப் பெருமகிழ்ச்சி கலந்து பொங்க, நாதர்விரும் படியார்க ணுளு ளாளு நல்விருந்தா யுண்பதற்கு வருக வென்று, நீதில்பறை நிகழ்வித்துச் சென்ற தொண்டர் திருவமுது கறிசெய்பா றயி ரென் றின்ன, வேதமுரு தினிதுண்ண வூட்டி யங்க ணிருநிறத்துப் பெருந்தவரு மிருந்த ளாளில். (குகக)

காவினுக்கு வேந்தர்திரு மடத்திற் ரெண்டர் நாட்கூற திருவமுது செய்யக் கண்டு
சேவுகைத்தா ரருள்பெற்ற பிள்ளை யார்தந் திருமடத்தி லமுதாக்கு வாரை நோக்கித்
தீவினைக்கு நீரென்று மடைவி லாநீர் திருவமுது காலத்தா லாக்கி யிங்கு
மேவுமிக்க வடியவருக் களியா வண்ணம் வினைந்த வாறென்கொலோவினம்புமென்னூர்.

திருமறையோர் தலைவர்தா மருளிச் செய்யத் திருமடத்தி லமுதமைப்போர்செ
ப்பு வர்க, ளொருபரிசு மறிந்திலோ மிதனை யும்மை யுடையவர்பாற் பெறும்படிக்கா
சொன்றுங் கொண்டு, கருதியவெல் லாங்கொள்ள வேண்டிச் சென்றுற் காசுதனை
வாசிபட வேண்டு மென்பார், பெருமுனிவர் வாதிசர் பெற்ற காசு பேணியே கொள்
வரிது பிற்பா டென்றார். (நிகஅ)

திருஞான சம்பந்த ரதனைக் கேட்டுச் சிற்சிபபார் சிவபெருமா னமக்குத் தந்த
வொருகாசு வாசிபட மற்றக் காசு ரன்றுஞ் வாசிபடா தொழிவா னத்தப், பெருவாய்
மைத் திருநாவுக் கரசர் தொண்டாற் பெறுங்காசா மாதலினும் பெரியோன் றன்னை,
வருநாள்க டருங்காசு வாசி தீரப பாடுவனென் றெண்ணியது மனத்துட் கொண்டார்.

மற்றை நாட் டம்பிரான் கோயில் புக்கு வாசிதீர்த் தருளுமெனப் பதிகம் பாடிப்
பெற்றபடி நற்காசு கொண்டு மார்தா பெயர்த்துபோ யாவணவீ தியினிற் காட்ட
கற்றவத்தீ ரிக்காசு சால நன்று வேண்டுவன நாற்றருவோ மென்று நல்க
வற்றைநாட் டொடருகாட் கூறு தன்னி லடியவரை யமுது செய்வித் தார்வ மிக்கார்.

அருவிலைபிற் பெறுங்காசு மலையே யாகி யமுதமெய்யத் தொண்டரள விறந்து
பொங்கி, வருமவர்க ளெல்லார்க்கும் வேந்தர் ருகு மிந்தணர் வின்னடிசின்
மாளாதாகத், திருமுடிமேற் றிங்களொடு கங்கை சூடுந் சிவபெருமா னருளசெய்யச்
சிறபபின் மிக்க, பெருமைதரு ண்பை ரகர் வேந்தர் ராடுக் கரசரிவர் பெருஞ்சோற்
றுப் பிறங்க லீந்தார். (நுஎக)

அவனிபிரை மணபொழிய ுண மல்கி யினத்துயிருர் துயர்நீங்கி யருளினாலே,
புவனமெலாம் பொலிவெய்துங் கால மெய்தப் புரி டையார் கற்பகாள போற்றி
வைகித், தவமுனிவர் சொல்வேந்த ரோடு மடத் தம்பிரா னருடபெற்றுத் தலத்தின்
மீது, சிவன்மகிழுந் தானங்கள் வணஙகப் போவார் தென்திருவாஞ் சியமூர் சென்று
சேர்ந்தார். (நுஎ உ)

நீடுதிரு வாஞ்சியத்தி லமர்ந்த மூக்க ணீலகிடற் றருமணியை வணங்கிப் போற்றிப்
பாடலாலிரீர்த் தலையாலங காடி மாடு பரமர்பெரு வேஙருரும் பணிந்து பாடி
நாடுபுகழ்த் தனிசசாத்தங் குடியி னண்ணி சம்பர் திருக் கரயீர நயர்து பாடித்
தேடுமறைக் கரியார் தம்மினமா போற்றித் திருவாரூர் தொழுகினைந்து சென்றுபுக்கார்.

சம்பர்மகிழ் திருவாரூர் வணஙகிப் போந்து கலங்கொடிருக் காரூயி ணண்ணி
யேத்திப், பைம்புனன்மென் பணைததேறு ரணைந்து போற்றிப பரமர்திரு செல்லிக்
காப் பணிந்து பாடி, யும்பர்பிரான் கைசெனமும் பரவித் தெய்கூ ரோங்குபுகழ்த்
திருக்கொள்ளிக் காடும்போற்றிச், செம்பொன்மதிற் கோட்டிரும் வணங்கி யேத்தித்
திருமலிவெண் டுறை தொழுவான் சென்று சேர்ந்தார். (நுஎசு)

மற்றவ்வூர் தொழுதேத்தி மகிழ்ந்துபாடி மாலையனுக் கரியபிரான் மருவுர் தானம்,
பற்பலவுஞ் சென்றுபணிந் தேத்திப் பாடிப் பரவுதிருத் தொண்டர்குழாம் பாங்கி
னைய்தக், கற்றவர்வாழ் தண்டலைநீ ணெறியுள் விட்ட கனகமதிற் றிருக்களருங் கரு
தார் வேள்வி, செற்றவர்சேர் பதிபிறவுஞ் சென்று போற்றித் திருமறைக் காட் டதன்
மருங்கு சேர்ந்தா ரன்றே. (நுஎஇ)

காரமண்வெஞ் சுரமருளாற் கடந்தார் தாமுங் கடற்காழிக் கவுணியர்தங் தலைவர்
தாமுஞ், சேரவெழுந் தருளியவப் பேறு கேட்டுத் திருமறைக்காட் டதன் பதியோர்

செப்பிற் பொங்கி, பூரடைய வலங்கரித்து விழவுகொள்ள வுயர்கமுகு கதலிநிறை குடந்தீ பங்கள், வார்முரச மங்கலநா தங்கண் மல்கவெதிர்கொள்ள வடியருடன் மகிழ்ந்து வந்தார். (நுஎசு)

முன்னணைந்த திருநாவுக் கரசர் தம்மை முறைமையா லெதிர்கொண்டு களிப்பின் மூழ்கிப், பின்னணைய வெழுந்தருளும் பிள்ளையார்தம் பெருகியபொற் காளத்திஞைசை கேட்டுச், சென்னிமிசைக் கரங்குவித்து முன்பு சென்று சேணிலத்து வணங்குதலுந் திருத்து சண்பை, மன்னவரு மணிமுத்தின் சிவிகை நின்று வந்திழிந்து வணங்கியுடன் மகிழ்ந்து போந்தார். (நுஎள)

சொல்லரச ருடன்கூடப் பிள்ளையார்தாந் தாமணிநீர் மறைக்காட்டுத் தொல்லை மூதூர், மல்குதிரு மறுகின்கட் புகுந்த போது மாதவர்கண் மறையவர்கண் மற்று முன்னோ, ரெல்லையில்லா வகையரவென் றெடுத்த வோசை யிருவிசும்புந் திசையெட்டு நிறைந்து பொங்கி, யொல்லொலிநீர் வேலையொலி யடக்கி விண்மே லும்பர்நாட் டப்புறத்து முற்ற தன்றே. (நுஎஅ)

அடியவரும் பதியவரு மருங்கு போற்ற வணிமறுகி னூடெய்தி யருகு சூழ்ந்த, கொடி நுடங்கு செழுந்திருமா ளிகையின் முன்னர்க் கோபுரத்தைத் தாழ்ந் திறைஞ் சிக் குறுகிப் புக்கு, முடிவிலிமை யவர்முனிவர் நெருங்குந் தெய்வ முன்றில்வலம் கொண்டுநேர் சென்று முன்னுட், படியின்மறை யருச்சித்துக் காப்புச் செய்த பைம் பொன்மணித் திருவாயிற் பாலகு வந்தார். (நுஎக)

அருமறைக டிருக்காப்புச் செய்து வைத்த வக்கதவந் திறந்திடவும் மறைக ளோதும், பெருகியவன் புடையடியா ரணைந்து நீக்கப் பெறுமையினு லண்முமுத லாகப் பின்னே, யொருபுடையோர் வாயிலமைத் தொழுகுந் தன்மை யுள்ளபடி கேட்டருளி யுயர்ந்த சண்பைத், திருமறையோர் தலைவர்வியப் பெயதி நின்று திருநாவுக் கரசருக்குச் செப்புகின்றார். (நுஅ0)

அப்பரே வேதவனத் தையர் தம்மை யபிமுகத்துத் திருவாயி றிறந்து புக்கே, யெப்பரிசு நாமிறைஞ்ச வேண்டு நீரே யில்வ்வா யிருக்காப்பு நீங்கு மாறு, மெய்ப்பொருள்வண் டமிழ்பாடி யருளு மென்ன விளங்குமொழி வேந்தரது மேற்கொண்டென்னை யிப்பரிசு நீரருளிச செய்தீராகி லிதுசெய்வே னெனைப்பதிக மெடுத்துப் பாட. (நுஅக)

பாடிய வப்பதிகப் பாட்டான பத்தும் பாட னிரம்பிய பின்னும் பைம்பொன் வாயிற், சேயெர் பொற்கதவு திருக்காப்பு நீங்காச் செய்கை யினுல் வாகீசர் சிந்தை கொந்து, நீடுதிருக் கடைக்காப்பி லரிது வேண்டி நின்றெடுக்கத் திருக்காப்பு நீங்கிக் காட்ட, வாடிய சேவடியார்த மடியார் விண்ணே ரார்ப்பெழுந்த தகிலாண்ட மனைத்து மூழ்க. (நுஅஉ)

தே வு.

மற்றது கண்ட போதே வாக்கின்மன் னவரை நோக்கிப்
பொற்புக லியர்தம் மன்னர் போற்றிட வவரும் போற்றி
யற்புத நிலைபி ஞர்க ளணிதிரு மறைக்கா டாளுங்
கொற்றவர் கோயில் வாயி னேர்வழி குறுகிப் புக்கார். (நுஅகூ)

கோயிலுட் புகுவா ருச்சி குவித்தசெங் கைகளோடுங்
தாயிலு மினிய தங்க டம்பிரா ஞரைக் கண்டார்
பாயுநீ ரருவி கண்க ணேங்கிடப் படியின் மீது
மேயின மெய்ய ராகி விதிர்ப்புற்று விரைவின் வீழ்ந்தார். (நுஅச)

அன்பினுக் களவுகாணு ராணந்த வெள்ள மூழ்கி
யென்புநெக் குருக நோக்கி யிறைஞ்சிநேர் விழுந்து நம்பர்
முன்புநிற் பதுவு மாற்றூர் மொழிதடு மாற வேத்தி
யின்புரை சடையார் தம்மைப் பதிகங்கள் விளம்பிப் போந்தார். (இஅசு)

புறம்புவந் தணைந்த போது புகலிகா வலரை நோக்கி
நிறங்கிளர் மணிக்க பாட நீக்கமு மடைபபு நிற்கத்
திறந்தவா றடைக்கப் பாடி யருளுநீ சென்றூர் தீய
மறம்புரி யமணர் செய்த வஞ்சனை கடக்க வல்லார். (இஅசு)

அன்றர சருளிச் செய்ய வருமறைப் பிள்ளை யாரும்
வென்றிவெள் விடையார் தம்மை விருப்பினுற் சுதரமென்னு
மின்றமிழ்ப் பதிகப பாட லிசைத்திட வீரண்டு பாலு
நின்றவக் கதவு காப்பு நிரம்பிட வடைத்த தன்றே. (இஅஎ)

அடைத்திடக் கண்டு ணண்பை யாண்டகை யாரு மஞ்சொற்
ரொடைத்தமி ழாளி யாருந் தொழுதெழுத் தொண்ட ரார்த்தார்
புடைப்பொழிந் திழிந்த தெங்கும் பூமழை புகலி வேந்தர்
டைத்தமிழப் பதிக மாலை நிரம்பிட வின்று போற்ற. (இஅஅ)

அத்திரு வாயி றன்னி லற்றைநாட் டொடங்கி நேரே
மெய்த்திரு மறைகள் போல மேதினி புக்குப் போற்ற
வைத்தெதிர் வழக்கஞ் செய்த வரம்பிலாப் பெருமை யோரைக்
கைத்தலங் குவித்துத் தாழ்ந்து வாழ்ந்தது கடல்சூழ வையம். (இஅக)

அருமறை யானவெல்லா மகலிரு விசும்பி லார்த்துப்
பெருமையின் முழங்கப் பஞ்ச நாதமும் பிறங்கி யோங்க
விருபெருந் தகையோர் தாமு மெதிரெதி ரிறைஞ்சிப் போந்து
திருமடங் களின்முன் புக்கார் செழும்பதி விழவு கொள்ள. (இகo)

வேதங்க ளெண்ணில் கோடி மிடைந்தசெய் பணியை மிக்க
வேதங்க ணம்பா னீப்பா ரிருவருஞ் செய்து வைத்தார்
நாதங்கொள் வடிவாய் நின்ற நதிபொதி சடையார் செய்ய
பாதங்கள் போற்று மேலோர் பெருமையார் பகரு நீரார். (இகக)

திருமறை நம்பர் தாமுன் பருள்செய்த வதனேச செபபு
மொருமையி னின்ற தொண்டர் தம்பிரா ஞர்பா லொக்க
வருமருட் செய்கை தாமே வகுத்திட வல்லோ ரென்றுற்
பெருமறை யுடன்மெய்த் தொண்டர்க் கிடையீடு பெரிதா மன்றே. (இகஉ)

இவ்வகை திரும றைக்காட் டிறையவ ரருளா யுன்னி
மெய்வகை தெரிந்த வாக்கின் வேந்தர்தாந் தயிலும் போதின்
மைவளர் கண்டர் சைவ வேடத்தால் வந்து வாய்மூ
ரவ்விடை யிருத்து மங்கே வாவென்றங் கருளிப் போக. (இகஙு)

கண்டவப் போதே கைகள் குவித்துடன் கடிது செல்வார்
மண்டிய காத லேடு மருவுவார் போன்றுங் காணு
ரெண்டிசை நோக்கு வாருக் கெய்துவார் போல வெய்தா
வண்டர்தம் பிரானுர் தம்பின் போயினு ரார்வத் தோடும். (இகச)

சக

அங்கவ ரேகச் சண்பை யாண்டகை யாரு மப்ப
ரெங்குற்ற தென்று கேட்ப வெய்திஞர் திருவாய் மூரிற்
பொங்கிய காத லாலென் றுரைத்திடப் போன தன்மை
சங்கையும் றென்கொ லென்று தாமுமக் கணையப் போந்தார். (இகஞ)

அங்கிலே யணைந்த போதி லம்பிகை புடனே கூட
மன்னிய வாடல் காட்டத் தளரிள வளரும் பாடிச்
சென்னியால் வணங்கி வாய்மூ ரரசொடுஞ் சென்று புக்கவ்
வின்னியல் புறமுன் கூடி யிருவரும் போற்றி செய்தார். (இகசு)

நீடுசீர்த் திருவாய் மூரி னிலவிய சிவனுர் தம்மைப்
பாடுசொற் பதிகத் தன்னுற் பரவியப் பதியில் வைகிக்
கூடுமெய் யன்பு பொங்க வீருவருங் கூடி மீண்டு
தேடுமா மறைகள் கண்டார் திருமறைக் காடு சேர்ந்தார். (இகஎ)

சண்பைநா டுடைய பிள்ளே தமிழ்மொழித் தலேவ ரோடு
மண்பயில் கீர்த்திச் செல்வ மாமறைக் காட்டு வைகிக்
கண்பயி னெற்றி யார்தங் கழலிணே பணிந்து போற்றிப்
பண்பயில் பதிகம் பாடிப் பரவியங் கிருந்தா ரன்றே. (இகஅ)

இவ்வகை யிவர்க ளங்க ணிருந்தன ராக வீப்பாற்
செய்வகை யிடையே தப்புந் தென்னவன் பாண்டி நாட்டு
மெய்வகை நெறியி னில்லா வினேயமண் சமய மிக்குக்
கைவகை முறைமைத் தன்மை கழியமுன் கலங்குங் காலே. (இகக)

தென்னவன் ரூனு முன்செய் தீவினேப் பயத்தி னுலே
யந்நெறிச் சார்வு தன்னே யறமென நினேந்து நிற்ப
மன்னிய சைவ வாய்மை வைதிக வழக்க மாகு
நன்னெறி திரிந்து மாறி நவைநெறி நடந்த தன்றே. (சுoo)

பூழியர் தமிழ்நாட் டுள்ள பொருவில்சீர்ப் பதிக ளெல்லாம்
பாழியு மருகர் மேவும் பள்ளிகள் பலவு மாகிச்
சூழிருட் குழூஉக்கள் போலத் தொடைமயிற் பீலி யோடு
மூழிநீர் கையிற் பற்றி யமணரே யாகி மொய்ப்ப. (சுoக)

பறிமயிர்த் தலேயும் பாயும் பீலியுங் தடுக்கு மேனிச்
செறியுமுக் குடைபு மாகித் திரிபவ ரெங்கு மாகி
யறியுமச் சமய நூலி னளவினி லடங்கிச் சைவ
நெறியினிற் சித்தஞ் செல்லா நீலமையி னிகழுங் காலே. (சுoஉ)

வரிசிலேத் தென்ன வன்ரு னுய்தற்கு வளவர் கோமான்
றிருவுயிர்த் தருளுஞ் செல்வப் பாண்டிமா தேவியாருங்
குரைகழ லமைச்ச ஞாங் குலச்சிறை யாரு மென்னு
மிருவர்தம் பாங்கு மன்றிச் சைவமய் செய்தா தாக. (சுoங)

ஆங்கவர் தாங்க ளங்க ணரும்பெறற் றமிழ்நா ற்ற
நீங்கினுக் களவு தேற்ருச் சிந்தையிற் பரிவு கொண்டே
யோங்கிய சைவ வாய்மை யொழுக்கத்தி னின்ற தன்மை
பூங்கழற் செழியன் முன்பு புலப்படா வகைகொண் டெய்த்தார். (சுoச)

இக்நெறி யொழுகு கின்ற சோழுல குய்ய வந்த
மன்னிய புகலி வேந்தர் வைதிக வாய்மைச் சைவச்
செங்நெறி விளக்கு கின்றார் திருமறைக் காடு சேர்ந்த
கன்னிலை கன்னி காட்சி கல்வினைப் பயத்தாற் கேட்டார். (கூ0ஞ்)

கேட்டலவப் பொழுதே சிந்தை கிளர்ந்தெழு மகிழ்ச்சி பொங்க
நாட்பொழு தலர்ந்த செந்தா மரைநகை முகத்த ராகி
வாட்படை யமைச்ச ரரு மங்கையர்க் கரசி யாருஞ்
சேட்படு புலத்தா ரேனுஞ் சென்றடி பணிந்தா ரொத்தார். (கூ0கூ)

காதலான் மிக்கோர் தாங்கள் கைதொழு கருத்தி னுலே
போதவிழ் சோலை வேலிப் புகலிகா வலனூர் செய்ய
பாதங்கள் பணிமினென்று பரிசன மாக்க டம்மை
மாதவஞ் சுருதி செய்த மாமறைக் காட்டில் விட்டார். (கூ0எ)

ஆங்கவர் விடமுன் போந்த வறிவுடை மாந்த ரங்க
ணீங்கிவண் டமிழ்நாட் டெல்லை பிற்பட நெறியி னேகி
ஞாங்கர்நீர் நாடுங் காடு நதிகளுங் கடந்து வந்து
தேங்கமழ் கைதை நெய்தற் றிருமறைக் காடு சேர்ந்தார். (கூ0அ)

திருமறைக் காடு நண்ணிச் சிரபுர நகரில் வந்த
வருமறைத் தலைவ னரைங் கமர்ந்திருந் தருளுஞ் செல்வப்
பெருமடத் தணைய வந்து பெருகிய விருப்பிற் றூங்கள்
வருமுறைத் தன்மை யெல்லாம் வாயில்கா வலர்க்குச் சொன்னர். (கூ0க)

மற்றவர் சென்று புக்கு வளவர்கோன் மகளார் தென்னர்
கொற்றவன் றேவி யாருங் குலச்சிறை யாரு மேவப்
பொற்கழல் பணிய வந்தோ மெனச்சிலர் புறத்து வந்து
சொற்றனர் சென்று போற்றித் தொழுதுளி ணைப்பஞ் செய்தார். (கூக0)

புகலிகா வலர்தாங் கேட்டுப் பொருவிலா வருண்முன் கூர
வகமலர்ந் தவர்க டம்மை யழையுமென் றருளிச் செய்ய
நகைமுகச் செவ்வி நோக்கி நற்றவ மாந்தர் கூவத்
தகவுடை மாந்தர் புக்குத் தலையினல் வணங்கி நின்றார். (கூகக)

நின்றவர் தம்மை நோக்கி நிகரில்சீர்ச் சண்பை மன்னர்
மன்றலங் குழலி யாரா மானியார் தமக்கு மானக்
குன்றென நின்ற மெய்ம்மைக் குலச்சிறை யார்த மக்கு
நன்றுதான் வினவக் கூறி நற்பதம் போற்று வார்கள். (கூகஉ)

கன்னிநா டமணர் தம்மாற் கட்டழிந் திழிந்து தங்கண்
மன்னனு மவர்கண் மாயத் தழுந்தமா தேவி யாருங்
கொன்னவி லயில்வேல் வென்றிக் குலச்சிறை யாருங் கூடி
யின்னிலை புகலி வேந்தர்க் கியம்புமென் றிறைஞ்சி விட்டார். (கூகஙு)

வே று.

என்றவர்கள் விண்ணப்பஞ் செய்த பின்னே யேறுயர்த்த சிவபெருமான்றொண்ட ரெல்லா, ரன்றுநமை யாளுடைய நாதன் பாத நண்ணுத வெண்ணிலமண் குண்டர் தம்மை, வென்றருளி வேதனூ னெறியே யாக்கி வெண்ணீறு வேந்தனையு மிடுவித் தங்கு, நின்றசெயல் வினைடியார் செயலே யாக நினைந்தருள வேண்டுமென நின்று போற்ற. (கூகச)

மற்றவர்கட் கருள்புரிந்து பிள்ளை யாரும் வாகீச முனிவருடன் கூடச் சென்று, பெற்றமுயர்த் தவர்பாதம் பணிந்து போந்து பெரியதிருக் கோபுரத்து ளிருந்து தென்னு, மேற்றசெயல் பாண்டிமா தேவி யாரு முரிமையமைச் சருமுரைத்து விட்ட வார்த்தை, சொற்றனிமண் ணவனுக்குப் புகலி மன்னர் சொல்லியெழுந் தருளுதற்குத் துணிந்த போது. (சுகசு)

அரசருளிச் செய்கின்றார் பிள்ளா யந்த வமண்கையர் வஞ்சனைக்கோ ரவதியில்லை, யுரைசெய்வ துளதுறுகோ டானுந் தீய வெழுந்தருள வுடன்படுவ தொண்ணு தென்னப், பரசுவது நம்பெருமான் கழல்க ளென்றும் பழுதணையா தெனப்பகர்ந்து பர மர் செய்ய, விரைசெய்மலர்த் தாளபோற்றிப் புகலி வேந்தர் வேயுறுதோ ளியை யெடுத்து விளம்பி னாரே. (சுகக)

சிறுபரத்துப் பிள்ளையா ருருளிச செய்த திருப்பதிகங கேட்டதற்பின் றிருந்து நாவுக், கரசமதற் குடன்பாடு செய்து தாமு மவர்முன்னே யெழுந்தருள வமைந்த போது, புரமெரித்தார் திருமகளு ரப்ப ரித்தப் புனலுட்டி லெழுந்தருளி யிருப்பீ ரென்று, கரகமலங் குவிதலுறைஞ்சித் தவிர்ப்ப வாக்கின் காவலரும் தொழுதரிதாங கருத்தி னேர்ந்தார். (சுகள)

வேதமவளர்க் கவுஞ்சைவம் விளக்குதற்கும் வேதவனத் தருமணியை மீண்டும் புக்குப, பாதமுறப பணிந்தெழுந்து பாடிப்போற்றிப் பரசியருள பெற்றுவிடை கொ ண்டு போந்து, மாதவத்து வாகீசர் மறுத வண்ணம் வணங்கியருள் செய்துவிடை கொடுத்து மன்னுய, காதலினு லருமையுறக கலந்து நீங்கிக் கதிர்ச்சிவிகை மருங்க ணேந்தார் காழி நாதர். (சுகஅ)

திருநாவுக் கரசருமங் கிருந்தா ரிப்பாற் றிருஞான சம்பந்தர் செழுநீர் முத்தின், பெருநாமச சிவிகையின்மீ தேறிப் பெற்ற முயர்த்தவர்தாள் சென்னியின்மேற் பேணு முள்ளத், தொருநாமத தஞ்செழுத்து மோதி வெண்ணீற் றொளிவிளங்கு திருமேனி தொழுதார் நெஞ்சில், வருநாமத தன்புருகுங கடலா மென்ன மாதவரார்ப் பொலி வைய நிறைந்த தன்றே. (சுகக)

வே று.

பொங்கியெழுந் திருத்தொண்டர் போற்றெடுபபா ரூற்றிசையு
மங்கலனு ரியந்தழுங மறைமுழுங மதமுமு முகுஞ
சங்கபட கம்பேரி தாரைகா ளந்தாள
மெருமுமெழுந தெதிரியம்ப விருவிசும்பு கொடிதாபப. (சுஉ0)

மலர்மாரி பொழிந்திழிய மங்கலவாழத் தினிதிசைப்ப
வலர்வாசப் புனற்குடங்க ளணிவிளகுத் தூபமுட
னிலேடு தோரணங்க ணிரைத்தடியா ரெதிர்கொள்ளக்
கலைமாலை மதிசசடையா ரிடம்பலவுங கைதொழுவார. (சுஉக)

தெண்டிரைசூழ் கடற்கானற் றிருவகத்தி யான்பள்ளி
யண்டர்பிரான் கழல்வணங்கி யருந்தமிழ்மா மறைபாடிக்
கொண்டல்பயின் மணற்கோடு சூழகோடிக குழகர்தமைத்
தொண்டருடன் றொழுதணைந்தார் தோணிபுரத் தோன்றலார். (சுஉஉ)

கண்ணுர்ந்த திருநுதலார் மகிழ்ந்தகடிக் குளமிறைஞ்சி
யெண்ணுர்ந்த திருவிடும்பா வனமேத்தி யெழுந்தருளி
மண்ணுர்ந்த பதிபிறவு மகிழ்தருமன் பால்வணங்கிப்
பண்ணுர்ந்த தமிழ்பாடிப் பரவியே செல்கின்றார். (சுஉக)

திருவுசாத் தானத்துத் தேவர்பிரான் கழல்பணிந்து
மருவியசெந் தமிழ்ப்பதிக மால்போற்றும் படிபாடி
யிருவினையும் பற்றறுப்பா ரெண்ணிறைந்த தொண்டருடன்
பெருகுவிருப் பினராகிப் பிறபதியும் பணிந்தணைவார். (சுஉச)

கருங்கழிவே லேப்பாலைக் கழிநெய்தல் கடந்தருளித்
திருந்தியசீர்ப் புனனுட்டித் தென்மேல்பாற் றிசைநோக்கி
மருங்குமிடை தடஞ்சாலி மாடுசெறி குலத்தெங்கு
நெருங்கிவளர் கமுகுடுத்த நிறைமருத வழிசென்றார். (சுஉஙி)

சங்கங்கள் வயலெங்குஞ் சாலிகழைக் கரும்பெங்கும்
கொங்கெங்கு நிறைகமலக் குளிர்வாசத் தடமெங்கு
மங்கங்கே யுழவர்குழா மார்க்கின்ற வொலியெங்கு
மெங்கெங்கு மலர்ப்படுகை நிலைகழிய வெழுந்தருளி. (சுஉசு)

தடமெங்கும் புனல்குடையுந் தையலார் தொய்யினிற
மிடமெங்கு மந்தணர்க ளோதுகிடை யாகநிலை
மடமெங்குந் தொண்டர்குழா மணையெங்கும் புனைவதுவை
நடமெங்கு மொலியோவா நற்பதிக ளவைகடந்து. (சுஉஎ)

நீர்நாடு கடந்தருளி நெடும்புறவிற் குறும்புதல்கள்
கார்நாடு முகைமுல்லைக கடிநாறு நிலங்கடந்து
போர்நாடுஞ் சிலமறவர் புன்புலவைப் பிடைபோந்து
சீர்நாடு தென்பாண்டி நன்னாடு சென்றணைவார். (சுஉஅ)

மன்றன்மலர்ப் பிறங்கன்மருங கெறிந்துவரு நதிகள்பல
சென்றணைந்து கடந்தேறித திரிமருபபின் கலபுணர்மான்
கன்றுதெறித் தெனவுகைகளுங கானவர்தர் கடந்தணைந்தா
கொன்றைமுஞ் சடைமுடியார் மகிழ்நடதிருக கொடுங்குன்றம். (சுஉக)

கொடுங்குன்றத் தினிதமர்ந்த கொழும்பபாச செழுங்குன்றை
யடுங்குன்ற முரித்தாரை வணங்கியருந் தமிழபாடி
நெடுங்குன்றும் படர்காணு நிறைநாடுங கடநதுமதி
தொடுங்குன்ற மதின்மதுரைத் தொன்னகர்வந் தணைகின்றார். (சுங0)

வே று.

இந்நிலை யிவர்வந் தெய்த வெண்பெருங் குன்ற மேவு
மந்நிலை யமணர் தங்கட் கழிவுமுன் சாற்ற லுற்றுப்
பன்முறை வெருக்கொண் டெள்ளம் பதைப்பத்தீக் களுக்க ளோடுந்
துன்னியித் தங்க ளங்கு நிகழ்ந்தன சொல்ல லுற்றும். (சுஙக)

பள்ளிகண் மேலு மாடு பயிலமண் பாழி மேலு
மொள்ளித ழுசோகின் மேலு மூணவுசெய் கவளங் கையிற்
கொள்ளுமண் டபங்கண் மேலுங் கூகையோ டாந்தை தீய
புள்ளின மான தம்மிற் பூசலிட் டழிவு சாற்றும். (சுஙஉ)

பீலியுந் தடுக்கும் பாயும் பிடித்தவை வழுவி வீழக்
கால்களுந் தடுமா றுடிக் கண்களு மிடமே யாடி
மேல்வரு மழிவுக் காக வேறுகா ணணமுங் காணூர்
மாலுழந் தறிவு கெட்டு மயங்கின ரமண ரெல்லாம். (சுஙங)

கன்றியர் தம்மிற் றமே கனன்றெழு கலாங்கள் கொள்ள
வன்தவா றமணர் தம்மின் மாறுகொண் டேறு செய்ய
மூன்றைய வுரையிற் கொண்ட பொறைமுத லவையும் விட்டுச்
சென்றையிற் செற்ற முன்னர்த் தீக்குணத் தலேகின் ரூர்கள். (சுகூசு)

இப்படி யமணர் வைகு மெப்பெயர்ப் பதியு மெய்து
மொப்பிலுற் பாத மெல்லா மொருவரி னெருவர் கூறி
மெய்ப்படி தீக்க ளவும் வேறுவே ருகக் கண்டு
செப்புவான் புறத்து ளோருந் தென்னவன் மதுரை சேர்ந்தார். (சுகூசு)

அங்கர் தன்னில் வாழ்வார் புறம்புகின் றணேவார் கூடி
மன்னவன் றனக்குங் கூறி மருண்டவுள் ளத்த ராகித்
தன்னிய வழுக்கு மெய்யிற் றுசிலார் பலரு மீண்டி
யின்னன கனவு கண்டோ மெனவெடுத் தியம்ப வுற்றூர். (சுகூசு)

சீர்மலி யசோகு தன்கீ ழிருந்தருங் தேவர் மேலே
வேரொடும் பறித்து வீழக் கண்டன மதன்பின் ஞகை
வேர்கொண்மூக் குடையுங் தாமு மெழுந்துகை நாற்றிப் போக
ஆருளோ ரோடிக் காணக் கண்டன மென்று ரைப்பார். (சுகூள)

குண்டிகை தகர்த்துப் பாயும் பீறியோர் குரத்தி யோடப்
பண்டிதர் பாழிகின்றுங் கழுதைமேற் படர்வார் தம்மி
னெண்டொடி யியக்கி யாரு முளேயிட்டுப் புலம்பி யோடக்
கண்டன மென்று சொன்னர் கையறு கவலே யுற்றூர். (சுகூஅ)

கானிடை நட்ட மாடுங் கண்ணுத லுருண்ட ரெல்லா
மீனவன் மதுரை தன்னில் விரவிடக் கண்டோ மென்பார்
கோனவன் ரூனும் வெய்ய கொழுந்தழன் முழுகக் கண்டோ
மானபி னெழவுங் கண்டோ மதிசய மிதுவா மென்பார். (சுகூக)

மழவிடை யிளங்கன் ரென்று வந்துநங் கழகந் தன்னே
யுழறிடச் சிதறி யோடி யொருவருந் தடுக்க வஞ்சி
விழவொரு புகலு மின்றி மேதினி தன்னே விட்டு
நிழலிலா மரங்களேறி நின்றிடக் கண்டோ மென்பார். (சுசo)

ஆவதென் பாவி காளிக் கனுத்திற மடிகண் மார்க்கு
மேவிய தீங்கு தன்னே விளேப்பது திடமேயென்று
நோவுறு மனத்த ராகி நுகர்பெரும் பதமுங் கொள்ளார்
யாவது செயலென் றெண்ணி யிடருழந் தழுங்கி ஞர்கள். (சுசக)

அவ்வகை யவர்க ளெல்லா மக்நிலே மையர்க ளாகச்
சைவநன் மரபில் வந்த தடமயின் மடமென் சாயற்
பைவள ராவே ரல்குற் பாண்டிமா தேவி யார்க்கு
மெய்வகை யமைச்ச ஞர்க்கும் விளங்குநன் னிமித்த மேன்மேல். (சுசஉ)

அளவிலா மகிழ்ச்சி காட்டி மரும்பெரு நிமித்த மெய்த
வுளமகிழ் வுணருங் காலே யுலகெலா முய்ய வந்த
வளரொளி ஞான முண்டார் வந்தணேக் தருளும் வார்த்தை
யினர்வுறு மோகை கூறி வந்தவர் மொழியக் கேட்டார். (சுசஙு)

அம்மொழி விளம்பி னோர்க்கு வேண்டுவ வடைய நல்கி
மெய்ம்மையில் விளங்கு காதல் விருப்புறு வெள்ள மோங்கத்
தம்மையு மறியா வண்ணங் கைமிக்குத் தழைத்துப் பொங்கி
விம்மிய மகிழ்ச்சி கூர மேவிய சிறப்பின் மிக்கார். (ஈசச)

மங்கையர்க் கரசி யார்பால் வந்தடி வணங்கி நின்ற
கொங்கலர் தெரிய லாராங் குலச்சிறை யாரை நோக்கி
நங்கடம் பிரானு ராய ஞானபோ னகர்முன் பெய்தி
யிங்கெழுந் தருள வுய்ந்தோ மெனவெதிர் கொள்ளு மென்றார். (ஈசஙு)

மன்றலங் குழலி னாரை வணங்கிப் போக் தமைச்ச னுரும்
வென்றிவே லரச னுக்கு முறுதியே யெனலி ரைந்து
பொன்றிகழ் மாட வீதி மதுரையின் புறத்துப் போகி
யின்றமிழ் மறைதந் தாரை யெதிர்கொள வெய்துங் காலை. (ஈசஈ)

அம்புய மலராள் போல்வா ளாலவா யமர்ந்தார் தம்மைக்
கும்பிட வேண்டு மென்று கொற்றவன் றனக்குங் கூறித்
தம்பரி சனங்கள் சூழத் தனித்தடை யோடுஞ் சென்று
நம்பரை வணங்கித் தாமு நல்வர வேற்று நின்றார். (ஈசஎ)

மே லு.

திருநிலவு மணிமுத்தின் சிவிகையின்மேற் சேவித்து
வருநிலவு தருமதிபோல் வளரொளிவெண் குடைநிழற்றப்
பெருகொளிய திருநீற்றுத் தொண்டர்குழாம் பெருகிவர
வருள்பெருக வருஞானத் தமுதுண்டா ரணைகின்றார். (ஈசஅ)

துந்துபிகண் முதலாய தூரியங்கள் கிளராமே
யந்தணரா மாதவர்க ளாயிரமா மறையெடுப்ப
வந்தெழுமங் கலநாத மாதிரமுட் படமுழங்கச்
செந்தமிழ்மா ருதமெதிர்கொண் டெம்மருங்குஞ் சேவிப்ப. (ஈசஉ)

பண்ணியவஞ் சனைத்தவத்தாற் பஞ்சவனுட் டிடைப்பரந்த
வெண்ணிலவ ணைனும்பாவ விருஞ்சேனை யிரிந்தோட
மண்ணுலக மேயன்றி வானுலகுஞ் செய்தபெரும்
புண்ணியத்தின் படையெழுச்சி போலெய்தும் பொலிவெய்த. (ஈஙo)

துன்னுமுழு வுடற்றுகளாற் சூழுமுணர் வினிற்றுகளா
லன்னெறியிற் செறிந்தடைந்த வமண்மாசு கழுவுதற்கு
மன்னியொளிர் வெண்மைபினுற் றூய்மையினுல் வழுதியர்தங்
கன்னிநாட் டிடைக்கங்கை யணைந்ததெனுங் கவின்காட்ட. (ஈஙக)

பானல்வயற் றமிழ்நாடு பழிநாடும் படிபரந்த
மானமிலா வமணென்னும் வல்லிருள்போய் மாய்வதனுக்
கானபெரு கொளிப்பரப்பா லண்டமெலாங் கொண்டதொரு
ஞானமணி விளக்கெழுந்து வருவதென நலம்படைப்ப. (ஈஙஉ)

புரைவயக் கடகளிற்றுப் பூழியர்வண் டமிழ்நாட்டுத்
தரைசெய்தவப் பயன்விளங்கச் சைவநெறி தழைத்தோங்க
வுரைசெய்திருப் பேர்பலவு மூதுமணிச் சின்னமெலாம்
பரசமய கோளரிவந் தானென்று பணிமாற. (ஈஙங)

வே று.

இப்பரி சிணையுஞ் சண்பையர் பெருமா னெழுத்தரு ளும்பொழு திசைக்கு
மொப்பினித் திலப்பொற் றனிப்பெருங் காள முலகுய்ய வொலித்தெழு மோசை
செப்பரும் பெருமைக் குலச்சிறை யார்தஞ் செவிநிறை யமுதெனத் தேக்க
வப்பொழு தறிந்து தலத்தின்மேற் பணிந்தே யளப்பருங் களிப்பின ரானார். (சுருசு)

அஞ்சலி குவித்த கரங்களுந் தலைமே லணைந்திடக் கடிதுசென் றணைவார்
நஞ்சணி கண்டர் தந்திரு மகனு ருடன்வரு நற்றவக் கடலை
நெஞ்சினி னிறைந்த வார்வமுன் செல்லக் கண்டுநீ னிலத்திடைத் தாழ்ந்து
பஞ்சவர் பெருமான் மந்திரித் தலைவர் பாங்குற வணைந்தமுன் பணிந்தார். (சுருடு)

நிலமிசைப் பணிந்த குலசிறை யாரை நீடிய பெருந்தவத் தொண்டர்
பலருமுன் னணைந்து வணங்கிமற் றவர்தாம் படியினின் றெழாவகை கண்டு
மலர்மிசைப் புத்தேள் வழிபடும் புகலி வைதிக சேகரா பாதங
குலவியிங் கணைந்தார் தென்னவ னமைசசர் குலசிறை யாரெனக் கூற. (சுருஙு)

சிரபுரச் செல்வ ரவருரை கேட்டுத திருமுகத் தாமரை மலர்ந்து
வீரவொளி முத்தின் சிவிகையின் றிழிந்து விரைந்துசென் றவர்தமை யணைந்து
கரகம லங்கள பற்றியே யெடுபபக கைதொழு தவருமுன் னிற்ப
வரமிகு தவத்தா லவரையே நோககி வள்ளலார் மதுரவாக் களிப்பார். (சுருஎ)

செம்பியர் பெருமான் குலமக ளார்க்குந் திருந்திய சிந்தையீ ருமக்கு
நம்பெரு மான்றன் றிருவருள பெருகு நன்மைதான் வாலிதே யென்ன
வம்பல ரலங்கன் மந்திரி யாரு மண்மிசைத் தாழ்ந்தடி வணங்கித்
தம்பெருந் தவத்தின் பயனனே யார்க்குத் தன்மையா நிலையுரைக் கின்றார். (சுருஅ)

சென்றகா லத்தின் பழுதிலாத் திறமு மினியெதிர் காலதநின் சிறப்பு
மின்றெழுந் தருளப் பெற்றபே றிதனு லெற்றைகருந் திருவருளுடையோ
நன்றியி னெறியி லழுந்திய நாடு நற்றமிழ வேந்தனு முய்ந்து
வென்றிகொ டிருநீற் றொளியினில் விளகரு மேன்மையும் படைத்தன மென்பார். ()

இங்கெழுந் தருளும் பெருமைகேட் டருளி யெய்துதற் கரியபே றெய்தி
மங்கையர்க் கரசி யாருமு முடைய வாழவெழுந் தருளிய தென்றே
யங்குநீ ரெதிர்சென் றடிபணி வீரென் றருள்செய்தா ரெனத்தொழு தார்வம்
பொங்கிய களிப்பான் மீளவும் பணிந்து போற்றினர் புரவல னமைச்சர். (சுசுo)

ஆங்கனம் போற்றி யடிபணிந் தவர்மே லளவிலா வருள்புரி கருணை
தாங்கிய மொழியாற் றருவன விளம்பித் தலையளித் தருளுமப் பொழுதி
லோங்கெயில் புடைசூழ் மதுரைதோன் றுதலு முயர்தவத் தொண்டரை நோக்கி
யீங்குநம் பெருமான் றிருவால வாய்மற் றெம்மருங் கினதென வினவ. (சுசுக)

அன்பரா யவர்முன் பணிந்தசீ ரடியா ரண்ணலா ரடியிணை வணங்கி
முன்புநின் றெடுத்த கைகளாற் காட்டி முருகலர் சோலைகள் சூழ்ந்து
மின்பொலி விசும்பை யளக்குநீள் கொடிசூழ் வியனெடுங் கோபுரந் தோன்று
மென்பணி யணிவா ரினிதமர்ந் தருளுந் திருவால வாயிது வென்றார். (சுசுஉ)

தொண்டர்தாம் போற்றிக் காட்டிடச் கண்டு துணைமலர்க் கரங்குவித் தருளி
மண்டுபே ரன்பான் மண்மிசைப் பணிந்து மங்கையர்க் கரசியென் றெடுத்தே
யெண்டிசை பரவு மாலவா யாவ திதுவேயென் றிருவர்தம் பணியுங்
கொண்டமை சிறப்பித் தருளிநற் பதிகம் பாடினர் குவலயம் போற்ற. (சுசுஎ)

பாடிய பதிகம் பரவியே வந்து பண்புடை யடியவ ரோடுந்
தேடிமை லயனுக் கரியவர் மகிழ்ந்த திருவால வாய்மருங் கணைந்து
மீயெர் செல்வக் கோபுர மிறைஞ்சி நிறைபெரு வீருப்புடன் புக்கு
மாடிழும் வலங்கொண் டிடையவர் கோயின் மந்திரி யாருடன் புகுந்தார். (ஈஈசு)

வே று.

ஆரு மங்கண ராலவா யமர்ந்தினி திருந்த
காள கண்டரைக் கண்களின் பயன்பெறக் கண்டு
மீள வந்தெழு மன்பினுற் பணிந்தெழ நிறையார்
மீள வும்பல முறைநில முறவிழுந் தெழுவார். (ஈஈடு)

அங்க மெட்டினு மைந்தினு மளவின்றி வணங்கிப்
பொங்கு காதலின் மெய்ம்மயிர்ப புளகமும் பொழியுஞ்
செங்க ணீர்தரு மருவியுந் திகழ்திரு மேனி
யெங்கு மாகினின் றேத்தினர் புகலியா ரிறைவர். (ஈஈஈ)

மீல மாமிடற் றிலவா யானென நிலவு
மூல மாகிய திருவிருக் குக்குறண் மொழிந்து
சீல மாதவத் திருத்தொண்டர் தம்மொடுங் கிளைத்தார்
சாலு மேன்மையிற் றலைசசங்கப் புலவனா தம்முன். (ஈஈஎ)

சேர்த்து மின்னிசைப் பதிகமுந் திருக்கடைக் காப்புச்
சாத்தி நல்லிசைத் தண்டமிழ்ச சொன்மலர் மாலை
பேர்த்து மின்புறப் பாடிவெண் பிறையணி சென்னி
மூர்த்தி யார்கழல் பரவியே திருமுன்றி லணைய. (ஈஈஅ)

பிள்ளை யாரெழுந் தருளிமுன் புகுதுமப் பொழுது
வெள்ள நீர்பொதி வேணியார் தமைத்தொழும் விருபபா
லுள்ள ணைந்திட வெதிர்செலா தொருமருங கொதுங்குந்
தெளளு நீர்விழித் தெரிவையார் சென்றுமுன் பெய்த. (ஈஈக)

மருங்கின் மந்திரி யார்பிள்ளை யார்கழல் வணங்கிக்
கருங்கு ழற்கற்றை மேற்குவி கைத்தளி ருடையார்
பருங்கை யானைவாழ் வளவர்கோன் பாவையா ரென்னப்
பெருங்க ளிப்புடன் விரைந்தெதிர் பிள்ளையா ரணைந்தார். (ஈஎ0)

தென்ன வன்பெருந் தேவியார் சிவக்கன்றின் செய்ய
பொன்ன டிக்கம லங்களிற் பொருந்தமுன் வீழ்ந்தார்
மன்னு சண்பையர் வள்ளலார் மகிழ்நிறந் தளிக்கு
மின்ன ருட்பெருஞ் சிறப்பொடுங் திருகையா லெடுத்தார். (ஈஎக)

ஞான போனக மெதிர்தொழு தெழுந்தநற் றவத்து
மானி யார்மனக் கருத்துமுற் றியதென மதிததே
பான லங்கண்க ணீர்மல்கப் பவளவாய் குழறி
யாணு மென்பதி புஞ்செய்த தவமென்கொ லென்றார். (ஈஎஉ)

யாழின் மென்மொழி யார்மொழிந் தெதிர்கழல் வணங்கக்
காழி வாழவர் தருளிய கவுணியர் பிரானுஞ்
சூழு மாகிய பரசம யத்தினிடைத் தொண்டு
வாழு நீர்மையீ ருமைக்காண வந்தன மென்றார். (ஈஎங)

இன்ன வாறருள் செய்திடத் தொழுதடி வீழ்ந்தார்
மன்னு மந்திரி யார்வரு திறமெலா மொழிய
வன்ன மென்னடை யார்தமக் கருள்செய்து போக்ட
தன்னு மெய்த்தொண்டர் சூழவந் தருளுமப் பொழுது. (சுஎசு)

செல்வ மல்கிய திருவால வாயினிற் பணிசெய்
தல்கு தொண்டர்கள் பிள்ளையார் மருங்கணைந் திறைஞ்சி
மல்கு காரம ணிருள்கெட வீங்குவந் தருள
வெல்லை யிறவஞ் செய்தன மெனவெடுத் திசைத்தார். (சுஎடு)

அத்தி ருத்தொண்டர் தங்களுக் கருண்முக மளித்து
மெய்த்த காதலி னவரொடும் புறத்தினின் மேவிச
சித்த மின்புறு மமைச்சனூர் திருமடங் காட்டப்
பத்தர் போற்றிடப் பரிசனத் தொடுமினி தமர்ந்தார். (சுஎசு)

பரவு காதலிற் பாண்டிமா தேவியா ரருளால்
விரவு ணண்பொடு குலச்சிறை யார்விருந் தளிப்பச
சிரபு ரத்துவந் தருளிய செல்வரங் கிருந்தா
ரிரவி மேற்கட லணைந்தன னெல்லிவந் தணைய. (சுஎஎ)

வழுதி மாநக ரதனிண்டை மாமறைத் தலைவர்
பழுதில் சீரடி யாருடன் பகல்வரக் கண்ட
கழுது போல்வரங் காரமண் குண்டாகள் கலஙகி
யிழுது மையிருட் கிருளென வீண்டின ரொருபால். (சுஎஅ)

அங்கண் மேவிய சமணர்கள் பிள்ளையா ரமர்ந்த
துங்க மாமடந் தன்னிடைத் தொண்டர்தங் குழாஙக
ளெங்கு மோதிய திருப்பதி கத்திசை யெடுத்த
பொங்கு பேரொலி செவிப்புலம் புக்கிடப் பொருராய். (சுஎக)

மற்றிவ வான்பழி மன்னவன் மாறனே யெய்திச
சொற்று மென்றுதஞ் சூழ்சசியு மொருபடி துணிவார்
கொற்ற வன்கடை காவலா முன்சென்று குறுகி
வெற்றி வேலவர்க் கெஙகளே விளம்புவீ ரென்ருர். (சுஅ0)

வாயில் காவலர் மன்னவன் றனையெதிர் வணஙகி
யாய மாகிவந் தடிகண்மா முணிந்தன ரென்ன
வேயி னுணேண வாரென வவருஞ்சென் றிசைத்தார்
பாய்பி னுடன் மூவிவார் பதைப்புடன் புக்கார். (சுஅக)

புக்க போதவ ராழிவுறு மனத்திடைப் புலர்ச்சி
மிக்க தன்மையை வேந்தனுங் கண்டெதிர் வினவி
யொக்க நீர்திரண் டோவதற் குற்றதென் னென்னத்
தக்க தல்லதிங் கடெத்தது சாற்றுதற் கென்ருர். (சுஅஉ)

ஆவ தேனுமக் கடெத்தது கூறுவீ ரென்று
காவ லன்பரிற் றுரைத்தலுங் காரமண் கையர்
மாவ லாயுன்றன் மதுரையிற் சைவமே நியர்தா
மேவ லாலின்று தண்டமேட் டியாமென்று விளம்ப. (சுஅஉ)

என்று கூறலுங் கேட்டுமேட் டியானுமென் றியம்பி
நன்று கல்லநீம் புரிந்தவா நானென்று நகுவான்
கன்று முள்ளத்த ஞியக் கண்ணுத லடியா
நின்று மாக ரணைந்தென் னவர்கள்யா ரென்றான். (சுஅச)

மாலே வெண்குண்டை வளவர்சோ ணூட்டுவண் புகலிச்
சூல பாணிபான் ஞானம்பெற் றுனென்று சுருதிப்
பால னன்பர்தங் குழாத்தொடும் பணிமுத்தின் சிவிகை
மேல ணைந்தன னெனகளே வாதினில் வெல்ல. (சுஅஙி)

என்று கூறுவா ரித்திற முன்புதா மறிந்த
தொன்று மயகொழி யாவகை யுரைத்தலுந் தென்னன்
மன்ற லம்பொழிற் சண்பையா வள்ளலா ரமஞ்
சென்று தன்செவி நிறைததலுஞ் செயிர்ததுமுன் சொல்வான். (சுஅக)

மற்ற மாமறை மைந்தனிம மருகணைக தானே
லுற்ற செய்தொழி லியாதுசெய் கோமென வுரைப்பச
செற்ற மீக்கொண்ட சிகதையுஞ் செயகையு முடையோர்
கொற்ற மன்னவன் மொழிகெதிர் குறித்துரை செய்வா. (சுஅள)

வந்த வந்தணன் றன்னே நாம் வலிசெய்து போக்குஞ்
சிந்தை யன்றிய சிறுமறை யோனுறை மடத்தில்
வெந்த முற்பட விஞ்சைமந திரத்தொழில வீளத்தா
லிந்த ன்னக ரிடத்திரா னேகுமென் றிசைததா. (சுஅஅ)

மே று.

ஆவதொன் றிதுவே யாகி லதனேயே விரைந்து செயயப்
போவதென் றவரைப் போகவிப பொயபொரு ளாகக கொண்டான்
யாவது முரையா டாதே யெண்ணத்திற கவலே யோடும்
பூவணை யமளி புக்கான பொகெழிற றேவி சோகதாள. (சுஅக)

மன்னவ னுரைப்ப தின்றி யிருகமா தேவி யார்தா
மென்னுயிர்க் குயிரா யுளள விறைவரீ யுற்ற தென்னே
முன்னுள மகிழசி யினறி முகம்புலாந் திருநதா யின்று
பன்னிய வுள்ளத் தெய்தும் பருவர லருள்செ யென்ரூர். (சுகo)

தேவியா தம்மை நோக்கித் தென்னவன் கூறு கின்ரூன்
காவிநீள கண்ணி ஞய்கேள காவிரி நாட்டின் மன்னுந
தாவில்சீர்க கழுமலத்தான் சஙகர னருள்பெற் றிகழு
மேவினு னெடிக்கண்மாரை வாதினில் வெல்ல வென்று. (சுகக)

வெண்பொடி பூசுந் தொண்டர் விரவினு ரவரை யெல்லாய்
கண்டுமூட் டடிகண் மார்கள் கேட்டுமூட் டியானுங் காதல்
வண்டினைத் தனைதந்த கோதை மானியே யிங்கு வந்த
பண்புமற் றிதுவே யாகும் பரிசுவே றில்லே யென்ரூன். (சுகஉ)

மன்னவ னுரைப்பக் கேட்டு மங்கையர்க் கரசி யார்தா
நின்னிலே யிதுவே யாகி னீடிய தெய்வத் தன்மை
யன்னவர் வாது செய்தால் வென்றவர் பக்கஞ் சேர்ந்து
தன்னுவ துறுதி யாருஞ் சிழிவதேன் மன்ன வென்ரூர். (சுகஉ)

சிந்தையிற் களிப்பு மிக்குத் திருக்கழு மலத்தார் வேந்தர்
வந்தவா றெம்மை யாள வெனவரு மிழிச்சி யோடுங்
கொந்தலர் குழலாள் போதக் குலச்சிறை யாரங் கெய்த
வீந்தநன் மாற்ற மெல்லா மவர்க்குரைத் திருந்த பின்னர். (கூகூசி)

கொற்றவ னமைசச ஞருங் கைதலை குவித்து நின்று
பெற்றனம் பிள்ளோ யாரிங் கணைந்திடப் பெறும்பே றென்பா
ரிற்றைநா ளீச னன்பர் தம்மைநா மிறைஞ்சப பெற்றே
மற்றினிச் சமணர் செய்யும் வஞ்சனை யறியே மென்ரூர். (கூகூஇ)

மானியார் தாமு மஞ்சி வஞ்சகப் புலையர் தாங்க
ளீனமே புரிய வல்லார் செய்வதென் ஞமென் றெண்ணி
ஞானசம் பந்தர் தம்பா னன்மையல் லாத செய்ய
ஞானம்வந் தடையில் யாமு முபிர்துறந் தொழிவ தென்ரூர். (கூகூசு)

இவர்நிலை யிதுவே யாக விலங்குவேற் றென்ன ஞன
வவனிலை யதுவா மந்நா ளருகர்தந் நிலையா தென்னிற்
றவமறைந் தல்ல செய்வார் தங்கண்மந் திரத்தாற் செந்தீ
சிவகெறி வளர்க்க வந்தார் திருமடஞ் சேரச செய்தார். (கூகூஎ)

வே று.

ஆதி மந்திர மஞ்செழுத் தோதுவார் நோக்கு
மாதி ரத்தினு மற்றைமந் திரவிதி வருமே
பூதி சாதனர் மடத்திற்றும் புனைந்தசா தனைகள்
சாதி யாவகை கண்டமண் குண்டர்க டளர்ந்தார். (கூகூஅ)

தளர்ந்து மற்றவா தாஞ்செப்த தீத்தொழில் பரியக
களர்ந்த வச்சமுன் கெழு பகீழ்மையோர் கூடி
வினங்கு நீண்முடி வேந்தனீ தறியினம் மேன்மை
யுளங்கொ ளானமர் விருதகியு மொழிகருமென் றுணர்வார. (கூகூக)

மந்தி ரச்செயல் வாய்த்தில மற்றினிச செயயும்
புந்தி யாவதிங் கிதுவெனப் பொதிதழற் கொடுபுக
கந்தண் மாதவர் திருமடப் புறத்தய விருளபோல்
வந்து தந்தொழில் புரிந்தனர் வஞ்சனை மனத்தோர். (எ00)

திரும டப்புறச சுற்றினிற் றீயபா தகத்தோர்
மருவு வித்தவத் தொழில்வெளிப படுதலு மழுங்கிப்
பரிச னைத்தவர் பதைப்பொடுஞ் சிதைத்தது நீக்கி
யருக ரிதநிறம் புரிந்தமை தெளிந்துசென் றணைவார். (எ0க)

கழும லப்பதிக் கவுணியர் கற்பகக் கன்றைத்
தொழுது நின்றமண் குண்டர்செய் தீங்கினைச் சொன்ன
பொழுது மாதவர் துயிலுமித் திருமடப் புறம்பு
பழுது செய்வதே பாவிக ளெனப்பரிந் தருளி. (எ0உ)

என்பொ ருட்டவர் செய்ததிங் காயினு மிறையோ
னன்ப ருக்கெய்து மோவென்று பின்னையு மச்ச
முன்பு றப்பின்பு முளிவுற முத்தமிழ் விரகர்
மன்பு ரக்குமெய்ம் முறைவழு வெனமனங் கொண்டார். (எ0ஊ)

வெய்ய தீங்கிது வேந்தன்மேற் றெனும்விதி முறையாற்
செய்ய னேதிரு வாலவா யெனுந்திருப் பதிகஞ்
சைவர் வாழ்மடத் தமணர்க ளிட்டதீத் தழல்போய்ப்
பைய வேசென்று பாண்டியற் காகெனப் பணித்தார். (எ0ச)

மே வு று.

பாண்டிமா தேவியார் தமது பொற்பிற் பயிலுநெடு மங்கலநாண் பாது காத்து
மாண்டகையார் குலச்சிறையா ரன்பி னுலு மரசன்பா லபராத முறுத லாலு
மீண்டுசிவ நெறியடையும் விதியி னுலும் வெண்ணீறு வெப்பகலப் புகலி வேந்தர்
தீண்டியிடப் பேறுடைய னுத லாலுந் தீப்பிணியைப் பையவே செல்க வென்றார். ()

மே வ று.

திருந்தி சைப்பதி கத்தொடை திருவால வாயின்
மருந்தி னேச்சண்பை மன்னவர் புனைந்திட வருளால்
விரிந்த வெந்தழல் வெம்மைபோய்த் தென்னனே மேவிப
பெருந்த ழற்பொதி வெதுப்பெனப் பெயர்பெற்ற தன்றே. (எ0சு)

செய்ய மேனியர் திருமக னுருறை மடத்தி
னேயு முள்ளத்த ராயமண் கையர்தா ணுணுகிக்
கையி னுலெரி யிடவுடன் படுமெல்லி கரப்ப
வெய்ய வன்குண கடலிடை யெழுந்தனன் மீது. (எ0எ)

இரவு பாதகர் செய்ததீங் கிரவிதன் மரபிற்
குரவ வோதியார் குலசிறை யாருடன் கேட்டுச
சிரபு ரப்பிள்ளே யாரையித் தீயவர் நாட்டு
வரவ ழைத்தகா மாய்வதே யெனமன மயங்கி. (எ0அ)

பெருகு மசரமோ டாருயிர் பதைப்பவர் பின்பு
திரும டப்புற மருங்குதீ தின்மையிற் றெளிந்து
கருமு ருட்டமண் கையர்செய் தீங்கிது கடைககால்
வருவ தெப்படி யாமென மனங்கொளும் பொழுது. (எ0க)

அரச னுக்குவெப படித்ததென் றருகுகஞ் சுகிக
ளுரைசெ யப்பதைத் தொருதனித் தேவியார் புருத
வீரைவு மச்சமு மேற்கொளக் குலச்சிறை யாரும்
வரைசெய் பொற்புய மன்னவன் மருங்குவந் தணைந்தார். (எக0)

வேந்த னுக்குமெய் விதிர்ப்புற வெதுப்புறு வெம்மை
காந்து வெந்தழற் கனமென மெய்யெலாங் கவர்ந்து
போந்து மாளிகைப் புறத்துளின் முர்களும் புலர்ந்து
தீந்து போம்படி யெழுந்தது விழுந்துட நிரங்க. (எகக)

உணர்வு மாவியு மொழிவதற் கொருபுடை யொதுங்க
வணைய லுற்றவ ரருகுறா ரத்திடை யகலப்
புணரி னங்கத லிக்குருத் தொடுதளிர் புடையே
கொணரி னுஞ்சுறக் கொண்டவை நுண்டுக ளாக. (எகஉ)

மருத்து நூலவர் தங்கள்பல் கலேகளில் வருத்த
திருத்த குந்தொழில் யாவையுஞ் செய்யவு மேன்மே
லுருத்தெ முந்தவெப் புயிரையு முருக்குவ தாகக்
கருத்தொ ழிந்துரை மறந்தனன் கௌரியர் தலேவன். (எகங)

ஆன வன்பிணி கெழ்வுழி யமணர்க ளெல்லா
மீன வன்செயல் கேட்டலும் வெய்துயிர்த் தழிந்து
போன கங்குலிற் புகுந்தனின் வீளைவுகொ லென்பார்
மான மூன்றெரி யாவகை மன்னன்மாட் டணைந்தார். (எகச)

தே வு.

மால்பெருக்குஞ் சமண்கையர் மருங்கு சூழ்ந்து வழுதிமிலே கண்டழிந்து வந்த நோயின், மூலகொறி யறியாதே தங்க டெய்வ மொழிநவின்மந் திரங்கொண்டு முன்னும் பின்னும், பீலிகொடு தைவருதற் கெடுத்த போது பிடித்தபீ லிகள்பிரம்பி னேறிந் தீக்து, மேலெரியும் பொரிசிதறி வீழக் கண்டு வெப்பினதி சயநோக்கி வெருவன் மிக்கார். (எகடு)

கருகியமா சுடையாக்கைத் தீயோர் தங்கள் கைத்தூங்கு குண்டிகைநீர் தெளித்துக் காவா, யருகனே யருகனே யென்றென் றோதி யடல்வழுதி மேற்றெளிக்க வஃதீர் பொங்கிப், பெருகுமெரி தழற்சொரிந்த நெய்போ லாகிப் பேர்த்துமொரு தழலதன் மேற்பெய்தாற் போல, வொருவரு நிங கிருமருங்கு பிராது போமென் றமணரைப் பார்த் துரைத்தரச னுணர்வு சோர்ந்தான். (எகசு)

தே வு.

பாண்டிமா தேவி யாரும் பயமெய்தி யமைச்சர் பாரம்
பூண்டவர் தம்மை நோக்கிப் புகலியில் வந்து நம்மை
யாண்டுகொண் டவர்பாற் கங்கு லமணர்தாஞ் செய்த தீங்கு
மூண்டவா றினைய தாகி முடிந்ததோ வென்று கூற. (எகஎ)

கொற்றவ னமைச்ச ரோராய் குலச்சிறை யாருந் தாழ்ந்து
மற்றிதன் கொடுமை யிந்த வஞ்சகர் மதில்கண் மூன்றுஞ்
செற்றவ ரன்பர் தம்பாற் செய்ததீங் கரசன் பாங்கு
முற்றிய திவர்க ளுர்க்கின் முதிர்வதே யாவ தெனபார். (எகஅ)

இருதிறத் தவரு மன்ன னெதிர்பணிந் திந்த வெப்பு
வருதிறம் புகலி வந்த வள்ளலார் மதுரை நண்ண
வருகர்கள் செய்த தீய வடிசித மதனுல் வந்து
பெருகிய தித்தருத் தீர்வு பிள்ளேயா ரருளே யென்று. (எகக)

காயமு மனமு மாசு கழுவுதல் செய்யார் செய்யு
மாயமு மிந்த நோயை வளர்ப்பதே வளர்வெண் டிங்கண்
மேயவே ணியர்பான் ஞானம் பெற்றவர் விரும்பி நோக்கிற்
றீயவிப் பிணியே யன்றிப் பிறவியுந் தீரு மென்றார். (எஉ0)

மீனவன் செவியி னூடு மெய்யுணர் வளிப்போர் கூற
ஞானசம் பந்த ரென்னு நாமமந் திரமுஞ் செல்ல
வானபோ தயர்வு தன்னே யகன்றிட வமண ராகு
ஹானமில் லவரைப் பார்த்து மாற்றமொன் றுரைக்க லுற்றான். (எஉக)

மன்னவ னவரை நோக்கி மற்றிவர் செய்கை யெல்லா
மின்னவா றெய்து நோய்க்கே யேதுவா யினவென் றெண்ணி
மன்னிய சைவ நீதி மாமறைச் சிறுவர் வந்தா
லன்னவ ரருளா லிச்சோ யகலுமே லறிவே னென்றான். (எஉஉ)

என்றுமுன் கூறிப் பின்னும் யாஞற்ற பிணியைத் தீர்த்து
வென்றவர் பக்கஞ் சேர்வன் விரகுண்டே லழையு மென்ன
வன்றவ ருவகை பொங்கி யார்வத்தா லணையை நூக்கிச்
சென்றநீர் வெள்ளம் போலுய் காதல்வெள் ளத்திற் செல்வார். (எ௬௬)

பாயுடைப் பாத கத்தோர் திருமடப் பாகு செய்த
தீவினைத் தொழிலே நோக்கி யுளழுழி திருவுள் ளத்தான்
மேயவத் துயர நீக்க விருபுறு விரைவி னேடு
நாயகப் பிளளை யார்த நற்பதம் பணிவா ராகி. (எ௬௰)

மன்னவ னிடும்பை தீர மற்றவன் பணிமேற் கொண்டே
யன்னமென் னடையி னூரு மணிமணிச சிவிகையேறி
மின்னிடை மடவார் சூழ வேற்படை யமைசச னூரு
முன்னணைந் தேகச சைவ முதல்வனூ மடத்தைச சார்ந்தார். (எ௬௱)

திருமடஞ் சாரச சென்று சேயரிக் கண்ணி னூமுன்
வருபரி யிழிந்து நின்ற வமைசசனூர் வந்த பான்மை
சிறபுரப் பிள்ளே யார்க்கு விண்ணப்பஞ் செய்வீ ரென்னப
பரிசனத் தவரும் புகழுப் பதமறிந் தணாதது கின்றூர். (எ௬௫)

பாண்டிமா தேவியாரும் பரிவுடை யமைசச னூரு
மீண்டுவந் தணைந்தா ரென்று விண்ணப்பஞ் செய்யச சண்பை
யாண்டகை யாரு மீண்ட னழையுமென் றருளிச செயய
மீண்டுபோந் தழைக்கப் புகழார் விரைவுறு விருப்பின் மிக்கா. (எ௬எ)

வே று.

ஞானத்தின் றிருவுருவை நான்மறையின் றனிதத்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளா மதிகொழுந்தைத்
தேனகக மலர்க்கொன்றைச செஞ்சடையா சீர்தொடுகழுகு
கானதனி னெழுபிறப்பைக கண்களிப்பக கண்டார்கள். (எ௬அ)

கண்டபொழு தமண்கொடியோ செயதகடெ தொழினினைந்தே
மண்டியகண் ணருவிசோ பாயமலாக கைகுவித்துப்
புண்டரிகச சேவடிகளிழப் பொருநதநில முறவிழுந்தா
கொண்டருறிப் போடுநெடி துயிாததழிநத கொள்கையராய். (எ௬க)

உரைகுழறி மெயநடுங்கி யொனறுமறிக நிலராகித
தரையின்மிசைப புரண்டயர்நது சரணகம லம்பற்றிக்
கரையில்கவ லைகடற்கோர் கரைபற்றி னூர்போன்று
விரைவுறுமெய் யன்பினுல் விடாதொழிவார் தமைக்கண்டு. (எ௬0)

அருமறைவாழ் பூம்புகலி யண்ணலா ரடிபூண்ட
விருவரையுந் திருக்கையா லெடுத்தருளித் தேற்றிடவுந்
தெருமந்து தெளியாதார் தமைநோக்கிச சிறப்பருளித்
திருவுடையீ ருங்கள்பாற் றீங்குளதோ வெனவினவ. (எ௬க)

வெஞ்சமணர் முன்செய்த வஞ்சனைக்கு மிகவழிர்தே
யஞ்செனேர் திருமேனிக் கடாதென்றே யதுதீர்ந்தோம்
வஞ்சகர்மற் றவர்செய்த தீத்தொழில்போய் மன்னவன்பா
லெஞ்சலிலாக் கொடுவெதுப்பா, யெழாநின்ற தென்றத்தொழுது. (எ௬உ)

வெய்யதொழி லமண்குண்டர் வினைக்கவரும் வெதுப்பவர்தாஞ்
செய்யுமதி யாண்மைகளாற் றீராமைத் தீப்பிணியான்
மையலுறு மன்னவன்முன் மற்றவரை வென்றருளி
யுய்யுமெம துயிருமவ னுயிருமென வுரைத்தார்கள். (எகூகூ)

வே று.

என்றவ ருரைத்த போதி லெழில்கொள்பூம் புகலி வேந்த
ரொன்றுநீ ரஞ்ச வேண்டா வுணர்விலா வமணர் தம்மை
யின்றுநீ ருவகை யெய்த யாவருங் காண வாதில்
வென்றுமீ னவனை வெண்ணீ றணிவிப்பன் விதியா லென்றார். (எகூச)

வே று.

மொழிந்தருள வதுகேட்டு முன்னிறைஞ்சி முகமலர்வா
ரழுந்துபிடார்க் கடலிடைநின் றடியோமை யெடுத்தருளச்
செழுந்தரளச் சிவிகையின்மேற் றென்னூடு செய்தவத்தா
லெழுந்தருளப் பேறுடையோ மென்பெரே மெனத்தொழுவும். (எகூடு)

வே று.

ஆவது மழிவு மெல்லா மவர்செய லமண ராகும்
பாவகா ரிகளே நோக்கும் பழுதுட னீங்கி வெல்லச
சேவுயர் கொடியி னுர்தந் திருவுள்ள மறிவே னென்று
பூவலர் பொழில்சூழ் சண்பைப் புரவலர் போது கின்றார். (எகூசு)

வையக முய்ய வந்த வள்ளலார் மடத்தி னின்று
மெய்யணி நீற்றுத் தொண்டர் வெள்ளமுந் தாமும் போக்து
கையினே தலையின் மீது குவியக்கண் மலர்சஞ் காட்டச்
செய்யவார் சடையார் மேவுந் திருவால வாயுட் புக்கார். (எகூஎ)

நோக்கிட விதியி லாரை நோக்கியான் வாது செய்யத்
தீக்கனன் மேனி யானே திருவுள மேயென் றெண்ணில்
பாக்கியப் பயனு யுள்ள பாலரு வாயர் மெய்ம்மை
நோக்கிவண் டமிழ்செய் மாலைப் பதிகந்தா னுவல லுற்றார். (எகூஅ)

காளிடை யாடுவாரைக் காட்டுமா வுரிமுன் பாடித்
தேனலர் கொன்றை யார்தந் திருவுள நோக்கிப் பின்னு
மூனமில் வேத வேள்வி யென்றெடுத் துரையின் மாலை
மானமி லமணர் தம்மை வாதில்வென் றழிக்கப் பாடி. (எகூக)

ஆலமே யமுத மாக வுண்டுவா னவர்க்க ளித்துக்
காலனே மார்க்கண் டர்க்காக் காய்ந்தனே யடியேற் கின்று
ஞாலநின் புகழே யாக வேண்டுநான் மறைக ளேத்துஞ்
சிலமே யாலவாயிற் சிவபெரு மானே யென்றார். (எசஂ0)

நாதர்தம் மருண்முன் பெற்று நாடிய மகிழ்ச்சி பொங்கப்
போதுவார் பணிந்து போற்றி விடைகொண்டு புனித நீற்று
மேதகு கோலத் தோடும் விருப்புறு தொண்டர் சூழ
மூதெயிற் கபாட நீடு முதற்றிரு வாயில் சார்ந்தார். (எசக)

அம்மலர்க் குழலி னுர்க்கு மமைச்சர்க்கு மருள வேண்டிச்
செம்மணிப் பலகை முத்தின் சிவிகைமேற் கொண்ட போதி
லெம்மருங் கினிலுந் தொண்ட ரெடுத்தவார்ப் பெல்லை யின்றி
மும்மைநீ லெக மெல்லா முழுதுட னிறைத்த தன்றே. (எசஉ)

பல்லிய நாதம் பொங்கப் படர்திரு மேற்றின் சோதி
நல்லொளி வட்ட மாகி நண்ணிமேல் வருவ தென்ன
வில்வளர் தரளக் கோவை வெண்குடை நிழற்ற வெவ்வே
றெல்லையின் மூத்தின் காளந் தாரைசங் கெங்கு மோத. (எசஉ)

கண்ணினுக் கணியா யுள்ளா ரெழுசகியிற் காட்சி பெற்றூர்
நண்ணிய சமயம் வேறு நம்பின ரெனினு முன்பு
பண்ணிய தவங்க ளென்கொல் பஞ்சவன் றஞ்ச மேவிப்
புண்ணிய மூர்த்தி வந்து மதுரையிற் புகுத வென்றூர. (எசச)

தென்னவன் றேவி யாருந் திருமணிச சிவிகை மீது
பின்வர வமைச்சர் முன்பு பெருந்தொண்டர் குழாத்துச் செல்லப்
பொன்னணி மாடவீதி யூடெழுந் தருளிப் புக்கார
கன்னிரா டெடையான் கோயில் காழிரா டெடைய பிளளை. (எசஙி)

கொற்றவன் றன்பான் முன்பு குலசசிறை யார்வந் தெய்திப்
பொற்றட மதில்சூழ சண்பைப புரவலர் வரவு கூற
முற்றுயர் சிறிது நீங்கி முழுமணி யணிப்பொற் பீட
மற்றவன் முடியின் பக்கத் திடுகென வல்ல ஞனன். (எசசு)

மந்திரி யாரைப் பின்னு மெதிர்செல மன்ன னேவச
ஈந்தையுண் மகிழ்ந்து போந்தார் செயலேயான் சமயத் துள்ளோர்
பைந்துண ரலங்கன் மன்னன் பரிசுகண் டிதுவோ பண்பா
னந்தனிச சமயந் தன்னை நாட்டுமோ றென்று பின்னும். (எசஎ)

நின்னற நெறியை யீயே காத்தருள செய்தி யாகி
லன்னவர் தம்மை யிங்கே யழைததனை யவரும் யாமு
மன்னுற வொக்கத் தீர்க்க மொழிந்துமற் றவராற் றீர்ந்த
தென்னினு மியாமுந் தீர்த்தோ மாகவு மிசைவா யென்றூர் (எசஅ)

பொய்தவ மாகக்கொண்ட புன்றலைச சமணர் கூறச
செய்தவப் பயன்வந் தெய்துஞ் செவலிமுன் னுறுதலாலே
யெய்திய தெய்வச சார்வா லிருதிறத் தீருங தீருங
கைதவம் பேச மாட்டே னென்றுகை தவனுஞ் சொன்னன். (எசக)

என்றவ னுரைப்பக் குண்ட ரெண்ணகெட் டிருந்த வெல்லைத்
தென்றமிழ் நாடு செய்த செய்தவக் கொழுந்து போல்வார்
வன்றனிப பவன முன்னர் வாயிலு ளணைந்து மாடு
பொன்றிகழ் தரளப் பத்திச் சிவிகையின் றிழிந்து புக்கார். (எஙo)

குலச்சிறை யார்முன் பெய்தக் கொற்றவன் றேவி யாருந்
தலத்திடை யிழிந்து சென்றூர் தண்டமிழ் நாட்டு மன்ன
னிலத்திடை வானி னின்று நீளிரு ணீங்க வந்த
கலேச்செழுந் திங்கள் போலுங் கவுணியர் தம்மைக் கண்டான். (எஙக)

கண்டவப் பொழுதே வேந்தன் கையெடுத் தெய்த கோக்கித்
தண்டுணர் முடியின் பாங்கர்த் தபனியப் பீடங் காட்ட
வண்டமிழ் வீரகர் மேவி யுதன்பிசை யிருந்தார் மாயை
கொண்டவல் லமண ரெல்லாங் குறிபபினு ளச்சங் கொண்டார். (எஙஉ)

செழியனும் பிள்ளை யார்தந் திருமேனி காணப் பெற்று
விழியுற நோக்கலாலே வெம்மைநோய் சிறிது நீங்கி
யழிவுறு மன்னர் கிற்க வந்தணர் வாழ்வை நோக்கிக்
கெழுவுறு பதியா தென்று விருப்புடன் கேட்ட போது. (எடுக)

மே வு று.

பொன்னிவளக் திருநாட்டுப் புனற்பழனப் புறம்பணைசூழ்
கன்னிமதிற் கழுமலநாய் கருதுமூ ரெனச்சிறந்த
பன்னிரண்டு பெயர்பெற்றுப் பரவியசொற் றிருப்பதிகங்
தென்னவன்முன் பருள்செய்தார் திருஞான சம்பந்தர். (எடுச)

பிள்ளையார் செம்பொன்மணிப் பீடத்தி லிருந்தபொழு
துள்ளநிறை பொருமையினு லுழையிருந்த காரமணர்
கொள்ளுமனத் திடையச்ச மறைத்துமுகங் கோபத்தீத்
துள்ளியெழு மெனக்கண்கள் சிவந்துபல சொல்லுவார். (எடுடு)

கடலெழுங் கதிரவனைப் புடைசூழுங் கருமுகில்போற்
பீலிசேர் சமண்கையர் பிள்ளையார் தமைச்சூழ்வா
ரேலவே வாதினுல் வெல்வதனுக் கெண்ணித்தாங்
கோலுநூ லெடுத்தோதித் தலைதிமிர்ப்பக் குரைத்தார்கள். (எடுசு)

பிள்ளையா ரதுகேளாப் பேசுகறும் பொருளெல்லை
புள்ளவா றென்றருள ஆத்தைவாய்ப் பறிதலையர்
துள்ளியெழுக் தகேரார்ச் சூழ்ந்துபத றிக்கதற
வொள்ளிழையா ரதுகண்டு பொருரா கி யுண்ணடுங்கி. (எடுஎ)

மே வு று.

தென்னவன் றன்னை நோக்கித் திருமேனி யெளியர் போலு
மின்னருட் பிள்ளை யார்மற் றிவருவ ரெண்ணி லார்கண்
மன்னனின் மயக்க மெங்கள் வள்ளலார் தீர நல்கும்
பின்னையிவ் வமணர் மூள்வார் வல்லரேற் பேச வென்றூர். (எடுஅ)

மாறனு மவரை நோக்கி வருந்தனீ யென்று மற்றும்
வேறுவா தென்கொ லென்மேல் வெப்பொழித் தருகர் நீரு
மாறணி சடையி னுருக் கன்பரா மிவரு நீங்க
டேறிய தெய்வத் தன்மை யென்னிடைத் தெரிப்பீ ரென்றான். (எடுக)

ஞானவா ரமுத முண்டார் நற்றவத் திருவை யொத்த
மானினேர் விழியி னுய்கேண் மற்றெனைப் பால னென்று
நீநனி யஞ்ச வேண்டா நிலையிலா வமணர்க் கென்றும்
யானெளி யேன லேனென் றெழுந்திருப் பதிகம் பாடி. (எசு0)

பெற்றியா லருளிச் செய்த பிள்ளையார் தமக்கு முன்னஞ்
சுற்றுநின் றமைத்த லோவா வருகர்க்குக் தென்னர் தோன்ற
லிற்றைநா ளென்னை யுற்ற பிணியையீ ரிகலித் தீருர்
தெற்றெனத் தீர்த்தார் வாதில் வென்றன ரென்று செப்ப. (எசுக)

மன்னவன் மாற்றங் கேட்டு வடிவுபோன் மனத்து மாசு
துன்னிய வமணர் தென்னர் தோன்றலை நோக்கி நாங்க
ளுன்னுடம் பதனில் வெப்பை யொருபுடை வாமபாக
முன்னமர் திரித்துத் தெய்வ முயற்சியாற் றீர்த்து மென்றூர். (எசுஉ)

யாதுமொன் றறிவி லாதா ரிருளென வணையச் சென்று
வாதினின் மன்ன வன்றன் வாமபா கத்தைத் தீர்ப்பார்
மீதுதம் மீலி கொண்டு தடவிட மேன்மேல் வெப்புத்
தீதுறப் பொருது தென்னன் சிரபுரத் தவரைப் பார்த்தான். (எசுஉ)

தென்னவ னேக்கங் கண்டு திருக்கழு மலத்தார் செல்வ
ரன்னவன் வலப்பால் வெப்பை யாலவா யண்ண னீறே
மன்னுமந் திரமு மாகி மருந்துமாய்த் தீர்ப்ப தென்று
பன்னிய மறைக ளேத்திப் பகர்திருப் பதிகம் பாடி. (எசுச)

திருவளர் நீறு கொண்டு திருக்கையாற் றடவத் தென்னன்
பொருவரு வெப்பு நீங்கிப பொய்கையிற் குளிர்ந்த தப்பான்
மருவிய விடப்பான் மிக்க வழலெழ மண்டு தீப்போ
லிருபுடை வெபுங் கூடி யிடங்கொளா தென்னப் பொங்க. (எசுடி)

உறியுடைக் கையர் பாயி னுடுக்கையர் நடுக்க மெய்திச்
செறிமயிற் பீலி தீயத் தென்னன்வெப் புறுதித் தம்மை
யெறியமா சுடலுங் கன்றி யருகுவிட் டேற நிற்பா
ரறிவுடை யாரை யொத்தா ரறிவிலா நெறியி னின்றார். (எசுக)

பலர்தொழும் புகலி மன்ன ரொருபுடை வெப்பைப் பாற்ற
மலர்தலை யுலகின் மிக்கார் வந்ததி சயித்துச சூழ
லிலகுவேற் றென்னன் மேனி வலமிட மெய்திநீடு
மூலகினிற் றண்மை வெம்மை யொதுங்கினு லொத்த தன்றே. (எசுஎ)

மன்னவன் மொழிவா னென்னே மதித்தவிக் கால மொன்றில்
வெங்ரு கொருபா லாகும் வீட்டின்ப மொருபா லாகுந்
தின்னுஞ்ஞ் சொருபா லாகுஞ் சுவையமு தொருபா லாகு
மென்வடி வொன்றி லுற்றே னிருதிறத தியல்பு மென்பான். (எசுஅ)

வெந்தொழி லருகர் தோற்றீ ரென்னைவிட் டகல நீங்கும்
வந்தெனை யுய்யக் கொண்ட மறைக்குல வள்ள லாரே
யிந்தவெப் படைய நீங்க வெனக்கருள் புரிவீ ரென்று
சிந்தையாற் றொழுது சொன்னன் செல்கதிக் கணிய ஞனன். (எசுசு)

திருமுகங் கருணை காட்டத் திருக்கையா னீறு காட்டிப்
பெருமறை துதிக்கு மாற்றாற் பிள்ளையார் போற்றிப் பின்னு
மொருமுறை தடவ வங்க ணெழிந்துவெப் பகன்று பாக
மருவுதீப் பிணியு நீங்கி வழுதியு முழுது முய்ந்தான். (எஎ0)

கொற்றவன் றேவி யாருங் குலச்சிறை யாருந் தீங்கு
செற்றவர் செய்ய பாத தாமரை சென்னி சேர்த்துப்
பெற்றனம் பெருமை யின்று பிறந்தனம் பிறவா மேன்மை
யுற்றனன் மன்ன னென்றே யுளங்களித் துவகை மிக்கார். (எஎக)

மீனவன் றன்மே லுள்ள வெப்பெலா முடனே மாற
வானபே ரின்ப மெய்தி யுச்சிமே லங்கை கூப்பி
மானமொன் றில்லார் முன்பு வன்பிணி நீக்க வந்த
ஞானசம் பந்தர் பாத நண்ணினு னுய்ந்தே னென்றான். (எஎஉ)

மே வ று.

கந்துசீறு மாலியானை மீனவன் கருத்துநேர்
வந்தவாய்மை கூறமற்ற மாசுமேனி நீசர்தா
மூன்றைமந் திரத்துலிஞ்சை முற்றுமெஞ்ச வஞ்சியே
சிந்தைசெய்து கைவருந் திறந்தெரிந்து தேடுவார். (எஎக)

சைவமைந்தர் சொல்லின்வென்றி சந்தவின்சொன் மாலையாற்
கைதவன்றன் வெப்பொழித்த தன்மைகண் டறிந்தபின்
மெய்தெரிந்த தர்க்கவாதம் வெல்லலாவ தன்றுவே
றெய்துதீயி னீரில்வெல்வ தென்றுதம் பி லெண்ணினார். (எஎச)

பிள்ளையாரு முங்கள்வாய்மை பேசுமின்க ளென்றலுந்
தள்ளுநீர்மை யார்கள்வேறு தர்க்கவாதி னுத்தரம்
கொள்ளும் வென்றி யன்றியே குறித்தகொள்கை யுண்மைதா
னுள்ளவாறு கட்புலத்தி லுய்ப்பதென்ன வொட்டினார். (எஎடி)

என்றுவாது கூறலு மிருந்ததென்னர் மன்னனுங்
கன்றியென் னுடம்பொடுங்க வெப்புநோய் கவர்ந்தபோ
தொன்றுமங் கொழித்திலீர்க ளென்னவா துமக்கெனச
சென்றுபின்னு முன்னுகின்று சில்லிவாயர் சொல்லுவா. (எஎசு)

என்னவாது செய்வதென் றுரைத்ததே விளுவெளுச
சொன்னவா சகர்தொடங்கி யேடுகொண்டு சூழசியான்
மன்னுதம் பொருட்கருத்தின் வாய்மைதீட்டி மாட்டினுல்
வென்நெருப்பின் வேவுறுமை வெற்றியாவ தென்றனர். (எஎஎ)

என்றபோது மன்னனென் றியம்புமுன்பு பிள்ளையா
ரன்றுநீ ருரைத்தவாறு நாடுதீயி லேடுதான்
வென்றிடிற் பொருட்கருத்து மெய்ம்மையாவ தென்றிரேல்
வன்றனிக்கை யானைமன்னன் முன்புவம்மி னென்றனர். (எஎஅ)

மே வ று.

அப்ப டிக்கெதி ரமணரு மணைதுறு மளவி
லொப்பில் வண்புகழ ச ண்பையர் காவல ருரையாற்
செப்ப ருந்திறன் மன்னனுந் திருந்தவை முன்னர்
வெபபு றுந்தழ லமைக்கென வினைஞரை விடித்தான். (எஎக)

எய மார்தரு மிந்தனங ருறைத்துட னடுக்கித்
தீய மைத்தலுஞ் சிகைவிடு புகையொழிந் தெழுந்து
காயும் வெவ்வழற் கடவுளும் படரொளி காட்ட
வாயு முத்தமிழ் விரகரு மணையவந் தருளி. (எஅ0)

செங்க ணேற்றவ ரேபொரு ளென்றுதாந் தெரித்த
பொங்கி சைத்திருப் பதிகநன் முறையினை ப போற்றி
யெங்க ணுதனே பரம்பொரு ளெனத்தொழு தெடுத்தே
யங்கை யான்முடி மிசைக்கொண்டு காப்புநா ணவிழ்த்தார். (எஅக)

சாற்று மெய்ப்பொரு டருந்திரு முறையினைத் தாமே
நீற்று வண்கையான் மறித்தலும் வந்தநேர்ந் துளதா
னுற்ற டம்புயத் தண்ணலார் டிருவுளள் ளாறு
போற்று மப்பதி கம்போக மார்த்தபூண் முலையாள். (எஅஉ)

அத்தி ருப்பதி கத்தினே யமர்ந்துகொண் டருளி
மைத்த வெங்கடு மிடற்றுநள் ளாறரை வணங்கி
மெய்த்த நற்றிரு வேட்டினைக் கழற்றிமெய்ம் மகிழ்ந்து
கைத்த லத்திடைக் கொண்டனர் கவுணியர் தலைவர். (எஅகூ)

நன்மை புய்க்குமெய்ப் பதிகத்தி னுதனென் றெடுத்து
மென்னே யாளுடை யீசன்ற னுமமே யென்று
மன்னு மெய்ப்பொரு ளாமெனக் காட்டிட வன்னி
தன்னி லாகெனத் தளிரிள வளரொளி பாடி (எஅசை)

செய்ய தாமரை யகவித ழினுமிகச சிவந்த
கையி லேட்டினைக் கைதவன் பேரவை காண
வெய்ய தீயினில் வெற்றரை யசாசிதை வேவ
வைய முய்ந்திட வந்தவர் மகிழ்தமுன் னிட்டார் (எஅதி)

இட்ட வேட்டினி லெழுதிய செந்த மிழப் பதிக
மட்டு லாங்குழல் வனமுலை மலைமகள பாகத்
தட்ட மூர்த்தியைப் பொருளென வுடைமையா லமர்ந்து
பட்ட தீயிடைப் பசசையாய் விளகிய தன்றே. (எஅசு)

மைய னெஞ்சுடை யமணருந் தம்பொருள வரைந்த
கையி லேட்டினைக் கதுவுசெந் தீயினி லிடுவா
ருய்யு மோவிது வெனவுறுவ கவலையா முணாவா
னையு நெஞ்சின ராகியே நடுங்கினின் றிட்டார் (எஅஎ)

அஞ்சு முள்ளத்த ராகியு மறிவிலா வமணா
வெஞ்சு டர்ப்பெருந் தீயினில் விழுத்திய வேடு
பஞ்சு தீயிடைப் பட்டது படக்கண்டு பயததா
னெஞ்சு சோரவும் பீலிகை சோர்நதிலா கின்றார் (எஅஅ)

மான மன்னவ னையின்முன் வளர்த்தசெந் தீயின்
ஞான முண்டவ ரிட்டவே டிசைத்தநா ழிகையி
லீன மின்மைகண் டியாவரும் வியப்புற வெதிதாரா
பான்மை முன்னையிற் பசுமையும் புதுமையும் பயப்ப (எஅக)

எடுத்த வேட்டினை யவையின்முன் காட்டியம் முறையி
லடுத்த வண்ணமே கோத்தலு மதிசயித தரசன்
றெடுத்த பீலிமுன் றாக்கிய கையரை நோக்கிக்
கடுத்து நீரிட்ட வேட்டினைக் காட்டி னினென்றான். (எகo)

வே று.

அருகர்தா மிட்ட வேடு வாங்கச்சென் றணையும் போதிற்
பெருகுதீக் கதுவ வெந்து பேர்ந்தமை கண்ட மன்னன்
தருபுனல் கொண்டு செந்தீத் தணிப்பித்தான் சமண ரஙகுக்
கருகிய சாம்ப ரோடுங் கரியலான் மற்றென் காண்பார். (எகக)

செய்வதொன் றறிகி லாதார் திகைப்பினுற் றிரண்ட சாம்பல்
கையினுற் பிசைந்து தூற்றிப பார்ப்பது கண்ட மன்ன
னெய்திய நகையி னோடு மேடின்ன மரித்துக் காணும்
பொய்யினன் மெய்மை யாக்கப் புகுந்தநீர் போலி னென்றான். (எகஉ)

வெப்பெனுந் தியில் யான்முன் வீடுபெற் றுய்ய நீங்க
ளப்பொழு தழிந்து தோற்றீ ராதலா லதுவா ருக
லிப்பொழு தெரியி லிட்ட வேடுய்ந்த தில்லை யென்றுற்
றுப்புர வுடையீர் நீங்க டோற்றிலீர் போலு மென்றான். (எகூடு)

தென்னவ னகையுட் கொண்டு செப்பிய மாற்றந் தேரார்
சொன்னது பயனுக் கொண்டு சொல்லுவார் தொடர்ந்த வாது
முன்னுற விருகாற் செய்தோ மூக்காலி லொருக்கால் வெற்றி
யென்னினு முடையோ மெய்ம்மை யினியொன்று காண்ப தென்றார். (எகூசு)

தோற்கவு மாசை நீங்காத் துணிவிலார் சொல்லக் கேட்டிம்
மாற்றமென் னுவ தென்று மன்னவன் மறுத்த பின்னு
நீற்றணி விளங்கு மேனி நிறைபுகழ்ச் சண்பை மன்னர்
வேற்றுவா தினியென் செய்வ தென்றலு மேற்கோ ளேற்பார். (எகூஙி)

நீடுமெய்ப் பொருளி னுண்மை நிலைபெருந் தன்மை யெல்லா
மேடுற வெழுதி மற்றவ் வேட்டினை யாமு நீரு
மோடுநீ ராற்றி லிட்டா லொழுகுதல் செய்யா தங்கு
நாடிமுன் றங்கு மேடு நற்பொருள் பரிப்ப தென்றார். (எகூசு)

என்றமண் கையர் கூற வேறுசீர்ப் புகலி வேந்தர்
நன்றது செய்வோ மென்றங் கருள்செய நணுக வந்து
வென்றிவே லமைச்ச ஞர்தாம் வேறினிச் செய்யு மிவ்வா
தொன்றினுந் தோற்றீர் செய்வ தொட்டியே செய்வ தென்றார். (எகூஎ)

அங்கது கேட்டு நின்ற வமணரு மலர்மேற் சென்ற
பொங்கிய வெகுளி கூரப் பொருமைகா ரணமே யாகத்
தங்கள் வாய் சோர்ந்து தாமே தனிவாதி லழிந்தோ மாகில்
வெங்கழு வேற்று வானிவ் வேந்தனே யென்று சொன்னார். (எகூஅ)

மற்றவர் சொன்ன வார்த்தை கேட்டலு மலய மன்னன்
செற்றத்தா லுரைத்தீ ருங்கள் செய்கையு மறந்தீ ரென்று
புற்றிய பொருளி னேடு படர்புனல் வைகை யாற்றிற்
பொற்புற விடுவ தற்குப் போதுவ தென்று கூற. (எகூக)

பிள்ளையார் முன்னம் பைம்பொற் பீடத்தி னிழிந்து போந்து
தெள்ளுநீர்த் தரளப் பத்திச் சிவிகைமே லேறிச் சென்றார்
வள்ளலா ரவர்தம் பின்பு மன்னன்மா லேறிச் சென்ற
னுள்ளலா றறிகி லாதா ருணர்வுமா லேறிச் சென்றார். (அ00)

தென்னவன் வெப்புத் தீர்ந்து செழுமணிக் கோயி னீங்கிப்
பின்னுற வணைந்த போது பிள்ளையார் பெருகுஞ் செல்வ
மன்னிய மதுரை மூதூர் மறுகில்வந் தருளக் கண்டு
துன்னிய மாதர் மைந்தர் தொழுதுவே றினைய சொன்னார். (அ0க)

மீனவன் கொண்ட வெப்பை நீக்கிநம் விழுமந் தீர்த்த
ஞானசம் பந்த நிந்த நாயனார் காணு மென்பார்
பானறுங் குதலைச் செய்ய பவளவாய்ப் பிள்ளை யார்தா
மானசீர்த் தென்ன னுடு வாழுவந் தணைந்தா ரென்பார்.‡ (அ0உ)

எரியிடை வாதிற் ரேற்ற திவர்க்குநம் மருக ரென்பார்
புரிசடை யண்ண னீறே பொருளெனக் கண்டோ மென்பார்
பெருகொளி முத்தின் பைம்பொற் சிவிகைமேற் பிள்ளையார்தாம்
வருமழ கென்னே யென்பார் வாழ்த்தன கண்க ளென்பார். (அ0கூ)

ஏதமே வினைந்த திந்த வடிகண்மா ரியல்பா லென்பார்
நாதனு மால வாயி னம்பனே காணு மென்பார்
போதமா வதுவு முக்கட் புராணனே யறிவ தென்பார்
வேதமு நீறுமாகி விரவிடு மெங்கு மென்பார். (அ0உ)

அடிகண்மார் முகங்க ளெல்லா மழிந்தன பாரீ ரென்பார்
கொடியவஞ் சனைக ளெல்லாய் குலைந்தன போலு மென்பார்
வடிகொள்வேண் மாறன் காதன் மாறின வண்ண மென்பார்
விடிவதாய் முடிந்த திந்த வெஞ்சம ணிருளு மென்பார். (அ0ங)

நெருப்பினிற் ரேற்றூர் தாங்க ணீரில்வெல் வர்களோ வென்பா
ரிருப்புநெஞ் சுடைய ரேனும் பிள்ளையார்க் கெதிரோ வென்பார்
பருப்பொரு ளுணர்ந்தார் தாங்கள் படுவன பாரீ ரென்பார்
மருப்புடைக் கழுக்கோல் செய்தார் மந்திரி யார்தா மென்பார். (அ0சு)

எடுகள் வைகை தன்னி லிடுவதற் கணைந்தா ரென்பா
ரோடுநீ ருடன்செ லாது நிற்குமோ வோலை யென்பார்
நீடிய ஞானம் பெற்றூர் நிறுத்தவும் வல்ல ரென்பார்
நாடொலாங் காண விங்கு ணண்ணுமா காணீ ரென்பார். (அ0எ)

தோற்றவர் கழுவி லேறத் துணிவதே யருக ரென்பா
ராற்றிய வருளின் மேன்மை பிள்ளையார்க் கழகி தென்பார்
நீற்றினுற் றென்னன் நீங்கு நீங்கிய வண்ணங் கண்டாற்
போற்றுவா ரெல்லாஞ் சைவ நெறியினைப் போற்று மென்பார். (அ0அ)

இன்னன விரண்டு பாலு மீண்டின ரெடுத்துச சொல்ல
மின்னொளி மணிப்பொற் காம்பின் வெண்குடை மீது போதப்
பன்மணிச் சிவிகை தன்மேற் பஞ்சவ னூட்டு ரோர்க்கு
நன்னெறி காட்ட வந்தார் நான்மறை வா ழ வந்தார். (அ0கூ)

தென்றமிழ் விளங்க வந்த திருக்கழு மலத்தான் வந்தான்
மன்றுளா ரளித்த ஞான வட்டில்வண் கையன் வந்தான்
வென்றுல குய்ய மீள வைகையில் வெல்வான் வந்தா
னென்றுபன் மணிச்சின் னங்க ளெண்டிசை நெருங்கி யேங்க. (அ0ஙு)

பன்மணி முரசு சூழ்ந்த பல்லிய மியம்பப் பின்னே
தென்னனுந் தேவி யாரு முடன்செலத் திரண்டு செல்லும்
புன்னெறி யமணர் வேரூர் புடைவரப் புகலி வேந்தர்
மன்னிய வைகை யாற்றின் கரைமிசை மருவ வந்தார். (அ0ஙங)

*

கார்கெழு பருவம் வாய்ப்பக் காமுறு மகளி ருள்ளஞ்
சீர்கெழு கணவன் றன்பால் விரைவுறச் செல்லு மாபோ
னீர்கெழு பௌவ நோக்கி நிரைநிரை யிரைத்துச் செல்லும்
பார்கெழு புகழின் மிக்க பண்புடை வைகை யாறு. (அ0உ)

ஆற்றினீர் கடகை வோடு மருங்குற வரச ளேக்கி
நீற்றணி திகழ்ந்த மேனி நிறைமதிப் பிள்ளை யாரும்
வேற்றுரு வருகர் நீரும் விரித்தவே டிடுகை வென்றூன்
ரூற்றவர் தோலா ரென்று முன்னுறத் துணிந்திட் டார்கள். (அகஉ)

படுபொரு ளின்றி செல்வப் பதடிபோ லுள்ளி லார்மெய்
யடுபவர் பொருளே யத்தி நாத்தியென் றெழுதி யாற்றிற்
கடுகிய புனலைக் கண்டு மவாவிலுற் கையி லேடு
விடுதலும் விரைந்து கொண்டு வேலைமேற் படர்ந்த தன்றே. (அகச)

ஆறுகொண் டோடு மேட்டைத் தொடர்ந்தெதி ரணைப்பார் போலத்
தேறுமெய் யுணர்வி லாதார் கரைமிசை யோடிச் சென்றூர்
பாறுமப் பொருண்மேற் கொண்ட பட்டிகை யெட்டா தங்கு
நூறுவிற் கிடைக்கு முன்னே போனது நோக்கிக் காணுர். (அகடி)

காணவு மெய்தா வண்ணங் கடலின்மேற் செல்லு மேடு
நாணிலா வமணர் தம்மை நட்டாற்றில் விட்டுப் போகச
சேணிடைச் சென்று நின்ருர் சிதறினுர் திகைத்தார் மன்ன
ஞணையில் வழுவ மாட்டா தஞ்சவா ரணைய மீண்டார். (அகசு)

வேறெரு செயலி லாதார் வெருவுற்று நடுங்கித் தம்பா
லீறுவந் தெய்திற் றென்றே மன்னவ னெதிர்வந் தெய்தி
யூறுடை நெஞ்சி லச்சம் வெளிப்பட வொளி பபார் போன்று
மாறுகொண் டூரு மிட்டால் வந்தது காண்டு மென்ருர். (அகள)

மாசுசே ரமண ரெல்லா மதியினின் மயங்கிக் கூற
வாசிலா நெறியிற் சேர்ந்த வரசனு மவரை விட்டுத்
தேசுடைப் பிள்ளையார்தந் திருக்குறிப் பதனை நோக்கப்
பாசுரம் பாட லுற்ருர் பரசம யகுகள் பாற. (அகஅ)

தென்னவன் மாறன் ருனுஞ் சிவபுரத் தலேவர் தீண்டிப்
பொன்னவில் கொன்றை யார்தந் திருநீறு பூசப் பெற்று
முன்னவல் வினேயு நீங்கி முதல்வனை யறியுந் தன்மை
தன்னிலுன் வினேக ளொத்துத் துலேயென நிற்ற லாலே. (அகக)

தே வு.

உலகியல் வேதநூ லொழுக்க மென்பது
நிலஞுமெய்ந் நெறிசிவ நெறிய தென்பதுங்
கலதிவா யமணர்காண் கிலார்க ளாயினும்
பலர்புகழ் தென்னவ னறியும் பான்மையால். (அஉ0)

அந்தணர் தேவரா னினங்கள் வாழ்கவென்
றிந்தமெய்ம் மொழிப்பய னுலக மின்புறச்
சந்தவேள் விகண்முதல் சங்கரர்க்கு மூன்
வந்தவர்ச் சனேவழி பாடு மன்னவாம். (அஉக)

தே வு.

வேள்வி நற்பயன் வீழ்புன லாவது
நாளு மர்ச்சனே நல்லுறப் பாதலா
லாளு மன்னனே வாழ்த்திய தர்ச்சனே
மூளு மற்றிவை காக்கு முறைமையால். (அஉஉ)

ஆழ்க தீயதென் றேதிற் றயனெறி
வீழ்க வென்று வேறெல்லா மான்பெயர்
சூழ்க வென்றது தொல்லுயிர் யாவையும்
வாழி யஞ்செழுத் தோதி வளர்கவே. (அஉஈ)

சொன்ன வையக முந்துயர் தீர்கவே
யென்னு நீர்மை யிகபரத் திற்றுயர்
மன்னி வாழுல கத்தவர் மாற்றிட
முன்னர் ஞானசம் பந்தர் மொழிந்தனர். (அஉசி)

அரிய காட்சிய ரென்பதவ் வாதியைத்
தெரிய லாநிலை யாற்றெரி யாரென
வுரிய வன்பினிற் காண்பவர்க் குண்மையாம்
பெரிய நல்லடை யாளங்கள பேசினர். (அஉடு)

ஆயி னும்பெரி யாரவ ரென்பது
மேய வேவியல் பேயன்றி விண்முதற்
பாய பூதங்கள் பல்லுயி ரண்டங்க
ளேயும் யாவு மிவர்வடி வென்றதாம். (அஉசு)

பின்பு மாரறி வாரவர் பெற்றியை
யென்ப தியாருணர் வாலுஞ்சென் றெட்டொணு
மன்பெ ருந்தன்மை யாரென வாழ்தலு
ரன்பு சூழசண்பை யாண்டகை யாரவர். (அஉஎ)

வெந்த சாம்பல் விரையென் பதுதம
தந்த மில்லொளி யல்லா வொளியெலாம்
வந்து வெந்தற மற்றப் பொடியணி
சந்த மாகொண்ட வண்ணமுஞ் சாற்றினர. (அஉஅ)

தமக்குத் தந்தையர் தாயில ரென்பது
மமைத்திங் கியாவையு மாகுகவை வீந்தபோ
திமைத்த சோதி யடக்கிப்பின் னீதலா
லெமக்கு நாதர் பிறப்பில ரென்றதாம். (அஉக)

தம்மையே சிந்தி யாவெனுந் தன்மைதான்
மெய்ம்மை யாகி விளங்கொளி தாமென
விம்மை யேனினை வார்தம் மிருவினைப்
பொய்ம்மை வல்லிருள் போக்குவ ரென்றதாம். (அஙo)

எந்தை யாரவ ரெவ்வகை யார்கொலென்
றிந்த வாய்மைமற் றெப்பொருட் கூற்றினு
முந்தை யோரையெக் கூற்றின் மொழிவதென்
றந்தண் பூந்தராய் வேந்த ரருளினர். (அஙக)

ஆதி யாட்பா லவர்க்கரு ளுந்திற
நாதன் மாட்சிமை கேட்க நவிலுங்கா
லோது மெல்லை யுலப்பில வாதலின்
யாது மாராய்ச்சி யில்லையா மென்பதாம். (அஙஉ)

அன்ன வாதலி லாதியார் தாளடைந்
தின்ன கேட்டவே யேற்றகோட் பாலவு
முன்னே வல்வினை யும்முடி வெய்துமத்
தன்மை யார்க்கென் றனர்சண்பை காவலர். (அகடக)

மன்னு மேதுக்க ளாலெனும் வாய்மைதான்
றன்ன தொப்புவே றின்மையிற் சங்கர
னின்ன தன்மையை யேது வெடுத்துக்காட்
டன்ன வற்ரு லளப்பில னென்றதாம். (அகடச)

தோன்று காட்சி சுடர்விட் டெனனென்ப
தான்ற வங்கிப் புறத்தொளி யாயன்பி
னூன்ற வுள்ளெழுஞ் சோதியாய் நின்றன
னேன்று காண்பார்க் கிதுபொரு ளென்றதாம். (அகடடு)

வே று.

மாதுக்க ணீங்க லுறுவீர் மனம்பற்று மென்ப
தாதிச் சுடர்ச்சோ தியையன்பி னகத்துள் ளாக்கிப்
போதித்த நோக்குற் ரெழியாமற் பொருந்தி வாழ்ந்து
பேதித்த பந்தப் பிறப்பின்னெறி பேர்மி னென்ரும். (அகடசு)

வே று.

ஈண்டு சாதுக்க ளென்றெடுத் தோதிற்று
வேண்டும் வேட்கைய வெல்லாம் வீமலர்தாள்
பூண்ட வன்பினிற் போற்றுவீர் சார்மினென்
ரூண்ட சண்பை யரச ரருளினூர். (அகடள)

வே று.

ஆடும் மெனவாங் திருப்பாட்டி னமைத்த மூன்று
நீடும் புகழோ பிறர்துன்ப நீத்தற்கோ வென்று
தேடு முணர்வீ ரருளுக்கிவை செய்த தீசர்
கூடுங் கருணைத் திறமென்றனர் கொள்கை மேலோர். (அகடஅ)

கருதுங் கடிசேர்ந்த வெனும்திருப் பாட்டி லீசர்
மருவும் பெரும்பூசை மறுத்தவர்க் கோறன் முத்தி
தருதன் மையதாதல் சண்டீசர் தஞ்செய்கை தக்கோர்
பெரிதுஞ் சொலக்கேட் டனமென்றனர் பிள்ளே யார்தாம். (அகடக)

வேத முதல்வ னெனும்மெய்த் திருப்பாட் டினினே
ராதி புலகோ நிடர்நீங்கிட வேத்த வாடும்
பாத முதலாம் பதினெண் புராணங்க ளென்றே
யோதென் றுரைசெய் தனர்யாவு மோதா துணர்ந்தோர். (அசo)

பாவுற்ற பாராழி வட்டத் திருப்பாட்டி னுண்மை
காவற் ரெழிலா னெனுங் கண்ணனுங் காவல்பெற்ற
தியாவர்க்கு மேலாய வீசனரு ளாழி பெற்று
மேவுற்ற சீரும் ததுவென்றனர் வேத வாயர். (அசக)

மாலா யவனென்ன வருந்திருப் பாட்டின் மாலுந்
தோலா மறைநான் முகனுந் தொடர்வா மமர
ரேலா வகைசுட்ட தஞ்சுண் டிறவாமைக் காத்த
மேலாங் கருணைத் திறம் வெற்குரு வேத்தர் வைத்தார். (அசஉ)

வே று.

ஆனவற் றன்றி யென்ற வத்திருப் பாட்டிற் கூடன்
மாகத ரத்துச் சங்கம் வைத்தவன் றேற்றத் தேரு
வீனர்க ளெல்லைக் கிட்ட வேடுகீ ரெதிர்ந்து செல்லில்
ஞானமீ சன்பா லன்பே யென்றனர் ஞான முண்டார். (அசஉ)

வே று.

* வெறியேர் பொழிற்சண் பையர்வேந்தர் மெய்ப்பா சுரத்தைக்
குறியே றியவெல்லை யறிந்துகும் பிட்டே னல்லேன்
சிறியே னறிவுக் கவர்தந்திருப பாதந் தந்த
நெறியே சிறிதியா னறிநீர்மைகும் பிட்டே னன்பால். (அசச)

அலரும் விரைசூழ் பொழிற்காழியு ளாதி ஞான
மலருந் திருவாக் குடைவள்ளலா ருள்ள வண்ணம்
பலரு முணர்ந்துய்யப் பகர்ந்து வரைந்தி யாற்றி
னிலவுந் திருவேடு திருக்கையா னீட்டி யிட்டார். (அசடு)

வே று.

திருவுடைப் பிள்ளே யார்தந் திருக்கையா லிட்ட வேடு
மருவிய பிறவி யாற்றின் மாதவர் மனஞ்சென் முற்போற்
பொருபுனல் வைகை யாற்றி லெதிர்த்துநீர் கிழித்துப் போகு
மிருநிலத் தோர்கட் கெல்லா மிதுபொரு ளென்று காட்டி. (அசக)

எம்பிரான் சிவனே யெல்லாப் பொருளுமென் றெழுது மேட்டிற்
றம்பிரா னருளால் வேத்தன் றன்னே முன் னேங்கபபாட
வம்புய மலராள் மார்ப னகபாய னென்னுஞ் சீர்த்திச
செம்பியன் செங்கோ லென்னத் தென்னன்கூ னிமிர்ந்த தன்றே. (அசஎ)

எடுகீ ரெதிர்ந்து செல்லும் பொழுதிமை யோர்க ளெல்லா
நீடிய வாழ்த்திற் போற்றி நியிர்ந்தபூ மாரி தூர்த்தா
ராடியல் யானை மன்ன னற்புத மெய்தி நின்றுன்
பாடுசே ரமணரஞ்சிப் பதைப்புடன் பணிந்து நின்றார். (அசஅ)

ஆற்றின்மேற் செல்லு மேடு தொடர்ந்தெடுப் பதற்கு வேண்டிக்
காற்றென வீசையிற் செல்லுங் கடும்பரி யேறிக் கொண்டு
கோற்றொழி றிருத்த வல்ல குலச்சிறை யார்பின் சென்று
சேற்றுயர் கொடியி ஞரைப் பாடிஞ ரேடு தங்க. (அசக)

ஏடகம் பிள்ளே யார்தாம் வன்னியென் றெடுத்துப் பாடக்
கூடிய சீரி லேடு குலச்சிறை யாருங் கூடிக்
காடிட மாக வாடுங் கண்ணுதல் கோயின் மாடு
நீடுநீர் நடுவுட் புக்கு நின்றவே டெடுத்துக் கொண்டார். (அஙo)

தலேயிசை வைத்துக் கொண்டு தாங்கரு மகிழ்ச்சி பொங்க
வலேபுனற் கரையி லேறி யங்கினி தமர்ந்த மேருச்
சிலேயுடை யவர்தாள் போற்றி மீண்டுசென் றணேவார் தெய்வ
மலேமகள் குழைத்த ஞான முண்டவர் தம்பால் வந்தார். (அஙக)

* இச்செய்யுள் சிலபிரதிகளிலில்லே.

மற்றவர் பிள்ளை யார்தம் மலரடி வணங்கிப் போற்றிக்
கொற்றவன் முதலா யுள்ளோர் காணமுன் கொணர்ந்த வேடு
பற்றிய கையி லேந்திப் பண்பிழ லியார்க்குங் காட்ட
வற்றருள் பெற்ற தொண்ட ரரவொலி யெழுந்த தன்றே. (அடுஉ)

மன்னவன் மாறன் கண்டு மந்திரி யாரை நோக்கித்
துன்னிய வாதி லொட்டித் தோற்றவிச் சமணர் தாங்கண்
முன்னமே பிள்ளை யார்பா லநுசித முற்றச் செய்தார்
கொன்னுனைக் கழுவி லேற்றி முறைசெய்க வென்று கூற. (அடுஊ)

புகலியில் வந்த ஞானப் புங்கவ ரதனைக் கேட்டு
மிகலில ரெனினுஞ் சைவ நிருந்துவாழ் மடத்திற் றீங்கு
தகவிலாச் சமணர் செய்த தன்மையாற் சாலு மென்றே
மிகையிலா வேந்தன் செய்கை விலக்கிடா திருந்த வேலை. (அடுசு)

பண்புடை யமைச்ச ரரும் பாருளோ ரறியு மாற்ரூற்
கண்புடை பட்டு நீண்ட கழுத்தறி நிரையி லேற்ற
ரண்புடை ஞான மூண்டார் மடத்துத்தீ நாடி யிட்ட
வெண் பெருங் குன்றத் தெண்ணி யிரவரு மேறினர்கள். (அடுடு)

தோற்றவர் கழுவி லேறித் தோற்றிடத் தோற்றுந் தம்ப
மாற்றிடை யமண ரோலை யழிவினு லார்ந்த தம்பம்
வேற்ரெரு தெய்வ மின்மை விளக்கிய பதாகைத் தம்பம்
போற்றுசீர்ப் பிள்ளை யார்தம் புகழ்ச்சயத் தம்ப மாகும். (அடுசு)

தென்னவன் றனக்கு நீறு சிரபுரச் செல்வ ரீந்தார்
முன்னவன் பணிந்து கொண்டு முழுவது மணிந்து நின்ரூன்
மன்னனீ றணிந்தா னென்று மற்றவன் மதுரை வாழ்வார்
துன்னிநின் ரூர்க ளெல்லாந் தாயீ றணிந்து கொண்டார். (அடுஎ)

பூதிமெய்க் கணிந்து வேந்தன் புனிதனு யுய்ந்த போது
நீதியும் வேத நீதி யாகியே நிகழ்ந்த தெங்கு
மேதினி புனித மாக வெண்ணீற்றின் விரிந்த சோதி
மாதிரந் தாய்மை செய்ய வமணிருண் மாய்ந்த தன்றே. (அடுஅ)

மீனவற் குயிரை நல்கி மெய்க்நெறி காட்டி மிக்க
ஞானமாஞ் சமணே நீக்கி யுலகெலா முய்யக் கொண்ட
ஞானசம் பந்தர் வாய்மை ஞாலத்திற் பெருகி யோங்கத்
தேனலர் கொன்றை யார்தந் திருநெறி நடந்த தன்றே. (அடுஈ)

மறையவர் வேள்வி செய்ய வானவர் மாரி நல்க
விறைவனன் னெறியி னேங்க விகத்தினி லவனி யின்பங்
குறைவில தெனினுங் கூற்றை யுதைத்தவர் நாமங் கூறி
நிறைகடற் பிறவித் துன்ப நீங்கிடப் பெற்ற தன்றே. (அஈ0)

அங்கயற் கண்ணி தன்னை டாலவா யமர்ந்த வண்ணல்
பங்கயச் செய்ய பாதம் பணிவனென் றெழுந்து சென்று
பொங்கொளிச் சிவிகை யேறிப் புகலியர் வேந்தர் போந்தார்
மங்கையர்க் கரசி யாரு மன்னனும் போற்றி வந்தார். (அஈஅ)

எண்ணரும் பெருமைத் தொண்டர் யாவரு மகிழ்ச்சி யெய்திப்
புண்ணியப் பிள்ளை யாரைப் புகழ்ந்துடன் போற்றிப் போத
மண்ணெலா முய்ய வந்த வள்ளலார் தம்மைக் கண்டு
கண்ணினுற் பயன்கொண் டார்கள் கன்னிநாட் டவர்க ளெல்லாம். (அசுஉ)

ஆலவா யண்ணல் கோயி லங்கண்முன் ரேன்றக் கண்டு
பாலரு வாயர் மிக்க பண்பினுற் ரெழுது சென்று
மாலுநான் முகனும் போற்ற மன்னினூர் கோயில் வாயிற்
சீலமா தவத்தோர் முன்பு சிவிகைநின் றிழிந்து புக்கார். (அசுஊ)

தென்னவன் ரூனு மெங்கள் செம்பியன் மகளார் தாமு
நன்னெறி யமைச்ச ஞரு ஞானசம் பந்தர் செய்ய
பொன்னடிக் கமலம் போற்றி யுடன்புகப் புனிதர் கோயி
றன்னைமுன் வலங்கொண் டுள்ளாற் சண்பையர் தலைவர் புக்கார். (அசுசு)

கைகளுந் தலைமீ தேறக் கண்ணிலா னந்த வெள்ள
மெய்யெலாம் பொழிய வேத முதல்வரைப் பணிந்து போற்றி
யையனே யடிய னேனே யஞ்சலென் றருள வல்ல
மெய்யனே யென்று வீட லாலவாய் விளம்ப லுற்றூர். (அசுஎ)

ஒன்றுவே றுணர்வு மில்லே னெழிவற நிறைந்த கோல
மன்றினுன் மறைக ளேத்த மானுட ரூய வேண்டி
நின்றுநீ யாடல் செய்கை நினைப்பதே நியம மாரு
மென்றுபூம் புகலி மன்ன ரின்றமிழ்ப் பதிகம் பாட. (அசுசு)

தென்னவன் பணிந்து நின்று திருவால வாயின் மேவு
மன்னனே யமணர் தங்கண் மாயையான் மயங்கி யாது
மூன்னையா னறிந்தி லேனை யுறுபிணி தீர்த்தாட் கொள்ள
வின்னருட் பிள்ளை யாரைத் தந்தனை யிறைவ வென்ரூன். (அசுஏ)

சீருடைப் பிள்ளை யாருஞ் சிறப்புடை யடியா ரோடுங்
காரினிற் பொலிந்த கண்டத் திறைவர்தாள் வணங்கிக் காத
லாரரூள் பெற்றுப் போற்றி யங்குநின் றரிது நீங்கி
யேரியன் மடத்தி லுள்ளா லினிதெழுந் தருளிப் புக்கார். (அசுஅ)

நீடுசீர்த் தென்னர் கோனு நேரியன் பாவை யாரு
மாடுசென் றிறைஞ்ச நோக்கி மாளிகை தன்னிற் போக்கிக்
கூடிய மகிழ்ச்சி பொங்கக் கும்பிடும் விருப்பி னுலே
நாடியங் கிருந்து தங்க ணுதலைப் பரவ லுற்றூர். (அசுக)

திருவிய மகத்தி னுள்ளுந் திருநீல கண்டப் பாணர்க்
கருளிய திறமும் போற்றி யவரொடு மளவ ளாவித்
தெருளுடைத் தொண்டர் சூழத் திருத்தொண்டி னுண்மை நோக்கி
யிருள்கெட மண்ணில் வந்தா ரினிதமர்ந் திருந்தா ரன்றே. (அஎ0)

பூழியன் மதுரை யுள்ளார் புறத்துள்ளா ரமணர் சேரும்
பாழியு மருகன் மேவும் பள்ளியு மான வெல்லாங்
கிழுறப் பறித்துப் போக்கிக் கிளரொளித் தூய்மை செய்தே
வாழியப் பதிக ளெல்லா மங்கலம் பொலியச் செய்தார். (அஎக)

மீனவன் றேவி யாருங் குலச்சிறை யாரு மிக்க
ஞானசம் பந்தர் பாத நாடொறும் பணிந்து போற்ற
வானசண் பையர்கோ னரு மாலவா யமர்ந்தார் பாத
மூணமர்ந் தருக வேத்தி யுளங்களித் துறையு நாளில். (அஎஉ)

வே று.

செய்தவத்தாற் சிவபாத வீருதயர்தாம் பெற்றெடுத்த
வைதிகரு ளாமணியை மாதவத்தோர் பெருவாழ்வை
மைதிகழுந் திருமிடற்ற ரருள்பெற்ற வான்பொருளை
யெய்தியபூம் புகலியிலே யிருந்தநாண் மிகநினைந்தார். (அஎங)

ஆனபுகழ்த் திருநாவுக் கரசர்பா லவஞ்செய்த
மானமிலா வமணருடன் வாதுசெய்து வெல்வதற்கு
மீனவன்ற னுடைய வெண்ணீறு பெருக்குதற்கும்
போனவர்பாற் புகுந்தபடி யறிவனெனப் புறப்படுவார். (அஎச)

துடியிடையா டன்னெடுந் தோணியில்வீற் றிருந்தபிரா
னடிவணங்கி யலர்சண்பை யதனின்றும் வழிக்கொண்டு
படியின்மிசை மிக்குளவாம் பரன்கோயில் பணிந்தேத்தி
வடிநெடுவேன் மீனவன்றன் வளநாடு வந்தணைவார். (அஎஙி)

மாமறையோர் வளம்பதிக ளிடைத்தங்கி வழிச்செல்வார்
தேமருவு நறும்பைந்தார்த் தென்னவன்றன் றிருமதுரை
தாமணைந்து திருவால வாயமர்ந்த தனிநாதன்
பூமருவுஞ் சேவடிக்கீழ்ப் புக்கார்வத் தொடும்பணிந்தார். (அஎசு)

அங்கணரைப் பணிந்துபோந் தருகணைந்தார் தமைவினவ
விங்கெம்மைக் கண்விடுத்த காழியா ரிளவேறு
தங்குமிடந் திருநீற்றுத் தொண்டர்குழாஞ் சாருமிடஞ்
செங்கமலத் திருமடமற் றிதுவென்றே தெரிந்துரைத்தார். (அஎஎ)

செப்புதலு மதுகேட்டித் திருமடத்தைச் சென்றெய்த
வப்பரெழுந் தருளினு ரெனக்கண்டோ ரடிவணங்கி
யொப்பில்புகழ்ப் பிள்ளையார் தமக்கோகை யுரைசெய்ய
வெப்பொழுது வந்தருளிற் றென்றெதிரே யெழுந்தருள. (அஎஅ)

சிவபாத வீருதயர்தா முன்னெழுது சென்றணையத்
தவமான நெறியணையுந் தாதையா ரெதிர்தொழுவா
ரவர்சார்வு கண்டருளித் திருத்தோணி யமர்ந்தருளிப்
பவபாச மறுத்தவர்தம் பாதங்க ணினைவுற்றார். (அஎக)

இருந்தவத்தோ ரவர்முன்னே யிணைமலர்க்கை குவித்தருளி
யருந்தவத்தீ ரெனையறியாப் பருவத்தே யெடுத்தாண்ட
பெருந்தகையெம் பெருமாட்டி புடனிருந்த தேயென்று
பொருந்துபுகழ்ப் புகலியின்மேற் றிருப்பதிகம் போற்றிசைத்தார். (அஅ0)

மண்ணினல்ல வென்றெடுத்து மனத்தெழுந்த பெருமகிழ்ச்சி
புண்ணிறைந்த காதலினற் கண்ணருவி பாய்ந்தொழுக
வண்ணலார் தமைவினவித் திருப்பதிக மருள்செய்தார்
தண்ணறும்பூஞ் செங்கமலத் தாரணிந்த தமிழ்விரகர். (அஅக)

திருப்பதிகந் திருக்கடைக்காப் புச்சாத்திச் சிறப்பின்மிகு
விருப்பிஞ லவர்தமக்கு விருந்தளித்து மேவுநா
ளருப்புமுலைமெய்க் காதல்புரி யடியவர்க டம்மோடும்
பொருப்புறுகைச் சிலையார்சேர் பதிபிறவுந் தொழப்போவார். (அஅஉ)

ஆலின்கீழ் நால்வர்க்கன் றறமுரைத்த வங்கணனே
நூலின்கட் பொருள்பாடி நூலறிவார்க் கீந்தானேக்
காலம்பெற் றினிதிறைஞ்சிக் கைதொழுது புறம்போந்தார்
சீலங்கொ டென்னவனுந் தேவியரு மூடன்போத. (அஅஊ)

வே று.

தேனிலவு பொழின் மதுரைப் புறத்துப் போந்த தென்னவனுர் தேவியா ரமைச் சர் சிந்தை, யூனெகிழும் படியழிந்தங் கொழுகு கண்ணீர் பாய்ந்திழிய வுணர்வின்றி வீழக் கண்டே, யானும்மைப் பிரியாத வண்ண மிங்காட் டிறைவர்பதி யெனேப்பலவும் பணிவீ ரென்று, ஞானமுணர் வாரருள வவரும் போத நம்பர்திருப் பரங்குன்றை நண்ணி னுரே. (அஅசு)

ஆறணிந்தார் தமைவணங்கி யங்குப் போற்றி யணியாப்ப னூரணைந்து பணிந்து பாடி, நீறணிந்த செல்வர்பதி பிறவுஞ் சேர்ந்து நிலவுதிருப் பதிகங்க ணிகழப் பாடிச், சேறணிந்த வயற்பழனக் கழனிசூழ்ந்த சிரபுரத்து வந்தருளுஞ் செல்வர் செங்க,ணேற ணிந்த வெல்கொடியார் திருப்புத் தூரை யெய்தியிறைஞ் சிசிலநா ளிருந்தா ரன்றே.

பற்றார்தம் புரங்கண்மலைச் சிலையாற் செற்ற பரமனுர் திருப்புத்தூர் பணிந்து போந்து, புற்றரும் பணிபூண்ட புனித னுர்தம் பூவணத்தைப் புக்கிறைஞ்சிப் புகழ்ந்து பாடிக், கற்றார்க டொழுதேத்துங் கானப்பேருங் கைதொழுது தமிழ்பாடிச் சுழியல் போற்றிக், குற்றாலங் குறும்பலாக் கும்பிட் டேத்திக் கூற்றுதைத்தார் செல்வேலி குறுகி னுரே. (அஅசு)

புண்ணியனுர் செல்வேலி பணிந்து போற்றிப் புரிசடையார் திருப்பதிகள் பிற வுஞ் சென்று, நண்ணியினி தமர்ந்தங்கு நயந்து பாடி நற்றிருண்ட ருடனுளும் போற் றிச் செல்வார், விண்ணவரைச் செற்றுகந்தா னிலங்கை செற்ற பிக்கபெரும் பாதக த்தை நீக்க வேண்டிச், திண்ணியபொற் சிலைத்தடக்கை யிராமன் செய்த திருவிரா மேச்சரத்தைச் சென்று சேர்ந்தார். (அஅள)

செங்கண்மால் வழிபட்ட கோயி னண்ணித் திருமுன்பு தாழ்ந்தெழுந்து தென்ன னுேடு, மங்கையர்க்கு நாயகியார் தாமு மெய்ம்மை மந்திரியா ருஞ்சூழ மணிநீள் வாயிற், பொங்கியெழும் விருப்பிஞ லுடனே புக்குப் புடைவலங்கொண் டுள்ளணை வார் போற்றி செய்து, பங்கயச்செங் கைகுவித்துப் பணிந்து நின்று பாடினுர் மன்ன வனும் பரவி யேத்த. (அஅஅ)

சேதுவின்கட் செங்கண்மால் பூசை செய்த சிவபெருமான் றனேப்பாடிப் பணி ந்து போந்து, காதலுட னங்ஙகரி லினித மேவிக் கண்ணுதலான் றிருத்தொண்ட ராஞ ர்க் செல்லாங், கோதில்புகழ்ப் பாண்டிமா தேவி யார்மெய்க் குலச்சிறையார் குறை வறுத்துப் போற்றிச் செல்ல, நாதர்தமை நாடோறும் வணங்கி யேத்தி நளிர்வேலக் கரையினயந் திருந்தா ரன்றே. (அஅக)

அங்ஙகரி லமர்ந்தங்க ணினிது மேவி யாழிபுடை சூழ்ந்தொலிக்கு மீழத் தன் னின், மன்னுதிருக் கோணமலே மகிழ்ந்த செங்கண் மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப் பாடிச், சென்னிமதி புனேமாட மாதோட்டத்திற் றிருக்கேதீச் சரத்தண்

ணல் செய்ய பாத, முன்னியிகப் பணிந்தேத்தி யன்ப ரோடு மூலவாத கிழிபெற்ரு ருவகை புற்ரூர். (அகூ0)

அப்பதியைத் தொழுதுவட திசைமேற் செல்வா ரங்கையன நரித்தபிரா னமருங் கோயில், புக்கிறைஞ்சிப் பலபதியுந் தொழுது போற்றிப் புணரிபொரு தலைகரைவா யொழியப் போக்தே, செப்பரிய புகழ்த்திருவா டானை சேர்ந்து செந்தமிழ்மா லைகள் சாத்திச் சிவனூர் மன்னு, மொப்பரிய புனவாயில் போற்றி செய்து வணங்கினு ருலகு ய்ய ஞான முண்டார். (அகூக)

பதிகிலவு பாண்டிநா டதனின் முக்கட் பரமனூர் மகிழ்விடங்கள் பலவும் போற்றி விதிகிலவு வேதநூ னெறியே யாக்கி வெண்ணீற்றின் சார்வினுன் மிக்குயர்ந்த கதியருளிக் காழிநகர் வாழவந்தார் கண்ணுதலான் றிருத்தொண்டர் பலருஞ் சூழ மதிகிலவு குலவேந்தன் போற்றிச் செல்ல மந்திரியார் பதிமணமேற் குடியில் வந்தார்.

அங்கரி லினிதமர்வா ரருகு சூழ்ந்த பதிகளினீ டங்கணர்தங் கோயி றழுந்து, மன்னுதிருத் தொண்டருடன் மீண்டு சேர்ந்து மன்னவனு மங்கையருக் கரசி யாருங், கொன்னவில்வேற் குலச்சிறையார் தாமுங் கூடிக் குரைகழல்கள் பணிந்துகுறை கொண்டு போற்றச், சென்னிவளர் மதியணிந்தார் பாதம் போற்றிச் சிரபுரத்துச் செல் வரினி திருந்த காளில். (அகூட)

பொங்குபுனற் காவிரிநா டதனின் மீண்டு போதுதற்குத் திருவுள்ள மாகப் போற்று மங்கையருக் கரசியார் தாமுந் தென்னர் மன்னவனு மந்திரியார் தாமுங் கூட வங்கவர்தந் திருப்பாதம் பிரிய லாற்ரு தடன்போக வொருப்படுமவ் வளவு நோக்கி யிங்குரான் மொழிந்ததனுக் கிசைந்தீ ராகி லீசர்செல நெறிபோற்றி யிருப்பீ ரென்று. ()

சாலமிகத் தளர்வாரைத் தளரா வண்ணந் தருவனமற் றவர்க்கருளிச் செய்த பின்பு, மேலவர்தம் பணிமறுக்க வவரு மஞ்சி மீள்வதனுக் கிசைந்துதிரு வடியில் வீழ்ந் து, ஞாலமுய்ய வந்தருளும் பிள்ளே யாரைப் பிரியாத நண்பினெடுந்தொழுது நின்ரு, ராலவிட முண்ட வரையடிகள் போற்ற வந்நாட்டை யகன்றுமீண் டணையச் செல்வார்.

பொன்னிவளந் தருநாடு புக்கு மிக்க பொருவில்சீர்த் திருத்தொண்டர் குழாத்தி னேடும், பன்னகப்பூ ணணிந்தவர்தங் கோயி றேறும் பத்தருடன் பதியுள்ளோர் போற்றச் சென்று, கன்னிமதிற் றிருக்களரும் போற்றிக் கண்டங் கறையணிந்தார் பாதாளீச் சரமும் பாடி, முன்னணைந்த பதிபிறவும் பணிந்து போற்றி முள்ளிவாய்க் கரையணைந்தார் முந்நான் மார்பர். (அகூசு)

மலேவளர்சந் தனமகிலுந் தேக்கு முந்தி மலர்ப்பிறங்கல் வண்டிரைப்பச் சுமந்து பொங்கி, யலேபெருகி யாளியங்கா வண்ண மாறு பெருகுதலா லத்துறையி லணேயு மோட, நிலேபுரிபு மோடக்கோ னிலேயி லாமை நீர்வாழ்நர் கரையின்க ணிறுத்திப் போகக், கலேபயிலுய் கவுணியர்கோ னதனைக் கண்டக் கரையின்க ணெழுந்தருளி நின்ற காலே. (அகூஎ)

தேவர்பிரா னமர்ந்தநிருக் கொள்ளம் பூதூ ரெதிர்தோன்றத் திருவுள்ளம் பணி யச் சென்று, மேவுதலா லோடங்கள் விடுவா ரின்றி யொழிந்திடவு மிக்கதோர் விரை வாற் சண்பை,காவலனு ரோடத்தின் கட்டவிழ்த்துக் கண்ணுதலான் றிருத்தொண்டர்

தம்மை யேற்றி, நாவலமே கோலாக வதன்மே னின்று நம்பர்தமைக் கொட்டமே கவின்று பாட. (அகஅ)

உம்பருய்ய நஞ்சுண்டா ரருளா லோடஞ் செலச்செல்ல வுந்துதலா லூடுசென்று, செம்பொனேர் சடையார்தங் கொள்ளம் பூனார் தனைச்சேர வக்கரையிற் சேர்ந்த பின்பு, நம்பரவர் தமைவணங்கி ஞான முண்ட பிள்ளையார் நற்றொண்ட ருடனி ழிந்து, வம்பலரு நறுங்கொன்றை நயந்தார் கோயில் வாயிலின்முன் மகிழ்ச்சியொடு வந்து சார்ந்தார். (அகக)

நீணிலக்கோ புரமதனே யிறைஞ்சிப் புக்கு நிகரிலாத் தொண்டருட னெருங்கச் சென்று, வாணிலவு கோயிலினே வலங்கொண் டெய்தி மதிச்சடையார் திருமுன்பு வணங்கி நின்று, தாணுவே யாற்றின்கண் ணுடை முய்க்குந் தன்மையா லருடந்த தலேவா நாகப், பூணினுய் களிற்றுரிவை போர்த்த முக்கட் புனிதனே யெனப்பணிந்து போற்றி செய்தார். (கஇ)

போற்றிசைத்துப் புறம்போந்தங் குறையு நாளிற் பூழியன்முன் புன்சமயத் தமணர் தம்மோ, டேற்றபெரு வாதின்க ணெரியின் வேவாப் பதிகமுடை யிறைய வரை யிறைஞ்ச வேண்டி, யாற்றவுமங் கருள்பெற்றுப் போந்து முன்ன மணிந்தபதி களுமிறைஞ்சி யன்பர் சூழ, நாற்றிசையும் பரவுதிரு நள்ளா றெய்தி நாடுடைநா யகர் கோயி னண்ணி ஞரே. (கஉ)

நீடுதிருத் தொண்டர்புடை சூழ வங்க ணித்திலயா னத்திடைநின் றிழிந்து சென்று, பீடுடைய திருவாயில் பணிந்து புக்குப் பிறையணிந்த சென்னியார் மன்னுங் கோயின், மாடுவலங் கொண்டிள்ளான் மகிழ்ந்து புக்கு மலர்க்கரங்கள் குவித்திறை ஞ்சி வள்ள லாரைப், பாடகமெல் லடியெடுத்துப் பாடி நின்று பரவினர் கண்ணருவி பரந்து பாய. (கஎ)

தென்னவர்கோன் முன்னமணர் செய்த வாதிற் றீயின்க ணிடுமேடு பச்சை யாக்கி, யென்னுள்ளத் துணேயாகி யால வாயி லமர்ந்திருந்த வாறென்கொ லெந்தா யென்று, பன்னுதமிழ்த் தொடைசாத்திப் பரவிப் போந்து பண்பினிய தொண்டருட னங்கு வைகி, மன்னுபுகழ்ப் பதிபிறவும் வணங்கச் சண்பை வள்ளலார் நள்ளாறு வணங்கிச் செல்வார். (கஏ)

சீர்நிலவு திருத்தெளிச்சே ரியினைச் சேர்ந்து சிவபெருமான் றனைப்பரவிச் செல்லும் போது, சார்வறியாச் சாக்கியர்தம் போதி மய்கை சார்தலுமற் றதுவறிந்த சைவ ரெல்லா, மார்கலியின் கிளர்ச்சியெனச் சங்கு தாரை யளவிறந்த பல்லியங்கண் முழக்கி யார்த்துப், பார்குலவு தனிக்காளஞ் சின்ன மெல்லாம் பரசமய கோளரிவந் தானென் றூத. (கஐ)

புல்லறிவிற் சாக்கியர்க ளறிந்தார் கூடிப் புகலியர்தம் புரவலனூர் புகுந்து தங்க, ளெல்லையினி லெழுந்தருளும் பொழுது தொண்ட ரெடுத்தவார்ப் பொலியாலு மெதிர்முன் சென்று, மல்கியெழுந் திருச்சின்ன வொலிக ளாலு மனங்கொண்ட பொருமை யினுன் மருண்டு தங்கள், கல்வியினின் மேம்பட்ட புத்த நந்தி முதலான தேரர்க்குங் கனன்று சொன்னர். (கஒ)

மற்றவர்கள் வெவ்வுரையும் பிள்ளை யார்முன் வருசின்னப் பெருகொலியு மன்னுந் தொண்டர், பொற்புடைய வார்ப்பொலியுஞ் செவியி னூடு புடைத்தகா ராசமெனப் புக்க போது, செற்றமிகு முள்ளத்துப் புத்த நந்தி செயிர்த் தெழுந்து தேரர்கு ழாஞ் சூழச் சென்று, வெற்றிபுனை சின்னங்கள் வாதி லெம்மை வென்றன்றே பிடிப்ப தென வெகுண்டு சொன்னன். (கஓ)

புத்தரினது புடைசூழப் புத்த நந்தி பொருவின்ஞா னப்புனிதர் திருமுன் பூத, மெய்த்தவிறற் சின்னங்கள் விலக்குங் காலே வெகுண்டெழுந்த திருத்தொண்டர் வெறுத்து நோக்கி, யித்தகைய செயற்கிவரைத் தடிதல் செய்யா திதுபொறுக்கிற் றங்களிலே யேற்ப ரென்று, முத்தநிறைச் சிவிகையின் மேன் மணியை வந்து முறைபணிந்து புகுந்தபடி மொழிந்து நின்றார். (கூ0எ)

வருமிடத்தி லழகிதா நமக்கு வாதின் மற்றிவர்தம் பொருணிலைமை மறுத வண்ணம், பொருமிடத்தி லறிகின்றேம் புத்த நந்தி பொய்ம்மேற்கோ ளெனப்புகலி வேந்தர் கூற, வருமறைச்சொற் றிருப்பதிக மெழுது மன்ப ராளுடைய பிள்ளையார் திருவாக் காலே, யுருமிடித்து விழப்புத்த னுத்த மாங்க முருண்டுவீழ் கெனப்பொரு வுரைமுன் விட்டார். (கூ0அ)

ஏறுயர்த்தார் சைவநெறி யாணை யுய்க்க வெதிர்விலக்கு மிடையூற்றை யெறிந்து நீக்கு, மாறில்வலி மந்திரமா மசனி போல வாய்மையுரைத் திருத்தொண்டர் வாக்கினாலே, வேறுமொழிப் போரேற்பான் வந்த புத்தன் மேனியையும் தலையினையும் வெவ்வே றுகக், கூறுபட நூறியிடப் புத்தர் கூட்டங் குலைந்தோடி வீழ்ந்துவெருக் கொண்ட தன்றே. (கூ0க)

மற்றவர்க ணிலைமையையும் புத்த நந்தி வாக்கின்போ ரேற்றவன்றன் றலையு மெய்பு, மற்றுவிழ வத்திரவாக் கதனு லன்ப ரறுத்ததுவுங் கண்டவர னடியா ரெல்லாம், வெற்றிதரும் பிள்ளையார் தமக்குச் சென்று விண்ணப்பஞ் செயவெதிர்ந்த விலக்கு நீங்க, வுற்றவிதி யதுவேயா மரவென் றெல்லா மோதுகென வவ்வொலிவா னுற்ற தன்றே. (கூக0

அஞ்சியகன் றோடியவப் புத்த ரெல்லா மதிசயித்து மீண்டுமுட னணைந்து கூடி, வஞ்சனையோ விதுதான்மற் றவாதஞ் சைவ வாய்மையோ வெனமருண்டு மனத்திற் கொள்வா, ரெஞ்சலின்மந் திரவாத மன்றி யெம்மோ டெதிர்ந்துபொருள் பேசுவதற் கிசைவ தென்று, தஞ்செயலின் பிக்குள்ள சாரிபுத்தன் றன்னையே முன்கொண்டு பின்னுஞ் சார்ந்தார். (கூகக)

அத்தன்மை கேட்டருளிச் சண்பை வந்த வடலேறு திருவுள்ளத் தழகி தென்று, மெத்தமகிழ்ச் சியினேடும் விரைந்து சென்று வெண்டரளச சிவிகையினின் றிழிந்து வேரோர், சத்திரமண் டபத்தின்மிசை யேறி நீடு சைவருட னெழுந்தருளி யிருந்து சாரும், புத்தர்களே யழைக்கவெனத் திருமுன் னின்ரூர் புகலிகா வலரேவல் போற்றிச் சென்ரூர். (கூகஉ)

சென்றவர்க டேரர்குழா மீண்ந்து நீங்கள் செப்பிவரும் பொருணிலைமை தெரிக்க வெங்கள், வென்றிமழ விளங்களிறு சண்பை யாளி வேதபா ரகன்மும்மைத் தமிழின் வேந்த, னன்றுமகிழ்ந் தழைக்கின்ரு னீண்ட நீரு ணண்ணுமெனக் கூறுதலு நன்மை சாரா, தன்றகைமைப் புத்தருடன் சாரி புத்தன் சத்திரமண் டபமுன்பு சார வந்தான். (கூகந)

அங்கணைந்து மண்டபத்துப் புத்த ரோடும் பிள்ளையா ரருகணைய நின்ற போதி, லெங்குநிகழ் திருச்சின்னங் தடுத்த புத்த னிருஞ்சித்தைப் பொடியாக்கு, மெதிரி லன்பர், பொங்குபுகழ்ப் புகலிகா வலர்தம் பாதம் போற்றியரு ளாற்சாரி புத்தன் றன்னை, புங்கடலே வணும்பொருளு முரைக்க வென்ன வுற்றவா தினைமேற்கொண் டுரைசெய் கின்ரான். (கூகச)

கற்பங்க ளனேத்தினிலும் பிறந்து வீந்து கதிமாறுங் கணபங்க வியல்பு தன்னிற், பொற்புடைய தானமே தவமே நன்மை புரிந்தநிலே யோகமே பொருந்தச் செய்ய, வுற்பவிக்கு மொழிவின்றி யுரைத்த ஞானத் தொழியாத பேரின்ப முத்தி பெற்ருன், பற்பலரும் பிழைத்துய்ய வறமுன் சொன்ன பான்மையான் யாங்களொழும் பரம னென்ருன். (கசஞ)

என்றுரைத்த சாரிபுத்த னெதிர்வந் தேற்ற விருந்தவத்துப் பெருந்தன்மை யன் பர் தாமு, நன்றுமது தலேவன்ருன் பெற்ரு னென்று ஈட்டுகின்ற முத்திதான் யாவ தென்ருர், நின்றவுரு வேதனேயே குறிபபுச் செய்கை நேர்நின்ற ஞானமென நிக ழ்ந்த வைந்து, மொன்றியகந் தத்தவிவே முத்தி யென்ன வுரைசெய்தான் பிடகத்தி னுணர்வு மிக்கான். (கசசு)

ஆங்கவன்ரு னுரைத்தமொழி கேட்ட வன்ப ரதனேயனு வாதஞ்செய் தவனே நோக்கித், தாங்கியஞர னததுடனுங் கந்த மைந்துந் தாம் வீந்து கெட்டனவேற் றலே வன் ருனு, மீங்குளமென் றவனுக்கு விடயமாக யாவையுமு னியற்று தற்கு விகாரமே செய், தோங்குவடி வமைத்துவிழ வெடுக்கும் பூசை கொள்வாரா ருரைக்கவென வுரைக்க லுற்ருன். (கசள)

கந்தமாம் வினையுடம்பு நீங்கி யெங்கோன் கலந்துளன்முத் தியிலென்ரு னென் னைக் காணு, மிந்தியங்கண் முதலான கரணந தானு மில்லேயே லவருணர்சதி யில்லே யென்ருர், முந்தையறி விலஞகி யுறஙகி ஞனே நிகழ்த்து மொழிக் துடன்மீ தாடினர் க்கு, வந்தவினேப பயன்போல வழிபட் டாககும் வருமன்ரே ரன்மையென மறுத் துசு சொன்ஞன். (கசஅ)

சொன்னவுரை கேட்டருளி யன்பர் தாமும் தொடர்ந்தவழி பாடு பல கொன்கின் ருனுக், கன்னவற்றி னுடன்பாடு மெதிரு மில்லே யானபோ தவன்பெறுத லில்லே யென்ருர், முன்னவற்றி னுடன்பாடு மெதிர்வுமின்றி முறருகுயி லுற்ருனே முனிந்து கொன்ரு, லின்னுயிர்போய்க கொலேயாகி முடிந்த தன்ரே விப்படியா லெம்பிறைவற் கெய்து மென்ருன். (கசக)

இப்படியா லெய்துமென வினைத்து நீயிங கெடுத்துக்காட் டியதுயிலு மியல்பி ஞன்போன், மெய்ப்படிய கரணஙக ளுயிர்தா மிங்கு வேண்டுதியா னும்பிறைவற் கான போது, செப்பியவக் கந்தத்தின் விளேவின் ருகித் திரிவில்லா முத்தியிற்சென் றிலனு மானு, னப்படியக் கந்தத்து ளறிவுக் கெட்டா லம்முத்தி யுடனின்ப மணேயா தென்ருர். (கஉ0)

அவ்வுரைகேட் டெதிர்மாற்ற மறைவ தின்றி யணேந்துளனம். முத்தியெனு மது வும் பாழாங், கவ்வையினின் றவனேயெதிர் நோக்கி ஞானக் கடலமுத மணேயவர்தங் காத லன்பர், பொய்வகையே முத்தியினிற் போஞன் முன்பே பொருளெல்லா முணர்ந்துரைத்துப போஞ னென்ரு, யெவ்வகையா லவனெல்லா முணர்ந்த நீதி மில்ல துரைப் பாயெனினு மேற்போ மென்ருர். (கஉக)

உணர்வுபொதிச் சிறப்பென்ன விரண்டின் முன்ன துளவான மரப்பொதுமை யுணர்த்த லேனேப், புணர்சிறப்பு மாங்களில்வைத் தின்னதென்ற லிப்படியால் வரம் பில்லாப் பொருள்க ளெல்லாங், கொணரும் விறலினேக் குவையெய் திடினும் வேறு குறைத்த வற்றைத் தனித்தனியே யிடினும் வெர்தீத், துணர் கதுவீச் சுடவல்ல வாறு போல்த் தொருத்தும் விரித் துர்தெரிக்குர் தொல்லோ னென்ருன். (கஉஉ)

எடுத்துரைத்த புத்தனெதி ரியம்பு மன்ப ரெரியுணர்வுக் கெடுத்துக்காட் டாகச் சொன்னு, யடுத்தவுணர் வுருவுடைய தன்று சொன்ன வனல்வடிவிற் ரூமதுவு மறிதி நுங்கோன், ரெடுத்தநிகழ் காலமே யன்றி யேனைத் தொடர்ந்த வீருகால மூந்தொக் கறியு மாகிற், கடுத்தவெரி நிகழ்காலத் திட்ட தல்லாற் காணுத காலத்துக் கதுவா தென்னூர். (கூஉங)

ஆதலினு லுன்னிறைவன் பொருள்க ளெல்லா மறிந்தது நும் முத்திபோ லாயிற் றன்றே, யேதமா மிவ்வறிவா லுரைத்த நூலு மென்றவனுக் கேற்குமா ரருளிச் செய்ய, வாதமா ரென்றின்றித் தோற்ரான் புத்தன் மற்றவனை வென்ரருளிப் புகலி மன்னர், பாததா மரைபணிந்தா ரன்பர் தங்கள் பான்மையழி புத்தர்களும் பணிந்து வீழ்ந்தார். (கூஉச)

புந்தியினு லவருரைத்த பொருளின் றன்மை பொருளன்ரும் படியன்பர் பொரு ந்தக் கூற, மந்தவுணர் வுடையவரை நோக்கிச் சைவ மல்லாது மற்ரொன்று மில்லை யென்றே, யந்தமில்சீர் மறைகளா கமங்க ளேனை யகிலகலேப் பொருளுணர்ந்தா ரருளிச் செய்யச், சிந்தையினி லதுதெளிந்து புத்தர் சண்பைத் திருமறையோர் சேவடிக்கீ ழ்ச் சென்று தாழ்ந்தார். (கூஉஞ)

அன்றவர்க்குக் கபுணியர்கோன் கருணை நோக்க மணைதலினு லறிவின்மை யகன் ரு நீங்கி, முன்ரெழுது விழுந்தெழுந்து சைவ ராளர் முகைமலர்மா ரியின் வெள்ளம் பொழிந்த தெங்கு, நின்றனவுஞ் சரிப்பனவுஞ் சைவ மேயா நிலைமையவர்க் கருள்செ ய்து சண்பை வேந்தர், சென்றுசிவ ஞர்பதிகள் பணிய வேண்டித் திருக்கடஆ ரதன் மருங்கு சேர வந்தார். (கூஉசு)

தே வு.

அந்தகரி லடியார்க ளெதிர்கொள்ளப் புக்கருளிக்
கொன்னவிலுங் கூற்றுதைத்தார் குரைகழல்கள் பணிந்தேத்தி
மன்னியமர்ந் துறையுநாள் வாசிச மாமுனிவ
ரெந்தகரி லெழுந்தருளிற் ரென்றமடியார் தமைவினவ. (கூஉஎ)

அங்கவரு மடிபோற்றி யாண்டவர செழுந்தருளிப்
பொங்குபுனற் பூந்துருத்தி நகரின்கட் போற்றிசைத்தும்
தங்குதிருத் தொண்டுசெயு மகிழ்ச்சியினுற் சார்ந்தருளி
யெங்குநிகழ்ந் திடவிருந்த படியெல்லா மியம்பினர். (கூஉஅ)

அப்பரிசங் கவர்மொழிய வாண்டவர சினைக்காணு
மொப்பரிய பெருவிருப்பு மிக்கோங்க வொளிபெருகு
மைப்பொருவு கறைக்கண்டர் கழல்வணங்கி யருள்பெற்றுச்
செப்பரிய புகழ்ப்புகலிப் பிள்ளையார் செல்கின்ரூர். (கூஉக)

பூவிரியுந் தடஞ்சோலே புடைபரப்பப் புனல்பரக்குங்
காவிரியின் ரென்கரைபோய்க் கண்ணுதலார் மகிழ்ந்தவிட
மேவியினி தமர்ந்திறைஞ்சி விருப்புறுமெய்த் தொண்டரொடு
நாவரச ருழைச்சண்பை நகரரசர் நண்ணுவார். (கூஉ0)

அந்தணர்கு ளாமணியார் பூந்துருத்திக் கணித்தாக
வந்தருளும் பெருவார்த்தை வாகீசர் கேட்டருளி
நந்தமையா ளுடையவரை நாமெதிர்சென் றிறைஞ்சுவது \,
மும்தைவினைப் பயனென்று முகமலர வகமலர்வார். (கூஉச)

எதிர்சென்று பணிவனென வெழுகின்ற பெருவிருப்பா
னதிதங்கு சடைமுடியார் நற்பதங்க டொழுதந்தப்
பதிநின்றும் புறப்பட்டுப் பரசமயஞ் சிதைத்தவர்பான்
முதிர்கின்ற பெருந்தவத்தோர் முன்னெய்த வந்தணைந்தார். (கஙஉ)

* திருச்சின்னம் பணிமாறக் கேட்டகாற் றிசையுள்ளோர்
பெருக்கின்ற வார்வத்தாற் பிள்ளோயார் தமைச்சூழ்ந்த
நெருக்கினிடை யவர்காணு வகைநிலத்துப் பணிந்துள்ள
முருக்கியெழு மன்போங்கத் தொண்டர்குழாத் துடனணைந்தார். (கஙஙஙு)

வந்தணைந்த வாகீசர் வண்புகலி வாழ்வேந்தர்
சந்தமணித் திருமுத்தின் சிவிகையினைத் தாங்கியே
சிந்தைகளிப் புறவருவார் திருஞான சம்பந்தர்
புந்தியினில் வேறொன்று நிகழ்ந்திடமுன் புகல்கின்றார். (கஙசு)

அப்பர்தா மெங்குற்ற நிப்பொழுதென் றருள்செய்யச
செப்பரிய புகழத்திருநா வுக்கரசர் செப்புவா
ரொப்பரிய தவஞ்செய்தே ஞதலினு லும்மடிக
ளிப்பொழுது தாங்கிவரப் பெற்றுய்ந்தேன் யானென்றார். (கஙடு)

அவ்வார்த்தை கேட்டஞ்சி யவனிமே லிழிந்தருளி
யிவ்வாறு செய்தருளிற் றென்ஞமென் றிறைஞ்சுதலுஞ்
செவ்வாறு மொழிநாவர் திருஞான சம்பதர்க்
கெவ்வாறு செயத்தகுவ தென்றெதிரே யிறைஞ்சினார். (கஙசு)

சூழ்ந்துமிடைந் தருகணேயுந் தொண்டரெல்லா மதுகண்டு
தாழ்ந்துநில முறவணங்கி யெழுந்தங்கை தலேகுவித்து
வாழ்ந்துமனக் களிபபினராய் மற்றிவரை வணங்கப்பெற்
றூழ்ந்தபிறப் புய்ந்தோமென் றண்டமெலா முறவார்த்தார். (கஙஎ)

திருஞான சம்பந்தர் திருநாவுக் கரசர்தமைப்
பெருகார்வத் தொடுமணைந்து தழீஇக்கொள்ளப் பிள்ளோயார்
மருவாரு மலரடிகள் வணங்கியுடன் வந்தணைந்தார்
பொருவாரும் புனற்சடையார் மகிழ்ந்திருப் பூந்துருத்தி. (கஙஅ)

அன்பர்குழாத தொடுஞ்செல்வா ரானேற்றூர் மகிழகோயின்
முன்பணித்தா கச்சென்று கோபுரத்தை முன்னிறைஞ்சித்
தன்பமிலாத் திருத்தொண்ட ருடன்றொழுது புக்கருளி
யென்புருக வலங்கொண்டு மகிழ்ந்தேத்தி யிறைஞ்சினார். (கஙக)

பொய்யிலியா ரைப்பணிந்து போற்றியே புறத்தணைவார்
செய்யசடை யார்கோயிற் றிருவாயின் முன்ஞக
மையறுசீர்த் தொண்டர்குழாம் வந்துபுடை சூழவுல
குய்யவரு வார்தாங்க ளுடன்மகிழ்ந்தது கினிதிருந்தார். (கசஅ)

வே று.

வாக்கின் றனிமன்னர் வண்புகலி வேந்தர்தமைப்
போக்கும் வரவும் வினவப் புகுந்ததெல்லாந்
தூக்கின் றமிழ்விரகர் சொல்லிறந்த ஞானமறை
தேக்குந் திருவாயாற் செப்பி யருள்செய்தார். (கசக)

* இச்செய்யுள் சிலபிரதிகளிலில்லை.

காழியினில் வந்த கவுணியர்தம் போரேற்றை
யாழிமிசைக் கன்மிதப்பின் வந்தா ரடிவணங்கி
வாழிதிருத் தொண்டென்னும் வான்பயிர்தா னோங்குதற்குச்
சூழும் பெருவேலி யானீ ரெனத்தொழுதார். (கசஉ)

பிள்ளையார் தாமுமவர் முன்றொழுது பேரன்பின்
வெள்ள மணையபுகழ் மானியார் மேன்மையையுங்
கொள்ளும் பெருமைக் குலச்சிறையார் தொண்டினையு
முள்ள பரிசெல்லா மொழிந்தங் குவந்திருந்தார். (கசகூ)

தென்னற் குயிரோடு நீறளித்துச் செங்கமலத்
தன்ன மனையார்க்கு மமைச்சர்க்கு மன்பருளித்
துன்னுநெறி வைதிகத்தின் றூநெறியே யாக்குதலான்
மன்னுபுகழ் வாகீசர் கேட்டு மனமகிழ்ந்தார். (கசச)

சொல்லின் பெருவேந்தர் தொண்டைவள நாடெய்தி
மல்கு புகழ்க்காஞ்சி யேகாம் பரமன்னுஞ்
செல்வர் கழல்பணிந்து சென்றதெல்லாஞ் செப்புதலும்
புல்குநூன் மார்பரும்போய்ப போற்றுந் திறம்புரிந்தார். (கசஞ)

அங்கணரைப் போற்றியெழுந் தாண்ட வரசமர்ந்த
பொங்கு திருமடத்திற் புக்கங் கினிதமர்ந்து
திங்கட் பகவணியுஞ் செல்வியார் சேவடிகைஞ்ச
தகுநு மனத்தோடு தாம்பரவிச செல்லுநாள். (கசசு)

வாகீச மாமுனிவர் மன்னுதிரு வாலவாய்
நாக மரைகசைத்த நம்பர் கழல்வணங்கப
போரும் பெருவிருப்புப் பொங்கப் புகலியின்மே
லேகும் பெருங்காதல் பிள்ளையா ரேற்றெழுவார். (கசஎ)

பூந்துருத்தி மேவும் புனிதர்தமைப் புக்கிறைஞ்சிப்
போந்து திருவாயிற் புறத்தணைந்து காவிலுக்கு
வேந்தர் திருவுள்ள மேவவிடை கொண்டருளி
யேந்தலா ரெண்ணிறைந்த தொண்டருட னேகினார். (கசஅ)

மாடுபுனற் பொன்னி யிழிந்து வடகரையி
னீடுதிரு நெய்த்தான மையாறு சேர்ந்திறைஞ்சிப்
பாடுதமிழ் மாலைகளுஞ் சாத்திப பரவிப்போ
யாடல் புரிந்தார் திருப்பழனஞ் சென்றணைந்தார். (கசக)

செங்கண் விடையார் திருப்பழனஞ் சேர்ந்திறைஞ்சிப்
பொங்கிய காதலின்முன் போற்றும் பதிபிறவுந்
தங்கிப்போய்ச் சண்பைநகர் சார்ந்தார் தனிப்பொருப்பின்
மங்கை திருமுலைப்பா லுண்டருளும் வள்ளலார். (கஙு0)

தென்னுட் டமணு சமுத்துத் திருநீறே
யந்நாடு போற்றுவித்தார் வந்தணையும் வார்த்தைகேட்
டெந்நாள் பணிவதென வேற்றெழுந்த மாமறையோர்
முன்னுக வேத முழங்க வெதிர்கொண்டார். (கஙுக)

.

தே வா.

போத நீமொ மறையவ ரெதிர்கொளப் புகலிகா வலருந்தஞ்
சீத முத்தணிச் சிவிகைகின் றிழிந்தெதிர் செல்பவர் திருத்தோணி
நாதர் கோயின்முன் ரேறன்றிட நகைமலர்க் கரங்குவித் திறைஞ்சிப்போ
யோத நீரின்மே லோங்குகோ யிலின்மணிக் கோபுரஞ் சென்றுற்றார். (கூடுஉ)

அங்க மாநிலத் தெட்டுற வணங்கிப்புக் கஞ்சலி முடியேறப்
பொங்கு காதலிற் புடைவலங் கொண்டுமுன் பணிந்துபோற் றெடுத்தோதித்
துங்க நீள்பெருந் தோணியாய் கோயிலே யருளினுந் ரெழுதேறி
மங்கை யோடுடன் வீற்றிருந் தருளினர் மலர்க்கழல் பணிவுற்றார். (கூடுக)

முற்று மெய்யெலாம் புளகங்கண் முகிழ்த்தெழ முகந்துகண் களிகூரப்
பற்று முள்ளமுள் ளூலத்தெழு மானந்தம் பொழிதரப் பணிந்தேத்தி
யுற்றுமை சேர்வ தெனுந்திரு வியமக முவகையா லெடுத்தோதி
வெற்றி யாகமீ னவனவை யெதிர்ந்தி மிசைவரு கரனென்பார். (கூடுஊ)

சீரின் மல்கிய திருப்பதி கத்தினிற் றிருக்கடைக் காபபேற்றி
வாரின் மல்கிய வனமுலே யாளுடன் மன்னினர் தமைப்போற்றி
யாரு மின்னருள் பெற்றுமீண் டணைபவ ரங்கையாற் ரெழுதேத்தி
யேரின் மல்கிய கோயின்முன் பணிந்துபோற் றிறைஞ்சினர் மணிவாயில். (கூடுடு)

தாதை யாருமங் குடன்பணிந் தணைந்திடச் சண்பையார் தனியேறு
மூதெ யிற்றிரு வாயிலைத் தொழுதுபோய் முகைமலர்க் குழலார்க
ளாத ரித்துவாழ்த் துரையிரு மருங்கெழ வணிமறு கிடைச்சென்று
காத லித்தவர்க் கருள்செய்து தந்திரு மாளிகைக் கடைசார்ந்தார். (கூடுசு)

நறவ மார்பொழிற் புகலியி னண்ணிய திருஞான சம்பந்தர்
விறலி யாருட னீலகண் டப்பெரும் பாணர்க்கு மிகநல்கி
யுறையு ளாமவர் மாளிகை செலவிடித் துள்ளணை தரும்போதி
லறலி னேர்குழ லார்மணி விளக்கெடுத் தெதிர்கொள வணைவுற்றார். (கூடுஎ)

அங்க ணைந்தரு மறைக்குலத் தாயர்வந் தடிவணங் கிடத்தாமுங்
துங்க நீள்பெருந் தோணியிற் ரூயர்தாண் மனங்கொளத் தொழுவாராய்த்
தங்கு காதலி னங்கமர்ந் தருளுநாட் டம்பிரான கழல்போற்றிப்
பொங்கு மின்னிசைத் திருபபதி கம்பல பாடினர் புகழ்ந்தேத்தி. (கூடுஅ)

நீல மாவிடந் திருமிடற் றடகிய நிமலரை நேரெய்துங்
கால மானவை யினேத்தினுமீ பணிந்துடன் கலந்தவன் பர்களோடுஞ்
சால நாள்களங் குறைபவர் தையலா டழுவிடக் குழைகம்பர்
கோல மார்தரக் கும்பிடு மாசைகொண் டெழுங்குறிப் பினரானார். (கூடுக)

தண்ட கத்திரு நாட்டினைச் சார்ந்துநந் தம்பிரான் மிழிக்கோயில்
கண்டு போற்றிநாம் பணிவதென் றன்பருக் கருள்செய்வார் காலம்பெற்
றண்ட ருக்கறி வரும்பெருந் தோணியி லிருந்தவ ரருள்பெற்றுத்
தொண்டர் சூழ்ந்துடன் புறப்படத் தொடர்ந்தெழுந் தாதையார்க் குரைசெய்வார். ()

அப்பர் நீரினி யிங்கொழிந் தருமறை யங்கிவேட் டன்போடுந்
துப்பு நேர்சடை யார்தமைப் பரவியே தொழுதிரு மெனச்சொல்லி
மெய்ப்பெ ருந்தொண்டர் மீன்பவர் தமக்கெலாம் விடைகொடுத் தருளிப்போ
யொப்பி லாதவர் தமைவழி யிடைப்பணிக் தருகுமண் பொடுசெல்வார். (கூகச)

செல்வ மல்கிய தில்லைமூ தூரினிற் றிருநடம்பணிந்தேத்திப்
பல்பெ ருந்தொண்ட ரெதிர்கொளப் பரமர்தந் திருத்தினை நகர்பாடி
யல்கு தொண்டர்க டம்முடன் றிருமாணி குழியினை யணைந்தேத்தி
மல்கு வார்சடை யார்திருப் பாதிரிப் புலியூரை வந்தடைந்தார். (கூசுஉ)

கன்னி மாவனங் காப்பென விருந்தவர் கழலினை பணிந்தங்கு
முன்ன மாமுடக் கான்முயற் கருள்செய்த வண்ணமு மொழிந்தேத்தி
மன்னு வார்பொழிற் றிருவடு கூரினை வந்தெய்தி வணங்கிபபோய்ப்
பின்னு வார்சடை யார்திரு வக்கரை பிள்ளையா ரணைவுற்றார். (கூசுக)

வக்க ரைப்பெரு மான்றனை வணங்கியங் கமருஞ் ளருளாலே
செக்கர் வேணியர் திரும்பைமா காளமுஞ் சென்றுதாழ்ந் துடன்மீண்டு
மிக்க சீர்வள ரதிகைவீ ரட்டான மேவுவார் தம்முன்பு
தொக்க மெய்த்திருத் தொண்டர்வந் தெதிர்கொளத் தொழுதெழுந் தணைவுற்றார். ()

ஆதி தேவரங் கமர்ந்தவீ ரட்டானஞ் சென்றணை பலர்முன்னே
பூதம் பாடகின் றாடுவார் திருநட்டம் புலப்படும் படி காட்ட
வேத பாரகர் பணிந்துமெய் புணர்புட னுருகிய விருப்போடுங்
கோதி லாவிசை குலவுகுண் டைக்குறட் பூதமென் றெடுத்தேத்தி. (கூசுஙி)

பரவி யேத்திய திருப்பதி கத்திசை பாடினர் பணிந்தங்கு
விரவு மன்பொடு மகிழ்ந்தினி துறைபவர் விமலரை வணங்கிபபோ
யரவ நீர்ச்சடை யங்கணர் தாமகிழ்ந் துறைதிரு வாமாத்தூர்
சிரபு ரத்துவந் தருளிய திருமறைச் சிறுவர்சென் றணைவுற்றார். (கூசுசு)

சென்ற ணைந்துசிற் றையின்மகிழ் விருப்பொடு திகழ்திரு வாமாத்தூர்ப்
பொன்ற யங்குபூங் கொன்றையும் வன்னியும் புனைந்தவ ரடிபோற்றிக்
குன்ற வார்சிலை யெனுநதிருப் பதிகமெய் குலவிய விசைபாடி
நன்று மின்புறப் பணிந்துசெல் வார்திருக் கோவலூர் நகர்சேர்ந்தார். (கூசுள)

கோவ லீடிய வீரட்ட மமர்ந்தவர் குரைகழல் பணிந்தேத்தி
யாவி னேந்துகந் தாவொ ரறையணி நல்லூரை யணைந்தேத்திப்
பாவ லர்ந்தசெந் தமிழ்கொடு பரவுவார் பரவுசி ரடியார்கண்
மேவு மன்புறு மேன்மையார் தன்மையை விளங்கிட வருள்செய்தார். (கூசுஅ)

சீரின் மன்னிய பதிகமுன் பாடியத் திருவறை யணிநல்லூர்
வாரின் மல்கிய கொங்கையாள் பங்கர்தம் மலைமிசை வலங்கொள்வார்
பாரின் மல்கிய தொண்டர்க ளிமையவர் நாடொறும் பணிந்தேத்துங்
காரின் மல்கிய சோலையண் ணுமலை யன்பர்காட் டிடக்கண்டார். (கூசுக)

வே று.

அண்ண மலையங் கமர்ந்தபிரான் வடிவு போன்று தோன்றுதலுங்
கண்ணுற் பருகிக் கைதொழுது கலந்து போற்றுங் காதலினு
லுண்ண முலையா ளெனும்பதிகம் பாடித் தொண்ட ருடன் போந்து
தெண்ணீர் முடியார் திருவண்ண மலையைச் சென்று சேர்வுற்றார். (கூஎ0)

அங்க ணணைவார் பணிந்தெழுந்து போற்றி செய்தம் மலைமீது
தங்கு விருப்பில் வீற்றிருந்தார் தாட்டா மரைக டம்முடிமேற்
பொங்கு மார்வத் தொடும்புனைந்து புனக மலர்ந்த திருமேனி
யெங்கு மாகிக் கண்பொழியு மின்ப வருவி பெருக்கினார். (கூஎக)

ஆதி மூர்த்தி கழல்வணங்கி யங்க ணினிதி னமருநாட்
பூத நாத ரவர்தம்மைப் பூவார் மலராற் போற்றிசைத்துக்
காத லாலத் திருமலியிற் சிலநான் வைகிக் கமழ்கொன்றை
வேத நீதர் திருப்பதிகள் பிறவும் பணியும் விருப்புறுவார். (கூஎஉ)

மங்கை பாகர் திருவருளால் வணங்கிப் போந்து வடதிசையிற்
செங்கண் விடையார் பதிபலவும் பணிந்து புகலிச் செம்மலார்
துங்க வரைகள் கான்பலவுங் கடந்து தொண்டைத் திருநாட்டிற்
றிங்கண் முடியா ரினிதமருந் திருவோத் தூரைச் சேர்வுற்றார். (கூஎசு)

தேவர் முனிவர்க் கோத்தளித்த திருவோத் தூரிற் திருத்தொண்டர்
தாவில் சண்பைத் தமிழ்விரகர் தாமங் கணியக் களிசிறந்து
மேவுங் கதலி தோரணங்கள் விளக்கு நிரைத்து நிறைகுடமும்
பூவும் பொரியுஞ் சுண்ணமுமுன் கொண்டு போற்றி யெதிர்கொண்டார். (கூஎசு)

சண்பை வேந்தர் தண்டாரளச் சிவிகை நின்று மிழிந்தருளி
நண்பின் மிக்க சீரடியார் சூழ நம்பர் கோபுரஞ்சூழ்
விண்பின் னுக முன்னேநும்கும் வியன்பொற் புரிசை வலங்கொண்டு
பண்பு நீடிப் பணிந்தெழுந்து பரமர் கோயி லுள்ளடைந்தார். (கூஎடு

வார ணத்தி னுரிபோர்த்த மைந்த ருமையாண் மணவாள
ரார ணத்தி னுட்பொருளாய் நின்றூர் தம்மு னணைந்திறைஞ்சி
ஈர ணற்கும் பிரமற்கு நண்ணற் கரிய கழல்போற்றுங்
கார ணத்தின் வருபின்பக் கண்ணீர் பொழியக் கைதொழுதார். (கூஎசு)

தொழுது விழுந்து பணிந்தெழுந்து சொன்மாலைகளாற் றுதிசெய்து
முழுது மாரு ரருள்பெற்றுப் போந்து வைகி முதல்வர் தமைப்
பொழுது தோறும் புக்கிறைஞ்சிப் போற்றி செய்தங் கமர்வார்மு
னழுது வணங்கி யொருதொண்ட ரமணர் திறத்தொன் றறிவிப்பார். (கூஎஎ)

அங்கை யனலேற் றவர்க்கடியே னுக்கும் பனைக ளானவெலா
மங்கு லுறநீண் டாண்பனையாய்க் காயா வாகக் கண்டமண
ரிங்கு நீரிட் டாக்குவன காய்த்தற் கடைவுண் டோவென்று
பொங்கு நகைசெய் திழித்துரைத்தா ரருள வேண்டு மெனப்புகல. (கூஎஅ)

பரம னர்தந் திருத்தொண்டர் பண்பு நோக்கிப் பரிவெய்தி
விரவு காத லொடும்விரைந்து விமலர் கோயில் புக்கருளி
யரவு மதியும் பகைதீர வணிந்தார் தம்மை யடிவணங்கி
யிரவு போற்றித் திருப்பதிக மிசையிற் பெருக வெடுத்தருளி. (கூஎக)

விரும்பு மேன்மைத் திருக்கடைக்காப் பதனில் விமல ரருளாலே
குரும்பை யாண் பனையீனு மென்னும் வாய்மை குலவுதலா
னெருங்கு மேற்றுப் பனையெல்லா நிறைந்த குலைக ளாய்க்குரும்பை
யரும்பு பெண்ணை யாகியிடக் கண்டா ரெல்லா மதிசயித்தார். (கூஅ0)

சீரின் மன்னுந் திருக்கடைக்காப் பேற்றிச் சிவனு ரருள்பெற்றுப்
பாரி னீடு மாண்பனைமுன் காய்த்துப் பழுக்கும் பண்பிலை
னேரு மன்பர் தங்கருத்து நேரே முடித்துக் கொடுத்தருளி
யாரு மூவகைத் திருத்தொண்டர் போற்ற வங்க ணினிதமர்ந்தார். (கூஅக)

தென்னுட் டமணு சமுத்தார்தஞ் செய்கை கண்டு திகைத்தமண
ரந்நாட் டதனை விட்டகல்வார் சிலர்தங் கையிற் குண்டிகைக
ளென்னு வனமற் றிவையென்று தகர்ப்பா றிறைவ னேறுயர்த்த
பொன்னூர் மேனிப் புரிசடையா னன்றே யென்று போற்றினர். (கூஅஉ)

பிள்ளை யார்தந் திருவாக்கிற் பிறந்த ஞானத் தாலமுமுண்
புள்ள பாசம் விட்டகல வொழியாப் பிறவி தனையொழித்துக்
கொள்ளு நீர்மைக் காலங்கள் கழித்துச் சிவமே கூடினவால்
வள்ள லார்மற் றவரருளின் வாய்மை கூறின் வரம்பென்னும். (கூஅகூ)

அங்க ணமரர் பெருமானைப் பணிந்து போந்தா டரவினுடன்
பொங்கு கங்கை முடிக்கணிந்தார் மகிழும் பதிகள் பலபோற்றி
மங்கை பாகர் மகிழ்ந்தருளும் வயன்மா கறைலை வழுத்திப்போய்க்
கொங்கு மலர்நீர்க் குரங்கணின்முட் டத்தைச் சென்று சூழுகினூர். (கூஅச)

ஆதி முதல்வர் குரங்கணின்முட் டத்தை யணைந்து பணிந்தேத்தி
நீதி வாழுந் திருத்தொண்டர் போற்ற நிகரில் சண்பையிலில்
வேத மோடு சைவநெறி விளங்க வந்த கவுணியனூர்
மாதொர் பாகர் தாமன்னு மதில்சூழ் காஞ்சி மருங்கணைந்தார். (கூஅடி)

வே று.

நீகொஞ்சி வாழ்நரு நிலாவுமெய்ம்மை யன்பரு
மாடுசெண்பை வள்ளலார் வந்தணைந்த வோகையாற்
கூடுகின்ற வின்பநேர் குலாவுவீதி கோலினூர்
காடுகொண்ட பூகம்வாழை காமர்தோ ரணங்களால். (கூஅசு)

கொடிநிரைத்த வீதியிற் கோலவே திகைப்புறங்
கடிகொண் மாலை மொய்த்தபந்தர் கந்தநீர்த் தசும்புடன்
மடிலில்பொன் விளக்கெடுத்து மாதர்மைந்தர் மல்குவார்
படிவிளக்கு மன்பரும் பரந்தபண்பி லீண்டுவார். (கூஅஎ)

கோதைமாத ராடலுங் குலாவுதொண்டர் பாடலும்
வேதகீத நாதமும் மிக்கெழுந்து விம்மவே
காதனீடு காஞ்சிவாழ்நர் கம்பலத் தெழுந்துபோய்
மூதெயிற் புறம்புசென் றணைந்துமுன் வணங்கினூர். (கூஅஅ)

சண்பையாளு மன்னர்முன்பு தொண்டர்வந்து சார்தலும்
பண்புசீ டியானமுன் பிழிந்திறைஞ்சு பான்மைகண்
டெண்பெருக்கு மிக்கதொண்ட ரஞ்சலித் தெழுந்தசொன்
மண்பரக்க வீழ்ந்தெழுந்து வானமுட்ட வார்த்தனர். (கூஅக)

சேணுயர்ந்த வாயினீடு சீர்கொள்சண்பை மன்னனூர்
வாணிலாவு நீற்றணி விளக்கிட மனத்தினிற்
பூணுமன்பர் தம்முடன் புகுந்திடப் புறத்துளோர்
காணுமாசை யிற்குவித்த கைந்நிரை யெடுத்தனர். (கூகூ0)

வியனெடுந் தெருவினூடு மிக்கதொண்ட ராரப்பெழக்
கயனெடுங்கண் மாதருங் காதனீடு மாந்தரும்
புயல்பொழிந்த தாமெனப் பூவினோடு பொற்சுண
மியலுமாறு வாழ்த்தெடுத் திருமருங்கும் வீசினூர். (கூகூக)

இன்னவண்ணம் யாவரு மின்பமெய்த வெய்துவார்
பின்னுவார் சடைமுடிப் பிரான்மகிழ்ந்த கோயில்கண்
முன்னுறப் பணிந்துபோய் மொய்வரைத் திருமகண்
மன்னுபூ சணைமகிழ்ந்த மன்னர்கோயின் முன்னினார். (ஈஈஉ)

கம்பவாணர் கோயில்வாயில் கண்டுகை குவித்தெதித்
தும்பரோங்கு கோபுரத்தின் முன்னிறைஞ்சி யுள்ளணைந்
தம்பொன்மா ளிகைப்புறத்தி லன்பரோடு சூழவந்
திம்பர்ஞால மும்ய வந்த பிள்ளையா ரிறைஞ்சுவார். (ஈஈஊ)

தே வு று.

செம்பொன்மலைக் கொடிதழுவக் குழைந்தருளுந் திருமேனிக்
கம்பரைவந் தெதிர்வணங்குங் கவுணியர்தங் காவலனூர்
பம்புதுளிக் கண்ணருவி பாய்ந்துமயிர்ப் புளகம்வரத்
தம்பெருகு மனக்காத லுள்ளதில மிசைத்தாழ்ந்தார். (ஈஈசை)

பலமுறையும் பணிந்தெழுந்து பங்கயச்செங் கைம்முகிழ்ப்ப
மலருமுக மலர்த்திரு மணிவாயான் மறையானென்
றுலகுய்ய வெடுத்தருளி யுருகியவன் பென்புருக்க
நிலவுபிரை முதற்றுள நிரம்பியநீர் மையினிகழ. (ஈஈருஎ)

பாடினார் பணிவுற்றார் பரிவுறுமா னந்தக்கூத்
தாடினை ரகங்குழைந்தா ரஞ்சலித்துஞ் சென்னியின்மேற்
சூடினார் மெய்ம்முகிழ்த்தார் சுகரமு மன்னமுமாய்த்
தேடினு நிருவர்க்குந் தெரிவரியார் திருமகனார். (ஈஈசுஉ)

மருவியவே ழிசைபொழிய மனம்பொழியும் பேரன்பாற்
பெருகியகண் மழைபொழியப் பெரும்புகலிப் பெருந்தகையா
ருருகியவன் புள்ளலைப்ப வுமைதழுவக் குழைந்தவரைப்
பருகியமெய் புணர்விஞைடும் பரவியே புறத்தணைந்தார். (ஈஈஎ)

புறத்தணைந்த தொண்டருடன் போந்தமைந்த திருமடத்திற்
பெறற்கரும்பே றுலகுய்யப் பெற்றருளும் பிள்ளையார்
மறப்பரிய காதலுடன் வந்தெய்தி மகிழ்ந்துறைவா
ரறப்பெருஞ்செல் வக்காமக் கோட்டமணைந் திறைஞ்சினார். (ஈஈஅ)

திருவேகம் பத்தமர்ந்த செழுஞ்சுடரைச் சேவடியி
லொருபோதுந் தப்பாதே யுள்ளுருகிப் பணிகின்றார்
மருவுதிரு வியமகமும் வளரிருக்குக் குறண்மற்றும்
பெருகுமிசைத் திருப்பதிகத் தொடைபுனைந்தார் பிள்ளையார். (ஈஈஈ)

நீடுதிருப் பொலிகாஞ்சி நெறிக்காரைக் காடிறைஞ்சிச்
சூடுமதிக் கண்ணியார் தூணைமலர்ச்சே வடிபாடி
யாடுமவ ரினிதமரு மனேகதங்கா வதம்பாவி
மாடுதிருத் தானங்கள் பணிந்தேத்தி வைகுநாள். (ஈ000)

ஈண்டிசையும் போற்றிசைக்குந் திருப்பதிமற் றதன்புறத்துத்
தொண்டருட னினிதேகித் தொல்லிவிட முண்டிருண்ட
கண்டர்மகிழ் மேற்றளியு முதலான கலந்தேத்தி
மண்டுபெருங் காதலினுல் வணங்கிமீண் டணைந்திருந்தார். (ஈ00ஈ)

அப்பதியில் விருப்பினெடு மக்கணரைப் பணிந்தமர்வார்
செப்பரிய புகழ்ப்பாலித் திருநதியின் றென்கரைபோய்
மைப்பொலியுங் கண்டர்திரு மாற்பேறு மகிழ்ந்திறைஞ்சி
மூப்புரஞ்செற் றவர்தம்மை மொழிமாலை சாத்தினார். (க ஏஉ)

திருமாற்பே றுடையவர்தந் திருவருள்பெற் றெழுந்தருளிக்
கருமாலுங் கருமாவாய்க் காண்பரிய கழற்றங்கி
மருவாற்றன் மழவிடையார் திருவல்லம் வணங்கித்தம்
பெருமாற்குத் திருப்பதிகப் பெரும்பிணைய லணிவித்தார். (க ஏஊ)

அங்குள்ள பிறபதியி லரிக்கரியார் கழல்வணங்கிப்
பொங்குபுனற் பாலியாற்றின் புடையில்வட பாலிறைவ
ரெங்குமுறை பதிபணிவா ரிலம்பயங்கோட் டீரிறைஞ்சிச்
செங்கண்விடை யுகைத்தவரைத் திருப்பதிகம் பாடினார். (க ஏஎ)

திருத்தொண்டர் பலர்சூழத் திருவிற்கோ லமும்பணிந்து
பொருட்பதிகத் தொடைமாலை புரமெரித்த படிபாடி
யருட்புகலி யாண்டகையார் தக்கோல மணிந்தருளி
விருப்பினெடுங் திருவூறன் மேவினார் தமைப்பணிந்தார். (க ஏஏ)

தொழுதுபல முறைபோற்றிச் சுரர்குருவுக் கிலாயமுனி
வழுவிறவம் புரிந்தேத்த மன்னினார் தமைமலர்ந்த
பழுதில்செழுந் தமிழ்மாலைப் பதிகவிசை புனைந்தருளி
முழுதுமளித் தவரருளாற் போந்தனர்முத் தமிழ்விரகர். (க ஏசு)

குன்றநெடுஞ்சிலையாளர் குலவியபல் பதிபிறவு
மின்றவிருப் புடனிறைஞ்சி நீடுதிருத் தொண்டருடன்
பொன்றயங்கு மணிமாடப் பூந்தராய்ப் புரவலனார்
சென்றணைந்தார் பழையனூர்த் திருவாலங் காட்டருகு. (க ஏஎ)

மே வு று.

இம்மையிலே புவியுள்ளோ ரியாருங்காண வேழுலகும் போற்றிசைப்ப வெம் மை யாளு, மம்மைதிருத் தலேயாலே நடந்து போற்று மம்மையப்பர் திருவாலங் காடா மென்று, தம்மையுடை யவர்மூனூர் மிதிக்க வஞ்சிச் சண்பைவருஞ் சிகாமணி யார் சாரச் சென்றார், செம்மைநெறி வழுவாத பதியின் மாடோர் செழும்பதியி லன் றிரவு பள்ளி சேர்ந்தார். (க ஏஅ)

மாலேயிடை யாமத்துப் பள்ளி கொள்ளு மறையவனார் தம்முன்பு கனவிலேவக் தாலவனத் தமர்ந்தருளு மப்பர் நம்மை யயர்த்தனேயோ பாதெற்கென் றருளிச் செய்ய ஞாலநிரு ணீங்கவரும் புகலி வேந்தர் நடவிடையா மத்தினிடைத் தொழுது ணர்ந்து வேலேவிட முண்டவர்தங் கருணே போற்றி மெய்யுருகித் திருப்பதிகம் விளம்பலுற்றார்.

துஞ்சவரு வாரென்றே யெடுத்த வோசைச் சுருதிமுறை வழுவாமற் றொடுத்த பாட, லெஞ்சலிலா வகைமுறையே பழைய ஞாரா ரியம்பு மொழி காத்தகதை சிறப் பித் தேத்தி, யஞ்சனமா கரியுரித்தா ரருளா லென்றே யறியும்வகை திருக்கடைக்காப் பமையச் சாத்திப், பஞ்சுரமாம் பழையதிறங் கிழமைகொள்ளப் பாடினார் பாரெலா மூய்ய வந்தார். (க ஏக0)

நீடுமிசைத் திருப்பதிகம் பாடிப் போற்றி நெடுங்கங்கு லிருணீங்கி நிகழ்ந்த காலை, மாடுதிருத் தொண்டர்குழா மீண்ந்த போது மாலையினிற் றிருவால வனத்து மன்னி, யாடுமெ ரருள்செய்த படியை யெல்லா மருளிச்செய் தகமலரப் பாடியேத் திச், சேடர்பயி றிருப்பதியைத் தொழுது போந்து திருப்பாரு ரதன்மருங்கு செ ல்ல லுற்றார். (கoகக)

திருப்பாரு ரீண்ந்தருளி யங்கு மற்றச் செழும்பதியோ ரெதிர்கொள்ளச் சென்று புக்குப், பொருப்பரையன் மடப்பாவை யிடப்பா கத்துப் புராதனர்வே யிடங்கொ ண்ட புனிதர் கோயில், விருப்பினுடன் வலங்கொண்டு புக்குத் தாழ்ந்து வீழ்ந்தெழு ந்து மேனியெலா முகிழ்ப்ப நின்றே, யருட்கருணைத் திருவாளனுமஞ் சிந்தை யிடை யாரென் றிசைப்பதிக மருளிச் செய்தார். (கoகஉ)

மன்னுதிருப் பதிகவிசை பாடிப் போற்றி வணங்கிப்போக் தப்பதியில் வைகி மாடு, பிஞ்ஞகர்தம் வெண்பாக்க முதலா யுள்ள பிறபதிகள் பணிக்தணைவார் பெருகு மன்பான், முன்னிறைந்த திருவாய்மஞ் சனரீ ராட்டு முதல்வேடர் கண்ணப்ப நாய னரை, யுன்னியொளிர் காளத்தி மலைவ ணங்க வற்றபெரு வேட்கையுட னுவந்து சென்ரார். (கoகஊ)

மிக்கபெருங் காதலுடன் றொண்டர் சூழ மென்புனலுட் டினையகன்று வெற்புங் காணுங், தொக்கபெரு வன்புலக்கா னடைந்து போகிச் சூலகபா லக்கரத்துச் சுடரு மேனி, முக்கண்முதற் றலைவனிட மாகி யுள்ள முகிலெருங்கு காரிகரை முன்னர்ச் சென்று, புக்கிறைஞ்சிப் போற்றிசைத்தப் பதியில் வைகிப் பூதியரோ டென் மகிழ்ந் தார் புகலி வேந்தர். (கoகச)

இறைவர்திருக் காரிகரை யிறைஞ்சி யப்பா லெண்ணில்பெரு வரைகளிரு மரு ங்கு மெங்கு, நிறையருவி நிரைபலவாய் மணியும் பொன்னும் நிறைதருவலை புடைசி தறி நிகழ்ப வாகி, யறைகழல்வா னவர்க்கிறைவன் குலிச வேற்ரு லற்றசிறை பெற் றவன்மே லெழுவ தற்குச், சிறகடித்துப் பறக்கமுயன் றுயர்ந்த போலுஞ் சிலரிலைத்தி லெழுந்தருளிச் செல்லா நின்ரார். (கoகடி)

மாதவர்க ணெருங்கு குழாம் பரந்து செல்ல மணிமுத்தின் பரிச்சின்னம் வரம் பின் ரூகப், பூதிறை கடலணைவ தென்னச் சண்பைப் புரவலனு செழுந்தருளும் பொழுது சின்னத், தீதிலொலி பலமுறையும் பொங்கி யெங்குந் திருஞான சம்பந் தன் வந்தா னென்னு, நாதநிறை செவியினுவாய் மாக்க ளெல்லா நலமருவு நீனை வொன்ரும் மருங்கு நண்ண. (கoகசு)

காண்வர்தங் குலமுலகு போற்ற வந்த கண்ணப்பர் திருப்பாதச் செருப்புத் தோய, மானவரிச் சிலைவேட்டை யாடுங் கானும் வானமறை நிலைபெரிய மரமுங் ரூறு, மேனையிமை யோர்தாமு மிறைஞ்சி யேத்தி யெய்தவரும் பெருமையவா மெண் ணிலாத, தானமுமற் றவைகடந்து திருக்கா ளத்தி சாரவெழுந் தருளினார் சண்பை வேந்தர். (கoகஎ)

அம்பொன்மலைக் கொடிமுலைப்பால் குழைத்த ஞானத் தமுதுண்ட பிள்ளையா ரணைந்தா ரென்று, செம்பொன்மலை வில்லியார் திருக்கா ளத்தி சேர்ந்திருத் தொண் டர் குழாமடைய வீண்டிப், பம்புசடைத் திருமுனிவர் கபாலக் கையர் பலவேடச் சைவர்குல வேடர் மற்று, மும்பர்தவம் புரிவாரப் பதியி லுள்ளோ ருடன்விரும்பி யெதிர்கொள்ள வுழைச்சென் றுற்றார். (கoகஅ)

ஈஎச திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்புராணம்.

திசையனேத்து நீற்றினொளி தழைப்ப மண்மேற் சிவலோக மணைந்தனைச் சென்ற போது, மிசைவினங்கு மணிமுத்தின் சிவிகை நின்றும் வேதபா ரகரிழிந்து வணங்கி மிக்க, வசைவில்பெருந் தொண்டர்குழாஞ் தொழுது போற்றி யரவெனுமோ சையினண்ட நிறைப்ப வன்பா, லிசைவினங்குந் தமிழ்விரகர் திருக்கா ளத்திந் திரு மலையிம் மலைகளில்யா தென்று கேட்டார். (க0கக)

வந்தணைந்த மாதவத்தோர் வணங்கித் தாழ்ந்து மறைவாழ்வே சைவகிகாமணி யே தோன்று, மிக்தமலை காளனே டத்தி தம்மி லிகலிவழி பாடு செய விறைவர் மேலு, மந்தமில்சீர்க் காளத்தி மலையா மென்ன வவணிமேற் பணிந்தெழுந்தஞ் சலி மேற் கொண்டு, சிந்தைகளி மகிழ்ச்சிவரத் திருவி ராகம் வானவர்க டானவரென் றெடுத்துச் செல்வார். (க0உ0)

திருந்தியவின் னிசைவகுப்புத் திருக்கண் ணப்பர் திருத்தொண்டு சிறப்பித்துத் திகழப் பாடிப், பொருந்துபெருந் தவர்கூட்டம் போற்ற வந்து பொன்முகலிக் கரை யணைந்து தொழுது போகி, யருந்தவர்க ளெம்மருங்கு மிடைந்து செல்ல வானுடைய பிள்ளையா ரயன்மா றேடி, மருந்துவெளி யேயிருந்த திருக்கா ளத்தி மலையடிவா ரஞ் சார வந்து தாழ்ந்தார். (க0உக)

தாழ்ந்தெழுந்து திருமலையைத் தொழுது கொண்டே தடஞ்சிலா தலசோபா னத்தா லேறி, வாழ்ந்திமையோர் குழாஞ்சொருங்கு மணிநீள் வாயின் மருங்கிறைஞ்சி யுட்புகுந்து வளர்பொற் கோயில், சூழ்ந்துவலங் கொண்டிறைவர் திருமுன் பெய்தித் தொழுதுதலை மேற்கொண்டு செங்கை போற்றி, வீழ்ந்தெழுவார் கும்பிட்ட பயன் காண் பார்போன் மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந்தார். (க0உஉ)

உள்ளத்திற் றெளிகின்ற வன்பின் மெய்ம்மை யுருவினையு மவ்வன்பி னுள்ளே மன்னும், வெள்ளச்சென்சடைக்கற்றை நெற்றிச் செங்கண் விமலரையு முடன் கண்ட விருபயம் பொங்கிப், பள்ளத்தி லிழிபுனல்போற் பரந்து செல்லப் பைம்பொன்மலை வல்லிபரிந் தளித்த செம்பொன், வள்ளத்தில் ஞானவா ரமுதமுண்டார் மகிழ்ந்தெழு ந்து பலமுறையும் வணங்கு கின்றார். (க0உங)

பங்கயக்கண் ணருவிநீர் பாய நின்று பரவுமிசைத் திருப்பதிகம் பாடி யாடித், தங்குபெருங் களிகாத றகைந்து தட்பத் தம்பெருமான் கழல்போற்றுந் தன்மைநீட, வங்கரிதிற் புறம்போந்தங் கயன்மால் போற்ற வரியார்தந் திருமலைக்கீ ழணைந்திறை ஞ்சிப், பொங்குதிருத் தொண்டர்மடம் காட்ட வங்குப் புக்கருளி யினிதமர்ந்தார் புகலி வேந்தர். (க0உச)

யாவர்களு மறிவரிய விறைவன் றன்னை யேழுலகு மூடையானை யெண்ணி லாத, தேவர்கடம் பெருமானைத் திருக்கா ளத்தி மலையின்மிசை வீற்றிருந்த செய்ய தேனைப், பூவலரும் பொழில்புடைசூழ் சண்பை யாளும் புரவலனார் காலங்க டோ றும் புக்குப், பாமலர்கொண் டடிபோற்றிப் பருகி யார்ந்து பண்பினிய திருப்பதி யிற் பயிலு நாளில். (க0உஞ)

அங்கண்வட திசைமேலுங் குடக்கின்மேலு மருந்தமிழின் வழக்கங்கு நிகழாதா கத், திங்கள்புனை முடியார்தந் தானந் தோறுஞ் சென்றுதமி ழிசைபாடுஞ் செய்கை போல, மங்கையுடன் வானவர்கள் போற்றி சைப்ப வீற்றிருந்தார் வடகயிலை வண ங்கிப் பாடிச், செங்கமல மலர்வாவித் திருக்கே தாரந் தொழுதுதிருப் பதிகவிசை திருந்தப் பாடி. (க0உசு)

கூற்றுதைத்தார் மகிழ்ந்தகோ காரணம் பாடிக் குலவுதிருப் பருப்பதத்தின் கொ
ள்கை பாடி, யேற்றின்மிசை வருவாரிக் திரன்ற னீல பருப்பதமும் பாடிமகிழ்ந் திறை
வர் தானம், போற்றியசொன் மலர்மாலை பிறவும் பாடிப் புகலியர்தம் பெருந்தகையார்
புனித மாகு, நீற்றினணி கோலத்துத் தொண்டர் சூழ வெடிதுமகிழ்ந் தப்பதியி னிலவு
கின்றார். (கஅஉ)

தென்றிசையிற் கயிலையெனுங் திருக்கா ளத்தி போற்றியினி தமர்கின்றார் திரை
சூழ் வேலை, யொன்றுதிரு வொற்றியூ ருறைவார் தம்மை யிறைஞ்சுவது திருவுள்ளத்
தன்னி யங்க, ணின்ற நிழின் வீரகரும் பெற்று மீள்வா ரெக்தையா ரிணையடியென்
மனத்த வென்று, பொன்றரளங் கொழித்திழிபொன் முகலிகூடப் புணைந்ததிருப் பதிக
விசை போற்றிப் போக்தார். (கஅஎ)

மன்னுபுகழ்த் திருத்தொண்டர் சூழாத்தி னோடு மறைவாழ வந்தவர்தா மலையுங்
காணு, முன்னணைந்த பதிபிறவுங் கடந்து போந்து முதல்வனு ருறைபதிகள் பலவும்
போற்றிப், பன்மணிகள் பொன்வரன்றி யகிலுஞ் சந்தும் பொருதலைக்கும் பாலிவட
கரையி னீடு, சென்னிமதி யணிவார்தந் திருவேற் காடு சென்றணைந்தார் திருஞான
முண்ட செல்வர். (கஅஏ)

திருவேற்கா டமர்ந்தசெழுஞ் சுடர்பொற் கோயில் சென்றணைந்து பணிந்து திருப்
பதிகம் பாடி, வருவேற்று மனத்தவுணர் புரங்கள் செற்றார் வலிதாயம் வந்தெய்தி
வணங்கிப் போற்றி, யுருவேற்ற ரமர்ந்துறையு மோத வேலை யொற்றியூர் கைதொழச்
சென் றுற்ற போது, பெருவேட்கை தருவாழ்வு பெற்ற தொண்டர் பெரும்பதியோ
ரெதிர்கொள்ளப் பேணி வந்தார். (கஅக)

மிக்கதிருத் தொண்டர்தொழு தணையத் தாமுற் தொழுதிழிந்து விடையவனென்
றெடுத்துப் பாடி, மைக்குலவு கண்டத்தார் மகிழ்ந்த கோயின் மன்னுதிருக் கோபுர
த்து வந்து தாழ்ந்து, தக்கதிருக் கடைக்காப்புச் சாத்திக் தேவர் தம்பெருமான் றிரு
வாயி லூடுசென்று, புக்கருளி வலங்கொண்டு புனிதர் முன்பு போற்றெடுத்துப் படி
யின்மேற் பொருந்த வீழ்ந்தார். (கஅஙக)

பொற்றிரள்கள் போற்புரிந்த சடையார் தம்பாற் பொங்கியெழுங் காதன்மிகப்
பொழிந்து விம்மிப், பற்றியெழு மயிர்ப்புளக மெங்கு மாகிப் பரந்திழியுங் கண்ணருவி
பாய நின்று, சொற்றிகழுந் திருப்பதிகம் பாடி யேத்திக் தொழுதுபுறத் தணைந்தருளித்
தொண்ட ரோடு, மொற்றிநகர் காதலித்தங் கினிது றைந்தா ருலகுய்ய வுலவாத
ஞானம் பெற்றார். (கஅஙஉ)

வே று.

இன்ன தன்மையிற் பின்னோ ரிருந்தன ரிப்பாற்
பன்னு தொல்புகழ்த் திருமயி லாபுரிப் பதியின்
மன்னு சீர்ப்பெரு வணிகர்தக் தோன்றலார் திறத்து
முன்ன மெய்திய தொன்றினை நிகழ்ந்தவா மொழிவாம். (கஅஙஙஎ)

அருகி னித்திறம் பெருக்குதற் கருங்கலம் பலவும்
பொருக டற்செலப் போக்கியப் பொருட்குவை நிரம்ப
வரும ரக்கல மனைப்படப் பணைக்கரை நிரைக்கு
மிருகி திப்பெருஞ் செல்வத்தி னெல்லையில் வளத்தார். (கஅஙஙஅ)

தம்மை யுள்ளவா றறிந்தபின் சங்கரற் கடிமை
மெய்ம்மை யேசெயும் விருப்பினின் மிக்கதோ ரன்பாற்
பொய்ம்மை நீக்கிமெய்ப் பொருளிது வெனக்கொளு முள்ளச்
செம்மை யேபுரி மனத்தினர் சிவநேச ரென்பார். (கஅஙஙஇ)

கற்றை வார்சடை முடியினு ரடியவர் கலப்பி
லுற்ற செய்கையி லொழிவின்றி யுருகிய மனமும்
பற்றி லாதெறிப் பரசம யங்களைப் பாற்றுஞ்
செற்ற மேவிய சிலமு முடையராய்த் திகழ்வார். (கஅகூசு)

ஆன நாள்செல வருமறைக் கவுணியர் பெருமான்
ஞான போனக நுகர்ந்தது நானில முய்ய
வேனை வெஞ்சமண் சாக்கிய மிழித்தழித் ததுவு
மூன மில்புக முடியர்பாற் கேட்டுவந் துளராய். (கஅகூள)

செல்வ மல்கிய சிரபுரச் சிறுவர்சே வடிக்கீ
ழெல்லை யில்லதோர் காதலி னிடையரு வுணர்வா
லல்லு நண்பக லும்புரிந் தவரருட் டிறமே
சொல்ல வுஞ்செயல் கேட்கவுந் தொழிலின ராஞர். (கஅகூஅ)

நிகழு மாங்கவர் நிதிப்பெருங் கிழவனின் மேலாய்த்
திகழு நீடிய திருவினிற் சிறந்துள ராகிப்
புகழு மேன்மையி லுலகினிற் பொலிந்துளா ரெனினு
மகவி லாமையின் மகிழ்மனை வாழ்க்கையின் மருண்டு. (கஅகூக)

அரிய நீர்மையி லருந்தவம் புரிந்தா னடியார்க்
குரிய வர்ச்சனை யுலப்பில செய்தவந் நலத்தாற்
கரிய வாங்குழல் மனைவியார் வயிறெனுங் கமலத்
தூரிய பூமக ளெனவொரு பெண்கொடி யுதித்தாள். (கஅசஅ)

நல்ல நாள்பெற வோரையி னலமிக வுதிப்பப்
பல்பெ ருங்கிளை யுடன்பெரு வணிகர்பார் முழுது
மெல்லை யில்தன முகந்துகொண் டியாவரு முவப்ப
மல்ல லாவண மறுகிடைப் பொழிந்துள மகிழ்ந்தார். (கஅசக)

ஆறு சூடிய முடியினு ரடியவர்க் கன்பா
லீறி லாதபூ சனைகள்யா வையுமிகச் செய்து
மாறிலா மறை யவர்க்குவேண் டினவெலா மளித்துப்
பேறு மற்றிது வேயெனும் பெருங்களி சிறந்தார். (கஅசஉ)

சூத நல்லினை மங்கலத் தொழின்முறை தொடங்கி
வேத நீதியில் விதியுளி வழா வகை விரித்த
சாத கத்தொழிற் சடங்குக டசதினஞ் செல்லக்
காதன் மேவிய சிறப்பினிற் கடிவிழா வயர்ந்தார். (கஅசஙூ)

யாவ ரும்பெரு மகிழ்ச்சியா லின்புறப் பயந்த
பாவை நல்லுறுப் பணிகளர் பண்பெலா நோக்கிப்
பூவி னுளென வருதலிற் பூம்பாவை யென்றே
மேவு நாமமும் விளம்பினர் புவியின்மேல் விளங்க. (கஅசஅ)

திங்க டோறுமுன் செய்யுமத் திருவளர் சிறப்பின்
மங்க லம்புரி நல்வினை மாட்சியிற் பெருக
வங்கண் மாநக ரமைத்திட வாண்டெதி ரணைந்து
தங்கு பேரொளிச் சிறடி தளர்நடை பயில. (கஅசஞ)

தளரு மின்னினங் குரமெனத் தபனியக் கொடியின்
வளரி ளந்தளிர்க் கிளையென மணிகிள ரொளியி
னளவி லஞ்சுடர்க் கொழுந்தென வணைவுறும் பருவத்
திளவ னப்பிணை யனையவர்க் கேழியாண் டெய்த. (கஅசசு)

அழகின் முன்னிளம் பதமென வணிவிளக் கென்ன
விழவு கொண்டெழும் பேதைய ருடன்விளை யாட்டிற்
கழலொ டம்மனை கந்துக மென்றுமற் றினைய
மழலை மென்கிளிக் குலமென மனையிடை யாடி. (கஅசஎ)

பொற்றெ டிச்சிறு மகளிரா யத்தெதாடும் புணர்ந்து
சிற்றின் முற்றவு மிழைத்துட னாடுந்தொழிற் சிறுசோ
றுற்ற வுண்டிகள் பயின்றெரு ளணிபூச லாடி
மற்று மின்புறு வண்டலாட் டயர்வுடன் வளர. (கஅசஅ)

தந்தை யாருமத் தளிரிளங் கொம்பனு டகைமை
யிந்த வையகத் தின்மையா லின்புறு களிப்பு
வந்த சிந்தையின் மகிழ்ந்துமற் றிவண்மணம் பெறுவா
னந்த மில்லென தருகிதிக் குரியனென் றறைந்தார். (கஅசகூ)

ஆய காள்களி லமண்பயில் பாண்டிநா டதனைத்
தூய ஞானமுண் டருளிய தோன்றலா ரணைந்து
மாய வல்லமண் கையரை வாதில்வென் றதுவு
மேய வெப்பிடர் மீனவன் மேலொழித் ததுவும். (கஅஇ0)

நெருப்பி லஞ்சினுர் தங்களே நீரிலொட் டியபின்
மருப்பு நீள்கழுக் கோலின்மற் றவரையேற் றியதும்
விருப்பி னற்றிரு நீறுமீ னவற்களித் தருளிப்
பொருப்பு வில்லியார் சாதனம் போற்றுவித் ததுவும். (கஅஇசு)

இன்ன வாறெலா மறிந்துளா ரெய்தியங் கிசைப்பச்
சொன்ன வர்க்கெலா மிருகிதி தூசுட னளித்து
மன்னு பூந்தராய் வள்ளலார் தமைத்திசை நோக்கிச்
சென்னி மேற்கரங் குவித்துவீழ்ந் தெழுந்துசெந் நின்று. (கஅஇஉ)

சுற்ற நீடிய கிளையெலாஞ் சூழ்ந்துடன் கேட்பக்
கற்ற மாந்தர்வாழ் காழிநா டுடையவர்க் கடியேன்
பெற்றெ டுத்தபூம் பாவையும் பிறங்கிய கிதியு
முற்று மெனனையுங் கொடுத்தனன் யானென்று மொழிந்தார். (கஅநிஉ)

எல்லை யில்பெருங் களிப்பினு லிப்பரி சியம்பி
முல்லை வெண்ணகை முகிழ்முலை யாருடன் முடியா
மல்லு செல்வத்தின் வளமையு மறைவளர் புகலிச்
செல்வ ரேயுடை யாரெனுஞ் சிந்தையான் மகிழ்ந்தார். (கஅஇச)

ஆற்று காள்களி லணங்களுர் கன்னிமா டத்தின்
பாற்ற டம்பொழின் மருங்கினிற் பனிமலர் கொய்வான்
போற்று வார்குழற் சேடிய ருடன்புறம் போந்து
கோற்றொடித் தளிர்க் கையினுன் முகைமலர் கொய்ய. (கஅநுஇ)

அன்ப ரன்புறு மார்வத்தி னளித்தபாய் கல்லாற்
பொன்பி றங்குநீர்ப் புகலிகா வலர்க்கிது புணரா
தென்ப துட்கொண்ட பான்மையோ ரெயிற்றிளம் பணியாய்
முன்ப ணைந்தது போலவோர் முள்ளெயிற் றரவு. (கஅஙிசு)

மௌவன் மாதலிப் பந்தரின் மறைந்துவந் தெய்திச்
செவ்வி நாண்முகை கவர்பொழு திளின்மலர்ச் செங்கை
நவ்வி வாள்விழி நறுநுதற் செறிநெறி கூந்தற்
கொவ்வை வாயவண் முஞிழ்விரல் கவர்ந்தது குறித்து. (கஅநிஎ)

நாலு தந்தமு மென்புறக் கவர்ந்தநஞ் சுருத்து
மேலெ மும்பணம் விரித்தநின் முடிவே படங்க
நீல வல்விடந் தொடர்ந்தெழ நேரிழை மென்பூ
மாலை தீயிடைப் பட்டது போன்றுள மயங்கி. (கஅநிஅ)

தரையில் வீழ்தரச் சேடியர் வெருக்கொண்டு தாங்கி
வரைசெய் மாடத்தி னுட்கொடு புகுந்திட வணிக
ருரையு மூள்ளமு நிலையழிந் தறுதயர் பெருகக்
கரையில் சுற்றமுந் தாமுமுன் கலங்கினர் கலுழ்ந்தார். (கஅநிகூ)

விடந்தொ லைத்திடும் விஞ்சையிற் பெரியரா மேலோ
ரடர்ந்த தீவிட மகற்றுதற் கணைந்துளா ரனேகர்
திடங்கொண் மந்திரந் தியானபா வகநிலை முட்டி
தொடர்ந்த செய்வினைத் தொழிலராய்த் தனித்தனிச் சூழ்வார். (கஅசஅ)

மருந்து மெண்ணில மாறில செய்யவும் வலிந்து
பொருந்து வல்விட மேழுவே கமுமுறை பொங்கிப்
பெருந்த டங்கண்மென் கொடியனு டலமிசைப் பிறங்கித்
திருந்து செய்வினை யாவையுங் கடந்துதீர்ந் திலதால். (கஅசக)

ஆவி தங்குபல் குறிகளு மடைவில வாக
மேவு காருட லிஞ்சைவித் தகரிது விதியென்
றேவும் வேலியி லுறுபெருஞ் சுற்றமு மலறிப்
பாவை மேல்விழுந் தழுதது படரொலிக் கடல்போல். (கஅசஉ)

சிந்தை வெந்துய ருறுசிவ நேசருந் தெளிந்து
வந்த செய்வினை யின்மையில் வையகத் துள்ளோ
ரிந்த வெவ்விட மொழிப்பவர்க் கீவனென் னுடைய
வந்த மின்னிதிக் குவையெனப் பறையறை வித்தார். (கஅசஙூ)

முரசி யம்பலு மூன்றுநா ளகவயின் முற்ற
வரசர் பாங்குளோ ருட்பட வவனிமே லுள்ள
கரையில் கல்வியோர் யாவரு மீண்டுதங் காட்சிப்
புரையில் செய்கையிற் றீர்ந்திடா தொழிந்திடப் போனார். (கஅசச)

சீரின் மன்னிய சிவநேசர் கண்டுள மயங்கிக்
காரின் மல்கிய சோலைசூழ் கமுமலத் தலைவர்
சாரு மவ்வள வும்முட றழலிடை யடக்கிச்
சேர வென்பொடு சாம்பல்சே மிப்பது தெளிவார். (கஅசஞி)

உடைய பிள்ளையார்க் கெனவிவ டனையுரைத் ததனு
லடைவு தன்புறு வதற்கிலை யாகமக் கென்றே
யிடரொ ழிந்தபின் னடக்கிய வென்பொடி சாம்பல்
புடைபெ ருத்தகும் பத்தினிற் புகப்பெய்து வைப்பார். (கஅஈக)

கன்னி மாடத்தின் முன்பு போற் காப்புற வமைத்துப்
பொன்னு முத்துமே லணிகலன் பூந்துகில் சூழ்ந்து
பன்னு தூவியின் பஞ்சணை விரைப்பள்ளி யதன்மேன்
மன்னு பொன்னரி மாலைக ளணிந்துவைத் தனரால். (கஅசஎ)

மாலை சாந்தொடு மஞ்சன நாடொறும் வழாமைப்
பாலி னேர்தரும் போனக மபவிளக் கினைய
சாலு நன்மையிற் றகுவன நாடொறுஞ் சமைத்தே
யேலு மாசெய யாவரும் வியப்பெய்து நாளில். (கஅசஅ)

சண்பை மன்னவர் திருவொற்றி யூர்நகர் சார்ந்து
பண்பு பெற்றநற் றொண்டர்க ளுடன்பணிந் திருந்த
நண்பு பிக்கநல் வார்த்தையங் நற்பதி யுள்ளோர்
வண்பு கழ்ப்பெரு வணிகர்க்கு வந்துரை செய்தார். (கஅசக)

சொன்ன வர்க்கெலாந் தாசொடு காசுபொன் னளித்தே
யின்ன தன்மைய ரெனவொணு மகிழ்சிறந் தெய்தச்
சென்னி வாழ்மதி யார்திரு வொற்றியூ ரளவுந்
தன்னு நீணடைக் காவணந் துகில்விதா னித்து. (கஅஎ0)

மகர தோரணம் வண்குலக் கமுகொடு கதலி
நிகரில் பல்கொடித் தாமங்க ளணிபெற நிரைத்து
நகர நீண்மறு கியாவையு நலம்பூணை யணியாற்
புகரில் பொன்னுல கிழிந்ததா மெனப்பொலி வித்தார். (கஅஎக)

இன்ன வாறணி செய்துபல் குறைவறப் பேலி
முன்ன மொற்றியூர் நகரிடை முத்தமிழ் விரகர்
பொன்ன டித்தலந் தலைபிசைப் பூவைனென் றெழுவா
ரந்த கர்ப்பெருந் தொண்டரு முடன்செல வணைந்தார். (கஅஎஉ)

ஆய வேலையி லருமறைப் புகலியர் பிரானு
மேய வொற்றியூர் பணிபவர் வியனக ரகன்று
காயல் சூழ்கரைக் கடன்மயி லாபுரி நோக்கித்
தூய தொண்டர்தங் குழாத்தொடு மெதிர்வந்து தோன்ற. (கஅஎஊ)

மாறில் வண்பெரு வணிகருந் தொண்டரு மலர்ந்த
நீறு சேர்தவக் குழாத்தினை நீளிடைக் கண்டே
யாறு சூடினர் திருமக ளரணேங் தாரென்
நீறி லாததோர் மகிழ்ச்சியி னுல்விழுந் திறைஞ்ச. (கஅஎச)

காழி நாடருங் கதிர்மணிச் சிவிகைகின் றிழிந்து
சூழி ரும்பெருந் தொண்டர்முன் றெழுதெழுந் தருளி
வாழி மாதவர் வணிகர்செய் திறஞ்சொலக் கேட்டே
யாழி சூழ்மயி லாபுரித் திருநக ரணைந்தார். (கஅஎடு)

அத்தி றத்துமுன் னிகழ்ந்தது திருவுள்ளத் தடைத்துச்
சித்த மின்புறு சிவநேசர் தஞ்செயல் வாய்ப்பப்
பொய்த்த வச்சமண் சாக்கியர் புறத்துறை யழிய
வைத்த வப்பெருங் கருணோகர் கான்மகிழ்ந் தருளி. (கoஎசு)

கங்கை வார்சடை யார்கபா லீச்சரத் தமர்ந்து
துங்க நீள்சுடர்க் கோபுரந் தொழுதுபுக் கருளி
மங்கை பாகர்தங் கோயிலை வலங்கொண்டு வணங்கிச்
செங்கை சென்னிமேற் குவிந்திடத் திருமுன்பு சேர்ந்தார். (கoஎஎ)

தேவர் தேவனைத் திருக்கபா லீச்சரத் தமுதைப்
பாவை பாகனைப் பரிவுறு பண்பினைப் பரவி
மேவு காதலின் விரும்பிய விரைவினில் விழுந்து
ஈவின் வாய்மையிற் போற்றினர் ஞானசம் பந்தர். (கoஎஅ)

போற்றி மெய்யருட் டிறம்பெறு பரிவுடன் வணங்கி
மீற்றின் மேனியி னிறைமையிர்ப் புளகங்க ணெருங்கக்
கூற்ற டர்த்தவர் கோயிலின் புறம்புபோந் தருளி
யாற்று மின்னருள் வணிகர்மேற் செலவருள் செய்வார். (கoஎக)

ஒருமை யுய்த்தநல் லுணர்வினீ ருலகவ ரறிய
வருமை யாற்பெறு மகளென்பு நிறைத்தவக் குடத்தைப்
பெரும யானத்து நடம்புரி வார்பெருங் கோயிற்
றிரும திற்புற வாய்தலிற் கொணர்கென்று செப்ப. (கoஅo)

அந்த மில்பெரு மகிழ்ச்சியா லவனிமேற் பணிந்து
வந்து தந்திரு மனையினின் மேவியம் மருங்கு
கந்த வார்பொழிற் கன்னிமா டத்தினிற் புக்கு
வெந்த சாம்பலோ டென்புசேர் குடத்தைவே றெடுத்து. (கoஅக)

மூடு பன்மணிச் சிவிகையுட் பெய்துமுன் போத
மாடு சேடிய ரினம்புடை சூழ்ந்துவந் தணைய
வாடன் மேவினர் திருக்கபா லீச்சர மணைந்து
நீடு கோபுரத் தெதிர்மணிச் சிவிகையை நீக்கி. (கoஅஉ)

அங்க ணுளர்த்த மபிமுகத் தினிலடி யுறைப்பான்
மங்கை யென்புசேர் குடத்தினை வைத்துமுன் வணங்கப்
பொங்கு நீள்புனற் புகலிகா வலர்புவ னத்துத்
தங்கி வாழ்பவர்க் குறுதியா நிலைமைசா றிப்பார். (கoஅஙு)

மாட மோங்கிய மயிலைமா நகருளார் மற்று
நாடி வாழ்பவர் நன்றியில் சமயத்தி னுள்ளோர்
மாடு சூழ்ந்துகாண் பதற்குவந் தெய்தியே மலிய
நீடு தேவர்க ளேனையோர் விசும்பிடை நெருங்க. (கoஅசு)

தொண்டர் தம்பெருங் குழாம்புடை சூழ்தரத் தொல்லை
யண்டர் நாயகர் கோபுர வாயினை ரணைந்து
வண்டு வார்குழ லாளென்பு நிறைந்தமட் குடத்தைக்
கண்டு தம்பிரான் கருணையின் பெருமையே கருதி. (கoஅஞு)

இந்த மானிலத் திறந்துளோ ரென்பினைப் பின்னு
நந்து நன்னெறிப் படுத்திட நன்மையாங் தன்மை
யந்த வென்பொடு தொடர்ச்சியா மெனவரு ணோக்காற்
சிந்து மங்கமங் குடையபூம் பாவைபோ செப்பி. (கஅஅ)

மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடி
மண்ண லாரடி யார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணி ஞலவர் நல்விழாப் பொலிவுகண் டார்த
லுண்மை யாமெனி னுலகர்முன் வருகென வுரைப்பார். (கஅஎ)

மன்னு வார்சடை யாரைமுன் ருழுதுமட் டிட்ட
வென்னு நற்பதி கத்தினிற் போதியோ வென்னு
மன்ன மெய்த்திரு வாக்கெனு மமுதமவ் வங்கந்
துன்ன வந்துவந் தூருவமாய்த் தொக்கதக் குடத்துள். (கஅஅ)

ஆன தன்மையி னத்திருப் பாட்டினி னடைவே
போன வாயுவும் வடிவமும் பொலிவொடு நிரம்பி
யேனை யக்குடத் தடங்கிமுன் னிருந்தெழு வதன்முன்
ஞான போனகர் பின்சமண் பாட்டினை நவில்வார். (கஅக)

தேற்ற மில்சமண் சாக்கியத் திண்ணிரிச் செய்கை
யேற்ற தன்றென வெடுத்துரைப் பார்களென்ற போது
கோற்ருெ டிச்செங்கை தோற்றிடக் குடமுடைக் தெழுவாள்
போற்று தாமரைப் போதவிழ்ந் தெழுந்தனள் போன்ருள். (கஅகஅ)

எடுத்த பாட்டினில் வடிவுபெற் றிருநான்கு திருப்பாட்
டடுத்த வம்முறைப் பன்னிரண் டாண்டள வீணந்து
தொடுத்த வெஞ்சமண் பாட்டினிற் ரூன்றிடக் கண்டு
விடுத்த வேட்கையர் திருக்கடைக் காப்புமேல் விதித்தார். (கஅகக)

மே வு று.

ஆங்கன மெழுந்து நின்ற வணங்கினை நோக்கு வார்க
ளீங்கிது காணீ ரென்ரு வற்புத மெய்தும் வேலைப்
பாங்குசூழ் தொண்ட ராஞை ரரகர வென்னப் பார்மே
லோங்கிய வோசை யும்பர் நாட்டினை யுற்ற தன்றே. (கஅகஉ)

தேவரு முனிவர் தாமுந் திருவருட் சிறப்பு நோக்கிப்
பூவரு விரைகொண் மாரி பொழிந்தன சொழிந்த மண்ணோர்
யாவரு மிருந்த வண்ண மெம்பிரான் கருணை யென்றே
மேவிய கைக ளுச்சி மேற்குவித் திறைஞ்சி வீழ்ந்தார். (கஅகஊ)

அங்கவ ளருவங் காண்பா ரதிசய மிகவு மெய்திப்
பங்கமுற் ருரே போன்ரூர் பரசம யத்தி னுள்ளோ
ரெங்குள செய்கை தான்மற் றென்செய்த வாறி தென்று
சங்கையா முணர்வு கொள்ளுஞ் சமணர்தள் ளாடி வீழ்ந்தார். (கஅகச)

கன்னிதன் வனப்புத் தன்னைக் கண்களான் முடியக் காணூர்
முன்னுறக் கண்டார்க் கெல்லா மொய்கருங் குழலின் பார
மன்னிய வதன செந்தா மரையின்மேற் கரிய வண்டு
துன்னிய வொழுங்கு தூற்ற சூழல்போ லிருண்டு தோன்ற. (கஅகஎ)

பாங்கிணி சுரும்பு மொய்த்த பனிமல ரளகப் பந்தி
தேங்கம ழாரஞ் சேருந் திருநுதல் விளக்க நோக்கிற்
பூங்கொடிக் கழகின் மாரி பொழிந்திடப் புயற்கீ ழிட்ட
வாங்கிய வான வில்லின் வளரொளி வனப்பு வாய்ப்ப. (கஅகசு)

புருவமென் கொடிகள் பண்டு புரமெரித் தவர்த நெற்றி
யொருவிழி யெரியி னீரு யருள்பெற வுளஞ்சு காமன்
செருவெழுந் தனுவ தொன்றுஞ் சேமவில் லொன்று மாக
விருபெருஞ் சிலைகண் மூன்கொண் டெழுந்தன போல வேற்ப. (கஅகஎ)

மண்ணிய மணியின் செய்ய வளரொளி மேனி யாடன்
வனப்புக் காணிற் காமரு வதனத் திங்கட்
டண்ணளி விரிந்த சோதி வெள்ளத்திற் றகைவி னீள
வொண்ணிறக் கரிய செய்ய கயலிரண் டொத்து லாவ. (கஅகயு)

பணிவள ரல்குற் பாவை நாசியும் பவள வாயு
நணியபே ரொளியிற் ரோன்று நலத்தினை நாடு வார்க்கு
மணிநிறக் கோபங் கண்டு மற்றது வவ்வத் தாழு
மணிநிறக் காமரூபி யனையதா மழகு காட்ட. (கஅகக)

இளமயி லனைய சாய லேந்திழை குழைகொள் காது
வளமிகு வனப்பி னுலும் வடிந்ததா ளுடைமை யாலுங்
கிளரொளி மகர வேறு கெழுமிய தன்மை யாலு
மளவில்சீ ரனங்கன் வென்றிக் கொடியிரண் டனைய வாக. (கஅ00)

வீற்பொலி தரளக் கோவை விளங்கிய கழுத்து மீது
பொற்பமை வதன மாகும் பதுமநன் னிதியம் பூத்த
நற்பெரும் பணில மென்னு நன்னிதி போன்று தோன்றி
யற்பொலி கண்டர் தந்த வருட்கடை யாளங் காட்ட. (கஅ0க)

எரியவிழ் காந்தண் மென்பூத் தலைதொடுத் திசைய வைத்துத்
திரள்பெறச் சுருக்குஞ் செச்சை மாலையோ தெரியின் வேறு
கருநெடுங் கயற்கண் மங்கை கைகளாய்க் காந்தி வெள்ள
மருவிழிந் தனவோ வென்னு மதிசயம் வடிவிற் ரோன்ற. (கஅ0உ)

வர்கெழு மார்பிற் பொங்கு மேந்திளங் கொங்கை நாகக்
கார்கெழு விடத்தை நீக்குங் கவுணியர் தலைவர் நோக்கா
லார்திரு வருளிற் பூரித் தடங்கிய வமுத கும்பச்
சீர்கெழு முகிழைக் காட்டுஞ் செவ்வியிற் றிகழ்ந்து தோன்ற. (கஅ0ஊ)

காமவே ளென்னும் வேட னுந்தியிற் கரந்து கொங்கை
நேமியம் புட்க டம்மை யகப்பட நேரி தாய
தாமரீன் கண்ணி சேர்த்த சலாகைதூக் கியதே போலும்
வாமமே கலைசூழ் வல்லி மருங்கின்மே லுரோம வல்லி. (கஅ0ச)

பிணியவிழ் மலர்மென் கூந்தற் பெண்ணமு தனையாள் செம்பொ
னணிவள ரல்கு றங்க ளரவுசெய் பிழையா லஞ்சி
மணிகிளர் காஞ்சி சூழ்ந்து வனப்புடை யல்கு லாகிப்
பணியுல காளுஞ் சேடன் பணம்விரித் தடைதல் காட்ட. (கஅ0ரு)

வரிமயி லனைய சாயன் மங்கைபொற் குறங்கின் மாமை
கரியிளம் பிடிக்கை வென்று கதலிமென் றண்டு காட்டத்
தெரிவுறு மவர்க்கு மென்மைச் செழுமுழுந் தாளின் செவ்வி
புரிவுறு பொற்பத் தென்னப் பொலிந்தொளி விளங்கிப் பொங்க. (கக0சு)

பூவலர் நறுமென் கூந்தற் பொற்கொடி கணைக்கால் காம
னுவகா ழிகையே போலு மழகினின் மேன்மை யெய்த
மேவிய செம்பொற் றட்டின் வனப்பினை மீதிட் டென்று
மோவியர்க் கெழுத வொண்ணுப் பரட்டொளி யொளிர்வுற் றோங்க. (கக0எ)

கற்பக மீன்ற செல்விக் காமரு பவளச் சோதிப்
பொற்றிரள் வயிரப் பத்திப் பூந்துணர் மலர்ந்த போலு
நற்பதம் பொலிவு காட்ட ஞாலமும் விசும்பு மெல்லா
மற்புத மெய்தத் தோன்றி யழகினுக் கணியாய் நின்ரூள். (கக0அ)

எண்ணிலாண் டெய்தும் வேதாப் படைத்தவ ளெழிலின் வெள்ள
ணுண்ணுநான் முகத்தாற் கண்டா னவளினு நல்லா டன்பாற்
புண்ணியப் பதினு ருண்டு பேர்பெறும் புகலி வேந்தர்
கண்ணுதல் கருணை வெள்ள மாயிர முகத்தாற் கண்டார். (கக0க)

வே று.

இன்னணம் விளங்கிய வேர்கொள் சாயலா
டன்னைமுன் கண்ணுறக் கண்ட தாதையார்
பொன்னணி மாளிகைப் புகலி வேந்தர்தாள்
சென்னியிற் பொருந்தமுன் சென்று வீழ்ந்தனர். (கககo)

அணங்கினு மேம்படு மன்ன மன்னவள்
பணம்புரி யரவரைப் பரமர் முன்பணிக்
கிணங்கிய முகின்மதிற் ரண்பை யேத்தலே
வணங்கியே நின்றனண் மண்ணு ளோர்தொழ. (கககக)

சீர்கெழு சிவநேசர் தம்மை முன்னமே
கார்கெழு சோலைசூழ் காழி மன்னவ
ரோர்கெழு சிறப்பினும் மகளைக் கொண்டினிப்
பார்கெழு மனையினிற் படர்மி னென்றலும். (கககஉ)

பெருகிய வருள்பெறும் வணிகர் பிள்ளையார்
மருவுதா மரையடி வணங்கிப் போற்றிநின்
றருமையா லடியனேன் பெற்ற பாவையைத்
திருமணம் புணர்க்தருள் செய்யு மென்றலும். (கககங)

மற்றவர் தமக்குவண் புகலி வாணர்நீர்
பெற்றபெண் விடத்தினுல் வீக்த பின்னையான்
கற்றைவார் சடையவர் கருணை காண்வர
வுற்பவிப் பித்தலா லுரைத சாதென. (கககச)

வணிகருஞ் சுற்றமு மயங்கிப் பிள்ளையா
ரணிமல ரடியில்வீழ்ந் தரற்ற வாங்கவர்
தணிவினீள் பெருந்துயர் தணிய வேதனூற்
றுணிவினை யருள்செய்தார் தூய வாய்மையார். (கககஞ)

தெள்ளுநீ தியின்முறை கேட்ட சேர்ஞாலம்
வெள்ளமும் வணிகரும் வேட்கை நீத்திடப்
பள்ளநீர்ச் செலவெனப் பரமர் கோயிலி
னுள்ளெழுந் தருளினு ருடைய பிள்ளையார். (ககஙசு)

பான்மையால் வணிகரும் பாவை தன்மண
மேனையோர்க் கிசைகிலே னென்று கொண்டு போய்
வானுயர் கன்னிமா டத்து வைத்தனர்
தேனமர் கோதையுஞ் சிவத்தை மேவினாள். (ககஙஎ)

மே வ று.

தேவர்பிரா னமர்ந்தருளுந் திருக்கபா லீச்சரத்து
மேவியஞா னத்தலைவர் விரிஞ்சன்முத லெவ்வுயிர்க்குங்
காவலனூர் பெருங்கருணை கைதந்த படிபோற்றிப்
பாவலர்செந் தமிழ்பாடிப் பன்முறையும் பணிந்தெழுவார். (ககஙஅ)

தொழுதுபுறம் போந்தருளித் தொண்டர்குழாம் புடைசூழப்
பழுதில் புகழ்த் திருமயிலைப் பதியிலமர்ந் தருளுநாண்
முழுதுலகுந் தருமிறைவர் முதற்றூனம் பலவிறைஞ்ச
வழுதுலகை வாழ்வித்தா ரப்பதியின் மருங்கணைவார். (ககஙக)

திருத்தொண்ட ரங்குள்ளார் விடைகொள்ளச் சிவநேசர்
வருத்தமகன் றிடமதுர மொழியருளி விடைகொடுத்து
நிருத்தருறை பிறபதிகள் வணங்கிப்போய் நிறைகாத
லருத்தியொடுந் திருவான்மி யூர்பணிய வணைவுற்றார். (ககஉ0)

திருவான்மி யூர்மன்னுந் திருத்தொண்டர் சிறப்பெதிர
வருவார்மங் கலவணிகண் மறுகுநிரைத் தெதிர்கொள்ள
வருகாத லிழிந்தருளி யவர்வணங்கத் தொழுதன்பு
தருவார்தங் கோயின்மணித் தடநெடுங்கோ புரஞ்சார்ந்தார். (ககஉக)

மிக்குயர்ந்த கோபுரத்தை வணங்கிவியன் றிருமுன்றிற்
புக்கருளிக் கோயினாப் புடைவலங்கொண் டுள்ளேணீங்கு
கொக்கிறகு மதிக்கொழுந்துங் குளிர்புனலு மொளிர்கின்ற
செக்கர்நிகர் சடைமுடியார் சேவடியின் கீழ்த்தாழ்ந்தார். (ககஉஉ)

தாழ்ந்துபல முறைபணிந்து தம்பிரான் முன்னின்று
வாழ்ந்துகளி வரப்பிறவி மருந்தான பெருந்தகையைச்
சூழ்ந்தவிசைத் திருப்பதிகச் சொன்மாலை விளுவுரையால்
வீழ்ந்தபெருங் காதலுடன் சாத்திபிக விண்புற்றார். (ககஉங)

பரவிவரு மானந்த நிறைந்தருளி கண்பனிப்ப
விரவுமயிர்ப் புளகங்கண் மிசைவிளங்கப் புறத்தணைவுற்
றரவநெடுந் திரைவேலை யணிவான்மி யூரதனுட்
சிரபுரத்துப் புரவலனூர் சிலநாளங் கினிதமர்ந்தார். (ககஉச)

அங்கணமர் வாருலகா ளுடையாரை யருந்தமிழின்
பொங்குமிசைப் பதிகங்கள் பலபோற்றிப் போந்தருளிக்
கங்கையணி மணிமுடியார் பதிபலவுங் கலந்திறைஞ்சிச்
செங்கண்விடைக் கொடியார்தம் மிடைச்சுரத்தைச் சேர்வுற்றார். (ககஉஙி)

சென்னியிள மதியணிந்தார் மருவுதிருவி டைச்சுரத்து
மன்னுதிருத் தொண்டர்குழா மெதிர்கொள்ள வந்தருளி
நன்னெடுங்கோ புரமிறைஞ்சி யுட்புகுந்து நற்கோயி
றன்னேவலங் கொண்டணைந்தார் தம்பிரான் றிருமுன்பு. (ககஉசு)

கண்டபொழு தேகலந்த காதலாற் கைதலைமேற்
கொண்டுதல முறவிழுந்து குலவுபெரு மகிழ்ச்சியுடன்
மண்டியபே ரன்புருகி மயிர்முகிழ்ப்ப வணங்கியெழுந்
தண்டர்பிரான் றிருமேனி வண்ணங்கண் டதிசயிப்பார். (ககஉள)

இருந்தவிடைச் சுரமேவு மிவர்வண்ண மென்னேயென்
றருந்தமிழின் றிருப்பதிகத் தலர்மாலை கொடெபரவித்
திருந்துமனங் கரைந்துருகத் திருக்கடைக்காப் புச்சாத்திப்
பெருந்தனிவாழ் வினைப்பெற்றூர் பேருலகின் பேரூனூர். (ககஉஅ)

நிறைந்தாரா வேட்கையினு னின்றிறைஞ்சிப் புறம்போந்தங்
குறைந்தருளிப் பணிகின்ரு ருமைபாக ரருள்பெற்றுச்
சிறந்ததிருத் தொண்டருட னெழுந்தருளிச் செந்துருதி
யறைந்தளிகள் பயில்சாரற் றிழுக்கழுக்குன் றினையணைந்தார். (ககஉகூ)

சென்றணையும் பொழுதின்கட் டிருத்தொண்ட ரெதிர்கொள்ளப்
பொன்றிகழு மணிச்சிவிகை யிழிந்தருளி யுடன்போந்து
மன்றல்விரி நறுஞ்சோலைத் திருமலையை வலங்கொண்டு
பின்றயங்குஞ் சடையாரை விருப்பினுடன் பணிகின்ரூர். (ககஉ0)

திருக்கழுக்குன் றத்தமர்ந்த செங்கனகத் தனிக்குன்றைப்
பெருக்கவளர் காதலினூற் பணிந்தெழுந்து பேராத
கருத்தினுடன் காதல்செயுங் கோயில்கழுக் குன்றென்று
திருப்பதிகம் புனேந்தருளிச் சிந்தைநிறை மகிழ்வுற்றூர். (ககஉக)

இன்புற்றங் கமர்ந்தருளி யீறில்பெருந் தொண்டருடன்
பின்பெற்ற வேணியினு ரருள்பெற்றுப் போந்தருளி
யென்புற்ற மணிமார்ப ரெல்லையிலா வாட்சிபுரிந்
தன்புற்று மகிழ்ந்ததிரு வச்சிறுபாக் கத்தணைந்தார். (ககஉஉ)

ஆதிமுதல் வரைவணங்கி யாட்சிகொண்டா ரெனமொழியுங்
கோதிறிருப் பதிகவிசை குலாவியபா டலிற்போற்றி
மாதவத்து முனிவருடன் வணங்கிமகிழ்ந் தின்புற்றுத்
தீதகற்றுஞ் செய்கையினூர் சின்னளங் கமர்ந்தருளி. (ககஉங)

ஏறணிந்த வெல்கொடியா ரினிதமர்ந்த பதிபிறவு
நீறணிந்த தொண்டருட னெதிர்கொள்ள நேர்ந்திறைஞ்சி
வேறுபல நதிகானங் கடந்தருளி விரிசடையி
லாறணிந்தார் மகிழ்ந்ததிரு வரசிலியை வந்தடைந்தார். (ககஉச)

அரசிலியை யமர்ந்தருளு மங்கணர சைப்பணிந்து
பரசியெழு திருப்புறவார் பனங்காட்டூர் முதலாய
விரைசெய்மலர்க் கொன்றையினூர் மேவுபதி பலவணங்கித்
திரைசெய்நெடுங் கடலுலகத்த திருத்தில்லை நகரணைந்தார். (ககஉஇ)

எல்லையின்ஞா னத்தலைவ ரெழுந்தருள வெதிர்கொள்வார்
தில்லையில்வா ழந்தணர்மெய்த் திருத்தொண்டர் சிறப்பினெடு
மல்லியெதிர் பணிந்திறைஞ்ச மணிமுத்தின் சிவிகையிழிந்
தல்குபெருங் காதலுட னஞ்சலிகொண் டணைகின்றார். (ககங்க)

திருவெல்ல யிற்பணிந்து சென்றணைவார் சேண்விசும்பை
மருவிவிளங் கொளிதழைக்கும் வடதிசைவா யிலைவணங்கி
யுருகுபெருங் காதலுட னுட்புகுந்து மறையினெலி
பெருகிவளர் மணிமாடப் பெருந்திருவீ தியையணைந்தார். (ககஙஎ)

நலமலியுந் திருவீதி பணிந்தெழுந்து நற்றவர்தங்
குலநிறைந்த திருவாயில் குவித்தமலர்ச் செங்கையொடு
தலமுறமுன் ரூழ்ந்தெய்தித் தபனியமா ளிகைமருங்கு
வலமுறவந் தோங்கியபே ரம்பலத்தை வணங்கினார். (ககஙஅ)

வணங்கிபிக மனமகிழ்ந்து மாலயனுந் தொழும்பூத
கணங்கண்மிடை திருவாயில் பணிந்தெழுந்து கண்களிப்ப
வணங்குதனி கண்டருள வம்பலத்தே யாடுகின்ற
குணங்கடந்த தனிக்கூத்தர் பெருங்கூத்துக் கும்பிடுவார். (ககஙக)

தொண்டர்மனம் பிரியாத திருப்படியைத் தொழுதிறைஞ்சி
மண்டுபெருங் காதலினு னேக்கிமுக மலர்ந்தெழுவா
ரண்டமெலா நிறைந்தெழுந்த வானந்தத் துள்ளலேக்து
கண்டபே ரின்பத்தின் கரையில்லா நிலையணைந்தார். (ககசஎ)

அந்நிலைமை யடைந்துதிளைத் தாங்கெய்தாக் காலத்தின்
மன்னுதிரு வம்பலத்தை வலங்கொண்டு போந்தருளிப்
பொன்னணிமா ளிகைவீதிப் புறத்தணைந்து போதுதொறு
மின்னிசைவண் டமிழ்பாடிக் கும்பிட்டங் கினிதமர்ந்தார். (ககசக)

திருந்தியசீர்த் தாதையார் சிவபாத விருதயரும்
பொருந்துதிரு வளர்புகலிப் பூசுரரு மாதவரும்
பெருந்திருமா லயன்போற்றும் பெரும்பற்றப் புலியூரி
லிருந்தமிழா கரரணைந்தா ரெனக்கேட்டு வந்தணைந்தார். (ககசஉ)

ஆங்கவரைக் கண்டுசிறப் பளித்தருளி யவரோடுங்
தாங்கரிய காதலினூற் றம்பெருமான் கழல்வணங்க
வோங்குதிருத் தில்லைவா ழந்தணரு மூடனுகத்
தேங்கமழ்கொன் றைச்சடையார் திருச்சித்றம் பலம்பணிந்தார். (ககசஙூ)

தென்புகலி யந்தணருந் தில்லைவா ழந்தணர்மு
னன்புகெறி பெருக்குவித்த வாண்டகையா ரடிபோற்றிப்
பொன்புரிசெஞ் சடைக்கூத்த ரருள்பெற்றுப் போந்தருளி
யின்புறுதோ ணியினமர்ந்தார் தமைவணங்க வெழுந்தருள. (ககசச)

நற்றவர்தங் குழாத்தோடு நம்பர்திரு நடஞ்செய்யும்
பொற்பதியின் றிருவெல்லை பணிந்தெழுந்து புறம்போந்து
பெற்றமுயர்த் தவரமர்ந்த பிறபதியும் புக்கிறைஞ்சிக்
கற்றவர்கள் பரவுதிருக் கழுமலமே சென்றடைவார். (ககசஙி)

பல்பதிகள் கடந்தருளிப் பன்னிரண்டு பெயர்படைத்த
தொல்லேலவளப் பூந்தராய் தூரத்தே தோன்றுதலு
மல்குதிரு மணிமுத்தின் சிவிகையிழிந் தெதிர்வணங்கிச்
செல்வமிகு பதியதன்மேற் றிருப்பதிக மருள்செய்வார். (ககசகூ)

மன்னுமிசை மொழிவண்டார் குழலரிவை யென்றெடுத்து
மின்னுசுடர் மாளிகைவிண் டாங்குவபோல் வேணுபுர
மென்னுநிறை சொன்மாலை யெடுத்தியம்பி யெழுந்தருளிப்
புன்னைமணங் கமழ்புறவப் புறம்பணையில் வந்தணைந்தார். (ககசஎ)

வாழிவளர் புறம்பணையின் மருங்கணைந்து வரிவண்டு
சூழுமலர் கறுந்தீப தூபங்க ளுடன்றெழுது
காழிகர் சேர்மினெனக் கடைமுடிந்த திருப்பதிக
மேழிசையி னுடன்பாடி யெயின்மூதூ ருட்புகுந்தார். (ககசஅ)

சேணுயர்ந்த திருத்தோணி வீற்றிருந்த சிவபெருமான்
ரூணினேன்த வாதரவின் றலைப்பாடு தனேயுன்னி
நீணிலக்கோ புரமணைந்து நேரிறைஞ்சிப் புக்கருளி
வாணிலவு பெருங்கோயில் வலங்கொண்டு முன்பணிந்தார். (ககசகூ)

முன்னிறைஞ்சித் திருவருளின் முழுநோக்கம் பெற்றேறிப்
பொன்னிமயப் பாவையுடன் புணர்ந்திருந்த புராதனரைச்
சென்னிமிசைக் குவித்தகரங் கொடிவிழுந்து நிலத்தெழுந்து
மன்னுபெரு வாழ்வெய்தி மனங்களிப்ப வணங்குவார். (ககடுo)

பரவுதிருப் பதிகங்கள் பலவுமிசை யினிற்பாடி
விரவியகண் ணருவிநீர் வெள்ளத்திற் குளித்தருளி
யரவணிந்தா ரருள்பெருகப் புறம்பெய்தி யன்பருடன்
சிரபுரத்துப் பெருந்தகையார் தந்திருமா ளிகைசேர்ந்தார். (ககடுக)

மாளிகையி னுள்ளணைந்து மறையவர்கட் கருள்புரிந்து
தாள்பணியும் பெருங்கிளைக்குத் தகுதியினுற் றலையளிசெய்
தாளுடைய தம்பெருமா னடியவர்க ளுடனமர்ந்து
நீளவரும் பேரின்ப மிகப்பெருக நிகழுநாள். (ககடுஉ)

காழிநா டுடையபிரான் கழல்வணங்கி மகிழ்வெய்த
வாழியினு மிகப்பெருகு மாசையுடன் றிருமுருகர்
வாழிதிரு நீலகக்கர் முதற்றொண்டர் மற்றெனையோர்
சூழுநெடுஞ் சுற்றமுடன் றோணிபுரத் தொழுதணைந்தார். (ககடுங)

வந்தவரை யெதிர்கொண்டு மனமகிழ்ந்து சண்பையர்கோ
னந்தமில்சீ ரடியார்க ளவரோடு மினிதமர்ந்து
சுந்தரவா ணங்கினுடன் றோணியில்வீற் றிருந்தாரைச்
சென்தமிழின் பந்தத்தாற் றிருப்பதிகம் பலபாடி. (ககடுச)

பெருமகிழ்ச்சி யுடன்செல்லப் பெருந்தவத்தாற் பெற்றவரு
மருவுபெருங் கிளையான மறையவரு முடன்கூடித்
திருவளர்ஞா னத்தலைவர் திருமணஞ்செய் தருளுதற்குப்
பருவமிது வென்றெண்ணி யறிவிக்கும் பாங்கணைந்தார். (ககடுடு)

நாட்மெறை முறையொழுக்க ஞானபோ னகருக்குய்
கூட்டுவது மணங்கொள்வார் கோதின்மறை நெறிச்சடங்கு
காட்டவரும் வேள்விபல புரிவதற்கோர் கன்னிதனே
வேட்டருள வேண்டுமென விண்ணப்பஞ் செய்தார்கள். (ககஙிசு)

மற்றவர்த மொழிகேட்டு மாதவத்தின் கொழுந்தனையார்
சுற்றமுறு பெரும்பாசத் தொடர்ச்சிவிடு நிலைமையராய்ப்
பெற்றமுயர்த் தவரருண்முன் பெற்றதிரு விசையாது
மூற்றியதா யினுங்கூடா தென்றவர்முன் மொழிந்தருள. (ககருஎ)

அருமறையோ ரவர்பின்னுங் கைதொழுதங் கறிவிப்பா
ரிருநிலத்து மறைவழக்க மெடுத்தீர்நீ ராதலினுல்
வருமுறையா லதுதொழிலின் வைதிகமா கெறியொழுகுந்
திருமணஞ்செய் தருளுதற்குத் திருவுள்ளஞ் செய்யுமென. (ககருஅ)

மறைவாழ வந்தணர்தம் வாய்மையொழுக் கம்பெருகுந்
துறைவாழச் சுற்றத்தார் தமக்கருளி யுடன்படலும்
பிறைவாழுந் திருமுடியிற் பெரும்புனலோ டரவணிந்த
கறைவாழுங் கண்டத்தார் தமைத்தொழுது மனங்களித்தார். (ககருக)

திருஞான சம்பந்தர் திருவுள்ளஞ் செய்ததற்குத்
தருவாய்மை மறையவருந் தாதையருந் தாங்கரிய
பெருவாழ்வு பெற்றுராய்ப் பிஞ்ஞகனு ருளென்றே
யுருகாநின் றின்பமுறு முளமகிழ்ச்சி யெய்துவார். (ககசுஏ)

ஏதமில்சீர் மறையவரி லேற்றகுலத் தோடிசைவா
னுதர்திருப் பெருமணத்து நம்பாண்டார் நம்பிபெறுங்
காதலியைக் காழிநா டுடையபிரான் கைப்பிடிக்கப்
போதுமவர் பெருந்தன்மை யெனப்பொருந்த வெண்ணினுர். (ககசுக)

திருஞான சம்பந்தர் சீர்பெருக மணம்புணரும்
பெருவாழ்வு திருத்தொண்டர் மறையவர்கண் மிகப்பேண
வருவாரும் பெருஞ்சுற்ற மகிழ்சிறப்ப மகட்பேசத்
தருவார்தண் பணைநல்லூர் சார்கின்றுர் தாதையார். (ககசுஉ)

மிக்கதிருத் தொண்டர்களும் வேதியரு முடனேகத்
திக்குநிகழ் திருநல்லூர்ப் பெருமணத்தைச் சென்றெய்தத்
தக்கபுகழ் நம்பாண்டார் நம்பிதா மதுகேட்டுச்
செக்கர்முடிச் சடையார்தந் திருப்பாதந் தொழுதெழுவார். (ககசுங)

ஒப்பரிய பேருவகை யோங்கியெழு முள்ளத்தா
லப்புறைறை குடம்விளக்கு மறுகெல்லா மணிபெருக்கிச்
செப்பரிய வார்வமிகு பெருஞ்சுற்றத் தொடுஞ்சென்றே
யெப்பொருளு மெய்தினே னெனத்தொழுதங் கெதிர்கொண்டார். (ககசுச)

எதிர்கொண்டு மணிமாடத் தினிலெய்தி யின்பமுறு
மதுரமொழி பலமொழிந்து வரன்முறையாற் சிறப்பளிப்பச்
சதுர்முகனின் மேலாய சண்பைவரு மறையவரு
முதிருணர்வின் மாதவரு மேனைந்தறிற மொழிகின்றுர். (ககசுஙி)

ஞானபோ னகருக்கு நற்றவத்தி னெழுக்கத்தா
லானமில்சி லத்தும்பான் மகட்பேசி வந்ததென
வானபே றந்தணர்பா லருளுடைமை யாமென்று
வானளவு நிறைந்தபெரு மனமகிழ்ச்சி யொடுமொழிவார். (கசசுசு)

உம்மூடைய பெருந்தவத்தா லுலகனேத்து மீன்றளித்த
வம்மைதிரு முலைப்பாலிற் குழைத்தவா ரமுதுண்டார்க்
கெம்மூடைய குலக்கொழுந்தை யாமுய்யத் தருகின்றீரும்
வம்மினென வுரைசெய்து மனமகிழ்ந்து செலவிடுத்தார். (கசசுள)

பேருவகை யாலிசைவு பெற்றவர்தா மீண்டனேந்து
காருலவு மலர்ச்சோலைக் கழுமலத்தை வந்தெய்திச்
சீருடைய பிள்ளையார்க் கவர்சேர்ந்த படிசெப்பிப்
பார்குலவுந் திருமணத்தின் பான்மைவினை தொடங்குவார். (கசசுஅ)

திருமணஞ்செய் கலியாணத் திருநாளுந் திகழ்சிறப்பின்
மருவியவோ ரையுங்கணித மங்கலநூ லவர்வகுப்பப்
பெருகுமண நாளோலை பெருஞ்சிறப்பி னுடன்போக்கி
யருள்புரிந்த நன்னுளி லணிமுளைப்பா லிகைவிதைத்தார். (கசசுக)

செல்வமலி திருப்புகலிச் செழுந்திருவீ திகளெல்லா
மல்குநிறை குடம்விளக்கு மகரதோ ரணநிரைத்தே
யெல்லையிலா வொளிமுத்து மாலிகளெங் கணுநாற்றி
யல்குபெருந் திருவோங்க வணிசிறக்க வலங்கரித்தார். (கசஎ0)

எங்கணுமெய்த் திருத்தொண்டர் மறையவர்க ளேனையோர்
மங்கலநீண் மணவினைநான் கேட்டுமிக மகிழ்வெய்திப்
பொங்குதிருப் புகலிதனி னுடோறும் புகுந்தீண்ட
வங்கணணைந் தவர்க்கெல்லாம் பெருஞ்சிறப்பு மிகவளித்தார். (கசஎக)

அருந்தவத்தோ றந்தணர்க ளயலுள்ளோர் தாமுய்யப்
பொருந்துதிரு நாளோலை பொருவிறந்தார் கொண்டணையத்
திருந்துபுகழ் நம்பாண்டார் நம்பிசிறப் பெதிர்கொண்டு
வருந்தவத்தான் மகட்கொடுப்பார் வதுவைவினை தொடங்குவார். (கசஎஉ)

மன்னுபெருஞ் சுற்றத்தா ரெல்லாரும் வந்தீண்டி
நன்னிலைமைத் திருநாளுக் கெழுநாளா நன்னுளிற்
பன்மணிமங் கலமுரசம் பல்லியங்க ணிறைந்தார்ப்பப்
பொன்மணிப்பா லிகைமீது புனிதமுளை பூரித்தார். (கசஎங)

சேணியரு மாடங்க டிருப்பெருகு மண்டபங்க
ணீணிலைய மாளிகைக ணிகரிலணி பெறவிளக்கிக்
காண்வருகை வினைவண்ணங் கவினெங்கும் படியெழுதி
வாணிலவு மணிக்கடைக்கண் மங்கலக்கோ லம்புனைந்து. (கசஎச)

நீடுநிலைத் தோரணங்க ணீண்மறுகு தொறுநிரைத்து
மாடியருங் கொடிமாலை மணிமாலை யிடைபோக்கிச்
சேடியரும் வேதிகைகள் செழுஞ்சாந்து கொடுசீவிப்
பீடுகெழு மணிமுத்தின் பெரும்பந்தர் பலபுனைந்தார். (கசஎடு)

மன்றல்வினைத் திருமுளைநாட் டொடங்கிவரு நாளெல்லா
மூன்றிரவும் வீதிதொறு முகவெடுவா யில்கடோறு
மின்னொளிரு மணிவிளக்கு நிறைவாசப் பொற்குடங்க
ளென்னுசுடர்த் தாமங்க ளேபக்க மெதைவித்தார். (ககளசு)

மங்கலமா ரியகாத மறுகுதொறு நின்றியம்பப்
பொங்கியகான் மறையோசை கடலோசை யிகப்பொலியத்
தங்குமுயங் குறையகிலின் றழைத்தசெழும் புகையினுடன்
செங்கனலா குதிப்புகையுந் தெய்வவிரை மணம்பெருக. (ககளஎ)

எண்டிசையி லுள்ளோரு மீண்டுவளத் தொடுதெருங்கப்
பண்டநிறை சாலைகளும் பலவேறு விதம்பயில
மண்டுபெரு நிதிக்குவைகண் மலைப்பிறங்க ளெனமலிய
வுண்டிவினைப் பெருந்தழனி யோவாத வொலியோங்க. (ககளஅ)

மாமறைநூல் விதிச்சடங்கில் வகுத்தமுறை நெறிமரபின்
மாமணலா லுபகரணஞ் சமைப்பவர்தங் தொழிறுவன்றத்
தாமரையோ னனையபெருந் தவமறையோர் தாமெடுத்த
பூமருவு பொற்கலசப் புண்ணியநீர் பொலிவெய்த. (ககளசு)

குங்குமத்தின் செழுஞ்சேற்றின் கூட்டமைப்போ ரினங்குழுமப்
பொங்குவிரைப் புதுக்கலவைப் புகையெடுப்போர் தொகைவிரவத்
துங்கநறுங் கர்ப்பூரச் சுண்ணமிடிப் போர்நெருங்க
வெங்குமலர்ப் பீணைபுனைவோ ரீட்டங்கண் மிகப்பெருக. (ககஅ0)

இனையபல வேறுதொழி லெம்மருங்கு நிரைத்தியற்று
மினவளரு மறுகெல்லா மணவணிசெய்ம் மறைமூதூர்
நினைவரிய பெருவளங்க ணெருங்குதலா னிதிக்கோமான்
றனையிறைவர் தாமேவச் சமைத்ததுபோ லமைந்துளதால். (ககஅக)

ஏ வ று.

மாறி லாநிறை வளந்தரு புகலியின் மணமீக்
கூறு நாளின்முன் னுளினில் வேதியர் குழாமு
நீறு சேர்திருத் தொண்டரு நிகரிலா தவருக்
காறு சூடிஞ ரருட்டிருக் காப்புகா ணணிவார். (ககஅஉ)

வேத வாய்மையின் விதியுளி வினையிஞல் விளங்க
வோத நீரூல கியன்முறை யொழுக்கமும் பெருகக்
காத னீடிருத் தொண்டர்கண் மறையவர் கலிஞர்
மாதர் மைந்தர்பொற் காப்புகா ணகர்வலஞ் செய்தார். (ககஅங)

நகர்வ லஞ்செய்து புகுந்தபி னவமணி யணிந்த
புகரில் சித்திர விதானமண் டபத்தினிற் பொலியப்
பகரும் வைதிக விதிச்சமா வர்த்தனப் பான்மை
திகழ முற்றிய செம்மலார் திருமுன்பு சேர்ந்தார். (ககஅச)

செம்பொ னின்பரி கலத்தினிற் செங்நெல்வெண் பரப்பின்
வம்ப ணிந்தநீண் மாலைசூழ் மருங்குற வமைத்த
வம்பொன் வாசநீர்ப் பொற்குட மசிலே தருப்பை
பம்பு நீள்சுடர் மணிவிளக் கொளிர்தரும் பரப்பில். (ககஅஙி)

நாத மங்கல முழக்கொடு நற்றவ முனிவர்
வேத கீதமும் விம்மிட விரைகமழ் வாசப்
போது சாந்தணி பூந்துகில் புனைந்தபுண் ணியம்போன்
மீது பூஞ்சய னத்திருந் தவர்முன்பு மேவி. (ஈஈஅசு)

ஆர்வ மிக்கெழு மன்பிலுன் மலரய னனைய
சீர்ம றைத்தொழிற் சடங்குசெய் திருத்துனன் முனிவர்
பார்வ ழிப்பட வருமிரு வினைகளின் பந்தச்
சார்பொ ழிப்பவர் திருக்கையிற் காப்புநாண் சாத்த. (ஈஈஅஎ)

கண்ட மாந்தர்கள் கடிமணங் காணவந் தணைவார்
கொண்ட வல்வினை யாப்பவிழ் கொள்கைய வான
தொண்டர் சிந்தையும் வதனமு மலர்ந்தன சுருதி
மண்டு மாமறைக் குலமெழுந் தார்த்தன மகிழ்ந்தே. (ஈஈஅஅ)

நிரந்த கங்குலி னிதிமழை விதிமுறை யெவர்க்கும்
புரந்த ஞானசம் பந்தர்தாம் புன்னெறிச் சமய
வரந்தை வல்லிரு ளகலமுன் னவதரித் தாற்போற்
பரந்த பேரிரு ணொந்துவந் தெழுந்தனன் பகலோன். (ஈஈஅஈ)

அஞ்சி றைச்சுரும் பறைபொழிற் சண்பையாண் டகையார்
தஞ்சி வத்திரு மணஞ்செயத் தவஞ்செய்நா ளென்று
மஞ்ச னத்தொழில் புரிந்தென மாசிருள் கழுவிச்
செஞ்சு டர்க்கெதிர்ப் பேரணி யணிந்தன திசைகள். (ஈஈஈ0)

பரம்பு தன்வயி னெங்கணு முள்ளபல் வளங்க
ணிரம்ப முன்கொணர்ந் தெண்டிசை யவர்பெரு குதலாற்
றரங்க டந்தவர் தந்திருக் கல்லியா ணத்தின்
வரம்பி றன்பயன் காட்டுவ தொத்தது வையம். (ஈஈஈஈ)

நங்கள் வாழ்வென வருந்திரு ஞானசம் பந்தர்
மங்க லத்திரு மணவெழுச் சியின்முழக் கென்னத்
துங்க வெண்டிரைச் சுரிவளை யார்ப்பொடு சூழ்ந்து
பொங்கு பேரொலி முழக்குட னெழுந்தது புணரி. (ஈஈஈஉ)

அளக்க ரேழுமொன் றுமெனும் பெருமையெவ் வுலகும்
விளக்கு மாமணி விழாவுடன் விரைந்துசெல் வனபோற்
றுளக்கில் வேதிய ராகுதி தொடங்கிடா முன்னம்
வளர்க்கும் வேதியில் வலஞ்சுழித் தெழுந்தது வன்னி. (ஈஈஈஊ)

சந்த மென்மலர்த் தாதணி நீறுமெய் தரித்துக்
கந்த மேவுவண் டொழுங்கெனுங் கண்டிகை பூண்டு
சிந்தை தூயவன் பர்களுடன் றிருமணம் போத
மந்த சாரியின் மணங்கொணர்ந் தெழுந்தது மருத்து. (ஈஈஈசு)

எண்டி சைத்தலத் தியாவரும் புகலிவந் தெய்தி
மண்டு மத்திரு மணவெழுச் சியினணி வாய்ப்பக்
கொண்ட வெண்ணிறக் குரூஉச்சுடர்க் கொண்டல்க ளென்ன
வெண்டு கிற்கொடி நிரைத்தது போன்றது விசும்பு. (ஈஈஈஎ)

ஏல விக்கலம் யாவையு மெழுச்சிமுன் காட்டுங்
காலே செய்வினே முற்றிய கவுணியர் பெருமான்
மூல மாகிய தோணிமேன் முதல்வரை வணங்கிச்
சீல மார்திரு வருளினுன் மணத்தின்மேற் செல்வார். (௫௫௯)

காழி மாநகர் வேதியர் குழாத்தொடுங் கலந்து
சூழு மன்பர்க ளேனையோர் துதைந்துமுன் செல்ல
வாழி மாமறை முழங்கிட வளம்பதி வணங்கி
நீழல் வெண்சுடர் நித்திலச் சிவிகைமேற் கொண்டார். (௫௫௰)

யான வாகன மேறுவார் யாருமேற் கொள்ளக்
கான மாகிய தொங்கல்பிச் சங்குடை கவரி
மேனை ருங்கிட விசும்பினு நிலத்தினு மெழுந்த
வான துந்துபி முழக்குடன் மங்கல வியங்கள். (௫௫௰௧)

வே று.

சங்கொடு தாரை சின்னந் தனிப்பெருங் காளந் தாளம்
வங்கிய மேனே மற்று மலர்த்துகோக் கருவி யெல்லாம்
பொங்கிய வொலியி னேங்கிப் பூசுரர் வேத நாத
மெங்கணு மெழுந்து மல்கத் திருமண மெழுந்த தன்றே. (௫௫௨)

கோதையர் குழல்சூழ் வண்டின் குழாத்தொலி யொருபாற் கோல
வேதியர் வேத வாய்மை மிகுமொலி யொருபான் மிக்க
வேதமில் விபஞ்சி வீணே யாழொலி யொருபா லேத்து
நாதமங் கலங்கொள் கீத நயப்பொலி யொருபா லாக. (௫௩00)

விண்ணினே விழுங்க மிக்க வெண்டுகிற் பதாகை வெள்ளங்
கண்வெறி படைப்ப மிக்க கதிர்விரி கவரிக் கான
மண்ணிய மணிப்பூ ணீடு மரிசன மலிந்த பொற்பி
னெண்ணிலா வண்ணத் தூசின் பொதிப்பரப் பெங்கு நண்ண. (௫௩0௫)

சிகையொடு மான்றே ருங்குங் கிடையுமா சானுஞ் செல்வார்
புகைவிடும் வேள்விச் செந்தீ யில்லுடன் கொண்டு போவார்
தகைவிலா விருப்பின் மிக்க பதிகங்கள் விளம்பிச் சார்வார்
வகையறு பகையுஞ் செற்ற மாதவ ரியல்பின் மல்க. (௫௩0௨)

அறுவகை விளங்குஞ் சைவத் தளவிலா வீரதஞ் சாரு
நெறிவழி நின்ற வேட நீடிய தவத்தி னுள்ளோர்
மறுவற மனத்தி லன்பின் வழியினுல் வந்த யோகக்
குறிநிலே பெற்ற தொண்டர் குழாங்குழா மாகி யேக. (௫௩0௩)

விஞ்சைய ரியக்கர் சித்தர் கின்னரர் மிடைந்த தேவ
ரஞ்சன நாட்ட வீட்டத் தரம்பைய ருடனு புள்ளோர்
தஞ்சுடர் விமான மேறித் தழைத்தவா தரவி னேடு
மஞ்சுறை விசும்பின் மீது மணவணி காணச் சென்றார். (௫௩0௪)

மற்றிவர் மிடைந்து செல்லு மங்கல வனப்பின் காட்சி
முற்றவித் தலத்தி னுள்ளோர் மொய்த்துடன் படரும் போதி
லற்புத நிகழ்ச்சி யெய்த வணைதலான் மணமேற் செல்லும்
பொற்பமை மணத்தின் சாயை போன்றுமுன் பொலியச் செல்ல. (௫௩0௫)

தவவர சாள வுய்க்குந் தனிக்குடை நிழற்றச் சாரும்
பவமறுத் தாள வல்லார் பாதமுள் ளத்துக் கொண்டு
புவனங்கள் வாழ வந்த பூந்தாய் வேந்தர் போந்து
சிவனமர்ந் துறையு நல்லூர்த் திருப்பெரு மணத்தைச் சேர்ந்தார். (கஉ0ஈ)

பெருமணக் கோயி லுள்ளார் மங்கலம் பெருகு மாற்றால்
வருமணத் திறத்தின் முன்னர் வழியெதிர் கொள்ளச் சென்று
திருமணம் புணர வெய்துஞ் சிரபுரச் செம்ம லார்தா
மிருண்மணங் திலங்கு கண்டத் திறைவர்தங் கோயில் புக்கார். (கஉ0எ)

ஈாதரைப் பணிந்து போற்றி ஈற்பொருட் பதிகம் பாடிக்
காதன்மெய் யருண்முன் பெற்றுக் கவுணியர் தலேவர் போந்து
வேதியர் வதுவைக் கோலம் புனேந்திட வேண்டு மென்னப்
பூதநா யகர்தங் கோயிற் புறத்தொரு மடத்திற் புக்கார். (கஉ0அ)

பொற்குட நிறைத்த வாசப் புனிதமஞ் சனநீ ராட்டி
விற்பொலி வெண்பட் டாடை மேதக விளங்கச் சாத்தி
ஈற்றிரு வுத்த நீய றுங்துகில் சாத்தி ஞானப்
பற்பல கலவைச் சாந்தம் பான்மையி னணிந்த பின்னர். (கஉ0ஊ)

திருவடி மலர்மேற் பூத்த செழுந்தகைச் சோதி யென்ன
மருவிய தரளக் கோவை மணிச்சரி யணேயச் சாத்தி
விரிசுடர்ப் பரட்டின் மீது விளங்குபொற் சரட்டிற் கோத்த
பெருகொளி முத்தின் ரூமம் பிறங்கிய தொங்கல் சாத்தி. (கஉஈ0)

தண்சுடர்ப் பரிய முத்துத் தபனிய ஈாணிற் கோத்த
கண்கவர் கோவைப் பத்திக் கதிர்க்கடி சூத்தி ரத்தை
வெண்சுடர்த் தரள மாலே விரிசுடர்க் கொடுக்கின் மீது
வண்டிரு வரையி னீடு வனப்பொளி வளரச் சாத்தி. (கஉஈஈ)

ஒளிகதிர்த் தரளக் கோவை யுதரபந் தனத்தின் மீது
தளியொளி துளும்பு முத்தின் சன்னவீ ரத்தைச் சாத்திக்
குளிர்நில வெறிக்கு முத்தின் பூணணூற் கோவை சாத்தி
ஈளிர்கதிர் மூத்து மாலே ஈகுசுட ராரஞ் சாத்தி. (கஉஈஉ)

வாள்விடு வயிரக் கட்டு மணிவிர லாழி சாத்தித்
தாளுறு தடக்கை முத்தின் றண்டையுஞ் சரியு ஈாணு
நீளொளி முழங்கைப் பொட்டு நிரைசுடர் வடமுஞ் சாத்தித்
தோள்வளைத் தரளப் பைம்பூண் சுந்தரத் தோண்மேற் சாத்தி. (கஉஈகூ)

திருக்கழுத் தாரந் தெய்வக் கண்டிகை மாலே சேரப்
பருத்தமுத் தொழுங்கு கோத்த படரொளி வடமுஞ் சாத்திப்
பெருக்கிய வனப்பின் செவ்வி பிறங்கிய திருவார் காதில்
வருக்கவெண் டரளக் கொத்தின் வடிக்குழை விளங்கச் சாத்தி. (கஉஈச)

நீற்றெழி தழைத்துப் பொங்கி நிறைதிரு நெற்றிமீது
மேற்பட விரிந்த சோதி வெண்சுட ரெழுந்த தென்னப்
பாற்படு முத்தின் பாரப் பனிச்சுடர்த் திரளே சாத்தி
யேற்பவைத் தணிந்த முத்தி னெழில்வளர் மகுடஞ் சேர்த்தார். (கஉஈஞ)

இவ்வகை நம்மை யாளு மேர்வளர் தெய்வக் கோலங்
கைவினை மறையோர் செய்யக் கடிகொள்செங் கமலத் தாதின்
செவ்வியீ டாம மார்பர் திருவடை யாள மாலை
யெவ்வுல கோரு மேத்தத் தொழுதுதா மெடுத்துப் பூண்டார். (கஉகசு)

அழகினுக் கணியாம் வெண்ணீ றஞ்செழுத் தோதிச் சாத்திப்
பழகிய வன்பர் சூழப் படரொளி மறுகி லெய்தி
மழவிடை மேலோர் தம்மை மனங்கொள வணங்கி வந்து
முழவொலி யெடுப்ப முத்தின் சிவிகைமேல் கொண்ட போது. (கஉகள)

எழுந்தன சங்க நாத மியம்பின வியங்க ளெங்கும்
பொழிந்தன விசும்பில் விண்ணோர் கற்பகப் புதுப்பூ மாரி
தொழுந்தகை முனிவர் தொண்டர் சுருதியின் வாழ்த்துப் பொங்
வழிந்தன திசைகண் மீது மலர்ந்தன வுலக மெல்லாம். (கஉகஅ)

படர்பெருந் தொங்கல் பிச்சம் பைங்கதிர்ப் பீலிப் பந்த
ரடர்பூஞ் செம்பொற் பாண்டி லணிதுகிற் சதுக்க மல்கக்
கடலின்மீ தெழுந்து நிற்குங் கதிர்நிறை மதியம் போல
வடநிரை யணிந்தமுத்தின் மணிக்குடை நிழற்ற வந்தார். (கஉகக)

சீரணி தெருவி னூடு திருமணஞ் செல்ல முத்தி
னேரணி காளஞ் சின்ன மிலங்கொளித் தாரை யெல்லாம்
பேரொலி பெருக முன்னே பிடித்தன மறைக ளோடு
தாரணி யுய்ய ஞான சம்பந்தன் வந்தா னென்று. (கஉஉ0)

மண்ணினுக் கிடுக்கண் டீர வந்தவர் திருநா மங்க
ளெண்ணில பலவு மேத்திச் சின்னங்க ளெழுந்த போதவ்
வண்ணலார் வதுவை செய்ய வலங்கரித் தணையப் பெற்ற
புண்ணிய மறையோர் மாட மங்கலம் பொழிந்து பொங்க. (கஉஉக)

முற்றுமெய்ஞ் ஞானம் பெற்ற மூர்த்தியார் செங்கை பற்ற
நற்பெருந் தவத்தி னீர்மை நலம்படைத் தெழுந்த தெய்வக்
கற்பகப் பூங்கொம் பன்னார் தம்மையுங் கரப்புச் சேர்த்துப்
பொற்புறு சடங்கு முன்னர்ப் புரிவுடன் செய்த வேலை. (கஉஉஉ)

செம்பொன்செய் வாசிச் சூட்டுத் திருமணிப் பூணபூண் செல்வப்
பைம்பொனின் மாலை வேய்ந்த பவளமென் கொடியொப் பாரை
நம்பன்ற னருளே வாழ்த்தி நல்லெழில் விளங்கச் சூட்டி
யம்பொன்செய் தீப மென்ன வழகலங் கரித்து வைத்தார். (கஉஉங)

மாமறை மைந்த ரெல்லா மணத்தெதிர் சென்று மன்னுந்
தாமலர்ச் செம்பொற் சுண்ணந் தொகுவ மணியும் வீசத்
தாமரை மலரோன் போல்வா ரரசிலை தருப்பை தோய்ந்த
காமர்பொற் கலச நன்னீ ரிருக்குடன் கலந்து வீச. (கஉஉச)

வீண்ணவர் மலரின் மாரி விசும்பொளி தழைப்ப வீச
மண்ணக நிறைந்த கந்த மந்தமா ருதமும் வீசக்
கண்ணெளி விளக்க மிக்கார் காமர்தோ ரணங்க ளூடு
புண்ணிய வினைவு போல்வார் பூம்பந்தர் முன்பு சார்ந்தார். (கஉஉடு

பொன்னணி சங்கின் வெள்ளம் பொலிவுடன் முழங்கி யார்ப்ப
மன்னிய தரளப் பத்தி வளர்மணிச் சிவிகை நின்றும்
பன்மலர் நறும்பொற் சுண்ணம் பரந்தபா வாடைமீது
முன்னிழிந் தருளி வந்தார் மூவுல கேத்த வந்தார். (கஉஉசு)

மறைக்குல மனையில் வாழ்க்கை மங்கல மகளி ரெல்லா
நிறைத்த நீர்ப் பொற்குடங்க ணிரைமணி விளக்குத் தூப
நறைக்குல மலர்சூழ் மாலை நகுசுடர் முளைப்பொற் பாண்டி
லுறைப்பொலி கலவை யேந்தி யுடனெதி ரேற்று நின்ரூர். (கஉஉள)

ஆங்குமுன் னிட்ட செம்பொ னணிமணிப் பீடந் தன்னி
லோங்கிய ஞான வெள்ள முண்ணிறைந் தெழுவ தென்னத்
தாங்கிய முத்தின் பைம்பூண் டண்ணிலா வெறிப்ப வேறிப்
பாங்கொளி பரப்பி நின்ரூர் பரசம யங்கள் வீழ்த்தார். (கஉஉஅ)

எதிர்வர வேற்ற சாய லிளமயி லனைய மாதர்
மதுரமங் கலமுன் ஞன வாழ்த்தொலி யெடுப்ப வந்து
கதிர்மணிக் கரக வாசக் கமழ்புன லொழுக்கிக் காதல்
விதிமுறை வலங்கொண் டெய்தி மேவுநல் வினைகள் செய்தார். (கஉஉக)

மங்கலம் பொலிய வேந்தி மாதரார் முன்பு செல்லக்
கங்கையின் கொழுந்து செம்பொ னிமவரை கலந்த தென்ன
வங்கவர் செம்பொன் மாடத் தாதிபூ தியினுட் புக்கா
ரெங்களை வாழ முன்னு ளேவைவை கையினு லிட்டார். (கஉஉ0)

அகினறுந் தூபம் விம்மி யணிகிளர் மணியால் வேய்ந்த
துகில்புனை வீதான நீழற் றூமலர்த் தவிசின் மீது
நகிலணி முத்த மாலை நகைமுக மடவார் வாழ்த்த
விகலில்சீர் மறையோர் சூழ வினிதினங் கிருந்த வேலை. (கஉஉக)

திருமகட் கொடுக்கப் பெற்ற செழுமறை முனிவர் தாமு
மருமையான் முன்செய் மெய்ம்மை யருந்தவ மனைவி யாரும்
பெருமகிழ்ச் சியினற் பாதம் விளக்குவார் பிள்ளை யார்மு
னுரிமையால் வெண்பா றூநீ ருடனெடுத் தேந்தி வந்தார். (கஉஉஉ)

வந்துமுன் னெய்தித் தாமுன் செய்தமா தவத்தி னன்மை
நந்துநம் பாண்டார் நம்பி ஞானபோ னகர்பொற் பாதங்
கந்தவார் குழலி ஞர்பொற் கரகநீ ரெடுத்து வார்ப்பப்
புந்தியா னினைதி யானம் புரிசடை யானென் றுன்னி. (கஉஉங)

விருப்பிஞல் விளக்கி மிக்க புனிதநீர் தலைமேற் கொண்டு
பொருப்புறு மாடத் துள்ளும் புறத்துளுந் தெளித்த பின்ன
ருருப்பொலி யுதரத் துள்ளும் பூரித்தா ருவகை பொங்கி
யருப்புறு கிளைஞர் மேலுந் தெளித்தன ரார்வத் தோடும். (கஉஉச)

பெருகொளி ஞான முண்ட பிள்ளையார் மலர்க்கை தன்னின்
மருவுமங் கலநீர் வாசக் கரகமுன் னேந்தி வார்ப்பார்
தருமுறைக் கோத்தி ரத்தின் றங்குலஞ் செப்பி யென்ற
னருளிப் பாவை யாரைப் பிள்ளையார்க் களித்தே னென்ரூர். (கஉஉடு)

நற்றவக் கன்னி யார்கை ஞானசம் பந்தர் செங்கை
பற்றுதற் குரிய பண்பிற் பழுதினற் பொழுது நண்ணப்
பெற்றவ ருடன்பி றந்தார் பெருமணப் பிணைய ஞரைச்
சுற்றமுன் சூழ்ந்து போற்றக் கொண்டுமுன் னணி னர்கள். (௧௨௬)

ஏகமாஞ் சிவமெய்ஞ் ஞான மிசைந்தவர் வலப்பா லெய்தி
நாகமார் பணப்பே ரல்கு னற்றவர்க் கொழுந்தன் ஞரை
மாகமார் சோதி மல்க மன்னிவீற் றிருந்த வெள்ளே
மேகமோ டியைந்த மின்னுக் கொடியென விளங்க வைத்தார். (௧௨௭)

புனிதமெய்க் கோல நீடு புகலியார் வேந்தர் தம்மைக்
குனிசிலைப் புருவ மென்பூங் கொம்பனை யருடனே கூட
நனிமிகக் கண்ட போதி னல்லமய் கலங்கள் கூறி
மனிதருந் தேவ ராளர் கண்ணிமை யாது வாழ்த்தி. (௧௨௮)

பத்தியிற் குயிற்றும் பைம்பொற் பவளக்காற் பந்தர் நாப்பண்
சித்திர விதானத் தின்கீழ்ச் செழுந்திரு நீலநக்கர்
முத்தமிழ் விரகர் முன்பு முதன்மறை முறையி னேடு
மெய்த்தகம் பெருமான் பாத மேவுமுள் ளத்தாற் செய்ய. (௧௨௯)

மறையொலி பொங்கி யோங்க மங்கல வாழ்த்து மல்க
நிறைவளைச் செங்கை பற்றி நேரிழை யவர்மு னந்தப்
பொறையணி மூந்நூன் மார்பர் புகரில்வெண் பொரிகை யட்டி
யிறைவரை யேத்தும் வேலை யெரிவலங் கொள்ள வேண்டி. (௧௩0)

அருப்புமென் முலையி னார்த மணிமலர்க் கைப் பிடித்தங்
கொருப்படு முடைய பிள்ளை யார்திரு வுள்ளந் தன்னில்
விருப்புறு மங்கி யாவார் விடையுயர்த் தவரே யென்று
திருப்பெரு மணத்தை மேவுஞ் சிந்தையிற் றெளிந்து செல்வார். (௧௩௧)

மந்திர முறையா லுய்த்த வெரிவல மாக மாதர்
தந்திருக் கையைப் பற்றுந் தாமரைச் செங்கை யாள
ரிந்தவில் லொழுக்கம் வந்து சூழ்ந்ததே யிவடன் னேடு
மந்தமில் சிவன்ரு ளேர்வ னென்னுமா தரவு பொங்க. (௧௩௨)

மலர்பெருங் கிளையுந் தொண்டர் கூட்டமு மல்கிச் சூழ
வலகின்மெய்ஞ் ஞானத் தெல்லே யடைவுறுங் குறிப்பா லங்க
ணுலகினெம் மருங்கு நீங்க வுடனணைந் தருள வேண்டிக்
குலமணம் புரிவித் தார்தங் கோயிலே நோக்கி வந்தார். (௧௩௩)

சிவனமர்ந் தருளுஞ் செல்வத் திருப்பெரு மணத்து ளெய்தித்
தவநெறி வளர்க்க வந்தார் தலேப்படுஞ் சார்பு நோக்கிப்
பவமற வென்னே முன்ஞ ளாண்டவப் பண்பு கூட
நவமலர்ப் பாதங் கூட்டு மென்னுநல் லுணர்வு நல்க. (௧௩௪)

காதன்மெய்ப் பதிக நல்லூர்ப் பெருமண மெடுத்துக் கண்டோர்
தீதறு பிறவிப் பாசந் தீர்த்தல்செம் பொருளாக் கொண்டு
நாதனே நல்லூர் மேவும் பெருமண நம்ப னேயுன்
பாதமெய்ந் நீழல் சேரும் பருவமீ தென்று பாட. (௧௩௫)

தேவர்க டேவர் தாமும் திருவருள் புரிந்து நீயும்
பூவையன் ஞான மிங்குன் புண்ணிய மணத்தின் வந்தார்
யாவரு மென்பாற் சோதி யிதனுள்வந் தெய்து மென்று
மூவுல கொளியால் விம்ம முழுச்சுடர்த் தாணு வாகி. (கஉசக)

கோயிலுட் படமே லோங்குங் கொள்கையாற் பெருகுஞ் சோதி
வாயிலை வகுத்துக் காட்ட மன்னுசீர்ப் புகலி மன்னர்
பாயின வொளியா னீடு பரஞ்சுடர்த் தொழுது போற்றி
மாயிரு ஞால முய்ய வழியினே யருளிச் செய்வார். (கஉசஎ)

ஞானமெய்ந் நெறிதான் யார்க்கும் நமச்சிவா யச்சொ லாமென்
றூனசீர் நமச்சி வாயத் திருப்பதி கத்தை யங்கண்
வானமு நிலனுங் கேட்க வருள்செய்தும் மணத்தில் வந்தோ
ரீனமாம் பிறவிதீர யாவரும் புகுக வென்ன. (கஉசஅ)

வருமுறைப் பிறவி வெள்ளம் வரம்புகா ணுத முந்தி
யுருவெனுந் துயரக் கூட்டி லுணர்வின்றி மயங்கு வார்க
டிருமணத் துடன்சே வித்து முன்செ லுஞ் சிறப்பி னுலே
மருவிய பிறவி நீங்க மன்னுசோ தியினுட் புக்கார். (கஉசக)

மே வு.

சீர்பெருகு நீலநக்கர் திருமுருகர் முதற்றொண்ட
ரேர்கெழுவு சிவபாத விருதயர்நம் பாண்டார்நீ
ரார்திருமெய்ப் பெரும்பாணர் மற்றெனையோ ரணைந்துளோர்
பார்நிலவு கிளரொளிப் பன்னிகளோ டென்புக்கார். (கஉடு0)

அணிமுத்தின் சிவிகைமுத லணிதாங்கிச் சென்றார்கள்
மணிமுத்த மாலைபுனை மடவார்மங் கலம்பெருகும்
பணிமுற்று மெடுத்தார்கள் பரிசனங்கள் வினைப்பாசந்
துணிவித்த வுணர்வினராய்த் தொழுதுடன்புக் கொடுங்கினர். (கஉடுக)

ஆறுவகைச் சமயத்தி லருந்தவரு மடியவரும்
கூறுமறை முனிவர்களுங் கும்பிடவந் தணைந்தாரும்
வேறுதிரு வருளினுல் வீடுபெற வந்தாரு
மீறில்பெருஞ் சோதியினு ளெல்லாரும் புக்கதற்பின். (கஉடுஉ)

காதலியைக் கைப்பற்றிக் கொண்டுவலஞ் செய்தருளித்
தீதகற்ற வந்தருளுந் திருஞான சம்பந்தர்
நாதனெழில் வளர்சோதி நண்ணியத னுட்புகுவார்
போதநிலை முடிந்தவழி புக்கொன்றி யுடனுனர். (கஉடுங)

பிள்ளையா ரெழுந்தருளிப் புக்கதற்பின் பெருங்கூத்தர்
கொள்ளநீ டியசோதிக் குறிநிலையவ் வழிகரப்ப
வள்ளலார் தம்பழைய மணக்கோயி லேறன்றுதலுந்
தெள்ளுநீ ருலகத்துப் பேறில்லார் தெருமந்தார். (கஉடுச)

கண்ணுதலார் திருமேனி யுடன்கூடக் கவுணியனார்
நண்ணியது தூரத்தே கண்டெனுங் கப்பெரு
விண்ணவரு முனிவர்களும் விரிஞ்சனே முதலானு
ரெண்ணிலவ ரேசறவு நீரடெத் தேத்தினர். (கஉடுஎ)

அருந்தமிழா கரர்சரிதை யடியேனுக் கவர்பாதந்
தரும்பரிசா லறிந்தபடி தெரிசெய்தேன் முரணிமேற்
பெருங்கொடையுந் திண்ணனவும் பேருணர்வுந் திருத்தொண்டால்
வருந்தகைமைக் கலிக்காம னர்செய்கை வழுத்துவேன். (நஉநசு)

திருஞானசம்பந்தமூர்த்திநாயனூர்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ந,கநசு.

ஏயர்கோன்கலிக்காமநாயனூர்புராணம்.

நீடு வண்புகழ்ச் சோழர்நீர் நாட்டிடை நிலவு
மாடு பொன்கொழி காவிரி வடகரைக் கீழ்பா
லாடு பூங்கொடி மாடநீ டியவணி நகர்தான்
டீடு தங்கிய திருப்பெரு மங்கலப் பெயர்த்தால். (க)

இஞ்சி சூழ்வன வெந்திரப் பந்திரும் ஞாயின்
மஞ்சு சூழ்வன வரையென வுயர்மணி மாட
நஞ்சு சூழ்வன நயனியர் களினமெல் லடிச்செம்
பஞ்சு சூழ்வன காளையர் குஞ்சியின் பரப்பு. (உ)

விழவ ரூதன விளங்கொளி மணிநெடு வீதி
முழவ ரூதன மொய்குழ லியர்நட வரங்க
மழவ ரூதன மங்கலம் பொலிமணி முன்றி
லுழவ ரூதல்வ ளத்தன வோங்கிரங் குடிகள். (ஊ)

நீரி னிற்பொலி சடைமுடி நெற்றிநாட் டத்துக்
காரி னிற்றிகழ் கண்டர்தங் காதலோர் குழுமிப்
பாரின் மிக்கதோர் பெருமையாற் பரமர்தாள் பரவுஞ்
சீரின் மிக்கது சிவபுரி யெனத்தகுஞ் சிறப்பால். (எ)

இன்ன வாழ்பதி யதனிடை யேயர்கோக் குடிதான்
மன்னி நீடிய வளவர்சே ரூபதிக் குடியாந்
தொன்மை மேவிய நிகழ்ச்சியா னிறைவது ஆய
பொன்னி நாட்டுவே ளாண்மையி லுயர்ந்தபொற் பினதால். (ஏ)

அங்கண் மிக்கவக் குடியினி லவதரித் தள்ளார்
கங்கை வாழ்முடி யார்தொண்டர் கலிக்காம ரென்பார்
தங்க ளுயக ரடிபணி வாரடிச் சார்ந்து
பொங்கு காதலி னவர்பணி போற்றுதல் புரிந்தார். (ஐ)

புதிய நாண்மதிச் சடைமுடி யார்திருப் புன்கூர்க்
கதிக மாயின திருப்பணி யநேகமுஞ் செய்து
நிதிய மாவன நீறுகந் தார்கழ லென்று
துதியி னற்பர வித்தொழு தின்புறு கின்றூர். (ஒ)

நாவ லூர்மன்னர் நாதனைத் தானுவிட் டதனுக்
கியாவ ரிச்செயல் புரிந்தன ரென்றவ ரிழிப்பத்
தேவர் தம்பிரா னவர்திறந் திருத்திய வதற்கு
மேவ வந்தவச் செயலினே விளம்புவா னுற்றேன். (அ)

வே று.

திருத்தொண்டத் தொகையருளித் திருநாவ லூராளி
கருத்தொன்று காதலினுற் கனகமதிற் றிருவாரூ
ரொருத்தர்கழன் முப்பொழுது முருகியவன் பொடுபணிந்து
பெருத்தெழுமெய் யன்பினுறப் பிரியாதங் குறையுநாள். (கூ)

தாளாண்மை யுழவுதொழிற் றண்மைவளந் தலைசிறந்த
வேளாளர் குண்டையூர்க் கிழவரெனு மேதக்கோர்
வாளார்வெண் மதியணிந்தார் மறையவனுப் வழக்கினில்வென்
ருளாகக் கொண்டவர்தா ளடைந்தன்பா லொழுகுவார். (கo)

செந்நெல்லும் பொன்னன்ன செழும்பருப்புந் தீங்கரும்பி
னின்னல்ல வமுதமுத லெண்ணில்பெரும் பலவளங்கண்
மன்னியசீர் வன்றொண்டர்க் கமுதாக வழுவாமற்
பன்னெடுநாள் பரவையார் மாளிகைக்குப் படிசமைத்தார். (கக)

ஆனசெய லன்பின்வரு மார்வத்தான் மகிழ்ந்தாற்ற
வானமுறை வழங்காமன் மாநிலத்து வளஞ்சுருங்கப்
போனகநெற் படிநிரம்ப வெடுப்பதற்குப் போதாமை
மானமழி கொள்கையினுன் மனமயங்கி வருந்துவார். (கஉ)

வன்றொண்டர் திருவாரூர் மாளிகைக்கு நெல்லெடுக்க
வின்றுகுறை யாகின்ற தென்செய்கே னெனநினைந்து
தன்றுபெருங் கவலையினுற் றுயரெய்தி யுண்ணுதே
யன்றிரவு துயில்கொள்ள வங்கணர்வந் தருள்புரிவார். (கங)

ஆரூரன் றனக்குன்பா னெற்றந்தோ மென்றருளி
நீரூருஞ் சடைமுடியார் நிதிக்கோமான் றனையேவப்
பேரூர்மற் றதனெல்லை யடங்கவுநென் மலைப்பிறங்கல்
காரூரு நெடுவிசும்புங் கரக்கநிறைந் தோங்கியதால். (கச)

அவ்விரவு புலர்காலை யுணர்ந்தெழுவா ரதுகண்டே
யெவ்வுலகி னெண்மலைதா னிதுவென்றே யதிசயித்துச்
செவ்வியபொன் மலைவளைத்தார் திருவருளின் செயல்போற்றிக்
கொவ்வைவாய்ப் பரவையார் கொழுநரையே தொழுதெழுவார். (கஞ)

வே று.

நாவலூர் மன்ன னுக்கு நாயனு ரளித்த நெல்லிங்
கியாவரா லெடுக்க லாகு மிச்செய லவர்க்குச் சொல்லப்
போவன்யா னென்று போந்தார் புகுந்தவா றருளிச் செய்து
தேவர்தம் பெருமா னேவ நம்பியு மெதிரே சென்றார். (கசு)

குண்டையூர்க் கிழவர் தாமு மெதிர்கொண்டு கோதில் வாய்மைத்
தொண்டனுர் பாதந் தன்னிற் றொழுதுவீழ்ந் தெழுந்து நின்று
பண்டெலா மடியேன் செய்த பணியெனக் கின்று முட்ட
வண்டர்தம் பிரானுர் தாமே நென்மலை யளித்தா ரென்று. (கஎ)

மனிதரா லெடுக்கு மெல்லைத் தண்டுநென் மலையி னேக்க
மினியெனற் செய்ய லாகும் பணியன்றி தென்னைக் கேட்டுப்
பனிமதி முடியா ரன்றே யுமக்குநெல் லளித்தா ரென்றே
யினியன மொழிந்து தாமுங் குண்டையூ ரெய்த வந்தார். (கஅ)

விண்ணினே யளக்கு நெல்லின் வெற்பினே நம்பி நோக்கி
யண்ணலைத் தொழுது போற்றி யதிசய மிகவு மெய்தி
யெண்ணில் சீர்ப் பரவை யில்லத் திருநெல்லை யெடுக்க வாளுந்
தண்ணில வணிந்தார் தாமே தரிலன்றி யொண்ணு தென்று. (கக)

மே வ று.

ஆளிடவேண் டிக்கொள்வா ரருகுதிருப் பதியான
கோளிலியிற் றம்பெருமான் கோயினே வந்தெய்தி
வாளனகண் மடவாள் வருந்தாமே யெனும்பதிக
மூளவருங் காதலுடன் முன்றொழுது பாடுதலும். (உ0)

பகற்பொழுது கழிந்ததற்பின் பரவைமனே யளவன்றி
மிகப்பெருகு நெல்லுலகில் விளங்கியவா ரூர்நிறையப்
புகப்பெய்து தருவனநம் பூதங்க ளெனவிசும்பி
னிகர்ப்பரிய தொருவாக்கு நிகழ்ந்ததுநின் மலனருளால். (உக)

தம்பிரா னருள்போற்றித் தரையின்மிசை விழுந்தெழுந்தே
யும்பரா லுணர்வரிய திருப்பாதந் தொழுதேத்திச்
செம்பொனேர் சடையாரைப் பிறபதியுந் தொழுதுபோய்
நம்பரா ரூரணைந்தார் நாவலூர் நாவலனார். (உஉ)

பூங்கோயின் மகிழ்ந்தருளும் புராதனரைப் புக்கிறைஞ்சி
நீங்காத பெருமகிழ்ச்சி யுடனேத்திப் புறம்போந்து
பாங்காளர் புடைசூழ்ந்து போற்றிசைக்கப் பரவையா
ரோங்குதிரு மாளிகையி னுள்ளணைந்தா ராரூரர். (உங)

கோவைவாய்ப் பரவையார் தாமகிழும் படிகூறி
மேவியவர் தம்மோடு மிகலின்புற் றிருந்ததற்பின்
சேவின்மே லுமையோடும் வருவார்தந் திருவருளி
னேவலினு லவ்விரவு பூதங்கண் மிக்கெழுந்து. (உச)

குண்டையூர் நென்மலையைக் குறட்பூதப் படைகவர்ந்து
வண்டலொங் குழற்பரவை மாளிகையை நிறைவித்தே
யண்டர்பிரான் றிருவாரூ ரடங்கவுநென் மலையாக்கிக்
கண்டவரற் புதமெய்துங் காட்சிபெற வமைத்தனவால். (உரு)

அவ்விரவு புலர்காலே யாரூரில் வாழ்வார்கண்
டெவ்வுலகில் விளைந்தனநென் மலையிவை யென்றதிசயித்து
நவ்விமதர்த் திருநோக்கி னங்கைபுகழ்ப் பரவையார்க்
கிவ்வுலகு வாழவரு நம்பியளித் தனவென்பார். (உசு)

நீக்கரிய நெற்குன்று தனேநோக்கி நெறிபலவும்
போக்கரிதா யிடக்கண்டு மீண்டுந்தம் மில்புகுவார்
பாக்கியத்தின் றிருவடிவாம் பரவையார்க் கிந்நெல்லுப்
போக்குமிட மரிதாகு மெனப்பலவும் புகல்கின்றார். (உஎ)

வன்றொண்டர் தமக்களித்த நெற்கண்டு மகிழ்ந்திறப்பா
ரின்றுங்கண் மனையெல்லைக் குட்படுநெற் குன்றெல்லாம்
பொன்றங்கு மாளிகையிற் புகப்பெய்து கொள்கவென
வென்றிமுர சறைவித்தார் மிக்கபுகழ்ப் பரவையார். (உஅ)

அணியாரூர் மறுகதனி லாளியங்கப் பறையறைந்த
பணியாலே மனைநிறைத்துப் பாங்கெங்கு நெற்கூடு
கணியாமற் கட்டிநகர் களிகூரப் பரவையார்
மணியாரம் புனைமார்பின் வன்றொண்டர் தமைப்பணிந்தார். (உக)

நம்பியா ரூரர்திரு வாரூரி னயத்துறைநாட்
செம்பொற்புற் றிடங்கொண்டு வீற்றிருந்த செழுந்தேனைத்
தம்பெரிய விருப்பிலெடுத் தாழ்ந்துணர்வி னற்பருகி
யிம்பருட னும்பர்களு மதிசயிப்ப வேத்தினர். (உ0)

குலவுபுகழ்க் கோட்புலியார் குறையிரந்து தம்பதிக்க
ணலகில்புக ழாரூர னெழுந்தருள வடிவணங்கி
நிலவியவன் றொண்டரஃ திசைத்ததற்பி னேயிறைஞ்சிப்
பலர்புகழும் பண்பினர் மீண்டிதம பதியணைந்தார். (உக)

வே று.

தேவ ரொதுங்கத் திருத்தொண்டர் மிடையுஞ் செல்வத் திருவாரூர்
காவல் கொண்டு தனியாளுங் கடவுட் பெருமான் கழல்வணங்கி
ஈவ லூர ரருள்பெற்று நம்பர் பதிகள் பிறவுண்ணிப்
பாவை பாகர் தமைப்பணிந்து பாடும் விருப்பிற் சென்றணைவார். (உஉ)

மாலு மயனு முணர்வரியார் மகிழும் பதிகள் பலவணங்கி
ஞால நிகழ்கோட் புலியார்தங் நாட்டியத்தான் குடிவண்ண
வேலும் வகையா லலங்கரித்தங் கவரு மெதிர்கொண் டினிதிறைஞ்சிக்
கோல மணிமா ளிகையின்க ணுர்வம் பெருகக் கொடுபுக்கார். (உஊ)

தூய மணிப்பொற் றவிசிலெழுந் தருளி யிருக்கத் தூநீராற்
சேய மலர்ச்சே வடிவிளக்கித் தெளித்துக் கொண்டச் செழும்புனலான்
மேய சுடர்மா ளிகையெங்கும் விளங்க வீசி யுளங்களிப்ப
வேய சிறப்பி லர்ச்சனைக ளெல்லா மியல்பின் முறைபுரிவார். (உசு)

பூந்தண் பனிநீர் கொடுசமைத்த பொருவில் விரைச்சந் தனக்கலவை
வாய்ந்த வகிலி னறுஞ்சாந்து வாச நிறைமான் மதச்சேறு
தோய்ந்த புகைகா வியினறுநெய் தூய பசுங்கர்ப் பூரமுத
லேய்ந்த வடைக்கா யமுதினேய வெண்ணின் மணிப்பா சனத்தேந்தி. (உஎ)

வே று.

வேறு வேறு திருப்பள்ளித் தாமப் பணிகண் மிகவெடுத்து
மாறி லாத மணித்திருவா பரண வருக்கம் பலதாங்கி
யீறில் விதத்துப் பரிவட்ட மூழி னிரைத்தே யெதிரிறைஞ்சி
யாறு புனைந்தா ரடித்தொண்ட ரளவில் பூசை கொளவளித்தார். (உஅ)

செங்கோ லரச னருளுரிமைச் சேனைபதியாங் கோட்புலியார்
நங்கோ மானை நாவலூர் நகரார் வேந்தை நண்பினுற்
றங்கோ மனையிற் றிருவமுது செய்வித் திறைஞ்சித் தலைநிறைத்த
பொங்கோ தம்போற் பெருங்காதல் புரிந்தார் பின்னும் போற்றுவார். (உள)

ஆனை விருப்பின் மற்றவர்தா மருமை யான்முன் பெற்றெடுத்த
தேனூர் கோதைச் சிங்கடியார் தமையு மவர்பின் திருவுயிர்த்த
மானூர் கோக்கின் வனப்பகையார் தமையுங் கொணர்ந்து வன்றொண்டர்
ஞானாண் மலர்த்தாள் பணிவித்துத் தாமுந் தொழுது சொல்லுவார். (சுஅ)

அடியேன் பெற்ற மக்களிவ ரடிமை யாகக் கொண்டருளிக்
கடிசேர் மலர்த்தா டொழுதுய்யக் கருணை யளிக்க வேண்டுமெனத்
தொடிசேர் தளிர்க்கை யிவரெனக்குத் தாயமக்க ளெனக்கொண்டப்
படியே மகண்மை யாக்கொண்டார் பரவை யார்தங் கொழுங்ஞர். (சுக)

கோதை சூழ்ந்த குழலாரைக் குறங்கின் வைத்துக் கொண்டிருந்து
காத னிறைந்த புதல்வியராய் கருத்துட் கரிவா லிணைத்துச்சி
மீது கண்ணீர் விழமோந்து வேண்டு வனவுங் கொடுத்தருளி
நாதர் கோயில் சென்றடைந்தார் நம்பி தம்பி ரான்றோழர். (சை0)

வென்றி வெள்ளே றுயர்த்தருளும் விமலர் திருக்கோ புரமிறைஞ்சி
யொன்று முள்ளத் தொடுமன்பா லுச்சி குவித்த கரத்தோடுஞ்
சென்று புக்குப் பணிந்துதிருப் பதிகம் பூவ ணெண்டெடுத்துக்
கொன்றை முடியா ரருளுரிமை சிறப்பித் தார்கோட் புலியாரை. (சுக)

சிறப்பித் தருளுந் திருக்கடைக்காப் பதனி னிடைச்சிங் கடியாரைப்
பிறப்பித் தெடுத்த பிதாவாகத் தம்மை நினைந்த பெற்றியினன்
மறப்பில் வகைச்சிங் கடியப்ப னென்றே தம்மை வைத்தருளி
நிறப்பொற் புடைய விசைபாடி நிறைந்த வருள்பெற் றிறைஞ்சுவார். (சை2)

அங்கு நின்று மெழுந்தருளி யளவி லன்பி னுண்மகிழச்
செங்க ணுதலார் மேவுதிரு வலிவ லத்தைச் சேர்ந்திறைஞ்சி
மங்கை பாகர் தமைப்பதிகம் வலிவ லத்துக் கண்டேனென்
றெங்கு நிகழ்ந்த தமிழ்மாலை யெடுத்துத் தொடுத்த விசைபுனைவார். (சுங)

நன்று மகிழுஞ் சம்பந்தர் நாவுக் கரசர் பாட்டுகந்தீ
ரென்று சிறப்பித் திறைஞ்சிமகிழ்ந் தேத்தி யருள்பெற் றெழுந்தருளி
மன்றி னிடையே நடம்புரிவார் மருவு பெருமைத் திருவாரூர்
சென்று குறுகிப் பூங்கோயிற் பெருமான் செம்பொற் கழல்பணிந்து. (சுச)

இறைஞ்சிப் போந்து பரவையார் திருமா ளிகையி லெழுந்தருளி
நிறைந்த விருப்பின் மேவுநா ணீடி செல்வத் திருவாரூர்ப்
புறம்பு ணிய கோயில்களும் பணிந்து போற்றிப் புற்றிடமா
யுறைந்த பெருமான் கழல்பிரியா தோவா வின்ப முற்றிருந்தார். (சுடு)

செறிபுன் சடையார் திருவாரூர்த் திருப்பங் குனியுத் தரத்திருநாள்
குறுக வரலும் பரவையார் கொடைக்கு விழாவிற் குறைவறுக்க
நிறையும் பொன்கொண் டணைவதற்கு நினைந்து நம்பி திருப்புகலூ
நிறைவர் பாதம் பணியவெழுந் தருளிச் சென்றங் கெய்தினார். (சுசு)

சென்று விரும்பித் திருப்புகலூர்த் தேவர் பெருமான் கோயில்மணி
முன்றில் பணிந்து வலங்கொண்டு முதல்வர் முன்பு வீழ்ந்திறைஞ்சித்
தொன்று மரபி னடித்தொண்டு தோய்ந்த வன்பிற் றுதித்தெழுந்து
நின்று பதிக விசைபாடி நினைந்த கருத்து நிகழ்விப்பார். (சுஎ)

சிறிது பொழுது கும்பிட்டுச் சிந்தை முன்ன மங்கொழிய
வறிது புறம்போந் தருளியயன் மடத்தி லணையார் வன்றொண்ட
ரறிவு கூர்ந்த வன்பருட னணிமுன் றிலினே ருகிருப்ப
மறிவண் கையா ருளேயோ மலர்க்கண் டுயில்வந் தெய்தியதால். (சஅ)

துயில்வந் தெய்தத் தம்பிரான் றோழ ரங்குத் திருப்பணிக்குப்
பயிலுஞ் சுடுமட் பலகைபல கொணர்வித் துயரம் பண்ணித்தே
னயிலுஞ் சுரும்பார் மலர்ச்சிகழி முடிமே லணையா வுத்தரிய
வெயிலுந் தியவெண் பட்டதன்மேல் விரித்துப் பள்ளி மேவினர். (சக)

சுற்று மிருந்த தொண்டர்களுந் துயிலு மளவிற் றுணைமலர்க்கண்
பற்றுந் துயினீங் கிடப்பள்ளி யுணர்ந்தார் பரவை கேள்வனர்
வெற்றி விடையா ருளாலே வேமண் கல்லே விரிசுடர்ச்செம்
பொற்றிண் கல்லாயின கண்டு புகலூ ரிறைவ ருள்போற்றி. (கூ0)

தொண்ட ருணர மகிழ்ந்தெழுந்து தூணக்கைக் கமல முகைதலைமேற்
கொண்டு கோயி லுட்புக்குக் குறிப்பி லடங்காப் பேரன்பு
மண்டு காத லுறவணங்கி வாய்த்த மதுர மொழிமாலை
பண்டங் கிசையிற் றம்மையே புகழ்ந்தென் றெடுத்துப் பாடினர். (கூக)

பதிகம் பாடித் திருக்கடைக்காப் பணிந்து பரவிப் புறம்போக்தே
யெதிரி லின்ப மிம்மையே தருவா ருள்பெற் றெழுந்தருளி
நதியின் குவையு முடன்கொண்டு நிறையு நதியுங் குறைமதியும்
பொதியுஞ் சடையார் திருப்பனையூர் புகுவார் புரிதான் மணிமார்பர். (கூஉ)

செய்ய சடையார் திருப்பனையூர்ப் புறத்துத் திருக்கூத் தொடுங்காட்சி
யெய்த வருள வெதிர்சென்றங் கெழுந்த விருப்பால் விழுந்திறைஞ்சி
யையர் தம்மை யரங்கிலாட வல்லா ரவரே யழகியரென்
றுய்ய வுலகு பெறும்பதிகம் பாடி யருள்பெற் றுடன்போந்தார். (கூங)

வளமல் கியசீர்த் திருப்பனையூர் வாழ்வா ரேத்த வெழுந்தருளி
யளவில் செம்பொ னிட்டிகைக ளாண்மே னெருங்கி யணியாரூர்த்
தளவ முறுவற் பரவையார் தம்மா ளிகையிற் புகத்தாமு
முளமன் னியதம் பெருமானர் தம்மை வணங்கி யுவந்தணைந்தார். (கூச)

வந்து பரவைப் பிராட்டியார் மகிழ வைகி மருவுகா
ளந்த ஞரூர் மருங்கணைய கோயில் பலவு மிணைந்திறைஞ்சிச்
சிந்தை மகிழ விருப்பினெடுத் தெய்வப் பெருமா டிருவாரூர்
முந்தி வணங்கி யினிதிருந்தார் முனேப்பா டியர்தங் காவலனர். (கூடு)

பலநா ளமர்வார் பரமர்திரு வருளா லங்கு நின்றும்போய்ச்
சிலைமா மேரு வீரனூர் திருகன் னிலத்துச் சென்றெய்தி
வலமா வந்து கோயிலினுள் வணங்கி மகிழ்ந்து பாடினர்
தலமார் கின்ற தண்ணியல்வெம் மையினு னென்னுந் தமிழ்மாலை. (கூசு)

பாடி யங்கு வைகியபின் பரமர் வீழி மிழலையினி
னீடு மறையான் மேம்பட்ட வந்த ணுளர் நிறைந்தீண்டி
நாடு மகிழ வவ்வளவு நடைக்கா வணம்பா வாடையுடன்
மாடு கதலி பூகநிரை மல்க மணித்தோ ரணநிரைத்து. (கூஎ)

வந்து நம்பி தம்மையெதிர் கொண்டு புக்கார் மற்றவருஞ்
சிந்தை மலர்ந்து திருவீழி மிழலே யிறைஞ்சிச் சேண்விசும்பின்
முந்தை யிழிந்த மொய்யொளிசேர் கோயி றன்னே முன்வணங்கிப்
பந்த மறுக்குந் தம்பெருமான் பாதம் பரவிப் பணிகின்றார். (குஅ)

படங்கொ ளரவிற் றுயில்வோனும் பதுமத் தோனும் பரவரிய
விடங்கன் விண்ணோர் பெருமானே விரவும் புனக முடன்பரவி
யடங்கல் வீழி கொண்டிருந்தீ ரடியேனுக்கு மருளுமெனத்
தடங்கொள் செஞ்சொற் றமிழ்மாலை சாத்தி யங்குச் சாருநாள். (குக)

வாசி யறிந்து காசளிக்க வல்ல மிழலை வாணர்பாற்
றேசு மிக்க திருவருண்முன் பெற்றுத் திருவாஞ் சியத்தடிகள்
பாச மறுத்தாட் கொள்ளுந்தாள் பணிந்து பொருவ ளுரென்னு
மாசில் பதிகம் பாடியமர்த் தரிசிற் கரைப்புத் தூரணைந்தார். (கo)

செழுநீர் நறையூர் நிலவுதிருச் சித்தீச் சரமும் பணிந்தேத்தி
விழுநீர் மையினிற் பெருந்தொண்டர் விருப்பி னுடு மெதிர்கொள்ள
மழுவோ டிளமான் கரதலத்தி லுடையார் திருப்புத் தூர்வணங்கித்
தொழுசீர் மையினிற் றுதித்தேத்தித் தொண்டர் சூழ வுறையுநாள். (கக)

புனித னுர்முன் புகழ்த்துணையார்க் கருளுந் திறமும் போற்றிசைத்து
முனிவர் போற்ற வெழுந்தருளி மூரி வெள்ளக் கங்கையினிற்
பனிவெண் டிங்க ளணிசடையார் பதிகள் பலவும் பணிந்துபோந்
தினிய நினேலி லெய்தினு நிறைவர் திருவா வடுதுறையில். (கஉ)

விளங்குந் திருவா வடுதுறையின் மேயார் கோயில் புடைவலங்கொண
டிளங்கொண் டெருகு மன்பினுட னுள்புக் கிறைஞ்சி யேத்துவார்
வளங்கொள் பதிக மகநயவனெண் றெடுத்து வளவன் செங்கணுன்
றளங்கொள் பிறப்புஞ் சிறப்பித்துத் தமிழ்ச்சொன் மாலை சாத்தினார். (கங)

சாத்தி யங்கு வைகுநாட் டயங்கு மன்பருடன் கூடப்
பேர்த்து மிறைஞ்சி யருள்பெற்றுப் பெண்ணேர் பாகத் தண்ணலார்
தீர்த்தப் பொன்னித் தென்கரைமேற் றிகழும் பதிகள் பலபணிந்து
மூர்த்தி யார்தம் மிடைமருதை யடைந்தார் மூனைப்பா டித்தலைவர். (கச)

மன்னு மருதி னமர்ந்தவரை வணங்கி மதுரச் சொன்மலர்கள்
பன்னிப் புனைந்து பணிந்தேத்திப் பரவிப் போந்து தொண்டருட
னன்னற் பதியி லிருந்தகல்வா ரரனூர் திருவா கேச்சரத்தை
முன்னிப் புக்கு வலங்கொண்டு முதல்வர் திருத்தாள் வணங்குவார். (கடு)

பெருகும் பதிகம் பிறையணிவா ணுதலாள் பாடிப் பெயர்ந்துநிறை
திருவின் மலியுஞ் சிவபுரத்துத் தேவர் பெருமான் கழல்வணங்கி
யுருகுஞ் சிந்தை யுடன்போந்தே யுமையோர் பாகர் தாமகிழ்ந்து
மருவும் பதிகள் பிறபணிந்து கலிய நல்லூர் மருங்கணைந்தார். (கசு)

செம்மை மறையோர் திருக்கலிய நல்லூ ரிறைவர் சேவடிக்கீழ்
மும்மை வணக்கம் பெறவிறைஞ்சி முன்பு பரவித் தொழுதெழுவார்
கொம்மை மருவு குரும்பைமுலை யுமையா ளென்னுந் திருப்பதிக
மெய்ம்மைப் புராணம் பலவுமிகச் சிறப்பித் திசையின் விளம்பினார். (கஎ)

அங்கு நின்று திருக்குடமூக் கணைந்து பணிந்து பாடிப்போய்
மங்கை பாகர் வலஞ்சுழியை மருவிப் பெருகு மன்புருகத்
தங்கு காத லுடன்வணங்கித் தமிழாற் பரசி யரசினுக்குத்
திங்கண் முடியா ரடியளித்த திருநல் லூரைச் சென்றணைந்தார். (சுஅ)

நல்லூ ரிறைவர் கழல்போற்றி நவின்று நடவு நம்பர்பதி
யெல்லா மிறைஞ்சி யேத்திப்போ யிசையாற் பரவுந் தம்முடைய
சொல்லு தியமா வணிந்தவர்தஞ் சோற்றுத் துறையின் மருங்கெய்தி
யல்லூர் கண்டர் கோயிலினு ளடைந்து வலங்கொண் டடிபணிவார். (சுக)

அழனீ ரொழுகி யனையவெனு மஞ்சொற் பதிக மெடுத்தருளிக்
கழனீ டியவன் பினிற்போற்றுங் காதல் கூரப் பரமியபின்
கெழுநீர் மையினி லருள்பெற்றுப் போந்து பரவை யார்கேள்வர்
முழுநீ றணிவா ரமர்ந்தபதி பலவும் பணிந்து முன்னுவார். (எ0)

தேவர் பெருமான் கண்டியூர் பணிந்து திருவை யாறதனே
மேவி வணங்கிப் பூந்துருத்தி விமலர் பாதந் தொழுதிறைஞ்சிச்
சேவில் வருவார் திருவாலம் பொழிலிற் சேர்ந்து தாழ்ந்திரவு
மேவு சயனத் தமர்ந்தருளிப் பள்ளி கொள்ளக் கனவின்கண். (எக)

மழபா டியினில் வருவதற்கு நினைக்க மறந்தா யோவென்று
குழகா கியதங் கோலமெதிர் காட்டி யருளக் குறித்துணர்ந்து
நிழலார் சோலைக் கரைப்பொன்னி வடபா லேறி நெடுமாட
வழகார் வீதி மழபாடி யணைந்தார் நம்பி யாரூரர். (எஉ)

அணைந்து திருக்கோ புரமிறைஞ்சி யன்பர் சூழ புடன்புகுந்து
பணங்கொ ளரவ மணிந்தார்முன் பணிந்து வீழ்ந்து பரங்கருணைக்
குணங்கொ ளருளின் நிறம்போற்றிக் கொண்ட புளகத் துடனுருகிப்
புணர்ந்த விசையாற் றிருப்பதிகம் பொன்னூர் மேனி யென்றெடுத்து. (எங)

அன்னே யுன்னே யல்லால்யா ஞரை நினைக்கே னெனவேத்திற்
தன்னே ரில்லாப் பதிகமலர் சாத்தித் தொழுது புறம்பணைந்து
மன்னும் பதியிற் சிலநாள்கள் வைகித் தொண்ட ருடன்மகிழ்ந்து
பொன்னிக் கரையி னிருமருங்கும் பணிந்து மேல்பாற் போதுவார். (எச)

செய்ய சடையார் திருவானைக் காவி லணைந்து திருத்தொண்ட
ரெய்த முன்வந் தெதிர்கொள்ள விறைஞ்சிக் கோயி லுட்புகுந்தே
யையர் கமலச் சேவடிக்கீ ழார்வம் பெருக வீழ்ந்தெழுந்து
மெய்யு முகிழ்ப்பக் கண்பொழிநீர் வெள்ளம் பரப்ப விம்முவார். (எடி)

மறைக ளாய நான்குமென மலர்ந்த செஞ்சொற் றமிழ்ப்பதிக
நிறையுங் காத லுடனெடுத்து நிலவு மன்பர் தமைநோக்கி
யிறையும் பணிவா ரெம்மையுமா ளுடையா ரென்றென் றேத்துவா
ருறையூர்ச் சோழன் மணியாரஞ் சாத்தும் நிறத்தை யுணர்ந்தருளி. (எசு)

வளவர் பெருமான் றிருவாரஞ் சாத்திக் கொண்டு வரும்பொன்னிக்
கிளருந் திரைநீர் மூழ்குதலும் வழுவிப் போகக் கேதமுற
வளவி நிருமஞ் சனக்குடத்து ளதுபுக் காட்ட வணிந்தருளித்
தளரு மவனுக் கருள் புரிந்த தன்மை சிறக்கச் சாற்றினார். (எஎ)

சாற்றி யங்குத் தங்குநாட் டயங்கும் பவளத் திருமேனி
நீற்றர் கோயி லெம்மருங்குஞ் சென்று தாழ்ந்து நிறைவிருப்பாற் .
போற்றி யங்கு நின்றும்போய்ப் பொருவி லன்பர் மருவியதொண்
டாற்றும் பெருமைத் திருப்பாச்சி லாச்சி ராமஞ் சென்றடைந்தார். (எஅ)

சென்று திருக்கோ புரமிறைஞ்சித் தேவர் மலிந்த திருந்துமணி
முன்றில் வலங்கொண் டுள்ளணைந்து முதல்வர் முன்பு வீழ்ந்திறைஞ்சி
நன்று பெருகும் பொருட்காத னயப்புப் பெருக நாதரெதிர்
நின்றும் பரவி நினைந்தபொரு ளருளா தொழிய நேர்நின்று. (எக)

அன்பு நீங்கா வச்சமுட னடித்த திருத்தோ ழமைப் பணியாற்
பொன்பெ ருத திருவுள்ளம் புழுங்க வழுங்கிப் புறம்பொருபான்
முன்பு நின்ற திருத்தொண்டர் முகப்பே முறைப்பா டெடையார்போ
லென்பு கரைத்து பிராஞர்மற் றில்லே யென்ன வெடுக்கின்றார். (அo)

வே று.

நித்தமு நீங்கா நிலைமையி னீங்கி நிலத்திடைப் புலங்கெழும் பிறப்பா
லுய்த்தக ராண்தை யுணர்ந்துசொத் தடிமை யொருமையா மெழுமையு முணர்த்தி
யெத்தனே யருளா தொழியினும் பிரானு நிவரல்லா தில்லேயே யென்பார்
வைத்தனன் றனக்கே தலையுமென் னுவு மெனவழுத் தினர்வழித் தொண்டர். (அக)

இவ்வகை பரவித் திருக்கடைக் காப்பு மேசின வல்லவென் றிசைப்ப
மெய்வகை வீரும்பு தம்பெரு மானர் வீழுநிதிக் குவையளித் தருள
மைவளர் கண்டர் கருணையே பரசி வணங்கியப் பதியிடை வைகி
யெவ்வகை மருங்கு மிறைவர்தம் பதிக ளிறைஞ்சியங் கிருந்தனர் சிலகாள். (அஉ)

அப்பதி நீங்கி யருளினுற் போகி யாவினஞ் சூடிவார் நீல
மெப்பெயர்ப் பதியு மிருமருங் கிறைஞ்சி யிறைவர்பைஞ் சூலியை யெய்திப்
பைப்பணி யணிவார் கோபுர மிறைஞ்சிப் பாங்கமர் புடைவலங் கொண்டு
துப்புறழ் வேணி யார்கழ லிறுமுவார் தோன்றுகங் காளரைக் கண்டார். (அங)

கண்டவர் கண்கள் காதனீர் வெள்ளம் பொழிதரக் கைகுவித் திறைஞ்சி
வண்டறை குழலார் மனங்கவர் பலிக்கு வருந்திரு வடிவுகண் டவர்கள்
கொண்டதோர் மயலால் வினவுகூற் றுருக் குலவுசொற் காருலா வியவென்
றண்டர்நா யகரைப் பரவியா ரணிய விடங்கரா மருந்தமிழ் புனைந்தார். (அச)

பரவியப் பதிகத் திருக்கடைக் காப்புச் சாத்திமுன் பணிந்தருள் பெற்றுக்
கரவிலன் பர்கடங் கூட்டமுந் தொழுது கலந்தினி திருந்து போந்தருளி
விரவிய வீங்கோய் மலைமுத லாக வீமலர்த்தம் பதிபல வணங்கிக்
குரவலர் சோலை யணிதிருப் பாண்டிக் கொடுமுடி யினைந்தனர் கொங்கில். (அரி)

கொங்கினிற் பொன்னித் தென்கரைக் கறையூர்க் கொடுமுடிக் கோயின் முன்குறுகிச்
சங்கவெண் குழையா ருழைவலஞ் செய்து சார்ந்தடி யிணையினிற் றாழ்ந்து
பொங்கிய வேட்கை பெருகிடத் தொழுது புனிதர்பொன் மேனியை நோக்கி
யிங்கிவர் தம்மை மறக்கவொண் ணாதென் றெழுந்தமெய்க் குறிப்பினி லெடுப்ப. (அசு)

அண்ணலா ரடிகண் மறக்கினுஞ் சம வஞ்செழுத் தறியவெப் பொழுது
மெண்ணிய நாவே யின்சுவை பெருக வீடையாறு கியம்புமென் றிதனைத்
திண்ணிய வுணர்விற் கொள்பவர் மற்றுப் பற்றிலே னெனச்செழுந் தமிழா
ணண்ணிய வன்பிற் பிணிப்புற கவின்றூர் சமச்சிவா யத்திருப் பதிகம். (அஎ)

உலகெ லாமுய்ய வுறுதியாம் பதிக முரைத்துமெய் யுணர்வரு வொருமை
நிலவிய சிந்தை யுடன்றிரு வருளா னீங்குவார் பாங்குநற் பதிகள்
பலவுமுன் பணிந்து பரமர்தாள் போற்றிப் போக்குதண் பணிமலர்ப் படப்பை
குலவுமக் கொங்கிற் காஞ்சிவாய்ப் பேரூர் குறுகினர் முறுகுமா தரவால். (அஅ)

அத்திருப் பதியை யணைந்துமுன் றம்மை யாண்டவர் கோயிலுட் புகுந்து
மெய்த்தவர் சூழ வலங்கொண்டு திருமுன் மேவுவார் தம்மெதிர் விளக்க
நித்தனார் நில்லே மன்றுணின் முட னீடிய கோலநேர் காட்டக்
கைத்தலங் குவித்துக் கண்களா னந்தக் கலுழிநீர் பொழிதரக் கண்டார். (அக)

காண்டலுங் தொழுது வீழ்ந்துட னெழுந்து கரையிலன் பெம்பிரா யுருக்கப்
பூண்டவெம் புலனிற் புலப்படா வின்பம் புணர்ந்துமெய் யுணர்விளிற் பொங்கத்
தாண்டவம் புரியுந் தம்பிரா ஞரைத் தலைப்படக் கிடைத்தபின் சைவ
வாண்டகை யாருக் கடுத்தவர் நிலைமை விளைவையா ரளவறிந் துரைப்பார். (கo)

அங்கிலை நிகழ்ந்த வாரருள் பெற்ற வன்பனு ரின்பவெள் ளத்து
மன்னிய பாடன் மகிழ்ந்துடன் பரவி வளம்பதி யதனிடை மருவிப்
பொன்மணி மன்று ளெடுத்தசே வடியார் புரிகடங் கும்பிடப் பெற்று
லென்னினிப் புறம்போ யெய்துவ தென்று மீண்டெழுந் தருளுதற் கெழுவார். (கக)

ஆயிடை நீங்கி யருளினற் செல்லா ரருவரைச் சுரங்களும் பிறவும்
பாயுநீர் நதியும் பலபல கடந்து பரமர்தம் பதிபல பணிந்து
மேயவண் டமிழால் விருப்பொடும் பரவி வெஞ்சமாக் கூடலும் பணிந்து
சேயிடை கழியப் போந்துவந் தடைந்தார் தென்றிசைக் கற்குடி மலையில். (கஉ)

வே று.

வீடு தருமிக் கற்குடியில் விழுமி யாரைப் பணிந்திறைஞ்சி
நீடு விருப்பிற் றிருப்பதிக நிறைந்த சிந்தை யுடன்பாடிப்
பாடும் விருப்பிற் றெருண்டருடன் பதிகள் பலவு மினைந்திறைஞ்சித்
தேடு மிருவர் காண்பரியார் திருவாறை மேற்றளி சென்றணைந்தார். (கஉ)

செம்பொன் மேருச் சிலைவளைத்த சிவனு ராறை மேற்றளியி
னம்பர் பாதம் பணிந்திறைஞ்சி காத லகிழ்வார்க் கருள்கூட
வும்பர் போற்றுந் தானங்கள் பலவும் பணிந்து போந்தணைவா
ரிம்பர் வாழ வின்னம்பர் ஈசரைச் சேர வெய்தினார். (கஏ)

எரின் னிலவு மின்னம்பர் மகிழ்ந்த வீசர் கழல்வணங்கி
யாரு மன்பிற் பணிந்தேத்தி யாரா வருளா லங்கமர்வார்
போரின் மலியுங் கரியுரித்தார் மருவும் புறம்ப யம்போற்றச்
சேரு முள்ள மிக்கெழுமெய்ப் பதிகம் பாடிச் செல்கின்றார். (கஙி)

வே று.

அங்க மோதியோ ராறை மேற்றளி யென்றெ டுத்தமர் காதலிற்
பொங்கு மின்றமி ழால்லி ரும்பு புறம்ப யன்தொழப் போதுமென்
றெங்கு மன்னிய வின்னி சைப்பதி கம்புனைந்துட னெய்தினர்
திங்கள் சூடிய செல்வர் மேவு திருப்பு றம்பயஞ் சேரவே. (கக)

அப்பதிக்க ணமர்ந்த தொண்டரு மன்று வெண்ணெய்நல் லூரினி
லொப்ப ருந்தனி வேதி யன்பழ வோலை காட்டிநின் ருண்டவ
ரிப்ப திக்கண்வந் தெய்த வென்ன தவங்க ளென்றெதிர் கொள்ளவே
மூப்பு ரங்க ளெரித்த சேவகர் கோயில் வாயிலின் முன்னினார். (கஎ)

நீடு கோபுர முன்பி றைஞ்சி நிலாவு தொண்டரொ டுள்ளணைந்
தாடன் மேவிய வண்ண லாரடி போற்றி யஞ்சலி கோலிகின்
றேடு லாமலர் வாவி யெட்டிலெ டைந்து மாகு முறுப்பிலுற்
பீடு நீடு நிலத்தின் மேற்பெ ருகப்பணிந்து வணங்கினார். (கூஅ)

அங்கு நீடருள் பெற்று ளார்வ மிகப்பொ ழிந்தெழு மன்பினுற்
பொங்கு ணாண்மலர்ப் பாத முன்பணிந் தேத்தி மீண்டு புறத்தணைந்
தெங்கு மாகி நிறைந்து நின்றவர் தாம மிழ்ந்த விடங்களிற்
றங்கு கோல மிறைஞ்சு வாரருட் டாவி லன்பரொ டெய்தினார். (கூக)

வே று.

வம்புவீ டலங்கன் மார்பின் வன்றொண்டர் வன்னி கொன்றை
தும்பைவெள் ளடம்பு தங்க டியீ ரணிந்த சென்னித்
தம்பிரா னமர்ந்த தானம் பலபல சார்ந்து தாழ்ந்து
கொம்பனை ராட னீடு கூடலை யாற்றூர் சார. (கoo)

செப்பரும் பதியிற் சேரார் திருமுது குன்றை நோக்கி
யொப்பரும் புகழார் செல்லு மொருவழி யுமையா ளோடு
மெய்ப்பரம் பொருளா யுள்ளார் வேதிய ராகி நின்றூர்
முப்புரி நூலுந் தாங்கி நம்பியா ரூரர் முன்பு. (கoக)

நின்றவர் தம்மை நோக்கி நெகிழ்ந்தநெ தையராய்த் தாழ்வார்
நின்றியா முதுகுன் றெய்த வழியெமக் கியம்பு மென்னக்
குன்ற வில் லாளியாருங் கூடலை யாற்றூ ரேறச்
சென்றதிவ் வழிதா னென்று செல்வழித் துணையாய்ச் செல்ல. (கoஉ)

கண்டவர் கைகள் கூப்பித் தொழுதுபின் றொடர்வார் காணூர்
வண்டலர் கொன்றை யாரை வடிவுடை மழுவெண் றேத்தி
யண்டர்தம் பெருமான் போந்த வதிசய மறியே னென்று
கொண்டெழு விருப்பி னோடுங் கூடலை யாற்றூர் புக்கார். (கoங)

கூடலை யாற்றூர் மேவுங் கொன்றைவார் சடையி னர்தம்
பீடியர் கோயில் புக்குப் பெருகிய வார்வம் பொங்க
வாடகப் பொதுவி லாடு மறைகழல் வணங்கிப் போற்றி
நீடருள் பெற்றுப் போந்து திருமுது குன்றி னேர்ந்தார். (கoச)

தடநிலைக் கோபு ரத்தைத் தாழ்ந்துமுன் னிறைஞ்சிக் கோயில்
புடைவலங் கொண்டு புக்குப் போற்றினர் தொழுது வீழ்ந்து
நடநவில் வாரை நஞ்சி யிடையெனுஞ் செஞ்சொன் மாலைத்
தொடைநிகழ் பதிகம் பாடித் தொழுதகை சுமந்து நின்று. (கoஙி)

நாதர்பாற் பொருடாம் வேண்டி நண்ணிய வண்ண மெல்லாங்
கோதறு மனத்துட் கொண்ட குறிப்பொடும் பரவும் போது
தாதவிழ் கொன்றை வேய்ந்தார் தாமருள் பெறுவார் சைவ
வேதியர் தலைவர் மீண்டு மெய்யில்வெண் பொடியும் பாட. (கoசு)

பனிமதிச் சடையார் தாமும் பன்னிரண் டாயி ரம்பொன்
னனியருள் கொடுக்கு மாற்ரு னல்கிட வுடைய நம்பி
தனிவரு மகிழ்ச்சி பொங்கத் தாழ்ந்தெழுந் தருகு சென்று
கனிவிட மிடற்றி னூர்முன் பின்னென்று கழற லுற்றூர். (கoஎ)

அருளுமிக் கனக மெல்லா மடியனேற் காரு ருள்ளோர்
மருளுற வீயப்ப வங்கே வரப்பெற வேண்டு மென்னத்
தெருளுற வெழுந்த வாக்காற் செழுமணி முத்தாற் றிட்டிப்
பொருளினே முழுது மாளர்க் குளத்திற்போய்க் கொள்க வென்னார். (கo அ)

என்றுதம் பிரானார் நல்கு மின்னருள் பெற்ற பின்னர்
வன்றொண்டர் மச்சம் வெட்டிக் கைக்கொண்டு மணிமுத் தாற்றிற்
பொன்றிர ளெடுத்து நீருட் புகவிட்டுப் போது கின்று
ரன்றெனே வலிந்தாட் கொண்ட வருளிதி லறிவே னென்று. (கoக)

மேவிய காதற் றொண்டு விரவுமெய் விருத்தி பெற்று
ராவியின் விருத்தி யான வந்தணர் புலியூர் மன்றிற்
காவியங் கண்டர் கூத்துக் கண்டுகும் பிடுவ தென்று
வாவிசூழ் தில்லே மூதூர் வழிக்கொள்வான் வணங்கிப் போந்தார். (ககo)

மாடுள பதிகள் சென்று வணங்கிப்போய் மங்கை பாகர்
நீடிய கடம்பூர் போற்றி நிறைந்தவா னந்தக் கூத்த
ராடிய தில்லே மூதூ ரணைந்தனி வாயில் புக்குச்
சேடியர் மாட மன்னுஞ் செழுந்திரு வீதி சார்ந்தார். (ககக)

பொற்றிரு வீதி தாழ்ந்து புண்ணிய வீரோ வாங்கு
ற்றிரு வாயி னண்ணி நலமலி யலங்கன் மார்பர்
மற்றதன் முன்பு மண்மேல் வணங்கியுட் புருந்து பைம்பொற்
சுற்றுமா ளிகைசூழ் வந்து தொழுதுகை தலேமேற் கொள்வார். (ககஉ)

ஆடிய திருமுன் பான வம்பொனின் கோபு ரத்தி
னூடுபுக் கிறைஞ்சி யோங்கு மொளிவளர் கனக மன்றி
னுடகச் செய்ய தாளே நண்ணுற வுண்ணி றைந்து
நீடுமா னந்த வெள்ளக் கண்கணீர் நிரந்து பாய. (ககங)

பரவுவாய் குளறிக் காதல் படிதிருப் படியைத் தாழ்ந்து
விரவுமெய் யங்க மைந்து மெட்டினும் வணங்கி வேட்கை
யுரனுறு திருக்கூத் துள்ள மார்தரப் பெருகி நெஞ்சிற்
கரவிலா தவரைக் கண்ட நிறைவுதங் கருத்திற் கொள்ள. (ககச)

வே று.

மடித்தாடு மடிமைக்க ளென்றெடுத்து மன்னுயிர்கட் கருளு மாற்ற
லடித்தாற்று நன்னெறிக்க ணின்றார்கள் வழுவிரை கணேயா வண்ணந்
தடிப்பானைப் பேருரிற் கண்டகில்லே சிறப்பித்துத் தனிக்கூத் தென்று
நடிப்பானே நாமனமே பெற்றவா றெனுங்களிப்பா னயந்து பாடி. (ககஎ)

மீளாத வருள்பெற்றுப் புறம்போந்து திருவீதி மேவித் தாழ்ந்தே
யாளான வன்றொண்ட ரந்தணர்க டாம்போற்ற வமர்ந்து வைகி
மாளாத பேரன்பாற் பொற்பதியை வணங்கிப்போய் மறலி வீழத்
தாளாண்மை கொண்டவர்தங் கருப்பறிய லூர்வணக்கிச் சென்று சார்ந்தார். (ககசு)

வே று.

கூற்றுதைத்தார் திருக்கொருடிக் கோயி னண்ணிக் கோபுரத்தைத் தொழுதுபு குந் தன்பர் சூழ, வேற்றபெருங் காதலினு லிறைஞ்சி யேத்தி யெல்லையிலாப் பெரும இழ்ச்சி மனத்தி லெய்தப், போற்றிசைத்துப் புறத்தணைந்தப் பதியின் வைகிப் புனித

ரவர் தமைநினையு மின்பங் கூறிச், சாற்றியமெய்த் திருப்பதிகஞ் செம்மாந் தென்னுந் தமிழ்மாலை புனைந்தங்குச் சாரு நாளில். (கசஎ)

கண்ணுதலார் விரும்புகருப் பறிய லூரைக் கைதொழுது நீங்கிப்போய்க் கயல் கள் பாயு, மண்ணிவளம் படிக்கரையை நண்ணி யங்கு மாதொருபா கத்தவர்தாள் வணங்கிப் போற்றி, யெண்ணில்புகழ்ப் பதிகமுமுன் னவனென் றேத்தி யேகுவார் வாழ்கொளிபுத் தூரெய் தாது, புண்ணியனூர் போம்பொழுது நினைந்து மீண்டு புகுகின்றூர் தலைக்கலனென் றெடுத்துப் போற்றி. (கசஅ)

திருப்பதிகம் பாடியே சென்றங் கெய்தித் தேவர்பெரு மானூர்தங் கோயில்வாயி, லூருப்பொலியு மயிர்ப்புளகம் வீரவத் தாழ்ந்தே யுள்ளணைந்து பணிந்தேத்தி யுருகு மன்பாற், பொருப்பரையன் மடப்பாவை யிடப்பா லானைப் போற்றிசைத்துப் புறம் போந்து தங்கிப் பூமென், கருப்புவயல் வாழ்கொளிபுத் தூரைநீங்கிக் காஞ்சிட் முள் ளூரைக் கலந்த போது. (கசக)

காஞ்சிட் முள்ளூரைச் சாரும் போது கண்ணுதலா ரெதிர்காட்சி கொடுப்பக் கண்டு, தூராண்மென் மலர்க்கொன்றைச் சடையார் செய்ய துணைப்பாத மலர்கண்டு தொழுதே னென்று, வாளுருந் திருப்பதிகம் வள்வா யென்னும் வண்டமிழின் றெடை மாலை மலரச் சாத்தித், தேனுரு மலர்ச்சோலை மருங்கு சூழ்ந்த திருவெதிர்கொள் பாடியினை யெய்தச் செல்வார். (கஉo)

எத்திசையுந் தொழுதேத்த மத்த யானை யெதிர்தெதிர்கொள் பாடியினை யடைவோ மென்னுஞ், சித்தமிலைத் திருப்பதிகம் பாடி வந்து செல்வதிகு செழுங்கோயி லிறைஞ்சி நண்ணி, யத்தர்தமை யடிவணங்கி யங்கு வைகி யருள்பெற்றுத் திருவாள் விக் குடியி லெய்தி, முத்திதரும் பெருமானைத் தொழுத்தி கூட மூப்பதிலை யெனும்பதிக மொழிந்து வாழ்ந்தார். (கஉக)

வே று.

காட்டுநெல் வேள்வித் கோலங் கருத்துற வணங்கிக் காத
ஞட்டிய வுள்ளத் தோடு நம்பியா ரூரர் போற்றி
யீட்டிய தவத்தோர் சூழ வங்குதின் றேறி யன்பு
பூட்டியாட் கொண்டார் மன்னுந் தானங்க ளிறைஞ்சிப் போந்து. (கஉஉ)

வே று.

எஞ்சாத பேரன்பிற் றிருத்தொண்ட ருடனெய்தி
நஞ்சாருங் கறையிடற்ரு ரிடம்பலவு நயந்தேத்தி
மஞ்சாரும் பொழிலுதித்த மலர்த்தடங்கள் புடைசூழுஞ்
செஞ்சாலி வயன்மருதத் திருவாரூர் சென்றடைந்தார். (கஉங)

செல்வமலி திருவாரூர்த் தேவரொடு முனிவர்களு
மல்குதிருக் கோபுரத்து வந்திறைஞ்சி யுள்புக்கங்
கெல்லையிலாக் காதன்மிக வெடுத்தமலர்க் கைகுவித்துப்
பல்குபெருந் தொண்டருடன் பரமர்திரு முன்னணைந்தார். (கஉச)

மூவாத முதலாகி நடுவாகி முடியாத
சேவாருங் கொடியாரைத் திருமூலட் டானத்து
னோவாத பெருங்காத லுடனிறைஞ்சிப் புறம்போந்து
தாவாத புகழ்ப்பரவை யார்திருமா ளிகைசார்ந்தார். (கஉஞ)

பொங்குபெரு வீருப்பினெடு புரிகுழலார் பலர்போற்ற
வங்கயற்கட் செங்கனிவாய்ப் பரவையா ரடிவணங்கி
யெங்கோயு நினைந்தருளிற் றெனவியம்ப வினிதளித்து
மங்கைநல்லா ரவரோடு மகிழ்ந்துறைந்து வைகுநாள். (கஉசு)

நாயனார் முதுகுன்றர் நமக்களித்த நன்னிதியச்
சாயமணி முத்தாற்றிற் புகவிட்டேங் தூணைவரவர்
கோயிலின்மா ளிகைமேல்பாற் குளத்திலவ ரருளாலே
போயெடுத்துக் கொடுபோதப் போதுவா யெனப்புகல. (கஉள)

என்னவதி சயமிதுதா னென்சொன்ன வாறென்று
மின்னிடையார் சிறுமுறுவ லுடன்விளம்ப மெய்புணர்ந்தார்
நன்னுதலா யென்னுடைய நாதனரு ளாற்குளத்திற்
பொன்னடைய வெடுத்தனக்குத் தருவதுபொய் யாதென்று. (கஉஅ)

ஆங்கவரு முடன்போத வளவிறந்த வீருப்பினுடன்
பூங்கோயி லுண்மகிழ்ந்த புனிதர்கழல் புக்கிறைஞ்சி
யோங்குதிரு மாளிகையை வலம்வந்தங் குடன்மேலப்
பாங்குதிருக் குளத்தணைந்தார் பரவையார் தனித்துணைவர். (கஉக)

மற்றதனின் வடகீழ்பாற் கரைமீது வந்தருளி
முற்றிழையார் தமைநிறுத்தி முனைப்பாடித் திருநாடர்
கற்றைவார் சடையாரைக் கைதொழுது குளத்திலிழிந்
தற்றைநா ளிட்டெடுப்பார் போலங்குத் தடவுதலும். (கஙO)

நீற்றழகர் பாட்டிவந்து திருவீரோயாட் டினினின்று
மாற்றறுசெம் பொன்குளத்து வருவியா தொழிந்தருள
வாற்றினிலிட் டக்குளத்திற் றேடுவீ ரருளிதுவோ
சாற்றுமெனக் கோற்றொடியார் மொழிந்தருளத் தனித்தொண்டர். (கஙக)

முன்செய்த வருள்வழியே முருகலர்பூங் குழற்பரவை
தன்செய்ய வாயினைகை தாராமே தாருமென
மின்செய்த நூன்மார்பின் வேதியர்தா முதுகுன்றிற்
பொன்செய்த மேனியினீ ரெனப்பதிகம் போற்றிசைத்து. (கஙஉ)

முட்டவிமை யோரறிய முதுகுன்றிற் றந்தபொருள்
சட்டகான் பெறுதொழிந்த தளர்வினெற் கையறவா
மிட்டளத்தை யிவளெதிரே கெடுத்தருளு மெனுந்திருப்பாட்
டெட்டளவும் பொன்காட்டா தொழிந்தருள வேத்துவார். (கஙஙக)

ஏத்தாதே யிருந்தறியே னெனுந்திருப்பாட் டெவ்வுலகுங்
காத்தாடி மம்பலத்துக் கண்ணுளருங் கண்ணுதலெக்
கூத்தாதந் தருளாயிக் கோமளத்தின் முன்னென்று
நீத்தாருந் தொடர்வரிய நெறிநின்றார் பரவுதலும். (கஙச)

கொந்தவிழ்பூங் கொன்றைமுடிக் கூத்தனார் திருவருளால்
வந்தெழுபொன் றிரளெடுத்து வருமுறையாற் கரையேற்ற
வந்தரத்து மலர்மாரி பொழிந்திழிந்த தவனியுளோ
ரிந்தவதி சயமென்னே யார்பெறுவா ரெனத்தொழுதார். (கஙஞ)

ஞாலம்வியப் பெய்தவரு நற்கனக மிடையெடுத்து
மூலமெனக் கொடுபோந்த வாணியின்முன் னுரைப்பிக்க
நீலமிடற் றவரருளா லுரைதாழப் பின்னுநெடு
மாலயனுக் கரியகழல் வழுத்தினார் வன்றொண்டர். (கருஈ)

மீட்டுமவர் பரவுதலு மெய்யன்ப ரன்பில்வரும்
பாட்டுவந்து கூத்துகந்தார் படுவாசி முடிவெய்து
மோட்டறுசெம் பொன்னெருக்க வொருமாவுங் குறையாமற்
காட்டுதலு மகிழ்ந்தெடுத்துக் கொண்டுகரை யேறினார். (கருஎ)

கரையேறிப் பரவையா ருடன்கனக மானதெலா
நிரையேயா ளிற்சுமத்தி நெடுநிலைமா ளிகைபோக்கித்
திரையேறும் புனற்சடிலத் திருமூலட் டானத்தார்
விரையேறு மலர்ப்பாதந் தொழுதணைந்தார் வீதியினில். (கருஅ)

வந்துதிரு மாளிகையி னுட்புகுந்து மங்கலவாழ்த்
தந்தமிலா வகையேத்து மளவிறந்தா ரொலிசிறப்பச்
சிந்தைநிறை மகிழ்ச்சியுடன் சேயிழையா ருடனமர்ந்தார்
கந்தமலி மலர்ச்சோலை நாவலர்தங் காவலனார். (கருக)

அணியாரூர் மணிப்புற்றி னமர்ந்தருளும் பரம்பொருளைப்
பணிவாரங் கொருநாளிற் பாராட்டித் திருப்பதிகந்
தணியாத வானந்தக் தலைசிறப்பத் தொண்டருடன்
றுணிவாய பொருள்வினவித் தொழுதாடிப் பாடுவார். (கசஂ0)

பண்ணிறையும் வகைபாறு தாங்கியென வெடுத்தருளி
யுண்ணிறையு மனக்களிப்பா லுறுபுளக மயிர்முகிழ்ப்பக்
கண்ணிறையும் புனல்பொழியக் கரையிகந்த வானந்த
மெண்ணிறைத்த படிதோன்ற வேத்திமகிழ்ந் தின்புற்றார். (கசக)

இன்புற்றங் கமர்காளி லீறிலரு மறைபரவும்
வன்புற்றி லரவணிந்த மன்னவனு ரருள்பெற்றே
யன்புற்ற காதலுட னளவிறந்த பிறபதியும்
பொன்புற்கென் றிடவொளிருஞ் சடையாரைத் தொழப்போவார். (கசஉ)

பரிசனமு முடன்போதப் பாங்கமைந்த பதிகடொறுங்
கரியுரிவை புனைந்தார்தங் கழலெழுது மகிழ்ந்தேத்தித்
துரிசறுநற் பெருந்தொண்டர் நள்ளாறு தொழுவதற்குப்
புரிவுறுமெய்த் திருத்தொண்ட ரெதிர்கொள்ளப் புக்கணைந்தார். (கசஙு)

விண்டடவு கோபுரத்தைப் பணிந்துகர மேற்குவித்துக்
கொண்டுபுகுந் தண்ணலார் கோயிலினை வலஞ்செய்து
மண்டியபே ரன்பினொடு மன்னுதிரு நள்ளாறர்
புண்டரிகச் சேவடிக்கீழ்ப் பொருந்தில மிசைப்பணிந்தார். (கசச)

அங்கணரைப் பணிந்தேத்தி யருளினற் றொழுதுபோய்
மங்குலணி மணிமாடத் திருக்கடவூர் வந்தெய்தித்
திங்கள்வளர் முடியார்தந் திருமயான மும்பணிந்து
பொங்குமிசைப் பதிகமரு வார்கொன்றை யெனப்போற்றி. (கசஞு)

திருவீரட் டானத்துத் தேவர்பிரான் சினக்கூற்றின்
பொருவீரந் தொலைத்தகழல் பணிந்துபொடி யார்மேனி
மருவீரத் தமிழ்மாலை புனைந்தேத்தி மலைவனைத்த
பெருவீரர் வலம்புரத்துப் பெருகார்வத் தொடுஞ்சென்றார். (கசசு)

வரையோடி நிகர்புரிசை வலம்புரத்தார் கழல்வணங்கி
யுரையோசைப் பதிகமெனக் கினியோதிப் போய்ச்சங்க
நிரையோடு துமித்தாப மணித்தீப நித்திலப்பூத்
திரையோதங் கொண்டிறைஞ்சுந் திருச்சாய்க்கா டெய்தினார். (கசஎ)

தேவர்பெரு மான்றன்னைத் திருச்சாய்க்காட் டினிற்பணிந்து
பாவலர்செந் தமிழ்மாலைத் திருப்பதிகம் பாடிப்போய்
மேவலர்தம் புரமெரித்தார் வெண்காடு பணிந்தேத்தி
நாவலர்கா வலரடைந்தார் நனிபள்ளித் திருநகரில். (கசஅ)

நனிபள்ளி யமர்ந்தபிரான் கழல்வணங்கி நற்றமிழின்
புனிதநறுந் தொடைபுனைந்து திருச்செம்பொன் பள்ளிமுதற்
பனிமதிசேர் சடையார்தம் பதிபலவும் பணிந்துபோய்த்
தனிவிடைமேல் வருவார்தந் திருநின்றி யூர்சார்ந்தார். (கசக)

நின்றியூர் மேயாரை நேயத்தாற் புக்கிறைஞ்சி
யொன்றியவன் புள்ளுருகப் பாடுவா ருடையவர
சென்றுமுல கிடர்நீங்கப் பாடியவே ழெழுநூறு
மன்றுநிறப் பித்தஞ்சொற் றிருப்பதிக மருள்செய்தார். (கஞ0)

அப்பதியி லன்பருட னமர்ந்தகல்வா ரகலிடத்திற்
செப்பரிய புகழ்நீடூர் பணியாது செல்பொழுதி
லொப்பரிய வுணர்வினு னினைந்தருளித் தொழுலுறுவார்
மெய்ப்பொருள்வண் டமிழ்மாலை விளம்பியே மீண்டணைந்தார். (கஞக)

மடலாரும் புனனீடூர் மருவினர்தாள் வணங்காது
விடலாமே யெனுங்காதல் விருப்புறுமத் திருப்பதிக
மடலார்சூ லப்படையார் தமைப்பாடி யடிவணங்கி
யுடலாரு மயிர்ப்புளக மிகப்பணிந்தங் குறைகின்றார். (கஞஉ)

அங்கணினி தமர்ந்தருளாற் றிருப்புன்கூ ரணைந்திறைஞ்சிக்
கொங்கலரு மலர்ச்சோலைத் திருக்கோலக் காவணையக்
கங்கைசடைக் கரந்தவர்தா மெதிர்காட்சி கொடுத்தருளப்
பொங்குவிருப் பாற்றொழுது திருப்பதிகம் போற்றிசைப்பார். (கஞங)

திருஞான சம்பந்தர் திருக்கைக ளாலொற்றிப்
பெருகார்வத் துடன்பாடப் பிஞ்ஞகனார் கண்டிரங்கி
யருளாலே திருத்தாள மளித்தபடி சிறப்பித்துப்
பொருண்மாலைத் திருப்பதிகம் பாடியே போற்றிசைத்தார். (கஞச)

மூவாத முழுமுதலார் முதற்கோலக் காவகன்று
தாவாத புகழ்ச்சண்பை வலங்கொண்டு தாழ்ந்திறைஞ்சி
நாவார்முத் தமிழ்விரகர் நற்பதங்கள் பரவிப்போய்
மேவார்தம் புரஞ்செற்றார் குருகாவூர் மேவுவார். (கஞஙி)

உண்ணீரின் வேட்கையுட னுறுபசியான் மிகவருந்திப்
பண்ணீரமை மொழிப்பரவை யார்கொழுநர் வரும்பாங்கர்க்
கண்ணீடு திருநுதலார் காதல்வரக் கருத்தறிந்து
தண்ணீரும் பொதிசோறுங் கொண்டெழிச் சார்கின்றூர். (கஙிசு)

வேனிலுறு வெயில்வெம்மை தணிப்பதற்கு வீரைக்குளிர்மென்
பானன்மலர்த் தடம்போலும் பத்தரொரு பாலமைத்தே
யானமறை வேதியரா யருள்வேடங் கொண்டிருந்தார்
மானமருந் திருக்கரத்தார் வன்ரெண்டர் தமைப்பார்த்து. (கடுஎ)

குருகாஜ் ரமர்ந்தருளுங் குழகர்வழி பார்த்திருப்பத்
திருவாரூர்த் தம்பிரான் ரோழர்திருத் தொண்டருடன்
வருவாரப் பத்தரிடைப் புருந்துதிரு மறையவர்பாற்
பெருகார்வஞ் செலவிருந்தார் சிவாயநம வெனப்பேசி. (கநிஅ)

ஆலந்ழற் கீழிருந்தா ரவர்தம்மை யெதிர்நோக்கிச்
சாலமிகப் பசித்தீரிப் பொதிசோறு தருகின்றேன்
காலமினித் தாழாமே கைக்கொண்டிங் கினிதருந்தி
யேலநறுங் குளிர்த்தண்ணீர் குடித்திளைப்புத் தீருமென. (கநிக)

வன்ரெண்ட ரதுகேட்டு மறைமுனிவர் தரும்பொதிசோ
றின்றுநமக் கெதிர்விலக்க லாகாதென் றிசைந்தருளிப்
பொன்றயங்கு நூன்மார்பர் தரும்பொதிசோ றதுவாங்கிச்
சென்றுதிருத் தொண்டருடன் றிருவமுது செய்தருளி. (கசo)

எண்ணிறந்த பரிசனங்க ளெல்லாரு மினிதருந்தப்
பண்ணியபின் னம்மருங்கு பசித்தணைந்தார் களுமருந்த
வுண்ணிறைந்த வாரமுதா யொருகாலு முலவாதே
புண்ணியனூர் தாமளித்த பொதிசோறு பொலிந்ததால். (கசுக)

சங்கரனூர் திருவருள்போற் றண்ணீரின் சுவையார்ந்து
பொங்கிவரு மாதரவா லவர்நாமம் புகழ்ந்தேத்தி
யங்கையர்வாற் பள்ளியமர்ந் தருகணைந்தார் களுந்துயிலக்
கங்கைசடைக் கரந்தாரப் பத்தரொடுந் தாங்கரந்தார். (கசுஉ)

சித்தநிலே நிரியாத திருநாவ லூர்மன்ன
ரத்தகுதி யினிற்பள்ளி யுணர்ந்தவரைக் காணுமை
யித்தனேயா மாற்ற மறிந்திலே னெனவெடுத்து
மெய்த்தகைய திருப்பதிகம் விளம்பியே சென்றடைந்தார். (கசுங)

குருகாஜ் ரமர்ந்தருளுங் குழகனூர் கோயிலினுக்
கருகார்பொற் கோபுரத்தை யணைந்திறைஞ்சி யுள்புக்கு
வருகாதல் கூரலகங் கொண்டெதிரு மூன்வணங்கிப்
பருகாவின் னமுதத்தைக் கண்களாற் பருகினார். (கசுச)

கண்ணார்ந்த வின்னமுதைக் கையாரத் தொழுதிறைஞ்சிப்
பண்ணார்ந்த திருப்பதிகம் பாடியே பணிந்தேத்தி
யுண்ணுடும் பெருங்காத லுடையவர்தாம் புறத்தெய்தி
நண்ணார்வத் தொண்டருட னங்கினிது நயந்திருந்தார். (கசுஇ)

அந்நாளிற் றம்பெருமா னருள்கூடப் பணிந்தகன்று
மின்னுர்செஞ் சடைமுடியார் விரும்புமிடம் பலவணங்கிக்
கன்னுடு மெயில்புடைசூழ் கழிப்பாலை தொழுதேத்தித்
தென்னுவ லூர்மன்னர் திருத்தில்லை வந்தடைந்தார். (கசுஈ)

சீர்வளருந் திருத்தில்லைத் திருவீதி பணிந்துபுகுந்
தேர்வளர்பொற் றிருமன்று ளெடுத்தசே வடியிறைஞ்சிப்
பார்வளர மறைவளர்க்கும் பதியதனிற் பணிந்துறைவார்
போர்வளர்மே ருச்சிலையார் திருத்தினைமா நகர்புகுந்தார். (கசுஎ)

திருத்தினைமா நகர்மேவுஞ் சிவக்கொழுந்தைப் பணிந்துபோய்
நிருத்தனு ரமர்ந்தருளு நிறைபதிகள் பலவணங்கிப்
பொருத்தமிகுந் திருத்தொண்டர் போற்றுதிரு நாவலூர்
கருத்தில்வரு மாதரவாற் கைதொழச்சென் றெய்தினார். (கசுஅ)

திருநாவ லூர்மன்னர் சேர்கின்ரு ரெனக்கேட்டுப்
பெருநாமப் பதியோருந் தொண்டர்களும் பெருவாழ்வு
வருநாளென் றலங்கரித்து வந்தெதிர்கொண் டுள்ளணைய
செருநாகத் துரிபுனைந்தார் செழுங்கோயி லுள்ளணைந்தார். (கசுஉ)

மேவியவத் தொண்டர்குழா மிடைந்தரவென் றெழுமோசை
மூவுலகும் போயொலிப்ப முதல்வனுர் முன்பெய்தி
யாவியினு மடைவுடையா ரடிக்கமலத் தருள்போற்றிக்
கோவலனுண் முகனெடுத்துப் பாடியே கும்பிட்டார். (கஎ0)

நலம்பெருகு மப்பதியி னுடியவன் பொடுநயந்து
குலம்பெருகுந் திருத்தொண்டர் குழாத்தோடு மினிதமர்ந்து
சலம்பெருகுஞ் சடைமுடியார் தாள்வணங்கி யருள்பெற்றுப்
பொலம்புரிநூன் மணிமார்பர் பிறபதியுந் தொழப்போவார். (கஎக)

தண்டகமாந் திருநாட்டுத் தனிவிடையார் மகிழ்விடங்க
டொண்டரெதிர் கொண்டணையத் தொழுதுபோய்த் தூயநதி
வண்டறைபூம் புறவுமலை வளமருதம் பலகடந்தே
யெண்டிசையோர் பரவுதிருக் கழுக்குன்றை யெய்தினார். (கஎஉ)

தேனுர்ந்த மலர்ச்சோலை திருக்கழுக்குன் றத்தடியா
ரானுத விருப்பினுடு மெதிர்கொள்ள வடைந்தருளித்
தூநாள்வெண் மதியணிந்த சுடர்க்கொழுந்தைத் தொழுதிறைஞ்சி
பாநாடு மின்னிசையின் றிருப்பதிகம் பாடினார். (கஎங)

பாடியவப் பதியின்க ணினிதமர்ந்து பணிந்துபோய்
நாடியநல் லுணர்விளுடுங் திருக்கச்சூர் தனேநண்ணி
யாடகமா மதில்புடைசூ ழாலக்கோ யிலினமுதைக்
கூடியமெய் யன்புருகக் கும்பிட்டுப் புறத்தணைந்தார். (கஎச)

அணைந்தருளு மவ்வேல யமுதுசெயும் பொழுதாகக்
கொணர்ந்தமுது சமைத்தளிக்கும் பரிசனமுங் குறுகாமைத்
தணந்தபசி வருத்தத்தாற் றம்பிரான் றிருவாயிற்
புணர்ந்தமதிற் புறத்திருந்தார் முனைப்பாடிப் புரவலனுர். (கஎஞ)

வன்றொண்டர் பதிதீர்க்க மலையின்மேல் மருந்தானார்
மின்றவக்கு வெண்டலையோ டொழிந்தொருவெற் றேடேந்தி
யன்றவக்கு வாழ்வாரோ சாதணாய்ப் புறப்பட்டுச்
சென்றன்பர் முகநோக்கி யருள்கூரச் செப்புவார். (களசு)

மெய்ப்பசியான் மிகவருந்தி யினைத்திருந்தீர் வேட்கைவிட
வீப்பொழுதே சோறிரந்திங் கியானுமக்குக் கொணர்கின்றே
னப்புறநீ ரகலாதே சிறிதுபொழு தமருமெனச்
செப்பியவர் திருக்கச்சூர் மனைதோறுஞ் சென்றிரப்பார். (களள)

வெண்டிருநீற் றணிகிகழ விளங்குநூ லொளிதுளங்கக்
கண்டவர்கண் மனமுருகக் கடும்பகற்போ திடும்பலிக்குப்
புண்டரிகக் கழல்புவிமேற் பொருந்தமனை தொறும்புக்குக்
கொண்டதாம் விரும்பியாட் கொண்டவர்முன் கொடிவந்தார். (களஅ)

இரந்ததாங் கொவ்வந்த வின்னடிசி லுங்கறியு
மரந்தைதரும் பசிதீர வருந்துவீ ரெனவளிப்பப்
பெருந்தகையார் மறையவர்தம் பேரருளின் றிறம்பேணி
நிரந்தபெருங் காதலினு னோர்தொழுது வாங்கினார். (களக)

வாங்கியவத் திருவமுது வன்றொண்டர் மருங்கணைந்த
வோங்குதவத் தொண்டருட னுண்டருளி யுவந்திருப்ப
வாங்கருகு நின்றூர்போ லவர்தம்மை யறியாமே
நீங்கினு ரெப்பொருளு நீங்காத நிலைமையினார். (கஅ0)

திருநாவ லூராளி சிவயோகி யார்நீங்க
வருநாம மறையவனு நிறையவனு ரெனமதித்தே
பெருநாதச் சிலம்பணிசே வடிவருந்தப் பெரும்பகற்க
ணுருகாடி யெழுந்தருளிற் றென்பொருட்டா மெனவுருகி. (கஅக)

தே வு று.

மூதுவா யோரி யென்றெடுத்து முதல்வ னூர்தம் பெருங்கருணை
யதுவா மிதுவென் றதிசயம்வந் தெய்தக் கண்ணீர் மழையருவிப்
புதுவார் புனலின் மயிர்ப்புளகம் புதையப் பதிகம் போற்றிசைத்து
மதுவா ரிதழி முடியாரைப் பாடி மகிழ்ந்து வணங்கினார். (கஅஉ)

வந்தித் திறைவ ரருளாற்போய் மங்கை பாகர் மகிழ்ந்தவிட
மூந்தித் தொண்ட ரெதிர்கொள்ளப் புக்கு முக்கட் பெருமானைச்
சிந்தித் திடவந் தருள்செய்கழல் பணிந்து செஞ்சொற் றொடைபுனைந்தே
யந்திச் செக்கர்ப் பெருகொளியா ரமருங் காஞ்சி மருங்கணைந்தார். (கஅங)

அன்று வெண்ணெய் நல்லூரி லரியு மயனுந் தொடர்வரிய
வென்றி மழவெள் விடையுயர்த்தார் வேத முதல்வ ராய்வந்து
நின்று சபைமுன் வழக்குரைத்து நேரே தொடர்ந்தாட் கொண்டவர்தா
மின்றிங் கெய்தப் பெற்றுமென் றெயில்சூழ் காஞ்சி நகர் வாழ்வார். (கஅச)

மல்கு மகிழ்ச்சி மிகப்பெருக மறுகு மணித்தோ ரணநாட்டி
யல்கு தீப நிறைகுடங்க ளகிலின் தூபங் கொடியெடுத்துச்
செல்வ மனைக ளலங்கரித்துத் தெற்றியாடன் முழவதிரப்
பல்கு தொண்ட ருடன்கூடிப் பதியின் புறம்போ யெதிர்கொண்டார். (கஅஙி)

ஆண்ட நம்பி யெதிர்கொண்ட வடியார் வணங்க வெதிர்வணங்கி
நீண்ட மதிட்கோ புரங்கடந்து நிரைமா ளிகைவீ தியிற்போந்து
பூண்ட காதல் வாழ்த்தினுடன் பூணைம் கலதா னியமொலிப்ப
வீண்டு தொண்டர் பெருகுதிரு வேகாம் பரஞ்சென் றெய்தினார். (கஅசு)

ஆழி நெடுமா லயன்முதலா மமரர் நெருங்கு கோபுரமுன்
பூழி யுறமண் மிசைமேனி பொருந்த வணங்கிப் புகுந்தருளிச்
சூழு மணிமா ளிகைபலவுந் தொழுது வணங்கி வலங்கொண்டு
வாழி மணிப்பொற் கோயிலினுள் வந்தா ரணுக்க வன்ரெண்டர். (கஅள)

கைகள் கூப்பி முன்னணைவார் கம்பை யாறு பெருகிவர
வையர் தமக்கு மிகவஞ்சி யாரத் தழுவிக் கொண்டிருந்த
மையு லாவுங் கருநெடுங்கண் மலையா ளென்றும் வழிபடுபூஞ்
செய்ய கமலச் சேவடிக்கீழ்த் திருந்து காத லுடன்வீழ்ந்தார். (கஅஅ)

வீழ்ந்து போற்றிப் பரவசமாய் விம்மி யெழுந்து மெய்யன்பால்
வாழ்ந்த கிழ்தை யுடன்பாடி மாறு விருப்பிற் புறம்போந்து
சூழ்ந்த தொண்ட ருடன்மருவு காளிற் ரெல்லைக் கச்செகர்த்
தாழ்ந்த சடையா ராலயங்கள் பலவுஞ் சார்ந்து வணங்குவார். (கஅக)

சீரார் காஞ்சி மன்னுதிருக் காமக் கோட்டஞ் சென்றிறைஞ்சி
நீரார் சடையா ரமர்ந்தருளு நீடு திருமேற் றளிமேவி
யாரா வன்பிற் பணிந்தேத்தி மளவிலுந்தா வொண்சுடராம்
பாரார் பெருமைத் திருப்பதிகம் பாடி மகிழ்ந்து பரவினார். (ககo)

ஓண காந்தன் றளிமேவு மொருவர் தம்மை யுரிமையுடன்
பேணி யமைத்த தோழமையாற் பெருகு மடிமைத் திறம்பேசிக்
காண மோடு பொன்வேண்டி செய்யும் பாலுங் கலிவிளங்கும்
யாணர்ப் பதிக மெடுத்தேத்தி யெண்ணி னிதிபெற் றினிதிருந்தார். (ககக)

அங்க ணமர்வா ரனேகதங்கா பதத்தை யெய்தி யுள்ளணைந்து
செங்கண் விடையார் தமைப்பணிந்து தேனெய் புரிந்தென் றெடுத்ததமிழ்
தங்கு மிடமா மெனப்பாடித் தாழ்ந்து பிறவுந் தானங்கள்
பொங்கு காத லுடன்போற்றிப் புரிந்தப் பதியிற் பொருந்துநாள். (ககஉ)

பாட லிசையும் பணியிறைப் பாவை தழுவக் குழைகம்ப
ராடன் மருவுஞ் சேவடிகள் பரவிப் பிரியா தமர்கின்றூர்
நீட மூதூர்ப் புறத்திறைவர் நிலவும் பதிக டொழுவிருப்பான்
மாட நெருங்கு வன்பார்த்தான் பனங்காட் டெல்லை வந்தடைந்தார். (ககஊ)

செல்வ மல்கு திருப்பனங்காட் டிரித் செம்பொற் செழுஞ்சுடரை
யல்ல லறுக்கு மருமருந்தை வணங்கி யன்பு பொழிகண்ணீர்
மல்க நின்று விடையின்மேல் வருவா ரெனும்வண் டமிழ்ப்பதிக
நல்ல விசையி னுடன்பாடிப் போந்து பிறவு நண்ணுவார். (ககஎ)

மன்னு திருமாற் பேறணைந்து வணங்கிப் பரவித் திருவல்லத்
தன்னு னெய்தி யிறைஞ்சிப்போய்ச் சாரு மேல்பாற் சடைக்கற்றைப்
பின்னன் முடியா ரிடம்பலவும் பேணி வணங்கிப் பெருந்தொண்டர்
சென்னி முகிழ்ரேய் தடங்குவட்டுத் திருக்கா ளத்தி மலைசேர்ந்தார். (ககஙு)

தடுக்க லாகாப் பெருங்காத லாலின் றருளுங் கண்ணப்ப
ரிடுக்கண் களைந்தாட் கொண்டருளு மிறைவர் மகிழ்ந்த காளத்தி
யடுக்கல் சேர வணைந்துபணிக் தருளா லேறி யன்பாறு
மடுப்பத் திருமுன் சென்றெய்தி மலைமேன் மருந்தை வணங்கினார். (கசுசு)

வணங்கி யுள்ளங் களிகூர மகிழ்ந்து போற்றி மதுரவிசை
யணங்கு செண்டா டெனும்பதிகம் பாடி யன்பாற் கண்ணப்பர்
மணங்கொள் மலர்ச்சே வடிபணிந்து வாழ்ந்து போந்து மன்னுபதி
யிணங்கு தொண்ட ருடன்கெழு மி யின்புற்றிருக்கு மந்நாளில். (கசுஎ)

வடமா திரத்துப் பருப்பதமுங் திருக்கே தார மலைமுதலா
விடமா வரனூர் தாமுவந்த வெல்லா மிங்கே யிருந்திறைஞ்சி
நடமா டியசே வடியாரை நண்ணி னுர்போ லுண்ணிறைந்து
திடமாய் கருத்திற் றிருப்பதிகம் பாடிக் காதல் சிறந்திருந்தார். (கசுஅ)

அங்குச் சிலநாள் வைகியபின் னருளாற் போந்து பொருவிடையார்
தங்கு மிடங்க ளெனைப்பலவுஞ் சார்ந்து தாழ்ந்து தமிழ்பாடிப்
பொங்கு புனரிக் கரைமருங்கு புவியுட் சிவலோ கம்போலத்
திங்கண் முடியா ரமர்ந்ததிரு வொற்றி யூரைச் சென்றடைந்தார். (கசுக)

அண்ண றெருடர்ந்தா வணங்காட்டி யாண்டகம்பி யெழுந்தருள
வெண்ணில் பெருமை யாதிபுரி யிறைவ ரடியா ரெதிர்கொள்வார்
வண்ண வீதி வாயிறொறும் வாழை கமுகு தோரணங்கள்
சுண்ண நிறைபொற் குடந்தூப தீபமெடுத்துத் தொழவெழுங்கால். (உ00)

வரமங் கலநல் லியமுழங்க வாச மாலை யணியரங்கிற்
புரமங் கையர்க ணடமாடப் பொழியும் வெள்ளப் பூமாரி
யரமங் கையரு மமரர்களும் வீச வன்ப ருடன்புகுந்தார்
பிரமன் றலையிற் பலியுவந்த பிரானூர் விரும்பு பெருந்தொண்டர். (உ0க)

ஒற்றி யூரி னுமையோடுங் கூட நின்ற ருயர்தவத்தின்
பற்று மிக்க திருத்தொண்டர் பரந்த கடல்போல் வந்தீண்டிச்
சுற்று மணைந்து துதிசெய்யத் தொழுது தம்பி ரானன்பர்
கொற்ற மழவே றுடையவர்தங் கோயில் வாயி லெய்தினர். (உ0உ)

வானை யளக்குங் கோபுரத்தை மகிழ்ந்து பணிந்து புகுந்துவளர்
கூன விள்வெண் பிறைச்சடையார் கோயில் வலங்கொண் டெதிர்குறுகி
யூனு முயிருங் கரைந்துருக வுச்சி குவித்த செங்கையுட
னுனை காத லுடன்வீழ்ந்தா ராரா வன்பி னுரூர். (உ0ஊ)

எட்டு வரியி லொற்றியூர் கீங்க லென்ன வெழுத்தறியு
நாட்ட மலருந் திருமுதலார் நறும்பொற் கமலச் சேவடியிற்
கூட்டு முணர்வு கொண்டெழுந்து கோதி லமுத விசைகூடப்
பாட்டும் பாடிப் பரவியெனும் பதிக மெடுத்துப் பாடினார். (உ0எ)

பாடி யறிவு பரவசமாம் பரிவு பற்றப் புறம்போந்து
நீடு விருப்பிற் பெருங்காத னிறைந்த வன்பர் பலர்போற்றத்
தேடு மயனுந் திருமாலு மறிதற் கரிய திருப்பாதங்
கூடுங் காலங் களிலிணைந்து பரவிக் கும்பிட் டினிதிருந்தார். (உ0ஏ)

இந்த நிலைமை யாரிவரிங் கிருந்தார் முன்பே யிவர்க்காக
வந்தண் கயிலே மலைநீங்கி யருளாற் போந்த வந்திதையார்
வந்து புவிமே லவதரித்து வளர்ந்து பின்பு வன்ரெண்டர்
சுந்த விரைசூழ் புயஞ்சேர்ந்த பரிசு தெரியச் சாற்றுவாம். (உ0ச)

நாலாங் குலத்திற் பெருகுகல முடையார் வாழு ஞாயிற்றின்
மேலாங் கொள்ளை வேளாண்மை :மிக்க திருஞா யிறுகிழவர்
பாலா தயபு தருமகளா ராகிப் பார்மே லவதரித்தா
ராலா லஞ்சேர் கறைமிடற்று ரருளான் முன்னே யந்தித்தையார். (உ0எ)

மலையான் மடந்தை மலர்ப்பாத மறவா வன்பால் வந்தநெறி
தலையா முணர்வு வந்தணையத் தாமே யறிந்த சங்கிலியா
ரலையார் வேற்கட் சிறுமகளி ராயத்தோடும் விளையாட்டு
நிலையா யினவப் பருவங்க டோறு நிகழ நிரம்புவார். (உ0அ)

சீர்கொண் மரபில் வருஞ்செயலே யன்றித் தெய்வ நிகழ்தன்மை
பாரி லெவரு மதிசயிக்கும் பண்பில் வளரும் பைந்தொடியார்
வாரு மணிய வணியவரம் வளர்மென் முலைக ளிடைவருத்தச்
சாரும் பதத்திற் றந்தையார் தங்கண் மனைவி யார்க்குரைப்பார். (உ0கூ)

வடிவுங் குணமு நம்முடைய மகட்கு மண்ணு ளோர்க்கிசையும்
படிவ மன்றி மேற்பட்ட பரிசா பான்மை யறிகிலோங்
கடிசேர் மணமு மினிநிகழுங் கால மென்னக் கற்புவளர்
கொடியே யனைய மனைவியா ரேற்கு மாற்ரூற் கொடுமென்ரூர். (உகo)

தாய ரோடுந் தந்தையார் பேசக் கேட்ட சங்கிலியா
ரேயு மாற்ற மன்றிதுவெம் பெருமா னீசன் றிருவருளே
மேய வொருவர்க் குரியதியான் வேறென் விளேபு மெனவெருவுற்
ரூய வுணர்வு மயங்கிநிக வயர்ந்தே யவனி மேல்வீழ்ந்தார். (உகக)

பாங்கு நின்ற தந்தையார் தாயார் பதைத்துப் பரிந்தெடுத்தே
யேங்கு முள்ளத் தினராகி யிவளுக் கென்னே வுற்றதெனத்
தாங்கிச் சீத விரைப்பனிநீர் தெளித்துத் தைகூந் ததுதீங்க
வாங்கு நகசப்பின் மகளாரை வந்த துனக்கிங் கென்னென்ரூர். (உகஉ)

என்று தம்மை யீன்றெடுத்தார் வினவ மறைவீட் டியம்புவா
ரின்றென் றிறத்து நீர்மொழிந்த விதுவென் பரிசுக் கிசையாது
வென்றி விடையா ரருள்செய்தா ரொருவர்க் குரியேன் யானினிமேற்
சென்று திருவொற் றியூணைந்து சிவரு ரருளிற் செல்வனென. (உகங)

அந்த மாற்றங் கேட்டவர்தா மயர்வும் பயமு மதிசயமும்
வந்த வுள்ளத் தினராகி மற்றமாற்ற மறைத் தொழுகப்
பந்த நீடு மிவர்குலத்து நிகரா மொருவன் பரிசறியான்
சிந்தை விரும்பி மகட்பேசி விடித்தான் சிலருஞ் சென்றிசைத்தார். (உகச)

தாதை யாரு மதுகேட்டுத் தன்மை விளம்பத் தகாமையினு
லேத மெய்தா வகைமொழிந்து போக்க வவராங் கெய்தாமுன்
நீதங் கிழைத்தே யிறந்தான்போற் செல்ல விடித்தா ருடன்சென்ரூன்
மாத ராரைப் பெற்ரூர்மற் றதனேக் கேட்டு மனமருண்டார். (உகஙி)

தைய லார்சங் கிலியார்தந் திறத்துப் பேசத் தகாவார்த்தை
யுய்ய வேண்டு நினைவுடையா ருரையா ரென்றங் குலகறியச்
செய்த வீதிபோ லிதுகிழச் சிறந்தார்க் குள்ள படிசெப்பி
கையு முள்ளத் துடனஞ்சி நங்கை செயலே யுடன்படுவார். (உகசு)

அணங்கே யாகு மிவள்செய்கை யறிந்தோர் பேச வஞ்சுவரால்
வணங்கி யீசர் திறமன்றி வார்த்தை யறியாண் மற்றொன்று
குணங்க ளிலையா மினியிவடான் குறித்த படியே யொற்றிநகர்ப்
பணங்கொ ளரவச் சடையார்தம் பாற்கொண் டணைவோ மெனப்பகர்வார். (உகஎ)

பண்ணுர் மொழிச்சங் கிலியாரை நோக்கிப் பயந்தா ரொடுங்கிளைஞர்
தெண்ணீர் முடியார் திருவொற்றி யூரிற் சேர்ந்து செல்கதியுங்
கண்ணுர் நுதலார் திருவருளா லாகிக் கன்னி மாடத்துத்
தண்ணுர் தடஞ்சூ ழுக்ககரிற் றங்கிப் புரிவீர் த்தவமென்று. (உகஅ)

பெற்ற தாதை சுற்றத்தார் பிறைசேர் முடியார் விதியாலே
மற்றுச் செயலொன் றறியாது மங்கை யார்சங் கிலியார்தாஞ்
சொற்ற வண்ணஞ் செயத்துணிந்து துதைந்த செல்வத் தொடும்புரங்கள்
செற்ற சிலையார் திருவொற்றி யூரிற் கொண்டு சென்றணைந்தார். (உகக)

சென்னி வளர்வெண் பிறையணிந்த சிவனுர் கோயி லுட்புகுந்து
துன்னுஞ் சுற்றத் தொடும்பணிந்து தொல்லைப் பதியோ டிசைவினுற்
கன்னி மாட மருங்கமைத்துக் கடிசேர் முறைமைக் காப்பியற்றி
மன்னுஞ் செல்வந் தகவகுத்துத் தந்தை யார்வந் தடிவணங்கி. (உஉ0)

யாங்க ளுமக்குப் பணிசெய்ய வ்சற் கேற்ற பணிவிரும்பி
யோங்கு கன்னி மாடத்தி லுறைகின் றீரென் றுரைக்கின்றூர்
தாங்கற் கரிய கண்கணீர்த் தாரை யொழுகத் தரியாதே
யேங்கு சுற்றத் தொடுபிறைஞ்சிப் போனு ரெயில்சூழ் தம்பதியில். (உஉக)

காதல் புரிந்து தவம்புரியுங் கன்னி யாரங் கமர்கின்றூர்
பூத காதர் கோயிலினிற் காலந் தோறும் புக்கிறைஞ்சி
நீதி முறைமை வழுவாது தமக்கு நேர்ந்த பணிசெய்யச்
சீத மலர்ப்பூ மண்டபத்துத் திரைசூ ழொருபாற் சென்றிருந்து. (உஉஉ)

பண்டு கயிலைத் திருமலையிற் செய்யும் பணியின் பான்மைமனங்
கொண்ட வுணர்வு தலைநிற்பக் குலவு மலர்மென் கொடியனையார்
வண்டு மருவுந் திருமலர்மென் மாலை காலங்களுக்கேற்ப
வண்டார் பெருமான் முடிச்சாத்த வமைத்து வணங்கி யமருநாள். (உஉசு)

அந்தி வண்ணத் தொருவர்திரு வருளால் வந்த வாரூரர்
கந்த மாலைச் சங்கிலியார் தம்மைக் காதன் மணம்புணர
வந்த பருவ மாதலால் வருத்த தன்மை வழுவாத
முந்தை விதியால் வந்தொருநாண் முதல்வர் கோயி லுட்புகுந்தார். (உஉச)

அண்டர் பெருமா னந்தணரா யாண்ட நம்பி யங்கணைசைப்
பண்டை முறைமை யாற்பணிந்து பாடிப் பரவிப் புறம்போந்து
தொண்டு செய்வார் திருத்தொழில்கள் கண்டு தொழுது செல்கின்றூர்
புண்ட ரீகத் தடங்கர்பூந் திருமண் டபத்தி லுட்புகுந்தார். (உஉஇ)

அன்பு நாரா வஞ்செழுத்து நெஞ்சு தொடுக்க வலர்தொடுத்தே
யென்புள் ளுருக்கு மடியாரைத் தொழுது நீங்கி வேறிடத்து
முன்பு போலத் திரைகீக்கி முதல்வர் சாத்துப் பணிகொடுத்து
மின்போன் மறையுஞ் சங்கிலியார் தம்மை விதியாற் கண்ணுற்றார். (௨௨)

கோவா முத்துஞ் சுரும்பேறுக் கொழுமென் மூகையு மினையாரைச்
சேவார் கொடியார் திருத்தொண்டர் கண்ட போது சித்தநிறை
காவா தவர்பாற் போய் வீழத் தம்பாற் காம ஞர்துரந்த
பூவா ளிகள்வந் துறவீழத் தரியார் புறமே போந்துரைப்பார். (௨௨௧)

இன்ன பரிசென் றறிவரிதா லீங்கோர் மருங்கு திரைக்குள்ளாற்
பொன்னு மணியு மலர்ந்தவொளி யமுதி லளாவிப் புதியமதி
தன்னு னீர்மை யாற்குழைத்துச் சமைத்த தின்னுக் கொடிபோல்வா
ளென்னே யுள்ளங் திரிவித்தாள் யார்கொ லென்றங் கியம்புதலும். (௨௨௮)

அருகு நின்றார் விளம்புவா ரவர்தா ங்கை சங்கிலியார்
பெருகு தவத்தா லீசர்பணி பேணுங் கன்னி யாரென்ன
விருவ ராலிப் பிறவியையெம் பெருமா னருளா லெய்துவித்தார்
மருவும் பரவை யொருத்தியிவண் டிற்றை யவளா மெனமருண்டார். (௨௩௫)

மின்னுர் சடையார் தமக்காளாம் விதியால் வாழு மெனைவருத்தித்
தன்னு ரருளால் வரும்பேறு தவத்தா லணையா தைதடுத்தே
யென்னு ருயிரு மெழின்மலருங் கூடப் பிணைக்கு மிவடன்னைப்
பொன்னு நிதழி முடியார்பாற் பெறுவே னென்று போய்ப்புக்கார். (௨௩0)

மலர்மே லயனு நெடுமாலும் வானு நிலனுங் கீழ்த்தறியா
நிலவு மலருக் திருமுடியு நீங்கு கழலு முடையாரை
யுலக மெல்லாந் தாமுடையா ராயு மொற்றி யூரமர்ந்த
விலகு சோதிப் பரம்பொருளே யிறைஞ்சி முன்னின் றேத்துவார். (௨௩௪)

மங்கை யொருபான் மகிழ்ந்தவரு மன்றி மணிநீண் முடியின்கட்
கங்கை தன்னைக் கரந்தருளுங் காதலுடையீ ரடியேயுமக்
கிங்கு நுமக்குத் திருமாலே தொடுத்தே னுள்ளத் தொடையவிழ்த்த
திங்கள் வதனச் சங்கிலியைத் தந்தென் வருத்தந் தீருமென. (௨௩௭)

அண்ண லார்முன் பலவுமவ றறிய வுணர்த்திப் புறத்தணைந்தே
யெண்ண மெல்லா மூமக்கடிமை யாமென் றெண்ணு மென்னெஞ்சிற்
றிண்ண மெல்லா மூடைவித்தாள் செய்வ தொன்று மறியேன்யான்
றண்ணி லாமின் னெளிர்பவளச் சடையீ ரருளு மெனத்தளர்வார். (௨௪௨)

மதிவாண் முடியார் மகிழ்கோயிற் புறத்தோர் மருங்கு வந்திருப்பக்
கதிரோன் மேலைக் கடல்காண மாலைக் கடலைக் கண்டயர்வார்
முதிரா முலையார் தம்மைமணம் புணர்க்க வேண்டி முளரிவளை
நிதியா னண்பர் தமக்கருளு நண்பா னினைந்து நினைந்தழிய. (௨௪௭)

உம்ப ருய்ய வுலகுய்ய வோல வேலை விடமுண்ட
தம்பி ரானுர் வன்றொண்டர் தம்பா லெய்திச் சங்கிலியை
யிம்ப ருலகில் யாவருக்கு மெய்த வொண்ணு விருத்தவத்துக்
கொம்பை புனக்குத் தருகின்றேங் கொண்ட கவலை யொழிகென்ன. (௨௫௩)

அன்று வெண்ணெய் நல்லூரில் வலியவாண்டு கொண்டருளி
யொன்று மறியா ஈயேனுக் குறுதி யளித்திரு யிர்க்காக்க
வின்று பிவனே மணம்புணர்க்க வேன்று நின்றீ ரெனப்போற்றி
மன்றன் மலர்ச்சே வடியிணைக்கீழ் வணங்கி மகிழ்ந்தார் வன்றொண்டர். (உகூசு)

ஆண்டு கொண்ட வர்த்தனரு ரவருக் கருளிக் கருணையினு
னீண்ட கங்குல் யாமத்து நீங்கி வானி னிறைமதியங்
தீண்டு கன்னி மாடத்துச் சென்று திகழ்சங் கிலியாரைத்
தூண்டு சோதி விளக்கனையார் தம்பாற் கனவிற் றோன்றினார். (உகூஎ)

தோற்றும் பொழுதிற் சங்கிலியார் தொழுது விழுந்து பரவசமா
யாற்ற வன்பு பொங்கியெழுந் தடியே னுய்ய வெழுந்தருளும்
பேற்றுக் கென்யான் செய்ய தெனப் பெரிய கருணை பொழிந்தனைய
நீற்றுக் கோல வேதியரு நேர்நின் றருளிச் செய்கின்றார் (உகூஅ)

சாருந் தவத்துச் சங்கிலிகேள் சால வென்பா லன்புடையான்
மேரு வரையின் மேம்பட்ட தவத்தான் வெண்ணெய் நல்லூரி
லியாரு மறிய யானுமு ரியா னுன்னை யெனை பிரக்தான்
வார்கொண் முலையாய் நீயவனை மணத்தா லணைவாய் மகிழ்தென்றார். (உகூக)

ஆதி தேவர் முன்னின்றங் கருளிச் செய்த பொழுதின்கண்
மாத ராரசங் கிலியாரு மாலு மயனு மறிவரிய
சீத மலர்த்தா மரையடிக்கீழ்ச் சேர்ந்து வீழ்ந்து செந்நின்று
வேத முதல்வர் முன்னடிக்க மெய்தித் தொழுது விளம்புவார். (உசஅ)

எம்பி ரானே நீரருளிச் செய்தார்க் குரியேன் யானிமையோர்
தம்பி ரானே யருடலைமேற் கொண்டேன் றக்க மிதுமணத்தா
னம்பி யாரூ ரருக்கென்னை நல்கி யருளும் பொழுதிமையக்
கொம்பி னுகங் கொண்டார்க்குக் கூறுந் திறமொன் றுளதென்பார். (உசக)

பின்னும் பின்னன் முடியார்முன் பெருக நாணித் தொழுதுரைப்பார்
மன்னுந் திருவா ரூரின்க ணவர்தா மிகவு மகிழ்ந்துறைவ
தென்னுந் தன்மை யறிந்தரு ளெம்பி ராட்டி திருமுலேதோய்
பின்னும் புரிநூன் மணிமார்பி னென்றூர் குன்று விளக்கனையார். (உசஉ)

மே வ று.

மற்றவர்தம் மூரைகொண்டு வன்றொண்டர் நிலைமையினை
யொற்றிநக ரமர்த்தபிரா னுணர்ந்தருளி யுரைசெய்வார்
பொற்றொடியா யுனையிகந்து போகாமைக் கொருசபத
மற்றமுறு நிலைமையினு லவன்செய்வா னெனவருளி. (உசஈ)

வேயனைய தோளியார் பாலின்று பிரிண்டருளித்
தூயமன மகிழ்ந்திருந்த தோழனூர் பாலணைந்து
நீயவனை மணம்புணரு நிலையுரைத்தோ மதற்கவள்பா
லாயதொரு குறையுன்னு லமைப்பதுள தென்றருள. (உசசி)

வன்றொண்டர் மனங்களித்து வணங்கியடி யேன்செய்ய
நின்றகுறை யாதென்ன நீயவனை மணம்புணர்தற்
கொன்றியுட னேநிகழ வொருசபத மவண்முன்பு
சென்றுகிடைத் திவ்விரவே செய்கவென வருள்செய்தார். (உசடு)

என்செய்தா லிதுமுடியு மதுசெய்வன் யானிதற்கு
பின்செய்த புரிசடையீ ரருள்பெறுதல் வேண்டுமென
முன்செய்த முறுவலுடன் முதல்வரவர் முகநோக்கி
யுன்செய்கை தனக்கினியென் வேண்டுவதென் றுரைத்தருள. (உ.சஉ)

வம்பணிமென் மூலையவர்க்கு மனங்கொடுத்த வன்றொண்டர்
கம்பரிவர் பிறபதியும் நயந்தகோ லஞ்சென்று
கும்பிடவே கடவேனுக் கிதுவிலக்கா மெனக்குறிப்பாற்
றம்பெருமான் றிருமுன்பு தாம்வேண்டுங் குறையிரப்பார். (உசஎ)

சங்கரர்தாள் பணிந்திரந்து தாழ்ந்துவேந்தர் மொழிகின்றூர்
மங்கையவ டனைப்பிரியா வகைசெயதஞ் செய்வதனுக்
கங்கவளோ டியான்வந்தா லப்பொழுது கோயில்விடத்
தங்குமிடங் திருமகிழ்க்கீழ்க் கொளவேண்டு மெனத்தாழ்ந்தார். (உசஅ)

தம்பிரான் றோழரவர் தாம்வேண்டிக் கொண்டருள
வும்பர்கா யகருமதற் குடன்பாடு செய்வாராய்
நம்பிநீ சொன்னபடி நாஞ்செய்து மென்றருள
வெம்பிரா னேயரிய தினியெனக்கென் னெனவேத்தி. (உசஉ)

அஞ்சலிசென் னியின்மன்ன வருள்பெற்றுப் புறம்போதச்
செஞ்சடையா ரவர்மாட்டுத் திருவிளையாட் டினைமகிழ்ந்தோ
வஞ்சியிடைச் சங்கிலியார் வழியடிமைப் பெருமையோ
தஞ்சிருண்மீ ளவுமணைந்தா ரவர்க்குறுதி சொல்லுவார். (உ0)

சங்கிலியார் தம்மருங்கு முன்புபோற் சார்ந்தருளி
நங்கையுனக் காரூர னயந்துரு ளுறக்கடவ
னங்குநமக் கெதிர்செய்யு மதற்குநீ யிசையாதே
கொங்கலர்பூ மகிழின்கீழ்க் கொள்கவெனக் குறித்தருள. (உஉக)

மற்றவருங் கைகுவித்து மாலயனுக் கறிவரியீ
ரற்றமெனக் கருள்புரிந்த வதனிலடி யேனுகப்
பெற்றதியா னெனக்கண்கள் பெருந்தாரை பொழிந்திழிய
வெற்றிமழ விடையார்தஞ் சேவடிக்கீழ் வீழ்ந்தெழுந்தார். (உருஉ)

தையலார் தமக்கருளிச் சடாமகுட மெழுந்தருள
வெய்தியபோ ததிசயத்தா லுணர்ந்தெழுந்தவ் வீரவிண்கட்
செய்யசடை யாரருளின் றிறமினைந்தே கண்டியிலா
ரையமுட னருகுதயில் சேடியரை யணைந்தெழுப்பி. (உருங)

நீங்குதயிற் பாங்கியற்கு நீங்கலெழுத் தறியுமவர்
தாங்கனவி லெழுந்தருளித் தமக்கருளிச் செய்ததெலாம்
பாங்கறிய மொழியவவர் பயத்தினுட னதிசயமுந்
தாங்குமகிழ்ச் சியுமெய்தச் சங்கிலியார் தமைப்பணிக்தார். (உருச)

சேயிழையார் திருப்பள்ளி யெழுச்சிக்கு மலர்தொடுக்குங்
காயபணிப் பொழுதாகத் தொழில்புரிவா ருடன்போதக்
கோயிலின்முன் காலமது வாகவே குறித்தணைந்தா
ராயசப தஞ்செய்ய வரவுபார்த் தாரூரர். (உருஎ)

நின்றவரங் கெதிர்வந்த நேரிழையார் தம்மருங்கு
சென்றணைந்து தம்பெருமான் றிருவருளின் றிறங்கூற
மின்றயங்கு ருண்ணிடையார் விதியுடன்பட் டெதிர்விளம்பா
ரொன்றியநா ணெமெடவா ருடலெதுங்கி யுட்புகுந்தார். (உஙசு)

அக்கவர்தம் பின்சென்ற வாரூர ராயிழையீ
ரிங்குநான் பிரியாமை யுமக்கிசையும் படியியம்பத்
திங்கண்முடி யார்திருமுன் போதுவீ ரெனச்செப்பச்
சங்கிலியார் கனவுரைபக் கேட்டதா தியர்மொழிவார். (உருஎ)

எம்பெருமா னிதற்காக வெழுந்தருளி யிமையவர்க
டம்பெருமான் றிருமுன்பு சாற்றுவது தகாதென்ன
நம்பெருமான் வன்றொண்டர் நாதர்செய லறியாதே
கொம்பனையீர் யான்செய்வ தெங்கென்று கூறுதலும். (உருஅ)

மாதரவர் மகிழ்க்கிே யமையுமென மனமருள்வா
ரீதலரா கிலுமாகு மிவர்சொன்ன படிமறுக்கி
லாதலினு லுடன்படவே யமையுமெனத் துணிந்தாகிற்
போதுவீ ரெனமகிழ்க்கி முவர்போதப் போயணைந்தார். (உருகூ)

தாவாத பெருந்தவத்துச் சங்கிலியா ருங்காண
மூவாத திருமகிழை முக்காலும் வலம்வந்து
மேவாதிங் கியானகலே னெனநின்று விளம்பினுர்
பூவார்தண் புனற்பொய்கை முணேப்பாடிப் புரலனுர். (உகூ0)

மேவியசீ ராரூரர் மெய்ச்சத வினைமுடிப்பக்
காவியினேர் கண்ணருங் கண்டுமிக மனங்கலங்கிப்
பாவியே னிதுகண்டேன் றம்பிரான் பணியாலென்
றுவிசோர்ந் தழிவாரங் கொருமருங்கு மறைந்தயர்ந்தார். (உஙக)

திருநாவ லூராளி தம்முடைய செயன்முற்றிப்
பொருநாகத் தரிபுனைந்தார் கோயிலினுட் புருந்திறைஞ்சி
யருணலுந் தரவிருந்தீர் செய்தவா றழகிதெனப்
பெருநாம மெடுத்தேத்திப் பெருமகிழ்ச்சி யுடன்போந்தார். (உகூஉ)

வார்புனையும் வனமுலையார் வன்றொண்டர் போனதற்பின்
ரூர்புனையும் மண்டபத்துத் தம்முடைய பணிசெய்து
கார்புனைய மணிகண்டர் செயல்கருத்திற் கொண்டிறைஞ்சி
யேர்புனையுங் கன்னிமா டம்புகுந்தா ரிருள்புலர. (உகூசூ)

அன்றிரவே யாதிபுரி யொற்றிகொண்டா ராட்கொண்ட
பொன்றிகழ்பூண் வன்றொண்டர் புரிந்தலினே முடித்தருள
நின்றபுகழ்த் திருவொற்றி பூர்விலவி தொண்டருக்கு
மன்றல்வினே செய்வதற்கு மனங்கொள்ள வுணர்த்துவார். (உகூச)

நம்பியா ரூரனுக்கு நங்கைசங் கிலிதன்னே
யிம்பர்ஞா லத்திடைநம் மேவலினுன் மணவினேசெய்
தும்பர்வா ழுலகறிய வளிப்பீரென் றுணர்த்துதலுங்
தம்பிரான் றிருத்தொண்ட ருடலேமேற் கொண்டெழுவார். (உகஙி)

மண்ணிறைந்த பெருஞ்செல்வத் திருவொற்றி யூர்மன்னு
மெண்ணிறைந்த திருத்தொண்ட ரெழிற்பதியோ ருடனீண்டி
புண்ணிறைந்த மகிழ்ச்சியுட னும்பர்பூ மழைபொழியக்
கண்ணிறைந்த பெருஞ்சிறப்பிற் கலியாணஞ் செய்தளித்தார். (உசுக)

பண்டெங்கும் பான்மையினற் பசுபதிதன் னருளாலே
வண்டமர்பூங் குழலாரை மணம்புணர்ந்த வன்றொண்டர்
புண்டரிகத் தவள்வனப்பைப் புறங்கண்ட நலத்தைக்
கண்டுகேட் டெண்ணியிரத்துற் றமர்ந்திருந்தார் காதலினல். (உசுஎ)

யாழின்மொழி யெழின்முறுவ லிருகுழைமேற் கடைபிறழு
மாழைவிழி வனமுலையார் மணியல்குற் றுறைபடிந்து
வீழுமவர்க் கிடைதோன்றி மிகும்புலவி புணர்ச்சிக்க
ணூழியா மொருகணந்தா னவ்வூழி யொருகணமாம். (உசுஅ)

இந்திலையிற் பேரின்ப மிணிதமர்வா ரிறையுறையு
மன்னுபுக ழொற்றியூ ரதனின்மகிழ் நிறப்பிணற்
சென்னிமதி புனைவார்தந் திருப்பாதத் தொழுதிருந்தார்
முன்னியகா லங்கள்பல முறைமையினல் வந்தகல. (உசுக)

பொங்குதமிழ்ப் பொதியமலைப் பிறந்தபூஞ் சந்தனத்தின்
கொங்கணைந்து குளிர்ச்சார லிடைவளர்ந்த கொழுந்தென்ற
லங்கணையத் திருவாரூ ரணிவீதி யழகரவர்
மங்கலநாள் வசந்தமெதிர் கொண்டருளும் வகைகினைந்தார். (உஎ0)

வெண்மதியின் கொழுந்தணிந்த வீதிவிடங் கப்பெருமா
னெண்ணுதலார் புடைபரந்த வோலக்க மதனிடையே
பண்ணமரு மொழிப்பரவை யார்பாட லாடறனைக்
கண்ணுறமுன் கண்டுகேட் டார்போலக் கருதினர். (உஎக)

பூங்கோயி லமர்ந்தாரைப் புற்றிடங்கொண் டிருந்தாரை
நீங்காத காதலினு னினைந்தாரை நினைவாரைப்
பாங்காகத் தாமுன்பு பணியவரும் பயனுணர்வா
ரீங்குரான் மறந்தேனென் றேழறவான் மிகவழிவார். (உஎஉ)

மின்னெளிர்செஞ் சடையானே வேதமுத லானானே
மன்னுபுகழ்த் திருவாரூர் மகிழ்ந்தானே மிகநினைந்து
பன்னியசொற் பத்திமையு மடிமையையுங் கைவிடுவா
னென்னுமிசைத் திருப்பதிக மெடுத்தியம்பி யிரங்கினர். (உஎங)

பின்னெருநா டிருவாரூர் தனைப்பெருக நினைந்தருளி
யுன்னவினி யார்கோயில் புகுந்திறைஞ்சி யொற்றிநகர்
தன்னையக லப்புக்கார் தாஞ்செய்த சபதத்தான்
முன்னடிக டோன்றுதலு கண்மறைய மூர்ச்சித்தார். (உஎச)

செய்வதனை யறியாது திகைத்தருளி நெடிதுயிர்ப்பார்
மைவிரவு கண்ணீர்பாற் சூழ்தறவு மறுத்ததனு
லிவ்வினைவந் தெய்தியதா மெனநினைந்தெம் பெருமானை
வெவ்வியவித் துயர்நீங்கப் பாடுவே னெனநினைந்து, (உஎஞ)

வே று.

அழுக்கு மெய்கொடென் றெறித்தசொற் பதிக மாதி நீள்புரி யண்ணலே யோதி
வழுத்து கெஞ்சொடு தாழ்ந்துதின் றுரைப்பார் மாதொர் பாகனூர் மலர்ப்பத முன்னி
யிழுக்கு நீக்கிட வேண்டுமென் றிரங்தே யெய்து வெந்துயர்க் கையற வினுக்கும்
பழிக்கும் வெள்கிநல் லிசைகொடு பாவிப் பணிந்து சாலவும் பலபல கினைவார். (உஎசு)

அங்கு நாதர்செய் யருளது வாக வங்கை கூப்பி யாரூர்தொழ கினைந்தே
பொங்கு காதன்மீ ளாகிலே மையினற் போது வார்வழி காட்டமுன் போந்து
திங்கள் வேணியார் திருமுல்லே வாயில் சென்றி றைஞ்சிநீ டியதிருப் பதிகஞ்
சங்கிலிக் காகவென் கண்களே மறைத்தீ ரென்று சாற்றிய தன்மையிற் பாடி. (உஎஎ)

தொண்டை மானுக்கன் றருள்கொடுத் தருளுந் தொல்லே வண்புகழ் முல்லே நாயகரைக்
கொண்ட வெந்துயர் களேகெனப் பரவிக் குறித்த காதலி னெறிக்கொள வருவார்
வண்டிலா மலர்ச் சோலைகள் சூழ்ந்து மாட மாளிகை கீடவெண் பாக்கங்
கண்ட தொண்டர்க ளெதிர்கொள வணைந்து காயுரு கத்தர் கோயிலே யடைந்தார். ()

அணைந்த தொண்டர்க ளுடன்வல மாக வங்க ணுயகர் கோயின்முன் னெய்திக்
குணங்க ளேத்தியே பரவியஞ் சலியாற் குவித்த கைதலே மேற்கொண்டு கின்று
வணங்கி நீர்மகிழ் கோயிலு ளீரே யென்ற வன்றொண்டர்க் கூன்றுகோ லருளி
யிணங்கி லாமொழி யாலுளேம் போகே ரென்றி யம்பிஞ ரேதிலார் போல. (உஎகூ)

வே று.

பிழையுளன பொறுத்திடுவ ரென்றெடுத்துப் பெண்பாகம்
விழைவடிவிற் பெருமானே வெண்பாக்க மகிழ்ந்தானே
யிழையெனமா சுணமணிந்த விறையாளேப் பாடினர்
மழைதவழு நெடும்புரிசை நாவலூர் மன்னவனூர். (உஅ0)

முன்னின்று முறைப்பாடு போன்மொழிந்த மொழிமாலேப்
பன்னுமிசைத் திருப்பதிகம் பாடியபின் பற்றிய
வென்னுடைய பிரானருளிங் கித்தனேகொ லாமென்று
மன்னுபெருந் தொண்டருடன் வணங்கியே வழிக்கொள்வார். (உஅக)

அங்கணர்தம் பதியதனே யகன்றபோ யன்பருடன்
பங்கயப்பூந் தடம்பணைசூழ் பழையனூ ருழையப்பித்
தங்குவா ரம்மைதிருத் தலேயாலே வலங்கொள்ளுந்
திங்கண்முடி யாராடுந் திருவாலங் காட்டினயல். (உஅஉ)

முன்னின்று தொழுதேத்தி முத்தாவென் றெடுத்தருளிப்
பன்னுமிசைத் திருப்பதிகம் பாடிமகிழ்ந் தேத்துவா
ரன்றின்று வணங்கிப்போய்த் திருவூற லமர்ந்திறைஞ்சிக்
கன்னிமதின் மணிமாடக் காஞ்சிமா நகரணைந்தார். (உஅசு)

தேனிலவு பொழிற்கச்சித் திருக்காமக் கோட்டத்தி
லூனில்வள ருயிர்க்கெல்லா மொழியாத கருணையினு
லானதிரு வறம்புரக்கு மம்மைதிருக் கோயிலின்முன்
வானில்வளர் திருவாயில் வணங்கினர் வன்றொண்டர். (உஅச)

தொழுதுவிழுந் தெழுந்தருளாற் றுதித்துப்போய்த் தொல்லுலக
முழுதுமளித் தழித்தாக்கு முதல்வர்திரு வேகம்பம்
பழுதிலடி யார்முன்பு புகப்புக்குப் பணிகின்ரு
ரிழுதையேன் றிருமுன்பே யென்மொழிவே னென்றிறைஞ்சி. (உஅஇ)

விண்ணுள்வா ரமுதுண்ண மிக்கபெரு விடமுண்ட
கண்ணுளா கச்சியே கம்பனே கடையானே
னெண்ணுத பிழைபொறுத்திங் கியான்காண வெழிற்பவள
வண்ணகண் ணளித்தருளா யெனவீழ்ந்து வணங்கினார். (உஅசு)

பங்கயச்செங் கைத்தளிராற் பணிமலர்கொண் டருச்சித்துச்
செங்கயற்கண் மலைவல்லி பணிந்தசே வடிகினேன்று
பொங்கியவன் பொடுபரவிப் போற்றியவா ரூரருக்கு
மங்கைதழு வக்குழைந்தார் மறைந்தவிடக் கண்கொடுத்தார். (உஅள)

ஞாலத்தா னிடந்தவனு நளிர்விசும்பு கடந்தவனு
மூலத்தா னறிவரியார் கண்ணளித்து முலேச்சுவட்டுக்
கோலத்தான் காட்டுதலுங் குறுகிவீழுந் தெழுந்துகளித்
தாலத்தா னுகந்தவனென் றெடுத்தாடிப் பாடினார். (உஅஅ)

பாடியிகப் பரவசமாய்ப் பணிவார்க்குப் பாவையுட
னீடியகோ லங்காட்ட நிறைந்தவிருப் புடனிறைஞ்சிச்
சூடியவஞ் சலியினராய்த் தொழுதுபுறம் போந்தன்பு
கூடியமெய்த் தொண்டருடன் கும்பிட்டங் கினிதமர்வார். (உஅக)

மாமலையாண் முலேச்சுவடிம வளைத்தழும்பு மணிந்தமதிப்
பூமலிவார் சடையாரைப் போற்றியரு ளதுவாகத்
தேமலர்வார் பொழிற்காஞ்சித் திருநகரங் கடந்தகல்வார்
பாமலர்மா லேப்பதிகந் திருவாரூர் மேற்பரவி. (உகo)

அந்தியுரண் பகலுமென வெடுத்தார்வத் துடனசைவா
லெந்தைபிரான் றிருவாரூ ரென்றுகொலெய் துவதென்று
சந்தவிசை பாடிப்போய்த் தாங்கரிய வாதரவு
வந்தணைய வன்பருடன் மகிழ்ந்துவழிக் கொள்கின்றார். (உகக)

மன்னுதிருப் பதிகடொறும் வண்ணியொடு கூவிளமுஞ்
செண்ணிலிசை வைத்துவந்தார் கோயிலின்முன் சென்றிறைஞ்சிப்
பன்னுதமிழ்த் தொடைசாத்திப் பரவியே போந்தணைந்தா
ரன்னமலி வயற்றடங்கள் சூழ்ந்ததிரு வாமாத்தூர். (உகஉ)

அங்கணரை யாமாத்தூ ரழகர்தமை யடிவணங்கித்
தங்குமிசைத் திருப்பதிகம் பாடிப்போய்த் தாரணிக்கு
மங்கலமாம் பெருந்தொண்டை வளநாடு கடந்தணைந்தார்
செங்கண்வள வன்பிறந்த சீர்நாடு நீர்நாடு. (உகங)

அந்நாட்டின் மருங்குதிரு வரத்துறையைச் சென்றெய்தி
பின்னருஞ் படைடமழுவார் வீரைமலர்த்தாள் பணிந்தெழுந்து
சொன்மாலே மலர்கல்வா யகிலென்னுந் தொடைசாத்தி
மன்னுர்வத் திருத்தொண்ட ருடன்மகிழ்ந்து வைகினார். (உகச)

பரமர்திரு வரத்துறையைப் பணிந்துபோய்ப் பலபதிகள்
வீரவிமழ விடையுயர்த்தார் வீரைமலர்த்தா டொழுதேத்தி
யுரவுநீர்த் தடம்பொன்னி யடைந்தன்ப ருடனுடி
யரவணிந்தா ரமர்ந்ததிரு வாவடுதண்டு றையணைந்தார். (உகஞ)

அங்கணேவார் தமையடியா ரெதிர்கொள்ளப் புக்கருளிப்
பொங்குதிருக் கோயிலினைப் புடைவலங்கொண் டுள்ளணைந்து
கங்கைவாழ் சடையாயோர் கண்ணிலே னெனக்கவல்வா
ரிங்கெனக்கா ருறவென்னுந் திருப்பதிக மெடுத்திசைத்தார். (உகசு)

திருப்பதிகங் கொடுபரவிப் பணிந்துதிரு வருளாற்போய்
விருப்பினெடுந் திருத்தருத்தி தனேமேவி விமலர்கழ
லருத்தியினுற் புக்கிறைஞ்சி யடியேன்மே லுற்றபிணி
வருத்தமெனை யொழித்தருள வேண்டுமென வணங்குவார். (உகஎ)

பரவியே பணிந்தவர்க்குப் பரமர்திரு வருள்புரிவார்
வீரவியவிப் பிணியடையத் தவிர்ப்பதற்கு வேறுக
வரமலர்வண் டறைதீர்த்த வடகுளத்துக் குளியென்னக்
கரவிரிருத் தொண்டர்தாய் கைதொழுது புறப்பட்டார். (உகஅ)

மிக்கபுனற் றீர்த்தத்தின் முன்னணைந்து வேதமெலாங்
தொக்கவடி வாயிருந்த தருத்தியார் தமைத்தொழுது
புக்கதனின் மூழ்குதலும் புதியபிணி யதுநீங்கி
யக்கணமே மணியொளிசேர் திருமேனி யாயினார். (உகக)

கண்டவர்க ளதிசயிப்பக் கரையேறி யுடைபுனைந்து
மண்டுபெருங் காதலினுற் கோயிலினே வந்தடைந்து
தொண்டரெதிர் மின்னுமா மேகமெனுஞ் சொற்பதிக
மெண்டிசையு மறிந்துய்ய வேழிசையா லெடுத்திசைத்தார். (உ00)

பண்ணிறைந்த தமிழ்பாடிப் பரமர்திரு வருண்மறவா
தெண்ணிறைந்த தொண்டருடன் பணிந்தங்க ணுறைந்தேகி
யுண்ணிறைந்த பதிபிறவு முடையவர்தா ளவணங்கிப்போற்
கண்ணிறைந்த திருவாரூர் முன்சேர்ந்தக் காண்கின்றார். (உ0க)

அன்றுதிரு நோக்கொன்று லாரக்கண் டின்புரூர்
கின்றுநில விசைவீழ்ந்து நெடிதுயிர்த்து நேரிறைஞ்சி
வன்றொண்டர் திருவாரூர் மயங்குமா லெயிற்புகுந்து
தன்றுசடைத் தாவாயர் தமைமுன்னந் தொழவணைந்தார். (உ0உ)

பொங்குதிருத் தொண்டருட னுள்ளணைந்து புக்கிறைஞ்சித்
துங்கவிசைத் திருப்பதிகந் தாவாயா வென்றெடுத்தே
யிங்கெமது துயர்களைந்து கண்காணக் காட்டாயென்
றங்கணர்த முன்னின்று பாடியருந் தமிழ்புனைந்தார். (உ0ங)

ஆறணியுஞ் சடையாரைத் தொழுதுபுறம் போந்தங்கண்
வேறிருந்து திருத்தொண்டர் விரவுவா ருடன்கூடி
யேறுயர்த்தார் திருமூலட் டானத்து ளிடைதெரிந்து
மாறிறிரு வத்தயா மத்திறைஞ்ச வந்தணைந்தார். (உ0ச)

ஆதிதிரு வன்பரெதி ரணையவர்மு கநோக்கிக்
கோதிலிசை யாற்குருகு பாயவெனக் கோத்தெடுத்தே
யேதிலார் போல்வினவி யேசறவாற் றிருப்பதிகங்
காதல்புரி கைக்கிளையாற் பாடியே கலந்தணைவார். (உ0ஞ)

சீர்பெருகுந் திருத்தேவா சிரியன்முன் சென்றிறைஞ்சிக்
கார்வீரவு கோபுரத்தைக் கைதொழுதே யுட்புகுந்து
தார்பெருகு பூங்கோயி றனேவணங்கிச் சார்ந்தணேவா
ரார்வமிகு பெருங்காத லாலவளி மேல்வீழ்ந்தார். (கூ0சு)

வீழ்ந்தெழுந்து கைதொழுது முன்னின்று விம்மியே
வாழ்ந்தமலர்க் கண்ணெனன்ரு லாராமன் மனமழிவா
ராழ்ந்ததுயர்க் கடலிடைநின் றடியேனே யெடுத்தருளித்
தாழ்ந்தகருத் தினேநிரப்பிக் கண்டாரு மெனத்தாழ்ந்தார். (கூ0எ)

திருநாவ லூர்மன்னர் திருவாரூர் வீற்றிருந்த
பெருமானேத் திருமூலட் டானஞ்சேர் பிஞ்சகனேப்
பருகாவின் னமுதத்தைக் கண்களாற் பருகுதற்கு
மருவார்வத் துடன்மற்றைக் கண்டாரீ ரெனவணங்கி. (கூ0அ)

தே வு.

மீளா வடிமை யெனவெடுத்து மிக்கதேவர் குலமெல்லா
மாளா மேருஞ் சுண்டருளி மன்னி யிருந்த பெருமானேத்
தாளா தரிக்கு மெய்யடியார் தமக்கா டிடர்நீர் தரியீரென்
ரூளாந் திருத்தோ ழமைத்திறத்தா லஞ்சொற் பதிகம் பாடினர். (கூ0கூ)

பூத முதல்வர் புற்றிடங்கொண் டிருந்த புனிதர் வண்ருண்டர்
காதல் புரிவே தனேக்கிரங்கிக் கருணேத் திருநோக் களித்தருளிச்
சீத மலர்க்கண் கொடுத்தருளச் செவ்வே விழித்து முகமலர்ந்து
பாத மலர்கண் மேற்பணிந்து வீழ்ந்தா ருள்ளம் பரவசமாய். (கூ0ஏ)

விழுந்து மெழுந்தும் பலமுறையான் மேவிப் பணிந்து மிகப்பரவி
யெழுந்த களிப்பி னுலாடிப் பாடி யின்ப வெள்ளத்தி
லழுந்தி யிரண்டு கண்ணுலு மம்பொற் புற்றி னிடையெழுந்த
செழுந்தண் பவளச் சிவக்கொழுந்தி னருளேப் பருகித் நிலோக்கின்ரூர். (கூ0க)

கால நிரம்பத் தொழுதேத்திக் கனக மணிமா ளிகைக்கோயின்
ஞால முய்ய வருநம்பி நலங்கொள் விருப்பால் வலங்கொண்டு
மாலு மயனு முறையிருக்கும் வாயில் கழியப் புறம்போந்து
சீல முடைய வன்பருடன் றேவா சிரியன் மருங்கணேந்தார். (கூ0உ)

நங்கை பரவை யார்தம்மை நம்பி பிரிந்து போனதற்பின்
றங்கு மணிமா ளிகையின்கட் டனிமை கூரத் தளர்வார்க்குக்
கங்குல் பகலாய்ப் பகல்கங்கு லாகிக் கழிய நாளெல்லாம்
பொங்கு காதன் மீதூரப் புலர்வார் சிலநாள் போனதற்பின். (கூ0ஙு)

செம்மை நெறிசேர் திருநாவ லூர சொற்றி யூர்சேர்ந்து
கொம்மை முலேயார் சங்கிலியார் தம்மைக் குலவு மணம்புணர்ந்த
மெய்ம்மை வார்த்தை தாமவர்பால் விட்டார் வந்து கட்டுரைப்பத்
தம்மை யறியா வெருளியினுற் றரியா ரெஞ்சி னெடுத்தளர்வார். (கூ0ச)

மென்பூஞ் சயனத் திடைத்துயிலு மேவார் விழித்து மினிதமரார்
பொன்பூந் தவிசின் மிசையினிரார் நில்லார் செல்லார் புறம்பொழியார்
மன்பூ வாளி மழைகழியார் மறவார் நினேயா ரென்செய்வா
ரென்பூ ருக்கும் புலவியோ பிரிவோ வீரண்டி னிடைப்பட்டார். (கூ0ஞ)

ஆன கவலைக் கையறவா லழியு நாளி லாரூரர்
கூன லிளவெண் பிறைக்கண்ணி முடியார் கோயின் முன்குறுகப்
பானல் வீழியார் மாளிகையிற் பண்டு செல்லும் பரிசினுற்
போன பெருமைப் பரிசனங்கள் புகுதப் பெரிது புறமின்றார். (சுகசு)

நின்ற நிலைமை யவர்களிலர் நிலவு திருவா ரூரரெதிர்
சென்று மொழிவார் திருவொற்றி யூரி னிகழ்ந்த செய்கையெலா
மொன்று மொழியா வகையறிந்தங் குள்ளார் தள்ள மாளிகையி
லின்று புறமுஞ் சென்றெய்தப் பெற்றி லோமென் றிறைஞ்சினார். (சுகள)

மற்ற மாற்றங் கேட்டழிந்த மனத்த ராகி வன்றொண்ட
ருற்றவிதனுக் கினியென்னே செயலென் றுணர்வா ருலகியல்பு
கற்ற மாந்தர் சிலர்தம்மைக் காதற் பரவை யார்கொண்ட
செற்ற நிலைமை யறிந்ததற்குத் தீர்வு சொல்லச் செலவிட்டார். (சுகஅ)

நம்பி யருளாற் சென்றவரு நங்கை பரவை யார்தமது
பைம்பொன் மணிமா ளிகையணிந்து பண்பு புரியும் பாங்கினுல்
வெம்பு புலவிக் கடலழுந்து மின்னே ரிடையாண் முன்னெய்தி
யெம்பி ராட்டிக் கிதுதகுமோ வென்று பலவு மெடுத்துரைத்தார். (சுகக)

பேத நிலைமை நீதியினுற் பின்னும் பலவுஞ் சொன்னவர்முன்
மாத ரவரு மறுத்துமனங் கொண்ட செற்ற மாற்றாரா
யேத மருவு மவர்திறத்தி லிந்த மாற்ற நியம்பி யுயிர்
போத லொழியா தெனவுரைத்தா ரவரு மஞ்சிப் புறம்போந்தார். (சுஉ0)

போந்து புகுந்த படியெல்லாம் பூந்தண் பழன முனைப்பாடி
வேந்தர் தமக்கு விளம்புதலும் வெருவற் றுயர்வார் துயர்வேலை
நீந்தும் புணைபார் துணைகாணுர் நிகழ்ந்த சிந்தா குலமெஞ்சிற்
காந்த வழிந்து தோய்ந்தெழார் கங்கு லிடையா மக்கடலுள். (சுஉக)

அருகு சூழ்ந்தார் துயின்றதிரு வழுத்த யாமம் பணிமடங்கிப்
பெருகு புவனஞ் சலிப்பின்றிப் பேயு முறங்கும் பிறங்கிருள்வாய்
முருகு விரியு மலர்க்கொன்றை முடிமே லரவு நிலமதியுஞ்
செருகு மொருவர் தோழர்தனி வருந்தி யிருந்து சிந்திப்பார். (சுஉஉ)

முன்னை வினையா லிவ்வினைக்கு மூல மானுள் பாலணைய
வென்னை யுடையாய் நினைக்தருளா யிந்த யாமத் தெழுந்தருளி
யன்ன மனையாள் புலவியினை யகற்றி லுய்ய லாமன்றிப்
பின்னை யில்லைச் செயலென்று பெருமா னடிக டமைநினைந்தார். (சுஉங)

அடியா ரிடுக்கண் டரியாதா ராண்டு கொண்ட தோழர்குறை
முடியா திருக்க வல்லரே முற்று மளித்தாள் பொற்றளிர்க்கைத்
தொடியார் தழும்பு முலைச்சுவடு முடையார் தொண்டர் தாங்காணும்
படியா லணைந்தார் நெடியோனுங் காணு வடிகள் படிதோய. (சுஉச)

தம்பி ரானு ரெழுந்தருளத் தாங்கற் கரிய மகிழ்ச்சியினுற்
கம்பி யாதின் றவயவங்கள் கலந்த புளக மயிர்முகிழ்ப்ப
நம்பி யாரு ரருமெதிரே நளின மலர்க்கை தலைகுவிய
வம்பி காவல் லவர்செய்ய வடித்தா மரையின் வீழ்வீழ்ந்தார். (சுஉஞ)

வீழுந்து பரவி மிக்கபெரு விருப்பி னெடு மெதிர்போற்றி
யெழுந்த ணண்பர் தமைநோக்கி யென்னீ புற்ற தென்றருளத்
தொழுந்தங் குறையை விளம்புவார் யானே தொடங்குந் துரிசிடைப்பட்
டழுந்து மென்னை யின்னமெடுத் தாளவேண்டு முமக் கென்ன. (சுஉசு)

அடியே னங்குத் திருவொற்றி யூரி னீரே யருள்செய்ய
வடிவே லொண்கட் சங்கிலியை மணஞ்செய் தணைந்த திறமெல்லாங்
கொடியே ரிடையாள் பரவைதா னறிந்து தன்பால் யான்குறுகின்
முடிவே னென்று துணிந்திருந்தா ளென்னுண் செய்வ தெனமொழிந்து. (சுஉஎ)

நாய னீரே நானுமக்கிங் கடியே னுமி னீரெனக்குத்
தாயி னல்ல தோழருமாந் தம்பி ரானு ரேயாகி
லாய வறிவு மிழந்தழிவே னையர்யு நோக்கி யவ்வளவும்
போயில் வீரவே பரவையுறு புலவி தீர்த்துத் தாருமென. (சுஉஅ)

அன்பு வேண்டுந் தம்பெருமா னடியார் வேண்டிற் றேவேண்டி
முன்பு நின்று விண்ணப்பஞ் செய்த நம்பி முகநோக்கித்
தூண்ப மொழிநீ யாமுனக்கோர் தூத ஞெ மிப்பொழுதே
பொன்செய் மணிப்பூண் பரவைபாற் போகின்றேமென் றருள்செய்தார். (சுஉக)

எல்லை யில்லாக் களிப்பினு மிறைவர் தாளில் வீழ்ந்தெழுந்து
வல்ல பரிசெல் லாந்துதித்து வாழ்ந்து நின்ற வன்றொண்டர்
முல்லை முகைவெண் ணகைப்பரவை முகில்சேர் மாடத் திடைச்செல்ல
நில்லா நீண்ட வெழுந்தருளி நீக்கும் புலவி யெனத்தொழுதார். (சுஙஐ)

அண்டர் வாழக் கருணையினு லால கால மமுதாக
வுண்ட நீலக் கோலமிடற் றொருவ ருருவர்க் கறிவரியார்
வண்டு வாழு மலர்க்கூந்தற் பரவை யார்மா ளிகைநோக்கித்
தொண்ட னுர்தந் துயர்நீக்கத் தூத னுரா யெழுந்தருள. (சுஙக)

தேவா சிரியன் முறையிருக்குந் தேவரெல்லாஞ் சேவித்துப்
போவார் தம்மில் வேண்டுவார் போத வொழிந்தார் புறத்தொழிய
வோவா வணுக்கச் சேவகத்தி லுள்ளோர் பூத கணநாதர்
மூவா முனிவர் யோகிகளின் முதலானுர்கண் முன்போக. (சுஙஉ)

அருகு பெரிய தேவருட னணைந்து வருமவ் வீருடிகளு
மருவு ணண்பி னிதிக்கோனு முதலா யுள்ளோர் மகிழ்ந்தேத்தத்
தெருவும் விசும்பு நிறைந்துவிரைச் செழும்பூ மாரி பொழிந்தலையப்
பொருவி லன்பர் விடுத்தூதர் புனித வீதி யினிற்போத. (சுஙசு)

மாலு மயனுங் காணுதார் மலர்த்தாள் பூண்டு வந்திறைஞ்சுங
கால மிதுவென் றுங்கவரை யழைத்தா லென்னக் கடல்விளைத்த
வால மிருண்ட கண்டத்தா னடித்தா மரைமேற் சிலம்பொலிப்ப
நீல மலர்க்கட் பரவையார் திருமா ளிகையை நேர்நோக்கி. (சுஙஎ)

இறைவர் விரைவி னெழுந்தருள வெய்து மவர்கள் பின்றொடர
வறைகொ டிரைநீர் தொடர்சடையி லரவு தொடர வரியவிளம்
பிறைகொ ளருகு றையிதழிப் பிணையல் சுரும்பு தொடரவுடன்
மறைக டொடர வன்றொண்டர் மனமுந் தொடர வரும்பொழுது. (சுஙஏ)

பெருவீ ரையினு மிகமுழங்கிப் பிறங்கு மதகுஞ் சாமுரித்து
மருவீ ருரிவை புனைந்தவர்தம் மருங்கு சூழ்வார் நெருங்குதலாற்
றிருவீ தியினி லழகரவர் மகிழுஞ் செல்வத் திருவாரூ
ரொருவீ தியிலே சிவலோக முழுதுங் காண வுளதாமால். (கூகூசு)

ஞால முய்ய வெழுத்தருளு நம்பி தூதர் பரவையார்
கோல மணிமா ளிகைவாயில் குறுகு வார்முன் கூடத்தம்
பாலங் கணேந்தார் புறநிற்பப் பண்டே தம்மை யர்ச்சிக்குஞ்
சீல முடைய மறைமுனிவ ராகித் தனியே சென்றணைந்தார். (கூகூஎ)

சென்று மணிவாயிற் கதவுஞ் செறிய வடைத்த வதன்முன்பு
நின்று பரவாய் திறவாயென் றழைப்ப நெறிமென் குழலாரு
மொன்றுந் துயிலா துணர்ந்தயர்வா ருடைய பெருமான் பூசனைசெய்
துன்றுஞ் புரிநூன் மணிமார்பர் போலு மழைத்தா ரெனத்துணிந்து. (கூகூஅ)

பாதி மதிவாழ் முடியாரைப் பயில்பூ சனையின் பணிபுரிவார்
பாதி யிரவி லிங்கணைந்த தென்னே வென்று பயமெய்திப்
பாதி யுமையா டிருவடிவிற் பரம ராவ தறியாதே
பாதி மதிவா ணுதலாரும் பதைத்து வந்து கடைதிறந்தார். (கூகூக)

மன்னு முரிமை வன்முரண்டர் வாயிற் றூதர் வாயினிடை
முன்னின் முரைக் கண்டிறைஞ்சி முழுது முறங்கும் பொழுதின்க
ணென்னே யாளும் பெருமானிங் கெய்தி யருளி னீரென்ன
மின்னு மணிநூ லணிமார்பீ ரெய்த வேண்டிற் றென்னென்றார். (கூசஅ)

மே வு று.

கங்கைநீர் கரந்தவேணி கரந்தவ ரருளிச் செய்வார்
நங்கைநீ மறுது செய்யி னுன்வந்த தூரைப்ப தென்ன
வங்கயல் விழியி னாரு மதனீ ரருளிச் செய்தா
லிங்கெனக் கிசையு மாகி லிசையலா மென்று சொல்லி. (கூசக)

என்னினைந் தணைந்த தென்பா லின்னதென் றருளிச் செய்தாற்
பின்னைய தியலு மாகி லாமெனப் பிராஞர் தாமு
மின்னிடை மடவாய் நம்பி வரவிற்கு வேண்டு மென்ன
நன்னுத லாருஞ் சால நன்றுநம் பெருமை யென்பார். (கூசஉ)

பங்குனித் திருநா ளுக்குப் பண்டுபோல் வருவா ராக
வின்கெனைப் பிரிந்து போகி யொற்றியூ ரெய்தி யங்கே
சங்கிலித் தொடக்குண் டாருக் கிங்கொரு சார்வுண் டோநீர்
கங்குலின் வந்து சொன்ன காரிய மழகி தென்றார். (கூசங)

நாதரு மதனைக் கேட்டு நங்கைநீ நம்பி செய்த
வேதங்கண் மனத்துக் கொள்ளா தெய்திய வெகுளி நீங்கி
நோதக வொழிதற் கன்றே நுன்னையான் வேண்டிக் கொண்ட
தாதலின் மறுத்தல் செய்ய வடாதென வருளிச் செய்தார். (கூசச)

அருமறை முனிவ ரான வையரைத் தையல் லார்தாங்
கருமமீ தாக நீரிக் கடைத்தலை வருகை மற்றும்
பெருமைக்குத் தகுவ தன்றே லொற்றியூ ருறுதி பெற்றார்
வருவதற் கிசையே னீரும் போமென மறுத்துச் சொன்னார். (கூசஇ)

நம்பர்தா மதனைக் கேட்டு நகையுமுட் கொண்டு மெய்ம்மைத்
தம்பரி சறியக் காட்டார் தனிப்பெருந் தோழ னர்த்தம்
வெம்புற வேட்கை காணுங் திருவிளை யாட்டின் மேவி
வம்பலர் குழலி னர்தா மறுத்ததே கொண்டு மீண்டார். (௧௮௯)

தாதரைப் போக விட்டு வரவுபார்த் திருந்த தொண்டர்
காதரை யறிவி லாதே னன்னுதல் புலவி நீக்கப்
போதரத் தொழுதே னென்று புலம்புவார் பரவை யாரைக்
காதலி னிசைவு கொண்டு வருவதே கருத்துட் கொள்வார். (௧௮௰)

போயவண் மனைபி னண்ணும் புண்ணிய ரென்செய் தாரோ
நாயனார் தம்மைக் கண்டா னன்னுதன் மறுக்கு மோதா
னெயவென் னையர்வு தன்னே யறிந்தெழுந் தருளி னர்தாஞ்
சேயிழை துளிதீர்த் தன்றி மீள்வது செய்யா ரென்று. *(௧௮௱)

வழியெதிர் கொள்ளச் செல்வார் வரவுகா ணுது மீள்வ
ரழிவுற மயங்கி நிற்ப ரசைவுட னிருப்பர் நெற்றி
விழியவர் தாழ்த்தா ரென்று மீளவு மெழுவர் மாரன்
பொழிமலர் மாரி வீழ வொதுங்குவார் புன்க ணுற்றூர். (௧௮௯)

பரவையார் தம்பா னம்பி தாதராம் பாங்கிற் போன
வரவணி சடையார் மீண்டே யறியுமா றுணையும் போதி
லிரவுதான் பகலாய்த் தோன்ற வெதிரெழுந் தணையை விட்ட
வரவுநீர் வெள்ளம் போல வோங்கிய களிப்பிற் சென்றூர். (௧௯0)

சென்றுதம் பிரானைத் தாழ்ந்து திருமுக முறுவல் செய்ய
வொன்றிய விளையாட் டோரா ருறுதிசெய் தணைந்தா ரென்றே
யன்றுநீ ராண்டு கொண்ட வதனுக்குத் தகவே செய்தீ
ரின்றிவள் வெகுளி யெல்லாந் தீர்த்தெழுந் தருளி யென்றூர். (௧௯௧)

அம்மொழி விளம்பு நம்பிக் கையர்தா மருளிச் செய்வார்
நம்மைநீ சொல்ல நாம்போய்ப் பரவைதன் னில்ல நண்ணிக்
கொம்மைவெம் மூலைபி ளுட்குன் றிறமெலாங் கூறக் கொள்ளாள்
வெம்மைதான் சொல்லி நாமே வேண்டவு மறுத்தா ளென்றூர். (௧௯௨)

அண்ணலா ரருளிச் செய்யக் கேட்டவா ரூரர் தாமும்
தண்ணென நடுக்க முற்றே தொழுதுநீ ரருளிச் செய்த
வண்ணமு மடியா ளான பரவையோ மறுப்பா ளுங்க
ளெண்ணவா ரடிமைக் கென்ப தின்றறி வித்தீ ரென்று. (௧௯௩)

வானவ ருய்ய வேண்டி மறிகட னஞ்சை யுண்டீர்
தானவர் புரங்கள் வேவ மூவரைத் தவிர்த்தாட் கொண்டீர்
நான்மறைச் சிறுவர் தம்மைக் காலனைக் காய்ந்து நட்டீர்
யான்மிகை யுமக்கின் ரூஞ லென்செய்வீர் போதா தென்றூர். (௧௯௪)

ஆவதே செய்தீ ரின்றெ னடிமைநீர் வேண்டா விட்டாற்
பாவியேன் றன்னை யன்று வலியவாட் கொண்ட பற்றென்
னேவுமென் னழிவுங் கண்டீர் நடங்கிடை யவள்பா லின்று
மேவுமா செய்யீ ராகில் விடுமுயி ரென்று வீழ்ந்தார். (௧௯௫)

தம்பிரா னதனைக் கண்டு தரியாது தளர்ந்து வீழ்ந்த
நம்பியை யருளா லெழுக்கி நாமின்ன மவள்பாற் போயக்
கொம்பினை யிப்போ தேநீ குறுகுமா கூறு கின்றோம்
வெம்புறு துயர்நீங் கென்ரூர் வினையெலாம் வினைக்க வல்லார். (கூஞ்சு)

மயங்கிய நண்ப ருய்ய வாக்கெனு மதர வாய்மை
நயங்கொள ரமுத நல்க நாவலூர் மன்னர் தாமு
முயங்கிய கலக்க நீங்கி யும்மடித் தொழும்ப னேனைப்
பயங்கெடுத் திவ்வா றன்ரே பணிகொள்வ தென்று போற்ற. (கூஞ்எ)

அன்பர்மேற் கருணை கூர வாண்டவர் மீண்டு செல்லப்
பின்புசென் றிறைஞ்சி நம்பி பேதுற வோடி மீண்டார்
முன்புடன் போதா தாரு முறைமையிற் சேவித் தேகப்
பொன்புரி சடையார் மாதர் புனிதமா விசையிற் சென்ரூர். (கூஞ்அ)

மதிநுதற் பரவை யார்தா மறையவர் போன பின்பு
முதிர்மறை முனியாய் வந்தா ராளுடை முதல்வ ராரு
மதிசயம் பலவுந் தோன்ற வறிவுற்றே யஞ்சிக் கெட்டே
னெதிர்மொழி யெம்பி ரான்முன் னென்செய மறுத்தே னென்பார். (கூஞ்க)

கண்டியி லெய்தார் வெய்ய கையற வெய்தி யீங்கின்
றண்டார்தம் பிரானூர் தோழர்க் காகவர்ச் சிப்பார் கோலங்
கொண்டணைந் தவரை யானுட் கொண்டிலேன் பாவி யேனென்
றெண்சுடர் வாயி லேபார்த் துழையரோ டழியும் போதில். (கூஞ்ச)

வெறியுறு கொன்றை வேணி விமலருக் தாமாந் தன்மை
யறிவுறு கோலத் தோடு மளவில்பல் பூத நாதர்
செறிவுறு தேவர் யோக முனிவர்கள் சூழ்ந்து செல்ல
மறுவில்சீர்ப் பரவை யார்தம் மாளிகை புகுந்தார் வந்து. (கூஞக)

பாரிடத் தலைவர் முன்னும் பல்கண நாதர் தேவர்
நேர்வுறு முனிவர் சித்த ரியக்கர்க ணிறைத லாலே
பேரரு ளாள ரெய்தப் பெற்றமா விசைதான் றென்பாற்
சீர்வளர் கயிலை வெள்ளித் திருமலை போன்ற தன்றே. (கூஞஉ)

ஐயரங் கணைந்த போதி லகிலலோ கத்துள் ளாரு
மெய்தியே செறிந்து சூழ வெதிர்கொண்ட பரவை யார்தா
மெய்புறு நடுக்கத் தோடு மிக்கெழு மகிழ்ச்சி பொங்கச்
செய்யதா ளிணைமுன் சேர விரைவினுற் சென்று வீழ்ந்தார். (கூஞஊ)

அரியயற் கரியார் தாமு மாயிழை யாரை நோக்கி
யுரிமையா லூர னேவ மீளவு முன்பால் வந்தோ
முருகலர் குழலா யின்ன முன்புபோன் மறுதே கின்பாற்
பிரிவுற வருந்து கின்ரு ணுரப்பெற வேண்டு மென்ரூர். (கூஞச)

பெருந்தடங் கண்ணி ஞரும் பிரான்முன்பு மிகவு மஞ்சி
வருந்திய வுள்ளத் தோடி மலர்க்கரங் குழன்மேற் கொண்டே
யருந்திரு மறையோ ராகி யணைந்தீர்முன் னடியேன் செய்த
வீருந்தவப் பயனு மென்ன வெய்திய நீரோ வென்பார். (கூஞஎ)

துளிவளர் கண்ணீர் வாரத் தொழுதுவிண் ணப்பஞ் செய்வா
ரொளிவளர் செய்ய பாதம் வருந்தவோ ரிரவு மாரூ
தளிவரு மன்பர்க் காக வங்கொடிங் குழல்வீ ராகி
யெளிவரு வீரு மாரு லென்செய்கே னிசையா தென்னூர். (கூசுசு)

நங்கைகின் றன்மைக் கேற்கு நன்மையே மொழிந்தா யென்று
மங்கையோர் பாகம் வைத்த வள்ளலார் விரைந்து போகத்
திங்கள்வா ணுதலி னூருஞ் சென்றுபின் னிறைஞ்சி மீண்டா
ரெங்களே யாரு நம்பி தூதர்மீண் டேகு கின்னூர். (கூசுஎ)

மே வு று.

ஆதியு மேலு மாலய னூடற் கருளாதார்
தூதினி லேநித் தொண்டரை யாளுந் தொழில்கண்டே
வீதியி லாடிப் பாடி மகிழ்ந்தே மிடைகின்னூர்
பூதியி னீடும் பல்கண நாதப் புகழ்வீரர். (கூசுஅ)

அன்னவர் முன்னும் பின்னு மருங்கு மணிவெய்த
மின்னிடை யார்பா லன்பரை யுய்க்கும் விரைவோடும்
சென்னியி னீடுங் கங்கை ததும்பத் திருவாரூர்
மன்னவ னூரம் மறையவ னூர்பால் வந்துற்றூர். (கூசுக)

அன்பரு மென்பா லாவி யளிக்கும் படிபோனு
ரென்செய்து மீள்வா ரின்னமு மென்றே யிடர்கூரப்
பொன்புரி முந்நூன் மார்பினர் செல்லப் பொலிவீதி
முன்புற நேருங் கண்ணிணே தானு முகிழாரால். (கூஎ0)

அந்நில மைக்கண் மன்மதன் வாளிக் கழிவார்தம்
மன்னுயிர் நல்கு நம்பெரு மானூர் வந்தெய்த
முன்னெதிர் சென்றே மூவுல குஞ்சென் றடையுந்தாள்
சென்னியில் வைத்தென் சொல்லுவ ரென்றே தெளியாதார். (கூஎக)

எம்பெரு மானீ ரென்னுயிர் காவா திடர்செய்யுங்
கொம்பனை யாள்பா லென்கொடி வந்தீர் குறையென்னத்
தம்பெரு மானுந் தாழ்குழல் செற்றந் தணிவித்தே
நம்பி யினிப்போய் மற்றவ டன்பா னணுகென்ன. (கூஎஉ)

நந்தி பிரானூர் வந்தருள் செய்ய நலமெய்துஞ்
சிந்தையு ளார்வங் கூர்களி யெய்தித் திகழ்கின்னூர்
பந்தமும் வீடு நீரருள் செய்யும் படிசெய்தீ
ரெந்தை பிரானே யென்னினி யென்பா லிடரென்னூர். (கூஎகூ)

என்றடி வீழ நண்பர்த மன்புக் கெளிவந்தார்
சென்றணை நீயச் சேயிழை பாலென் றருள்செய்து
வென்றுயர் சேமேல் வீதி விடங்கப் பெருமாடம்
பொன்றிகழ் வாயிற் கோயில் புகுந்தார் புவிவாழ. (கூஎச)

மே வு று.

தம்பிரா னூர்பின் சென்று தாழ்ந்தெழுந் தருளான் மீள்வா
ரெம்பிரான் வல்ல வாறென் றெய்திய மகிழ்ச்சி யோடும்
வம்பலர் குழலார் செம்பொன் மாளிகை வாயி லேகி
நம்பியா ரூரர் காத னயர்தெழுந் தருளும் போது. (கூஎஙி)

முன்றுயி லுணர்ந்து சூழ்ந்த பரிசன மருங்கு மொய்ப்ப
பின்றிகழ் பொலம்பூ மாரி விண்ணவர் பொழிந்து வாழ்த்த
மன்றல்செய் மதுர சீத சீகரங் கொண்டு மந்தத்
தென்றலு மெதிர்கொண் டெய்துஞ் சேவக முன்பு காட்ட. (கூஎசு)

மாலைதண் கலவைச் சேறு மான்மதச் சாந்து பொங்குங்
கோலநற் பங்கர்ப் பூரங் குங்கும முதலா யுள்ள
சாலுமெய்க் கலன்கள் கூடச் சாத்தும்பூ ணுடை வர்க்கம்
பாலன பிறவு மேந்தும் பரிசன முன்பு செல்ல. (கூஎஎ)

இவ்வகை யிவர்வந் தெய்த வெய்திய விருப்பி னோடு
மைவளர் நெடுங்கண் ணுரு மாளிகை யடைய மன்னுஞ்
செய்வினை யலங்கா ரத்துச் சிறப்பணி பலவுஞ் செய்து
கெய்வளர் விளக்குத் தூப நிறைகுட நிரைத்துப் பின்னும். (கூஎஅ)

பூமலி நறும்பொற் றூபம் புனைமணிக் கோவை நாற்றிக்
காமர்பொற் சுண்ணம் வீசிக் கமழ்நறுஞ் சாந்து நீவித்
தூமலர் வீதி சூழ்ந்த தோகையர் வாழ்த்தத் தாமு
மாமணி வாயின் முன்பு வந்தெதி ரேற்று நின்றார். (கூஎக)

வண்டிலாங் குழலார் முன்பு வன்றொண்டர் வந்து கூடக்
கண்டபோ துள்ளங் காதல் வெள்ளத்தின் கரைகா ணுறாது
கொண்டகா ணச்சங் கூர வணங்கவக் குரிசி லாருந்
தண்டளிர்ச் செங்கை பற்றிக் கொண்டுமா ளிகையுட் சார்ந்தார். (கூஅ0)

இருவருந் தம்பி ரானார் தாயிடை யாடிச் செய்த
திருவருட் கருணை வெள்ளத் திறத்தினைப் போற்றிச் சிந்தை
மருவிய வின்ப வெள்ளத் தமுழ்கிய புணர்ச்சி வாய்ப்ப
வொருவரு ளொருவர் மேவு நிலைமையி லுயிரொன் றானார். (கூஅக)

ஆரணக் கமலக் கோயின் மேவிப்புற் றிடங்கொண் டாண்ட
நீரணி வேணி யாரை நிரந்தரம் பணிந்து போற்றிப்
பாரணி விளக்குஞ் செஞ்சொற் பதிகமா லகரஞ் சாத்தித்
தாரணி மணிப்பூண் மார்பர் தாமகிழ்ந் திருந்த காலில். (கூ அஉ)

நம்பியா ரூரர் நெஞ்சி னகிக்கமொன் றிரிந்து நின்று
தம்பிரா னுரைத்த தூது தையல்பால் விட்டா னென்னு
மிம்பரின் மிக்க வார்த்தை யேயர்கோ னுரத்தாங் கேட்டு
வெம்பிய ரதிச யித்தார் வெருவினர் விளம்ப லுற்றார். (கூஅங)

நாயனே யடியா னேவுங் காரிய நன்று சால
வேயுமென் றிதனைச் செய்வான் றொண்டனு மென்னே பாவம்
பேயனேன் பொறுக்க வொண்ணாப் பிழையினைச் செவியாற் கேட்ப
தாயின பின்னு மாயா திருந்ததென் னுயி யென்பார். (கூஅச)

காரிகை தன்பாற் செல்லுங் காதலா லொருவ னேவப்
பாரிடை நடந்து செய்ய பாததா மரைக ணோவத்
தேரணி வீதி யூடு செல்வது வருவ தாகி
யோரிர வெல்லாம் தூதுக் குழல்வரா மொருவ சென்று. (கூஅடு)

நம்பர்த மடியா ராற்ற ராகியே நண்ணி னுரே
லும்பரார் கோனு மாலு மயனுமே ருணர வொண்ணை
வெம்பிரா னிசைந்தா லேவப் பெறுவதே யிதனுக் குள்ளங்
கம்பியா தவனே யான்முன் காணுகா ளென்கா ளென்று. (கூஅசு)

அரிவை காரணத்தி னுலே யாளுடைப் பரமர் தம்மை
யிரவினிற் றூது போக வேவியங் கிருத்தான் றன்னை
வரவெதிர் காண்பே னுகில் வருவதென் னுங்கொ லென்று
விரவிய செற்றம் பற்றி விள்ளுமுள் ளத்த ராகி. (கூஅஎ)

ஈறிலாப் புகழி னேங்கு மேயர்கோ னுர்தா மெண்ணப்
பேறிது பெற்றூர் கேட்டுப் பிழையுடன் படுவா ராகி
வேறினி யிதற்குத் தீர்வு வேண்டுவார் விரிபூங் கொன்றை
யாறணி சடையி னுருக் கதனைவிண் ணப்பஞ் செய்து. (கூஅஅ)

நாடொறும் பணிந்து போற்ற நாதரு மதனை நோக்கி
நீடிய தொண்டர் தம்மு ளிருவரு மேவு நீர்மை
கூடுதல் புரிவா ரேயர் குரிசிலார் தம்பான் மேனி
வாடுறு சூலை தன்னை யருளினுர் வருந்து மாற்றுல். (கூஅகூ)

ஏதமில் பெருமைச் செய்கை யேயர்தம் பெருமான் பக்க
லாதியா ரேவுஞ் சூலை யனல்செய்வேல் குடைவ தென்ன
வேதனை மேன்மேற் செய்ய விகவதற் குடைந்து வீழ்ந்து
பூதநா யகர்தம் பொற்றுள் பற்றியே போற்று கின்றூர். (கூகூ0)

சிந்தையால் வாக்கா லன்பர் திருத்தடி போற்றி செய்ய
வெந்தமை யாளு மேயர் காவலர் தம்பா லீசர்
வந்துனை வருத்துஞ் சூலை வன்றெருண்டன் றீர்க்கி லன்றி
முந்துற வொழியா தென்று மொழிந்தருள் செய்யக் கேட்டு. (கூகூக)

எம்பிரா னெந்தை தந்தை தந்தையெங் கூட்ட மெல்லாந்
தம்பிரா னீரே யென்று வழிவழி சார்ந்து வாழு
மிம்பரின் மிக்க வாழ்க்கை யென்னினின் றீருஞ் சூலை
வம்பென வாண்டு கொண்டா னுருவனு தீர்ப்பான் வந்து. (கூகூஉ)

மற்றவன் றீர்க்கிற் றீரா தொழிந்தெனை வருத்த னன்ருற்
பெற்றமே லுயர்த்தீர் செய்யும் பெருமையை யறிந்தார் யாரே
யுற்றவன் றெருண்டற் கேயா முறுதியே செய்வீ ரென்னக்
கற்றைவார் சடையார் தாமு மவர்முன்பு கரந்தா ரன்றே. (கூகூங)

வன்றெருண்டர் தம்பாற் சென்று வள்ளலா ருளிச் செய்வா
ரின்றுநம் மேவ லாலே யேயர்கோ னுற்ற சூலை
சென்றுநீ தீர்ப்பா யாகென் றருள்செயச் சிந்தை யோடு
நன்றுமெய்ம் மகிழ்ந்து போற்றி வணங்கினுர் நாவ லூரர். (கூகூச)

அண்ணலா ருளிச்செய்து நீங்கவா னூரர் தாமும்
விண்ணவர் தம்பி ரானு ரேவலால் விரைந்து செல்வார்
கண்ணிய மனத்தின் மேவுங் காதலாற் கலிக்கா மர்க்குத்
திண்ணிய சூலை தீர்க்க வருந்திறஞ்செப்பி விட்டார். (கூகஙி)

நாதர்தம் மருளா னண்ணுஞ் சூலையு மவர்பாற் கேட்ட
கேதமும் வருத்த மீண்டெம் வன்றொண்டர் வரவு கேட்டுத்
தூதனு மெம்பி ரானே யேவினன் சூலை தீர்க்கு
மேதமிங் கெய்த வெய்தில் யான்செய்வ தென்னு மென்பார். (சுகூசு)

மற்றவ னிக்கு வந்து தீர்ப்பதன் முன்னுன் மாயப்
பற்றினின் றென்னே நீங்காப் பாதகச் சூலை தன்னை
யுற்றவிவ் வயிற்றி னோடுங் கிழிப்பனென் றுடைவா டன்னுற்
செற்றிட வுயிரி னோடுஞ் சூலையுத் தீர்ந்த தன்றே. (சுகூள)

கருதரும் பெருமை நீள்மைக் கலிக்காமர் தேவி யாரும்
பொருவருங் கணவ ரோடு போவது புரியுங் காலை
மருவவிங் கணைந்தார் நம்பி யென்றுமுன் வந்தார் கூற
வொருவரு மழுதல் செய்யா தொழிகவென் றுரைத்துப் பின்னர். (சுகூஅ)

கணவர்தஞ் செய்கை தன்னைக் கரந்துகா வலரை நம்பி
யணைவதும் பொழுது சால வலங்கரித் தெதிர்போ மென்னப்
புணர்நிலை வாயிற் றீபம் பூரண கும்பம் வைத்துத்
துணர்மலர் மாலை தூக்கித் தொழுதெதிர் கொள்ளச் சென்றார். (சுகூக)

செம்மைசேர் சிந்தை மாந்தர் சென்றெதிர் கொண்டு போற்ற
நம்மையா ளுடைய நம்பி நகைமுக மவர்க்கு நல்கி
மெய்ம்மையாம் விருப்பி னோடு மேவியுட் புகுந்து மிக்க
மொய்ம்மலர்த் தவிசின் மீது முகமலர்ந் திருந்த போது. (சுஙு)

பான்மையர்ச் சனைக ளெல்லாம் பண்பினில் வழாமை யேய்ந்த
ஞான்மறை தொடர்ந்த வாய்மை நம்பியா ரூரர் கொண்டிங்
கியான்மிக வருந்து கின்றே னேயர்கோ னுர்தா முற்ற
வூனவெஞ் சூலை நீக்கி யுடனிருப் பதனுக் கென்றார். (சுஙக)

மாதர்த மேவ லாலே மனைத்தொழின் மாக்கண் மற்றிங்
கேதமொன் றில்லை யுள்ளே பள்ளிகொள் கின்ற தென்னத்
தீதணை வில்லை யேனு மென்மனந் தெருளா தின்ன
மாதலா லவரைக் காண வேண்டுமென் றருளிச் செய்தார். (சுஙஉ)

வன்றொண்டர் பின்னுங் கூற மற்றவர் தம்மைக் காட்டத்
துன்றிய குருதி சோரத் தொடர்குடர் சொரிந்துள் ளாவி
பொன்றியே கிடந்தார் தம்மைக் கண்டபின் புகுந்த வாறு
நன்றென மொழிந்து நானு நண்ணுவே னிவர்முன் பென்பார். (சுஙங)

கோளுறு மனத்த ராகிக் குற்றுடை வாளைப் பற்ற
வாளுடைத் தம்பி ரானு மருளினு லவரு மூய்ந்து
கேளிரே யாகிக் கெட்டே னெனவிரைந் தெழுந்து கையில்
வாளினைப் பிடித்துக் கொள்ள வன்றொண்டர் வணங்கி வீழ்ந்தார். (சுஙச)

மற்றவர் வணங்கி வீழ வாளினை மாற்றி யேயர்
கொற்றவ னுரு நம்பி குரைகழல் பணிந்து வீழ்ந்தா
ரற்றைநா ணிகழ்ந்த வித்த வதிசயங் கண்டு வானோர்
பொற்றட மலரின் மாரி பொழிந்தனர் புவனம் போற்ற. (சுஙஞ)

இருவரு மெழுந்து புல்லி யிடைவிடா நண்பி னுலே
பொருவரு மகிழ்ச்சி பொங்கத் திருப்புன் கூர்ப் புனிதர்பாத
மருவினர் போற்றி நின்று வன்றொண்டர் தம்பிரானு
ரருளினே நினைந்தே யந்த ணாளனென் றெடுத்துப் பாடி. (சஅசு)

சிலர்பகல் கழிந்த பின்பு திருமூனைப் பாடி நாடர்
மலர்புகழ்த் திருவா ரூரின் மகிழ்ந்துடன் வந்த வேயர்
குலமுதற் றலைவ னருங் கூடவே குளிர்பூங் கோயி
னிலவினர் தம்மைக் கும்பிட் டிறைந்தனர் நிறைந்த வன்பால். (சஅஎ)

அங்கினி தமர்ந்து நம்பி யருளினன் மீண்டு போந்து
பொங்கிய திருவின் மிக்க தம்பதி புகுந்து பொற்பிற்
றங்குநா ளேயர் கோனர் தமக்கேற்ற தொண்டு செய்தே
செங்கண்மால் விடையார் பாதஞ் சேர்ந்தனர் சிறப்பி னெடும். (சஅஅ)

கள்ளிரு ணைய ஞரைத் தூதுவிட் டவர்க்கே நண்பாம்
வள்ளலா ரேயர் கோனர் மலரடி வணங்கிப் புக்கே
னுள்ளுணர் வான ஞான மூதலிய வொருநான் குண்மை
தெள்ளுநீர் தயிழாற் கூறுந் திருமூலர் பெருமை செப்ப. (சஅக)

ஏயர்கோன்கலிக்காமநாயனர்புராண முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் - கூ,இசுஅ.

திருமூலநாயனர்புராணம்.

அந்தியிளம் பிறைக்கண்ணி யண்ணலார் கயிலையினின்
மூன்தைதிகழ் கோயிலுக்கு முதற்பெருநா யகமாகி
யிந்திரன்மா லயன்முதலா மிமையவர்க்கு நெறியருளு
நந்திதிரு வருள்பெற்ற நான்மறையோ னெளிலொருவர். (க)

மற்றவர்தா மணிமாதி வருஞ்சித்தி பெற்றுடையார்
கொற்றவனர் திருக்கயிலை மலைன்றுங் குறுமுனிபா
லுற்றதொரு கேண்மையினு லுடன்சிலநா ளுறைவதற்கு
நற்றமிழின் பொதியமலை நண்ணுதற்கு வழிக்கொண்டார். (உ)

மன்னுதிருக் கேதாரம் வழிபட்டு மாமுனிவர்
பன்னுபுகழ்ப் பசுபதிநே பாளத்தைப் பணிந்தேத்தித்
துன்னுசடைச் சங்கரனு நேற்றனு நீர்க்கங்கை
யன்னமலி யகன்றுறைநீ ரருங்கரையின் மருங்கணைந்தார். (ஙு)

கங்கைநீர்த் துறையாடிக் கருத்துறைநீள் கடலேற்று
மங்கணர்தா மகிழ்ந்தருளு மவிமுத்தம் பணிந்தேத்தி
மங்குல்வளர் வரைவிந்த மன்னுபருப் பதமிறைஞ்சித்
திங்களணி சடையர்திருக் காளத்தி மலைசேர்ந்தார். (ச)

நீடுதிருக் காளத்தி நிலவுதா ணுவைவணங்கி
யாடுதிரு வரங்கான வாலவனந் தொழுதேத்தித்
தேடுமிரு வர்க்கரியார் திருவேகாம் பரம்பணிந்து
மாடுயர்மா மதிற்காஞ்சி வளகரின் வைகினர். (ஞ)

நற்பதியங் கமர்யோக முனிவர்களே நயந்துபோய்க்
கற்புரிசைத் திருவதிகை கலந்திறைஞ்சிக் கறைக்கண்ட
ரற்புதக்கூத் தாடுகின்ற வம்பலஞ்சூழ் திருவீதிப்
பொற்பதியாம் பெரும்பற்றப் புலியூரில் வந்தணைந்தார். (சு)

எவ்வுலகு முய்யவெடுத் தருளியசே வடியாரைச்
செவ்வியவன் புறவணங்கிச் சிந்தைகளி வரத்திளைத்து
வவ்வியமெய் யுணர்வின்கண் வருமானந் தக்கூத்தை
யவ்வியல்பிற் கும்பிட்டங் காராமை யமர்ந்திருந்தார். (எ)

தடநிலமா ளிகைப்புலியூர் தன்னிலுறைந் திறைஞ்சிப்போ
யடல்விடையின் மேல்வருவா ரமுதுசெய வஞ்சாதே
விடமளித்த தெனக்கருதி மேதினிக்கு வானிறைத்தே
கடல்வயிறு நிறையாத காவிரியின் கரையணைந்தார். (அ)

காவிரிநீர்ப் பெருந்தீர்த்தங் கலந்தாடிக் கடந்தேறி
யாவினருங் கன்றுறையு மாவடுதண் டுறையணைந்து
சேவில்வரும் பசுபதியார் செழுங்கோயில் வலம்வந்து
மேவுபெருங் காதலினற் பணிந்தங்கு விருப்புறுவார். (கூ)

அந்நிலைமைத் தானத்தை யகலாத தொருகருத்து
முன்னியெழுங் குறிப்பினுன் மூளுமா தரவெய்தப்
பின்னுமகன் றேகுவார் பேணுவருங் கோக்குலங்கள்
பொன்னிருந்திக் கரைப்புறவிற் புலம்புவன வெதிர்கண்டார். (கo)

அந்தணர்தஞ் சாத்தனூ ராமேய்ப்பார் குடித்தோன்றி
முந்தைமுறை நிரைமேய்ப்பான் மூலனெனும் பெயருடையோன்
வந்துதனி மேய்க்கின்றுன் வினைமாள வாழ்நாளே
வெந்தொழில்வன் கூற்றுண்ண வீடிநிலத் திடைவீழ்ந்தான். (கக)

மற்றவன்ற னுடம்பினையக் கோக்குலங்கள் வந்தணைந்து
சுற்றிமிகக் கதறுவன சுழல்வனமோப் பனவாக
நற்றவயோ கிகள்காணு நம்பரரு ளாலேயா
வற்றதுய ரிவைநீங்க வொழிப்பனென வுணர்கின்றூர். (கஉ)

இவனுயிர்பெற் றெழிலன்றி யாக்களிடர் நீங்காவென்
றவனுடலிற் றம்முயிரை யடைவிக்க வருள்புரியுக்
தவமுனிவர் தம்முடம்புக் காண்செய்து தாமுயன்ற
பவனவழி யவனுடலிற் றம்முயிரைப் பாய்த்தினூர். (கங)

பாய்த்தியபின் நிருமூல ராயெழலும் பசுக்களெலா
நாத்தழும்ப நக்கிமோந் தணைந்துகனைப் பொடுநயந்து
வாய்த்தெழுந்த களிப்பினுல் வாலெடுத்துத் துள்ளிப்பி
னீத்ததய ரினவாகி நிரந்துபோய் மேய்ந்தனவால். (கச)

ஆவினிரை மடிழ்வுறக்கண் டளிகூர்ந்த வருளினராய்
மேவியவை மேய்விடத்துப் பின்சென்று மேய்ந்தவைதாங்
காவிரிமுன் றுறைத்தண்ணீர் கலந்துண்டு கரையேறப்
பூவிரிதண் புறவினிழ லினிதாகப் புறங்காத்தார். (கஙி)

வெய்யசுடர்க் கதிரவனு மேம்பாலை மலையணையச்
சைவநெறி மெய்யுணர்ந்தோ ராளினைங்க டாமேமூன்
பையரடப் பனகன்றை நினைந்துபடர் வளவாகி
வையகிழ் சாத்தனூர் வந்தெய்தப் பின்போனார். (கசு)

போனவர்தாம் பசுக்களெலா மனைதோறும் புகுகின்றூர்
மானமுடை மனையாளும் வைகியபின் முழுத்தாரென்
ரூனபயத் துடன்சென்றே யவர்நின்ற வழிக்கண்டா
ளீனமிவர்க் கடுத்ததென மெய்தீண்ட வதற்கிசையார். (கஎ)

அங்கவளு மக்களுட னருஞ்சுற்ற மில்லாதா
டங்கிவெரு வுறமயங்கி யென்செய்தீ ரெனத்தளர
வீங்குனக்கென் னுடனணைவொன் றில்லையென வெதிர்மறுத்துப்
பொங்குதவத் தோராங்கோர் பொதுமடத்தி னுட்புக்கார். (கஅ)

இல்லாள னியல்புவே ரூனமைகண் டிரவெல்லாஞ்
சொல்லாடா திருந்தவர்பா லணையாது துயிலாதாள்
பல்லார்முன் பிற்றைநா ளிவர்க்கடுத்த பரிசுரைப்ப
நல்லார்க ளவர்திறத்து நாடியே நயந்துரைப்பார். (கக)

பித்துற்ற மயலன்று பிறிதொருசார் புளதன்று
சித்தவிகற் பங்களிந்து தெளிந்தசிவ யோகத்தில்
வைத்தகருத் தினராகி வரம்பில்பெரு மையிலிருந்தா
ரித்தகைமை யளப்பரிதால் யாராலு மெனவுரைப்பார். (உ0)

பற்றறுத்த வுபதேசப் பரமபதம் பெற்றூர்போன்
மூற்றுமுணர்ந் தனராகு முன்னேநில் மையிலுயங்கள்
சுற்றவியல் பினுக்கெய்தா ரென்றுரைப்பத் துயரெய்தி
மற்றவளு மையலுற மருங்குள்ளார் கொண்டகன்றூர். (உக)

இந்தநில மையிலிருந்தா ரெழுந்திருந்தங் காணிரைகள்
வந்தநெறி யேசென்று வைத்தகாப் பினிலுய்த்த
மூன்தையுடற் பொறைகாணூர் முழுதுணர்ந்த மெய்ஞ்ஞானச்
சிந்தையினில் வந்தசெய லாராய்ந்து தெளிகின்றூர். (உஉ)

தண்ணிலவார் சடையார்தாந் தந்தவா கமப்பொருளே
மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினுற் றமிழ்வருப்பக்
கண்ணியவத் திருவருளா லவ்வுடலைக் கரப்பிக்க
வெண்ணிறைந்த வுணர்வுடையா ரீசரரு ளெனவுணர்ந்தார். (உங)

சுற்றியவக் குலத்துள்ளார் தொடர்ந்தார்க்குத் தொடர்வின்மை
முற்றவே மொழிந்தருள வவர்மீண்டு போனதற்பின்
பெற்றமீ துயர்த்தவர்தாள் சிந்தித்துப் பெருகார்வச்
செற்றமுதல் கடிந்தவர்தா மாவடுதண் டுறைசேர்ந்தார். (உச)

ஆவடுதண் டுறையணைந்தய் கரும்பொருளே யுறவணங்கி
மேவுவார் புறக்குடபான் மிக்குயர்ந்த வரசின்கீழ்த்
தேவிருக்கை யமர்ந்தருளிச் சிவயோகக் தலைநின்று
பூவலரு மிதயத்துப் பொருளோடும் புணர்ந்திருந்தார். (உஞ)

ஊனுடம்பிற் பிறவிவிடக் நீர்த்துலகத் தோருய்ய
ஞானமுத லொன்கு மலர் கற்றிருமந் திரமாலே
பான்மைமுறை யோராண்டுக் கொன்றுகப் பரம்பொருளா
மேனவெயி றணிந்தாரை யொன்றவன்ரு னெனவெடுத்து. (உசு)

மூன்னியவப் பொருண்மாலைத் தமிழ்மூவா யிரஞ்சாத்தி
மன்னியமூ வாயிரத்தாண் டிப்புவிமேன் மகிழ்ந்திருந்து
சென்னிமதி யணிந்தார்தந் திருவருளாற் நிருக்கயிலே
தன்னிலணைந் தொருகாலும் பிரியாமைத் தாளடைந்தார். (உஎ)

நலஞ்சிறந்த ஞானயோ கக்கிரியா சரியையெலா
மலர்ந்தமொழித் திருமூல தேவர்மலர்க் கழல்வணங்கி
யலர்ந்தபுகழ்த் திருவாரூ ரமணர்கலக் கங்கண்ட
தலங்குலவு விறற்றண்டி யடிகடிறஞ் சாற்றுவாம். (உஅ)

திருமூலநாயனர்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கூ,கூசு.

தண்டியடிகணயனர்புராணம்.

தண்டி யடிக டிருவாரூர்ப் பிறக்கும் பெருமைத் தவமுடையா
ரண்ட வாணர் மறைபாட வாடுஞ் செம்பொற் கழன்மனத்துக்
கொண்ட கருத்தி னகனேக்குங் குறிப்பே யன்றிப் புறநோக்குங்
கண்ட வுணர்வு துறந்தார்போற் பிறந்த பொழுதே கண்காணர். (க)

காணுங் கண்ணுங் காண்பதுமெய்த் தொண்டே யான கருத்துடையார்
பேணுஞ் செல்வத் திருவாரூர்ப் பெருமா னடிக டிருவடிக்கே
பூணு மன்பி னுற்பரவிப் போற்று நிலைமை புரிந்தமரர்
சேணு மறிய வரியதிருத் தொண்டிற் செறியச் சிறந்துள்ளார். (உ)

பூவார் சடிலத் திருமுடியார் மகிழ்ந்த தெய்வப் பூங்கோயிற்
றேவா சிரியன் முன்னிறைஞ்சி வலஞ்செய் வாராய்ச் செம்மைபுரி
நாவா லின்ப முறுங்காத னமச்சி வாய நற்பதமே
யோவா வன்பி லெடுத்தோதி யொருநாள் போல வருநாளில். (கூ)

செங்கண் விடையார் திருக்கோயிற் குடபாற் நீர்த்தக் குளத்தின்பாங்
கெங்கு மமணர் பாழிகளா யிடத்தாற் குறைபா டெய்துதலா
லங்கக் நிலைமை தனேத்தண்டி யடிக ளறிந்தே யாதரவா
லிங்கு நானிக் குளம்பெருகக் கல்ல வேண்டு மென்றெழுந்தார். (ச)

குழிவா யதனிற் குறிநட்டுக் கட்டுங் கயிறு குளக்கரையி
னிழிவாய்ப் புறத்து நடுதறியோ டிசையக் கட்டி யிடைதடவி
வழியால் வந்து மண்கல்லி யெடுத்து மறித்துந் தடவிப்போ
யொழியா முயற்சி யாலுய்த்தா ரோது மெழுத்தஞ் சுடனுய்த்தார். (ஙி)

நண்ணி நாளு நற்றொண்டர் நயந்த விருப்பான் மிகப்பெருகி
யண்ண றீர்த்தக் குளங்கல்லக் கண்ட வமணர் பொருளாகி
யெண்ணித் தண்டி யடிகள்பா லெய்தி முன்னின் றியம்புவார்
மண்ணைக் கல்லிற் பிராணிபமும் வருத்த வேண்டா வென்றுரைத்தார். (சு)

மாசு சேர்ந்த முடையுடலார் மாற்றங் கேட்டு மறுமாற்றந்
தேசு பெருகுந் திருத்தொண்டர் செப்பு கின்றார் திருவிலிகாள்
பூசு நீறு சாந்தமெனப் புனைந்த பிரானுக் கானபணி
யாசி லாநல் லறமாவ தறிய வருமோ வுமக்கென்றார். (எ)

அந்த மில்லா வறிவுடையா ருரைப்பக் கேட்ட வறிவில்லார்
சிந்தித் திந்த வறங்கேளாய் செவியு மிழந்தா யோவென்ன
மந்த வுணர்வும் விழிக்குருடு மெனாச் செவியு மற்றுமக்கே
இந்த வுலகத் துள்ளனவென் றன்பர் பின்னு மியம்புவார். (அ)

வில்லா லெயின்மூன் றெரித்தபிரான் விரையார் கமலச் சேவடிக
ளல்லால் வேறு காணேன்யா னதுநீ றறிதற் காரென்பார்
நில்லா நிலைபே ருணர்வின்றி நங்கண் குருடா யென்கணுல
கெல்லாங் காண யான்கண்டா லென்செய் வீரென் றெடுத்துரைத்தார். (கூ)

அருக ரதுகேட் டின்றெய்வத் தருளாற் கண்ணீ பெற்றுயேற்
பெருகு மிவ்வு ரினிஞங்கள் பின்னை யிருக்கி லோமென்று
கருகு முருட்டுக் கைகளாற் கொட்டை வாங்கிக் கருத்தின்வழி
தருகைக் கயிறுந் தறியுமுடன் பறித்தார் தங்க டலைபறித்தார். (கo)

வெய்ய தொழிலார் செய்கையின்மேல் வெகுண்ட தண்டி யடிகடா
மைகொள் கண்டர் பூங்கோயின் மணிவா யிலின்முன் வந்திறைஞ்சி
யைய னேயின் றமணர்க டா மென்னை யகமா னஞ்செய்ய
நைவ தானே னிதுதீர கல்கு மடியேற் கெனவீழ்ந்தார். (கக)

பழுது தீர்ப்பார் திருத்தொண்டர் பரவி விண்ணப் பஞ்செய்து
தொழுது போந்து மடம்புகுந்து தாய பணிசெய் யப்பெரு
தழுது கங்கு லவர்துயிலக் கனவி லகில லோகங்கண்
முழுது மளித்த முதல்வனார் முன்னின் றருளிச் செய்கின்றார். (கஉ)

நெஞ்சின் மருவுங் கவலையினை யொழிநீ கின்கண் விழித்தந்த
வஞ்ச வமணர் தங்கண்கண் மறையு மாறு காண்கின்றா
யஞ்ச வேண்டா வென்றருளி யவர்பா னீங்கி யவ்வீரவே
துஞ்சு மிருளி னரசன்பாற் சேன்றிக் கனவி லருள்புரிவார். (கஉ)

தண்டி நமக்குக் குளங்கல்லக் கண்ட வமணர் தரியாராய்
மிண்டு செய்து பணிவிலக்க வெகுண்டா னவன்பா னீமேவிக்
கொண்ட குறிப்பா லவன்கருத்தை முடிப்பா யென்று கொளவருளித்
தொண்ட ரிடுக்க ணீங்கவெழுந் தருளி னூரத் தொழிலுவப்பார். (கச)

வேந்த னதுகண் டப்பொழுதே விழித்து மெய்யின் மயிர்முகிழ்ப்பப்
பூந்தண் கொன்றை வேய்ந்தவரைப் போற்றிப் புலரத் தொண்டர்பாற்
சார்ந்து புகுந்த படிவிளம்பத் தம்பி ரானு ருணினைந்தே
யேந்தன் மன்னன் கேட்பலிது புகுந்த வண்ண மியம்புவார். (கஙி)

மன்ன கேள்யான் மழவிடையார் மகிழுந் தீர்த்தக் குளங்கல்லத்
தன்னு மமண ரங்கணைந்தீ தறமன் றென்று பலசொல்லிப்
பின்னுங் கயிறு தடவுதற்கியான் பிணித்த தறிக ளவைவாங்கி
யென்னை வலிசெய் தியான்கல்லுங் கொட்டைப் பறித்தா ரென்றியம்பி. (கசு)

அந்த ணுன வுனக்கறிவு மில்லே யென்ரு நியானதனுக்
கெந்தம் பெருமா னருளால்யான் விழிக்கி லென்செய் வீரென்ன
விந்த வூரி லிருக்கிலோ மென்றே யொட்டி ஞரிதுமேல்
வந்த வாறு கண்டிந்த வழக்கை முடிப்ப தெனமொழிந்தார். (கஎ)

அருகா தமமை யரசனுமங் கழைத்துக் கேட்க வதற்கிசைந்தார்
மருவுந் தொண்டர் முன்போக மன்னன் பின்போய் மலர்வாவி
யருகு நின்று விறற்றண்டி யடிக டம்மை முகநோக்கிப்
பெருகுந் தவத்தீர் கண்ணருளாற் பெறுமா காட்டு மெனப்பெரியோர். (கஅ)

எய்ந்த வடிமை சிவனுக்கியா னென்னி லின்றென் கண்பெற்று
வேந்த னெதிரே திருவாரூர் வீரவுஞ் சமணர் கண்ணிழப்பா
ராய்ந்த பொருளுஞ் சிவபதமே யாவ தென்றே யஞ்செழுத்தை
வாய்ந்த தொண்ட ரெடுத்தோதி மணிநீர் வாலி மூழ்கினர். (கக)

தொழுது புனன்மே லெழுந்தொண்டர் தூய மலர்க்கண் பெற்றெழுந்தார்
பொழுது தெரியா வகையிமையோர் பொழிந்தார் செழுந்தண் பூமாரி
யிழுதை யமணர் விழித்தேகண் ணிழந்து தடுமா றக்கண்டு
பழுது செய்த வமண்கெட்ட தென்று மன்னன் பகர்கின்ரூன். (உ0)

தண்டி யடிக டம்முடனே யொட்டிக் கெட்ட சமண்குண்ட
ரண்டர் போற்றுந் திருவாரூர் நின்று மகன்று போய்க்கழியக்
கண்ட வமணர் தமையெங்குங் காணு வண்ணந் துரக்கவென
மண்டி வயவர் சாடுதலுங் கண்கள் காணர் மனங்கலங்கி. (உக)

சூழ்மில் வீழுவார் நீலேதளர்வார் கோலு மில்லே யெனவுரைப்பார்
வழியி தென்று தூறடைவார் மாண்டோ மென்பார் மதிகெட்டீ
ரழியும் பொருளே வழிபட்டிங் கழிந்தோ மென்பா ரரசனுக்குப்
பழியி தாமோ வென்றுரைப்பார் பாய்க வீழ்ப்பார் பரிதலேயர். (உஉ)

பீலி தடவிக் காணுது பெயர்வார் நின்று பேதுறுவார்
காலி ஞெடி கைமுறியக் கன்மே லிடறி வீழ்வார்கள்
சால நெருங்கி யெதிரெதிரே தம்மிற் முமே முட்டிடுவார்
மாலு மனமு மழிந்தோடி வழிக ளறியார் மயங்குவார். (உங)

அன்ன வண்ண மாரூரி லமணர் கலக்கங் கண்டவர்தாஞ்
சொன்ன வண்ண மேயவரை யோடத் தொடர்ந்து துரக்ததற்பின்
பன்னும் பாழி பள்ளிகளும் பறித்துக் குளஞ்சூழ் கரைபடுத்து
மன்ன னவனு மனமகிழ்ந்து வந்து தொண்ட ரடிபணிந்தான். (உச)

மன்னன் வணங்கிப் போயினபின் மாலு மயனு மறியாத
பொன்னங் கழல்கள் போற்றிசைத்துப் புரிந்த பணியுங் குறைமுடித்தே
யுன்னு மனத்தா லஞ்செழுத்து மோதி வழுவா தொழுகியே
யின்னுஞ் சடையா ரடிநீழன் மிக்க சிறப்பின் மேலினர். (உஙி)

கண்ணின் மணிக ளெவையின்றிக் கயிறு பிடித்துக் குளந்தொட்ட
வெண்ணில் பெருமைத் திருத்தொண்டர் பாத மிறைஞ்சி யிடர்நீங்கி
விண்ணில் வாழ்வார் தாம்வேண்டப் புரங்கள் வெகுண்டார் வேற்காட்டே
ருண்ணி லாவும் புகழ்த்தொண்டர் மூர்க்கர் செய்கை யுரைக்கின்ரும். (உசு)

தண்டியடிகணயனர்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கூ,ஙூஉஉ.

மூர்க்க நாயனார் புராணம்.

மன்னிப் பெருகும் பெருந்தொண்டை வளநா டதனில் வயல்பரப்பு
நன்னித் திலவெண் டிரைப்பாலி நதியின் வடபா னலங்கொள்பதி
யன்னப் பெடைகள் புடைவாவி யலர்புக் காட வரங்கினிடை
மின்னுக் கொடிக ளிற்கொடிகள் விழுவிற் காடி வேற்காடி. (க)

செம்பொற் புரிசைத் திருவேற்கா டமர்ந்த செய்ய சடைக்கற்றை
நம்பர்க் கும்பர்க் கமுதளித்து நஞ்சை யமுது செய்தவருக்
கிம்பர்த் தலத்தில் வழியடிமை யென்றுங் குன்று வியல்பில்வருந்
தம்பற் றுடைய நிலைவேளாண் குலத்திற் றலைமை சார்ந்துள்ளார். (உ)

கோதின் மரபிற் பிறந்துவளர்ந் தறிவு கொண்ட நாட்டொடங்கி
யாதி முதல்வர் திருநீற்றி னடைவே பொருளென் றறிந்தாளர்
காத லடியார்க் கமுதாக்கி யமுது செய்யக் கண்டிண்ணு
நீதி முறைமை வழுவாத நியதி பூண்ட நிலைமையார். (ங)

தூய வடிசி னெய்கன்னல் சுவையின் கறிக ளவையமைத்து
மேய வடியார் தமைப்போற்றி விருப்பா லமுது செய்வித்தே
யாய பொருளு மவர்வேண்டும் படியா லுதவி யன்புபிக
வேயு மாறு நாடோறு மினைய பணிசெய் தின்புற்றார். (ச)

இன்ன செயலி னெழுகுநா ளடியார் மிகவு மெழுந்தருள
முன்ன முடைமை யானபொருண் முழுது மாள வடிமையுடன்
மன்னு காணி யானநில மற்று முள்ள திறம்விற்றே
யன்ன மளித்து மேன்மேலு மாரா மன்த்தா ராயினார். (ஞ)

அங்க ணம்பூர் தமக்கொருபற் றடியார் தங்கட் கமுதாக்க
வெங்குங் காணு வகைதோன்ற விலம்பா டெய்தி யிருக்கையர்வார்
தங்கும் வகையாற் முமுன்பு கற்ற தன்மை நற்சூதாற்
பொங்குபொருளாக் கவுமங்குப் பொருவா ரின்மை யினிற்போவார். (ட)

பெற்ற மேறிப் பலிக்குவரும் பெருமா னமருந் தானங்க
ளுற்ற வன்பாற் சென்றெய்தி யுருகு முள்ளத் தொடும்பணிந்து
கற்ற சூதா னியதியாங் கடனு முடித்தே கருதாரூர்
செற்ற சிலையார் திருக்குடந்தை யடைந்தார் வந்து சிலநாளில். (எ)

வேறு.

இருளாரு மணிகண்ட டியார்க்கின் னமுதளிக்கப்
பொருளாய மெய்துதற்குப் புகழ்க்குடந்தை யம்பலத்தே
யுருளாயச் சூதாடி யுறுபொருள்வென் றனகீம்ப
ரருளாக வேகொண்டங் கமுதுசெய்வித் தின்புறுவார். (அ)

முற்சூது தாற்தோற்று முதற்பணைய மவர்கொள்ளப்
பிற்சூது பலமுறையும் வென்றுபெரும் பொருளாக்கிச்
சொற்சூதான் மறுத்தாரைச் சுரிகையுரு வீக்குத்தி
நற்சூதர் மூர்க்கரெனும் பெயர்பெற்றார் காளிலத்தில். (கூ)

சூதினில்வென் றெய்துபொரு ளிசைத்ற நல்லுணர்வி
நீதகல வமுதாக்கு வார்கொள்ளத் தாந்தீண்டார்
காதலுட னடியார்க ளமுதுசெயக் கடைப்பந்தி
யேதமிலா வகைதாமு மமுதுசெய்தங் கிருக்குநாள். (கூ)

நாதன்ற னடியார்க்கு நல்லடிசி னூடோறு
மாதரவி னுலமுது செய்வித்தங் கருளாலே
யேதங்கள் போயகல வீவ்வுலகை வீட்டதபின்
பூதங்க ளிசைபாட வாடுவார் புரம்புக்கார். (கக)

வல்லார்க டமைவென்று சூதினுல் வந்தபொரு
ளல்லாரு நறைக்கண்ட ரடியவர்க டமக்காக்கு
நல்லார்நற் சூதரா மூர்க்கர்கழ னும்வணங்கிச்
சொல்லார்சீர்ச் சோமாசி மாறர்திறஞ் சொல்லுவாம். (கஉ)

மூர்க்கநாயனார்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கூ,சுகூச.

சோமாசிமாறநாயனார்புராணம்.

சூதம் பயிலும் பொழிலம்பரிற் றூய வாய்மை
வேதம் பயிலு மறையாளர் குலத்தின் மேலோ
ரேதம் புரியு மெயில்செற்றவர்க் கன்பர் வந்தாற்
பாதம் பணிந்தா ரமுதூட்டுநற் பண்பின் மிக்கார். (க)

யாழின் மொழியா டனிப்பாகரைப் போற்றும் யாக
மூழின் முறைமை வழுவாதுல கங்க ளான
வேழு முவப்பப் புரிந்தின்புறச் செய்த பேற்றுல்
வாழுந் திறமீசர் மலர்க்கழல் வாழ்த்த லெண்பார். (உ)

ஏத்தன் மையரா யினுமீசனுக் கன்ப ரென்ரு
லத்தன் மையர்தா நமையாள்பவ ரென்று கொள்வார்
சித்தந் தெளியச் சிவனஞ்செழுத் தோது வாய்மை
நித்தந் நியம மெனப்போற்று நெறியி னின்ரூர். (கூ)

சீருந் திருவும் பொலியுந்திரு வாரூ ரெய்தி
யாருந் திகழ்மார்பி னணுக்கவன் ரொண்டர்க் கன்பாற்
சாரும் பெருநண்பு சிறப்ப வடைந்து தங்கிப்
பாரும் விசும்பும் பணியும்பதம் பற்றி யுள்ளார். (ச)

துன்றும் புலனேர் துடனுறு தொகுத்த குற்றம்
வென்றிங் கிதுநன் னெறிசேரும் விளக்க மென்றே
வன்ரொண்டர் பாதந் தொழுதான சிறப்பு வாய்ப்ப
வென்றுந் நிலவுஞ் சிவலோகத்தி லின்ப முற்ரூர். (ரு)

தே வு.

பணையுந் தடமும் புடைசூழ மொற்றி யூரிற் பாகத்தோர்
துணையுந் தாமும் பிரியாதார் தோழத் தம்பி ராணரை
யிணையுங் கொள்கைச் சங்கிலியா ரெழுதின்மென் பணைத்தோ ளெய்துவிக்க
வணையு மொருவர் சரணமே யரண மாக வடைந்தோமே. (சு)

சோமாசிமாறநாயனார்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கூ,சுசo.

வம்பறுவரிவண்டுச்சருக்க முற்றுப்பெற்றது.

ஏழாவது

வார்கொண்டவனமுலையாள்

சருக்கம்.

சாக்கியநாயனார்புராணம்.

அறுசமயத் தலைவராய் நின்றவருக் கன்பராய்
மறுசமயச் சாக்கியர்தம் வடிவிஞல் வருத்தொண்ட
ருறுதிவரச் சிவலிங்கங் கண்டுவந்து கல்லெறிந்து
மறுவில்சரண் பெற்றதிற மறிந்தபடி வழுத்துவாம். (க)

தாளாளர் திருச்சங்க மங்கையினிற் றகவுடைய
வேளாளர் குலத்துதித்தார் மிக்கபொரு டெரிந்துணர்ந்து
கேளாகிப் பல்லுயிர்க்கு மருளுடைய ராய்க்கெழுமி
நீளாது பிறந்திறக்கு நிலையொழிவே னெனநிற்பார். (உ)

அந்நாளி லெயிற்காஞ்சி யணிநகரஞ் சென்றடைந்து
நன்ஞான மடைவதற்குப் பலவழியு நாடுவார்
முன்னுகச் சாக்கியர்தா மொழியறத்தின் வழிச்சார்ந்து
மன்னுத பிறப்பறுக்குந் தத்துவத்தின் வழிபுணர்வார். (ங)

அந்நிலைமைச் சாக்கியர்த மருங்கலைநூ லோதியது
தன்னிலையும் புறச்சமயச் சார்வுகளும் பொருளல்ல
வென்னுமது தெளிந்தசை ருள்கூட வீறில்சிவ
நன்னெறியே பொருளாக வதனுணர்வு நாட்டுவார். (ச)

செய்வினையுஞ் செய்வானு மதன்பயனுஞ் சேர்ப்பானு
மெய்வகையா னன்காகும் விதித்தபொரு ளெனக்கொண்டே
யிவ்வியல்பு சைவநெறி யல்லவற்றுக் கில்லெனினு
மவ்வகையாற் பொருள்சிவனென் றருளாலே யுணர்ந்தறிந்தார். (ஞ)

எந்நிலையி னின்றாலு மெக்கோலங் கொண்டாலு
மன்னியசீர்ச் சங்கரன்றாண் மறவாமை பொருளென்றே
துன்னியவே டந்தன்னைத் துறவாதே தூயசிவன்
தன்னடிமை மன்பிஞன் மறவாமை தலைநிற்பார். (ஈ)

வேறு.

எல்லா முடைய வீசனே யிறைவ னென்ன வறியாதார்
பொல்லா வேடச் சாக்கியரே யாகிப் புல்ல ராகுவா
ரல்லார் கண்டர் தமக்கின்ற வகில மெல்லா மாளென்ன
வல்லா ரிவரவ் வேடத்தை மாற்ற தன்பின் வழிநிற்பார். (எ)

மே வு று.

காணுத வருவினுக்கு முருவினுக்குங் காரணமாய்
நீணுக மணிந்தார்க்கு நிகழ்குறியாஞ் சிவலிங்க
நாணுது நேடியமா னுன்முகனுங் காணாநடுச்
சேணுருந் தழற்பிழம்பாய்த் தோன்றியது தெளிந்தாராய். (அ)

நாடோறுஞ் சிவலிங்கங் கண்டிண்ணு மதாநயந்து
மாடோர்வெள் ளிடைமன்னுஞ் சிவலிங்கங் கண்டுமன
நீடோடு களியுவகை நிலைமைவரச் செயலறியார்
பாடோர்கற் கண்டதனைப் பதைப்போடு மெடுத்தெறிந்தார். (கூ)

அகநிறைந்த பேருவகை யடங்காத வாதரவான்
மகமுமகிழ்ந் தவப்பார்கள் வன்மைபுரி செயலினு
லிகழ்வனவே செய்தாலு மிளம்புதல்வர்க் கின்பமே
நிகழுமது போலதற்கு நீள்சடையார் தாமகிழ்ந்தார். (கo)

அன்றுபோய்ப் பிற்றைநா ளந்தியிற் கணையுங்காற்
கொன்றைமுடி யார்மேற்றூய் கல்லெறிந்த குறிப்பதனை
நின்றுணர்வா ரெனக்கப்போ திதுநிகழ்ந்த தவரருளே
யென்றதுவே தொண்டாக வென்றுமது செயினேந்தார். (கக)

தொடங்கியநா ளருளியவத் தொழிலொழியா வழிதொடருங்
கடன்புரிவா ரதுகண்டு கல்லெறிவார் தவராடைப்
படம்புனைவே டந்தவீரார் பசுபதியார் தஞ்செயலே
யடங்கவுமென் பதுதெளிந்தா ராதலினுன் மாதவர்தாம். (கஉ)

* இங்ஙனதி பரிவோடும் வழுவாம லிவர்செய்ய
முன்னுநிருத் தொண்டாகி முடிந்தபடி தான்மொழிபிற்
றுன்னியமெய் யன்புடனே யெழுந்தவினை தூயவர்க்கு
மன்னுமிகு பூசனையே யாமன்பு வழங்கினுல். (கங)

* கல்லாலே யெறிந்ததுவு மன்பான படிகாளில்
வில்வேடர் செருப்படியும் திருமுடியின் மேலிற்று
னல்லார்மற் றவர்செய்கை யன்பாலே நயந்ததனை
யல்லாதார் கல்லென்பா ரரனுர்க்கஃ தலராமால். (கச)

அங்கொருநா ளருளாலே யயர்த்துண்ணப் புகுகின்று
ரெங்கள்பிரான் றனையெறியா தயர்த்தேன்யா னெனவெழுந்து
பொங்கியதோர் காதலுடன் மிகவிரைந்து புறப்பட்டு
வெங்கரியி னுரிபுனைந்தார் திருமுன்பு மேவினுர். (கந)

கொண்டதொரு கல்லெடுத்துக் குறிகூடும் வகையெறிய
வுண்டிவினை யொழித்தஞ்சி யோடிவரும் வேட்கையொடுங்
கண்டருளுங் கண்ணுதலார் கருணைபொழி திருநோக்காற்
றெருண்டதெதிர் நெடுவிசும்பிற் றுணைவியொடுந் தோன்றினுர். (கரு)

மழவிடைமே லெழுந்தருளி வந்ததொரு செயலாலே
கழலடைந்த திருத்தொண்டர் கண்டகரங் குவித்திறைஞ்சி
விழவருணெக் களித்தருளி மிக்கசிவ லோகத்திற்
பழவடிமைப் பாங்கருளிப் பரமசெழுந் தருளினுர். (கஎ)

* இச்செய்யுள்கள் சில பிரதிகளில் இல்லை.

வேறு.

ஆதியார் தம்மை நாளுங் கல்லெறிந் தணுகப் பெற்ற
கோதில்சீர்த் தொண்டர் கொண்ட குறிப்பினை யவர்க்கு நல்குஞ்
சோதியா றறித லன்றித் துணிவதென் னவர்தாள் சூடித்
தீதினை நீக்க லுற்றேன் சிறப்புலி யாரைச் செப்பி. (கடு)

சாக்கியநாயனார்புராண முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் - ௬,௬௬,அ.

சிறப்புலிநாயனார்புராணம்.

பொன்னிநீர் நாட்டு நீடு பொற்பதி புனைத் துள்ளோ
ரின்மையா லிரந்து சென்றுர்க் கில்லையென் னுதே யீயுந்
தன்மையா ரென்னு நன்மை சார்ந்தவே தியரைச் சண்பை
மன்னனு ரருளிச்செய்த மறைத்திரு வாக்கு ராக்கூர். (க)

தூமலர்ச் சோலை தோறுஞ் சுடர்தொடு மாடந் தோறு
மாமழை முழக்கந் தாழ மறையொலி முழக்க மோங்கும்
பூமலி மறுகி லிட்ட புகையகிற் றூபந் தாழ
வோமநல் வேள்விச் சாலை யாகுதித் தூபமோங்கும். (உ)

ஆலைசூழ் பூகவேலி யத்திரு வாக்கூர் தன்னின்
ஞாலமார் புகழின் மிக்கார் நான்மறைக் குலத்தி னுள்ளார்
நீலமார் கண்டத் தெண்டோ ணீருத்தர்த் திருத்தொண் டேற்ற
சீலராய்ச் சாலு மீகைத் திறத்தினிற் சிறந்த நீரார். (ஈ)

ஆனமல் கணைருக் கன்ப ரணைந்தபோ தடியிற் ருழ்ந்து
மூனுமா தவப் பொங்க முன்புகின் றினிய கூறி
நாளுநல் லமுத மூட்டி ரயந்தன வெல்லா நல்கி
நீளுவின் பத்துட் டங்கி நிதிமழை மாரி போன்ருர். (சு)

அஞ்செழுத் தோதி யங்கி வேட்டுநல் வேள்வி யெல்லா
நஞ்சணி கண்டர் பாத நண்ணிடச் செய்து ஞாலத்
தெஞ்சலி லடியார்க் கென்று மிடையுறு வன்பால் வள்ளற்
றஞ்செயல் வாய்ப்ப வீசர் தாணிழற் றங்கி ஞரே. (நி)

அறத்தினின் மிக்க மேன்மை யந்தண ராக்கூர் தன்னின்
மறைப்பெரு வள்ள லார்வண் சிறப்புலி யார்தாள் வாழ்த்திச்
சிறப்புடைத் திருச்செங் காட்டங் குடியினிற் செம்மை வாய்த்த
வீறற்றுத் தொண்டர் செய்த திருத்தொழில் விளம்ப லுற்றேன். (கூ)

சிறப்புலிநாயனார்புராண முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் - ௬,௬௬௬,

சிறுத்தொண்டநாயனார்புராணம்.

உருநாட்டுஞ் செயல்காம ஞெழியவிழி பொழிசெந்தீ
வருநாட்டத் திருமுதலார் மகிழ்ந்தருளும் பதிவயலிற்
கருநாட்டக் கடைசியர்தங் களிகாட்டுங் காவேரித்
திருநாட்டி வளங்காட்டுஞ் செங்காட்டங் குடியாகும். (க)

நிலவியவத் திருப்பதியி னெடுஞ்சடையார் நீற்றடைவா
லுலகில்வள ருயிர்க்கெல்லா முயர்காவற் றொழில்பூண்டு
மலர்புகழ்மா மாத்திரர்தங் குலம்பெருக வந்துள்ளார்
பலர்புகழுந் திருநாமம் பரஞ்சோதி யாரென்பார். (உ)

ஆயுள்வேதக் கலையு மலகில்வட நூற்கலையுந்
தூயபடைக் கலத்தொழிலுந் துறைநிரம்பப் பயின்றுள்ளார்
பாயுமதக் குஞ்சரமும் பரியுமுகைக் கும்பண்பு
மேயதொழில் விஞ்சையினு மேதினியின் மேலானூர். (ங)

உள்ளநிறை கலைத்துறைக ளொழிவின்றிப் பயின்றவற்றூற்
றெள்ளிவடித் தறிந்தபொருள் சிவன்கழலிற் செறிவென்றே
கொள்ளுமுணர் வினின்முன்னே கூற்றுதைத்த கழற்கன்பு
பள்ளமடை யாயென்றும் பயின்றுவரும் பண்புடையார். (ச)

ஈசனடி யார்க்கென்று மியல்பான பணிசெய்தே
யாசில்புகழ் மன்னவன்பா லணுக்கரா யவற்காகப்
பூசன்முனைக் களிறுகைத்துப் போர்வென்று பொருமரசர்
தேசங்கள் பலகொண்டு தேர்வேந்தன் பாற்சிறந்தார். (ஞ)

மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரந் துகளாகத் துளைதெங்கை வரையுகைத்துப்
பன்மணியு நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையு
மின்னனவெண் ணிலகவர்க்தே யிகலரசன் முன்கொணர்ந்தார். (ட)

கதிர்முடிமன் னனுமிவர்தங் களிற்றுரிமை யாண்மையினை
யதிசயித்துப் புகழ்ந்துரைப்ப வறிந்தவமைச் சர்களுரைப்பார்
மதியணிந்தார் திருத்தொண்டு வாய்த்தவலி யுடைமையினு
லெதிரிவருக் கிவ்வுலகி லில்லையென வெடுத்துரைத்தார். (எ)

தம்பெருமான் றிருத்தொண்ட ரெனக்கேட்ட தார்வேந்த
னும்பர்பிரா னடியாரை யுணராதே கெட்டொழிந்தேன்
வெம்புகொடும் போர்முனையில் விட்டிருந்தே னெனவெருவுற்
றெம்பெருமா னிதுபொறுக்க வேண்டுமென விறைஞ்சினான். (அ)

இறைஞ்சுதலு முன்னிறைஞ்சி யென்னுரிமைத் தொழிற்கடித்த
திறம்புரிவே னதற்கென்னே தீங்கென்ன வாங்கவர்க்கு
நிறைந்தநிதிக் குவைகளுட னீடிலிருத் திகளளித்தே
யறம்புரியுஞ் செங்கோலா னஞ்சலிசெய் துரைக்கின்றான். (கூ)

உம்முடைய நிலைமையினை யறியாமை கொண்டுய்த்தீ
செம்முடைய மனக்கருத்துக் கினிதாக விசைந்தமது
மெய்ம்மைபுரி செயல்விளங்க வேண்டியவா றேசரித்துச்
செம்மைநெறித் திருத்தொண்டு செய்யுமென விடைகொடுத்தான். (கo)

மன்னவனே விடைகொண்டு தம்பதியின் வந்தடைந்து
பன்னுபுகழ்ப் பரஞ்சோதி யார்தாமும் பணிமதிவாழ்
சென்னியரைக் கணபதீச் சரத்திறைஞ்சித் திருத்தொண்டு
முன்னைநிலைமை யில்வழுவா முறையன்பிற் செய்கின்றார். (கக)

வேதகா ரணரடியார் வேண்டியமெய்ப் பணிசெய்யத்
தீதில்குடிப் பிறந்ததிரு வெண்காட்டு நங்கையெனுங்
காதன்மனைக் கிழத்தியார் கருத்தொன்ற வரும்பெருமை
நீதிமனை யறம்புரியு நீர்மையினை நிலைநிற்பார். (கஉ)

நறையிதழித் திருமுடியா ரடியாரை நாடோறு
முறைமையினிற் றிருவமுது முன்னூட்டிப் பின்னுண்ணு
நிறையுடைய பெருவிருப்பா னியதியா கக்கொள்ளுந்
துறைவழுவா வகையொழுகுந் தூயதொழிற் றலைநின்றார். (கங)

தூயதிரு வமுதுகளி கன்னலறு சுவைக்கறிநெய்
பாயதயிர் பாலினிய பண்ணியமுண் ணீரமுத
மேயபடி யாலமுது செய்விக்க மிசைந்தடியார்
மாயிருஞா லம்போற்ற வருளிவர்பான் மனமகிழ்ந்தார். (கச)

சீதமதி யரவினுடன் செஞ்சடைமேற் செறிவித்த
நாதனடி யார்தம்மை நயப்பாட்டு வழிபாட்டான்
மேதகையா ரவர்முன்பு மிகச்சிறிய ராயடைந்தா
ராதலினற் சிறுத்தொண்ட ரெனநிகழ்ந்தா ரவனியின்மேல். (கஞ)

கண்ணுதலார் கணபதீச் சரத்திறைஞ்சுட் கருத்தமர
யுண்ணிறையன் பினிற்பணிசெய் தொழுகுவார் வழுவின்றி
யெண்ணில்பெருஞ் சீரடியா ரிடைவிடா தமுதுசெய
நண்ணியபே ருவகையுட னமர்துறையு நாளின்கண். (கட)

நீரார்சூ டைமுடியா ரருளினு னிறைதவத்துப்
பேராள ரவர்தமக்குப் பெருகுதிரு மனையறத்தின்
வேராகி விளங்குதிரு வெண்காட்டு நங்கைபாற்
சீராள தேவரெனுந் திருமைந்த ரவதரித்தார். (கஎ)

அருமையினிற் றணிப்புதல்வர் பிறந்தபொழு தலங்கரித்த
பெருமையினிற் லோகளிப்பப் பெறற்கரிய மணிபெற்று
வருமகிழ்ச்சி தாதையார் மனத்தடங்கா வகைவளரத்
திருமலிநெய் யாடல்விழாச் செங்காட்டங் குடியெடுப்ப. (கஅ)

மங்கலநல் லியமுழக்க மறைமுழக்கம் வானளப்ப
வங்கணர்தஞ் சீரடியார்க் களவிறந்த நிதியளித்துத்
தங்கண்மர பினிலுரிமைச் சடங்குதச தினத்தினிலும்
பொங்குபெரு மகிழ்ச்சியுடன் புரிந்துகாப் பணிபுனைந்தார். (கக)

ஆர்வநிறை பெருஞ்சுற்ற மகமலர வளித்தவர்தாம்
பார்பெருகு மகிழ்ச்சியுடன் பருவமுறைப் பாராட்டிச்
சீர்பெருகச் செய்யவளர் திருமகனார் சீரடியிற்
சூர்வளர்கிங் கிணியசையத் தளர்நடையின் பதஞ்சார்ந்தார். (உ0)

சுருளுமயிர் நுதற்சுட்டி தூணைக்காதின் மணிக்குதம்பை
மருவுதிருக் கண்டகாண் மார்பினிலம் படைகையிற்
பொருவில்வயி ரச்சரிகள் பொன்னரைஞாண் புனைசதங்கை
தெருவிலொளி விளங்கவளர் திருவிளையாட் டினிலமர்ந்தார். (உக)

வந்துவளர் மூவாண்டின் மயிர்வினைமங் கலஞ்செய்து
தந்தையா ரும்பயந்த தாயாருந் தனிச்சிறுவர்
சிந்தைமலர் சொற்றெளிவிற் செழுங்கலைகள் பயிலத்தம்
பந்தமற வந்தவரைப் பள்ளியினி லிருத்தினார். (உஉ)

அந்நாளிற் சண்பைநக ராண்டகையா ரெழுந்தருள
முன்னுக வெதிர்கொண்டு கொடுபுகுந்து மூன்றூல்சேர்
பொன்மார்பிற் சிறுத்தொண்டர் புகலிகா வலனுந்த
நன்னுமச் சேவடிகள் போற்றிசைத்து நலஞ்சிறந்தார். (உங)

சண்பையர்தம் பெருமானுந் தாங்கரிய பெருங்காதற்
பண்புடைய சிறுத்தொண்ட ருடன்பயின்று மற்றவரை
மண்பரவுந் திருப்பதிகத் தினில்வைத்துச் சிறப்பித்து
நண்பருளி யெழுந்தருளத் தாமினிது நயப்புற்றார். (உச)

இத்தன்மை நிகழுநா ளிவர்திருத்தொண் டிருங்கயிலை
யத்தர்திரு வடியிணைக்கீழ்ச் சென்றணைய வவருடைய
மெய்த்தன்மை யன்புநுகர்ந் தருளுதற்கு விடையவர்தாஞ்
சித்தமகிழ் வைரவராய்த் திருமலிகின் றணைகின்றார். (உரு)

மடல்கொண்ட மலரிதழி நெடுஞ்சடையை வணப்பெய்தக்
கடன்மண்டி முகந்தெழுந்த காளமேகச் சுருள்போற்
றொடர்பங்கி சுருண்டிருண்டு தோறிறித் தசைந்துசெறி
படர்துஞ்சின் கருங்குஞ்சி கொளத்தாமா கப்பரப்பி. (உசு)

அஞ்சனமஞ் சனஞ்செய்த தனையவணி கிளர்பம்பை
மஞ்சினிடை யிடையெழுந்த வானமீன் பரப்பென்னப்
புஞ்சகரை வண்டேதன் சுரும்புபுடை படர்ந்தார்ப்பத்
துஞ்சினுனித் தனிப்பரப்புந் தும்பைதறு மலர்தோன்ற. (உள)

அருகுதிரு முடிச்செருகு மத்தியிளம் பிறைதன்னைப்
பெருகுசிறு மதியாக்கிப் பெயர்த்துச்சாத் தியதென்ன
விரிசுடர்ச்செம் பவளவொளி வெயில்விரிக்கும் விளங்குசுடர்த்
திருநுதன்மேற் றிருநீற்றுத் தனிப்பொட்டுத் திகழ்ந்திலங்க. (உஅ)

வெவ்வருக்கன் மண்டலமும் விளங்குமதி மண்டலமு
மவ்வனற்செய் மண்டலமு முடனணைந்த தெனவழகை
வவ்வுதிருக் காதின்மணிக் குழைச்சங்கு வளைத்ததனுட்
செவ்வரத்த மலர்செறித்த திருத்தோடு புடைசிறக்க. (உக)

களங்கொள்விட மறைத்தருளக் கடலமுதக் குமிழிநிரைத்
துளங்கொளிவெண் டிரட்கோவைத் தூயவட மணிக்கதென
வுளங்கொள்பவர் கரைந்துடலு முயிருமுரு கப்பெருக
விளங்குதிருக் கழுத்தினிடை வெண்பளிங்கின் வடந்திகழ. (கூ0)

செம்பரிதி கடற்குளித்த செக்கரொளி யினையந்திப்
பம்புமிருள் செறிபொழுது படர்ந்தணைந்து சூழ்வதெனத்
தம்பழைய கரியுரிவை கொண்டசைமைத் ததுசாத்து
மம்பவளத் திருமேனிக் கஞ்சுகத்தி னணிவிளங்க. (கூக)

மிக்கெழுமன் பர்களன்பு திருமேனி விளக்கதென
வக்குமணி யாற்சின்ன வீரமுமா ரமும்வடமுங்
கைக்கணிதோள் வளைச்சரியு மரைக்கடிசூத் திரச்சரியுந்
தக்கதிருக் காற்சரியுஞ் சாத்தியவொண் சுடர்தயங்க. (கூஉ)

பொருவிறிருத் தொண்டர்க்குப் புவிமேல்வந் தருள்புரியும்
பெருகருளின் றிறங்கண்டு பிரானருளே பேணுமீர்
வருமன்பின் வழிநின்றீ ரெனமறைபூண் டறைவனபோற்
றிருவடிமேற் றிருச்சிலம்பு திசைமுழுதுஞ் செலவொலிப்ப. (கூக)

அயன்கபா லந்தரித்த விடத்திருக்கை யாலணைத்த
வயங்கொளிமூ விலைச்சூல மணித்திருத்தோண் மிசைப்பொலியத்
தயங்குசுடர் வலத்திருக்கைத் தமருகத்தி னெலிதழைப்பப்
பயன்றவத்தாற் பெறும்புவியும் பாததா மரைசூட. (கூச)

அருள்பொழியுந் திருமுகத்தி னணிமுறுவ னிலவெறிப்ப
மருள்பொழிமும் மலஞ்சிதைக்கும் வடிச்சூலம் வெயிலெறிப்பப்
பொருள்பொழியும் பெருகன்பு தழைத்தோங்கிப் புரியேத்தத்
தெருள்பொழிவண் டமிழ்நாட்டுச் செங்காட்டங் குடிச்சேர்ந்தார். (கூஞ)

தண்டாத தொருவேட்கைப் பசிபுடையார் தமைப்போலக்
கண்டாரைச் சிறுத்தொண்டர் மனைவினவிக் கடிதணைந்து
தொண்டானுர்க் கெதிர்நாளுஞ் சோறளிக்குந் திருத்தொண்டர்
வண்டாருந் தாரினர் மனைக்குள்ளா ரோவென்ன. (கூசு)

வந்தணைந்து வினவுவார் மாதவரே யாமென்று
சந்தனமார் தையலார் முன்வந்து தாள்வணங்கி
யந்தமில்சீ ரடியாரைத் தேடியவர் புறத்தணைந்தா
ரெந்தமையா ளுடையவரே யகத்தினெழுந் தருளுமென. (கூஎ)

மடவரலே முகநோக்கி மாதரார் தாமிருந்த
வீடவகையிற் றனிபுகுதே மென்றருள வதுகேட்டு
வீடவகல்வார் போலிருந்தா ரெனவெருவி விரைந்துமனைக்
கடனுடைய திருவெண்காட் டம்மைகடைத் தலையெய்தி. (கூஅ)

அம்பலவ ரடியாரை யமுதுசெய்வீப் பாரிற்றைக்
கெம்பெருமான் யாவரையுங் கண்டிலர்தே டிப்போனர்
வம்பெனீ ரெழுந்தருளி வருந்திருவே டங்கண்டாற்
றம்பெரிய பேறென்றே மிகமகிழ்வ ரினித்தாழார். (கூக)

இப்பொழுதே வந்தணைவா ரெழுந்தருளி யிருமென்ன
வொப்பின்மனை யறம்புரப்பீ ருத்தரா பதியுள்ளோஞ்
செப்பருஞ்சீர்ச் சிறுத்தொண்டர் தமைக்காணச் சேர்ந்தனம்யா
மெப்பரிசு மவரொழிய விங்கிரோ மென்றருளி. (சம)

கண்ணுதலிற் காட்டாதார் கணபதீச் சரத்தின்கண்
வண்ணமல ராத்தியின்மே ழிருக்கின்றே மற்றவர்தா
கண்ணினை ஞரிருந்த பரிசுரைப்பீ ரென்றருளி
யண்ணலார் திருவாத்தி யணைந்தருளி யமர்ந்திருந்தார். (சக)

வே று.

நீரார் சடையா னடியாரை நேடி யெங்குங் காணுது
சீரார் தவத்துச் சிறுத்தொண்டர் மீண்டுஞ் செல்வ மனையெய்தி
யாரா வன்பின் மனைவியார்க் கியம்பி யழிவெய் திடலுமரும்
பாரா தரிக்குந் திருவேடத் தொருவர் வந்த படிபகர்ந்தார். (சஉ)

அடியே னுய்ந்தே னெங்குற்ற ருரையா யென்ன வவர்மொழிவார்
வடசேர் சூல கபாலத்தர் வடதே சத்தோ மென்றூர்வண்
டுடிசேர் கரத்துப் பயிரவர்யாஞ் சொல்ல விங்கு பிராதேபோய்க்
கடிசேர் திருவாத் திமினிழற்கீ ழிருந்தார் கணப தீச்சரத்து. (சங)

என்று மனைவி யாரியம்ப வெழுந்த விருப்பால் விரைந்தெய்திச்
சென்று கண்டு திருப்பாதம் பணிந்து நின்றூர் சிறுத்தொண்டர்
நின்ற தொண்டர் தமைநோக்கி நீரோ பெரிய சிறுத்தொண்ட
ரென்று திருவாய் மலர்ந்தருள விறைவர் தம்மைத் தொழுதுரைப்பார். (சஅ)

பூதி யணிசா தனத்தவர்முன் போற்றப் போதே ஞபிடினு
நாத னடியார் கருணையினு லருளிச் செய்வர் நானென்று
கோதி லன்பர் தமையமுது செய்விப் பதற்குக் குலப்பதியிற்
காத லாலே தேடியுமுன் காணேன் றவத்தா னுமைக்கண்டேன். (சஇ)

அடியேன் மனையி லெழுந்தருளி யமுதுசெய்ய வேண்டுமென
நெடியோ னறியா வடியார்தா நிகழுந் தவத்தீ ருமைக்காணும்
படியால் வந்தோ முத்தரா பதியோ மெம்மைப் பரிந்தூட்ட
முடியா துமக்குச் செய்கையரி தொண்ணு தென்று மொழிந்தருள. (சஈ)

எண்ணு தடியேன் மொழியேனீ ரமுது செய்யு மியல்பதனைக்
கண்ணுற் வேட நிறைதவத்தீ ரருளிச் செய்யுங் கடிதமைக்கத்
தண்ணு நிதழி முடியார்தா மடியார் தலைப்பட் டாற்றேட
வொண்ணு தனவு முளவாகு மருமை யில்லை யெனவுரைத்தார். (சஎ)

அரிய தில்லை யெனக்கேட்ட பொழுதி னழகு பொழிகின்ற
பெரிய பயிர வக்கோலப் பிராணு ரருளிச் செய்வார்யாம்
பரியுந் தொண்டூர் மூவிருது கழித்தாற் பசவீழ்த் திடவுண்ப
தரிய நாளு மதற்கின்று வூட்ட முடியா துமக்கென்றூர். (சஅ)

சால நன்று முந்நிரையு முடையேன் முழ்விங் கெனக்கில்லை
யால முண்டா ரன்பருமக் கமுதாம் பசுத்தா னின்னதென
வேல வருளிச் செயப்பெற்றுல் யான்போ யமுது கடிதமைத்துக்
காலந் தப்பா மேவருவே னென்று மொழிந்து கைதொழுதார். (சக)

பண்பு மிக்க சிறுத்தொண்டர் பரிவு கண்டு பயிரவரு
கண்பு மிக்கீர் காமுண்ணப் படுக்கும் பசவு நரபசுவா
முண்ப தஞ்சு பிராயத்தி லுறுப்பின் மறுவின் றேலின்னம்
புண்செய் கோவில் வேலெறிந்தாற் போலும் புகல்வ தொன்றென்றூர். (இ0)

யாது மரிய தில்லையினி யீண்ட வருளிச் செய்யுமென
நாதன் முனு மொருகுடிக்கு நல்ல சிறுவ ஞெருமகனைத்
தாதை யரியத் தாய்பிடிக்கும் பொழுது தம்பின் மனமுவக்தே
யேத மின்றி யமைத்தகறி யாமிட் டுண்ப தெனமொழிந்தார். (இக)

அதுவு முனைவர் மொழிந்தருளக் கேட்ட தொண்ட ரடியேனுக்
கிதுவு மரிதன் றெம்பெருமா னமுது செய்யப் பெறிலென்று
கதுமென் வீரைவி லவரிசையப் பெற்ற களிப்பாற் காதலொடு
மதுமென் கமல மலர்ப்பாதம் பணிந்து மனையின் வந்தணைந்தார். (இஉ)

அன்பு மிக்க பெருங்கற்பி னணங்கு திருவெண் காட்டம்மை
முன்பு வந்து சிறுத்தொண்டர் வரவு நோக்கி முன்னின்றே
யின்பம் பெருக மலர்ந்தமுகங் கண்டு பாத நிசையிறைஞ்சிப்
பின்பு கணவர் முகநோக்கிப் பெருகுந் தவத்தோர் செயல்வினவ. (இங)

வள்ள லாரு மனையாரை நோக்கி வந்த மாதவர்தா
மூள்ள மகிழ வமுதுசெய விசைந்தார் குடிக்கோர் சிறுவனுமாய்க்
கொள்ளும் பிராய மைந்துள்ளு யறுப்பிற் குறைபா டின்றித்தாய்
பிள்ளை பிடிக்க வுவந்துபிதா வரிந்து சமைக்கப் பெறினென்றார். (இச)

அரிய கற்பின் மனைவியா ரவரை நோக்கி யுரைசெய்வார்
பெரிய பயிர வத்தொண்ட ரமுது செய்யப் பெறுமதற்கிங்
குரிய வகையா லமுதமைப்போ மொருவ ஞகி யொருகுடிக்கு
வருமச் சிறுவன் றனைப்பெறுமா றெவ்வா றென்று வணங்குதலும். (இஞ)

மனைவி யார்தம் முகநோக்கி மற்றித் திறத்து மைந்தர்தமை
யினைவ ரிரம்ப நிதிகொடுத்தாற் றருவா ருளரே நேர்கின்று
தனையன் றன்னைத் தந்தைதா யரிவா ரில்லைத் தாமாமே
யெனையிங் குய்ய நீபயந்தான் றன்னை யழைப்போ மியாமென்றார். (ஙக)

என்று கணவர் கூறுதலு மதனுக் கிசைந்தெம் பிரான்முண்ட
ரின்று தாழா தமுதுசெய்யப் பெற்றிங் கவர்த முகர்த்தமுக
நன்று காண்பெ மெனநயந்து நம்மைக் காக்க வருமணியைச்
சென்று பள்ளி யினிற்கொண்டு வாரு மென்றார் திருவனையார். (ஙஎ)

காதன் மனையார் தாங்கூறக் கணவ ஞருங் காதலனை
யேத மில்லப் பெற்றபே றெல்லா மெய்தி ஞர்போல
நாதர் தமக்கங் கமுதாக்க நறுமென் குதலை மொழிப்புதல்வ
னேதை வணைந்த பள்ளியினி லுடன்கொண் டெய்தக் கடிதகன்றார். (ஙஅ)

பள்ளி யினிற்சென் றெய்துதலும் பாத சதங்கை மணியொலிப்பப்
பிள்ளை யோடி வந்தெதிரே தழுவ வெடுத்துப் பியலின்மேற்
கொள்ள வணைத்துக் கொண்டுமீண் டில்லம் புகுதக் குலமாதர்
வள்ள லார்த முன்சென்று மைந்தன் றன்னை யெதிர்வாங்கி. (ஙக)

குஞ்சி திருத்தி முகந்துடைத்துக் கொட்டை யரைநாண் கெணீக்கி
மஞ்ச ளழிந்த வதற்கிரங்கி மையுங் கண்ணின் மருங்கொதுக்கிப்
பஞ்சி யஞ்சு மெல்லடியார் பரிந்து திருமஞ் சனமாட்டி
யெஞ்ச லில்லாக் கோலஞ்செய் தெடுத்துக் கணவர் கைக்கொடுத்தார். (கo)

அச்ச மெய்திக் கறியுமுதா மென்னு மதனு லரும்புதல்வ
னுச்சி மோவார் மார்பின்க ணணைத்து முத்தங் காமுண்ணூர்
பொச்ச மில்லாத் திருத்தொண்டர் புனிதர் தமக்குக் கறியமைக்க
மெச்சு மனத்தா லடிக்களையின் மேவார் வேறு கொண்டணைவார். (சுக)

ஒன்று மனத்தா ரிருவர்களு மூலக ரறியா ரெனமறைவிற்
சென்று புக்குப் பிள்ளாதனைப் பெற்ற தாயார் செழுங்கலங்க
ணன்ற கழுவிக் கொடுசெல்ல நல்ல மகனே யெடுத்துலகை
வென்ற தாதை யார்தலையைப் பிடிக்க விரைந்து மெய்த்தாயர். (சுஉ)

இனிய மழலைக் கிங்கிணிக்கா லிரண்டு மடியின் புடையிடுக்கிக்
கனிவாய் மைந்தன் கையிரண்டுங் கையாற் பிடிக்கக் காதலனு
நனிநீ டுவகை யுறுகின்று ரென்று மகிழ்ந்து நகைசெய்யத்
தனிமா மகனைத் தாதையார் கருவி கொண்டு தலையரிவார். (சுங)

பொருவில் பெருமைப் புத்திரன்மெய்த் தன்மை யளித்தா னெனப்பொலிந்து
மருவு மகிழ்ச்சி யெய்தவர் மனைவி யாருங் கணவனு
ருமை யுயிரை யெனக்களித்தா னென்று மிகவு மகமலர
விருவர் மனமும் பேருவகை யெய்தி யரிய வினைசெய்வார். (சுச)

அறுத்த தலையி னிறைச்சிதிரு வமுதுக் காகா தெனக்கழித்து
மறைத்து நீக்கச் சந்தனத்தார் கையிற்கொடுத்து மற்றையுறுப்
பிறைச்சி யெல்லாங் கொத்தியறுத் தெலும்பு மூளை திறந்திட்டுக்
கறிக்கு வேண்டும் பலகாய மரைத்துக் கூட்டிக் கடிதமைப்பார். (சுஙி)

மட்டி லிரிபூங் குழன்மடவா ரடுப்பி லேற்றி மனமகிழ்ந்தே
யட்ட கறியின் பதமறிந்தங் கிழிச்சி யேரே ருருங்கலத்துப்
பட்ட நறையாற் ருளித்துப் பலவு மற்றுங் கறிசமைத்துச்
சட்ட விரைந்து போனகமுஞ் சமைத்துக் கணவர் தமக்குரைத்தார். (சுசு)

உடைய நாத ரமுதுசெய வுரைத்த படியே யமைத்தவதற்
கடையு மின்ப முன்னையிலு மார்வம் பெருகிக் களிகூர
விடையில் வருவார் தொண்டர்தாம் விரைந்து சென்று மென்மலரின்
புடைவண் டறையு மாத்தியினிழ் ழிருந்த புனிதர் முன்சென்றார். (சுஎ)

அண்ண றிருமுன் பணிந்திறைஞ்சி யன்பர் மொழிவா ரடியேன்பா
ணண்ணி னீரிங் கமுதுசெய வேண்டு மென்று நான்பரிவு
பண்ணி னேனுப்ப் பசித்தருளத் தாழ்த்த தெனினும் பணிசமைத்தே
னெண்ணம் வாய்ப்ப வெழுந்தருள வேண்டு மென்றங் கெடுத்துரைத்தார். (சுஅ)

இறையுந் தாழா தெழுந்தருளி யமுது செய்பு மென்றிறைஞ்சக்
கறையுங் கண்டத் தினின்மறைத்துக் கண்ணு ணுதலிற் காட்டாதார்
நிறையும் பெருமைச் சிறுத்தொண்டர் போது மென்ன நிதியிரண்டுங்
குறைவ ஞெருவன் பெற்றுவந்தாற் போலக் கொண்டு மனைபுகுந்தார். (சுகூ)

வந்து புகுந்து திருமனையின் மனைவி யார்தா மாதவரை
முந்த வெதிர்சென் றடிவணங்கி முழுது மழகு செய்தமனைச்
சந்த மலர்மா லேகண்முத்தின் ரும நாற்றித் தவிசமித்த
கந்த மலரா சனங்காட்டிக் கமழ்நீர்க் கரக மெடுத்தேந்த, (எ0)

ஆய சீரார் சிறுத்தொண்டர் சோதி யார்தங் கழல்விளக்கி
யாய புனிதப் புனறங்க டலேமே லாரத் தெளித்தின்ப
மேயவில்ல மெம்மருங்கும் வீசி விரைமென் மலர்சார்த்த
மேயுர் தூப தீபங்கண் முதற்பூ சனைசெய் திறைஞ்சுவார். (எக)

பனிவெண் டிங்கட் சடைவிரித்த பயில்பூங் குஞ்சிப் பயிரவராம்
புனிதர் தம்மைப் போனகமுங் கறியும் படைக்கும் படிபொற்பின்
வனிதை யாருங் கணவருமுன் வணங்கிக் கேட்ப மற்றவர்தா
மினிய வன்ன முடன்கறிக ளெல்லா மொக்கப் படைக்கவென. (எஉ)

பரிசு விளங்கப் பரிகலமுந் திருத்திப் பாவா டையிலேற்றித்
தெரியும் வண்ணஞ் செஞ்சாலிச் செழும்போ னகமுங் கறியமுதும்
வரிசை யினின்முன் படைத்தெடுத்து மன்னும் பரிக லக்கான்மேல்
விரிவெண் டுகிலின் மிசைவைக்க விமலர் பார்த்தங் கருள்செய்வார். (எங)

சொன்ன முறையிற் படுத்தபசுத் தொடர்ந்த வுறுப்பெல் லாங்கொண்டு
மன்னு சுவையிற் கறியாக்கி மாண வமைத்தீ ரேயென்ன
வன்ன மனையார் தலையிறைச்சி யமுதுக் காகா தெனக்கழித்தோ
மென்ன வதுவுங் கூடாதா முண்ப தென்ரு நிடர்தீர்ப்பார். (எச)

சிந்தை கலங்கிச் சிறுத்தொண்டர் மனையா ரோடுந் திகைத்தயரச்
சந்த னத்தா ரெனுந்தாதி யார்தா மந்தத் தலையிறைச்சி
வந்த தொண்ட ரமுதுசெயும் பொழுது நினைக்க வருமென்றே
முந்த வமைத்தேன் கறியமுதென் றெடுத்துக் கொடுக்க முகமலர்ந்தார். (எடி)

வாங்கி மகிழ்ந்து படைத்ததற்பின் வணங்குஞ் சிறுத்தொண் டரைநோக்கி
யீங்கு நமக்குத் தனியுண்ண வொண்ணு தீ சனடியாரிப்
பாங்கு கின்ரூர் தமைக்கொணர்வீ ரென்று பரமர் பணித்தருள
வேங்கிக் கெட்டே னமுதுசெய்ய விடையூ றிதுவோ வெனநினைவார். (எசு)

அகத்தின் புறத்துப் போயருளா லெங்குங் காண மழிந்தணைந்து
முகத்தில் வாட்ட மிகப்பெருகப் பணிந்து முதல்வர்க் குரைசெய்வா
ரிகத்தும் பரத்து மினியாரைக் காணேன் யானுந் திருநீறு
சகத்தி லிடுவார் தமைக்கண்டே யிடுவே னென்று தாழ்ந்திறைஞ்ச. (எஎ)

உம்மைப் போல நீறிட்டா ருளரோ வுண்பீர் நீரென்று
செம்மைக் கற்பிற் றிருவெண்காட் டம்மை தம்மைக் கலக்திருத்தி
வெம்மை யிறைச்சி சோறிதனின் மீட்டுப் படையு மெனப்படைத்தார்
தம்மை யூட்ட வேண்டியவ ருண்ணப் புகலுந் தடுத்தருளி. (எஅ)

ஆறு கிங்க ளொழிக்துண்போ முண்ணு மளவுந் தரியாது
சோறு நாளு முண்பீர்முன் னுண்ப தென்னம் முடன்றுய்ப்ப
மாறின் மகவு பெற்றீரேன் மைந்தன் றன்னை யழையுமென
வீறு முதலு மில்லாதார்க் கிப்போ துதவா னவனென்ரூர். (எக)

நாமிங் குண்ப தவன்வந்தா னுடி யழையு மெனநம்பர்
தாமஞ் சருளிச் செயத்தரியார் தலேவ ரமுது செய்தருள
யாமிங் கென்செய் தாலாகு மென்பார் விரைவுற் றெழுந்தருளாற்
பூமென் குழலார் தம்மோடும் புறம்போ யழைக்கப் புகும்பொழுது. (அ0)

கூடி

வைய கிகழுஞ் சிறுத்தொண்டர் மைந்தா வருவா யெனவழைத்தார்
தைய லாருந் தலைவர்பணி தலைநிற் பாராய்த் தாமழைப்பார்
செய்ய மணியே சோளா வாராய் சிவஞ ரடியார்யா
மூய்யும் வகையா லுடனுண்ண வழைக்கின் றாரென் றோலமிட. (அக)

பரம ரருளாற் பள்ளியினின் றோடி வருவான் போல்வந்த
தரமில் வனப்பிற் றணிப்புதல்வன் றன்னை யெடுத்துத் தழுவித்தங்
கரமுன் னணைத்துக் கணவனர் கையிற் கொடுப்பக் களிகூர்ந்தார்
புரமூன் றெரித்தார் திருத்தொண்ட ருண்ணப் பெற்றே மெனும்பொலிவால். (அஉ)

வந்த மகனைக் கடிதிற்கொண் டமுதுசெய்விப் பான்வந்தார்
முந்த வேயப் பயிரவரா முதல்வ ரக்கண் மறைந்தருளச்
சிந்தை கலங்கிக் காணாது திகைத்தார் வீழ்ந்தார் தெருமந்தார்
வெந்த விறைச்சிக் கறியமுதுங் கலத்திற் காணார் வெருவுற்றார். (அங)

செய்ய மேனிக் கருங்குஞ்சிச் செழுங்கஞ் சுகத்துப் பயிரவ்யா
மூய்ய வமுது செய்யாதே யொளித்த தெங்கே யெனத்தேடி
மையல் கொண்டு புறத்தணைய மறைந்த வவர்தா மலைபயந்த
தைய லோடுஞ் சரவணத்துத் தனய ரோடுந் தாமணைவார். (அச)

தனிவெள் விடைமே னெடிவிசும்பிற் றலைவர் பூத கணநாதர்
முனிவ ரமரர் விஞ்சையர்கண் முதலா யுள்ளோர் போற்றிசைப்ப
வினிய கறியுந் திருவமுது மமைத்தார் காண வெழுந்தருளிப்
பனிவெண் டிங்கண் முடிதுளங்கப் பரந்த கருணை நோக்கவித்தார். (அடி)

அன்பின் வென்ற தொண்டரவர்க் கமைந்த மனைவி யார்மைந்தர்
முன்பு தோன்றும் பெருவாழ்வை முழுதுங் கண்டு பரவசமா
யென்பு மனமுங் கரைந்துருக விழுந்தா ரெழுந்தா ரேத்தினர்
பின்பு பரமர் தருதியினும் பெரியோ ரவருக் கருள்புரிவார். (அசு)

கொன்றை வேணி யார்தாமும் பாகங் கொண்ட குலக்கொடியும்
வென்றி நெடுவேல் மைந்தருந்தம் விரைப்பூங் கமலச் சேவடிக்கீழ்
நின்ற தொண்டர் மனைவியார் நீடு மகனார் தாதியா
ரென்றும் பிரியா தேயிறைஞ்சி யிருக்க வுடன்கொண் டேகினர். (அஎ)

ஆறு முடிமே லணிந்தவருக் கடியா ரென்று கறியமுதா
யூறி லாத தனிப்புதல்வன் றன்னை யரிந்தங் கமுதூட்டப்
பேறு பெற்றூர் சேவடிக ளலமேற் கொண்டு பிறவுயிர்கள்
வேறு கழறிற் றறிவார்தம் பெருமை தொழுது விளம்புவாம். (அஅ)

சிறுத்தொண்டநாயனர்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கூ,எடுஉ.

சேரமான்பெருமாணயனர்புராணம்.

மாவீற் றிருந்த பெருஞ்சிறப்பின் மன்னுந் தொன்மை மலைகாட்டுப்
பாவீற் றிருந்த பல்புகழிற் பயிலு மியல்பிற் பழம்பதிதான்
சேவீற் றிருந்தார் திருவஞ்சைக் களமு நிலவிச் சேரர்குலக்
கோவீற் றிருந்து முறைபுரியுங் குலக்கோ மூதூர் கொடுங்கோளூர். (க)

காலே யெழும்பல் கலேயி னெலி களிற்றுக் கன்று வடிக்குமொலி
சோலே யெழுமென் சுரும்பினெலி தூரகச செருக்காற் சுலவுமொலி
பாலே வீபஞ்சி பயிலுமொலி பாட லாடன் முழவினெலி
வேலே யொலியை வீழுங்கியெழ வீளங்கி யோங்கும் வியப்பினதால். (உ)

பிக்க செல்வ மனேகடொறும் விளேயு மின்பம் விளங்குவன
பக்க நெருங்கு சாலேதொறும் பயில்சட் டறங்கள் பல்குவன
தக்க வணிகொண் மடங்க டொறுஞ் சைவ மேன்மை சாற்றுவன
தொக்க வளங்கொ ளிடங்கடொறு மடங்க நிதியத் துவன்றுவன. (ஊ)

வேத நெறியின் முறைபிறழா பிக்க வொழுக்கத் தலேநின்ற
சாதி நான்கு நிலேதழைக்குந் தன்மைத் தாகித் தடமதில்சூழ்
சூத வகுள சரளநிரை தூதையுஞ் சோலே வளர்கர்தான்
கோதை யரசர் மகோதையெனக் குலமு பெயரு முடைத்துலகில். (எ)

முருகு விரியு மலர்ச்சோலே மூதூ ரதன்கண் முறைமரபி
னருகி யழியுங் கலிதீக்கி யறங்கொள் சைவத் திறந்தழைப்பத்
திருகு சினவெங் கலியானேச் சேரர் குலமு முலகுஞ்செய்
பெருகு தவத்தா லரனருளாற் பிறந்தார் பெருமாக் கோதையார். (ஏ)

திருமா நகரந் திருவவதா ரஞ்செய் விழவின் சிறப்பிலுல்
வருமா களிகூர் நெய்யாட் லெடுப்ப வான மலர்மாரி
தருமா விசும்பின் பிகநெருங்கத் தழங்கு மொலிமங் கலந்தழைப்பப்
பெருமா நிலத்தி லெவ்வுயிரும் பெருகு மகிழ்ச்சி பிறங்கினவால். (ஐ)

மண்மேற் சைவ நெறிவாழ வளர்ந்து முன்னே வழியன்பாற்
கண்மேல் விளங்கு நெற்றியினர் கழலே பேணுங் கருத்தினரா
யுண்மே வியவன் பினராகி யுரிமையரசர் தொழில்புரியார்
தெண்ணீர் முடியார் திருவஞ்சைக் களத்திற் றிருத்தொண் டேபுரிவார். (ஒ)

உலகி னியல்பு மரசியல்பு முறுதி யல்ல வெனவுணர்வார்
புலரி யெழுந்து புனன் மூழ்கிப புனிதவெண்ணீற் றினுமூழ்கி
நிலவு திருநற் றனவனத்து நீடும் பணிகள் பலசெய்து
மலரு முகையுங் கொணர்ந்துதிரு மாலே சாத்த மகிழ்ந்தமைத்து. (அ)

திருமஞ் சனமுங் கொணர்ந்துதிரு வலகு பிட்டுத் திருமெழுக்கு
வருமன் புடனின் புறச்சாத்தி மற்று முள்ள திருப்பணிகள்
பெருமை பிறங்கச் செய்தமைத்துப் பேணும் விருப்பிற் றிருப்பாட்டி
மொருமை நெறியி னுணர்வுவர வோதிப் பணிந்தே யொழுகுநாள். (கூ)

நீரின் மலிந்த கடலகழி நெடுமால் வரையின் கொடிமதில்சூழ்
சீரின் மலிந்த திருநகர மதனிற் செங்கோற் பொறையனெனுங்
காரின் மலிந்த கொடைநிழன்மேற் கவிக்குங் கொற்றக் குடைநிழற்கீழ்த்
தாரின் மலிந்த புயத்தரசன் தரணி நீத்துத் தவஞ்சார்ந்தான். (கo)

வந்த மரபி னரசளிப்பான் வனஞ்சார் தவத்தின் மருவியபின்
சென்தை மதினு றேரமைச்சர் சிலரா ளாய்ந்து தெளிந்தநெறி
முன்தை மரபின் முதல்வர்திருத் தொண்டு முயல்வார் முதற்றாக
வின்து முடியார் திருவஞ்சைக் களத்தி லவர்பா லெய்தினுர். (கக)

எய்தி யவர்த மெதிரிறைஞ்சி யிருந்தண் சாரன் மலைநாட்டுச்
செய்தி முறைமை யாலுரிமைச் செங்கோ லரசு புரிவதற்கு
மைதீர் நெறியின் முடிசூடி யருளு மரபால் வந்ததெனப்
பொய்தீர் வாய்மை மந்திரிகள் போற்றிப் புகன்ற பொழுதின்கண். (கஉ)

இன்பம் பெருகுந் திருத்தொண்டுக் கிடையூ றுக விவர்மொழிந்தா
ரன்பு நிலைமை வழுவாமை யரசு புரக்கு மருளுண்டே
லென்பு மரஷும் புனைந்தாரை யிடைபெற் றறிவே னெனப்புக்கு
முன்பு தொழுது விண்ணப்பஞ் செய்ய முதல்வ ரருளினால். (கஊ)

மேவு முரிமை யரசளித்தே விரும்பு காதல் வழிபாடும்
யாவும் யாருங் கழறினவு மறியு முணர்வு மீறில்லாத்
தாவில் விறலுந் தண்டாத கொடையும் படைவா கனமுதலாங்
காவன் மன்னர்க் குரியனவு மெல்லாங் கைவந் துறப்பெற்றார். (கச)

ஆன வருள்கொண் டஞ்சலிசெய் திறைஞ்சிப் புறம்போந் தரசளித்த
ஞான மாருந் திருத்தொண்டுக் கெளினு முடையா னருளாலே
மேன்மை மகுடந் தாங்குதற்கு வேண்டி மமைச்சர்க் குடன்படலு
மான வமைச்சர் தாம்பணிந்தவ் வினைமேற் கொண்டி மகிழ்தெழுந்தார். (கரு)

உரிமை காலி லோரைகல னெய்த லிக்க வுபகரணம்
பெருமை சிறக்க வேண்டுவன வெல்லாம் பிறங்க மங்கலஞ்செய்
திருமை யுலகுக் கொருமைமுடி கவித்தா ரெல்லா வுயிருமகிழ்
தரும நிலைமை யறிந்துபுவி தாங்குங் கழறிற் றறிவார்தாம். (கசு)

தம்பி ரானுர் கோயில்வலங் கொண்டி திருமுன் ரூழ்ந்தெழுந்து
கும்ப யானை மேல்கொண்டு கொற்றக் குடையுஞ் சாமரையு
நம்பு முரிமை யவர்தாங்க நலங்கொ ணகர்சூழ் வலங்கொள்ளார்
மொய்ம்பி லுவரின் பொதிசுமந்தோர் வண்ணன் முன்னே வரக்கண்டார். (கஎ)

மழையிற் கரைந்தங் குவருறி மேனி வெளுத்த வடிவினு
லுழையிற் பொலிந்த திருக்கரத்தா ரடியார் வேட மென்றுணர்ந்தே
யிழையிற் சிறந்த வோடையுதல் யானைக் கழுத்தி னின்றிழிந்து
விழைவிற் பெருகுங் காதலினுல் விரைந்து சென்று கைதொழுதார். (கஅ)

சீரார் பெருமான் றிருமுக்கண்டி னிந்தை கலங்கி முன்வணங்கி
யாரென் றடியே னைக்கொண்ட தடியே னடிவண் ணமுனென்னச்
சேரர் பிரானு மடிச்சேர னடியே னென்று திருநீற்றின்
வார வேட நினைப்பித்தீர் வருந்தா தேகு மெனமொழிந்தார். (கக)

மன்னர் பெருமான் றிருத்தொண்டு கண்டு மதிநீ டமைச்சரெலாஞ்
சென்னி லிசையஞ் சலிசெய்து போற்றச் சினமால் களிறேறி
மின்னு மணிப்பூண் கொடிமாட வீதி மூதூர் வலங்கொண்டி
பொன்னின் மணிமா ளிகைவாயில் புக்கார் புனைமங் கலம்பொலிய. (உo)

யானை மிசைநின் றிழிந்தருளி யிலகு மணிமண் டபத்தின்கண்
மேன்மை யரியா சனத்தேறி விளங்கு கொற்றக் குடைநிழற்றப்
பானல் விழியார் சாமரைமுன் பணிவ ராப்பின் மலர்தூவி
மான வரசர் போற்றிடவீற் றிருந்தார் மன்னர் பெருமானுர். (உக)

உலகு புரக்கும் குடைவளவ ருரிமைச் செழிய ருடன்கூட
நிலவு பெருமுக் கோக்கூ ராய் நீதிமனுநூ னெறிநடத்தி
யலகி லரசர் திறைகொணர வகத்தும் புறத்தும் பகையறுத்து
மலருந் திருநீற் றெழிலிவள ரமறைகள் வளர மண்ணளிப்பார். (உஉ)

நீடு முரிமைப் பேராசா னிகழும் பயனு நிறைதவமுங்
தேடும் பொருளும் பெருந்துணைபுந் தில்லைத் திருச்சிற் றம்பலத்து
ளாடுங் கழலே யெனத்தெளிந்த வறிவா லெடுத்த திருப்பாதங்
கூடு மன்பி லருச்சனைமேற் கொண்டார் சேரர் குலப்பெருமாள். (உஊ)

வாசத் திருமஞ் சனம்பள்ளித் தாமஞ் சாந்த மணித்தூபந்
தேசிற் பெருகுஞ் செழுந்தீப முதலா யினவுந் திருமுதுமு
மீசற் கேற்ற பரிஞ லருச்சித் தருள வெங்காளரும்
பூசைக் கமர்ந்த பெருங்கூத்தர் பொற்பார் சிலம்பி லெளியளித்தார். (உ.ஈ)

நம்பர் தாளின் வழிபாட்டா ளுளு மின்புற் றமர்கின்ரு
ரிம்ப ருலகி லிரவலர்க்கும் வறியோ ரெவர்க்கு மீகையினுந்
செம்பொன் மழையா மெனப்பொழிந்து திருத்து வெண்ரி யுடன்பொருந்தி
யும்பர் போற்றத் தம்பெருமாற் குரிய வேள்வி பலசெய்தார். (உடு)

இன்ன வண்ண மிவரொழுக வெழில்கொள் பாண்டி நண்ணுட்டு
மன்னு மதுரைத் திருவால வாயி லிறைவர் வருமன்பாற்
பன்னு மிசைப்பா டலிற்பரவும் பாண ஞர்பத் திரனுர்க்கு
நன்மை நீடு பெருஞ்செல்வ நல்க வேண்டி யருள்புரிவார். (உசு)

இரவு கனவி லெழுந்தரு ளியென்பா லன்பா லெப்பொழுதும்
பரவு சேரன் மனக்குனக்குப் பைம்பொற் காணம் பட்டாடை
விரவு கதிர்செய் கவமணிப்பூண் வேண்டிற் றெல்லாங் குறைவின்றித்
தரகம் மோலை தருகின்றேந் தாழா தேகி வருகென்று. (உஎ)

வே று.

அதிர்கழ லுதியர் வேந்தர்க் கருள்செய்த பெருமை யாலே
யெதிரில்செல் வத்துக் கேற்ப விருதிரி கொடுக்க வென்று
மதிமலி புரிசை யென்னும் வாரகம் வரைந்த வாய்மைக்
கதிரொளி விரிந்த தோட்டித் திருமுகங் கொடுத்தார் காண. (உஅ)

சங்கப் புலவர் திருமுகந்தந் தலைமேற் கொண்டு பத்திரஞ
ரங்கப் பொழுதே புறப்பட்டு மலைகா டணைய வந்தெய்தித்
துங்கப் புரிசைக் கொடுங்கோளூர் தன்னிற் புகுந்து தன்னுகொடி
மங்குற் றொடக்கு மாளிகைமுன் வந்து மன்னர்க் கறிவித்தார். (உகூ)

கேட்ட பொழுதே கைதலைமேற் கொண்டு களிசிர்ந்த பேரன்பா
ஞட்டம் பொழிநீர் வழிந்திழிய வெழுந்து நடக்க மிகவெய்தி
யோட்டத் தம்பொன் மாளிகையின் புறத்தி லுருகுஞ் சிந்தையுடன்
பாட்டின் றலைமைப் பாணனுர் பாதம் பலகாற் பணிகின்றூர். (கூ0)

அடியேன் பொருளாத் திருமுகங்கொண் டணைந்த தென்ன வவர்தாமுங்
கொடிசேர் வீடையார் திருமுகங்கைக் கொடுத்து வணங்கக் கொற்றவனுர்
முடிமேற் கொண்டு கூத்தாடி மொழியுங் குழறிப் பொழிகண்ணீர்
பொடியார் மார்பிற் பரந்துவிழப் புவிமேற் பலகால் விழுந்தயர்வார். (கூக)

பரிவிற் போற்றித் திருமுகத்தைப் பலகாற் றொழுது படியெடுக்க
வுரிய வகையா லெடுத்தோதி யும்பர் பெருமா னருள்போற்றி
விரிபொற் சுடர்மா ளிகைபுக்கு மேவு முரிமைச் சுற்றமெலாம்
பெரிது விரைவிற் கொடுபோந்து பேணு மமைச்சர்க் கருள்செய்வார். (கூஉ)

நங்கள் குலமா ளிகையதனு ணலத்தின் மிக்க நிதிக்குவையாய்ப்
பொங்கி நிறைந்த பலவேறு வகையிற் பொலிந்த பண்டார
மங்க ணுறன்று மொழியாமே யடையக் கொண்டு புறப்பட்டுத்
தங்கும் பொதிசெய் தாளின்மேற் சமைய வேற்றிக் கொணருமென. (கூகூ)

சேரர் பெருமா னருள்செய்யத் திருந்து மதிநூன் மந்திரிகள்
சாரு மணிமா ளிகையுள்ளாற் றலங்க ளெல்லா நிறைந்தபெருஞ்
சீர்கொ ணிதிய மெண்ணிறைந்த வெல்லாம் பொதிசெய் தாளின்மேற்
பாரி னெருங்க யிசையேற்றிக் கொண்டு வந்து பணிந்தார்கள். (கூச)

பரந்த நிதியின் பரப்பெல்லாம் பாண னுர்பத் திரனுர்க்கு
நிரந்த தனங்கள் வெவ்வேறு நிரைத்துக் காட்டி மற்றிவையு
முரந்தங் கியவெங் கரிபரிகண் முதலா யுயிருள் ளனதனமும்
புரந்த வரசுங் கொளுமென மொழிந்தார் பொறையர் புரவலனுர். (கூடு)

பாண னுர்பத் திரனுரும் பைம்பொன் மௌலிச் சேரலனுர்
காணக் கொடுத்த விவையெல்லாங் கண்டு மகிழ்ச்சி றதிசயித்துப்
பேண வெனக்கு வேண்டியன யடியேன் கொள்ளப் பிற்சகன
ராணை யரசு மரசுறப்புங் கைக்கொண் டருளு மெனவிறைஞ்ச. (கூசு)

இறைவ ராணை மறுப்பதனுக் கஞ்சி யிசைந்தா ரிகல்வேந்தர்
நிறையு நிதியின் பரப்பெல்லா நிலத்தை நெளிய வுடன்கொண்டே
யுறையும் மதத்துக் கலிறுபரி யுள்ளிட் டனவேண் டெவைகொண்டோர்
பிறைவெண் கோட்டுக் கரிமுமேல் கொண்டு போந்தார் பெரும்பாணர். (கூள)

பண்பு பெருகும் பெருமாளும் பாண னுர்பத் திரனுர்பின்
கண்கள் பொழிந்த காதனீர் வழியக் கையாற் றொழுதஞ்ஞை
நண்பு சிறக்கு மவர்தம்மை நகரின் புறத்து விடைகொண்டு
திண்பொற் புரிசைத் திருமதுரை புக்கார் திருந்து மிசைப்பாணர். (கூஅ)

வான வரம்பர் குலம்பெருக்கு மன்ன னுரு மறித்தேகிக்
கூன விளவெண் பிறைக்கண்ணி முடியா ரடிமை கொண்டருளும்
பான்மை யருளின் பெருமையினை நினைந்து பலகாற் பணிந்தேத்தி
மேன்மை விளங்கு மாளிகைமண் டபத்து ளரசு வீற்றிருந்தார். (கூக)

அளவில் பெருமை யகிலயோ னிகளுங் கழறிற் றறிந்தவற்றி
னுளமன் னியமெய் யுறுதுயர்க ளொன்று மொழியா வகையகற்றிக்
களவு கொலைகண் முதலான கடிந்து கழறிற் றறிவார்தாம்
வளவர் பெருமா னுடன்செழியர் மகிழுங் கலப்பில் வைகுநாள். (சஅ)

வானக் கங்கை நதிபொதிந்த மல்கு சடையார் வழிபாட்டுத்
தானற் சிறப்பி னருச்சனையாஞ் தொண்டு புரிவார் தமக்கொருநாட்
டேனக் கலர்ந்த கொன்றையினு ராடற் சிலம்பி னெலிமுன்போன்
மானப் பூசை முடிவின்கட் கேளா தொழிய மதிமயங்கி. (சக)

பூசை கடிது முடித்தடியே னென்னே பிழைத்த தெனப்பொருமி
யாசை யுடம்பான் மற்றினிவே றடையு மின்ப மியாதென்று
தேசின் விளங்கு முடைவாளே யுருவித் திருமார் பினிலுட்ட
வீசர் விரைந்து திருச்சிலம்பி னேசை மிகவு மிசைப்பித்தார். (உஉ)

ஆடற் சிலம்பி னெலிகேளா வுடைவா ளகற்றி யங்கைமலர்
கூடத் தலைமேற் குவித்தருளிக் கொண்டு விழுந்து தொழுதெழுந்து
நீடப் பரவி மொழிகின்றார் நெடுமால் பிரம னருமறைமுன்
றேடற் கரியாய் திருவருண்முன் செப்பா தொழிந்த தென்னென்றார். (உஊ)

என்ற பொழுதி லிறைவர்தா மெதிர்சின் றருளா தெழுமொலியான்
மன்றி னிடைநங் கூத்தாடல் வந்து வணங்கி வன்றெண்ட
னென்ற முணர்வா னமைப்போற்றி யுரைசேர் பதிகம் பாடுதலா
னின்று கேட்டு வரத்தாற்றே மென்ற ரவரை நினைப்பிப்பார். (உஎ)

என்னே யடியார்க் கிவரருளு நருணி யிருந்த வாறென்று
பொன்னேர் சடையார் திருவடிமேற் புனியுப் பொன்னம் பலம்பிறைஞ்சித்
தன்னே நில்லா வன்பெண்டிர் தமையு நாண்ப வினைமிரும்பி
கன்னீர் காட்டுச் செலநயந்தார் காமச் சேரர் கோமானர். (உஏ)

பொன்னர் மெனலிச் சேரலனர் போற்று மமைச்சர்க் கதிபரியாம்
நன்னுட் கொண்டு பெரும்பயண மெழுக வென்று வலர்சாற்ற
மின்னு மயில்வேற் குலமரவர் வென்றி நிலவு நிலையீர
நன்னாட் டுள்ளா ரடையநிரந் தினைந்தார் வந்தி யகலுவாய். (உஐ)

இட்ட நன்னு ளோரையினி னிறைவர் திருமுற் றைக்களத்து
மட்டி லிரிபூங் கொன்றையினர் தம்மை வலங்கொண் டிறைஞ்சிப்போய்ப்
பட்ட நுதல்வெங் களிபாகைப் படர்மேற் கொண்டு பரிமிசையர்
தொட்ட கொடிமா னிகைமுகர்கட் டாரு நிரையர் தோன்றலார். (உஒ)

யானை யணிகள் பரந்துவழி யெங்கு நிரந்து செல்வனதா
மான மலைகாட் டினின்மலித்த மலைக ளுடன்போ வுவபோன்ற
சேனை வீரர் புடைபரந்து செல்வ தக்கண் மலைசூழ்ந்த
கான மடைய வுடன்பட்வ போலுங் காட்சி மேவினதால். (உ.ஏ)

புரவித் திரள்க ளாயோகப் பொலிவி னசைவிற் போதுமன
வரவச் சேனைக் கடற்பரங்க மடித்து மேன்மே லடர்வனபோல்
விரவிப் பரந்து சென்றனவான் மிசையு மவனு மொன்றுக
நிரவிப் பரந்த நெடுஞ்சேனை சேரி நெளியச் சென்றனவால். (உக)

அந்நாட் டெல்லை கடந்தணைய வமைச்சர்க் கெல்லாம் விடையருளி
மின்னுர் மணிப்பூண் மன்னவனுர் வேண்டி வாரை யுடன்கொண்டு
கொன்னு ரயில்வேன் மறவர்பயில் கொங்கர் நாடு கடந்தருளிப்
பொன்னுட் டவரு மணந்தாயும் பொன்னி நீர்நாட் டிடைப்போவார். (ஙO)

சென்ற திசையிற் சிவனடியார் சிறபபி னேகி மெதிர்கொள்ளக்
குன்றங் காணு முடைக்கூறும்ப ரிடங்க டோறுங் குறைவறுப்பத்
துன்று முரம்புங் கான்யாறுந் துறுகற் சுரமும் பலகடந்து
வென்றி விடையா ரிடம்பலவு மேவிப் பணிந்து செல்கின்றார். (ஙக)

பொருவில் பொன்னித் திருநதியின் கரைவந் தெய்திப் புனிதநீர்
மருவுந் தீர்த்த மகிழ்ந்தாடி மருங்கு வடபாற் கரையேறித்
திருவிற் பொலியுந் திருப்புலியூர்ச் செம்பொன் மன்று ணடம்போற்ற
வுருகு மனத்தி னுடன்சென்று தொழியா வன்பின் வழிவந்தார். (சிஉ)

வந்து தில்லை மூதூரி னெல்லை வணங்கி மகிழ்ச்சியினு
லந்த ணுளார் தொண்டர் குழா மீணைந்த போதி னெதிர்வணங்கிச்
சந்த விரைப்பூந் திருவீ தியிறைஞ்சித் தலைமேற் கரமுகிழ்ப்பச்
சிந்தை மகிழ வெழுதிலைக்கோ புரத்தை யணைந்தார் சேரலனார். (சிஊ)

நிலவும் பெருமை யெழுதிலைக்கோ புரத்தின் முன்னர் நிலத்திறைஞ்சி
மலருங் கண்ணீர்த் துளிதழும்பப் புகுந்து மணிமா ளிகைவலங்கொண்
டுலகு விளக்குந் திருப்பேரம் பலத்தை வணங்கி யுள்ளணைந்தா
ரலகி லண்ட மளித்தவர்தின் முடிந் திருச்சிற் றம்பலமுன். (சிசு)

அளவி லின்பப் பெருங்கூத்த ராட வெடுத்த கழல்காட்ட
வுளமும் புலனு மொருவழிச்சென் றுருகப் போற்றி யுய்கின்றூர்
களனில் வீடம்வைத் தளித்தவமு தன்றி மன்றிற் கழல்வைத்து
வளருந் திருக்கூத் தமுதலகுக் களித்த கருணை வழுத்தினார். (சிஎ)

ஆரா வாசை யானந்தக் கடலுட் டிளைத்தே யமர்ந்தருளாற்
சீரார் வண்ணப் பொன்வண்ணத் திருவந் தாதி திருப்படிக்கீழ்ப்
பாரா தரிக்க வெடுத்தேத்திப் பணிந்தார் பருவ மழைபொழியுங்
காரா னிகர்க்க வரிய கொடைக்கை யாரர் கழறிற் றறிவார்தாம். (சிஙு)

தம்பி ரானுர்க் கெதிர்நின்று தமிழ்ச்சொன் மாலை கேட்பிக்க
வும்பர் வாழ நடமாடி மொருவ ரதற்குப் பரிசிலெனச்
செம்பொன் மாமன் றினிலெடுத்த செய்ய பாதத் திருச்சிலம்பி
னிம்பர் நீட வெழுந்தவொலி தாமு மெதிரே கேட்பித்தார். (சிஏ)

ஆடற் சிலம்பி னொலிகேட்பா ரளவி லின்ப வானந்தங்
கூடப் பெற்ற பெரும்பேற்றின் கொள்கை வாய்ப்பக் கும்பிடுவார்
நீடப் பணியுங் காலமெலா நின்று தொழுது புறம்போந்து
மா. த் திருமா ளிகைவீதி வணங்கிப் புறத்து வைகினார். (சிஅ)

பரவுந் தில்லை வட்டத்துப் பயில்வார் பைம்பொ னம்பலத்து
ளரவும் புனலுஞ் சடையாட வாடி வார்கூத் தாராமை
விரவுங் காதன் மிக்கோங்க வேதம் படியும் திருப்படிக்கீ
ழிரவும் பகலும் பணிந்தேத்தி யின்பஞ் சிறக்கு மங்காளில். (சிக)

ஆடும் பெருமான் பாடல்கேட் டருளித் தாழ்த்த படிதமக்குக்
கூடும் பரிசான் முன்பருளிச் செய்த நாவ லூர்க்கோவை
நீடும் பெருங்கா தலிற்காண நிறைந்த நினைவு நிரம்பமா
றேடும் பாத ரருளினுற் றிருவா லூர்மேற் செலவெழுந்தார். (சுO)

அறிவி னெல்லை யாயதிருத் தில்லை யெல்லை யமர்ந்திறைஞ்சிப்
பிறிவி லாத திருவடியைப் பெருகு முள்ளத் தினிற்பெற்றுச்
செறிபு ஞான போனகர்வந் தருளும் புகலி சென்றிறைஞ்சி
மறிசேர் கரத்தார் கோயில்பல வணங்கி மகிழ்ந்து வழிக்கொள்வார். (சுக)

வழியிற் குழியிற் செழுவயலின் மதகின் மலர்வா விகளின்மடுச்
சுழியிற் றாளந் திரைசொரிபுந் துறைநீர்ப் பொன்னி கடந்தேறி
விழியிற் றிகழுந் திருத்தலார் விரும்பு மிடங்க ளிறைஞ்சியுகக்
கழிவிற் பெருவெள் ளமுங்கொள்ளாக் கழனி யாரூர் கண்ணுற்றார். (கூ உ)

நம்பி தானு மங்காட்போய் நாகைக் காரோ ணம்பாடி
யம்பொன் மணிப்பூ ணவமணிக ளாடை சாந்த மடற்பரிமா
பைம்பொற் சுரிகை முதலான பெற்று மற்றும் பலபதியிற்
றம்பி ரானைப் பணிந்தேத்திக் திருவாரூரிற் சார்ந்திருந்தார். (கூ கூ)

வந்து சேரர் பெருமானர் மன்னுந் திருவா ரூரெய்த
வந்த ணாளர் பெருமானு மாசர் பெருமான் வரவேற்றுச்
சிந்தை மகிழ வெதிர்கொண்டு சென்ற கிடைத்தார் சேரலனர்
சந்த விரைத்தார் வன்றொண்டர் முன்பு விருப்பி னுடன்றுழ்ந்தார். (கூ சு)

முன்பு பணிந்த பெருமாளைத் தாமும் பணிந்து முகந்தெடுத்தே
யன்பு பெருகத் தழுவவிரைந் தவரு மார்வத் தொடுதழுவ
வின்ப வெள்ளத் திடைநின்று மேற மாட்டா தலேவார்போ
லென்பு முருக வுயிரொன்றி யுடம்பு மொன்று மெனவிசைந்தார். (கூ டு)

ஆன நிலேமை கண்டதிருத் தொண்ட ராளவின் மகிழ்வெய்த
மானச் சேரர் பெருமானர் தாமும் வன்றொண் டருங்கலந்த
பான்மை நண்பாற் சேரமான் றோழ ரென்று பார்பரவு
மேன்மை நாம முனேப்பாடி வேந்தர்க் காகி விளங்கியதால். (கூ ங)

ஒருவ ரொருவ ரிற்கலந்த வுணர்வா லின்ப மொழியுரைத்து
மருவ வினியார் பாற்செய்வ தென்ன மென்னு மகிழ்ச்சியினுற்
பருவ மழைச்செங் கைபற்றிக் கொண்டு பரமர் தாள்பணியத்
தெருவு நீங்கிக் கோயிலினுட் புகுந்தார் சேர மான்றோழர். (கூ எ)

சென்று தேவ சிரியனேமுன் னிறைஞ்சித் திருமா ளிகைவலங்கொண்
டுன்று முள்ளத் தொங்கிபுகு வா ருடைய நம்பி முன்னுக
நின்று தொழுது கண்ணருவி வீழ நிலத்தின் மிசைவீழ்ந்தே
யென்று மினிய தம்பெருமான் பாத மிறைஞ்சி யேத்தினர். (கூ அ)

தேவர் முனிவர் வந்திறைஞ்சுந் தெய்வப் பெருமாள் கழல்வணங்கி
மூவர் தமக்கு முதலாகு மவரைத் திருமும் மணிக்கோவை
நாவ லூரர் தம்முன்பு நன்மை விளங்கக் கேட்பித்தார்
தாவில் பெருமைச் சேரலனர் தம்பி ரானர் தாங்கொண்டார். (கூ கூ)

அங்க ணருள்பெற் றெழுவாரைக் கொண்டு புறம்போக் தாரூரர்
நங்கை பரவை யார்திருமா ளிகையி னண்ண நன்னுதலார்
பொங்கு விளக்கு நிறைகுடமும் பூமா லேகளும் புகையினிலு
மெங்கு மடவா ரெடுத்தேற்ற வணேந்து தாமு மெதிர்கொண்டார். (எ ஏ)

சோதி மணிமா ளிகையின்கட் சுடரும் பசும்பொற் காலமளி
மீது பெருமா டமையிருத்தி நம்பி மேலி யுடனிருப்பக்
கோதில் குணத்துப் பரவையார் கொழுந ரஞ்சுங் தோழர்க்கு
நீதி வழுவா வொழுக்கத்து நிறைபூ சனேகண் முறையளித்தார். (எ எ)

தாண்டும் புரவிச் சேரர்குலப் பெருமா டமக்குத் திருவமுது
தூண்டு சோதி விளக்கனையா ரமைக்கத் தூணவர் சொல்லுதலும்
வேண்டும் பரிசு வெவ்வேறு விதத்துக் கறியும் போனகமு
மீண்டு சமைப்பித் துடன்வந்தார்க் கெல்லா மியல்பின் விருந்தமைத்தார். (எஉ)

அரசர்க் கமைத்த சிறப்பினுமே லடியார்க் கேற்கும் படியாக
விரவிப் பெருகு மன்பினுடன் விரும்பு மமுது சமைத்தற்பின்
புரசைக் களிற்றுச் சேரலனர் புடைசூழ்ந் தவரோ டமுதுசெயப்
பரவைப் பிறந்த திருவனைய பரவை யார்வந் தறிவித்தார். (எஊ)

சேரர் பெருமா னெழுந்தருளி யமுது செய்யச் செய்ததவத்
தாரின் மலிபூங் குழன்மடவாய் தாழா தமுது செய்வியெனப்
பாரின் மலிசீர் வன்றொண்ட ரருளிச் செய்யப் பரிகலங்க
ளேரின் விளங்கத் திருத்திக்கா லிரண்டிற் படியா வேற்றுதலும். (எசு)

ஆண்ட நம்பி பெருமாளே யுடனே யமுது செய்தருள
வேண்டு மென்ன வாங்கவரும் விரைந்து வணங்கி வெரு புறலும்
நீண்ட தடக்கை பிடித்தருளி நீண்டு நேரே குறைகொள்ள
வீண்ட வமுது செய்வதனுக் கிசைந்தார் பொறையர்க் கிறையவனார். (எஎ)

ஒக்க வமுது செய்தருள வுயர்ந்த தவத்துப் பரவையார்
மிக்க விருப்பி லமுதுசெய்வித் தருளி மேவும் பரிசனங்க
டக்க வகையா லறுசுவையுந் தாம்வேண் டியவா றினிதருந்தத்
தொக்க மகிழ்ச்சி களிசிறப்பத் தூயவிருந்தின் கடன்முடிப்பார். (எரு)

பனிநீர் விரவு சந்தனத்தின் பசுங்கர்ப் பூர விரைக்கலவை
வனிதை யவர்கள் சமைத்தெடுப்பக் கொடுத்து மகிழ்மான் மதச்சாந்தும்
புனித கறும்பூ மாலைகளும் போற்றிக் கொடுத்துப் பொற்கொடியா
ரினிய பஞ்ச வாசமுட னடைக்கா யமுது மேந்தினர். (எஏ)

ஆய சிறப்பிற் பூசனைக ளளித்த வெல்லா மமர்ந்தருளித்
தூய நீறு தங்கடிரு முடியில் வாங்கித் தொழுதணிந்து
மேய விருப்பி னுடனிருப்பக் கழறிற் றறிவார் மெய்த்தொண்டின்
சேய நீர்மை யடைந்தாராய் நம்பி செம்பொற் கழல்பணிந்தார். (எஅ)

மலைநாட் டரசர் பெருமானர் வணங்க வணங்கி யெதிர்தழுவிக்
கலைநாட் பெருகு மதிமுகத்துப் பரவை யார்தங் கணவனார்
சிலைநாட் டியவெல் கொடியாரைச் சேரத் தந்தா ரெனக்கங்கை
யிலைநாட் கொன்றை முடிச்சடையா ரருளே போற்றி யுடனமர்ந்தார். (எகூ)

செல்வத் திருவா ரூர்மேவுஞ் செம்பொற் புற்றி னிதமர்ந்த
வில்வெற் புடையார் கழல்வணங்கி வீதி விடங்கப் பெருமானே
மல்லற் பவனி சேவித்து வாழ்ந்து நாளு மனமகிழ்ந்து
சொல்லித் தகர்தா மிருவர்களுந் தொடர்ந்த காத லுடன்சிறந்தார். (அ0)

இவ்வா றெழுகு நாளின்க ணிலங்கு மணிப்பூண் வன்றொண்டர்
மைவாழ் களத்து மறையவனர் மருவு மிடங்கள் பலவணங்கிச்
செய்வார் கன்னித் தமிழ்நாட்டுத் திருமா மதுரை முதலான
மொய்வார் சடையார் மூதூர்க ளிறைஞ்ச முறைமை யானினைந்தார். (அக)

சேரர் பிரானு மாரூரர் தம்மைப் பிரியாச் சிறப்பாலு
மார்வம் பெருகத் தமக்கன்று மதுரை யால வாயமர்ந்த
வீர ரளித்த திருமுகத்தால் வீரும்பு மன்பின் வணங்கு தற்குச்
சார வெழுந்த குறிப்பாலுந் தாமு முடனே செலத்துணிந்தார். (அஉ)

இருவர் திருவுள் ளமுவிசைத்த பொழுதி லெழுந்து திருவாரூ
ரொருவர் மலர்த்தாள் புக்கிறைஞ்சி யுடன்பாட் டருளாற் போந்தருளி
மருவு முரிமைப் பெருஞ்சுற்றம் வரம்பில் பணிகள் வாகனங்கள்
பொருவில் பண்டா ரங்கொண்டு போது வார்க ளுடன்போத. (அஊ)

பேவித் தணையும் பரிசனங்கள் சூழத் திருவா ரூரிறைஞ்சிக்
காவிற் பயிலும் புறம்பணையைக் கடந்து போந்து கீழ்வேளூர்
மேவிப் பரமர் கழல்வணங்கிப் போந்து வேலைக் கழிக்கானற்
பூவிற் றிகழும் பொழிஞகை புகுந்து காரோ ணம்பணிந்தார். (அசு)

திருக்கா ரோணச் சிவக்கொழுந்தைச் சென்று பணிந்து சிந்தையினே
யுருக்கார் வச்செந் தமிழ்மாலை சாத்திச் சிலகா லுறைத்துபோய்ப்
பெருக்கா றுலவு சடைமுடியா ரிடங்கள் பிறவும் பணிந்தேத்தி
யருட்கா ரணர்தந் திருமறைக்கா டணைந்தார் சேர மாரூரர். (அடு)

முந்நீர் வலங்கொண் மறைக்காட்டு முதல்வர் கோயில் சென்றெய்திச்
செந்நீர் வாய்மைத் திருநாவுக் கரசும் புகுந்திச் சிவக்கன்று
மந்நீர் திறக்க வடைக்கவெனப் பாடித் திருவா யிலையணைந்து
நன்னீர் பொழியும் விழியினராப் நாயன் மாரை நினைந்திறைஞ்சி. (அகு)

நிறைந்த மறைக ளர்ச்சித்த நீடு மறைக்காட் டருமணியை
யிறைஞ்சி வீழ்ந்து பணிந்தெழுந்து போற்றி யாழைப் பழித்தென்னு
மறைந்த பதிகத் தமிழ்மாலை யம்பி சாத்த வருட்சேரர்
சிறந்த வந்தா தியிற்சிறப்பித் தனவே யோதித் திருத்தெழுந்தார். (அஎ)

எழுந்து பணிந்து புறத்தெய்தி யிருவர் பெருந்தொண் டருஞ்சிலநாட்
செழுந்தண் பழனப் பதியதனு ளமர்ந்து தென்பாற் றிறைக்கடனஞ்
சழுந்து படற்று மகத்தியான் பள்ளி யிறைஞ்சி யவிர்மதியக்
கொழுந்து வளர்செஞ் சடைக்குழகர் கோடிக் கோயில் குறுகினார். (அஅ)

கோடிக் குழகர் கோயிலயற் குடிக ளென்றும் புறத்தெங்கு
நாடிக் காணு துள்புக்கு நம்பர் பாதந் தொழுதுள்ளம்
வாடிக் கடிதாய்க் கடற்காற்றென் றெறித்து மலர்க்கண் ணீர்வாரப்
பாடிக் காடு காள்புணர்ந்த பரிசும் பதிகத் திடைவைத்தார். (அகூ)

அங்கு வைகிப் பணிந்தருளாற் போவா ரகன்சோ ணாட்டரனூர்
தங்கு மிடங்கள் வணங்கிப் போய்ப் பாண்டி நாடு தனேச்சார்ந்து
திங்கண் முடியார் திருப்புத்தூ ரிறைஞ்சிப் போந்து சேணிலங்கு
மங்கு றவழு மணிமாட மதுரை மூதூர் வந்தணைந்தார். (கூ0)

வே று.

சேரமான் றேழருமச் சேரர்பிரா ணும்பணிப்பூ
ணாரமார் பரைமதுரை யாலவா யினில்வணங்க
வாரமா வந்தணைய வழுதியார் மனக்காதல்
கூரமா நகர்கோடித் தெதிர்கொண்டு கொடுபுக்கார். (கூக)

தென்னவர்கோன் மகளாரைத் திருவேட்டு முன்னரே
தொன்மதுரை நகரின்க ணினிதிருந்த சோழ
ரன்னவர்க ளுடன்கூட வணையவவ ருங்கூடி
மன்னுதிரு வாலவாய் மணிக்கோயில் வந்தணைந்தார். (கூ)

திருவால வாயமர்ந்த செஞ்சடையார் கோயில்வலம்
வருவார்முன் வீழ்ந்திறைஞ்சி வன்றொண்டர் வழித்தொண்டு
தருவாரைப் போற்றிசைத்துத் தாழ்ந்தெழுந்து வாழ்ந்துதமிழ்ப்
பெருவாய்மை மலர்புனைந்து பெருமகிழ்ச்சி பிறங்கினார். (கக)

படியேறு புகழ்ச்சேரர் பெருமானும் பார்மிசைவீழ்ந்
தடியேனைப் பொருளாக வளித்ததிரு முகக்கருணை
முடிவேதென் றறிந்திலே னெனமொழிக டமாறக்
கடியேறு கொன்றையார் முன்பரவிக் களிகூர்ந்தார். (கச)

செம்பியனு ருடன்செழியர் தாம்பணிந்து சேரருட
னம்பியுமுன் புறத்தணைய நண்ணியபே ருவகையா
லும்பர்பிரான் கோயிலினின் றுடன்கொடுபோ யிருவர்க்கும்
பைம்பொன்மணி மாளிகையிற் குறைவறுத்தார் பஞ்சவனார். (கஞ)

உளமகிழக் கும்பிட்டங் குறையுரா ளுதியருடன்
களரொளிப்பூண் வன்றொண்டர் தாமிருந்த விடங்கெழுமி
வளவனார் மீனவனார் வளம்பெருக மற்றவரோ
டளவளா வியவிருப்பா னமர்ந்துகலக் கினிதிருந்தார். (கஈ)

அந்நாளின் மதுரைநகர் மருங்கரனு ரமர்பதிகள்
பொன்னுரை மணிமார்பிற் புரவலர்மூ வரும்போதச்
செந்நாவின் மூனைப்பாடித் திருநாடர் சென்றிறைஞ்சிச்
சொன்மாலை களுஞ்சாத்தித் தொழுதிருப்பூ வணத்தணை யார். (கஎ)

நீடுதிருப் பூவணத்துக் கணித்தாக நேர்செல்ல
மாடுவரும் திருத்தொண்டர் மன்னியவப் பதிகாட்டத்
தேடுமறைக் கரியாரைத் திருவுடையா ரென்றெடுத்துப்
பாடிசையிற் பூவணமீ தோவென்று பணிந்தணைவார். (கஅ)

சென்றுதிருப் பூவணத்துத் தேவர்பிரான் மகிழ்கோயின்
முன்றில்வலங் கொண்டிறைவர் முன்வீழ்ந்து பணிந்தெழுந்து
கின்றுபர விப்பாடி நேர்நீங்கி யுடன்பணிந்த
வென்றிமுடி வேந்தருடன் போந்தங்கண் மேவினார். (கக)

அப்பதியி லமர்ந்திறைஞ்சிச் சிலகாலி லாரூரர்
மூப்பெருவேந் தர்களோடு முதன்மதுரை நகரெய்தி
மெய்ப்பரிவிற் றிருவால வாயுடையார் விரைமலர்த்தா
ளெப்பொழுதும் பணிந்தேத்தி யின்புற்றங் கிருக்கின்றார். (கஙக)

செஞ்சடையார் திருவாப்ப னூர்திருவே டகமுதலா
நஞ்சணியுங் கண்டரவர் நயந்தபதி தண்ணியே
யெஞ்சலிலாக் காதலினு லினிதிறைஞ்சி மீண்டணைந்து
மஞ்சணையு மதின்மதுரை மாநகரின் மகிழ்ந்திருந்தார். (கஙஎ)

பரமர்திருப் பரங்குன்றிற் சென்றுபார்த் திபரோடும்
புரமெரித்தார் கோயின்வலங் கொண்டுபுகுந் துள்ளிறைஞ்சிச்
சிரமலிமா லேச்சடையார் திருவடிக்கீ ழாட்செய்யு
மருமைநினைந் தஞ்சுதுமென் றூரூரர் பாடுவார். (கoஉ)

கோத்திட்டை யெனவெடுத்துக் கோதிறிருப் பதிகவிசை
மூர்த்தியார் தமைவணங்கி முக்கோக்க டம்முன்பே
யேத்தியவண் டமிழ்மாலை யின்னிசைபா டிப்பரவிச்
சாத்தினுஞ் சங்கரனார் தங்குதிருப் பரங்குன்றில். (கoஙூ)

இறைவர்திருத் தொண்டுபுரி யருமையினை யிருநிலத்து
முறைபுரியு முதல்வேந்தர் மூவர்களுங் கேட்டஞ்சி
மறைமுன்தான் மணிமார்பின் வன்றொண்டர் தமைப்பணிந்தார்
நிறைதவத்தோ ரப்பாலு நிருத்தர்பதி தொழினேந்தார். (கoச)

அந்நாட்டுத் திருப்பதிகள் பலவுமணைந் திறைஞ்சமலை
நன்னுட்டு வேந்தருட னம்பிதா மெழுந்தரு ளி
மின்னுட்டும் பன்மணிப்பூண் வேந்தரிரு வருமீள்வார்
தென்னுட்டு வேண்டுவன செய்தமைப்பார் தமைவிடுத்தார். (கoஞ)

இருபெருவேந் தருமியல்பின் மீண்டதற்பி னெழுந்தருளும்
பொருவருஞ்சீர் வன்றொண்டர் புகழ்ச்சேர ருடன்புணர்தர்
மருவியதா னம்பலவும் பணிந்துபோய் மலைச்சாரற்
குருமணிகள் வெயிலெறிக்குங் குற்றாலஞ் சென்றடைந்தார். (கoசு)

குற்றாலத் தினிதமர்ந்த கூத்தர்குரை கழல்வணங்கிச்
சொற்றமிழ மலர்புனைந்து குறும்பலாத் தொழுதிப்பான்
மூற்றாவெண் மதிமுடியார் பதிபணிந்து மூவெயிலின்கள்
செற்றார்மன் னியசெல்வத் திருநெல்வே லியையணைந்தார். (கoஎ)

நெல்வேலி நீற்றழகர் தமைப்பணிந்து பாடிநிகழ்
பல்வேறு பதிபிறவும் பணிந்தன்பால் வந்தணைந்தார்
வில்வேட ராய்வென்றி விசயனெதிர் பன்றிப்பின்
செல்வேத முதல்வரமர் திருவிரா மேச்சரத்து. (கoஅ)

மன்னுபிரா மேச்சரத்து மாமணியை முன்வணங்கிப்
பன்னுதமிழ்த் தொடைசாத்திப் பயில்கின்றூர் பாம்பணிந்த
சென்னியார்மா தோட்டத்துத் திருக்கேதீச் சரஞ்சார்ந்த
சொன்மலர்மா லேகள்சாத்தித் தூரத்தே தொழுதமர்ந்தார். (கoகூ)

திருவிரா மேச்சரத்துச் செழும்பவளச் சுடர்க்கொழுந்தைப்
பரிவினுற் றொழுதகன்று பரமர்பதி பிறபணிந்து
பெருவிமா னத்திமையோர் வணங்குபெருந் திருச்சுழியன்
மருவினூர் வன்றொண்டர் மலேவேந்த ருடன்கூட. (ககo)

திருச்சுழிய லிடங்கொண்ட செம்பொன்மலைச் சிலையாரைக்
கருச்சுழியின் வீழாமைக் காப்பாரைக் கடல்விடத்தி
னிருட்சுழியு மிடற்றூரை யிறைஞ்சியெதி ரிதழிமலர்ப்
பருச்சுழியத் தடனூனு யுயிரெனும்பா மலர்புனைந்தார். (கஙக)

அங்கணரைப் பணிந்துறையு மாரூரர்க் கவ்வூரிற்
கங்குலிடைக் கனவின்கட் காளையார் திருவடிவாற்
செங்கையினிற் பொற்செண்டுத் திருமுடியிற் சுழியமுட
னெங்குமிலாத் திருவேட மென்புருக முன்காட்டி. (ககஉ)

கானப்பேர் யாமிருப்ப தெனக்கழறிக் கங்கையெனும்
வானப்பே ராறுலவு மாமுடியார் தாமகல
ஞானப்பே ராளருணர்ச் சதிசயித்து காகமுட
னேனப்பே ரெயிறணிந்தா ருருளிருந்த பரிசென்பார். (ககஙு)

கண்டருளும் படிகழறிற் றறிவார்க்கு மொழிந்தருளிப்
புண்டரிகப் புனற்சுழியற் புனிதர்கழல் வணங்கிப்போ
யண்டர்பிரான் றிருக்கானப் பேரணைவா ராரூரர்
தொண்டரடித் தொழுலுமெலுஞ் சொற்பதிகத் தொடைபுனைவார். (ககச)

காளையார் தமைக்கண்டு தொழப்பெறுவ தென்றென்று
தாளைகா ளும்பரவத் தருவார்பாற் சார்கின்ரு
ராளோடீ விடைக்காண வஞ்சியதீர் காயலே
வாளேபாய் புனைப்பழன மூனேப்பாடி வளநாடர். (ககஞ)

மன்னுதிருக் கானப்பேர் வளம்பதியில் வந்தெய்திச்
சென்னிவளர் மதியணிந்தார் செழுங்கோயில் வலங்கொண்டு
முன்னிறைஞ்சி யுள்ளணைந்து முதல்வர்சே வடிதாழ்ந்து
பன்னுசெழுந் தமிழ்மாலை பாடிஞர் பரவினர். (ககசு)

ஆராத காதலுட னப்பதியிற் பணிந்தேத்திச்
சீராருந் திருத்தொண்டர் சிலநாளங் கமர்ந்தருளிக்
காராரு மலர்ச்சோலைக் கானப்பேர் கடந்தணைந்தார்
போரானேற் றுர்கபிலப் பொருப்பர்திருப் புனவாயில். (ககஎ)

புனவாயிற் பதியமர்ந்த புனிதரா லயம்புக்கு
மனவார்வ முறச்சித்த நீனேயென் னெடுவென்று
வினவான தமிழ்பாடி வீழ்ந்திறைஞ்சி யப்பதியிற்
சினவாளே யுரித்தணிந்தார் திருப்பாதத் தொழுதிருந்தார். (ககஅ)

திருப்புனலா யிற்பதியி லமர்ந்தசிவ னுர்மகிழும்
வீருப்புடைய கோயில்பல பணிந்தருளான் மேவினுர்
பொருப்பிலெடு காணகன்று புனற்பொன்னி நாடணைந்து
பருப்பதவார் சிலையார்தம் பாம்பணிமா கைர்தன்னில். (ககக)

பாதாளீச் சரநிறைஞ்சி யதன்மருங்கு பலபதியும்
வேதாதி நாதர்கழல் வணங்கிமிகு விசையினுடன்
சூதாருந் துணைமுலையார் மணிவாய்க்குத் தோற்றிரவு
சேதாம்பல் வாய்நிறக்குந் திருவாரூர் சென்றணைந்தார். (கஉ0)

திருநாவ லூர்வேந்தர் சேரர்குல வேந்தருடன்
வருவாரைத் திருவாரூர் வாழ்வார்க ளெதிர்கொள்ளத்
தருகாத லுடன்வணங்கித் தம்பெருமான் கோயிலினுட்
பெருகார்வத் தொடுவிரும்பும் பெரும்பே று பெறப்புகுந்தார். (கஉக)

வாசமலர்க் கொன்றையார் மகிழ்கோயில் வலங்கொண்டு
கேசமுற முன்னிறைஞ்சி நெடும்பொழுதெ லாம்பரவி
யேசறவாற் றிருப்பதிக மெடுத்தேத்தி யெழுந்தருளாற்
பாசவினைத் தொடக்கறுப்பார் பயில்கோயில் பணிந்தணைவார். (கஉஉ)

பரவையார் மாளிகையிற் பரிசனங்கண் முன்னெய்த
விரவுபே ரலங்கார விழுச்செல்வ மிகப்பெருக
வரவெதிர்கொண் டடிவணங்க வன்றொண்டர் மலைநாட்டுப்
புரவலனு ரையுங்கொண்டு பொன்னணிமா ளிகைபுகுந்தார். (கஉஊ)

பரவியே பரவையார் பரிவுடனே பணிந்தேத்தி
வீரவீயபோ னகங்கறிகள் விதம்பலவா கச்சமைத்துப்
பரிகலமும் பாவாடை பகல்விளக்கு முடனமைத்துத்
திருவமுது செய்வித்தார் திருத்தியதேன் மொழியினர். (கஉ.ஈ)

மங்கலமாம் பூசனைகள் பரவையார் செயமகிழ்ந்து
தங்கினிய தமர்கின்றார் தம்பிரான் கோயிலினுட்
பொங்குபெருங் காலமெலாம் புக்கிறைஞ்சிப் புறத்தணைந்து
நங்கள்பிரா னருண்மறவா நல்லிசையாட் டினேயர்தார். (கஉஎ)

நிலைச்செண்டும் பரிச்செண்டும் வீசியக மகிழ்வெய்தி
யிலக்கரும்போர்த் தகர்ப்பாச்சல் கண்டருளி வென்றிபெற
மிலேக்குகெடி முட்கணைக்கால் வாரணப்போர் மகிழ்ந்தருளி
யிலக்குமறப் பலபுள்ளி னமர்விரும்பி யமர்கின்றார். (கஉ.சு)

மே வு று.

வீரவு காதன் மீக்கூர மேவு நாள்கள் பலசெல்லக்
கரவி லீகைக் கேரளனார் தங்கள் கடல்சூழ் மலைநாட்டுப்
பரவை யார்தங் கொழுநனார் தம்மைப் பணிந்து கொண்டணைவா
னிரவும் பகலுந் தொழுதிருக்க விசைத்தா ரவரு மெழுந்தருள. (கஉஏ)

நங்கை பரவை யாருள்ளத் திசைவா னம்பி யெழுந்தருளத்
திங்கண் முடியார் திருவருளைப் பரவி சேர மான்பெருமா
னெங்கு முள்ள வடியாருக் கேற்ற பூசை செய்தருளிப்
பொங்கு முயற்சி யிருவரும்போய்ப் புக்கார் புனிதர் பூங்கோயில். (கஉஅ)

தம்பி ரானைத் தொழுதருளாற் போந்து தொண்டர் சார்ந்தணைய
நம்பி யாரூ ரருஞ்சேரர் நன்னுட் டரச ரெனாகும்
பைம்பொன் மணிநீண் முடிக்கழறிற் றறிவார் தாமும் பயணமுடன்
செம்பொ னீடு மதிலாரூர் தொழுது மேல்பாற் செல்கின்றார். (கஉக)

மே வு று.

பொன்பரப்பி மணிவரன்றிப் புனல்பரக்குங் காவேரித்
தென்கரைபோய்ச் சிவன்மகிழ்ந்த கோயில்பல சென்றிறைஞ்சி
மின்பரப்புஞ் சடையண்ணல் விரும்புதிருக் கண்டியூ
ரன்புருக்குஞ் சிந்தையுடன் பணிந்துபுறத் தணைந்தார்கள். (கஉ0)

வடகரையிற் றிருவையா றெதிர்தோன்ற மலர்க்கரங்க
ளுடலுருக வுள்ளுருக வுச்சியின்மேற் குவித்தருளிக்
கடல்பரந்த தெனப்பெருகுங் காவிரியைக் கடந்தேறித்
தொடர்வுடைய திருவடியைத் தொழுவதற்கு நினைவுற்றார். (கஉக)

வேறு.

ஐயா றதனைக் கண்டுதொழு தருளா ரூரர் தமைநோக்கிச்
செய்யான் பிரியாச் சேரமான் பெருமா ளருளிச் செய்கின்றார்
மையார் கண்டர் மருவுதிரு வையா றிறைஞ்ச மனமுருகி
கையா கின்ற திவ்வாறு கடந்து பணிவோ மாமென்ன. (கஙஉ)

ஆறு பெருகி யிருகரையும் பொருது விசும்பி லெழுவதுபோல்
வேறு நாவா யோடங்கண் மீது செல்லா வகை மிகைப்ப
நீறு விளங்குந் திருமேனி நிருத்தர் பாதம் பணிந்தன்பி
னூறு தெறியாச் செலவுரியார் தரியா தழைத்துப் பாடுவார். (கஙங)

பரவும் பரிசென் றெடுத்தருளிப் பாடுந் திருப்பாட் டினின்முடிவி
லரவம் புனைவார் தமையையா றுடைய வடிக ளோவென்று
விரவும் வேட்கை யுடனழைத்து விளங்கும் பெருமைத் திருப்பதிக
நிரவு மிசையில் வன்றொண்டர் நின்று தொழுது பாடுதலும். (கஙச)

மன்றி னிறைந்து நடமாட வல்லார் தொல்லை யையாற்றிற்
கன்று தடையுண் டெதிரழைக்கக் கதறிக் கனைக்கும் புனிற்றுப்போ
லொன்று முணர்வாற் சராசரங்க ளெல்லாங் கேட்க வோலமென
நின்று மொழிந்தார் பொன்னிமா நதியு நீங்கி நெறிகாட்ட. (கஙஞ)

விண்ணின் மூட்டும் பெருக்காறு மேல்பாற் பளிக்கு வெற்பென்ன
நண்ணி நிற்கக் கீழ்பாலீர் வடிந்து நடுவு நல்லவழி
பண்ணிக் குளிர்ந்த மணற்பரப்பக் கண்ட தொண்டர் பயின்மாரி
கண்ணிற் பொழிந்து மயிர்ப்புளகங் கலந்தக் கையஞ் சலிகுவித்தார். (கஙட)

நம்பி பாதஞ் சேரமான் பெருமாள் பணிய நாவலூர்ச்
செம்பொன் மூந்நூன் மணிமார்பர் சேரர் பெருமா னெதிர்வணங்கி
யும்பர் நாத ருமக்களித்த தன்றே வென்ன வுடன்மகிழ்ந்து
தம்பி ரானைப் போற்றிசைத்துத் தடங்கா வேரி நடவேண்டார். (கஙண)

செஞ்சொற் றமிழ்நா வலர்கோனுஞ் சேரர் பிரானுந் தம்பெருமா
னெஞ்சலில்லா நிறையாற்றி னிடையே யளித்த மணல்வழியிற்
றஞ்ச முடைய பரிசனமுந் தாமு மேறித் தலைச்சென்று
பஞ்ச நதிவா ணரைப் பணிந்து விழுந்தா ரெழுந்தார் பரவினார். (கஙஅ)

அங்க ணரனூர் கருணையினை யாற்ரு தாற்றித் திளைத்திறைஞ்சித்
தங்கள் பெருமான் றிருவருளாற் ரூழ்ந்து மீண்டுக் தடம்பொன்னிப்
பொங்கு நதிபின் முன்வந்த படியே நடவு போந்தேறத்
துங்க வரைபோ னின்றநீர் துரந்து தொடரப் பெருகியதால். (கஙக)

ஆய செயலி னதிசயத்தைக் கண்டக் கரையி லேயாறு
மேய பெருமா னருள்போற்றி வீழ்ந்து தாழ்ந்து மேல்பாற்போய்த்
தூய மதிவாழ் சடையார்தம் பதிகள் பிறவுந் தொழுதேத்திச்
சேய கொங்க நாடணைந்தார் திருவா ரூரர் சேரருடன். (கசஉ)

கொங்க நாடு கடந்து போய்க் குலவு மலைநாட் டெல்லையுற
நங்கள் பெருமான் ரூழனூர் நம்பி தம்பி ரான்ரூழ
ரங்க ணுடனே யணையவெழுந் தருளா நின்ரு ரெனும்விருப்பா
லெங்கு மன்னாட் டெள்ளவர்க ளெல்லா மெதிர்கொண் டின்புறுவார். (கசக)

பதிக ளெங்குந் தோரணங்கள் பாங்க ரெங்கும் பலவளங்கள்
வதிக ளெங்குங் குளிர்பந்தர் மனைக ளெங்கு மகிற்புகைக்கார்
நதிக ளெங்கு மலர்ப்பிறங்கள் ஞாங்க ரெங்கு மோங்குவன
நிதிக ளெங்கு முழவினொலி நிலங்க ளெங்கும் பொலஞ்சுடர்ப்பூ. (கசஉ)

திசைக டோறும் வ்ரும்பெருமை யமைச்சர் சேனைப் பெருவெள்ளங்
குசைகொள் வாசி நிரைவெள்ளங் கும்ப யானை யணிவெள்ள
மிசைகொள் பண்ணும் பிடிவெள்ள மேவுஞ் சோற்ற வெள்ளங்கண்
டசைவி லின்பப் பெருவெள்ளத் தமர்ந்து கொடுங்கோ ளுரணேந்தார். (கசஙூ)

கொடுங்கோ ளுரின் மதில்வாயி லணிகோ டித்து மறுநிலுடுத்
தொடுங்கோ புரங்கண் மாளிகைகள் சூளி கரிசா லுகடெற்றி
யெடுங்கோ ஙகர்க ளாடரங்கு நிரந்த மணித்தா மங்கண்மது
விடுங்கோ தைப்பூந் தாமங்க ணிரைத்து வெங்வே றலங்கரித்து. (கசஞ)

ஈர மார்ந்த நெநிர்கொள்ள ணண்ணி யெண்ணி லரங்குதொறு
மகரக் குழைமா தர்கள்பாடி யாட மணிவீ திலிணைவார்
சிகர நெடுமா ளிகையணையார் சென்று திருவஞ் சைக்களத்து
நிகரி றுண்டர் தமைக்கொண்டு புகுந்தா ருதியர் நெடுந்தகையார். (கசடி)

இறைவர் கோயின் மணிமுன்றில் வலங்கொண் டிறைஞ்சி யெதிர்புக்கு
நிறையுங் காத லுடன்வீழ்ந்து பணிந்து தேர்ந்தின் ருருகர்
முறையில் விளம்புந் திருப்பதிக முடிப்ப துகங்கை யென்றெடுத்துப்
பிறைகொண் முடியார் தமைப்பாடிப் பரவிப் பெருமா ளுடன்றொழுதார். (கசண)

தொழுது நினைத்துப் புறம்போந்து தோன்றப் பண்ணும் பிடிமேற்பார்
முழுது மேத்த நம்பியைமுன் போற்றிப் பின்பு தாமேறிப்
பழுதின் மணிச்சா மரையிரட்டப் பைம்பொன் மணிமா விளையில்வரும்
பொழுது மறுகி லிருபுடையு மிடைந்தார் வாழ்த்திப் புகல்கின்றார். (கசஎ)

கல்ல தோழர் நம்பெருமா டமக்கு நம்பி யிவரென்பா
ரெல்லை யில்லாத் தவமுன்பென் செய்தோ பிவரைத் தொழுவென்பார்
செல்வ மினியென் பெறுவதுநஞ் சிலம்பு நாட்டுக் கெனவுரைப்பார்
சொல்லுங் தரமோ பெருமாள்செய் தொழிலைப் பாரீ ரெனத்தொழுவார். (கசஅ)

பூவும் பொரியும் பொற்றகளும் பொழிந்து பணிவார் பொருவிலிவர்
மேவும் பொன்னித் திருநாடே புவிக்குத் திலத மெனலியப்பார்
பாவுந் துதிக ளெம்மருங்கும் பயில வந்து மாளிகையின்
மாவுங் களிறு நெருங்குமணி வாயிற் புகுந்து மருங்கிழிந்தார். (கசஙு)

கழறிற் றறியுந் திருவடியுங் கலேகா வலர்தம் பெருமானு
முழுவிற் பொலியுந் திருநெடுந்தோண் முனேவர் தம்மை யுடன்கொண்டு
விழவிற் பொலியு மாளிகையில் விளங்கு சிங்கா சனத்தின்மிசை
நிழறிக் கொளிரும் பூணுரை யிருத்தித் தாமு நேர்நின்று. (கஞ0)

செம்பொற் கரக வாசநீர் தேவி மார்க ளெடுத்தேந்த
வம்பொற் பாதந் தாம்வீளக்கி யருளப் புகலு மாரூரர்
தம்பொற் றூ வாங்கியிது தகாதென் றருளத் தரணியில்வீழ்ந்
தெம்பெற் றிமையாற் செய்தனவிங் கெல்லா மிசைய வேண்டுமென. (கஞக)

பெருமாள் வேண்ட வெதிர்மறுக்க மாட்டா ரன்பர் பெருந்தகையார்
திருமா நெடுந்தோ ளுதியர்பிரான் செய்தவெல்லாங் கண்டிருந்தா
ரருமா னங்கொள் பூசனைக ளடைவே யெல்லா மளித்ததற்பி
ஞருமா மதிவெண் குடைவேந்த ருடனே யமுது செய்துவந்தார். (கஙஉ)

சேர ருடனே திருவமுது செய்த பின்பு கைகோட்டி
யார நறுமென் கலவைமான் மதச்சாந் தாடை யணிமணிப்பூ
ணீர விரைமென் மலர்ப்பணிக ளினைய முதலா யினவருக்கஞ்
சார வெடுத்து வன்றொண்டர்ச் சாத்தி மிக்க தமக்காக்கி. (கஙஊ)

பாட லாட லின்னியங்கள் பயிறன் முதலாம் பண்ணேயினி
வீடு பினிய வினேதங்கள் நெருங்கு காலந் தொறுநிகழ
மாடு விரைப்பூந் தருமணஞ்செ யாரா மங்கள் வைகுவித்துக்
கூட முனேப்பா டியர்கோவைக் கொண்டு மகிழ்ந்தார் கோதையார். (கஙஎ)

தே வு று.

செண்டாடுந் தொழின்மகிழ்வுஞ் சிறசோற்றுப் பெருஞ்சிறப்பும்
வண்டாடு மலர்வாவி மருவியநீர் விளையாட்டுந்
தண்டாமும் மதகும்பத் தடமலேப்போர் சலமற்போர்
கண்டாரா விருப்பெய்தக் காவலனார் காதல்செய்நாள். (கஙஏ)

நாவலர்தம் பெருமானுந் திருவாரூர் நகராளுந்
தேவர்பிரான் கழலொருநாண் மிகநினேந்த சிந்தையரா
யாவியையா ரூரானே மறக்கலுமா மேயென்னு
மேவியசொற் றிருப்பதிகம் பாடியே வெருவுற்றார். (கஙஐ)

திருவாரூர் தனினினேந்து சென்றுதொழு வேனென்று
மருவார்வத் தொண்டருடன் வழிக்கொண்டு செல்பொழுதி
லொருவாரண் புள்ளுருக வுடனெழுந்து கைதொழுது
பெருவான வரம்பனார் பிரிவாற்றார் பின்செல்வார். (கஙஒ)

வன்றொண்டர் முன்னெய்தி மனமழிந்த வுணர்வினரா
யின்றுமது பிரிவாற்றே னென்செய்கேன் யானென்ன
வொன்றுநீர் வருந்தாதே யுமதுபதி யின்கணிருந்
தன்றினர் முனேமுருக்கி யரசாளு மெனமொழிந்தார். (கஙஓ)

ஆரூரர் மொழிந்தருள வதுகேட்ட வருட்சேரர்
பாரோடு விசும்பாட்சி யெனக்குமது பாதமலர்
தேரூரு நெடுவீதித் திருவாரூர்க் கெழுந்தருள
நேரூரு மனக்காத லீக்கவுமஞ் சுவனென்றார். (கஙஔ)

மன்னவனு ரதுமொழிய வன்றொண்ட ரெதிர்மொழிவா
ரென்னுயிருக் கின்னுயிரா மெழிலாரூர்ப் பெருமானே
வன்னெஞ்சக் கள்வனேன் மறந்திரேன் மதியணிர்தா
ரின்னருளா லரசளிப்பீர் நீரிருப்பீ ரெனவிறைஞ்ச. (கஙக0)

மற்றவரும் பணிந்திசைத்தே மந்திரிக டமையழைத்துப்
பொற்புறிறை தொன்னகரி லிற்றைக்கு முன்புகுந்த
நற்பெரும்பண் டாரார ளுவருக்க மானவெலாம்
பற்பலரா மாளின்மிசை யேற்றிவரப் பண்ணுமென. (கஙக)

ஆங்கவரு மன்றுவரை யாயமா கியதனங்க
ளோங்கியபொ னவமணிக ளொளிர்மணிப்பூண் டெல்வருக்க
ஞாங்கர்நிறை விரையுறுப்பு வருக்கமுத னலஞ்சிறப்பத்
தாங்குபொதி வினைஞர்மேற் றலமலியக் கொண்டணைந்தார். (கசுஉ)

மற்றவற்றின் பரப்பெல்லாம் வன்றொண்டர் பரிசனத்தின்
மூற்படவே செலவிட்டு முனைப்பாடித் திருநாடர்
பொற்பதங்கள் பணிந்தவரைத் தொழுதெதித்துப் புனையலங்கல்
வெற்புயர்தோ ளுறத்தழுவி விடையளித்தார் வன்றொண்டர். (கசுஊ)

ஆரூ ரவர்தமக்கு விடையருளி யங்ககன்று
காரூரு மலைநாடு கடந்தருளிக் கற்சுரமு
நீரூருங் கான்யாறு நெடுங்காணும் பலகழியச்
சீரூருந் திருமுருகன் பூண்டிவழிச் செல்கின்றார். (கசுசு)

திருமுருகன் பூண்டியயற் செல்கின்ற போழ்தின்கட்
பொருவிடையார் நம்பிக்குத் தாமேபொன் கொடுப்பதலா
லொருவர்கொடுப் பக்கொள்ள வொண்ணுமைக் கதுவாங்கிப்
பெருகருளாற் றுங்கொடுக்கப் பெறுவதற்கோ வதுவறியோம். (கசுடு)

வென்றிமிகு பூதங்கள் வேடர்வடி வாய்ச்சென்று
வன்றொண்டர் பண்டாரங் கவரவருள் வைத்தருள
வன்றிறைர் புரமெரித்தா ரருளால்வேட் டெவப்படையாய்ச்
சென்றவர்தாம் வரும்வழியி லிருபாலுஞ் செயிர்த்தெழுந்து. (கசுஎ)

வில்வாங்கி யலகம்பு விசைநாணிற் சந்தித்துக்
கொல்வோமிங் கிட்டப்போ மெனக்கோபத் தாற்சுருத்தி
யெல்லையில்பண் டாரமெலாங் கவர்ந்துகொள வீரிந்தோடி
யல்லலுடன் பறியுண்டா ராரூரர் மருங்கணைந்தார். (கசுஏ)

ஆரூரர் தம்பாலவ் வேடுவர்சென் றணையாதே
நீரூருஞ் செஞ்சடையா ரருளினு லீங்கவவா
சேரூராந் திருமுருகன் பூண்டியினிற் சென்றெய்திப்
போரூரு மழவிடையார் கோயிலைநா டிப்புக்கார். (கசுஅ)

அங்கணர்தங் கோயிலினே யஞ்சலிகூப் பித்தொழுது
மங்குலுற நீண்டதிரு வாயிலினே வந்திறைஞ்சிப்
பொங்குவிருப் புடன்புக்கு வலங்கொண்டு புனிதரூடி
திங்கண்முடிக் கணிந்தவர்தந் திருமுன்பு சென்றணைந்தார். (கசுக)

உருகியவன் பொடிகைகள் குவித்துவிழுந் தமைபாக
மருவியதம் பெருமான்முன் வன்றொண்டர் பாடினர்
வெருவுறவே வெற்பறிக்கும் வெஞ்சுரத்தி லெத்துக்கிங்
கருகிருந்தீ ரெனக்கொடுகு வெஞ்சிலையஞ் சொற்பதிகம். (கஎ0)

பாடியவர் பரவுதலும் பரம்பொருளா மவரருளால்
வேடுவர்தாம் பறித்தபொரு ளனைவையெல்லாம் விண்ணெருங்க
நீடுதிரு வாயிலின்முன் குவித்திடலு நேரிறைஞ்சி
யாடுமவர் திருவருளா லப்படியே கைக்கொண்டார். (கஎக)

கைக்கொண்டு கொடுபோமக் கைவினைஞர் தமையேவி
மைக்கொண்ட மிடற்றுரை வணங்கிப்போய்க் கொங்கன்று
மெய்க்கொண்ட காதலினுல் விரைந்தேகி மென்கரும்புஞ்
செய்க்கொண்ட சாலியுஞ்சூழ் திருவாரூர் சென்றணைந்தார். (கஎஉ)

நாவலர்மன் னவரருளால் விடைகொண்ட நரபதியா
ராவியினென் றுரண்பி ஞரூர் தமையினைந்து
மாவலரு மலர்ச்சோலை மகோதையினின் மன்னிமலைப்
பூவலயம் பொதுநீக்கி யரசுரிமை புரிந்திருந்தார். (கஎஙூ)

இந்திலைமை யுதியர்பிரா னெம்பிரான் வன்றிருண்டர்
பொன்னிவள நாடகன்று மகோதையினின் மேற்புகுந்து
மன்னுதிருக் கயிலையினின் மதவரைமே லெழுந்தருளு
முன்னர்வயப் பரியுகைக்குங் திருத்தொழில்பின் மொழிகின்றும். (கஎடு)

மலைமலிந்த திருநாட்டு மன்னவனூர் மாகடல்போற்
சிலைமலிந்த கொடித்தானைச் சேரலனூர் கழல்போற்றி
நிலைமலிந்த மணிமாட நீண்மறுகு நான்மறைசூழ்
கலைமலிந்த புகழ்க்காழிக் கணநாதர் நிறமுரைப்பாம். (கஎஙு)

சேரமான்பெருமாணயனூர்புராணம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கூ,கூஉ எ.

கணநாதநாயனூர்புராணம்.

ஆழி மாஞலத் தகிலமீன் றளித்தவ டிருமுலை யமுதுண்ட
வாழி ஞானசம் பந்தர்வந் தருளிய வனபபின தளப்பில்லா
ஊழி மாகடல் வெள்ளத்து மிதந்துல கிறுக்கொரு முதலாய
காழி மாநகர்த் திருமறை யவர்குலக் காவலர் கணநாதர். (க)

ஆய வன்பர்தா மணிமதிற் சண்பையி னமர்பெருந் திருத்தோணி
நாய னூர்க்குநற் றிருப்பணி யாயின ரரனமன் பொழிவெய்து
மேய வத்திருத் தொண்டினில் விளங்குவார் விரும்பிவந் தணைவார்க்குத்
தூய கைத்திருத் தொண்டரி லவர்தமைத் துறைதொறும் பரிவிப்பார். (உ)

கல்ல நந்தன வனப்பணி செய்பவர் நறுந்துணர் மலர்கொய்வோர்
பல்ப ணித்தொடை புனைபவர் கொணர்திரு மஞ்சனப் பணிக்குள்ளோ
ரல்லு நன்பக லுந்திரு வலகிட்டுத் திருமெழுக் கமைப்போர்க
ளெல்லை யில்விளக் கெரிப்பவர் திருமுறை யெழுதுவோர் வாசிப்போர். (ஊ)

இனைய பலதிருப் பணிகளி லினைந்தவர்க் கேற்றவத் திருத்தொண்டின்
வினைவி ளக்கிட வேண்டிய குறையெலா முடித்துமே விடச்செய்தே
யினைய வத்திறம் புரிதலிற் றெண்டரை யாக்கியன் புலுவாய்மை
மனைய நம்புரிந் தடியவர்க் கின்புற வழிபடுந் தொழின்மிக்கார். (சு)

இப்பெ ருஞ்சிறப் பெய்திய தொண்டர்தா மேறுசீர் வளர்காழி
மெய்ப்பெ ருந்திரு ஞானபோ னகர்கழன் மேவிய விருப்பாலே
முப்பெ ருமைப்பெழு தருச்சனை வழிபாடு மூஞமன் பொடுமாளு
மொப்பில் காதல்கூ ருளங்களி சிறந்திட வொழுகினூர் வழுவாமல். (டு)

ஆன தொண்டினி லமர்ந்தபே ரன்பரு மகலிடத் தினிலென்றும்
ஞான முண்டவர் புண்டரீ கக்கழ லருச்சனை நலம்பெற்றுத்
தூந றுங்கொன்றை முடியவர் சுடர்நெடுங் கயிலைமால் வரையெய்தி
மான நற்பெருங் கணங்கட்கு நாதராம் வழித்தொண்டி னிலைபெற்றார். (சு)

உலக முய்யநஞ் சுண்டவர் தொண்டினி னுறுதிமெய் புணர்வெய்தி
யலகி றொண்டருக் கறிவளித் தவர்திற மவனியின் மிசையாக்கு
மலர்பெ றும்புகழ்ப் புகலியில் வருங்கண நாதனார் கழல்வாழ்த்திக்
குலவு நீற்றுவண் கூற்றுவ னார்திறங் கொள்கையின் மொழிகின்றாம். (எ)

கணநாதநாயனார்புராணம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கூ,கூஉச.

கூற்றுவநாயனார்புராணம்.

தென்னார் மூனைக டோள்வலியால் வென்று சுலப் படையார்த
நன்னு மத்தந் திருநாவி னாவ நவிலு நலமிக்கார்
பன்னு லீச னடியார்தம் பாதம் பரவிப் பணிந்தேத்தி
முன்னு கியநற் றிருத்தொண்டின் முயன்றார் கணத்தை முதல்வனார். (க)

அருளின் வலியா லரசொதுங்க வவனி யெல்லா மடிப்படுப்பார்
பொருளின் முடிவு காண்பரிய வகையாற் பொலிவித் திகல்சிறக்க
மருளுங் களிறு பாய்புரவி மணித்தேர் படைஞர் முதன்மாற்றார்
வெருளுங் கருவி நான்குறைவீரச் செருக்கின் மேலானார். (உ)

வென்றி வினையின் மீக்கூர வேந்தர் பலரை முருக்கிச்
சென்று தும்பைத் துறைமுடித்துஞ் செருவில் வாகைத் திறங்கெழுமி
மன்றன் மாலை நிலைத்தவர்தம் வளநா டெல்லாங் கவர்ந்துமுடி
யொன்று மொழிய வரசர்திரு வெல்லா முடைய ராயினார். (ஙூ)

மல்லன் ஞாலம் புரக்கின்றார் மணிமாமயூ புனைவதற்குத்
தில்லை வாழந் தணர்தம்மை வேண்ட வவருஞ் செம்பியர்தந்
தொல்லை நீடுங் குலமுதலோர்க் கன்றிச் சூட்டோ முடியென்று
நல்கா ராகிச் சேரலன்றன் மலைநா டணைய நண்ணுவார். (ச)

ஒருமை யுரிமைத் தில்லைவாழந் தணர்க டம்மி லொருகுடியைப்
பெருமை முடியை யருமையுரி காவல் பேணும் படியிருத்தி
யிருமை மரபுந் தூயவர்தாஞ் சேரர் நாட்டி லெய்தியபின்
வருமை யுறவான் மனந்தளர்ந்து மன்று ளாடுங் கழல்பணிவார். (ஙி)

அற்றை நாளி லிரவின்க ணடியேன் றனக்கு முடியாகப்
பெற்ற பேறு மலர்ப்பாதம் பெறவே வேண்டு மெனப்பரவும்
பற்று விடாத துயில்வோர்க்குக் கனவிற் பாத மலரளிக்க
வுற்ற வருளா லவைதாங்கி யுலக மெல்லாந் தனிபுரந்தார். (சு)

அம்பொ னீடு மம்பலத்து ளாரா வமுதத் திருநடஞ்செய்
தம்பி ரானுர் புவியின்மகிழ் கோயி லெல்லாந் தனித்தனியே
யிம்பர் ஞாலங் களிகூர வெய்தும் பெரும்பூ சனையியற்றி
யும்பர் மகிழ வரசளித்தே யுமையாள் கணவ னடிச்சேர்ந்தார். (எ)

காதற் பெருமைத் தெற்ண்டினிலைக் கடல்சூழ் வையங் காத்தளித்துக்
கோதங் ககல முயல்களன்றைக் கூற்ற னுர்தங் கழல்வணங்கி
நாத மறைதந் தளித்தாரை நடைநூற் பாவி னவின்றேத்தும்
போத மருளிப் பொய்யடிமை யில்லாப் புலவர் செயல்புகல்வாம். (அ)

தேனுங் குழலும் பிழைத்திரு மொழியாள் புலவி தீர்க்கமதி
தானும் பணியும் பகைதீர்க்குஞ் சடையார் தூது தருந்திருநாட்
கூனுங் குருடுந் தீர்த்தேவல் கொள்வார் குலவு மலர்ப்பாதம்
யானும் பரவித் தீர்க்கின்றே னேழு பிறப்பின் மூடங்குகூன். (கூ)

கூற்றுவநாயனர்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கூ,கூசகூ.

வாய்கொண்டவல்லமூலையாள்சருக்க முற்றுப்பெற்றது.

எட்டாவது

பொய்யடிமையில்லாத புலவர்சருக்கம்.

பொய்யடிமையில்லாதபுலவர்புராணம்.

செய்யுணிகழ் சொற்றெளிவுஞ் செவ்வியநூல் பலநோக்கு
மெய்யுணர்வின் பயனிதுவே யெனத்துணிந்து விளங்கியொளிர்
மையணியுங் கண்டத்தார் மலரடிக்கே யாளாஞர்
பொய்யடிமை யில்லாத புலவரெனப் புகழ்மிக்கார். (க)


பொற்பமைந்த வரவாரும் புரிசடையார் தமையல்லாற்
சொற்பதங்கள் வாய்திறவாத் தொண்டெறித் தலேன்ற
பெற்றியினின் மெய்யடிமை யுடையாராம் பெரும்புலவர்
மற்றவர்தம் பெருமையா ரறிந்துரைக்க வல்லார்கள். (உ)

ஆங்கவர்த மடியிணைக டலேமேற்கொண் டவனியெலாந்
தாங்கியவெண் குடைவளவர் குலஞ்செய்த தவமனையா
ரோங்கிவளர் திருத்தொண்டி னுண்மையுணர் செயல்புரிந்த
பூங்கழலார் புகழ்ச்சோழர் திருத்தொண்டு புகல்கின்றும். (கூ)

பொய்யடிமையில்லாதபுலவர்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கூ,கூசக.

புகழ்ச்சோழநாயனார்புராணம்.



குலகிரியின் கொடுமுடிமேற் கொடிவேங்கைக் குறியெழுதி நிலவுதரு மதிக்குடைக்கீழ் நெடுங்கிலங்காத் தினிதளிக்கு
மலர்புகழ்வண் டமிழ்ச்சோழர் வளநாட்டு மாமுது
ருலகில்வள ரணிக்கெல்லா முள்ளுறையூ ராமுறையூர்.

அளவில்பெரும் புகழ்ஞகர மதனிலணி மணிவீளக்கு
மிளவெயிலின் சுடர்ப்படலை யிரவொழிய வெறிப்பனவாய்க்
கிளரொளிசேர் நெடுவானப் பேர்யாற்றுக் கொடிகெழுவும்
வளரொளிமா ளிகைநிரைகண் மருங்குடைய மறுகெல்லாம். (உ)

நாகதலத் தும்பிலத்து நானிலத்து நலஞ்சிறந்த
போகமனைத் தினுக்குறுப்பாம் பொருவிறந்த வளத்தினவாய்
மாகநிறைந் திடமலிந்த வரம்பில்பல பொருள்பிறங்கு
மாகரமொத் துளவளவி லாவணவீ திகளெல்லாம். (ஊ)

பார்ஞாய மதம்பொழிந்து பனிவீரும்பு கொளமுழங்கும்
போர்முகவெங் கறையடியும் புடையினமென் றடையவருஞ்
சோர்மழையின் வீடுமதத்துச் சுடருநெடு மின்னுடைக்
கார்முகிலும் பலதெரியா களிற்றுநிரைக் களமெல்லாம். (எ)

படுமணியும் பரிச்செருக்கு மொலிகிளரப் பயில்புரவி
நெடுநிரைமுன் புல்லுண்வாய் நீர்த்தரங்க நுரைநிவப்ப
விடுசுடர்மெய் யுறையடிக்கன் முகில்படிய வீளங்குதலாற்
றொடுகடல்க ளனையபல துரங்கசா லகமெல்லாம். (ஏ)

தூளக்கையரா வதக்களிறுந் துரங்கவர சுந்திருவும்
வீளைத்தவமு துரந்தருவும் விழுமணியுங் கொடுபோத
வுளைத்தகட லிவற்றொன்று பெறவேண்டி யும்பரூர்
வளைத்துபோன் றுளதங்கண் மதில்சூழ்ந்த மலர்க்கிடங்கு. (ஐ)

காரேறுங் கோபுரங்கள் கதிரேறு மலர்ச்சோலை
தேரேறு மணிவீதி திசையேறும் வசையிலணி
வாரேறு முலைமடவார் மருக்கேறு மலர்க்கணையொண்
பாரேறும் புகழுறந்தைப் பதியின்வளம் பகர்வரிதால். (ஒ)

அந்தகரிற் பாரளிக்கு மடலரச ராகின்றூர்
மன்னுதிருத் தில்லைநகர் மணிவீதி யணிவிளக்குஞ்
சென்னிநீ டனபாயன் றிருக்குலத்து வழிமுதலோர்
பொன்னிநதிப் புரவலனூர் புகழ்ச்சோழ ரெனப்பொலிவார். (ஓ)

ஒருகுடைக்கீழ் மண்மகளை யுரிமையினின் மணம்புணர்ந்து
பருவரைத்தோள் வென்றியினும் பார்மன்னர் பணிகேட்பத்
திருமலர்த்தும் பேருலகு செங்கோலின் முறைநிற்ப
வருமறைச்சை வந்தழைப்ப வரசளிக்கு மந்நாளில். (ஔ)

பிறைவளருஞ் செஞ்சடையார் பேணுசிவா லயமெல்லா
நிறைபெரும்பூ சனைவிளங்க நீடிருத் தொண்டர்தமைக்
குறையிரந்து வேண்டுவன குறிப்பின்வழி கொடித்தருளி
முறைபுரிந்து திருநீற்று முதனெறியே பாலிப்பார். (க0)

அங்கணினி துறையுநா ளரசிறைஞ்ச வீற்றிருந்து
கொங்கரொடு குடபுலத்துக் கோமன்னர் திறைகாணத்
தங்கள்குல மரபின்முதற் றனிகராய் கருஞ்ரின்
மங்கலநா ளரசுரிமைச் சுற்றமுடன் வந்தணைந்தார். (கக)

வந்துமணி மதிற்கருஞ்ர் மருங்கணைவார் வானவர்கு
ழிந்திரன்வந் தமரர்புரி யெய்துவா னெனவெய்திச்
சிந்தைகளி கூர்ந்தாளர் மகிழ்திருவா ரிலக்கோயின்
முந்துறவந் தணைந்திறைஞ்சி மொய்யொளிமா ளிகைபுகுந்தார். (கஉ)

மாளிகைமுன் னத்தாணி மண்டபத்தின் மணிபுனைபொற்
கோளரியா சனத்திருந்து குடபுலமன் னவர்கொணர்ந்த
வோளிகெடுங் கலிற்றினணி யுலப்பில்பரி துலக்கனக
நீளிடைவில் லிலகுமணி முதனிறைபுந் திறைகண்டார். (கங)

திறைகொணர்ந்த வரசர்க்குச் செயலுரிமைத் தொழிலருளி
முறைபுரியுந் தனித்திகிரி முறைதில்லா முரணரசு
ருறையரண முளவாகிற் றெரிந்துரைப்பீ ரெனவுணர்பு
சிறைமதிநீ டமைச்சர்க்கு மொழிந்தருளி நிகழுநாள். (கச)

சென்றுசிவ காமியார் கொணர்திருப்பள் ளித்தாம
மன்றுசித ழுங்கவிற்றை யறவெறிந்து பாகரையுங்
கொன்றவெறி பத்தரெரி ரென்னேயுங்கொன் றருளுமென
வென்றிவடி வாள்கொடித்துத் திருத்தொண்டின் விகச்சிறக்தார். (கஎ)

விளங்குதிரு மதிக்குடைக்கீழ் வீற்றிருந்து பாரளிக்குந்
தளங்கொளிநீண் முடியார்க்குத் தொன்முறைமை நெரியமைச்ச
ரளந்ததிறை முறைகொணரா வரசறுன ஞெருவனென
வுளங்கொள்ளும் வகையுரைப்ப வுறுவியப்பான் முறுவலிப்பார். (கஙு)

ஆங்கவன்யா ரென்றருள வதிகனவ னணித்தாக
வோங்கெயில்சூழ் மலையரணத் துள்ளுறைவா னெனவுரைப்ப
வீங்குவமக் கெதிர்நிற்ரு மரணுளதோ படையெழுந்தப்
பாங்கரணந் துகளாகப் பற்றறுப்பீ ரெனப்பகர்ந்தார். (கஎ)

அடல்வளவ ஞணையினை லமைச்சர்களும் புறம்போந்து
கடலனைய நெடும்படையைக் கைவகுத்து மேற்செல்வார்
படர்வனமு நெடுங்கிரியும் பயிலரணும் பொடியாக
மிடலுடைநாம் கருவியுற வெஞ்சமர மிகவிளைத்தார். (கஅ)

வளவனுர் பெருஞ்சேனை வஞ்சிமலர் மிலங்தேற்ப
வளவிலர ணக்குறும்பி லதிகர்கோ னடற்படையு
முளதிறைவெஞ் சினந்திருகி யுயர்காஞ்சி மலைந்தேற்பக்
கிளர்கடல்க ளிரண்டென்ன விருபடையுங் கிடைத்தனவால். (கக)

வே று.

கயமொடு கயமெதிர் குத்தின, வயமூட னயமுனை முட்டின
வயவரும் வயவரு முற்றனர், வியனமர் வியலிடை மிக்கதே. (உo)

மலையொடு மலைகண் மலைந்தென, வலைமத வருவி கொழிப்பொடு
சிலையினர் விசையின் மிசைத்தெறு, கொலைமத கரிகொலை யுற்றவே. (உக)

வே று.

சூறை மாருத மொத்தெதி, ரேறு பாய்பரி வீத்தகர்
வேறு வேறு தலைப்பெய்து, சீறி யாவி செகுத்தனர். (உஉ)

மண்டு போரின் மலைப்பவர், துண்ட மாயிட வுற்றெதிர்
கண்ட ராவி கழித்தன, ருண்ட சோறு கழிக்கவே. (உங)

வீடி னருட லிற்பொழி, நீடு வார்குரு திப்புன
லோடும் யாறென வொத்தது, கோடு போல்வ பிணக்குவை. (உச)

வானி லாவு கருங்கொடி, மேனி லாவு பருந்தின
மேனை நீள்கழு கின்குல, மான வூணை டெழுந்தவே. (உஙி)

வே று.

வரிவிற்கதை முக்கர முற்கரம்வாள்
சுரிகைப்படை சத்தி கழுக்கடைவே
லெரிமுத்தலை கப்பண மெற்பயில்கோன்
முரிவுற்றன துற்றன மொய்க்களமே. (உசு)

வடிவேலதி கன்படை மாளவரைக்
கடிசூழர ணக்கண வாய்நிரவிக்
கொடிமாமதி னீடு குறும்பொறையூர்
முடிநேரிய னுர்படை முற்றியதே. (உஎ)

முற்றும்பொரு சேனை முனைத்தலைமிற்
கற்றிண்புரி சைப்பதி கட்டழியப்
பற்றுந்துறை கொச்சி பரிந்துடையச்
சுற்றும்படை வீரர் துணித்தனரே. (உஅ)

மாறுற்ற விறற்படை வாளதிக
ரூறுற்ற பெரும்படை நூழில்படப்
பாறுற்ற வெயிற்பதி பற்றறவிட்
டேறுற் றனனேடி யிருஞ்சுரமே. (உசு)

அதிகன்படை போர்பொரு தற்றதலைப்
பொதியின்குவை யெண்ணில பாயினபி
னிதியின்குவை மங்கையர் நீள்பரிமா
வெதிருங்கரி பற்றின ரெண்ணிலரே. (ஙo)

அரண்முற்றி யெறிந்த வமைச்சர்கடா
மிரணத்தொழில் விட்டெயில் சூழ்கருஆர்
மூரணுற்ற சிறப்பொடு முன்னினர்நீ
டரணித்தலை வன்கழல் சார்வுறவே. (ஙச)

மன்னுங்கரு வூர்நகர் வாயிலின்வாய்
முன்வந்த கருந்தலை மொய்குவைதான்
மின்னுஞ்சுடர் மாமுடி வேல்வளவன்
றன்முன்பு கொணர்ந்தனர் தானையுளோர். (ஙஉ)

மண்ணுக்குயி ராமெனுமன்னவனு
ரெண்ணிற்பெரு குந்தலே யாவையினு
ணண்ணிக்கொண ருந்தலே யொன்றினைக்
கண்ணுற்றதொர் புன்சடை கண்டனரே. (கூகூ)

வே று.

கண்டபொழு தேநடுங்கி மனங்கலங்கிக் கைதொழுது
கொண்டபெரும் பயத்தினுடன் குறித்தெதிர்சென் றதுகொணர்ந்த
திண்டிறலோன் கைத்தலையிற் சடைதெரியப் பார்த்தருளிப்
புண்டரிகத் திருக்கண்ணீர் பொழிந்திழியப் புரவலனர். (கூச)

மூசுசடைத்திண் படைகொடுபோய் முதலமைச்சர் முனைமுருக்கி
யுரைசிறக்கும் புகழ்வென்றி யொன்றெழிய வொன்றுமாற்
றிரைசரித்த கடலுலகிற் றிருநீற்றி னெறிபுரந்தியா
னரசளித்த படிசால வழகிதென வழிந்தயர்வார். (கூடு)

தார்தாங்கிக் கடன்முடித்த சடைதழுங்குந் திருமுடியார்
நீர்தாங்குஞ் சடைப்பெருமா னெனிதாங்கண் டவராளர்
சீர்தாங்கு மிவர்வேணிச் சிரந்தாங்கி வரக்கண்டும்
பார்தாங்க விருந்தேனே பழிதாங்கு வேனென்றார். (கூசு)

என்றருளிச் செய்தருளி யிதற்கிசையும் படிதணிவார்
நின்றநெறி யமைச்சர்க்கு நீணிலங்காத் தரசளித்து
மன்றினடம் புரிவார்தம் வழித்தொண்டின் வழிநிற்ப
வென்றிமுடி யெங்குமரன் றனைப்புனைவீ ரெனவிடுத்தார். (கூஎ)

அம்மாற்றங் கேட்டழியு மமைச்சரையு மிடரகற்றிக்
கைம்மாற்றுஞ் செயருமே கடனுற்றுங் கருத்துடையார்
செம்மார்க்கந் தலைநின்று செந்தீமுன் வளர்ப்பித்துப்
பொய்மாற்றுந் திருநீற்றுப் புனைகோலத் தினிற்பொலிந்தார். (கூஅ)

கண்டசடைச் செத்தினையோர் கனகமணிக் கலத்தேந்திக்
கொண்டிதிரு முடித்தாங்கிக் குலவுமெரி வலங்கொள்வா
ரண்டர்பிரான் றிருநாமத் தஞ்செழுத்து மெடுத்தோதி
மண்டுதழற் பிழம்பினிடை மகிழ்ந்தருளி யுள்புக்கார். (கூக)

புக்கபொழு தலர்மாரி புவிநிறையப் பொழிந்திழிய
மிக்கபெரு மங்கலதூ ரியம்விசும்பின் முழக்கெடுப்பச்
செக்கர்நெடுஞ் சடைமுடியார் சிலம்பலம்பு சேவடியி
னக்கருணைத் திருநிழற்கீ ழாராமை யமர்ந்திருந்தார். (சஅ)

மூசுசங்கொள் கடற்றானை மூவேந்தர் தங்களின்முன்
பிரசங்கொ ணறுந்தொடையற் புகழ்ச்சோழர் பெருமையினைப்
பரசுங்குற் றேவலினு லவர்பாதம் பணிந்தேத்தி
ரசிக்க முனையர்திற நாமறிந்த படியுரைப்பாம். (சக)

புகழ்ச்சோழநாயனர்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கூ,கூஅஎ.

நரசிங்கமுனையரையநாயனார்புராணம்.

கோடாத நெறிவிளங்குங் குலமரபி னரசளித்து
மாடாக மணிகண்டர் திருநீறே மணங்கொள்வார்
தேடாத பெருவளத்திற் சிறந்ததிரு முனைப்பாடி
நாடாளுங் காவலனார் நரசிங்க முனையரையர். (க)

இம்முனையர் பெருந்தகையர் நிருந்தரசு புரந்துபோய்த்
தெம்முனைகள் பலகடந்து தீங்குநெறி பாங்ககல
மும்முனைநீ ளிலைச்சூல முதற்படையார் தொண்டுபுரி
யம்முனைவ ரடியடைவே யரும்பெரும்பே றென வடைவார். (உ)

கினவிடையார் கோபிறுங் திருச்செல்வம் பெருக்குநெறி
யனவிடையா ருயிர்துறக்க வருமெனினு மவைகாத்து
மனவிடையா மைத்தொடைய லணிமார்பர் வழித்தொண்டு
கனவிடையா கிலும்வழுவாக் கடனுற்றிச் செல்கின்றார். (ஊ)

ஆறணிந்த சடைமுடியார்க் காதிரைநா டெளிறுமென்றும்
வேறுநிறை வழிபாடு வீங்கியபூ சனைமேவி
நீறணியுந் தொண்டரணைந் தார்க்கெல்லா நிகழ்பசும்பொ
னூறுகுறை யாமலளித் தின்னமுது நுகர்விப்பார். (எ)

ஆனசெயன் முறைபுரிவா ரொருதிருவா திரைநாளின்
மேன்மைநெறித் தொண்டர்க்கு விளங்கியபொன் னிடும்பொழுதின்
மானநிலை யழிதன்மை வருங்காமக் குறிமலர்ந்த
வூனநிகழ் மேனியரா யொருவர்நீ றணிந்தணைந்தார். (ஏ)

மற்றவர்தம் வடிவிருந்த படிகண்டு மருங்குள்ளா
ருற்றவிகழ்ச் சியராக வொதுங்குவார் தமைக்கண்டு
கொற்றவனு நெதிர்சென்று கைகுவித்துக் கொடுபோந்தப்
பெற்றியினர் தமைவிகவுங் கொண்டாடிப் பேணுவார். (ஐ)

சீலமில சேயெனினுந் திருநீறு சேர்ந்தாரை
ஞாலவிகழ்ந் தருநரக நண்ணுமெ லெண்ணுவார்
பாலணிந்தார் தமக்களித்த படியிரட்டிப் பொன்கொடுத்து
மேலவரைத் தொழுதினிய மொழிவிளம்பி விடைகொடுத்தார். (ஒ)

இவ்வகையே திருத்தொண்டி னருமைநெறி யெங்நாளுஞ்
செவ்வியவன் பினிலாற்றித் திருந்தியசிந் தையராகிப்
பைவளர்வா ளரவணிந்தார் பாதமலர் நிழற்சேர்ந்து
மெய்வகைய வழியன்பின் மீளாத நிலைபெற்றார். (ஓ)

விடநாக மணிந்தபிரான் மெய்த்தொண்டு விளைந்தநிலை
யுடனுரு நரசிங்க முனையர்பிரான் கழலேத்தித்
தடநாக மதஞ்சொரியத் தனஞ்சொரியுங் கலஞ்சேருங்
கடனுகை யதிபத்தர் கடனுகைக் கவினுரைப்பாம். (ஔ)

நரசிங்கமுனையரையநாயனார்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௫,௯௯௫.

அதிபத்த நாயனார்புராணம்.

மன்னி நீடிய செங்கதி ரவன்வழி மரபிற்
றொன்மை யாமுதற் சோழர்தந் திருக்குலத் துரிமைப்
பொன்னி நாடெனுங் கற்பகப் பூங்கொடி மலர்போ
னன்மை சான்றது நாகபட் டணத்திரு நகரம். (க)

தாம நித்திலக் கோவைகள் சரிந்திடச் சரிந்த
தேம லர்க்குழன் மாதர்பர் தாடுதெற் றிகள்சூழ்
காமர் பொற்சுடர் மாளிகை கருங்கடன் முகந்த
மாமு கிற்குல மலையென வேறுவ மருங்கு. (உ)

பெருமை யிற்செறி பேரொலி பிறங்கலி னிறைந்து
திரும கட்குவாழ் சேர்விட மாதலில் யாவுங்
தருத லிற்கட றன்னினும் பெரிதெனத் திரைபோற்
கரிப ரித்தொகை மணிதுகில் சொரிவதாங் கலத்தால். (ஊ)

நீடு தொல்புகழ் நிலம்பதி னெட்டினு நிறைந்த
பீடு தங்கிய பலபொருண் மாந்தர்கள் பெருகிக்
கோடி நீடனக் குடியுடன் குவலயங் காணு
மாடி மண்டலம் போல்வதவ் வணிகினர் மூதூர். (எ)

அந்தெ டுந்திரு நகர்மருங் கலைகடல் வீளிம்பிற்
பன்னெ டுந்திரை நுரைதவழ் பாங்கரின் நாங்கர்
மன்னு தொன்மையின் வலைவளத் துணைவினின் மலிந்த
தன்மை வாழ்குடி யிடைந்தது தடநுளைப்பாடி. (ஏ)

புயல ளப்பில வெனவலை புறம்பணை குரம்பை
யயல ளப்பன மீன்விலைப் பசும்பொனி னடுக்கல்
வியல ளக்கரில் விடுந்திமில் வாழ்நர்கள் கொணர்ந்த
கயல ளப்பன பரத்தியர் கருநெடுங் கண்கள். (ஐ)

உணங்கல் மீன்கவர் புறுகலைக் குருகுட னணைந்த
கணங்கொ ளோதிமங் கருஞ்சினைப் புன்னையங் கான
லணங்கு நுண்ணிடை நுளைச்சிய ரசைசடைக் கழிந்து
மணங்கொள் கொம்பரின் மருங்குறின் றிழியல மருளும். (எ)

வலைதெ டுந்தொண்டர் வடம்புடை வலிப்பவ ரொலியும்
வீலைப கர்ந்துமீன் குவைகொடுப் பவர்வீளி யொலியுந்
தலைசி றந்தவெள் வளைசொரி பவர்தழங் கொலியு
மலைதெ டுங்கட லதிரொலிக் கெதிரொலி யனைய. (அ)

அனைய தாகிய வந்நுளைப் பாடியி லமர்ந்து
மனைவ ளம்பொலி நுளையர்தங் குலத்தினில் வந்தார்
புனையி ளம்பிறை முடியவ ரடித்தொண்டு புரியும்
வினைவி ளங்கிய வதிபத்த ரெனநிகழ் மேலோர். (கூ)

ஆங்க வன்பர்தா நுளையர்தந் தலைவரா யவர்க
ளேங்கு தெண்டிரைக் கடலிடைப் பலபட வியக்கிப்
பாங்கு சூழ்வலை வளைத்துமீன் படித்துமுன் குவிக்கு
மோங்கு பல்குவை புலப்பில வுடையரா யுயர்வார். (கூ)

முட்டின் மீன்கொலைத் தொழில்வளத் தவர்வலை முகந்து
பட்ட மீன்களி லொருதலை மீன்படிந் தோறு
நட்ட மாடிய நம்பருக் கெனநளிர் முந்நீர்
விட்டு வந்தனர் விடாதவன் புடனென்றும் விருப்பால். (கக)

மாகு சேர்வலை நாளொன்றின் மீஞென்று வரிஞு
மேக நாயகர் தங்கழற் கெனவிடு மியல்பா
லாகு நாள்களி லனேகநா ளடித்தொரு மீனே
மேக நீர்படி வேலிபிற் படவிட்டு வந்தார். (கஉ)

மீன்வி லைப்பெரு குணவினின் மிகுபெருஞ் செல்வந்
தான்ம றுத்தலி னுணவின்றி யருங்கிளை சாம்பும்
பான்மை பற்றியும் வருந்தலர் பட்டமீ ஞென்று
மான்ம றிக்கரத் தவர்கழற் கெனவிட்டு மகிழ்ந்தார். (கஙூ)

சால நாள்களிப் படிவரத் தாமுண வயர்த்துக்
கோல மேனியுந் தளரவுந் தந்தொழில் குறையாச்
சீல மேதலை நின்றவர் தந்திறந் தெரிந்தே
யால முண்டவர் தொண்டரன் பெனுமமு தண்பார். (கச)

ஆன நாளொன்றி லவ்வொரு மீனுமங் கொழித்துத்
தூநி றப்பசுங் கனகநற் சுடர்கவ மணியான்
மீனு றுப்புற வமைத்துல கடங்கலும் வியையாம்
பான்மை யற்புதப் படியதொன் றிடுவலைப் படித்தார். (கஞ)

வாங்கு நீள்வலை யலைகடற் கரையில்வந் தேற
வோங்கு செஞ்சுட ருதித்தென வுலகெலாம் வியப்பத்
தாங்கு பேரொளி தழைத்திடக் காண்டலு மெடுத்துப்
பாங்கு நின்றவர் மீஞென்று படித்தன மென்றார். (கசு)

என்று மற்றுளோ ரியம்பவு மேறுசீர்த் தொண்டர்
பொன் றிரட்சுடர் நவமணி பொலிந்தமீ னுதரப்பா
மொன்று மற்றிது வென்னையா ளுடையவர்க் காகுஞ்
சென்று பொற்கழல் சேர்கெனத் திரையொடுந் திரித்தார். (கஎ)

அகில லோகமும் பொருண்முதற் றுமெனு மளவிற்
புகலு மப்பெரும் பற்றினைப் புரையற வெறிந்த
விகலின் மெய்த்திருத் தொண்டர்முன் னிறைவர்தாம் விடைமேன்
முகில் விசும்பிடை யணைந்தனர் பொழிந்தனர் முகைப்பூ. (கஅ)

பஞ்ச நாதமு மெழுந்தன வதிபத்தர் பணிந்தே
யஞ்ச லிக்கரஞ் சிரமிசை யணைத்துளின் றவரை
நஞ்சு வாண்மணி மிடற்றவர் சிவலோக நண்ணித்
தஞ்சி றப்புடை யடியர்பாங் குறத்தலை யளித்தார். (கஙூ)

தம்ம தம்புரி மரபினிற் றகும்பெருந் தொண்டு
மெய்ம்மை யேபுரி யதிபத்தர் விளங்குதாள் வணங்கி
மும்மை யாகிய புவனங்கண் முறைமையிற் போற்றுஞ்
செம்மை நீதியார் கலிக்கம்பர் திருத்தொண்டு பகர்வாம். (உ0)

அதிபத்தநாயனூர்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ச,0கசு.

கலிக்கம்ப நாயனூர்புராணம்.

உரிமை யொழுக்கந் தலைநின்ற வுயர்தொன் மரபி னீடுமனைத்
தரும நெறியால் வாழ்குடிக டழைத்து வளருந் தன்மையதாய்
வருமஞ் சுறையு மலர்ச்சோலை மருங்கு சூழ்ந்த வளம்புறவிற்
பெருமை யுலகு பெறவிளங்கு மேல்பாற் பெண்ணை கடமூதூர். (க)

மற்றப் பதியி னிடைவாழும் வணிகர் குலத்து வந்துதித்தார்
கற்றைச் சடையார் கழற்காத லுடனே வளர்ந்த கருத்துடையா
ரற்றைக் கன்று தாங்காமே மாடத் தமர்ந்தா ரடித்தொண்டு
பற்றிப் பணிசெய் கலிக்கம்ப ரென்பார் மற்றோர் பற்றில்லார். (உ)

ஆன வன்பர் தாமென்று மரனு ரன்பர்க் கமுதுசெய
மேன்மை விளங்கு போனகமும் விரும்பு கறிநெய் தயிர்நீம்பா
றேனி னினிய கனிகட்டி திருந்த வமுது செய்வித்தே
யேனை நிதியம் வேண்டுவன வெல்லா மின்ப முறவளிப்பார். (ஙூ)

அன்ன வகையாற் றிருத்தொண்டு புரியு நாளி லங்கொரு நாண்
மன்னு மனையி லமுதுசெய வந்த தொண்டர் தமையெல்லாந்
தொன்மை முறைமை யமுதுசெயத் தொடங்கு விப்பா ரவர்தம்மை
முன்ன ரழைத்துத் திருவடிக ளெல்லாம் விளக்க முயல்கின்றார். (ச)

திருந்து மனையார் மனையெல்லாந் திகழ விளக்கிப் போனகமும்
பொருந்து சுவையிற் கறியமுதும் புனிதத் தண்ணீ ருடன்மற்று
மருந்து மியல்பி னுள்ளனவு மமைத்துக் கரக நீரளிக்க
விரும்புங் கணவர் பெருந்தவர்தா ளெல்லாம் விளக்கும் பொழுதின்கண். (ஙி)

முன்பு தமக்குத் தொழில்செய்யுந் தமரா யேவன் மூளிந்துபோ
யென்பு மரவு மணிந்தபிரா னடியா ராகி யங்கெய்து
மன்ப ருடனே திருவேடந் தாங்கி யணைந்தா ரொருவர்தாம்
பின்பு வந்து தோன்றவவர் பாதம் விளக்கும் பெருந்தகையார். (ஞ)

கையா லவர்த மடிபிடிக்கக் காதன்மனையார் முன்பேவல்
செய்யா தகன்ற தமர்போலு மென்று தேரும் பொழுதுமலர்
மொய்யார் வாசக் கரகநீர் வார்க்க முட்ட முதற்றெரிண்டர்
மையார் கூந்தன் மனையாரைப் பார்த்து மனத்துட் கருதுவார். (எ)

வெறித்தண் கொன்றை முடியார்த மடியா ரிவர்மூன் மேவுநிலை
குறித்து வெள்கி நீர்வாரா தொழிந்தா ளென்று மனங்கொண்டு
மறித்து நோக்கார் வடிவாளே வாங்கிக் கரகம் வாங்கிக்கை
தறித்துக் கரக நீரெடுத்துத் தாமே யவர்தாள் விளக்கினார். (அ)

விளக்கி யமுது செய்வதற்கு வேண்டு வனதா மேசெய்து
துளக்கில் சிந்தை யுடன்றொண்டர் தம்மை யமுது செய்வித்தா
ரளப்பில் பெருமை யவர்பின்னு மடித்த தொண்டின் வழிநின்று
களத்தி னஞ்ச மணிந்தவர்தா ணிழற்கீ ழடியா ருடன்கலந்தார். (கூ)

ஓத மலிநீர் விடமுண்டா ரடியார் வேட மென்றுணரா
மாத ராரக்கை தடிந்தகலிக் கம்பர் மலர்ச்சே வடிவணங்கிப்
பூத நாதர் திருத்தொண்டு புரிந்து புவனங் களிற்பொலிந்த
காத லன்பர் கலிநீதி யார்தம் பெருமை கட்டுரைப்பாம். (கo)

கலிக்கம்பநாயனர்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ச,oஉக.

கலியநாயனர்புராணம்.

பேரூலகி லோங்குபுகழ்ப் பெருந்தொண்டை நன்னாட்டு
நீரூலவுஞ் சடைக்கற்றை நிருத்தர்திருப் பதியாகுங்
காரூலவு மலர்ச்சோலைக் கன்னிமதில் புடைசூழ்ந்து
தேரூலவு செவ்வீதி சிறந்ததிரு வொற்றியூர். (க)

மீடுகெழும் பெருந்தெருவும் புத்தருடன் மீலியமண்
வேடமுடை யவர்பொருள்போ லாகாத வெளிமறைக்கு
மாடுகொடி மணிகெடுமா விகைநிரைக ளிலைகமுகின்
காடனைய கடல்படப்பை யெனவிளங்குங் கவின்காட்டும். (உ)

பன்னுதிருப் பதிகவிசைப் பாட்டோவா மண்டபங்க
ளன்னகடை மடவார்க ளாட்டோவா வணியரங்கு
பன்முறைநா ரியமுழங்கு வீழவோவா பயில்வீதி
செந்நெலடி சிற்பிறங்க ளுணவோவா திருமடங்கள். (ஙூ)

கெழுமலர்மா தவிபுன்னை கிளைஞாழ றேமாவிழுங்
கொழுமுகைய சண்பகங்கள் குளிர்செருந்தி வளர்கைதை
முழுமணமே முடங்கீருங் கமழுமலர் முருகுயிர்க்குஞ்
செழுநிலவின் முகளனைய மணற்பரப்புந் திருப்பரப்பு. (ச)

எயிலனைய முதின்முழக்கு மெறிதிரைவே லெயின்முழக்கும்
பயிறருபல் லியமுழக்கு முறைதெரியாப் பதியதனுள்
வெயிலணிபன் மணிமுதலாம் விழுப்பொருளா வனவிளக்குந்
தயிலவினைத் தொழின்மரபிற் சக்கரப்பா டித்தெருவு. (ஞ)

அக்குலத்தின் செய்தவத்தா லவனிமிசை யவதரித்தார்
மிக்கபெருஞ் செல்வத்து மீக்கூர வீளங்கினார்
தக்கபுகழ்க் கலியனெ னுநாமத் தலைநின்றூர்
முக்கணிறை வர்க்குரிமைத் திருத்தொண்டி னெறிமுயல்வார். (ஃ)

எல்லையில்பல் கோடிதனத் திறைவரா யிப்படித்தாஞ்
செல்வநெறிப் பயனறிந்து திருவொற்றி யூரமர்ந்த
கொல்லைமழ விடையார்தங் கோயிலினுள் ளும்புறம்பு
மல்லலெடுத் பகலுமிடுந் திருவிளக்கி னணிவிளைத்தார். (எ)

எண்ணிறிரு விளக்குநெடு நாளெல்லா மெரித்துவரப்
புண்ணியமெய்த் தொண்டர்செயல் புலப்படுப்பா ரருளாலே
யுண்ணிறையும் பெருஞ்செல்வ முயர்த்தும்வினைச் செயலோலி
மண்ணிலவ ரிருவினைபோன் மாண்டதுமாட் சிமைத்தாக. (அ)

திருமலிசெல் வத்துழனி தேய்ந்தழிந்த பின்னையுந்தம்
பெருமைநிலைத் திருப்பணியிற் பேராள ரேராளர்
வருமரபி லுள்ளோர்பா லெண்ணெய்மா றிக்கொணர்ந்து
தரு தியல்பிற் கூலியினுற் றமதுதிருப் பணிசெய்வார். (கூ)

வளமுடையார் பாலெண்ணெய் கொடுபோய்மா றிக்கூலி
கொளமுயலுஞ் செய்கையுமற் றவர்கொடா மையின்மாறத்
தளருமன முடையவர்தாஞ் சக்கரவெந் திரம்புரியுங்
களனில்வரும் பணிசெய்து பெறுங்கூலி காதலித்தார். (கo)

செக்குநிறை யெள்ளாட்டிப் பதமறிந்து திலதயிலம்
பக்கமெழ மிகவுழந்தும் பாண்டில்வரு மெருதுய்த்துந்
தக்கதொழிற் பெறுங்கூலி தாங்கொண்டு தாழாமை
மிக்கதிரு விளக்கிட்டார் விழுத்தொண்டு விளக்கிட்டார். (கக)

அப்பணியால் வரும்பேறு மவ்வினைஞர் பலருளரா
யெப்பரிசுங் கிடையாத வகைமுட்ட விடருழந்தே
யொப்பின்மனை விற்றெரிக்கு முறுபொருளு மாண்டதற்பின்
செப்பருஞ்சீர் மனையாரை விற்பதற்குத் தேடுவார். (கஉ)

மனமகிழ்ந்து மனைவியார் தமைக்கொண்டு வளநகரிற்
றனமளிப்பார் தமையெங்குங் கிடையாமற் றளர்வெய்திச்
சினவிடையார் திருக்கோயிற் றிருவிளக்குப் பணிமுட்டக்
கனவினுமுன் பறியாதார் கையறவா லெய்தினார். (கங)

பணிகொள்ளும் படம்பக்க நாயகர்தங் கோயிலினு
ளணிகொள்ளுந் திருவிளக்குப் பணிமாறு மமையத்தின்
மணிவண்ணச் சுடர்விளக்கு மாளிலியான் மாள்வனெனத்
துணிவுள்ளங் கொளநினைந்தவ் வினைமுடிக்கத் தொடங்குவார். (கச)

திருவிளக்குத் திரியிட்டங் ககல்பரப்பிச் செயனிரம்ப
வொருவியவெண் ணெய்க்கீடா வுடலுதிரங் கொடுநிறைக்கக்
கருவியினுன் பிடறரிய வக்கையைக் கண்ணுதலார்
பெருகுதிருக் கருணையுட னேர்வந்து பிடித்தருளி. (கஙி)

மற்றவர்த முன்னுக மழவிடைமே லெழுந்தருள
வுற்றவரு நதுநீங்கி யொளிவிளங்க வுச்சியின்மேற்
பற்றியவஞ் சலியினராய் நின்றவரைப் பரமர்தாம்
பொற்புடைய சிவபுரியிற் பொலிந்திருக்க வருள்புரிந்தார். (கசு)

ஞானபோ னகருக்கு நற்றவத்தி னெழுக்கத்தா
லானமில்சி லத்தும்பான் மகட்பேசி வந்ததென
வானபே றந்தணர்பா லருளுடைமை யாமென்று
வானளவு நிறைந்தபெரு மனமகிழ்ச்சி யொடுமொழிவார். (கசசுசு)

உம்மூடைய பெருந்தவத்தா லுலகனேத்து மீன்றளித்த
வம்மைதிரு முலைப்பாலிற் குழைத்தவா ரமுதுண்டார்க்
கெம்மூடைய குலக்கொழுந்தை யாமுய்யத் தருகின்றீரும்
வம்மினென வுரைசெய்து மனமகிழ்ந்து செலவிடுத்தார். (கசசுள)

பேருவகை யாலிசைவு பெற்றவர்தா மீண்டனேந்து
காருலவு மலர்ச்சோலைக் கழுமலத்தை வந்தெய்திச்
சீருடைய பிள்ளையார்க் கவர்சேர்ந்த படிசெப்பிப்
பார்குலவுந் திருமணத்தின் பான்மைவினை தொடங்குவார். (கசசுஅ)

திருமணஞ்செய் கலியாணத் திருநாளுந் திகழ்சிறப்பின்
மருவியவோ ரையுங்கணித மங்கலநூ லவர்வகுப்பப்
பெருகுமண நாளோலை பெருஞ்சிறப்பி னுடன்போக்கி
யருள்புரிந்த நன்னுளி லணிமுளைப்பா லிகைவிதைத்தார். (கசசுக)

செல்வமலி திருப்புகலிச் செழுந்திருவீ திகளெல்லா
மல்குநிறை குடம்விளக்கு மகரதோ ரணநிரைத்தே
யெல்லையிலா வொளிமுத்து மாலிகளெங் கணுநாற்றி
யல்குபெருந் திருவோங்க வணிசிறக்க வலங்கரித்தார். (கசஎ0)

எங்கணுமெய்த் திருத்தொண்டர் மறையவர்க ளேனையோர்
மங்கலநீண் மணவினைநான் கேட்டுமிக மகிழ்வெய்திப்
பொங்குதிருப் புகலிதனி னுடோறும் புகுந்தீண்ட
வங்கணணைந் தவர்க்கெல்லாம் பெருஞ்சிறப்பு மிகவளித்தார். (கசஎக)

அருந்தவத்தோ றந்தணர்க ளயலுள்ளோர் தாமுய்யப்
பொருந்துதிரு நாளோலை பொருவிறந்தார் கொண்டணையத்
திருந்துபுகழ் நம்பாண்டார் நம்பிசிறப் பெதிர்கொண்டு
வருந்தவத்தான் மகட்கொடுப்பார் வதுவைவினை தொடங்குவார். (கசஎஉ)

மன்னுபெருஞ் சுற்றத்தா ரெல்லாரும் வந்தீண்டி
நன்னிலைமைத் திருநாளுக் கெழுநாளா நன்னுளிற்
பன்மணிமங் கலமுரசம் பல்லியங்க ணிறைந்தார்ப்பப்
பொன்மணிப்பா லிகைமீது புனிதமுளை பூரித்தார். (கசஎங)

சேணியரு மாடங்க டிருப்பெருகு மண்டபங்க
ணீணிலைய மாளிகைக ணிகரிலணி பெறவிளக்கிக்
காண்வருகை வினைவண்ணங் கவினெங்கும் படியெழுதி
வாணிலவு மணிக்கடைக்கண் மங்கலக்கோ லம்புனைந்து. (கசஎச)

நீடுநிலைத் தோரணங்க ணீண்மறுகு தொறுநிரைத்து
மாடியருங் கொடிமாலை மணிமாலை யிடைபோக்கிச்
சேடியரும் வேதிகைகள் செழுஞ்சாந்து கொடுசீவிப்
பீடுகெழு மணிமுத்தின் பெரும்பந்தர் பலபுனைந்தார். (கசஎடு)

மன்றல்வினைத் திருமுளைநாட் டொடங்கிவரு நாளெல்லா
மூன்றிரவும் வீதிதொறு முகவெடுவா யில்கடோறு
மின்னொளிரு மணிவிளக்கு நிறைவாசப் பொற்குடங்க
ளென்னுசுடர்த் தாமங்க ளேபக்க மெதைவித்தார். (ககளசு)

மங்கலமா ரியகாத மறுகுதொறு நின்றியம்பப்
பொங்கியகான் மறையோசை கடலோசை யிகப்பொலியத்
தங்குமுயங் குறையகிலின் றழைத்தசெழும் புகையினுடன்
செங்கனலா குதிப்புகையுந் தெய்வவிரை மணம்பெருக. (ககளஎ)

எண்டிசையி லுள்ளோரு மீண்டுவளத் தொடுதெருங்கப்
பண்டநிறை சாலைகளும் பலவேறு விதம்பயில
மண்டுபெரு நிதிக்குவைகண் மலைப்பிறங்க ளெனமலிய
வுண்டிவினைப் பெருந்தழனி யோவாத வொலியோங்க. (ககளஅ)

மாமறைநூல் விதிச்சடங்கில் வகுத்தமுறை நெறிமரபின்
மாமணலா லுபகரணஞ் சமைப்பவர்தங் தொழிறுவன்றத்
தாமரையோ னனையபெருந் தவமறையோர் தாமெடுத்த
பூமருவு பொற்கலசப் புண்ணியநீர் பொலிவெய்த. (ககளசு)

குங்குமத்தின் செழுஞ்சேற்றின் கூட்டமைப்போ ரினங்குழுமப்
பொங்குவிரைப் புதுக்கலவைப் புகையெடுப்போர் தொகைவிரவத்
துங்கநறுங் கர்ப்பூரச் சுண்ணமிடிப் போர்நெருங்க
வெங்குமலர்ப் பீணைபுனைவோ ரீட்டங்கண் மிகப்பெருக. (ககஅ0)

இனையபல வேறுதொழி லெம்மருங்கு நிரைத்தியற்று
மினவளரு மறுகெல்லா மணவணிசெய்ம் மறைமூதூர்
நினைவரிய பெருவளங்க ணெருங்குதலா னிதிக்கோமான்
றனையிறைவர் தாமேவச் சமைத்ததுபோ லமைந்துளதால். (ககஅக)

ஏ வ று.

மாறி லாநிறை வளந்தரு புகலியின் மணமீக்
கூறு நாளின்முன் னுளினில் வேதியர் குழாமு
நீறு சேர்திருத் தொண்டரு நிகரிலா தவருக்
காறு சூடிஞ ரருட்டிருக் காப்புகா ணணிவார். (ககஅஉ)

வேத வாய்மையின் விதியுளி வினையிஞல் விளங்க
வோத நீரூல கியன்முறை யொழுக்கமும் பெருகக்
காத னீடிருத் தொண்டர்கண் மறையவர் கலிஞர்
மாதர் மைந்தர்பொற் காப்புகா ணகர்வலஞ் செய்தார். (ககஅங)

நகர்வ லஞ்செய்து புகுந்தபி னவமணி யணிந்த
புகரில் சித்திர விதானமண் டபத்தினிற் பொலியப்
பகரும் வைதிக விதிச்சமா வர்த்தனப் பான்மை
திகழ முற்றிய செம்மலார் திருமுன்பு சேர்ந்தார். (ககஅச)

செம்பொ னின்பரி கலத்தினிற் செங்நெல்வெண் பரப்பின்
வம்ப ணிந்தநீண் மாலைசூழ் மருங்குற வமைத்த
வம்பொன் வாசநீர்ப் பொற்குட மசிலே தருப்பை
பம்பு நீள்சுடர் மணிவிளக் கொளிர்தரும் பரப்பில். (ககஅஙி)

நாத மங்கல முழக்கொடு நற்றவ முனிவர்
வேத கீதமும் விம்மிட விரைகமழ் வாசப்
போது சாந்தணி பூந்துகில் புனைந்தபுண் ணியம்போன்
மீது பூஞ்சய னத்திருந் தவர்முன்பு மேவி. (ஈஈஅசு)

ஆர்வ மிக்கெழு மன்பிலுன் மலரய னனைய
சீர்ம றைத்தொழிற் சடங்குசெய் திருத்துனன் முனிவர்
பார்வ ழிப்பட வருமிரு வினைகளின் பந்தச்
சார்பொ ழிப்பவர் திருக்கையிற் காப்புநாண் சாத்த. (ஈஈஅஎ)

கண்ட மாந்தர்கள் கடிமணங் காணவந் தணைவார்
கொண்ட வல்வினை யாப்பவிழ் கொள்கைய வான
தொண்டர் சிந்தையும் வதனமு மலர்ந்தன சுருதி
மண்டு மாமறைக் குலமெழுந் தார்த்தன மகிழ்ந்தே. (ஈஈஅஅ)

நிரந்த கங்குலி னிதிமழை விதிமுறை யெவர்க்கும்
புரந்த ஞானசம் பந்தர்தாம் புன்னெறிச் சமய
வரந்தை வல்லிரு ளகலமுன் னவதரித் தாற்போற்
பரந்த பேரிரு ணொந்துவந் தெழுந்தனன் பகலோன். (ஈஈஅஈ)

அஞ்சி றைச்சுரும் பறைபொழிற் சண்பையாண் டகையார்
தஞ்சி வத்திரு மணஞ்செயத் தவஞ்செய்நா ளென்று
மஞ்ச னத்தொழில் புரிந்தென மாசிருள் கழுவிச்
செஞ்சு டர்க்கெதிர்ப் பேரணி யணிந்தன திசைகள். (ஈஈஈ0)

பரம்பு தன்வயி னெங்கணு முள்ளபல் வளங்க
ணிரம்ப முன்கொணர்ந் தெண்டிசை யவர்பெரு குதலாற்
றரங்க டந்தவர் தந்திருக் கல்லியா ணத்தின்
வரம்பி றன்பயன் காட்டுவ தொத்தது வையம். (ஈஈஈஈ)

நங்கள் வாழ்வென வருந்திரு ஞானசம் பந்தர்
மங்க லத்திரு மணவெழுச் சியின்முழக் கென்னத்
துங்க வெண்டிரைச் சுரிவளை யார்ப்பொடு சூழ்ந்து
பொங்கு பேரொலி முழக்குட னெழுந்தது புணரி. (ஈஈஈஉ)

அளக்க ரேழுமொன் றுமெனும் பெருமையெவ் வுலகும்
விளக்கு மாமணி விழாவுடன் விரைந்துசெல் வனபோற்
றுளக்கில் வேதிய ராகுதி தொடங்கிடா முன்னம்
வளர்க்கும் வேதியில் வலஞ்சுழித் தெழுந்தது வன்னி. (ஈஈஈஊ)

சந்த மென்மலர்த் தாதணி நீறுமெய் தரித்துக்
கந்த மேவுவண் டொழுங்கெனுங் கண்டிகை பூண்டு
சிந்தை தூயவன் பர்களுடன் றிருமணம் போத
மந்த சாரியின் மணங்கொணர்ந் தெழுந்தது மருத்து. (ஈஈஈசு)

எண்டி சைத்தலத் தியாவரும் புகலிவந் தெய்தி
மண்டு மத்திரு மணவெழுச் சியினணி வாய்ப்பக்
கொண்ட வெண்ணிறக் குரூஉச்சுடர்க் கொண்டல்க ளென்ன
வெண்டு கிற்கொடி நிரைத்தது போன்றது விசும்பு. (ஈஈஈஎ)

ஏல விக்கலம் யாவையு மெழுச்சிமுன் காட்டுங்
காலே செய்வினே முற்றிய கவுணியர் பெருமான்
மூல மாகிய தோணிமேன் முதல்வரை வணங்கிச்
சீல மார்திரு வருளினுன் மணத்தின்மேற் செல்வார். (௫௫௯)

காழி மாநகர் வேதியர் குழாத்தொடுங் கலந்து
சூழு மன்பர்க ளேனையோர் துதைந்துமுன் செல்ல
வாழி மாமறை முழங்கிட வளம்பதி வணங்கி
நீழல் வெண்சுடர் நித்திலச் சிவிகைமேற் கொண்டார். (௫௫௰)

யான வாகன மேறுவார் யாருமேற் கொள்ளக்
கான மாகிய தொங்கல்பிச் சங்குடை கவரி
மேனை ருங்கிட விசும்பினு நிலத்தினு மெழுந்த
வான துந்துபி முழக்குடன் மங்கல வியங்கள். (௫௫௰௧)

வே று.

சங்கொடு தாரை சின்னந் தனிப்பெருங் காளந் தாளம்
வங்கிய மேனே மற்று மலர்த்துகோக் கருவி யெல்லாம்
பொங்கிய வொலியி னேங்கிப் பூசுரர் வேத நாத
மெங்கணு மெழுந்து மல்கத் திருமண மெழுந்த தன்றே. (௫௫௨)

கோதையர் குழல்சூழ் வண்டின் குழாத்தொலி யொருபாற் கோல
வேதியர் வேத வாய்மை மிகுமொலி யொருபான் மிக்க
வேதமில் விபஞ்சி வீணே யாழொலி யொருபா லேத்து
நாதமங் கலங்கொள் கீத நயப்பொலி யொருபா லாக. (௫௩00)

விண்ணினே விழுங்க மிக்க வெண்டுகிற் பதாகை வெள்ளங்
கண்வெறி படைப்ப மிக்க கதிர்விரி கவரிக் கான
மண்ணிய மணிப்பூ ணீடு மரிசன மலிந்த பொற்பி
னெண்ணிலா வண்ணத் தூசின் பொதிப்பரப் பெங்கு நண்ண. (௫௩0௫)

சிகையொடு மான்றே ருங்குங் கிடையுமா சானுஞ் செல்வார்
புகைவிடும் வேள்விச் செந்தீ யில்லுடன் கொண்டு போவார்
தகைவிலா விருப்பின் மிக்க பதிகங்கள் விளம்பிச் சார்வார்
வகையறு பகையுஞ் செற்ற மாதவ ரியல்பின் மல்க. (௫௩0௨)

அறுவகை விளங்குஞ் சைவத் தளவிலா வீரதஞ் சாரு
நெறிவழி நின்ற வேட நீடிய தவத்தி னுள்ளோர்
மறுவற மனத்தி லன்பின் வழியினுல் வந்த யோகக்
குறிநிலே பெற்ற தொண்டர் குழாங்குழா மாகி யேக. (௫௩0௩)

விஞ்சைய ரியக்கர் சித்தர் கின்னரர் மிடைந்த தேவ
ரஞ்சன நாட்ட வீட்டத் தரம்பைய ருடனு புள்ளோர்
தஞ்சுடர் விமான மேறித் தழைத்தவா தரவி னேடு
மஞ்சுறை விசும்பின் மீது மணவணி காணச் சென்றார். (௫௩0௪)

மற்றிவர் மிடைந்து செல்லு மங்கல வனப்பின் காட்சி
முற்றவித் தலத்தி னுள்ளோர் மொய்த்துடன் படரும் போதி
லற்புத நிகழ்ச்சி யெய்த வணைதலான் மணமேற் செல்லும்
பொற்பமை மணத்தின் சாயை போன்றுமுன் பொலியச் செல்ல. (௫௩0௫)

தவவர சாள வுய்க்குந் தனிக்குடை நிழற்றச் சாரும்
பவமறுத் தாள வல்லார் பாதமுள் ளத்துக் கொண்டு
புவனங்கள் வாழ வந்த பூந்தாய் வேந்தர் போந்து
சிவனமர்ந் துறையு நல்லூர்த் திருப்பெரு மணத்தைச் சேர்ந்தார். (கஉ0ஈ)

பெருமணக் கோயி லுள்ளார் மங்கலம் பெருகு மாற்றால்
வருமணத் திறத்தின் முன்னர் வழியெதிர் கொள்ளச் சென்று
திருமணம் புணர வெய்துஞ் சிரபுரச் செம்ம லார்தா
மிருண்மணங் திலங்கு கண்டத் திறைவர்தங் கோயில் புக்கார். (கஉ0எ)

ஈாதரைப் பணிந்து போற்றி ஈற்பொருட் பதிகம் பாடிக்
காதன்மெய் யருண்முன் பெற்றுக் கவுணியர் தலேவர் போந்து
வேதியர் வதுவைக் கோலம் புனேந்திட வேண்டு மென்னப்
பூதநா யகர்தங் கோயிற் புறத்தொரு மடத்திற் புக்கார். (கஉ0அ)

பொற்குட நிறைத்த வாசப் புனிதமஞ் சனநீ ராட்டி
விற்பொலி வெண்பட் டாடை மேதக விளங்கச் சாத்தி
ஈற்றிரு வுத்த நீய றுங்துகில் சாத்தி ஞானப்
பற்பல கலவைச் சாந்தம் பான்மையி னணிந்த பின்னர். (கஉ0ஊ)

திருவடி மலர்மேற் பூத்த செழுந்தகைச் சோதி யென்ன
மருவிய தரளக் கோவை மணிச்சரி யணேயச் சாத்தி
விரிசுடர்ப் பரட்டின் மீது விளங்குபொற் சரட்டிற் கோத்த
பெருகொளி முத்தின் ரூமம் பிறங்கிய தொங்கல் சாத்தி. (கஉஈ0)

தண்சுடர்ப் பரிய முத்துத் தபனிய ஈாணிற் கோத்த
கண்கவர் கோவைப் பத்திக் கதிர்க்கடி சூத்தி ரத்தை
வெண்சுடர்த் தரள மாலே விரிசுடர்க் கொடுக்கின் மீது
வண்டிரு வரையி னீடு வனப்பொளி வளரச் சாத்தி. (கஉஈஈ)

ஒளிகதிர்த் தரளக் கோவை யுதரபந் தனத்தின் மீது
தளியொளி துளும்பு முத்தின் சன்னவீ ரத்தைச் சாத்திக்
குளிர்நில வெறிக்கு முத்தின் பூணணூற் கோவை சாத்தி
ஈளிர்கதிர் மூத்து மாலே ஈகுசுட ராரஞ் சாத்தி. (கஉஈஉ)

வாள்விடு வயிரக் கட்டு மணிவிர லாழி சாத்தித்
தாளுறு தடக்கை முத்தின் றண்டையுஞ் சரியு ஈாணு
நீளொளி முழங்கைப் பொட்டு நிரைசுடர் வடமுஞ் சாத்தித்
தோள்வளைத் தரளப் பைம்பூண் சுந்தரத் தோண்மேற் சாத்தி. (கஉஈகூ)

திருக்கழுத் தாரந் தெய்வக் கண்டிகை மாலே சேரப்
பருத்தமுத் தொழுங்கு கோத்த படரொளி வடமுஞ் சாத்திப்
பெருக்கிய வனப்பின் செவ்வி பிறங்கிய திருவார் காதில்
வருக்கவெண் டரளக் கொத்தின் வடிக்குழை விளங்கச் சாத்தி. (கஉஈச)

நீற்றெழி தழைத்துப் பொங்கி நிறைதிரு நெற்றிமீது
மேற்பட விரிந்த சோதி வெண்சுட ரெழுந்த தென்னப்
பாற்படு முத்தின் பாரப் பனிச்சுடர்த் திரளே சாத்தி
யேற்பவைத் தணிந்த முத்தி னெழில்வளர் மகுடஞ் சேர்த்தார். (கஉஈஞ)

இவ்வகை நம்மை யாளு மேர்வளர் தெய்வக் கோலங்
கைவினை மறையோர் செய்யக் கடிகொள்செங் கமலத் தாதின்
செவ்வியீ டாம மார்பர் திருவடை யாள மாலை
யெவ்வுல கோரு மேத்தத் தொழுதுதா மெடுத்துப் பூண்டார். (கஉகசு)

அழகினுக் கணியாம் வெண்ணீ றஞ்செழுத் தோதிச் சாத்திப்
பழகிய வன்பர் சூழப் படரொளி மறுகி லெய்தி
மழவிடை மேலோர் தம்மை மனங்கொள வணங்கி வந்து
முழவொலி யெடுப்ப முத்தின் சிவிகைமேல் கொண்ட போது. (கஉகள)

எழுந்தன சங்க நாத மியம்பின வியங்க ளெங்கும்
பொழிந்தன விசும்பில் விண்ணோர் கற்பகப் புதுப்பூ மாரி
தொழுந்தகை முனிவர் தொண்டர் சுருதியின் வாழ்த்துப் பொங்
வழிந்தன திசைகண் மீது மலர்ந்தன வுலக மெல்லாம். (கஉகஅ)

படர்பெருந் தொங்கல் பிச்சம் பைங்கதிர்ப் பீலிப் பந்த
ரடர்பூஞ் செம்பொற் பாண்டி லணிதுகிற் சதுக்க மல்கக்
கடலின்மீ தெழுந்து நிற்குங் கதிர்நிறை மதியம் போல
வடநிரை யணிந்தமுத்தின் மணிக்குடை நிழற்ற வந்தார். (கஉகக)

சீரணி தெருவி னூடு திருமணஞ் செல்ல முத்தி
னேரணி காளஞ் சின்ன மிலங்கொளித் தாரை யெல்லாம்
பேரொலி பெருக முன்னே பிடித்தன மறைக ளோடு
தாரணி யுய்ய ஞான சம்பந்தன் வந்தா னென்று. (கஉஉ0)

மண்ணினுக் கிடுக்கண் டீர வந்தவர் திருநா மங்க
ளெண்ணில பலவு மேத்திச் சின்னங்க ளெழுந்த போதவ்
வண்ணலார் வதுவை செய்ய வலங்கரித் தணையப் பெற்ற
புண்ணிய மறையோர் மாட மங்கலம் பொழிந்து பொங்க. (கஉஉக)

முற்றுமெய்ஞ் ஞானம் பெற்ற மூர்த்தியார் செங்கை பற்ற
நற்பெருந் தவத்தி னீர்மை நலம்படைத் தெழுந்த தெய்வக்
கற்பகப் பூங்கொம் பன்னார் தம்மையுங் கரப்புச் சேர்த்துப்
பொற்புறு சடங்கு முன்னர்ப் புரிவுடன் செய்த வேலை. (கஉஉஉ)

செம்பொன்செய் வாசிச் சூட்டுத் திருமணிப் பூணபூண் செல்வப்
பைம்பொனின் மாலை வேய்ந்த பவளமென் கொடியொப் பாரை
நம்பன்ற னருளே வாழ்த்தி நல்லெழில் விளங்கச் சூட்டி
யம்பொன்செய் தீப மென்ன வழகலங் கரித்து வைத்தார். (கஉஉங)

மாமறை மைந்த ரெல்லா மணத்தெதிர் சென்று மன்னுந்
தாமலர்ச் செம்பொற் சுண்ணந் தொகுவ மணியும் வீசத்
தாமரை மலரோன் போல்வா ரரசிலை தருப்பை தோய்ந்த
காமர்பொற் கலச நன்னீ ரிருக்குடன் கலந்து வீச. (கஉஉச)

வீண்ணவர் மலரின் மாரி விசும்பொளி தழைப்ப வீச
மண்ணக நிறைந்த கந்த மந்தமா ருதமும் வீசக்
கண்ணெளி விளக்க மிக்கார் காமர்தோ ரணங்க ளூடு
புண்ணிய வினைவு போல்வார் பூம்பந்தர் முன்பு சார்ந்தார். (கஉஉடு

பொன்னணி சங்கின் வெள்ளம் பொலிவுடன் முழங்கி யார்ப்ப
மன்னிய தரளப் பத்தி வளர்மணிச் சிவிகை நின்றும்
பன்மலர் நறும்பொற் சுண்ணம் பரந்தபா வாடைமீது
முன்னிழிந் தருளி வந்தார் மூவுல கேத்த வந்தார். (கஉஉசு)

மறைக்குல மனையில் வாழ்க்கை மங்கல மகளி ரெல்லா
நிறைத்த நீர்ப் பொற்குடங்க ணிரைமணி விளக்குத் தூப
நறைக்குல மலர்சூழ் மாலை நகுசுடர் முளைப்பொற் பாண்டி
லுறைப்பொலி கலவை யேந்தி யுடனெதி ரேற்று நின்ரூர். (கஉஉள)

ஆங்குமுன் னிட்ட செம்பொ னணிமணிப் பீடந் தன்னி
லோங்கிய ஞான வெள்ள முண்ணிறைந் தெழுவ தென்னத்
தாங்கிய முத்தின் பைம்பூண் டண்ணிலா வெறிப்ப வேறிப்
பாங்கொளி பரப்பி நின்ரூர் பரசம யங்கள் வீழ்த்தார். (கஉஉஅ)

எதிர்வர வேற்ற சாய லிளமயி லனைய மாதர்
மதுரமங் கலமுன் ஞன வாழ்த்தொலி யெடுப்ப வந்து
கதிர்மணிக் கரக வாசக் கமழ்புன லொழுக்கிக் காதல்
விதிமுறை வலங்கொண் டெய்தி மேவுநல் வினைகள் செய்தார். (கஉஉக)

மங்கலம் பொலிய வேந்தி மாதரார் முன்பு செல்லக்
கங்கையின் கொழுந்து செம்பொ னிமவரை கலந்த தென்ன
வங்கவர் செம்பொன் மாடத் தாதிபூ தியினுட் புக்கா
ரெங்களை வாழ முன்னு ளேவைவை கையினு லிட்டார். (கஉஉ0)

அகினறுந் தூபம் விம்மி யணிகிளர் மணியால் வேய்ந்த
துகில்புனை வீதான நீழற் றூமலர்த் தவிசின் மீது
நகிலணி முத்த மாலை நகைமுக மடவார் வாழ்த்த
விகலில்சீர் மறையோர் சூழ வினிதினங் கிருந்த வேலை. (கஉஉக)

திருமகட் கொடுக்கப் பெற்ற செழுமறை முனிவர் தாமு
மருமையான் முன்செய் மெய்ம்மை யருந்தவ மனைவி யாரும்
பெருமகிழ்ச் சியினற் பாதம் விளக்குவார் பிள்ளை யார்மு
னுரிமையால் வெண்பா றூநீ ருடனெடுத் தேந்தி வந்தார். (கஉஉஉ)

வந்துமுன் னெய்தித் தாமுன் செய்தமா தவத்தி னன்மை
நந்துநம் பாண்டார் நம்பி ஞானபோ னகர்பொற் பாதங்
கந்தவார் குழலி ஞர்பொற் கரகநீ ரெடுத்து வார்ப்பப்
புந்தியா னினைதி யானம் புரிசடை யானென் றுன்னி. (கஉஉங)

விருப்பிஞல் விளக்கி மிக்க புனிதநீர் தலைமேற் கொண்டு
பொருப்புறு மாடத் துள்ளும் புறத்துளுந் தெளித்த பின்ன
ருருப்பொலி யுதரத் துள்ளும் பூரித்தா ருவகை பொங்கி
யருப்புறு கிளைஞர் மேலுந் தெளித்தன ரார்வத் தோடும். (கஉஉச)

பெருகொளி ஞான முண்ட பிள்ளையார் மலர்க்கை தன்னின்
மருவுமங் கலநீர் வாசக் கரகமுன் னேந்தி வார்ப்பார்
தருமுறைக் கோத்தி ரத்தின் றங்குலஞ் செப்பி யென்ற
னருளிப் பாவை யாரைப் பிள்ளையார்க் களித்தே னென்ரூர். (கஉஉடு)

நற்றவக் கன்னி யார்கை ஞானசம் பந்தர் செங்கை
பற்றுதற் குரிய பண்பிற் பழுதினற் பொழுது நண்ணப்
பெற்றவ ருடன்பி றந்தார் பெருமணப் பிணைய ஞரைச்
சுற்றமுன் சூழ்ந்து போற்றக் கொண்டுமுன் னணி னர்கள். (௧௨௬)

ஏகமாஞ் சிவமெய்ஞ் ஞான மிசைந்தவர் வலப்பா லெய்தி
நாகமார் பணப்பே ரல்கு னற்றவர்க் கொழுந்தன் ஞரை
மாகமார் சோதி மல்க மன்னிவீற் றிருந்த வெள்ளே
மேகமோ டியைந்த மின்னுக் கொடியென விளங்க வைத்தார். (௧௨௭)

புனிதமெய்க் கோல நீடு புகலியார் வேந்தர் தம்மைக்
குனிசிலைப் புருவ மென்பூங் கொம்பனை யருடனே கூட
நனிமிகக் கண்ட போதி னல்லமய் கலங்கள் கூறி
மனிதருந் தேவ ராளர் கண்ணிமை யாது வாழ்த்தி. (௧௨௮)

பத்தியிற் குயிற்றும் பைம்பொற் பவளக்காற் பந்தர் நாப்பண்
சித்திர விதானத் தின்கீழ்ச் செழுந்திரு நீலநக்கர்
முத்தமிழ் விரகர் முன்பு முதன்மறை முறையி னேடு
மெய்த்தகம் பெருமான் பாத மேவுமுள் ளத்தாற் செய்ய. (௧௨௯)

மறையொலி பொங்கி யோங்க மங்கல வாழ்த்து மல்க
நிறைவளைச் செங்கை பற்றி நேரிழை யவர்மு னந்தப்
பொறையணி மூந்நூன் மார்பர் புகரில்வெண் பொரிகை யட்டி
யிறைவரை யேத்தும் வேலை யெரிவலங் கொள்ள வேண்டி. (௧௩0)

அருப்புமென் முலையி னார்த மணிமலர்க் கைப் பிடித்தங்
கொருப்படு முடைய பிள்ளை யார்திரு வுள்ளந் தன்னில்
விருப்புறு மங்கி யாவார் விடையுயர்த் தவரே யென்று
திருப்பெரு மணத்தை மேவுஞ் சிந்தையிற் றெளிந்து செல்வார். (௧௩௧)

மந்திர முறையா லுய்த்த வெரிவல மாக மாதர்
தந்திருக் கையைப் பற்றுந் தாமரைச் செங்கை யாள
ரிந்தவில் லொழுக்கம் வந்து சூழ்ந்ததே யிவடன் னேடு
மந்தமில் சிவன்ரு ளேர்வ னென்னுமா தரவு பொங்க. (௧௩௨)

மலர்பெருங் கிளையுந் தொண்டர் கூட்டமு மல்கிச் சூழ
வலகின்மெய்ஞ் ஞானத் தெல்லே யடைவுறுங் குறிப்பா லங்க
ணுலகினெம் மருங்கு நீங்க வுடனணைந் தருள வேண்டிக்
குலமணம் புரிவித் தார்தங் கோயிலே நோக்கி வந்தார். (௧௩௩)

சிவனமர்ந் தருளுஞ் செல்வத் திருப்பெரு மணத்து ளெய்தித்
தவநெறி வளர்க்க வந்தார் தலேப்படுஞ் சார்பு நோக்கிப்
பவமற வென்னே முன்ஞ ளாண்டவப் பண்பு கூட
நவமலர்ப் பாதங் கூட்டு மென்னுநல் லுணர்வு நல்க. (௧௩௪)

காதன்மெய்ப் பதிக நல்லூர்ப் பெருமண மெடுத்துக் கண்டோர்
தீதறு பிறவிப் பாசந் தீர்த்தல்செம் பொருளாக் கொண்டு
நாதனே நல்லூர் மேவும் பெருமண நம்ப னேயுன்
பாதமெய்ந் நீழல் சேரும் பருவமீ தென்று பாட. (௧௩௫)

தேவர்க டேவர் தாமும் திருவருள் புரிந்து நீயும்
பூவையன் ஞான மிங்குன் புண்ணிய மணத்தின் வந்தார்
யாவரு மென்பாற் சோதி யிதனுள்வந் தெய்து மென்று
மூவுல கொளியால் விம்ம முழுச்சுடர்த் தாணு வாகி. (கஉசக)

கோயிலுட் படமே லோங்குங் கொள்கையாற் பெருகுஞ் சோதி
வாயிலை வகுத்துக் காட்ட மன்னுசீர்ப் புகலி மன்னர்
பாயின வொளியா னீடு பரஞ்சுடர்த் தொழுது போற்றி
மாயிரு ஞால முய்ய வழியினே யருளிச் செய்வார். (கஉசஎ)

ஞானமெய்ந் நெறிதான் யார்க்கும் நமச்சிவா யச்சொ லாமென்
றூனசீர் நமச்சி வாயத் திருப்பதி கத்தை யங்கண்
வானமு நிலனுங் கேட்க வருள்செய்தும் மணத்தில் வந்தோ
ரீனமாம் பிறவிதீர யாவரும் புகுக வென்ன. (கஉசஅ)

வருமுறைப் பிறவி வெள்ளம் வரம்புகா ணுத முந்தி
யுருவெனுந் துயரக் கூட்டி லுணர்வின்றி மயங்கு வார்க
டிருமணத் துடன்சே வித்து முன்செ லுஞ் சிறப்பி னுலே
மருவிய பிறவி நீங்க மன்னுசோ தியினுட் புக்கார். (கஉசக)

மே வு.

சீர்பெருகு நீலநக்கர் திருமுருகர் முதற்றொண்ட
ரேர்கெழுவு சிவபாத விருதயர்நம் பாண்டார்நீ
ரார்திருமெய்ப் பெரும்பாணர் மற்றெனையோ ரணைந்துளோர்
பார்நிலவு கிளரொளிப் பன்னிகளோ டென்புக்கார். (கஉடு0)

அணிமுத்தின் சிவிகைமுத லணிதாங்கிச் சென்றார்கள்
மணிமுத்த மாலைபுனை மடவார்மங் கலம்பெருகும்
பணிமுற்று மெடுத்தார்கள் பரிசனங்கள் வினைப்பாசந்
துணிவித்த வுணர்வினராய்த் தொழுதுடன்புக் கொடுங்கினர். (கஉடுக)

ஆறுவகைச் சமயத்தி லருந்தவரு மடியவரும்
கூறுமறை முனிவர்களுங் கும்பிடவந் தணைந்தாரும்
வேறுதிரு வருளினுல் வீடுபெற வந்தாரு
மீறில்பெருஞ் சோதியினு ளெல்லாரும் புக்கதற்பின். (கஉடுஉ)

காதலியைக் கைப்பற்றிக் கொண்டுவலஞ் செய்தருளித்
தீதகற்ற வந்தருளுந் திருஞான சம்பந்தர்
நாதனெழில் வளர்சோதி நண்ணியத னுட்புகுவார்
போதநிலை முடிந்தவழி புக்கொன்றி யுடனுனர். (கஉடுங)

பிள்ளையா ரெழுந்தருளிப் புக்கதற்பின் பெருங்கூத்தர்
கொள்ளநீ டியசோதிக் குறிநிலையவ் வழிகரப்ப
வள்ளலார் தம்பழைய மணக்கோயி லேறன்றுதலுந்
தெள்ளுநீ ருலகத்துப் பேறில்லார் தெருமந்தார். (கஉடுச)

கண்ணுதலார் திருமேனி யுடன்கூடக் கவுணியனார்
நண்ணியது தூரத்தே கண்டெனுங் கப்பெரு
விண்ணவரு முனிவர்களும் விரிஞ்சனே முதலானு
ரெண்ணிலவ ரேசறவு நீரடெத் தேத்தினர். (கஉடுஎ)

அருந்தமிழா கரர்சரிதை யடியேனுக் கவர்பாதந்
தரும்பரிசா லறிந்தபடி தெரிசெய்தேன் முரணிமேற்
பெருங்கொடையுந் திண்ணனவும் பேருணர்வுந் திருத்தொண்டால்
வருந்தகைமைக் கலிக்காம னர்செய்கை வழுத்துவேன். (நஉநசு)

திருஞானசம்பந்தமூர்த்திநாயனூர்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ந,கநசு.

ஏயர்கோன்கலிக்காமநாயனூர்புராணம்.

நீடு வண்புகழ்ச் சோழர்நீர் நாட்டிடை நிலவு
மாடு பொன்கொழி காவிரி வடகரைக் கீழ்பா
லாடு பூங்கொடி மாடநீ டியவணி நகர்தான்
டீடு தங்கிய திருப்பெரு மங்கலப் பெயர்த்தால். (க)

இஞ்சி சூழ்வன வெந்திரப் பந்திரும் ஞாயின்
மஞ்சு சூழ்வன வரையென வுயர்மணி மாட
நஞ்சு சூழ்வன நயனியர் களினமெல் லடிச்செம்
பஞ்சு சூழ்வன காளையர் குஞ்சியின் பரப்பு. (உ)

விழவ ரூதன விளங்கொளி மணிநெடு வீதி
முழவ ரூதன மொய்குழ லியர்நட வரங்க
மழவ ரூதன மங்கலம் பொலிமணி முன்றி
லுழவ ரூதல்வ ளத்தன வோங்கிரங் குடிகள். (ஊ)

நீரி னிற்பொலி சடைமுடி நெற்றிநாட் டத்துக்
காரி னிற்றிகழ் கண்டர்தங் காதலோர் குழுமிப்
பாரின் மிக்கதோர் பெருமையாற் பரமர்தாள் பரவுஞ்
சீரின் மிக்கது சிவபுரி யெனத்தகுஞ் சிறப்பால். (எ)

இன்ன வாழ்பதி யதனிடை யேயர்கோக் குடிதான்
மன்னி நீடிய வளவர்சே ரூபதிக் குடியாந்
தொன்மை மேவிய நிகழ்ச்சியா னிறைவது ஆய
பொன்னி நாட்டுவே ளாண்மையி லுயர்ந்தபொற் பினதால். (ஏ)

அங்கண் மிக்கவக் குடியினி லவதரித் தள்ளார்
கங்கை வாழ்முடி யார்தொண்டர் கலிக்காம ரென்பார்
தங்க ளுயக ரடிபணி வாரடிச் சார்ந்து
பொங்கு காதலி னவர்பணி போற்றுதல் புரிந்தார். (ஐ)

புதிய நாண்மதிச் சடைமுடி யார்திருப் புன்கூர்க்
கதிக மாயின திருப்பணி யநேகமுஞ் செய்து
நிதிய மாவன நீறுகந் தார்கழ லென்று
துதியி னற்பர வித்தொழு தின்புறு கின்றூர். (ஒ)

நாவ லூர்மன்னர் நாதனைத் தானுவிட் டதனுக்
கியாவ ரிச்செயல் புரிந்தன ரென்றவ ரிழிப்பத்
தேவர் தம்பிரா னவர்திறந் திருத்திய வதற்கு
மேவ வந்தவச் செயலினே விளம்புவா னுற்றேன். (அ)

வே று.

திருத்தொண்டத் தொகையருளித் திருநாவ லூராளி
கருத்தொன்று காதலினுற் கனகமதிற் றிருவாரூ
ரொருத்தர்கழன் முப்பொழுது முருகியவன் பொடுபணிந்து
பெருத்தெழுமெய் யன்பினுற் பிரியாதங் குறையுநாள். (கூ)

தாளாண்மை யுழவுதொழிற் றண்மைவளந் தலைசிறந்த
வேளாளர் குண்டையூர்க் கிழவரெனு மேதக்கோர்
வாளார்வெண் மதியணிந்தார் மறையவனுப் வழக்கினில்வென்
ருளாகக் கொண்டவர்தா ளடைந்தன்பா லொழுகுவார். (கo)

செந்நெல்லும் பொன்னன்ன செழும்பருப்புந் தீங்கரும்பி
னின்னல்ல வமுதமுத லெண்ணில்பெரும் பலவளங்கண்
மன்னியசீர் வன்றொண்டர்க் கமுதாக வழுவாமற்
பன்னெடுநாள் பரவையார் மாளிகைக்குப் படிசமைத்தார். (கக)

ஆனசெய லன்பின்வரு மார்வத்தான் மகிழ்ந்தாற்ற
வானமுறை வழங்காமன் மாநிலத்து வளஞ்சுருங்கப்
போனகநெற் படிநிரம்ப வெடுப்பதற்குப் போதாமை
மானமழி கொள்கையினுன் மனமயங்கி வருந்துவார். (கஉ)

வன்றொண்டர் திருவாரூர் மாளிகைக்கு நெல்லெடுக்க
வின்றுகுறை யாகின்ற தென்செய்கே னெனநினைந்து
தன்றுபெருங் கவலையினுற் றுயரெய்தி யுண்ணுதே
யன்றிரவு துயில்கொள்ள வங்கணர்வந் தருள்புரிவார். (கங)

ஆரூரன் றனக்குன்பா னெற்றந்தோ மென்றருளி
நீரூருஞ் சடைமுடியார் நிதிக்கோமான் றனையேவப்
பேரூர்மற் றதனெல்லே யடங்கவுநென் மலைப்பிறங்கல்
காரூரு நெடுவிசும்புங் கரக்கநிறைந் தோங்கியதால். (கச)

அவ்விரவு புலர்காலே யுணர்ந்தெழுவா ரதுகண்டே
யெவ்வுலகி னெண்மலேதா னிதுவென்றே யதிசயித்துச்
செவ்வியபொன் மலேவளேத்தார் திருவருளின் செயல்போற்றிக்
கொவ்வைவாய்ப் பரவையார் கொழுநரையே தொழுதெழுவார். (கஇ)

வே று.

நாவலூர் மன்ன னுக்கு நாயனு ரளித்த நெல்லிங்
கியாவரா லெடுக்க லாகு மிச்செய லவர்க்குச் சொல்லப்
போவன்யா னென்று போந்தார் புகுந்தவா றருளிச் செய்து
தேவர்தம் பெருமா னேவ நம்பியு மெதிரே சென்றார். (கசு)

குண்டையூர்க் கிழவர் தாமு மெதிர்கொண்டு கோதில் வாய்மைத்
தொண்டனுர் பாதந் தன்னிற் றொழுதுவீழ்ந் தெழுந்து நின்று
பண்டெலா மடியேன் செய்த பணியெனக் கின்று முட்ட
வண்டர்தம் பிரானுர் தாமே நென்மலே யளித்தா ரென்று. (கஎ)

மனிதரா லெடுக்கு மெல்லைத் தண்டுநென் மலையி னேக்க
மினியெனற் செய்ய லாகும் பணியன்றி தென்னைக் கேட்டுப்
பனிமதி முடியா ரன்றே யுமக்குநெல் லளித்தா ரென்றே
யினியன மொழிந்து தாமுங் குண்டையூ ரெய்த வந்தார். (கஅ)

விண்ணினே யளக்கு நெல்லின் வெற்பினே நம்பி நோக்கி
யண்ணலைத் தொழுது போற்றி யதிசய மிகவு மெய்தி
யெண்ணில் சீர்ப் பரவை யில்லத் திருநெல்லை யெடுக்க வாளுந்
தண்ணில வணிந்தார் தாமே தரிலன்றி யொண்ணு தென்று. (கக)

மே வ று.

ஆளிடவேண் டிக்கொள்வா ரருகுதிருப் பதியான
கோளிலியிற் றம்பெருமான் கோயினே வந்தெய்தி
வாளனகண் மடவாள் வருந்தாமே யெனும்பதிக
மூளவருங் காதலுடன் முன்றொழுது பாடுதலும். (உ0)

பகற்பொழுது கழிந்ததற்பின் பரவைமனே யளவன்றி
மிகப்பெருகு நெல்லுலகில் விளங்கியவா ரூர்நிறையப்
புகப்பெய்து தருவனநம் பூதங்க ளெனவிசும்பி
னிகர்ப்பரிய தொருவாக்கு நிகழ்ந்ததுநின் மலனருளால். (உக)

தம்பிரா னருள்போற்றித் தரையின்மிசை விழுந்தெழுந்தே
யும்பரா லுணர்வரிய திருப்பாதந் தொழுதேத்திச்
செம்பொனேர் சடையாரைப் பிறபதியுந் தொழுதுபோய்
நம்பரா ரூரணைந்தார் நாவலூர் நாவலனார். (உஉ)

பூங்கோயின் மகிழ்ந்தருளும் புராதனரைப் புக்கிறைஞ்சி
நீங்காத பெருமகிழ்ச்சி யுடனேத்திப் புறம்போந்து
பாங்காளர் புடைசூழ்ந்து போற்றிசைக்கப் பரவையா
ரோங்குதிரு மாளிகையி னுள்ளணைந்தா ராரூரர். (உங)

கோவைவாய்ப் பரவையார் தாமகிழும் படிகூறி
மேவியவர் தம்மோடு மிகலின்புற் றிருந்ததற்பின்
சேவின்மே லுமையோடும் வருவார்தந் திருவருளி
னேவலினு லவ்விரவு பூதங்கண் மிக்கெழுந்து. (உச)

குண்டையூர் நென்மலையைக் குறட்பூதப் படைகவர்ந்து
வண்டலொங் குழற்பரவை மாளிகையை நிறைவித்தே
யண்டர்பிரான் றிருவாரூ ரடங்கவுநென் மலையாக்கிக்
கண்டவரற் புதமெய்துங் காட்சிபெற வமைத்தனவால். (உரு)

அவ்விரவு புலர்காலே யாரூரில் வாழ்வார்கண்
டெவ்வுலகில் விளைந்தனநென் மலையிவை யென்றதிசயித்து
நவ்விமதர்த் திருநோக்கி னங்கைபுகழ்ப் பரவையார்க்
கிவ்வுலகு வாழவரு நம்பியளித் தனவென்பார். (உசு)

நீக்கரிய நெற்குன்று தனேநோக்கி நெறிபலவும்
போக்கரிதா யிடக்கண்டு மீண்டுந்தம் மில்புகுவார்
பாக்கியத்தின் றிருவடிவாம் பரவையார்க் கிந்நெல்லுப்
போக்குமிட மரிதாகு மெனப்பலவும் புகல்கின்றார். (உஎ)

வன்றொண்டர் தமக்களித்த நெற்கண்டு மகிழ்ந்திறப்பா
ரின்றுங்கண் மனையெல்லைக் குட்படுநெற் குன்றெல்லாம்
பொன்றங்கு மாளிகையிற் புகப்பெய்து கொள்கவென
வென்றிமுர சறைவித்தார் மிக்கபுகழ்ப் பரவையார். (உஅ)

அணியாரூர் மறுகதனி லாளியங்கப் பறையறைந்த
பணியாலே மனைநிறைத்துப் பாங்கெங்கு நெற்கூடு
கணியாமற் கட்டிநகர் களிகூரப் பரவையார்
மணியாரம் புனைமார்பின் வன்றொண்டர் தமைப்பணிந்தார். (உக)

நம்பியா ரூரர்திரு வாரூரி னயத்துறைநாட்
செம்பொற்புற் றிடங்கொண்டு வீற்றிருந்த செழுந்தேனைத்
தம்பெரிய விருப்பிலெடுத் தாழ்ந்துணர்வி னற்பருகி
யிம்பருட னும்பர்களு மதிசயிப்ப வேத்தினர். (உ0)

குலவுபுகழ்க் கோட்புலியார் குறையிரந்து தம்பதிக்க
ணலகில்புக ழாரூர னெழுந்தருள வடிவணங்கி
நிலவியவன் றொண்டரஃ திசைத்ததற்பி னேயிறைஞ்சிப்
பலர்புகழும் பண்பினர் மீண்டிதம பதியணைந்தார். (உக)

வே று.

தேவ ரொதுங்கத் திருத்தொண்டர் மிடையுஞ் செல்வத் திருவாரூர்
காவல் கொண்டு தனியாளுங் கடவுட் பெருமான் கழல்வணங்கி
ஈவ லூர ரருள்பெற்று நம்பர் பதிகள் பிறவுண்ணிப்
பாவை பாகர் தமைப்பணிந்து பாடும் விருப்பிற் சென்றணைவார். (உஉ)

மாலு மயனு முணர்வரியார் மகிழும் பதிகள் பலவணங்கி
ஞால நிகழ்கோட் புலியார்தங் நாட்டியத்தான் குடிவண்ண
வேலும் வகையா லலங்கரித்தங் கவரு மெதிர்கொண் டினிதிறைஞ்சிக்
கோல மணிமா ளிகையின்க ணுர்வம் பெருகக் கொடுபுக்கார். (உஊ)

தூய மணிப்பொற் றவிசிலெழுந் தருளி யிருக்கத் தூநீராற்
சேய மலர்ச்சே வடிவிளக்கித் தெளித்துக் கொண்டச் செழும்புனலான்
மேய சுடர்மா ளிகையெங்கும் விளங்க வீசி யுளங்களிப்ப
வேய சிறப்பி லர்ச்சனைக ளெல்லா மியல்பின் முறைபுரிவார். (உசு)

பூந்தண் பனிநீர் கொடுசமைத்த பொருவில் விரைச்சந் தனக்கலவை
வாய்ந்த வகிலி னறுஞ்சாந்து வாச நிறைமான் மதச்சேறு
தோய்ந்த புகைகா வியினறுநெய் தூய பசுங்கர்ப் பூரமுத
லேய்ந்த வடைக்கா யமுதினேய வெண்ணின் மணிப்பா சனத்தேந்தி. (உஎ)

வே று.

வேறு வேறு திருப்பள்ளித் தாமப் பணிகண் மிகவெடுத்து
மாறி லாத மணித்திருவா பரண வருக்கம் பலதாங்கி
யீறில் விதத்துப் பரிவட்ட மூழி னிரைத்தே யெதிரிறைஞ்சி
யாறு புனைந்தா ரடித்தொண்ட ரளவில் பூசை கொளவளித்தார். (உஅ)

செங்கோ லரச னருளுரிமைச் சேனைபதியாங் கோட்புலியார்
நங்கோ மானை நாவலூர் நகரார் வேந்தை நண்பினுற்
றங்கோ மனையிற் றிருவமுது செய்வித் திறைஞ்சித் தலைநிறைத்த
பொங்கோ தம்போற் பெருங்காதல் புரிந்தார் பின்னும் போற்றுவார். (உள)

ஆனை விருப்பின் மற்றவர்தா மருமை யான்முன் பெற்றெடுத்த
தேனூர் கோதைச் சிங்கடியார் தமையு மவர்பின் திருவுயிர்த்த
மானூர் கோக்கின் வனப்பகையார் தமையுங் கொணர்ந்து வன்றொண்டர்
ஞானாண் மலர்த்தாள் பணிவித்துத் தாமுந் தொழுது சொல்லுவார். (சுஅ)

அடியேன் பெற்ற மக்களிவ ரடிமை யாகக் கொண்டருளிக்
கடிசேர் மலர்த்தா டொழுதுய்யக் கருணை யளிக்க வேண்டுமெனத்
தொடிசேர் தளிர்க்கை யிவரெனக்குத் தாயமக்க ளெனக்கொண்டப்
படியே மகண்மை யாக்கொண்டார் பரவை யார்தங் கொழுங்ஞர். (சுக)

கோதை சூழ்ந்த குழலாரைக் குறங்கின் வைத்துக் கொண்டிருந்து
காத னிறைந்த புதல்வியராய் கருத்துட் கரிவா லிணைத்துச்சி
மீது கண்ணீர் விழமோந்து வேண்டு வனவுங் கொடுத்தருளி
நாதர் கோயில் சென்றடைந்தார் நம்பி தம்பி ரான்றோழர். (சை0)

வென்றி வெள்ளே றுயர்த்தருளும் விமலர் திருக்கோ புரமிறைஞ்சி
யொன்று முள்ளத் தொடுமன்பா லுச்சி குவித்த கரத்தோடுஞ்
சென்று புக்குப் பணிந்துதிருப் பதிகம் பூவ ணெண்டெடுத்துக்
கொன்றை முடியா ரருளுரிமை சிறப்பித் தார்கோட் புலியாரை. (சுக)

சிறப்பித் தருளுந் திருக்கடைக்காப் பதனி னிடைச்சிங் கடியாரைப்
பிறப்பித் தெடுத்த பிதாவாகத் தம்மை நினைந்த பெற்றியினன்
மறப்பில் வகைச்சிங் கடியப்ப னென்றே தம்மை வைத்தருளி
நிறப்பொற் புடைய விசைபாடி நிறைந்த வருள்பெற் றிறைஞ்சுவார். (சை2)

அங்கு நின்று மெழுந்தருளி யளவி லன்பி னுண்மகிழச்
செங்க ணுதலார் மேவுதிரு வலிவ லத்தைச் சேர்ந்திறைஞ்சி
மங்கை பாகர் தமைப்பதிகம் வலிவ லத்துக் கண்டேனென்
றெங்கு நிகழ்ந்த தமிழ்மாலை யெடுத்துத் தொடுத்த விசைபுனைவார். (சுங)

நன்று மகிழுஞ் சம்பந்தர் நாவுக் கரசர் பாட்டுகந்தீ
ரென்று சிறப்பித் திறைஞ்சிமகிழ்ந் தேத்தி யருள்பெற் றெழுந்தருளி
மன்றி னிடையே நடம்புரிவார் மருவு பெருமைத் திருவாரூர்
சென்று குறுகிப் பூங்கோயிற் பெருமான் செம்பொற் கழல்பணிந்து. (சுச)

இறைஞ்சிப் போந்து பரவையார் திருமா ளிகையி லெழுந்தருளி
நிறைந்த விருப்பின் மேவுநா ணீடி செல்வத் திருவாரூர்ப்
புறம்பு ணிய கோயில்களும் பணிந்து போற்றிப் புற்றிடமா
யுறைந்த பெருமான் கழல்பிரியா தோவா வின்ப முற்றிருந்தார். (சுடு)

செறிபுன் சடையார் திருவாரூர்த் திருப்பங் குனியுத் தரத்திருநாள்
குறுக வரலும் பரவையார் கொடைக்கு விழாவிற் குறைவறுக்க
நிறையும் பொன்கொண் டணைவதற்கு நினைந்து நம்பி திருப்புகலூ
நிறைவர் பாதம் பணியவெழுந் தருளிச் சென்றங் கெய்தினார். (சுசு)

சென்று விரும்பித் திருப்புகலூர்த் தேவர் பெருமான் கோயில்மணி
முன்றில் பணிந்து வலங்கொண்டு முதல்வர் முன்பு வீழ்ந்திறைஞ்சித்
தொன்று மரபி னடித்தொண்டு தோய்ந்த வன்பிற் றுதித்தெழுந்து
நின்று பதிக விசைபாடி நினைந்த கருத்து நிகழ்விப்பார். (சுஎ)

சிறிது பொழுது கும்பிட்டுச் சிந்தை முன்ன மங்கொழிய
வறிது புறம்போந் தருளியயன் மடத்தி லணையார் வன்றொண்ட
ரறிவு கூர்ந்த வன்பருட னணிமுன் றிலினே ருகிருப்ப
மறிவண் கையா ருளேயோ மலர்க்கண் டுயில்வந் தெய்தியதால். (சஅ)

துயில்வந் தெய்தத் தம்பிரான் றோழ ரங்குத் திருப்பணிக்குப்
பயிலுஞ் சுடுமட் பலகைபல கொணர்வித் துயரம் பண்ணித்தே
னயிலுஞ் சுரும்பார் மலர்ச்சிகழி முடிமே லணையா வுத்தரிய
வெயிலுந் தியவெண் பட்டதன்மேல் விரித்துப் பள்ளி மேவினர். (சக)

சுற்று மிருந்த தொண்டர்களுந் துயிலு மளவிற் றுணைமலர்க்கண்
பற்றுந் துயினீங் கிடப்பள்ளி யுணர்ந்தார் பரவை கேள்வனர்
வெற்றி விடையா ருளாலே வேமண் கல்லே விரிசுடர்ச்செம்
பொற்றிண் கல்லாயின கண்டு புகலூ ரிறைவ ருள்போற்றி. (கூ0)

தொண்ட ருணர மகிழ்ந்தெழுந்து தூணக்கைக் கமல முகைதலைமேற்
கொண்டு கோயி லுட்புக்குக் குறிப்பி லடங்காப் பேரன்பு
மண்டு காத லுறவணங்கி வாய்த்த மதுர மொழிமாலை
பண்டங் கிசையிற் றம்மையே புகழ்ந்தென் றெடுத்துப் பாடினர். (கூக)

பதிகம் பாடித் திருக்கடைக்காப் பணிந்து பரவிப் புறம்போக்தே
யெதிரி லின்ப மிம்மையே தருவா ருள்பெற் றெழுந்தருளி
நதியின் குவையு முடன்கொண்டு நிறையு நதியுங் குறைமதியும்
பொதியுஞ் சடையார் திருப்பனையூர் புகுவார் புரிதான் மணிமார்பர். (கூஉ)

செய்ய சடையார் திருப்பனையூர்ப் புறத்துத் திருக்கூத் தொடுங்காட்சி
யெய்த வருள வெதிர்சென்றங் கெழுந்த விருப்பால் விழுந்திறைஞ்சி
யையர் தம்மை யரங்கிலாட வல்லா ரவரே யழகியரென்
றுய்ய வுலகு பெறும்பதிகம் பாடி யருள்பெற் றுடன்போந்தார். (கூங)

வளமல் கியசீர்த் திருப்பனையூர் வாழ்வா ரேத்த வெழுந்தருளி
யளவில் செம்பொ னிட்டிகைக ளாண்மே னெருங்கி யணியாரூர்த்
தளவ முறுவற் பரவையார் தம்மா ளிகையிற் புகத்தாமு
முளமன் னியதம் பெருமானர் தம்மை வணங்கி யுவந்தணைந்தார். (கூச)

வந்து பரவைப் பிராட்டியார் மகிழ வைகி மருவுகா
ளந்த ஞரூர் மருங்கணைய கோயில் பலவு மிணைந்திறைஞ்சிச்
சிந்தை மகிழ விருப்பினெடுத் தெய்வப் பெருமா டிருவாரூர்
முந்தி வணங்கி யினிதிருந்தார் முனேப்பா டியர்தங் காவலனர். (கூடு)

பலநா ளமர்வார் பரமர்திரு வருளா லங்கு நின்றும்போய்ச்
சிலைமா மேரு வீரனூர் திருகன் னிலத்துச் சென்றெய்தி
வலமா வந்து கோயிலினுள் வணங்கி மகிழ்ந்து பாடினர்
தலமார் கின்ற தண்ணியல்வெம் மையினு னென்னுந் தமிழ்மாலை. (கூசு)

பாடி யங்கு வைகியபின் பரமர் வீழி மிழலையினி
னீடு மறையான் மேம்பட்ட வந்த ணுளர் நிறைந்தீண்டி
நாடு மகிழ வவ்வளவு நடைக்கா வணம்பா வாடையுடன்
மாடு கதலி பூகநிரை மல்க மணித்தோ ரணநிரைத்து. (கூஎ)

வந்து நம்பி தம்மையெதிர் கொண்டு புக்கார் மற்றவருஞ்
சிந்தை மலர்ந்து திருவீழி மிழலே யிறைஞ்சிச் சேண்விசும்பின்
முந்தை யிழிந்த மொய்யொளிசேர் கோயி றன்னே முன்வணங்கிப்
பந்த மறுக்குந் தம்பெருமான் பாதம் பரவிப் பணிகின்றார். (குஅ)

படங்கொ ளரவிற் றுயில்வோனும் பதுமத் தோனும் பரவரிய
விடங்கன் விண்ணோர் பெருமானே விரவும் புனக முடன்பரவி
யடங்கல் வீழி கொண்டிருந்தீ ரடியேனுக்கு மருளுமெனத்
தடங்கொள் செஞ்சொற் றமிழ்மாலை சாத்தி யங்குச் சாருநாள். (குக)

வாசி யறிந்து காசளிக்க வல்ல மிழலை வாணர்பாற்
றேசு மிக்க திருவருண்முன் பெற்றுத் திருவாஞ் சியத்தடிகள்
பாச மறுத்தாட் கொள்ளுந்தாள் பணிந்து பொருவ ளுரென்னு
மாசில் பதிகம் பாடியமர்த் தரிசிற் கரைப்புத் தூரணைந்தார். (கo)

செழுநீர் நறையூர் நிலவுதிருச் சித்தீச் சரமும் பணிந்தேத்தி
விழுநீர் மையினிற் பெருந்தொண்டர் விருப்பி னுடு மெதிர்கொள்ள
மழுவோ டிளமான் கரதலத்தி லுடையார் திருப்புத் தூர்வணங்கித்
தொழுசீர் மையினிற் றுதித்தேத்தித் தொண்டர் சூழ வுறையுநாள். (கக)

புனித னுர்முன் புகழ்த்துணையார்க் கருளுந் திறமும் போற்றிசைத்து
முனிவர் போற்ற வெழுந்தருளி மூரி வெள்ளக் கங்கையினிற்
பனிவெண் டிங்க ளணிசடையார் பதிகள் பலவும் பணிந்துபோந்
தினிய நினேலி லெய்தினு நிறைவர் திருவா வடுதுறையில். (கஉ)

விளங்குந் திருவா வடுதுறையின் மேயார் கோயில் புடைவலங்கொண
டிளங்கொண் டெருகு மன்பினுட னுள்புக் கிறைஞ்சி யேத்துவார்
வளங்கொள் பதிக மகநயவனெண் றெடுத்து வளவன் செங்கணுன்
றளங்கொள் பிறப்புஞ் சிறப்பித்துத் தமிழ்ச்சொன் மாலை சாத்தினார். (கங)

சாத்தி யங்கு வைகுநாட் டயங்கு மன்பருடன் கூடப்
பேர்த்து மிறைஞ்சி யருள்பெற்றுப் பெண்ணேர் பாகத் தண்ணலார்
தீர்த்தப் பொன்னித் தென்கரைமேற் றிகழும் பதிகள் பலபணிந்து
மூர்த்தி யார்தம் மிடைமருதை யடைந்தார் மூனைப்பா டித்தலைவர். (கச)

மன்னு மருதி னமர்ந்தவரை வணங்கி மதுரச் சொன்மலர்கள்
பன்னிப் புனைந்து பணிந்தேத்திப் பரவிப் போந்து தொண்டருட
னன்னற் பதியி லிருந்தகல்வா ரரனூர் திருவா கேச்சரத்தை
முன்னிப் புக்கு வலங்கொண்டு முதல்வர் திருத்தாள் வணங்குவார். (கடு)

பெருகும் பதிகம் பிறையணிவா ணுதலாள் பாடிப் பெயர்ந்துநிறை
திருவின் மலியுஞ் சிவபுரத்துத் தேவர் பெருமான் கழல்வணங்கி
யுருகுஞ் சிந்தை யுடன்போந்தே யுமையோர் பாகர் தாமகிழ்ந்து
மருவும் பதிகள் பிறபணிந்து கலிய நல்லூர் மருங்கணைந்தார். (கசு)

செம்மை மறையோர் திருக்கலிய நல்லூ ரிறைவர் சேவடிக்கீழ்
மும்மை வணக்கம் பெறவிறைஞ்சி முன்பு பரவித் தொழுதெழுவார்
கொம்மை மருவு குரும்பைமுலை யுமையா ளென்னுந் திருப்பதிக
மெய்ம்மைப் புராணம் பலவுமிகச் சிறப்பித் திசையின் விளம்பினார். (கஎ)

அங்கு நின்று திருக்குடமூக் கணைந்து பணிந்து பாடிப்போய்
மங்கை பாகர் வலஞ்சுழியை மருவிப் பெருகு மன்புருகத்
தங்கு காத லுடன்வணங்கித் தமிழாற் பரசி யரசினுக்குத்
திங்கண் முடியா ரடியளித்த திருநல் லூரைச் சென்றணைந்தார். (சுஅ)

நல்லூ ரிறைவர் கழல்போற்றி நவின்று நடவு நம்பர்பதி
யெல்லா மிறைஞ்சி யேத்திப்போ யிசையாற் பரவுந் தம்முடைய
சொல்லு தியமா வணிந்தவர்தஞ் சோற்றுத் துறையின் மருங்கெய்தி
யல்லூர் கண்டர் கோயிலினு ளடைந்து வலங்கொண் டடிபணிவார். (சுக)

அழனீ ரொழுகி யனையவெனு மஞ்சொற் பதிக மெடுத்தருளிக்
கழனீ டியவன் பினிற்போற்றுங் காதல் கூரப் பரமியபின்
கெழுநீர் மையினி லருள்பெற்றுப் போந்து பரவை யார்கேள்வர்
முழுநீ றணிவா ரமர்ந்தபதி பலவும் பணிந்து முன்னுவார். (எ0)

தேவர் பெருமான் கண்டியூர் பணிந்து திருவை யாறதனே
மேவி வணங்கிப் பூந்துருத்தி விமலர் பாதந் தொழுதிறைஞ்சிச்
சேவில் வருவார் திருவாலம் பொழிலிற் சேர்ந்து தாழ்ந்திரவு
மேவு சயனத் தமர்ந்தருளிப் பள்ளி கொள்ளக் கனவின்கண். (எக)

மழபா டியினில் வருவதற்கு நினைக்க மறந்தா யோவென்று
குழகா கியதங் கோலமெதிர் காட்டி யருளக் குறித்துணர்ந்து
நிழலார் சோலைக் கரைப்பொன்னி வடபா லேறி நெடுமாட
வழகார் வீதி மழபாடி யணைந்தார் நம்பி யாரூரர். (எஉ)

அணைந்து திருக்கோ புரமிறைஞ்சி யன்பர் சூழ புடன்புகுந்து
பணங்கொ ளரவ மணிந்தார்முன் பணிந்து வீழ்ந்து பரங்கருணைக்
குணங்கொ ளருளின் நிறம்போற்றிக் கொண்ட புளகத் துடனுருகிப்
புணர்ந்த விசையாற் றிருப்பதிகம் பொன்னூர் மேனி யென்றெடுத்து. (எங)

அன்னே யுன்னே யல்லால்யா ஞரை நினைக்கே னெனவேத்திற்
தன்னே ரில்லாப் பதிகமலர் சாத்தித் தொழுது புறம்பணைந்து
மன்னும் பதியிற் சிலநாள்கள் வைகித் தொண்ட ருடன்மகிழ்ந்து
பொன்னிக் கரையி னிருமருங்கும் பணிந்து மேல்பாற் போதுவார். (எச)

செய்ய சடையார் திருவானைக் காவி லணைந்து திருத்தொண்ட
ரெய்த முன்வந் தெதிர்கொள்ள விறைஞ்சிக் கோயி லுட்புகுந்தே
யையர் கமலச் சேவடிக்கீ ழார்வம் பெருக வீழ்ந்தெழுந்து
மெய்யு முகிழ்ப்பக் கண்பொழிநீர் வெள்ளம் பரப்ப விம்முவார். (எடி)

மறைக ளாய நான்குமென மலர்ந்த செஞ்சொற் றமிழ்ப்பதிக
நிறையுங் காத லுடனெடுத்து நிலவு மன்பர் தமைநோக்கி
யிறையும் பணிவா ரெம்மையுமா ளுடையா ரென்றென் றேத்துவா
ருறையூர்ச் சோழன் மணியாரஞ் சாத்தும் நிறத்தை யுணர்ந்தருளி. (எசு)

வளவர் பெருமான் றிருவாரஞ் சாத்திக் கொண்டு வரும்பொன்னிக்
கிளருந் திரைநீர் மூழ்குதலும் வழுவிப் போகக் கேதமுற
வளவி நிருமஞ் சனக்குடத்து ளதுபுக் காட்ட வணிந்தருளித்
தளரு மவனுக் கருள் புரிந்த தன்மை சிறக்கச் சாற்றினார். (எஎ)

சாற்றி யங்குத் தங்குநாட் டயங்கும் பவளத் திருமேனி
நீற்றர் கோயி லெம்மருங்குஞ் சென்று தாழ்ந்து நிறைவிருப்பாற் .
போற்றி யங்கு நின்றும்போய்ப் பொருவி லன்பர் மருவியதொண்
டாற்றும் பெருமைத் திருப்பாச்சி லாச்சி ராமஞ் சென்றடைந்தார். (எஅ)

சென்று திருக்கோ புரமிறைஞ்சித் தேவர் மலிந்த திருந்துமணி
முன்றில் வலங்கொண் டுள்ளணைந்து முதல்வர் முன்பு வீழ்ந்திறைஞ்சி
நன்று பெருகும் பொருட்காத னயப்புப் பெருக நாதரெதிர்
நின்றும் பரவி நினைந்தபொரு ளருளா தொழிய நேர்நின்று. (எக)

அன்பு நீங்கா வச்சமுட னடித்த திருத்தோ ழமைப் பணியாற்
பொன்பெ ருத திருவுள்ளம் புழுங்க வழுங்கிப் புறம்பொருபான்
முன்பு நின்ற திருத்தொண்டர் முகப்பே முறைப்பா டெடையார்போ
லென்பு கரைத்து பிராஞர்மற் றில்லே யென்ன வெடுக்கின்றார். (அo)

வே று.

நித்தமு நீங்கா நிலைமையி னீங்கி நிலத்திடைப் புலங்கெழும் பிறப்பா
லுய்த்தக ராண்தை யுணர்ந்துசொத் தடிமை யொருமையா மெழுமையு முணர்த்தி
யெத்தனே யருளா தொழியினும் பிரானு நிவரல்லா தில்லேயே யென்பார்
வைத்தனன் றனக்கே தலையுமென் னுவு மெனவழுத் தினர்வழித் தொண்டர். (அக)

இவ்வகை பரவித் திருக்கடைக் காப்பு மேசின வல்லவென் றிசைப்ப
மெய்வகை வீரும்பு தம்பெரு மானர் வீழுநிதிக் குவையளித் தருள
மைவளர் கண்டர் கருணையே பரசி வணங்கியப் பதியிடை வைகி
யெவ்வகை மருங்கு மிறைவர்தம் பதிக ளிறைஞ்சியங் கிருந்தனர் சிலகாள். (அஉ)

அப்பதி நீங்கி யருளினுற் போகி யாவினஞ் சூடிவார் நீல
மெப்பெயர்ப் பதியு மிருமருங் கிறைஞ்சி யிறைவர்பைஞ் சூலியை யெய்திப்
பைப்பணி யணிவார் கோபுர மிறைஞ்சிப் பாங்கமர் புடைவலங் கொண்டு
துப்புறழ் வேணி யார்கழ லிறுமுவார் தோன்றுகங் காளரைக் கண்டார். (அங)

கண்டவர் கண்கள் காதனீர் வெள்ளம் பொழிதரக் கைகுவித் திறைஞ்சி
வண்டறை குழலார் மனங்கவர் பலிக்கு வருந்திரு வடிவுகண் டவர்கள்
கொண்டதோர் மயலால் வினவுகூற் றுருக் குலவுசொற் காருலா வியவென்
றண்டர்நா யகரைப் பரவியா ரணிய விடங்கரா மருந்தமிழ் புனைந்தார். (அச)

பரவியப் பதிகத் திருக்கடைக் காப்புச் சாத்திமுன் பணிந்தருள் பெற்றுக்
கரவிலன் பர்கடங் கூட்டமுந் தொழுது கலந்தினி திருந்து போந்தருளி
விரவிய வீங்கோய் மலைமுத லாக வீமலர்த்தம் பதிபல வணங்கிக்
குரவலர் சோலை யணிதிருப் பாண்டிக் கொடுமுடி யினைந்தனர் கொங்கில். (அரி)

கொங்கினிற் பொன்னித் தென்கரைக் கறையூர்க் கொடுமுடிக் கோயின் முன்குறுகிச்
சங்கவெண் குழையா ருழைவலஞ் செய்து சார்ந்தடி யிணையினிற் றாழ்ந்து
பொங்கிய வேட்கை பெருகிடத் தொழுது புனிதர்பொன் மேனியை நோக்கி
யிங்கிவர் தம்மை மறக்கவொண் ணாதென் றெழுந்தமெய்க் குறிப்பினி லெடுப்ப. (அசு)

அண்ணலா ரடிகண் மறக்கினுஞ் சம வஞ்செழுத் தறியவெப் பொழுது
மெண்ணிய நாவே யின்சுவை பெருக வீடையாறு கியம்புமென் றிதனைத்
திண்ணிய வுணர்விற் கொள்பவர் மற்றுப் பற்றிலே னெனச்செழுந் தமிழா
ணண்ணிய வன்பிற் பிணிப்புற கவின்றூர் சமச்சிவா யத்திருப் பதிகம். (அஎ)

உலகெ லாமுய்ய வுறுதியாம் பதிக முரைத்துமெய் யுணர்வரு வொருமை
நிலவிய சிந்தை யுடன்றிரு வருளா னீங்குவார் பாங்குநற் பதிகள்
பலவுமுன் பணிந்து பரமர்தாள் போற்றிப் போக்குதண் பணிமலர்ப் படப்பை
குலவுமக் கொங்கிற் காஞ்சிவாய்ப் பேரூர் குறுகினர் முறுகுமா தரவால். (அஅ)

அத்திருப் பதியை யணைந்துமுன் றம்மை யாண்டவர் கோயிலுட் புகுந்து
மெய்த்தவர் சூழ வலங்கொண்டு திருமுன் மேவுவார் தம்மெதிர் விளக்க
நித்தனார் நில்லே மன்றுணின் முட னீடிய கோலநேர் காட்டக்
கைத்தலங் குவித்துக் கண்களா னந்தக் கலுழிநீர் பொழிதரக் கண்டார். (அக)

காண்டலுங் தொழுது வீழ்ந்துட னெழுந்து கரையிலன் பெம்பிரா யுருக்கப்
பூண்டவெம் புலனிற் புலப்படா வின்பம் புணர்ந்துமெய் யுணர்விளிற் பொங்கத்
தாண்டவம் புரியுந் தம்பிரா ஞரைத் தலைப்படக் கிடைத்தபின் சைவ
வாண்டகை யாருக் கடுத்தவர் நிலைமை விளைவையா ரளவறிந் துரைப்பார். (கo)

அங்கிலை நிகழ்ந்த வாரருள் பெற்ற வன்பனு ரின்பவெள் ளத்து
மன்னிய பாடன் மகிழ்ந்துடன் பரவி வளம்பதி யதனிடை மருவிப்
பொன்மணி மன்று ளெடுத்தசே வடியார் புரிகடங் கும்பிடப் பெற்று
லென்னினிப் புறம்போ யெய்துவ தென்று மீண்டெழுந் தருளுதற் கெழுவார். (கக)

ஆயிடை நீங்கி யருளினற் செல்லா ரருவரைச் சுரங்களும் பிறவும்
பாயுநீர் நதியும் பலபல கடந்து பரமர்தம் பதிபல பணிந்து
மேயவண் டமிழால் விருப்பொடும் பரவி வெஞ்சமாக் கூடலும் பணிந்து
சேயிடை கழியப் போந்துவந் தடைந்தார் தென்றிசைக் கற்குடி மலையில். (கஉ)

வே று.

வீடு தருமிக் கற்குடியில் விழுமி யாரைப் பணிந்திறைஞ்சி
நீடு விருப்பிற் றிருப்பதிக நிறைந்த சிந்தை யுடன்பாடிப்
பாடும் விருப்பிற் றெருண்டருடன் பதிகள் பலவு மினைந்திறைஞ்சித்
தேடு மிருவர் காண்பரியார் திருவாறை மேற்றளி சென்றணைந்தார். (கஉ)

செம்பொன் மேருச் சிலைவளைத்த சிவனு ராறை மேற்றளியி
னம்பர் பாதம் பணிந்திறைஞ்சி காத லகிழ்வார்க் கருள்கூட
வும்பர் போற்றுந் தானங்கள் பலவும் பணிந்து போந்தணைவா
ரிம்பர் வாழ வின்னம்பர் ஈசரைச் சேர வெய்தினார். (கஏ)

எரின் னிலவு மின்னம்பர் மகிழ்ந்த வீசர் கழல்வணங்கி
யாரு மன்பிற் பணிந்தேத்தி யாரா வருளா லங்கமர்வார்
போரின் மலியுங் கரியுரித்தார் மருவும் புறம்ப யம்போற்றச்
சேரு முள்ள மிக்கெழுமெய்ப் பதிகம் பாடிச் செல்கின்றார். (கஙி)

வே று.

அங்க மோதியோ ராறை மேற்றளி யென்றெ டுத்தமர் காதலிற்
பொங்கு மின்றமி ழால்லி ரும்பு புறம்ப யன்தொழப் போதுமென்
றெங்கு மன்னிய வின்னி சைப்பதி கம்புனைந்துட னெய்தினர்
திங்கள் சூடிய செல்வர் மேவு திருப்பு றம்பயஞ் சேரவே. (கக)

அப்பதிக்க ணமர்ந்த தொண்டரு மன்று வெண்ணெய்நல் லூரினி
லொப்ப ருந்தனி வேதி யன்பழ வோலை காட்டிநின் ருண்டவ
ரிப்ப திக்கண்வந் தெய்த வென்ன தவங்க ளென்றெதிர் கொள்ளவே
மூப்பு ரங்க ளெரித்த சேவகர் கோயில் வாயிலின் முன்னினார். (கஎ)

நீடு கோபுர முன்பி றைஞ்சி நிலாவு தொண்டரொ டுள்ளணைந்
தாடன் மேவிய வண்ண லாரடி போற்றி யஞ்சலி கோலிகின்
றேடு லாமலர் வாவி யெட்டிலெ டைந்து மாகு முறுப்பிலுற்
பீடு நீடு நிலத்தின் மேற்பெ ருகப்பணிந்து வணங்கினார். (கூஅ)

அங்கு நீடருள் பெற்று ளார்வ மிகப்பொ ழிந்தெழு மன்பினுற்
பொங்கு ணாண்மலர்ப் பாத முன்பணிந் தேத்தி மீண்டு புறத்தணைந்
தெங்கு மாகி நிறைந்து நின்றவர் தாம மிழ்ந்த விடங்களிற்
றங்கு கோல மிறைஞ்சு வாரருட் டாவி லன்பரொ டெய்தினார். (கூக)

வே று.

வம்புவீ டலங்கன் மார்பின் வன்றொண்டர் வன்னி கொன்றை
தும்பைவெள் ளடம்பு தங்க டியீ ரணிந்த சென்னித்
தம்பிரா னமர்ந்த தானம் பலபல சார்ந்து தாழ்ந்து
கொம்பனை ராட னீடு கூடலை யாற்றூர் சார. (கoo)

செப்பரும் பதியிற் சேரார் திருமுது குன்றை நோக்கி
யொப்பரும் புகழார் செல்லு மொருவழி யுமையா ளோடு
மெய்ப்பரம் பொருளா யுள்ளார் வேதிய ராகி நின்றூர்
முப்புரி நூலுந் தாங்கி நம்பியா ரூரர் முன்பு. (கoக)

நின்றவர் தம்மை நோக்கி நெகிழ்ந்தநெ தையராய்த் தாழ்வார்
நின்றியா முதுகுன் றெய்த வழியெமக் கியம்பு மென்னக்
குன்ற வில் லாளியாருங் கூடலை யாற்றூ ரேறச்
சென்றதிவ் வழிதா னென்று செல்வழித் துணையாய்ச் செல்ல. (கoஉ)

கண்டவர் கைகள் கூப்பித் தொழுதுபின் றொடர்வார் காணூர்
வண்டலர் கொன்றை யாரை வடிவுடை மழுவெண் றேத்தி
யண்டர்தம் பெருமான் போந்த வதிசய மறியே னென்று
கொண்டெழு விருப்பி னோடுங் கூடலை யாற்றூர் புக்கார். (கoங)

கூடலை யாற்றூர் மேவுங் கொன்றைவார் சடையி னர்தம்
பீடியர் கோயில் புக்குப் பெருகிய வார்வம் பொங்க
வாடகப் பொதுவி லாடு மறைகழல் வணங்கிப் போற்றி
நீடருள் பெற்றுப் போந்து திருமுது குன்றி னேர்ந்தார். (கoச)

தடநிலைக் கோபு ரத்தைத் தாழ்ந்துமுன் னிறைஞ்சிக் கோயில்
புடைவலங் கொண்டு புக்குப் போற்றினர் தொழுது வீழ்ந்து
நடநவில் வாரை நஞ்சி யிடையெனுஞ் செஞ்சொன் மாலைத்
தொடைநிகழ் பதிகம் பாடித் தொழுதகை சுமந்து நின்று. (கoஙி)

நாதர்பாற் பொருடாம் வேண்டி நண்ணிய வண்ண மெல்லாங்
கோதறு மனத்துட் கொண்ட குறிப்பொடும் பரவும் போது
தாதவிழ் கொன்றை வேய்ந்தார் தாமருள் பெறுவார் சைவ
வேதியர் தலைவர் மீண்டு மெய்யில்வெண் பொடியும் பாட. (கoசு)

பனிமதிச் சடையார் தாமும் பன்னிரண் டாயி ரம்பொன்
னனியருள் கொடுக்கு மாற்ரு னல்கிட வுடைய நம்பி
தனிவரு மகிழ்ச்சி பொங்கத் தாழ்ந்தெழுந் தருகு சென்று
கனிவிட மிடற்றி னூர்முன் பின்னென்று கழற லுற்றூர். (கoஎ)

அருளுமிக் கனக மெல்லா மடியனேற் காரு ருள்ளோர்
மருளுற வீயப்ப வங்கே வரப்பெற வேண்டு மென்னத்
தெருளுற வெழுந்த வாக்காற் செழுமணி முத்தாற் றிட்டிப்
பொருளினே முழுது மாளர்க் குளத்திற்போய்க் கொள்க வென்னார். (கo அ)

என்றுதம் பிரானார் நல்கு மின்னருள் பெற்ற பின்னர்
வன்றொண்டர் மச்சம் வெட்டிக் கைக்கொண்டு மணிமுத் தாற்றிற்
பொன்றிர ளெடுத்து நீருட் புகவிட்டுப் போது கின்று
ரன்றெனே வலிந்தாட் கொண்ட வருளிதி லறிவே னென்று. (கoக)

மேவிய காதற் றொண்டு விரவுமெய் விருத்தி பெற்று
ராவியின் விருத்தி யான வந்தணர் புலியூர் மன்றிற்
காவியங் கண்டர் கூத்துக் கண்டுகும் பிடுவ தென்று
வாவிசூழ் தில்லே மூதூர் வழிக்கொள்வான் வணங்கிப் போந்தார். (ககo)

மாடுள பதிகள் சென்று வணங்கிப்போய் மங்கை பாகர்
நீடிய கடம்பூர் போற்றி நிறைந்தவா னந்தக் கூத்த
ராடிய தில்லே மூதூ ரணைந்தனி வாயில் புக்குச்
சேடியர் மாட மன்னுஞ் செழுந்திரு வீதி சார்ந்தார். (ககக)

பொற்றிரு வீதி தாழ்ந்து புண்ணிய வீரோ வாங்கு
ற்றிரு வாயி னண்ணி நலமலி யலங்கன் மார்பர்
மற்றதன் முன்பு மண்மேல் வணங்கியுட் புருந்து பைம்பொற்
சுற்றுமா ளிகைசூழ் வந்து தொழுதுகை தலேமேற் கொள்வார். (ககஉ)

ஆடிய திருமுன் பான வம்பொனின் கோபு ரத்தி
னூடுபுக் கிறைஞ்சி யோங்கு மொளிவளர் கனக மன்றி
னுடகச் செய்ய தாளே நண்ணுற வுண்ணி றைந்து
நீடுமா னந்த வெள்ளக் கண்கணீர் நிரந்து பாய. (ககங)

பரவுவாய் குளறிக் காதல் படிதிருப் படியைத் தாழ்ந்து
விரவுமெய் யங்க மைந்து மெட்டினும் வணங்கி வேட்கை
யுரனுறு திருக்கூத் துள்ள மார்தரப் பெருகி நெஞ்சிற்
கரவிலா தவரைக் கண்ட நிறைவுதங் கருத்திற் கொள்ள. (ககச)

வே று.

மடித்தாடு மடிமைக்க ளென்றெடுத்து மன்னுயிர்கட் கருளு மாற்ற
லடித்தாற்று நன்னெறிக்க ணின்றார்கள் வழுவிரை கணேயா வண்ணந்
தடிப்பானைப் பேருரிற் கண்டகில்லே சிறப்பித்துத் தனிக்கூத் தென்று
நடிப்பானே நாமனமே பெற்றவா றெனுங்களிப்பா னயந்து பாடி. (ககஎ)

மீளாத வருள்பெற்றுப் புறம்போந்து திருவீதி மேவித் தாழ்ந்தே
யாளான வன்றொண்ட ரந்தணர்க டாம்போற்ற வமர்ந்து வைகி
மாளாத பேரன்பாற் பொற்பதியை வணங்கிப்போய் மறலி வீழத்
தாளாண்மை கொண்டவர்தங் கருப்பறிய லூர்வணக்கிச் சென்று சார்ந்தார். (ககசு)

வே று.

கூற்றுதைத்தார் திருக்கொருடிக் கோயி னண்ணிக் கோபுரத்தைத் தொழுதுபு குந் தன்பர் சூழ, வேற்றபெருங் காதலினு லிறைஞ்சி யேத்தி யெல்லையிலாப் பெரும இழ்ச்சி மனத்தி லெய்தப், போற்றிசைத்துப் புறத்தணைந்தப் பதியின் வைகிப் புனித

ரவர் தமைநினையு மின்பங் கூறிச், சாற்றியமெய்த் திருப்பதிகஞ் செம்மாந் தென்னுந் தமிழ்மாலை புனைந்தங்குச் சாரு நாளில். (கசஎ)

கண்ணுதலார் விரும்புகருப் பறிய லூரைக் கைதொழுது நீங்கிப்போய்க் கயல் கள் பாயு, மண்ணிவளம் படிக்கரையை நண்ணி யங்கு மாதொருபா கத்தவர்தாள் வணங்கிப் போற்றி, யெண்ணில்புகழ்ப் பதிகமுமுன் னவனென் றேத்தி யேகுவார் வாழ்கொளிபுத் தூரெய் தாது, புண்ணியனூர் போம்பொழுது நினைந்து மீண்டு புகுகின்றூர் தலைக்கலனென் றெடுத்துப் போற்றி. (கசஅ)

திருப்பதிகம் பாடியே சென்றங் கெய்தித் தேவர்பெரு மானூர்தங் கோயில்வாயி, லூருப்பொலியு மயிர்ப்புளகம் வீரவத் தாழ்ந்தே யுள்ளணைந்து பணிந்தேத்தி யுருகு மன்பாற், பொருப்பரையன் மடப்பாவை யிடப்பா லானைப் போற்றிசைத்துப் புறம் போந்து தங்கிப் பூமென், கருப்புவயல் வாழ்கொளிபுத் தூரைநீங்கிக் காஞ்சிட் முள் ளூரைக் கலந்த போது. (கசக)

காஞ்சிட் முள்ளூரைச் சாரும் போது கண்ணுதலா ரெதிர்காட்சி கொடுப்பக் கண்டு, தூராண்மென் மலர்க்கொன்றைச் சடையார் செய்ய துணைப்பாத மலர்கண்டு தொழுதே னென்று, வாளுருந் திருப்பதிகம் வள்வா யென்னும் வண்டமிழின் றெடை மாலை மலரச் சாத்தித், தேனுரு மலர்ச்சோலை மருங்கு சூழ்ந்த திருவெதிர்கொள் பாடியினை யெய்தச் செல்வார். (கஉo)

எத்திசையுந் தொழுதேத்த மத்த யானை யெதிர்தெதிர்கொள் பாடியினை யடைவோ மென்னுஞ், சித்தமிலைத் திருப்பதிகம் பாடி வந்து செல்வதிகு செழுங்கோயி லிறைஞ்சி நண்ணி, யத்தர்தமை யடிவணங்கி யங்கு வைகி யருள்பெற்றுத் திருவாள் விக் குடியி லெய்தி, முத்திதரும் பெருமானைத் தொழுத்தி கூட மூப்பதிலை யெனும்பதிக மொழிந்து வாழ்ந்தார். (கஉக)

வே று.

காட்டுநெல் வேள்வித் கோலங் கருத்துற வணங்கிக் காத
ஞட்டிய வுள்ளத் தோடு நம்பியா ரூரர் போற்றி
யீட்டிய தவத்தோர் சூழ வங்குதின் றேறி யன்பு
பூட்டியாட் கொண்டார் மன்னுந் தானங்க ளிறைஞ்சிப் போந்து. (கஉஉ)

வே று.

எஞ்சாத பேரன்பிற் றிருத்தொண்ட ருடனெய்தி
நஞ்சாருங் கறையிடற்ரு ரிடம்பலவு நயந்தேத்தி
மஞ்சாரும் பொழிலுதித்த மலர்த்தடங்கள் புடைசூழுஞ்
செஞ்சாலி வயன்மருதத் திருவாரூர் சென்றடைந்தார். (கஉங)

செல்வமலி திருவாரூர்த் தேவரொடு முனிவர்களு
மல்குதிருக் கோபுரத்து வந்திறைஞ்சி யுள்புக்கங்
கெல்லையிலாக் காதன்மிக வெடுத்தமலர்க் கைகுவித்துப்
பல்குபெருந் தொண்டருடன் பரமர்திரு முன்னணைந்தார். (கஉச)

மூவாத முதலாகி நடுவாகி முடியாத
சேவாருங் கொடியாரைத் திருமூலட் டானத்து
னோவாத பெருங்காத லுடனிறைஞ்சிப் புறம்போந்து
தாவாத புகழ்ப்பரவை யார்திருமா ளிகைசார்ந்தார். (கஉஞ)

பொங்குபெரு வீருப்பினெடு புரிகுழலார் பலர்போற்ற
வங்கயற்கட் செங்கனிவாய்ப் பரவையா ரடிவணங்கி
யெங்கோயு நினைந்தருளிற் றெனவியம்ப வினிதளித்து
மங்கைநல்லா ரவரோடு மகிழ்ந்துறைந்து வைகுநாள். (கஉசு)

நாயனார் முதுகுன்றர் நமக்களித்த நன்னிதியச்
சாயமணி முத்தாற்றிற் புகவிட்டேங் தூணைவரவர்
கோயிலின்மா ளிகைமேல்பாற் குளத்திலவ ரருளாலே
போயெடுத்துக் கொடுபோதப் போதுவா யெனப்புகல. (கஉள)

என்னவதி சயமிதுதா னென்சொன்ன வாறென்று
மின்னிடையார் சிறுமுறுவ லுடன்விளம்ப மெய்புணர்ந்தார்
நன்னுதலா யென்னுடைய நாதனரு ளாற்குளத்திற்
பொன்னடைய வெடுத்தனக்குத் தருவதுபொய் யாதென்று. (கஉஅ)

ஆங்கவரு முடன்போத வளவிறந்த வீருப்பினுடன்
பூங்கோயி லுண்மகிழ்ந்த புனிதர்கழல் புக்கிறைஞ்சி
யோங்குதிரு மாளிகையை வலம்வந்தங் குடன்மேலப்
பாங்குதிருக் குளத்தணைந்தார் பரவையார் தனித்துணைவர். (கஉக)

மற்றதனின் வடகீழ்பாற் கரைமீது வந்தருளி
முற்றிழையார் தமைநிறுத்தி முனைப்பாடித் திருநாடர்
கற்றைவார் சடையாரைக் கைதொழுது குளத்திலிழிந்
தற்றைநா ளிட்டெடுப்பார் போலங்குத் தடவுதலும். (கஙO)

நீற்றழகர் பாட்டிவந்து திருவீரோயாட் டினினின்று
மாற்றறுசெம் பொன்குளத்து வருவியா தொழிந்தருள
வாற்றினிலிட் டக்குளத்திற் றேடுவீ ரருளிதுவோ
சாற்றுமெனக் கோற்றொடியார் மொழிந்தருளத் தனித்தொண்டர். (கஙக)

முன்செய்த வருள்வழியே முருகலர்பூங் குழற்பரவை
தன்செய்ய வாயினைகை தாராமே தாருமென
மின்செய்த நூன்மார்பின் வேதியர்தா முதுகுன்றிற்
பொன்செய்த மேனியினீ ரெனப்பதிகம் போற்றிசைத்து. (கஙஉ)

முட்டவிமை யோரறிய முதுகுன்றிற் றந்தபொருள்
சட்டகான் பெறுதொழிந்த தளர்வினெற் கையறவா
மிட்டளத்தை யிவளெதிரே கெடுத்தருளு மெனுந்திருப்பாட்
டெட்டளவும் பொன்காட்டா தொழிந்தருள வேத்துவார். (கஙஙக)

ஏத்தாதே யிருந்தறியே னெனுந்திருப்பாட் டெவ்வுலகுங்
காத்தாடி மம்பலத்துக் கண்ணுளருங் கண்ணுதலெக்
கூத்தாதந் தருளாயிக் கோமளத்தின் முன்னென்று
நீத்தாருந் தொடர்வரிய நெறிநின்றார் பரவுதலும். (கஙச)

கொந்தவிழ்பூங் கொன்றைமுடிக் கூத்தனார் திருவருளால்
வந்தெழுபொன் றிரளெடுத்து வருமுறையாற் கரையேற்ற
வந்தரத்து மலர்மாரி பொழிந்திழிந்த தவனியுளோ
ரிந்தவதி சயமென்னே யார்பெறுவா ரெனத்தொழுதார். (கஙஞ)

ஞாலம்வியப் பெய்தவரு நற்கனக மிடையெடுத்து
மூலமெனக் கொடுபோந்த வாணியின்முன் னுரைப்பிக்க
நீலமிடற் றவரருளா லுரைதாழப் பின்னுநெடு
மாலயனுக் கரியகழல் வழுத்தினார் வன்றொண்டர். (கருஈ)

மீட்டுமவர் பரவுதலு மெய்யன்ப ரன்பில்வரும்
பாட்டுவந்து கூத்துகந்தார் படுவாசி முடிவெய்து
மோட்டறுசெம் பொன்னெருக்க வொருமாவுங் குறையாமற்
காட்டுதலு மகிழ்ந்தெடுத்துக் கொண்டுகரை யேறினார். (கருஎ)

கரையேறிப் பரவையா ருடன்கனக மானதெலா
நிரையேயா ளிற்சுமத்தி நெடுநிலைமா ளிகைபோக்கித்
திரையேறும் புனற்சடிலத் திருமூலட் டானத்தார்
விரையேறு மலர்ப்பாதந் தொழுதணைந்தார் வீதியினில். (கருஅ)

வந்துதிரு மாளிகையி னுட்புகுந்து மங்கலவாழ்த்
தந்தமிலா வகையேத்து மளவிறந்தா ரொலிசிறப்பச்
சிந்தைநிறை மகிழ்ச்சியுடன் சேயிழையா ருடனமர்ந்தார்
கந்தமலி மலர்ச்சோலை நாவலர்தங் காவலனார். (கருக)

அணியாரூர் மணிப்புற்றி னமர்ந்தருளும் பரம்பொருளைப்
பணிவாரங் கொருநாளிற் பாராட்டித் திருப்பதிகந்
தணியாத வானந்தக் தலைசிறப்பத் தொண்டருடன்
றுணிவாய பொருள்வினவித் தொழுதாடிப் பாடுவார். (கசஂ0)

பண்ணிறையும் வகைபாறு தாங்கியென வெடுத்தருளி
யுண்ணிறையு மனக்களிப்பா லுறுபுளக மயிர்முகிழ்ப்பக்
கண்ணிறையும் புனல்பொழியக் கரையிகந்த வானந்த
மெண்ணிறைத்த படிதோன்ற வேத்திமகிழ்ந் தின்புற்றார். (கசக)

இன்புற்றங் கமர்காளி லீறிலரு மறைபரவும்
வன்புற்றி லரவணிந்த மன்னவனு ரருள்பெற்றே
யன்புற்ற காதலுட னளவிறந்த பிறபதியும்
பொன்புற்கென் றிடவொளிருஞ் சடையாரைத் தொழப்போவார். (கசஉ)

பரிசனமு முடன்போதப் பாங்கமைந்த பதிகடொறுங்
கரியுரிவை புனைந்தார்தங் கழலெழுது மகிழ்ந்தேத்தித்
துரிசறுநற் பெருந்தொண்டர் நள்ளாறு தொழுவதற்குப்
புரிவுறுமெய்த் திருத்தொண்ட ரெதிர்கொள்ளப் புக்கணைந்தார். (கசஙு)

விண்டடவு கோபுரத்தைப் பணிந்துகர மேற்குவித்துக்
கொண்டுபுகுந் தண்ணலார் கோயிலினை வலஞ்செய்து
மண்டியபே ரன்பினொடு மன்னுதிரு நள்ளாறர்
புண்டரிகச் சேவடிக்கீழ்ப் பொருந்தில மிசைப்பணிந்தார். (கசச)

அங்கணரைப் பணிந்தேத்தி யருளினற் றொழுதுபோய்
மங்குலணி மணிமாடத் திருக்கடவூர் வந்தெய்தித்
திங்கள்வளர் முடியார்தந் திருமயான மும்பணிந்து
பொங்குமிசைப் பதிகமரு வார்கொன்றை யெனப்போற்றி. (கசஞு)

திருவீரட் டானத்துத் தேவர்பிரான் சினக்கூற்றின்
பொருவீரந் தொலைத்தகழல் பணிந்துபொடி யார்மேனி
மருவீரத் தமிழ்மாலை புனைந்தேத்தி மலைவனைத்த
பெருவீரர் வலம்புரத்துப் பெருகார்வத் தொடுஞ்சென்றார். (கசசு)

வரையோடி நிகர்புரிசை வலம்புரத்தார் கழல்வணங்கி
யுரையோசைப் பதிகமெனக் கினியோதிப் போய்ச்சங்க
நிரையோடு துமித்தாப மணித்தீப நித்திலப்பூத்
திரையோதங் கொண்டிறைஞ்சுந் திருச்சாய்க்கா டெய்தினார். (கசஎ)

தேவர்பெரு மான்றன்னைத் திருச்சாய்க்காட் டினிற்பணிந்து
பாவலர்செந் தமிழ்மாலைத் திருப்பதிகம் பாடிப்போய்
மேவலர்தம் புரமெரித்தார் வெண்காடு பணிந்தேத்தி
நாவலர்கா வலரடைந்தார் நனிபள்ளித் திருநகரில். (கசஅ)

நனிபள்ளி யமர்ந்தபிரான் கழல்வணங்கி நற்றமிழின்
புனிதநறுந் தொடைபுனைந்து திருச்செம்பொன் பள்ளிமுதற்
பனிமதிசேர் சடையார்தம் பதிபலவும் பணிந்துபோய்த்
தனிவிடைமேல் வருவார்தந் திருநின்றி யூர்சார்ந்தார். (கசக)

நின்றியூர் மேயாரை நேயத்தாற் புக்கிறைஞ்சி
யொன்றியவன் புள்ளுருகப் பாடுவா ருடையவர
சென்றுமுல கிடர்நீங்கப் பாடியவே ழெழுநூறு
மன்றுநிறப் பித்தஞ்சொற் றிருப்பதிக மருள்செய்தார். (கஞ0)

அப்பதியி லன்பருட னமர்ந்தகல்வா ரகலிடத்திற்
செப்பரிய புகழ்நீடூர் பணியாது செல்பொழுதி
லொப்பரிய வுணர்வினு னினைந்தருளித் தொழுலுறுவார்
மெய்ப்பொருள்வண் டமிழ்மாலை விளம்பியே மீண்டணைந்தார். (கஞக)

மடலாரும் புனனீடூர் மருவினர்தாள் வணங்காது
விடலாமே யெனுங்காதல் விருப்புறுமத் திருப்பதிக
மடலார்சூ லப்படையார் தமைப்பாடி யடிவணங்கி
யுடலாரு மயிர்ப்புளக மிகப்பணிந்தங் குறைகின்றார். (கஞஉ)

அங்கணினி தமர்ந்தருளாற் றிருப்புன்கூ ரணைந்திறைஞ்சிக்
கொங்கலரு மலர்ச்சோலைத் திருக்கோலக் காவணையக்
கங்கைசடைக் கரந்தவர்தா மெதிர்காட்சி கொடுத்தருளப்
பொங்குவிருப் பாற்றொழுது திருப்பதிகம் போற்றிசைப்பார். (கஞங)

திருஞான சம்பந்தர் திருக்கைக ளாலொற்றிப்
பெருகார்வத் துடன்பாடப் பிஞ்ஞகனார் கண்டிரங்கி
யருளாலே திருத்தாள மளித்தபடி சிறப்பித்துப்
பொருண்மாலைத் திருப்பதிகம் பாடியே போற்றிசைத்தார். (கஞச)

மூவாத முழுமுதலார் முதற்கோலக் காவகன்று
தாவாத புகழ்ச்சண்பை வலங்கொண்டு தாழ்ந்திறைஞ்சி
நாவார்முத் தமிழ்விரகர் நற்பதங்கள் பரவிப்போய்
மேவார்தம் புரஞ்செற்றார் குருகாவூர் மேவுவார். (கஞஙி)

உண்ணீரின் வேட்கையுட னுறுபசியான் மிகவருந்திப்
பண்ணீரமை மொழிப்பரவை யார்கொழுநர் வரும்பாங்கர்க்
கண்ணீடு திருநுதலார் காதல்வரக் கருத்தறிந்து
தண்ணீரும் பொதிசோறுங் கொண்டெழிச் சார்கின்றூர். (கஙிசு)

வேனிலுறு வெயில்வெம்மை தணிப்பதற்கு வீரைக்குளிர்மென்
பானன்மலர்த் தடம்போலும் பத்தரொரு பாலமைத்தே
யானமறை வேதியரா யருள்வேடங் கொண்டிருந்தார்
மானமருந் திருக்கரத்தார் வன்ரெண்டர் தமைப்பார்த்து. (கடுஎ)

குருகாஜ் ரமர்ந்தருளுங் குழகர்வழி பார்த்திருப்பத்
திருவாரூர்த் தம்பிரான் ரோழர்திருத் தொண்டருடன்
வருவாரப் பத்தரிடைப் புருந்துதிரு மறையவர்பாற்
பெருகார்வஞ் செலவிருந்தார் சிவாயநம வெனப்பேசி. (கநிஅ)

ஆலந்ழற் கீழிருந்தா ரவர்தம்மை யெதிர்நோக்கிச்
சாலமிகப் பசித்தீரிப் பொதிசோறு தருகின்றேன்
காலமினித் தாழாமே கைக்கொண்டிங் கினிதருந்தி
யேலநறுங் குளிர்த்தண்ணீர் குடித்திளைப்புத் தீருமென. (கநிக)

வன்ரெண்ட ரதுகேட்டு மறைமுனிவர் தரும்பொதிசோ
றின்றுநமக் கெதிர்விலக்க லாகாதென் றிசைந்தருளிப்
பொன்றயங்கு நூன்மார்பர் தரும்பொதிசோ றதுவாங்கிச்
சென்றுதிருத் தொண்டருடன் றிருவமுது செய்தருளி. (கசுஏ)

எண்ணிறந்த பரிசனங்க ளெல்லாரு மினிதருந்தப்
பண்ணியபின் னம்மருங்கு பசித்தணைந்தார் களுமருந்த
வுண்ணிறைந்த வாரமுதா யொருகாலு முலவாதே
புண்ணியனூர் தாமளித்த பொதிசோறு பொலிந்ததால். (கசுக)

சங்கரனூர் திருவருள்போற் றண்ணீரின் சுவையார்ந்து
பொங்கிவரு மாதரவா லவர்நாமம் புகழ்ந்தேத்தி
யங்கையர்வாற் பள்ளியமர்ந் தருகணைந்தார் களுந்துயிலக்
கங்கைசடைக் கரந்தாரப் பத்தரொடுந் தாங்கரந்தார். (கசுஉ)

சித்தநிலே நிரியாத திருநாவ லூர்மன்ன
ரத்தகுதி யினிற்பள்ளி யுணர்ந்தவரைக் காணுமை
யித்தனேயா மாற்ற மறிந்திலே னெனவெடுத்து
மெய்த்தகைய திருப்பதிகம் விளம்பியே சென்றடைந்தார். (கசுஊ)

குருகாஜ் ரமர்ந்தருளுங் குழகனூர் கோயிலினுக்
கருகார்பொற் கோபுரத்தை யணைந்திறைஞ்சி யுள்புக்கு
வருகாதல் கூரலகங் கொண்டெதிரு மூன்வணங்கிப்
பருகாவின் னமுதத்தைக் கண்களாற் பருகினார். (கசுச)

கண்ணார்ந்த வின்னமுதைக் கையாரத் தொழுதிறைஞ்சிப்
பண்ணார்ந்த திருப்பதிகம் பாடியே பணிந்தேத்தி
யுண்ணுடும் பெருங்காத லுடையவர்தாம் புறத்தெய்தி
நண்ணார்வத் தொண்டருட னங்கினிது நயந்திருந்தார். (கசுஙி)

அந்நாளிற் றம்பெருமா னருள்கூடப் பணிந்தகன்று
மின்னுர்செஞ் சடைமுடியார் விரும்புமிடம் பலவணங்கிக்
கன்னுடு மெயில்புடைசூழ் கழிப்பாலை தொழுதேத்தித்
தென்னுவ லூர்மன்னர் திருத்தில்லை வந்தடைந்தார். (கசுஈ)

சீர்வளருந் திருத்தில்லைத் திருவீதி பணிந்துபுகுந்
தேர்வளர்பொற் றிருமன்று ளெடுத்தசே வடியிறைஞ்சிப்
பார்வளர மறைவளர்க்கும் பதியதனிற் பணிந்துறைவார்
போர்வளர்மே ருச்சிலையார் திருத்தினைமா நகர்புகுந்தார். (கசுஎ)

திருத்தினைமா நகர்மேவுஞ் சிவக்கொழுந்தைப் பணிந்துபோய்
நிருத்தனு ரமர்ந்தருளு நிறைபதிகள் பலவணங்கிப்
பொருத்தமிகுந் திருத்தொண்டர் போற்றுதிரு நாவலூர்
கருத்தில்வரு மாதரவாற் கைதொழச்சென் றெய்தினார். (கசுஅ)

திருநாவ லூர்மன்னர் சேர்கின்ரு ரெனக்கேட்டுப்
பெருநாமப் பதியோருந் தொண்டர்களும் பெருவாழ்வு
வருநாளென் றலங்கரித்து வந்தெதிர்கொண் டுள்ளணைய
செருநாகத் துரிபுனைந்தார் செழுங்கோயி லுள்ளணைந்தார். (கசுஉ)

மேவியவத் தொண்டர்குழா மிடைந்தரவென் றெழுமோசை
மூவுலகும் போயொலிப்ப முதல்வனுர் முன்பெய்தி
யாவியினு மடைவுடையா ரடிக்கமலத் தருள்போற்றிக்
கோவலனுண் முகனெடுத்துப் பாடியே கும்பிட்டார். (கஎ0)

நலம்பெருகு மப்பதியி னுடியவன் பொடுநயந்து
குலம்பெருகுந் திருத்தொண்டர் குழாத்தோடு மினிதமர்ந்து
சலம்பெருகுஞ் சடைமுடியார் தாள்வணங்கி யருள்பெற்றுப்
பொலம்புரிநூன் மணிமார்பர் பிறபதியுந் தொழப்போவார். (கஎக)

தண்டகமாந் திருநாட்டுத் தனிவிடையார் மகிழ்விடங்க
டொண்டரெதிர் கொண்டணையத் தொழுதுபோய்த் தூயநதி
வண்டறைபூம் புறவுமலை வளமருதம் பலகடந்தே
யெண்டிசையோர் பரவுதிருக் கழுக்குன்றை யெய்தினார். (கஎஉ)

தேனுர்ந்த மலர்ச்சோலை திருக்கழுக்குன் றத்தடியா
ரானுத விருப்பினுடு மெதிர்கொள்ள வடைந்தருளித்
தூநாள்வெண் மதியணிந்த சுடர்க்கொழுந்தைத் தொழுதிறைஞ்சி
பாநாடு மின்னிசையின் றிருப்பதிகம் பாடினார். (கஎங)

பாடியவப் பதியின்க ணினிதமர்ந்து பணிந்துபோய்
நாடியநல் லுணர்விளுடுங் திருக்கச்சூர் தனேநண்ணி
யாடகமா மதில்புடைசூ ழாலக்கோ யிலினமுதைக்
கூடியமெய் யன்புருகக் கும்பிட்டுப் புறத்தணைந்தார். (கஎச)

அணைந்தருளு மவ்வேல யமுதுசெயும் பொழுதாகக்
கொணர்ந்தமுது சமைத்தளிக்கும் பரிசனமுங் குறுகாமைத்
தணந்தபசி வருத்தத்தாற் றம்பிரான் றிருவாயிற்
புணர்ந்தமதிற் புறத்திருந்தார் முனைப்பாடிப் புரவலனுர். (கஎஞ)

வன்றொண்டர் பதிதீர்க்க மலையின்மேல் மருந்தானார்
மின்றவக்கு வெண்டலையோ டொழிந்தொருவெற் றேடேந்தி
யன்றவக்கு வாழ்வாரோ சாதணாய்ப் புறப்பட்டுச்
சென்றன்பர் முகநோக்கி யருள்கூரச் செப்புவார். (களசு)

மெய்ப்பசியான் மிகவருந்தி யினைத்திருந்தீர் வேட்கைவிட
வீப்பொழுதே சோறிரந்திங் கியானுமக்குக் கொணர்கின்றே
னப்புறநீ ரகலாதே சிறிதுபொழு தமருமெனச்
செப்பியவர் திருக்கச்சூர் மனைதோறுஞ் சென்றிரப்பார். (களள)

வெண்டிருநீற் றணிகிகழ விளங்குநூ லொளிதுளங்கக்
கண்டவர்கண் மனமுருகக் கடும்பகற்போ திடும்பலிக்குப்
புண்டரிகக் கழல்புவிமேற் பொருந்தமனை தொறும்புக்குக்
கொண்டதாம் விரும்பியாட் கொண்டவர்முன் கொடிவந்தார். (களஅ)

இரந்ததாங் கொவ்வந்த வின்னடிசி லுங்கறியு
மரந்தைதரும் பசிதீர வருந்துவீ ரெனவளிப்பப்
பெருந்தகையார் மறையவர்தம் பேரருளின் றிறம்பேணி
நிரந்தபெருங் காதலினு னோர்தொழுது வாங்கினார். (களக)

வாங்கியவத் திருவமுது வன்றொண்டர் மருங்கணைந்த
வோங்குதவத் தொண்டருட னுண்டருளி யுவந்திருப்ப
வாங்கருகு நின்றூர்போ லவர்தம்மை யறியாமே
நீங்கினு ரெப்பொருளு நீங்காத நிலைமையினார். (கஅ0)

திருநாவ லூராளி சிவயோகி யார்நீங்க
வருநாம மறையவனு நிறையவனு ரெனமதித்தே
பெருநாதச் சிலம்பணிசே வடிவருந்தப் பெரும்பகற்க
ணுருகாடி யெழுந்தருளிற் றென்பொருட்டா மெனவுருகி. (கஅக)

தே வு று.

மூதுவா யோரி யென்றெடுத்து முதல்வ னூர்தம் பெருங்கருணை
யதுவா மிதுவென் றதிசயம்வந் தெய்தக் கண்ணீர் மழையருவிப்
புதுவார் புனலின் மயிர்ப்புளகம் புதையப் பதிகம் போற்றிசைத்து
மதுவா ரிதழி முடியாரைப் பாடி மகிழ்ந்து வணங்கினார். (கஅஉ)

வந்தித் திறைவ ரருளாற்போய் மங்கை பாகர் மகிழ்ந்தவிட
மூந்தித் தொண்ட ரெதிர்கொள்ளப் புக்கு முக்கட் பெருமானைச்
சிந்தித் திடவந் தருள்செய்கழல் பணிந்து செஞ்சொற் றொடைபுனைந்தே
யந்திச் செக்கர்ப் பெருகொளியா ரமருங் காஞ்சி மருங்கணைந்தார். (கஅங)

அன்று வெண்ணெய் நல்லூரி லரியு மயனுந் தொடர்வரிய
வென்றி மழவெள் விடையுயர்த்தார் வேத முதல்வ ராய்வந்து
நின்று சபைமுன் வழக்குரைத்து நேரே தொடர்ந்தாட் கொண்டவர்தா
மின்றிங் கெய்தப் பெற்றுமென் றெயில்சூழ் காஞ்சி நகர் வாழ்வார். (கஅச)

மல்கு மகிழ்ச்சி மிகப்பெருக மறுகு மணித்தோ ரணநாட்டி
யல்கு தீப நிறைகுடங்க ளகிலின் தூபங் கொடியெடுத்துச்
செல்வ மனைக ளலங்கரித்துத் தெற்றியாடன் முழவதிரப்
பல்கு தொண்ட ருடன்கூடிப் பதியின் புறம்போ யெதிர்கொண்டார். (கஅஙி)

ஆண்ட நம்பி யெதிர்கொண்ட வடியார் வணங்க வெதிர்வணங்கி
நீண்ட மதிட்கோ புரங்கடந்து நிரைமா ளிகைவீ தியிற்போந்து
பூண்ட காதல் வாழ்த்தினுடன் பூணைம் கலதா னியமொலிப்ப
வீண்டு தொண்டர் பெருகுதிரு வேகாம் பரஞ்சென் றெய்தினார். (கஅசு)

ஆழி நெடுமா லயன்முதலா மமரர் நெருங்கு கோபுரமுன்
பூழி யுறமண் மிசைமேனி பொருந்த வணங்கிப் புகுந்தருளிச்
சூழு மணிமா ளிகைபலவுந் தொழுது வணங்கி வலங்கொண்டு
வாழி மணிப்பொற் கோயிலினுள் வந்தா ரணுக்க வன்ரெண்டர். (கஅள)

கைகள் கூப்பி முன்னணைவார் கம்பை யாறு பெருகிவர
வையர் தமக்கு மிகவஞ்சி யாரத் தழுவிக் கொண்டிருந்த
மையு லாவுங் கருநெடுங்கண் மலையா ளென்றும் வழிபடுபூஞ்
செய்ய கமலச் சேவடிக்கீழ்த் திருந்து காத லுடன்வீழ்ந்தார். (கஅஅ)

வீழ்ந்து போற்றிப் பரவசமாய் விம்மி யெழுந்து மெய்யன்பால்
வாழ்ந்த கிழ்தை யுடன்பாடி மாறு விருப்பிற் புறம்போந்து
சூழ்ந்த தொண்ட ருடன்மருவு காளிற் ரெல்லைக் கச்செகர்த்
தாழ்ந்த சடையா ராலயங்கள் பலவுஞ் சார்ந்து வணங்குவார். (கஅக)

சீரார் காஞ்சி மன்னுதிருக் காமக் கோட்டஞ் சென்றிறைஞ்சி
நீரார் சடையா ரமர்ந்தருளு நீடு திருமேற் றளிமேவி
யாரா வன்பிற் பணிந்தேத்தி மளவிலுந்தா வொண்சுடராம்
பாரார் பெருமைத் திருப்பதிகம் பாடி மகிழ்ந்து பரவினார். (ககo)

ஓண காந்தன் றளிமேவு மொருவர் தம்மை யுரிமையுடன்
பேணி யமைத்த தோழமையாற் பெருகு மடிமைத் திறம்பேசிக்
காண மோடு பொன்வேண்டி செய்யும் பாலுங் கலிவிளங்கும்
யாணர்ப் பதிக மெடுத்தேத்தி யெண்ணி னிதிபெற் றினிதிருந்தார். (ககக)

அங்க ணமர்வா ரனேகதங்கா பதத்தை யெய்தி யுள்ளணைந்து
செங்கண் விடையார் தமைப்பணிந்து தேனெய் புரிந்தென் றெடுத்ததமிழ்
தங்கு மிடமா மெனப்பாடித் தாழ்ந்து பிறவுந் தானங்கள்
பொங்கு காத லுடன்போற்றிப் புரிந்தப் பதியிற் பொருந்துநாள். (ககஉ)

பாட லிசையும் பணியிறைப் பாவை தழுவக் குழைகம்ப
ராடன் மருவுஞ் சேவடிகள் பரவிப் பிரியா தமர்கின்றூர்
நீட மூதூர்ப் புறத்திறைவர் நிலவும் பதிக டொழுவிருப்பான்
மாட நெருங்கு வன்பார்த்தான் பனங்காட் டெல்லை வந்தடைந்தார். (ககஊ)

செல்வ மல்கு திருப்பனங்காட் டிரித் செம்பொற் செழுஞ்சுடரை
யல்ல லறுக்கு மருமருந்தை வணங்கி யன்பு பொழிகண்ணீர்
மல்க நின்று விடையின்மேல் வருவா ரெனும்வண் டமிழ்ப்பதிக
நல்ல விசையி னுடன்பாடிப் போந்து பிறவு நண்ணுவார். (ககஎ)

மன்னு திருமாற் பேறணைந்து வணங்கிப் பரவித் திருவல்லத்
தன்னு னெய்தி யிறைஞ்சிப்போய்ச் சாரு மேல்பாற் சடைக்கற்றைப்
பின்னன் முடியா ரிடம்பலவும் பேணி வணங்கிப் பெருந்தொண்டர்
சென்னி முகிழ்ரேய் தடங்குவட்டுத் திருக்கா ளத்தி மலைசேர்ந்தார். (ககஙு)